உ

கணபதி துணை.

ஸ்ரீதிரிபுரசுந்தர்யை நம:

வியாச முனிவரருளிய

பதினெண் புராணங்களிலொன்றாகிய

தேவீ பாகவதம்.



உத்தரபாகம்.

ஸ்ரீ காஞ்சிபுரம்

ஸ்ரீமத் ஏகாம்பர சிவயோகிகள்

மாணாக்கர்

ஆலாலசுந்தரம்பிள்ளையவர்கள்

மொழிபெயர்த்தது.

இரண்டாம் பதிப்பு.

சென்னை :

பெரியநாயகியம்மன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது

Cope Right Reserved.

1928.

விலை ரூபா 4—0—0

விலாசம் :—

கா. ஏகாம்பரம் பிள்ளை,
19, ரண்டால்ஸ் ரோட்,
வேப்பேரி, சென்னை.

காமாக்ஷிதேவ்யை நமஃ

முகவுரை

அநாதிமுத்தன் அநாதிபெத்தர் என்னும் இருசொல்லும் யாரைப்பற்றி அநாதியாய் வழங்கிவருவதெனின் இறைவனையும் ஆன்மாக்களையுமேயாம். இறைவனுக்கு அநாதிமல சம்பந்தம் இல்லாமையினாலேயே ஒப்புவமை இல்லாததோர் உயர்வும், ஆன்மாக்கட்கு அநாதிமல சம்பந்த முடைமையினாலேயே இழிவின் மிக்கதோர் தாழ்வும் உண்டாயின. இறைவனுக்கு மலசம்பந்தம் இல்லாமைக்குக்காரணம் யாதெனின், அகண்டாகார ஞானப்பேரொளிப்பிழம்பாய்ப் பிரகாசிக்கும்சித்சொரூபசத்தி அவனுருவமாகக்காணப்படுகையாலென்க. அந்த ஞானப்பேரொளிப் பிழம்பைக்காணும் ஆற்றலுள்ள ஆன்மாக்களுடைய ஞானம் வெளிப்படாமைக்குக்காரணம் யாதெனின், அந்த ஞானக்கண்ணை வியாப்பியத்தன்மையுடைய ஆணவமல சக்திமறைத்தலினாலென்க. அதனால் இச்சையினால் இச்சிக்கத்தக்கது இன்னதென்றும், ஞானத்தினால் அதுமுற்றுப்பெறுதற்கான உபாயம் இன்னதென்றும், கிரியையினால் அது கூடுதற்கான செய்தை இதுவென்றும் செயற்படுமாறின்றி அவ்விச்சாஞானக்கிரியைகளும் உண்டோ இல்லையோவென்று ஐயுறும் வண்ணம் மலசொரூபத்தில் மறைந்து அரூபசொரூபியாய் நிற்பவாயின. எனவே ஞானசொரூபியான ஆன்மா ஆன்மாவென்றறி தற்கிடனின்றி தேகமே ஆன்மா இந்திரியமே ஆன்மா அந்தக்கரணங்களே ஆன்மா பிராணாதிவாயுக்களே ஆன்மா இவைபோலும் ஆன்மாவால் இயங்கு வனவாகிய எல்லாச்சடப்பொருள்களும் ஆன்மாவென்றழைக்கப்படுவனவாய் ஆன்மாவென்றழைக்கப்பட்ட ஆன்மா அனுமாவா யுருவில்லா தொழிந்ததென்க. அந்தோ! இவ்வாறு நாமரூபமற்று அநாமதேயமாய்ப் பரிதபித்துக்கிடக்கும் இவ்வான்மகோடிகள் பரமான்மாவோடு கூடும் வண்ணம் பரமகருணாசாலியாகிய ப்ராசக்தியாகிய நம்மன்னை ஆன்மாக்கட்கு மலத்தை நீக்கிச் சிவத்தையளித்தற் கண்ணுள்ளதாகிய கருணையில் தனது இச்சையும், அதற்குச்செய்யக்கடவதான உபாயங்களையெல்லாம் அறியும் அறிவில் தனது ஞானத்தையும், அவற்றை அவ்வாறே சங்கற்பித்

துச்செய்யும் சங்கற்பத்தில்! தனது கிரியையும் செலுத்தி அவை முற்றுப்பெறுமாறு "இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்றெழுதிக்காட்டொணாதவனும்" "இன்னதன் மையனென்றறி வொண்ணாதவனுமாகிய இறைவனே" "உரிமேனி தரித்துக்கொண்டதென்றலும் உருவிறந்த, அருமேனியதுவுங் கண் டோம் அருவுருவானபோது, திருமேனி யுபயம்பெற்றேரும் செப் பிய மூன்றும் ஈந்தம், கருமேனி கழிக்கவந்த கருணை யென்றறிந் திடாயே" என்றபடி மூவகைத்திருமேனிகளும் கொள்ளச்செய்து "படைப்பாதி தொழிலும் பத்தர்க்கருளும் பாவனையும் நூலும், இடப்பாகமாதராளோ டிருந்துயிர்க்கின்பமென்றும், அடைப்பாலு மதுவு முத்தியளித்திடும்யோகும் பாசந்துடைப்பானுந் தொழிலு மேனிதொடக்கானேற் சொல்லொணாதே" என்றபடி ஆன்மாக் களின் கண்ணைமறைத்த கடியதொழிலாணவத்தை படைப்பாதி தொழில்களால் போக்கப்பதியென நிற்கச்செய்து தான் அவரது ஆக்ஞாரூபியாய் "குவளைக்கண்ணி கூறன்காண்க, அவளுந்தானும் உடனே காண்க, "பரமானந்தப்பழங்கடவதுவே" என உலகுக்கம் மையப்பராய் நின்றருளுகின்றனள்.

இவ்வாறு இருப்பவளாகிய பராசக்தியினது பிரபாவமுதலிய வற்றைக்கூறும் தேவீபாகவதம் என்னும் இந்நூல் விஷ்ணுபுராணம் நான்கனுள் ஒன்றுகச் சொல்லப்பட்டிருக்கிறது. அக்னி சூரியன் முதலிய சில்லாண்டிற் சிதைவோருக்கே தனித்தனி ஒவ்வோர் புரா ணங்கள் சொல்லப்பட்டிருக்க, பல்லாண்டென்னும் பத்தங்கடந்த வளாகிய இம்மகாதேவிக்குத்தனித்து ஓர்புராணம் சொல்லாதுவிஷ்ணு புராணத்துள் சேர்த்துச்சொல்லவேண்டிய காரணம் என்னையெ னின்! "விஸ்வ இத்யேவவிதிதோ விஷ்ணுர் விஸ்வாதிகஸ் ஹிவஃ யஜ்ஞோவிஷ்ணுஸ் ஹிவோராஜா ஹ்யத்வரஸ்யேதி விஸ்ருதஃ, மாயீ திபரா சிவப்ரோக்தோ ஸஹிவஃ பரமாகிருதிஃ, சகத் விஷ்ணுமயம் ஸர்வம் ஜகதாம் பதிரீஸ்வரஃ, விஷ்ணுர்யோனி ரிதிப்ரோக்தஃ புரு ஷோ ருத்ரயோநிதஃ. ததர்த்தோ பஹுபிஸ்ஸாஸ்தரைஃ புராணைஸ் சாபிநிஸ்சிதஃ, கஸ்ஸந்தோஹோத்ர வததஃ கிமர்த்தம் மாஞ்சபுருச சத, புத்திமோஹே ஈமூடம்மாம் உபேக்ஷத்வேமுநீஸ்வராஃ" என வடமொழிக்காஞ்சிப்புராணத்தும், "விச்சுவன் சிறைப்புள்ளர சுயர் த்தவன் விளம்பும், விச்சுவாதிகன் எறுழ்வலிச்சினவிடை யூர்தி, எச் சமே சுரும்புளர் துழாயலங்கலானென்ப, உச்சநாயகன் பொலந்து

ணரிதழிமாலிகையான். மாயையாங்கொடு முரன்றனைச்செகுத்தயர் வயவன், மாயையாள்பவன் மூப்புரங்கனற்றியவள்ளல், சாயன்மா மயில் வனிதையே நாரணன்றரியார், சாயவென்ற சீர்ப்புருடனுங் கண்ணுதற்றலைவன். என்னமாமறை மிருதிநூல் புராணமற்றெவை யும், பன்னுகின்றதில் ஐயுறற்பால தொன்றுளதோ, புன்மருட்சி யின் மயங்கினேன் புலங்கொளத்தெருட்டாது, என்னையிவ்வணங் கண்டனிர் இது நமக்கழகோ" எனத் தென்மொழிக் காஞ்சிப்புரா ணத்தும் வருதலால் விஷ்ணுமூர்த்தி சிவசக்தி என்பது நன்கு விளங்குகின்றது. அல்லாதூஉம் "அரியலால் தேவியில்லை ஐயனா யாறனுர்க்கே" எனவரும் தமிழ்வேதப் பிரமாணத்தானும், "ஒரு பாலுகளந்த மாலவனுமற்றை, யொருபாலுமையவளாம்" எனவும் "புருடனைச்சத்தியிற் புணர்த்தனை "யன்னதற்கொருகாட்டென்ப புருடோத்தமனே" எனவும் வரும் பலபிரமாணங்களாலும் விளங்கு கின்றது. பகவதி நாராயணி என்னும் அரிய திருநாமமுடைய தேவி யோடு விஷ்ணுமூர்த்தி சம்பந்தமுடையாரென்பது தோன்றவே பக வானென்றும் நாராயணரென்றும் அழைக்கப்பட்டு வருகின்றார். அன்றியும் பரசிவத்துக்குத் தாதான்மிய சக்தியாகிய பராசக்தி ஒரு கூற்றனே புருஷரூபமாகவும் ஸ்திரீரூபமாகவும் திருவுருக்கொண்டு பிரகிருதிமாயா காரியத்தை நடத்திவருகின்றளென்பது மொன்று. இதனை இந்நூலில் நவமஸ்கந்தத்தில் முதலத்தியாயத்தில்காணலாம். இத்தகைய சம்பந்த விசேடத்தால் சிவசக்தியாகக்காணப்படும். விஷ்ணு புராணத்துள் இத்தேவி புராணத்தையுஞ் சொல்லப்பட்ட தென்றறியக்கிடக்கின்றது. விஷ்ணுபுராணை கம்யமாய் சிவபராம்ய பிரகாசினியாய் சர்வபுராண சாரமாய் விளங்கும் இத்தேவிபாகவதத் தையான் பல நல்லோராலும் பிராஹ்மணசபைகளில் நடந்தபிரசங்க விசேடங்களாலும் கேள்வியுற்று அதில் ஆவலுள்ளவனுய் உலகினர் பாகவதவுண்மையுணர்த்து மகிழவும் அதனைக்கண்டுயானும்மகிழவும் தேவி அநுக்கிரகத்துக்கு எளியனுகவும் கருதிமொழி பெயர்க்கலா யினேன். இம்மொழி பெயர்ப்புக்குச் சகாயமாயிருந்தவர் சர்வபுரா ணப்பிரசங்க ரத்னுகரமாய் சென்னையிலிருந்த ஸ்ரீமத் அப்பாவுகுருக் கள். சிந்தாதிரிப்பேட்டை ஸ்ரீ சுப்பிரமணியசாஸ்திரியார். காஞ்சி யிலிருக்கும் பிரஹ்ம ஸ்ரீ விஸ்வநாதசாஸ்திரியார். அவர்களெல் லாம் ஒருக்கால் தவறினும் அச்சமயங்கள் தோறும் தவறுருவண் ணம் ஊன்றுகோல் போலிருந்து உதவிபுரிந்து முற்றுப்பெறச்செய்

தவர் எமது ஆசிரியமூர்த்திகளாகிய ஸ்ரீமத் பைரவசிவ சாசாரிய ஸ்வாமிகள்.

ஸ்ரீமான் செந்தில்வேலு முதலியாரவர்கள் இந்நூலருமையும் என்பால் இயற்கையாயமைந்துள்ள அன்பின் விசேடத்தையும் கருதியேதையன்றி செல்வம் கல்வியின் பாற்படுவதே செல்வத்தின் பயனெனவும், அச்செல்வம் பெற்றூரது சிறப்பெனவும் நன்குணர்ந்து இரண்டுஸ்கந்தங்களே அச்சிட்டுத்தந்ததுந்தவிர ரூபா நூறும் உதவி புரிந்தனர். அதனலும் பிறகு இத்தேவிமகிமையை இந்நூலிற்கண்டு களித்து சேலம் மிட்டாதார் ம-ள-ள-ஸ்ரீ முத்துசாமி கவுண்டர் அனுப்பியரூபா ஐம்பதனலும், இன்னுஞ் சிற்சில நண்பர்கள்செய்த சிறு உதவிகளாலும் பூர்வபாகத்தைமுடித்து உத்தரபாகத்தை முற்றுப்பெறச்செய்வதற்கின்றி இடர்ப்பட்டிருந்தேன். இருக்குங்காலத்தில், எப்ப்பினில் வைப்பாய் நல்லொழுக்கத்தில் மிக்கு நல்லுணர்ச்சியிற் சிறந்து கிழமையைக்கிழத்திடா நட்பிலோங்கிக்காணப்படும் ஸ்ரீமான் கா. மு. மயிலை அரங்கசாமிநாயகர் நூறுரூபா உதவிபுரிந்து ஆரம்பிக்கச்செய்தனர். பாக்கம் சுரோத்திரீகதாராராகிய ம-ள-ள-ஸ்ரீ ம. சிங்காரவேல் முதலியார். ம. செந்திவேல் முதலியார் குமாரர் காளத்தீஸ்வர முதலியார். தா. வெங்கடாசல முதலியார். காட்டாங்குளம் - வடிவேலுமுதலியார் ஆகிய இவர்கள் வேண்டிய உதவி புரிந்து முற்றுப்பெறச்செய்தனர். இவர்கள் நன்மையை என்றும் பாராட்டத்தக்கவனுயுள்ளேன். நிற்க,

யோகிகளாலும் முனிவர் முதலிய சித்தர்களாலும் பரமஞானிகளாலும் மற்றயாவராலும் இடைவிடாமல் வேண்டத்தக்கதாயிருக்கின்ற திருவருளுருவாகிய தேவியினது அரிய பெரிய இப்புராணத்தை மொழிபெயர்க்கத் தொடங்கிய யான் எத்தகைய அறிவுடையன் என்று யானே எண்ணிப்பார்க்குமளவில் நகையாடத்தக்கதே. எனக்கே அத்தகைத்தாயின் ஏனையோர் நகையாடா நிற்பரென்பதில் ஐயமுமுளதோ! ஆயின் அறிவுடையான்மேர் நகையாடார். ஏனெனில், எண்ணிறந்த ஆன்மாக்களாகிய பசுக்களில் யானெரு பசு. எனவே பாசமாகிய அறியாமையோடு கூடிய அறிவுள்ளேன். என்பதையறிவர். அங்ஙனமாயினும் என்னறிவின்கண் வியஞ்சகமாய்நின்று உணர்த்த வேண்டுவனவற்றை வுணர்த்துவதாகிய பதிபறிவும் உடனுயிருத்தலும் உண்மையாமென்றும் உணர்வர். இவ்விரண்டையுமறிந்த அவர் இந்நூலின் கண் சொற்குற்றம் பொருட்

குற்றங்கள் உடையனவாய்க் காண்பாராயின் அங்குவியஞ்சகமாகிய பதியறிவு சொல்லியும் பொருளையும் உணர்த்தாதொழிந்ததென்றும் சொல்லும் பொருளும் குற்றத்துக்கிடனின்றிச்சுவைபுடையனவாய் கிழ்ச்சிக்கிடஞ்செய்ய காண்பாராயின் பதியறிவு ஈண்டு நன்கு பிரகாசப்படுத்தியதென்றும் அகமகிழ்வார். பதியறிவும் பசுவறிவும் உணரப்பெற்ற பெரியோர் இந்நூலின் கண் எனது அறியாமையைக்கண்டிகழின் என்னறியாமை என்னைவிட்டு நீங்குவதற்கு ஓர் வாயிலெனவும், அறிவைக்கண்டு மகிழின் அது தேவியினது நிருவருள் என்பால் வருதற்கு ஓர் வாயிலெனவும் சிந்தித்து மகிழத்தக்கவனுயுள்ளேன். அன்றியும் மேலோர்க்கு அடியேன் அறிவிப்பதொன்று.

இந்நூலில்பன்னிரண்டு ஸ்கந்தங்களில் என்னறிவைச்செலுத்தி வருங்கால் ஒன்பதாவது ஸ்கந்தமொழிந்த ஏனையவைகளில் அறிவு கிளர்ச்சியுற்று அதில்வரும் விஷயங்களின் அருமை பாராட்டி இது எழுதும் புண்ணியங்கிடைத்ததே என்று மனக்களிப்புடன் எழுதி முடித்தேன். ஒன்பதாவது ஸ்கந்தமோ மனக்களிப்புக்கிடனின்றி தேவிபராம்யத்துக்கு அன்னியமாகவும் ஏனைய ஸ்கந்தங்களில் சாமான்யமாய் ஒதுக்கப்பட்ட தெய்வங்களுக்கு பாரம்யமிருதாகவும் தெய்வத்தன்மையுடைத்தெய்வங்கள் மாட்டு சாதாரணமாயிருக்கிற மானிடர்களிடத்துள்ள ராகத்துவேஷ காமக்குரோதாதிகள் கூத்தாடுவதாகிய செயல்களை நவநவமாய்ப் புதுக்கியும் கூறப்பட்டுள்ளன. இவைகளைக் கண்ணுற்றகாலத்து அவைகளெல்லாம் பிரமாணங்களாகவும் வியாசர்வாக்காகவும் எண்ணுவதற்கு ஒருசிறுதும் என்மனம் இடங்கொடுக்கவில்லை. அங்ஙனமிருப்பினும் வடநூலின்கண் வந்தவாறே எழுதிமுடித்தேன். ஏன் எழுதிமுடித்தேனென்றால் என்பேரில் சிலர் அறியாமையால் கூறவரும் பழிச்சொற்களுக்கியேயாம். அஃதாவது மொழிபெயர்த்தவன் சைவனுகையால் இந்த ஸ்கந்தத்தில் அவன் கொள்கைக்கு மாறுகாணப்பட்டமையால் அவையெல்லாம் மாற்றினனென்றும் அல்லது ஒழித்தானென்றும், இப்படித்தான் ஏனையஸ்கந்தங்களையும் தன் மனம்போல் குளறுபடையாய் எழுதிமுடித்தானென்றும் மூதனூலுக்குச் சரியாய்ச்செய்ததில்லை என்றும், அதற்கு இந்த ஸ்கந்தம் எழுதியதே சான்றென்றும் கூறி சாதுக்கள் யாவரையும் இடர்ப்படுத்தி இதில் சிரத்தையுண்டாகா வண்ணஞ்செய்து இந்நூலில்வரும் அரியபெரிய

விஷயங்களைக்கண்டு களிக்கும் பாக்கியத்தையும் இழக்கச்செய்வது மன்றி, முன்முடிந்து வெளியாகிய பூர்வபாகத்தைக்கண்ட அனேக அந்தணர்களும் ஏனையோரிற் பெரியோரும் முதனூலுக்கு விரோத மில்லாமல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மற்றை உத்தரபாக இதுபோலும் முடித்து எப்போது வெளிப்படுத்தப் போகின்றா என்று எதிர்பார்த்திருந்தவருடைய உள்ளங்களையும் மாறுபடச் செய்வாராகலின் அப்பாவத்துக்கஞ்சியும் ஏனைய ஸ்கந்தங்களை எப்படி முதனூலுக்கு விரோதமில்லாமல் மனக்களிப்புடன் எழுதி முடித்தேனோ அப்படியே இந்த ஒன்பதாவது ஸ்கந்தத்தையும் முத னூலுக்கு விரோதமில்லாமல் மனக்களிப்பற்று எழுதிமுடித்தேன் மனக்களிப்புக்கிடங்கொடாத காரணம் இன்னதென்று வெளியிட லாமே என்று சில அறிவாளிகள் எண்ணவரும். இந்த நூலைமொழி பெயர்ப்பதற்கு ஆரம்பித்த நாள் தொட்டு பொருளாலுண்டாகிய சிரமம் ஓர் பங்காயிருப்பினும் பண்டிதர்கள் கிடைப்பதற்கின்றிப் பட்ட சிரமமோ எழுதிமுடியாது. அந்தச்சிரமம் ஆறுவதற்கிட னில்லாமலிருக்கும்பொழுது இந்தப்பெரிய சிரமத்தில் பிரவேசிப் தென்றால் நெஞ்சம் அஞ்சுகின்றது. இப்போது அப்படியிருப்பி னும் சிலமாதம்சென்ற பின்னர் அதனையும் வெளிப்படுத்தலாமென் றெண்ணியிருக்கின்றேன். அன்றியும் அதனையும் இப்போதே வைத் துக்கொள்வேனானால் நாட்செல்லும் என்றால் அனேகர் எடுத்த நூலைப்பூர்த்திசெய்யவில்லை என்கிற பெருஞ்சுமையை என்மே சுமத்தியிருந்தனர். அச்சுமையை வைத்துக்கொண்டே இதில் தலைப்பட என்மனத்துணியவில்லை இச்சுமை நீங்கி விட்டபடியால் இனி அதில் பிரவேசித்து முடிப்பது எனக்குப் பெரிதானதல்ல. அன்றியும் இத்தேவீபாகவதத்தை முதனூலில் ஆங்காங்குவரும் ஸ்தோத்திரங்களையும் சிலபிரமாணங்களையும் கிரந்தாகூர சகிதமாய் ஏனைய விஷயங்களைச் சங்கிரகப்படுத்தி அச்சிட்டு வெளியிடலா மென்று எண்ணி யிருக்கின்றேனாகலின் அத்துடன் இதையும் சேர்த் து வெளிப்படுத்துவேன். சுபம்.

ஸ்ரீ காமாக்ஷி சகாயம்.

கா. ஆலால சுந்தரம்.

ஸ்ரீ

ஸ்ரீமத்பாகவதபுராணம்

தேவீ பாகவதம்.

உத்தர பாகம்.

ஏழாம் ஸ்கந்தம்.

முதலாம் அத்தியாயம்.

*பிரஹ்மாத்யுத்பத்தி.

ஐச்வர்யமிந்துமௌளே ரைகாத்மபிரகிருதி காஞ்சிமத்யகதம்
ஐந்தவகிசோரசேகர மைதம்பர்யஞ்ச காஸ்திநிகமாநாம்.

சர்வஜ்ஞான போதகராகிய சூதமுநிவர் தவசிரேஷ்டர்களாகிய சௌமிசாரணியவாசிகளைப் பார்த்துக்கூறுகின்றார்:—

ஓ பெரியோர்களே! ஸ்ரீதேவீ பாகவதத்தின் பூர்வபாகத்தை யான் சொல்லக்கேட்டு வந்தீர்களன்றே; இனி உத்தரபாகத்தைக் கூறுகின்றேன் கேட்பீர்களாக. பரிட்சித்தினுடைய புத்திரனும் தர்ம ஜ்ஞான சிகாமணியும் இராஜருஷியுமாகிய ஜனமேஜய மகாராஜன், வியாசபகவானுபதேசித்துவந்த மாயாவிலாச வைபவத்தைக் கேட்டு மனக்களிப்புடையவனாய்ப் பணிந்துப்பிரார்த்திக்கின்றான்:—

ஓ சுவாமிகாள்! மஹாத்புதமாகிய பூர்வபாகத்தைக் கேட்டு அநேகதத்வார்த்தங்களுணரப்பெற்று ஆனந்தமுற்றேன். இனி சூரிய சந்திர வம்சங்களிற் றோன்றினவர்களான அரசர்களுடைய வம்ச விஸ்தாரங்களைக் கேட்கவிரும்புகின்றேன். ஓ முற்றுமுணர்ந்தவராகிய முநிவரே! அவ்விரண்டு வம்சங்களிலுந் தோன்றிய அரசர்கள் பராசத்தி பக்தர்களென்று கேள்விப்பட்டிருக்கின்றேனாகலானும் தேவி பக்தர்களுடைய சரித்திரங்களைக் கேட்கின்றவர்கள் சகல பாபங்களினின்று நீங்கிப் பிரபஞ்சத்தில் விருத்தியடைந்து ஞானப்

* பிரமன் முதலானவர்களுடைய உற்பத்தி.

பிரகாசமுடையவராவாரென்று நிச்சயிக்கப் பட்டிருத்தலானும் அவ்விரு வம்சத்தாருடைய விஸ்தாரங்களைச் சிரவணஞ்செய்ய ஆவலுள்ளவனாயிருக்கிறேன் என்று விண்ணப்பித்தனன்.

வியாச பகவான் மனமகிழ்ந்து முகமலர்ந்து கூறத்தொடங்கினர்:— செல்வத்துட் செல்வமாகிய செவிச்செல்வம் வாய்க்கப்பெற்ற செல்வனே! நீவிரும்பியபடி சந்திரசூரிய வம்சங்களிற்றோன்றிய அரசர்களுடைய வம்சாவளியேயன்றி இதரமான இராஜாக்களுடைய சரித்திரங்களையும் விஸ்தாரமாய்ச் சொல்லுகிறேன் கேட்பாயாக. அப்பா குழந்தாய்! பூர்வத்தில் நாபிக்கமத்தினின்றுந் தோன்றிய நான்முகன் தேவியை ஆராதித்துத் தவஞ்செய்து அவர் அனுக்கிரகத்தால் வேண்டிய வரங்கள்பெற்று பிரபஞ்ச சிருஷ்டிசெய்ய எத்தனப்பட்டு மாதுடரைமானசீகமாகச் சிருட்டித்தான்: அவர்கள் நாளுக்குநாள் விருத்தியாய் வருதலில்லாமையைக்கண்டு தனது மனதினின்றும் மரீசி அங்கிரசர் அத்திரி வசிட்டர் புலகர் கிரதர் புலஸ்தியர் என்கிற ஏழுவரையும் சநகாதி நால்வரையுஞ் சிருட்டித்தான். இவர்களைச்சிருட்டித்தபின்னர் மேன்மேலுஞ் சிருட்டிசெய்வேண்டுமென்று ரோஷம்பிறந்தது. அந்த ரோஷத்தினின்று உருத்திரமூர்த்தியும் புத்ஸங்கத்தினின்று காதரும், அங்குஷ்டமாகிய பெருவிரலினின்று தக்ஷப்பிரஜாபதியும் இடதுகைப் பெருவிரலினின்று சாவாங்க சுந்தரிகளாயும் புராணங்களால் பிரசித்தி பெற்றவர்களாயுமுள்ள தக்ஷபத்தினிகளாகிய வீரிணி அவிக்னி என்னும் இருவருந்தோன்றினர் என்றனர்.

சூதர் கூறுகின்றார்:— ஓ சநகாதி மஹாருஷிகாள்! இந்தத் தக்ஷபத்தினியிடத்தினின்று நாரதர் தோன்றினரென்று வியாசர் சொல்லவும் ஜனமேஜயன் வினவுகின்றான்:— ஓ பிரம்மருஷியே! தேவரீர் இப்போது சொல்லிவந்ததில் பிரமாவின் மானசபுத்திரரான நாரத முனிவர் தக்ஷபிரஜாபதிக்குப் புத்திரராஞனென்றல் எப்படிப் புத்திரராயினர்? அவனுக்குப் புத்திரராம்படிச் சாபமிட்டவரார்? அதற்குக் காரணமென்னே? பூர்வஜன்ம மெவ்வண்ணம் போயிற்று? இவையெல்லா மெனக்குச் சொல்லவேண்டுமென்றனன்.

வியாசர் சொல்லுகிறார்:—ஓ அரசனே! பிரஹ்மதேவர் தக்ஷபிரஜாபதியை யுண்டாக்கி அவனை நோக்கி, நீ எண்ணிறந்த பிரஜைகளையுண்டாக்குவதாகிய முயற்சியில் ஆவலுடையவனாயிருத்தல் வேண்டு

மென்று கட்டளையிட அவனும் அவ் வெண்ணத்திலேயேமிக்க ஆவ லுடையவனு யிருந்தபடியினல் அதனை யங்கீகரித்தவனுய்த் தன் மனையாளுடன் கூடி ஐயாயிரம் பிள்ளைகளைப்பெற்று அவர்களை நோக்கி, ஓ புத்திரர்களே! நீங்களெல்லாவ்வொருவரும் பிரஜைகளை யுண்டாக்குந் தொழிலில் ஊக்க முடையவர்களாயிருந்து அதற்காக வேண்டிய முயற்சிகளைச் செய்யுங்களென்றன். அவர்களும் அம் முயற்சியிற்றலைப்பட்டு முயன்றிருக்கும் போது நாரத முனிவர் கால தத்துவத்தால் பிரேரேபிக்கப்பட்டவராய் அவர்களைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே கூறுகின்றார்:— ஓ பிள்ளைகாள்! நீங்களனைவரும் சிருட்டிக்குந்தொழிலில் முயற்சியுடையவர்களாகக் காணப்படுகின் றீர். இம்முயற்சியில் நீவிர் தலைப்பட்டதுபற்றி நான் மிகவுஞ்சந்தோ ஷிக்கிறேன். ஆயினும் பிரஜைகளைச் சிருட்டிக்கவெண்ணிய நீவிர் பூமி இவ்வளவு விசாலமுடையதென்று முன்னரறிந்தன்றே அவ்வளவுக் கேற்பச் சிருட்டிக்கவேண்டும். அங்ஙனமிருக்க அதனையெண்ணுதபிர ஜைகளைச் சிருட்டிக்கத் தொடங்கினீர்களே; அவர்களிருப்பதற் கென் செய்வீர்? நீரே ஆலோசனை செய்மின்கள். உங்கள்செயலை யுலகத்தார் காண்பாராயின் பரிகசிப்பார்களென்பதிற் சம்சயமில்லை. ஆகையால் பூமியின் பிரமாணத்தை முன்னர் தெரிந்துகொண்டு பின்னர் பிரஜை களைச் சிருட்டிசெய்ய முயல்வீராயின் நீங்களெண்ணியகாரியம் சித்தி யாகும், இல்லாவிடில் அது எங்ஙனம் சித்தியாகும்? அது நிச்சய மென்று சொல்லவேண்டுமோ? அவர்களெல்லாம் இந்த நாரதமுனிவர் சொன் னது உண்மையே, இச்சமயத்தில் இவர்நேரிட்டது தெய்வாதீனமே யென்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு பூமியின் பிரமாணத் தைத் தெரிந்துகொண்டு பின்பு சுகமாய்ப்பிரஜைகளைச் சிருட்டிப்போ மென்று நிச்சயித்து நாற்றிசையும் சிற்சிலராகப் பிரிந்துசென்றனர். இவர்கள் இவ்வாறு திசைகடோறுஞ் சென்றதைத் தக்ஷன்கேள்விப் பட்டு அந்தோ! இந்த நாரதனுல் பிள்ளைகளும் போயினர். அவர்களால் சிருட்டிக்கப்படும் சிருட்டியும் போயிற்றென்று மிகவும் மனம் வருந் தினவனுய் பின்னொருவாறு தெளிந்து மீண்டும் எண்ணிறந்தபிள்ளை களைப் படைத்து முன்போல் சிருட்டிப்பதற் கேகினன். அவர்களு மப்படியே சிருட்டிப்பதற்கு முயலும்போது நாரதரும் முன்போல வந்து அந்தப் பிள்ளைகளை நோக்கி முன் அவர்களுக்குச் சொன்ன படியேசொல்ல, இவர்களும் அவர்வாக்கியத்தை நம்பித்திசைதோறும் போயினர், தக்ஷபிரஜாபதி அந்தப் பிள்ளைகளும் போய்விட்டதைக் கேள்வியுற்று சோகத்தோடு கோபங்கொண்டவனுய் நாரதமுனிவரை

நோக்கி, என்பிள்ளைகளே நீ நாசஞ்செய்த படியால் நீயும் நாசமாய்ப் போவதோடு கர்ப்பவாச துக்கத்தையும் அனுபவித்து எனக்கே மகனாகவும் வரக்கடவாயென்று சபித்தனன். ஓ அரசனே! நாரதரைப் பற்றி வினவிய ஐயனுக்களுக்கு விடை இப்போது சொல்லிவந்த சரித்திரத்தாலறியக்கடவாய். பின்னரந்தத்தகூஷன் புத்திர சோகத்தினின்றும் ஒருவாறு நீங்கினவனுய் மறுபடியும் அறுபது கன்னிகைகளைப் பெற்று அவர்களில் பதின்மூவரை காசிபமுனிவருக்கும், பதின்மரை இயமதருமனுக்கும், இருபத்தெழுவரைச் சந்திரனுக்கும், இருவரைப் பிருகுமுனிவருக்கும், நால்வரை அரிஷ்டமுனிவருக்கும், அப்படியே நால்வரை ஆங்கிரசருக்கும் கொடுத்தனன். அவர்களுடைய புத்திரர்களாயும் பௌத்திரர்களாயு முள்ளவர்கள்தான் தேவர்களுந் தானவர்களு மென்றறிவாய். ஓ அரசனே! இவ்விருவகையினரும் பலவான்களாய் ஒருவருக்கொருவர் விரோதிகளாய் இராகத்துவேஷங்களாலுக்குநாள் விருத்தி செய்துகொண்டு அதனாலதி மோகிதர்களாயும் மாயாவிகளாயும் மிக்க சூரர்களாயு மிருக்கின்ற தென்றனர். (6-39)

முதலாமத்தியாயம் முற்றிற்று.

லலந்திகா லஸத் பாலாயைநம:

இரண்டாம் அத்தியாயம்.

* சூரியவம்ச விஸ்தாரகதனம்.

சூதர் கூறுகின்றார்:—ஜனமேஜயன் வியாசபகவானை நோக்கி, ஐயா! தேவரீர் இப்போது சொல்லிவந்ததில் தக்ஷப் பிரஜாபதியினுடைய வம்சோற்பத்தி தெரியவந்தது; இனிச் சூரியவம்சத்திற்றோன்றிய அரசர்களுடைய வம்சமும் அவர்களுடைய சரித்திரமும் மிகப்பெரிதாதலால் அவற்றைச் சொல்லியருளுமென்றனன். வியாசமுனிவர் கூறுகின்றார்:- ஓ அரசனே! சரஸ்வதிநதிதீரத்தில் முன்புநான், நாரதமுனிவரை நோக்கி, இந்த ஏழாவது மநுவினுடைய குலத்தில் எந்த இராஜாக்

* சூரியவம்ச விஸ்தாரத்தைச் சொல்வது.

கள் பிரசித்தி யடைந்திருந்தார்களோ அவர்களுடைய வுற்பத்தி விசேஷமான தென்றும், அதற்குச் சமானமான சரித்திரங்கிடையா தென்றும்; அவர்களுடைய நடக்கைமிகவும் ஆச்சரியகரமான தென்றுங் கேள்வியுற்று, அதில் ஆவலுள்ளவனா யிருக்கிறேன், ஆதலால் தேவரீர் அச்சூரியவம்சத்தின் விஸ்தாரத்தைச் சொல்லவேண்டுமென்றேன், அதற்கர் மனமகிழ்ந்து என்னைநோக்கிப் புன்னகையுடன் ஓ சத்தியவதியின் புத்திரரே! நீர் கேட்கவிரும்பிய அரசர்களுடைய வம்சாவளியைச் சொல்லுகிறேன் கேளும் என்றார். அதாவது பூர்வத்தில் பிரமன் தோன்றியவுடன் சிருட்டிக்கவேண்டுமென்கிற ஆவலுடையவனாய்ச் சிவசத்தியைத் தியானித்துப் பதினாயிரம் வருடம் தவம்புரிந்து அவளருளால் சிருட்டிசெய்யுஞ் சக்தியைப்பெற்று மானசீகமா யனேகம் புத்திரர்களை யுண்டாக்கினன். அவருள் மரீசி என்பவர் சிருட்டிப்பதில் பிரசித்தியடைந்தனர். அவரினுங் காசிபர் மிக்கபிரசித்திபெற்றனர். அவரிடத்திலிருந்தே சகலதேவாசுரர் களும் யக்ஷர்களு முண்டாயினர். சர்ப்பங்களும் பசு பட்சிகளு முண்டாயின. தேவர்களுள் பிரசித்திபெற்றவரான சூரியபகவானுக்கு வைவஸ்வத மநு வென்பவன் பிறந்தான். அவனிடத்தில் இட்சுவாகு, நாபாகன், திருஸ்டன், சரியாதி, நரிஷ்யந்தன், பிராம்சு நகோதிஷ்டன், கருஷன் ப்ருஷத்ரன் என்னும் ஒன்பதின்மர் பிறந்தார்கள். இவர்களே மானவர்க (மநுக்க) ளென்று சொல்லப்பட்டவர். வைவஸ்வதமநுவினுடைய முதற்புத்திரனாகிய இக்ஷ்வாகுக்கு நூறுபிள்ளைகள் பிறந்தனர். அவருள் ஜேஷ்டனை விகுக்ஷியென்பவன் ஆத்மஞானகுணமுள்ளவனா யிருந்தனன். இரண்டாவது புத்திரனாகிய நாபாகனுக்கு அம்பரீஷனென்பவன் பிறந்தனன். அவன் பராக்கிரமசாலியாயும் தர்மஜ்ஞனாயும் பிரஜைகளைக்காப்பதில் ஆவலுள்ளவனாயுமிருந்தனன். மூன்றாவது புத்திரராகிய திருஷ்டனுக்குத் தார்ஷ்டகன் என்பவன் பிறந்தான். அவன் பரப்பிரமஸ்வரூப தியானத்திலும் தவயோகத்திலும் ஆவலுள்ளவனாயும் யுத்தத்திலஞ்சுகின்றவனாயு மிருந்தனன். நான்காவது பிள்ளையாகிய சரியாதிக்கு ஆனர்த்தன் என்னும் புத்திரனும் ரூபலாவண்ணியத்தோடுகூடின சுகன்னியென்கிற புத்திரியும் பிறந்தனர். சுகன்னி என்னும் புத்திரியை அந்தகனை சவனென்னு முனிவருக்குக் கொடுத்தளிட்டான். அம்முனிவன் அந்தகனாயினும் நல்லொழுக்கமுதலிய குணவிசேடங்களால் சூரியன் புத்திரர்களான அஸ்வனி தேவதைகளால் அழகான கண்களைப் பெற்றவனாயினனென்றனர்.

இவ்வாறு சொல்லும்போது, ஜனமேஜயன் வியாசமுனிவரைவினவுகின்றான்:—ஓ பிராணசிரேஷ்டரே! தேவரீர் சொல்லிவந்த வம்சாவளியில் எனக்குண்டாகிய ஓர்சந்தேகத்தை யொழிக்கவேண்டும். அழகான கண்ணுள்ள புத்திரியைக் குருட்டுமுனிவனுக்கு அரசன் ஏன் கொடுத்தனன்? குரூபியாயும் குணமில்லாதவளாயும் ஸ்திரீலக்ஷணமில்லாதவளாயும் இருக்கின்ற பெண்ணைக் குருடனுக்குக் கொடுத்தொழிக்கலாம். அதனால் தோஷமில்லை. அந்த அரசன் அம்முனிவனைக் குருடனென்று நன்றாயறிந்தவனாயிருந்தும், அந்த அழகானபெண்ணை எப்படி அவனுக்குக் கொடுக்கத்துணிந்தான்? இதனைச் சொல்லுவீரென்று வினவினன்.

வியாசமுனிவர் கூறுகின்றார்:—அப்பா! இந்த விசித்திரமானகதையைக்கேட்பாயாக. அந்தப் பெண்ணினுடைய தந்தையான சரியாதி என்னும் அரசனுக்கு நாலாயிரம்பத்தினிகள். அவர்களனைவரும் நல்ல ரூபமுள்ளவர்களாயும் நல்ல லக்ஷணமுள்ளவர்களாயும் அரசனிடத்தில் மிக்க பிரீதியுள்ளவராயுமிருந்தனர். அந்த நாலாயிரவருக்கும் பெண்குழந்தை இப்பெண்ணொருத்திதான். ஆனபடியினால் அப்பெண் தாய்மார்களுக்கும் தந்தைக்கும் அதிகமான பிரியமுடையவளாயிருந்தனள். இவள்செய்தி யிங்ஙன மிருக்க, அந்த அரசனுடைய நகரத்துக்குச் சமீபத்தில் அன்னப்பட்சிமுதலிய சிறந்தபட்சிகளால் சூழப்பெற்றதாயும் வண்டுகளா லொருபொழுதும் பொழியாது மொய்த்திருக்கும் மதுப்பெருக்க முடையதாமரைமுதலிய மலர்கள் நிறைந்துள்ளதாயும் நாற்பக்கங்களிலும் தேவதாரு புன்னாகம் அசோகுமுதலிய விருக்ஷ வகைகளால் அடர்ந்து சூரியவெப்பத்தை யொழித்து எப்பொழுதுங் குளிர்ச்சியைச் செய்வதாயுமுள்ள ஓர் தடாகம் பிரமலோகத்திலுள்ளமானதசரசினுஞ் சிறந்திருந்தது. அதன் சிறப்பை இப்பொழுது என்னால் சொல்லமுடியாது. அத்தடாகத்தருகில் கோகிலங்களுடைய வொலிகளும் மயில்களுடைய சப்தங்களும் நீங்காதிருக்கப் பெற்றவோர் பொழிலொன்றுளது. அங்கோர் பரிசுத்தமானவிடத்தில் பார்க்கவரென்னும் ஓர் முனிவர் சாந்தராய் த்ருடாசனத்திலிருந்து மௌனியாய் வாயுபக்ஷணத்தையு மொழித்து இந்திரிய விஷயசப்தங்களையு மகற்றித் நீர்த்தபானஞ் செய்வதையும்விட்டுப் பராசத்தியாகிய அம்பிகையைத் தியானித்துக்கொண்டு நிர்விகல்ப சமாதியுக்தராய்த்தவஞ்செய்திருந்தனர். அவரது திருமேனி கொடிசெடி மூதலிய

வற்றால் சூழப்பெற்றுப் புற்றுருவமாய்விட்டது இம் முனிவரிங்ஙன மிருக்க அப்பொழிலின்கண் சரியாதியரசன் தன்னுடைய ஸ்திரீகளோடு தன் பெண்ணையு மழைத்துக்கொண்டு வந்து அந்தத்தாமரை தடாகத் தில் தன்னுடைய பத்தினிமார்களுடன் கிரீடித்துக்கொண்டிருந்தனன் அந்தச் சமயத்தில் அவனுடைய சுகன்னியென்னும் பெண்தோழிக ளோடுகூடி அவ்வனத்துட்சென்று திரிந்து புஷ்பங்களைப் பறித்துக் கொண்டு புற்றுருவமாயிருக்கின்ற பார்க்கவ முனிவரிடம் வந்தனள். விளையாட்டிலாசையுள்ள அப்பெண் முனிவர் புற்றுருவமாயிருப்பதை யறியாதவளாய் இதுவென்ன புற்றென்றதிசயித்து அதன் சமீபத்திற் சென்றுபார்க்கும்போது அப்புற்றின்சந்தில் மின் மினிப் பூச்சியைப் போலொரு சிறியவொளிதோன்றிற்று. இதுவென்ன மின்னுகின்றதே யென்று கூர்மையான முள்ளொன்றெடுத்துக் குத்தி அதைப்பார்த் துக்கொண் டிருந்தனள். அவ்வொளி அவரது கண்ணுதலால் அதிற் றைத்தது. தைக்கவே அவர் தமதுயோகநிலைவிட்டவராய் இச்செய்கை செய்தார் இங்கு யாவரென்றுபார்க்க இப்பெண்ணைக்கண்டனர். அந் தோ! ஓ பெண்ணே! நீ யேனிப்படிச் செய்கின்றாய்? புற்றைச் சிதைவு செய்யாது தூரமா யோடிப்போய்விடென்றம்முனிவர் கூறவும் அச் சொல்லை இவள் நன்றாய்க்கவனியாமல் அவர்கண்ணை நன்றாய்க் குத்தி விட்டனள். பின்னர் முனிவரென்றுணர்ந்து அப்புறமோடிப்போய் நாமென்ன காரியஞ் செய்துவிட்டோம்; இதற்காக நமக்கென்ன தீங்கு வருமோவென்று சந்தேகித்திருந்தனள்.

இவளிங்ஙனமிருக்க, அவளால் குத்தப்பட்ட கண்ணுள்ள அந்தருஷி அதிக துன்பமுள்ளவராய்க் கோபத்தோடுங்கூடி கண் ணேயிலல் மிகவும் பீடிக்கப்பட்டு மகாசங்கடத்தை யனுபவிப்பா ராயினர். அந்த க்ஷணத்திலேயே அரசனுக்கும் அவனுடைய மனை விகள் முதலிய சகலபரி சனங்களுக்கும் மலசலங்கள் வெளிவாராமல் வெருந்துன்பம் விளைந்தது. ஏனையோரைப் பார்க்கிலும் அரசனுக் கும் மந்திரிக்கும் அத்துன்பம் மேன்மேற் பெருகிற்று. இருவருந் துன்பப்பட்டிருக்குஞ் சமயத்தில் பத்தினிமார்களும் பரிஜனங்களும் அவர்களிடம்வந்து தாங்கள் மலமூத்திரபந்தனையால் படும் பாட்டை அலறிக் கதறிக் கூறினார்கள். அக் கூக்குரலைக் கேட்டவரசன் இத் துக்கத்துக்குக் காரணம் யாதென்று சிந்தித்து இவ்விடத்திலுள்ள பெரியோர்கட்கு யாதோவொரு தீங்கு நேரிட்டிருக்க வேண்டு மென்றுலோசித்து யாவரையும் பார்த்து, இவ்விடத்தில் யார்யார்

எவ்வெவ்விதமான பாவங்களைச் செய்திர்களென்று கேட்க அவருட் சிலர்கூறுகின்றனர்:—ஓ அரசனே! தடாகத்திற்குமேற்பாகத்திலுள்ள வோர் பொழிலின் மத்தியில் மகாதபசியான பார்க்கவமுனிவர் தீக்ஷ்ணியமான தபஞ்செய்துக்கொண்டிருக்கிறார். அக்கினிபோல் ஜொலிக்கும் அம் முனிவரிடத்தில் எவனோ அபராதஞ்செய்து விட்டான். ஆதலால் நமக்கெல்லாம் இப்படிப்பட்ட சங்கடமுண்டாயிற்று. இது நிச்சயம். தபோவிருத்தராயும் வயோவிருத்தராயும் சிரேஷ்டராயு மிருக்கும் மகாத்மாவான அந்தருஷிக்கு அபராதஞ் செய்தவன் தெரிந்து செய்தானோ தெரியாமல் செய்தானோ அதன்பலன்தானிது. ஏந்தத்துஷ்டர்கள் அந்தருஷிக்கு விளையாட்டாக என்னசங்கடத்தைச் செய்தார்களோ அது தெரியவில்லை. இங்குள்ள நாங்களெல்லாம் அம்முனிவருக்கு மனத்தினாலும் வாக்கினாலும் சரீரத்திலுமோர் தீங்குஞ் செய்தோம் இல்லை என்றனர். சுலோகம்—(65)

இரண்டாம் அத்தியாயம்

முற்றிற்று.

ஓ

லலாட நயனர்ச்சிதாயைநம:

மூன்றும் அத்தியாயம்.

சுகந்யா ச்யவந விவாகம்.

வியாச முனிவர் கூறுகின்றார்:—ஓ ஜனமேஜயனே! சரியாதி என்னும் அரசன் சேனைகளுட்சிலர் சொல்லியவார்த்தைகளைக் கேட்டு மீண்டும் யாவரையும் நோக்கி நல்லவார்த்தைகளாலும் கோபத்தினாலும் உண்மை விளங்கக் கேட்டுக்கொண்டிருக்கும் பொழுது அவனது புத்திரியாகிய சுகன்னி பரிசனங்களெல்லாம் மகாபாதைப்படுவதையும் தந்தையார் வயிற்றுச் சூலையால் வருத்தப்படுவதையும் பார்த்து ஆலோசித்தவளாய் அரசனுடையதந்தையிடம்வந்து ஓ தந்தையே!

கானிந்தவனத்தில் விளையாடிக்கொண் டிருக்குப்போது கொடிகளாற் சூழப்பட்ட இரண்டு சந்துள்ள ஓர் புற்றைக்கண்டேன். அதில் மின் மினிப் பூச்சிபைப்போல் பிரகாசிக்கு மிரண்டொளிகண்டு இது வென்னவென்றறியலாமென்று மூள்ளெடுத்துக்குத்திப் பிடுங்கிப் பார்க்கும்போது அப்மூள் ரசமாயிருந்ததுமன்றி அப்புற்றின் மத்தியி லிருந்து ஆஹாவென்று ஓர் சப்தமுமுண்டாயிற்று. என் றந்தையே! இது வென்னவென்று சந்தேகித்து ஆச்சரியமடைந்தேனேயன்றி அந்தப்புற்றிலிருந்த ஜெந்து இன்னதென்று தெரிந்துகொள்ளாமல் வந்துவிட்டேனென்று கேட்டவரசன், அதி சீக்கிரமாய்ப் புற்றிருக்கு மிடத்துக்குவந்து அப்புற்றினிடத்தில் தபோவிருத்தரான முனிவ வரைப்பார்த்து, அந்தோ! அந்தோ!! என்றேங்கி அவரைச் சூழ்ந் திருந்த புற்றை யுடைத்துவிட்டு அவரைநோக்கி சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து மிக்க வணக்கத்துடன் கைகூப்பிக்கொண்டு, "ஓ மஹாது பாவரே! இங்கு விளையாடிக்கொண்டிருந்த எனது பாலை அறியாத தன்மையால் குற்றத்தைத் தெரியாமற் செய்துவிட்டனள். ஓ பிரஹ்ம சொரூபியே! அதைப் பொறுத்தருளல் வேண்டும். முனிவர்கள் கோபமில்லாதவர்களென்று யான் கேட்டிருக்கின்றேன். ஆதலால் நீர் மஹாமுனிவரா யிருக்கின்றபடியால், அதிபாலையான என் புத்திரி செய்த குற்றத்தை க்ஷமிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தனன். அம் முனிவர் அவ்வரசன் வார்த்தையைக்கேட்டு இரக்கமுள்ளவராய் "வினயத்தோடும் அக்கத்தோடுங் கூடியிருக்கிற ஓ அரசனே! நானெப் பொழுதும் அணுமாத்திரமும் கோபங்கொள்ளுவதில்லை. இப்போது நான் படும் இப்பாட்டிலும் நான் கோபங்கொள்ளவில்லை யென்பது நீயே தெரிந்துகொள்ளலாம். நான் உன் பெண்ணைச் சபித்தேனு? ஒரு குற்றமுஞ் செய்யாத நமக்கு இப்பாதையு னுண்டாயிற்றென்று அந்தப்பாவத்தையெண்ணி இப்போது நான் துக்கப்படுகின்றேன். ஓ அரசனே! நானுனது பெண்ணுக்குச் சாபமிடாவிடினும் நான் தேவி பக்தனதலால் உங்களுக்குத் தீங்குநேர்ந்தது. தேவிபக்தனிடத்தில் குற்றஞ்செய்தவர் சகல சுகத்தையுங் கொடுக்கத்தக்க சிவனைச் சரண மடைந்தாலுஞ் சுகமடையார். ஆகலான் உங்கள் வருத்தத்துக்கு நான் காரணனல்லன். ஓ அரசனே! கண்ணில்லாத கிழவனுகிய நான் என் செய்கேன். அந்தகனுப்போன வெனக்கு யார் பணிவிடை செய்வார்" என்று வருந்தினர். அவரது துயரமொழியைக்கேட்ட

அரசன், "ஓ முநிபுங்கவரே! நீர் நமக்கு யாருமில்லையே என்று துக்கிக்கவேண்டாம். நான் அநேக பரிசாரகர்களை உமக்கு வேண்டிய பணிகள்செய்ய நியமனஞ்செய்கிறேன். நீர் மாத்திரம் இச்சிறு பிழையைப்பொறுத்து எங்களுடைய துன்பத்தைத் போக்கவேண்டும்" என்று பிரார்த்திக்க, அம்முநிவர் "ஓ அரசனே! அநேக பரிசாரகர்களை நீ எனக்குவைத்தாலும் நான் தவஞ்செய்யவேண்டுமே! கண்ணில்லாமலெப்படிச் செய்வேன்? அன்றியும், உன்னுடைய சேவகர்கள் என்னுடைய இஷ்டத்தையறிந்து செய்வார்களா? அடிமையாட்களுக்கு கணபுண்டாகுமா? ஓ அரசனே! நீ என்னைப் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்பதும் எனக்கு வேண்டிய சுகத்தைச்செய்ய வெண்ணியிருப்பது முண்மையானால் உனது அருமந்த செல்வியாகிய புத்திரியை யெனக்குத் தருவாய். நானதனால் சந்தோஷசித்தனாய்த் திருப்தியடைந்து தவஞ்செய்வேன். அவளெனக்குச் செய்யவேண்டிய பணிகளைக் காலமறிந்து செய்வாள். நான் சொல்லியபடி நீயாலோசித்துச் செய்யும்பட்சத்தில் நானுஞ் சந்தோஷத்தையடைவேன். நீயுஞ் சேனைகளுடன் சந்தோஷமடைவாய் இதிற் சந்தேகங்கொள்ளாது உனது கன்னிகையைத் தானஞ்செய்வையாயின் அவளுக்கு யாதொரு குறையும் உலகில் தூஷணமுமுண்டாகமாட்டா" என்று சொல்லவும், அரசன் சிந்தாகுலனாய் கொடுக்கமாட்டேனென்றும் கொடுக்கிறேனென்றுஞ் சொல்லாமல் "குருடாயும் கிழவராயும் குரூபியாயுமிருக்கும் இம்முநிவருக்கு தேவகன்னிகைபோலிருக்கும் நமது பெண்ணைக்கொடுத்து நாமெப்படிச் சுகமடைவோம், நம்முடைய பெண்ணை இம்முநிவருக்குக் கொடுப்பது நம்முடையசுகத்தை யுத்தேசித்தேயன்றி அவளுடைய சுகத்தை யுத்தேசித்தல்லவே. தன் சுகத்திற்காக புத்திரியின் சம்சாரசுகத்தை எந்தப்பாவிதான் கெடுப்பான்? எந்த அறிவிலிதானிவ்வாறெண்ணுவான். அந்தகராயும் விருத்தராயுமிருக்கும் இம்முநிவருக்கு நாமும் கொடுக்கத்தணிந்து அவளும் இவரைப்பர்த்தாவாகவடைவதற் கிசைவளாயின், பின்னர் காமபாணத்தால் பீடிக்கவருங்காலத்தில் அக்காலத்தை எப்படிக்கழிப்பாள்? பர்த்தாவென்று இவரை வைத்துக்கொண்டு யவ்வனகாலத்தில் காமத்தையனுபவிப்பதற்கில்லாமற் போமாயின், அதனையொழிக்க இவளால் முடியுமா? அக்காலத்திலதனை யனுபவித்துப் பின்னொழிக்க வேண்டுமானாலறிவாலொழிக்கலாம். அந்தோ! நம்முடைய பெண்

கண்ணில்லாத கிழவரைக்கணவனுகப் பெறிவாளாயின்யவ்வனகாலத் தில் விளையுங்சாமத்தை யெவ்வாறு கழியவல்லவளாவள். பூர்வத்தில் விருத்தராகிய கௌதமமுனிவரைக் கணவராகக்கொண்ட அகலிகை யானவள் யவ்வனகாலத்திலில்லவா இந்திரனுல் வஞ்சிக்கப்பட்ட வஞ் சனைக்குள்ளாய் அவனுல் காமசுகத்தை யனுபவித்தாள். அச்சுகத் தைக் கவுதமரால் அனுபவித்திருப்பாளாயின் அவ்விந்திரனுடைய வஞ்சனைக்குட்படுவளா? பின்னர் கிழவராகிய கவுதமர் அச்செயலறி ந்து அவரைச்சபித்தனர். அந்தோ அவர் சாபங்கொடுப்பதில் வல் லவராயினரேயன்றிக் காமசுகங்கொடுக்க வல்லவராயினரில்லையன்றே. அப்படித்தானே இவர் கதியுமாம்" என்றெண்ணி, நாமிப்பெண்ணை யிவருக்குக் கொடுக்கப்போகாது; நமக்கு வந்திருக்குந் துன்பத்தை நாமேயனுபவிப்போமென்று நிச்சயித்துக்கொண்டு அம்முனிவருக் கொன்றுஞ் சொல்லாமல் தன்னரண்மனைபோய்ச் சேர்ந்த மந்திரிகள் யாவரையுமழைத்து மகாதுக்கத்துடன் அவர்களைப்பார்த்து "ஓ மந் திரிகளே! நானிப்பொழுது என்னசெய்வேன்; நீங்கள் சொல்லுங்கள்; அம்முனிவருக்குப் புத்திரியைக் கொடுத்துவிடவா? அல்லது இந்தத் துக்கத்தை யநுபவிக்கவா? இவற்றை நீங்களனைவரும் ஒன்றுசேர்ந்து யோசித்து எது நன்மையோ அதனைச்சொல்லுங்கள்" என்றரசன் கூற, மந்திரிகள் "ஓ மகாராஜனே! இந்த மகா சங்கடத்துக்கு என்ன வாலோசனைசெய்து எதைச்சொல்லுவோம்'! என்று அவர்கள் மயக்கி யிருக்கும்போது அந்தச் சுகன்னிகை யென்பவள் தந்தை சிந்தை யோடு கூடியிருப்பதையும், மந்திரிகள் யாதொன்றும் சிந்திப்பதற்கில் லாமலிருப்பதையும் பார்த்து தந்தையின் சமீபத்தில்வந்து சிரித்துக் கொண்டே 'ஓ தந்தையே! எனக்காவன்றே நீரிப்பொழுது விச னப்படுகிறீர். விசனப்படவேண்டாம் என்னுல் கண்ணுயடைந் திருக்கிற முனிவரிடம் நான்போய் அவருக்காளாகவிருந்து அவரைச் சமாதானப்படுத்திச் சந்தோஷமுண்டாக்கி உங்களெல்லோடைய கவலையுமொழிக்கின்றேன். நீங்களெல்லோருஞ் சுகமாயிருங்கள்" என்று கூறவே, அரசன் அவளது அறிவிற்கு வியந்து, "ஓ குழந்தாய்! "காட்டில் கண் குருடாயிருக்கின்ற அக்கிழவரைப் பெரியோரென் றெண்ணி நீ பணிசெய்தால் மனதுக்கு யாதொரு துன்பமுமில்லை. கணவராக்கொண்டு பணிவிடைசெய்தால் அது துன்பந்தராமற் போமா? நீ அக்கிழவருக்கு எங்களுடைய துன்பத்தைக்கருதி பணி

விடை செய்கின்றேனென்று துணிந்து போவதற்குப் புறப்பட்டாலும் இரதிபோன்ற வுனக்கு அவராலென்ன சுகங்கிடைக்குமென்று நான் துணிந்திருப்பேன்? தக்தையானவன் தன்பெண்ணைச் சரீரத்திலிருக்க வேண்டிய யௌவனபலம் பந்துபலம் தனபலம் தானியபல முதலிய வற்றையுடைய புருஷனுக்குக் கொடுக்க வேண்டுமேயன்றி இவை யொன்றுமில்லாத தரித்திரனுக்குக் கொடுக்கலாமா? ஓ என் செல்வியே! உனது சௌந்தர்யமெங்கே? காட்டிற்றிரியு மக்கிழவரெங்கே? அவ்வந்தகக் கிழவருக்குத் தாமரைமலர்போலும் மலர்ந்திருக்கும் கண்ணைப்படைத்திருக்கு முன்னைக்கொடுத்து வுன்னைத் தன்பப்படுத்துவதைப்பார்க்கிலும் நானுமென்னுடைய பரிஜனங்களுந்தன்புற்று மரணவடைவது சுகம். இதனாலெனக்குப் பாவமில்லை. உன்னை அக் கிழவருக்குக் கொடுப்பேனாயல் அப்போதே யெனக்குப் பாவம்வரு மென்பதிற் சந்தேகமில்லை. ஆகையால் என்னுயிரினுஞ்சிறந்த மகளே! இனி நீ எவ்வளவு சொன்னாலும் அக்குருடருக்குன்னை நான்கொடுக்க மாட்டேன். எனக்கு வந்திருக்குந்தன்பத்தைப்பற்றி நான் தைரியத்தைவிடேன். நீ என்னிடத்திலேயே ஸ்திரமாயிருப்பாய். இதனால் இந்தத்தேகமும் இராஜ்ஜியமுமிருந்தாலு மிருக்கட்டும் போனாலும் போகட்டும். ஓ குழந்தாய்! அவ்வந்தகர்க்கு நானுன்னைக் கொடுப்பதில்லை, இது நிச்சயம்" என்றான்.

அவன் வார்த்தையைக்கேட்ட சுகன்னி தன்தந்தையைப்பார்த்து நகைத்து, "ஓ அப்பா! நீ இவ்வாறு சொல்லுவது உனக்கடுத்த தன்று. நான் சொல்வதைக் கேட்பாயாக. என் விஷயத்திற் சிந்தனை கொள்ளவேண்டாம். என்னிமித்தமாய் எல்லாஜனங்களுஞ்சுகமடைய என்னை இப்பொழுதே முனிவரிடம் கொண்டுபோய்விடு. நான் பக்தியோடு அம்மஹாபரிசுத்தரான முனிவருக்கு வேண்டிய பணிகளைச் செய்து அவருக்குச் சந்தோஷத்தை வருவித்து அதனை நான் கண்டு மகிழ்வதாகிய இன்பத்தையனுபவிக்கத் துணிந்திருக்கின்றேன். அவரிருக்குமிடமோ யாருமில்லாத ஆரணியம். அவரோ கிழவர். நானோ வாலிபமுள்ள பருவமுடையவள். இப்பொழுது நான் கற்புநிலைமையைக்காப்பாற்றிக்கொள்வதற்கான முயற்சியைத்தேடிக்கொள்வேனேயன்றி கற்புநிலைமையைக் கெடுத்தக்கொள்வதற்கான முயற்சியைச் செய்வேனென்று ஒருபோதும் நீர் நினையாதொழிவீர். என் மன

மானது அற்ப சுகவிஷயங்களில் அலையாது சுகமாகவிருக்கும்" என்றனள். அதிதீரத்துடன் சொல்லிய அவள் வார்த்தையை மந்திரிகளும் அரசனுங்கேட்டாச்சரியமு மானந்தமுமடைந்து அப்பெண்ணை அப்போதே அழைத்துக்கொண்டு முனிவரிடம்போய் தலைவணங்கி அவரை நோக்கி, "ஓ பிரபுவே! தேவரீர் சொல்லியபடி என்னுடையபெண்ணை உமக்குத்தத்தஞ் செய்கிறேன் வாங்கிக்கொள்ளும்" என்று அப்பெண்ணை வேண்டிய ஸ்ரீதனங்களுடன் விவாகஞ்செய்து கொடுத்தான். சவனமுனிவர் கன்னிகையைமாத்திரம் அங்கீகரித்துக்கொண்டு சந்துஷ்டராய் ஏனைய ஸ்ரீதனங்களை அங்கீகாரஞ்செய்யாது அரசனுக்கு ஆசிபுகன்றனர். அக்கணமே சேனைகளுக்கெல்லாம் தேகோபாதிநீங்கிச் சுகமுண்டாக, அதனை யரசன் கண்டு மிக மகிழ்வெய்தி முனிவரிடம் விடைபெற்றெழுந்தனன். அப்போது அவனது புத்திரி "ஓ அண்ணா! என்னுடைய வஸ்திரங்களையும் பூஷணங்களையும் வாங்கிக்கொள்ளும். நான் முனிவருக்குரித்தாகிய மரவுரியும் கிருஷ்ணாசனத்தையுந்தரித்து முனிபத்னியாவேன். இந்தப் பர்த்தாவை நான் மோசஞ்செய்யேன். அவருக்கு வேண்டிய இதத்தையே செய்வேன். எனது காமசுகத்தையெண்ணாது கற்பினல்வருஞ் சுகத்தையே எப்பொழுதும் நீங்காத சுகமென் றெண்ணுவேன். எனது கற்புநிலைமையால் முனிவருக்குப் புகழ் வருவதேயன்றி உனக்கும் மூன்றுலகத்திலும் பெரும்புகழுண்டாகும். அந்தகரான கிழவருக்கு அழகான வயதுள்ள நமது பெண்ணைக் கொடுத்துவிட்டோமே இவள் நல்லொழுக்கத்தைக் காப்பாற்றுவாளோ காப்பாற்ற மாட்டாளோவெனச் சிந்திக்க வேண்டாம். அருந்ததி வசிட்டருக்கு எவ்வளவு தருமபத்தினியாயின்று முலகில் தம்பதிகளுக்குக் கலியாணகாலத்தில்காட்ட யெவ்வாறிருக்கின்றாளோ அவ்வாறுநானும் முனிவருக்கிருப்பேன். அதுகுயை அத்திரி முனிவருக்குப்பத்தினியா எப்படி பதிவிரதையென்று பிரசித்திபெற்றாளோ அப்படி நான் பிரசித்திபெற்று சுகமாயிருப்பேன். நீ போய்வா" என்றாள். அரசன் அவள் வேண்டியவாறே மரவுரியையுங் கிருஷ்ணாசனத்தையுங் கொடுக்க, அவள் வாங்கித்தரித்துக்கொண்டு அணிந்திருக்கும் வஸ்திராபரணங்களை அரசனிடங்கொடுத்துவிட்டாள். அவளது தவக்கோலத்தைக்கண்ட அரசன் பேதமைத்தன்மையால் கண்ணீர்விட்டழ, ஏனைய மந்திரிகளும்அழுதழுது அறிவற்ற பாவைபோல் யாதொரு தெளிவுமில்லாம லசைவற்றிருந்தனர்.

அப்பெண் யாவையுந்தேற்றி அவரவர்களுக்குச் சொல்லவேண்டிய படி சொல்லி விடைகொடுத்தனள். அரசன் முதலிய யாவரும் விடை பெற்றுத் தெய்வத்தைநாடி நகரம்போய்ச் சேர்ந்தனர். (6 - 64½)

மூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

நான்காம் அத்தியாயம்.

லக்ஷ்மீஜ்வலதிவ்யாங்கியை நம:

* சுகந்யாயா தேவ பிஷஜோ சம்வாதம்.

வியாசபகவான் ஜனமேஜயனைநோக்கிக் கூறுகின்றார்:— சுகன்னியினுடைய கற்பிலக்கணத்தை நானென்னவென்று சொல்லப்போகிறேன். சரியாதிமகாராஜன் போனபின் அந்தச்சுகன்னி அந்தக்கிழவராகிய தனது கணவனுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளெல்லாஞ் சாஸ்திரவிதிப்படி தன் மனதிலெண்ணி அப்படியே செய்வதில் ஆவலுள்ளவளாய்த் தன் கணவன் எழுந்திருப்பதற்குமுன் தானெழுந்திருந்து சவுசத்துக்கு வேண்டிய மண்ணையும், சவுசபாத்திரத்தில் ஜலமுமெடுத்துக்கொண்டு கணவனைத் தனது கைகொடுத்துத் தூரத்திற் கொண்டுபோய்விட்டுத் தான் அவருக்கு மறைவாகத் தூரத்தினின்றிருந்து அவர் சவுசம் செய்துகொண்டபின்னர் அவரைப் பிடித்துக்கொண்டு மெல்ல மெல்ல நடத்தி ஆச்சிரமத்திற்கு அழைத்துவந்து சுகமான ஆசனத்திலிருக்கச்செய்து பாதங்களை மண்போட்டு

* சுகன்னிக்கும் தேவவைத்தியர்களுக்குஞ் சம்வாதம்.

ஜலத்தினல் விதிப்படி தானே அலப்பி ஆசமனஞ்செய்வித்து சாஸ் திரோக்தமான தந்தகாஷ்டங் (பற்களேவிளக்குங்கொம்பு) கொடுத்துத் தந்தாவனஞ் செய்துகொள்ளும்படிச் சொல்லிப் பின்னரவரைத் தந்தசுத்தியாயிற்றுவென்று சேட்டுப்பரிசுத்தமான வுஷ்ணஜலத்தைக் கொண்டுவந்து வைத்து, பிரபுவே! வென்னீர் கொண்டுவந்து வைத் திருக்கிறேன், அதனே மந்திர பூர்வகமாய்ச் சித்திசெய்து ஸ்நானஞ் செய்யலாமே என்றுசொல்லி, அவர் ஸ்நானஞ் செய்தபின்னர் சந்தியா காலம் வந்துவிட்டது, இனி, பிராதஸ்ஸந்தி செய்யலாமென்பாள். அவ்வநுஷ்டானங்களெல்லா முடிந்தபின்னர் தேவபூசை செய்யலா மென்றுசொல்லி அதற்குவேண்டிய வுபகரணங்களெல்லாங் கொண்டு வந்துவைத்து விதி பிசகாமல் அதனே நடத்திவைப்பாள். அதுமுடிந்த பின்னர் அக்னிகாரியத்தை நடத்திவைப்பாள். அது முடிந்தபின்னர் இனிமையான பழங்களேயும் நாஞ்சிதமான கிழங்குகளேயுஞ்செங்கெல் லன்னத்தையுங் கொடுத்துண்பிப்பாள். உண்டபின்னர் கைகால்களே யலம்பி ஆசமனதீர்த்தங்கொடுத்து ஆசமனஞ்செய்யச்செய்வாள். பின் னர் மான்றோல் புலித்தோல் முதலிய ஆசனங்களிற் சற்றிருக்கச்செய் வாள். பின்னர் கைகால்களேப்பிடித் தறங்கச்செய்வாள். அவருறங்கிய பின்னர், தன் சரீரத்துக்குச்சாதனமான கனிவகைகளேப்புசித்து அதி சீக்கிரமாகக் கணவனிடம்வந்து அவருறங்கி யெழுந்திருப்பதைப் பார்த்து மிக்கவன்புடனே சமீபத்திலிருந்து, ஓ பிரபுவே! இப்போது என்ன செய்யவேண்டுமோ அதனேச் சொல்லுமென்று விநயத்துடன் கேட்டுப் பாதங்களேப்பிடிக்க விரும்பினுல் அப்படிச்செய்வாள். அக் காலத்தில் சிவசரித்திரங்களேயும் பதிவிரதாதருமங்களேயுங்கேட்பாள். பின்னர் சாயங்காலஞ் செய்யவேண்டிய ஹோமமுதலியவைகளேமுடிக் கச்செய்து மதுவாயும் ருசியாயுமுள்ள பழவர்க்கங்களேக் கொடுத்து அதனதன் சுவை ருசிகளேச்சொல்லி யுண்பிப்பாள். பின்னரவருடைய வுத்திரவினல் மிச்சமான பழங்களேத் தானுண்டு அவருக்குச் சுகமான படுக்கையையெரித்து உறங்கச்செய்து அவருறங்குமளவும்பாதங்களேப் பிடித்திருந்து அவரது பாதத்தடியில் தான் நித்திரைசெய்வாள். இரவு மன்றி கிரீஷ்மகாலத்தில் அவருக்குவெப்பந்தீர விசிறியினல் குளிர்ச் சியையுண்டாக்குவாள். ஏமந்தகாலத்தில் அவரெதிரில் கட்டைகளேக் கொளுத்தி அவரைச் சமீபத்திலிருக்கச்செய்து சுகமாயிருக்கிறதா சுகமாயிருக்கிறதாவென்று அடிக்கடி கேட்பாள். இவ்வாறு அக்கன்

ளிதை முனிவரைக் கணவனுகவடைந்து பிரீதியோடும் கிரமத்தோடும் தினம் பணிவிடை செய்வதோடு கிருகஸ்தாசிரமத்துக்குரிய அக்னி பூஜையும் அதிதிபூஜையும் விதிப்படி நடத்திவருவாள்.

கிலகாலங் கழிந்தபின்னர், சூரியன் புத்திரர்களான அஸ்வனி தேவதைகள் விமானமேறிக்கொண்டே அச்சவன முனிவருடைய ஆசிர மத்துக்கு வந்தார்கள். அச்சமயத்தில் இக்கற்புடைய மாதுசிரோன் மணி நீராடி ஆச்சிரமத்தை நோக்கிப்போக, அந்த அஸ்வனிதேவதைகள் சமீபத்தில் வந்து மோகமடைந்தவர்களாய் "மத்த யானையைப் போல் நடக்கிற உத்தமமான ஓ ஸ்திரீயே! நாங்கள் சூரியனுடைய புத்திரர்கள். தேவகன்னிகைபோ லிருக்கின்ற உன்னைப்பார்க்கவந்தோம். நீயாருடையபெண்? உன்பர்த்தா யார்? இத்தடாகத்தில் நீ நீராடுவதற்குச் சகாயமின்றி யெப்படிவந்தாய் இரண்டாவது இலக்ஷ்மிபோல் பிரகாசிக்கின்ற நீ இன்னுளென்பதை அறிய விரும்புகின்றோம். உண்மையைக் கூறுவாய் மிருதுவான உன்பாதங்கள் இவ்வனத்தில் நடக்கும்படிச்செய்த தெய்வத்தைப்பற்றி எங்கள் மனதில் துக்க மூண்டாகின்றது. மெல்லிய சரீரமுள்ள நீ விமானத்திலேறிக்கொண்டு போகத்தக்கவளாயிருக்க யாதகாரணத்தால் காலினல் கீழே நடக்கிறாய்? மேலே போர்வையில்லாமல் இக்காட்டில் ஏன் திரிகிறாய்? நீ சகிகளோடுடையவளா யிருக்கவேண்டுமே! அவர்கள் உனக்குச் சிஸ்ரூஷைசெய்யாமலிருப்பதற்குக் காரணமென்னே? நீ இராஜஸ்திரியா? அப்சரஸ்திரியா? உண்மையைக் கூறுவாய். உன்னுடைய பாக்யத்தையும் உன்னைப்பெற்ற தாய் தந்தையர்களுடைய புண்ணியத்தையும் உன் கணவனுடைய பாக்கியத்தையும் நாங்கள் சொல்லுவதற்குச் சமர்த்தரல்ல. ஓ அழகான கண்ணுள்ள பெண்ணே! உனது கால் நிலவப்பெற்ற இப்பூமி தெய்வலோகத்திலுமதிக பெருமையுள்ளது. உனது காலடையினல் இப்பூமி பரிசுத்தமாய் விட்டது. உன்னுடைய போழகைக் காட்டிலிருக்கு மிருகங்களும் பட்சிகள் முதலிய சகல ஜெந்துக்களுங் கண்டு உன்னையே பார்க்கின்றன. நாங்களுன்னை அதிகமாய் ஸ்தோத்திரஞ் செய்ததுபோதும். நீ உன்னுடைய வுண்மையைக் கூறுவாய். உன்னுடைய தகப்பனர் யார்? புருஷன் யார்? அவர்களைப்பார்க்க எங்களுக்கு ஆசையிருக்கின்

தது" என்றனர். ஓ அரசனே! இவ்வாறு அவ்விருவரும் கூறிய வார்த்தைகளை அவள் கேட்டு நாணமுடையவளாய், "ஓ அஸ்வனி தேவதைகளே! என்னைச் சரியாதியின் புத்திரியாகவும் அவ்வரசனுல் சவனமுனிவருக்கு மனைவியாகக் கொடுக்கப்பட்டவளாகவும் பதிவிரதா தருமத்தில் தவறுதவளாகவும் தெரிந்து கொள்ளுங்கள். ஆனால் எனது பர்த்தா தபதியாயும் விருத்தராயும் குருடராயு மூள்ளவரா யிருப்பதால் இரவும் பகலும் அவருடைய சிச்ரூஷை செய்து கொண் டிருக்கிறேன். நீங்கள் யார்? எதற்காக நீங்களிங்கு வந்தீர்கள்? நீங்கள் புண்ணியசாலிகளாகக் காணப்படுகின்றபடியால் எனது பர்த்தாவி னுடைய ஆஸ்ரமத்திற்குவர மனம் விரும்புகின்றது. வந்தாலவ் வாச் சிரமம் பரிசுத்தமடையும்" என்றுள்.

அவ்வார்த்தையைக் கேட்ட அஸ்வனிதேவதைகள் கூறுகின்ற னர்:—"ஓ சுந்தரவதியே! உன் தந்தை அக்கிழவருக்கு உன்னை என்ன காரணத்தினுல் கொடுத்தனரோ? அதனைச்சொல்வாய். இவ்விரு ளடர்ந்த காட்டில் மேகத்திற் காணப்படுமின்னல்போல் பிரகாசிக் கின்ற உனக்குச் சமானமான ஸ்திரீதேவதையை நாங்கள் பார்த்ததே யில்லை. நீ திவ்யமான ஆபரணத்திற்கும் வஸ்திரத்திற்குந் தகுந்த வளேயன்றி மான்றோலைத் தரித்துக்கொண்டு வெற்றுடம்பா யிருத்தற் குத் தகுந்தவளல்லை. உன்னை இவ்வனத்தில் குருடனையும் கிழவனையு மிருக்கிறவனுக்குப் பத்தினியாக்கி அவனுக்கு வேண்டிய வேலையைச் செய்யச்செய்து வருத்தப்படுத்தும் தெய்வத்தின் சேட்டையை நாங்களென்னென்று சொல்லுவோம். நிர்த்தனஞ்செய்வதுபோலும் நடக்கும் நடை கற்ற பண்டிதையாகி நீ இக்கிழவனைக் கணவனுகக் கொண்டு யௌவனத்தைப் பிரகாசிக்காமற்செய்து விட்டனையே! இனி மன்மதனுல் விடப்படுவனவாகிய பாணங்கள் உன்மேற் படுமா? குருட னையுங் கிழவனையுமிருக்கின்ற அவன்மேற்படுமா? அதனை நீயே யோசித்துப்பார்ப்பாய். கிழவன்மேற் பாணம் படப்போகிறதுமில்லை, அவன் வருத்தப்படப் போகிறதுமில்லை. உன்மேற்படும் பாணங்கட்கு நீ என்செய்யப்போகின்றாய்? அது உன்மேற் படாதொழியுமானுல் நீ துன்பப்படா தொழிவை. யௌவனமுடைய உனக்கு விருத்தனுகிய குருடனைப் பர்த்தாவாக்கி மேன்மேலும் துன்பம் பெருகச்செய்த அந்தப்பிரமாவின் புத்தி விசாலத்தை நாங்களென்ன வென்று சொல் வோம். காட்டில் வசிப்பதும் கிருஷ்ணசனத்தைத் தரிப்பதும் உனக்

குத் தகுதியன்றென்று இக்கிழவனை விடுவையாயின் இவ்வேடமு முன்னை விட்டோடிப்போம். ஆதலால் எங்களிருவரில் ஒருவனைச் சாவதானமான ஆலோசித்துப் பார்த்தாவாகச் செய்து கொள்வாய். பாக்கியஹீனனும் போஷணரஹிதனுமென்னு மிரண்டும் உன்னல் செய்ய வேண்டியவனுமிருக்கிற முனியைவிடுவதற்கு என்னயோசனையிருக்கிறது. நாங்கள் சொல்லியடி. எங்களிருவரில் ஒருவனைப் பர்த்தாவாக நீ கொள்ளுகிற பட்சத்தில், நந்தன வனத்திலும் சைத்திரத வனத்திலும் வேடிக்கையாய் விளையாடலாம். இந்தக் குருட்டுக்கிழவனோடு உனக்கென்ன விளையாட்டிருக்கிறது? ஒருநாள் முழுவதும் கிரீடாவினோதத்துக் கிடமில்லாமல் வேலைசெய்வது ஏனைய ஸ்திரீகளுக்குச் சொன்னாலுஞ் சொல்லலாம், இராஜபுத்திரியாயிருக்கின்ற நீ வேலைசெய்து தொலைக்கவேண்டிய காரணமென்ன? ஆனால் நீ இராஜக்கிரீடையோடு சமூகாரக்கிரீடைகளையு மறிந்திருக்கிறாய், இது ஆச்சரியமே. இந்த மாதிரி சஞ்சாரமில்லாத காட்டில் யாதொரு பாக்கியானுபவமு மில்லாமல் காலத்தை யெப்படி கழிப்பாயென்பதை யெண்ணினால் கவலையுண்டாகின்றது" என்றனர்

அஸ்வனீ தேவதைகள் இவ்வண்ணம் கிழவனாகிய முனிவனைப் போகத்துக்குரிய னல்லனென்று பலமுறை இழிவுரையால் இகழ்ந்தும், போகத்துக்குரியவர்கள் நாங்களே யென்று தங்களைப் புகழ்ந்து கொண்டாடிக் கூறியும் தங்களெண்ணத்தை வெளிப்படுத்தி வந்தனர். (6 - 55½.)

நான்காம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

லக்ஷ்மீகோட்யண்ட நாயிகாயை நம:

ஐந்தாம் அத்தியாயம்.

* சவநஸ்யயவ்வனப் பிராப்தியாதிகதனம்.

வியாசர் கூறுகின்றார்:— ஓ ஜனமேஜயனே! பர்த்தாவை நிந்தித்துக்கூறும் அவர்களுடைய வார்த்தையை இராஜபுத்திரிகேட்டு நடுங்

* சவருக்கு யவ்வன முதலாயினவை யுண்டான சரிதம்.

கிப் பின்னர் தைரியம்பண்ணிக்கொண்டு, "ஓ தேவர்களே! சூரியமூர்த்தியினுடைய புத்திரர்களாயும் தேவர்களால் புகழத்தக்கவர்களாயும் எல்லாமறிந்தவர்களாயும் இருக்கின்ற நீங்கள் நல்லொழுக்கமாகிய இல்லொழுக்கத்திலுள்ள என் விஷயத்தில் இப்படிச் சொல்லத்தகுந்தவர்களல்லராயிருந்தும் சொல்ல வந்தது ஆச்சரியமே! ஓ தேவ சிரேஷ்டர்களே! மஹாயோகியாயிருக்கிற முனிவருக்கு என் தந்தையாரால் தத்தஞ் செய்யப்பட்டவளாயிருக்கும் நான் விபசாரிகள்போல் இப்போது காமவிருப்பத்தால் வேறொரு புருஷனைத் தேடிக்கொள்வேனு? உலகில் அவரவர்கள் செய்யும் கர்மங்களுக்குச் சாட்சியாய் நாடோறும் தோன்றிலரும் சூரியபகவானுடைய புத்திரர்கள் நீவிரென்பது பொய்யோ? மெய்யாயின் என்னை விபசார கருமத்திற் செல்லத் தூண்டுவீர்களா? அசாரமான இந்தச் சமுசாரத்தில் விதித்திருக்குந் தருமத்தை விட்டால் சாரம் யாது? தருமமொன்றே சம்சாரத்திலுள்ளசாரம். இனி நீங்கள் வந்தவழியே நாடிப்போகலாம். போகாதுநின்று முன்போல் ஏதேனும் புகல்வீராயின், நான் இராஜபுத்திரியாயிருப்பதால் க்ஷாத்திரமும் எனது கணவனிடத்தில் பத்தியுள்ளவளாயிருப்பதால் தெய்வபலமு மூள்ளேனுதலால் உங்கட்குச் சாபம்புகல் வேன். அதனையேற்க விருப்பமுளதேல் நிற்கலாம்" என்றுள்.

சுகன்னியின் ஸ்திரமொழியைக்கேட்ட அஸ்வனி தேவதைகள் ஆச்சரியமும் பயமுமுடையவர்களாய் அவளைப்பார்த்து, "ஓ உத்தமஸ்திரீயே! உனது பதிவிரதா தருமத்தினால் மிகவும் சந்தோஷமடைந்தோம். இனி நீ எங்களிடத்தில் வேண்டியவற்றைக் கேட்கலாம். நாங்கள் தேவவயித்தியர்களாதலால் உனது கணவரைக் கண்ணுடையவராகவும், எங்களைப்போல் அழகுள்ளவராகவும் ஆக்குகின்றோம். ஆனால் அவருடன் நாங்களும் சேர்ந்து மூவராய் உன்னெதிரில் நிற்போம். அப்போது மூவரில் உனது கணவருக்கு மாலையிட்டு வரித்துக்கொள்வாய்" என்றனர். அவர்கள் வார்த்தையைக்கேட்ட சுகன்னி தன் புருஷனுக்கு நல்ல சரீரமுண்டாவதில் சந்தோஷ முடையவளாயினும் பின் சொல்லிய ஓர் சூளால் சிறிது கலக்கமடைந்தவளாய்த் தனது நாயகனிடத்திற் சென்று, அஸ்வனிதேவதைகளைக் கண்டது முதல் நடந்த செய்திகளையும் இறுதியில் தனக்குண்டான கவலையுங் கூறி, "இது தேவமாயையா யிருப்பதால் தேவரீரது கட்டளையின்படி செய்கின்றேன்" என்றனள். முனிவர் அவைகளைக்கேட்டு, "ஓ

பதிவிரதா சிரோன்மணியே! நீ ஒன்றற்கும் அஞ்சற்க, அவர்களை யழைத்துக்கொண்டுவா, அவர்களிஷ்டப்படி செய்வோம். நீ ஒன்றுக்கும் ஆலோசனை செய்யவேண்டாம், போய் வா" என்றனர்.

சுகன்னி, சவுனக முனிவரிடத்தில் விடைபெற்று, அஸ்வனி தேவதைகள்பாற் சென்று, "நீங்கள் சொல்லியவாறே செய்யலாம். வாருங்கள்" என்றழைத்தனள். அவர்களும் அம்முனிவர்பாற்சென்று அவரைக் கண்ணுற்றுச் சுகன்னியைப்பார்த்து, "உனது நாயகராகிய இவர் நல்ல திவ்யரூபத்தை யடைவதற்கு இந்தத் தீர்த்தத்தில் மூழ்க வேண்டும்" என்று அவ்விடத்திலுள்ள தீர்த்தத்தைக்காட்ட, அம்முனிவர் அந்தக்ஷணமே அதில் மூழ்கினர். அவர்களும் மூழ்கினர். பின்னர் மூவரும் சமமான பருவமுள்ளவர்களாய்த் திவ்யமான காந்தியுடன் திவ்யகுண்டல தாரிகளாய் வெளியே வந்து நின்று, சுகன்னியைப் பார்த்து, "ஓ சுந்தரவதியே! எங்கள் மூவரில் உனக்கு யாரிடத்தில் அதிகப் பிரீதி தோன்றுகிறதோ, அவரை நீ பர்த்தாவாக வரித்துக் கொள்ளலாம்" என்றனர். அவள் "உருவத்திலும் அழகிலும் வயதிலும் கண்டத்வனியிலும் பூஷணாதி யலங்காரங்களிலும் மூவரும் சமானமாய்க் காணப்படுகின்றபடியால்நாம் யாரைக் கணவராகக்கண்டு மாலையிடுவது? நம்மிடத்தில் வந்தவர்கள் தேவவயித்தியர்களல்லவா? அவர்கள் எல்லா மாயையும் செய்ய வல்லவர்கள்தானே! நாம் எந்த மாயைக்கண்டோம்! இப்போது இந்திரஜால வித்தையைக்காட்டி விட்டார்களே!" என்று பலபலவா யெண்ணி மனங்கலங்கி, நாம் கணவரை யறிவதற்கில்லாமையால் நமக்கிப்போது வந்தது மரணமே யன்றி வேறில்லை யென்று தேவியைத் தோத்திரஞ் செய்யத் தொடங்கினள்:—

"ஓ உலோகமாதாவே! துக்கத்துக்காளாயிருக்கும் யான் உன்னைச் சரணமாகவடைந்தேன். எனது பதிவிரதா தருமத்தைக் காத்தருள்வாய். ஓ மஹாலக்ஷ்மியே! சங்கார்த்தாங்க சரீரியே. ஓ விஷ்ணுப்பிரியே! ஓ மஹாசரஸ்வதியே! அறிவிலிகளுக்கு அறிவையும் அறிவுடையாராகிய ஞானிகளுக்கு மோக்ஷசுகத்தையுங் கொடுக்கின்றவளே! மூலப்பிரகிருதியும் நீயே! பரமபுருஷனும் நீயே! நற்குணமுடையார்க்குப் போகசுகத்தையுந் தீக்குணமுடையார்க்கு துக்கபலத்தையுந் தருகின்றவளே! யோகிகளுக்குச் சித்திகளையும் வெற்றி

களையும் கீர்த்திகளையும் தருகின்ற நின்னது ஆச்சரிய செயலைக்கண்டு உன்னைச் சரணமடைந்தேன். ஓ மாதாவே! என் பர்த்தாவைக் காட்டுவாய். நான் பர்த்தாவைக் காணுமல் துயரக்கடலில் மூழ்கி யிருக்கின்றேன். என்னைத் தேவவைத்தியர்கள் வஞ்சித்து விட்டனர். நான் யாரைப் பர்த்தாவாகக் கொள்வேன்? ஓ எல்லாமறிந்த தாயே! என் பதிவிரதா தருமத்தையறிந்து எனக்குப் பர்த்தாவைக் காட்டுவாய்" என்று பிரார்த்தித்தனள். திரிபுரசுந்தரியாகிய மஹாதேவி அவளது பதிவிரதா தருமத்துக் கிரங்கினவளாய், அவளுடைய புத்திக்குத் தனது கணவனையறியும்படியான சக்தியைக் கொடுத்தனள். சுகன்னியானவள் அதனை யறிந்தவளாய் மகிழ்ந்து தேவியை உள்ளத்துள்ளே பணிந்து போற்றி நின்று, மூவருள் தனது காயகனுகிய சவனகமுனிவருக்கே மாலையிட்டு வரித்துக்கொண்டனள்.

அஸ்வனி தேவதைகள் அவளது அருஞ்செயலைக்கண்டு பதிவிரதா தருமத்தை வியந்து அவளை யாசீர்வதித்து, தேவியினது கருணையாதலால் இதற்கு நாம் சந்தோஷிக்க வேண்டியதென்று ஆனந்தமுற்று, நாங்கள் போய்வருகிறேமென்று முனிவர்பால் விடைகேட்ப, அம்முனிவர் அவர்களை நோக்கி, "ஓ மஹா வைத்தியர்களாகிய அஸ்வனி தேவதைகளே! நான் பதிவிரதா தருமத்திற் சிறந்த பத்தினியைப் பெற்று நாடோறுந் தன்பத்தையே யனுபவித்து வந்தேன். அப்படியிருந்த வெனக்கு இன்பமுண்டாக என்னிடத்திலிருந்த கிழத்தனத்தையும் குருட்டுத் தனத்தையும் போக்கி உங்களிடத்திலுள்ள யவ்வனத்தையும் கண்ணொளியையும் அற்புதமான ஓர் சவுந்தரியத்தையும் தந்தீர்கள். இவ்வரிய செயலுக்கு நான் ஏதேனும் பிரதியுபகாரம் உங்கட்குச் செய்யாதொழிவேனுயின் எனக்கு நன்றிமறத்தலாகிய ஓர் தோஷமும் உலகத்திற் பழிப்பும் உண்டாகும். அன்றியும் நான் உங்களுக்குக் கடன்காரனுமாய்விடுவேன். ஆதலால் அஃதெனக்குண்டாகாமலிருக்க உங்களுக்கு வேண்டியவற்றைக் கொடுக்க இச்சிக்கிறேன். உங்களால் விரும்பப்படுவதாகிய அப்பொருள் தேவர்களாலும் அசுரர்களாலும் அடைவதற் கரிதானதாயினும் அதனை நான் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன். நீங்கள் செய்த இந்த நல்லுபகாரத்திற்கு யான் செய்யப்போவது அவ்வளவரிதானதன்று. ஆதலால் விரைவில் உங்கள் மனதிலிருக்கிற கோரிக்கையைச் சொல்லுங்கள்" என்று கூறினர். அவ்விருவர்களும் முனிவருடைய வார்த்தையைக்

கேட்டு ஒருவருக்கொருவர் ஆலோசனை செய்து முநிவரை நோக்கி, "ஓ முநிஸ்ரேஷ்டரே! எங்களுடைய தந்தையா ரனுக்கிரகத்தால் நாங்கள் வேண்டிய இஷ்டசித்தியைப் பெற்றவர்களா யிருந்தபோதிலும் ஓர் குறையுளது. அஃதாவது, எங்களுக்குத் தேவர்களுடன் சமமாய்ச் சோமபானங்கிடையாது. அஃதுண்டாக நாங்கள் அபேக்ஷித்திருக்கின்றோம். ஏனெனில் பூர்வத்தில் மேருபர்வதத்தில் நடந்த ஓர் பிரமயாகத்தில் இந்திரன், வைத்தியர்களோடு சோமபானஞ் செய்யக் கூடாதென்று எங்களைத் தடுத்துவிட, நாங்கள் தடைபட்டு நின்றுவிட்டோம். நீர் தருமமறிந்தவராதலால் அந்தச்செய்தியை நன்றாயறிந்து கொண்டு எங்களுக்குச் சோமபானஞ் செய்விக்கச் சக்தியுள்ளவராயிருப்பீராயின் எங்களுக்கிஷ்டமான அந்தக்காரியத்தைச் செய்துவையும். இதுதான் நீர் எங்கட்குச் செய்யும் பிரதியுபகாரம்" என்றனர். முநிவர் அவர்களது மிருதுவான வார்த்தையைக் கேட்டு, "ஓ வைத்தியர்களே! நான் சரியாதி மகாராஜனுடையயாகத்தில் இந்திரன் பார்த்துக்கொண்டிருக்கும்போதே உங்களைச் சோமபானம் செய்விக்கிறேன். இது சத்தியம்" என்று அவர்களுக்கு விடை கொடுத்தனர் அவர்களும் தங்களிடம்போய்ச் சேர்ந்தனர். சவனமகாமுநிவரும் சுகன்னியை யழைத்துக்கொண்டு தன்னாஸ்ரமம் வந்து சேர்ந்தனர்.

(6 - 58½.)

ஐந்தாம் அத்தியாயம் முற்றிற்று.



உ

க்ஷல்யார்த்தாயை நம:

ஆறும் அத்தியாயம்.

* சரியாதியஜ்ஞம்.

ஜனமேஜயன் வினவுகின்றான்:—"சவனமஹாமுநிவர் தேவவைத்தியர்களுக்குத் தாம் சொல்லியபடி சோமபானத்தை முன்னே தடை

* சரியாதி என்னும் அரசன் யாகஞ்செய்தல்.

செய்த இந்திரன் தடைசெய்யாவண்ணங் காத்து அவர்களுக் குண்மையாய் நிறைவேற்றினரா? இந்திரனது பலத்திற்குமுன் மனிதரான முனிவருடைய பலம் எம்மாத்திரம்? இவரால் அக்காரியம் சாதிக்கப் பட்டதென்றல் அது ஆச்சரியமல்லவா? ஆதலாலதனைச் சொல்ல வேண்டும்" எனப் பிரார்த்தித்தனன். வியாசமுனிவர் கூறுகிறார்:— ஓ மஹாராஜனே! சவனமகாமுனிவர் யாகத்தை நடத்திய அற்புத சரித்திரத்தைச் சொல்லுகிறேன் கேட்பாயாக.

அம்முனிவர் சுகன்னியுடன் இந்திரன் இந்திராணியோடு கூடி கிரீடித்திருப்பதுபோல் கிரீடித்துச் சுகமாய் வாழ்ந்து வருகாலில், இம்முனிவர் பத்தினியின் தாய், தனது பர்த்தாவை நோக்கி மெய்நடுங்கிக் கண்ணீர்விட்டழுதுகொண்டே, "ஓ பிரபுவே! உன்னுடையபெண்ணைக் குருடரான முனிவருக்குக்கொடுத்துக் காட்டில்விட்டு வந்தீரே! அவளிறந்து போயினளோ, அல்லது உயிரோடிருக்கின்றனளோ போய்ப் பார்த்து வரலாகாதா? என் மகளாகிய அத்தச்சுகன்னி தானே வேண்டுமென்று அந்த முனிவரைப் பர்த்தாவாகக் கொண்டனள். அவளிப்போது என்ன செய்துகொண் டிருக்கிறளோ? பெண்ணினுடைய தக்கம் என் மனதில் கொளுத்திக்கொண் டிருக்கிறதே. காட்டில் தவசிகளைப்போல் தவசியா யினைத்திருக்கிற என் பெண்ணை யழைத்துவாரும். அந்தகனை பர்த்தாவைப்போல் தவசியா யினைத்திருக்கும் என் பெண்ணை யழைத்துவாரும். அந்தகனை பர்த்தாவைப் போல் மரவுரி உடுத்திக்கொண்டு எல்லா வாபரணங்களையு மிழந்தனளே! அவளை நான் பார்க்கவேண்டும்" என்று புலம்பும்பொழுது, அரசன் அவளை நோக்கி, "ஓ பெண்ணே! ஏன் புலம்புகின்றனை? புலம்புவதனற் பயனென்? நம்முடைய பெண்ணையும் அந்த முனியையும் பார்க்க இப்போது நாமிருவரும் போவோம்" என்று சொல்லித் தேரின்மீதேறிக்கொண்டு சவனமகாமுனிவரின் ஆஸ்ரமம் வந்து சேர்ந்து, அங்கு புகிய யௌவனத்தோடு தேவபுத்திரன்போல் பிரகாசிக்கின்ற முனிவரைப்பார்த்து ஆச்சரியமடைந்து நமதுபெண் உலகமெல்லாம் நிந்திக்கத்தக்க காரியத்தைச்செய்து விட்டாளே என்று சிந்தித்து, "இந்தபெண் அந்தக் குருட்டுமுனியைக் கொன்றுவிட்டு காம பிடிதையாய் வேறொருவனைப் பர்த்தாவாகச் செய்து கொண்டாள் போலும். அந்தோ! மன்மதன் சகிக்காதவனல்லவோ? மேலும்

யௌவனகாலத்திற்கு ஆரம்பகாலமாகிய இப்பருவத்தில் அவன் ஜெயிக்கத்தக்கவனுவனு? இந்தப்பெண் நம்மூடைய குலத்திற்கு பெரிய பாவத்தை யுண்டுசெய்து விட்டனளே. எவனுடைய பெண் துர்கடத்தை யுள்ளவளா யிருக்கின்றளோ அவள் பிழைப்பைச் சுட வேண்டும். சர்வ பாவங்களாலும் பிராணிகளுக்குத் துக்கமுண்டாவ தற்காகவே பெண் பிறக்கிறுள். நம்மூடைய காரியத்திற்காக நாமே அநுசிதமான காரியத்தைச் செய்துவிட்டோம். குருடனுயுங் கிழவ னுயு மிருக்கிறவனுக்குப் பெண்ணைக் கொடுத்தோமே. இதைப்பார்க் கிலும் அநுசிதமென்ன விருக்கிறது? தகப்பன் பெண்ணைத் தகுந்த யோக்யனுக்குக் கொடுக்கவேண்டு மல்லவா? நாமென்னவேலை செய் தோம்? நமக்கென்ன பழிவந்தது? இப்படிப்பட்ட துர்கடத்தையுள்ள பெண்ணைக் கொல்லுவோமானுல் ஸ்திரீஹத்தி என்கிற பாதகம் நேரி டும். மேலும் பெண்ணைக்கொல்லுவது இன்னும் விசேஷமான பாவத் துக்குக் காரணமாகுமன்றே? பிரசித்தமான நம்மூடைய வம்சத்தைப் பாபத்துக்குள்ளாகச் செய்து வைத்தோமே. இனி நம்மூடைய பெண்ணினிடத்தில் நேகஞ் செய்வோமானுல் உலோகாபவாதம் இன்னும் அதிகமாய் விளையுமன்றே? என்ன செய்வோம்" என்று சிந்தா சமுத்திரத்தில் மூழ்கியிருந்தனன். தற்செயலாய் அவ்வாசிர மத்தி லுலாவிக்கொண்டிருக்குஞ் சுகன்னி, தன் பிதாவைப்பார்த்து வேகமாயோடிவந்து மிக்க பிரீதியுடன் வார்த்தையாட வாரம்பித்து, அவன் முகத்தைப் பார்த்தனள். அவனவளைப்பாராது முகத்தைத் தொங்கவிட்டு ஆதுலப்பட்டிருக்க, "ஓ தந்தையே! என்ன ஆலோசனை செய்கிறீர்? நீர் முகத்தைத் தொங்கவிட்டிருக்குங் காரணமென்னே? ஓ புருஷசிரேஷ்டரே! வாரும் வாரும் என்னுடைய பர்த்தா நல்ல வய துள்ளவராயும் தாமரைபோல் மலர்ந்த கண்ணுடையவராயும் பிரகா சித்துக்கொண்டிருக்கிறார். அவரைப்பார்த்து மகிழ்ந்து நமஸ்காரஞ் செய்யும்" என்றனன். தனது புத்திரிகூறும் வார்த்தையைக் கேட்டுச் சரியாதிமகாராஜன் கோபங்கொண்டு புத்திரியை நோக்கிக் கூறுகின் றார்:—"பெண்ணே! தபசியான அந்தக்குருட்டுமுனிஎங்கே? மதத்திருக் கிற இந்த யுவாவானபுருஷன்யார்? எனக்குப் பெரிய சந்தேகமுண்டா யிருக்கிறது. ஓ பாபிஷ்டியே! முனியைக்கொன்றுவிட்டனையா? காமத்தி னுல் குலத்தையெல்லாம் நாசஞ்செய்யவந்தனீ வேறொருவனைப்பர்த்தா வாகச்செய்து கொண்டனையோ? இந்த வாச்சிரமத்திலிருக்கவேண்டிய

எனது மருகராகிய முநிவரைக் காணுமலிருக்கிறேனல்லவா? வியபி சாரி செய்யும் பாவத்தை நீசெய்து விட்டனையல்லவா? ஓ துர்நடத் தையுள்ளவளே! முநிவரைக் காணுமல் இந்த யௌவன புருடனைக் கண்டு துக்க சமுத்திரத்தில் மூழ்கிப்போய் விட்டேனேயென்று தந்தை சொல்லும்பொழுது, அந்தப் பெண் சிரித்துக்கொண்டே தந்தையைக் கையிற் பிடித்துக்கொண்டு பர்த்தாவிடத்தில்கொண்டு போய் விட்டுக் கூறுகின்றுள்:- இவரைத்தானே நீர்கண்டு எண்ணுத தெல்லாமெண்ணி என்னை வெறுத்தீர். ஓ தந்தையே! இவர்தான் உமதுமருகரான சவனமகாமுநிவர் அதிற் சந்தேகமில்லை. அஸ்வனி தேவதைகள் கருணையினல் இந்த அழகையும் யவ்வனத்தையும் கண்ணையுந் தந்துபோயினர். அவர்களால் இவ்வாறு நடக்கப் பெற்றது தெய்வத்தின் செயலென் றெண்ணக்கடவீர். உமது பெண்ணுன நான் நீரெண்ணியபடி அப்பாவத்தைச் செய்தவளல்லள். நீரிந்தரூபத்தைப் பார்த்துச் சந்தேகமடைகிறீர். அதனை அம் மகாமுநியை நமஸ்கரித்துக்கேட்பீராயின் பிறகு அவரே நான் சொல்லிய காரணத்தை விஸ்தாரமாகச் சொல்லுவரென்றுசொல்ல, ஒருவாறு நம்பிக்கையுண்டாய்ப் புத்திரியின் வார்த்தைப்படி முநிவரை நமஸ்கரித்துப் பிரீதியோடு கேட்கத் தொடங்கினன்.

ஓ பார்க்கவமுநிவரே! உமக்கு எப்படி இக்கண்கள் வந்தன? உம்முடைய கிழத்தனம் எப்படிப் போயிற்று? இவ்விருத்தாந்தத் தைத் தகுந்தபடிசொல்லும். ஓமுநிவரே! சுந்தரத்தில்மிகுந்திருக்கும் உம்மைக் காணவே வருத்தத்தோடு கூடின சம்சயம்எனக்குண்டா யிற்று. ஓ பிராஹ்மண சிரேஷ்டரே! நீரொன்றையும் ஒளிக்காமற் சொல்லுவீராயின் நானதனைக் கேட்டுச் சம்சயம் தெளிந்து சுகத் தையடைவேனென்றனன். சவனமுநிவர் கூறுகின்றூர். தேவவைத் தியர்களாகிய அஸ்வனி தேவதைகள் தெய்வகதியாகஇவ்விடம்வர அவர்களை யுனது பெண் தனது பதிவிரதாதருமத்தால்வென்றுஎன் னிடம்அழைத்துவந்துஎன்னைக்காட்டஅவர்கள்என்னைப்பார்த்துக் கூறியபடி நான்நீரில் மூழ்கியெழுந்திருக்கும்போது இவ்வரியவடிவ த்தைப் பெறலாயினேனென்று நடந்த வரலாறெல்லாம் விடாமற் சொல்லிப்பின்னர், ஓ அரசனே! நான் அவர்களுக்குக்கைம்மாறுஓர் வரங்கொடுத்திருக்கின்றேன். அஃதென்னையெனின், உம்முடைய யாகத்தில் அவர்கட்குச்சோமபானஞ்செய்விக்கிறேனென்றுசொன்

னேன். அவர்களுடைய சகாயத்தால் நானிப்போதுநல்ல கண்களையும் நல்ல யௌவனத்தையுமடைந்து சுகமாயிருக்கிறேன். இனிநீர் மனக்கவலையை விட்டு ஆசனத்தில் நன்றுபுட்காருமென்றுசொல்லவே, அரசன் தன்மனைவியோடு சமீபத்திலுட்கார்ந்துபெண்ணையும் பிள்ளையையும்பார்த்து அதுகாறுமடைந்திருந்தகவலையெல்லாமொழியப்பெற்று ஆவலுடன் சந்தோஷசித்தர்களாய் மகாத்மாவான முனிவரோடு சுகமான சில கதைகளைச் சொல்லிக்கொண்டிருக்க, முனிவரும் அரசனை மிகவுஞ்சந்தோஷப்படுத்தி நீர்சோமயாகஞ்செய்யவேண்டும்; அந்தயாகத்தை நான் செய்விக்கிறேன். ஆகலான் அதற்கு வேண்டிய திரவியங்களைச் சேர்ப்பியும். நான் பிரதிக்ஞை செய்துகொடுத்தபடி இருவரையும் யாகத்தில் சோமபானஞ் செய்விக்கிறேன். நீர் நிச்சயமாய் செய்யவேண்டும். அவர்களிடத்தில் கோபமுடையவனாயிருக்கிற இந்திரனை எனது தேஜோபலத்தினால் தடைசெய்து விடுகிறேன். இதிற் சந்தேகமில்லை யென்றனர். அரசன் அதைக்கேட்டு மகாசந்தோஷமடைந்து அப்படியேசெய்வோமென்று அங்கீகரித்து அவரைக் கொண்டாடித் தன்மனைவியுடன் தன்பட்டணத்திற்குப் பிரயாணப்பட்டு முனிவரையும் விட்டுப்போவதற்கு மனமில்லாமல் அவரது கையைப்பற்றிக்கொண்டு சாவதானமாய்ப் பேசிக்கொண்டே வீடுபோய்ச்சேர்ந்தான். சின்னாள் கழித்து ஓர்சுபதினத்தில் சர்வைஸ்வரியமுள்ளசரியாதிமகாராஜனுயாகசாலையேற்படுத்திப் பூஜ்யர்களான வசிஷ்டர் முதலிய முனிவர்களை வரவழைத்துச்சவனமகாமுனிவரால்யாகஞ்செய்யத்தொடங்கினன். அந்தப் பெரிய யாகத்தில் இந்திரன்முதலிய சகலமான தேவர்களும் வந்துசேர்ந்தனர். அஸ்வனிதேவதைகளும் சோமபானஞ் செய்வதற்காக வந்துசேர்ந்தனர். இந்திரனை அஸ்வனிதேவதைகளாகிய இருவரையும் பார்த்துச் சந்தேகப்பட்டு, இவர்கள் எதற்காக இங்கு வந்தார்களென்று எல்லாத் தேவர்களையும் பார்த்து, வைத்தியஞ் செய்கிறவர்கள் சோமபானஞ்செய்யத்தகாதவர்களல்லவா? யாரிவ்விட மிவர்களை வரவழைத்தார்கள்? நீங்களேதேனுமறிவீர்களாவென்று கேட்டான். அவர்களெல்லோரும் காரணத்தைச்சொல்லாதிருந்தனர். பிறகு சவனமகாமுனிவர் அஸ்வனிதேவதைகளிருவருக்கும் பாகம்பிரித்துச் சோமரசத்தை யெடுத்தார். இந்திரன் இவர்களுக்குப் பாகம்கொடுக்கவேண்டியதில்லை. இவர்

களிதற்குத் தகுந்தவர்களல்லவென்று தடைசெய்தான், செய்யவே, ஏனிவர்கள் சோமபானஞ் செய்யத்தகுந்தவர்களாகார்? அந்தக் காரணத்தை யுண்மையாகச் சொல்வாய். ஓ தேவசிரேஷ்டனே! இவர்கள் வைப்பாட்டிக்குப் பிறந்தவர்களல்லவே? சாக்ஷாத் சூரியனுடைய தர்மபத்தினிக்குப் பிறந்தவர்களல்லவா? அவர்களை நீ ஏன் தடைசெய்கிறாய்? எந்தத்தோஷத்தினால் சோமபானத்துக்குத் தகுந்தவர்களல்ல வென்கிறாய்? அதனை எல்லாத்தேவர்களுஞ் சேர்ந்து நிச்சயஞ் செய்யவேண்டும். நானவர்களிருவரையும் சோமபானஞ்செய்விக்கவே எனது மாமனாகிய அரசனைத்தூண்டி இந்த யாகத்தை நடத்திவைக்கிறேன். இப்போது நான் சொல்லும்வார்த்தை யுண்மையானது. ஓ இந்திரனே! எனக்கிவர்கள் புதியதான யவ்வனத்தைக் கொடுத்து எனக்குபாரஞ் செய்தார்கள். ஆதலால் நான் அவர்களுக்குப் பிரதியுபகாரஞ் செய்யவேண்டும்; என்ன சொல்லுகிறாயென்றுகேட்க, இந்திரன் அவ்விருவரையும் தேவர்களெல்லோரும் வைத்தியர்களாகச் செய்து கொண்டபடியால் அவ்விருவரும் சோமபானஞ்செய்யத்தக்கவர்களல்லர். இவர்களுக்குப் பாகங் கொடுக்கவேண்டாமென்றனன். சவனமஹாமுனிவர் அடா! ருஷிபத்தினியைப் பிடித்திழுத்தவனே! வீணனகோபத்தை விட்டுவிடு. சத்தியவாதிகளான அஸ்வனிதேவதைகள் வைத்தியரானதால் எப்படிச்சோமபானத்துக்குத் தகுந்தவர்களாகார்? விருத்திராசுரனை பிராமணனையாகத்தில் வஞ்சனையாற் கொன்றனையல்லவா? உன்றொழிலேநோக்கஇவர்கள்தொழில்மிக்கதுறைவானதோ வென்றதிவக்கிரங்கொண்டு சொல்லுவதைக்கண்டு ஒருவரும் பதில் சொல்லா தொழிந்தனர். தீக்ஷணியமான தேஜஸ்ஸுள்ள அம்முனிவர் தமதுதபோலத்தினால் அவர்களுக்குச் சோமபானம் கொடுக்கத் தொடங்கினர்.

ஆறும் அத்தியாயம் முற்றிற்று.

சுலோகம் - (சுக.)

ஓ

லக்ஷ்மீநாராயணாப்யாம் நமஃ

ஏழாம் அத்தியாயம்

* சரியாதியஜ்ஞே அஸ்வினோசோமபானப்ராப்தி.

வியாசர் கூறுகின்றார்:—ஓ ஜனமேஜயனே! சவனமுனிவர் இந்திரனை யொருபொருளாக மதியாது அஸ்வனிதேவதைகளுடைய பாகத்தைக்கையிலெடுக்கவே, இந்திரன்மகாகோபங்கொண்டவனுய் தன்பலத்தைக் காண்பிக்கிறவன்போல் முனிவரைநோக்கி, ஓ பாபிஷ்ட பிராமணனே! நீ மரியாதையைத் தாண்டக்கூடாது. சத்துருவானவுன்னை நான் வேறொரு விருத்திராசுரனைக்கொன்றதுபோலக் கொன்றுவிடுகிறேனென்றுன். அதுகேட்ட முனிவர், உருவத்தினலும் பொருளினலும் தேஜஸினலும் என்னை வேறொருதேவனைப் போலாக்கிய அவர்களை நீ அவமானப் படுத்தவெண்ணற்க. நீயொழிந்த ஏனைய தேவர்களெல்லாம் பாகம் வாங்கிக்கொள்ளச் சித்தமாயிருக்கிறார்கள். அஸ்வனிதேவதைகள் உனக்கினித்தவர்களல்லர். உன்னிலும் மகா பராக்கிரமசாலிகளென்றறிவாய். ஓ இந்திரா! வைத்தியர்கள் யஜ்ஞத்தில் சோமபானத்துக்குத் தகுந்தவர்களல்லரென்பதை நீ யெங்கேகண்டனை? ஓ மூடபுத்தியுள்ளவனே! நீகொடுக்கக்கூடாதென்றெண்ணுவையாயின் உன்தலையை இப்பொழுது அறுத்து விடுகிறேனென்றுசொல்லி, அந்த இந்திரனுடைய வார்த்தையைக்கேட்பதொழிந்து, அவ்விருவருக்கும் எடுத்த சோமபான பாகத்தைக் கொடுக்க முயலும்போது அந்தப்பாகத்தை அவ்விருவரும்வாங்கிக்கொள்ளப் பிரயத்தனப்பட்டனர்.

இந்திரன் பார்த்து, ஓ முனியே! நீ இப்போது இவர்களுக்குச் சோமபாகம் கொடுப்பையேயானுல் விருத்திராசுரனைப்போல்உன்னைவச்சிராயுதத்தால் கொன்றுவிடுவேனென்றுசொல்ல, அதனை யவர்ஓர்வார்த்தையாகவெண்ணிப் பயப்படாது அதிகோபத்தோடும்அகங்காரத்தோடும் அவ்விருவர்களுக்குஞ் சோமபானத்தைக் கொடுத்தார். உடனேஇந்திரனும்அதிகோபங்கொண்டுவஜ்ராயுதத்தையவர்மேலெறிந்தனன். கோடிசூரியர்போல் பிரகாசித்துக்கொ

* சரியாதியாகத்தில் அஸ்வனிதேவதைகள் சோமபானம் பெறுதல்.

ண்டுவரும் வஜ்ராயுதத்தைச் சர்வதேவர்களும்பார்த்துக்கொண்டி
ருக்கும்போதேதமுநிவர்தமதுதபோபலத்தினல்சலிக்கவொட்டாது
நிற்கச்செய்து யாகாக்னியில் அபிசாரமந்திரத்தால் இந்திரனைக்
கொல்வதற்கு ஓமஞ்செய்தனர். செய்யவே அவரது தபோபலத்
தால் அவ்வோமகுண்டத்தினின்றும் ஓர் அசுரன் மஹாபலமுள்ள
வனுயும் மஹாசூரனுயும் மஹாகோரரூபனுயும் மஹாபயங்கர
மானகரிய பெரியசரீரமுள்ளவனுயும் பிராணிகளுக்கெல்லாம் பயத்
தைக்கொடுக்கிறவனுயும் பர்வதாகாரமான தீக்ஷ்ணியத்தோடுங்
கூடிய பத்துகாதளீளமுள்ள பற்களுள்ளவனுயும் நூறு நூறு யோ
சனையுள்ளநான்கு கோரப்பற்களையுடையவனுயும் விந்தமலைபோல்
நீண்டோங்கிய புஜங்களையுடையவனுயும் ஆகாசத்தைநக்கிக்கொண்
டிருக்கிற நாக்குள்ளவனுயும் பர்வதசிகரம்போல்கடினமானகண்ட
முடையவனுயும் புலிநகம்போன்ற நகமுள்ளவனுயும் பயங்கரமான
தலைமயிரும் முகமும் உள்ளவனுயும் காட்டுத்தீப்போல் கொதித்
தெரியும் நேத்திரமுள்ளவனுயும் மதனென்கிற பெயருடன் தோன்
றினன். அந்த அசுரனை அமரரனைவரும் பார்த்துப் பயமடைந்த
னர். இந்திரன் பயந்தவனு யுத்தமுயற்சியைவிட்டு இவனென்செய்
வானை வென்று ஏங்கிநின்றனன். அந்த அசுரனை வச்சிராயுதம்
வருமாலல் அதனை வாயில் கடித்துக்கொண்டு மூன்றுலோகத்தை
யும் விழுங்கிவிடுகிறவன்போல் சற்றுறுத்துப்பார்த்துநின்று பின்ன
ரடங்காக்கோபங்கொண்டுஇந்திரனைப்பட்சிக்கப்போகிறேனென்று
துறத்திக்கொண்டுபோயினன். அதுகண்ட தேவர்களெல்லாய்ஓடிப்
போய்விட்டோம் ஓடிப்போய்விட்டோமென்றழுதார்கள். அவன்
பேரில் வச்சிராயுதத்தை விடவேண்டுமென்று எண்ணங்கொண்
டிருந்த இந்திரன்கையாடாமல் அதனைவிடுவதத்குஅசக்தனுய் ஒடு
வதற்குமில்லாமல் போர்புரிவதற்குமில்லாமல் திகைத்துத் தனது
குருவைத் தியானித்தனன். தியானித்தமாத்திரத்தில், அவரெதிரே
வந்து, இந்திரனுக்கு நேரிட்டிருக்கும்மகத்தான ஆபத்தைப் பார்
த்து, மனதிலல் செய்யவேண்டிய காரியத்தை நிச்சயஞ்செய்து
கொண்டு, அவனைநோக்கி, ஓஇந்திரா! இவ்வசுரன் ருஷியினுடைய
மஹா தபோபலத்தினல் பிறந்த மகாபலசாலியாகலான் இவன்
உன்னுலும் உனது வச்சிராயுதத்தாலும் யென்னுலும் மந்திரங்க
ளாலும் தேவர்களாலுஞ் செயிக்கத்தக்கவனல்லன். ஓ தேவஸ்ரேஷ்

டனே! நீயொன்றும் யோசியாமல் சவனமஹாமுனிவரைச் சரண மடைவாய். அம்முனிவர் தன்னுல் உண்டுபண்ணப்பட்ட இவனைத் தடைசெய்துவிடுவார். சக்தியானது சக்தனுடைய பவுருஷத்தைத் தகையவல்லமையுள்ளதன்று சக்தனுடைய பவுருஷமடங்குமானுல் அவன் சத்தியடங்கும். ஆகலான், அம்முனிபுங்கவருடைய பவுருஷ மடங்குவதற்கு அவரை நீ சரணமடைய வேண்டுமென்றார். இந் திரன் அவர்சொல்லே யுட்கொண்டு அதிகபயத்துடன் சவனமுனி வரைவணங்கி, அவரைநோக்கி, ஓ முனிஸ்ரேஷ்டரே! எதிரே பிர சன்னமா யிருக்கின்ற இந்தப் பாபாத்மாவான அசுரனை அடக்கிச் சர்வமுமறிந்த நீர் எனக்குப் பிரசன்னராயிரும். உம்முடையவார்த் தையின்படி நான் செய்கிறேன். ஓ பார்க்கவமுனிவரே! இதுமுதல் அஸ்வனிதேவதைக ளிருவரும் சோமபானத்துக்குத் தகுந்தவர் களே. இப்பொழுது நான்சொல்லும்வார்த்தை சத்தியமானது. ஓ தவமே பொருளாகவுள்ள முனிவரே! உம்முடைய பிரயத்தினம் சபலமாயிற்று. நீர் தருமமறிந்தவராகையால் பொய்சொல்லமாட் டீர். இந்த அஸ்வனிதேவதைக ளிருவரையும் எப்போதும் சோம பானத்துக் குரியவராகவே யாக்கிக்கொள்ளுகிறேம். பூலோகத்தில் சரியாதியின்கீர்த்தி எங்கும்பரவுக. ஓ முனிசிரேஷ்டரே! நான் உம் மூடைய வீரியத்தைப் பிரகாசப்படுத்துவதற்காகவே முன்னர் அலட்சியமாய்ப் பேசியதேயன்றி, உம்மை அலக்ஷியப்படுத்துவதற் கன்று. ஓ பிராமண சிரேஷ்டரே! என்விஷயத்தில் தயவுசெய்து மதாசுரனையடக்கும்; எல்லாத் தேவர்களுக்கும் மங்களத்தை யுண் டாக்குமென்று பிரார்த்திக்கவே, பார்க்கவரென்கிற சவனமுனிவர் கோபந்தணிந்தவராய், பயந்திருக்கும் இந்திரனைச் சமாதானப் படுத்தி, மதாசுரனை மூன்றுருவாக்கி அம்மூவரையும் சுராபானத் திலும் சூதிலும்வேட்டையிலும் திருப்தியடைந்திருக்கும்வண்ணம் போக்கி, இந்திரன்முதலிய எல்லாத்தேவர்களையும் நிறுத்தி, அரச னியற்றிய யாகத்தை நிறைவேற்றிப் பின்னர் சம்ஸ்கரிக்கப்பட்ட சோமரசத்தை இந்திரனுக்கும் அஸ்வனிதேவதைகளுக்குங் கொடு த்து யாவரையும் திருப்தியாய்ப் போம்படிச் செய்தனர். ஓ அர சனே! இவ்வாறு சவனமகாமுனிவர் சூரியபுத்திரர்களான அஸ்வனி தேவதைகளுக்குத் தன் தபோபலத்தினுல் சோமபானஞ் செய்து வைத்தா ரென்றறிவாய். பின்னரந்த யாகசாலையும் அம்முனிவ

ருடைய ஆஸ்ரமமும் பூலோகத்தில் பிரசித்திபெற்றன. மதுபுத்திரனும் மஹாபராக்கிரமசாலியுமான சரியாதியென்னுமரசன், தனது மருகராகிய ருஷியினுடைய மஹாதபோமகிமையான காரியத்துக்குச் சந்தோஷமடைந்து, மந்திரிகளோடு பட்டணம்போய்ச் சேர்ந்து அரசாண்டு வருங்காலத்தில், ஆனர்த்தனென்னும் பிள்ளை பிறந்தான். அவனுக்கு ரேவதனென்னும் பிள்ளை பிறந்தான். அவன் குசஸ்தலி என்னும் பட்டணத்தைச் சமுத்திரநடுவிலுண்டாக்கிக்கொண்டு தேசங்களையெல்லா மனுபவித்துக்கொண்டு வந்தான். அவனுக்குக் குத்மி முதலான நூறுபுத்திரர்களும், மிகவுஞ் சுந்தரவதியான ரேவதியென்னும் ஓர் புத்திரியும் பிறந்தனர். அந்தப் பெண்ணுக்குக் கலியாணத்துக்குரிய பருவம் வந்தபோது அரசன் நற்குலத்திற் பிறந்தவனுகிய எந்தவரசனுக்குக் கொடுக்கலாமென்று மனதில் ஆலோசனைசெய்து ஒன்றுந் தோன்றுமல் பிரமனைக் கேட்போமென்று நிச்சயித்து பெண்ணையழைத்துக்கொண்டு பிரமலோகம் போய்ச்சேர்ந்தான். அவ்விடத்தில் கந்தர்வர்களும் சித்தர்களும் பன்னகர்களும் சாரணர்களும் பிரமதேவரைக் கைகூப்பித் தோத்திரஞ் செய்துகொண்டிருந்தனர்.

ஏழாம் அத்தியாயம் முற்றிற்று.

(சுலோகம் ஙூ)

ஓ

லப்தகாமாயைநமஃ

எட்டாம் அத்தியாயம்.

* ரேவதஸ்யபிரஹ்மலோககமனுதிகதனம்

ஜனமேஜயன் கூறுகின்றான்:—ஓ வியாசரே!யான் சில பிராஹ்மணர்களால் பிரம்மவித்தாயும் சாந்தனுயுமிருக்கும் பிராமணனே பிரமலோகமடைவானென்று கேள்வியுற்றிருக்கின்றேன். அங்ஙனமிருக்க, ரேவதன் தன்பெண்ணையழைத்துக்கொண்டு பிரமலோகம் போனனென்றுனக்குச் சந்தேகமாயிருக்கின்றது இதன்

*ரேவதன் பிரமலோகத்துக்குச்சென்றதுமுதலிய சரித்திரம்.

யும், இறந்தவன் சொர்க்கலோகம் போகிறனென்று சொல்லுவது சாஸ்திரநிச்சயமாயிருக்க, சிலமாதுடர் சுவர்க்கலோகம் போனர் வந்தாரென்கின்றனரே இதனையும் எனக்குச் சந்தேகந்தீரச்சொல்ல வேண்டுமென்று கேட்டனன். வியாசர் கூறுகின்றார். ஓ ஜனமேஜயனே! மேருவின் சிகரத்தில் இந்திரலோகம் வன்னிலோகம் யமலோகம் வருணலோகம் கைலாயம் வைகுண்டமுதலிய எல்லாவுலகங்களுந் தாபிக்கப்பட்டிருக்கின்றன. அவ்விடத்துக்குத்தான்யாவரும் போவதும் வருவதுமாகவுள்ளாரென்றறியக்கடவாய். ஆதலால் அருச்சுனன் மாதுடசரீரத்துடன் இந்திரலோகம்போய் இந்திரன் சமீபத்திலேயே ஐந்துவருடகாலம் யிருந்தானென்றும், அப்படியே தசரத சக்கிரவர்த்தி முதலானவர்கள் சுவர்க்கலோகத்துக்குப் போவதும் வருவதுமாக விருந்தார்களென்றும், அப்படியே மகாவிஷ்ணு முற்காலத்தில் பிரமலோகத்திற்குப் போனனென்றும் அவன் அங்குவந்திருந்த கங்காதேவியைப் பார்த்தபோது காற்றினாலவளது வஸ்திரம் விலக அவளுடைய தேகம் சிறிது கண்ணுக்குப்புலப்பட்டு காமத்துக்குள்ளானனென்றும் அந்தக் கங்காதேவியும் அவன் குறிப்பறிந்து புன்னகைசெய்ய, அவ்விருவர் குறிப்பையும் பிரமனறிந்து பூலோகத்துக்குப் போம்படிச் சபித்தானென்றுங் கூறுவதெல்லாம் அவ்விடத்திலென்றறிவாய். தேகாந்தத்திலடையத்தக்க சுவர்க்கலோகம் பிரமலோகமுதலியவெல்லாம் மேருமலையிலுள்ளவையன்று. அவையாவும் மேலுலகிலுள்ளவையே.

ஓ அரசனே! முன்சொல்லி வந்தவரெல்லாம் எண்ணிறந்த புண்ணியங்களையும் யாகாதிகளையுஞ் செய்தவர்களாதலால் இந்திராதியருலகத்திற்குப்போகும் வன்மைபுடையராயினர். ஆதலால் மனிதர்களாயினும் புண்ணியமுடையராயின் சுவர்க்கலோகம் போய்வருதற்கு யாதொரு தடையுமில்லை எல்லாவற்றிற்குங்காரணம் புண்யமே. ஆனல் தானவர்களோவெனின், அவர்கள் தேவர்கட்கு ஜ்ஞாதிகளாகலானும் ஈஸ்வராதியர்களிடத்தில் மகாவரம் பெற்றவர்களாகலானும் தேவேந்திராதிய ருலகங்கட்குச் செல்லத் தக்கவராயினர் என்றார். ஜனமேஜயன் சந்தேகந்தீர்ந்தவனைப்பின்னர் ரேவதன் தன் கன்னிகையை யழைத்துக்கொண்டு பிரமலோகம்போய் என்னசெய்தான்? பிரம்மா இவனுக்கு என்ன கட்டளையிட்டனர்? பெண்ணை யாருக்குக்கொடுத்தான் என்றான் வியா

பிரமலோகம் போனபொழுது அங்கு இரண்டு கந்தர்வர்கள் கானத் தைப்பாடி நிருத்தனஞ்செய்து கொண்டிருக்க, அதனை ஒரு க்ஷண காலம் பார்த்து மகிழ்ந்தவனுய் அங்கிருத்த முடிந்தவுடன் பிரமனை நமஸ்கரித்துப் பெண்ணைக்காட்டி ஒபிரஹ்மாவே! இக்கன்னிகை என் னுடைய பெண், இந்தப்பெண்ணுக்குரிய வரனைக்கேட்பதற்காக உம் மிடம் வந்தேன். நான் நற்குலத்திற்பிறந்த அநேக இராஜபுத்திரர் களைப்பார்த்தேன். ஒருவரிடத்திலும் என்மனஞ் செல்லவில்லை. நீர் எல்லாமறிந்தவராதலால் நற்குலத்திற் பிறந்தவனுயும் பலவானுயும் சர்வலக்ஷத்தோடு கூடினவனுயும் இந்தப் பெண்ணுக்குத் தகுந்தவனு யும் மகாதானஞ் செய்கிறவனுயும் தருமசீலனுயுமுள்ள ஒரு இராஜ புத்திரனைச் சொல்லுமென்றனன். பிரமன் அவ்வரசனது வார்த்தை யைக் கேட்டுக்காலதாமத்தை நோக்கிச்சிரித்து அரசனைப் பார்த்துச் சொல்லுகிறுன்.—

"ஒ இராஜ சிரேஷ்டனே! எந்த இராஜபுத்திரனுக்கு நீ கொடுக்க வேண்டுமென்று நினைத்திருந்தனையோ அவனெடு அவனுடைய புத் திரபௌத்திர களத்திரபந்துக்களும் மாண்டுபோய்விட்டனர். இரு பத்தேழாவது துவாபரயுகம் இப்பொழுதுநடந்துக்கொண்டிருக்கிறது. உன்னுடைய வம்சத்திற்பிறந்தவர்களெல்லா மிறந்துபோய்விட்டனர். உன்னுடைய பட்டணம்அசுரர்களால் ஆக்ரமித்துக்கொள்ளப்பட்டது. இப்பொழுது அவ்விடத்தில் சந்திரவம்சத்திற் பிறந்த உக்ரசேனன் என்னும் இராஜன் அரசாளுகிறுன். யயாதிவம்சத்திற் பிறந்த அந்த உக்ரசேனனுடைய புத்திரனும் அசுராம்சனுமான கம்சனெருவன் மகாபலசாலியாயும் தேவர்களுக்கெல்லாம் மகாசத்துருவாயும் தன் தந்தையைச் சிறைச்சாலையிலிட்டு மகாகர்வத்தோடு இராஜ்ய பரிபால னஞ் செய்கின்றுன். இவ்வகையான துஷ்டராஜாக்களின் பாரத்தி னல் பூமிதேவி வருந்தி யென்னைச் சரணடைந்து தன்குறையைக்கூற நான் தேவசிரேஷ்டர்களெல்லாம் பூமியிலவதரித்து உன்னுடையபார த்தைநீக்கி விடுவர்களென்றனுப்பினேன். அதுபோலவே நாராயணர் என்னுமுனிவர் வசுதேவருக்கும் தேவகிக்கும்பிறந்து கிருஷ்ணமூர்த்தி என்றபெயர்பெற்று மகாபிரசித்தராய், பாபிஷ்டனைகம்சனைக்கொன் றுஉக்ரசேனனுக்கு இராஜ்யத்தைக்கொடுத்துவிட்டார். அந்தக் கம்ச னுக்கு மாமனுன ஜராசந்தன் அதனையறிந்து மகாகோபத்தோடு மது ரைக்குவந்து கிருஷ்ண மூர்த்தியோடு யுத்தஞ்செய்து தோல்வி

யடைந்து எவனராஜனே யுத்தத்திற்கனுப்ப, அவன் யுத்தத்திற்குவரு கின்றனென்று கிருஷ்ணர் தெரிந்துகொண்டு துவாரகாபட்டணத்தில் யாதவர்களை மறைவாகவைத்துவிட்டு இப்பொழுது அத்துவாரகையி லிருக்கின்றார். அவருடைய தமையன் பலதேவனென்று பிரசித்தனு மிருக்கின்றான். அவன் ஆதிசேஷனுடைய அம்சம் அவன் இவளுக் குத்தகுந்தவன். ஆதலால் இந்தப்பெண்ணை அவனுக்கு விதிப்படிவிவா கஞ்செய்து கொடுத்துவிட்டு நீ பதரிகாச்ரமத்துக்குப் போய் தவஞ் செய்வாயாக" என்று அவனுக்கு விடைகொடுக்க, அவன் அப்பிரமதே வன் உன்கிரவின்படி துவாரகைக்குவந்து தன் பெண்ணுக்குவிவாகஞ் செய்துவிட்டு நதியின் கரையில் தவஞ் செய்திருந்து காலமுடிவில் சுவர்க்கலோகத்தை யடைந்தனன் என்று கூறினர்.

இவ்வாறு வியாசபகவான் கூறவே, ஜனமேஜயன் மிக்க ஆச்சரிய மடைந்தவனாய், "ஓ வியாசபகவானே! ரேவதன் பிரமலோகத்தி லிருந்து பூலோகத்துக்கு வந்து விவாகஞ் செய்த காலத்தை யெண் ணிப் பார்க்குங்கால் நூற்றெட்டுயுகம் ஆனதாகத் தெரியவருகின்றது. அவ்வளவு காலமானபோது அக் கன்னிகைக்கும் அவ்வரனுக்கும் விருத்தாப்பியதிசை வந்திருக்குமே. அவன் அந்தப்பெண்ணை யௌ வனத்தோடு கூடியபலராமனுக்கு எப்படிக் கலியாணஞ்செய்துகொடு த்தான்? ஆச்சரிய மல்லவா?" என்றுவினவ, வியாசர்கூறுகின்றார்:—

"ஓ அரசனே! பிரமலோகத்தில் கழித்தனம் பகிதாகம்பயம் சிர மம் எப்போது மூண்டாவதேயில்லை யென்றறிவாய். இந்த விருத் தாந்த மிங்ஙனமிருக்க, முன்கூறிய மதுபுத்திரனை சரியாதி மேரு மலைக்குப் போனபோது அவன் சந்ததியெல்லாம் இராக்ஷசர்களால் நாசமடையத் தங்கள் நகரமாகிய குசஸ்தலியைவிட்டுப் பயந்தவர் களா யங்குமிங்கும் ஓடிப்போயினர். பின்னர் அந்தவம்சத்தை விருத்தி செய்வதற்கு வீரியவானான இட்சுவாகு வென்னும் புத்திரன் சூரிய வம்சத்திற்பிறந்து தேவியைத் தியானஞ்செய்து வம்சவிருத்திக்காக நாரதரிடத்தில் தீக்ஷையடைந்து தேவியினுடைய மந்திரோபதேசம் பெற்றுத் தவஞ்செய்து வந்தனன். ஓ அரசனே! அந்த இக்ஷ்வாகுக்கு நூறுபிள்ளைகள் பிறந்தனர். அவர்களில் மூத்தவனாகிய விகுட்சி என்பவன் மிக்க பலசாலியாய்த் தன் சகோதரர்களோடு அயோத்தியை யாண்டிருந்து சகுனி முதலான ஐம்பதின்மரை உத்

தரகிசைக்குப்போக்கி ஆங்கு அரசாண்டிருக்கச் செய்து இரண்டு பிள்ளைகளே பாத்திரம் தன்னிடத்தில் வைத்துக் கொண்டனன்" என்றனர்.

சுலோகம் - (56)

எட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

லதாதருவே நமः

ஒன்பதாம் அத்தியாயம்.

○ ககுத்ஸமாந்தாத்ராத்யுத்பத்தி.

வியாசமுனிவர் ஜனமேஜய மஹாராஜனே நோக்கிக் கூறுகிறார்:— ஓர்காலத்தில் இக்ஷ்வாகுவானவன் அஷ்டகா சிரார்த்தம் செய்வதற்குத் தனது புத்திரனுகிய விகுக்ஷி யென்பவனைப் பார்த்து, "ஓ குமாரனே! நீ காட்டுக்குப்போய்ச் சிரத்தையுடன் சிரார்த்தத்திற் குரித்தாகிய பரிசுத்தமான மாம்சவகைகளே மிக்கபிரீதியோடுகொண்டு வருவாய்" என்று கட்டளையிட்டனன். அவனவ்வாறே ஆயுதபாணியாய்ச்சென்று வராகம் முட்பன்றி மான் முயல் முதலிய மிருகங்களைக் கொன்று மிக்க சிரமமடைந்து சிரார்த்தத்திற்கு வந்தோமென்பதையு மறந்து பசியினல் பீடிக்கப்பட்டு ஒரு முயலைத்தின்று பசியாறிமிகுந்த மாம்சங்களைத் தந்தையிடம் கொண்டு போய்க் காண்பித்தனன். தந்தை அவைகளைப் புரோக்ஷணத்திற்காக வசிட்ட முனிவரிடம் கொடுக்க, அவர் இவைசிரார்த்தத்திற் காகாவென்று மிகுந்த கோபங் கொண்டு, "ஓ அரசனே! பசியாற உண்டு மிகுந்தவைகளைச்சிரார்த்தத் திற்குப் புரோக்ஷிக்கும்படி என்னிடத்தில் கொடுத்தனையே" என்றனர். அரசன் அச்சமுற்று அவ்வசிட்டமுனிவராலேயே புத்திரனுல் நிகழ்ந்த செய்தியைத் தெரிந்து கொண்டு கோபத்துடன் புத்திரனைத் தேசத்தைவிட்டுத் துறத்திவிட்டனன். அவன் சசத்தை அதனஞ் செய்தபடியால் அன்றுமுதல் சசாதனென்று பிரசித்தியடைந்து தந்தையினுடைய கோபத்திற்கஞ்சி ஆரண்யஞ் சென்று அங்குள்ள

○ ககுத்ஸன் மாந்தாதா முதலியோருடைய உற்பத்தி.

கந்தமூலங்களைப் புசித்துக்கொண்டு தருமநிலையில் ஆசையுள்ளவனாய்க் காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கும்போது இரண்டுவாகு இறந்தனன். பின்னர் இவன் அயோத்தியா புரிக்குவந்து அரசாண்டு வரும்காளில் தேவப்பிரீதியாக சரயுநதி தீரத்தின்கண் அநேக யாகங்கள் செய்துவந்தனன், அச்சசாதனுக்கு ஓர் புத்திரன் பிறந்தனன். அவனுக்குப் பெயர் இந்திரவாகனனென்றும் புரஞ்சயனென்றும் பெயருண்டு என்றார்.

ஜனமேஜயன், வினவுகின்றான்:—ஓ மஹாமுனியே! அவனுக்கு இந்தநாமங்கள் எப்படியுண்டாயிற்று. அவற்றின் காரணங்களை எனக்குச்சொல்லும் என்றான். வியாசமுனிவர் கூறுகின்றார்:—ஓ அரசனே! ஓர் காலத்தில் தேவர்கள் அசுரர்களால் தோல்வியடைந்து விஷ்ணு மூர்த்தியைச்சரணமடைந்து தங்களுக்குண்டாகிய துன்பங்களைக்கூற, அவர் "நீவிர் பூலோகத்துக்குப்போய் இப்போதரசாண்டுவரும்காகுஸ்தனைக்கண்டு அவன்பால் இக்குறைகளைக் கூறுவீராயின் அவன் உங்களுக்குச் சகாயார்த்தமாய்ச் சர்வாயுதபாணியாய்ப் புறப்பட்டு அசுரரோடு போர்செய்து அவர்களைக்கொன்று உங்கட்கு க்ஷேமத்தைச் செய்வான். அவனுக்குப் பராசத்தியினுடைய அநுக்கிரகமிருப்பதனால் இவ்வசுரர்கள் அவனுக்கோர் பொருளல்லர். அவனளவிறந்த சாமர்த்தியமுடையவன். ஆதலால் நீவிர் செல்லுமின்" என்றனர். அவர்கள் அவராணையை மேற்கொண்டு அயோத்தியா புரிக்குப் போய் சசாதனென்பவனைக்கண்டனர். அவனவர்கள் வருகையைக் கண்டு மகிழ்ந்து விதிப்படி பூசித்து, "ஓ தேவர்காள்! நீங்கள் எனது நிருகத்திற்கு வந்து தெரிசனங் கொடுத்தபடியினால் யான் புண்ணிய சாலியாயினேன், புனிதனுயினேன், ஜென்மம் சபலமாயிற்று யாது கருதி என்னிடம் வந்தீரோ அதனைச் சொல்லியருளுவீர். அது மனிதர்களால் செய்யக்கூடாததாயினும் அந்தக்காரியத்தை எவ்விதத்தினாலும் நான் முடித்து விடுகிறேன்" என்றனன். தேவர்கள், "ஓ அரசனே! உனது பெருமையெல்லாம் விஷ்ணுமூர்த்தி எங்கட்குச் சொல்லி உன்னிடம்போகும்படியேவ அவரேவலின்படி நாங்களிங்கு வந்தோம். பராசத்தி அநுக்கிரகத்தினால் உன்னால் முடியாதகாரியம் ஒன்றுமில்லை. ஆதலின் எங்களால் செயிக்கக்கூடாத அசுரர்களை நீயே செயித்து இந்திரனுக்குச் சிநேகனுவாய்" என்றனர். உண்மையாய்க்கூறிய அவ்வின்னுரைகளைக்கேட்டு அரசன், "ஓதேவர்காள்! இப்

போதே உங்கள் பின்னேடுவருகிறேன், அதிற் சந்தேகமில்லை. ஆனல் உங்கள் பிரபுவான இந்திரன் எனக்கு வாகனமாக விருப்பாஞலல் நான் அத்தேவராஜனை ஊர்தியாகக்கொண்டு அசுரர்களோடு யுத்தஞ் செய்கிறேன், இது சத்தியம்" என்ருன்.

அதுகேட்ட தேவர்கள், தங்களரசனேநோக்கி, "ஓ இந்திரனே! நமக்கிப்போது அசுரயுத்தம் பெரிதாயிருப்பதால் நீர் வெட்கத்தை விட்டு அரசன்வேண்டு கோளின்படி ஊர்தியாகவேண்டியதே என்று கூற, அவன் ஞானமேற்கொண்டு சற்றுயோசித்திருப்ப, அதனை விஷ்ணுமூர்த்தியுணர்ந்து அவனுக்குத் திருப்திவரும்படிச்சிலநியாயங்களை யெடுத்துக்காட்டி உடன்படச்செய்ய பின்னரவன் உருத்திரமூர்த்தியினுடைய விருஷபம்போல் பெரியதொரு விருஷபவடிவமெடுத்து நின்றனன். அரசன்மகிழ்ந்து அதன்மேலேறிக்கொண்டு அதன்மூசிப்பில் வீற்றிருந்து அதிவேகத்துடன் அசுரர்களை நோக்கிச்சென்று அவர்களோடு பெரும்போர்புரிந்து வெற்றிக்கொண்டு அசுரர்களால் அபகரிக்கப்பட்ட செல்வங்களைத் தேவர்களுக்கே கொடுத்து அவர்களை மகிழ்வித்தனன். இந்திரன் அவனது ஆற்றலையும் ஈகையையுங்கண்டு மகிழ்ந்து அவ்வரசனுக்கு இராஜருஷி என்று பெயரிட்டுத் தோழனுனன். ஓ ஜனமேஜயனே! இந்த விகுக்ஷி என்பவன் இந்திரனது மூசிப்பில் வீற்றிருந்ததனல் காகுஸ்தனென்றும் இந்திரனை வாகனமாகக் கொண்டபடியால் இந்திர வாகனனென்றும் அசுரர்களுடைய புரத்தைச் செயித்தவனபடியால் புரஞ்சயனென்றும் பெயர்பெற்றனன். அவன் வம்சத்திற் பிறந்தவர்களும் காகுஸ்தகளென்றே பிரவித்தியடைந்தனர். அக்காகுஸ்தனுக்குத் தர்மபத்தினியிடத்தில் விஷ்ணுவினம்சமாய்ப் பிருது என்று பிரசித்திபெற்ற மகாவீரியவானை ஓர் புத்திரன் பிறந்தனன், அப்புத்திரன் பராசத்தியின் சரணபங்கஜசேவையிலிருந்தனன் அவனுக்கு விஸ்வரந்தி என்பவனும், அவனுக்குச் சந்திரனென்பனும், அவனுக்கு மிக்கதேஜஸ்வியாயும் பலசாலியாயு மூள்ள யுவநா என்பவனும், அவனுக்குப் பரமதர்மிஷ்டனும் இந்திரனது பட்டணத்திற்குச் சமானமான சாவந்தியென்னும் பட்டணத்தை நிர்மித்தவனுமான சவாந்தனென்பவனும், அவனுக்குப்புருகதச்வனென்பவனும், அவனுக்குத் தந்து என்னும் அரசனைக்கொன்றதனல் தந்துமார னென்று பெயர்பெற்ற குவலயாச்வனென்பவனும், அவனுக்குத் திருடாச்வ னென்பவனும், அவனுக்கு அரியச்வ னென்பவ

னும், அவனுக்கு நிகும்பனென்பவனும், அவனுக்குப் பர்ஹணுச்வ னென்பவனும், அவனுக்குக் கிரசாச்வனென்பவனும். அவனுக்குப் பிரசேனஜித்தென்பவனும் அவனுக்கு யவ்வனுச்வனென்பவனும்அவ னுக்கு மாந்தாதா என்பவனும் பிறந்தனர். இவன் ஆயிரத்தெட்டு மெ த்தைகளோ மகா தீர்த்தக்கரையில் பகவதி சந்தோஷமடைவதற்காக நிர்மித்தனன். பராசக்திக்கு அத்யந்தபக்தன். இவன்தன்தாயாருடைய கர்ப்பத்திற்பிறவாமல் தந்தையாருடைய வயிற்றைக் கிழித்துக்கொ ண்டு பிறந்தவன், இவனுடைய பிறப்பு மிக்கமேன்மை யுடைத்தென் றார். அதுகேட்ட அரசன், வினவுகின்றார்:— ஓ வியாசமுனிவரே! நீர் சொல்லிய இவ்வார்த்தை இதுவரையிலும் கேட்டதுமில்லை கண்டது மில்லை இந்த உற்பத்தி உலகத்தி லமையாதது அவன் தந்தையினது கர்ப்பத்தில் எப்படி உற்பத்தியாயினன்? அதன் காரணத்தைச் சொல் லும் என்றான். வியாசர் ஓ அரசனே! யவ்வனுச்வனென்னும் இவன் தந்தை நூறுமனைவிகளுடனிருந்தான். அங்ஙனமிருந்தும் புத்திரப் பேறற்றவனு யிருந்தபடியினல் எப்பொழுதும் அதனை எண்ணியெண் ணிச் சிந்தாகுலனுய் நகரத்தைவிட்டுக் காட்டுக்குப்போய் அங்குள்ள இருடிகளைக்கண்டு வணங்கி மிக்கதுக்கமுடையவனுய், "ஓ மஹரிஷி காள்! நான் புத்திரபாக்கியமற்றபெருந்தரித்திரன்"என்று பெருமூச்சு விட்டான். அவனது சோகத்தைக்கண்ட ரிஷிகளெல்லாரும் மிக்க கருணையுள்ளவர்களாய், "ஓஅரசனே! நீ துக்கிக்கவேண்டாம் துக்கிக்க வேண்டாம். துக்கிக்கவேண்டிய காரணம் யாது? அதனைச்சொல்லு வையாயின் இது நீங்கும்படியான மார்க்கத்தைச் செய்கின்றோம்" என்றனர்.

அரசன் கூறுகின்றான்:—"ஓ முனிபுங்கவர்களே! எனக்குஇராஜ்ய மும்தன தானியமுதலிய செல்வங்களும் பரிகரிதேர்முதலிய நால்வ கைச்சேனைகளுமுள்ளன.நல்ல சுந்தரவதிகளாகிய மனைவிகளோ நூறு பேருள்ளார். எனக்கு மூன்றுலோகத்திலும் பகைவருள்ளாரென்பதே கிடையாது. உலகினரே யன்றி அரசரெல்லாரும் என்னுடைய ஆணை யைக் கடவாதவர். மந்திரிகளோ எனக்குக் கவசமாயுள்ளவர். சந் தான மொன்றுதானில்லாதவனு யிருக்கின்றேன். இஃதொன்றில்லா மையினலேயே துக்கமென்பதறியாத நான் அதனை நன்முயறியலாயி னேன். மறுமைக்குவேண்டிய கதியைக் கருதாதவனுயின், அந் தத்துக்குமும் நானடைய வேண்டியதில்லை. அந்தத்துக்குமும் உங்களை

யொத்த பெரியோர்கள் மகப்பேறற்றலனுக்கு மறுமைக்கதி கிடையா தென்றதனால் வந்ததேயாகும். ஆகவே, நீங்கள் வேதசாஸ்திரங்களின் உண்மையறிந்தவர்களாயும் தபசிரேஷ்டர்களாயும் காணப்படுகின்ற படியால் அத்துன்பமகலுமாறு யான் சந்தானமுடையவனாக நீவிர் ஓர் யாகத்தைச் செய்வீர்களென்று பிரார்த்திக்கிறேன். ஓ மஹரிஷிகாள்! என்னிடத்தில் உங்களுக்குக் கருணையிருக்கும் பக்ஷத்தில் எனது வேண்டுகோளின்படி யாகத்தைச்செய்ய முயல்வீர்கள்" என்றான். அவ்வரசனுடைய இரக்கமொழிகளைக் கேட்ட மஹரிஷிகள் கருணை சாலிகளாயும் சந்துஷ்டர்களாயும் இந்திராதி தேவர்களுக்குப் பிரீதியான யாகத்தைச் செய்யத்தொடங்கிக் கும்பஸ்தாபனஞ்செய்து வேத மந்திரங்களால் நாடோறும் மந்திரித்து வந்தனர். ஓர்நாள் அரசன் மிகத்தாகமுள்ளவனாய் நீர் எங்குங்காணப் மெமுமல் இராத்திரியில் யாகசாலைக்குட்சென்று, அங்கு அந்தணரெல்லாம் உறங்குவதைக் கண்டு, தாகவிடாயினால் ஒன்றும் யோசிக்காதவனாய்க் கும்பத்திலுள்ள தீர்த்தத்தைக் குடித்துவிட்டான்.

ஓ அரசசிரேஷ்டனே! பின்னரந்தணர் பூஜிப்பதற்குக் கலசத்தைப்பார்க்க அதில் தீர்த்தமில்லாமையைக்கண்டு, மிகவும் பயமடைந்தவர்களாய் எழுந்திருந்து, அரசனைப்பார்த்து, "இத்தீர்த்தத்தை யார் குடித்தது" என்றுகேட்க அரசனும் பயந்து நடந்த செய்தியைச் சொல்ல, அந்தணர்கள் தெய்வச்செயலேயாடி தெய்வபலமென்று நிச்சயித்துக்கொண்டு யாகத்தை முடித்துவிட்டுத் தங்கள் தங்கள் ஆச்சிரமம்போய்ச்சேர்ந்தனர். பின்னர் அரசனுக்கு நாளுக்குநாள் கருவினால் வயிறுபெருத்து வலதுபக்கங்கிழிபட் புத்திரன் வெளியே வந்தனன். அங்ஙனம் அரசன் வயிறு கிழிபட்டானாயினும் தேவர்களுடைய கிருபையினால் மரணமடையாமல் பிழைத்திருந்தனன். அப்போது மந்திரிகள் யாரிடத்தில் இக்குழந்தை மூலிப்பாலுண்ணுமென்று விசாரப் படும்போது இந்திரன் "இவன் என்னை வுட்டுகின்றவன் என்னும் பொருள்படமாந்தாதா" என்றுசொல்லிக்கொண்டே அச்சிசுவின் விரலை வாயில் வைத்துச்சுவைக்கக் கொடுத்தனன். அதிற்பெருகும்பாலையுண்ட அந்த மாந்தாதா மிகபலவானாயினன். ஓ அரசனே! அவனுடைய உற்பத்தி மிகவிரிவாகச் சொல்லப்பட்டுளது. (6-63)

ஒன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

லலாமராஜ தளிகாயை நமः

பத்தாம் அத்தியாயம்.

* சத்தியவிரதோபாக்யானம்.

வியாசர் கூறுகின்றார்:— சத்தியசந்தனை அந்த மாந்தாதா வென்னும் அரசன் சகலதேச அரசர்களையும்வென்று உலகமெல்லாம் தன்னைநுதடைக்கீழ் வாழச் சக்ரவர்த்தியாயினன், அதுகாறும் சக்ரவர்த்தியாகவிருந்த அரசரெல்லாம் பயந்து மஹிமுழையிற் புக் கொளித்தனர். இந்திரன் அவனது பராக்கிரமத்தைக்கண்டு த்ரச தஸ்யு என்று பெயர்கொடுத்தனன். இவ்வருஞ் சிறப்பு வாய்க்கப்பெ ற்ற அந்தச்சக்ரவர்த்திக்குப் பதிவிரதாதர்மத்திலும் சௌந்தர்யாதி சர்வலக்ஷணங்களிலும் சிறந்தவளாகிய பிந்துமதி என்பவள் தருமபத் தினியாயினள். மாந்தாதா அவளுடன்கூடி புருகுச்சன் முசுகுந்தன் என்னும் இரண்டு புத்திரர்களைப் பெற்றனன். புருகுச்ச னென்பவ னுக்குப் பரமதர்மிஷ்டனும் பித்ருபக்தி யுள்ளவனுமான அரண்ய னென்பவனும், அவனுக்குப் பிரகதச்வ னென்பவனும், அவனுக்கு எல்லா அர்த்தங்களையறிந்தவனும் மிக்கதார்மிகனுமான அரியச்வ னென்பவனும், அவனுக்குத் த்ரிதன்வா னென்பவனும், அவனுக்கு அருணனென்பவனும் அவனுக்கு மிக்க சம்பத்துடையவனை சத்ய விரதனென்பவனும் பிறந்தனர். அந்தச் சத்தியவிரதன் ஊழின் வகையால் மனம்போனபடி போகின்றவனையும் காமுகனையும் புண்ணி யத்தையறியாத மந்தமதியாளனையும் பேருசையுள்ளவனையு மிருந்து வாழுகாளில், ஓர்நாள் ஓர் பிராமணன் வீட்டில் கல்யாணஞ் செய்து கொண்டிருக்கும் சமயத்தில் அக்கலியாணப் பெண்ணைப் பார்த்து காமமோகிதனாய், அப்பெண்ணை யபகரித்தோடினன். அக்கொடு மையைக்கண்ட அந்தணர் பெரியோரெல்லாம் ஒன்றுகூடி அவன் றந்தையாகிய அருணராசனிடத்திற் சென்று அந்தோ! அந்தோ! என்று பெருங்குரலிட்டுக்கூவியழுதனர். அதனைக்கண்ணுற்ற அரசன் "ஓ அந்தணர்காள்! என் புத்திரனால் ஏதேனும் தீங்குகேர்ந்ததோ"? என்று அதிகவிரக்கத்துடன் வினவ, அந்தணர்கள் தம்மாட்டு

* சத்தியவிரதனுடைய சரித்திரம்.

மிகவும் வணக்கத்துடன் வினவும் இரக்கமொழியைக்கேட்டு அன் புடையவர்களாய் ஆசீர்வாதஞ்செய்து, "அரசனே! உன்னுடைய புத் திரன் எங்களுடைய விவாககாலத்தில் கலியாணப்பெண்ணை பலாத் காரமாய்க் கொண்டுபோயினன். இதற்கு நாங்கள் என்செய்வோம்" என்றனர். அரசன் அதனைக்கேட்டு மனம் நடுங்கி புத்திரனை நோக்கி, "ஓ மந்தாத்மாவே! நீ என் வீட்டிலிருக்கத்தக்கவனன்று, வெளியே போய்விடு. அடா பாபிஷ்டனே! என்னுடைய தேசத்தி லும் நீ இருத்தல்கூடாது" என்று கோபிக்க, அந்தப்பாவி தன் தகப் பனைப்பார்த்து, "நான் வீட்டிலுமில்லாமல் காட்டிலுமில்லாமல் எங்கே போவேன்" என்றான். "நீ சக்கிலிகள் செய்யுஞ் செயலைச் செய்த படியால் இனி அத்தொழிலையே நீயும் செய்து அந்தச் சக்கிலிக ளுடன் வாசஞ்செய்யக்கடவாய். நீ எனது குலத்தைக் கெடுக்கவந்த வனாய் மூடிந்தபடியால் இனி எனக்குப் புத்திரனுகாய். ஒ துஷ்டாத் மாவே! நீ என்பேரைக் கெடுத்துவிட்டாய். இனி உன்னிஷ்டப்படி போய்விடு" என்று கடுகடுத்துக்கூறவே, அந்தப்பாவி அங்கு நிற்ப தற்கஞ்சி நகரத்துக்கு வெளியேவந்து நாய்மாமிசம் அருந்தும் சக்கிலி கள் வாழும் பாளயம்போய்ச் சேர்ந்து தனக்குநேர்ந்த விதியை யெண் ணுது எப்பொழுதும் தனதுகுலத்துக்கேற்பக் கவசத்துடன் தனுசை யும் பாணத்தையும் தாங்கினவனாய் கருணையும் ஓர் புறத்திலுடையவ னாய் மிக்க பிரகாசத்துடன் வாழ்ந்து வருநாளில், ஓர் சமயம் நமது குலகுருவாகிய வசிஷ்டர் தர்மசாஸ்திரமெல்லா மறிந்தவராயிருந்தும் நமது பிதா கோபங்கொண்டகாலத்து நமது பாவத்துக்கேற்றபடிபிரா யச்சித்த மேதேனுஞ் சொல்லித் தடுக்கவேண்டுமானால் தடுக்கக் கூடாதாவென்று அவர்மேல் மிக்க கோபங்கொண்டவனாயிருந்தனன். இவன் செய்தி இங்ஙனமிருக்க, இவன்றந்தை ஏதோ சிலகாரணத் தைக்கருதி புத்திர நிமித்தமாய்த் தவஞ்செய்யவெண்ணி காட்டுக்குப் போயினன். பின்னர் அவனுடைய தேசத்தில் புத்திரனைத்துறந்திய பாவத்தினால் பன்னிரண்டுவருடம் இந்திரன் மழை பெய்விக்காம லிருந்தனன். அச்சமயத்தில் விஸ்வாமித்திரமுனிவர் தன் மனைவியை அத்தேசத்தில் விட்டுவிட்டு கவுசிகி என்னும் நதிக்கரையில் அரிய தவஞ்செய்து வந்தனர். அவன் மனையாட்டி காலதவர்ப்பாக்கியத்தால் குடும்பத்தை காக்க வல்லமையற்றவளாய் மிகவும் வருத்தப்படும் போது பிள்ளைகள் பசியினால் பீடிக்கப்பட்டு அழுதுகொண்டிருப்ப

தைப்பார்த்துச் சகியாதவளாய்ச் சென்னெலரிகியை யாசித்து அவர்களைப் பாதுகாத்துவந்தனள். சிலநாள்கழித்து அதுவுங்கிடைப்பதற்கரிதாய்ப் போயிற்று. போகவே, பிள்ளைகள் பசியினால் வாட்டமுற்று வருந்துவதைப்பார்த்து, பட்டணத்தில் அரசனில்லையே, நாம் யாரிடஞ்சென்று யாசிப்போம், என்னசெய்வோம், நம்மை காக்கின்ற பர்த்தா இல்லையே, குழந்தைகளையேனும் காப்பாரில்லையே" என்று குழந்தைகளைப்பார்த்துப் புலம்புகின்றவளாய், "அந்தோ! நமதுபர்த்தா சமர்த்தராயிருந்தும் நமது மனையாட்டி தனமில்லாமல் பிள்ளைகளை எப்படிக் காப்பாற்றுவாள்? அதனால் அவள்வருத்தப்படுவாளே என்று தெரிந்துகொள்ளுந் தெளிவற்று தவஞ்செய்யப் போயினரே, நம்மூடைய பிழைப்பு வீணயிற்றே. பர்த்தாவில்லாமல் இவர்களை நாம் எவ்வாறு பாதுகாப்போம்? இந்தப் பிள்ளைகளெல்லாம் பசியினால் மரணபாதையடைந்து இறந்து படுவார்போற் காண்கின்றதே! இப்படி எல்லாப்பிள்ளைகளும் இறந்துபோகப் பார்ப்பதைப்பார்க்கிலும் ஒரு பிள்ளையைமாத்திரம் விற்று அந்தத் திரவியத்தினால் மற்றப் பிள்ளைகளைக் காப்பாற்றுவோம். அன்றியும் ஓர்கால் தெய்வகதியாய் நாமிறந்துவிடுவோமாயின் எல்லாப்பிள்ளைகளும் திரவியமில்லாமல் பிழைக்கும் வகையற்று இறந்துபோய் விடுவார்களல்லவோ? ஆகையால், சீவித்திருக்கும் இப்பொழுதே விரைவில் நாமெண்ணியபடி ஒரு பிள்ளையை விக்கிரயஞ்செய்வதே நலம்" என்றெண்ணி, மனதைத் திடப்படுத்திக்கொண்டு நடுப்பிள்ளையைத் தர்ப்பைக்கயிற்றாற் கழுத்திற்கட்டிக்கொண்டு அழுதுகொண்டே வெளியில் புறப்பட்டாள். இதனைச் சக்கிலிபாஷையத்தனுய் வாழும் சத்தியவிரதன்பார்த்து, "ஓ ருஷிபத்தினியே! அழுதுகொண்டிருக்கிற குழந்தையைக் கழுத்தில் கட்டிக்கொண்டு போகின்றனையே, எதற்காகப் போகின்றனை? அந்த வுண்மையைச்சொல்" என்று கேட்க, அந்த ருஷிபத்தினியானவள், "ஓ இராஜபுத்திரனே! நான் விஸ்வாமித்திரருடையபத்தினி, அவர்என்னை விட்டுத் தவஞ்செய்யக் காட்டுப்குப்போயினர். இராச்சியத்திலோ கூஷாமம் வந்துவிட்டது. அதனால் பிச்சையேற்கப்புகினும் ஐயமிடுவாரில்லை. என்செய்வேன்? யான் பசிப்பிணியால் வருந்தும் வருத்தத்தைப்பார்க்கிலும் என் மக்கள் படுகின்ற பாட்டைக்கண்டு சகியாதவளாய் நடுப்பிள்ளையாகிய இந்த வொருவனையாவது விற்று, ஏனையமக்களைப் பாதுகாக்கலாமென்று துணிந்து இவனை விற்கவந்தேன்" என்றனள்.

அதனைக்கேட்ட சத்தியவிரதன் அந்தோ வென்றிரங்கி, "ஓ அம்மணி! உனது பர்த்தாவருமளவும் நீ இந்தப்புத்திரனை விற்கவேண்டாம், இவனையும் காப்பாய். சீவனம் யான் கற்பிக்கின்றேன் நீ உன் ஆச்சிரமம்போய்ச் சேருவாய். அவ்விடத்தில் சமீபத்திலிருக்கும் மரத்தில் சில பட்சியங்களை யான் கொண்டுவந்து வைத்துவிட்டு வீட்டுக்குப் போகின்றேன். இதனைச் சத்தியமாய் நம்புவாய்" என்றனன். இவன் வார்த்தையைக்கேட்ட அந்த அம்மணியும், அப்படியே அக்குழந்தையின் தர்ப்பைக்கட்டை யவிழ்த்துவிட் டழைத்துக் கொண்டு தன்னுடைய ஆஸ்ரமம் வந்துசேர்ந்தனள். அப்பிள்ளையானவன் தர்ப்பையால் கழுத்திற் கட்டப்பட்டபடியால் களபந்தனென் றழைக்கப்பட்டு மகா தபசியாக விருந்தனன். சத்தியவிரதன் தான் சொல்லியபடியே பக்தியோடும் கருணையோடும் காட்டிற்சென்று மிருகங்களையும் வராகங்களையும் மகிஷங்களையும் அடித்துக்கொன்று அவ்வம்மணியிருக்கும் ஆசீர்மத்திற்குச் சமீபத்திலுள்ள மரத்தில் கட்டி அவர்களை யுண்ணும்படிச்செய்து காத்துவந்தனன். அந்த ருஷி பத்தினியும் அந்த மாமிசத்தை யெடுத்துக்கொண்டுவந்து பிள்ளைகளுக்குங் கொடுத்துத் தானும் புசித்துச் சந்தோஷமாயிருந்தனள்.

இவ்வண்ணம் வாழ்ந்து வருநாளில், ஓர்நாள் சத்தியவிரதன் காடெங்குந்திரிந்தும் ஒருமிருகமேனும் அகப்படாமல் வருத்தமுற்று ஆரணியமத்தியில் வரும்போது வசிட்டருடைய ஆச்சிரமத்தில் பசுவிருக்கப்பார்த்தனன். ஆஹா! இது வசிட்டருடைய ஆசீர்மமல்லவா? இம்முனிவர் நமது தந்தை நம்மைக் காட்டிற்குப் போகும்படி சொல்லியபோது தடைசெய்யாமலும், சகல பாவங்களுக்கும் பிராயச்சித்தமறிந்தவராயிருந்தும் நமக்கொரு பிராயச்சித்தத்தைக் கற்பிக்காமலும் போயினரல்லவா" என்று கோபங்கொண்டு, அக்கோபமிகுதியினால் பசுவாயிற்றே என்கிற தர்மத்தையுமறந்து அஞ்ஞானவசத்தனாய்த் திருடன்போல் அப்பசுவை யடித்துக்கொண்டுவந்து வழக்கம்போல் அம்மரத்திற் கட்டிவிட்டு மிகுந்த மாமிசத்தைத் தானும் புசித்தனன். அந்த ருஷிபத்தினியும் கோமாமிசமென்று தெரிந்துகொள்ளாமல் பிள்ளைகளுக்குங்கொடுத்துத் தானும் புசித்துவிட்டாள். பின்னர் வசிஷ்டர் பசுவைக்கொன்றுவிட்ட செய்தி யறிந்துகொண்டு, அந்தச் சத்தியவிரதனை நோக்கி, "ஓ துராத்மாவே! அன்று பிரா

மணபத்தினியை யபகரித்த பாபம் போதாமல் இன்று பசுவைக் கொன்று பெரும்பாவத்தைத் தேடிக்கொண்டானேயே! அடா மூடா! கோவதையினாலும் பிராமணபத்தினியை யபகரித்ததனாலும்தகப்பனுடைய கோபத்தினாலும் உனக்குண்டாகிய பாவத்திரட்சியால் பசுவின் கொம்பைப்போல் பயங்கரமான மூன்று கொம்புண்டாய் திரிசங்குவெனப் பெயர்பெற்று பிசாசுபோல் பிராணிகளுக்கெல்லாம் கோரரூபமாய்த் திரிந்துலாவக் கடவாய்" என்று சபித்தனர். அவன் அந்தச்சாபத்தை யேற்றவனாய் ஆஸ்ரமத்திலிருந்துகொண்டே ஒரு முநிபுத்திரனிடத்தில் உத்தமமானதோர் மந்திரத்தைக் கிரகித்துக் கொண்டு பகவதியைத் தியானித்துத் தவஞ்செய்து வந்தனன் என்றனர். (6 – 58)

பத்தாம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

லம்ப மூக்தா லதாம்சிதாயை நமः

பதினோராம் அத்தியாயம்.

திரிசங்கு சாபவிமுக்தி.

ஜனமேஜயன் வியாசமுநிவரைப்பார்த்து, "ஓ ஐயா! திரிசங்கு வானவன் எப்படி சாபத்தினின்று நீங்கினன்? அதனை எனக்குச் சொல்லியருளும்" என்றான். வியாசர் கூறுகின்றார்:— ஓ அரசனே! அந்தத் திரிசங்குவானவன் தேவியினிடத்தில் மிக்க பக்தியுள்ளவனாய் இடைவிடாது நவாக்ஷர மந்திரத்தை யுச்சரித்துக்கொண்டு அந்த ஆச்சிரமத்திற்றானே வசித்திருந்து ஒருநாள் அங்கிருக்கும் அந்தணர்களை நமஸ்கரித்து, "ஓ பிராமணோத்தமர்களே! நான் இப்போது உங்களிடத்தில் வணக்கத்துடன் விண்ணப்பித்துக்கொள்ளும் விண்ணப்பத்தைத் தயைசெய்து கேட்டருளல் வேண்டும். அஃதென்னையெனின், நீங்களெல்லோரும் கருணையுடன் எனக்கு ருத்விக்குகளாக

விருந்து ஜபத்தில் பக்திலொருபாகம் ஒமஞ்செய்யவேண்டும். நான் அரசனுடைய மகன்றனே? நான் சத்தியவிரதனல்லவா? நானிப் போது படும் கஷ்ட நிவர்த்திக்காக நீவிர் இக்காரியத்தைச் செய்ய வேண்டும். இஃதே எனது வேண்டுகோள்" என்றான். அந்த வார்த் தையைக்கேட்ட அந்தணரனைவரும் அவனை நோக்கி, "நீ அரசன் மகனாயினும் குருவினாற் சபிக்கப்பட்டு யாவராலும் நிந்திக்கப்பட்ட பைசாசத்தன்மையை யடைந்திருக்கின்றபடியால் உனக்கு வேதத்தி லதிகாரமில்லை. நீ சொன்ன யாகத்திற்குந் தகுந்தவனல்லை, நாங்க ளென்செய்வோம்" என்றார். அவன் அந்த வார்த்தையைக்கேட்டு மகா துக்கமடைந்தவனாய் "நம்முடைய பிழைப்பைச் சுடவேண்டும். இந்தக்காட்டிலிருந்து என்னவேலைசெய்வோம். தகப்பனாரும் நம்மை விட்டுவிட்டார். குருவும் சபித்துவிட்டார். இராஜ்யத்தைவிட்டு காட் டிற்கு வந்துவிட்டோம். பைசாசத்தன்மையும் வந்துவிட்டது. இனி நாம் செய்யத்தக்கதுயாது?" என்றெண்ணியெண்ணிச்சிந்தாகுலமுற்று "அக்னிப்பிரவேசமாவோம்" என்று துணிந்து, அதிகமான கட்டை களைப் போராகக்குவித்துத் தீமூட்டித் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து அந்த அக்கினிகுண்டத்திற் கெதிராகவந்து இதில் பிரவேசித்து விட வேண்டுமென்று நிச்சயித்து, மகா மாயையான சண்டிகாதேவியை நினைத்துக் கைகூப்பிக்கொண்டு நின்றான். பகவதிதேவி இவன் இறக் கத்துணிந் திருப்பதைப்பார்த்து, ஆகாயத்தில் பிரத்யக்ஷமாய் அவன் காணும்படித் தெரிசனங்கொடுத்து அவனை நோக்கி, "ஓ சாதுவான வனே! உன்னுடைய கோரிக்கையென்ன? அக்கினியில் சரீரத்தை விடாதே. நீ ஸ்திரமான மனதுள்ளவனாயிரு. உன்றன்தைக்குக் கிழத் தன்மை வந்துவிட்டபடியால் அவன் நாளையமறுநாள் உனக்குஇராஜ்ய பட்டாபிஷேகஞ்செய்து இராஜ்யத்தைக் கொடுத்துவிட்டுத் தான் காட்டுக்குப்போய் தவஞ்செய்து சகல தர்மங்களையுந்துறந்து பிரம லோகம்போய்ச் சேரப்போகிறான். ஓ மஹாவீரனே! நீ துக்கத்தை விட்டுவிடு. உன்னை அழைத்துக்கொண்டு போவதற்கு மந்திரிகள் வரப்போகின்றனர். என்னுடைய அனுக்கிரகத்தால் உனக்குச் சகல பாக்கியங்களும் உண்டாகும். அது நிச்சயம்" என்றனுக்கிரகஞ் செய்து அந்தர்த்தானமாயினள்.

அதுகேட்ட சத்தியவிரதன், மரணமடைவதை நிவர்த்தித்துத் தேகியைத் தியானித்துக்கொண்டிருந்தனன். இவையெல்லா மறிந்

திருந்த நாரதமுனிவர், அப்பொழுதே அயோத்தியாபட்டணத்துக்கு ஆதிமுதல் நடந்த செய்திகள் யாவும் அரசனுக்குச் சொல்லவும், அவ் வரசன் புத்திரனுடைய மரணமுயற்சியைக்கேட்டு வெகு துக்க மடைந்து புத்திரசோகஞ் மந்திரிகளைப்பார்த்து, "மந்திரிகளே! என் புத்திரனுடைய மரணமுயற்சியை நீங்களு மறிந்தீர்களன்றே? இனி நாம் சும்மாவிருக்கக் கூடுமோ? சத்தியவிரதனுகிய எனது புத் திரன் எனதாணைகடவாமல் காட்டில்வசித்துப் பலகஷ்டங்களை யனுப விக்கவனுயிருந்தும் யாதொரு புண்ணியவசத்தாலோதேவியினுடைய அதுக்கிரகத்துக்குப் பாத்திரனுயினு ஞதலால், அவன் இனி புனித மானவனே. அவன் இனிக் காட்டில் வசிப்பதற்கு யோக்யனல்லன். நீங்களிப்பொழுதே காட்டுக்குப்போய் அவனை நல்ல வார்த்தையினுல் சமாதானப்படுத்தி அதைத்துக்கொண்டு வாருங்கள். நான் அவனுக்கு இராஜ்யபட்டாபிஷேகஞ் செய்வித்துப் பூபாரத்தை அவன் பாரமாக் கிக் காட்டிற்குப் போகிறேன்" என்றுகூறி மந்திரிகளையனுப்ப, அவர்க ளப்படியே சென்று அழைத்துவந்தனர் பலஹீனனுயும் அழுக்காடை யணிந்தவனுயும் சடைமுடியனுயும் கோரரூபனுயும் சிந்தாகுலனுயு மிருக்கிற சத்தியவிரதனை அரசன்பார்த்து கூறுகின்றன்:—

"ஆஹா! நாம் என்ன நிஷ்டூரமான காரியத்தைச் செய்து விட் டோம்" என்று எண்ணுதன வெல்லாமெண்ணி மனம்புழுங்கி அவ னைக்கட்டியணைத்துத் தன் சமீபத்திலிருக்கும் ஆசனத்திலுட்காரச் செய்து அவனைப்பார்த்து மிக்க அன்போடு, "ஓ புத்திரசிகாமணியே! தர்மத்தில் புத்திவைக்க வேண்டும். பிராஹ்மணர்களைக் கௌரவிக்க வேண்டும். நியாயமாய் வரும்படியான தனத்தைக் கிரகிக்கவேண்டும். எப்பொழுதும் ஜனங்களை இரக்ஷிக்கவேண்டும். எவ்விடத்திலும் பொய்சொல்லக்கூடாது. பூஜிக்கத்தகுந்தவர்களுடைய பூஜையைச் செய்யவேண்டும். தபசிகளை இரக்ஷிக்கவேண்டும். இந்திரியங்களைச் செயிக்கவேண்டும். ஆலோசனை எப்பொழுதும் மந்திரிகளோடு இர கசியமாய்ச் செய்யவேண்டும். சொற்பசத்துருவாயிருந்தாலும் அல க்ஷியமாயிருத்தல் கூடாது. சத்துருவினிடத்தில் பிரீதியுள்ளவனை மந்திரியை நம்பக்கூடாது. சத்துருக்களிடத்திலும் மித்துருக்களிடத் திலும் சாரணர்களையனுப்பி அவர்களுடைய சுபாவத்தை நன்றுய்த் தெரிந்து கொள்ளவேண்டும். எப்பொழுதும் தர்மத்தில் புத்திவைக்க வேண்டும். நீதியம் தானங்கொடுக்க வேண்டும். வீணைவாதஞ்

செய்யக்கூடாது. துஷ்டசங்கத்தை விட்டுவிடவேண்டும். நானாவித மான யாகங்களைச் செய்யவேண்டும். மஹரிஷிகளையெல்லாம் பூஜிக்க வேண்டும். ஸ்திரீயை இஷ்டையாக நினைத்தல் கூடாது. சூதில் ஆவ லுள்ள மனிதனைச் சிநேகனாகவைத்துக் கொள்ளக்கூடாது. வேட்டை யில் எப்பொழுதும் விரக்தியைத்தலாகாது. பிரயாணிகளையும் வேட் டையில் பிரவேசிக்கவொட்டாமல் தடைசெய்யவேண்டும். நாடோ றும் பிராதக்காலத்தில் எழுந்திருந்து ஸ்நான முதலான விதிகளையெல் லாம் தவறுமற்செய்துவரவேண்டும். கன்றுய் தீகைஷசெய்துகொண்டு பராசத்தியைப் பூசைசெய்யவேண்டும். ஒ புத்திரனே! இந்தச் சன் மத்துக்குப்பலன் பராசத்தியின் பாதத்தைப் பூஜிப்பதுதான். தேவிக் குப் பூஜைசெய்து அவளது பாததீர்த்தத்தைப் பானஞ்செய்தவன் மீண்டும் பிறவியை வந்தடையானென்பது நிச்சயம். காணப்படுகிற பிரபஞ்சமெல்லாம் மகாதேவியின் சொரூபந்தான். பார்க்கிறவளும் அவள்தான். இப்படி அவளிடத்திலே மனதுவைத்தவனுய்ப் பயமில் லாதவனு யிருக்கவேண்டும். நித்தியகர்மங்களைச் செய்துகொண்டு சதசில் பிராமணர்களை வரவழைத்துத் தர்மசாஸ்திரங்களைக் கேட்க வேண்டும். வேதங்களையறிந்த சத்பாத்திரர்களாகிய அந்தணர்களை நன்றுய்ப் பூசித்து அவர்கட்குப் பசு, பூமி, பொன், தனம் இவைகளைப் பிரதிதினம் தானஞ்செய்து வரவேண்டும். வாசிக்காத பிராஹ்மணன் பூஜிக்கத்தக்கவனல்லன். அவனுக்கு ஆகாரந்தவிர வேறு அதிகதானம் செய்தலொழிந்து அவமானப்படுத்தாது போக்கல் வேண்டும். பிராஹ் மணர்கள் எத்தகையராயினும் பூலோகத்திற்குத் தேவர்களாகையா லும், க்ஷத்திரியர்கள் அவர்களிடத்தில் பிறந்தவர்களாதலாலும் நாம் பூஜிக்கத்தக்கவர்கள். இதிற் சந்தேகமில்லை. அவர்கள் நாம் செய்யும் தானங்களாலும் நமஸ்காரங்களாலும் சம்பத்தைக் கோருகின்றவர்க ளாதலால் அவர்களே விசேஷமாய்ப் பூசிக்கத்தக்கவர்கள். இந்தக் காரணங்களையன்றி ஜலத்திலிருந்து தேஜஸும் கல்லிலிருந்து பஞ்ச லோகமுமுண்டாய் எல்லாவிடத்திலும் பிரகாசித்துப் பின்னர் தத்தம் உற்பத்திக்குக் காரணமான ஜலமுதலானவைகளிலேயே தணிந்து போதல்போல் நம்முடைய உற்பத்திக்குக் காரணமான அந்தணரிடத் தில் நாம் அடங்கியிருத்தல் வேண்டும். ஒ குழந்தாய்! உலகத்தில் நாம் செய்யத்தகும் தண்டனையைத் தர்ம சாஸ்திரத்தில் சொல்லி

யிருக்கிறபடி எப்பொழுதுஞ் செய்துகொண்டிருக்கவேண்டும். நியாயமாய் வரும்பணத்தைச் சிறிது சிறிதாய்ப் பொக்கிஷத்திற் சேர்க்கவேண்டும் என்றனன். (6 - 53.)

பதினோராம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

லம்போதரப்பிரஸவே நம:

பன்னிரண்டாம் அத்தியாயம்.

* திரிசங்கோ: புநஸ்சாபப்ராப்தி.

வியாசர் கூறுகின்றார்:— இவ்வண்ணம் தந்தையானவன் வேதவிதிவழாமல் கூறிய தருமங்களையெல்லாம் திரிசங்குகேட்டு அப்படியே ஆகட்டுமென்று நமஸ்கரித்து மிஞ்ந்த அன்புடனிருக்கத் தந்தையானவன் வேதசாஸ்திரமும் மந்திரங்களுமறிந்த பிராமணர்களை வரவழைத்துப் பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய சாமக்கிரிகைகளை விரைவிற் சேர்க்கும்படித் திட்டஞ்செய்து நல்ல சுபதினத்தில் சகல புண்ணிய தீர்த்தங்களையும் கொண்டுவரச்செய்து மந்திரிகளையும் தன்தேசத்திலிருக்கிற அரசர்களையும் வரவழைத்து அபிஷேகம்செய்வித்துச் சிங்காசனத்தில் வீற்றிருக்கச்செய்து சர்வாதிகாரங்களையும் கொடுத்துத் தன் பத்தினியுடன் வானப்பிரஸ்தாஸ்ரமத்தைப் பெற்றுக்கொண்டு கங்காநதிதீரத்தில் அதிவுக்ரமான தவஞ்செய்து வரும் நாளில், பூலோகவாசங் கழியுநாள் வரத் தேவர்கள் அவனிடம் அதிவுபசாரத்துடன் சொர்க்கலோகத்துக்கு அழைத்துக்கொண்டுபோய் இந்திரனுடைய ஆசனத்திற்குச் சமீபத்தில் வீற்றிருக்கச் செய்ய சூரியன்போற் பிரகாசிதிருந்தனன் என்றனர். ஜனமேஜயன் வினவுகின்றான்:—முன் வசிஷ்டருடைய கோ(பசு)வை வதைசெய்ததனால்

* திரிசங்கு மறுபடியும் சாபமடைதல்.

சத்தியவிரதன் பைசாசத்தன்மை பெற்றனென்று பேசினீரன்றே? அவனுக்கு அப்பைசாசத்தன்மை எப்படி நிவர்த்தியாயிற்று. அதை எனக்குச்சொல்லுமென்று விஜயனன். வியாசர் கூறுகின்றார்:—ஓ அரசனே! சத்தியவிரதன் பக்தியோடுபகவதியைப்பணிந்தபோதே அவள் அகமகிழ்ந்து திவ்யதேகத்தைக் கொடுத்தருளினள். அதனால் அவனிடத்திலந்தப்பேய்த்தன்மையும் மாய்ந்தது. அவன்செய்த பாபங்களனைத்தும பறந்தோடின. அவன் அம்பிகையின் அனுக்கிரகத்துக்கு அருகனானென்று அவனுடைய தந்தையும் வசிட்டரும் மகிழ்வெய்தினர்.

ஓ அரசனே! தர்மாத்மாவாக விளங்கிய தன்தந்தை மரித்தபின்னர் தான் நாட்டையாண்டு வருநாளில் தேவியைக்குறித்து அநேக யாகங்களைச் செய்துவந்தனன். இவ்வுலகத்தில் உண்மைக்கு ஓர்வசம்பாகிக் கீர்த்திபெற்ற அரிச்சந்திரன் அவனுடையபிள்ளைதான். சத்தியவிரதனுகிய திரிசங்கு தன்மகனுகிய அரிச்சந்திரனுக்கு அரசுரிமையளித்து, தான் மனிததேகத்துடனே சுவர்க்கலோகம்போகவெண்ணிவசிட்டருடைய ஆச்சிரமத்தைநாடி அடைந்து கைகூப்பி வணங்கிக்கூறுகிறான்:—ஓ பிரஹ்மபுத்திர! மஹாநுபாவ! சர்வமந்திர தந்திர சர்வஜ்ஞ! என்விண்ணப்பத்தைத் தேவரீர் நன்மனத்துடன் கேட்டருளுக. நானிந்த வுடலுடனே தேவலோகஞ்சென்று அங்கு அமரகளிர்செய்யும் அதிகமதுரமான கந்தருவகானங்கேட்டு அவ்வுலகத்துப் போகமும் சுகமும் பொருந்த விரும்பினேன். ஓ மஹாமுனிவ! யானெண்ணியபடி இச்சரீரத்துடன் அனுபவித்தற்கு எந்தயாகத்தை எப்படிச்செய்தல் வேண்டுமோ அப்படியே அவனை ஆக்குக. என்காரியத்தை இப்போதே முடித்துவிடும். யாவராலும் அடைதற்கரிய அண்டர்நாட்டினை யானடையுமாறு அருள்செய்வீராகவென்று இரக்கத்துடன்வேண்டினான். வசிட்டர் கூறுகின்றார்:—ஓ அரசனே! இந்தவுடலோடு உம்பர்நாட்டுலாவுதல்லண்ணுது இந்தவுடலைவிட்டவனுக்குத்தான் சுவர்க்கம் அவசியங்கிட்டும். இதுதான் சாத்திரங்கூறுமுறை இதை நீயறியாத தன்றே. உன் கோரிக்கை பயனற் றிருப்பது கொண்டுயான் பயப்படுகின்றேன். மானுடசரீரத்துடன் வானுலகில்வாழும் பெண்களோடு வாழமுடியுமோ! ஓ மஹானுபாவ! முன்னர் யாகஞ் செய்வாய். இறந்தபின்னர் உன்னெண்ணத்தின்படி சுவர்க்க

மடைந்து இன்புறுவாய். அவ்வார்த்தைகளைக்கேட்டு மிக மன வருத்தமுற்று முன்னேதன்னைச்சபித்தவரான வசிட்டரைநோக்கி, பிராமணரே! என்னித்து நல்லெண்ணம் உமக்கு இல்லையென்று யானறிவேன்! உம்மைக்கேட்டதும் என்பெருங்குற்றமே. நீயாகஞ் செய்யாவிடின் வேறுயாரையேனும் பௌரோகிதராக வரித்துக் கொண்டு அதனைச்செய்து முடித்திடுவேனென்று சொல்லினன். சொல்லக்கேட்ட வசிட்டர் கோபங்கொண்டு, ஏ துன்மதி! நீ சண்டாளஞ்சுக் கடவை. ஏ ஏ! இச்சரீரத்தோடே சக்கிலியாகக்கடவை என்று சபித்தனர். சபித்தும் கோபங்குன்றுதவராய்ப் பொன்னுல கமிக்க வெண்ணிய்பாவி! காமதேனுவைக்கொன்ற கைதவனே! அந் தணன்மனைவியை யபகரித்த அதிபாதகனே! நல்லநெறிக்கோர் நாசகாலனே!வருபிறப்பிலும்நீவானவர்நாடுவரப்பெறுயென்றனர்.

ஐம்பொறியடக்கிய அருந்தவத்தோரது சினம் கணமேனுங் காத்தலரிதன்றே! அந்தோ! அப்போதே அரசப்பொலிவெல்லாம் போய் அவன் சக்கிலியின்உருவம்வரப்பெற்றான்.பொற்குண்டலம் சற்குண்டலம்போற்கருத்தது. தேகத்திலிருந்த சந்தனம்போன்ற கன்மணம் மலமெனநாறியது. அவன் பொன்னுடையெல்லாம்கிழி ஜீலாபின. அவன்தேகம் யானையதுபோலாயது. வசிட்டமுனிவர் காயத்திரிரூபமான சத்தியை உபாசிப்போராதலால் அவர்கோபத் தினைக்கொடுக்கப்பட்ட சாபம் அவனுக்கு அப்போதே பலித்தது. சத்தியுபாசகன் சத்தின்பக்தர்களை அவமானப்படுத்த லாகாது என்பதனை இதனைலறியக்கடவாய்.ஓ அரசனே! திரிசங்குதன்தேகத் தைப்பார்த்துத் துக்கமடைந்து மனம்வருந்தி வீட்டிற்குப்போகா மல் காட்டிலேயே நான்குபக்கங்களிலும் திரிந்தாலாவி என்னசெய் வேன்? எங்குபோவேன்? என்சரீரம் மிகவும் நிந்திக்கத்தக்கதா யிருக்கின்றதே? எனக்குண்டாகிய இந்தத்துக்கம் நீங்கும்வகையா தது? தெரியவில்லையே! என்வீட்டிற்குப்போனேனெனில்,என்குரு ரன் பெரிதும் வருந்தமடைவாரே! என்மனையாட்டியும் இந்தவுரு வைக்கண்டு உடன்கூடி வாழுவாளே! ஜாதியாரும் உறவினருமே அண்டையிலணுகாரே! இவ்வாறு யாவராலும் வெறுக்கப்பட்டு உயிர் வாழ்வதினும் சாவதே சாலச் சிறந்ததென் றெண்ணினான். எண்ணி, நஞ்சுண்டுசாவேனு? நீரிலமுந்திசாவேனு? கழுத்திற்சுருக் கிட்டு நான்று சாவேனு? மூட்டியதீயிலே மூழ்கிச் சாவேனு? பட்

டினிகாத்துப் பிராணனைவிடுவேனு? என்றுபலவாறு யோசித்தான். பின்பு இவ்வித மரணங்களால் யான் ஆன்மஹத்திதோஷம்அடை வேனன்றோ? அன்றியும் இந்தச் சுபாகத்தன்மையும் சாபமும்பிற விதோறும் தொடருமல்லவோ? என்றுலோசித்து எப்படியினும் ஆன்மஹத்தி செய்யேன் என்று நிச்சயித்து யான்செய்திட்டகன் மத்தை இந்தகன்மதேகத்திலேயே இந்தக்காட்டிலேதானே அநுப விப்பேன். அதனலிக்கன்மம் கெட்டுப்போம். பிராரத்துவ கன்மங் களுக்கு அநுபவந்தவிர வேறுவகையால் நேட்டைக்காணேம். ஆ கையின் சுபாசுபகன்மத்தை அநுபவித்து விடுவேனென்று துணிந் தான். அவ்வாறே புண்ணிய ஆசிரமத்திற்கு அருகேயுள்ளபுண்ணி யதீர்த்தங்களைச் சேவித்தும் அம்பிகையைத் தியானித்தும்,சாதுக் களைச்சந்தித்து வந்தித்தும் காலத்தைக் கருப்பேனுயின்யான்முன் செய்த புண்ணியத்தால் ஓர் கால்சாதுக்களுடையசங்கம்நேரிட்டா லும்நேரிடுமென்று தன்மனதிலே தெளிந்தான். தெளிந்து தன் ஞட்டைவிட்டு கங்காநதிக்கரையிலே சவனமுனிவருடைபஆச்சிர மத்தில் வசித்துவந்தான்.

அரிச்சந்திரன் தன்தகப்பனுருக்குச்சாபம்வந்தகாரணத்தைத் தெரிந்துகொண்டு மந்திரிகளைவரவழைத்து, ஐய! என்னுடைபதந் தையை நீங்கள் மிக்க அன்பு மடக்கமும்காட்டி அழைத்துவாருங் கள்; அவர் மனம்வருந்தாமல் நாட்டிற்கு வருவாராயின் நீங்களும் வேயகுடிகளும் முன்போலவே அவரை யேற்று வாழயாதொரு தடையுமில்லையே? ஆசிரியராகிய வசிட்டபகவானுக்குக்கருணைவரு மாறு நாம் நடந்துகொள்ளுவோமென்றும் அவர் அதனல் சாப நீக்கஞ் செய்வாரென்றுச் சொல்லுங்கள் என்று தன்னெண்ணத் தை அவர்களுக்கறிவித்து அரசனிருந்தவிடத்துக்கு அனுப்பினன். அனுப்பப்பட்ட அமைச்சர் அவனைத்தேடிக் கண்டுவணங்கித் தம் மையறிய வுணர்த்திப்பின்னர், இளவரசாகிய அவன்மகன்சொல் லியவெல்லாஞ் சொல்லி அரண்மனைவந்தடையுமாறு அவனைவேண் டினர். அவன் அதற்குடன்படானுய், ஓ மந்திரிகளே! இவ்வேடத் துடன் யான் அயோத்திக்குவாரேன். வேறு ஆலோசனை செய்வ தைவிட்டு, காலதாமதப்படாமல் என் அரும்புதல்வனுகிய அரிச்சந் திரனுக்குமுடிசூட்டி நீங்களும் உடனிருந்துநாட்டினையாண்டுவா ருங்கள். பிராமண நிந்தனைபொன்றும் புரியாதையுங்கள். பரதம்

பலவும் இயற்றியிடுங்கள் என்று தன் எண்ணத்தை அவர்களுக்கெளிகு
யிட்டு விடைகொடுத்தனுப்பிவிட்டான். அரசன் ஆணையைக் கடத்தற்கு
அஞ்சிய அவர்கள் நகரம்வந்துசேர்ந்து அரிச்சந்திரனிடம் அவன்பிதா
பேசியயாவும் பேசி நல்லநாளிலே விதிமுறையே அவனுக்கு அபிடேகஞ்
செய்தார்கள் அவனும் அவ்வாறே நல்வழிவழுவாது செங்கோல்செலுத்தித்
தருமசிந்தையனாய்த் தத்தையை எண்ணிஎண்ணி காலங் கழிப்பானாயினன்.

சுலோகம்—(64)

பன்னிரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.



உ

லப்யாயை நம:

பதின்மூன்றாம் மத்தியாயம்.

* விஸ்வாமித்ரஸ்ய ஸ்வாஸ்ரமம் பிரத்யாகமனர்.

ஜனமேஜன் லியாசரைநோக்கி, ஓ ஐயா! அரிச்சந்திரனுடையபட்டா
பிஷேகத்தைக் கூறினீர், திரிசங்கு இது ஆயினானென்று சொல்லாதொழி
ந்தீர், குருவருள்பெற்று அவன் சாபத்தினின்றும் விடுபட்டானா? அன்றி
இறந்துபட்டானா? அவனது சரித்திர முழுவதும் யாது? அதைக்கேட்க
யான் மிக்க ஆவலுடையவனாயிருக்கின்றேனென்று கேட்டனன்.

வியாசர் கூறுகின்றார்.—திரிசங்குதன்மகன் பட்டத்துக்குவந்ததைப்
பற்றிச் சந்தோஷமுடையவனாய், இராச்சியவிசாரம் விட்டு தேவியை மன
திற் சிந்தித்துக்கொண்டு காலங்கழித்து வந்தான். அவனங்ஙனமிருக்க,
விசுவாமித்திரர் தவத்தைமுடித்து மனைவிமக்களைக்காணவெண்ணி அவர்க
ளிருந்தவிடம்வந்துசுகமேயிருக்கக்கண்டுகளித்துமனையாளைவினவுகிறான்.—
ஓ அழகிய கண்ணுடையாளே! பஞ்சகாலத்திலே அன்னமின்றி நமது குழ
ந்தைகள் எப்படி வாடிவருந்தினரோ? அக்காலளத்தில் எவ்வாறு நீகாப்பா

* விஸ்வாமித்ரர் தன்னாஸ்ரமத்துக்குவதல்.

ற்றினையோ? பொருளொன்றுமின்றிஎன்னபாடுபட்டனையோ? கூறு வாய். ஓ நல்லொழுக்கமுடையாளே! என்மனமெல்லாம் தவத்தை நாடி நின்றதாலும் யான்பொருளில்லாமல் கை மூடங்கியிருந்ததா லும் கருப்புக்காலம் அடுத்ததுகேட்டும் காடுவிட்டுவராதேஇருந் துவிட்டேன். யானிஷ்ஷனின்றிஉடல்வற்றிஒருநாள்பசிப்பிணியால்வ ருந்திப்போகுமிடம் வேறில்லாமையால்ஒருபறைச்சேரியினுள்ளே தழைந்து புலைமகள்உறங்கும்வேளையிலேதிருட்டுத்தனமாய்பாண் டத்தைத்திறந்து, சமைத்திருந்த நாய்மாமிசத்தைக் கையிலெடுத் தேன். அப்போது அவன் விழித்துப்பார்த்து நீயார்? இந்தப்பாதி ராத்திரியிலே என்வீட்டிற்குநீயேன்வந்தாய்? வந்த நீ ஆலோசனை யின்றி எதன்பொருட்டு பாண்டத்தைத் திறந்தனை? இதுபுலைச்சே ரியாயிற்றே சொல்வாயென்று மிக்க அன்போடு கேட்டான். நான் மிக்க பசியோடு கூடினவனு யிருந்தபடியால் வாய் குழறிச்கொண் டே, ஓ மஹாநுபாவனே! நான்பிராமணருஷி; பசிபொறுக்கமுடி யாமல் திருட்டுத்தனமாய்இப்பாண்டத்தைத்திறந்துஅன்னமுண் டாவென்று ஆராய்கின்றேன். ஓபுத்திமானே! நான் திருட்டுத்தன மாகவந்த அதிதி. ஆதலால் சமைத்திருக்கப்பட்ட இந்த மாமிசத் தைப்புசிக்கும்படி எனக்கு உத்தரவுகொடுப்பாயென்றேன். அதற் கவன் ஓ விஸ்வாமித்திரரே! என்வார்த்தையைக் கேட்பீராக.நான் சண்பாகன். இது புலைச்சேரி. இதிலுள்ள அந்தமாமிசத்தைப்புசிக்க ஒண்ணுதேயும். அந்தோ பாவம் பாவம். மநுஷ்யதேகம் கிடைப் பது மிகவும்துர்லபம்? அதனினும் துர்லபம் பிராமணசென்மம். அதனினும் அரிதாகிய துர்லபம் பிராமணத்வம். இவ்வருமைகளை நீர் அறியீரா? நல்லலோகத்தையடையஎண்ணமுள்ளவன்எந்தக்கா லத்திலும் துஷ்டமான ஆகாரத்தைப்புசித்தல்அடாதன்றே? ஏழு விதகர்மத்தினால் அந்தியசாதிகள் கிரகிக்கத்தக்கவ ல்லரென்று மதுகூறியிருக்கின்றானன்றே?நான்செய்த கர்மத்தினால் சுபாகனுயி னேனுதலால், நான் ஓதுக்கப்படத் தக்கவனென்பதில் சந்தேகமி ல்லை, இப்போது உம்மையான்தடைசெய்வது லோபத்தினலன்று ஓ பிராமண சிரேஷ்டரே! உமக்கு வருணசாங்கிய தோஷம்வரக் கூடாதென்கிற எண்ணமன்றி வேறில்லையென்றான். அவன் வாய் மொழியைக்கேட்ட யான், ஓ தருமமறிந்த சண்டாளனே! நீ உண் மையைக் கூறினையாதலால் உனக்கு ஆபத்காலதர்ம சூக்ஷ்மமார்த்

கத்தைக் கூறுகின்றேன் கேட்பாயாக. சர்வவிதத்தாலும் சரீர ரக்ஷணை செய்யவேண்டியது ஆவசியகம். பாபத்தைப் போக்கிக் கொள்ளுவதற்கும் சத்தியுண்டாக்கிக்கொள்வதற்கும் பிராயச்சித்தம் செய்துகொள்ளலாம். பசியை நீக்கிக்கொள்வதற்கு அன்னமன்றி பிராயச்சித்தமேதேனுமுண்டா? ஆபத்தில்லாக்காலத்தில்பாபஞ்செய்தால் நரகமுண்டாமேயன்றி ஆபத்துள்ளகாலத்தில் பாபஞ்செய்தால் நரகமுண்டாகமாட்டாது. ஒருவன்பசியோடுஇறந்துவிடுவானையின் அவனுக்கு நரகமுண்டு இதிற் சந்தேகமில்லையாதலால், சுகத்தைக் கோறுகின்றவன் பசியை என்னவிதமான ஆகாரத்தினாலாவது அடக்கவேண்டும். ஆதலால்நான் திருட்டுத்தனமாய்ச் சரீரத்தை ரக்ஷித்தத்தணிந்தேன். க்ஷாமகாலத்தில் பசியின் பொருட்டுதிருடுகிறவனுக்கு என்னபாபஞ் சொல்லியிருக்கிறதோ அந்தப்பாபம் மழையைப் பெய்யவொட்டாமல் தடைசெய்கிறவனுக்குச் சேருமென்றேன். ஓ பிரியே! நானிதைச்சொல்லவும், ஆகாயத்திலிருந்து யானையின் துதிக்கையிலிருந்துகொட்டுகிறதுபோல் மேகம் வருஷித்தது. அந்தமழையைப்பார்த்து நான் மிக்கசந்தோஷமடைந்தவுடனே அவ்வீட்டிலிருந்துவெளியேவந்துவிட்டேன். என்செய்தியிதுவாகும். மிகப்பயங்கரமாயும்பிராணிகளையெல்லாம் நாசஞ்செய்வதாயு மிருந்த அந்த க்ஷாமகாலத்தில் நீஎப்படிஜீவித்தனை? என்றார்.

அதற்கவள் கூறுகிறாள்:—ஓ பர்த்தாவே! நீரிவ்விடம் என்னை விட்டுப்போனபொழுதே க்ஷாமம்வந்துவிட்டது. அன்னத்திற்காக குழந்தைகள் மிக்கவருத்தப்பட்டார்கள். அவர்களைப்பார்த்துநான் பயந்து காடுகாடாய்ச் சென்றெல்லைத் தேடும்போது சிறிது கிடைக்கும். அதனையுண்டு சிலகாலங்கழித்தேன். பிறகு அதுவுங் கிடைக்காமற்போயிற்று; அப்போது காட்டிற் சென்றெல்லுமில்லை; விருக்ஷங்களிற் பழமுமில்லை; பூமியில் வேறு எவ்விதமான பதார்த்தங்களுமில்லை. இவ்விதமான தர்ப்பிக்ஷாகாலத்தில்யார்பிக்ஷையிடுவார்கள்? குழந்தைகள் பசியினால் பாதைப்படுங்காலத்தில் என்செய்வோம்? எங்கேபோவோம்? பசியினாலழத்தொடங்கும் குழந்தைகளுக்கு என்னபதில் சொல்லுவோமென்றுமனதிலெண்ணிப்பின்னர்: ஒருதனவானுக்கு ஒருபிள்ளையை விற்கிரயஞ்செய்து அந்தத்திரவியத்தினால் மற்றபிள்ளைகளை ரக்ஷிப்போம். இதுவன்றி வேறேருபா

யமில்லையென்று நிச்சயித்து, இந்தப்புத்திரனை விற்கிரயத்திற்காக அனுப்ப, இவன் மிகவும் அழுதான். நானிவனை யிழுத்துக்கொண்டு வெட்கமில்லாமல் விற்க வெளிப்பட்டேன்! அப்போது மார்க்கத்தில் சத்தியவிரதனென்னும் ராஜருஷிமிகவும்வருத்தப்படுகிறவன் னைப்பார்த்து இக்குழந்தை யேனழுகின்றானென்று கேட்டான். நான் ஓ அரசனே! பசியின்கொடுமைக்கு இவனைவிற்க இழுத்துக் கொண்டு போகிறேனென்றேன். அச்சத்தியவிரதன் மிக்கதயவுள் ளவனாய், இந்தக் குழந்தையை நீயழைத்துக்கொண்டு வீட்டிற்குப் போவாய். நான்உன்னுடையமுனிவர் வருமளவும் உனக்குங் குழந் தைகட்கும் வேண்டும் மாமிசத்தைத் தினந்தோறுங் கொடுக்கின் றேனென்று கூறி, அப்படியே பண்ணி, மான், இவைகளின் மாமிசத் தை இந்தமரத்தில் வைத்துவிட்டுப் போவான். ஓ நாயகனே! நம் முடைய குழந்தைகளைத் துக்கசாகரத்தினின்றுங் கரையேற்றின வன் அந்தப் புண்ணியசாலியேயாகும் ஒருதினத்தில் அவனுக்கு மாமிசம் அகப்படாமற்போய் வசிஷ்டருடைய பசுவைக்கொன்று விட்டான். அவர்மிகவுங் கோபமுடையவராய்த் திரிசங்குவாகவும், கோவதைசெய்தபடியால் சண்டாளனாகவுஞ் சபித்துவிட்டார். ஓ கௌசிகமுனிவரே! அவனது துக்கத்தினால் எனக்கு மஹா துக்க முண்டாயிற்று. எனக்குக ராஜபுத்திரன்சண்டாளத்தன்மையடை ந்தான். ஆகலால் ஏதேனும் ஓ ருபாயத்தாலாவது தபோபலத்தா லாவது அவனை நீர் இரக்ஷிக்கவேண்டுமென்றாள்.

இச்செய்தியைகேட்ட விஸ்வாமித்திரர்மிகவும் மனவருத்தப் படுகிற தன்மனைவியைச் சமாதானப்படுத்தி இந்தக்காட்டில் உங் களை சகித்துவந்த அந்தப்புண்ணியபுருஷனை என்தபோபல த்தினாலும், தபோபலத்தினாலுஞ் சாபத்தினின்றும் விடுவித்து அவ னுக்குத்தை நிவர்த்திசெய்கிறேனென்றுசொல்லிப் பின்னர் தாம் தம்மனத்தில் அந்த அரசனுக்கு எப்படி துக்கம் நீக்குமென்றுசிந் தித்து ஓர் ஆலோசனையைச் செய்துகொண்டு திரிசங்கு இருக்குமி டம்போயினர். அவன் இவர்வருகையைப்பார்த்து ஆச்சரியப்பட்டு, அவர்பாதத்தில் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து அப்படியேகிடந் தான். விஸ்வாமித்திரர் அவ்வரனைத் தூக்கிக் கையாற்பிடித்துக் கொண்டு சமாதானப்படுத்தி, ஓ அரசனே! என்பொருட்டுநீசபிக் கப்பட்டனையாதலின் நானதனைப்போக்கி, உனதுகோரிக்கையை

நிறைவேற்றிவைக்கிறேன். கடந்தசெய்தியைச் சீக்கிரமாகக் கூறுவாயென்று கேட்கவும், அவன் தான் சுவர்க்காரோகணம் செய்யவெண்ணி வசிட்டரை வினவியதுமுதல் அவர் சாபமிட்ட காரணமீறுகவாவும் விடாமற்கூறி, ஓ முனிவரே! என்னுடையதுக்கத்தை நீக்குவதற்கு நீர் சமர்த்தரென் றெண்ணுகிறேனென்று தத்தித்தக்கொண்டு மௌனமாயிருந்தான். கௌசிகமுனிவர் அவனுடைய சாப நிவர்த்திக்கு ஆலோசனை செய்தனர்.

சுலோகம்—(62)

பதின்மூன்று மத்தியாயம் முற்றிற்று.



ஓ

லக்ஷ்மீட்யாயை நமः

பதினான்கா மத்தியாயம்.

* திரிசங்கோஸ்வர்க்கமனம்.

வியாசர் கூறுகின்றார்:—மகாதபஸ்விகளில் விஸ்வாமித்திரர் செய்யவேண்டிய காரியத்தை மனதில் நன்றாயாலோசித்துப் பின்னர் யக்ஞத்துக்கு வேண்டிய சம்பாரங்களனைத்தும் சேகரித்துக்கொண்டு முனிவர்களை யழைத்தனர். வசிட்டரால் தடைசெய்யப்பட்டு ஒருவரும் வராதொழிந்தனர். விஸ்வாமித்திரர் ருஷிகள்வராமையைபறிந்து மனவருத்தமுடையவராய்த் திரிசங்குவினிடம் வந்து மிக்கோபத்தோடும் அரசனைநோக்கிக்கூறுகின்றார்.—ஓ அரசனே! பிராமணர்களெல்லாரும் வசிட்டமுனிவரால் தடைசெய்யப்பட்டு இந்தயாகத்திற்குவரா தொழிந்தனர். இனி நீனது தபோபலத்தைப்பார் உன்னைச் சுவர்க்கலோகத்திற்கேற்றி உனதுமோறிக்கையைநிறைவேற்றிவைக்கிறேன்; நீயஞ்சற்க வென்றுசொல்லி, ஜலத்தைக்கையிலேந்திக்கொண்டு நான்செய்துவந்த தபத்திரிபத்தினாலுண்டாகும்புண்ணியத்தையுனக்குத்தத்தஞ்செய்தேன். இனி நீ சுவர்க்கத்திற்குப்போவாய். அதேகாளாய்சம்பாதித்த எனதுபுண்

* திரிசங்கு சுவர்க்கத்துக்குப்போதல்

ணியத்தை இப்போ தனக்குக் கொடுத்தேனுகையால் சுவர்க்கத்தி லுனக்குச் சுகமுண்டாகும் வேறுயோசனை செய்யவேண்டாம் செல் லுகவென்று சொல்லவே, திரிசங்கு பட்சிபோல் ஆகாயத்திலெழும்பி இந்திரபட்டணத்திற்குச் சமீபமாகப் போகும்போது, தேவர்கள் பார்த்து இந்திரனிடம்போய் வாயுவேகமாக. யாரோவொரு சண்டா ளன் வருகிறுனென்றார். அதுகேட்ட இந்திரன் அதிவேகமா யோடி வந்து பார்க்க, வருகின்றவன் திருசங்கு மகாராஜனென்றறிந்து கொண்டு தெரியாதவன்போல் அடா சண்டாளனே! எங்கேயாவது தேவலோகத்திற்குச் சண்டாளன் வருவானு? நீ இங்குவருதற்குத் தகுந்தவனல்லவே. பூலோகத்திற்குப் போவென்று துறத்தினன். துறத்தவே, அவன், தேவலோகத்தில் வசிப்பவன் அங்கு வசிக்கும் புண்ணியமிழந்தவுடன் எப்படிப் பூமியில் வீழ்ந்து விடுவானே, அப் படி வீழ்த்தலைப் படும்போது விஸ்வாமித்திரரை நினைத்து, ஓ முனி வரே! நான் சுவர்க்கத்திலிருந்து கீழே வீழ்கின்றேன். என்னை ரட்சிப் பீர்! ரட்சிப்பீரென்று பெருங்கூச்சலிட்டழைத்தான். விஸ்வாமித்திர முனிவர் அவனது பெருங்குரலைக்கேட்டு, அரசனே! நீ அவ்விடத்தி லேயே நிற்க நிற்க வென்றார். என்னவும், கீழ்நோக்கி வீழ்கின்ற திரி சங்குராசன், முனிவர் தமது தவமகிமையைக் கொண்டு கூறியவார்த் தையினுல் ஆகாயத்தில் அவ்விடமே நின்றனன். அவனங்ஙன நிற்க, விஸ்வாமித்திரர் உடனே ஆசமனஞ் செய்து இரண்டாவது தேவ லோகமொன்று சிருட்டிக்கவெண்ணி ஓர் அரியயாகஞ் செய்யத் தொடங்கினர். இந்திரன் அவரது முயற்சியைப்பார்த்து வேகமாய் வந்து கூறுகின்றன்:—

ஓ முனிவரே! கோபத்தாற் கலங்கினவராய் ஏன் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்கின்றீர். சிருட்டிக்க முயன்றது போதும். உமக்கு ஆகவேண்டிய காரியமென்னே? அதனைச் சொல்லுமென்றன். விஸ்வா மித்திரர், ஓ பிரபுவே! உன்னுல் சுவர்க்கத்திலிருந்து வீழ்ந்த அதி தக்கிதனை திரிசங்கு மஹாராஜன் இப்பொழுது சந்தோஷிக்க உன் னுடைய சுவர்கலோகத்துக் கழைத்துக்கொண்டு போவா யென்றனர். இந்திரன் அவரது தபோபலத்துக் கஞ்சினவனுல், அவராணையைக் கடவாமல் அரசனுக்குத் திவ்யதேகங் கொடுத்து விமானத்திலேற்றிக் கொண்டு முனிவரிடம் விடைபெற்றுச் சுவர்க்கம்போய்ச் சேர்ந்தனன். விஸ்வாமித்திரரும் தமது ஆச்சிரமம் போய்ச் சேர்ந்தனர். அரிச்சந் திரன் விஸ்வாமித்திரர் தன் தந்தையாருக்குச் சுவர்க்கபதம் வரும்

வண்ணஞ்செய்த வுபகாரத்தைக் கேட்டுச் சந்துஷ்டனுய் அரசியனடாத்திக்கொண்டு அதி சுந்தரவதியாகிய மனேயாட்டியுடன் நெடுங்காலங் கிரீடித்துக்கொண்டிருந்து புத்திரப்பேறுண்டாகாமையை நாடி மிகவும் துக்கமுற்று வசிஷ்டரிடஞ் சென்று கூறுகின்றுன்:—

நீர் சகல மந்திரதந்திரங்களிலும் வல்லவராதலால் என்னைப் புத்திரப்பேறில்லாத வறுமையினின்றும் நீக்கி என்குலத்துக்கு ஓர் பெருஞ் சிறப்புண்டாம் வண்ணம் புத்திரசம்பத்தருளும் உபாயத்தைச்செய்யும். ஓ பிராமணசிரேஷ்டரே! புத்திரப்பேறற்றவனுக்கு நற்கதியில்லையென்பது நீரறிந்ததன்றே? நானதனையெண்ணித் துக்கப்படும்போது, நீரதனை யறியாதவர்போன்று உபேக்ஷை செய்கின்றீர். ஈதழகாமோ? இவ்குள்ள கலங்க பட்சிகளைப்பாரும்; அவைதன் குஞ்சுகளைக் கொண்டாடுகின்றனவே. இவையன்றே புண்ணிய முடையவை. அற்பபாக்கியனகிய நானே இரவும் பகலும் சந்தானமின்மையைக்குறித்து வருந்துகின்றே னென்றுன். அதுகேட்ட முனிவர் உள்ளத்தில் சிந்தனையுடையவராய் அரசனை நோக்கிக் கூறுகின்றுன்:-

ஓ மஹாராஜனே! நீ சொல்லுவது உண்மைதான். இந்தச் சமுசாரத்தில் பிள்ளையில்லாத துக்கம்போல் பெரியதுக்கம் வேறென்றுங் கிடையாது. நீ வருணபகவானை மிக்க சிரத்தையோடு பூசைசெய்யின் அவர் உனது காரியத்தை முடிப்பார். சந்தானங் கொடுக்கிற விஷயத்தில் வருணமூர்த்தி மிகச்சிறந்தவர். தெய்வாநுக்ரஹம் புருஷப் பிரயத்தனம் என்னுமிரண்டையும் மனிதர்கள் முக்கியமாயெண்ணவேண்டும். முயற்சியில்லாமல் காரியசித்தி எப்படி யுண்டாகும்? உண்மையறிந்தவர் நியமமாய்ச் செய்யத்தக்கது முயற்சியே. முயற்சி செய்தால் காரியசித்தி யுண்டாகும். அது தவறினுலுண்டாகாதென்று ஆசிரியர்கூறினர். அவ் வார்த்தையைக்கேட்டு அவரை நமஸ்கரித்துத் தவஞ்செய்யக்கருதி நகரத்தைவிட்டு கங்கைக்கரையில் பரிசுத்தமான ஓர் ஸ்தானத்தில் பத்மாசனஞ்சப் பாசதரனுய் வருணபகவானைத் தியானித்து மிகவுக்கிரத்தோடு தவஞ்செய்து வந்தனன். வரவும், வருணபகவான் கருணைகூர்ந்து பிரத்யக்ஷமாய், ஓ தருமமறிந்தவனே! உனது தவத்தினுல் சந்தோஷமடைந்தேன். உனக்குவேண்டும் வரம் யாதென்ன, அரசன்! ஓ பிரபுவே! சுகத்தையளிக்கவல்ல புத்திரனை எனக்கருளும், யான் புத்திரனில்லாமல் வருந்துகிறேன், மூன்றுகடனில் ஒன்றுன இவ்வொருகடனைக் கழித்துக்கொள்ளுவதற்காக இம் முயற்சி செய்தேனென்றுன்,

வருணன், ஓ அரசனே! உன்னிஷ்டப்படி நல்ல குணசாலியான புத்திரன் பிறப்பான். அவன் பிறந்தபின் நீ சந்துஷ்டனுய்ச் சிறிதேனுஞ் சந்தேகங்கொள்ளாமல் அந்தப்புத்திரனே யாகத்தில் பசுவாகச்சட்டி எனக்குப் பிரீதிபண்ணுவையேயாயின் நான் உனக்கு இந்த வரத்தைக் கொடுக்கின்றே னென்றுன். அரசனதனைக் கேட்டுக் கூறுகின்றுன்:—

எனக்கு உலகில் அபுத்திரவானென்கிற பெயரொழிந்து புத்திரவானென்கிற பெயர் வருமாயின் நீர் விரும்பியபடி அந்தப் பிள்ளையைப் பசுவாகச்செய்து யாகஞ்செய்கின்றேன். சத்தியமாய்ச் சொல்லுகின்றேன். என் மானத்தைக் காப்பாற்றவந்தவரே! பூலோகத்தில் மலடனென்று பேர்பெறுகிறதுக்கம் பெரியது. ஆகையால் நல்லபிள்ளையைக் கொடுமென்றுன். வருணபகவான் ஓ அரசனே! உனக்கு நல்லபிள்ளே பிறக்கப்போகின்றுன், நீ முன்னே என்னிடத்திற் சொன்னவார்த்தைப்படி தவறுமல் செய்யாகவென்று விடை கொடுக்க, அரிச்சந்திரன் வீடுபோய்ச்சேர்ந்து, தருமபத்தினியினிடத்தும் ஏனைய நூறு பணிவிகளிடத்தும் வரப்பிரசாதத்தைச் சொல்லிமகிழ்ந்து வாழ்ந்துவருநாளில், சிலகாலக்கழித்து தர்மபத்னி கர்ப்பவதியாயினுள். அரசன் அதைக்கேட்டுச் சந்துஷ்டனுய் விதிப்படி செய்யவேண்டிய சம்ஸ்காரங்களைச் செய்துவர, பத்தாவது மாசத்தில் சுபமானதினத்தில் தாராபலம் கிரகபலம் முதலியன கூடியிருக்கும்போது தேவபிள்ளைக்குச் சமானமான சுபுத்திரனைப் பெற்றுள். அந்தச் சுபவார்த்தையை அரசன் கேட்டு உடனே ஸ்நானஞ்செய்து அந்தணரெல்லாஞ் சூழ்ந்திருக்க ஜாதகர்ம முதலானவைகளை நடத்திச் செய்யவேண்டிய தானங்களையுஞ் செய்து சந்தோஷசித்தனுய் நிர்த்தகிதவாத்திய முதலிய சகல சாம்ராஜ்ய சம்பிரமத்துடன் வாழ்ந்திருந்தனன். சுலோகம்:—(55)

பதினைன்காம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

லயவர்ஜிதாயை நம:

பதினேந்தாம் அத்தியாயம்

* அரிச்சந்திர வருண யோஸ் ஸம்வாதம்.

வியாசர் கூறுகின்றார்:— புத்திரோற்சவத்தினுல் அரசனுடைய சிருகம் விளங்கும்போது, வருணபகவான் ஓர் பிராமணனைப்போல் அங்கு வந்து, மங்களம் உண்டாகுகவென்று ஆசீர்வதித்து, ஓ அரச! நான்வருணன் எனது வரதானத்தால் உனது புத்திரதாகத் தணிந்து விட்டதல்லவா? நீ எனக்கு முன்சொல்லிய சத்திய வசனப்படி யாகஞ்செய்வதற்குத் தடையென்னை யென்றான். அரசன் அவ்வார்த் தையைக் கேட்டுத் தாமரைமலர்போன்ற பிள்ளையை நானைப்படிக் கொலைசெய்வேன், வந்தவருணரோ மகாவீரியமுள்ளவர், சுபத்தைக் கோருகின்றவர், இவரை அவமானப்படுத்தல் தகுதியன்று, அன் றெனின், பிள்ளையினிடத்தில் உண்டாகும் சிநேகம் எந்தப் பிராணிக ளாலும் விடத்தக்கதாமோ? இதற்கு நானென்ன செய்வேனென்று பலவாறுகவெண்ணி சிந்தாகுலமுற்று ஒருவாறு தீரஞ்செய்து கொண்டு வருணனை நமஸ்கரித்து அர்க்கிய முதலியவற்றை உபசரித்து அருகில்நின்று கூறுகின்றான்:—

ஓ தேவதேவனே! கருணைக்கடலே! உம்முடைய உத்திரவின் படி வேதோக்தமான விதியினுல் வெகுதக்ஷிணையோடு யாகத்தைச் செய்கிறேன் அதிற்சந்தேகமில்லை; பிள்ளை பிறந்த பத்துநாளைக்குள் தகப்பன் யாககர்மம் செய்யத்தக்கவனல்லனென்றும் தாய் ஒரு மாதத்திற்குள் சுத்தியாகாளென்றும், யாகத்திற்குத் தம்பதிகளாக விருத்தல் வேண்டுமென்றும் தருமசாஸ்திரங் கூறுகின்றதல்லவா? அதனை நீரும் அறிந்தவர்தானே? ஓ ஜலாதிபதியே! ஒருமாதம் தயவு செய்து பொறுத்துக்கொள்ளு மென்றான்.

வருணபகவான் ஆசிபுகன்று நான் போய்வருகின்றேன் நடத்த வேண்டியவற்றை நடத்துவாய் மாதாந்தத்தில் வருகிறேன் அப் பொழுதேனும் தடையின்றி நீயாகஞ்செய்யவல்லையோ வென்று சொல்லிப்போயினன். போனபின் அரிச்சந்திரன் மிக்கசந்தோஷ மடைந்தவனுய் குடங்குடமாய்ப் பால்கறக்கும் பசுக்களைச் சொர்

* வருணபகவானுக்கும் அரிச்சந்திரனுக்கும் சம்வாதம்.

னத்தினல் அலங்கரித்துக் கோடிகோடியாகவும் திலங்களைப் பர்வதா காரமாகவும் வேதமறிந்த அந்தணர்களுக்குத் தானஞ்செய்து புத்திர னுடைய முகத்தைப்பார்த்து ஆனந்தமுற்று லோகிதனென்று பெயர்வைத்தான்.

மாதமுடிவில் வருணபகவான் முன்போல் வந்து யாகஞ்செய் செய் என்று விரைந்துகூற அரசன் அவரைப்பார்த்து துக்கசாகரத் தில் மூழ்கினவனுய் ஈமஸ்கரித் துபசரித்துக் கைகூப்பிநின்று கூறுகின்றான்:—

பிரபுவே! இன்று தேவரீர் என்வீட்டிற்கு வந்தது தெய்வா தீனமே. என்னுடைய கிருகம் பரிசுத்தமாயிற்று. உம்முடைய இஷ் டப்படி யாகஞ்செய்கிறேன். வேதமுணர்ந்த பெரியோர் பல்லிழந்த பசுவினல் யாகஞ்செய்தல் அடாதென்று சொல்லுகின்றனரே. பல் முளைத்தபிறகு கூறியபடி யாகத்தை முடித்துவிடுகிறேன், இதிற் சந் தேகமில்லையென்றான். வருணபகவா னதனைக்கேட்டுச் சரிதானென்று போயினன். அரிச்சந்திரன் சந்தோஷமாய் வீட்டிற் கிரீடித்துக் கொண்டிருந்தான்.

வருணபகவான் பல்முளைத்த சங்கதியுணர்ந்து முன்போல் அரச னிடம்வந்து யாகமியற்றுதற்கினி என்ன தடையுளதென்றான். அர சன் மிக்க வுபசாரத்துடன் ஆசனங்கொடுத்து சிறப்புடன் பூசித்துத் தோத்திரஞ்செய்து கூறுகின்றான்:—

ஓ பிரபுவே! இந்தயாகத்தை விதிப்படி விசேஷதக்ஷிணை கொடு த்து நடத்த வெண்ணியிருக்கின்றே னென்றுகூறி மீண்டும் அதிக வணக்கத்துடன் தலைதாழ்த்தி ஓ ஸ்வாமி! இந்தப் பாலகனுக்குச் சவுளகர்மம் நடக்கவில்லையே யாகத்தில் பசுவாக வருவோர்க்குக் கர்ப்பகேசம் இருத்தலாகாதென்று பெரியோர்கள் சொல்லக்கேட் டிருக்கின்றேன். இந்த விதி நீரும் அறியாததன்றே. ஆதலால் அந்தச் சடங்கு செய்து முடிந்தபின்னர் யாகத்தைச் செய்துவிடுகிறேன். அதுவரையும் பொறுத்துக்கொள்ள வேண்டுகின்றேனென்றான். வருணதேவன் கூறுகின்றான்:— ஓ அரசனே! நான் வரும்போதெல் லாம் நியாயம்போல் ஒவ்வொன்றைச் சொல்லி என்னை வஞ்சித்து வருகின்றாய் யாகஞ்செய்வது உண்மையேயானல் ஏனையசம்பாரங்கள் சித்தமாயிருக்கின்றனவா? அது எனக்குப் புலப்படவில்லை; பிள்ளையி னிடம் உனக்கிருக்கும் ஆசையால் என்னை வஞ்சித்து வருகிறாயாகும்; இதற்குச் சந்தேகமில்லை இனிச் சௌளகர்மஞ் செய்தவுடனே யாகஞ்

செய்யாமலிருப்பாயாகில் யான் கோபத்துடனே மிக்க பயங்கரமான சாபமொன்று உனக்குக் கொடுத்துவிடுவேன்; இப்போது உன்சொற் படியே திரும்பிப்போகின்றேன்; இகூடவாகு குலத்திற் பிறந்த நீ பொய் சொல்லலாகாதென்று சொல்லிப்போயினன்.

இனிவரும்போது பார்த்துக்கொள்வோமென் றரசன்சந்துஷ்டனுய்ப் பிள்ளேயோடு விளேயாடி மகிழ்ந்து வாழ்ந்துவரும் காளில் சவுளகர்மஞ் செய்யுங்காலம் வந்தது; வரவே அச்சடங்கை மிக்க ஆடம்பரத்தோடு நடத்திவருங்காலத்தில் பத்னியும் பிள்ளேயை யெடுத்துக்கொண் டரசன் சமீபத்தில் வந்துட்கார்ந்தாள். அதேகாலத்தில் வருணதேவரும் ஓ அரசனே! யாகஞ்செய் யாகஞ்செய் என்று மேகமுழக்கம்போலக் கர்ஜித்து அக்னிபோல அனலேவீசி அரசனருகில்வந்தனர். அவரைக்கண்டவுடனே அரசன் அடங்காத துயரங் கொண்டு நடுங்கிப்பயந்து நமஸ்கரித்து ஆசனத்திலிருக்கச் செய்து செய்யவேண்டிய வுபசாரம் யாவுஞ்செய்து கூறுகின்றன்:—

ஓ பிரபுவே! தங்கள் காரியத்தை இப்போதே செய்துவிடுகிறேன்; அதிற்றடையொன்றுமில்லே; ஆனுல் ஓர் விண்ணப்பம். அதனைத் தேவரீர் அமைந்த மனத்தோடு கேட்டருளல்வேண்டும். அது யுத்தமாகவிருந்தால் எடுத்துக்கொள்ளுக. அல்லாவிடில் தள்ளிவிடுக. அதனல் யாதொரு பாதகமு மில்லே. பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் என்கிற மூவரும் துவிஜாளென்று சொல்லப்படுகின்றர்களாகையால் அவர்கள் சம்ஸ்காரம் பெறவேண்டியவர்களென்றும் பெருவிடில் அவர்கள் சூத்திரர்களோ டொப்பாவார்களென்றும் வேதவித்துக்கள் சொல்லுகின்றர்களே. அந்த வுபநயனவிதி இந்தக்குழந்தைக்கு ஆகவில்லேயே; அஃதாகுமளவும் சூத்திரனுகையின் இவனெப்படி யாகத்துக் குரியனுவான். உபநயனஞ் செய்யவோ இன்னும் சிலகாலஞ் செல்லவேண்டும்; ஏனெனில் அந்தணர்களுக்கு எட்டாவது வயதும் அரசருக்குப் பதினேராவது வயதும் விதிக்கப்பட்டிருக்கிறதல்லவா, அடியேன் தேவரீருக்கு விதிகளே யெல்லாம் எடுத்துக்காட்டத் தக்கவனல்லேன்; ஊழியன்போல் ஞாபகப்படுத்துகின்றேன்; என்மகனுக்கு உபநயனஞ் செய்வித்தபின்னர் உத்தமமான அந்த யாகத்தைச் செய்துமுடிக்கிறேன். உலோகபாலகராயும் தருமநெறிக்குட்பட்டவராயும் சர்வ சாஸ்திர மறிந்தவராயு மிருக்கின்ற தேவரீருக்கு இதன் மேலும் யான் சொல்லத்தக்கவை யாவுள? இப்போது யான் கூறிய வார்த்தைகளே உண்மையாக நம்பி சந்தேகங்கொள்ளாது இருக்கைக்

கேகலாம்; மன்னித்தருளுக வென்றனன். அரசனதிகவிநயத்துடன் பலமுறை சொல்ல வருணமூர்த்தி மிக்க தயவுகாட்டி உன்னெண்ணப்படியே செய்கின்றேனென்று போய்விட்டனர். போனபின்னர் அரசன் தெளிவுவந்த முகத்தைப் நினைக்கின்றான்:— இவரிடத்து நான் பிள்ளைவரம் பெற்றதும் போதும் இப்போது இவராற் படும்பாடும் போதும்; அந்தோ! அன்று பிள்ளைகொடுத்தந் தெய்வமாய்வந்த இவர் இன்று அவனைக் கொல்லும் யமனுகவருகின்றார்; இப்படியுமுண்டோ? இதுவரையும் மூன்று கண்டம் வந்தொழிந்தது; இனிச்செய்ய வேண்டிய சுபகாரியத்தைச் செய்வேனென்று சந்தோஷத்துடன் வாழ்ந்துவந்தபோது, மகனுக்குப் பத்தாவது வயதுவந்தது. வர, இனிப்பதினைந்தும் வயதுவரப்போகின்ற தென்று நாளெயெண்ணிக்கொண்டிருந்து அந்நாள் வந்தவுடன் சிரேஷ்டமான பிராமணர்களையும் மந்திரி முதலானவர்களையும் வரவழைத்து அதிகசம்பிரமத்தோடு குமாரனுக்குப் பூணூல்தரித்து, வருணன் வருவானே என்று சிந்தித்துக்கொண்டிருக்குஞ்சமயத்தில் அவர் வந்துவிட்டனர். அரசன்பார்த்து அவர் வருகையை எதிர்பார்த்திருந்தவன்போலோடிவந்து நமஸ்கரித்துக் கைகூப்பி நின்று கூறுகின்றான்:— ஓ என்தெய்வமே! தாங்கள் அளித்தபிள்ளை உபநயனஞ் செய்யப்பெற்றான். தங்கள் உபகாரத்தை என்னென்று சொல்லுவேன். மலடனென்று எந்நேரமும் உலகம் கூறும் அபவாதத்தினின்றும் ஒழித்தீரே! இஃதொன்றினுக்கே யான் செய்யத்தக்க கைம்மாறு பார்திருக்கின்றது? நீர்கேட்டபடி அவனைக் கொடுப்பதானுகும். ஓ ஐயனே! நீர் மனமகிழும்படி அந்தயாகத்தை மிகச்சிறப்பாகச் செய்யவெண்ணியிருக்கிறேன். இதுசத்தியம். ஆனால் சமாவர்த்தனகருமமொன்றிருக்கின்றதென்றும் அது அவசியம் உபநயனம் நடந்தவுடன் செய்யவேண்டுமென்றும் அதுசெய்யாவிடில் உபநயனஞ் செய்தும் பயனில்லையென்றும் சொல்லுகின்றார்கள். அதனையும் செய்து மகிழ எண்ணுகின்றேன். அதுமுடிந்தவுடன் உமதிஷ்டப்படியே யாகஞ்செய்வதில் யாதொருதடையுமிராது. எல்லாச்சடங்கும் முடிவு பெற்றன. இந்த ஒருசடங்கு முடிவுபெறும்வரையில் நீர் பொறுத்தருளுமென்று மிகவும் பிரார்த்திக்கின்றேனென்றும், சிந்தனையொன்றும் வேண்டாமென்றும் சொல்லி முடித்தனன்.

இதையெல்லாங் கேட்ட வருணமூர்த்தி கூறுகின்றார்:— ஓ அரசனே! ஆஹா உன்னுடைய சமார்த்தியத்தை நான் என்ன

வென்று சொல்லுவேன். நான் வரும்போதெல்லாம் அந்தக்காலத் துக்கேற்றவாறு தகுந்த நியாயங்காட்டி ஒவ்வொரு வார்த்தையி னல் என்னை யேமாற்றி வஞ்சித்து வருகின்றாய்; இது உனக்கழ காகுமா? நல்லது, உன் வார்த்தைப்படியே சமாவர்த்தன முடிந்த பின்னர் வேறொன்றுஞ் சொல்லாமல் எனது யாகத்தைமுடித்து விடு, இப்போது நான் போய்வருகிறேனென்று தமதிடம் போயினர். அரசன்சந்தோஷமுற்று மேல்நடத்தவேண்டிய காரியங்களை நடத்தினன்.

அரசனது குமாரன் வருணமூர்த்தி வந்ததையும் அவனுக்குத் தந்தை நடுங்கியதையும் அவன் யாகஞ்செய்ய வற்புறுத்தியதையும் பார்த்து, நம்மை யாகஞ்செய்வதென்று சொன்னாரே; நாம்யாகத் திலோ சாகவேண்டும்; ஆஹா! கன்றுயிருந்தது, அந்தோ! அந்தோ!! என்றேங்கியிருக்கும்போது அரசனும் அவனெண்ணிய குறிப்புண ர்ந்து தூக்கித்தனன். மகன் அதனைக்கண்டு தந்தையை யாதொன் றும் வினவாமலே அயலாரிடத்து எவ்வாச்சங்கதிகளையும் நன்றாய தி்ந்து இனி நானிங்கிருப்பேனையின் என்தந்தை என்னை இவ்வுலகில் வாழவிடார்; வருணனும் என்னை விடப்போகிறதில்லை; ஆகலான் நானேடிப் பிழைப்பதே யுசிதமென நிச்சயித்து மந்திரிகுமாரர்க ளோடும் ஆலோசித்துத் தானெண்ணியபடியே நாட்டைவிட்டுக் காட்டையடைந்தான்.

அச்செய்தியை அரசனறிந்து கவலைமற்கொண்ட மனத்தி னைய் அவனைக் காட்டிலே தேடிவரும்படி அநேகதூதரை யனுப்பி யிருந்தபோது வருணதேவர் அரசனிடம்வந்து ஓ அரசனே; இது வ ரையில் சொல்லிவந்த தெல்லாம் முடிந்துவிட்டது, இனி ஒன்றுஞ் சொல்வதற்கிடனில்லை. சொன்னலும் யான் கேளேன், இப்போது யாகஞ்செய்யத் தடையென்னவென்று கேட்க அரசன் முன்போல யோசனைசெய்வது ஒன்றுமின்றி அவரடிபணிந்து கூறுகின்றான்:—

ஓ தேவனே! நான் என்னசெய்வேன், என்மகன் நீரடிக்கடி வந்துபோவதற்குக் காரணத்தை யறிந்துகொண்டு உமக்குப் பயந்து ஓடிப்போய் விட்டான். அவன் போனவிட மிதுவெனத் தெரிய வில்லை. நான் தூதர்களை மலைகளிலும் புதர்களிலும் முனிவர்க ளுடைய ஆச்சிரமங்களிலும் அனுப்பியும் அவர்கள் அவனை எங் கேனுங் கண்டுபிடித்தாரில்லை. ஓ பகவானே! நானென்ன செய் வேன். உமக்கு இந்தப் பிள்ளையை விதியுக்தமாய்க் கொடுக்க

வெண்ணியே எல்லாச்சடங்கும் மிகச்சிறப்பாகநடத்தினேன் நடத்தியும் பயனற்றவனுயினே னென்று அவர் மெச்சும்படியாகப் பேசி உள்ளத்துள்ளே புத்திரனைக் காணுத்துயரத்தால் புலம்பிக்கொண்டு நின்றுன். அரசனுடைய வார்த்தையினுல் அடிக்கடி வஞ்சிக்கப்பட்ட வருணன் மிக்க கோபங்கொண்டு ஓ அரசனே! என்னை எதனுல் பலமுறையும் வஞ்சித்து வந்தனையோ அதனுல் மிகவுஞ் சகிக்கக் கூடாத * ஜலோதரமென்கிற வியாதிஉன்னைத்தொடர்ந்து பீடிக்கக் கடவது என்று சபித்துப்போயினன். போகவே அரசனும் அச்சாபத்துக்குள்ளாய் வியாதியினுல் பீடிக்கப்பட்டுத் துக்கித்துக்கொண்டிருந்தனன். (6-ம் 66.)

பதினேந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

உ

ஹ்ரீங்காரரூபாயை நமஃ

பதினேழும் அத்தியாயம்.

0 அரிச்சந்திர கிருதயக்ஞம்



வியாசர் கூறுகின்றுர்:—யாவருடைய கண்ணுக்குங் காணுமல் காட்டில் காலங்கழித்துவந்த லோகிதாசன், தன் தந்தை நோயினுல் வருந்துவதைக் கேள்வியுற்று, மிக்க இரக்கமுள்ளவனுய் அவனைப் பார்க்க வீட்டிற்குப்போக வெண்ணங்கொண்டும், மூன்பயத்தினுல் போவதற்குக் காலெழாமல் ஒருவருடங் கழித்தான். பின்னர் ஒருவாறு அணிந்து புறப்பட்டு வருவதை இந்திரனறிந்து அவனை வஞ்சிக்கவெண்ணி பிராமணனுய் அவன் முன்றேன்றிக் கூறுகின்றுன்:—ஓ இராஜபுத்திர! நீ நீதி அறியாதவன்; உன்னைப்போலு மூடனெருவனுண்டோ? கொழுந்துவிட்டெரியும் அக்னியிலுன்னை ஓமஞ்செய்ய எதிர்பார்த்திருக்கும் உன்தந்தையினிடம்போக நீஎண்ணங்கொண்டீ

* உதரத்தில் நீரடைந்து வெளிவராது தன்பப்படுத்தல்.

0 அரிச்சந்திரன் யாகஞ்செய்தல்.

னையே; நீ முன் இக்கானகத்துக்கு ஓடிவந்தது அதற்கஞ்சியேயன்றே? இப்போதனை மறந்தனைபோலும்! உலகில் உயிர்களெல்லாம் தத்தம் ஆன்மாவினிடத்தில் அதிகப் பிரியமுடையன. புத்திரதாரதனதிகளிடத்தில் அன்பு பாராட்டுவதும் தன் ஆன்மசுகத்தை முன்னிட்டன்றி வேறில்லை ஆகவே உன் தந்தை தன்னை இரக்ஷித்துக் கொள்ளவோ உன்னை இரக்ஷிக்கவோ இப்போ தெண்ணுவான்? நான் உண்மையைச் சொல்லுகின்றேன். அதனை யோசிப்பாயாக. நீ போனவுடன் உன்னைப் பசுவாக நிறுத்தி யாகத்தைநடத்தி உன் தந்தை தன் பிணியைப் போக்கிக்கொள்ளுவான். ஆகலான் நீ அவனிடத்துச் செல்லாதொழிக. அவனிறந்தபின்பு அரசாளப் போவாயென்று சொல்லினன். சொல்லவும் அவன் சொல்லால் இராஜகுமாரன் மயங்கிப் போவதற்கஞ்சி மீண்டும் ஒருவருடங் காட்டிலே காலங்கழித்து வந்தான். பின்னுந் தன்தந்தை ஜலோதரவியாதியினால் மிகவுந் துக்கப்படுகிறதைக் கேள்வியுற்று மனம்புழுங்கிப் பிதாவைப் பார்ப்பதனால் நானிறந்தாலும்இறக்கின்றேனென்று துணிந்துபுறப்பட்டுப்போகும் போது அவ்வழியில் இந்திரன் முன்போல் வந்து முன்னையினும் அதிக இன்னுரையால் மயக்கி அவனைப்போகாதபடி தடைசெய்ய அந்த லோகிதாசன் போகாதுநின்றனன். அரிச்சந்திரன் மோயினால் மிகவும் வருந்தி வசிட்டமுனிவரை வணங்கித் தன் ரோகநிவர்த்திக் கோருபாயம் சொல்லும்படி வேண்டிக்கொள்ள அவர் ஓ அரசனே! ஒரு புத்திரனை கிரயத்துக்குவாங்கி நீ யாகஞ்செய்து விடுவையாயின் உனது வியாதி ஒழிந்துவிடுமென் றுரைத்தனர். அதுகேட்ட அரசன் பிள்ளையைவிற்பவர்யாவர்? யாவராவது விற்பாராயினுமெனக்கு அவன் புத்திரனைவை வென்றுகேட்க, அவர் வேதமறிந்த பிராமணர்கள் *புத்திரர்கள் பத்துவிதப்படுவாரென்றுசொல்லுகின்றனரென்

* 1. அவரசன் (விதிப்படி விவாகஞ்செய்து கொண்டவளுக்குப் பிறந்தவன். 2. தத்தன் (ஸ்வீகாரபுத்திரன்.) 3. க்ரீதன் (கிரயத்துக்கு வாங்கப்பட்டவன்.) 4. க்ருத்ருமன் (அபிமானபுத்திரன்.) 5. அதம்பாவரன் (ஒரேபிரவரத்திற் சேர்ந்தவர்களுக்குப் பிறந்தவன்.) 6. கூடோற்பன்னன் (கள்ளப் புணர்ச்சியாற் பிறந்தவன்.) 7. அபவித்தன். (தப்புபீஜத்திற்குப் (பிறந்தவன்.) 8. பௌனர்ப்பவன் (புருஷனிறந்தபின் மீண்டும் விவாகஞ் செய்துகொண்டவளுக்குப் பிறந்தவன்.) 9. கானீனன் (கல்யாணத்துக்கு முன்பிறந்தவன்.) தாசிப்ரபவன் (வேலைக்காரிக்குப் பிறந்தவன்.)

றும், தேசத்தில் தேடிப்பார்த்தால் பொருளாசையுடைய பிராமண னெவனுவது பிள்ளையைக் கொடுத்துவிடுவா னென்றும், அவனைப் புத்திரனாக வாங்கி யாகஞ்செய்தால் வருணதேவன் மகிழ்ச்சியடை ந்து உடற்பிணியையகற்றுவானென்றுங்கூறினர். அரசன் அவர்கூறிய வாறே மந்திரிகளை யனுப்ப அவர்களும் பிள்ளை விற்போர் யாவரென எங்குந் தேடிவரும்போது அஜிகர்த்தனென்னும் ஓர் பிராமணன் மிக்க தரித்திரனாய் சுனப்புச்சன் சுனஸ்சேபன் சுனோலாங்கூல னென்னு மூன்று புத்திரர்களோ டிருக்கக்கண்டு, ஓ அந்தணரே ! நீர் அரசன்செய்யும் யாகத்துக்கு ஒருபிள்ளையைக் கொடுப்பீராயின் நாங்கள் நூறுபசுவைக் கொடுக்கின்றோ மென்றனர். அதைக்கேட்டு அவன் சிறிது மயங்கிநிற்க அப்போது ஐயா ! அந்தணரே! ஏனிப் படி மயங்குகின்றீர் ? ஒரு பிள்ளைபோனாலும் மற்ற இரண்டு பிள்ளை களும் எங்களால் கொடுக்கப்படும் நூறு பசுக்களுமிருக்கின்றனவே, இதற்கு யோசனை என்னவென்று மந்திரிகள்கேட்க, பார்ப்பான் மிக்க பசிபாதையுள்ளவனுதலால் ஒரு மகனை விற்கமனம் வந்து தன் உத் தரகிரியைக்கு மூத்த பிள்ளையை வைத்துக்கொண்டு இருவரைக் காட்டி இவரில் யாரையேனும் அழைத்துப்போங்களென்று சொல்லி னன். அவ்வந்தணன் மீனையாட்டி எனக்கு மிகுந்த பிரியமுள்ளவள் கனிஷ்டனுகையால் அவனை யான் கொடுக்க விசையேனென்றுள். மந்திரிகள் நடுவனைக் கொடுங்களென்று நூறுபசுக்களைக் கொடுத்து அவனை யழைத்துக்கொண்டுபோக அரசன் கண்டு சந்தோஷித்து அவனை நரபசுவாக யூபஸ்தம்பத்தில் கட்டிவைத்தனன். அந்தப் பிள்ளை ஐயோ! ஐயோ ! வென்றலறி நடுநடுங்கி யழத்தொடங்கி னன். அவன் படும்பாட்டைக்கண்ட புனிவரும் ஏனையரும் மன மிரங்கினர். யாக பசுவைக் கொல்லும் சாமித்திரனும் இவனது பரிபவத்தைக் கண்டு கொலைசெய்வதற்கான கத்தியை வைத்து விட்டு அரசனை நோக்கி அழுதுகொண்டிருக்கிற பிராமணப்பிள் ளையை என் பிழைப்புக்காகக் கொல்லமாட்டேனென்றன். பின்னர் அரசன் யாகசாலையிலிருந்த அந்தணர்களைப் பார்த்து இனி என்ன செய்யத்தக்கதென்று வினவினன். அவன் வினவியதைக் கேட்ட அந்தணர்களும் ஏனையரும் ஓவென்று பெருங்குரலிட்டழத் தொடங் கினர். அதுகண்ட அரசனும் எங்கும் அழுகைக்குரலாயிற்றே யென்று மனங்கலங்கியிருப்ப அச்சிறுவன் தந்தையாகிய அஜிகர்த் தன் ஓ அரசனே! அஞ்சவேண்டாம்; நான்பொருளாசையுடை ப

யவனேயன்றிப் புத்திராபேக்ஷையுடையனன்றுகையால் இன்னும் எனக்கு தூறுபசுவைக் கொடுப்பையாயின் என் மகனுகிய அந்தியாக பசுவை நான் கொன்று விடுகின்றேனென்றுன். அரிச்சந்திரன் அவன் வார்த்தையிலே சந்தோஷித்து அப்படியே யாகட்டுமென்று சொல்ல அந்தப்பாபிஷ்டனுகிய அந்தணன் அது செய்வதற்குப் பிரயத்தனப்பட்டான். அவனைச் சபையிலிருந்தாரெல்லாரும் பார்த்து ஆவென் றலறிக்கூறுகின்றார்:-பிள்ளையைக்கொல்லத் துணிந்தானே! இவன் மானுடனு? பேயா? மஹா பாபிஷ்டன்; குரூரமான கர்ம முள்ளவன். பிராமண வேடத்தைமாத்திரம் தரித்துக்கொண்டிருக்கின்றுன். எவன்றுன் தன் பிள்ளையைக் கொல்வதற்குத் துணிவான். இவன் சண்டாளனேயாகும். சீசீ! பாபகர்மத்தைச் செய்ய இசைகின்றுனே. ஐயோ! பிள்ளையைக்கொன்று தவத்தையடைந்து என்ன சுகத்தை யடையப்போகின்றுன். தன் அங்கத்தினின்றும் தன் தன் ஆத்மாவே பிள்ளையாக மாறிப் பிறக்கின்றதல்லவா? தன் மகனைக்கொல்வோன் தன்னுத்மாவைக் கொல்லுவோனுவனல்லவா? என்று பலரும் பலவண்ணம் பேசிக் கூச்சலிட்டனர்.

அச்சமயம் விசுவாமித்திரர்கூறுகின்றார்:-அரசனிடஞ் சென்று அதிகதயவுடன் ஓ அரசனே! யூபஸ்தம்பத்தில் கட்டுண்டழுகின்ற சுனஸ்சேபனை விட்டுவிடுவையாயின் உனது யாகமும் பூர்த்தியாய் விடும். உனது ரோகமும் நிவர்த்தியாய்விடும். கொலைசெய்யாமையைக் காட்டினுஞ் சிறந்த புண்ணியமும் கொலைசெய்வதைக் காட்டினும் கொடியபாபமுங் கிடையாது, லியாதியாளனுகிய நீ செய்யும் இத்தக்காரியத்தில் அழுகைக்குரலாகுமா? நீயேஎண்ணிப்பார்; தன்னுடலைக் காப்பாற்றிக்கொள்ள அன்னியவுடலை நாசஞ்செய்தல் கூடுமா? தன் தேகத்தை நாடுபவன் பிறவுயிர்களின் தேகசுகத்தை நாடல்வேண்டும். எல்லா உயிர்களிடத்தும் அருளுடையவர்களுக்கு அவ்வருளுக்குக் கேடுவிளைவிக்கும் உயிர்கள் உலகிலொன்றுங் காணப்படவில்லை. உலக கர்த்தாவானபகவான் சர்வப்பிராணிகளும் சந்தோஷிக்க அதைக்கண்டு சந்தோஷிக்கின்றவனுக விருக்கின்றுன். பகவானே விரும்புவோர்க்கு எல்லாவுயிர்களையும் தன்னைப்போலெண்ணுமெண்ண மிருக்கவேண்டும். யாவரும்வாழவிரும்புவரன்றி சாவவிரும்பார். பிராமணப் பிள்ளையைக்கொன்று உனது தேகத்

துக்குச் சுகமுண்டாக்கிக்கொள்ள எண்ணுகின்றனையே. அது போலவே இந்தப் பிள்ளைக்குத் தன் தேகத்தைக் காப்பாற்றிக் கொள்ள வெண்ணமிருக்குமன்றே? ஓ அரசனே! இச்சிறுவன் பூர்வசென்மத்தில் உனக்குச்செய்த துரோகத்தை இப்பொழுது அவன்பால் நீ காட்டுகின்றதாகவெண்ணுகின்றேன். அப்படி இல்லாவிடில் குற்றமில்லாத இவனைக்கொல்ல எண்ணுவையா? துவேஷத்துக்குக் காரணமில்லாத இவனைக்கொல்ல எண்ணுவையா? துவேஷத்துக்குக் காரணமில்லாத ஒருவனை எவன் கொல்லுகின்றானே அவனை, மறுபிறப்பிலே அவனால் கொல்லப்பட்டவன் கொன்று விடுவானென்பது பிரமாணம். உலகில் புத்திரபாக்யத்தின்பொருட்டு அஸ்வமேதாதிகளையும் கங்காயாத்திரைகளையும் செய்கின்றனர். தனத்துக்கு விற்ற இவன் தந்தை மிக்க துஷ்டாத்மா; பெருங் கேடன்; படுபாவி; கொடுந்துரோகி; ஓ அரசனே! நாட்டினடுவிலிருந்து எவன் பாபகாரியத்தைச் செய்கிறானே அவனுடையபாபத்திலாறிலொருபங்கு அரசனைச்சாரும். அதிற் சந்தேகமில்லை. பாபஞ் செய்கிறவனை அரசனாகிய நீ தடுக்கவேண்டும். நீ தடுத்திருந்தால் பிள்ளையை விற்பானே? சூரியவம்சத்தில் திரிசங்கு இராஜபுத்திரனைப்பிறந்து நீ வேறொருவம்சத்தில் வேறொருவருக்குப் பிறந்தவன் போல இக்கொலையை இச்சித்தனையே! என்னுடைய வார்த்தையைக் கேட்டு இம்முனிபுத்திரனை விட்டுவிடு. உனக்குச் சுகமுண்டாகும். உன் தந்தை சாபமேற்றுச் சண்டாளனாய்விட்டான்; அவனை அச் சண்டாள தேகத்தோடே சுவர்க்கம் போகும்படி நான் செய்தேன். நீ அவன்மகன் என்னும் அபிமானத்தினால் இவ்வளவும் உனக்குச் சொல்லுகின்றேன். என்னுடைய வார்த்தையைத்தட்டாமல் மிகவுந் தீனனைபழுகிற இப்பிராமணப் பிள்ளையை விட்டுவிடு. இந்த யாகத்தில் இந்தப் பிள்ளையை விடுவதாகிய யாசகமொன்றை யான் உன்னை யாசிக்கின்றேன். இவனைக் கொடுக்கத் தவறுவையாயின் அதனாலுண்டாகும் தோஷத்தை நீ ஏன் தெரிந்துகொள்ளாமலிருக்கின்றனை. இந்த யாகத்தில் எதை யார் கேட்பினும் கொடுக்கவேண்டுமென்றும் கொடாவிடில் பாபம் சேரிடுமென்றும் கூறுவதில் சந்தேகமுண்டோ வென்றனன். அதனைக்கேட்ட அரசன் முனி

வரே! ஜலோதரபாதையில் மிகவும் வருத்தப்படுகிறயான் இந்தப் பிராமணப் பிள்ளையைவிட்டு யாகத்தை எப்படி முடிப்பேன்; வேறேதேனும் ஒன்றைக்கேளும் தடையின்றித் தருகின்றேன். இந்த யாக காரியத்தை தடைசெய்தல் முறையன்று என்றான். விசுவாமித்திரர் இவன் சொல்லிலே கோபமும் பிராமணப் பிள்ளையினிடத்தில் தக்கமுமுடையவராயினர். (6 - ம் 59)

பதினைந்தும் அத்தியாயம் முற்றிற்று.

ஹரீங்காரநிலயாயைநமஃ

பதினேழாம் அத்தியாயம்.

விசுவாமித்திர வசிட்ட சம்வாதம்.

வியாசர் கூறுகின்றார்:—அருட்கடலாகிய விசுவாமித்திரர் பூர்ஸ்தம்பத்தில் கட்டுண்டு மரணத்தையெண்ணிப் புலம்புகின்ற சிறுவனருகிற்சென்று, ஓ குழந்தாய்! உனக்குவருணமந்திரத்தை கானுபதேசிக்கின்றேன்; அதை என்சொற்படி ஜபித்துக்கொண்டேயிருப்பையாயின் உனக்கிப்போதுண்டாயிருக்கும் துக்கமீங்கிச் சுகமுண்டாகுமென்றார். அவன் அப்படியே அவ்வுபதேசத்தை அவரிடம் பெற்று அழுவதை விட்டு மானசீகமாக ஜபித்துவர வருணபகவான் சந்துஷ்டராய் அவன் முன்னேதோன்ற அவரை அங்கு வந்திருந்தாரெல்லாருங்கண்டு ஆச்சரியமடைந்து தோத்திரஞ்செய்தனர்.

அரசனும் ஆச்சரியமடைந்தவனாய் சோகத்தினால் வருந்தும் வருத்தத்தோடுஅவன்பாதத்தில்வீழ்ந்து வணங்கிக்கைகூப்பிநின்று ஒசிரேஷ்டமானதேவரே! கருணைக்கடலே! நானொருமஹாபாவி! பெருமூடன்! குற்றவாளி! மிக்கிருபுணன்! என் பிள்ளையினிடத்துள்ள

ஆசையினால் உம்மைப்பரிகாசஞ் செய்துவிட்டேன்; நீர் பொறுமையுள்ள பிரபுவாதலால் பொறுத்துவந்தீர்; நான் செய்தகுற்றம் பொறுக்கத்தக்கதன்று. என் புத்தியெல்லாம் துர்ப்புத்தியே. எதைச்சத்புத்தியாக நினைப்பேன். ஒருபொருளில் விருப்பமுடையவன் அதன் குற்றமறியான், ஆகையால் என்மகனிடத்துவைத்த ஆசையால் உம்மை வஞ்சித்துவிட்டேன். புத்திரனில்லாதவனுக்குச் சொர்க்கமில்லையென்கிற அந்த ஒரு வார்த்தைக்குப்பயந்து உம்மைப் பரிகாசஞ் செய்துவிட்டேன். பிரபுவே! அறிவீனனுடைய பிழையை அறிவுடையோர்பொறுத்தல் கடனன்றே? ஓ பகவானே! நான் துக்கமும் நோயுந் தொடர்ந்துள்ளேன். என் பிள்ளையும் என்னை வஞ்சித்துப் போயினன் அவன்போனவிடம் புலப்படவில்லை. ஓ கருணைக்கடலே! என்மகன் மரணத்துக்கஞ்சி வஞ்சித்துப்போன பின்னர் ஓருவனைத் தனத்துக்குவாங்கி தேவரீருக்குச் சந்தோஷமுண்டாகும் வண்ணம் யாகத்தை ஆரம்பித்தேன். நீரும் பிரசன்னமாயினீர் என் துக்கமும் நோயும் நீங்கிற்றென்றனன். வருண பகவான், ஓ அரசனே! புலம்பிக் கொண்டே என்னை மனதில் புகழ்ந்து தியானிக்கின்ற இந்தப் பிள்ளையை யூபஸ்தம்பத்தினின்றும் அவிழ்த்துவிடு. இந்த யாகம் பூர்த்தியாய் விட்டது என்றுசொல்லிப் பின்னர்ச் சபையிலிருக்கும் யாவரும் பார்த்துக்கொண்டிருக்கத் தானே அப்பிள்ளையை அவிழ்த்துவிட்டனன். சபையாரெல்லாம் அதுகண்டு சந்தோஷப்பெருக்கினால் ஜயஜயவென்று ஆனந்தக்கூச்சலிட்டனர். அரசனும் மிக்க சந்தோஷமடைந்து யாகத்தைப் பூர்த்திசெய்தனன். யாகப்பசுவாய் வந்து அலறிய சுனஸ்சேபனும் சந்துஷ்டனாகிச் சபையாரை நோக்கிக் கைகூப்பிநின்று பெரியோர்களே! உங்களிடத்தில் நானொரு விண்ணப்பஞ்செய்கின்றேன், அதற்குரிய தருமத்தை வேதசாஸ்திரத்துக்கு விரோதமில்லாத உண்மையை நீங்கள் சொல்லவேண்டுகின்றேன். இப்போது நான் யாருடையபிள்ளை? எனக்குமுதன்மையான தந்தை யார்? அதனை உண்மையாய்ச் சொல்லுவீர்களாயின் நானவரைச் சரணடைந்து வாழுவிருக்கின்றேன் என்றனன்.

அதுகேட்ட சபையினருட் சிலர் இவன் அஜிகர்த்தன் புதல்வன் தானே இவனிப்போது வேறு எவனுக்கு மகனுவான் என்றும், சிலர் அஜிகர்த்தனுக்கும்அவன் மனையாட்டிக்கும்பிறந்து அவர்களால்இது

காறும் காக்கப்பட்டு வந்தானதலால் இவன்மற்றொருவனுக்கு எவ்வண்ணம் புத்திரனுவானென்றுங் கூறினர். அப்போதுவாமதேவரென்பவர் கூறுகின்றார்:—உங்களாற் சொல்லப்பட்டவன் இந்தப் பிள்ளையைத்திரவியவாசையினல் விற்றவனுயிருக்க இவனுக்கு எப்படி அவன் தந்தை யாவான்? தனத்தைக்கொடுத்துப்பெற்ற அரசனே தந்தையாவானென்றார். சிலர், அன்னதானஞ் செய்தவன், வித்யாதானஞ்செய்தவன், பொருளைக்கொடுத்தவன், பயத்தை நீக்கினவன், பெற்றவன் இவ்வைவரும் தந்தையாவரென்று பெரியோர் சொல்லுகின்றாராதலால் இவனைப் பயத்தினின்றும் நீக்கிய வருணபகவானே இவன் தந்தையாவனென்றார். இவ்வாறு யாவரும் சந்தேகத்தோடு கூறிவந்தனரேயன்றி இவன்றன் இவனுக்குத் தந்தையாவரென்று திடமாகக் கூறினரில்லை.

அத்தருணத்தில் எல்லாமறிந்தவரான வசிட்ட முனிவர் வேதசம்மதமாகிய நிச்சயத்தைச் சொல்லுகின்றேன் கேண்மின்கள் என்று கூறுகின்றார்:—மகனே நான் பெறும்பொருளாக வெண்ணி அவனிடத்தில் இரக்கங்கொண்டவனே தந்தையாவன். இப்பொழுது அஜிகர்த்தன் இச்சுனச்சேபனிடத்தில் ஆசையைவிட்டு தனத்தில் ஆசைவைத்து அவனை விற்றான்; அதலேயுமன்றி கத்தியினல் வெட்டவந்துமினந்தான். இவ்விருவருக்கும் சம்பந்தமாயிருக்கவேண்டிய அன்பு எங்கிருக்கின்றது? ஆகலிவ அஜிகர்த்தன் இவனுக்குத் தந்தையாகான். கிரயஞ்செய்துகொண்ட அரசன் தந்தையாவதேதெனின், அவனும் இவன்பாலிரக்கமின்றி யூபஸ்தம்பத்திற் கட்டினுகையால் தந்தையாகான். வருணபகவானேனும் வெனின், இவன் தோத்திரஞ்செய்ததனல் சந்தோஷமடைந்து பாசத்தைஅவிழ்த்துவிட்டனரேயன்றி இரக்கத்தினலன்றுகலின் அவருமாகார். அன்றியும் உலகத்தில் எவரெவர் எவரெவரை மந்திரங்களால் தோத்திரஞ் செய்கின்றனரோ அவரவருக்கு அவரவர் மகிழ்ந்தவராய் அவரவர் விரும்புவனவாகிய தனம் பிராணன் பசுக்கள் அரசாகூடி மோகூடம் இன்னும் வேண்டியவைகளே வேண்டியவாறு கொடுக்கின்றனர். அதுபோல் இந்த வருணபகவானும் செய்தவரென்று அறிமின். வேறுயாவரெனின், விசுவாமித்திர முனிவரொருவரே இவனுக்குத் தந்தையாவார். ஓ சபையோர்களே! அஜிகர்த்தன் பொருளே நாடினன். அரசன் தன் நோயை நாடினன். வருணபகவான் மந்திரத்தை

நாடினன். விசுவாமித்திரரோ தற்பிரயோசனங்கருதாது அவனது துயரத்தைக்கண்டு மனமிரங்கி மந்திரோபதேசஞ் செய்து அவனைச் சங்கடத்தினின்று நீக்கினாதலின் அவருக்கே இவன் பிள்ளையாகத் தக்கவனென்றார். சபையாரனைவரும் இதுவே சரி சரியென்று ஒப்புக்கொண்டனர். அப்பொழுது விசுவாமித்திரர் அந்தப் பிள்ளையை வலது கையால் பிடித்துக்கொண்டு ஓ குழந்தாய்! என் கிரகத்துக்கு வருகவென்று மிக்க அன்போடு அழைக்க அந்தச் சுனச்சேபனும் அன்போடு அவர் பின் தொடர்ந்து போயினன். வருணபகவானும் ஏனைய ருத்விக்குகளும் சபையோர்களும் தங்கள் தங்களிடம்போய்ச் சேர்ந்தனர் அரசனும் அரோகிய திட காத்திரனுய் ஆனந்த முற்றுத் தன்னரண்மனைக்குப் போயினன். இச்செய்திகள் யாவும் அரசன் மகனறிந்து பயமற்றவனுய் நகரத்தை நோக்கிவரும்போது தூதர்க ளறிந்து அரசனுக்குத் தெரிவிக்க அரசனுமாவலோடு எதிர் செல்ல குமாரனுங்கண்டு நமஸ்காரஞ்செய்தனன். தந்தை வாரியெடுத்து ஆனந்தக் கண்ணீரால் நனைத்து மார்போடணைத்து உச்சிமோந்து மடியில் வைத்துக்கொண்டு அவன் க்ஷேமங்களை வினவி, ஆனந்த முற்றுத் தானடத்திய நரமேதத்தின் செய்தியை விரிவாயெடுத்துச் சொல்லி அரசாண்டு சின்னாள் கழித்து இராஜசூயயாகஞ் செய்ய வெண்ணி வசிட்டரைப்பிரார்த்தித்து அவரை ஹோதாவாகவைத்து யாகத்தை முடித்து அவரைப்பூஜித்து அதிகச்சிறப்புடன் மரியாதை களைச் செய்தனுப்ப, அவர் இந்திரனுடைய சபைக்குப்போயினர். அப்போது விசுவாமித்திரரும் அங்கு வந்து சேர்ந்தனர். அவர் வசிட்ட முனிவரைப்பார்த்து ஆச்சரியமடைந்து ஓ முனிசிரேஷ்டரே! இச்சிறந்த சன்மானம் உமக்கு யார் செய்தது? உண்மையைச் சொல்லுமென்றார். அவர் என்னுடைய எஜமானனும் மகா பராக் கிரமசாலியுமான அரிச்சந்திரன் மிக்க தக்ஷிணையோடு இராஜசூய யாகமொன்றியற்றினன். அதில் அவன் செய்த சன்மானமாகும் இது வென்று சொல்லி அவனைப் புகழத்தொடங்கினர்:—முனிவரே! அதில் ஹோதாவாக யானிருந்தேன், அவனைப்போலும் அரசன் எவனிருக்கின்றன்? மிகச் சத்தியவாதி, கிலேயான விரதமுள்ளவன், மிகுந்த கொடையாளி, தர்மசீலன், உயிர்களைக் காப்பாற்றுவதில் ஆவலுள்ளவன், அவனுக்கு நிகரான அரசன் முன்னிருந்ததுமில்லை, இனி வரப்போகிறதுமில்லை, தானஞ் செய்கிறதே தன் சுபாவமாக வுள்ளவன்; மஹாசூரன் என்றார். இவ்வகையாய் ஓயாமல் அரிச்சந்தி

ரனைப் புகழ்கின்ற புகழ்ச்சியை விசுவாமித்திர முனிவர் கேட்டு அதிக கோபங்கொண்டு கண் சிவந்து வசிட்டரை நோக்கிக் கூறுகின்றார்:— ஓ முனிபுங்கவரே! யாகஞ்செய்கிறேனென்று வருணபகவானை வஞ்சித்தவனும் கபடத்தில் ஆவலுள்ளவனும் பொய் சொல்லுவதில் சலிப்பில்லாதவனுமான அந்த அரிச்சந்திரனை அளவு கடந்து நீர் பலமுறையும் புகழ்கின்றீரே! நீர் அவனுக்குள்ளனவாகக் கூறிய குணங்களெல்லாம் உண்மையாயின் யான் அவைகளைக் காண்கின்றேன். நான் பிறந்ததுமுதல் சம்பாதித்த தவத்தையும் வேதசாஸ்திரம் படித்த புண்ணியத்தையும் பந்தயமாய் வைக்கிறேன். நீரும் உம்முடைய தவத்தையெல்லாம் பந்தயமாகவையும். அவனை இந்த க்ஷணத்திற்குள்ளே போய் சொல்லுகின்றவனாகவும், தானஞ் செய்யாதவனாகவும், மகா துஷ்டனாகவும் நான் செய்யாமற் போவேனாயின் என்னுடைய பந்தயத்தை யிழந்துவிடுகிறேன். நான் சொல்லியபடி செய்வேனாயின் உம்முடைய புண்ணியத்தை நீரிழந்தவராக வெண்ணிமென்றனர். உடனே அவர் சுவர்க்கலோகத்திலிருந்து மிகுந்த கோபத்துடன் தன் ஆச்சிரமம் வந்து சேர்ந்தனர். (6 - ம் 59.)

17 - ம் அத்தியாயம் முற்றிற்று.

ஹரீம்பதப்ரியாயை நம:

பதினேட்டாம் அத்தியாயம்.

* அரிச்சந்திரவ்ய ஆரண்ய கமனம்.

வியாசர் கூறுகின்றார்:— ஓ ஜனமேஜயனே! ஓர் காலத்தில் அரிச்சந்திரன் வேட்டையாடுதற்குக் காட்டுக்குப் போம்போது அவ்விடத்தில் அழகிய கண்ணும் மிக்க சுந்தரமுமுடைய ஓர் பெண்

* அரிச்சந்திரன் ஆரண்யம் அடைதல்,

அழுது கொண்டிருக்கக்கண்டு வினவுகின்றான் :— ஓ பெண்ணே ! நீ யார் ? ஏனிங்கு தனியே யழுகின்றனை ? உன்னைத் துன்பப்படுத்தினோர் யாவர் ? உனக்கு என்ன துக்கம் வந்தது ? பயங்கரமான இந்தக்கானகத்தில் யாரால் விடப்பட்டனை ? உன் கணவன் யார் ? தந்தையார் ? எனது நகரத்தில் ஓர் அரக்கனும் பரஸ்திரீயைத் துன்பப்படுத்தான். வேறு பாவிகளுங்கிடையா. எவனுன்னைத் துன்பப்படுத்தினனோ அவனை விரைவாகக் கூறுவையாயின் நானவனைத் தண்டனை செய்கிறேன். உன் துக்கத்தைச் சொல்லிவிட்டு நீ வருந்துதலொழிந்து என் நகரத்தில் வசிப்பாயாக என்றான். அந்தப் பெண் தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே அரிச்சந்திரனை நோக்கி, ஓ அரசனே ! மஹாருஷியான விசுவாமித்திர என்னைக் குறித்துக் கொடுமையான தபஞ்செய்கிறார், அதுதான் நான் கண்ணீர் விடுதற்குக் காரணமென்ன, அரசன் ஓ நம்காய் ! நீ சுகமாயிரு, இனி உனக்குத் துக்கம் நேரிடாது. உனக்குத் துன்பத்தையுண்டு பண்ணுகின்ற அந்த முனிவரியற்றுந்தவத்தை நான் தடைசெய்கிறேன், நீ கவலையற்றிருப்பாயாக வென்றுகூறி, முனிவரிடம்போய் அவரைக்கண்டு வணங்கி, ஓ பிரபுவே ! யாது கருதி ஸ்திரீயிடைய தேகத்தைத் தபசினால் வதத்துகின்றீர் ? உண்மையைச் சொல்லுவீராயின் உமது கோரிக்கை யாதோ அதனை யான் நிறைவேற்றுகிறேன், தவஞ்செய்வதை விடும், எழுந்திரும், எழுந்திரும், எல்லாமறிந்த முனிவரே ! உலகிற்குத் துன்பத்தை விளைவிப்பனவும் நடுங்குதற்கேதுவான பயங்கரத்தை விளைவிப்பனவுமான தவத்தை எனது நகரத்தில் ஒருவருஞ்செய்தல் கூடாதென்பது நீர் அறியீரோவென்று அதை மறுத்து நகரம்போயினன். முனிவர் மகாகோபங்கொண்டு அப்போதங்கு வசிஷ்டரிடத்தில் நடந்த சம்வாதத்தையும், இப்போது இங்கு தவத்தைத் தடைசெய்ததையு மெண்ணி நியாய விரோதமாயும் பயங்கரமாயுமுள்ள சில காரியங்களை உத்தேசித்து அவற்றை நடத்தத்துணிந்து ஓரக்கனைப் பன்றியுருவாகத் தவத்தாற்படைத்து அரசன்பால் ஏவினர். பெருத்த சரீரமுள்ள அந்தவராகம் யாவர்க்கும் பயங்கரமுண்டாகக் கொக்கரித்துக் கொண்டு அரசனுடைய தோட்டத்திட் புகுந்து அங்குள்ள தோட்டக்காரர் மருண்டோடும்படிச்செய்து மாலதிக்கொடிகளையும் இடப்பமரங்களையும் காட்டு மல்லிகைச்செடிகளையும் சண்பகம் தாழை முத

லிய மரங்களையும் மல்லிகைக் கொடியேறிய மரங்களையும் அலரிச் செடிகளையும் இன்னும் மென்மையான புஷ்பச்செடிகளையும் முசு குந்தம் அசோகம் மகிழம் திலகமுதலிய மரங்களையும் தன் கொம்பு களாற்றேண்டிப் பூமியைக்குடைந்து வேருடன் களைந்துவிட்டது. கொடி வகைகளைக் கறித்துவிட்டது, இந்தக் கோலாகலத்தைக்கண்ட தோட்டக்காரர்கள் ஆயுதங்களைக் கைக்கொண்டும் அதனைக் கொல் வதற்கு முடியாமலோட, அவர்களோடு பூமாலை தொடுக்கின்றவரும் பயந்து கூக்குரலிட்டோடிப் பயகம்பனத்துடன் அபயம் அபய மென்று அரசனைச் சரணடைந்தனர், அவர்களை அரசன் பார்த்து வினவுகின்றான்:— உங்கட்கு எதனாலிவ்விடுக்க ணுண்டாயிற்று? எவர் இத்துன்பஞ் செய்தவர்? அவர்கள் இன்னரென்று சொல்லுவீ ராயின் ஒரே பாணத்தினால் அவர்களை நான் கொன்று விடுகிறேன். எவன் எனக்குச் சத்துருவாய் இத்துன்பத்தைச் செய்தானோ? பாப புத்தியுள்ள அவன் தேவனா? எவ்விதமான உருவமுள்ளவன்? எவ் வளவு பலத்தோடு கூடினவன்? எங்கிருக்கின்றான்? சொல்வீராயின் நானவனைக் கூர்மையான வாளினால் அறுத்து விடுகிறேனென்று சொல்லினன். அவர்கள் ஓ அரசனே! தன்பஞ்செய்தவர் தேவருமல் லர், அசுரருமல்லர், யக்ஷருமல்லர், கின்னருமல்லர், பெருத்த சரீரமுள்ள ஒரு பன்றியாகும். அது உம்முடைய தோட்டத்தில் மென்மையான புஷ்பச்செடிகளையும் கொடிவகைகளையும் தன்கொம் பினால் வேரோடுந் தோண்டிவிட்டது. நாங்கள் அதனைப் பாணங்க ளாலும் தடிகளாலும் அடிக்க அது சிறிதும் பயப்படாமல் எங் களையே துரத்திக்கொண்டு வருகின்றதென்றார். அரசன் அதனைக் கேட்டுக் குதிரைமீதேறி யானை முதலிய சதுரங்க சேனைகளோடும் அத்தோட்டத்துட்போய் அங்கு கொறுகொறென்று சப்தித்துக்கொ ண்டிருக்கும் பன்றியையும் அதனாலழிந்து கிடக்கின்ற தோட்டத்தை யுங்கண்டு கோபமேலிட்டவனாய்ப் பன்றியைக்கொல்வதற்கு வில்லை த்து நாணேற்றி அம்பைத்தொடுத்து வேகமாயோடினன். இவன்வரு கையைக்கண்ட அப்பன்றி சிறிதுமஞ்சாது பயங்கரமுண்டாகும்படி சப்தித்துக்கொண்டு எதிரிலோடிவர, அரசனொரு அம்பினைவிட்டான் அப்பன்றி அதற்குத் தப்பித்துக்கொண்டு அரசனைத் தாண்டியே ஓ

டிற்று. அரசன் மற்றொரு பாணத்தைவிட்டான். அதற்குந் தப்பித்துக் கொண்டு சிறிதுதூரம் கண்ணுக்குப் புலப்பட்டும் சிறிதுதூரம் புலப் படாமலும் பலபல விதமாய்க் கூச்சலிட்டுக்கொண்டேயடிற்று. அரச னும் அதனை விடாமற் பின்றொடர்ந்தான். தொடரவே, அது அங்கு மிக்குமோடிச் சேனைகளைக்கடந்து மானுடசஞ்சாரமற்ற வேறொரு காட்டுக்குப்போயிற்று. அரசனும் யாவரையும் விட்டு அதனை விடா மல் ஓடினன். அப்போது வச்சிப்போதாகவே குதிரையோடுபசிதாக மூற்றிருந்தனன். பன்றியுமதுகண்டு எதிர்வந்து நின்றது. அரசன் அதன் வரலையறியாது அதிகசோகமுடையவனுய் நாம் வழிதப்பி வந்து விட்டோமே, இது பயங்கரமான காடாக விருக்கின்றதே, என் செய்வது? எங்குப்போவது? ஒருவருஞ் சகாயமில்லையே என்று சிந் திக்கும்போது நிர்மலமான ஓர் நதியைக்கண்டு உடனே குதிரைக் குத்தண்ணீர்காட்டித் தானுமருந்திச்சுகமுற்று நகரத்திற்குச் செல் லும் வழியறியாது தியங்குஞ்சமயத்தில் விசுவாமித்திரர் விருத்தப் பிராமண வேடங்கொண்டு எதிரே நின்றனர். அவரைக்கண்டு அரசன் மகிழ்ந்து நமஸ்கரித்தனன். அவர் உனக்குச் சுகமுண்டாகுக வென் ருசி புகன்று; நீ மானுட சஞ்சாரமில்லாதகாட்டில் ஒருவனுயாது கருதிவந்தனை? வந்த நீ ஏன் கலங்குகின்றனை? மனதைத்திடப் படுத்திக்கொண்டு என்னிடம் வந்த வரலாற்றினைக்கூறுவா யென்ற னர். அரசன் கூறுகின்றன்:— ஒ முனிவரே! என்னுடைய நந்த வனத்தில் பயங்கரமான ஓர் பன்றி வந்து மென்மையான புஷ்பச் செடி முதலானவற்றைத் தோண்டி விட்டது. நானதனைக்கொல்ல ஆயுதபாணியாய்ச் சேனைகளுடன் பட்டணத்தை விட்டுப் பறப்பட் டுப் பின்றொடர்ந்தேன். அந்த மாயமுள்ள பன்றி என் கண்ணுக் குத்தோன்றுமல் மறைந்துபோயிற்று. சேனைகளெல்லாம் எங்கு நின்றனவோ அறியேன். யான் பசிதாகத்துடன் இவ்விடஞ் சேர்ந் தேன். இப்போது நகர்க்குச்செல்ல வழியறியாது மயங்குகின்றேன். என்பாக்ய வசத்தினுல் இந்தக்காட்டில் அகப்பட்ட நீர் வழிகாட்டு வீராஞல் நகரம்போய்ச் சேருவேன். நான் பிரசித்தியுள்ள அயோத் தியாபுரிக்கு அரசனுயுள்ள அரிச்சந்திரன். இராஜசூய யாகஞ்செய்

தவன். அவரவர் வேண்டுகோளின்படி வேண்டியவற்றைக் கொடுக்கின்றவன். ஓ பிராமண சிரேஷ்டரே! உமக்கு யாகம்செய்வதற்குத் தனம் வேண்டுமாயின் அயோத்திக்குவாரும்; போதுமான தனம் கொடுப்பேனென்றனன். (சு-ம் 58.)

பதினெட்டாம் அத்தியாயம்

முற்றிற்று.

ஓ

ஹ்ரீங்காரபீஜாயை நம:

பத்தொன்பதாம் அத்தியாயம்.

* விசுவாமித்திர ஹரிச்சந்திர சம்வாதம்.

வியாசர்கூறுகின்றார்:— ஓ ஜனமேஜயனே! அரிச்சந்திரனுடைய வார்த்தையை விசுவாமித்திரர் கேட்டுச் சிரித்து கூறுகின்றார்:—ஓ அரசனே! பாபத்தைப்போக்கிப் பரிசுத்தஞ்செய்யவல்ல இப்புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பித்ருக்களுக்குத் தர்ப்பணஞ் செய்ய இப்போது நல்லசுபகாலமாக விருத்தலால் உன் சக்திக் கேற்றவண்ணம் ஏதேனும் தானமுஞ்செய்; எவனொருவன் மஹா புண்ணிய தீர்த்தத்தைக்கண்டு ஸ்நானஞ்செய்யாது போவானே அவன் ஆத்மகாதகனுவானென்று பிரம்ஹாவே சொல்லியிருக்கின்றாதலால் என்சொற்படியே யாவுஞ்செய்; எனக்குச்சந்தோஷம் வரும்; நீ போகவழியுங்காண்பித்து நான் உனக்குத்துணையாய் வந்து உன்னை நகரத்துக்குக்கொண்டுபோய் விடுகிறேனென்றுரைத்தனர். அவ்வுரையை நம்பி அவர் வசப்பட்டுப்பித்தடைந்த அரசன் தான் ஏறிவந்த குதிரையை ஒரு மரத்திற்கட்டிவிட்டு விதிமுறையே ஸ்நான தானாதிகளெல்லாம் நடத்தி விசுவாமித்திரரை நோக்கிக் கூறுகின்றான். ஓ ஸ்வாமி! நீர் வேண்டுமென விரும்பும் எதையும் நான்

* விசுவாமித்திரருக்கும் அரிச்சந்திரனுக்கும் சம்வாதம்.

கொடுக்க விருக்கின்றேன்; உனக்கு இரதகஜதுரகபதாதிகள் வேண்டுமா? பசுக்கள்வேண்டுமா? பூமிவேண்டுமா? தனதான்யாதிகள் வேண்டுமா? எதுவேண்டுமோ அதனை இப்போதேகேளும்; இராஜசூயயாகத்தில் முனிவர்கள் கேட்கும் எந்தப்பொருளையும் தவறாது கொடுக்கச்சங்கற்பஞ் செய்துகொண்டேன். அவ்வாறே இப்போது தருகிறேன். நீர் விரும்புகிற எதையுங்கேளு மென்றான்.

விசுவாமித்திரர் கூறுகின்றார்:— ஓ அரசனே! உனது கீர்த்தியே பூலோகத்தில் பிரசித்தி என்றும், தானஞ்செய்வதில் உனக்கு நிகராவாரிலரென்றும் சூரிய வம்சத்து அரசருள்ளே பெருந்தானஞ் செய்கின்றவன் திரிசங்கு புத்திரனாகிய நீயே என்றும் உன்னைப்போலும் இதுவரையிலும் பிறந்தது மில்லை இனிப்பிறக்கப் போகிறதுமில்லையென்றும், வசிட்டரால் முன்னமே கேள்வியுற்றிருக்கின்றேன். இப்போது நீ கூறுவது மதற்கேற்கத்தானிருக்கின்றது. உன்னிடத்து நான் வேண்டுவது யாதுளது. ஆயினும் ஓ அரசனே! என் மகனுக்கு விவாகஞ்செய்யுங்காலம் வந்திருக்கிறபடியால் அதற்கு வேண்டிய தனமாத்திரம் கொடுப்பாயென்றார். அரசன் ஓ பிராமண சிரேஷ்டரே! விவாகத்துக்கு ஆரம்பஞ்செய்யும், உனக்கு எவ்வளவு தனம் வேண்டுமோ அவ்வளவுந் தருகின்றேன், இது நிச்சயமென்று சொல்லியவளவில் வஞ்சகமுனிவர் தனது தவமகிமையைக்கொண்டு கந்தருவமாயையினால் ஓர் பிள்ளையையும் கன்னிகையையும் அரசனுக்குக்காட்டி, இப்பிள்ளை என்ன அழகாயிருக்கின்றான், இக்கன்னிகைக்கு வயது பத்து, இப்போது இவ்விருவர்களுக்குத்தான் கலியாணமாகவேண்டும், இவர்களுக்கு விவாகஞ்செய் விப்பதினாலுண்டாகும் புண்ணியம் இராஜசூயயாகத்தாலுண்டாகும் புண்ணியத்தினும் மிக்கதாமென்றார். அரசன் அவ்வார்த்தையைக்கேட்டு முனிவர் மாயையினால் மோகமடைந்து அப்படியே செய்கின்றேனென்று பிரதிக்ஞைசெய்து மௌனியாய் நிற்க; முனிவர் அரசனையழைத்துக்கொண்டு போய்ப்பட்டணத்திற் சேர்த்துவிட்டு தன்னாச்சிரமம் வந்துசேர்ந்தார். சிலநாள் கழிந்தபின்னர் அவர்களுக்கு விவாகத்தைமூடித்துவிட்டு அரசனை நோக்கி இப்போது கலியாணமேடையிலிருக்கும் வரனுக்கு உனக்குத்தோன்றுந் தானமொன்றைச் செய்யுமென்றான். அரசன் கூறுகின்றான்:— ஓ பிராமணரே! உமக்கிஷ்டம்

எதுவோ அதைச்சொல்லும் கொடுக்கிறேன். அது இந்தச்சமயத்தில் கொடுக்கத்தகாத பொருளாயிருந்தாலும் கொடுக்கிறேன். இப்போது நான் கீர்த்தியடையும் எண்ணமே யுடையேன். எவன் பரலோக சுகத்தைக்கொடுக்குப்படியான கீர்த்தியைச் சம்பாதிக்காமலிருக்கின்றானே அவன் மிக்க சம்பத்துடையவனாயினும் அவனுடையவாழ்க்கை வீணுகுமன்றே? என்றனன். முனிவர், ஓ பிரபுவே! நீ விரும்பியது கீர்த்தியேயாமாயின் பரிசுத்தமான கலியாணமேடையில் தேர், யானை, குதிரை, இரத்னம் முதலானவைகளால் நிறைந்துள்ள இராஜ்யத்தைப் பரிவாரங்களுடன் வரனுக்குத்தானஞ்செய்வாய் அது எனக்குச் சந்தோஷ மென்றார். அப்படியே கொடுத்தேன் கொடுத்தேனென்று விசுவாமித்திரனுடைய மாயையினால் மயங்கிய அரசன் சிறிதும் ஆலோசனையின்றிச்சொன்னன். அம் முனிவரும் தான் பெற்றுக்கொண்டதாக வொப்புக்கொண்டனர். மறுபடியும் தனக்குத்தகுந்த தக்ஷிணை தரவேண்டுமென்றும், தக்ஷிணையின்றிச் செய்யுந்தானம் பயனற்றதென்று கூறியிருக்கின்றபடியால் தானபலனை யபேக்ஷித்தவன் தானத்துக்குத்தக்க தக்ஷிணை தரவேண்டுமென்று முனிவர்கூறவும் அரசன்கேட்டு ஆச்சரியமடைந்து அந்ததக்ஷிணை எவ்வளவோ அதை நீரே சொல்லுவீராயின் நான் அதனைத்தடையின்றிக் கொடுக்கிறேனென்றார். முனிவர் இரண்டரைப் பாரம் பொன் கொடுக்கவேண்டுமென்றார். அதற்கரசன் அப்படியே கொடுப்பதாக வொப்புக்கொண்டு, பின்னந் தனதிலுள்ள நன்மை தீமைகளாகிய சாதகபாதகங்களைச்சிறிது சிந்தித்துத்திகைத்து நின்றான். நிற்கும்போது சேனாபதி முதலானவர்கள் அருகில் வந்து வரையாது கொடுக்கும் வள்ளலே! என்றுபோற்றி, இப்போது சிந்தனையுடன் தேவரீரிருப்பதாக வறிகின்றோம், அஃதுயாதென்ன அரசன் அதற்கொன்றுஞ் சொல்லாமல் தான் ஆலோசனையின்றிச் செய்தகாரியத்தைச் சிந்தித்துக் கவலைகொண்டமனத்தனாய் அந்தப் புரத்திற்குப் போயிருந்து சிந்திக்கத் தொடங்கினன்:— எல்லாப் பொருளையுந் தானமாகக்கொடுத்த நாம் மீண்டும் தட்சணைகொடுக்க ஒப்புக்கொண்டோமே, இதுவென்ன அறிவீனம்? திருடன்போல் காட்டிலிந்தப் பார்ப்பான் வஞ்சித்து விட்டான்! இராஜ்ய முழுவதும் கொடுத்தது மன்றி இரண்டரைப்பாரம் பொன்னுங்கொடுக்க வொப்புக்கொண்டோமே! அந்தப்பொன்

னுக் கென்னசெய்வோம்? முனிவன் செய்த கபடமறியாமல் புத்தி கெட்டுப்போனேமே! தபசியான பிராமணன் நம்மைத் தபிக்கச் செய்தனனே! ஊழின்வலி யறியாமற்போனேமே! ஆதெய்வமே! இனி நடக்கவிருப்பதனை அறிவாரார், என்று சிந்தாகுல மூற்றிருந்தான். அப்போது அவன் மனைவி அங்கு வந்து சிந்தாகுலனாயிருந்த நாயகனைப்பார்த்து வினவுகின்றாள் :— நீர் கவலைகொள்ளத்தக்க குறையொன்றுங்காணேன். காட்டிலிருந்த நமது பிள்ளையும் வந்து சேர்ந்தான். இராஜசூயயாகமும் சிறப்பாகச் செய்துமுடித்தோம். உமக்கு மேற்பட்ட பலமுடைய சத்துருக்கள் எவ்விடத்துங் கிடையாது. உமக்குத்தாழ்ந்த பலஹீனர்களான படைகளுங்கிடையாது. நரமேதஞ் செய்செய் என்று அடிக்கடி வந்த வருணனுஞ்சந்தோஷத்தோடு போயினன். எவ்வகையானுங் குறைவில்லாத நீர் வியசனப் படுவது எதற்கு? அதைச்சொல்லும். சிந்தாகுலத்தால் தேகஞ் ஜீர்ணித்துப்போகுமே? அதுபோன்ற மரணம் வேறொன்றுண்டோ! ஓ அரசனே! சோகத்தை விட்டு விடும். நீர் சமர்த்தரல்லவா சுகமாகவிரும் என்று தேற்றினள். அவளன்பான வார்த்தையினால் அரசன்தேறி, மனம் சிறிது தணிந்து கவலை வந்ததற்கான காரணத்தைச்சிறிது அவளுக்குக் கூறி, போஜனஞ் செய்யாமலும் மிருதுவான படுக்கையில் சயனங்கொள்ளாமலும் இராப்பொழுதைக் கழித்து, காலையிலெழுந்து சந்தியாவந்தனாதி நித்தியகருமங்களைச் செய்யும்போது, அரசாளுமுதலிய வினத்தையும் அபகரித்த விஸ்வாமித்திரமுனிவர் வந்தனர். வந்தவர் அடிபணிந்து நிற்கும் அரசனைப் பார்த்து, ஓ அரசனே! அடிக்கடி உன்னிடம் வருவதென்றால் என்னால் முடியுமா? இவ்வரசானது என்னுடைய தென்று சொல்லிய நீ அதனை இன்னும் ஏன் விடாமலிருக்கின்றாய்? இரண்டரைபாரம் பொன்னை எப்போது கொடுப்பாய்? நாளை நாளை யென்று சொல்லாதே, கொடுப்பதானால் இப்போதே கொடுத்து சத்தியவானாயிருப்பாய் என்று சொல்லினர். அரசன் கூறுகின்றான்:-அதற்கு இந்தஇராச்சியத்தை உமக்குக்கொடுத்து விட்டேன். இப்போதே வேறிடத்துக்கு போகின்றேன். நீர் சிந்தைப்படாமலிரும். எனக்குண்டாயிருந்த பொருளெல்லாம் உம்முடையதாயிற்றே! வேறு பொருளேது! உமக்குக்கொடுக்க வொப்புக்கொண்ட தக்ஷிணையை இப்போது கொடுக்கச் சக்தியற்றவனாயிருக்கின்றேன். எனக்கெப்

போது கிடைக்கின்றதோ அப்போது கொடுக்கின்றேன் என்று மறு மொழி கூறினன். பின்பு மாதவி என்னும் தன் மனைவியையும் பிள்ளை யையும் பார்த்து, யான் யாது குதிரை தேர் இரத்னம் சுவர்ணம் முத லான சகல சம்பத்தோடு இந்த இராச்சியத்தை கல்யாண மேடையி லிந்த முனிவர் மகனுக்குத் தானஞ்செய்து விட்டேன், தான மாகா திருப்பவர் நாம்மூவரே, இனிநாம் அயோத்தியைவிட்டுக் காட்டில் வாசஞ்செய்யப் போவோம் என்று முனிவரை நமஸ்கரித்து அரண் மனையை விட்டு வெளிப்பட்டு நடந்தனன். வாழின்வலி யிப்படியு மிருந்ததோவென்று மனைவியும் மகனும் அவன் பின் நடந்தனர். நகரத்திலுள்ளார் அந்த மூவரையும்பார்த்து ஆ! ஹா !! வென்று பெருஞ்சத்த மிட்டழுதார்கள், அரசனே! என்னகாரியஞ் செய்து விட்டீர்? ஆ! ஹா!! உமக்கும் இந்தக்கஷ்டம் நேரிட்டதே! தெய்வ மும் உம்மை வஞ்சித்து விட்டதே என்று பதறினர். அந்த விஸ்வா மித்திரர் முனிவராயிருந்தும் சிறிதும் இரக்கமில்லாதவ ராயினரே, அவர் பிரம ருஷியாவாரென்று அந்தணரெல்லாம் நிந்தித்துக் கதறி னர். இவ்வண்ணம் யாவரும் துக்கத்தில் மூழ்க அரசன் போகும் போது, விஸ்வாமித்திரர் அரசனை வழிமடக்கிக் கூறுகின்றார்:— தக்ஷிணையாகக் கொடுக்கிறேனென்று சொன்ன பொன்னைக் கொடா மற் போகின்றனையே, இல்லையென்று சொல்லிவிடு? அப்போது அதை நான் பெற்றவனுகவே மகிழ்ந்து போகின்றேன். இராஜ்யத் தையுந் தனத்தையும் கொடுத்து விட்டதைப்பற்றி உனக்கு வருத்த மிருந்தாற்சொல்லு. தானதைத்திருப்பிக் கொடுத்துவிடுகிறேன். கொடுக்கிறேனென்று சொன்னதைக் கொடுக்கவேண்டுமென் றுனக் கெண்ண மிருக்குமாயின் கொடுத்து விட்டிருப்பாயன்றே வென்றனர். விஸ்வாமித்திரர் இவ்வாறு சொல்லும்பொழுது அரிச்சந்திரன் வணங் கிய சிரமும் வாடின முகமுமாய்க் கைகூப்பி நின்று சொல்லு கின்றன் :— (6 - ம் 63.)

பத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

ஹரீங்காரமந்திராயை நம:

இருபதாம் அத்தியாயம்.

* ஹரிச்சந்திர கிருததக்ஷிணதானயத்னம்.

அரிச்சந்திரன் கூறுகின்றான் :—ஓ முனிவரே! உனக்கு நான் சொன்னபொன்னைக் கொடுக்காமல் போஜனம் செய்வதில்லை. நீர் மனம் வருந்தவேண்டாம். நான் பட்டகடனை எப்படியும் தீர்க்கிக் கொள்வேன். நான் சூரியவம்சத்திற் பிறந்த அரசன் இராஜசூய யாகம் செய்தவன், மனிதர் கேட்பனவெல்லாங் கொடுப்பவன், இவ் வருஞ்சிறப்பினை யுடையேனுகிய யான் முன்னொருமுறை வாய்விட் டுச்சொன்னதை மாற்றி இப்போது இல்லையென்று சொல்லேன். ஓ பிராமண சிரேஷ்டரே! உமக்குச் சொன்னதுபோல் கொடுத்துவிடு வேன் ஆனல் எனக்குப்பணம் வருமளவும் உம்மைப் பொறுத்திருக்க வேண்டுகின்றேனென்றான். விஸ்வாமித்திரர் வினவுகின்றார்:— ஓ அரசனே! உனக்குப்பணம் வருமென்று சொல்லுகின்றனையே அது எப்படி? அது வருவதற்கான அரசும் பொருளும் போய்விட்டதே. உனக்குப் பொய்சொல்லாமலிருக்க ஆசைமாத்திரம் வீணுக விருக் கின்றது. அதனைச்சாதிக்க வழிகாணும். பொருளில்லாத வுன்னை வருத்துவதும் வீண்தான். எனக்கு எப்படிப்பணம்வரும்? அர சனே! இப்போதாவது ,கொடுக்கமாட்டேன் என்று சொல்லி விடு. நான்கொண்ட வீணுசையை விட்டு சுகமாய்ப்போய்ச் சேருகிறேன். நீயும் மனைவிமகனுடன் நகரத்துக்குப்போவாய். அரசனே! இன்ன முஞ் சொல்கின்றேன். கொடுப்பதற்கு பொன்னிருக்கிறதா? இல் லையே! இல்லாமலிருக்கிதை இல்லையென்று சொல்வது உண்மை தானே? நீ இல்லையென்றல் உண்டென்று கொடுத்ததாக மனமகிழ் வேன். என்ன சொல்கின்றயென்று கேட்டனர். அரசன் கேளா தவன்போல் நடந்துகொண்டே கூறுகின்றான்:— ஓ பிராமணரே! இந்த வெறும்பேச்சு ஏன்பேசுகின்றீர்? மனதைத் தைரியப்படுத்திக் கொள்ளும். நான் கொடுத்து விடுகிறேன். என் பத்தினியும், புத்தி ரனும், நானும் திடமான சரீரமுடையவர்களா யிருக்கின்றோம். எங் களை ஏவலாட்களாய் ஒருவருக்கு விற்றயினும் எங்கள் கடனைத்தீர்க்

* அரிச்சந்திரன் தக்ஷிணைகொடுக்கப் பிரயத்தனப்படுதல்.

கின்றோம். இக்காசி நகரத்தில் எங்களை வாங்கிக்கொள்ளுகிறவரைப் பாரும். அவருக்கு நாங்கள் அடிமைப்பட்டு இரண்டரைபாரம் பொன்னையும் வாங்கிக்கொடுக்கின்றோம். நீ தனம்பெற்றுச் சந்தோஷ்டாய் என்னுல் கொடுக்கப்பட்ட இராஜ்யத்தை காத்துக்கொண்டிரு மென்றனன். பின்பு அரசன் விசாலாக்ஷி சமேதராய் விஸ்வநாதர் வீற்றிருக்கும் காசிப்பட்டணஞ்சேர்ந்து, அவ்வழகான நகரத்தைப் பார்த்து, பிறந்த பயன் பெற்றேனென்று களித்து, கங்காநதியிலே ஸ்நானஞ்செய்து தேவபிதுர் தர்ப்பணமும் தேவபூஜை முதலியனவும் செய்து முடித்தான், பின்னர் ஆ! ஹா!! அழகான இந்தக்காசிப் பட்டணம் மனிதரால் அனுபவிக்க ஆகுமோ? சூலதாரியாகிய சிவனே யனுபவிக்க ஆகுமென்றெண்ணிப் பத்தினியுடன் வியசனப் பட்டுக்கொண்டு உள்ளே நுழைந்து நான்கு திசையும்பார்த்து நம்மை விலைக்குக்கொள்ளத்தக்க தனவான்கள் இங்குள்ளாரென்று நம்பிக்கை வரப்பெற்று தக்ஷிணைக்கு நிற்கும் விஸ்வாமித்திரை வணங்கிக்கைகூப்பி, ஓ ஸ்வாமி! நான் என்மகன் என்பத்தினி ஆக மூவரு மிருக்கின்றோமல்லவா? எங்களால் உமது தக்ஷிணையைத் தரப் பெறுவீர், இப்பொழுதே வேறுகாரியம் ஏதேனும் என்னுல் நடக்க விருந்தால் அதை சொல்லுமென்றுகேட்க, முனிவர் (இன்னும்வார்த் தைசொல்லிக் கொண்டிருக்கின்றானேயே யன்றிப் பொருள் கொடுத் தாயில்லை வார்த்தை சொல்லவேண்டாம்.) நீ முன்னே ஒரு மாதத் தில் கொடுப்பதாய்ச் சொல்லியது நினைவிருக்கின்றதா? அம்மாதமும் முடிந்தது, என் தக்ஷிணையைக்கொடுத்து விடுவாயென்ன, அரசன் ஐயா! அந்தக் கெடுவுமுடிய இன்னும் ஒன்றரை நாளிருக்கின்றது, அதுதவருமல் பார்த்துக்கொள்ளும் என்று சமாதானங்கூற, ஆனல் நான்போய் வருகின்றேன், நான் மறுமுறை வரும்போது பணந் தரத்தவறினுல் சபித்து விடுவேனென்று போயினர். அரசன் முனி வர்கூறிய இரக்கமற்ற மொழியைக்கேட்டுச் சிந்தை வருந்தினின் றுன்:— அவருக்குக் கொடுப்பதாக விசைந்த தக்ஷிணையை எப்படி கொடுப்போம்! இக்காசியிலுள்ள அநேகம் பிரபுக்கள் அயோத்தி யில் நமக்கு நட்பினரா யிருந்தனரே! அவர்கள் இங்கு எங்கிருக்கின் றனரோ? நான் விரும்பியிருக்கும் பொன் யாவரிடங்கிடைக்கும்? முன் சிநேகமில்லாத ஒருவரிடமிருந்து ஒன்றைப்பெறுவது யாசக மாகும். அது அரசருக்கழகன்று, நீதியுமன்று. ஈதல் ஒதல் வேண்

டல் என்னு மூன்றுமே அரசருக் கடுத்ததென்று தருமசாஸ்திரங் களிற் சொல்லப்பட்டிருக்கிறது. பிராமணனுக்கு ஒப்புக்கொண்ட தக்ஷிணைகொடாமற் போவோமாயின் அவன் சொத்தை நாம் அபகரித்ததாக முடிவதுமன்றி, அந்தப்பாவத்தால் மறுபிறப்பில் புழுவாய்ப்பிறக்கவருமே. இதனால் மரணமடைவோமென்று துணிவதற்கு மில்லை. ஆகையால் நாம் விலைப்பட்டு நமது கடனைப்போக்கிக் கொள்வதே நன்றாகுமென்று தலைசாய்த்துச் சிந்தித்துப்புலம்பிக் கொண்டிருந்தனன். அவ்வரசனை அவன் மனைவி பார்த்து அழுதுகொண்டே தாழ்ந்த குரலோடு தேற்றுகின்றாள்:—என் நாதனே! சிந்தாகுலப்படுவதை விட்டு விடும். நமது குலதர்மத்தைக் கடைப்பிடியும். உண்மையற்றவன் பிணத்திற்கொப்பாவான். ஆகையால் சத்தியத்தைக் காப்பாற்றுவதிலும் ஒருவனுக்குச்சிறந்த தருமம் வேறொன்றையுங்காணேம். பொய்கூறும் வாக்குடையவன் செய்கின்ற அக்னிகாரியம் வேதவாடம் தானம் முதலிய சகல சற்கர்மங் களும் பயன்படாமற்போம். அறிவுடையாரைக் கடைத்தேற்றற்கே தர்மசாஸ்திரத்தில் சத்தியம் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் பாவிகள் மேன்மேல் கெட்டுப்போவதற்கே உலகில் பொய்மையுள தாயிருக்கிறது. இவையெல்லாம் பெரியோரால் கூறப்பட்டுள்ளன. நூறஸ்வமேதமும் இராஜசூயயாகமுஞ் செய்துள்ள அரசனை அசத்தியவாக்கொன்று சுவர்க்கத்தினின்றும் வீழ்த்தி விட்டதல்லவா? என்று அரசன் தேறக்கூறினள். அதுகேட்ட அரசன் வம்சவிருத்தியைச்செய்பவனை இந்தப்பிள்ளைக்கு சொல்லவேண்டியது ஏதாவது இருந்தால் சொல்லென்றான். அவள் அவனுக்குச் சொல்லவேண்டிய அவசியமொன்றுமில்லை. அரசனே! நீ பொய்சொல்ல வேண்டியதில்லை. புத்திரன் கொடுக்கவேண்டிய பலனைக்கனவனுக்கு ஸ்திரீ கொடுக்கிறவள், ஆதலால் என்னை விற்றுவரும் பணத்தைப் பிராமணனுக்குத் தக்ஷிணை செலுத்தி விடும் என்று சொல்லினள். அந்தச்சொல் செவியிற் புகுந்தமாத்திரத்தில் அரசன் மூர்ச்சித்து விழுந்து பின்னர் தெளிந்தெழுந்து துக்கித்து நங்கையே! முன் என்னைப் புன்னகையோடு இன்சொல்லால் மகிழ்வித்த நீ இப்பொழுது வன்சொல்கொண்டு வாட்டி விட்டாய், ஆ! இப்படியும் பேசக் கற்றிருக்கின்றனையா? கற்றிருந்தாலும் அதை என்பால் நீபச எப்படித்துணிந்தனை? என்று மூர்ச்சையாயினன். அதனைக் கண்

னுற்றமனைவி அரசனைப்பார்த்து இரக்கமுற்று துயரத்தோடு, ஆ ஆ மஹாராஜா! நான் சொல்லத்தகாத சொல்லைச் சொன்னேனென்று இந்திரனிலும் உபேந்திரனிலும் மேலானவனும். பூமண்டலத்துக்கு நாயகனும் செவந்த பாதங்களையுடையவனும் விளங்கும் நீ இவ்வாறு பூமியில் வீழ்ந்து தக்கிக்கின்றனையே! அந்தணர்களுக்குக் கோடி கோடியாகத்திரவியங்கள் கொடுக்கும் நீ இவ்வாறு சோபித்து பூமியில் வீழ்ந்து கிடக்கலாமா? தெய்வமும் உன்னை இவ்வாறு செய்ததே! ஆ! ஆ! கஷ்டம் கஷ்டம் என்று சொல்லிக்கொண்டே நாயகனுடைய துக்கத்தைத் தாங்கப்பெறுதவளாய் மூர்ச்சையடைந்து கீழே வீழ்ந்தாள். இவரிருவரும் இவ்வாறாக, இடையேயிருந்த குழந்தை பசியினால் பீடிக்கப்பட்டு ஓ அண்ணை! அண்ணை! எனக்கு அன்னம் கொடு. ஓ தாயே! எனக்குப் போஜனமிடு. எனக்கு அதிக பசியுண்டாயிருக்கிறது, என்னை உலர்ந்து போயிற்று என்று முழத்தொடங்கினன். (6 - ம் 45.)

இருபதாவது அத்தியாயம் முற்றிற்று.

ஹரீங்காரலக்ஷ்மணாய நம:

இருபத்தொன்றும் அத்தியாயம்.

ஹரிச்சந்திர கிருதசோகம்.

வியாசர் கூறுகின்றார் :—அரிச்சந்திரனும் அவன் மனைவியும் மகனும் துக்கித்துக்கொண்டிருக்க விஸ்வாமித்திரர் எமன்போல மஹாகோபங்கொண்டவராய்த் தன்னுடையபொருளைக் கேட்பதற்கு வந்து விட்டார். அவர் வந்த வேகவோசையால் சற்று விழித்து அவரைப்பார்த்து மீண்டும் மூர்ச்சையடைய, அம்முனிவர் ஜலத்தைத்தெளித்து மூர்ச்சைதெளியச்செய்து, ஓ அரசனே! எழுந்திரு, எழுந்திரு, இதுவென்ன வித்தை? எனது பொருளைக் கொடுத்துவிடு, கடன்பட்டவருக்குள்ள தக்ஷிணைகளோடும் வளருமேயன்றிக் குறையுமா? என்று சொல்ல, அரசன் விழித்துப்

ஓ அரிச்சந்திரனடைந்த சோகம்.

பார்த்து அந்தோ! முனிவரோ வந்திருப்பதென்று மறுபடியு மூர்ச் சையடைந்தான். பின்னும் அரசனைக் கனிதெளிவித்துக் கூறுகின் றார்:—ஓ அரசனே! எனக்குப் பொன்னைக்கொடுக்க !எண்ணுந்தோ றும் உனக்கு மூர்ச்சையுண்டாகின்றதோ? நன்று! நன்று! கொடுப்பதிலே உனக்குறுதி யிருக்குமாயின் என் தக்ஷிணையைக் கொடுத்துவிடு. சூரியன் பிரகாசிக்கின்றதும் சலத்தில் பூமி மிதக் கின்றதும் சுவர்க்கலோக மிருக்கின்றதும் சத்தியத்தினலன்றே? ஒரு சத்தியம் ஆயிரம் அஸ்வமேதத்துக்குச் சமானமாகும். அதனி னுஞ் சிறந்தகவுரவம் வேறில்லை. இச்சத்தியம் உன்னிடத்துளதெனில் அதைரியமும் துக்கமுமுண்டாகுமோ? இதன் சிறப்பை இப்போ தெடுத்துச்சொல்வது வீணுகும். இதனலெனக்கென்ன பிரயோ ஜனமுண்டாகும்? எனது தக்ஷிணையை சூரியன் அஸ்தமனமாகு வதற்குள்ளே கொடாது போவையேயாயின் உன்னைச்சபித்து விடு வேன். இது நிச்சயமென்று கோபத்தோடு முனிவர் சொல்லிப்போ யினர். போக, அவருக்கு மிகவும் பயந்தவனுய் அந்திப்பொழுதுக் குள் தனம் எங்கே கிடைக்கப்போகின்றது? கடன் காரனுல் நாம் கவலைப்படும்படி வந்துவிட்டதேயென்று அரசன் துக்கித்துக்கொண் டிருந்தபோது அவ்விடத்திலே அநேக பிராமணரோடு சகல சாஸ் திரசம்பந்நனை ஒரு பிராமணன் ஒரு வீட்டினின்றும் வந்தான். அவனை இராஜபத்தினிபார்த்து தன் மனத்தில் ஓர் தைரியங்கொண்டு அரசனேநோக்கி, ஓ என்நாயகனே! மூன்று வருஷங்களுக்கும் பிரா மணன் தந்தையென்று சொல்லப்பட்டிருக்கிறபடியால் தந்தையினு டைய திரவியத்தைப்புத்திரர்கள் அடையலாமே? ஆதலால் நமக்கு வேண்டுந்தனத்தை இவரைக்கேட்போமென்று எனக்கோர் புத்தி யுண்டாயிருக்கிறதென்றுள். ஒ என்னவும் அரசன் கூறுகின்றுன்:— பெண்ணே! கேட்க எனக்கதிகார மில்லையே. ஏற்பது பிராமணனுக் கேயன்றி க்ஷத்திரியனுக்கும் சர்வ பூஜ்யனுகிய ஆசாரியனுக்குங் கிடையாதே. சரணமடைந்தவர்களுக்கு அபயங்கொடுப்பதும் ஜனங் களைக் காப்பதும் யாகஞ்செய்வதும் வேதமோதலும் தானங்கொடுத் தலுமேயன்றிப் பிறரைநோக்கிக்கொடு என்றுகேட்பது அரசனுக்கு எப்பொழுதும் விதிக்கவில்லையே, இப்பொழுதும் கொடுக்கிறே னென்கிறவார்த்தையொன்றே என்மனத்தில் வைப்பாக விருக்கிறபடி யால் எவ்விடத்திலாயினுஞ்சென்று எவரிடத்திலாயினும் திரவியத்

தைச்சம்பாதித்து கடனைக்கொடுத்து விடுகிறேனென்றான். சந்திரமதி கூறுகின்றாள்:—ஓ பர்த்தாவே! நீர் சொல்வது சரியே யாவருக்கும் பொதுவாகவும் மேலாகவுங்காலமொன்றிருக்கின்றது. அதன்மூன் யாருடைய வழிதான் நிலைபெறும் அது பரிபவத்தையும் சன்மானத்தையுங் கொடுக்கின்றது புருஷனைத்தாதாவாகவும் யாசனைகவுஞ் செய்வதும் அதுவே. பண்டிதனைக மாத்திர மிருக்கவேண்டிய பிராமணனைக் சோபியும் பலசாலியுமாக்கி உன்னத இராஜ்யத்தினின்றும் சேனையினின்றும் இப்போது நீக்கி விட்டதே, இது காலத்தின் கொடுமையன்றோ? இதனை எண்ணிப்பாருமென்றான், அதற்கு அரசன் கூறுகின்றான்:—ஓ அறிவுடையாளே! எல்லாங்காலத்தின் வசமாயிருப்பினும் நமதறிவு வேறுயிருப்பதாகும். ஆகவே, அந்த அறிவின் செயலும் ஒன்றுண்டென்றறிவாய். எப்படியென்றால் கேட்பதாகிய தாழ்ந்த நிசைவந்த காலத்தில் கேட்பதற்கு அந்த அறிவு வருந்துகின்றது. அறிவு தோன்றியகாலத்தில் மானமே விட்டு அதிகூர்மையான அக்கத்தி நாக்கை யறுத்து விடுகின்றது. அறிவுதோன்றுத காலத்தில் மானத்தை விட்டு பிறரிடத்திற்சென்று கொடு கொடு என்று நாம் கேட்கின்றோம். ஆகையால் அன்னியரை யாசிப்பதில் எனக்குச் சிறிதும் இஷ்டமில்லை. ஓ மஹாநுபாவையே! நான் சுயசக்தியனுகையால் பிறரிடத்தில் ஒன்றையும் யாசிக்கமாட்டேன். என கையால் சம்பாதிக்கப்பட்ட பொருளைத்தினந்தோறும் தானஞ்செய்கின்றேனென்றான். அதுகேட்ட சந்திரமதி கூறுகின்றாள்:—உமக்கு ஏற்கமனமில்லாவிடினும் இது ஒன்று செய்யும், இந்திரன் முதலிய தேவர்களால் விதிப்படியே உமக்குக் கொடுக்கப்பட்டுள்ள நான் உம்முடைய பொருள் உம்முடைய ஆணைக்கும் ஆதரவுக்கும் உட்பட்டவள். ஆதலால்என்னைவிலைசெய்து அந்தப்பொருளைக்கொண்டு பிராமணன் கடனைக்கொடுத்து விடுமென்றாள். அவ்வார்த்தையைக்கேட்டு இவ்வார்த்தை இவள்சொல்லவந்ததேயென்றெண்ணி கஷ்டம் கஷ்டமென்று சொல்லித் துக்கத்தோடு அரசனழுதான். அந்தோ! நாம் சொன்ன நீதியை கஷ்டமென்பாராயின், என்னசெய்வோம் இது கஷ்டம் கஷ்டமென்று அவளுஞ்சொல்லிப் பின்னுஞ் சொல்லுகின்றாள்:— நீரிதுசெய்யாமற் போவீராயின் பிராமணனிடுஞ் சாபமாகிய அக்கினியிற் கொளுத்தப்பட்டு நீசனுய்ப் போய்விடுவீர். என்னைச்சூதுக்காவது மதுபானத்திற்காவது இராஜ்யலாபத்திற்காவது அதிகசுகத்தை யநுபவித்

தற்காவது என்னை விற்பீராயின் பழியும் பாவமுமுண்டாகும்; என்னை இப்போது விற்பது குருதக்ஷிணைக்கேபாகலான் புகழுண்டாகும்; இதனை யோசித்துக் கவலைகொள்ளாது என்னை விற்று குருதக்ஷிணையைக்கொடுத்து உமது சத்தியத்தை நிறைவேற்றிக்கொள்ளுமென்றாள். (சு - ம் உள.)

இருபத்தொன்றும் அத்தியாயம் முற்றிற்று.



ஓ

ஸ்ரீங்காரஜபஸுப்ரீதாயை நமஃ

இருபத்திரண்டாம் அத்தியாயம்.

அரிச்சந்திர கிருத பத்நீ விக்ரயம்.



சூதர் கூறுகின்றார்:—இவ்வாறு மனையாட்டி தன்னை விற்கும் படிப் பன்முறையுஞ் சொல்லிவர, அரசன் கூறுகின்றான்:—ஓ நற் புடையாளே! உன்னை விற்று நான் கொள்ளும்பொருள் என்பொருளென்பதிற் சந்தேகமில்லை. உன்னிடத்து எனக்குள்ள தயையொன்றே என்னை அப்படி செய்யத் தடுக்கின்றது. அன்றியும் நீ என்பொருளாயினும் பெண்போலாக விருக்கின்ற வுன்னை விற்பது எனது ஆண் தன்மைக்கு அழகாகுமா? இது மிக்க கொடியவர்களாலுஞ் செய்யக்கூடாதவேலை. இங்கொடுஞ் சொல்லைச்சொல்ல உனது நெஞ்சும் நாவும் எப்படித்துணிந்ததோ வென்று பலவகையான இரக்கமொழிகளைக்கூறினான். பின்பு அரசன் அதிக துக்கத்துடன் பட்டணத்திற் பிரவேசித்து கடைவீதியிற்சென்று கண்ணீர் விட்டு வாய்க்குழறி அப்பட்டணத்து ஜனங்களைக்கூவி, எனது வார்த்தையைக்கேளுங்கள், எனக்குப்பெண்டாகிய இவளை உங்களில் யாருக்காவது வேலையாளாகச்செய்து கொள்ளக்கருத்திருக்குமானால்சொல்லுங்கள், இதோ விற்கிறேன், இவளுக்காகக்கொடுக்கும் பொருளை நான் வாங்கிக்கொள்ளுகிறேனென்று சொல்லும்போது சிலர் அரசனைப்பார்த்து இவள் யாருடைய பத்னி? நீயார்? ஒருவன் பத்னியை நீ விற்கவந்தகாரணம் என்னவென்று கேட்டனர். அரசன் அவர்களை

நோக்கி ஓ நகரவாசிகளே! நான் இரக்கமென்பதைச் சிறிதுமறி யாத கொடுமையாளி; மனிதனல்ல அரக்கன்; மிகவன்னெஞ்சன் ஆதலால் இத்தன்மையாகிய பாவத்தைச்செய்யத் துணிந்தேனென் றுன். அப்போது விஸ்வாமித்திரன் விருத்த பிராமணவேடங் கொண்டு வந்து அரசனைநோக்கிக் கூறுகின்றுன்:—எனக்கு வேலைக் காரியாக இவளை விற்று விடுகின்றனையா? நான் வாங்கிக்கொள்ளுகி றேன். உனக்கு வேண்டியபொருளைக்கொடுக்கிறேன்; என் மனைவி மெலிந்தசரீரமுள்ளவளா மிருப்பதினால் வீட்டுவேலைசெய்ய அவளுக் குத்திடனில்லை. இவள் என் வீட்டு வேலைக்குச் சரியானவளாகத் தோன்றுகின்றுள். ஆதலால் எனக்குக்கொடுத்துவிடு இதுவுன்தெய் வசகாயந்தான். நீ விற்கத்துணிந்த இவளை நான் வாங்கிக்கொள்ளு கிறேன். உனக்கெவ்வளவு பணங்கொடுக்கவேண்டு மென்றுன். இரக்கமற்ற வஞ்சகனுகிய அப்பார்ப்பான் வார்த்தையானது அரிச் சந்திரனது மனதைப்பிளந்து மறுவார்த்தை சொல்லவொட்டாமல் அவனை நிறுத்திவிட்டது. அவன் நிற்கு நிலையை அந்தப்பிராமணன் பார்த்துக்கூறுகின்றுன்:—உன் மனைவியினுடைய காரியப்பாட்டை யும் வயது வடிவு அழகு முதலியவற்றையுமறிந்து நானே விலைமதித் துக்கொடுக்கிறேன்; வாங்கிக்கொள்வாய்; தரும சாத்திரத்தில், பெண்ணெருத்தி முப்பத்திரண்டிலக்கணத்திற் குறையிலளாய் நல் லொழுக்கமும் நற்குணமுமுள்ளவளா யிருப்பின் அவளைக்கோடி பொற்காசுக்கு மதிக்கலாமென்றும் அதுபோன்ற ஆடவனை பத்து கோடிக்கு மதிக்கலாமென்றும் பெரியோர் கூறுவரென்றுன். அது கேட்ட அரசன் யாதொன்றுஞ் சொல்லாதிருக்க பிராமணன் அவ னுடைய அநுமதியை எதிர்பாராமல் அவன் வஸ்திரத்தில் தனத் தைக்கொட்டி விட்டு சந்திரமதியின் தலைமயிரைப் பிடித்திழுத்தான். இழுக்க அவள், பிராமணரே! இப்பொழுது சிறிதுநேரம் என்னை விடும், குழந்தையைப் பார்த்துவிட்டு வருகிறேன், உம்மிடம் வந்த பின்னர் நான் பிள்ளையை எப்படி பார்க்கப்போகிறேன்? என்று சொல்லிக்கொண்டே ஓ குழந்தாயென்றவனைக்கூவி எனக்கு இந்தத் திசைவந்து விட்டது என்று சொல்ல, அவன் அலறிச் சமீபத்தில் வரும்போது அப்பா! நான் ஒருவனுக்குப்பணியாளாகி விட்டேன் என்னைத்தொட வேண்டாமென் றழுதுங்கினுள். அவனதனைக்கே ளாதவனும் அம்மாவென்று கண்ணீர் விட்டழுதுகொண்டே ஓடி

வந்து தாயினுடைய வஸ்திரத்தை இழுத்து இடறிவிழுந்தபோது பிராமணன் மிகக்கோபித்து அவனையடித்தான். அடிபட்டும் அம்மா அம்மா வென்று கூவிக்கொண்டே தன்னுடன் வந்த அப்பிள்ளையை சந்திரமதி பார்த்து ஓ பிராமணோத்தமரே! என்னிடத்தில் சிறிது தயவுசெய்து இந்த குழந்தையையும் விலைக்கு வாங்கிக்கொள்ளும்; இவன் இல்லாமல் என்னை நீர்வாங்கிக்கொண்டாலும் உமது காரியத்திற் குபயோகமில்லை, ஓ பிரபுவே! பாக்யஹீனையாகிய என் விஷயத்தில் இவ்வளவு தயவுசெய்யுமென்று வேண்டினாள். அந்தப்பிராமணன் இதை வாங்கிக்கொண்டு பாலகனைக் கொடுக்கட்டுமென்று மீட்டும் பத்துகோடி பொன்னை அரசன் மடியிற்கொட்டி விட்டு, அவனைப்பிடித்துத் தாயுடன் சேர்த்துக்கட்டி சிறிது மிரக்கமின்றி அழைத்துக்கொண்டு போகத்தொடங்கும்போது அவள் அரசனைச் சுற்றிவந்து கைகூப்பி முழங்காலால் வணங்கி நின்று கண்ணீர்விட்டு என்பர்த்தாவாகிய இவர் செய்துள்ள தானமாகிய புண்ணியத்திலே ஒருதினையளவாவது இருக்குமானால் எனக்கு மறுபடியும் இவர் கணவராக வேண்டுமென்று வணங்கினாள். அரசன் தன்னுயிரிலு மினிய மனைவியைப்பார்த்து மனங்கலங்கி யழுதுக்கூறுகின்றான்:—ஆ ஆ இப்படியும் சொல்லலாயிற்றே சத்தியத்தோடு நல்லொழுக்கமும் நற்குண நற்செய்கைகளும் வாய்ந்து மரத்தினிழல் அம்மரத்தை விட்டுப்பிரியாதிருப்பதுபோல் நம்மைவிட்டுப்பிரியாதிருந்த இவள் பிரிய எப்படிவந்தது? அந்தோ! என்னை விட்டுப்போகிற ஓ புத்திரனே! நீ எங்கேபோகிறாய்? நான் எந்த திக்கைநோக்கிப்போவேன்! என் துக்கத்தை நிவர்த்திசெய்வார் யார்? அந்தோ! ஓ ஐயோ! இராச்சியத்தை விட்டதினாலும் வனவாசம் பண்ணவந்ததனாலும் எனக்கு யாதொரு துக்கமுமில்லை; இப்போது பிள்ளையை விட்டுப்பிரியவந்ததனால் பெருந்துக்கத்துக் கிடனாகின்றேனென்று பிராமணரைநோக்கிச் சொல்லிவிட்டு மனைவியைப்பார்த்துப் புலம்புகின்றான்:—உலகத்தில் கற்புடையவர்கள் நல்ல தங்கணவனுடனிருப்பதே பேரின்பமென்று நினைக்கின்றார்கள் அவர்களிற் சிறந்த உன்னை விட்டு விட்டேனே. இக்ஷ்வாகுவமிசத்தில் பிறந்தவனும் இராச்சிய சுகத்திற்கெல்லாந் தகுந்தவனுமிருக்கிற என்னைப் புருஷனாகவடைந்த நீ இப்போது என்கண்ணுக்கு முன்னே அடிமைத்தன்மையடைந்து விட்டனையல்லவா? இப்படிப்பட்ட பெரிய துக்க சமுத்திரத்தில்

மூழ்கிப்போன என்னை கரையேற்றிவிடுவா யென்றனன். இவ்வாறு மனைவியையும் மகனையும் பார்த்துப் பார்த்துப் பலவாறுகப்புலம்பிக் கொண்டிருக்கும்போதே சந்திரமதியை அந்தப்பிராமணன் காட்டையினுலடித்து அழைத்துக்கொண்டு போயினன். அதைக்கண்ட அரசன் துக்கத்துடன் பெருமூச்சுவிட்டுக் கூறுகின்றுன் :—வாயுபகவானும் சூரியனும் சந்திரனும் மற்ற சனங்களும் பார்த்தறியாத நம் முடைய மனைவியை யாவரும் பார்க்கவும் அடிமைப்பெண்ணென்று இந்தப்பிராமணன் சொல்லவுமாயிற்றே! ஆஹா! மென்மையான கையும் விரலுமுடைய சூரிய வமிசத்திற் பிறந்த புத்திரனை உலகாளச்செய்யாமல் அந்தனனுளச்செய்தேனே! இந்த வன்னெஞ்சம் படைத்த என்னைச் சுடவேண்டும். எனக்கினியாளே! ஏ! குழந்தையே! பாபியான என் கெடு நடத்தை யிப்படியுமிருந்ததோ! இருவரையும் விற்கவந்ததும் நானிறவாமலிருக்கின்றேனே! என்று அலறினன். அந்தப்பிராமணனே அவ்விருவரையும் பற பறத்து இழுத்துக்கொண்டு நகரத்தைக்கடந்து கண்ணுக்குப் புலப்படாமற் போயினன்.

அச்சமயத்தில் விஸ்வாமித்திர முனிவர் சிஷ்யருடன் வந்து அரசனே! நீ சத்தியந் தப்பாதவனுல்முன் கொடுக்கிறேனென்று சொன்ன தக்ஷிணையைக் கொடுத்துவிடு என்று கேட்க, அரசன் ஓ முனிவரே! நமஸ்காரம் இந்தத்தக்ஷிணையை இராஜசூயயாகத்திற்குக் கொடுக்கிறேனென்று சொன்னதற்கு எடுத்துக்கொள்ளுமென்றன். இந்தத்திரவியம் உனக்கு எப்படி கிடைத்தது? எப்படி சம்பாதித்தனை? அதனைச்சொல்லென்று முனிவர் வினவ, அரசன் ஓ மஹானுபாவரே! அதைச்சொல்வதினுல் உமக்கென்ன பிரயோஜனம்? அதைச்சொல்ல வெண்ணினுலும் மேன்மேலெனக்குத் துயரமிகுகின்றதென்ன, முனிவர் ஆனுல் இந்தப்பணம் கெட்டதாயிருக்கவேண்டும், நான் வாங்கமாட்டேன், இது வந்தவழியை யுண்மையாய்க்கூறுவாய், இது நல்ல அறவழியிலேவந்த பொருளாயின் கொடு; இல்லாவிடின் வேண்டாமென்றார். அரசன் முனிவரே! என் பிள்ளையைப் பத்துகோடி பொன்னுக்கும் மனைவியைக் கோடி பொன்னுக்கும் நான் விற்று விட்டேன், இதனைப்பெற்றுக்கொள்ளும், உமக்குச்சொன்னபடி பதினைருகோடி பொன்னும் நான் கொடுத்துவிட்டே னென்றனன். அவ்வாறு அரசன் சொல்ல முனி

வர் இதை யாநான் வாங்கிக்கொண்டுபோவது? இத்தக்ஷிணை இராஜ சூயயாகத்திற்குத் தகுந்ததா? நீ சொன்னபடி சீக்கிரத்தில் முழுத் தொகையும் கொடுப்ப யாக, சொன்னதைக் கொடுப்பதற்கு மூன் பின் யோசிக்கின்றபாவியே! இப்பொன்னோடு என்னை யொழிக்கலா மென்று நினைப்பையானால் என்தபோபலத்தினாலும் பிராமண்யபலத் தினாலும் பிரபாவத்தினாலும் நான்கற்றுக்கொண்ட சுத்தமான வேத பாடத்தினாலும் நானினக்குச்செய்யப்போவதைப் பார்ப்பாயென்று அடங்காத கோபங்கொண்டார். அரசன், ஓ முனிவரே! சிறிது நேரம் பொறுத்திரும்; சரியாகத் தக்ஷிணை கொடுக்கிறேன், இப் போதுதான் மனைவியையும் புத்திரனையும் விற்றேன், மற்றதற்கும் ஈஸ்வரன் துணைசெய்வார் பொறுமென்று வேண்டினன். முனிவர் ஓ அரசனே! இன்னமும் பகற்பொழுதுமுடிய ஒருசாமமிருக்கின் றது அதுவரையில் பார்ப்பேன்; அதன்மேல் வேறுகெடுவு கேளே னென்றார். (சு - ம் நிச.)

இருபத்திரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

ஹ்ரீம்மத்யை நமஃ

இருபத்துமூன்றும் அத்தியாயம்

* சாண்டாலகிருத அரிச்சந்திரகிரய க்ரஹணம்.

வியாசர் கூறுகின்றார்:—விஸ்வாமித்திர முனிவர் கருணையென் பது சிறிதுமின்றி வன்னெஞ்சுடன் அரிச்சந்திரனைநோக்கி இப்படி சொல்லிவிட்டு அவன் கொடுத்த தனத்தை யெடுத்துக்கொண்டு போயினர். பின்னர் அரசன் மிக்க துயரமடைந்தவனாய் பெருமூச் செறிந்து தலையிறங்கிக்கொண்டு யாவருங்கேட்கப் பேரொலியோடு சூரியன் மறைவதன் முன்னே என்னை விலைக்கு வாங்கிக்கொண்டு என் துக்கத்தை எவன் ஒழிப்பானோ அவன் விரைவில் சொல்லக் கடவனென்றான். என்று சொல்வதற்குமுன் எமதருமராஜன்

* அரிச்சந்திரன் சண்டாளனுக்கு விலைப்படுதல்.

ரோமங்களால் விகாரமாய்க்காணப்படும் மார்பும் பெருத்தமீசையும் கருத்துத்தொங்கிய வயறும் புலால் நாற்றம் வீசும் மூறட்டுத்தேக முடையனுய் சவமாலையை அலங்காரமாகக் கையில் பிடித்துக் கொண்டு சண்டாள வருவமேற்றுவந்து உன்னை நான் வாங்கிக் கொள்ளுகிறேன் ; வேண்டியபணை மெவ்வளவு ? சொல்லுவாயென் ருன். மிகக் கொடுமையான பார்வையுள்ளவனுய் சிறிதேனும் தய வில்லாமற் பேசுகின்ற அச்சண்டாளனை நீயாரென்று அரசன்கேட்க அவன் ஓ அரசனே ! நான் ஒரு சண்டாளன் ; நீ என்னுடைவழி நின்று பிழைத்துக்குக்கட்டிய ஆடையை யவிழ்த்துவைக்க வேண்டி யது ; இதுதான் நீ செய்யவேண்டிய வேலையென்று சொன்னன். அரசன் ஓ சண்டாளனே ! பிராமணனுவது க்ஷத்திரியனுவது என்னை வாங்கிக்கொள்ள வேண்டுமேயன்றி வேறொருவரென்னை வாங்குதல் கூடாது, உத்தமனை உத்தமனும் மத்திமனை மத்திமனும் அதமனை அதமனும் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று பண்டிதர் கள் சொல்லுகிறார்கள், ஆகையால் என்னை வாங்கவேண்டியவன், மேற்சொல்லியவர்களில் ஒருவனுயிருத்தல் வேண்டுமென்பதே எனது கோரிக்கையென்ருன். சண்டாளன் கூறுகின்ருன்:—இந்தத் தருமந்தெரிந்த நீ உன்னைவிற்கத்துணிந்து விலைகூறும்போது என்னை உத்தமன் வாங்க வேண்டுமென்று கூறுது என்னைதிரில் போசனை யின்றி என்னை வாங்கிக்கொள்ளுங்களென்று இரைச்சலிட்டனையே ! ஆலோசனைசெய்து எந்தமனிதன் பேசுகிறுனை அவனெண்ணியபடி எண்ணியதனை யடைகிறுன். ஜாதிபேதம் வைக்காமல் பொது வாய்க்கூவி இப்போது இந்தத்தர்மம்பேசுதல் முறையன்று. நீசொல் லியவனுக்குப் பொருள்கொடுக்க இஷ்டமும் சத்தியமும் உனக்குப் பிராமணமாயிருச்குமானுல் இப்போது நான் கொடுக்கும்பொருளை வாங்கிக்கொள்ளுவாய். சத்தியம் ஒன்றையே எண்ணுகின்றவனுக்கு நீ சொன்னதருமம் வேண்டுவதில்லை. அசத்தியஞ்செய்பவன் அத மனுய்க்கோரமான நரகத்தில் அதிசீக்கிரமாய் விழுவான். அதைப் பார்க்கிலும் சண்டாள ஜன்மம் நல்லது ; பொய்சொல்லுவது நல்ல தன்றென்றனன். அந்தச் சண்டாளன் சொல்லிக்கொண்டு இருக் கும்போதே விஸ்வாமித்திர முனிவர் வந்து தனக்குண்டாகிய கோபத் தினுல் சுழல்கின்ற கண்ணினுல் அரசனைநோக்கி இந்தப்பறையன் நீ எவ்வளவுபணங் கேட்கின்றனையோ அவ்வளவுபணமுங் கொடுக்கச்

சித்தமாயிருந்தும் அதனை வாங்கி நீ எனக்குச்சொன்னபடி தக்ஷிணை முழுமையுங்கொடாம லிருக்கிறகாரணம் எனக்குத் தெரியவில்லை என்றார். அரசன் ஓ கௌசிக முனிவரே ! சூரியவம்சத்திற் பிறந்த அரசன் நான் ; இந்தப்பணத்துக்காக எப்படி சண்டாளனுக்கு அடிமைப்படுவேன் ; இது என்மனத்தை வாட்டுகிறதென்றனன். முனிவர் கூறுகின்றார் :—ஓ அரசனே ! இதுவெல்லா மெனக்கேன் சொல்லுகிறாய். இப்போதே எனக்குப் பணத்தைக் கொடுப்பாய் இல்லையானால் உன்னைச் சபித்து விடுகிறேன். நீ சண்டாளனுக்கு அடிமையாவையோ பிராமணனுக்கடிமையாவையோ அது எனக்குத்தெரியாது ; என்னுடைய தக்ஷிணையைக்கொடுத்து விடு. சண்டாளன் தவிர உனக்கிப்போது பணம் கொடுப்பாரொருவரையுங் காணேம். இனி நான் பணம் வாங்காமல் வெறுங்கையோடும் போகேன். இன்னும் அரை நாழிகைப்பொழுதானிருக்கின்றது அதற்குள்ளே நீ பணங்கொடுக்கின்றனையா ; நான் சாபத்தை உனக்குக்கொடுக்கவா ? என்ன சொல்லுகிறாயென்றார். அரிச்சந்திரன் மெய்மறந்து பிரேதம்போல் விஸ்வாமித்திரர் பாதத்தில் வீழ்ந்து கூறுகின்றான் :—ஐயா ! நான் உமக்கு அடிமையாளாக விருக்கின்றேன். இந்தச்சண்டாளனுக்கு நான் அடிமையாவதென்றால் என் மனம் மிக வருத்தப்படுகின்றது. உமக்காவதென்றால் மிகவுஞ் சந்தோஷப்படுகின்றது. சண்டாள சம்பந்தம் மிகவும் கஷ்டமானதாதலால் நீர் தயவுசெய்யவேண்டும். உமதிஷ்டப்படி எந்தச்சமயத்தில் எதுகட்டளை யிடுகின்றீரோ அதைச்செய்ய சித்தமாயிருக்கின்றேன் என்றனன். என்னவும் முனிவர் ஓ அரசனே ! உன்னை யடிமையாக அங்கீகரித்தேனென்றார். அரசன் அதிக சந்தோஷத்தோடும் மறுமுறை தாய் வயிற்றிற் பிறந்ததாக வெண்ணிக் கொண்டு விஸ்வாமித்திரரை நோக்கி, நான் சொன்னது சொன்னதுதான் அதிற்சந்தேகம் வேண்டாம் சத்தியம், இப்போது என்ன செய்ய வேண்டுமென்றான். வஞ்சகராகிய முனிவர் ஓ சண்டாளனே ! இங்கேவா ! நீ என்னடிமையாளுக்கு எவ்வளவுபணம்கொடுக்கிறாய் ? நான் இவனை உனக்கு விற்றுவிடுகிறேன், இப்போது வேலைக்காரன் வேண்டியதில்லை, எனக்குப்பணத்துக்கு அவசரமாக விருக்கின்றது என்னசொல்லுகிறா யென்றுகேட்கவும் சண்டாளன் சந்தோஷமாய் சமீபத்தில்வந்து பிரயாகையில் பத்து காதத்துக்குப் பத்துகாதம்

ரத்தினம் நிறைந்துள்ள பூமியை உமக்கு நான் கொடுத்துவிடுகி றேன், இவனை விற்றுவிடும், அவனும் பணத்துக்கு மிகவும் அவதிப் படுகின்றன், அதனை நீரே நீர்த்தவராவீரென்று சொல்லி அந்த கூணமே ஆயிரம் ரத்னங்களும் ஆயிரம்பொன் காசுகளுங்கொடுத்த முனிவர் வாங்கிக்கொண்டனர். அரிச்சந்திரன் முன்போல் மன வருத்தப்படாமல் சந்தோஷமாய் நமக்கு விஸ்வாமித்திர மகாமுனி வர் பிரபுவல்லவா ; அவர் எந்தெந்த வேலையை நம்மால் செய்வித் துக் கொள்ளுகின்றாரோ அவை யெல்லாம் நாம் செய்யவேண்டிய கடமைதானே என்று எண்ணும்போது, ஓ மஹாதபாவனே ! நீ கடனிலிருந்து நீங்கிவிட்டனை, விஸ்வாமித்திரருக்குச் சொன்னபடி தக்ஷிணை கொடுத்துவிட்டனை என்று ஆகாயத்தில் அசரீரி வாக் குண்டாயிற்று. தேவர்கள் புஷ்பவருஷம் வருஷித்தார்கள். இந் திரன் முதலிய தேவர்களெல்லாம் நல்லது நல்லதென்று அரசனைப் புகழ்ந்தார்கள். அரசனும் சந்தோஷத்துடன் விஸ்வாமித்திரரைப் பார்த்து ஓ முனிவரே ! எனக்குத் தாயுந்தந்தையும் பந்துவும் நீர் தாம், என் விஷயத்தில் என்ன வெண்ணியோ ஒரு கூணத்தில் என்னை மோசஞ்செய்து விட்டீர், மறுகூணத்திலேயே கடனில் லாதவனாகவுஞ் செய்துவிட்டீர், எனக்குமிகவுஞ் சந்தோஷமாயிற்று இனிநான் என்னசெய்யவேண்டும்? உம்முடைய வார்த்தை எனக்கு நன்மையே செய்யுமென் றெண்ணுகின்றேன்-னென்றனன். அவ்வாறு சொல்லும்போது முனிவர் ஓ அரசனே ! இதுமுதல் சண்டாளன் என்ன சொல்லுகின்றானோ அதனை நீ செய்யவேண்டும் என்றுகூறி உனக்குச் சுகமுண்டாகுகவென்று ஆசீர்வதித்துத் தனத்தை எடுத் துக்கொண்டு போய்விட்டனர். (சு - ம் கூ அ.)

இருபத்துமூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

ஹரீம்விபூடிஞையநம:

இருபத்துநான்காம் அத்தியாயம்.

அரிச்சந்திரஸ்ய சண்டாலா ஜ்ஞாநுவர்த்தனம்.

சவுனகாதியர் சூதமுனிவரைப்பார்த்து அவ்வரிச்சந்திர மஹாராஜன் சண்டாளனுடைய கிருகத்தில் என்னசெய்திருந்தானே அதைக்கேட்க ஆவலுள்ளவர்களாக விருக்கின்றோம்; தேவரீர்சாவதானமின்றிச் சொல்லவேண்டுமென்று பிரார்த்தித்தனர்.

சூதமுனிவர்கூறுகிறார்;—ஓ முனிகணங்காள்! விஸ்வாமித்திரர் சென்றபின்னர் சண்டாளன் மகிழ்ந்த மனத்துடன் அரசன் சமீபத்தில் வந்து என்னிடத்தில் இருப்பதற்கு மனமில்லாமல் நீ அசத்தியனுயோடிப்போவாயோ? என்னசொல்லுகிறுயென்று தடியினால் மோதி யடித்தான். அதனால் பிரமித்து மனங்கலங்கிய அரசனை அச்சண்டாளன் தனது சேரிக் கழைத்துக்கொண்டு போய்க் கைகால்களுக்கு விலங்கு பூட்டி ஓர் சிறைச்சாலையிற்றள்ளிவிட்டுத்தான் யாதொரு கவலையுமின்றிச் சுகித்திறங்கினன்.

அரசனை அன்று முதல் நான்கு நாள்வரையில் அன்னபானதிகளின்றித் துக்காக் கிராந்தனுய் அந்தோ! நாம் இச்சண்டாளனுடைய சிறையிலகப்பட்டுப் படும்பாட்டை நம்முடைய மனைவியரியமாட்டாளல்லவா! நம்முடைய நாயகர் நம்மையும்புத்திரனையும் பிராமணனுக்குக் கொடுத்துவிட்டனரே இனி நம்மிருவரையும் விடுவிக்கும்படியானகாலம்அவருக்குவருமாஎன்று நினைக்கிறுளோ! ஓர் கால் குழந்தையானவன் நம்மைநினைத்து அழத்தொடங்குவானுயின் அப்போது அவனுடைய சமாதானத்துக்காக நாம் சமீபத்திலிருப்பதுபோல நம்மை யழைக்கின்றுளோ! நமதுராஜ்யம் நம்மைவிட்டுப்போயிற்று, நட்பினரெல்லாம் போயினர், எதுபோயினும் எவர் போயினும் மனைவியும் மகனும் இருக்கலாகாதா! இனி நாம்காண்போமென்பதற்கும்இடமில்லாமல் விக்கிரயமுஞ்செய்துவிட்டோமே! நாமும் சண்டாளனுக்கு மீளாவடிமையாயினேமே! ஆஹா! நமக்குநேர்ந்த துக்கபரம்பரை மிக ஆச்சரியம் என்று இவ்வாறெல்லாம் எண்ணி எண்ணி அச்சிறைச்சாலையிற்றனேயிடந்தனன்.

---

* அரிச்சந்திரன் சண்டாள னேவியவற்றைச் செய்தல்.

ஐந்தாநாள் அச்சமணிபாவின்வந்து விலக்கைத்தரித்து மிகு
ந்தகோபத்துடன் அதட்டித் தலையிற்குட்டி, அடா! இனிநீ பிணத்
தினைப் பாங்கிவரும் வேலிக்குப்போ; காசிகுத்தென்பார்த்
தில் பெரிய மயானமொன்றிருக்கின்றது; அதில் நீ கிரமமாகக்
காவலிருந்து கண்டோர் அஞ்சத்தக்க இப்பெருந் தடியைக்கையில்
தூக்கிக்கொண்டு இரவும் பகலும்தூயாமல் யாஞ்சுற்றிவர, இதோ
வீரவாகுவின்று தடியிருக்கின்றது என்று மிரட்டிவிட்டுக்
கொண்டே இருக்க வேண்டியது; நிற்காதே ஓடு; என்று அரசனே
அதட்டியோட்டினன்.

அவன் யாதும் சொல்லாமலே அக்கு நின்றும் ஓடி மிகுந்த
பயங்கர முடைய அந்தப்பெரிய சுடுகாட்டைக் கண்டான். அது
வெந்த பிணங்களை யன்றிச் சிரிப்பதுபோலப் பல்லிக்காட்டும்
வேகாபிணக்குவியில்கள் பல உடையது. புகையும் புலாற்ற
மும் மிக்கது. காய் தரிமுதலிய துஷ்டவிலங்கின் கூட்டங்கள், கழு
கினங்கள்சூழ்ந்தது. அழுகைக்குரலால்நிறைந்தது. ஓ அண்ணவோ!
ஓமாமாவோ! மச்சினவோ! ஓ பெண்ணேவோ! கண்ணேவோ!
உன்னை எங்கே காண்பேன்! இனி என்றே காண்பேன்! என்னைவிட்
டுப்போயினீரோ! இந்தமோசஞ்செய்வாயென்று நான் எண்ணவு
மில்லையே என்செய்வேன்! என்செய்வேன்! என்றிப்படி பல கூச்
சலும் நான்கு பக்கத்தும் நிறைந்துள்ளது. எரிகிறமாமிசங்களிலே
சடசடவோசையும் சுரு சுருவோசையும் உருகிய கொழுப்பின்
சொய்யோசையும் கேட்பது; பிரளயகாலம் போலே பெருஞ்
சுவாலை விட்டுப் பற்றி யெரிவது இப்படிப்பட்ட புறங்காட்டைஓ
கண்டவுடன் ஆஹா!! இதுவென்ன ஆச்சரியம் சேனாதிபதிகளும,
குறுநிலமன்னர்களும், அந்தணர் முதலிய பெரியோர்களுங்கூறை
ந்து மங்களங்கொண்டாடும்படியான ஸ்தானத்தைவிட்டு இந்த
அமங்களஸ்தானத்துக்கு வரவும், மங்கலவோசைகேட்பதொழிந்து
அழுகைக்குரலோசையைக் கேட்கவும் ஆயிற்றே என்றேங்கியும்.
மோனவிமக்களைநினைந்து அற்பாக்கியனானஎன்னைவிட்டுஎங்கேபோ
னீர்கள். நான்பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே அதிகோபத்
தோடு இழுத்துக்கொண்டுபோன அந்தப்பிராமணன்உங்களையெல்
லாம் ஓட்டிவிட்டான். நீங்களெல்லாம் ஓடிப்போனீர்கள். என்று
கண்ணீர்விட்டும், நீங்களாவது நானாவது நல்ல தருமஞ்செய்திருப்

போமாயின் இக்கஷ்டங்கள் வருமோ வென்று சிறிது வருத்தத்தின் பயன் ஆராய்ந்தும் அவசமுறும் அச்சமசத்தில் சண்டாளன் சொல்லி. யனுப்பிய ஏவலைச்செய்யாமலிருக்கின்றேமே இது வென்னகொடுமை யெண்ணி அச்ச முற்று இனி யதனைச் செய்வேனென்று துணிவான், மறபடியும் நாம் தருமத்தில் சிந்தனைவைத் திருப்போமாயின் இக்கதி நமக் குரைமா? உலகில் சுகத்தைக்கொடுப்பது தருமமன்றி வேறுயாதிருக்கின் றது எல்லாச் சுகத்தையும் கொடுப்பது தருமமொன்றே; துக்கந்தருவது தருமத்தை மறத்தலன்றே; என்றெண்ணிச்சோர்வான். இவ்வாறு சோர்ந் தும் தெளிந்தும் சிலநேரங்கழித்து சரீரமுற்றும் அழுக்கடைந்திருப்பதைப் பார்த்து இப்போது நமக்குக்கிடைத்திருக்கும் உத்தியோகத்துக்குத்தகுந்த படி உடம்பும் அமைந்தநே என்றமகிழ்வான். நாம் வந்தபின்னர் எத்தனை பிணங்கள் வந்திருக்கின்றனவோ என்று ஓடிப்போ யெல்லை முற்றும் சுற்றிப் பார்த்து இத்தனைப் பிணங்களென்று கணக்கிட்டும் அதற்கு வரவே ண்டிய பணம் இவ்வளவு என்று தொகுத்தும் இதில் தனக்குச் சேரவேண் டியவை இவ்வளவு எஜமானுக்குச் சேரவேண்டியவை இவ்வளவென்று வருத்தும், அதன் பின்னர் சோதிக்க வேண்டிய பிணங்களைத் தன்கைகளா லாராய்ந்து பார்த்தும் சிறிது ஒப்வான் இவ்வண்ணம் ஓர் கந்தைத்துணி ண்ய அரையிலுடுத்தித்தன் அழுக்கடைந்தமேனியிலே அருவருக்கும் புலால் நாற்றம் வீசப் பிணத்துக்கு வரும் வாய்க்கரிசியை உணவாகக்கொண்டு இரவும் பகலும் நித்திரையின்றி ஆஹா! என்று ஓசையிட்டு ஓர் வருடம் மயானமே இடமாக வர்ழ்ந்துவந்தனன்.

சுலோகம் (33)

இருபத்தாறான்காம் அத்தியாயம் முற்றிற்று.

அத்தியாயம் இருபத்தாறிற்குச் சுலோகம் (1308)

ஹரீம் சிலாயை நம:

இருபத்தைந்தாம் அத்தியாயம்.

மிருதபுத்திரம் பிரதி சந்திரமதி விலாபம்.

சூதர் கூறுகின்றார்:—அரிச்சந்திரன் செய்தி யங்ஙனமிருக்க, அந்தணர்பின்சென்ற சந்திரமதியும், லோகிதாசனும் அவனிடும் வேலைகளைச் செய்து காலம் கழித்து வருநாளில் ஓர்நாள்லோகிதாசன் பிராமணச்சிறுவர்களுடன் பட்டணத்தைவிட்டுப்புறப்பட்டுத் தருப்பையும் சமித்துமுள்ள ஓர் நல்லிடத்தை நாடி வரும்போது அவனெண்ணியபடியே அதிமனோகரமாய் ஓரிடத்தில் தருப்பை தோன்றியது. அதுகண்டுமகிழ்ந்த அவனும்அந்தணச்சிறுவர்களும் அதனை சாஸ்திரப்படி அறுத்து ஒருகட்டாகக்கட்டி, இன்று நமது எஜமானராகிய ஐயருக்கு இது அதிகசந்தோஷத்தை விளைக்குமென்றுகளித்து ஒரு புறத்தில் வைத்துவிட்டு, சமித்துகளையுஞ் சேகரித்துக்கொண்டு பின்னர் இரண்டினையும் தலையில் தூக்கிக்கொண்டு சுமக்கக்கூடாத பெருஞ்சுமையாதலால்அதிகவருத்தத்துடன் நடந்துசென்று தாகங்கொண்டு ஓர் தடாகத்தருகேயுள்ள புற்றுமேட்டில் அந்தச்சுமையையிறக்கித் தண்ணீருண்டு, தாகந்தீர்ந்து மீண்டும் புற்றருகேவந்து அச்சுமையை எடுக்கும்போது விஸ்வாமித்திரருடைய ஆணையால் அதிலுள்ளகருநாகமொன்று அவனைத்தீண்டிற்று. தீண்ட, உடனே விடந்தலைக்கேறி அவன்பூமியில்வீழ்ந்திறந்தனன் அதனைக்கண்ட அந்தணச்சிறுவர்களெல்லோரும்பயந்தோடி அவன் தாயினித்திற் சென்று ஓ பிராமணனுடையவேலைக்காரியே! ஓடிவா, என்று கூச்சலிட, சந்திரமதிநமதுமகனுக்குஎன்ன ஆபத்து விளைந்ததோ; நாம் என்னகேட்க விருக்கின்றதோ; வென்று ஓடோடி வந்தனள். வரவும் அச்சிறுவர்கள் கூறுகின்றனர்.—ஓ வேலைக்காரி! உன்மகன் விளையாடுவதற்கு எங்களோடு வந்தான், பின்பு தருப்பைசமித்துகளைச் சேகரித்து புற்றடியில்வைத்தான். அதை எடுக்கும்போது பாம்பு கடித்து இறந்தான். அவ்விடத்திற்றானே விழ்ந்துகிடக்கின்றான். போய் பார்த்துக்கொள்ளென்று சொல்லிவிட்டு ஓடிப்போயினர்.

இறந்தானென்றஇடியோசைசெவியிற்புகுவதற்குமுன்னமே அவள் வெட்டுண்டவாழை பூமியில்விழுவதுபோல் விழுந்துமூர்ச்சித்துக்கிடக்க எஜமானனாகிய அந்தணன் இதுவென்ன வேஷமடி! என்றுதண்ணீரைத்தெளித்து அவள்மூர்ச்சைதெளிவித்தான். தெளிந்ததும் அழத்தொடங்கும்போது அவன் கூறுகின்றான்:—அடி துஷ்டை! அந்திப்பொழுதில் அழுகின்றனையே,உனக்குஅறிவில்லையா? தலையைவிரித்துக்கொண்டு அலங்கோலமாய்ப் புலம்புகின்றனையே,உனக்கு மானமில்லையா? சீச்சீ வாயைமூடு;என்னிடத்தில்கிரயமாகப்பணத்தைவாங்கிகொண்டு நீ எதற்காக அழுகின்றாய்? அவனாலுனக்கென்னநஷ்டம்? என்னை யல்லவோ அவன்நஷ்டத்துக்கு ஆளாக்கிவிட்டான். நானல்லவே அழவேண்டு. இப்போழுதுயார் குடியைக்கெடுப்பதற்கு அழுகின்றாய்? ஓநீலீ! உன்னுடைய நீலித்தனத்தை நானறிவேன். என்பணத்துக்கு என்ன வழிசொல்லவிருக்கின்றாய்? என்னுடையவேலையையும் நீசரியாகச்செய்வதில்லை அந்தப்பையனோ உன்னிலும்துஷ்டன். இருவருந் துஷ்டர்களாகவே வந்துசேர்ந்தீர்ள் என்று பலவாறாகப்பேசினன். அவன்பேசுவதைப்பற்றியொன்றுமெண்ணாமல் மகனிடத்துப்போகுஞ்செய்தியைச்சொன்னால்என்ன சொல்வானோ;என்னசெய்வானோவென்று நடுங்கி வாய்குழறிக்கொண்டே ஓ சுவாமிகாள்! தருப்பைகொய்து வரப்போன என்மகன் பாம்புகடித்திறந்துவிட்டானாம்; அவனைப் போய்ப்பார்த்து வருகிறேன். உத்தரவுகொடுக்கவேண்டும் என்று கேட்டனள். அப்பிராமணன் மீண்டும்பேசத்தொடங்கினன்:-ஆஹா துஷ்டையே துர்நடத்தையுள்ளவளே! என்னிடத்தில் பணத்தை வாங்கிக்கொண்டு என்வேலையைச்செய்வதற்குமனமில்லாமல்ஏதேதோ சொல்லுகின்றனையே; உனக்கிது பாபம் இதுபுண்ணியமென்பது தெரியாததென்ன; சேவகத்துக்கிருக்கின்றவன் சம்பளத்தை வாங்கிக் கொண்டு வேலைசெய்யாமல் துரோகஞ்செய்வானாயின் அவன்ஒருகற்பகாலம்ரௌரவாதிநரகத்தையனுபவித்துப்பின்னும் கோழியாகப்பிறப்பானென்று சொல்லப்பட்டிருக்கின்றது. பாவத்துக் கஞ்சாதவளாயிருக்கின்ற உனக்கித்தருமங்களைச் சொல்வதனாலென்னபயன்? பாவிகளுக்கும், மூடர்களுக்கும், கொடியவர்ளுக்கும், நீசர்களுக்கும், பொய்யர்களுக்கும், துஷ்டர்களுக்கும் சொல்லுகிறதர்மவசனம் உவர்நிலத்தில் விதைத்தவிதைபோலாகும். பரலோகவிருப்பமிருக்குமாயின் வேலையைவிட்டுப்போய்வருகிறேனென

னச்சொல்லுவையா என்று கோபித்துக்கொண்டான். சந்திரமதி ஓசுவாமின்! கோபங்கொள்ள வேண்டாம்; தயவுடன்சேரும்; மகனிறந்துபோனனென்றால் நான்எண்ணவிதமாயிருப்பேன்? ஐயோ தெய்வமே! ஒஐயா! நீர்போய்வாவென்றுசொல்லும்; ஓர்கணத்துக்குள் வந்து சேருகிறேன் என்று அப்பார்ப்பான் பாதங்களில் வீழ்ந்து புலம்பினள். அவன் மிக்க கோபங்கொண்டு கண் சிவந்துஉன் புத்திரனிறந்தானென்று சொல்லுவதனல் எனக்கென்னமனமிரங்குமா? அவன் எனக்கோர் கடன்காரனல்லவா? அந்துஷ்டனுடைய வார்த்தையைச்சொல்லாதே; அடிதுஷ்டை! மறுபடியும்போய் வருகிறேனென்றுசொல்லுவையேயாயின்சாட்டையாலடிப்பேன்,நான் கோபி என்று நீ அறியமாட்டாயா? வழக்கம்போல் செய்யவேண்டிய வேலையெல்லாம் செய்வதோடு செய்யாது விட்டிருக்கிறவேலைகளையும்இன்றையதினம்செய்துவிடவேண்டும்;இங்கேஅழுதுக்கொண்டிராதே,வேலையைப்பாரென்றுசொல்லினன். மறுபடியும்போய்வருகிறேனென்று சொல்லுவதற்கஞ்சி, சந்திரமதிசெய்யவேண்டிய வேலைகளைஎல்லாம்அதிவிரைவாகச் செய்துமுடித்து,பிராமணன் படுத்தபிறகு அவன்காலுக்கு எண்ணெய்தேய்த்துக் காலைப்பிடிக்கும்பொழுதுபாதிராத்திரியாயிற்று.அச்சமயத்தில்அவ்வந்தணன் அவள்வேலைசெய்துவருவதைநோடுபுத்திரசோபத்தலைக்கொண்டுமயங்குவதையும் கவனித்துச்சிறிது இரங்கினவனுப் அவளைப்பாராத்து, அடீ! துஷ்டை! நீ சீக்கிரமாய்ப்போய் உன்மகனைக்கொளுத்திச் செய்யவேண்டிய கடன்களைச்செய்துவிட்டு,விடிவதற்குமுன்வந்து உன்வேலையைப்பார்; உன்வேலையைச்செய்ய இங்குயாருமில்லை, போய்வா வென்றான்.

அச்சொல்லைக்கேட்டவுடன்,புத்திரனைக்கண்டவள்போலெண்ணி, அழுதுகொண்டே யாதொருதுணையுமின்றி வேடன் வலையிற்சிக்குண்டமான்தெய்வகதியாய்த்தப்பியோடுவதுபோல் ஓடி,புற்றுகள்தோறும் போய் அப்பா மகனே! அடா! குழந்தாய்! என்றுகதறிக்கதறித்தேடினள். தேடித் தருப்பைச் சுமையின்மேல்விழுந்துகிடக்கும் தண்ணருமந்த மகனைப்பார்த்து வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு பதறிப் பதறி ஓ மகனே! பாம்பு கடித்தபோது அம்மாவென்று என்னையழைத்தனையோ? அப்பாவென்று அரசனை யழைத்தனையோ? அடாமகனே! ஒருவரும்உதவாபரிபோ

யினமோ இதோநான்வந்திருக்கின்றேன் என்னென்திரேவா!மகனே மகனேஎன்றுநான் அழைக்கின்றேனே ஏன்வராமலிருக்கின்றாயென் றுபலவாறுகப் புலம்பி பிணத்தின்மேல்விழுந்து மூர்ச்சித்துப் பிணத்தோடு பிணமாய்க்கிடந்து பின்ஒருவாறுதெளிந்து மகனை யெடுத்துமார்போடணைத்துமுகத்தோடு முகம்வைத்து அழுதாள். பின்னர்ப்பூமியிற்கிடத்தி ஐயோ! ஐயோ! என்று கதறி, ஓ எனது நாயகனே! எங்கேயிருக்கின்றீர்?உனது மகன் இறந்துகிடக்கின்றானே! ஓடிவாரும். இவன் உமது பிராணனல்லவா! எப்படிவிட்டிருக்கின்றீர்! உமக்குவந்துசொல்லுவா ரொருவருமில்லையா! நீர்வந்தால் ஓர்சமயம் எழுந்திருப்பான் போல் தோன்றுகின்றதே! அப்பாமகனே! இதோ உனதுதந்தைவந்தார், பார்க்கின்றீலையா வென்று அவனையெடுத்து முகத்தையுற்றுப்பார்ப்பாள் ஏது இவனிறந்தவன்றுன்றென்றறிந்து மூர்ச்சித்து அவனைத்தானும் வீழ்வாள். மறுபடியும்எழுந்து அவனையெடுத்துஅழுவாள்:—ஓகுழந்தாய்! ஏன்இன்னம் உறங்குகின்றாய்? விழித்துக்கொள்; நரிகளுடைகூச்சல் மேலிட்டிருக்கின்றது. அதுவோ பயங்கரமாகவிருக்கின்றது. அந்தக்கூச்சலே யன்றிப்பூதபிசாசங்களுடைய கூச்சல்களும் கிளம்பிவிட்டன;உன்னுடைய நேசர்களோ ஒருவருமில்லை;நீதனித்திருக்கின்றாய். நான்உன்னைப் பலவாறுக வழைத்தும் நீ ஒன்றும் செல்லாமலிருக்கின்றனையே. நீ என் மகனல்லவா! உனக்குநான் தாயென்று தெரியவில்லையா! இராஜ்யத்தை யிழந்ததனாலும், அரசனை யிழந்ததனாலும், அடிமையான தினாலும் உண்டானதுன்பங்களெல்லாம் உனது முகத்தைப் பார்த்தல்லவா நான்மாளையொழித்துவந்தேன். களித்து மிருந்தேன். நீ ஜனனமானகாலத்தில்அந்தனரெல்லாம் உன்னைத்தீர்க்கமான ஆயுளுடையவனென்றும், இப் பூமண்டலத்தையாண்டு புத்திரபவுத்திர பாரம்பரியத்தோடு கூடி மஹா சவுரியவந்தனாய்கொடையாளியாய் குருதெய்வம் அந்தணர் முதலியோரருடைய பூஜையை விசேஷமாகச்செய்து தாய்தந்தைகளாகிய எங்களுடைய மனத்தைக் களிப்பிப்பானென்றும் சொன்னார்களே;, அவையெல்லாம் பொய்த்துப் போயினவே. உனது கால்களிலும் கைகளிலும் சக்ரரேகை, சத்திரரேகை, ஸ்ரீவச்சரேகை, கலசரேகை முதலான சுபரேகைகள் யாவும் இருந்தனவே. அவைகளைக்கண்டு நான் மகிழ்ந்தேனே. அக்குறிகளை நீ யடையப் பெற்றதற்குரியபிரயோஜனம் இங்கே கிடப்பதுதானே என்பாள்.

தனஞ்சயனே நினைந்து ஓமஹாராஜனே! பூமண்டலத்தையாளும் பிரபுவே! உம்முடைய ராஜ்யமும், மந்திரிகளும், நீர் வீற்றிருக்கும் சிங்காசனமும், வெண்கொற்றக்குடையும், செல்வமும், சதுரங்க சேனைகளும் எவ்விடத்திற்போயின? என்னையும் மகனையும் விட்டு விட்டு நீர் எங்கேபோயினீர்? ஓ என்னையனே! உமக்கு இனிமை யானவனை மகனைப்பாரும். குங்குமப் பூக்குழம்புபடிந்திருக்கும் மார்பில் மண்தூசுபடிந்திருப்பதையும், உமதுமடியிலிருந்துஉமது நெற்றியிலுள்ள கஸ்தூரிப்பொட்டைக் கலைக்குங்காலானது இப் போதுமண்மேட்டிலிருக்கின்றதையும் பாரும். இவன்மண்ணில் விளையாடுங்காலத்தில் மண்படிந்திருக்கும் முகத்தைக்கண்டு ஆசை யோடும் ஓடிவந்து நான்முத்தமிடும் முகத்திலே இப்பொழுது ஈக்களும் புழுக்களும்மொய்ப்பதைப்பாரும். மகாதரித்திரனுடைய மகன்போல்தரையிலேவிழுந்து இறந்துகிடக்கின்ற கோலத்தைப் பாரும் என்பாள். ஓ தெய்வமே! நான்பூர்வஜன்மத்தில் என்னபா வஞ்செய்தேனை அதன்கசையை இன்னமுங்காணுமலிருக்கிறேனே என்பாள். மகனைப்பார்த்து அப்பாமகனே! அழகான சுந்தரனே! என்றுகூவிக்கதறுவாள். இவளிப்படி யிருக்குஞ் சமயத்தில் நகர் சோதனைக்காரர் அந்தக்கூச்சலைக்கேட்டு ஆச்சரிய மடைந்து அவள ருகில் வந்து நீயார்? இந்தக்குழந்தையாருடையது? உன்கணவன் எவ்விடத்திலிருக்கின்றான்? இந்தக்காட்டில் நீ அச்சமில்லாமல் தனியாயழுதுகொண்டிருப்பதேன்? என்றுகேட்டனர் அதற்கவள் ஒன்றுஞ்சொல்லாமலிருந்தனள். இருக்கவே அவர்கள் மீண்டுங் கேட்டனர்-அப்போதும்உத்தரஞ்சொல்லாமல் அழுதுக்கொண்டே இருந்தாள். ஓ ஜனமேஜயனே! அந்தகர்ச்சோதனைக்காரருட் சிலர் அவளிடத்தில் வேறுவிதமானசந்தேகமும்அச்சமுங்கொண்டு தங் களுடைய தேகங்களில் மயிர்சிலிர்க்க ஆயுதங்களையெடுத்துக்கொ ண்டு ஒருவரையொருவர் பார்த்துக்கூறுகின்றார்:—இவள் சரி யான ஸ்திரீயாகத்தோன்றவில்லை; எது கேட்டாலும் பதிலுஞ் சொல்லவில்லை; இந்தக்குழந்தையை இவள் தான் கொன்றிருக்க வேண்டும். இவளை நாம் எவ்விதமுயற்சியினாலாவது கொன்று விடவேண்டும். இவள் நல்லகுலவதியாயிப்பாளானால் இரவில் பட்டணத்தை விட்டுவெளியில் வந்திருப்பாளா? இவள், தான் தின்னுதற்காக யாருடையகுழந்தையையோ கொன்று விட்டு இப் பொழுது யாதுகருதியோ அழுகின்றாள். இவ்வழுகையை நாம்

உண்மையாக நம்பக்கூடாதென்றுசொல்லி அவள் தலைமயிரைச் சிலர் இழுத்துப்பற்றினர்; சிலர் இரண்டு கையையும் இரண்டு பக்கத்திலும் பிடித்துக்கொண்டனர்; சிலர் கழுத்தைப்பிடித்தனர்; சிலர் இவள் ஆகாயத்தில் பறந்துபோனாலும் போவாளென்று மேலே ஆயுதங்களைப் பரப்பினர். சந்திரமதியை இவ்வண்ணங்காவலுக்குள்ளாக்கிச் சண்டாளனிடத்தில் கொண்டுபோய் ஓ சண்டாளனே! இவள் ஊருக்குப்புறம்பான வெளியிலே ஓர் குழந்தையைக் கொன்றுவிட்டுக் கொல்லாதவள்போல் கூக்குரலிட்டிருந்தாள்; நாங்கள் கண்டு பிடித்தோம் இவளை நீ தூரத்திற் கொண்டுபோய் கொலைசெய்யவேண்டுமென்று சொல்லி அவளை அவனிடத்தில் ஒப்புவித்தனர். அப்போது அந்தச் சண்டாளன் கூறகின்றான்:—ஆஹா! இவளை நான் நன்றாயறிவனே! இந்தவுலகில் இவள் கொலைசெய்யும் பாதகி என்று யாவருமறிவரே இதுவரையிலிவள் ஒருவர் கையிலு மகப்படாமலன்றே உலாவிவந்தாள்? ஓ காவலாளிகளே! அநேகருடைய குழந்தைகளை ஆகாரமாகக்கொண்டிருக்கிற இவளைநீங்கள் பிடித்ததனால் உங்களுக்குமஹாபுண்ணியமும்உலகத்தில்நல்லகீர்த்தியும்உண்டாகும். பிராமண ஹத்தி செய்தவனையும், ஸ்திரீஹத்தி செய்தவனையும், பொன்திருடுகின்றவனையும், தீ இடுகின்றவனையும், மார்க்கத்தில் படுகுழிசெய்கின்றவனையும், மதுபானஞ் செய்கின்றவனையும், குரு பத்தினியையனுபவிக்கின்றவனையும், வெகுஜனங்களுக்குவிரோதமான காரியங்களைச் செய்கின்றவனையும் கொலைசெய்கின்றவருக்கு மஹாபுண்ணிய முண்டென்று சொல்லப்பட்டிருக்கின்றது மேற்சொன்ன பாவிகள் கொல்லக்கூடாதஅந்தணராயினும், ஸ்திரீகளாயினும்அவர்களைக்கொல்வதிலல்லாதொருசந்தோஷமுமுண்டாகமாட்டாதென்பது நிச்சயமே; ஆகையால் உங்களால் கொண்டுவரப்பட்ட இவளை நான் கொன்று விடுகிறேன். இது எனக்கும் மஹாபுண்ணியம்; நீங்கள் இனிச் சுகமாய்ப்போய் வாருங்கள் என்று சொல்லிவிட்டு, உடனே அந்தச்சந்திரமதியை மிக்கவலியகயிற்றாற்கட்டித் தலைமயிரைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, கல்ல மணிக்கயிற்றை மடித்துத் தனது கைசலிக்கவடித்தான். பின்பு அரிச்சந்திரனைப்பார்த்து அடா வேலைக்காரனே! இந்தத்துஷ்டஸ்திரீயை நீயாதொருஆலோசனையுஞ் செய்யாமல் கொலைசெய்யவேண்டும்; கொண்டுபோவென்றான். அரசன் அந்தச்சொல்லைக்கேட்டுத்திடுக்கிட்டுஸ்திரீவதைசெய்வதற்கஞ்சி

கடுக்கத்துடன் தனது எஜமானனுகிய சண்டாளனைப்பார்த்துக் கூறுகின்றன்:—இவ்வேலை செய்ய என்னலாகாது: வேறு எவ்விதமான வேலையைச் செய்யச்சொன்னலும் அதனை நான் செய்வதற்கஞ்சமாட்டேன்; அது சாத்தியமானதாயிருந்தாலும் அசாத்தியமானதாயிருந்தாலும் அதனைச் சொல்லுவீராயின் இப்பொழுதே செய்கிறேன்; அதற்கு நான் பின்னிடேன் என்று சொல்லினன். சொல்லவும், அந்தச் சண்டாளன் கூறுகின்றன்:—ஓ வேலைக்காரனே! நீ ஏன் இதற்குப் பின்னடைகின்றாய்; இவளைக் கொல்லுதற்குப் பயந்தோ! பாவத்திற்குப் பயந்தோ! கொல்லுவதற்கென்றால், இதோ உன்கையில் கத்தியிருக்கின்றது; அதற்குமுன் இவள்என்ன செய்யலாம்நீ அஞ்சாதே!பாவத்துக்கென்றால்,இவள்சிசுக்களையெல்லாம்கொன்றவள்; இவளைக்கொல்லாது விடுவதுதான்பாவமேயன்றி கொல்வது பாவ மன்று. இனி நீ நான் சொல்லியபடி தாமசஞ் செய்யாமல் இவளைக் கொண்டுபோய்க் கொலைசெய்வாயாக வென்றன். அதுகேட்ட அரசன் ஓ எஜமானனே! தருமசாஸ்திரமறிந்த முனிவர்கள் எவ்விதமான குற்றஞ்செய்தாலும் ஸ்திரீகளைக்கொலை செய்யக் கூடாதென்றும் அவர்களைக் காப்பாற்றவே வேண்டுமென்றும், அறிந்தேனும் அறியாதேனும் ஸ்திரீகளைக் கொலை செய்வானுயின் அவன் ரௌரவ மென்னும் கொடிய நரகத்தை யடைவானென்றுஞ் சொல்லுகின்றார்களே! அச்சொல்லானதுஎன்னை இப்போது தடுக்கின்றதேயன்றி வேறொன்றுமில்லையென்றன். சண்டாளன் அதுகேட்டுக் கூறுகின்றன்:—அடாமூடா! அநேக சிசுக்களைக்கொன்று அந்தச் சிசுக்களுக்குரிய தாய் தந்தையரை சாவுமளவுந் துக்கத்தில் மூழ்கியிருக்கும்படியாகச்செய்த இவளுக்கா அந்தத் தருமம்? இவளுக்கன்று; ஆகையால் நான் சொல்லியபடி இவளைக் கொலை செய் என்றன். மீண்டும் அரசன் ஓ எனது பிரபுவே! நான் ஸ்திரீகளைக் கொலைசெய்வதில்லை என்கிறவிரதத்தைஜன்மவிரதமாகவைத்திருக்கின்றேனைதலால் இவளைக் கொலைசெய்யே னென்றன். அதுகேட்ட சண்டாளன் அதிக கோபங்கொண்டு அடா துஷ்டா! என் சம்பளத்தை வாங்கிக்கொண்டு என் வேலையைத் தடை செய்கின்றனையே! இது துஷ்டத்தனமல்லவா! எவனுவது எஜமானனிடத்தில் சம்பளத்தை வாங்கிக்கொண்டு அவனிடும்வேலையைச் செய்யாது! தடுப்பானேயானால் அவன் நரகக்குழியினின்றும் ஒரு நாளுங் கரையேற மாட்டானென்று தருமசாஸ்திரங் கூறவில்லை

யா? அதற்கென் செய்வா யென்றான். அரசன் ஐயா! நான் எனக் குள்ள விரதத்தைச் சொன்னேனேயல்லது நீரிடும் வேலையைச் செய்யேனென்று சொல்லவில்லையே! இப்பொழுதும் இந்த ஒரு ஸ்திரியைத் தவிர வேறு யாரைக்கொலையைச் செய்யச் சொன்னாலும் அதைச்செய்யச் சித்தமாயிருக்கின்றேன்; உம்மால் கொல்லப் படவேண்டிய சத்துருமகா வீரனாயிருந்தாலும் அதற்கஞ்சேன்; அவனை ஓர் கணத்திற் கொன்று அவனது பூமி முதலானவற்றை யும் உமதுடைமையாக்குகின்றேன்; அன்றி, விண்ணுளும் தேவேந் திரனாயினும் அவனையும் அப்படியே செய்கின்றேன். என்ன செய் யச்சொல்லுகின்றீரென்றான். சண்டாளன் மிக்க கோபங்கொண்ட வனைக் கூறுகின்றான்:—அடா! நீ எனக்கு அடிமையாளாகவிருக்க அதற்குத்தக்க வார்த்தையைச் சொல்லாமல் வீரத்தில் மிக்க சூரர்கள் பேசத்தக்க வார்த்தையைப் பேசுகின்றனையே! அடா நாணமில்லாதவனே! அடா மூலிக்காரனே! உனக்கேன் இந்த அகங்காரம்? கொலை செய்வதற்கஞ்சும் நெஞ்சைப்படைத்த நீ கொலை செய்வதற்கஞ்சா நெஞ்சைப்படைத்த பறையனுக்கு ஏன் அடிமையாயினாய்? என்னிடத்தில் பேடியைப் போலி ருக்கின்ற நீ வீரத்தைப்பேசுவதனால் என்ன பிரயோஜனம்? இப் பொழுது நான் சொல்லும் வார்த்தையைக்கேள். இதோ இக்கூர் மையான கத்தியை வாங்கிக்கொண்டு இவளுடைய தலையை அஞ் சாமலறுப்பா யென்று பலவந்தகாரமாய் அரசன்கையில் அதைக் கொடுத்து ஓட்டினான்.

சுலோகம்(89)

இருபத்தைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

ஹ்ரீம் பதாரா த்யாயை நமஃ

இருபத்தாறும் அத்தியாயம்.

* சந்திரமதிஹரிச்சந்திரயோரன்யோன்யவிஞ்ஞானம்.

சூதர் கூறுகின்றார்:—ஓ முனிவர்களே! சண்டாளன் கட்டாயப்படுத்திக் கத்தியைக்கொடுக்கப் பெற்றுக்கொண்ட அரசன், தலை வணங்கிக் கொண்டுநிற்கும் சந்திரமதியைப் பார்த்து ஸ்திரீகளைக் கொலைசெய்வதில்லை யென்கிற விரதத்தை மேற்கொண்டிருந்த என்னைக்கெடுக்க வந்தபெண்ணே! மஹா பலிஷ்டனை என்னெதிரில் அங்கே உட்காருவாய், உன் தலையைவெட்ட எனது கைக்குச் சக்தியிருக்குமாயின் நான் வெட்டித் தள்ளுகிறேன் என்றுசொல்லிக் கத்தியை உயரத்தூக்கி வெட்டப்போயினன். அப்போதவள் தன்னுடைய மரணத்தை விரும்பினவளாயிருந்தும் புத்திரன் மரணத்தை யெண்ணி அரசனை நோக்கிக் கூறுகின்றாள். ஓ சண்டாளனே! ஸ்திரீ அத்திக்கு நீ அஞ்சினவனுயிருப்பது உண்மையேயாயின்உனக்கொரு வார்த்தை நான் சொல்லுகிறேன். அதனைக் கேட்டுப் பின் உன்னிஷ்டப்படி செய்வாய். இந்தப் பட்டணத்துக்குச் சமீபத்தில் என் பிள்ளை இறந்து கிடக்கின்றான். அவனை எடுத்தவந்து உனது சமீபத்தில் கொணுத்திவிடுகிறேன். அவ்வளவுகாலம் நீ பொறுத்துக் கொண்டிருந்தபின்னர் என்னை வெட்டிவிடு இதுதான் நான் உன்னை வேண்டிக்கொள்வதென்ன; அரசன் அப்படியே போய்வா வென்றனுப்பினன். அவள் மிக்க வன்னெஞ்சுடையாரும் கண்ணீர் விட்டழும்படியாயழுதுகொண்டே பிணமாய்க்கிடக்கும் குழந்தையினிடத்திற்சென்று ஆபுத்திரனே! என் மனதுக்கினியவனே! ஓ பாலகனே! என்றுதலைமயிர்புழுதிபடப்பூமியிற்புரண்டுபுரண்டழுது மகனை வாரியெடுத்துக்கொண்டு மயானத்திற்கு வந்து பெருங் கூச்சலிட்டழுதாள்.

அரசன் அழுகைக் குரற்கேட்ட அவ்விடத்திற்குப் போய் அந்தச் சவத்தினுடைய வஸ்திரத்தை இழுத்தான். இழுக்கவும், குழந்தையினுடைய ரூபலாவண்ணியங்கள் தோன்றின. இவன் யா

* சந்திரமதியும் அரிச்சந்திரனும் ஒருவரையொருவர் அறிந்துகொள்ளல்.

ரோ அரசனெருவனுக்கு மகன்போற்காணப்படுகிறான் என்று மனதில் சிறிது சந்தேகமடைந்து நன்றாய்ப்பார்த்தான். அக்குழந்தை பூரண சந்திரன் போன்ற முகமும், மிகவுயர்ந்தநாசியும் கண்ணாடி போன்ற கன்னங்களும், கறுத்துச் சுருண்டு ஓரளவாகநீண்டு அலை போலவணங்கிய தலைமயிரும், தாமரைப் பூப்போன்ற கண்களும், கோவைக் கனிபோன்ற உதடும், பரந்தகன்ற மார்பும், பிரமாணப் படி நீண்ட கைகால்களும், மலைபோலப்பருத்த புஜங்களும், அகன்ற பாதமும், மென்மையான விரல்களும், கம்பீரமான நாபியும், பெருத்த கழுத்து முடையதாயிருப்பதைப் பார்த்து இவ்வரிய சுவை பாபிஷ்டனை யமன் காலபாசத்தினற் கட்டிக்கொன்றுவிட்டானே என்று மனங்கலங்கிக்கொண்டே நமது லோகிதாசன்சந்திரமதியினுடைய மடியிலிருக்கும்பொழுது இவனைப்போலுங் காணப்பட்டானல்லவா வென்று தன்மகனை நினைத்துக் கண்ணீர்விட்டுப் பின்னர் இவன் நமது மகன்றானே? அவனைத்தான் யமன் தன் ஸ்வாதினஞ் செய்துகொண்டானே என்னவோ வென்றெண்ணி ஓவென்றலறிக் கூச்சலிட்டு நின்றான். அப்போது சந்திரமதி மஹாதுக்கத்தினால் புலம்பலாயினள்:—ஹா! காசிபகுலத்திற் பிறந்த என்மகனே! இந்த கோரமானதுக்கம் எனக்கு யாரிட்ட சாபத்தினால் நேரிட்டதோ தெரியவில்லையே! ஓமஹாராஜாவான எனதுபர்த்தாவே! யான்படும் இந்தத்துக்கத்துக்குக் கரைகண்டிலேன். என்னைவிட்டுப் பிரிந்து நீர் எவ்விடத்திலோ சுகமாகவிருக்கின்றீர்! அதற்குக்காரணம் என்னவோ தெரியவில்லையே. பிரஹ்மாவே! அரிச்சந்திரமஹாராஜாவுக்கு சகல பரிஜனங்களோடு ராஜ்யநாசமும் மனிஷிமகன் விக்கிரயமுமாகிய மஹாதுக்கபரம்பரையை எப்படிநீ செய்யத் துணிந்தனையோ! என்று பிரலாபித்தனள். அந்தப்பிரலாபத்தைஅரசன்கேட்டு அவள் தன்பத்தினியே யென்றும், இறந்துபோன குழந்தை தன் மகனே யென்றுந்தெரிந்துகொண்டு மஹாதுக்கத்தோடு மூர்ச்சையடைந்து கீழேவீழ்ந்தான். அவன் சோகித்து வீழ்ந்ததன்மையை சந்திரமதி கண்டு இவர் நமது பர்த்தாவாக வேண்டுமென்று தெரிந்துகொண்டு உடனே மூர்ச்சையடைந்து கைகால் அசைவின்றிப் பிணம்போற் கிடந்தாள். இருவரும் சிறிதுநேரம் சென்றபின்னர் மூன்றுணர்ச்சியடைந்தவர்களாய்க் கண்விழித்து ஒருவரையொருவர் பார்த்து அடங்காத்துயரங்கொண்டு புலம்பி அரசன் பிரலாபிக்கின்றான்:—

ஆ மகனே! முன்னெற்றி மயிர்சுருண்டு மிகவும் அழகுபெற்ற உன் முகத்தைக் கண்டு மகிழ்ந்த என்னுடையமனது இப்பொழுது ஏன் பிளந்து போகாமலிருக்கின்றது ஒ குழந்தாய்! நீ அண்ணு! அண்ணு வென்று சொல்லிக்கொண்டுவர உன்னை நான் குழந்தாய் குழந்தாய்! என்றெடுத்து அன்போடுகட்டிக் கொண்டு இனி எப்போது சந் தோஷமடையப்போகின்றேன். என்னப்பனே! உனது முழங்கா லிற்படிந்திருக்கும் தூசிகளால் என்னுடைய ஆடையும் சரீரமும் எப் போது அழுக்காகப்போகிறது. சர்ப்பமானது உன்னைக் கடித்த தென்று சொன்னாளே அது உன்னைக்கடிக்கவில்லை, இராஜ்ய முத லியசகல சம்பத்தையுமிழந்து உன்னையுமிழந்து உனது தாமரை மலர்போன்ற முகத்தைப் பார்த்து புலம்புகின்ற என்னைக் கடித்ததென் றுசொல்லி, மகனை யெடுத்து மார்பிலணைத்துக் கொண்டு மறுபடி யும் மூர்ச்சையடைந்து வீழ்ந்தான். வீழ்ந்த அரசனைப் பார்த்து இவரை முன்னை நமது பர்த்தாவென்று யூகித்தோமே அது உண் மையே; இவர் குரலே இப்போது நிச்சயமாய்த் தெரிவித்துவிட்டது, அப்படியே இவரது எள்ளுப்பூப்போன்ற அழகியமூக்கும், முல்லை மலர்போலப் பிரகாசிக்கும் பற்களும் தெரிவிக்கின்றன என்று, ஒரு வாறு புத்திரசோகத்தை மறந்து நமது பர்த்தாவே இவரானால்மய னத்துக்குவாவேண்டிய காரணமென்னவென்று ஆச்சரியமுற்று புத்தி ரதுக்கத்தோடு பர்த்தாவினுடைய துக்கத்தையு மேற்கொண்டவ ளாய்ப்பூமியில்வீழ்ந்து கிடக்கும் பர்த்தாவைப்பார்த்து, நாக்குழறி க்கொண்டேவருந்துகின்றாள் ஒதெய்வமே! தையில்லாதவனே! மரி யாதையறியாதவனே! நாணமில்லாதவனே! உன்னைச்சுடவேண்டும். தேவருக்குச்சமானமான இந்தவரசனைக்சண்டாளனைக்செய்துவிட் டனையே;இராஜ்யநாசத்தையும், பந்துஜனப்பிரிவையும், புத்திரகளத் திரவிக்கிரயத்தையும், செய்தனபோதாது. இப்போதுசண்டாளனை வும்செய்துவிட்டனையே; ஒபர்த்தாவே!உமதுகுடையெங்கே? சிங்கா சனமெங்கே? சாமரை விசிறிகளெங்கே? ஆஹா! தெய்வம் என்ன கஷ்டத்தைக்கொண்டுவந்து விட்டது. ஒஅரசனே! நீர்பூமியில்நடக் கத்தொடங்குவீராயின் இராஜாக்களெல்லாம் அடிமையாட்களைப் போல் தங்கள் தங்கள் உத்தரியங்களால் பூமியைத் துடைப்பார் களே; அத்தன்மையான செல்வம்படைத்த நீர் இப்போது மண் டையோடும் பாணியோடும் கந்தைத்துணியும்பிணமாலையும்தலைமயி ரும்எலும்பும் பிணச்சாம்பலும் நிறைந்திருக்கிற இந்தப் பயமான

மயானத்தில் உள்ளங்கால்தேய நடக்கலாயிற்றே! பலவாத்தியவோசைகளைக்கேட்ட காதுகள் கழுதுகரி முதலியவற்றின் வெடிகுரல்களைக்கேட்கலாயிற்றே! அகிற்புகைமுதலிய நறுமணங்களையுணர்ந்த நாசி பிணப்புகையின் நாற்றத்தை யுணரலாயிற்றே! கல்ல மஹான்களாகிய பெரியோர்கள்உலாவும் புண்ணியபூமியில் சந்தோஷத்தோடுலாவிக்கொண்டிருந்த கால்கள் பிணத்தைப் பிடிங்கித்தின்னும் இராக்ஷசர்களுலாவும் இந்தமயானபூமியில் துக்கத்தோடுஞ் சஞ்சரிக்கலாயிற்றே! என்றிவ்வாறுசொல்லி அரசன் கழுத்தைக்கட்டிக்கொண்டு மிக்கதுக்கத்துடன் அழத்தொடங்கினாள். ஓ அரசனே! இந்தத்துக்கமெல்லாம் எனக்குச் சொப்பனத்தி லுண்டாகின்றதா வாஸ்தவத்தி லுண்டாகின்றதா வென்று சொல்லும் என்னுடைய மனம் மயங்கிக்கிடக்கின்றபடியால் அதனையறிந்துகொள்ள இப்போதெனக்குச் சக்தியில்லை. நீர் அடைந்திருக்கும் இந்தக்கஷ்டம் சொப்பனமன்றி உண்மையேயானால் தருமஞ்சகாயஞ்செய்யுமென்பதுபொய்யே பிராமணபூஜையும் தேவபூஜையும் சத்தியவசனமையுமாகிய இவைதருமமென்பதும் பொய்யே; தருமத்தையே செய்த நீர் இப்படி ராஜ்யத்திலிருந்து நீக்கப்பட்டு துக்கத்தை யனுபவிக்கின்றீராகையால் தருமமுமில்லை சத்தியமுமில்லை. இவ்வண்ணம் சொல்லுகின்ற சந்திரமதியினுடைய வார்த்தையை அரசன்கேட்டுப் பெருமூச்செறிந்து வாய்குழறிக்கொண்டே தான் சண்டாளனை வரலாற்றை அவளறியச் சொன்னான். அதுகேட்ட அவள் அடங்காத்துயரங்கொண்டழுது மனம்வெம்பி நெடுமூச்சுவிட்டுப் பிள்ளையிறந்துபோன சங்கதியைக் கிரமமாய்க்கூறினாள். கூறக்கேட்ட அரசன் மூர்ச்சித்துப் பூமியில்விழுந்து சிறிதுநேரங்கழியத் தெளிந்தெழுந்து புத்திரனெடுத்து முத்தமிடும்போது சந்திரமதி அரசனைநோக்கிச் சொல்லுகின்றாள். ஓபிரபுவே! இப்போது புத்திரனை வைத்துக்கொண்டு நீர் புலம்புவதுதருமமன்று. எழுந்து என்னுடைய சிரசை அறுத்து உமது பிரபுவினுடைய உத்தரவை நிறைவேற்றிவிடும். எஜமானத்துரோகம் உமக்குண்டாகக்கூடாது. உமக்கு எந்தவிதமான கெடுதி வந்தாலும் சத்தியவாதியாயிருத்தல் வேண்டும். அசத்தியமும் பிரபுத்துரோகமும் மஹாபாபமாகையால் அவற்றை நீர் செய்யவேண்டாமென்றாள். அந்த நீதிமொழியை அரசன்கேட்டு மூர்ச்சித்து விழுந்து ஒருகணநேரம் பொறுத்து உணர்ச்சிவரப் பெற்று மிக்கதுக்கத்

தோடு கதறி எனக்கு இஷ்டமானமனைவியே! இந்த நிஷ்டூரமான வார்த்தையை எனக்கெப்படிச் சொன்னாய்? எக்காரியத்தை நான் செய்யத் தகாதோ அதை என்னைச்செய்யச்சொன்னாய். நீ சொன்னாலும் அதனை நானெப்படி செய்யக்கூடுமென்றான். அதற்கவள் நான் பார்வதிதேவியையும் தேவர்களையும் பிராமணர்களையும் பூஜைசெய்திருக்கின்றேனாதலால் உம்மால் இப்போது வெட்டப்பட்டாலும் மறுஜன்மத்தில் நீரே எனக்குப் பர்த்தாவாகப்போகிறீர். ஆனபடியால் நான் சொன்னபடி செய்யுமென்றாள். அரசன் அம்மொழிகேட்டு மூர்ச்சித்துப் பூமியில் விழுந்து பின்னர்த் தெளிந்து இறந்த புத்திரனுடைய முகத்தை முத்தமிட்டுக் கூறுகின்றான்:—ஓ எனக்கு இஷ்டமான பிரியே! புத்திரனையு மிழந்துபோனாய் உன்னையு மிழப்பேனாயின் நான் பூமியிலிருக்குமளவும் துக்கத்தை யனுபபேனேயன்றி வேறென்ன அனுபவிக்கப் போகின்றேன்! அது எனக்கிஷ்டமில்லை. அக்கினிப்பிரவேச மாகின்றேன். அந்தோ! அது செய்வதற்கும் நான் சுவாதீனனாயில்லாமல் சண்டாளனுக்காளாயிருக்கின்றேனே. இனி அச்சண்டாளனால் உத்திரவு கொடுக்கப்படாமல் அக்கினியிற் பிரவேசிப்பேனாயின் மறுஜன்மத்தில் சண்டாளதாசனாக விருந்து இறந்தபின்னர் நரகத்திற்காளாவே னன்றோ! எவ்விதத்தும் என்னைத் துக்கம் விடாததாகக் காணப்படுகின்றபடியால் பிராணனைவிடுவதே நலமென் றெண்ணுகிறேன். ஐயகோ! வம்சவிர்த்தியைச் செய்வதற்கு ஒரு குழந்தை யிருக்கிறா னென்கிற தைரியத்தால் நானிந்தச் சண்டாளனுக்கு அடிமையாயினேன். ஊழின்பலத்தினால் அக்குழந்தையும் இறந்து போயவிட்டான். இதற்குச் சமானமான சோகம் மூன்றுலகத்திலும் அசிபத்திரவனத்திலும் வைதரணிநதியிலுங் கிடையாது ஆதலால், பிள்ளையினுடைய சரீரத்தைக் கொள்ளுகிற அக்கினியில் நானுங் குதித்துவிடுகிறேன். இப்போது நீ பொறுத்துக்கொள்ளவேண்டியது. இதற்கு மேல் நீ பதிலொன்றுஞ் சொல்லவேண்டாம். தரமரைமலர்போலுங் கண்ணுள்ளவளே! நீ மனதை எவ்விடத்தும் விடாமல் என்னுடைய வார்த்தையைக் கேட்பாயாக என் உத்திரவு பெற்றவளாய்ப் பிராமணனுடைய வீடுபோய்ச் சேர்வாயாக; நீ தானம் செய்ததும் ஹோமஞ் செய்ததும் பெரியோர்களைப் பூஜித்ததும் உண்மையாயிருக்குமாயின் பரலோகத்தில் நீ புத்திரனோடு வந்து சேருவாய். பின்னர் நாம் மூவரும் அயோத்திக்கும் போகோம்; சேரிக்கும்

வரமாட்டோம். ஓபெண்ணே! நாமிருவருங்கூடிக்கலந்திருந்தகால த்தில் அந்தரங்கத்தில் உன்னை ஏதாவதுவருத்தப்படுத்தியிருப்பே னுயின் அவையெல்லாம் பொறுத்துக்கொள்ளவேண்டும். நாம்ராஜ பத்தினியென்கிறமமதையினல்பிராஹ்மணனை அனாதரவு செய்யாதே சர்வப்பிரயத்தினத்தினலும்பிரபுவைச்சந்தோஷிப்பிக்கவேண்டிய தென்று அவளுக்குக்கூற வேண்டிய வெல்லாங்கூறி முடித்தான்.

சந்திரமதி ஓராஜருஷியே! நானும் இந்த அக்கினியில் விழுந்து விடுகிறேன் உயிர் வாழ்ந்திருந்து இந்தத்துக்கபாரத்தைச் சகிக்கமா ட்டேன். இப்போதே நானும் உம்முடன் வருகிறேன். உம்மோடு வருவதே எனக்குமிக்கசுபத்தைத்தருவதாகும். வேறுவிதமாயென க்கு நன்மை யுண்டாகமாட்டாது. எனக்குக் கவரவத்தைக் கொடு க்கும்பிரபுவே! சுவர்க்கத்தையாவது நரகத்தையாவது உம்முடனே அனுபவிக்கின்றேனென்றாள். அந்தவார்த்தையை அரசன்கேட்டு அப்படியே ஆகட்டுமென்று அங்கீகரித்தான். சுலோகம் (எச)

இருபத்தாரும் அத்தியாயம் முற்றிற்று.



ஓ

ஹரீங்சர்ப்பாயைநமஃ

இருபத்தேழாவது அத்தியாயம்.

அரிச்சந்திரஸ்ய ஸ்வர்க்க கமனம்.



சூதர்கூறுகின்றார்:—அரசன்காஷ்டத்தை யடுக்கி அதன்மேல் தன்பிள்ளைபைக்கிடத்தித் தன்மனைவியும் தானும் கைகூப்பிக்கொ ண்டு'சதாசிவி' என்னும்பரமேஸ்வரியைப் பஞ்சகோசமத்திலிபிரப் பவளாகவும், புச்சப்பிரஹ்மசொரூபியாகவும், ரக்தவஸ்திரத்தரித்தி ருப்பவளாகவும், கருணைக்குக்கடலாகவிருப்பவளாகவும், நானுவித மான ஆயுதங்களைத்தரித்திருப்பவளாகவும், உலகத்தை ரக்ஷிப்ப தில் ஆவலுள்ளவளாகவும் தியானஞ்செய்தான் அச்சமயத்தில் இந் திரன் சகலதேவர்களுடன் யமதருமனை முன்னிட்டுச் சீக்கிரமாய்

கரு

வந்துசேர்ந்து ஓமஹாப்பிரபுவே! நான்சொல்லும்வார்த்தையைக் கேட்பீராக என்று கூறுகின்றன்:—இவர்பிரஹ்மா, இவர்தர்ம ராஜா, இவர்கள்சாத்தியர்கள், இவர்கள் விஸ்வ தேவர்கள், இவர் வாயுதேவர், இவர்கள் லோகபாலகர்கள், இவர்கள் நாகராஜாக்கள், இவர்கள் ஏகாதசவ்ருத்திரர்கள், இவர்கள் அஸ்வனிதேவர்கள், இவர்கள் விஸ்வாமித்திரர் முதலானமுனிவர்கள், இவர்களெல்லாம் உங்கள் மூவரோடும் உறவாட வேண்டு மென்னும் ஆசையால் வந்திருக்கின்றனர். யாவரினும் விஸ்வாமித்திர மஹாமுனிவர் உன்பால் பிரியாதட்புவேண்டி அதிக ஆவலுடன் வந்திருக்கின்றரென்றன். தருமராஜன் ஓ அரசனே! நீசாகச வேலை செய்யாதே; நான் இயமதருமராஜன்; உன்னைப் பரிக்ஷிக்க வந்தேன், உன்னிடத்திலுள்ள சத்குணங்களைக்கண்டு மிக்க சந்தோஷமடைந்தேனென்றன். அவன் சொல்லிமுடிந்த பின்னர் இந்திரன் கூறுகின்றன்:—ஓ அரிச்சந்திரமஹாராஜனே! நான்தேவேந்திரன்; உன்னாலும் உன்புத்திர பத்தினிகளாலும் அநாதியான புண்ணியலோகம் ஜெயிக்கப்பட்டது. ஆதலால் நீ புத்திரகளத்திரத்துடன் சுவர்க்கத்திற்கு வருவாய் சாதாரணமான மனிதர்களால் அடையக் கூடாத புண்ணியலோகம் உனது நன்னடக் கையால் நீயடையப் பெற்றாயென்று சொல்லி அவமிருத்வையிடைந்து காஷ்டமாகிய மெத்தையின் மத்திபிலிருக்கும் சிசுவின்மேல் அழிர்த வருஷத்தை வருஷித்தான். புஷ்பமாரியும் பொழிந்தது. துந்துபிவாத்தியமுழங்கிற்று. இறந்துபோன புத்திரன் மிருதுவான சரீரமும் தெளிந்தமுகமும், சந்துஷ்டியான மனதுமுடையவனுய்ச் சுகமாயெழுந்துட்கார்ந்தான். அவனை அரிச்சந்திரன்பார்த்துக் கட்டிக்கொண்டு பத்தினியுடன் அரசர்களெல்லாருந்தன்னைச் சூழ்ந்திருக்க இந்திரனல்போடப்பட்ட கற்பகமாலை பூண்டு மகாசுகமும் சம்பூரணமான கோரிக்கையும் பரமானந்தமுமடைந்தவனிருந்தனன். அப்போது இந்திரன் அரிச்சந்திரனை நோக்கி ஓ அரசனே! உன்னுடையபுண்ணிய கர்மங்களுக்குப்பலனை சுவர்க்கலோகத்திற்கு வீவரவேண்டு மென்றன். அரசன் ஓ இந்திரனே! எனக்குப் பிரபுவாகிய சண்டாளனுலே உத்தரவு கொடுக்கப்படாமலும், அவனுடையகடனைத் தீர்க்காமலும் சுவர்க்கலோகத்திற்கு நான் வரமாட்டேனென்றன்.

இயமதருமன் ஓ அரசனே! உன்னுடைய சண்டாளப் பிரபுயானே வேறொருவனு மன்று; உனக்குவரப்போகிறதுக்கத்தைத்

தெரிந்துகொண்டு யானே சண்டாள தர்மத்தையடைந்து அந்தச் சேரியிலுள்ள எல்லாஜனங்களையுங்காண்பித்தேன், நீ சிறிதும் ஐயுறல் வேண்டா மென்று சொல்லும் போது, இந்திரன் ஓ அரசனே! பூலோகத்தில் மானிடர்கள் புண்ணிய கர்மங்கள் செய்து எந்தஸ்தானத்தைவேண்டுகின்றார்களோ அதுநீவேண்டாமலேஉன்க்குவருகின்றது; நீ அங்குவருவாயென்றான். அரசன் கூறுகின்றான்:—ஓ தேவராஜனே! உமக்குநமஸ்காரம்; எனது வார்த்தையைக்கேளும். அயோத்தியாபட்டணத்திலுள்ள மனிதர்களெல்லாம் என்சோகத்தில் மூழ்கியிருக்கின்றனர். அவர்களைவிட்டு யான் சுவர்க்கத்திற்கு எப்படிவருவேன். பிராமணஹத்தி கோஹத்தி ஸ்திரீஹத்தி சுராபானம் இவைகளோடு தன்னைநம்பினவர்களை விடுகிறபாபமும் சமானமாகும். ஆகலான், தன்னைச்சரணடைந்தவர்களை விடக்கூடாது; விட்டால் அவனுக்குச்சுகமெப்படியுண்டாகும். இந்தகியாயத்தால் அவர்களை விட்டுநான் சுவர்க்கத்துக்கு வரமாட்டேன்; நீர்போம். அவர்களோடு வர எனக்கு அனுமதி கொடும்;பிறாஞல் வருகிறேன். நான் நரகத்துக்குப்போனாலும் அவர்களுடன்தான் போவேன் என்றுசொல்ல, இந்திரன் ஓஅரசனே! உனதுபட்டணத்திலிருக்கின்றவர்களுடைய புண்ணிய பாபங்கள் வெவ்வேறுவிதமாயிருக்கும்பொழுது அவர்களுடன் நீவரவேண்டுமென்றுஎப்படியிச்சிக்கின்றாயென்றான். அரசன் கூறுகின்றான்.—ஓ தேவேந்திரனே! அரசனாவன் இராஜ்யம் தனக்குக்கிடைத்திருக்கும் செல்வமகிமையினலன்றோ மகாயாகங்களும் தடாகப் பிரதிஷ்டை மூதலான புண்ணியகருமங்களும் செய்கின்றான். அவையெல்லாம் பிரஜைகளுடைய செல்வவரவாலல்லவா: ஆகலான் எனக்குக்காணிக்கை கொடுத்த சந்தோஷத்தையும் புண்ணியத்தையுங் கொடுத்த அந்தநகரத்தாரை விட்டு நான் சுவர்க்கத்துக்கு வரமாட்டேன். ஓ தேவேந்திரனே! தானம்யாகம் ஜபமூதலானபுண்ணியகருமங்களில் எதைதனல் நான் சுவர்க்கத்தில் நீண்டகாலம் புண்ணியகர்மானுபவம் அனுபவிக்கும்படியாகவிருக்கின்றதோ அப்புண்ணியகர்மானுபவம் உமது தயவினல் நகரத்தாருடன் ஒருநாளனுபவிக்கவந்தாலும் போதுமென்றான். இந்திரன் அப்படியே ஆகட்டுமென்றுசந்தோஷத்தோடுஞ்சொல்லியமதருமராஜன் விஸ்வாமித்திரமஹாமுனி என்னும் இவர்களுடன் அரிச்சந்திரனையழைத்துக்கொண்டு பட்டணம்வந்து அரசனைப்பார்த்து தருமராஜாவினுடைய தயவினல்

உனது நகரத்திலிருக்கும் ஜனங்களெல்லாம் சுவர்க்கலோகத்திற்கு வரலாமென்றான். நகரவாசிகள் இந்திரனிடத்தில் தங்களரசன் சொல்லியவுறுதி மொழியையும், அதற்கு இந்திரன் சொல்லிய இன்னுரையைபுங் கேட்டு அளவில்லாத சந்தோஷத்தை யடைந்தவர்களாய், அவருள்ளவரெவர்சம்சாரத்தில் ஆசையில்லாதவர்களாகவிருந்தனரோ அவர்களெல்லாம் தங்கள் தங்கள் புத்திரர்களுக்கு அதிகாரங்கொடுத்துவிட்டு சந்தோஷத்துடன் தனித்தனி ஒவ்வொரு விமானங்களிலேறிக்கொண்டு பொன்னிறம்பெற்ற சரீரிகளாய்ப் பிரகாசித்து சுவர்க்கத்திற்குச்செல்லச் சித்தமாயினர். அரசனும் தன்னுடாகிய அயோத்திபை யரசாட்சி புரிந்துவரத் தன் மகனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்து அவனையும் ஏனையோரையும் சந்தோஷப்படுத்தித் தேவர்களுக்குங் கிடைத்தற்கரிய கீர்த்தியை நிலைநாட்டி, சிறியமணிகளால்அலங்கரிக்கப்பெற்றதும்நினைக்குமிடங்களில் செல்லத்தக்கதுமான திவ்யமாகிய விமானத்தி லேறினான். அப்பொழுது சர்வசாஸ்திரங்களும் உணரப்பெற்றசுக்கிராசாரியார் அரசனைப்பார்த்து ஓ அரசனே! நீ பொறுமையிற்சிறந்தவன், நீ செய்த தானபலமானது மிக ஆச்சரிய மூடைத்தானது இவைகளினாலன்றோ இந்திரனோடு சமானமாயிருக்கும் பதத்தையடையப் பெற்றனையென்று புகழ்ந்தனர்.

ஓ முனிவர்களே! உங்களுக்கு அரிச்சந்திரனுடைய சரித்திரமுற்றும் எடுத்துரைத்தேன். இச்சரித்திரத்தை எவனொருவன் கேட்கின்றானோ, படிக்கின்றானோ அவன் நாடோறும் சுகமேயடையப்பெறுவான் அன்றியும், சுவர்க்கத்தைவேண்டியவன் சுவர்க்கத்தையும், புத்திரப்பேற்றை வேண்டியவன் புத்திரப்பேற்றையும், நல்லமனைவியை வேண்டியவன் மனைவியையும், இராஜ்யத்தைவேண்டியவன் இராஜ்யத்தையும் பெறுவான் என்று சூதபகவான்கூறினர்.

சுலோகம் - (சஉ)

இருபத்தேழாம் அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீப்பதாபிதாயைநமஃ

இருபத்தேட்டாம் அத்தியாயம்.

சதாக்ஷிமஹிமாநுகதனம்,



ஜனமேஜயன் வியாசமுநிவரைநோக்கிக் கூறுகின்றான்:—கீர்த்திபொருந்திய அரிச்சந்திர மகாராஜனுடைய சரிதம் மிக ஆச்சரியமுளது ஒழிபுங்கவரே! தருமாத்மாவாகிய அந்தமஹாராஜன் அக்கினிப்பிரவேசமாதற்குத் துணிந்தபோது சதாக்ஷியென்னும்பகவதியைத் தியானித்தானென்றீரே அத்தேவி எக்காரணத்தால் அப்பெயருள்ளவளானாள்? அதனைச் சொல்லி என்செவிமம் உய்யும்வண்ணஞ் செய்யும் எவன் தேவிபின்னது குணானுபவத்தைக் கேட்கின்றானோ அவன்எப்போதும் திருப்தியாயிருக்கும் நல்லறிவுடையவனென்றும் அஷ்டமேதபலத்தை அடிக்கடி யடைவானென்றுங் கூறுகின்றபடியால் தேவிவைபவங்களையே மேன்மேலுங் கேட்கவேண்டுமென்கிற ஆவலுள்ளவனாயிருக்கிறேனென்றான்.

வியாசர் கூறுகின்றார்:—ஓ அரச! நீவிரும்பியவாறு சதாக்ஷியினது சுபகரமான உற்பத்தியைக்கூறுகிறேன் கேட்பாய். அன்றியும் நீ தேவிபக்தனாயிருப்பதால் உனக்கு சொல்லத்தகாததுஒன்றில்லை பூர்வத்தில் தீர்க்கமன் என்னும் அசுரன் இரணியாக்ஷனுடைய குலத்தில்வந்த குரு என்பவனுக்குப்பிறந்திருந்தான். அவன்தேவர்களுக்குப் பலமாயிருப்பது வேதம் ஆகவே அவ்வேதம் நாசமடையுமாயின் தேவர்கள் நாசமடைவதற்கு யாதொரு சந்தேகமின்று,ஆகையால் அவ்வேதத்தை நாசஞ்செய்வோமென்று மனதில் நிச்சயித்துக்கொண்டு, இமாலயஞ்சேர்ந்து நான்முகனைத் தியானித்து ஆயிரம் வருடம் காற்றைப்புசிப்பவனாய்த் தவஞ்செய்துவந்தனன். அவனது தபாக்கினியால் சகலலோகங்களுடன் தேவாசுரர்கள் தகிக்கப்பட்டனர். பின்னர் பிரமன் சந்துஷ்டனாய், அம்ஸவாகனரூடனாய் மலர்ந்தமுகத்தவனாய், தன்னைத் தியானிக்கும் அசுரன் முன்தோன்றி, ஓபக்தனே! யான் நான்முகன், நீவேண்டியவரத்தைக் கேட்பாயென, அவ்வார்த்தையைக் கேட்ட அசுரன் தியானத்தை விட்டெழுந்து பிரமனைத்துதித்து, அன்பர்க்குதவும் அம்ஸவாக

னனே! மூன்றுலோகத்திலுள்ள தேவர்கள், அந்தணர்கள் முதலிய வர்களிடத்துள்ள வேதமந்திரம் யாவும் எனக்குச் சுவாதீனமா யிருக்கச் செய்வதோடு, எல்லாத்தேவர்களையும் யான் செயிக்கும் ஆற்றலையும் அளிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தான். பிரமன் அவ் வாறே ஆகுகவென்று கூறி மறைந்தனன். அதுமுதல் பூவுலகில் பூசுரர்களுக்கு வேதங்களெல்லாம் மறந்துபோய் ஸ்நானம் சந்தி ஔபாசனம் சிரார்த்தம் யக்ஜம் ஜபமுதலியவைகளும் இல்லாமற் போயின. போகவே, அந்தணர்களெல்லாம்! ஆ ஹா! இது என்ன விந்தை! இது என்னமாயம்! என்று ஒருவர்க்கொருவர் கதறிவேத மின்றி நாமென்ன செய்யப்போகிறோமென்று மஹாசங்கடத்தை யடைந்தனர். தேவர்களும் அவிர்ப்பாகமில்லாமையால் நிர்ஜரா ளென்பதுபோய் சஜராளாய்க் கிழத்தன்மையடைந்தனர். அப் பொழுது அவ்வசுரன் தேவலோகம்போய்ப் போர்புரியத்தொடங்க வச்சித்திற்குச்சமானமான தேசமுள்ள அவனுடு யுத்தஞ்செய்ய வண்மையற்று தேவர்களெல்லாம்ஓடி மலைக்குகைகளிலும் மேருச் சாரலிலும் ஒளித்திருந்து பராசத்தியைத் தியானித்தனர்.

பூவுலகில் செய்யவேண்டிய யாகங்கள் மறையோர் செய்வதற் கில்லாமற் போகவே நூறுவருடம் மழைபெய்யாமற்போயிற்று. அதுபோகவே, கிணறு நடவாவி ஏரி குளம் இவைகளில் நீர் வற் றிப்போயிற்று. வற்றவே பசு எருமை முதலான சகல ஜெந்துக் களு மிறந்தன வீடுகளில் நாடோறும் மனிதப்பிணங்களே வீழ்ந் தன. இவ்வண்ணமான அனர்த்தங்கள் மிகுதிப்பட்டகாலத்தில்சில அருளுடைய அந்தணர்கள் தேவியைத் தியானதிகளால் வழிபட வெண்ணங்கொண்டு இமயகிரிக்குப்போய் ஆகாரமின்றித் தேவி யினிடத்தில் ஆசையுடையவர்களாய்ச் சமாதியினாலும் தியானத் தினாலும் பூஜையினாலும் சந்தோஷப்படுத்தி நமஸ்கரித்துத் துதிக் கின்றனர்:—ஓமஹேஸ்வரீ! பரமாத்மாக்களாயும் மஹாபாரதிகளா யும் இருக்கின்ற இந்த ஜனங்களிடத்துத் தயவுசெய்வாய்! ஹே அம்பிகே! நீ தயவு செய்யாதிருப்பது தகுதியன்று. நீகொண்ட சோபத்தைத் தணிப்பாய். நீ எல்லோரிடத்தும் அந்தர்யாமியா யிருக்கின்றவளல்லவா. நீ எவரெவரை எப்படி யாட்டிவைக்கின் றாயோ அப்படியே அவரவராடுகின்றனர்; இப்பிரஜைகளுக்கு வேறு கதி ஏது; அடிக்கடி ஏனிப்படி பரீட்சைசெய்கின்றாய்? ஏம

ஹேஸ்வரீ! நீ எவ்வண்ணஞ்செய்ய இச்சிக்கின்றனையோ அவ்வண்ணஞ் செய்யவல்லவளா யிருக்கின்றனை; மஹாசங்கடத்தில் மூழ்கிக் கிடக்கும் எங்களைக்கரையேற்றிவிடுவாய்; எங்களுக்கு ஜீவனமின்றி எப்படிச் சுகமுண்டாகும்! ஓஜகன்மாதா! நீ தயவுசெய்வாய்! அளவிறந்த பிரமாண்டங்களுக்கு நாயகியாகிய ஹேதேவீ! உன்னை யாங்கள் அடிக்கடி நமஸ்கரிக்கின்றோம். கூடஸ்தரூபியாயும் சித்ரூபையாயுமிருக்கிற உனக்கு நமஸ்காரம். புவநேசையாயும், வேதாந்த வேத்யையாயு மிருக்கின்ற உனக்கும் போற்றியோ போற்றி; சகல ஆகமங்களாலும் நேதிநேதி என்னும் வாக்கியார்த்தங்களால் அறியப்படுகிற சர்வகாரணியாகிய ஹேதேவீ! உன்னை எல்லாவிதத்தாலும் நமஸ்கரிக்கின்றோம்; என்று தோத்திரஞ்செய்யவே,புவனேஸ்வரியாயும். மஹேஸ்வரியாயு மிருக்கின்ற பார்வதிதேவியானவள் நீலமலைபோலும் சரீரகாந்தியை யுடைத்தாயும், நீண்டு நீலோத்பலம்போலும் கண்களையுடைத்தாயும், கடினமாயும் சமோத்துங்கமாயும் விருத்தமாயும்பருமனும் ஈர்க்கிடைபோகாநெருக்குடைய தாயுமுள்ள தனங்களை யுடைத்தாயும் பாணத்தையும், தாமரையையும், மலரையும் தளிரையும் வேரையும் பரிதாகரைகளைப் போக்கவல்ல அளவிறந்தரசத்தோடு கூடிய பழங்களையுமுடைய ஓர் பூங்கொடியையும், வில்லையும் தாங்கிபிருக்கும் நான்கு திருக்கரங்களுடைத்தாயும், சகலசௌந்தரிய சரீரத்தை யுடைத்தாயும், ரூபலாவண்ணிய • பிரகாசத்தை யுடைத்தாயும், கோடிசூரிய பிரகாசமுடைத்தாயும், கிருபாசாகரத்தை யுடைத்தாயும் அநேககண்களுடைத்தாயுமுள்ள தனது சொரூபத்தைக்காட்டிப் பின்னர் ஒன்பது கரங்களினின்றும் அளவில்லனவாய் நீர்த்தாரையை விடாமற்பொழிந்தாள்.

உலகமாதாவாகியதேவியானவள்துக்கப்படுகிறசகலப்பிராணிகளையும் பார்த்து இரக்கமுடையவளாய் நீரைப்பெருக்க, அப்பெருக்கத்தினல் சகலஜனங்களும் சகல ஔஷதிகளும் சுகமுற்றுவிருத்தியாயின. நதிநதங்களும் பெருக்கெடுத்தோடின. முன்னெளித்திருந்த தேவரனைவரும் வெளியாயினர். பின்னர் அந்தந்தத்தேவர்களும் பிராமணர்களும் ஒன்றுசேர்ந்து தேவியைத் தியானித்துத் துதிக்கின்றனர்;—வேதாந்தங்களால் அறியத்தக்கவளே!உன

க்கு நமஸ்காரம்; பிரமசொரூபிணியே! உனக்கு நமஸ்காரம்; உனது மாயையினாலே எல்லா லோகங்களும் சிருஷ்டிக்கின்றவளே! உனக்கு நமஸ்காரம்! பக்தர்களுக்குக் கற்பகவிருக்ஷமாக விருப்பவளே! பக்தர்களுக்காக சகளத்திருமேனியைத் தரிக்கின்றவளே! நித்ய திருப்திபுடையவளே! உபமானமில்லாதவளே! புவனேஸ்வரியே! உனக்கு நமஸ்காரம்; எங்களுடைய சங்கடங்களைத் தணிக்க நீ அநேக கண்களைத் தரித்தபடியால் நீ சதாக்ஷி என்கிற திருநாமத்தைப் பெறக்கடவாய்; நாங்கள் பசியினால் பாதிக்கப்பட்டுள்ளோமாகையால் உன்னைத் தோத்திரஞ்செய்யச் சக்தியில்லை! ஓ தேவீ தயவுசெய்து எங்களுக்கு வேதத்தை வாங்கிக் கொடுப்பாயென்று பிரார்த்தித்தனர். அவர்களுடைய பிரார்த்தனைகேட்டுத் தன் திருக்கரத்திற்றரித்திருக்கும் மலர் முதலியவற்றோடு கூடிய கொடியினின்றும் உயிர்கள் உண்ணத்தக்கவையான சாய்களையும், ருசியான பழங்களையும், இன்னம் வேறுவகையா யுள்ளவைகளையும், அறுசுவையோடு கூடின நானவித அன்னங்களையும் உண்டாக்கித் தந்தனள் அதனால் ஓ அரசனே! அத்தினத்தில் எங்கும் கோலாகல சப்தத்தோடு அத்தேவிக்கு "சாகம்பரி" என்கிற திருநாமமுண்டாயிற்று.

இந்தக்கோஷ்டத்தைக்கண்ட தூதர்கள் அசுரேந்திரனுக்குச் சொல்ல, அவன் ஆயிரம் அக்குரோணி சேனைகளோடு ஆயுதபாணியாய்ப் பாணங்களைப் பிரயோகஞ்செய்துகொண்டே அதிவேகமாய் ஓடிவந்து சதாக்ஷிமுன்னிற்கும் தேவசேனைகளையும்பிராமணகூட்டங்களையும் அங்கிருக்கவொட்டாது துரத்தினன். துரத்தவே, அவரெல்லாம் கிலகிலாவென்கிற பெரிய பயங்கரமான ஓர் பெருங்கூச்சலிட்டு எங்களை ரட்சிப்பாய்! என்று கதறினர். அவர்களது பயந்த ஓசைபைக்கேட்ட தேவி, தேஜோமயமான ஓர் சக்கரத்தை எடுத்து அவர்களுக்குபாதாரு துன்பமு மணுகாவண்ணம்நான்கு பக்கமும் சுழன்றுவரும்படி ஏவி, தான் வெளிபில்நின்று அவ்வசுரனோடு அஞ்சத்தக்கயுத்தஞ்செய்தாள் இருவருடைய பாணங்களும் ஒன்றோடொன்று உராய்ந்து நெருப்புமாரி பொழிந்து சூரியமண்டலத்தை மறைத்தன; நாணியின் டங்கார ஓசைகளால் நான்குதிக்குஞ் செவிடுபட்டன; தேவியினுடைய திருமேனியினின்றும்காளி, தாரணி, பாலா, கிரிபுரை, பைரவி, ரமை, பகலை,மாதாங்கி,திரிபுர

சுந்தரி, காமா, துலஜாதேவி, ஜம்பனி, மோஹினி, சின்னமஸ்தினி, குஹ்யை, காளி என்னும் பெயருள்ள மூப்பத்திரண்டு சத்திகள் லட்சங் கையுள்ளவர்களாய்த் தோன்றினர். இவர்களேயன்றி வேறு அறுபத்து நான்கு சக்திகளும் ஆயுதங்களோடுகூடிய அநேக சக்திகளுந் தோன்றினர். இவர்களுடைய ஆரவாரங்களும் மிருதங்கம் சங்கம் வீணை முதலிய வாத்யங்களுடைய வோசைகளும் யுத்த பூமியெங்கும் நிறைந்துவிட்டன. மேற்படி சக்திகளால் அசுரனுடைய அக்ரோணி சேனைகள் நாசமடையும் பொழுது அச்சேனைகளுக்குப் பிரபுவான துற்கமனன் வெளியே வந்து எங்கும் இரக்த வெள்ளமாகும்படி சக்திகளோடுகூடப்பத்துநாள் போர்செய்தனன். பதினொன்றும்நாள் அவ்வசுரன் சிவந்தமாலை சிகப்புவஸ்திரம் சிவந்த சந்தனம் அணிந்து ஓர் பெரிய இரதத்தின்மீதேறி சக்தி கூட்டங்களுக்குள் நுழைந்து அவர்களைச்செயித்து மகாதேவியின் இரதத்திற்கு எதிரில் தன்னிரதத்தை நிறுத்தி அவளோடு இரண்டுஜாம பரியந்தம் அதி பயங்கரமான போர்புரியும்போது தேவி ஐந்நூறு பாணங்களை அவன்மீதும் நான்கு பாணங்களை இரதத்திற்பூட்டிய நான்கு குதிரைகள்மீதும் ஒரு பாணத்தை சாரதியின்மீதும் ஒரு பாணத்தைக் கொடிமரத்தின்மீதும் இருபாணங்களை அசுரனுடைய இருநேத்திரங்களிலும் மற்று மிருபாணங்களை இரண்டு புஜங்களிலும் ஐந்து பாணங்களை அவன் மார்பிலும் பிரயோகிக்க அசுரன் ஊதிரத்தைக் கக்கிக்கொண்டே தேவியின் எதிரில் வீழ்ந்தான். வீழவும் அவனுடலினின்றும் ஓர் ஒளி தோன்றி தேவியின் திருமேனியில் மறைந்தது. மூன்று லோகங்களும் சாந்தமாயிற்று. பிரமன் முதலான தேவர்களும் திக்குபாலகர்களும் ஆனந்தத்தால் நாவானது தழுதழுப்ப தேவியைத்துதிக்கத் தொடங்கினர். சகல உலகங்களையுஞ் சிருஷ்டிக்கவும் சங்கரிக்கவும் காரணபூதையான ஓ பரமேஸ்வரியே! சாகம்பரியானசிவையே! சதலோசன (நூறுகண்ணு) முள்ள தேவியே! உன்னை நமஸ்கரிக்கிறேம். எல்லா உபநிடதங்களாலும் தோத்தரிக்கப்பட்டவளே! துற்கமனை நாசஞ் செய்தவளே! பஞ்சகோண மத்தியிலுள்ளவளே! உன்னை நமஸ்கரிக்கின்றேம். ருஷி சிரேஷ்டர்களெல்லாம் நிர்விகற்பமாய்த் தியானஞ்செய்யப்படுகிற பிரணவார்த்த சொரூபியான புவனேஸ்வரி! உன்னை நமஸ்கரிக்கிறேம். அனந்தகோடி பிரமாண்டங்களுக்கும் பிரம்ம விஷ்ணு வாதியர்களுக்கும் தாயானவளாயும் திவ்ய விக்கிரக தேஜோநிதி

யாயும் விளங்குமுன்னே நமஸ்கரிக்கின்றோம். மிக்க தயவுள்ள பரமேஸ்வரியான சதாக்ஷிதேவியைவிட்டு மற்ற பாமரதேவர்களை எவன் ஆபத்தில் நினைத்து அழுவான் என்று விஷ்ணுமுதலிய தேவர்களும் அந்தண சிரேஷ்டர்களும் நானாவிதமான பூஜாத்திரவியங்களாலும் பட்சண விசேஷங்களாலும் பூஜித்துத் துதிக்கவும் தேவி அவ்வழி பாட்டால் சந்துஷ்டியடைந்து வேதங்களை அந்தணர்களிடத்துக் கொடுத்து குயிலிசைபோன்ற தனது இன்சொல்லால் ஆசீர்வதித்து உத்கிருஷ்டமான என்னுடைய இச்சரீரத்தை நீங்கள் விசேஷமாயாதரித்து அன்பு பாராட்டவேண்டும். நானில்லாமற் போனதனலன்றோ உங்களுக்கு இப்பொழுது இப்படிப்பட்ட சங்கடம் நேர்ந்தது. ஆதலால் நீங்கள் எப்பொழுதும் என்னைப் பூஜித்துக்கொண்டேயிருக்கவேண்டும். உங்களுடைய க்ஷேமத்திற்காக இதைவிட வேறுபதேசம் நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை ; என்னுடைய இம்மஹாத்மியத்தை எப்போதும் படித்து வந்தால் நான் சந்துஷ்டியாய் உங்களுடைய ஆபத்தை யொழித்து விடுகிறேன். நான் துர்கமாசுரனைச் சங்கரித்தபடியால் துர்கி என் றழைக்கப்படுவேன். இத்துர்கி என்னு நாமத்தையும் சதாக்ஷி என்னு நாமத்தையும் எவன் உச்சரிக்கின்றனோ அவன் மாயையைவென்று வெளிவந்தவனாவான். இதன் பலன் அதிகமாக நான் சொல்லவேண்டுமோ ? உங்களுக்குச் சுருக்கி ஒருண்மையைச் சொல்கின்றேன். சகல சுராசுரர்களாலும் நானே நமஸ்கரிக்கத் தக்கவள் இதனையறிந்துய்வீர்களாகவென்று சொல்லித் தேவர்களுக்கெல்லாஞ் சந்தோஷத்தை யுண்டாக்கிச் சச்சிதானந்த சொரூபிணியான தேவியானவள் அந்தர்த்தானமாயினள். ஓ அரசனே ! இந்தச்சரித்திரம் இரகசியமாயிருந்தாலும் உனக்குச் சொன்னேன் ; சர்வ சுபத்திற்குங் காரணமான இதனைப் பிரயத்தனத்தோடு எவன் காப்பாற்றி வைத்துக்கொண்டு பக்தியோடு கேட்கிறானோ அவன் இவ்வுலகத்தில் சகல கோரிக்கைகளையும் பெற்று தேவியின் உலகத்தை யடைகிறான்.

(சு - ம் அநு.)

இருபத்தெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

ஹ்ரீங்காரவாச்யாயை நமஃ

இருபத்தோன்பதாம் அத்தியாயம்.

* ஜனமேஜயஸ்ய வியாசகிருததேவி கதாபிமுகீகரணம்.

வியாசர் கூறுகின்றார் :—ஓ அரசனே! இதுகாறும் சூரியவம்சத்தாருடைய வுத்தமமான சரிதைகளைக்கூறினேன். இனிச்சந்திரவம்சத்தாருடைய சரிதங்களைச் சொல்லுகிறேன். இவர்களும் பராசக்தியினது அநுக்கிரகத்தினால் ஐஸ்வர்யத்துடன் வாழ்ந்து வந்தவர்களென்று நிச்சயிக்கக்கடவாய். ஓ அறிவிற்சிறந்தவனே! உலகின்கண் காணப்பட்ட சராசரங்களில் எந்தவுபாயபலத்திலும் சம்பத்திலும் மேம்பட்டனவாகக் காணப்படுகின்றதோ அது பராசக்தியினுடைய அம்சத்தினால் உண்டானதென் றுணர்ந்து நிச்சயித்துக் கொள்வாய். சூரிய சந்திர வம்சத்தவரும் ஏனையோரும் பராசத்தியை யுபாசித்தே சம்சாரமென்கிற விருக்ஷத்தின் வேருக்குக் கோடரியானார்கள். ஆகலின் எவ்விதமுயற்சியினாலாவது புவனேஸ்வரியை நமஸ்கரிக்கவேண்டும். தானியத்தை விரும்புவோன் பதரைக்களைப்பதுபோல தேவியையபேக்ஷிக்கிறவன் இதரதேவர்களைக் களித்தல் வேண்டும். யான் வேறு காரியங்களை யொழித்து வேதமாகிய பாற்கடலைக்கடைந்து அதிலெடுத்த இரத்னமாகிய பராசக்தியின் மலரடியில் அசைவில்லாமல் என் மனதைவைத் திருக்கிறேன். பஞ்சப் பிரஹ்மாசனத்தில் வீற்றிருக்கத்தக்க தகைமை பராசக்திக் கன்றி வேறொரு தெய்வத்திற்கில்லையாகலின் அம்மஹாதேவியே பஞ்சப் பிரஹ்மாசனத்தில் விற்றிருப்பவளென்றும் பஞ்சப் பிரம்மஹங்களுக்கு அதிகரித்தவளென்றும் வேதத்தில் பிரகாசமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வீஸ்வரியே ஓதரூபமாகவும் ப்ரோதரூபமாகவும் பிரமாண்டத்தில் மங்களகரமாயிருக்கின்ற புவனேஸ்வரியாகவும் விளங்குகின்றாள்.

ஓ அரசனே! இப்படிப்பட்ட தேவியையறியாத மநிதன் முக்தனாகான். ○ எந்தமாநுடன் தோலைப்போல் ஆகாசத்தைச்சுருட்ட

---

* ஜனமேஜயனேவிய சர்தேவிசரிதத்தில்ஆவலுள்ளவனுகச்செய்தல்.

○ யாதாசர்மவதாகாசம் வேஷ்டயிஷ்யந்தி மாநவாஃ-ததாசிவாமவிஜ்ஞாய தேவ்யாஃ தத்வம்ந சக்ஷ்யந்தி, அதவஸ்ருதவப்ராஹ்ஸ்வேதாஸ்வதரசாகி.

வல்லவனே அவன் தேவியை யறியாமல் சம்சாரதுக்க முடிவையறிய வல்லவனுவனென்று வேதத்தில் சுவேதாஸ்வத ரசாகையில் கூறப் படுகின்றது. தனது குணங்களால் மறைபட்டிருக்கும் பரமாத்மசக் தியைத் தியானலோகத்தில் வல்லவர்க ளறிவார்களென்று பெரி யோர் கூறுகின்றனர். பிறந்ததனுற் பெறுதற்குரிய பயனைப்பெறும் நிமித்தம் எவ்வித முயற்சியினுலாவது பயத்தினுலாவது பக்தியினு லாவது சர்வசங்க பரித்யாகஞ்செய்து இருதயத்தில் நிலையாக நிறுத் திப் பராசக்தியைப் பிரதானமாகக்கொள்ளும் ஞானத்தை யுடைய வனுக வேண்டுமென்று பறைபோல வேதாந்தங் கோஷிக்கின்றது. ஆகலான் எவ்வித வியாஜத்தினுலாவது நினைத்தல்வேண்டும். நினைத் தற்குக் காலநியமமும் வேண்டாம். இருக்கும்போதும் உறங்கும் போதும் நடக்கும்போதும் மற்றெப்போதும் தேவியை நினைத்தல் வேண்டும். இவ்வாறு இடைவிடாமல் நினைத்துக்கொண்டிருந்தால் அந்நினைவே சம்சாரபந்தத்திலிருந்து விடுவிக்கும். ஆகலான் ஓ அர சனே! நீ சர்வ முயற்சியாலும் மஹேஸ்வரியைத் தொழுவாய். விராட்ஸ்வ ரூபிணியாயும் சூத்ர ரூபிணியாயும் அந்தர்யாமியாயு மிருக்கிற மஹாராணியாகிய தேவியை முதலிலே சோபானமுறைப் படி தியானிக்க முயற்சி செய்யவேண்டும். அங்ஙனஞ் செய்யப் பெறின் மனஞ் சுத்தியாய்விடும். அம்மனதைத் துணையாகக் கொண்டு சச்சிதானந்த லக்ஷ்யார்த்த சொரூபிணியாயும் பிரஹ்ம சொரூபிணியாயும் பிரவஞ்சமாயையை உல்லாசத்தால் விடுவிக்கின் றவளாயு மிருக்கின்ற பரா சக்தியைப் பூஜித்தல் வேண்டும். பூஜை யென்பது பராசக்தியினிடத்து மனம் லயமாதலேயாம். சோம சூரிய வம்சத்தில் வந்த அரசரெல்லாம் பராசக்தியின் பக்தர்களா யும் தர்மிஷ்டர்களாயு மிருந்தவர்கள். அவ்விக்ஷவாகுடைய சரிதமானது பரமபாவனமாயும் கீர்த்தியையும் நன்பாக்கியத்தையுங் கொடுப்பதாயு மிருப்பதால் நீ விரும்பியவண்ண மெடுத்துச்சொன் னேன். இனிப் புண்ணியத்தைக் கொடுக்கும்படியான எந்தச்சரி தத்தைக்கேட்க விரும்புகின்றனையோ அதனைச் சொல்வாயென்றார்.

ஜனமேஜயன் கூறுகின்றார் :—ஓ ஐயா! கௌரி லக்ஷ்மி சரஸ் வதி என்னு மூவரையும் பூர்வத்தில் பராசக்தி உருத்திரமூர்த்தி மூத லிய மூவருக்குங் கொடுத்தனரன்றே அங்ஙனமிருக்க, பார்வதிதேவி பர்வத ராஜனுக்கும் தக்ஷனுக்கும் புத்திரியாக வந்தனளென்றும்

லக்ஷ்மிதேவி பாற்கடலிற் பிறந்தனென்றுங் கேட்டுள்ளேன். மூல தேவியினிடத்திற்றோன்றிய இவர்கள் வேறொருவருக்குப் புத்திரிகளாகவந்தார்களென்பது அசம்பாவிதமாகலான் அதுபற்றிச் சந்தேகமிருக்கிறது. அதனை ஞானமெனுங் கத்தியினால் நீரறுத்தெரிவீராகவென்றான்.

வியாசர் கூறுகின்றார் :—ஓ அரசனே! தேவியினிடத்தில் பக்தியுள்ளவனுக்குச் சொல்லத்தகாத இரகசியமொன்றுமில்லை. தேவி பக்தனாகிய உனக்கு இந்த இரகசியமான பரமாத்புதசரித்திரத்தைச் சொல்லுகின்றேன் கேட்பாயாக. தேவியானவள் பார்வதி முதலிய மூன்று சக்திகளை எந்நாளிலே மும்மூர்த்திகளுக்குக் கொடுத்தனளொ அந்நாள்முதல் அம்மூவருஞ் சிருஷ்டி முதலிய முத்தொழிலையுஞ் செய்துவந்தனர். ஓர் காலத்தில் ஹாலாஹலரென்கிற மஹாபலசாலிகளான அசுரர்கள் தோன்றி ஒரு கணத்துக்குள் மூவுலகங்களையும் வெல்லவல்ல வரத்தைப் பிரமதேவனிடத்துப்பெற்று அகங்காரமேலிட்டு தங்கள் சேனைகளுடன் ஸ்ரீகைலாயத்துக்கும் வைகுண்டத்துக்குஞ்சென்றெதிர்க்க உருத்திரருந்திருமாலும் அவர்களுடன் அறுபதினாயிரவருடம் தேவதானவரெல்லாம் ஆஹாவென்றுபெருங் குரலிட்டோலமிடப் பெரும்போர் புரிந்து வென்று தத்தமக்குரிய விடங்களிற்சென்று தாஞ்செய்த போர்த்தொழிலுக்குப் பலந்தந்தவர்கள் தம் சத்திகளாகிய பார்வதி லக்ஷ்மிகளென்றுணராமல் தமது பலத்தினாலென்றெண்ணி நானென்னும் அபிமானத்தை மேற்கொண்டு அவ்விருசத்திகளையு மதியாது சிரித்தனர். இவர்கள் சிரிக்கக்கண்ட அவ்விருவரும் இவர்களுச்குண்டாகிய செருக்கைக் குறிப்பாலுணர்ந்து இவர்களைப்பார்த்துச் சிரித்தனர். இதைக் கண்ட ஹரிஹரர்கள் கோபங்கொண்டு ஆதிமாயையினால் மோகிக்கப்பட்டு சக்திகளுக்கு அவமானமுண்டாகும் வண்ணம் அசங்கதமான வார்த்தைகளால் ஏச, அவ்விருவரும் அக்கணமே அவர்களுக்குத்தோன்றாமல் மறைய, ஹா ஹா என்று ஓர் பேரொலியுண்டாயிற்று. அதுவேயுமன்றி ஹரி ஹரராகிய இருவரும் அவ்விருசத்திகளையுந் தூஷித்தகாரணத்தால் தேஜஸும் ஞானமுமில்லாதவர்களாய்த் தங்கள் தொழிலை மறந்து கிடந்தனர். பிரம்ஹா இவர்களைப் பார்த்து தேவர்களுக்குள் சிரேஷ்டர்களான இவர்களென் தங்கள் காரியங்களில் வல்லமையற்றிருக்கின்றனர். காரணமின்றி எதனால்

இவர்களுக்கு இப்படிப்பட்ட சங்கடம் நேரிட்டது. நாசம் வருவதற்கான குற்றமில்லாத இவ்வுலகத்திற்கு நாசகாலம் இப்போது வரும்போற் காண்கின்றதேயென்று சிந்தாகுலமுற்று இந்தக்காரணத்தை நானறிந்தே விடுவேன். இதற்கு நானெப்படி பரிகாரஞ் செய்யக் கூடுமென் றிவ்வண்ணஞ் சிந்தைசெய்து கண்மூடித் தியானஞ் செய்தனன். செய்யவே இது பராசக்தியின் கோபத்தினு லுண்டாயிற்றென் றறிந்துகொண்டு பின்னர் அவ்விருவர்களுக்கும் எந்தெந்தக் காரியமுண்டோ அந்தந்தக் காரியங்களைத் தனக்கு வாய்ந்துள்ள சக்தியின் பிரபாவத்தினுல் சிலிது காலம்வரையில் நடத்திவந்தனன். பிறகு அவ்விருவரும் இவ்வாறிருப்பது அழகன்றென்று தன் புத்திரர்களான மனுமுதலானவர்களையும் சனகாதி முனிவர்களையும் வரவழைத்து அவர்களை நோக்கி, ஓ புத்திரர்களே! நான் சிருட்டித் தொழிலேயன்றிக் காத்தலழித்தலாகிய காரியங்களிலும் இப்போது ஆவலுள்ளவனு யிருக்கின்றபடியால் தபஞ்செய்ய வலியற்றவனுயிருக்கின்றேன். எத்தொழிலுக்குந் தவந்தான் பலமாயுள்ளது. அதனை மறந்திருப்பேனுயின் தொழில் குறையும். ஆகையால் நான் இவ்வுலகபாரத்தை வகித்துக்கொண்டு பராசக்தியை எப்படி சந்தோஷப்படுத்துவேன். ஹரி ஹரர்கள் பராசக்தியின் கோபத்தினுல் தங்களுடைய தொழில்களில் சக்தியற்றவர்களாயினர்; ஆதலால் நீங்கள் அச்சக்தியை யுத்தேசித்து ருத்திர விஷ்ணுவுக்கு முன்போல் சக்தியுண்டாம்வண்ணம் தவமும் பூஜையும் எப்படிச் செய்யவேண்டுமோ அப்படியே அதியற்புதமாகச் செய்மின். ஓ எனக்கினிமையான புத்திரர்காள்! அங்ஙனஞ் செய்வீராயின் உங்களுக்குக் கீர்த்தியுண்டாம். எவனுக்கு எந்தக்குலத்தில் ஜன்ம முண்டாகிறதோ அவனக்குலத்துக்குத் தன் பதத்துக்குந்தக்கபடி பரிசுத்தத்தைச் செய்யவேண்டும். அப்பரிசுத்தம் எல்லா லோகத்துக்குஞ் செய்ததுமாகும்; அவன்தான் புண்ணியவானுவானென்றார். இவ்வாறு பிரமன் கூறிய வார்த்தையைக்கேட்டு யாவரும் ஆரண்யம்போய் நிர்மலமனதுடன் பூஜிக்கவிச்சித்தனர். (சு - ம் சரி.)

இருபத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

ஓம்

ஹ்ரீங்கார பூஜ்யாயை நமஃ

முப்பதாம் அத்தியாயம்.

கௌரீஜன் மாதிகதனம்.

வியாசர் கூறுகின்றார் :—ஓ ஜனமேஜயனே! பின்னர் மதுமுதலான சகாதியர் வனத்துக்குப் போகவேண்டுமென் றுத்தேசித்து இமயமலைச்சாரலை யடைந்து மாயாபீஜ மந்திரத்தை இலக்ஷவருடம் ஜபித்துத்கொண்டு சாவதானமாய்த் தவம்புரிந்து வந்தனர். அவர்கள் செய்துவந்த தியானதிகட்குச் சச்சிதானந்த சொரூபிணியாகிய பராசக்தி கருணைகூர்ந்து பாசம் அங்குசம் வரதம் அபயம் என்னு முத்திரைகளுடன் நான்கு திருகரங்களும் கருணைரசத்தால்நிறைந்த மூன்கண்ணு முடையவளாகத் தோன்றினள். சர்வலோக மாதாவாகிய அத்தேவியை நிர்மலசித்தமுடைய அம்முனிவர்கள் கண்டு களித்துத் துதிக்கத் தொடங்கினர்.

பிரபஞ்ச சொரூபிணியாயும் அக்நி சொரூபிணியாயு மிருக்கின்ற உனக்கு நமஸ்காரம். தேஜோ சொரூபிணியாயும் பிரமாண்டத்தில் ஓதப்போத (மேலுங்கீழும்) ரூபமாக விருக்கின்ற சூக்ஷ்ம சரீரங்களுக்குச் சூத்ராத்ம சொரூபிணியாயிருக்கின்ற உனக்கு நமஸ்காரம். பிரீஜா சொரூபிணியாயும் வியாகிருத சொரூபிணியாயும் பிரத்தியக் சொரூபிணியாயும் பிரஹ்ம சொரூபிணியாயுமிருக்கின்ற உனக்கு நமஸ்காரம். சர்வ சொரூபிணியாயும் சர்வ லக்ஷ்யாத்ம சொரூபிணியாயு மிருக்கின்ற உனக்கு நமஸ்காரம்.

என்றிவ்வாறு ஜகன்மாதாவை பக்தியுடன் நாக்குழறி தோத்திரஞ்செய்து பாதகமலங்களை நமஸ்காரஞ்செய்தனர். இன்னிசைக் குரலுள்ளதேவி சந்தோஷித்தவளாய் ஓ மகாதபாவர்களே! நான் உங்கட்கு வேண்டியவரங்களைக் கொடுக்க வந்திருக்கின்றேன். வேண்டுவனவற்றைக் கேளுங்களென்றருள; அவர்கள் ஹரி ஹரர்கள் சரீரசாந்தியைப்பெறவும் பராசக்தி சொரூபமான பார்வதி லக்ஷ்மிகளை யடையவும் பிரார்த்தித்தனர். தக்ஷபிரஜாபதி தேவியை நோக்கி ஓ தேவியே! நீ என் குலத்திலவதரிப்பையாயின் நான்

உன்னை ஜபித்துக் தியானித்தும் பூஜித்தும் கிருத கிருத்யனவேன். ஓ ஈசானி! இப்போது நான் வேண்டியதைக் கொடுக்கிறேனென்று உனது திருவாக்கால் சொல்லி யருளுமென்று விண்ணஞ்செய்ய, தேவி மது முதலானவர்களையும் தக்ஷனையும் பார்த்து ஹரி ஹரர்கள் என்னுடைய சக்திகளை அவமதித்ததனால் அவர்களுக்கிந்த அவஸ்தை வந்தது. இனி இப்படிப்பட்ட அபராதத்தை என் விஷயத்தில் அவர்கள் செய்யாதொழிக. இப்பொழுது என்னைப் பிரார்த்தித்தபடியால் என் கருணாலேசத்தால் அவர்களுக்குச் சரீரத்தில் சக்தியுண்டாகக்கடவது. எனது பிரேரேபணையால் ஒரு சக்தி தக்ஷனது கிருகத்திலும் ஒரு சக்தி பாற்கடலிலும் தோன்றுவார்கள். ஓ அன்பர்களே! மாயா பீஜாக்ஷரமானது எனக்கு முக்கிய மாயும் பிரியமாயுமுள்ளதாகலின் நீவிர் சகல லோகங்களையும் சுவாதீனஞ் செய்துகொண்டு எனது விராட் சொரூபத்தையாவது உங்களுக்கு இப்போது காணப்படும் இச்சச்சிதானந்த சொரூபத்தையாவது தியானித்து எப்போதும் பூஜித்துவர வேண்டுமென்றுகூறி, மணித்வீப வாசினியாகிய தேவி மறைந்தனள். பின்னர் தக்ஷபிரஜாபதி முதலானோர் பிரமதேவனிடஞ்சென்று நடந்த செய்திகளைக் கூறினர்.

ஓ அரசனே! ஹரி ஹர பிருவரும், தேவியின் கருணையால் சக்தியுக்தராயும் தங்கள் தங்கள் தொழிலில் வல்லமையுள்ளவர்களாயும் நிரஹங்காரிகளாயும் வாழ்ந்தனர். இவ்வண்ண மிருக்கும் பொழுது பராசக்தி யனுக்கிரகித்தவண்ணம் ஓர்காலத்தில் சத்திசம்பந்தமான தேஜசு தக்ஷப்பிரஜாபதியினுடைய கிருகத்தில் அவதாரஞ்செய்தது. அப்பொழுது மூன்றுலகத்திலும் தேவர்களெல்லாஞ் சந்துஷ்டராய்ப் புஷ்பவருஷம்பொழிந்தனர். அந்தரத்தில் துந்துபி முதலிய வாத்தியங்கள் முழங்கின. சித்தசுத்தி வாய்க்கப்பெற்ற சாதுக்களுடைய மனம் சந்துஷ்டியடைந்தன. நதிகளெல்லாம் நிர்மலமாய்ப் பெருக்கெடுத்தோடின. சூரியன் அகண்டவொளியாய்ப் பிரகாசித்தனன். இவ்வாறுலகெல்லாங் களிக்க அவதரித்த சக்தி பராசக்தியின் அம்சமாதலால் "சதி" என்று பெயர்பெற்று ஹரனுக்கே பத்தினியாய்ப் பின்னர் ஓர் காரணத்தினால் அக்கினிப் பிரவேச மாயினளென்றார். இதனைக்கேட்ட அரசன் வியாசரை நோக்கி, ஓ முனிவரே! இதுவென்ன அனர்த்தமான வார்த்தையைச்

சொன்னீர். நீர் சொன்ன அந்தத்தேவியின் திருநாமத்தை நீனைத்தமாத்திரத்தில் சம்சாரமென்கிற கொடிய அக்கினி தணியத்தக்கதாக விருக்க அந்தத்தேவி அக்னிபிரவேசமாயினளென்பதென்னே? எந்தக்கர்மவிபாகத்தினல்அக்கினியினல்கொளுத்தப்பட்டாள்? இது ஆச்சரியகரமாக இருக்கின்றது. இதனைக் கூறுமென்றன்.

வியாசமுனிவர் கூறுகின்றார்:—ஓ அரசனே! ஓர்காலத்தில் தூர்வாச மாமுனிவர் ஜாம்பூநதேஸ்வரி (பொன்மயமான தேவி) யை யடைந்து அவளைத் தரிசனஞ்செய்து மாயாபீஜத்தை ஜபித்தார். அதனல் தேவி மகிழ்ந்தவளாய் தனதுகண்டத்திற் றரித்துள்ள மகரந்தம்நிறைந்து ரீங்காரத்வனியோடுகூடிய ஓர்புஷ்பமாலையை அம்முனிவருக்கு அனுக்கிரகஞ்செய்தனள். அதனைஅவர்மகிழ்ந்துசிரமேற்கொண்டு ஆகாயமார்க்கமாய் சதிதேவிக்குப் பிதாவாகிய தக்ஷபிரஜாபதியிடஞ்சென்று அங்குள்ள சதிதேவியை நமஸ்கரிக்கும்போது தக்ஷ பிரஜாபதி,ஓதூர்வாசமுனிவரே! இந்தமாலைமகத்தைப் படி கிடைத்தது? இது மனிதரால் அடையத்தக்கதல்லவே!என்று கேட்க, அம்முனிவர் ஆனந்தபாஷ்பத்துடன் இது தேவியினுடைய அனுக்கிரகத்தினல் கிடைத்ததென்றார். ஆனல் அதனை எனக்குக் கொடுக்கவேண்டுமென்ன முனிவர் இவன் சதிதேவியின் பக்தனாக விருக்கின்றபடியால் இவனுக்குக் கொடுக்கக்கூடாத பொருள் மூவுலகத்திலும் இல்லையல்லவா வென்று நினைந்து மாலையைக் கொடுக்க அவன் அதனைத் தலையால்வணங்கிவாங்கிப் படுக்கையறையில் தூக்கிவைத்தனன். பின்னர் இராத்திரி பத்தினியுடன் அங்கிருக்கும்போது அந்தமாலையினின்றும்வீசிய பரிமளத்தினல் காமவேட்கையுடையவனுய்க் கிரீடித்தனன். அத்தோடத்தினல் உண்டாகிய பாவத்தினற்றன் சங்கரனிடத்திலும் சதிதேவியினிடத்திலும்உண்டாயிருந்த பக்திமாறி இருவரிடத்துந் துவேஷமுடையனயினன்.

ஓ அரசனே! சதிதேவி தக்ஷனிடத்துண்டாகிய சிவத்வேஷத்தையிண்ணி நாம். இனி இவனிடத்திலுண்டான இத்தேகத்தைவைத்திருத்தல் தருமவிருத்தமென்கிற தருமத்தைப்பாராட்டி யோகாக்னியிற் பிரவேசித்தனள். அச்சத்திசொரூபமான ஒளியே இமவகிரியிற்பிறந்தியதென்றனர். ஜனமேஜயன் சிவபெருமானுக்குத் தனது

பிராணனைக்காட்டிலும் சதி இனிமையா யிருப்பவளாயிற்றே அத்
தேவி அக்னியிற் கொளுத்தப்படும்போது அவர் என்ன செய்தார்?
அதனைச் சொல்லுமென்ன, முநிவர் அப்பா! அச் சிவபெருமானுக்
குண்டாகிய கோபத்தையும் அதினாலுண்டாகிய அனர்த்தத்தையும்
எனக்குச் செரல்லுவதற்குச் சக்தியில்லையாயினும் ஒருவாறு கூறு
கின்றேன்; சிவபெருமானுக்கு மூன்றுலோகமும் லயமடையும்படி
யான கோபாக்னி யுண்டாயிற்று. அதினின்றும் வீரபத்திரமூர்த்தி
பத்திரகாளிமுதலிய எண்ணிறந்த கணங்களோடு தோன்றி மூன்று
லோகத்தையும் நாசஞ்செய்யத் தொடங்கினர். அச்சமயத்தில்
பிரமன் முதலிய சகல தேவர்களும் சிவபெருமானைச் சரணம
டைந்து தக்ஷபிரஜாபதியினால் யாவருநாசமாயினோம் நாங்களென்
செய்வோமென்று முறையிட, அப்பெருமான் கருணையுடையவராய்
தம்மைநிந்தித்த தக்ஷனது குற்றத்தைக் கருதாது அவனை ஆட்டுத்
தலையுட னெழுந்திருக்கச்செய்து யாவருக்கும் அபயந்தந்து யாக
சாலையையடைந்து அங்கு சதி யோகாக்னியில் சரீரத்தைவிட்டி
ருப்பதைக்கண்டு மனம்பொறாதுவருந்திசித்கலாரூபமாகிய அவாது
திருமேனியைத் தோளில்வைத்துக்கொண்டு தேசமெலாந்திரிந்து
வரும்போது பிரமன்முதலிய தேவர்களோடுந்திருமால்பணிந்துஎம்
பெருமானே! தேவரீர்மீதிருக்கும் சதியினதுசரீரம் சித்கலாரூப
மாதலால்அக்கலைகள் தனித்தனி உலகமுற்றும்பீடமாகவிருக்கச்செ
ய்து அப்பீடங்களில் சத்தனாகிய தேவரீரும் வீற்றிருக்கப் பிரார்த்
திக்கின்றேனென்றுவேண்ட சதிநாயகன் அவ்வாறே ஆகுகவென்
றருள்புரிந்து அத்திருமாலிடத்து அக்கலாசரீரத்தைக் கொடுத்து
இதிலுள்ள கலைகளைப் பூமண்டலத்தில் ஆங்காங்குப் பிரதிஷ்டை
செய்வாயென்றனர். அவர் அவ்வாறே தாபிக்க அவைகளில் சத்தி
நாதன் வீற்றிருந்து திருமால்முதலிய தேவர்களைப்பார்த்து இப்
போது ஆங்காங்கு பீடரூபமாய்ப் பிரதிஷ்டையாயிருக்குந் தேவி
யை எவர்கள் பஜிக்கின்றார்களோ அவர்களுக்குலோகத்தில்கிடைத்
[illegible]கிய பொருளொன்று மில்லை, சதிதேவி தன் அங்கங்களா
தற்கரித[illegible]ப்பொழுதும் சாந்நித்தியமா யிருக்கின்றாள், ஆத
கிய இவைகளில் [illegible]ண்டாக்கவல்லதும் மிகப்பிரசித்திபெ
லால்விசேடமாய்ச்சித்தியை[illegible]த்தானங்களில் எந்தமனி
ற்றதுமான மாயாபீஜமந்திரத்தை [illegible]ம்மந்திரசித்தி யுண்
தன் புரஶ்சரணை செய்கின்றானோ அவனுக்கு[illegible]

டாகிற தென்று அதுக்கிரகித்து யாவருக்கும் அங்கெறி காட்டத் தாமும் அந்தசெபத்தியானசமாதிமுதலானவைகளால் காலத்தைக் கழித்துக்கொண்டு வந்தனரென்று கூறினர்.

ஜனமேஜயன், ஓ மகாமுநிவரே! தேவிஸ்தானங்களாகக்கூறப்படும் சித்தபீடங்கள் எத்தனை? அவைகளின் பெயரென்ன? ஓகிருபாமூர்த்தியே! எனக்குச்சொல்வீராயின் நான் கிருதார்த்தனுவேனென்றுசொல்ல, வியாசர் ஓஅரசனே! தேவியினுடைய பீடங்களை இப்போதுனக்குநான்சொல்வதுமன்றி சித்தியைக்கோருகின்றவர்களால் எந்தெந்த பீடங்களில் எந்தெந்த தேவி உபாசிக்கத் தகுந்தவளோ, சம்பத்தைக்கோருகின்றவர்களால் எந்தெந்தேவி உபாசிக்கத்தகுந்தவளோ அம்முறைகளையும் உண்மையாகச் சொல்லுகின்றேன் கேட்பாயாக. அவைகளைக் கேட்டமாத்திரத்தில் மனிதன்பாவத்தினின்று நீங்கினவனுவானென்று சொல்லத்தொடங்கினர்:—

ஓ அரசனே! காசியில் கவுரிமுக நிவாசினியாய் (1) விசாலாக்ஷி என்றும், நைமிசாரணியத்தில் (2) லிங்கதாரணீஎன்றும், பிரயாகையில் (3) லலிதை என்றும், கந்தமாதனத்தில் (4) காமுகீ என்றும், மானதசரசில் (5) குமுதா என்றும், அதற்குத் தென்திசையில்(6) விஸ்வகாமாபகவதீ என்றும், வடதிசையில் (7)விஸ்வகாமப்ரபூரணீ என்றும், கோமந்தத்தில் (8)கோமதீ என்றும், மந்தரத்தில் (9) காமசாரிணீ என்றும், சயித்திரதத்தில்(10)மதோத்கடை என்றும், அஸ்தினபுரத்தில் (11) ஜயந்தி என்றும், கான்யகுப்ஜத்தில் (12) கௌரீ என்றும், மலையாசலத்தில்(13)ரம்பை என்றும், ஏகாம்பரபீடத்தில் (14)கீர்த்திமதி என்றும், விஸ்வத்தில் (15)விஸ்வேஸ்வரீ என்றும், புஷ்பகரத்தில் (16)புருஹூதை என்றும், கேதாரபீடத்தில் (17) சன்மார்க்க தாயினீ என்றும், இமயகிரியின் பின்பக்கத்தில் (18) மந்தை என்றும், கோகர்ணத்தில் (19) பத்ரகர்ணிகா என்றும், பவானியில் (20) ஸ்தானேஸ்வரி என்றும், பில்வபத்ரிகையில் (21) பில்வகை என்றும், ஸ்ரீசைலத்தில் (22) மாதவீ என்றும்,பத்ரையில்(23)பத்ரேஸ்வரீஎன்றும்,வராகசைலத்தில் (24)ஜயை என்றும், கமலாலயத்தில் (25) கமலே என்றும், ருத்ரகோடியில் (26)ருத்ராணிஎன்றும், காலஞ்சரத்தில்(27)காளிஎன்றும், சாளக்கிராமத்தில் (28) மகாதேவி என்றும், சிவலிங்கத்தில்

ஜலப்பிரபை என்றும் மகாலிங்கத்தில் (30) கபிலை என்றும், மா கோட்டையில் (31) மகுடேஸ்வரீ என்றும், மாயாபுரியில் (32) குமாரீ என்றும், சந்தானத்தில் (33) லலிதாம்பிகை என்றும், கயையில் (34) மங்களாம்பிகையென்றும், புருஷோத்தமத்தில் (35) விமலை என்றும், சகஸ்ராக்ஷத்தில் (36) உத்பலாக்ஷீ என்றும், இரண்யாக்ஷத்தில் (37) மகோத்பலை என்றும், விபாசாயத்தில் (8) அமோகாக்ஷீ என்றும், புண்டரவர்த்தனத்தில் (39) பாடலீ என்றும், சுபாருசுவத்தில் (40) நாராயணீ என்றும், திரிகூடபர்வதத்தில் (41) ருத்திரசுந்தரீ என்றும், விபுலத்தில் (42) விபுலாதேவீ என்றும், மலையாசலத்தில் (43) கல்யாணி என்றும், சஹ்யபர்வதத்தில் (44) ஏகவீரை என்றும் அரிச்சந்திரத்தில் (45) சந்திரிகை என்றும், ராமதீர்த்தத்தில் (46) ரமணை என்றும், யமுனாதீர்த்தத்தில் (47) மிருகாவதீ என்றும் கோடிதீர்த்தத்தில் (38) கோடவீ என்றும், மாதவவனத்தில் (49) சுகந்தை என்றும், கோதாவரியில் (50) திரிசந்தீ என்றும் கங்காதுவாரத்தில் (51) ரதிப்பிரியை என்றும், சிவகுண்டத்தில் (52) சுபானந்தை என்றும். தேவிகாதடத்தில் (53) நந்தனீ என்றும், துவாரகையில் (54) ருக்மணீ என்றும் பிருந்தாவனத்தில் (55) ராதை என்றும் மதுரையில் (56) தேவகீ என்றும், பாதாளத்தில் (57) பரமேஸ்வரீ என்றும் சித்திரகூடத்தில் (58) சீதா என்றும், விந்தியத்தில் (59) விந்தியாதிவாசினீ என்றும், காவீரத்தில் (60) மகாலக்ஷ்மீ என்றும், விநாயகக்ஷேத்திரத்தில் (61) உமாதேவி என்றும், வைத்தியநாதத்தில் (62) ஆக்ரோயை என்றும், மகாகாளத்தில் (63) மகேஸ்வரீ என்றும், உஷ்ணதீர்த்தத்தில் (64) அபயாம்பிகை என்றும், விந்தியபருவதத்தில் (65) நிதம்பை என்றும், மாண்டவியத்தில் (66) மாண்டவீ என்றும், மயேஸ்வரபுரத்தில் (67) சுவாஹாதேவீ என்றும், சகலண்டத்தில் (68) பிரசண்டை என்றும், அமரகண்டத்தில் (69) சண்டிகை என்றும், சோமேஸ்வரத்தில் (70) வராரோகை என்றும் பிரபாசத்தில் (71) புஷ்கராவதீ என்றும், சரஸ்வதிநதிதடத்தில் (72) தேவமாதை என்றும், மகாலயத்தில் (73) மகாபாகை என்றும், பயோஷ்ணியத்தில் (74) பிங்களேஸ்வரீ என்றும், கிருதசௌசத்தில் (75) சிம்மிகை என்றும், கார்த்திகையில் (76) அதிசங்கரீ என்றும், உற்பலாவர்த்தத்தில் (77) லோலாதேவீ என்றும், சோணசங்கமத்தில் (78) சுபத்திரை என்றும் சித்தவனத்தில் 79 லக்ஷ்மீ

என்றும், புரதாஸ்ரமத்தில் (80) அனங்கை என்றும், ஜாலந்தரத்தில் (81) விஸ்வமுகீ என்றும். கிஷ்கிந்தபர்வதத்தில் (82) தாரை என்றும், தேவதாருவனத்தில் (83) புஷ்டிர்மேதா என்றும், காஷ்மீரமண்டலத்தில் (84) பீமாதேவீ என்றும், ஹிமாத்ரியில் (85) துஷ்டி விஸ்வேஸ்வரி என்றும், கபாலமோசனத்தில் (86) சுத்தி என்றும், காயாரோகணத்தில் (87) மாதாதேவீ என்றும், சங்கோத்தரத்தில் (88) தரா என்றும், பிண்டாரக க்ஷேத்திரத்தில் (89) திருதி என்றும், சந்திரபாகாநதியில் (90) கலாதேவியென்றும் அச்சோதயத்தில் (91) சிவதாரணீ என்றும், வேணுநதியில் (92) அமூர்தை என்றும், பதரியில் (93) ஊர்சி என்றும், உத்தரகிரியில் (94) அவுஷதை என்றும், குசத்தீபத்தில் (95) குசோதகை என்றும், ஏமகூடத்தில் (96 மன்மதை என்றும், குமுதத்தில் (97) சத்தியவாதினீ என்றும், அஸ்வத்தில் (98) வந்தினீ என்றும், சூபேராலயத்தில் (99) நிதி என்றும், வேதமுகத்தில் (100) கரயத்திரி என்றும், சிவசந்நிதியில் (101) பார்வதி என்றும். தேவலோகத்தில் (102) இந்திராணி என்றும், பிரமன்முகத்தில் (103) சரஸ்வதி என்றும் சூரியபிம்பத்தில் (104) பிரபை என்றும், சப்தமாதாக்களில் (105) வைஷ்ணவிதேவி என்றும். பதிவிரதைகளில் (106) அருந்ததி என்றும், அழகானஸ்திரீகளில் (107) திலோத்தமை என்றும், சர்வசரீரிகளுடையசித்தத்தில் (108) சக்தி பிரஹ்மகலே என்றும், தேவி பெயர்பெற்று விளங்குகின்றாள்.

ஓ ஜனமே ஜயனே! இதுகாறும் சதிதேவியின் அங்கங்கள் தங்கிய விடங்கள் நூற்றெட்டென்றும் அவ்விடங்களே சக்தி பீடங்களெனப் பெயர்பெறுமென்றும் அப்பீடங்களில் விசாலாக்ஷி என்னுந்திருநாமமுதல்பிரஹ்மகலேயென்னுந்திருநாமமீறுகசொல்லி வந்தநாமங்களால் தேவிவிளங்குகின்றாளென்றும் அறியக்கடவாய். இன்னமுஞ் சக்திபீடங்கள்சேகமிருப்பினும் இந்நூற்றெட்டும் உத்தமமானவை. இந்தப்பீடநாமங்களையும் இந்தத் தேவி நாமங்களையும் எவன் கேட்பானே எவன் நினைப்பானே அவன்சர்வ பாபத்தினின்றுநீங்கிமறுமையில் தேவியினது உலகத்தை யடைவான். இப்பீடங்களை யுத்தேசித்து விதிப்படி யாத்திரைசெய்து அவ்விடங்களில் பிதுர்க்களுக்கு சிரார்த்தாதிகளும் தர்ப்பணமும் பகவதிக்கு விதிப்படிமந்தாகிய பூஜைகளும்செய்து அடிக்கடி ஓஜகத்தாத்ரீ!

ஜகதம்பிகே! என்று அபராதக்ஷமைகேட்டுக்கொள்ளவேண்டும். தன் சக்திக்கேற்றவாறு மாயாபீஜமந்திரத்தை புரஸ்சரணைசெய்யவேண்டும். அந்தணர்கள் சுமங்கலிகள் கன்னிகைகள் பிரமசாரிகள் ஆகிய இவர்களை அறுசுவையோடுகூடிய வுணவுகளால் திருப்தி செய்விப்பதுமன்றி அந்தசக்திக்ஷேத்திரங்களில் வசிக்கும் சண்டாளராதியர்களையும் தேவிரூபமாகச் சொல்லப்பட்டிருக்கிறபடியால் அவர்களையும் உபசரித்துத் தன்னைப் புண்ணியசாலியாக நினைத்தல்வேண்டும் அந்தப்புண்ணியக்ஷேத்திரங்களில் பிறரிடத்தில்தானம்வாங்குதலும் ஆசையுள்ளவனுயிருத்தலுங்கூடாது எவனிவ்வண்ணம்பிரீதியோடு ஸ்ரீதேவியாத்திரை செய்கின்றனை அவன் ஆயிரங்காலபரியந்தம் பிரமலோகத்தில் வசிப்பான். அவனது பிதுர்க்களும் பிரமலோகமேயன்றி தேவிபட்டணத்திலும் வசித்துப் பின்னர் பிரமக்யானமடைந்து சம்சார சாகரத்தைக்கடந்து முக்தராகின்றனர்.

ஓ அரசனே! தேவியினிடத்து பக்திவைத்து இவ்வஷ்டோத்தர சதத்தைச் செபித்து அநேகர் வேண்டிய சித்தியடைந்தனர். அன்றியும் அவர்களா லடையக்கூடாத வஸ்துவுமில்லை; யாதொருகுறைவுமில்லை; அவர்களே புண்யவான்கள் இதுநிச்சயம்எவன்தேவியின் ரூபமடைகின்றனை அவன் தேவர்களால் எப்போதும் நமஸ்கரிக்கப்படுவானெனின் மனிதர்களால் பூஜிக்கப்படுவானென்று சொல்லவும்வேண்டுமோ! சிரார்த்தகாலத்தில் இந்நாமாஷ்டசதத்தைப் படித்தால் அவனதுபிதுர்க்கள் திருப்தியடைந்து நற்கதியடைகின்றனர் இந்தமுக்திக்ஷேத்திரங்கள் சாக்ஷாத் ஞானஸ்வரூபமாக விருகின்றபடியால் மனிதன் புத்தியுள்ளவனுக விருந்தால் இச்சக்திபீடங்களை ஆஸ்ரியமாக அடையக்கடவன் யாவரிடத்தில் இப்புஸ்தகம் எழுதப்பட்டிருக்கிறதோ அவர்கள் கிருகத்தில் மாரி முதலான பயமொழிந்து பருவகாலத்தில் சமுத்திரம் எப்படி விருத்தியடைகின்றதோ அப்படி சம்பத்து விருத்தியடைந்து நிலைபெற்றிருக்கும் ஓ அரசனே! நீ என்னை என்னகேட்டனையோ அந்தகசியங்களனைத்துஞ் சொன்னேன் இனி என்ன கேட்க விருக்கின்றனை யென்று வினவினர். சுலோகம் (கஉ)

மூப்பதாம் அத்யாயம் முற்றிற்று

ஸ்ரீங்கார பீடிகாயைநம:

மூப்பத்தொன்றும் அத்தியாயம்.

* தேவதானும் தேவி பிரத்தியக்ஷம்.

ஜனமேஜயன் ஓ முனிபுங்கவரே! கதாவமிர்தத்தைப் பானஞ் செய்யப்பெற்ற வொருவன் யான் திருத்தியடைந்து விட்டேன் இ ரிப்போது மென்பானே, அன்றியும் அமிர்தபானஞ் செய்கின்ற வர்களுக்கு மிருத்யுவில்லை என்பதுபோல தேவியினது கதாவமிர் தத்தைப் பானஞ்செய்கின்ற வர்கட்கும் அது கிடையா தாகலான் பர்வதத்திற்கெல்லாம் பிரபுவாகிய இமகிரியில் முன்பராசத்தியின் ஒளியானது பார்வதியாய்த்தோன்றிற் றென்று கூறினீர் அதனை இப்போது விரிவாயக்கேட்க விரும்பியுள்ளேனென்று பிரார்த்திக்க வியாசர் கூறுகின்றார்:—

தன்யனுயும் கிருத கிருத்யனுயும் பெரியோர்களால் மதிக்கப்ப ட்ட சிஷ்டனுயும் மகானுயும் பாக்யவானுயும் யாதொரு காம்யமுங் கருதாமல் தேவியினிடத்தில் பக்தியுள்ளவனுயுமிருக்கிற அரசனே! முன் சதிதேவியின் திருமேனி அக்கினியில் பிரவேசித்தபோது சிவ பெருமான் ஒரு செயலு மற்றவராய் உலகமெங்கும் உலாவி யோகி யைப்போல் பிரபஞ்ச சங்கற்பமின்றி ஓரிடத்திலிருந்து தேவியின் சொரூபத்தைத் தியானித்திருந்தனர். இவ்வாறு சிவபெருமான் போக சங்கற்ப சக்தி ரகிதராய் அசைவற்றிருப்பதே மூவுலகிலு முள்ள சராசரங்களாகிய எல்லாவுயிர்களும் பாக்கியமற்றனவாயும் உள்ளத்தில் ஆனந்தமற்று துக்கசிந்தனையு டையனவாயும் தத்தமக்குரிய செயல்களில் ஆசையற்றனவாயும் துக்கசாகரத்தில் ஆழ்ந்து கிடப்பனவாயும் ரோகமுடையனவாயு மாயின. சூரிய சந்திராதி கிரகங்களுக்கும் தேவர்களுக்கும் விபரீதமான செயல்க ளுண்டாயின. பூத முதலிய சிறு தெய்வங்களே சத்திய முடை யனவென்று கொண்டாடப்பெற்றன. இவ்வா றிருக்குங் காலத் தில் தாரகனென்னும் ஓர்பெரிய அசுரன் பிரமதேவனுடைய வரத்

---

* தேவர்களுக்குத் தேவி காக்ஷி கொடுத்தல்.

தினால்மூன்றுலோகத்துக்கும் பிரபுவாய்த் தேவர்கட்கு அளவிறந்த துன்பத்தைச்செய்ய அவர்கள் பொறுக்க முடியாதவர்களாய்த் தத்தமக்குரிய இடங்களை விட்டோடிப்போய் இவனுக்கு யாவரால் மரணமுண்டாகுமென்று சிந்திக்க, சிவபெருமானது அவுரசபுத்திரனா லுண்டாமென்றுணர்ந்து, அந்தோ! இப்பொழுது சிவ பெருமானிடத்துத் தேவியில்லா திருப்பதால் புத்திரனெவ்வண்ணமுண்டாவான் பாக்கிய ஹீனர்களாயிருக்கும் நம்முடைய காரியம் எவ்வாறு முற்றுப்டுபறப்போகிறதென்று பலவாறாகச் சிந்தாகுலப்பட்டு ஏக்கமுற்றவராய் வைகுண்டத்தையடைந்து,திருமால் தனியேயிருப்பதைக்கண்டு இதுதான் நல்லசமயமென்றெண்ணி அவரைப் பணிந்து, ஓநாராயணமூர்த்தியே! எங்கட்குண்டாயிருக்குந் துக்கத்தைப் போக்கிக்கொள்வதற் குபாயம் யாதென்றுவினவினர். அவர், வேண்டியவெல்லாந்தரும் கற்பகமாயும் மங்களையாயும் புவனங்கட்கெல்லாம் ஈசானையாயும் மணித்வீப வாசினியாயு மிருக்கின்ற தேவி இருக்க நீங்களேன் துன்பமுறுகின்றீர்கள்? அவ்வுலகமாதா நம்மைச் சிக்ஷிக்கும் பொருட்டு நம்மைப்பாராதவள்போல் இப்போதிருக்கின்றாள், அதனால் இத்துன்ப முண்டாயிருக்கிறது, வேறு காரணமில்லை, குணதோஷங்களை நாடிச் சிக்ஷிக்கின்ற தாயானவள் குழந்தையை யணைத்தலும் அடித்தலும் காருண்யந்தானே, அது போல் தேவியாகிய மாதாவினிடத்தில் நாம் அடிக்கடி செய்கின்ற குற்றங்கட்கான தண்டனைகளைச் செய்து வருகின்றாள், அவளே பொறுப்பாள்,வேறுயாவரிருக்கின்றனர், ஆதலான் அப்பராம்பிகையை நீங்கள் காலதாமதஞ்செய்யாமல் சரண்புகுந்து யாதொருகாரியமும் சிந்திக்காமல் அவளையே சிந்திப்பீர்களாயின் அவ்வம்பிகை நமது காரியத்தை நிறைவேற்றுவா ளென்று கூறி, எல்லாத்தேவர்களையும் புறப்படும்படிச் செய்து தாமும் லக்ஷுமியுடன் புறப்பட்டு இமயமலையை வந்தடைந்து, சிலர்மந்திர புரச்சரணையும் சிலர் அம்பிகையினுடைய யஞ்ஞவிதிப்படி அம்பிகையினது யாகத்தையும் சிலர் திரிதியையாதி விரதங்களையும் சிலர் சமாதி நிஷ்டையினையும் சிலர் நாம பாராயணத்தையும் சிலர் சூக்தங்களையும் சிலர் மந்திர பாராயணங்களையும் சிலர் இருக்காதிகளையும் சிலர் அந்தர்யாகத்தையும் சிலர் நியாச பாராயணத்தையும் சிலர் ஹ்ருல்லேகா மந்திரத்தினால் பூஜையையும் அநேக வருஷகாலமாய்ச் செய்து வந்தனர்,

ஓ ஜனமேஜயனே! பின்னர் ஓர் காலத்தில் தெய்வகதியாய் ஒரு சித்திரைமாதம் நவமிதிதி கூடிய சுக்கிர வாரத்தில் வேதங்கள் நான்கு பக்கங்களிலு நின்று தோத்திரஞ்செய்ய கோடிசூரிய ருதித் தாற்போல் பிரகாசத்தோடு கூடினதாய் கோடி சந்திர ருதித்தாற் போல் குளிர்ந்த கிரண சமூகங்களோடு கூடினதாய் கோடிமின்னல் கள் மின்னுவதைப் போல் ஒளியோடு கூடினதாய் அடியையும் முடி யையும் நடுவையும் கடந்ததாய் கைகால்முதலிய அங்கங்களில்லாத தாய் ஆண் பெண் அலியென் றறியக் கூடாததாய் அகண்டாகார மாய் ஓர் பேரொளி தோன்றிற்று. ஓ அரசனே! அவ்வொளியைத் தேவர்கள் கண்களாற் காண்பதற்குக் கூசிப் பின்னர் தைரியங்கொ ண்டு அச்சோதி ரூபத்தைப் பார்க்க, அது மிகவும் மனோகரமாய் புதிதாய்த் தோன்றிய யவ்வனபருவ முடைய குமாரியாய்க் காணப் பட்டது. இனி அதனைக் கேட்பாயாக:—

குமாரியானவள் வண்டுபோற் கறுத்து மல்லிகைஜாதி முதலிய மலர்களால் அலங்கரிக்கப்பட்ட கூந்தலையும், திருவாக்கிலுள்ள பச் சைக்கர்ப்பூரங்கலந்த தாம்பூலத்தினாலும் திருச்செவியின்கண் தள தளவென்று பிரகாசித்துக் கொண்டிருக்கும் காதோலையினாலும் விளங்கும் திருமுக மலர்ச்சியையும், அஷ்டமி சந்திர பிம்பம்போல் பிரகாசிக்கும் நெற்றியையும், நீண்ட புருவங்களையும், செந்தாமரை போன்ற மூன்று கண்களையும், உன்னதமாகிய நாசியினையும், மனோ கரமான அதரத்தையும், குருக்கத்தி மலர்போன்ற பற்களையும், தா மரை யரும்பைப் பழிக்கின்ற தனங்களையும், காதோலைதோள்வளை அட்டிகை முதலிய சுவர்ணபரங்களால் அலங்கரிக்கப்பட்ட திருச் செவி முதலிய அங்கங்களையும், கிண்கிணிக் கூட்டங்களால் ரண ரணவென் றொலிக்கின்ற மேகலாபரண மணிந்த இடையினையும், சோம வரிசைகளோடு சுகமாய்ப் பிம்பம்போற் காணப்பட்ட நிதம் பத்தையும், பாசம் அங்குசம் வரதம் அபயம் என்னும் இம்முத்தி தைகளோடு கூடிய நான்கு திருக்கரங்களையும், மாதளை மலரையும் தாழை மலரையு மொத்த திருமேனியையும் உடையவளாய் சந்திர ரேகையோடு பிரகாசிக்கும் இரத்ன கிரீட மணிந்தவளாய் குங்கும திலக மணிந்தவளாய் விலை மதிக்கப்படாத இரத்ன பதக்கங்களா லும் முத்தாரங்களாலும் பிரகாசிக்கின்றவளாய் சகலதேவர்களாலும் நமஸ்கரிக்கப் பெற்றவளாய் சர்வாபீஷ்டங்களையும் நிறைவேற்றுகின்ற

வளாய் யாவரையும் மோகிக்கச் செய்கின்றவளாய் புன்னகை புள்ளவளாய் காரணங் கருதாது கருணைசெய்யும் பிரசன்னமான திருமுகமுள்ளவளாய் யாவருக்கு மாதாவாய்க் காட்சிகொடுத்தனள்.

அவ்வம்பிகையைத் தேவரெல்லாங்கண்டு நமஸ்கரித்துக் கண்ணீர் சொரிந்து கண்டம்விம்ம நாக்குழற தோத்திரஞ் செய்தற்குக் கூடாதவராய்ப் பின்னர் ஒருவாறு ஊக்கங்கொண்டு பக்தியுடன் தலைவணங்கிப்போற்றுவாராயினர்:—ஓ தேவியே! உனக்கு நமஸ்காரம். மஹாதேவியே! சிவையே! எப்பொழுதும் உனக்கு நமஸ்காரம். பிரகிருதி ஸ்வரூபிணியே! சர்வத்திற்கும் மங்கள ஸ்வரூபமாயிருக்கின்றவளே! உனக்கு நமஸ்காரம். அக்னியைப்போல் நிறத்தையுடையவளே! தவத்தினற் பிரகாசிக்கின்றவளே! சூரியசம்பந்தமுடையவளே! கர்மபலங்களில் சம்பந்திக்கச் செய்கின்றவளே! உனக்கு நமஸ்காரம். துர்க்காதேவியே! வுன்னை நாங்கள் சரணமாகவடைகிறோம்.

ஹே! கிரிஜே! காளராத்திரியைப் போன்றவளாயும் பிரமனல் தோத்திரஞ் செய்யப்பட்டவளாயும் வைஷ்ணவியாயும் ஸ்கந்த மாதாவாயும் சரஸ்வதியாயும் அதிதியாயும் கூஷ்புத்திரியாயும் இருக்கின்றவளே! பரிசுத்தையாயும் சிவையாயு மிருக்கின்ற வுனக்கு நமஸ்காரமென்றும், உன்னை மஹாலக்ஷ்மி ஸ்வரூபமாக வறிகின்றேன் சர்வ சக்தி ஸ்வரூபமாகத் தியானிக்கின்றேன் ஆகையினல் நம்மை அதிகமாகப் பிரவர்த்திக்கச் செய்கின்றளென்றும் துதிக்கப்பட்டவளே உனக்கு நமஸ்காரம். விராட்சொரூபினியாயும் சூத்ராத்ம மூர்த்தையாயு மிருக்கின்றவளே! உனக்கு நமஸ்காரம். விராட் சொரூபிணியாயும் சூத்ராத்ம மூர்த்தையாயு மிருக்கின்றவளே! உனக்கு நமஸ்காரம். வியாகிருத (அநேக) ரூபிணியாயிருக்கின்ற வுனக்கு நமஸ்காரம். பிரம்ஹ மூர்த்தையாயிருக்கின்ற வுனக்கு நமஸ்காரம். எந்த அஞ்ஞானத்தில் கயிறுபோன்ற வுலகமானது சர்ப்பமாகக் காணப்படுகின்றதோ எந்தத்தேவியின் தியானத்தினல் (கயிற்றினிடத்தில் சர்ப்பமாகக் காணப்பட்ட பயப்பிராந்தி) நாசமடைகின்றதோ அந்தப் புவனேஸ்வரியாகிய வுனக்கு நமஸ்காரம். சதபத லக்ஷ்யார்த்தமாகிய சிதேகரச ரூபிணியாயும் வேததாத்பரியத்தை முன்னே யுணர்த்தவல்ல அகண்டானந்த ரூபிணியாயும் வேததாத்பரியம் விளையுமிடமாயும் இருக்கின்ற வுனக்கு

நமஸ்காரம். பஞ்சகோசங்களைக் கடந்து அவஸ்தாத்ரய சாக்ஷிணியா யிருக்கின்ற வுனக்கு நமஸ்காரம். துவம்பத லக்ஷ்யார்த்தமாய் பிரத்ய காத்ம ஸ்வரூபிணியா யிருக்கின்ற வுனக்கு நமஸ்காரம். பிரணவஸ்ரூ பிணியா யிருக்கின்ற வுனக்கு நமஸ்காரம். ஹ்ரீக்கார மூர்த்தையா யிருக்கின்ற வுனக்கு நமஸ்காரம். நாலுமந்திர ஸ்வரூபிணியாயும் நாலு மந்திராத் மிகையாயும் கருணை ஸ்வரூபிணியாயு மிருக்கின்ற வுனக்கு நமஸ்காரம் என்று தோத்திரஞ்செய்தனர். மணித்வீப வாசி னியாகிய தேவி தேவர்களைப்பார்த்து மதுரமான குயிலோசைபோ லும் இனிக்கும் சில இன்சொற்களைக் கூறுகின்றாள்:—ஓ தேவர்காள்! நீங்கள் எந்தக் காரியத்தை விரும்பி யிருக்கின்றீர்கள்? எதற்காக இவ் விடத்தில் கூடினீர்கள்? நான் எப்பொழுதும் பக்தர்களுக்குக் கற்பக விருக்ஷம்போல் வரங்கொடுத் திருப்பவள். ஆகலான் பக்தி மிகுந்த உங்களுக்கு நானிருக்கும்போது என்ன சிந்தனை? உங்களுக்குச் சம் சாரத்தாலுண்டாகுந் துக்கத்தினின்றும் கரையேற்றுவிக்க நான் பிரதிக்ஞை செய்திருக்கின்றே னென்று மிக்கபிரேமையோடு திரு வாய்மலர்ந்தருளினள். அவ்வுண்மை வசனங்களைத் தேவர்கள் கேட்டு சந்துஷ்டியடைந்த மனதுடையவர்களாய்ப் பயமற்றுத் தங்களுக்கு நேர்ந்த சங்கடங்களைச் சொல்வாராயினர்:—

ஓ தேவீ! நீ எல்லாமறிந்தவளாயும் சர்வ சாக்ஷிணியாயு மிருக் கின்றவளாதலால் இம்மூவுலகத்தினும் நீயறியாதது யாதிருக்கின்றது? சிறிதேனு மில்லையன்றே! ஓ சிவே! தாரகனால் நாங்கள் எப் பொழுதும் பீடிக்கப் பட்டுள்ளோம். அவனுக்கு மரணம் சிவபெரு மானுடைய திருமேனியினின்றுந் தோன்றுகிற குமாரனாலென்று பிரமன்கூறி யிருக்கின்றான். அச்சிவபெருமான் சக்தியோடிகூடினா லன்றே குமாரனுண்டாவான். ஓ பரமேஸ்வரியே! அப்பெருமான் சக்தியோடு இப்பொழுது கூடியில்லையே; அதனை நீ யறியாயோ? எல்லாமறிந்தவர் எதிரில் யாதும் அறியாதவர் எதனை எடுத்துக் கூறுவர்? அதுபோலாகும் நாங்கள் உன்னெதிரில் இப்பொழுது சொல்லியது எங்களால் சொல்லாது விட்டவையெல்லாம் நீயே யறிந்தி. எங்கட்கு எப்பொழுதும் உன்திருவடியில் சலனமில்லாத பக்தியிருத்தல் வேண்டும். இதுவேநாங்கள் முக்கியமாய்ப் பிரார்த்

திக்கத்தக்கது, ஏனைய வெல்லாம் சரீர நிமித்தமானதன்றிவேறில்லை என்றனர். இவ்வாறு தேவர்கள்கூறியதைக்கேட்ட தேவி கூறுகின்றாள்:— ஓ பக்தர்களே! நீங்கள் வேண்டியபடியே என் திருவடியில் உங்களுக்குண்மையான பக்தியுண்டாக்கக்கடவது. பர்வதராஜன் தாமரைகமலத்தில் என்னை வைத்துபக்தியுடன் உபாசித்துவருகிறான். நானும் அவனுடைய கிருகத்திற்குச்செல்ல ஆவலுள்ளவளா யிருக்கின்றேன். ஆகலான் எனது சக்தியானது பார்வதி என்கிற திருநாமத்துடன் அவன்பாற்றோன்றப் போகின்றது. அப்பார்வதியை நீங்கள் பரமேஸ்வரனுக்குக் கொடுப்பவர்களாகப் பிரயத்தனப்படப் போகின்றீர்கள். அத்தேவியே உங்கள் அபிஷ்டத்தை நிறைவேற்றப் போகின்றாளென்று அதுக்கிரகஞ் செய்தனள். அப்பொழுது பர்வதராஜன் நமது தவம் முற்றுப்பெற்றது முற்றுப்பெற்றது என்று ஆரவாரம்புகொண்டு கண்ணீர் அருப்பித் தேவியை நோக்கித் துதிக்கின்றான்:—ஓ பரமேஸ்வரி! நீ எவனுக்கு அதுக்கிரகஞ் செய்யவேண்டி நினைக்கின்றனையோ அவனை மிகவும் பூஜ்யனாகச் செய்துவிடுகிறாய்; நீ அவ்வண்ணம் நினையாயாயின் ஜடனாகிய நானெங்கே சச்சிதானந்த ரூபிணியாகிய நீ எங்கே நான்நூறு ஜன்மங்களில் அரியதவஞ் செய்திருந்த போதிலும் உனக்குத் தந்தையாகும் பாக்கிய மாகிய தவத்தைச்செய்திருப்பேனே; செய்திரேன். அங்ஙனமிருந்தபோதிலும் என்னை இவ்வுலகில் கண்டோரெல்லாம் ஆ! ஹா!! இவன் இவ்வம்பிகையைப் புத்திரியாகப் பெறுதற்கு எத்தனை அஸ்வமேதஞ் செய்தானோ என்றும் எத்தனைவிதமான புண்ணியங்களெல்லாஞ் செய்து முடித்தானோ என்றும் எத்தனைகாலம் தேவியை உபாசித்தானோ என்றும் இவையெல்லாம் செய்யாதிருப்பானுயின் ஜகன்மாதாவாகிய இவள் புத்திரியாகவருவாளா என்றும் பிரமாண்டங்களையெல்லாம் கருப்பத்தில் வைத்திருக்கும் தேவி எப்போது இவனுக்குப் புத்திரியாயினளோ இவனுக்குச் சமானமான மனிதன் இவ்வுலகில் எவனிருக்கின்றனென்றும் பேசும்படியான கீர்த்தியைத்தந்தனையே, ஓ ஜகஜ்ஜனனீ! நானே பாக்யசாலி, நானே தன்யவான், என்னுடைய பிதுர்க்களெல்லாம் எவ்விதமான உயர்ந்த பதத்திலிருக்கின்றனரோ நானறியேன், நீவசிப்பதற்கு நானுபயோகப்பட்டபடியால் என்பிதுர்க்கள் செய்தபாக்கியத்தை எவ்வளவினதென்று கூறுவேன். நீ இவ்வண்ணமான அரியகருணையை

எவ்வண்ணஞ் செய்தனையோ அவ்வண்ணமான கருணையினாலேயே சகலவேதாந்த சித்தாந்தமாகிய சொரூபத்தையும் பக்திசுகதமாகிய யோகத்தையும் சுருதிசம்மதமாகிய ஞானத்தையும் எனக்குபதேசிக்கவேண்டும் அங்ஙனஞ் செய்வையாயின் நான் உனது சொரூபமாகவே யிருப்பேனன்றே என்றனன். இவ்வாறு ஆனந்த மிகுதியினால் பர்வதராஜன் கூறும் விண்ணப்பங்களைத் தேவி கேட்டு மலர்ந்தமுகமுள்ளவளாய் இரகசியார்த்தங்களை யெல்லாம் உபதேசிக்கத் தொடங்கினள்:—(74.000)

31 - வது அத்யாயம் முற்றிற்று.

ஓ

ஹ்ரீங்காரவேத்யாயநம:

முப்பத்திரண்டாம் அத்தியாயம்.

தேவீகீதாப்ராரம்பம்.

தேவி தேவர்களையும் பர்வதராஜனையும் பார்த்துக் கூறுகின்றாள்:—இப்போது என்னால் சொல்வதைக் கேளுங்கள். அதைக் கேட்ட மாத்திரத்தில் நீவிரனைவரும் எனது சொரூபத்தை யடைவீர்கள், சிருட்டிக்கு முன்பாப்ரஹமத்திற்கு வேறுதலின்றி அப்பிரமத்தினிடத்தில் ஆத்மசொரூபமாயும் சித்சொரூபமாயும் சம்வித் சொரூபமாயும் நான்மாத்திரமிருந்தேன்; என்னைத்தவிரவேறொன்றுமில்லை. அப்பிரஹமமோ அப்ரதர்க்கியம் (இப்படிப்பட்டதென்று அளவுபடுதற்கரிய) நிர்தேசிக்கக்கூடாது; உபமானமற்றது; உபாதியற்றது. இத்தன்மையுள்ள அப்பிரமத்தினிடத்தில் அக்னியிற் சூடும் சூரியனிடத்தில் கிரணமும் சந்திரனிடத்தில் நிலவும் எவ்வாறு எப்பொழுதும் வேறின்றியிருக்கின்றதோ அவ்வாறுநானிருக்கின்றேன். அப்படியிருக்கும் என்னிடம் நீக்கமற்றிருப்பதான மாயை என்றுபெயருள்ள ஒருசத்தியுண்டு. அந்த மாயாசக்தி சத்தென்றும் அசத்தென்றும் சதசத்தென்றுஞ் சொல்லத்தக்கதல்ல. அந்தமாயா சத்தியினிடத்தில் சிவர்களும் அச்சிவர்களுடைய கர்மங்களும் காலகுணமும் வேற்றுமையில்லாமல் சூழ்ந்தியல்வதை

யில் விவகாரங்களெல்லாம் அடங்கியிருப்பதுபோல அடங்கி யிருக் கின்றன. இந்த மாயையினிடத்தில் என்னுடைய சக்திசம்பந்த மிருப்பதால் இந்த மாயைக்கு நானே பிஜாத்மகமாக விருக்கிறேன். இந்தமாயைக்கு நான் பீஜமாயிருப்பினும் அதற்கு ஆவரணம் (மறை க்குஞ் சத்தி) என்கிற நாம்மூடைய ஓர் தோஷ சத்தியுண்டு. (அதாவது - திரோதை) இந்த மாயையில் என் சம்பந்த மிருப்பதால் என் சம்பந்த மூள்ள சைதன்யமும் இதனிடத்தில் சம்பந்தப்பட் டிருப்ப தென்றறிவாய். இந்தச் சைதன்னிய சம்பந்தத்தால் இந்த மாயையே நிமித்த காரணமாயும், பிரபஞ்சமாகப் பரிணமப் படுவதால் உபாதான காரணமாயும் இருப்பதென்றறியக்கடவாய். இதனைச்சிலர் தமசென்றும் சிலர் ஜடமென்றும் சிலர் ஞான மென் றும் சிலர் பிரதான மென்றும் சிலர் பிரகிருதி யென்றும் சிலர் சக்தி யென்றும் சிலர் உற்பத்தியில்லாத தென்றுங்கூறுவர். சைவசாஸ் திரத்தில் வல்லவர்கள் விமரசை (விளக்கம்) என்றும் வேததத்வார் த்த சிந்தனையுடையவர் அவித்தை யென்றுங் கூறுவர். இப்படியே இந்தமாயை நானவிதமான பெயர்களால் வேதாகிகளிலும் அழைக் கப் பட்டுவருகின்றது. இம் மாயை திரிசியமாகக் காணப்படுகை யால் சடமென்றும் ஞானநாசப்படுத்துகையால் அசத்தென்றுங் கூறு வர். சைதன்னிய சம்பந்த மூடைத்தாய் நிமித்தகாரணமா யிருப்ப தால் சைதன்னியமென்று சொல்லக்கூடாதோ வெனின்! சைதன் யங்காணப்பட்டதல்ல, இது காணப்பட்டது. ஆகலான் மாயை சைதன்யமன்று சடமேயாம். அன்றியும் சைதன்னியம் சுயம்பிர காசமாய்ப் பிரகாசிப்பதன்றி மற்றொன்றால் பிரகாசிக்கப் படுவத ன்று. படுமெனின் அனவஸ்தாதோஷமும் கர்ம கத்துரு விரோத மு முண்டாகும். மற்றென்னெனின் தீபம்போல் தனக்குத்தானே பிரகாசித்துக்கொண்டு தனக்கு வேறாயுள்ள எல்லாப் பொருளையும் பிரகாசிக்கச் செய்வதாகும். அன்றியும் காணப்படும் பொருளானது சாக்கிரம் சுவப்பனம் சுழுத்தி என்னும் அவஸ்தாத்திரயங்களில் மாறுத லடைவதுபோல் விபசாரத்தை யடைவதின்று. அந்த அவஸ் தாத்ரயங்களே யனுபவிப்பது மின்று. அதுபவிப்ப தெனின் அது அநுபவிப்பதற்கு இதற்குவேறாய் இதனை யநுபவிக்கச் செய்யவல்ல ஒரு சாக்ஷி வேறு யிருக்கவேண்டு மன்றோ. இது ஸ்வயம்ப்பிர காச மென்றும் ஒன்றினால் பிரகாசிப்பதில்லை யென்றும் முன்னமே கூறியிருக்கின்றபடியால் இதற்கு வேறொரு சாக்ஷி எங்ஙனங் கூடும்?

ஆகலான் நல்ல சாஸ்திர மறிந்தவர்கள் இதனை நித்யத்வம் என்றும் பக்தியை விளைவிப்பதாகிய பிரேமைக்கு ஆஸ்பதமாயிருத்தலால் ஆனந்த ரூபமென்றுங் கூறுவர். ஓ பர்வத ராஜனே! இப்பொழுது சொல்லிவந்த நியாயத்தால் எனது சம்வித் சொரூபம் இதுவென்றும் அது நித்யத்வமென்றும் ஆனந்தமென்றுஞ் சாதிக்கப்பட்டது.

பிரேமாஸ்பதமா யிருக்கின்ற இவ்வானந்த வஸ்துவன்றி யொரு வஸ்துவு மில்லையாகலான் இது ஓர் காலத்தும் உண்டானதென்று சொல்லக்கூடாது. மற்றென்னின் அபரிச்சின்னமா (அளவிறந்ததா) யிருத்தலினுல் நித்தமென்பதேயாம். இதுவே என்னுடைய சம்மதம்.

சம்வித் சொரூபமாகிய இந்தஞானம் (சீவாத்மாவாகிய) ஆத்ம தர்மமாகாது. ஏனெனில் இவ்வாத்மாவானது சடமாகிய மாயா தர்மத்தை யடைந்திருத்தலினுல் அற்றன்று. இவ்வான்மா அந்த ஞான தர்மத்தையு முடையதே யெனின், ஞானத்துக்கு சடத்தன்மை கண்டதில்லை. அத்தன்மை ஒரு சிறிதும் சம்பவிக்கவு மாட்டாது. ஏனெனின்! ஞானம் சித்துத் தன்மையை யுடைய தாகலின் அதனிடத்தில் சடத்தன்மை காணப்படாது. அது அந்த ஞானத்தினிடத்தில் சம்பவிக்கவு மாட்டாது. ஆகலான் சித்து சித்தே. அது ஒரு பொழுதும் அசித்தின் தருமத்தைப் பொருந்தாது. இங்ஙன மான சம்வித் சொரூபமாகிய என்னுடைய ஞானசொரூபம் எப் பொழுதுஞ் சுகரூபமாயும் சத்தியமாயும் பூரணமாயும் அசங்கமா யும் துவைதலக்ஷண மற்றதாயுமுள்ளது ஆத்மாவோவெனின் தன்னைவிட்டு நீங்காததாகிய மாயாகர்ம சம்பந்தத்தால் சனனத்துக் கேதுவாயுள்ள கர்மத்தை யடைகிறது. முன்சொன்ன ஞானத் துக்கு ஆனந்தமெப்படி நித்தியமென்று சொல்லப்பட்டதோ அப் படியே இந்த மாயாகர்மம் இந்த ஆத்மாவுக்குப் பூர்வமாகவே உள்ள தென்று சொல்லப்படும். அவ்வாறுள்ளதாகிய அது காலகர்மங்க லால் பிரிக்கப்பட்டு சம்ஸ்கார (பரிசுத்த)த்தை யடைகின்றது (22) அஃதாவது மாயாகர்ம சம்பந்தத்தால் அவிவேகியாய் பல பிறப் படைதலினுல் அப்பிறவிகள்தோறும் கர்மங்கள் கழிவுற்றுவருவதே

யாகும் அதனை இவ்வான்மா அறியான். ஓ பர்வதராஜனே. இப்போது என்னால் சொல்லப்பட்ட ஆன்ம லக்ஷணத்தை நீ நன்முயறி வாயாக.

என்னுடையஸ்வ ஸ்வரூபமோ லவுகிகமற்றதாயும் அவ்யாகிருதமா (விகாரமற்றதா)யும் அவ்யக்தமா (நன்முய்க்காணக்கூடாததா)யும் மாயையோடு கூடியதாயும் சகலகாரணங்கட்குங் காரணமாயும் சகலதத்வங்களுக்கும் ஆதியாயும் சச்சிதானந்த விக்ரஹமாயும் சர்வகர்ம கரீபூதமா (சர்வகர்மங்களையும் தனக்குள்ளடக்கிக்கொண்டிருப்பதா)யும் இச்சாஞானக்கிரியா சக்திகளுக்கிடமாயும் ஹ்ரீங்கார மந்திரவாச்சியமாயும் ஆதிதத்வமாயு இருப்பதென்று சகல சாஸ்திரங்களிலுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த ஆதி தத்துவத்தினின்றும் சப்ததன்மாத்திர ரூபமாயிருக்கின்ற ஆகாயமும் அதினின்றும் பரிசதன்மாத்திரை ரூபமாயிருக்கின்ற வாயுவும் அதினின்றும் ரூபதன்மாத்திரை ரூபமாயிருக்கின்ற அக்னியும் அதினின்றும் ரசதன் மாத்திரை ரூபமாயிருக்கின்ற ஜலமும் அதினின்றும் கந்ததன்மாத்திரை ரூபமாயிருக்கின்ற பிருதிவியுந்தோன்றின. இவ்வைந்து சூக்குமபூதங்களும் பஞ்சீகரணத்தால் பிருதிவியினிடத்தில் சத்தபரிச ரூப ரச கந்தங்களும் ஜலத்தினிடத்தில் சத்த பரிச ரூபரசங்களும் அக்கினியினிடத்தில் சத்தபரிச ரூபங்களும் வாயுவினிடத்தில் சத்தபரிசங்களும் ஆகாயத்தினிடத்தில் சத்தமுங் கூடி இருக்கும். இத்தப்பஞ்ச தன்மாத்திரைகளினின்றும் லிங்கசரீரமெனப்படும். சூக்ஷ்மசரீரத்தோன்றும் இந்த சூக்ஷ்மசரீரம் தூலசரீரத்திற்கு சூத்திரம் (கயிறு) போன்றுள்ளது. (30)

இனி இவ் வைம்பூதங்களும் பஞ்சீகரணமாதல் எவ்வகை யெனின்:—பஞ்சபூதங்களைத் தனித்தனி இரண்டாகப்பிரித்து அவற்றுள் ஒவ்வொருபூதத்தின் ஒவ்வொருபாகத்தை வேறுகவைத்து மற்ற ஒவ்வொரு பூதத்தின் வேறுபாகத்தைத் தனித்தனி நன்ஞன்காக்கி அவற்றை முன் வேறுக வைத்த பாகத்தில் தன்னம்சபாகம் நீக்கி வேறு நான்கு பூத பாகத்தையும் அதனோடு சேர்க்க ஐந்தாகிப் பஞ்சீகரணமாகின்றன. எப்படியென்றால், பிரிதிவிபூதத்தை இரண்டு கூறுக்கி ஒருகூறை வேறுவைத்து மற்றொருகூறை நான்காகப்பிரித்து அந்த நான்கையும் இதுபோலும் பிரித்த சலமுதலிய

நான்கு பூதங்களோடு சேர்க்க ஐந்தாகின்றது. இதுபோலவே சல பாகத்தைப் பிரிதிவி தேயு வாயு ஆகாசமுதலிய நான்கோடும் அக்னிபாகத்தைப் பிரிதிவி அப்பு வாயு ஆகாசமுதலிய நான்கோடும் வாயு பாகத்தைப் பிரிதிவி அப்பு தேயு ஆகாசமுதலிய நான்கோடும் சேர்க்க ஐந்தாகின்றன. இவ்வாறு பஞ்சீகரணப்பட்ட இவற்றின் காரியமே ஆன்மாக்களுடைய தூலசரீரம். இத்தூலசரீர சமூகமாகிய சமஷ்டியே விராட்சொரூபமாம்.

பஞ்சபூதங்களுடைய சத்வாம்சத்தினின்றும் அந்தக்கரண மூ, சுரோத்ரம், தூவக்கு, சக்ஷு, சிஃகுவை ஆக்ராணம் என்னும ஞானேந்திரியங்களும் உண்டாகின்றன. அந்தக் கரணம்விருத்தி பேதத்தால் நான்காயிற்று. எங்ஙனமெனின் ஒரு விஷயத்தில் சங்கற்ப விகற்பங்க ளுண்டாகின்றபொழுது மனமென்றும், அவ்விஷயத்தில் சந்தேகமில்லாமல் நிச்சயத்தை யடைகிறபோது புத்தியென்றும், நிச்சயத்தை அடிக்கடி எண்ணும்போது சித்தமென்றும், நிந்திப்பவன் நானென்று சொல்லும்போது அகங்காரமென்றும் பெயர் பெற்றன.

அப் பஞ்ச பூதங்களுடைய இராஜச அம்சத்தினின்றும் வாக்கு பாதம் பாணி பாயுரு உபஸ்தம் என்னுங் கர்மேந்திரியங்களும் பிராணன் அபானன் சமானன் உதானன் வியானன் என்னும் பஞ்சவாயுக்களும் உண்டாகின்றன. இவ்வைந்தில் இருதயத்தில் பிராணவாயுவும், குதத்தில் அபானவாயுவும், நாபியில் சமானவாயுவும், கண்டத்தில் உதானவாயுவும், சரீரமுற்றும் வியானவாயுவும் இருப்பனவாம். ஞானேந்திரியம் ஐந்து கர்மேந்திரியம் ஐந்து பிராணிவாயுக்கள் ஐந்து மனம் புத்தி * இரண்டு இப்பதினேழுங் கூடியபோத சீவசூக்ஷுமசரீரம். இச்சூக்குமசரீர சமஷ்டியே எனக்குச் சூக்குமசரீரமென்று சொல்லப்படும். மூக்குணங்களும் பூதங்களோடு கலவாதிருக்கும் அவசரம் பிரகிருதி எனப்படும். அதுதான் அவ்யக்தம். இது ஜீவ சம்பந்தம் அவித்தியா சம்பந்தம் என இருவகை. எந்தப்பிரகிருதி தனது ஆச்ரயத்தையடைந்து

---

* வேதபுராணாதிகளில் அந்தக் கரணத்தை ஒன்றாகவும் இரண்டாகவும் மூன்றாகவும் நான்காகவும் ஐந்தாகவும் சிற்சில விடங்களில் கூறுவதுண்டு. அவற்றை ஈண்டு இரண்டனுள்ளடக்கிக் கூறியுள்ளன.

ரக்ஷிக்கப்படுகின்றதோ அது வித்யை யென்று சொல்லப்படும். சத்வசம்பந்தமான அந்த வித்யையை அதிஷ்டித்துப் பிரவஞ்ச விவகாரத்தில் உன்முகப்படுகிற பரமான்மாவுக்கு இயற்கைஞான சொரூபியாகிய ஈஸ்வரனென்று பெயர். அப்பெயரேயல்லாமல் சர்வக்ஞனென்றும் சர்வசக்தனென்றும் சர்வானுக்கிரககாரகனென்றுஞ்சொல்லப்படும். அவித்தையோடு கலந்து சுக துக்க மோக வடிவாய் நின்றுழலும் அஜ்ஞான ஆன்மாவுக்குச் செயற்கைஞான சொரூபியாகிய சிவனென்றும் கிஞ்சித்ஞத் தன்மையுடையவனென்றும் பெயர். இவன் சர்வதுக்காஸ்ரயனையும் அவித்யா சம்பந்த மாயுள்ள தூலசூக்ஷும காரணசரீர வாசியாயு மிருப்பன். தூல தேக அபிமானத்தால் விஸ்வனென்றும், சூக்ஷும தேக அபிமானத்தால் தைஜஸனென்றும் காரண சரீராபிமானத்தால் பிராஜ்ஞனென்றுஞ் சொல்லப்படுவன். குணரூபியாகிய ஈஸ்வரன் சிவர்களுடைய தூலமுதலிய மூன்று சரீர சமஷ்டியபிமானத்தால் ஈசனென்றும் சூத்ரனென்றும் விராட் என்றும் சொல்லப்படுவன். சிவர்களுடைய இச்சையின்படி அனுபவிக்கவேண்டிய நானாபோக நிமித்தமாய் சர்வேஸ்வரனுகிய ஈஸ்வரனே என்னுடைய சக்தியினால் பல திருவுருக்கொண்டு சர்வானுக்கிரகஞ் செய்யும்படிச் செய்கின்றேன். ஓ பர்வதராஜனே! இப்போது சொல்லிவந்த கிரமத்தால் எல்லாச் செயலும் என்னுடைய சக்தியினலன்றி ஆவதில்லையென அறியவந்தன. இதனை யறியக்கடவாய். (சுலோகம்-நூ0)

கூஉ-ம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

ஹ்ரீங்காரசிந்தியாயை நமஃ

முப்பத்து மூன்றும் அத்தியாயம்.

தேவீ விஸ்வரூப தரிசனம்.

தேவி கூறுகின்றாள்:—சராசராத் மகமாயுள்ள எல்லாவுலகமும் என் மாயாசத்தினு லுண்டாக்கப்பட்டன. அந்த மாயையும் உண்மையில் ஆலோசித்துப்பார்க்குங்கால் என்னிடவேறாக இல்லவே இல்லை. அதனை விவகாரதிசையில் வித்தை என்றும் மாயையென்றும் சொல்லப்படும். அப்படிச் சொல்லப்பட்டதை தத்துவ திருஷ்டியால் பார்க்கும்போது அது கேவலம் நானாகவே யிருப்பதன்றி என்னையன்றி வேறாக யிருப்பதன்று. அப்படி அதுவாகவே யிருக்கின்ற நான் எல்லாவுலகங்களையுஞ் சிருஷ்டித்து அவைகளில் அந்தர்யாமியாயிருந்து ஆத்மாக்களை முன்னிட்டு மாயாகர்மங்களோடு கூடியிருக்கின்றேன். அவ்வான்மாக்கள் மாயாபாதத்தால் எப்படி எப்படியாகின்றனவோ அப்படி அப்படி அவ்வக்காரணங்களினால் லோகாந்தரகதி யடைகின்றன. கருணாலியாகிய நான் அவ்வாறு ஆன்மாக்களை முன்னிட்டு மாயா கர்மங்களோடு கூடாமற்போவேனாயின் அவ்வான்மாக்கள் அந்தந்த கதிகளையடைவதற்கு வேறுஹேதுண்டோ? ஆன்மாக்கள்வெவ்வேறு பேதங்களையடைகிறபோது நான் எப்படியிருப்பனெனில் உபாதியினால் பேதப்பட்ட கடாதிகளிலுள்ள ஆகாயம் கடாகாசம் மகாகாசமென எப்படி பேதப்பட்டதோ அப்படி நான் ஆன்மாக்களிடத்தில் வெவ்வேறு பேதப்பெயர் பெற்றிருக்கின்றேன். என்னிடத்தில் ஆன்மாக்களுடைய கருமசம்பந்தம் எவ்வாறிருக்குமெனின் உச்சரீசாதிவஸ்துக்களை சூரியன் பிரகாசப்படுத்துகிறதேயன்றி அந்தவஸ்துக்களுடைய தூஷணாதிகளை அடைகின்றானா? இல்லையே. அதுபோல நானும்ஆன்மாக்களைப் பிரகாசப்படுத்துவதேயன்றி அவைகளுடைய தோஷங்களையடையத்தக்கவளாகேன். இவ்வுண்மையறியாத சிலர் புத்தி முதலான கர்த்திருத்வம் என்னிடம் உண்டாகிறதென்றும் மூடபுத்தியுடையவர் ஆத்மாதான் கருத்தாவென்றும் நிச்சயித்துச் சொல்லு

கிறார்கள்; ஆனல் புத்திமுதலானதும்அன்று, ஆன்மாவுமன்று அக்கியானபேதத்தாலும் மாபையின் பேதத்தாலும் எனது மாயையினலேயே ஜீவேஸ்வரர்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. எவ்வாறுபிரிக்கப்பட்டுள்ளதெனின், ஆகாசம்கடாகாசம்மகாகாசம்எனஎப்படிப்பேதமாய்க்கற்பிக்கப்படுகிறதோஅப்படிச்சீவாத்மாக்கள்கற்பிக்கப்பட்டனரென்றும் ஈஸ்வரபேதங்கள் அநேகமென்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. உண்மையில் இவ்விரண்டு பேதங்களுமில்லை. (பேதப்படுவதற்குக் காரணமென்னே யெனின்) தேகேந்திரியாதிகளுடையகூட்டங்களாலும் குணங்களுடைய வாசனாபேதங்களாலும் அவித்தை மாயைகளுடைய பேதங்களாலுமேயன்றி வேறில்லை.

அரசனே! ஒதப் புரோதரூபமாயிருக்கின்ற இந்தப் பிரபஞ்சமெல்லாமும் நானே, இவைகட்கெல்லாம் சூத்ராத்மாவாயிருக்கின்ற ஈஸ்வரனும்நானே, விராட்சொரூபமும்நானே, அயன் அரி அரர் என்பவரும் சரஸ்வதி லட்சுமி கௌரிகளும் நானே, பசு பட்சிகளும் சண்டாளனும் திருடனும் வேடனும் நானே, குரூரமான கர்மங்களும் சத்கர்மங்களும் மஹாசனங்களும் ஆண்பெண் அலிகளும் நானே சந்தேகமில்லை. எந்தெந்த வஸ்துக்கள் காணப்படுகின்றனவோ கேட்கப் படுகின்றனவோ அந்தந்த வஸ்துக்களில் யான் உள்ளும் புறம்பும் எப்பொழுதும் வியாபித்திருக்கின்றேன். ஆகையினல் தாவர ஜங்கமங்களாகிற சகல வஸ்துக்களும் என்னல் விடப்பட்டனவாகா, எனக்கு மேலொருவஸ்துவில்லை; உண்டெனில் அது மலடிக்கு மைந்தனிருப்பதுபோலுமாம். விஷ்ணு வாதிகளைச்சொல்லலாகாதோவெனின் அது கயிற்றினிடத்தில் சர்ப்பப்பிராந்தி முதலானவை தோன்றுமாறுபோலத் தோற்றமாத்திரமேயன்றி வேறில்லையாம். ஏனெனில் இவர்களெல்லாம் என்னல் கற்பிக்கப்பட்டு என்னிலேயே பிரகாசிக்கப்படுபவர் இதிற்சந்தேகமில்லை. எப்படி கற்பிதமானவஸ்துக்கள் அதிஷ்டானத்தினல் பிரகாசிக்கின்றனவோ அப்படி அதிஷ்டானமாகிய என்னல் பிரகாசிக்கின்றவர்களாம் என்றுசொல்லும்பொழுது பர்வதராசன் தேவியை நோக்கிச் சொல்லுகிறன் :—

ஓதேவி! சமஷ்டியாகிய எல்லாப்பிரபஞ்சமும்உன்னுடையசரீரமென்ற தெப்படி? அத்திருமேனியின் காட்சியை யான்காண விரும்

புகிறேன்; கிருபை செய்யக்கூடுமோ வென்று விண்ணப்பஞ் செய்யத் திருமால் முதலிய தேவர்களும் கேட்டுச் சந்தோஷித்துப் புகழ்ந்தனர். பக்தர்களுடைய அபீஷ்டத்தைக் கிரகிக்கின்றவளான தேவி பர்வதராஜனுடைய வேண்டுகோளையும் தேவர்களுடைய சந்தோஷத்தையும் பூர்த்திசெய்யத் திருவுளங்கொண்டு தனது பராத்பரமாகிய விராட்சொரூபமெனும் உண்மைச் சொரூபத்தைக் காண்பித்தனள்.

எவ்வாறெனின்! முடி ஆகாயத்தின் மேற்பாகமாயும், சூரிய சந்திரர்கள் கண்களாயும், திக்குகள் செவிகளாயும், வேதங்கள் வாக்காயும், பிராணன்கள் வாயுவாயும், பிரபஞ்சம் இருதயமாயும், பிருதிவி முற்பக்க இடமாயும், ஆகாசம் நாபியாயும், ஜ்யோதிசக்கரம்மார்பாயும், மகலோகம் கண்டமாயும், ஜனலோகம் முகமாயும், தபோலோகம் நெற்றியாயும், சத்யலோகம் நெற்றியின் சீழிடமாயும், இந்திராதியர் கைகளாயும், சப்தம் சுரோத்திரேந்திரியமாயும், அஸ்வனி தேவதைகள் நாசியாயும், கந்தம் கிராணேந்திரியமாயும், அக்நி நேத்திரேந்திரியமாயும், இரவு பகல் இமைகளாயும், பிரமஸ்தானம் புருவநெறிப்பாயும், சலம் தாடைகளாயும், ரசம் நாவாயும், யமன்கோரப்பற்களாயும், சந்திரகலை கடைவாய்ப் பற்களாயும், பிரியம் பற்களாயும், மாயை கலாப்பிரகாசமாயும், சுவர்க்கம் கடைக்கண்பார்வையாயும், வெட்கம்மேலதரமாயும், லோபம்கீழதரமாயும், தர்மமார்க்கம் புருஷ்டபாகமாயும், சமுத்திரம் வயிறுயும், பிரஜாபதி ஆண்குறியாயும், மலைகள் எலும்பாயும், நதிகள் நாடியாயும், மரங்கள் ரோமங்களாயும், உத்தம நடைகள் கவுமாரம் யவ்வனம் ஜரை முதலிய பருவங்களாயும், மேகங்கள் தலையிராயும், சந்தி காலங்கள் இரண்டு வஸ்திரங்களாயும் சந்திரகலை மனசாயும், விஷ்ணுமூர்த்தி ஞானசக்தியாயும், ருத்ரமூர்த்தி அந்தக்கரணமாயும், குதிரை முதலிய விலங்கினங்கள் தொடைக்குமேலுள்ள இடையாயும், அதல விதல முதலிய உலகமீத்தும் இடைக்குக்கீழுள்ள ஸ்தானங்களாயு மிருக்க, காக்கினி நக்குவதைப்போல் ஆயிரங்காரணங்கள் வளைந்து வளைந்து தடவ கடகடவென்று பற்களைக்கடித்துக் கொண்டும், நேத்திரங்களிலிருந்து தீப்பொறி சிதறவும், அநேகவிதமான ஆயுதங்களைத் தாங்கியும் ஆயிரம் சிரங்களோடும் ஆயிரங்கண்க

லோடும் ஆயிரங்கால்களோடும் கோடிசூரிய ருதித்தாற்போல் பிர காசித்தும் கோடிமின்னல்கள் மின்னுவதைப்போல் மின்னி. கண் களால் பார்பதற்குக் கூடாத மகா கோரமாயும், மனதால் நினைப்ப தற்குக்கூடாத மகாபயங்கரமாயும்தோன்றியது. அத்தவருவத்தை தேவாசுரர்முதலிய யாவருங்கண்டுகம்பித்தவர்களாய் ஹாஹா வென்று கூக்குரலிட்டு நடுங்கிய மனமுடையவர்களாய் மூர்ச்சித்து தேவிஎன் கிற கியாபகமுமில்லாதவர்களாயினர். அச்சமயத்தில் நான்முகவே தங்களும் நான்முகனிலு மிருந்து கோஷித்து மூர்ச்சித்துக்கிடந்த தேவர்களையெல்லாம் எழுப்பிவிட்டன. எழுந்த அவர்களெல்லாம் தைரியமும் நல்லறிவுமுடையவர்களாய் அன்புமேலிட்டு மிக்கபிரே மையுடன் கண்ணீரை ஆறுகப்பெருகவிட்டு கண்டம்விம்மி காதழு தழுத்து தோத்திரஞ்செய்யத் தொடங்கினர்:—

ஏ அம்பா! எங்களுடைய அபராதங்களைப்பொறுத்தருள்வாய். உன்னிடத்தில் உற்பத்தியான எங்களை ரட்சிப்பாய். எங்கட்கெல் லாம் பிரபுவாயிருப்பவளே! உனக்கு எங்களிடத் துண்டான கோ பத்தை யடக்குவாய். எங்களால் பார்க்கக்கூடாத உன்னுடைய திரு மேனியின் தரிசனத்தினல் நாங்களனைவரும் பயந்தவர்களாயும்பாம ர்களாயும் இருக்கின்றோமாகையால் இச்சமயத்தில் உன்னுடைய பராக்கிரமத்தையும் சொரூபத்தையும் எப்படியறிந்து எவ்வாறு தோத்திரஞ் செய்யப்போகின்றோம். ஆயினும் எங்களிடத்தில் எவ் வாறு இப்போது உண்டாகின்றதோ அவ்வாறு துதிக்கின்றோம்:—

புவனேஸ்வரியாகிய உனக்கு நமஸ்காரம். பிரணவ ஸ்வரூபிணி யாகிய உனக்குநமஸ்காரம். சர்வவேதாந்த சித்தாந்த ஸ்வரூபிணி யாகிய உனக்கு நமஸ்காரம். யாரிடத்திலிருந்து அக்கினியுண்டாயிற் றோ, யாரிடத்திலிருந்து சந்திர சூரியர்களுண்டாயினரோ, யாரிடத் திலிருந்து சகலஔஷதிகளும் உண்டாயினவோ, அந்த ஸர்வாத்மஸ் வரூபிணியாயிருக்கின்ற உனக்கு நமஸ்காரம். யாரிடத்திலிருந்துசகல தேவர்களுந் தோன்றினர்களோ, யாரிடத்திலிருந்துசாத்தியர்களும் பக்ஷிகளும் பசுக்களும் மானுடர்களும் தோன்றினர்களோ அந்த ஸர்வாத்ம ஸ்வரூபிணியான உனக்கு நமஸ்காரம். பிராண பானங் களும் பயிர்களும் தவங்களும் சிரத்தையும் சத்தியமும் பிரஹ்மசர்ய விதிகளும் யாரிடத்திலிருந் துண்டாயினவோ அந்தத் தேவியாகிய

உனக்கு நமஸ்காரம். சுவாலைகளோடு கூடியிருக்கின்ற அக்கினிபகவானுக்கு சப்தசமித்துக்களும் சப்த வோமங்களும் சப்தலோகங்களும் யாரிடத்திலிருந் தண்டாயினவோ அந்த ஸர்வஸ்வரூபமாயிருக்கின்ற உனக்கு நமஸ்காரம். யாரிடத்திலிருந்து சமுத்திரங்களும் நதிகளும் மலைகளும் உண்டாயினவோ, யாரிடத்திலிருந்து ரசமுள்ள எல்லா வோஷதிகளும் உண்டாயினவோ அந்தத்தேவியாகிய உனக்கு நமஸ்காரம். யாரிடத்திலிருந்து யாகங்களும் தீக்ஷைகளும் யூபங்களும் தக்ஷிணைகளும் நான்கு வேதங்களும் உண்டாயினவோ அந்தத்தேவியாகிய உனக்கு நமஸ்காரம். உனது திருமேனியின் முன் பக்கத்தை நமஸ்கரிக்கின்றேம். பின்பக்கத்தை நமஸ்கரிக்கின்றேம், மேற்பக்கத்தைநமஸ்கரிக்கின்றேம், கீழ்ப்பாகத்தைநமஸ்கரிக்கின்றேம், எங்கட்கு மாதாவாயிருக்கின்ற உன்னை நான்கு திக்குகளிலுமிருந்து நமஸ்கரிக்கின்றேம். பிரபஞ்சிகளாகியஎங்களால்காணக்கூடாத இவ்வுருவத்தைமாற்றி எங்களால் காண்பதற்கினியதும் அழகினும் அழகியதுமான சுந்தரத்திருமேனியை நாங்கள் காணுமாறுகாட்சி கொத்தருளுவாய் என்று பயந்து தோத்திரஞ் செய்யுந் தேவர்களைக்கிருபா சமுத்திரமாகிய ஜகதம்பிகைகருணையுடன் பார்த்து அந்தப் பயங்கரரூபத்தைமாற்றி பாசாங்குச வரதாபயத்துடன்கூடிய திருக்கரங்களுடனும் மிருதுவான திருமேனியுடனும் கருணை நிறைந்த கண்ணுடனும் புன்னகையோடு கூடிய திருமுகத்துடனும் சுந்தர ரூபத்துடன் சுந்தரியாய்க் காட்சி கொடுத்தருளினள்.

அத்திரிபுரசுந்தரியைத் தேவர்கள் தரிசனஞ்செய்து முன்னடைந்த பயமொழிந்து சாந்தசித்தர்களாய் சந்தோஷத்துடன் கலகலவென்று ஆரவாரஞ் செய்து நமஸ்கரித்தனர். (சுலோகம்.நிகூ.)

நகூ-வது அத்தியாயம் முற்றிற்று.

௨

ஹ்ரீம்மைய்யை நமஃ

முப்பத்துநான்காம் அத்தியாயம்

* மோக்ஷம் பிரதிஜ்ஞானஸ்யா வஸ்யகதா.

தேவி கூறுகின்றாள்:—ஓ மந்தபாக்கிய முடையவர்களான நீங்களெங்கே? மஹா ஆச்சரியகரமான என்னுடைய விஸ்வரூப மெங்கே? அங்ஙனமாயினும் நான் பக்தர்களிடத்துப் பிரியமுடையவளாகையால் பக்தர்களாகிய உங்களுக்குக் காணுதற்கரிய என்னுடைய விஸ்வரூபத்தைக் காட்டினேன். இந்த வுருவம் அகண்டாகாரமாதலால் இதனை என்னுடைய கிருபையொன்றினாலல்லது வேதாத்தியயன விசேஷத்தினாலாவது யோகாப்பியாசங்களாலாவது தவயோகங்களாலாவது காணக்கூடுமோவெனின் கூடாது என்றனள். தேவி மீண்டும் பர்வதராஜனைப்பார்த்து அரசனே! உனக்கிப்போது பரமார்த்தமாகிய வுண்மையொன்றைச் சொல்லுகிறேனென்று கூறுகின்றாளாள்:-பரமாத்மாவோ (தேகேந்திரியங்கட்கு அன்னியமாகிய ஆத்மாவாம் ஆன்மாவோ-தேகேந்திரியாதிகளாகிய) உபாதிசம்பந்தத்தால் சீவத்தன்மையடைந்தும் அச்சீவத்தன்மையினால்கர்த்திருத்வாதிதர்மங்களையடைந்தும்(நானென்றெழுந்த அந்தக்கர்த்திருத்வமாகிய அகங்காரத்தினால்) தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் ஏதுவாகிய கிரியைகளை செய்தும்(அத்தர்மாதர்ம ரூபமாகிய அறம்பாவங்களுக்கேற்க) நானாவிதமான யோனிகளை அடைந்தும், அந்தயோனிகளாகியபிறவிகளுக்கேற்ற சுகதுக்கங்களை யனுபவித்தும் (அந்தச் சுகதுக்கா நுபவங்களால்பரிபாகப்பட்டகர்மங்களுக்கேற்றபடி)மீண்டும்அந்தக்கர்மங்களில் விருப்பமடைந்து (அக்கர்மங்களுக்கேற்ற) நானாவிதமானசரீரங்களையடைந்தும், அந்தச்சரீரங்களுக்கேற்றசுகதுக்கங்களை (மீண்டும்) அநுபவித்தும் இவ்வாறு குலாலச்க்கிரம்போல் இச்சீவனானவன் எப்பொழுதும் ஒப்வின்றி மாறிமாறிப்பிறந்தும் இறந்தும் சுழன்றுகொண்டிருப்பன். இவனுக்கொழிவுகிடையாது. இவ்வாறுசுழல்வதற்குக் காரணம் யாதெனின் அஞ்ஞானமேயாம். அந்த அஞ்ஞானத்தில்

* மோக்ஷத்துக்கு ஞானம் அவசியமென் றுரைத்தல்.

ருந்து இச்சையுண்டாகிறது, ஆகையால் மாதுடனுகப்பிறந்தவன் சனனமரணத்துக்கு மூலகாரணமாகிய அஞ்ஞானத்தை நாசஞ்செய்யும் விஷயத்தில் நியமமுள்ளவனுய் முயற்சிசெய்யவேண்டும். அங்ஙனஞ் செய்வானுயின் அஞ்ஞான நாசமுண்டாம் அஃதுண்டாயின் புருஷார்த்தங்களின் முடிவாயுள்ள மோட்ச சுகமுண்டாம். அஃதுண்டாயின் சிவன் முக்தித்திசையுண்டாம். இஃதுடையவன்முன் சன்ம சாபல்யமடைவான்.

ஓ அரசனே! அந்த அஞ்ஞானம் நாசமாவதற்கு ஞானந்தான் வன்மையாயுள்ள. இந்த ஞானமன்றி ஏனையகர்மாதிகளாலும் கர்மோபாசனைகளாலும் அஞ்ஞான நிவர்த்தியாகா தாயினும் ஞானத்துக்குச் சாதனமாத்திரமாயுள்ளனவாம். எங்ஙனமெனின் கர்மங்களும் கர்மோபாசனைகளும் விஷ்யபோகங்களில் இச்சையையும் அவ்விச்சையின் வழியே துவேஷத்தையும் மாறி மாறி விளைவித்து மகத்தான அனர்த்தத்தைச் செய்து வருவதால் அவைகளால் அஞ்ஞான நிவர்த்தியாகாதென்றும், அனர்த்தத்தைவிளைவிக்கும் ராகத்துவேஷத்தின் வழியேசென்று அவைகளைச் செய்யாமல் அவைகளை விட்டு சர்வப் பிரயத்தினத்தினுலும் ஞானத்துக்குச் சாதனமாகக்கொண்டு செய்வாராயின் அவை ஞானத்துக்குச் சாதனமாகு மென்றும் அறிவாய். (சிலர் கர்மங்களைச் செய்யாமல் கைவிட்டு ஞானந்தான் அவசியமென்று ஞானவிசாரஞ் செய்யத்துணிகின்றனர். அது பிரமாணயுக்தமன்று. ஏனெனின், குர்வந்நேவேஹ கர்மாணித்யத: கர்மப்ரவஸ்யகம்) இவ்வுலகில் கர்மங்களைச்செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறபடியால் கர்மம் அவசியமானது என்று பிரமாணங் கூறுகின்றது. அதனுல் கர்மங்களை விட்டு ஞான விசாரஞ்செய்தல் கூடாதென்பதே நிச்சயம். வேதவிதிதமாகிய கர்ம சமூகங்கள் ஞானத்துக்குச் சகாயமென்றும் இதத்தைச்செய்வ தென்றும் அறிவுடையார் சிலர் கூறுகின்றனர். அங்ஙனங்கூறுவது சித்தாந்த விரோதமன்று. எங்ஙனமெனின் கர்மமானது இருதயத்திற் கட்டுண்டிருக்கிற ராகத்துவேஷாதிகளைப்பேதித்து அவைகளைப் போக்குவதற்குச் சாதனமாயிருத்தலால் சகாயமெனவும், அவ்விருதயம் பரிபாகமாதற்கு இன்றியமையாத கருவியாயிருத்தலால் இதமெனவுங் கூறியதாகும். ஆனல் இந்தக்கர்மமும் ஞானமும் ஒன்றுய்ச் சம்பந்தப்பட்டிருப்பதோ

வெனின் அன்று. ஒளியும் இருளும்போல வேறுபட்டிருப்பவைகளே. எங்ஙனமெனின் சூரியோதய காலத்தில் இருள் பிரகாசத்தையடையாதிருப்பதுபோல ஞானோதய மாகுங்காலத்தில் கர்மங்கள் அப்பிரகாசத்தை யடைந்திருக்கு மென்றறிவாய்.

அறிவிற்சிறந்தவனே! ஞானம் உண்டாகுங்காலம் சித்தசுத்தி யுண்டான பின்னரென்றும், அச்சித்தசுத்தி கர்மங்களாலென்றும் வெளிப்படலால் வேதங்களில் சர்வகர்மங்களையும் விதித்திருக்கின்றன. ஆதலான் அச்சித்தசுத்தி யுண்டாவதற்கு அந்தக்கர்மங்களைச் சர்வப்பிரயத்தனத்தினாலும் அவசியம் அநுஷ்டித்து வரவேண்டும். அவ்வாறநுட்டித்து வந்தால் அவை சித்த சுத்தி செய்யவல்ல சமம் தமம் திதீக்ஷை வைராக்கியம் சத்தியமாதிகளை யுண்டாக்கும். அஃதுண்டானபின்னர் சந்நியாசம் பெறல்வேண்டும். அதுபெற்ற பின்னர் நல்ல குலத்திற் பிறந்தவராயும் பிரஹ்மநிஷ்டராயும் பரசிவ பக்தியுடையவராயுமுள்ள ஞானாசாரியரையடைந்து நமஸ்கரித்தல் வேண்டும். அதன் பின்னர் அவரனுக்கிரகத்துக் குரிமையாய் நாடோறும் வேதாந்தவிசாரஞ் செய்து வரவேண்டும். அந்த விசாரத்தில் ஜீவப்ரஹ்மைக்கிய போதகமாயிருக்கின்ற தத்வமஸ்யாதி வாக்யங்களைச் சிரவணஞ் செய்தல்வேண்டும். அச்சிரவணத்தால் சிவாப்ரஹ்மைக்கிய நிலையைச் சிந்தித்துத் தெளிதல்வேண்டும். அங்ஙனந் தெளியப் பெற்றால் சனனமரணபயமற்று எனது சொரூப சித்தினையடையலாம். ஓ ஞானசீலனே! இன்னமும் இந்த மகா வாக்கியார்த்த சோதனையின் முறைமையைக் கேட்பாயாக. முதலில் தத்வமஸ்யாதி மகாவாக்கியங்களில் அமைந்துள்ள பதார்த்த ஞானமும் அதன் பின்னர் அப்பதசமூகமாயுள்ள வாக்கியார்த்த ஞானமுண்டாகவேண்டும். இவற்றுள் தத்பதவாச்யார்த்தம்நான் என்றும் துவம்பதவாச்சியார்த்தம் சிவனென்றும் அசிபத வாச்சியார்த்தம் இந்த இருவருடைய ஐக்கியமென்றும் வேதங்கள் கூறுகின்றன. அங்ஙனங் கூறுவதோடும் துவம்பதவாச்சியார்த்தம் சிவனென்பதிற் சம்சயமில்லையென்றுங் கூறுகின்றன. ஆனல் தத்பதவாச்சியார்த்தம் நான் என்றும் துவம்பத வாச்சியார்த்தம் சிவனென்றும் வெளிப்படலால் இவ்விரண்டு வாச்சியப்பொருள்கள் விரோதமுடைய தாதலால் இவ்விரண்டிற்கும் ஐக்கி

யம் எங்ஙனங்கூடுமெனின், லக்ஷணையாற்கூடும். அந்த லக்ஷணையாதெனின், கருதியிற் கூறப்பட்ட துவம்பதம் தத்பதம் என்னும் இரண்டும் சித்லக்ஷண முடையதாகலின் அச்சின்மாத்திர லக்ஷணத்தால் இரண்டிற்கும் ஐக்கியங்கூடும். எங்ஙனமெனின், துவம்பத வாச்சியார்த்தன் சீவனுயினும் அந்தச்சீவன் பிரமம் அறிவிக்க அறிகின்ற சித்லக்ஷணமுடையவ னென்றும், பிரமம் அறிவே சொரூபமாய் நின்று அறிவிக்கின்ற சித்லக்ஷணமுடையதென்றும் அறிந்து பிரம மாத்திரமாக நிற்கும் அத்வைத ஐக்கியா நுபவத்தை யறியப் பெறுவானுயின் ஐக்கியங்கூடுமென்க.

ஓ பர்வதராஜனே! இதனைத் திட்டாந்தமுகத்தா லறிவாயாக. பல பொதுலக்ஷணங்களினுல் காணக்கூடாமலிருக்கிற ஓர் தேவதத்தனைக்காணத் தொடங்குங்கால் அவனுக்கு முக்கியமாயுள்ள சில சிறப்பு லக்ஷணங்களைக்கொண்டு ஆராய்ந்து அவனைக் காணலும் அங்ஙனங் காணப்பெற்றுல் அவனை அக்கூட்டத்தினின்றும் வேறு பிரித்து இவன்றன் அந்தத் தேவதத்தன் என்று சம்சயமில்லாமல் நிச்சயித்தறிந்து தன்னேடு கூட்டிக்கொள்ளுதலும் போல், தூலதேக முதலிய வற்றேடும் தத்துவசமூகங்களோடுங்கூடிக் காணக்கூடாமலிருக்கிற சீவனை முன்கூறியவாறு சித்தென்கிற லக்ஷணையால் ஆராய்ந்தது இதுதான். அந்த ஆன்மா சம்சயமின்றென்றறிந்து தேகாதிகளை (ப்பரித்திமிகஞ்செய்து) கழித்துத் தன்னினமாகிய பிரமத்தோடுகூடிபிரஹ்ம சம்பத்தை யடைகிறுன்.

இனி ஆன்மாவுக்கு வேறுயுள்ள தூலசூக்ம காரணங்களாகிய தேகாதிகளின் லக்ஷணங்களைக் கேட்பாயாக மகா பூதங்களாகிய பிருதிவியாதி பஞ்ச பூதங்களினின்றும் பஞ்சீகிருதமாகிய சரீரமே தூலதேகம். இது அழிவுடைத்தாகிய மாயையினின்றுங் காரியப்பட்ட மாயாமயமாயும் சுகதுக்கபோகமாகிய சகல கருமாதி பலங்கட்கும் ஆலயமாயும் நரைதிரை மூப்புமுதலிய வியாதிகளோடு கூடினதாயும் இவைகளால் ஆத்மாவுக்கு உபாதி செய்வதாயுமுள்ளது. இது முதல் தேகம். ஞானேந்திரிய பஞ்சகம் கர்மேந்திரபஞ்சகம் பிராணபஞ்சகம் மனம் புத்தி என்று சொல்லப்பட்ட தத்துவ சமூகங்களே சூக்குமதேகம். இது அபஞ்சீகிருதபூத சம்பந்தமாயும் தூல

தேகாதுபவமாய் வருகிற சுகதுக்கங்களை யறிவிக்கிறதாயும் இவ் வுணர்ச்சி வழியால் ஆத்மாவுக்கு உபாதிசெய்வதாயு முள்ளது. இது இரண்டாந்தேகம், தூலதேகம்போல் சுக துக்காதுபவங்களை அது பவிக்கச்செய்யாததும் சூக்குமதேகம்போல் சுகதுக்கங்களை அறிவிக் காததுமாய் அநாதியாயும் அநிர்வாச்சியமாயும் அஞ்ஞானமயமாயு முள்ளதே காரணதேகம். இது ஆன்மாவுக்கு அறியாமையைச்செய் வதாகிய வுபாதியைச் செய்வது. இது மூன்றாந்தேகம். ஓ பர்வத ராஜனே! ஆன்மாவானவன் இங்ஙனங் கூறிவந்த தேகத்திரயங்களை யும் இவைகட் குள்ளாயுள்ள பஞ்சகோசங்களையும் தனக்கு வேறெ ன்று கூறுவதற்காய்க் கூறியுள்ள நேதிநேதிவாக்கியங்களால் முறையே விசாரித்தறிந்து மேல்நோக்குங்காலத்து அறியக்கிடந்தது, அங்ங னஞ் சேடித்து நின்ற எனது சொரூபமாகிய பிரஹ்மசித்தொன்றே என்றறிவாய்.

இதுவரையில் சிவன் தேகாதிகளுக்கு வேறென்றும் அத்தே காதிகள் அந்தச் சிவனுக்கு உபாதிசெய்வதாகிய தூல சூக்கும காரண சரீரங்களாக விருப்பதென்றும் அச்சரீராதி தத்துவங்களை நேதி செய்து கழிந்தவழி சேடித்து நின்றது பிரமசித்தொன்றே என்றுங் கூறினேன். இனிப்பிரமத்தின் இலக்கணத்தைக் கேட்பாயாக.

இந்தப் பரமாத்மாவுக்கு சனனமரணமில்லை. ஒன்றினின்றுண் டாவதுமில்லை, கருமசனனங்கிடையாது, நித்யமானது, சாஸ்வதமாயுள் ளது, அனாதி, சரீரம் இம்சிக்கப்பட்டாலும் இது இம்சிக்கப்படுகிற தில்லை. எவனொருவன் இந்த வான்மா இம்சைப்படுவதாக நினைக்கின் றானே எவனொருவன் இம்சிக்கப்பட்டதாக நினைக்கின்றானே இவ் விரண்டுபேரும் தெரிந்தவர்களல்லர் இது ஒருவரைத் தன்பஞ் செய்கிறதில்லை, இது ஒருவனால் தன்பப்படுகிறதுமில்லை, அணுவுக் கணுவாயும் மஹத்துக்கு மஹத்தாயுமிருக்கிற இந்தப் பரமாத்மா, சகலப் பிராணிகளுடைய இருதயகுகையில் வைக்கப்பட்டிருக்கிறது, அத்தன்மையான இந்தப் பரமாத்மாவை துக்கரஹிதனா யிருக்கின்ற சீவாத்மாவானவன் அந்தப் பிரமத்தினுடைய பிரசாதத்தினாலே அப் பரமாத்மாவினுடைய மகிமைகளைத் தானுடையவனாகின்றான். இந்த ஆத்மாவை ரதமுடையவனாக வறிவாய் (எவ்வாறெனின்) சரீரம் ரதமாகவும், புத்தி சாரதியாகவும், இந்திரியங்கள் குதிரைகளாகவும்

மனம் கடுவாளமாகவும், விஷயங்கள் சஞ்சரிக்கு மிடமாகவுங்கொண்டு இந்திரியங்களோடும் மனதோடுங்கூடி விஷயானுபங்களை ஆன்மா அனுபவிக்கிறதாகச் சொல்லுகின்றபடியால் அவ்வண்ணமாகவே யறியக்கடவாய்.

எவன் இதைத்தெரிந்து கொள்ளாமலும் நல்ல மனதில்லாதவனாகவும் சுசியில்லாதவனாகவும் இருக்கின்றானே அவன் தத்பதத்தை யடையமாட்டான்; சம்சாரத்தை யடைவான். எவன் இதையறிந்து எப்போதும் நல்லமனதோடும் சுசியோடுங் கூடியிருக்கின்றானே அவன் தத்பதத்தை யடைகிறான். அவன் மறுபடியும் பிறக்கிறதில்லை. எவன் விஞ்ஞானத்தைச் சாரதியாகவும், மனதைக் கடுவாளமாகவுங் கொண்டவனாகவிருக்கின்றானே அவன் என்னுடைய பரமபதத்தை யடைகிறான்.

என்னுடைய பரமபதமென்பதும் அதனை யடைவதென்பதும் எவ்வாறெனின், என்னுடைய ஸ்தானந்தான் பரமபதம், அந்தப் பதத்தை எவன் முன்சொல்லியவாறு பரமாத்ம லக்ஷணத்தைச் சுருதியினாலும் யுக்தியினாலும் நிச்சயித்து தன்னுத்மாவினிடத்தில் அந்தப் பரமாத்ம ஸ்வரூபத்தை வைத்துப் பாவித்தலாகிய நிதித்தியாசனஞ் செய்கின்றானே அவன் என்னுடைய பதத்தை யடைதலென்பதாம்.

இன்னமும் அந்த பாவனையின் முறைமை எப்படியெனின் முன்னர் தன்னுள்ளத்தில் யோகவிர்த்தியினால் தேவியைத் தியானித்துப் பின்னர் தேவி பிரணவத்தின் நாமமாயிருக்கிற மூன்றக்ஷரங்களாகிய மந்திரத்தைத் தியானர்த்தம் வாசகவாச்சிய மென்னும் இரண்டின் வழியானும் பாவிக்கவேண்டியது. மூன்றக்ஷரமாவது யாதெனின் ஹகாரம், ரகாரம், ஈகாரம், இம் மூன்றெழுத்துங்கூடி ஹ்ரீங்கார சொரூபமாயை தீரியமாகும். இவற்றுள் ஹகாரம் தூலசரீரம், ரகாரம் சூக்குமசரீரம், ஈகாரம் காரணசரீரமென்று சொல்லப்படும். தூல சூக்கும காரணசரீரங்களாகின்ற மூன்றக்ஷரங்களோடு கூடிய அப்பீஜ மந்திரத்தை, சமஷ்டி சூக்கும தூல காரண சரீரமாகச் சொல்லப்பட்ட அச்சமஷ்டிக்கும் வியஷ்டிக்கும் அபேதமாகவும் சமாதிகாலத்துக்கு முன் ஆதரவுடன் பாவனைசெய்து அதன் பின்னர் கண்ணை

மூடிக்கொண்டு பிராண அபானவாயுக்களை நாசியின் மத்தியில் சம மாக நிறுத்தி இந்திரிய விஷயங்களை நிவர்த்தித்து மத்ஸர முதலிய தோஷங்களை விடுத்து நிஷ்காமபக்தியோடு சப்தகோஷமில்லாத குகையிலிருந்து தூலசரீராபிமான விஸ்வமாகிய ஹகாராக்ஷரத்தை ரகாராக்ஷரத்தோடு சேர்த்தும், சூக்கும சரீராபிமான தைஜசமாகிய ரகாராக்ஷரத்தை ஈகாரத்தோடு சேர்த்தும், காரண சரீராபிமான பிராஜ்ஞனாகிய ஈகாராக்ஷரத்தை ஹ்ரீம் என்கிற அக்ஷரத்தோடுசேர்த் தும் வாச்சிய வாசக பேதமின்றி அத்துவிதமாகத் துவாதசாந்த ஸ்தானமாகிய அந்தவிடத்தில் ஜகதீஸ்வரியாகிய என்னை அகண்ட சச்சிதானந்த ஸ்வரூபமாகப் பாவித்துத் தியானித்தலாகும். இவ் வண்ணம் சாக்ஷாத்கார தியானத்தை உத்தமனாகிய ஒருவன் செய்வா னாயின் அவன் என்னுடைய ஸ்வரூபத்தோடு பேதமில்லாமல் ஒன்று யிருத்தலாகிய தன்மையை யடைகிறான். பராத்பரமா யிருக் கின்ற என்னை இப்போது சொல்லிவந்த யோகபுக்தியினால் பார்க்கப் பெறின் அப்பொழுதே அக்ஞானத்திற்கும் அதன் காரியங்கட்கும் நாசமுண்டாகின்றன. (சு - ம் 50)

34 - ம் அத்தியாயம் முற்றிற்று.

ஹ்ரீம்சரீரிண்யை நம:

முப்பத்தைந்தாம் அத்தியாயம்.

யோசமந்திர சித்திசாதனம்.

பர்வதராஜன் கூறுகிறான்:—ஓ மஹேஸ்வரியே! நான் ஞானப் பிரதமாயிருக்கின்ற தத்வதரிசனஞ் செய்வதற்கான யோகம் எதுவோ அந்த யோகத்தை அதற்குரிய அங்கத்தோடு எனக்கநுக்கிரகஞ் செய் வாயென்றான். தேவி அந்தமலையரையனைநோக்கிக் கூறுகின்றாள்:—

ஓயோகசிலனே! நீ கேட்கின்ற இந்த ஞானப்பிரதயோகமானது மேல் நடு கீழ் என்று சொல்லப்பட்ட மூவுலகினுமில்லை ஆயினும் ஜீவாத்ம பரமாத்மாக்களுடைய ஐக்கியத்தையே யோகிகளால் யோகமென்று கூறப்படுகின்றது ; இதையன்றி வேறொன்றையும் அப்படிக் கூறப் படுகிறதில்லை. ஆனால் இதற்குக் காமம் குரோதம் லோபம் மோஹம் மதம் மாச்சரியம் என்பனவாகிய ஆறு தடைகள் உள்ளன. நீக்கற் கரிய இவ்விக்னங்களைத் தம்மிடம் வரவொட்டாமல் தடுக்கத்தக்கவர் களே ஜீவன்ம பரமான்ம ஐக்கிய யோகத்தை யடைவர். இந்த யோகத்துக்கு அங்கங்கள் எட்டாம். அவை இயமம் நியமம் ஆசனம் பிராணயாமம் பிரத்யாஹாரம் தாரணை தியானம் சமாதி என்பன. இவைகளே யோகத்துக்குச் சாதனமாகக் கூறப்படும்.

இனி, 1. இமமாவது - அஹிம்சை, சத்தியம், களவில்லாமை, பிரம்ஹசரியம், தயை, சன்மார்க்கம், பொறுமை, தைரியம், மிதமான ஆகாரம், சௌசம் எனப்பத்தாம்.

2. நிமமாவது - தவம், சந்தோஷம், ஆஸ்திக்யம், (தெய்வமுள தென்றல்) தானம், தேவபூஜை, சித்தாந்த சிரவணம், ஞாணம், புத்தி, ஜபம், ஹோமம் எனப்பத்தாம்.

3. ஆசனமாவது – பத்மாசனம், சுவஸ்திகாசனம், பத்திரா சனம், வஜ்ராசனம், வீராசனம் என ஐந்தாம்.

(1) இவற்றுள் பத்மாசனம் - பாதங்களைத் தொடைகளின்மேல் வைத்து இரண்டு கைகளால் பெரிய விரல்களைப் பிடித்துக்கொண்டு நிமிர்ந்திருத்தல்.

(2) சுவஸ்தி காசனம் - இரண்டு பாதங்களையும் தொடைகளுக் குப் முழங்கால்களுக்கும் இடையிலுள்ள சந்தியில்வைத்து நேராக விருத்தல்.

(3) பத்ராசனம் - புறங்கால்களைப் புருஷ்டபாகத்தில் மடக்கி வைத்து விருஷணத்தின் அடியின் வழியாய் அப்பாதங்களைப் பாத சந்திகளோடும் கைகளால் பிடித்திருத்தல்.

(4) வஜ்ராசனம் - தொடைகளின்மேல் பாதங்களைக் கிரம மாக வைத்து முழங்கால்களில் கைவிரல்களை உன் முகமாக அமைத்து நிமிர்ந்திருத்தல்.

(5) வீராசனம் – ஒரு பாதத்தைப் பூமியிலும் மற்றொரு பாதத்தைத் துடையிலும் வைத்து சரீரத்தை நேராக விருத்தல்.

4 பிராணயாமமாவது - வெளியே இருக்கிறவாயுவை இடகலையினுல் உள்ளேவாங்கிப் பதினறு மாத்திரையளவு சுழுமுனை நடுவில் நிறுத்திப் பின்னர் முப்பத்திரண்டு மாத்திரையளவு பிங்கலை நாடியின் வழியாய் விடுதலேயாகும்.

இது சகர்ப்பம் விகர்ப்பமென இருவகைப்படும். (1) **சகர்ப்பம்** அடிக்கடி வெளியே செல்லுகிற வாயுவை பன்னிரண்டு மாத்திரை அல்லது பதினறு மாத்திரை காலம் ஜபத்தியானுதிகளுடன் உள்ளே கிரகித்து ஜபத்தியானுதிகளைச் செய்தல். (2) **விகர்ப்பம்** ஜபத்தியானுதிகளில்லாமல் மேற்கூறியவாறு பிராணயாமஞ் செய்தல். இம்முறையாகப் பிராணயாமத்தை அப்பியசிக்கும் காலத்தில் சரீரம் வியர்க்குமானல் அதமமென்றும், நடுங்குமானல் மத்திமமென்றும், பூமியைவிட்டு மேலெழுபுமானல் உத்தமமென்றுஞ் சொல்லப்படும்.

5. பிரத்யாகாரமாவது - இயம நியமாதிகளால் கொள்ளப்பட்ட உத்தம குணங்கள் நிறைந்து தானெண்ணிய அபிஷ்டங்களைப் பெறுமளவும் இந்திரியங்களை விஷயங்களிற் போகவிடாமல் தடுத்து சுவாதீனஞ் செய்து கொள்ளலாகும்.

6. தாரணையாவது - காற்பெரு விரல்கள், முழங்கால்கள், தொடைகள், மூலாதாரம், ஆண்குறி, நாபி, இருதயம், கண்டம், கன்னம், நாசி, நடுப்புருவம், வெற்றி, சிரசு, துவாதசாந்தம் இவ்விடங்களில் பிராணவாயுவை விதிமுறையாக நிறுத்துவதாகும்.

7. தியானமாவது - தன்னுல் விரும்பப்பட்ட தேவதையோடு தனது அசைவற்ற மனதை லயிப்பித்தலாகும்.

8. சமாதியாவது - ஜீவாத்மாவாகிய தான் பரமாத்மாவினின்று வேருகாது சமத்துவபாவனை செய்துகொண்டு எப்போது மிருத்தலாம். இவையே அஷ்டாங்க யோகலக்ஷணமென்று யோகவிசாரமுடையவர் கூறுவர்.

ஓ பர்வதராஜனே ! நானிப்பொழுது உனக்கு உத்தமமான மந்திரயோகத்தைச் சொல்லுகிறேன். சரீரமாகிய இப்பிரபஞ்சம் பஞ்சபூத காரியாத்மகமாயும் சோமசூர்யாக்னிகளால் தேஜோரூபமாய்ப்

பிரகாசிக்கின்ற சிவப்பிரஹ்மைக்கிய ரூபமாயும் விளங்குகின்ற தென்று பெரியோர் கூறுவர். இதுவேயுமன்றி இச்சரீரத்தில் மூன்றரைக்கோடி நாடிகளிருக்கின்றன வென்றும் முக்கியமாயுள்ளன பத்தென்றும் அவற்றுள்ளும் மூன்று நாடிகளே மிக முக்கியமான தென்றுங் கூறுவர். அவை இடகலை பிங்கலை சுழுமுனை என்பனவாம். இம்மூன்றும் இச்சரீரத்துக்குப் பிரதானமாக மூதுகென்பாகிய மேருதண்டத்தின் சிகரத்தில் சோமசூர்யாக்கினி சொரூபமாய்ப் பிரகாசிப்பன. இவற்றுள், இடகலைநாடி-மேருதண்டத்தின் வாமபாகத்தில் வெள்ளிய சந்திர பிரகாசமுடைத்தாய் அமிர்தமயமாய் சக்தி சொரூபமாகிய ஸ்திரீரூபமாயுள்ளது. பிங்கலை நாடி - தக்ஷிணபாகத்தில் சூரியப்பிரகாச முள்ளதாய்ப் புருஷரூபமாயுள்ளது. சுழுமுனைநாடி - புருவ நடுவில் அக்னிசொரூப முள்ளதாய் சகல தேஜசோடும் பிரகாசிப்பது. இத்தச் சுழுமுனை நடுவில் பல காரணங்களால் பலபெயர் புனைந்த விசித்திரமான இச்சா ஞானக்கிரியாத்மகமாய் கோடிசூரியப் பிரகாசமாய் சுயம்புலிங்கமானது பிரகாசித்துக் கொண்டிருக்கும். அதன்மேல் சிவாத்மகமாயுள்ள பிந்து நாத சொரூபமாய் மாயாபீஜ மிருக்கும். அதன்மேல் குண்டலி சத்தியானது ரக்தவிக்ரஹ சொரூபமாகிய தேவியோடு அபின்னமாய்க் கலந்து அனற்சிகையைப்போல் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஓ பர்வதராஜனே! அக்குண்டலினி சத்திக்கும் எனக்கும் வேற்றுமையின்று; அது எனது சொரூபமே. இக்குண்டலினி சத்திக்கு வெளிப்புறத்தில் உருக்கிய பொன்னிறமான மூலாதாரத்தில் நான்கு தளக்கமல மொன்றிருக்கிறது. இதைப் பொன்னிறமும், வ-ஶ-ஷ-ஸ என்கிற அக்ஷரவருவங்களோடு கூடிய நான்கு தளமுடைத்தாகத் தியானிக்கவேண்டும். இது ஸ்வாதிஷ்டான முதலிய ஆதாரங்கட்கு மூலமாயிருத்தலின் மூலாதாரமெனப் பெயர் பெற்றது. அதற்குமேல் நெருப்பைப்போல் செங்நிறமுடைத்தாய், ஆறுதளத்தோடு சுவாதிஷ்டான மென்கிற கமலமிருக்கின்றது. இதை வஜ்ரகாந்தியைப்போன்ற பிரகாசமும் வ-ஶ-ஷ-ய-ர-ல என்கிற அக்ஷரவருவங்களோடு கூடிய ஆறு தளங்களு முடையதாகத் தியானிக்கவேண்டும். ஸ்வ என்கிறசொல், பரமானலிங்கம் என்னும் பொருளைத் தருதலாலும், தான் அதிஷ்டிப்பதற்கு இடமாகலானும் ஸ்வாதிஷ்டான மெனப்பெயர் பெறும். அதற்குமேல்

நாபிஸ்தானத்தில் மேகத்திற்றோன்றும் மின்னலைப்போலும் மிகப் பிரகாச முடைத்தாய்ப் பத்துதளத்தோடு மணிபூரகமென்கிற கமல மிருக்கின்றது. இதன் தளங்கள் ௰-௱-ண-த-௰-௧-௰௩-௨-௰ என்கிற அக்ஷரங்களோடு கலந்திருக்கும். பிளவுபட்ட ரத்னம்போல் ஒளிவீசுவதால் மணிபூரகமெனப் பெயர்பெற்றது. இந்த விடத்தை விஷ்ணுமூர்த்தி அதிஷ்டானமாகக் கொண்டிருப்பர். ஆகலான் அவரைக்காண்பதற்கு அவ்விடம் காரணமாம். அதற்குமேல் உதிக்கின்ற சூரியனைப்போல் பிரகாசமுடையதாய்ப் பன்னிருதளத்தோடு அநாஹதமென்கிற கமலமிருக்கின்றது. அக்கமல தளங்களில் க-௨-௪-௰-௫-௨-௰-௱-௲-௬-௭-௦ என்னும் அக்ஷரங்கள் சப்தசொரூபமாயமைந்து உருவங்களற்றிருக்கும். இது அக்ஷரவுருவங்களற்று சப்த பிரஹ்மமயமாயிருப்பதால் அநாஹதமெனப் பெயர்பெறும். இதன்மத்தியில் பதினாயிரம் சூரியகாந்தியை யுடைத்தாய் பாணலிங்கமிருக்கின்றது. அன்றியும் அந்தவிடம் ஆனந்தத்துக்கு இடமாயிருத்தலால் புருஷனுக்கு மேலான அதிஷ்டானமாயு முள்ளது. அதன்மேல் தூம்பரவர்ணமாகிய மஹா பிரகாசமுடைத்தாய்ப் பதினாறு தளத்தோடு விசுத்தமென்கிற கமலமிருக்கின்றது. இந்தக் கமலதளத்தில் அகாரமுதல் ஹஃ என்கிற அக்ஷரம் இறுதியாகவுள்ள பதினாறு உயிரெழுத்துக்களும் உருவங்களாக வமைந்திருக்கும். இது சீவனுக்குப் பிரமதரிசனத்தினால் சுகத்தைக் கொடுக்கிறபடியால் விசுத்தமென்று சொல்லப்படும். இதனை [illegible]சமென்று கூறுவர். ஆத்மஸ்தானமாயுள்ள இதன்மேல் ஆக்ஞாசக்கரம். இது ஆக்ஞையினுடைய சம்பந்தம்பெற்ற தாகலின் அப்பெயரெய்தியது. இது ஹ க்ஷ என்னும் இரண்டு அக்ஷரங்களோடு கூடியுள்ளது.

அதன்மேல் கைலாசமும் அதன்மேல் ரோதிநீ என்னும் ஓர் சக்கிரமுமுண்டு. இவ்வாறு சொல்லப்பட்ட ஆறாதாரங்களின்மேல் ஆயிரந்தளத்தோடு பிந்துஸ்தான மிருப்பதாகக் கூறப்படுகின்றது. சர்வோத்தமமா யிருக்கின்ற யோகமார்க்கம் இவ்விதமாகும். முதலில் பூரக யோகத்தினால் வாயுவை ஆதாரத்தில் சேர்ப்பித்துப் பின் குதத்துக்கும் குறிக்கும் நடுவேயுள்ள சக்தியை சிவக்குறியினால் கிரமமாய்த் தட்டி யெழுப்பிப் பிந்து சக்கரத்தை யடைவித்தபோது

சம்புவும் பராசக்தியும் ஒன்றுசேர்ந்திருப்பதாகப் பாவிக்கவேண்டும். அப்போதுண்டாகிற திராக்ஷாரசம்போன்ற அமிர்தத்தை அச்சக்திக்கு ஊட்டிய பின்னர் ஆறாதார சத்திகளையும் அவ்வமுத தாரையால் திருப்தி செய்வித்து அதே மார்க்கத்தினால் மூலாதாரத்தையடைவித்தல் வேண்டும்.

இவ்விதம் நாடோறும் அப்பியசித்து வருகின்றவனே சனன மரண துக்கங்களினின்றும் சம்சார பயத்தினின்றும் விடுபடுவான். முன்சொன்ன மந்திரங்களெல்லாம் அவனுக்குச் சித்தியுமாகும். இப்படிச் செய்யாதவனுக்குச் சித்தியாகா. என்றும் விடாமற்செய்கின்ற அப்பியாசி எனக்குள்ள குணங்களையே அடையப்பெறுவான். அவனுக்கு எனது குணானுபவமேயன்றி வேறில்லை. இதுவரையில் உத்தமமா யிருக்கின்ற வாயு தாரணத்தைக் கூறினேன். இனித் தாரணையைச் சொல்லுகிறேன் கேட்பாயாக :—

திக்கு காலமுதலியவற்றால் அவச்சின்ன (கட்டுப்) படாத தேவியினிடத்தில் புத்தியை அசைவற நிறுத்தி ஜீவப்பிரஹ்மைக்கியத்தைச் செய்வானாயின் அவன் சீக்கிரத்தில் தன்மயனாகிறான். அப்படிச் செய்யாவிடத்து அவனுடைய அறிவு அஞ்ஞானத்தோடு கூடியேயிருக்கும். மந்திரம் (தன்மய) சித்தியை அடையாது. யோகி யோகசித்தி யுண்டாகும் வரையில் யோகத்துக்கு அவசியமாகிய அஷ்டாங்காதிகளைச் செய்தல்வேண்டும். அவ்வப்பியாசம் எப்படியெனின் என்னுடைய பாதம் அஸ்தம் முதலான மதுரமுள்ள அங்கங்களில் சித்தத்தை அசைவற நிறுத்தி மறுபடியும் அந்தந்த ஸ்தானங்களைச் செபித்து நிர்மலசித்தனாய் எனதுருவ முற்றிலும் நிறுத்துவதாகும். ஞானசொரூபமா யிருக்கின்ற தேவியினிடத்தில் மனமானது எவ்வளவு காலத்தில் லயம் அடையக்கூடுமோ ! அவ்வளவு காலம் ஜபஹோமங்கள் செய்து இஷ்டமான மந்திரத்தை அனுஷ்டிக்கவேண்டியது. இவ்வாறு செய்வதாகிய மந்திரயோகாப்பியாசத்தினால் ஞேயஞானத்தை அறிவதாகிய சாமர்த்திய முண்டாகும். யோகசித்தி யின்றி மந்திரசித்தியுண்டாகாது. மந்திரமின்றி யோகசித்தி யுண்டாகாது. இருளடைந்த வீட்டிலிருக்கும் பாத்திரத்தை காண்பதற்குத் தீபங்காரணமாதல்போல, பிரமசித்தி யுண்டாவதற்கு மேற்சொன்ன இரண்டினுடைய அப்பியாசமும்

காரணமாக விருக்கிறது. மாயையினல் மூடப்பட்டிருக்கிற ஆத்மா இம்மந்திர சாதனத்தால் வெளிப்படும். இந்தப்பிரகாரம் யோக விதி சாங்கமாக என்னுற்சொல்லப்பட்ட தென்றறிவாயாக.

கூரி-ம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

ஹகாரரூபாயை நமஃ

முப்பத்தாறும் அத்தியாயம்.

தியான யோகம்.



தேவிகூறுகின்ருள் :—இத்தகைய யோகத்தோடு கூடிய பிரம் ஹரூபிணியாகிய என்னைப்பிரஹ்ம சொரூபமாகத் தியானிக்கவேண் டியது எப்படியெனின், ஆசனத்தில் சுகமாயுட்கார்ந்து நிஷ்காம சித்தனுய் அடியில்வருமாறு தியானிக்கவேண்டியது.

யோகசாதனங் கைவந்தவன், சருவப்பிராணிகளின் இருதய குகையில் பிரகாசமான பிரஹ்மம் அறியப்படுகிறதாயும், நன்ரு யிருக்கிறதாயும் எல்லாம் அடங்குமிடமாயும் உள்ளதென்று தியா னிப்பதாகும். எல்லாமென்பது யாதெனின் சரவஸ்துக்களாகிய பசு முதலியவைகளும் பிராணதிவாயுக்களோடு கூடியுள்ள மநுஷ்ய பசுக்களும், இமைகொட்டல் முதலிய செயல்களோடுங் கூடியுள்ள சரவஸ்துக்களும் இவைகளல்லாத அசரவஸ்துக்களுமாம். இவை யெல்லாம் அந்தப் பிரஹ்மசொரூபத்தில் அடங்கியிருப்பதாக அறி ந்துத் தியானித்தலே தியானமெனப்படும். இன்னமும் அந்த பிரஹ் மம் எப்படியிருப்பதென் றறியவேண்டுமெனின் மூர்த்தமாயும் அமூர்த்தமாயும் உள்ள சத்தாயும் அசத்தாயும் இருப்பதாயும், பிரார்த்திக்கத் தகுந்ததாயும், லவுகிகஞானத்துக்கு அகோசரமா யும், ஆத்மஞானத்துக்கு அதீதமாயும், சிவாத்மாக்களுக்குமேலான பரமாத்மாவாயும், சர்வபதார்த்தங்களுக்குள் சிரேஷ்டமாயும், பிர காசமாயும் எதுவுள்ளதோ அதுவே பிரஹ்மமெனவும், (எது அணு

வுக் கணுவாயும் மகத்துக்கு மகத்தாயும் இருக்கிறதோ அதுவே பிரஹ்மமெனவும், இந்தப்பிரபஞ்சத்தில் காணப்படுகிற பூலோக புவர்லோக முதலிய வுலகங்களும் அந்த வுலகவாசிகளாகிய மநுஷ்யர்களும் எதனிடத்தில் அடங்கியிருக்கின்றார்களோ அந்தவிடமே தான் சர்வாஶ்ரயமாயிருக்கின்ற பிரமமெனவும், அதுவேதான் நாசரஹிதமெனவும், பிராணன் எனவும், அதுவேதான் மனவாக்குகளெனவும், அதுவேதான் ஏனைய இந்திரியங்களெனவும், நித்யமெனவும் அறிதல்வேண்டும். அறிந்தபின் அதனிடத்தில் மனதைநிறுத்துவதே தியானமெனப்படும். ஓ சிஷ்யனே! இங்ஙனங்கூறிய முறைப்படி பிரஹ்மத்தை யறியக்கடவாய்.

இவ்வகையாய்ப் பிரஹ்மத்தை யறிந்தபின்னர் உபநிடதத்தைச் சிரவணத்தால் தநுஸாகவளைத்து அதில் நாடோறும் மனனஞ்செய்வதனா னுண்டாகும் கூர்மையான ஆத்மஞானமென்கிற அஸ்திரத்தைச் சந்தித்து அதனைப் பிரமபாவனையை யடைந்திருக்கிற மனத்தினால் லக்ஷ்யமாகிய பிரமத்தின்மேல் பிரயோகிக்கவேண்டியது. அஃதாவது தனது ஞானத்தைப் பிரமத்தினிடத்தில் வைக்கவேண்டுமென்பதேயாம். இதனையே உபநிடதத்தைத் தனுசாகக்கொண்டு அதில்ஈஶ்வரோபாசனையின்வசப்பட்டமனமாகியபாணத்தைத் தொடுத்து அதனை அக்ஷரசொரூபமாக விருக்கின்ற பிரஹ்மமாகியலக்ஷ்யத்தினிடத்தில் பொருந்தும்படிச் செய்யவேண்டுமென்றுங் கூறுவர். இதுவுமன்றி பிரணவத்தைத் தநுசென்றும் ஆத்மாவைப்பாணமென்றும் பிரமத்தை லக்ஷ்மென்றுங் கூறி அந்தலக்ஷ்யமாகியபிரஹ்மத்தினிடத்தில் ஆத்மாவாகிய பாணத்தை சாக்கிரதையாய்த்தைக்கும்படிச் செய்யவேண்டியது. அப்படிச்செய்யவே ஆன்மா பிரஹ்மசொருபமேயாகின்றது. சாக்கிரதைஎன்பது யாதெனின் புறவிஷயங்களில் மனதைவிடாமல் ஏகாக்ரசித்தனா யிருத்தலேயாம். அப்படியிருக்கப்பெறின் பாணமானது எப்படி ஒருவனுள்ளத்தில் ஊடுருவிச்செல்கின்றதோ அப்படி ஆன்மஞானமானது பிரமத்தினிடத்தில் செல்லுமென்றதென்க.

இன்னமும் மோக்ஷசாதனத்துக்கு மார்க்கம் யாதெனின், சுவர்க்கம் பூமி ஆகாயம் மனம் பிராணன் ஆகிய இவையெல்லாம் எந்தப் பிரமத்தில் கூடியிருக்கின்றதோ அந்த ஏகமாகிய பரமாத்மாவையே

அறிதல்வேண்டும். இதற்கு அன்னியமான வார்த்தைகளைவிட்டு விடவேண்டும். ஏனெனில் ஓர் சகடத்திலுள்ளகுடத்தில் இலைகள் எப்படி கோர்ப்புண்டிருக்கின்றனவோ அப்படியும் தேகத்தில் நாடிகள் எப்படி வியாபித்திருக்கின்றனவோ அப்படியும்போல் ஆன்ம ஞானத்துக்குச் சாக்ஷியாயிருக்கின்ற பரமான்மா இருதயத்துக்குள் ளிருக்கின்றது. அங்ஙனம் இருக்கின்றபடியால் பார்த்துக்கொண் டிருக்கின்றேன் கேட்டுக்கொண்டிருக்கிறேன் அறிந்து கொண்டிருக் கிறேன் என்று ஆன்மவிருத்தியானது சீவித்திருக்கிறதென் றறிதல் வேண்டும்.

மஹத்தாகிய அஞ்ஞானத்தின் கரையைத்தாண்டுவதற்கு ஆத் மாவைப்பிரணவசொரூபமாகத் தியானித்தல்வேண்டும். அப்போதே உனக்கு மங்களமுண்டாகும். இந்த ஆத்மா திவ்யமாகிய பிரஹ்மபுரி யென்னும் ஆகாசத்தில் நன்றாக விளங்கும் அப்பரமாத்மா மநோ மய அன்னமயங்களின் வசப்பட்ட சரீரத்திலுள்ள இருதயத்தில் தங்கிப் பிரேரேபித்துக் கொண்டிருக்கும். ஆனந்த ரூபமாகப் பிர காசிக்கின்ற அப்பரமான்மாவைத்தீரர்கள் விஞ்ஞானத்தினால் பார்ப் பார்கள். பார்க்க, இருதயக் கிரந்தியானது பிளவுபட்டுச் சந்தேகங் களெல்லாம் சேதத்தையும் கர்மங்களெல்லாம் நாசத்தையும் அடை யும். அப்போது அப்பரப்பிரஹ்மத்தை நிஷ்களமாயும் அஞ்ஞான மற்றதாயும் சிரேஷ்டமாகிய சுவர்னகோசமாயும் பரிசுத்தமாயும் ஒளிகளுக்கெல்லாம் ஒளியாயும் ஆத்மவித்துக்கள் அறிவார்கள். அங்கே சூரியன் சந்திரன் நக்ஷத்திரம் மின்னல் அக்னிமுதலிய எது வும் பிரகாசிப்பதில்லை. இவையெல்லாம் தமக்குள்ள பிரகாசத்தை அந்தப் பரப்பிரம சகாயத்தைக்கொண்டே பெறுகின்றபடியால் தாம் அதன் முன்னே பிரகாசிக்கக்கூடவில்லை. அமிர்தமான இந்தப் பிரஹ்மமே கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு பூமி ஆகாயம் ஆகிய எங்கும் உள்ளதென்றும் இப்பிரபஞ்சமெல்லாம் பிரமமேயென்றும் எவன் அறிகின்றானோ அவனே கிருதகிருத்யனும். பிரம சொரூப மாயிருக்கின்ற அவனுக்குத் துக்கமுமில்லை சுகமுமில்லை. துவைத பாவனையை யுடையவனே பயத்தை யடைவன். இவன் பயமடை வதில்லை. அந்தப் பிரமத்தைவிட்டு நானில்லை என்னைவிட்டு அப்பிரம மமில்லை. ஆகையினால் அதுவே நான்; நானே அது. பார்வதனே! இத

னை நிச்சயமென்று அறிவாய். இவ்வண்ணமான பிரமதரிசனம் பெற்றவன் இருக்கின்ற இடத்திலேதான் நானும் இருப்பேன். இவனை விட்டுத் தீர்த்தங்களில்லை கைலாய வைகுண்டங்களில்லை. மற்றெவ்விடத்திலும் நானிருப்பதில்லை. என்னை யறிந்த ஞானிகளின் இருதயத்தில் எப்போதும் நான் வசித்திருப்பேன். அப்பரமஞானியை யர்ச்சிக்கின்றவனுக்கு என்னைப் பூஜிப்பதினா லுண்டாகும் பயனில் கோடிபங்கு அதிக முண்டாகும். அவன் குலமும் பவித்திரத்தையடையும். அவனைப்பெற்றதாயும் கிருதகிருத்தியத்தைப் பெறுவாள். சித்த லயமடைந்த ஞானியானவன் வசிக்கின்ற இடமே புண்ணிய பூமியென்னும் பெயரைப்பெறும். இதைப்பத்தியும் சீலமுமுடைய ஜேஷ்ட புத்திரனுக்கும் சிஷ்யனுக்குஞ் சொல்லவேண்டுமேயன்றி மற்றையருக்கு ஒரு சிறிதுஞ் சொல்லக் கூடாது. தெய்வத்தினிடத்தில் எவ்வளவு பக்தி வைக்கின்றானோ அவ்வளவு பக்தி பிரமஞானத்தை யுபதேசித்த ஆசாரியனிடத்தும் வைத்தல் வேண்டும். அந்த ஆசார்ய பக்தியுடையவனுக்குச் சொல்லப்பட்ட பிரஹ்ம ஜ்ஞானார்த்தம் அவன் மனத்திலே பிரகாசமாய் விளங்கும். இந்த ஞானோபதேசியே சாக்ஷாத் பரமேஸ்வரனாவன். இவ்வளவு நன்மையைக் கொடுப்பதாகிய ஞானத்தைப் பிரயத்தனப்பட்டு அடையவேண்டும். அப்படி யடையாமற் போகின்றவன் கடன்காரனாவன். பிரமஞானத்தை யுதிப்பிக்கின்றவன் பிதாவைக் காட்டிலும் அதிகனென்றுசொல்லப்படும். ஏனெனில், பிதாவினா லுண்டாகிய ஜன்மமானது நஷ்டத்தையடைகிறது. ஆசாரியனா லுண்டாகும் ஞானம் நஷ்டத்தையடைகிறதில்லை. ஆகலின் ஆசிரியனுக்குத் துரோகஞ் செய்தல் கூடாது. பிரஹ்மஜ்ஞானத்தை உபதேசிப்பவனே பரமகுருவென்று சாஸ்திரசித்தாந்தங்கூறுகின்றது. ஈஸ்வரன் கோபித்துக்கொண்டால் குருரக்ஷிக்கின்றான். குருகோபித்தால் சிவன்ரக்ஷியான். ஆகையினால் சர்வப்பிரயத்தினத்தினாலும் ஸ்ரீகுருவைச் சந்தோஷிப்பிக்க வேண்டும். எப்போதும் மனவாக்குக்காயங்களால் அவரையே தியானிக்கவும் வேண்டும். அப்படிச்செய்யாவிடில் நன்றிமறந்த பாதகனாவன். இவனுக்குப் பிராயச்சித்தங் கிடையாது. அதர்வணவேதத்தில் வல்லவராகிய தத்யங்கமுநிவரிடம் அஸ்வனிதேவதைகள் சென்றுஅவரை வணங்கி எங்களுக்குப் பிரஹ்மோபதேசஞ் செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க முநிவர் மற்

றொருவேளை வருவீர்களானால் அப்படியே உபதேகிக்கின்றோமென்று அவர்களை யனுப்பிவிட்டனர். அதை இந்திரனறிந்து அந்தமுநிவரிடஞ் சென்று நீர் அஸ்வனி தேவதைகட்குப் பிரஹ்மோபதேசஞ் செய்வீராயின்நான் உமதுசிரசை வெட்டிவிடுவேனென்று சொல்லிப் போயினன். பின்னர் அஸ்வனிதேவதைகள் வந்து கேட்டபோது நடந்தசெய்தியை முநிவர் சொல்ல அதற்கவர்கள் நீர் அஞ்சவேண்டாமென்று கூறி அவரநுமதிப்படி அவருடைய சிரசைச்சேதித்து குதிரையினுடைய சிரசைக் கொண்டுவந்து வைத்து அவ்வுபதேசத்தைப் பெற்று மறைந்திருந்தனர். உடனே இந்திரன்வந்து அவரைக் கோபித்து நான் சொல்லியதை அவமதித்தபடியால் உம்முடைய தலையைச் சேதித்து விடுகிறேனென்று அவனுக்குண்டாகிய கோபமிகுதியினால் முன்னிருந்த தலையல்ல வென்பதையும் அறியாமல் சேதித்துவிட்டுப்போயினன். மீண்டும் அஸ்வனிதேவதைகள் வந்து முன்னிருந்த அவரது தலையை வைத்துப்போயினர்.

ஓ பர்வதராஜனே! இவ்வளவு சங்கடப்பட்டு சம்பாதிக்கவேண்டிய தாகவிருக்கின்றது இப் பிரஹ்மவித்தையை. எவன் இதனைச் சம்பாதிக்கின்றானோ அவன்தான் கிருதகிருத்யன்; அவனே தான் தன்யன். நீ கேட்ட பிரஞானத்தை நான் முழுமையுஞ் சொன்னேன். இதன்மேற் சொல்லவேண்டுவ தொன்றுமில்லை என்றனள். (சு - ம் ௩௦)

முப்பத்தாறாம் அத்தியாயம் முற்றிற்று.

உ

ஹலத்ருத் பூஜிதாயை நமஃ

முப்பத்தேழாம் அத்தியாயம்

பக்தியோகம்.

பர்வதராஜன் தேவியைநோக்கி ஹேசாம்பவீ! ஆசையற்ற மத்திமனுக்கு சுகமான எந்தஞானத்தினால் உன்னுடைய பக்தி யுண்டாகுமோ அதனைச் சொல்வாயென்று கேட்க தேவிகூறுகின்றாள்:—

மோக்ஷத்தை யடைவதற்குச் சொல்லப்பட்ட மார்க்கம் மூன்று. அவையாவன :—கர்மயோகம், ஞானயோகம் பக்தி யோகங்களாம். இம்மூன்றும் எப்போதும் சுலபமாகச் சுவாதீனஞ் செய்துகொள்ளக் கூடியதே. எப்படியெனின், கர்மயோகத்தைக் காயத்தினாலும், பக்தியோகத்தை மனத்தினாலும், ஞானயோகத்தை அறிவினாலும் சுவாதீனஞ் செய்துகொள்ளலாம் பக்தியோகமானது :—மனிதர்களுடைய குணபேதத்தால் தாமச பக்தியென்றும், ராஜஸ பக்தியென்றும், சாத்வீக பக்தியென்றும் மூவகைப்படும். அவற்றுள் தாமசபக்தியாவது :—பிறர் வருந்தவேனும் டம்பமாகவேனும் மாச்சர்யத்தினாலேனும் குரோதத்தினாலேனும் என்னிடம் விசுவாசம் வைத்துச் செய்யும் செய்கைகளாம். இராஜஸபக்தியாவது :—பிறருக்குத் துன்பஞ்செய்யாது தனக்கு மாத்திரம் நன்மையானவற்றைச் செய்து கொண்டும் ஏதேனும் ஓர் இச்சையை நாடோறும் எண்ணியும் புண்ணிய பலன்களை யனுபவிக்கும் பொருட்டும் பேத புத்தியினால் என்னை யுபாசித்தலாகும். சாத்வீக பக்தியாவது :—பாவ நிவர்த்தியின் பொருட்டு எல்லாக் கருமங்களையும் ஈஶ்வரார்ப்பணமாகச் செய்தல், இக்கருமம் வேதோக்த மாகையினால் இதை எப்போதுஞ் செய்ய வேண்டியதென்கிற நிச்சயபுத்தி யுடையனாதல், ஆண்டான் அடிமையென்கிற பேத புத்தியோடு தெய்வத்தினிடத்தில் பிரீதியுடையனா யிருத்தல் முதலியனவாம்.

இச்சாத்வீக பக்தியோகமானது சகல கலியாண குணங்களுக்கும் உற்பத்தி ஸ்தானமாக விருக்கின்ற என்னிடம் தைலதாரை போல் நீங்காது புத்திவைத்தலாகிய சிரேஷ்டமான பக்தியை யடைவிப்பிக்கும். இதுவன்றி முன் சொல்லிய இராஜஸ தாமஸ பக்திகள் யோகங்களை அடைவிக்கா. அந்த மேலான பக்தி இவையாமென்று இன்னமுஞ் சொல்லுகிறேன். அதனை நீ அறிந்து கொள்வாயாக. அஃதாவது, எப்பொழுதும் என்னுடைய குணங்களைக் கேட்பதும், என்னுடைய நாம சீர்த்தனங்களைச் செய்வதும், யாதொரு காரணத்தை எண்ணாதிருப்பதும், சாலோக்கிய சாமீப்ய சாரூப்பிய சாயுச்சியங்களை விரும்பாமலும், என்னுடைய சேவையைக் காட்டிலும் அதிகமானது ஒன்றுண்டென்று சிறிதும் அறிவதில்லாமலும், மோக்ஷா பேக்ஷையையும் விட்டு என்னிடத்தில்

சிரேஷ்டமான ஆசையைவைத்துசேவ்யசேவகபாவத்தைக்கொண்டு சோம்பலொழிந்து என்னையே தியானிப்பதுமாம். இதனைப் பரம பக்தியென்றும் ஞானயோகமென்றுஞ் சொல்லப்படும். இந்தப் பரமபக்தியை ஞானயோகமென்று எப்படிச் சொல்லப்படுமெனின், அந்த ஞானயோகமும் பரமபக்தியும் வேறு பிரித்தற்கின்றி பரம பக்தியினது விளைவாகவே ஞானயோகம் முடிதலாலும் இந்த ஞான யோகத்தில் என்னையே தியானித்தலாகிய பரமபக்தி பிரகாசித்த லானும் பரம பக்திக்கும் ஞானயோகத்துக்கும் சிறிதும் வேற்றுமை பறிதற்குக் கூடாதென்க. அதனை இனிவரும் விஷயத்தினாலறிவாய். என்னையெனின், என்னை நித்தியம் எவன் தன்னைக்காட்டிலும் ஒரு பொருளிலும் பேதமில்லாமல் அறிகின்றானோ பேதமாக அறியவில் லையோ அவன் சகல சீவர்களையும் என்னுடைய ரூபமாகவே நிந் திப்பான். தன் ஆத்மாவினிடத்தில் எவ்வளவு பிரீதியிருக்கின்றதோ அவ்வளவு ஆசை அன்னியமான உயிர்களிடத்தும் வைப்பன். சை தன்னியமானது எல்லா வுயிர்களிடத்தும் சமானமாக விருக்கின்ற படியால் அந்தச் சைதன்ய சொரூபிணியாகிய என்னையும் உயிர்களை யும் அபேதமாகவே நினைப்பான்.

எவனுக்கு இந்த வண்மையான பரமபக்தியானது உண்டாகிற தோ அவனுக்கு என்னுடைய ரூபமாகிற நிர்மாத்திரத்தி லயமுண் டாகின்றது. பக்தியினுடைய முடிவு இதுவேயாகும். இதனைச் குணமென்று சொல்லப்படும். பக்தி ஞானம் என்னும் இரண்டிற் கும் வைராக்கியமானது எல்லை. எவன் பிராரத்துவவசத்தால் பக் தியின் முடிவாகிய ஞானத்தைப் பெறுதொழிகின்றானோ அவன் எனது வாசஸ்தானமாகிய மணித்வீபத்தையடைந்து அங்குள்ள சகல போகங்களையும் இச்சிக்காமற்போனாலும் அதுபவிக்கத் தக் கவனாவான். அந்த லோகாநுபவமுடிவில் முன்சொன்ன எனது சித்ரூபஞானம் கன்ரூக வண்டாகும். அந்த ஞானத்தால் எப்போ தும் முத்தனாய் விடுகிறான். ஞானத்தினால் முத்தியுண்டாகிறதே யல்லாமல் மற்றொன்றினாலாகாது. ஹ்ருதயத்துள்ளிருக்கும் ப்ரத் யேகாத்ம ஞானமானது எவனுக்கு இவ்விடத்தி லுண்டாகிறதோ அவனுக்கு எனது ஞானசொரூபமானது தருவாகிறது. அதனால் அவனது பிராணன் நாசமடைகிறதில்லை. எவன் பிரஹ்மத்தை

பிரமமாக அறிகின்றானே அவன் பிரஹ்மமாயிருந்தே பிரஹ்மத்தை யடைகிறான். கண்டூபரணமானது கண்டத்திலிருப்பதுபோலும் பிரஹ்மமானது தன்னிடத்திலேயே யிருக்கிறது. அந்தப் பிரஹ்மத்தை அஞ்ஞானத்தினால் உணராதிருக்கின்றான். அஞ்ஞானமானது ஞானத்தினால் நாசமானபோது தன்னிடத்திலிருந்த பிரஹ்மத்தையே தான் யடையப்பெறுகிறான். இவ்வுண்மை இவ்வாறிருக்க, அறியப்பட்டதும் படாததும் என்னும் இரண்டிற்கும் வேறாக விருக்கிறது எதுவோ அதுவே என்னுடைய சம்வித் சொரூபம். இந்தச்சொரூபத்தை ஒருவன் எப்படியடைவானெனின், தர்ப்பணாதி கருமாக்களால் எப்படி பிதார்க்கள் திருப்தியடைகின்றார்களோ அப்படி என்னை உத்தேசித்துச் செய்வதாகிய கர்மாக்களால் நான் திருப்தியடைகிறேன். அந்தத் திருப்தியினால் அவனுக்கு ஆத்மஞானப் பிரகாசம் வெளிப்படுகின்றது. அப்போதுகண்ணாடியில் தன்னுடைய பிம்பம் காணப்பட அப்பிம்பந் தானாகவே கண்டு களித்தல்போல் அவனுடைய ஞானப்பிரகாசத்தில் என்னுடைய சம்வித்சொரூபம் காணப்பட அப்போது அந்தச் சொரூபத்தைத் தானாகவே கண்டு களிப்பன். இவ்வண்ணம் தன்னையும் தன்னிடத்தில் காணப்பட்ட என்னையும் வேறாகக் காண்டலாகிய துவித பாவனை யொழியப்பெற்றவன் என்னுடைய உலகத்தை யடைகிறான். இந்த ஞானசித்தியையடைய வைராக்கியத்தோடு முயற்சி செய்பவன் அந்த ஞானத்தை யடையப்பெறாது மரணமடையப் பெறுவானாயின் அவன் பிரமலோகத்தையடைந்து அந்தப் பிரம கல்பபரியந்தம் அங்கு வசித்துப்பின்னர் சுசியும் செல்வமுமுடைய வனது கிருகத்தில் பிறப்பான். பிறந்த பின்னர் ஞானசாதனங்களைச் செய்து அச்சாதனத்தால் மேற்கூறிய ஞானத்தையடைவான்.

ஆகையால் ஒருவனுக்கு இந்தஞானம் ஒரு சன்மத்திலுண்டாகத் தக்கதல்ல. அநேகசென்மத்திலு லுண்டாகத்தக்கது. இவ்வருமையுணர்ந்து சர்வப்பிரயத்தனத்தாலும் ஞானார்த்தத்தின் பொருட்டு எத்தனஞ் செய்யவேண்டியது. அப்படிச் செய்யாமற் போவானாயின் அவனுக்கு மகத்தான நாசமுண்டாகும். ஏனெனின், இச்சன்மம் மறுபடிகிடைப்பது அரிது. கிடைத்தபோதிலும் முதன்மையாகிய பிராஹ்மண சன்மங்கிடைப்பது அரிது. அது கிடைத்தா

லும் சமாதி சம்பத்தும் யோகசித்தியும் உண்டாதலரிது. அது போலவே உத்தமமாகிய ஆசிரியர் கிடைத்தலரிது. அதுபோலவே வன்மையான இந்திரியாதிகளும் சரீரத்துக்குச் சம்ஸ்காரவிசேட மும் வாய்க்கப்பெறுத லரிது. ஆநேக ஜன்ம புண்ணியத்தினல் மோக்ஷாபேக்ஷை புண்டாகும். இவையெல்லாம் உண்டாயிருந்தும் ஞானர்த்தமான பிரயத்தனத்தைச் செய்யா திருப்பானனல் அவ னுடைய சன்மம் வியர்த்தம். ஆகையால் ஓ இராஜனே ! ஞானத் தின் பொருட்டு கூடிய பிரயத்தனத்தோடு எத்தனஞ் செய்ய வேண் டியது. அப்படிச் செய்வானயின் அடிக்கடி அஸ்வமேதஞ்செய்த பலனை யடைகிறன். இது நிச்சயம். பாலில் நெய்யிருப்பதுபோல் ஒவ்வொரு பிராணிகளிடத்தும் இந்த ஞானம் இருக்கிறது. அதனை மனமாகிய மத்தினற் கடைய வேண்டியது. கடைந்தால் ஞான முண்டாய்க் கிருதார்த்தராகின்றனர். இவ்வாறு வேதாந்தங்கோஷிக் கின்றது.

இவ்வாறான ஞானத்தையும் இந்த மூடிவான ஞானத்தை யுடைய பரமபக்தியும் உடையவனது செய்கைகள் எது எதுவோ அவைகளைக் கருமயோகமென்று சொல்லப்படும். அவையாவன:— என்னை எப்பொழுதும் நமஸ்கரித்தல், பூஜித்தல், சண்டாளன் வரை யில் பேதபுத்தியை விட்டு குரோதபுத்தி நீங்கி யிருத்தல், எனது ஸ்தான தெரிசனத்திலும் எனது பக்தர்களுடைய தெரிசனத்திலும் சாஸ்திரங்களைக்கேட்பதிலும் மந்திரங்களிலும், என்னிடத்தில் அதிக மான பிரியம் வைத்துச் சரீரம் புளகாங்கிதங்கொண்டு கண்ணீர் அரும்பி கண்டம் விம்மி ஜகத்துக்குக் காரணியாயும் சர்வகாரண காரணியாயும் இருக்கின்ற என்னை அநந்நியபாவத்தால் பூஜித்து என் னுடைய நித்தியமாயிருக்கின்ற நித்தியநைமித்திகமுதலானவற்றைத் தனலோபமின்றி நித்தியம் பக்தியோடு செய்தல், என்னுடைய உற்ச வத்தைச் செய்தல், உற்சவத்தைத் தெரிசித்தல், எனது நாமங்களைப் பெருங்கூச்சலிட்டுச் சொல்லுதல், நிருத்தனஞ் செய்தல் ஆகிய இவைகளே கருமயோகமெனப்படும். பக்தி ஞானமுடையவன் அகங்காராதிகளோடு தேகாபிமானத்தை விட்டுப் பிராரத்தத்தால் எது எப்படிச் செய்யப்படுகிறதோ எது எப்படியாகிறதோ அவை களிலும் தேக சம்ரட்சணையிலும் சிந்தனையற்று வாழ்வன். எனக்கு அன்னியமாய்ச் சிறிதும் பாவிக்கமாட்டான். ஓ பர்வதராஜனே !

இது வரையில் உனக்குப் பக்தியோகம் இதுவென்றும், ஞானயோகம் இதுவென்றும் கர்மயோகம் இதுவென்றும் சங்கிரகமாகச் சொன்னேன். இனி என்ன கேட்க இச்சிக்கின்றனை என்று வினவினள். (சு - சரு.)

முப்பத்தேழாம் அத்தியாயம் முற்றிற்று.

உ

ஹரிணேக்ஷணாயை நம:

முப்பத்தெட்டாம் அத்தியாயம்.

* தேவீ விரதோற்சவாதி.

பர்வதராசன் கூறுகின்றான் :—ஓ தேவி! தேவரீருக்குப் பிரீதியுள்ளதாயும் பரிசுத்தமாயும் முக்கியமாயுமிருக்கின்ற ஸ்தானங்கள் உலகில் எத்தனை பார்க்கத்தக்கவை? அதுபோலும் உனக்குச் சந்தோஷத்தை விளைவிக்கத்தக்க விரதங்கள் எத்தனை? அவையெல்லாம் எனக்குக் கூறுவாயாக. இவற்றை நான் கேட்கப் பெறுவேனாயின் கிருதார்த்தனாவேன் என்றான்.

தேவி கூறுகின்றாள் :—ஓ பர்வதராஜனே! நான் சர்வஸ்வரூபிணியாயிருக்கின்றபடியால் பார்க்கப்பட்ட ஸ்தானங்களெல்லாம் என்னுடைய ஸ்தானங்களேயாம். எல்லாக்காலங்களும் என்னுடைய உற்சவ காலங்களேயாம். அவ்வாறிருந்தபோதிலும் பக்தர்களிடத்தில் எனக்குள்ள பிரீதியினால் சில கூறுகின்றேன். நீ சாவதானமாய்க் கேட்பாயாக:—

ஸ்தானங்கள் எவையெனின், இலக்ஷுமி தேவிக்கு வாசஸ்தானமாயுள்ள மஹாஸ்தானமாகிய கோலாபுரம், ரேணுகாதேவிக்கு வாசஸ்தானமாகிய மாத்ருபுரம், துர்க்கா தேவிக்கு சர்வோத்தமமான வாசஸ்தானங்களாயுள்ள துளஜாபுரம், சப்தஸ்ருங்கம், இங்குலை, ஜ்வாலாமுகி, சாகம்பரி, பிராமரி, ஸ்ரீரக்த தந்திரிகா, அன்ன

---

* தேவியினது விரதம் உற்சவம் முதலியவை.

பூரணிக்கு வாசஸ்தானமாயும், தனக்குமேல் உத்தமமில்லாததுமாயுள்ள காஞ்சீபுரம். அக்காஞ்சியில் பராசத்தியினால் பிரதிஷ்டிக்கப்பட்ட ஏகாம்பரஸ்தானம். யோகேஸ்வரியினால் பிரதிஷ்டிக்கப்பட்ட மஹாலசம் (மஹா பிரகாசத்தையுடைய) தேஜோஸ்தானம். விந்தியாசல நிவாசினியினது சர்வோத்தமமாகிய ஸ்தானம், பீமாதேவி ஸ்தானம், விமலாதேவி ஸ்தானம், ஸ்ரீ சந்திரகலா மகாஸ்தானம், கௌசிகிஸ்தானம் நீலபர்வத சிகரத்திலிருக்கும் நீலாம்பிகை ஸ்தானம், ஜாம்புகேஸ்வரி ஸ்தானம், ஸ்ரீ நகரம், நேபாளத்தில் பிரதிஷ்டிதமாயுள்ள குஹ்யகாளீஸ்தானம், தகராகாசமாகிய சிதம்பரஸ்தானம், வேதாரண்யம், சீனதில் பிரசித்திபெற்ற நீலசரஸ்வதிஸ்தானம், வைத்தியநாதத்தில் சர்வோத்தமமாகிய வகலாஸ்தானம், புவனேஸ்வரி ஸ்தானமாகிய மணித்வீபம், திரிபுரபைரவி ஸ்தானமாகிய யோனிமண்டல ரூபமாயிருக்கின்ற காமாக்யம், அது பூவுலகில் க்ஷேத்திர ரத்னமாயும் மஹா மாயா ஸ்தானமாயும் மாதங்தோறும் ரஜஸ்வலையாகின்ற ஸ்தானமாயு முள்ளது. இந்த ஸ்தானம்போலும் சிறந்தஸ்தானம் பூவுலகில் எங்குமில்லை. அங்கு சகல தேவதைகளும் பர்வதரூபமாய் வசிக்கின்றார்கள். அறிவுடையார் அவ்வெல்லை முற்றும் தேவி ஸ்வரூபமென்றும் இதனைக்காட்டிலும் உத்தமஸ்தானம் வேறில்லை என்றுங் கூறுவர். காயத்திரி ஸ்தானமாகியபுஷ்கரம், சண்டிகாஸ்தானமாகிய அமரேசம், புஷ்கரேக்ஷணி ஸ்தானமாகிய பிரபாசம், லிங்கதாரணி ஸ்தானமாகிய நைமிசம், புஷ்கராக்ஷி ஸ்தானமாகிய புருஹூதை, ரதி ஸ்தானமாகிய ஆஷாடம், சண்ட முண்டிகளுடைய ஸ்தானம், பரமேஸ்வரியாகிய தண்டினி ஸ்தானம், பராபூதிஸ்தானம், பூதிஸ்தானம், நகுலேஸ்வரிஸ்தானமாகிய நகுலம், சந்திரிகாதேவி ஸ்தானமாகிய அரிச்சந்திரம், சங்கரிஸ்தானமாகிய ஸ்ரீபர்வதம், திரிசூலிஸ்தானமாகியஜப்யேஸ்வரம், சூக்ஷ்மாதேவி ஸ்தானமாகிய ஆம்ராதகேஸ்வரம், சங்கரி ஸ்தானமாகிய மகாகாளேஸ்வரம், சர்வாணிஸ்தானமாகிய மத்திமஸ்தானம், மார்க்கதாயினி ஸ்தானமாகிய கேதாரக்ஷேத்திரம், பைரவி ஸ்தானமாகிய பைரவம், மங்களாஸ்தானமாகிய கயை, ஸ்தாணுப்பிரியைக்கு ஸ்தானமாகிய குரு க்ஷேத்திரம், ஸ்வாயம்பவி ஸ்தானமாகிய நகுலம், உக்ராதேவி ஸ்தானமாகிய கனகலம், விஸ்வேஸ்வரி ஸ்தானமா

கிய விமலேஸ்வரம், மஹானந்தா ஸ்தானமாகிய மஹாந்தகை, பீமேஸ்வரி ஸ்தானமாகிய பீமகேஷ்த்திரம், சங்கரி ஸ்தானமாகியபவானி, ருத்ராணி ஸ்தானமாகிய அர்த்தகோடி, விசாலாக்ஷி ஸ்தானமாகிய அவிமுக்தமென்னும் காசி, மஹாபாகா ஸ்தானமாகிய மஹாலயம், பத்திரகாளீ ஸ்தானமாகிய கோகர்ணம், பத்ரீஸ்தானமாகிய பத்ரகர்ணிகை, உத்பலாக்ஷி ஸ்தானமாகிய சுவர்ணாக்ஷி, ஸ்தாண்வீ ஸ்தானமாகிய ஸ்தாணுகேஷ்த்திரம், கமலா ஸ்தானமாகிய திருவாரூரென்னுங் கமலாலயம், பிரசண்டை ஸ்தானமாகிய சகலண்டக கேஷத்திரம், திரிசந்தியா தேவிகளின் ஸ்தானமாகிய குருண்டலே கேஷத்திரம், மகுடேஸ்வரி ஸ்தானமாகிய மாகோடம், சண்டகி ஸ்தானமாகிய மண்டலேசம், காளிகா ஸ்தானமாகிய காலஞ்சாரம். த்வனீஸ்வரி ஸ்தானமாகிய சங்குகர்ணம், ஸ்தூலகேஸ்வரி ஸ்தானமாகிய ஸ்தூல கேஸ்வரம், ஹரஸிலகா மந்திர ஸ்தானமாகிய ஞானிகளுடைய இதய கமலம்.

பர்வதராசனே ! இதுவரையில் எனக்குப் பிரியகரமான ஸ்தானங்கள் சொல்லப்பட்டன. என்னுடைய பூஜையை விரும்பினவன் முன்னர் அந்தந்தகேஷத்திர மகிமைகளைக் கேட்டுப் பின்னர் எல்லா கேஷத்திரங்களிலுஞ் சென்று அந்தந்த தேவியைப் பூஜிக்கவேண்டும். அந்தந்த மகிமைகளைக் கேட்டுப் பூஜிக்க முடியாவிட்டால் எல்லா கேஷத்திரங்களுங் காசியி லிருக்கின்றபடியால் அங்கு சென்று பக்திபரனும் அங்குவசித்து அந்தந்த ஸ்தானங்களைத் தினந்தோறுந் தெரிசித்து எனது மந்திரத்தை ஜெபிக்கவேண்டும். இவ்வண்ணமாகத் தேவியைத் தியானித்தால் பந்தத்தினின்றும் விடுபட்டு முக்தனாகின்றான். விடியற்காலத்தில் இந்தத் தேவிநாமங்களைப் படித்தால் அந்தக்ஷணமே சகலமான பாவங்களும் நசித்துவிடும். சிரார்த்தகாலத்தில் பிராஹ்மணர் முன்னிலையில் இந்த நிர்மலமான நாமங்களைப் படித்தால் பிதுர்க்கள் முக்தர்களாய் சிரேஷ்டமான பதத்தையடைகின்றார்கள்.

இனி விரதங்களைக்கூறுகின்றேன்:—அவற்றைப் புருஷர்களும், ஸ்திரீகளும் கேட்டுப் பிரயத்தனத்தோடு அனுஷ்டிக்கவேண்டும். அவ்விரதங்களாவன:—அகந்த திரிதியைவிரதம், ரசகலியாணிவிரதம் ஆனந்தத்தை விளைவிக்கின்ற ஆருத்ராவிரதம் மங்களவார விர

தம், சுக்கிரவாரவிரதம், கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசிவிரதம் பிரதோஷ விரதம், புரட்டாசி மாதத்திலும் சித்திரைமாதத்திலும் வருகிற நவராத்திரி விரதம். இவைபோலவே சோமவார விரதமும் எனக்குப் பிரீதியானது.

இனி ரசகலிபாணி விரதமாவது-அநந்த திரிதியையோடு கூடியதினம். ஆருத்ரா விரதமாவது-ஆருத்ரா நக்ஷத்திரத்தோடு திரிதியைகூடியதினம், பிரதோஷவிரதமாவது-மஹாதேவனுகிய தேவன் தேவியை அந்திப்பொழுதில் உன்னதமான ஆசனத்தில் வீற்றிருக்கச்செய்து சகல தேவர்களுந் தம்மைச்சூழ்ந்திருப்ப அவ்வம்பிகை எதிரில் நடனஞ் செய்வன் அவ்வந்திப்பொழுதே பிரதோஷகாலமெனப்படும். அக்காலத்தில் ஆகாராதிகளை விட்டிருந்து மஹாதேவியைப் பூஜிக்கவேண்டும். தேவிக்குப் பிரீதியாகிய இவ்விரதத்தைப் பக்ஷங்கடோறும் விசேடமாகச் செய்யவேண்டும். சோமவாரத்திலும் பிரதோஷத்திலும் இரவில் போஜனஞ் செய்யவேண்டும். இங்ஙனஞ் சொல்லி வந்தனவேயன்றி ஏனைய விரத காலங்களும் நித்திய நைமித்திகமாகச் சொல்லப்பட்டகாலங்களும் எனது விரதகாலங்களேயாகும் எனக்குப் பிரீதிகரமான இவ்விரதங்களை மத்சரகுணமற்று அனுஷ்டிக்கவேண்டும். அப்படி விரதங்களை எவன் அனுஷ்டிக்கின்றனோ அவன் என்னுடைய சாயுஜ்யத்தை யடைகின்றன். அவன்தான் எனக்குப்பிரியனும் பக்தனுமாயுள்ளவன். இனிஉனக்குப் பிரியமான உற்சவங்களைச் சொல்லுகிறேன் கேட்பாயாக:—

டோலோற்சவம் சயனை (பள்ளியறையு) ற்சவம், ஜாகரணை ற்சவம் (திருப்பள்ளி யெழுச்சி) ரதோற்சவம், வசந்தோற்சவம், சிராவணமாசத்தில் செய்யும் பவித்ரோற்சவம், இதுபோலும் எனது பக்தர்களால் செய்யப்பட்ட ஏனைய உற்சவங்களும் எனக்குப் பிரீதிகரமேயாம். இதுபோலவே எனது பக்தர்கட்கும் சுமங்கலிகட்கும் குமாரிகட்கும் சிறுபிள்ளைகட்கும் போஜனஞ் செய்விப்பதும், என்னிடம் புத்திவைப்பதும், எனது கதையைக் கேட்பதும், எனக்குப் பிரியமாகும். இவ்விரதங்களுக்காகவும் உத்ஸவங்களுக்காகவும் திரவியம் செலவாவதைப்பற்றிக் கவலைகொள்ளாமல் சந்

தோஷ சித்தத்தோடும் சோம்பலில்லாமல் பக்தியுடன் பிரதிவருஷமும் எவன் செய்கின்றானே அவனே தன்யன், கிருதகிருத்யன். என்னுடைய பிரீதிக்குப் பாத்திரமானவன், அவனே சர்வபந்தங்களினின்றும் விடுபட்டவன். இவைகளைச் சிஷ்யத் தன்மையையடையாதவனுக்கும் பக்தியில்லாதவனுக்கும் அதுஷ்டிக்கும்படிச் சொல்லக்கூடாது என்றனள். (சு-ம்-சகூஅ)

முப்பத்தேட்டாம் அத்தியாயம் முற்றிற்று.



ஹரப்பிரியாயைநம:

முப்பத்தொன்பதாம் அத்தியாயம்.

தேவீபூஜாவிதி.



பர்வதராஜன் தேவியை நோக்கி தேவதேவீ! மஹேசானீ! கருணாகரே! ஹே அம்பிகே! உனது பூஜாவிதியைக் கூறவேண்டுமென்றுகேட்க,தேவி கூறுகின்றாள்:—ஒ அரசனே! அம்பிகையாகியஎனக்குப்பிரியமான பூஜாவிதியைக்கூறுகின்றேன். அதனை நீ அதிகசிரத்தையோடுங் கேட்பாயாக. அப்பூஜை புறப்பூஜை உட்பூஜை என இருவகைப்படும். அவற்றுள் புறப்பூஜை வைதிகம் தாந்திரிகம்என இருவகைப்படும். அவ் வைதிகபூஜை வேததீக்ஷையோடு கூடினவைதிகன் செய்யக்கடவன். தாந்திரிகபூஜை தாந்திரிக தீக்ஷையுடைய தாந்திரிகன் செய்யக்கடவன். இவ்விதம் பூஜாரகசியத்தையறியாது விபரீதமாகச் செய்கிற மூடன் எப்போதும் பதிதனாகின்றான். முதலிற் கூறிய வைதிகம் இதுவென்று கூறுகின்றேன்.

வேதசம்பந்தமுடையது எதுவோ அது வைதிகமெனப்படும். வேதம் யாருடைய சம்பந்தமுடையதெனின்! சர்வக்ஞையாயும் சர்வசக்தியுடையவளாயும் இருக்கின்ற என்னிடத்தினின்று முண்டானது எனவே என்னுற்சொல்லப்பட்டது. ஆகலின் என் சம்பந்தமுடையது. என் சம்பந்த முடையதாகவே அதுதான் பிரமாணமெனப்படும். ஏனெனில் முக்காலத்தும் அஞ்ஞானமென்பதைச் சிறிதுமறியாத ஞானசொரூபிணியாகிய என்னால் சொல்லப்பட்டதனாலென்க. ஆகவே, அது அப்பிரமாணமாகமாட்டாது. ஸ்மிருதிகள் பிரமாணமாகாதோவெனின், அவைகளும் சுருதி அர்த்

தத்தையே கொண்டு வெளிவந்தனவாகலின் பிரமாணங்களேயாம். ஸ்மிருதிகளில் ஒரிடத்தில் ஓர் சமயத்தில் தந்திரப்பார்வையினால் தந்திரமெனப்படும். வாமாதி ஆகமங்களிற் கூறப்படுந் தருமங்களேயும் தருமமாகச் சொல்லப்படுகிறதே அவைகளைக் கொள்ளலாமோவெனின் அந்தப்பாகத்தை வைதீகர்கள் கிரகிப்பதில்லை. ஏனெனின் அந்த சாஸ்திரங்களால் அங்கியான முண்டாகிறபடியால் அதனைக்கொள்ளார். அவ்வாகமங்களைக்கொண்டு கூறும்பிரமாணங்களும் அக்யானதோஷத்தை யடைகின்றபடியால் அந்தப்பிரமாணங்களும் அப்பிரமாணத்தையடைகின்றன. ஆகவேமுமூக்ஷுக்கள் வேதத்தையே யநுசரிக்கவேண்டும். உலகில் எப்படி அரசனுடைய ஆக்ஞையைவிடக்கூடாதோ அதுபோலவேதாக்ஞையைவிடக்கூடாது. சர்வேசையாகிய என்ஆக்ஞையேஅந்தச்சுருதி. அதுமாநுடர்களால் எப்படிவிடத்தக்கது? என்னுக்ஞையைப் பரிபாலிக்கவேண்டியே பிரஹ்மக்ஷத்திரியர்களைச் சிருட்டித்தேன். அவர்களால் இந்தச்சுருதியினது இரகசியங்களை யறியத்தக்கது. எந்தெந்த காலத்தில் தர்மத்துக்கு நாசம்வருகின்றதோ அதர்மம் எப்போ துண்டாகின்றதோ தேவாசுரர்களுடைய கலகங்கள் எப்போதுண்டாகின்றனவோ நான் அந்தக்காலங்களில் ஆவிர்ப்பவிக்கின்றேன். தர்மத்தை எவர் செய்யாதிருக்கின்றார்களோ அவர்களின் சிக்ஷை நிமித்தம் கேட்டமாத்திரத்தில் பயமுண்டாகும்படியான நரகத்தையுண்டு செய்திருக்கின்றேன். எவன் வேதோக்தமான் தர்மத்தைவிட்டு வேதநிந்திதமான தர்மத்தைஆச்ரயிக்கின்றானே அந்த அதமர்களை அரசன் சுதேசத்தினின்றுந் துறத்திவிடவேண்டும். பிரமக்கியானிகள் அவர்களிடம் பேசமாட்டார்கள். பிராமணர்கள் அவர்களைத் தங்களுடைய பந்திகளில் சேர்த்துக்கொள்ளமாட்டார்கள். சுருதிஸ்மிருதிக்கு விரோதமாக சாஸ்திரங்கள் அநேகமிருக்கின்றன. அவையனைத்தும் சர்வப் பிரயத்தனத்தாலும் தாமசசாஸ்திரமென்று விடக்கடவது. வேதநிந்திதர்களாகியவேத பாஹ்யர்கள் மோகிக்கும் பொருட்டு வாமம் காபாலிகம் கௌலம் பைரவ முதலிய இந்த ஆகமசாஸ்திரங்கள் ஈச்வரனு லுண்டாக்கப்பட்டன. இதுவன்றி அவ்வாகமங்கள் உண்டாவதற்கு வேறுகாரணங்கிடையாது. தக்ஷன் காரணமாக ததீசி பிருகு முதலியமுனிவர் சாபத்தால் எந்தப்பிராமணர்கள் வேதமார்க்கத்திற்குப் புறம்பானவர்களாயிருக்

கின்றார்களோ அவர்களைக் கரையேற்றச் சைவம் வைஷ்ணவம் சாக்தம் சௌரம் காணபத்யம் என்கிற ஆகமங்கள் சோபானக் கிரமமாக உண்டாக்கப்பட்டன.

அந்த ஆகமங்களில் சிற்சிலபாகங்களில் வேதவிரோதமில்லாத தர்மங்கள் சொல்லப்பட்டிருக்கிறன. வைதிகர் அதைக் கிரகிப்பதில் தோஷங்கிடையாது. பிராமணன் வேதவிருத்தமான அர்த்தத்தில் அதிகாரியாகான். வேதாதிகாரியீனன் அந்தசாஸ்திரத்தில் அதிகாரமுள்ளவனகின்றன். ஆகையினல் சகலமானபிரயத்தனத்தினலும் வைதிகன் வேதத்தையே ஆச்ரயிக்கவேண்டும். தர்மத்தோடுகூடிய ஞானமானது பரப்பிரமத்தைப் பிரகாசப்படுத்தும். ஈஷணத்திரயத்தைவிட்டு என்னையே சரணடைந்து சர்வப்பிராணிகளிடத்தும் தயையுடையவர்களாயும் மானம்அகங்காரமில்லாதவர்களாயும் என்னிடத்தே மனதையும் பிராணனையும் வைத்தவர்களாயும் என்ஸ்தானத்திலேயே ஆசக்தியுள்ளவர்களாயும் சந்நியாசிகளாவது வானப்பிரஸ்தர்களாவது கிருகஸ்தர்களாவது பிரமசாரிகளாவது சர்வேஸ்வரி என்று டெயருள்ள என்னைப்பக்தியோடு உபாசிப்பார்களாயின் அப்படிப்பட்டவர்களுடைய அஞ்ஞானமாகிய இருளை ஞானமாகிய சூரியப்பிரகாசத்தினல் நாசஞ்செய்கிறேன். இதிற்சம்சயமில்லை. ஓபர்வதராஜனே! இதுவரையில் சொல்லிவந்தவைகளால் பதிப்பூஜை வைதிகம், தந்திரிகம் என இருவகைப்படுமென்பதனை விளக்கியதாகும். இனி வைதிகபூஜையும் மூர்த்திபேதத்தால் இரண்டு வகைப்படும் என்பதனைக்கூறுகின்றேன். சர்வத்தையும்பிரேரேபிக்கின்ற பராத்பரையாகிய யான் முன்னைமகத்தாகவும் சர்வசக்தியுடையதாகவும் அனந்தந் தலை கண் கால்முதலிய அவயவங்களாகவுங் காட்டிய விராட்சொரூபமாகிய விஸ்வரூபத்தை நீங்கள் காணும்படி முன்னேகாட்டினேனன்றே அந்தஸ்வரூபத்தைத்தியான பூர்வகமாகப் பூஜித்தலொன்று.

தாம்பிராதிகளி லமைந்துள்ள ஓர்பிம்பத்திலாவது தண்டிலத்திலாவது சூர்யமண்டலத்திலாவது சந்திரமண்டத்திலாவது ஜலத்திலாவது பாண லிங்கத்திலாவது யந்திரத்திலாவது பெரிய படத்திலாவது தன்இருதயத்திலாவது ஆவாகித்து பராத்பரையாகிய என்னை நல்லகுணமுள்ளவளாயும் கருணையினல் நிறைந்தவளாயும் தருணியாயும் மிகச்சிவந்த நிறமுடையவளாயும் சௌந்தர்

யசாரத்திற்குமுடிவான எல்லையானவளாயும் சகலசுந்தரமான அவயவங்களுடையவளாயும் சிருங்கார ரசத்தினால் நிறைந்தவளாயும் எப்போதும் பக்தர்களுடைய துக்கத்தில் பயந்தவளாயும் அநுக்கிரகத்தில் நல்லமுகமுடையவளாயும் சந்திரகண்டத்தைத் தரித்தவளாயும்பாசாங்குச வரதாபயங்களைத் தரித்தவளாயும் ஆனந்தரூபிணியாயுந் தியானித்துத் தன்சக்திக் கேற்றவாறுசோடசோபசாரத்தோடு பூஜித்தலொன்று.

இவ்வகையான பூஜையைத் தினமும் பூஜிக்கவும் தியானிக்கவும் ஸ்மரிக்கவும் வேண்டியதென்று பிரதமாசாரியர்கள் கூறியிருக்கின்றனர். ஓ அரசனே!சாந்தம் ஸ்திரபுத்தி டம்பமின்மை அகங்காரமின்மை முதலியநற்குணங்களை யடைந்து எனதுபூஜாபரனாவாய். என்னையே சரணமாகப்பெறுவாய் ஞானநோக்கைக்கொண்டு என்னையே நோக்குவாய். என்னையே ஜபிப்பாய் மனத்தினாலுந் தியானிப்பாய். வேறிடத்தில் பக்திசெலுத்தாமல் என்னையே ஆச்ரயித்துப் பூஜிப்பாய்.தபசு தியானம் இவைகளினால் என்னையே சந்தோஷிப்பிப்பாய். இவ்வாறு செய்வையாயின் என் அனுக்கிரகத்தால் சம்சார பந்தத்தினின்றும் விடுபடுவாய். எவனொருவன் என்னிடம் முக்கியமாகச் சித்தம்வைத்தவனாயும் ,பக்தசிரேஷ்டனாயும் இருக்கின்றானோ அவனே எனக்குச் சம்மதன். அவனை இந்தச் சம்சாரத்தினின்றும் கரையேற்றுகிறேனென்று பிரதிக்ஞைசெய்கிறேன். தியானத்தினாலாவது கர்மத்தோடுகூடியபக்திக்யானத்தினாலாவது நான் எப்போதும் அடிக்கடி அடையத்தக்கவள். பக்திக்கியானமில்லாத கர்மத்தினால் நான் அடையத் தக்கவளல்லள். தர்மத்தினால் பக்தியும் பக்தியினால் கியானமு முண்டாகின்றன. தர்மமாவது முன் சொல்லிவந்த பிரமாணங்களாகிய சுருதி ஸ்மிருதிகளால் சொல்லப்பட்டவை எவையோ அவைதான் தருமம்; அன்னியசாஸ்திரங்களால் சொல்லப்பட்டவை தர்மாபாசங்களாம்.

அந்தர்யாகபூஜையில்எவ்வளவுகாலம்அதிகாரமில்லையோ அதுவரையில் முற்கூறிவந்த முறைப்படி பூஜைசெய்யவேண்டியது. அந்தர்யாகபூஜைக்கு அதிகாரம் வரப்பெற்று அது கைகூடுமானால் ஞானத்தில் லயமுண்டாகும். அது வுண்டாகும்போது புறம்பேதோன்றியிருந்த எனது உருவம் தோன்றாதொழியும். அதுவொழியவே அதுபற்றிய புறப்பூஜையும் நிகழ்வதற்கிடனின்றிப் போம். அங்

ஙனம்போகவே ஞானலயத்திற்றோன்றும் உபாதியற்ற எனது சம்வித்சொரூப தெரிசனமுண்டாகும். அஃதுண்டாகுங்கால் அழிந்து போவதான மாயாமயமான உலகத்தோற்றமும் அதுபற்றி நிகழவரும் ஆசையும் அற்று சம்வித்சொரூபா காரமாகவே நிலைபெற்றிருக்கவரும். ஆகலான் ஓபர்வதராஜனே! நாடோறும் விடியற்காலத்தில் சம்சாரதுக்க நாசத்தின்பொருட்டு சர்வசாக்ஷிணியாயும் ஆத்மரூபிணியாயு மிருக்கிற என்னை யோகயுக்தமான புத்தியினாலே பாவித்துவருவாயாக. இனிப் பாஹ்யபூஜையை விஸ்தாரமாகச் சொல்லுகிறேன்; சாவதானமாகக் கேட்பாயாக. (சு - ம் சஎ)

முப்பத் தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

உ

ஹராராத்யாயைநமஃ

நாற்பதாம் அத்தியாயம்.

தேவீபாஹ்பூஜை.

தேவிகூறுகின்றாள்:—புத்திமானானவன்நாடோறும்பிராதக்காலத்தி லெழுந்துசுத்தமான விடத்திலிருந்து சிரயின்மத்தியில் மலர்ந்திருக்குந்தாமரையொன்றிருப்பதாகபாவித்து அதில்நிஜரூபமான குருவைக் கர்ப்பூரகாந்தியைப்போலும் பிரசந்நராயும் பிரகாசிக்கின்ற பூஷணங்களால் அலங்கரிக்கப்பட்டவராயும் சக்தியோடுகூடினவராயும் தியானித்துப் பிறகு குண்டலிசக்தியைப் போற்றிப் பின்னர் அவ்விடத்தைவிட்டு எழுந்திருந்து வெளியேபோகுஞ் சமயத்தில் சச்சிதானந்த ஸ்வரூபிணியாகிய என்னைச் சிகையின் மத்தியில் பிரகாச ரூபமாகவும், திரும்பிவரும்போது அமிர்தம் போன்று இருப்பவளாகவும், மார்க்கமத்தியில் தன்னை அநுசரித்திருக்கின்ற ஆனந்தரூபிணியாகவும் தியானித்து நமஸ்கரிக்கிறேன் என்றுஎண்ணி நமஸ்கரித்துப் புறப்பட்டுப் போகவேண்டும். பின்னர் சௌசாதி ஜபாந்தமான சகலகாரியங்களையு முடித்துக் கொண்டு எனக்குப்பிரீதிகரமாக அக்னிஹோத்ரஞ்செய்து அதன் முடிவில் தன்னாசனத்தில் ஸ்திரமாக வுட்கார்ந்து முறையே பூஜைக்குச் சங்கற்பஞ்செய்துகொண்டு அதன்பின்னர் பூதசுத்தியும் மாத்ருகாநியாசமும் ஹ்ருல்லேகா மாத்ருகாநியாசமும் செய்யவேண்டியது. எவ்வாறெனில் மூலாதாரத்தில் ஹகாரத்தையும் ஹ்ருதயத்

தில் ரகாரத்தையும் புருவநடுவில் ஈகாரத்தையும்சிரசில் ஹ்ரீங்காரத்தையும் நியாசஞ்செய்யவேண்டும். இதுபோலவே ஏனைய மந்திரங்களுக்குரிய நியாசங்க ளெவையோ அந்த நியாசங்களெல்லாஞ் செய்யவேண்டியது. அதன்பின்னர் தர்மஜ்ஞான முதலிய நான்கு மந்திரங்களால் ஓர்பீடத்தைக் கற்பித்துக்கொண்டு தன்மனதில் நினைக்கின்ற இஷ்டகாம்ய சித்தியின்பொருட்டுத் தன்னுள்ளத்தில் மஹாதேவியைத் தியானித்துப் பிராணபாமஞ்செய்து அதன்பின்னர் என்னுடைய ஸ்தானமென்று சொல்லப்பட்ட ஹ்ருதயகமலத்தில் பிரமவிஷ்ணுவாதி பஞ்சகர்த்தாக்களைப் பஞ்சப்ரேதாசனமாக எனது பாதமூலத்திலிருப்பதாகப் பாவித்தல்வேண்டும். அரசனே! இவர்கள் பஞ்சபூதங்களுக்கும் பஞ்சாவஸ்தைகளுக்கும் கர்த்தாக்களாக விருக்கின்றபொழுது இவர்களைப் பிரேதஸ்வரூபமாக என்நினைத்தல்வேண்டுமெனின், இவர்கள் வியக்த சித்ரூபர்களாயிருத்தலால் இவர்களை அவ்வியக்த சித்ரூபிணியாகிய நான் இடமாகக் கொண்டே சிருட்டியாதி பஞ்சகிருத்தியங்களைச் செய்யுங் கருத்தை நோக்கிச் சாக்தேயதந்திரத்தில் இவர்களைப் பிரேதங்களென்றும் எனக்கு ஆசனமென்றும் செல்லப்பட்டிருக்கின்றதென் றறிவாய். இவ்வகையான பஞ்சபிரேதாசனரூடையாக மனோபீஷ்ட சித்தியின்பொருட்டுப் பூஜித்தும் ஜபித்தும் பின்னர் தேவிப் பிரீதி என்று அந்தஜபத்தை அர்ப்பணஞ்செய்து அர்க்கியங்கொடுத்தும் முடிந்தபின்னர் புறப்பூஜைக்குச் சாதனமாக அமைந்துள்ள பூஜாதிரவியங்களையும் பூஜாபாத்திரங்களையும் முதலில் சலத்தைக்கொண்டு மந்திரத்தினல் சுத்தியும்திக்பந்தனமும் செய்து அதன்பின்னர் ஆசாரியனை நமஸ்கரித்துப் புறப்பூஜைசெய்வதற்கு அநுக்ஞை பெற்று வெளியேயுள்ள பீடத்தில் பிம்பமூர்த்தியை யெழுந்தருளச் செய்து அம்மூர்த்தியிடத்தில் ஹ்ருதயத்தில் திவ்யமாயும் மனோகரமாயும் பாவித்துள்ள தியானமூர்த்தியை பிராண ஸ்தாபந மந்திரத்தினல் ஆவாகனாதிகள்செய்து பின்னர் அர்க்கிய பாத்ய ஆசமனஸ்நானாதிகளும் வஸ்திரத்வய பூஷண கந்தபுஷ்பாதிகளும் ஆகிய இவைகளைப் பக்தியுடன் கிரமமாகக்கொடுத்தும் சமர்ப்பித்தும் யந்திர பீடத்திலுள்ள ஆவரண தேவதைகளைப் பூஜிக்கவேண்டியது. இவ்வாறு பிரதிதினமும் செய்தல்விசேஷம். அசக்தனாகவிருந்தால் சுக்ரவாரத்தில் மேற்சொன்ன நியமப்படிச் செய்யவேண்

டும். அங்கதேவதைகளை மூலதேவியினுடைய பிரபாரூபமாகத் தியானிக்கவேண்டும். அந்தத்தேவியினது காந்திசமூகத்தால் இந்தமூன்று லோகமும் வியாபிக்கப்பட்டதாகப் பாவிக்கவேண்டும், பின்னர் ஆவாண தேவதைகளையும் மூலதேவதையையும் நல்லவாசனையுள்ள புஷ்பங்களாலும் சந்தனமுதலானவைகளாலும் நைவேத்யங்களாலும் கண்ணாடி முதலியவற்றாலும் தக்ஷிணசகிதமான தாம்பூலங்களாலும் சகஸ்ரநாமங்களாலும் பூஜித்து என்னை சந்தோஷிப்பிக்கவேண்டியது. அன்றியும் எனது கவசத்தாலும் சூக்தத்தாலும் ருத்ரத்தாலும் அதர்வணசிரசின் மந்திரங்களாலும் ஹ்ருல்லேகவபகிடத மந்திரங்களாலும் மகாவித்யாஸ்வரூபிணியாகிய என்னை அடிக்கடி சந்தோஷிப்பிக்கவேண்டும். அன்றியும் ஜகத்தாத்ரியாகிய என்னிடம் பிரேமையுடையமகிதன் உபசாரங்களெல்லாஞ் செய்துமுடிந்தபின்னர் அபராதக்ஷமை கேட்டுக்கொண்டும் புளகாங்கிதனுயும் கண்களினின்றும் பெருகுகின்ற ஆனந்த பாஷ்பமுடையவனுயும் தழுதழுத்த நாவினையுடையவனுயும் இருந்துகிருத்த கீதவாத்யங்களால்என்னைச் சந்தோஷிப்பிக்கவேண்டும் இவையேயன்றி வேதங்களும் சைவபுராணாதிகளும் என்னைப் பிரதிபாதிக்கின்றமையால் அவைகளையும் பாராயணஞ்செய்து நான் ஆனந்திக்கும்படிச்செய்யவேண்டும் இவை முடிந்தபின் என் தேகத்தோடு எல்லாவற்றையும் உனக்குக்கொடுத்தேனென்று அர்ப்பணமும்நித்திய ஹோமமுஞ்செய்யவேண்டும். இவ்வண்ணம் பூஜைமுடித்து பிராமணர்கள் சுமங்கலிகள் சிறுபிள்ளைகள் பாமரர்கள் அன்னியர்கள் ஆகிய இவர்கள் எல்லோரையும் நானுகப் பாவித்து போஜனஞ் செய்வித்து என்னை ஹ்ருதயத்தில் நமஸ்கரித்துப் பிறகு உத்வாஸநஞ்செய்யவேண்டும் ஓ நல்லவிரதஞ்செய்கின்றவனே! என் பூஜை முதலிய எல்லாவற்றையும் ஹ்ருல்லேகாமந்திரத்திலை செய்துவருவாய். ஏனெனில் அம்மந்திரம் எல்லாமந்திரங்களுக்கும் நாயகமாயுள்ளதாகலானும் அம்மந்திரமாகிய கண்ணாடியில் பிரதி பிம்பம் போல் நான் பிரதிபிம்பித்துக் கொண்டிருக்கிறேனுதலானும் அம்மந்திரத்தைக்கொண்டே எல்லா மந்திரங்களையும் சமர்ப்பிக்கவேண்டும். குருவை ஆபரணமுதலியவைகளால் சந்தோஷப்படுத்தி நான் கிருதகிருத்யனேனென்று எண்ணிக்கொள்ள வேண்டும். இப்படி ஸ்ரீமத் புவனசுந்தரிதேவியாகிய என்னை எவன் பூஜிக்கின்றனே அவனுக்கொருகாலத்தும் கிடைக்காத பொருளுகிடையாது. அந்தத்தில் என் மணித்வீபத்தை எந்தவிதத்தானும் அடைகிறுன்,

இவனைத் தேவர்கள் நித்யம் நமஸ்கரிக்கின்றார்கள். ஓபர்வதராஜனே! தேவியாகிய எனது பூஜையைச் சொன்னேன். யாவரும் பூஜாவிதியைக் கிரமமாய் விசாரித்துத்தத்தம் அதிகாரத்துக்கேற்றபடி பூஜையைச்செய்யவேண்டும். இப்பூஜையினால் நீ கிருதார்த்தனாகின்றாய். என்னுடைய இந்தக் கீதாசாஸ்திரத்தை சிஷ்யனல்லாதவனுக்கும் பக்தியில்லாதவனுக்கும் தூர்த்தனுக்கும் நல்லமனமில்லாதவனுக்கும் உபதேசஞ்செய்தால் தன்மாதாவின் ஸ்தனத்தை வெளிப்படுத்தி யாவருங்காணச் செய்வதுபோலாம். ஆகையினால் மேற்சொல்லிவந்த பதிதர்கட்கு உபதேசிக்க எண்ணமல் மறைத்துவைப்பதற்கே எண்ணவேண்டும். பக்தனுயிருக்கிற சிஷ்யனுக்கும் ஜேஷ்டபுத்திரனுக்கும் நல்ல சுபாவமுள்ளவனுக்கும் ஆசாரமுள்ளவனுக்கும் என்னிடத்தில் பக்தியுள்ளவனுக்குமே உபதேசிக்கவேண்டும். கிரார்த்தகாலத்தில் பிராமணர்கள் சமீபத்தில் இவ்வத்தியாயத்தைப் படித்தால் பிதுர்க்கள் திருப்தர்களாய் உத்தம பதவியை யடைகிறார்கள்

வியாசர் கூறுகின்றார்:-இவ்வாறு தேவிகூறி அங்கேயே மறைந்தனள். சகலதேவர்களும் சந்தோஷித்தனர். இமயமலையிற்சென்ற தேவி கௌரி என்றுபிரசித்தியடைந்துசங்கரருக்குத் தேவியாயினள். அவ்வம்பிகையிடத்தினின்றும் ஸ்கந்தருண்டாயினர். அவரால் தாருகன் கொல்லப்பட்டான். இதுவரையில் பார்வதிதேவியினதவதாரத்தைச் சொன்னேன். இனிலக்ஷ்மிதேவியினது உற்பத்தி எவ்வாறெனின் பூர்வம் பாற்கடலைக்கடைந்தபோது அதில் அநேகரத்னங்களுண்டாயின. அச்சமயத்தில் லக்ஷ்மி கிடைக்கும்பொருட்டுத்தேவர்கள் மிக்க ஆதரவோடு துதித்தார்கள். அதன்பிறகு தேவி தேவர்களுக் கனுக்கிரகஞ் செய்யும் பொருட்டு லக்ஷ்மியையுண்டாக்கினள். அந்தலக்ஷ்மிதேவியைத்தேவர்களெல்லாம் விஷ்ணுமூர்த்திக்குக்கொடுத்தார்கள். ஓ பர்வதராஜனே! இவ்வத்தியாயத்தைப் படித்தால் சகல புண்ணியகர்மங்களையுங் கொடுக்கும். இந்தரகசியமான அத்தியாயத்தை உனக்குச்சொன்னேன். இந்தக் கிதார்த்தரகசியத்தை மறவாமல் சிந்தித்துவரவேண்டியது. உன்னல் பவித்திரமாயும் பாவனமாயுமுள்ள எது கேட்கப்பட்டதோ அது என்னல் சொல்லப்பட்டது. இன்னும் எதனைக்கேட்க இச்சிக்கின்றனை என்றார் என்று சூதமுனிவர் சவுனகாதியருக்குக் கூறியருளினர்.

(சு-ம். சசஅ.)

சஅ-ம் அத்தியாயம் முற்றிற்று

ஆ அத்தியாயம் சஅ-க்குச்சுலோகம். உஉடுஉ.

ஏழாவது ஸ்கந்தம் முற்றிற்று.

ஆ ஸ்கந்தம் எ-க்கு அத்தியாயம் (ககூஉ) சுலோகம் (கஅசஅஉஅ)

திருப்போரூர்ச் சந்நிதிமுறை. மூலமும்-உரையும்

ஸ்ரீ சிதம்பர சுவாமிகளால் திருப்போரூர் முருகப் பெருமான் மீது பாடியுள்ளது. டிம்மி 8-பக்கங் கொண்டது. இரண்டாம் பதிப்பாக அலங்காரம் வரையில் அச்சிட்டுள்ளது. விலை ரூ. 1 8 0

காமாக்ஷிலீலாப் பிரபாவம். அல்லது காமாக்ஷி விலாசம்.

இது மார்க்கண்டேயபுராணத்திலுள்ளது. தமிழில் நூதனமாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. காஞ்சி க்ஷேத்திரத்திலுள்ள ஒவ்வொரு க்ஷேத்திரத்தின் மகிமைகளையும் இடங்களையும் தெரிந்துக் கொள்வதற்கு ஓர் கண்ணாடி போன்றது. வசன ரூபமாக எளியதமிழ் மொழியில் எழுதி வுள்ளது. விலை ரூ. 0 6 0

பார்வதியார் பணிவல் திரட்டு 0 2 0

முருகர்தோத்திரப்பாக்கள் 108-சிவஸ்தல புராணங்களிலிருந்து திரட்டியது. 0 2 0

தணிகை அநுபூதி 0 0 6

வள்ளி காந்தன் தோத்திர மஞ்சரி 0 8 0

காஞ்சி தேவாரப்பதிகங்கள் 0 2 0

ஸ்ரீ தாயுமானவர் பாடலில் "வேதமுடனுகமம்" என்ற திருப்பாசுரத்திற்கு உரை 0 1 0

காஞ்சிப்புரம் திருநெறிக்காரைக்காட்டுப் புராண வசனம் 0 1 0

கந்தப்புராணக்கதைகளும் அவைகளுணர்த்தும் உண்மைநூற் கருத்தும் (விரிவான) வசன ரூபமானது. விலை ரூ. 0 8 0

கிறிஸ்தவமும் தமிழும்

திரு. மயிலை. சினி. வெங்கடசாமி அவர்கள் எழுதிய புதிய நூல்கள்.

இந்நூல் தமிழ்மொழிச் சரித்திரத்தின் ஒரு பகுதி. இதுவரை எழுதப்படாதது முதல் முதலாக இப்பொழுது வெளி வருகிறது. ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்க வேண்டியவை. பலபடங்களுடன் கூடியது.

ஐரோப்பியர் (கிறிஸ்தவர்) நமது நாட்டிற்கு வந்து இப்போது சுமார் நானூறு ஆண்டுகள் ஆகின்றன. கி. பி, 1500 முதல் இந்த இருபதாம் நூற்றாண்டு வரையில் கிறிஸ்தவ உலகம் தமிழ் மொழியில் செய்துள்ள மாறுதல்களையும் அபிவிருத்திகளையும் தொகுத்தும் விரித்தும் கூறுவது இந்நூல். விலை. ரூ 1 0 0

பௌத்தமும் தமிழும்

இதில் எழுதப்பட்டுள்ள பற்பல விஷயங்களில், தமிழ் நாட்டிலிருந்த பௌத்தப் பெரியார்களின் வரலாறுகளும் புத்த தேவர்மீது பண்டைத் தமிழாசிரியர் இயற்றிய சுவை ததும்பும் பாக்களும், மணிமேகலைக் கெய்வத்தின் பண்டையவரலாறுகளும், தமிழ்நாட்டிலிருந்த பௌத்த திருப்பதிகளின் வரலாறுகளும், பௌத்தர் தமிழ் மொழிக்குச்செய்த தொண்டுகளும், ஒவ்வொருவரும் அவசியம் படித்தின்புற வேண்டிய பாகங்கள் அடங்கியுள்ளது. படங்களுடன் ரூ. 1 8 0

தேவி பாகவதம்.

இது பதினெண்மகா புராணங்களில் ஒன்றாய் எல்லாப் புராணங் கட்கும் மகுடமாயுள்ளது. பராசக்தியின் மகிமை நிறைந்திருக்கும் பெருமையுடையது. சமஸ்கிருதத்திலிருக்கும் இப்பெரிய நூலை கல்வி யறிவுடைய மங்கையரும் எளிதில் வாசித்துசக்தியினுடைய அருமை பெருமைகளை யறிந்து பக்தி யுடையராய் சம்பத்துடன் வாழ 18,000 சுலோகங்களையும் தமிழில் வசன ரூபமாக வாசிப்போர்க்கு இன்ப மூண்டாகத் தக்கதாய்ச் செய்யப்பட்டுள்ளது. இதில் சிவகுடும்பிணி யாகிய ஸ்ரீ தேவியினது உபாசனா கிரம விசேடங்களையும் தேவி மந் திரபேதங்களையும் மந்திர சித்தி பிரயோஜனங்களையும் பிரசித்தியைக் கொடுக்க வல்ல காயத்திரி சம்மந்தமான சகல மஹிமா விசேடங்களை ப்பற்றியும் விரிவாக எடுத்து கூறும் நூல்.

இது டிம்மி 8-பக்கம் கொண்ட 200-பாரத்திற்கு மேற்பட்டுள் ளது. பூர்வபாகம், உத்தரபாகம் என இரண்டு புத்தகமாக காலிகோ பயிண்டு செய்துள்ளது. விலை ரூபா. **9—0—0**

பெரிய புராணம் மூலமும் சித்தாந்த போத ரத்நாகரமென்னும் பொழிப்புரை விசேட உரையும்.

1.	திருமலைச்சருக்கம்		2	4	0
2.	தில்லைவாழ்த்தனர் சருக்கம்.		2	0	0
3.	இலைமலிந்த சருக்கம்		2	8	0
4.	மூம்மையால் உலகாண்ட சருக்கம்		1	8	0
5.	திருநின்ற சருக்கம் அப்பர்சுவாமிகள் புராணம் (இல்லாமல்.)		1	4	0
6.	டிே 1. 2. 3. சருக்கங்களும் சேர்ந்தது		6	8	0
7.	,, 4. 5. ,, ,, ,,		2	8	0
8.	,, 1. 2. 3. 4. 5. ,, ,, ,,		8	4	0
9.	பத்தராய்ப் பணிவார் சருக்கம்		0	4	0
10.	காரைக்காலம்மையார் புராணம் மூலமும்-உரையும்		0	4	0
11.	திருஞான சம்பந்தர் புராணம் ,, ,, ஏறக்குறைய 625-பாடல் வரையில்		1	0	0
12.	குலச்சிறைய நாயனார் புராணம் ,, ,,		0	2	0

13. திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார் (திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார், திருக்கடைவூர், உய்யவந்த தேவநாயனார்) மூலமும் சித்தாந்த போத ரத்நாகர உரையும் ராயல் 8-பக்கங்கள் கொண்டது. இவ்விரண்டும் விரிவான உரையுடன் விலை ரூ 2 0 0

காஞ்சிப்புராணம். மூலமும்-உரையும்.

இது பதவுரை, பொழிப்புரை, விசேட வுரையாகவும் அச்சிட் டுள்ளது ராயல் 8-பக்கங்கள் கொண்டது.

நாட்டு நகரப் படலம் மட்டும் விலை ரூ 1 8 0

3-ம் பாகம் விலை ரூ 1 8 0

எனது விலாசம்,— கா. வ. வல்லிநாதன்

3/19, ரண்டால்ஸ் சாலை, வேப்பேரி, சென்னை.

ஓ

ஹரி ப்ரம்ஹேக்கிர ஸேவிதாயை நமஃ.

தேவீ பாகவதம்.

எட்டாம் ஸ்கந்தம்.

முதலாம் அத்தியாயம்.

மனவேதேவிகிருதவரதானம்.

ஸ்ரிதகம்பாலீமாகம் சிதலிதபாசிவதைர்யமஹிமாகம்
கலயேபாடலிமாகம் கஞ்சகஞ்சுகிதபுவகபூமாகம்.

ஜனமேஜயன் வியாசபகவானே வணங்கி, ஐயா! சூரிய சந்திர வம்சிசங்களிற்ரோன்றிய அரசர்களுடைய கன்மைவாய்ந்த சரித்திரங்களைக் கேட்பதற்கின்பமாய்த் தேவரீர் சொல்ல யான் கேட்டிருக்கின்றேனுகலின் இன்னமுங்கேட்க ஆவலுள்ளேன்; ஜகதம்பிகையான தேவி ஒவ்வொரு மன்மந்தரங்களிலும் எந்தெந்த விடங்களில் எந்தெந்த ரூபங்களினுல் எந்தெந்த கருமங்களினுல் பூஜிக்கப்படுகின்ரூளோ அத்தேவியினது விராட்சொரூபவர்ணனை எவ்விதமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றதோ எந்தத் தியானத்தினுல் அவ்வம்பிகையின்து சூட்சும சொரூப தரிசனத்தைப்பெற்று கற்கதிபெறலாமோ அவையனைத்தும் எனக்கருள் வீரானுல் கான் கீர்த்தியடைவேனென்று வினவ முனிவர் கூறுகின்ரூர். அரசனே! தேவியின் உத்தமமான ஆராதனையைச் சொல்கின்றேன்:—இப்பூசை செய்வதினுலும் கேட்பதினுலும் மனிதன் மேன்மையடைகிரூன். நீ இப்போது என்னைக்கேட்டவாறே முன் நாராயணர் தன்னைக்கேட்ட நாரத முனிவருக்குச் சமாதானஞ் சொல்லியிருக்கின்ரூர். அஃதென்னெனின், ஒரு காலத்தில் நாரதமுனிவர் இப்பூலுலக முழுவதுஞ் சுற்றி வந்து நாராயணர் ஆஸ்ரமத்தையடைந்து தனது சரீரஸ்ரமம் நீங்கப்

பெற்று அவரை நமஸ்காரஞ்செய்து ஓ தேவதேவ! புராண புருஷோத்தம! ஜகதாதார! சர்வக்ஞ! சிலாக்ய! சத்குண! என்று போற்றி இந்த உலகத்திற்கு ஆதிதத்துவமாய் விளங்குவது எது? இவ்வுலகனைத்தும் எவ்விடத்திலிருந் துண்டாகின்றது? எவ்விடத்தில் நிலைத்திருக்கின்றது? பிரளயத்தில் எவ்விடத்தில் ஒடுங்குகின்றது? எவ்விடத்திலிருந்து சர்வபலமும் உண்டாகின்றது? எந்த ஞானத்தையறிந்தால் மோகத்திற்குக் காரணமானமாயை நாசமடையும்? எந்த அர்ச்சனையினால் எந்த ஜபத்தினால் எந்தத் தியானத்தினால் இருளில் சூரியனுதித்தாற்போல் இதய புண்டரீகத்தில் ஞானப்பிரகாசமுதிக்கும். ஓ தேவ! என்னுள்ளத்தில் விரிவாய்த்தோன்றிய ஆசங்கைகட்கெல்லாம் இவ்வுலகினருடைய அக்ஞானந்தகாரம் விரைவில் நீங்குமாறும் கன்றாய்த் தெரியுமாறும் சமாதானம் கூறுவீரென்றார். நாராயணர் அவருடைய வார்த்தையை மிகவும் புகழ்ந்து தேவருஷிகளுக்குள் உயர்ந்த நாரதரே! தேவியே ஜகத்திற்கு ஆதிதத்துவமென்றும், அத்தேவியே ஜகத்தை முக்குணங்களால் சிருட்டி திதி நாசங்களைச்செய்து நிர்க்குணையாய் விளங்குகிறாளென்றும், ஜகத்தின் உத்தமமான வுண்மை என்னையும் இருடிகளாலும் தேவகந்தர்வர்களாலும் வேத பண்டிதர்களாலும் சொல்லப்பட்டிருக்கின்றது, இதைக்கேட்ட மனிதன் உலகில் பிரமையடையான், சுகமுறுவான், பூசிக்கப்படும் அத்தேவியின் சொரூபத்தையுங் கூறுகின்றேன், அதனைக் கேட்டபேர்க்குச் சகல பாபமும்போம்; போகமோக்ஷ முண்டாம் என்று கூறுகின்றார்:—

சுவாயம்பு என்னும் முதல் மநு பிரதாபவானையும், எல்லா மன்வந்தரங்கட்கும் அதிபனையும், ஸ்ரீமானையும், சதரூபா என்பவளுக்குப். புருஷனையும், தன் பிதாவாகிய பிரமனுக்குச் சிறந்த பக்தி சிரத்தையுடன் தொண்டு புரிபவனையு மிருந்தான். அதனால் அவன் பிதா சந்தோஷித்துப் புத்திரனை நோக்கி, ஓ புத்திரனே! நீ உத்தமமான தேவியை ஆராதனம் செய்வையாயின் அத்தேவியின் கருணையினால் பிரஜைகளைச் சிருட்டிசெய்யவல்ல ஆற்றல் உனக்குண்டாகுமென்றான். விராட்டாகிய அந்தச் சுவாயம்புமநு மனத்தை யொரு வழிப்படுத்தி ஜகத்காரணியாயும் தேவர்களுக்கெல்லாம் பிரபுவாயும் ஆதிமாயையாயும் சர்வசக்தியாயும் சர்வகாரணங்கட்கும் காரணியாயும் இருக்கின்ற தேவி

யைத் தவத்தினால் திருப்திசெய்யக் கருதி மெய்ப் பக்தியோடு தியானித்து சர்வோபசாரத்துடன் பூசித்துத் துதிக்கின்றான்.

தேவர்கட்கெல்லாந் தெய்வமாயிருக்கும் தெய்வமே! ஜகத்துக்கெல்லாம் காரணபூதையான தேவியே! உனக்கு நமஸ்காரஞ் செய்கிறேன். சங்கு சக்கராதிகளைத் தாங்கியிருக்கும் திருக்கரங்களை யுடையவளே! நாராயணரது இதயத்தை ஆச்ரயித்திருக்கின்றவளே! வேதமூர்த்தியே! லோகமாதாவே! காரணஸ்தான ரூபிணியே! வேதத் தியங்கட்குப் பிரமாணமாயுள்ளவளே! சர்வதேவர்களாலும் தோத்திரஞ் செய்யப்பட்டவளே! சிவமே! மஹேச்வரியே! மஹாநுபாவையே! மஹாமாயையே! மஹோதையே! மஹாதேவப்பிரியா வாஸே! மஹாதேவப்பிரியங்கரே! பசுபதிப்பிரியே! ஜேஷ்டே! மஹாகர்தே! மஹோத்சவே! மஹாப்பிரியே! மஹாபயஹரே! எல்லாத் தேவர்களாலும் பூஜிக்கப்பட்டவளே! உனக்கு நமஸ்காரம். சர்வ மங்களே! சிவே! சர்வப்பிரயோஜனங்களையும் சாதிக்கின்றவளே! காக்கும் தன்மையில் வல்லமையுள்ளவளே! தியம்பிகே! கவரீ! நாராயணீ! உனக்கு நமஸ்காரம். ஓதப் புரோதாசுபமாயிருக்கின்ற இப்பிரபஞ்சத்திற்கு ஏகசைதன்யையாயும் ஆதியந்த ரஹிதையாயும் தேஜோரூபியாயுமிருக்கிற எந்தப் பராசத்தியினது கடாக்ஷத்தினால் சர்வலோகத்தையும் பிரமன் படைக்கிறானே விஷ்ணு காக்கின்றானே உருத்திரமூர்த்தி அழிக்கின்றானே மதுகைடபரது பயத்தினால் பீடிதனான பிரமன் யாரைத்துதித்து துக்கசாகரத்தினின்று நீங்கினனோ அந்தத்தேவிக்கு நமஸ்காரம், கீர்த்தி ஸ்ரீ ருதிகாந்தி இலக்ஷ்மி பார்வதி சதி தாக்ஷாயணி என்கிற இவையெல்லாம் நீ தானே. வேத கர்ப்பத்தி லிருக்கின்றவளும், புத்தியையும், சதா அபயத்தையுங் கொடுக்கின்றவளும் நீ தானே. ஆதலின் உன்னைக்குறித்துத் துதிக்கின்றேன் நமஸ்கரிக்கின்றேன் பூசிக்கின்றேன் யாகஞ் செய்கின்றேன் தியானஞ் செய்கின்றேன் பாவிக்கின்றேன் ஜபிக்கின்றேன் கண்டு களிக்கின்றேன் எனக்குப் பிரசன்னமாவாய். வேதங்கட்கெல்லாம் இருப்பிடமான பிரமனும், இலக்ஷ்மிக்கிருப்பிடமான திருமாலும் திரிலோகங்கட்கும் அதிபனான உருத்திரனும், ஜலஜெந்துக்களுக்கெல்லாம் பிரபுவான வருணனும், கணாதிகட்குத் தலைவனான குபேரனும், பிரேதங்கட்கெல்லாம் இறைவனான இயமனும், இராக்ஷதர்களுக்கெல்லாம் நியாமகனான நிருதியும், அமுதமயமாயிருக்கின்ற சந்திரனும் உனது கருணையினாலேயே தத்தமக்குரிய

அதிகாரங்களைப் பெற்றிருக்கின்றீர். மூவுலகங்களாலும் வணங்கத்தக்க தேவியே! மங்கள சொரூபியே! உன்னையடிக்கடி நமஸ்கரிக்கின்றேன் என்றான்.

பகவதியாயும் துர்க்காதேவியாயும் காராயணியாயு மிருக்கின்ற பராசத்தி பிரத்தியக்ஷமாய் சுவாயம்புமநுவை நோக்கி, ஓ இராஜ சிரேஷ்டனே! நீ செய்த தோத்திரத்தினாலும் பக்தியினாலும் பூஜையினாலும் நான் மிக்க சந்தோஷத்தையடைந்தேன், நீ என்னிடத்தில் யாது பெறவேண்டியிருக்கின்றனையோ அதனைக்கேள் தருகின்றேன் என்றாள். மது ஓ தேவி! கருணையுள்ளவர்களுக்குள் பிரதானமானவளே! நீ என்னுடைய பக்தியினால் சந்துஷ்டையா யிருப்பையேயாயின் உன்னருளினால் பிரஜைகளுடைய சிருட்டி தடையில்லாமல் என்னால் உண்டாக வேண்டும் என்றான். தேவி அங்ஙனமே நீ யுண்டாக்குவாய், அவை மேன்மேல் விருத்தியையும் அடையும் எவனொருவன் என்னிடத்துள்ள பக்தியினால் இத்துதியைத் தோத்திரஞ் செய்கின்றானே அவனுக்கு வித்தையும் சத்தானசித்தியும் கீர்த்தியும் தேஜஸும் தனதானிய முதலிய சம்பத்தும் எவ்விடத்திலும் தடைபடாத சக்தியும் ஜயமும் சத்துருநாசமும் சுகமும் உண்டாகும் என்று அனுக்கிரகஞ்செய்து அவன் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே அந்தர்த்தானமாயினாள்.

பின்னர் சுவாயம்புமநு பராக்கிரமத்திற் சிறந்தவனைப் பிரமனை நோக்கி, என்தந்தையே! எனக்கு ரகசியமான ஓரிடத்தை நீர் நியமித்துத் தந்தால் அதில் நானிருந்து பிரஜைகளைச் சம்பூரணமாகச் சிருட்டிப்பேன், யாகங்களால் தேவர்களைப் பூஜிப்பேன், தாமதஞ்செய்யாமல் இடத்தை யுண்டாகுமென்று கேட்க, பிரமன் சிறிது பொழுது நிதானித்தவனைய் இவன் விரும்பிய காரியம் எப்படி முடியும்? பூமியோ இப்பொழுது நீரால்க் கரைந்து கிடக்கின்றது, சிருட்டிசெய்யும் நாமே அநேகாலமாயதனைச் செய்யாமலிருக்கின்றோம் என்று சிந்தித்து, பின்னர் எந்தப் பகவானது ஆணையினால் நாமிருக்கின்றோமோ ஆதி புருஷனை பகவான் நமது கோரிக்கையை நிறைவேற்றுவர் என்று அவரைத் தியானித்தனன்.

முதலாவது அத்யாயம் முற்றிற்று.

ஹயாரூட சேவிதாங்ரிகமம்.

இரண்டாம் அத்யாயம்.

வராஹக்ருததரண்யுத்தரணம்.

ஸ்ரீ காராயணர் கூறுகின்றார்:—ஓ காரதமுனியே! பிரம தேவன் மரு மரீசி முதலியோர் தன்னைச் சூழ்ந்திருப்பப் பகவானைத் தியானஞ்செய்த பொழுது ஓரங்குஷ்டப் பிரமாணமுள்ள வராஹமொன்று அப்பிரமனது காசிநுனியினின்றும் வெளிப்பட்டுப் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அனைவரும் அதிசயிக்க ஓர் யானையளவாய் வளர்ந்தோங்கியது. அதனைக்கண்ட பிரமன் தன்னைச் சூழ்ந்திருக்கு மவர்களைப் பார்த்துக் கூறுகிறார்:—ஓ பெரியோர்களே! இந்த வராகத்தைப் பார்த்தீர்களா? எனது காசியிலிருந்து தோன்றியபொழுது ஓரங்குலப் பிரமாணமாயிருந்தது. இப்பொழுது ஒரு பெரிய பர்வதமாக வளர்ந்திருக்கின்றது; இது என்ன ஆச்சரியம், இது வராகமன்று, இது எனது யஜ்ஞரூபியான பகவானேயாகும், அவர் இப்போது நான் எண்ணியிருக்கும் வருத்தத்தை யொழிக்கும் பொருட்டு இவ்வுருவத்தோடு வந்தனரென்றனர். இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கும் போது வராஹமூர்த்தியாய் வந்த பகவான் யாவருக்கும் ஆனந்தம் உண்டாகும் வண்ணம் ஓர் கர்ஜனைசெய்தனர். அப்பேரொலியைக்கேட்ட பிரமன் முதலாயினர் இவர் பகவானென்பதற்குச் சந்தேகமென்னவென்று கொண்டாடினர். ஜனலோகம் தபோலோகம் சத்தியலோக முதலிய உலகங்களில் உள்ளவரெல்லாம் வேதரூபமான அகேஸ்தோத்திரங்களினாலும் நான்கு வேதங்களினாலும் போற்றினர்கள் அவர்கள் செய்யுந் தோத்திரங்களைக் கேட்டிருந்த வராஹமூர்த்தி கருணைகிறைந்த கடாக்ஷத்தால் அவர்களுக்கெல்லாம் அனுக்கிரகஞ்செய்து பெருவெள்ளமாய்க் காணப்படும் ஜலத்தில் மூழ்கி நுழைந்தனர். நுழையும்போது அவரது பிடரிமயிர் முதலானவற்றால் முத்திராஜன் மிகவும் பீடிக்கப்பட்டு, ஓ பகவானே! சரணமடைந்தவர்களின் பீடையை யொழிக்கின்றவரே! என்னைக் காக்கக்கடவீராகவென்று வேண்ட. கருணையுடையவராய் அவனைவருத்தாது ஜலசரங்களைப் பேதித்துக்கொண்டு உள்ளே நுழைந்து பூமி எவ்விடத்திலிருக்கின்ற

தென்று அங்கு மிங்குமா யோடியோடி மோந்து மோந்து கிதானித்துப்பார்க்க முடிவில் பூமி காணப்பட்டது. சகல ஜந்துகளுக்கும் ஆதாரமான பூமி காணப்படவே சகல தேவர்களுக்கும் ஆதாரமான பகவான் அத்தப் பூமியைத் தனது கோரப்பல்லினல் தாக்கித் தூக்கிக்கொண்டு மேலே வந்தனர். யானையானது தாமரைக் கிழங்கைத் தோண்டித் தனது தந்தங்களில் இடுக்கிக் கொண்டு வருவதைப்போல் மிக்க பிரகாசத்தோடு வருகிற அந்த வராகமூர்த்தியைப் பிரமன் பார்த்து கூறுகின்றன்:—ஓ புண்டரீகாக்ஷனே! உமக்கு ஜயமுண்டாகுக. பக்தர்களுடைய பீடையைப் போக்குகின்றவனே! கர்வத்தோடு கூடிய தேவர்களுக்காதாரமானவனே! சர்வ காமபலத்தைக்கொடுக்கின்றவனே! தேவரீர் எடுத்துவரும் இத்தப் பூமியை தோக்குங்கால் யானையொன்று தனது கொம்புகளில் தாங்கிக்கொண்டுவரும் தாமரைக் கிழங்கைப்போற் காணப்படுகின்றது. அன்றியும் தேவரீர் கரிய திருமேனியோடும் பூமிதேவியை மேலே தூக்கிக்கொண்டு வருவது, யானையானது தாமரைமலரைத் தனது துதிக்கையினல் மேலே தூக்கிக்கொண்டு வரும் காட்சிபோன்று மிருக்கின்றது. சிருட்டிக்கும் சங்காரத்துக்கும் காரணமாயிருக்கும் நிதியைச் செய்கின்ற கடவுளே உம்மை அடிக்கடி நமஸ்காரஞ் செய்கின்றேன். கிருத யுகத்தில் தானவர்களை நாசஞ்செய்த உம்மை முன்னும் பின்னும் நமஸ்கரிக்கின்றேன் சகல தேவர்களுக்கும் ஆதாரபூதராயும் மஹா காந்தியுடையவராயும் விளங்குகின்றவரே! உம்மை நமஸ்காரஞ்செய்கின்றேன். தேவரீரால் பிரஜைகளைச் சிருட்டிக்குங் காரியத்தில் நியமிக்கபட்ட நான் அதிக வல்லபத்தையுடையவனுய் உமது ஆணைகடவாமல் அந்தத் தொழிலைச் செய்கின்றவனையும் செய்யாதவனையும் இருக்கின்றேன். ஓ ஹரியே! பூர்வத்தில் தேவரீருடைய சகாயத்தினலன்றே தேவர்களெல்லாம் தமது காலத்துக்கும் பலத்துக்கு மேற்றவாறு அசிரத்தத்தைப் பாகஞ்செய்து பானஞ்செய்தனர் பின்னரன்றே, இந்திரன் திரிலோக சாம்பிராஜ்யத்தையும் சகல சம்பத்தையும் அனுபவிக்கத் தக்கவனையும் தேவ சமூகங்களால் பூஜிக்கப்படத் தக்கவனையும் ஆயினன். அக்னித்தேவனும் அக்னித்தன்மையடைந்து ஜாடராக்னி முதலான பேதங்களால் தேவர் அசுரர் மானுடர்களுக்குத் திருப்தி செய்விக்கின்றன் தர்மராஜனும் பிதுர்த்தேவதைகட்கு அதிபதியாய் சர்வ கர்மங்கட்குஞ் சாக்ஷியாய் அந்தந்த சுபாசுபங்கட்குரிய பலனை நியமித்து அவற்றை அனுபவிக்கச்செய்யும் அதிபதியாகின்றன். கிருஹி இராக்கதர்கட்கெல்லாம்

பிரபுவாய், யக்ஷர்களுக்கு விக்கின காரகனுய், சர்வப் பிராணிகளு டைய கர்மங்கட்குஞ் சாக்ஷியாய், பிரஜாபதியாயிருக்கின்றுன் வருணன் நீர்வாழ் உயிர்கட்குப் பிரபுவாய், நீருக்கதிபதியாய், லோகபாலகனு யிருக்கின்றுன். வாயு கந்தமுடையவனுய், சர்வ பூதங்களுக்கும் பிராணகாரணனு யிருக்கிறுன். குபேரன் கின்ன ரர்கட்கும் யக்ஷர்கட்கும் ஜீவனுச்ரயனுயும் அதிபனுயும் சர்வ லோகங்களாலும் கொண்டாடத்தக்கவனுயு மிருக்கிறுன். ஈசா னன் சகல உருத்திரர்கட்கும் ஈசனுயும் சர்வ தேவாதிபாலகனு யும் சங்கார கர்த்தாவாயும் சருவலோக வந்திதனுயு மிருக்கிறுன். என்றிவ்வாறு பிரமன் ஆதிபுருஷனுன பகவானைத்துதிக்க அவர் கடாக்ஷித்து மகாசுரனுன இரணியாக்கதனைக் கதாயுதத்தினுற் சங்கரித்துப் பூமியைச் ஜலத்தினின்று மெடுத்துத் தாபித்துத் தன்னிருக்கை யடைந்தார். சிரேஷ்டமாகிய இச்சரித்திரத்தைக் கேட்பவர்களும் படிப்பவர்களும் பாபத்தினின்றும் விடுபட்டு விஷ்ணுபத மடைவார்கள். (6.ம் 38.)

இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

ஓ

ஹரியமேதஸமர்ச்சிதாயை நமஃ.

மூன்றும் அத்தியாயம்.

ஸ்வாயம்புவ மநுவம்ச வர்ணனம்.

காராயணர் கூறுகின்றுர்:—ஓ நாரதமுனியே! விஷ்ணுபக வான் பூமி கிலிபெற்றிருக்குமிடத்தில் முன்போல் கிலிபெறச் செய்து வைகுண்டஞ் சென்றனர். பின்னர் பிரமன் தனது புதல் வனுகிய சுவாயம்பு மநுவைப்பார்த்துக் கூறுகின்றுன்:—மஹா பலசாலியான புத்திரனே! பிரகாசமுள்ளவர்களுக்குள் மிக்க பிரகாசமுள்ளவனே வாகமூர்த்தியினுல் ஸ்தாபிக்கப்பட்ட இக் தப்பூமியில் நீ இருந்து யதோசிதமாகப் பிரஜைகளைச் சிருஷ்டி த்து வருவாய், யஜ்ஞ புருஷனுக்கு உபயோகப்படத்தக்க யஜ்ஞ பதார்த்தங்களால் தேசகாலங்களுக் கேற்றபடி யஜ்ஞேசனைப்

பூஜித்துவருவாய் வருணச்சமஸ்களுக்குச் சாஸ்திரோக்தமாய் விதித்திருக்கும் தருமாசார நிபந்தனைகள் தவறுதிருக்கக் காத்துவருவாய். இந்தக் கிரமத்திற்றான் பிரஜைகள் விருத்தியை யடையும் சற்குணம் கீர்த்திகாந்தி கல்வடிவம் வித்தை விகயம் சதாசாரம் முதலியவற்றோடு கூடிய புத்திரர்களையும் புத்திரிகளையும் பெற்று, புத்திரிகளைக் குணவான்களுக்குக் கொடுத்து, சம்சார பந்தமற்ற மனமுடையவனாய் பிரதான புருஷனை பரமப் பக்திசாதனத்தினாலும் யோகசாதனத்தினாலும் சதாகாலமும் ஆராதித்து வருவாய். வருவையாயின், இஷ்டகாமிய பதங்களையும் யோகிகளால் அடையத்தக்க ஞானபதத்தையும் அடைவாயென்று ஆசிபுகன்று, அந்தமநுவைப் பிரஜைகளைச் சிருட்டி செய்யுந் தொழிலில் மனம் பொருந்தச்செய்து தன்னிடம் போயினர்.

பிறகு தக்ஷகூறிய ஆணைப்படி கிரமேற்கொண்டு பிருதிவீ பதியாகிய மது அரசாண்டு வருங்காலத்தில் பிரியவிரதன் உத்தானபாதன் என்னும் இரண்டு புத்திரர்களையும், ஆகூதி, தேவகூதி, பிரசூதி என்னும் மூன்று புத்திரிகளையும் பெற்றனன் அவர்களுள் ஆகூதியை ருசி என்பவனுக்கும், தேவகூதியை கர்த்தம தமனென்பவனுக்கும், பிரசூதியை தக்ஷனென்பவனுக்கும் கொடுத்தான். இந்த வுலகத்திலிருப்பவரெல்லாம் இம்மூவருடைய சம்பந்த முடையவர்களாகவே இருப்பர் ருசி ஆகூதி என்பவருக்கு எஜ்ஞனென்னும் ஆதி புருஷனும், கர்த்தமன் தேவகூதி என்பவருக்கு சாங்கியாசாரியர் என்று சர்வலோகத்திலும் பிரசித்திபெற்ற கபிலரும், தக்ஷன் பிரசூதி என்பவருக்கு எண்ணிறைந்தவர்களும் பிறந்தனர் முதற் புத்திரிக்குப் பிறந்த எஜ்ஞன் சுவாயம்பு மன்வந்தரத்தில் அரக்கர்களிடத்திலிருந்து தேவகணங்களோடு கூடி மதுவைப் பாதுகாத்தனன் இரண்டாவது புத்திரிக்குப் பிறந்த கபிலர் மகாயோகியாய் தனது ஆஸ்ரமத்திலேயே வசித்துத் தன் தாய்க்கு அவித்தியா நிவர்த்தகமாயுள்ள பரம ஞானத்தையும் அத்யாத்ம ஜ்ஞான நிச்சயமாகிய தியானயோகத்தையும் சர்வ அஜ்ஞான நிவர்த்தகமாயுள்ள காபில சாஸ்திரத்தையும் உபதேசித்துப் பின்னர் புலகர் ஆச்ரமம்போய்ச்சேர்ந்து இப்பொழுதும் வாழ்ந்திருக்கின்றனர். இந்த மகாத்மாவை நினைக்கப்பெற்றால் சாங்கியயோகம் சித்தித்துவிடும் நமஸ்காரஞ் செய்யப்பெற்றால்

மேலான சகலவிரதமும் சித்திக்கும் மூன்றுவது புத்திரிக்குப் பிறந்தவர்களெல்லாம் தேவர்களையும் மானுடர் முதலானவர்களையுள் சிருஷ்டித்தனர். கேட்டமாத்திரத்தில் சகலபாபங்களையும் நாசஞ்செய்யவல்ல மனுவின் புத்திரிகளுடைய வம்சவர்ணனைகளைச் சொன்னேன். இனி அம்மநுவின் புத்திரர்களுடைய சுபகரமாகிய வம்சத்தைச் சொல்லுகிறேன். இதைக்கேட்டால் மேலானபதங் கிடைக்கும். அன்றியும் இவர்களுடைய வம்சசரித்திரங்களால் த்வீபங்கள் வருஷங்கள் சமுத்திரமுதலானவைகளெல்லாம் பிரசித்தமாய் நன்றாய்த் தெரியவரும். (சு-ம்-28.)

மூன்றுவது அத்தியாயம் முற்றிற்று.

ஹர்யக்ஷ வாகாயைநமஃ

நான்காம் அத்தியாயம்.

பிரியவ்ரத வம்ஸவர்ணனை.

ஸ்ரீ நாராயணர் கூறுகின்றார்:—சுவாயம்புமனுவின் ஜேஷ்டபுத்திரனான பிரியவ்ரத் னென்பவன் தனது தந்தைக்குரிய பணிவிடைகளைச் சிரத்தையுடன் நாடோறும் செய்பவனும், சத்திய தர்மங்களைப் பாராட்டுகின்றவனுமிருந்தனன். அவன் பிரஜாபதி விச்வகர்மா இவர்களின் புத்திரிகளான பர்ஹிஷ்மதியும்சுரூபையும் அழகு முதலியவற்றினுஞ் சீலகர்மாதி தருமங்களிலு மேம்பட்டிருக்கும் விசேடத்தைக்கண்டு கலியாணஞ் செய்துகொண்டனன். பின்னர் அவனுக்கு ஊர்ஜஸ்வதி எனும்பெண்ணும், ஆக்னீத்ரன், இத்மஜிஹ்வன், யஜ்ஞபாஹு, மஹாவீரன், ருக்மசுக்ரன், க்ருதபிருஷ்டன், சவனன், மேதாதிதி, வீதிஹோத்ரன், கவி என்னும் அக்நியின் பெயருள்ள புத்திரர்கள் பதின்மரு முண்டாயினர். இவருள் கவி சவனன் மஹாவீரன் என்னு மூவரும் விரக்தியடைந்து ஆத்மவித்தையில் மேன்மையினையும், ஊர்த்வரேதஸையும், பரமாம்ஸாஸ்ரமத்தையும், எவற்றையும் நிஸ்ப்ருஹமாய்க் காணும் அறிவையு முடையவர்களாய், நித்யதிருப்தர்களாயிருந்தனர். மற்றொரு மனு

விடத்தில் உத்தமன் தாமசன் ரைவதன் என்பவர்பிறந்தனர். மஹா தேஜஸ்விகளாயிருந்த அம்மூவருமே மன்வந்தரங்கட்கு அதிபர்களா யிருந்தனர். இவர்களுக்குத் தாதையாகிய பிரியவிரதன் பதினெரு அற்புதவருடம் இந்திரிய பலீஷ்டனாய் அரசாண்டுவந்தனன். சுவா யம்புவின் சம்பந்தமான இவன், சூரியன்பூமியில்உதயமாகியும் பகலு மிரவுமாக விருக்கக்கண்டு, நம்முடைய அரசாக்ஷியில் ஏனிப்படி யிருக்கவேண்டும் முற்றுமன்றே பிரகாசமாயிருத்தல் வேண்டும் என்றுலோசித்து, நமதுயோகபலத்தினால்ஒருபாகத்திலுள்ள இருளை ஒட்டுவோமென்று நிச்சயித்து, சூரியனைப்போலும் பிரகாசிக்கின்ற ஒரு தேரில் ஆரோகணித்தவனாய் பூமியை ஏழுமுறைசுற்றிவந்தனன். அப்படிச் சுற்றிவந்த தேர்ச்சக்கரமழுத்திய அடியே இப்பொழுது ஏழுகடலென்று வழங்கி வருகின்றது. ஜம்புத்வீபம் பிலக்ஷத்வீபம் சால்மலித்வீபம் குசத்வீபம் கிரவுஞ்சதீபம் சாகத்வீபம் புஷ்கர த்வீபம் என்னும் ஏழு த்வீபங்களும் அந்த ஏழுகடலின் மத்தியி லுள்ளன. இந்தக்கடல்கள் ஒன்றையொன்று சூழ்ந்திருப்பனவாக லின் ஒன்றுக்கொன்று இரண்டிரண்டுபங்குமேற்கொண்ட வளவினை யுடையன. இவை முறையே லவணமாயும், கரும்புரசமாயும், மதுவா யும், நெய்யாயும், பாலாயும், தயிராயும், சுத்தஜலமாயுமிருக்கின்றன. ஆக்னீதரன், இத்மஜிஹ்வன் யஜ்ஞபாகு ருக்மசுக்ரன் கிருதபுருஷ் டன் மேதாதிதி வீதிஹோத்திரன் என்னும் ஏழுவரையும் அவ் வேழு த்வீபங்களையும் முறையே ஆளும்படி நியமித்தனன். பின்னர் ஊர்ஜவஸ்வதி என்னும் பெண்ணை சுக்கிராசாரிக்குக்கொடுத்தனன். அவளுக்குத் தெய்வயானை என்னும் ஓர் பெண் பிறந்தாள். இவ் வகையாகப் பிரியவிரதன் யாவர்க்கும்செய்யவேண்டுவனவெல்லாஞ் செய்து முடித்து ஞானசிந்தை யுடையவனாய் யோகமார்க்கத்தை அனுஷ்டித்திருந்தனன். (சு-ம் - 28.)

நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

ஓம்

ஹம்ஸ வாகாயை நமஃ

ஐந்தாம் அத்தியாயம்.

பூகோள விஸ்தாராதி வர்ணனம்.

நாராயணர் கூறுகின்றார்:—ஓ தேவருஷியே! த்வீபவருஷ முதலாக அனேக பேதங்களாக ஈச்வரனுற் கற்பிக்கப்பட்டசகல பூமண்டல விஸ்தாரத்தையும் சுருக்கமாய்ச் சொல்லுகின்றேன் கேட்பாயாக:- இதுகாறும் நான் சொல்லிவந்தன வெல்லாம் சுருக்கமேயன்றிப் பெருக்கமன்று. ஆகலான், இப்பொழுது விரிவாக ஜம்புத்வீபத்தை முன்னர்ச் சொல்லுகிறேன். விசாலமும் விருத்தாகாரமுமுள்ள இத்தத்வீபம் லக்ஷம்யோசனை பரப்பினையுடையது. இதில் ஒவ்வொன்றும், ஒன்பதினாயிரம் யோஜனை அளவுடையதாக ஒன்பது வருஷங்களுள்ளன. அவை மிகவும் நீண்டும் உயர்ந்துமுள்ள எட்டுப் பர்வதங்களாற் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் விற்போலும் வளைவுள்ள இரண்டு வருஷங்கள் தெற்கிலும் வடக்கிலும் இருக்கின்றன. நீளமாய் நான்குவருஷங்களுமுள. இளாவிருதமென்னும் வருஷம் சதுரமாய்ப் பூமியின் மத்தியிலிருக்கிறது.

இதில் லக்ஷம்யோசனை யுயரமுள்ள மேருமலையாகிய சுவர்ணமலை இருக்கின்றது. மலைகட்கெல்லாம் அரசாகிய அப்பொன்மலை இந்தப் பூகோளமாகிய தாமரைமலருக்கு ஒரு கர்ணிகையை(பொகுட்டைப்) போலிருக்கின்றது. இது பூமியின்மேல் முப்பத்திரண்டாயிரம் யோசனை அகலமும், பூமியின்கீழ் பதினாயிரம் யோசனை ஆழமும் உடைத்தானது. இத்தவருஷத்திற்கு வடபாகத்தில் நீலம் ஸ்வேதம் சிருங்கம் என்னும் மூன்றுமலைகளும், ரம்மியம்இரண்மயம் குரு என்னும் மூன்று வருஷத்திற்கும் எல்லையைக் காட்டிக் கொண்டிருக்கின்றன. இம்மலைகளுக் கெல்லை அவைகளின் இடுண்டுபக்கங்களிலுமுள்ள உப்புசமுத்திரமேயாகும். தனித்தனி இரண்டாயிரம் யோசனை கனமுள்ள இந்தப் பர்வதங்களில் பத்து அம்சத்தின்மேனின்று கிழக்கு நோக்கிப்போகும் நதிகளும், மேற்கு நோக்கிபோகும் நதங்களும், வடக்கு நோக்கிப்போகும் உத்தரவாகினிகளும்,

அளவில. இனி இளாவிருத வருஷத்திற்குத் தென்பாகத்தில் மிக விசாலமும் அழகும் பதினாயிரம்யோசனை யுயரமு முள்ள நிடதம் ஏமகூடம் இமாலயம் என்னு மூன்றுமலைகளே ஹரிவருஷம் கிம் புருடம் பாரதம் என்னு மூன்றுவருடங்கட்கும் எல்லையைக் காட்டு கின்றனவா யுள்ளன. இனி இளாவிருத வருஷத்திற்கு மேற்பாகத் தில் மாலியவானென்னும் மலையுளது கீழ்ப்பாகத்தில் கந்தமாதனம் என்னும் மலையுளது. கேதுமாலா வருஷத்துக்கும் பத்திராச்வ வரு ஷத்துக்கும் நீலம் நிஷதம் என்னும் இரண்டாயிரம் யோசனை கண முள்ள இரண்டு பெரியமலைகள் எல்லையைக் காட்டுகின்றன.

மந்தரம் மேரு சுபார்சுகம் குமுத மென்னும் மலைகள் முன் சொன்ன பொன்மலைக்குப் பாதங்கள்போ லிருப்பன. அம்மலைகள் பதினாயிரங்காதம் உயரமும் பதினாலாயிரங்காதம் அகலமுமுள்ளன. அம்மலைகளில் ஆயிரத்தொருநூறு யோசனையுயரமும், நூறுயோ சனை அகலமுமுள்ள மா கடம்பு நாவல் கல்லால் என்னு நான்கு விருக்ஷங்களும் நான்குபக்கங்களில் காட்டிய கொடிமரங்கள்போல் உயர்ந்தோங்கியிருக்கும். பாலாயும் தேனுயும் கரும்புரசமாயும் நல்ல ஜலமாயுள்ள நான்குமடுக்கள் அம்மலைகளின்மீதுள்ளன. தேவர்க ளெல்லாம் இவைகளின் பரிசத்தினாலேயே யோகைச்வர்யத்தை யடைகின்றனர். தேவமங்கையர்கட்கு இன்பசுகத்தைத் தரவல்ல, நந்தனம் சைத்ராதம் வைப்ராஜம் சர்வபத்ரகம் என்னும் நான்கு தேவவுத்தியானங்களுள அவைகளில் தேவகணங்கள் தங்கள்ஸ்திரீ களுடன் கூடியிருந்து அவர்களால் செய்யப்படும் கானரசங்களைக் கேட்டு இன்புற்று மகிமையும் பெருமிதமும் சுகமும் சுதந்தரமும் உல்லாசமும் கீர்டையும் உடையவர்களாயிருப்பர். மந்தர பர்வத சிகரத்தில் ஆயிரத்தொருநூறு யோசனை யுயரமுள்ள மாவின் தனி யிலிருந்து மிருதுவாயும் இனிமையாயும், மலையின் சிகரம்போல் பெருத்ததாயும் அமுர்தசம்பந்த முடையதாயுமுள்ள மாங்கனி கள் வீழாநிற்கும். வீழ்வதனால் பிளவுபட்டு ஒழுகுகின்ற செந்நிற முடைய ரசங்கள் பெருக்கெடுத்தோடி அருணோதி யென்று ஓர் பெயர்பெற்றுச் செல்லாநிற்கும். அந்நதியை ஆதிமாயை அதிலே அனந்தை புஷ்டி ஈச்வரமாலினி துஷ்டநாசகரி காத்தியாயனி என் னும் தேவர்களும்போற்றி நானவிதமான உபசாரங்களால் பூஜித்து அந்நதியின் கடாக்ஷத்தால் போகமோக்ஷாதி சர்வகாமங்களையும்

பெறுகின்றனர். இத்தகையான சிறப்பின் விசேடத்தால் சாம்பூநத மென்னும் பொன்னும் அதில் விளைகின்றது. (சு-ம்-30½)

ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ

ஹத தாகவாயைகம :

ஆறும் அத்தியாயம்.

இதர த்ருமாதி வர்ணனம்



ஸ்ரீ நாராயணர் கூறுகின்றார்:—ஓ நாரதமுனியே! மந்தரமலையினின்றும்வீழாநின்றஅருணோதியானது இளாவிருதவருஷத்தில் கீழ்த்திசையைநோக்கிச் செல்லுகின்றது. இந்நதியிற் படிந்துவரும் காற்றுனது நறுமணமேற்றுப்பத்துயோசனைதூரம் பூலோகத்தில்வாசனை வீசாநிற்கும். இதனைப் பார்வதி தேவியாரது தோழிகளும் யக்ஷ கந்தர்வர்களுடைமீ பத்தினிகளும் ஆக்கிரமித்துஇன்புறுவார்கள். இதுபோலவே மேருமலையில் நாவல் விருக்ஷத்தினின்றும் வித்தில்லாமலும் ஒருயானையளவு பருத்துமிருக்கின்ற நாவற்கனிகள் வீழ்ந்து உடைபட்டு இளாவித வருஷத்திற்குத் தென்பாகத்தில் ஜம்புநதி என்று பெயர்பெற் றோடாநிற்கும். அங்கு வசிக்கின்ற தேவர்காகர் இருடிகள் அரக்கர் முதலியோர் அந்நதியை ஜம்புவர்த்தினி தேவி என்று போற்றுவர். அந்த ஜம்புநதியாகிய தேவி சர்வபூததயாகாரியாயும், மேன்மை பாராட்டத்தக்கவளாயும், பாபாத்மாக்களாயுள்ளார் தன்னை ஸ்மரித்த மாத்திரத்தில் அவரது பாபரோகங்களைப் போக்கும் வைத்நாசனியாயும் அவரவர்களால்போற்றத்தகும் மானனீயாயும் இருப்பவள். கோலிலாகூலி காமகளா கருணகாமபூஜிதா கடோரவிக்ரஹா தன்யா காமிமான்யா கஸ்தனீ என்கிற நாமங்களால் இஷ்டகாமிய சித்தியின்பொருட்டு மானுடர்களால் ஜபிக்கப் படுபவளாயுமிருக்கின்றாள். இவ்வாறு தெய்வரூபமாயிருக்கின்ற அந்நதியின் இரண்டு பக்கங்களிலுமுள்ள மண்ணனது ஜம்புநதியின்

சாரத்தில் ஊறப்பெற்று அங்கு வீசும் காற்றாலும், சூரிய சம்பந்தத்தால் அங்குண்டாகும் அக்கினியாலும் பொன்னிற்சிறந்த சாம்பூநதமென்னும் பொன்னாய், வித்தியாதரஸ்திரீகளும் தேவஸ்திரீகளும் அணியத்தக்க மகுடம் கேயூர முதலிய பல ஆபரணங்களுக் காகின்றது. சுபார்சுவகிரியின் சிகரத்திலுள்ள மஹத்தாகிய கடப்ப விருக்ஷத்தினின்றும் பெருகாநின்ற மது ரசமானது ஐந்துதாரையாய்ப் பிரிந்து இளாவிருதவருஷத்திற்கு மேற்பாகத்தில் பெரியநதியாய்ப் பெருக்கெடுத்தோடநிற்கும். இந்தரசத்தைத் தேவர்கள் உண்பவராகலான் அவர்கள் முகத்திற்படிந்து வீசா நின்ற காற்றானது நான்குபக்கத்திலும் நூறுயோசனை தூரம் நறுமணங்கமழாநிற்கும். இம்மது ரச மஹாநதியானது தாரேச்வரீ மஹாதேவீ பக்தகார்யகாரணீ தேவபூஜ்யை மஹோற்ஸாஹை காலரூபை மஹாநநை கர்மபலதை காந்தார க்ரஹணீச்வரீ கராளதேஹை காலாங்கீ காமகோடிப்பிரவர்த்தினி என்று சகல தேவர்களாலும் தோத்திரஞ்செய்யப்பட்டிருக்கின்றது. இதுபோலவே குமுதபர்வத சிகரத்திலுள்ள சதபலமென்னும் ஆலமரத்தின் கிளைகளினின்று பெருகாநின்ற பால் தயிர் தேன் நெய் கருப்பஞ்சாறு முதலியவை அக்குமுதகிரியின் கண்ணுள்ள கோமுகங்களினின்று பெருகி இளாவிருத வருஷத்திற்கு வடதிசையில் நதிகளாயோடும். இவையன்றி அன்னம் வஸ்திரம் சயனம் ஆபரணம் முதலியவைகளும் விளையாநிற்கும். அந்நதியானது மீனாக்ஷி தத்தலதேவி தேவாசுரநிஷேவிதை நீலாம்பரை ரவுத்ரமுகீ நீலாலகயுதை தேவசமூகங்களுக்குப் பலத்தையும் வரத்தையும் கொடுக்கின்றவள் அதிமான்யை அதிபூஜ்யை மத்த மாதங்ககாமி நீ மதனோன்மாதிநீ மானாப்பிரியை மாநப்ரிய கரைமாரவேக தரைமாரபூஜிதை மாரமாதிநீ மயூரவரசோபாட்யை சிகிவாகந கர்ப்பபூ என்கிற நாமங்களால் அழைக்கப்பட்டுளது. இந்தநாமங்களைத் தோத்திரம் ஜபம் தியானம் செய்கின்றவர்கட்கு யாவராலும் மதிக்கத்தகும் மேன்மையுண்டாகும். அந்நதியின்கணுண்டாகும் பால் தயிர் முதலியவற்றைப் பானஞ்செய்கின்றவர்கட்கு வியர்வை துர்வாசனை வார்த்திகம் ரோகம் சித்தப்ரமம் குளிர்ச்சி உஷ்ணம் காற்று சரீர காந்தி மாறுபடுதல் இவைபோன்ற துன்பங்கள் சரீரம் இருக்கு மளவும் உண்டாதலன்றிச் சுகமொன்றே நிலைபெற்றுவாழும்.

இனி, பொன்மலையின் மேலிடத்திலுள்ள பர்வதங்களைச் சொல்லுகிறேன்; அந்த மலையின் நான்கு பக்கங்களிலும் தாமரை மலரின் நடுவிலுள்ள பொகுட்டைச் சூழ்ந்திருக்கும் மகரந்தங்களைப் போல் குரங்கம் குரகம் குசும்பம் விகங்கதம் திரிகூடம் சிசிரம் பதங்கம் ருசகம் நீலம் நிஷதம் சிதிவாசம் கபிலம் சங்கம் வைடூரியம் அருகி அம்சம் இடபம் காகம்காலாஞ்சரம் நாரதம் என்று இருபது மலைகளிருக்கின்றன. (சுலோ 32.)

ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.

ஹ

ஹத்தியாதி பாபசமன்யை நம:

ஏழாம் அத்தியாயம்.

மேருபர்வதவர்ணனை.

ஸ்ரீ நாராயணர் கூறுகின்றார்:—மேருமலைக்குக் கிழ்ப்பக்கத்தில் மூப்பத்தாறுயிரம் யோசனை கனமும், இரண்டாயிரம் யோசனை யுயரமுமுள்ள ஜடரம் தேவகூடம் என்னும் இரண்டு மலைகளும், மேற்பக்கத்தில் பவமானம் பரிமாத்திரம் என்னும் இரண்டு மலைகளும், தென்பக்கத்தில் கைலாயம் சுரவீரம் என்னும் இரண்டு மலைகளும், வடபக்கத்தில் ஸ்திரீ ஸ்ருங்கம் மகரம் என்னும் இரண்டு மலைகளுமுள. இவ்வெட்டுமலைகளும் தன்னைச் சூழ்ந்திருக்க நடுவில் சூரியன்போற் பிரகாசிக்கும் மேருமலையின் சிகரத்தில் பதினாயிரம்யோசனை அகலத்தோடு நாற்சதுரமாய் மனோவதி என்னும் ஓர் பட்டணம் பிரமதேவனுக்குளது. பொன்மயமாய்ப் பிரகாசிக்கின்ற அதன் சிறப்பை வித்தையிற்சிறந்த வித்வான்களும் சொல்லுதற்கெளிதன்று. அம்மேருமலையின் கிழக்கு முதலாகச் சொல்லப்பட்ட அஷ்ட திக்குகளிலும் அமராவதி தேஜோவதி சம்யமனி கிருஷ்ணாங்கனா ஸ்ரத்தாவதி கந்தவதி மஹோதயை யசோவதி என்னும் எட்டுமலைகளும் பொன்மயமாய்ப் பிரகாசிக்கின்றன. அவைமுறையே திக்குப்பாலகர்களுக்கு பட்டணங்களாயுமுள்ளன. அவ்விடத்திற்றானே யஜ்ஞரூபியாகிய விஷ்ணுமூர்த்தி தனது இடக்காற்பெருவிரல் நகத்தால் தொளைபடுத்திய பிரமாண்டத்தின் மேற்பக்கத்திலிருக்குந்தொளை நடுவினின்றும் பெருகாநின்ற கங்காநதியானது

ஆயிரமுகமாய் ஆகாயமார்க்கத்தை ஆக்ரமித்துக்கொண்டு மிகவும் பரிசுத்தமான தருவஸ்தானத்தைக் கடந்து தேவஸ்தானத்தின் வழியாயிறங்கிவந்து சந்திரமண்டலத்தையளாவி பிரமன் வீற்றிருக்குந் தாமரையில் வீழுந்து அங்கிருந்து சீதை அலகை தந்தை பத்திரை என நான்காகப்பிரிகின்றது. அவற்றுள் சீதை பருவதசிகரங்களில் விழுந்து கேசரையென்னும் பெயர்பெற்றுக் கந்தமாதன மலையின்வழியாய் பத்ராஸ்வ வருஷத்திற்குக் கீழ்ப்பக்கமாய்வந்துலவண சமுத்திரத்தையடைந்தும், இரண்டாவது நதியானது மாலியவான் மலையிலிருந்து வெளிப்பட்டு வேகத்தோடு கேதுமாலா வருஷத்தையடைந்து சக்ஷு என்னும் பெயர்பெற்று மேற்கு சமுத்திரத்தையடைந்தும், மூன்றாவது நதியானது தென்பாகத்தில் காடுகளையும் மலைகளையுங்கடந்து ஏமகூடமலையையடைந்து அதிவேகமாய்ப்பாரத வருஷத்திற்குவந்து தென் சமுத்திரத்தையடைந்தும், நான்காவது நதியானது மூவுலகையுஞ் சுத்திசெய்வதாய் உத்தரகுருவை யடைந்து சமுத்திரத்தை யடைந்தும் விளங்குகின்றன. இவற்றுள் மூன்றாவதாகிய நதியில் அடிக்கடி மூழ்கிவரப்போவோர்க்கு இராஜசூயம் அஸ்வமேதம் என்னும் யாகபலன் கிடைக்கும். தேவர்களால் பூஜிக்கப்படும் இந்நதிகளேயன்றி மேருமந்ர பர்வதங்களினின்று பாரதவருஷமுதலான எல்லாவருஷங்களிலும் நதி நதங்கள் அதிகமாய்ப் பெருகுகின்றன. அவற்றுள் பாரதவருஷம் கருமபூமியென்று சொல்லப்படும்.

மற்ற எட்டு வருஷங்களும் சுவர்க்க சுகத்தையும் பூலோகசுகத்தையும் கொடுக்கின்றவைகளாகவும் சுவர்க்கலோக புண்ணியசேஷத்தை யனுபவிக்கு மிடங்களாகவு மிருக்கின்றன. அங்கு புருஷர்களுக்குப் பதினாயிரம் யானை பலமும் பதினாயிரவருடம் ஆயுளும் வச்சிரம்போன்ற தேகமும் தேவர்களுக்குச் சமானமான தேஜஸும் எப்போதும் சுரதத்திலே சந்துஷ்டியும் நிறைந்த ஆயுளோடு கூடியகளத்திரமு முள்ளவர்களாய் சுகமுடையவர்களா யிருக்கின்றனர். ஸ்திரீகளெல்லாம் இடையாயுள்ள காலங்களில் புத்திர சந்தானத்தால் வலியும் அழகும் குலைத்துபோகாமல் கடைசிகாலத்தில் கர்ப்பவதியாகின்றார்கள். எப்பொழுதும் திரேதாயுகத்திற்குச் சமானமான காலமாகவே யிருக்கப்பெற்றுள்ளன. (சு-ம்-37.)

ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.

உ

ஹரிதஸ்வாதிஸேவிதாயைநம:

எட்டாம் அத்தியாயம்.

இளாவிருதவிருத்தாந்தம்.

நாராயணர் கூறுகின்றார்:—இளாவிருதவருஷத்தில் தேவர்கள் முற்கூறிய யாகங்களாலும், ஜபத்தியான சமாதி முதலானவைகளாலும் தேவியைப் பூஜிக்கின்றனர். வனங்களெல்லாம் எப்பொழுதும் எல்லாருதுக்களிலும் புஷ்பங்களாலும் பழங்களாலும் தளிர்களாலும் அழகுபெற்றும், காடுகள்மலைகள் மலைச்சாரல்கள் ஆறுகளாலும் அவைகளில் சுத்தமான ஜலம் செங்கழுநீர் கருநெய்தல் ஆம்பல் முதலிய புஷ்பங்களாலும் அம்ஸமுதலான பக்ஷிகளாலும் அணியணியாய் நிறையப்பெற்றிருப்பதுமன்றி புருஷர்களெல்லாம் அழகில்மிக்க ஸ்திரீகளுடைய விசித்திரமான சரசசல்லாபவிநோதங்களால் சந்தோஷத்தினின்று நீங்காதவர்களாய்க் கிரீடித்துக்கொண்டிருக்கின்றனர். இவ்வொன்பது வருடங்களிலும்விஷ்ணுமூர்த்தி தேவியை ஆராதித்துக்கொண்டிருக்கின்றனர். அவர் தேவியைப் பூஜிக்கின்றவரா யிருக்கின்றபடியினால் அங்குள்ளவர்களும் தேவி பூஜகர்களாகவே இருக்கின்றனர்.

இளாவிருதவருஷத்தில் திருமால் லக்ஷ்மிதேவியுடனிருக்கின்றனர். அங்கு பவானியினுடைய சாபத்தினால் எந்தப்புருடரும் பிரவேசிக்கிறதில்லை. பிரலேசிப்பாராயின் ஸ்திரீகளாய்விடுகின்றனர். அங்கு பவானியைப் பிரபுவாகவுடைய அநேகங்கோடி ஸ்திரீகளால் சூழப்பட்டிருக்கும் தேவேசன், சங்கருஷணனைத் தனது தியானயோகத்தினால் யாவருக்கும் இதத்தைச் செய்ய எண்ணித்தோடு மனத்தை அசைவற நிறுத்திக்துதிக்கின்றார்:—"ஸ்ரீபகவானே! ஓம் நமோ பகவதே மஹபேருஷாய சர்வகுண சங்கியானாய நந்தாய வ்யக்தாய உமக்குநமஸ்காரம் செய்கிறேன். தியானிக்கின்றவர்களுடைய சங்கடங்களைப் போக்கடிக்கிற திருப்பாதங்களை யுள்ளவராயும் சகலசம்பத்துக்கும் முக்கியராயும்பக்தர்

களிடத்தில் மகாதையையுள்ளவராயும் சம்சாரசாகரத்தைக் கடக்கச்செய்கின்றவராயும் சர்வேஸ்வரராயும் இருக்கின்ற உம்மைநமஸ்கரிக்கின்றேன். சத்துவ ரஜஸ் தமஸு என்னும் முக்குணசேஷ்டைகளால் எவனுடைய அறிவானது சலனத்தையடையாமல் இருக்கிறதோ அந்தப்பகவானே ஆத்மாவை சுவாதீனப்படுத்தவேண்டுமென்கிற எண்ணமுடைய எவன் கவுரவஞ் செய்யமாட்டான். எந்தப்புருஷனுடைய தியானத்தினால் சிவந்தகண்களுள்ளவராய் மதம் பிடித்தவன்போல் ஒருவரும்எதிர்ல்லாமல் பிரகாசிக்கின்றார்களோ, தேவகன்னிகைகள்எவனுடையபாதபரிசத்தினால் இந்திரியங்கள்கலங்கி நாணமடைந்து பூஜைசெய்யும்வண்மை யற்றவராகின்றனரோ, எவன் இப்பிரபஞ்சத்தின் ஜன்ம ஸ்திதிலய ரூபமாகவும்எவன் முக்குணரகிதனுகவும் கூறப்படுகின்றானே அவனை நமஸ்கரிக்கின்றேன். இப்பூமண்டலம் எவனது ஆயிரம்முடிகளில் தரிக்கப்பட்டிருக்கிறதோ, பிரமன் எவனிடமிருந்துதோன்றினனோ, எவனுடையபிரகாசத்தினால் மாயை சிருட்டிக்கப்பட்டதோ,நாமனைவரும்எவனுடைய சுவாதீனத்தினால் வலையிலகப்பட்ட பக்ஷிகள்போல் சுவாதீனமற்றிருக்கின்றோமோ, எவனுடைய கிருபையினால் உலகினைச் சிருட்டிக்கின்றோமோ, யாவரும் எவனால் நிர்மிக்கப்பட்ட மாயாபந்தத்தைத் தாண்டக்கூடாமல் மோகின்கின்றனரோ அவனை நமஸ்கரிக்கின்றேன்'' என்று துதிக்கின்றனன்.

பத்திராஸ்வ வருஷத்தில் தருமபுத்திரர் ஹயக்கிரீவராகிய விஷ்ணுமூர்த்தியை நமஸ்கரித்து சமர்தியிலிருந்து தியானித்துத் துதிக்கின்றனர். அவரது வம்சத்தில் வருபவரெல்லாம் பத்திர சேவகர்களென்று சொல்லப்படுகின்றனர். துதியாவது:— "தருமரூபியான பகவானே! உனக்கு நமஸ்காரம். உனதுகிரியைகள் மிகவும் ஆச்சரியகரமானது. உனதுகடாக்ஷம் கிடைக்கும்வரையில் தபித்துக்கொண்டிருக்கின்றோம். புத்திரர்களைப் பிதாவானவன் எப்படிக்காப்பாற்றுவானோ அப்படி எங்களால் செய்யப்படும் தியான நமஸ்காரங்களை எண்ணிக் கடாக்ஷஞ்செய்யும். பண்டிதர்கள் பிரபஞ்சம் நாசமடைவதென்று அறிந்தவராயினும் உமதுமாயையினால் மோகமடைகின்றனர். இப்படிச்செய்யும் கிருத்தியமுடைய உமக்குநமஸ்காரம். சகலத்திற்கும் உற்பத்திஸ்தானமானவனே! நீகரும த்தைச்செய்யாமலே செய்தவனாக அங்கீகரிக்கின்றனை. இது ஆச்

சரியகாரமானதல்ல.எனெனில் நீ காரியகாரணபூதனுயும் சர்வாத்ம சொரூபியாயும் பிரபஞ்சத்திற்குவேறுபட்டவனுயும் இருப்பவனுகலான் .ஆச்சரியமென்னே. யுகாந்தத்தில் தமசினுல் மறைக்கப்பட்ட வேதங்களேப் பாதாளத்திலிருந்து உம்மைக்கொண்டுவந்து கொடுக்கும்படிப்பெரியோரெல்லாம் யாசிக்கின்றனர்.இவ்வாறுசகலருக்கும் நன்மையைச்செய்கின்ற உமகு நமஸ்காரம்'' என்று துதிக்கின்றவராயிருப்பர் என்றனர். (சு - - உகூ)

எட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

ஹஸ்தி கும்போத்துங்க குசாயைநமஃ

ஒன்பதாம் அத்தியாயம்.

வருஷாந்தர்க்கத சேவ்ய சேவகத்வ விசாரம்.

நாராயணர்கூறுகின்றார்:— அரிவருஷத்தில்நரசிம்மமூர்த்தியானவர் சகலபாபத்தையும் நாசஞ்செய்து பக்தர்களுக்குஅநுக்கிரகிக்கும்பொருட்டு யோகஞ்செய்துகொண்டிருக்கின்றனர். அவரது உருவத்தையறிந்தவனுகிய பிரகலாதன் அந்தப்பகவானுடைய குணதத்துவத்தையறிந்து பக்தியுடன் "ஓம் நமோபகவதே நரசிம்ஹாய நமஸ் தேஜஸ்தேஜஸேஅவிராவிர்ப்பவ வஜ்ரதம்ஷயட்ரகர்மாசபான்ரந்தய ரந்தய தமோக்ரஸ ஓம்ஸ்வாஹா அபயம் மமாத்மநி பூயிஷ்டாஃ ஓம் க்ஷௌம்'' என்பதாதி மந்திரங்களே உச்சரித்தனன். இதன் பொருளாவது "நரசிம்ஹ ரூபராயும் ஒளிகளுக்கெல்லாம் ஒளியானவராயும் வஜ்ராயுதம்போல் பற்களுள்ளவராயும் இருக்கின்ற உமக்கு நமஸ்காரம். காமக்கிரந்தியையறுத்துவிடும், அறுத்துவிடும். எங்கட்குத் தெரிசனங்கொடும், தெரிசனங்கொடும். எங்களுடையஅஞ்ஞானத்தை நீக்கிவிடும். இந்தஆத்மாவுக்கு அபயத்தைக்கொடும். இவ்வுலகுக்கெல்லாம் சுபம் உண்டாகக்கடவது. துஷ்டர்களெல்லாம் நசித்துப்போகக்கடவர். பிராணிகளெல்லாம் சிவனைத் தியானிக்கக்கடவர். மனமானது விஷ்ணுவை நமஸ்கரிக்கக்கடவது. எங்களுடையபுத்தி காரணமின்றிப் பகவானிட

த்தில் பிரவேசமாகுக. எங்களுடையமனம் வீடு மனைவி மக்கள் தனம் இவைகளில் எங்கட்குச்சம்பந்த மூண்டாகவேண்டும். உமது சேவையில் ஆசையுண்டாகுக. எந்தப்பகவானுடைய சம்பந்தத்தினால் மனமானது சுத்தியையடைகின்றதோ அந்தப்புகழுடைய பகவான் எங்களுடையகாமங்களை யறுத்துவிடுவாராக. அப்படிப்பட்டவிஷ்ணுவை எவன்றான் நமஸ்கரிக்கமாட்டான். எவனுக்குக் காரணமின்றி விஷ்ணுமூர்த்தியினிடத்தில் பக்தி உண்டாகின்றதோ அவனிடத்தில் சகலதேவர்களும் வசிக்கின்றனர். பக்தியில்லாதவனுக்கு நற்குணங்களெல்லாம் எப்படியுண்டாகும். விஷ்ணுமூர்த்தி சர்வப்பிராணிகளுக்கும் மீன்களுக்கு ஜலம் ஆதாரம்போல முக்கியகாரணராயிருக்கின்றனர். அவருக்கு வீட்டில்பூஜையில்லாமலிருந்தால் அந்தவீடையவனுக்கு மகத்துவம் உண்டாகாது. அவன் காமம் துக்கம் கோபம் முதலியவற்றால் பீடிக்கப்பட்டு மகாதுக்கத்தை அடைவான். அராகம் துவேஷம் காமம் குரோதம் பயம் வியாதி இவைகளுக்கெல்லாம் மூலமாயும் சம்சாரத்துக்குப் பிரதான ஸ்தானமாயுமுள்ள கிருகத்தைவிட்டு நரசிம்ஹருடைய பாதத்தை நமஸ்கரிக்கின்றவர்களுக்குப் பயமேது" என்றிவ்வாறு பிரகலாதன் நரசிம்ஹரை மனதிற்றியானித்து நாடோறுந்துதித்துவருவான்.

கேதுமாலாவருஷத்தில் மன்மதரூபியாய் அரசர்களால் பூஜிக்கப்பட்டவராய்பகவான் இருப்பர். அவரை,"ஓம்நமோபகவதே ருஷீகேஸாய சர்வகுணவிசேஷைர் விலக்ஷிதாத்மனே ஆகூதீனும் சித்தீனும் சேதஸாம் விசேஷேணும் சாதிபதியே சோடச கலாய சந்தோமயாய அன்னமயாய அமிர்தமயாய ஸஹஸே ஓஜஸே பலாய காந்தாய காமாய நமஸ்தே உபயத்ரபூயாத்" என்னுமந்திரத்தையுச்சரித்து, இலக்ஷ்மிதேவி, அவ்வருடத்திற்குப் பிரபுவாய் எப்பொழுதும்பூஜித்து, "உலகத்தில் ஸ்திரீகள் உம்மை ஆராதித்து பர்த்தாவகக்கொள்ளுகின்றார்களேயன்றி வேறுயாரைக் கொள்ளுகின்றனர். ஏனெனில் பிரியம் தனம்ஆயுள் முதலியவற்றிற்கு நீரே சுதந்தரராயிருக்கின்றபடியினாலும், எவன் ஒருவரிடத்தும்பயப்படுவதில்லையோ அவன்றான்பதியாவன் என்றபடி நீர்தான் ஒருவரிடத்தும் பயப்படாதவராயிருத்தலினாலும் ஸ்திரீகள் உம்மையே சாக்ஷாத்காரமாக அடைகின்றனர். ஓபிரபுவே! சுராசுரர்கள் இந்திரியங்களையடக்கி அரியதவத்தைச்செய்து உம்மை

யடைந்தும் உமது பாதபத்தியில்லாமையால் உம்மையறிந்திலர். சத்தியராயும் நித்தியராயுமுள்ள நீர் எனது வந்தனத்தை ஏற்றுக் கொள்ளும். என்னை முதலாயினரைக் காக்கின்ற கடவுளாகிய உமது இச்சையை அறிவதற்கு எவர்தான் சமர்த்தர்கள். உலகங்கட்குப் பிரபுவாயும் காமதேனுஸ்வரூபமாயும் இருக்கின்ற உம்மைப்பிரஜாபதிமுதலான வருஷநாதர்கள் காமசித்தியின்பொருட்டுத் தோத்திரஞ்செய்கின்றனர்" என்றிவ்வாறு துதித்துக்கொண்டிருப்பள்.

ரம்யகவருஷத்தில் மச்சமூர்த்தியை மநுவானவர், "ஓம்நமோ மூக்யதமாயநமஃ, ஸத்வாய பிராணயெளஜஸே பலாய மஹாமத்ஸ்யாயநமஃ" என்றுச்சரிப்பதுமன்றி, "லோகபாலர்களால்அறியப்படாதவனுய் உள்ளும் புறம்பும் கம்பீரமாய்ச் சஞ்சரிப்பவன் எவன் இருக்கின்றனை, தாருரூபமாயிருக்கின்ற ஸ்திரீயை நாமமாத்திரத்தினல் தன்சுவாதீனப்படுத்திக்கொள்வதுபோல் இப்பிரபஞ்சத்தை எவன்சுவாதீனஞ்செய்து கொள்ளுகின்றனை அவன்தான் ஈஸ்வரன் என்றும், லோகபாலகர்களெல்லாம் தங்களுக்குள்ள துவேஷங்களைவிட்டுத் தனித்தனிபாகவேனும் ஒன்றுகவேனும் அசுரனல்கவரப்பட்ட வேதத்தை மீட்டு உலகத்தைக்காத்தாரில்லை அதனை நீரே செய்து ஜகத்பிராண கணத்மாவானீர்உமக்குநமஸ்காரம்" என்றும் தோத்திரந் தியானதியோகங்கள் செய்து சகல கல்மஷங்களினின்று நீங்கிப் பாகவதாத்தமனுப்பக்திமார்க்கத்தில் நடபட்டிருந்தனர் என்றனர். (சு - ம்-உரு.)

ஒன்பதாம்அத்தியாயம் முற்றிற்று.

ஹரி:

ஹஸ்தி க்ருத்தி பிரியாங் கயைநமஃ.

பத்தாம் அத்தியாயம்.

புவனகோசவர்ணனம்.

நாராயணர்கூறுகின்றார்:—இரண்டாயவருஷத்தில்பகவான் கூர்மரூபங்கொண்டிருப்பர். அவரை அர்யமன்என்னுஞ்சூரியன், "ஓம் நமோபகவதே அகூபாராய சர்வசத்வகுணவிசேஷணாய நோபலக்ஷித ஸ்தானாய நமோவர்ஷ்மணே நமோபூம்நே நமோவஸ்தானாய

நமஸ்தே" என்றுஉச்சரித்து,"இவ்வுலகெல்லாம் யாருடையசொரூபமோ, யாருடையமாயையினல் வெவ்வேறுகக்காணப்படுகின்றதோ, யாருடையசொரூபத்திலிருக்கின்றதோ இவ்விதமென்று காணக்கணக்கில்லையோ, இம்மாதிரியென்றுசொல்லசொல்லில்லையோ என்றுசொல்லப்படும்பிரமத்தன்மையைப் பெற்றுள்ள பகவானை உம்மை நமஸ்கரிக்கின்றேன். சராயுஜாதி நால்வகையோனியாகச் சொல்லப்பட்ட ஸ்தாவரஜங்கமங்களும் தேவருஷிபிதர்க்களும் சுவர்க்கம் ஆகாயம் பூமி மலை ஆறுசமுத்திரம் துவீபங்களும் நக்ஷத்திரங்களுமாகச் சொல்லப்பட்டனவெல்லாம் உனதுசொரூபமென்றேசொல்லப்பட்டிருக்கின்றது.எவனிடம்எண்ணிறந்தநாமங்களைப் பண்டிதர்கள் கற்பித்திருக்கின்றனரோ அப்புருஷனுகிய உம்மை நமஸ்கரிக்கின்றேன்" என்று வருஷப்பிரபுக்களோடு துதிக்கின்றனன்.

இப்படியே உத்தமமாகியகுருவருஷத்திலும் ஆதிவராகரூபியானபகவானைப்பூதேவி பக்தியோடுபூசித்து,"ஓம்நமோபகவதே மந்திரதத்வலிங்காய யக்ஞகிருதவே மஹாத்வராவயவாய மஹாவராஹாய நமஃகர்மசுக்லாய த்ரியுகாய நமஸ்தே" என்றுச்சரித்து,"எவனுடைய சொரூபத்தைக்கவிகள் மூக்குணங்களில் மனமாகியமத்தை நாட்டக் கடைந்து சாக்ஷாத்கரஞ்செய்வதற்கு ஆவர்த்திசெய்கின்றார்களோ அவனுகியஉம்மை நமஸ்கரிக்கின்றேன். தன்னுடையகுணங்களால் இவ்வுலகினைப்பார்க்கின்ற எவனுடையமாயையானது உற்பத்திநாசங்களைச் செய்கின்றதோ அத்தமாயைக்கு ஆதாரமாயும் திரிகுணகர்மங்களுக்குச்சாக்ஷியாயும் இருக்கின்ற உம்மைநமஸ்கரிக்கின்றேன். எவன் ஆதிவராகரூபியாய் அசுரனைக்கொன்று கடலிலிருந்த என்னைக்கோரப்பற்களில் இடுக்கி வெளியில் கிளம்பினனை அவனுகிய உம்மை நமஸ்கரிக்கின்றேன்" என்று துதிப்பள்.

கிம்புருஷவருஷத்தில்ஸ்ரீராமரை அநுமார்,"ஓம்நமோபகவதே உத்தமஸ்லோகாயநம" என்றும், "ஆர்யலக்ஷண சீலவ்ருதாயநம" என்றும், உபசிக்ஷிதாத்மனே உபாசிதலோகாயநம" என்றும், "ஸாதுவாதநிகக்ஷணாய நமோ ப்ரஹ்மண்ய தேவாய மஹாபுருஷாய மஹாபாகாயநம"என்றும்,"விசுத்தாத்மாவாயும் பிரகிருதிகுணங்களின் நியமனத்தை புடையவராயும் சாந்தராயும் அமிர்தம்போன்றவராயும் அகங்காரமில்லாதவராயுமுள்ள உம்மைத்துதிக்கின்றேன். மாதுடராய்வந்தது ராக்ஷஸரைக்கொல்வதற்கேயல்ல;மனிதர்களுக்

குரல்லொழுக்கத்தையுண்டாக்கவேஆகும்.எனெனில்,ஆத்மஞானி களுக்கே சிரேகராயும் பகவத்சொரூபராயும் இருக்கின்ற விஷ்ணு மூர்த்தி நீரல்லவா? உமக்கும் சீதைக்கும் எப்படி துக்கம்உண்டா கும். ஸ்திரீயினுலுண்டாகும் துக்கத்துக்கு நீர் எப்படிசம்பந்தப்பட் டவராவீர்? பரமாத்மதிருஷ்டியைமறவாதவரல்லவா? அதனல் நீர் வாக்குமனங்களால் துதிக்கமுடியாதவர். ருஷிகளாலே செய்யப் படும் தியானயோகங்களால் சுவாதீனப்படத்தக்கவர். உம்மைநம ஸ்கரிக்கின்றேன். தேவர்களானுலும் அசுரர்களானுலும் மானுடர் களானுலும் வேறெக்ஜாதியர்களானுலும் நன்றிமறவாதவராயும் சத்தியசந்தராயும் திடவிருதராயும் தாமரைமலர்போன்ற கண்களு ள்ளவராயும் இருக்கின்ற இராம பிரபுவைப் போற்றுவரானின் அவர்கள் கதியடைவர் '' என்றும்தோத்திரத்தியானங்கள் செய்து பக்தியுடன் பூஜித்துவருகிறார் என்றனர். (சு - ம்-20)

பத்தாம் அத்தியாயம் முற்றிற்று.

ஒ

ஹரித்ரா குங்குமா திக்தாயைநம:

• பதினென்றும் அத்தியாயம்.

சேவ்யசேவகவிசாரம்.

நாராயணர்கூறுகின்றார்:—இந்தப் பாரதவருஷத்தில் நான்ஆதி புருஷனைவிருந்துஉன்னல்தோத்திரஞ்செய்யப்படுகிறேன். எப்படி யென்றல்"ஓம் நமோபகவதே உபசமசீலாயோபரதாநாத்மாயநமோ கிஞ்சனவித்தாய ருஷிருஷபாய நரநாராயணய பரமஹம்ஸ பரம குரவேஆத்மாராமாதிபதயே நமோநம" என்றுச்சரிப்பதும்,"சர்வ லோகத்தையும் சிருஷ்டிக்கின்றவனையும் அதில் சம்பந்தமில்லாதவ னையும்தேகசம்பந்தமுள்ளவனையும் இல்லாதவனையும்எவனிருக்கின்ற னை, எவனுக்குப் பார்க்கக்கண்களிருந்தும்இல்லையோ, எவன்குண ங்களோடு கூடிக்கொண்டிருந்தும்தூஷிக்கப்படாமலிருக்கின்றனை அப்படிப்பட்டபகவானை நமஸ்காரம்செய்கிறேன். இப்படிப்பட்ட

யோகத்தை இரண்யகர்ப்பனுகியபகவான் யோகிகளால் அனுஷ்டிக்கப்பட்டதென்று சொல்லியிருக்கின்றூர். அஃதாவது மரணகாலத்தில் மிகுந்தபக்தியோடு நிர்க்குணஸ்வரூபியான உம்மை எவன்தோத்திரஞ்செய்கின்றூனே அவன் சகலபுருஷார்த்தத்தையும் அடைகிறன். இகத்திலும்பரத்திலும் காமத்தில் விருப்பமுள்ளவனுய் மனிஷிமக்களிடத்தும் தனத்தினிடத்தும் அதிகவிசாரத்தை வைத்துக்கொண்டு எவன் சந்தேகப்படுகிறூனே அவனுடைய பிரயத்தனத்துக்குப் பிரயோஜனம் சிரமமன்றி வேறென்றில்லை. ஓபிரபுவே! உம்முடையமாயையினல் உண்டாகும் அஜ்ஞானத்தை நீர்சீக்கிரத்தில்பிளந்து என்னை உம்முடையபாதத்தில் சுத்தபக்தியுள்ளவனுய் யோகத்தில் மனதைவைக்கும்படிச் செய்யவேண்டுமென்பதுமாம். ஓநாரதரே! இப்பாரதவருஷத்தில் நீரேயன்றி நதிகளும் பர்வதங்களும் தோத்திரஞ்செய்கின்றன. அவைகளைச்சொல்லுகிறேன்; நீர் மனத்தை ஒருவழிப்படுத்திக் கேட்பீராக:—

இமயமலை மங்களப்பிரஸ்தம் மயினகம் திரிகூடம் ரிஷ்ய கூடகம் சய்யம் தேவகிரி ருஷ்யமூலம் ஸ்ரீசைலம் வேங்கடாத்திரி மகேந்திரம் வாரிதாரம் விந்தியம் புத்திமான் ருக்ஷபர்வதம்பாரியாத்திரம் துரோணம் சித்திரகூடம் கோவர்த்தனம் ரைவதம் குருபம் நீலபர்வதம் கவுரமுகம் இந்திரநீலம் காமகிரி முதலானமலைகளும், இவைபோன்றஅனேகமலைகளும் புண்ணியத்தைக்கொடுக்கின்றவைகளாக வுள்ளன. அந்தப்பர்வதங்களினின்றும் உண்டாகும் நதிகள் நானவிதமானதேசங்களில் பெருக்கெடுத்துச்செல்லுகின்றன. அந்தநதிகளில் ஸ்நானம் ஆசமனம் செய்வதனலும் அவைகளைக் கண்ணல் பார்த்து வாக்கினல் உச்சரிப்பதினலும் மனவாக்குக் காயங்களாற்செய்யும் கர்மங்கள்நாசமடைகின்றன.

அவைகளின் பெயர்களாவன:—தாம்பிரபர்ணி சந்திரவாசாகிருதமாலா வடோதகா வைகாயகி காவேரிவேணு பஸ்வனி துங்கபத்திரா கிருஷ்ணவேணி சற்காரவர்த்தகா கோதாவரீ பீமரதிநிர்விந்தியா பயோஷ்ணிகா தாபிரேவா சரஸ்வதி நர்மதாசரஸ்வதிசர்மண்வதீ சிந்து அந்தசோணு மஹாநதெள ருஷிகுல்யா திரிசாமா வேதஸ்மிருதி கவுசிகை யமுனை மந்தாகினீ திரிஷத்வதி கோமதி சரயு ரோதவதி சப்தவதி சுவேதமா சந்திரபாகா மருத்விரதா விதஸ்தா அசக்னி விஸ்வா என்பனவாம்; இந்தப்பாரதவருஷத்தில் ஜனிக்கின்ற

புருஷர்கள் தாம்தாம்செய்த புண்ணியபாவங்களுக்கீடாக சொர்க்க நரக பூமிகளிற் பிறந்து எப்படி சுகதுக்க மோகூஷங்களை யடைகின் றார்களோ அப்படியே இந்ததிகளும் அடைகின்றன. இந்ததிகள் காரியசித்திக்குத் தகுந்தவையென்று முனிவர்கள் சொல்லுவர்.

இந்தப்பாரதவருஷத்தி லிருக்கும் மனிதர்கள் என்ன புண்ணி யஞ்செய்ததனாலோ விஷ்ணுபகவான் தானே அவர்களுக்குப் பிரசன் னராய்த் தெரிசனம் கொடுக்கின்றனர். இப்புண்ணிய சீலர்களைப் போல் விஷ்ணு பகவானுடைய சேவைக்கு உபயோகமான மானுட சரீரத்தையாவது அந்தப் பாரதவருஷத்தில் எடுக்க ஆசைப்படுகி றேன். எது யாகமுதலியவற்றால் சாதிப்பதற் கருமையாயிருக்கின் றதோ அது அந்தப்பகவானுச்சரிப்பதனாலேயே உண்டாகின்றது. அவரது பாதங்களை உச்சரித்தால் யாருக்குப் பாவநாசம் உண்டா காதில்லை? ஏனைய வருஷங்களில் கற்பகாலபரியந்தம் ஆயுள் அடைக் கிருப்பதைப்பார்க்கிலும் இந்தப்பாரதவருஷத்தில் கூடினகாலம் சிவ நிசையோடிருப்பது சிரேஷ்டமானது. இவ்விடத்தில் புத்திமானு மனிதன் சகல போகைஸ்வர்யங்களையும்விட்டு சந்நியாசத்தை யடை கிறது விஷ்ணுமூர்த்தியைப் பூஜிப்பானாயின் அவன் அவர் பதத்தை யடைகிறான். எவ்விடங்களில் விஷ்ணுவினுடையகதைகளும்பாகவதர் களும் யாகமுதலானமஹோற்சவங்களும் இல்லையோ அவ்விடங்கள் தேவலோகமாயிருந்தாலும்வாசஞ்செய்யத்தக்கவையல்ல. இப்பாரத வருஷத்தில் மானுடராகப்பிறந்து ஞானம் கிரியை திரவியமுதலான சம்பத்துக்களைப்பெற்றும் ஜன்மபரம்பரையை நீக்குவதற்கு முயற்சி செய்யாமலிருப்பாராயின் அவர்கள் மறுபடியும் மிருகங்களைப்போல் க்ரியக்ஜாதிகளிற்பிறந்து சம்சாரத்தில் ஸ்திரமான பந்தத்தை யடை கின்றனர். எவர்கள் சிரத்தையோடு அக்னியில் விதிப்படி மந்திரத் தால் ஓமஞ்செய்து அவிசைக் கொடுக்கிறார்களோ அந்த அவிசைப் பகவான் கிரகித்துக்கொள்ளுகிறார்.

பகவான் மனிதர்கள் தன்னைச் சத்யமானபொருளைக் கேட்பா ராயின் அந்தச்சத்தியப்பொருளைக்கொடுப்பர். அசத்தியப்பொருளா கிய திரவியத்தைக்கேட்பாராயின் அதைக் கொடுப்பதில்லை. ஏனெ னில், சத்தியப்பொருளை மறந்து இதனையேமறுபடியுங்கேட்கத் தலைப் படுவார்கள். ஆகலான் தன்னை நமஸ்காரஞ் செய்கின்றவர்களுக்கு

பிரபஞ்சப்பொருளே இச்சிக்கும் இச்சையைமறைக்கத்தக்க திருவடி களேக்கொடுத்து ஒருவஸ்துவினிடத்திலும் ஆசையைவிளைவிக்கா மல் வைராக்கியத்தை யுண்டாக்குகின்றனர்.

ஓநாரதரே! சுவர்க்கத்திலிருக்கின்ற தேவர்களும் சித்தர்களும் மகருஷிகளும் இந்தவுண்மையையறிந்து பாரதவருஷத்தின் மான் மியத்தைப் புகழ்ந்து கொண்டாடுகின்றனர். குதிரைமார்க்கத்தைத் தேடுகின்ற சாகர்களால் ஏற்படுத்தப்பட்ட சுவர்ணபிரஸ்தம் சந் திரபிரஸ்தம் சுக்ரபிரஸ்தம் ஆவர்த்தனபிரஸ்தம் ரமணகபிரஸ்தம் மந்திரோபாக்பபிரஸ்தம் ஹரிணப்பிரஸ்தம் பாஞ்சசன்யபிரஸ்தம் என்று எட்டு த்வீபங்களுண்டு. சிங்களம் லங்கை முதலாகச்சொல் லப்பட்ட உபத்வீபங்கள் உள்ளன. இந்தத்வீபங்களேபோல் அல்ல ஜம்புத்வீபம். அதனளவும் கீர்த்தியும் பெரிதானது. இனிப் பிலக்ஷத் த்வீபமுதலாகச் சொல்லப்பட்ட ஆறு த்வீபங்களின் விஸ்தாரத் தைச் சொல்லுகிறேன் என்றனர். (சு-ம32½)

பதிஞென்றும் அத்தியாயம்.

ஹர்யாஸ்வாத்யமகார்ச்சியை நப:

பன்னிரண்டாம் அத்தியாயம்.

தீபாந்தர சமாசாரங்கள்.

பிலக்ஷத் வீபம்.

நாராயணர் கூறுகிறார்:— மேருவை நடுவேயுடைய ஜம்புத் வீபம் உப்புக்கடலால் நான்குபக்கமுஞ் சூழப்பட்டிருக்கின்றது. இவ்வுப்புக்கடலின் அளவுஜம்புத்வீபத்தின் அளவேயாம். அக்கட லைப் பிலக்ஷத்வீபம் சூழ்ந்திருக்கிறது. அத்தத்வீபம் உப்புக்கட லின் இரண்டுபங்களவுள்ளது. இப்பிலக்ஷத்வீபம் கருப்பஞ்சாற் றுக்கடலால் சூழப்பட்டிருக்கிறது. அக்கடலினளவு அத்தத்வீபத்தி னளவேயாம். பிரியவிரதனுடைய புத்திரனை சப்தஜிஹ்வன் அங்கு பிரபுவாயிருக்கின்றன். அவனுக்குப்பிரபு பொன்மயமான அக்னி தேவனே. இங்ஙனமிருக்க அந்த சப்தஜிஹ்வன் தன்னுடையத்வீ

பத்தை ஏழுவருஷங்களாகப்பிரித்துத் தன்புத்திரர்களுக்குக்கொடுத்துத்தான் ஆத்மஞானிகளால் சிறப்பிக்கப்பட்ட யோகசித்தியையடைந்து அதனாலேயே பகவானுடைய பாதத்தையடைந்தனன்.

அங்கு சிவம் யவசம் பத்ரம் சாந்தம் க்ஷேமம் அமிர்தம் அபயம் என்று ஏழுவருஷங்களும், அருணன் ருண்ணன் ஆங்கீரசன் சாவித்ரீ சுப்ரபா ருதம்பரா சத்யம்பரா என்று ஏழுநதிகளும், மணிகூடம் வஜ்ரகூடம் இந்திரசேனன் ஜோதிஷ்மான் சுவர்ணம் இரண்யஷ்டீவம் மேகமாலா என்று ஏழுபர்வதங்களும்உள்ளன. இந்நதிகளின் தீர்த்தத்தை ஜனங்கள் பார்த்தாலும் தொட்டாலும் பாவங்களினின்றும் நீங்கினவர்களாயும் அஜ்ஞானரஹிதர்களாயும் ஆகின்றனர்.

இப் பிலக்ஷத்வீபத்தில் அம்சம் பதங்கம் ஊர்த்வாயனன் சத்யாங்கம் என நான்கு வருணத்தவர்களுண்டு. அவர்களுக்கு ஆயுள் பிரமாணம் ஆயிரம். அவர்கள் அமோக லோகதிருஷ்டாந்தங்களாயும் மூன்றுவேதத்தையும் அறிந்தவர்கள். சூர்யமண்டலத்தையும் சுவர்க்கத்துவாரத்தையும் கடக்கும் வன்மைபாளர். விஷ்ணுரூபம் சத்தியத்தின் சொரூபம் பிரமாவின்சொரூபம் அமிர்தத்தின் சொரூபம் சூரியன்சொரூபம் முதலியவற்றையறிந்தவர்கள். பிலக்ஷத்வீப முதலான த்வீபங்களுள் ஐந்து த்வீபங்களில் உள்ளவர்களுக்கு ஆயுள் இந்திரியங்களுக்குரிய வன்மை தேஜஸ் பலம் புத்தி பராக்கிரமம் ஆகிய இவையெல்லாம் சமமாகவிருக்கும்.

சான்மலித்வீபம்.

மேற்கூறிய பிலக்ஷத்வீபத்தைச் சூழ்ந்திருக்கும் கருப்பஞ்சாற்றுக்கடலுக்குஇரண்டுபங்கதிகமாயுள்ளது இச்சான்மலித்வீபம். இது அக்கருப்பஞ்சாற்றுக்கடலைச் சூழ்ந்திருக்கின்றது. இச்சான்மலித்வீபம் இதற்குச் சமானமான அளவுள்ள சுராக்கடலால் சூழப்பட்டிருக்கிறது. அவ்விடத்தில் சான்மலிவிருக்ஷம் லக்ஷம்யோசனவிஸ்தீரணமுள்ளதாயிருக்கும். பக்ஷிராஜனாகிய கருடன் வசித்துக்கொண்டிருப்பான். அத்தச்சான்மலித்வீபத்தைப் பிரியவிரதன் புத்திரனான எஜ்ஞபாஹு என்பவன் சுரோசனன் சௌமனஸ்யன் ரமணன் தேவவருஷகன் பாரிபத்ரன் ஆப்யாயனன் விஜ்ஞாதன் என்னும் தனது ஏழுபுத்திரர்களுக்கு அத்தத்வீபத்தை அவ்வவர் பெயரால் ஏழாகப் பகுத்துக்கொடுத்தனன். அங்கு சரசம் சதஸ்

ருங்கம் வாமதேவம் கந்தகம் குமுதம் புஷ்பவருஷம் சஹஸ்ரஸ்ருதி என்னும் ஏழுபர்வதங்களும், அநுமதி சிநீவாலீ சரஸ்வதீ குஹூ ராஜ்ஞீ ஹந்தா ராகா என்னும் ஏழுநதிகளும் உள்ளன. அந்த வருஷங் களிலுள்ள புருஷர்கள் ஸ்ருததரன் வீரியதரன் வசுந்தரன் இஷுந் தரன் என்னும் நான்குவருணஸ்தர்களாக இருப்பர். இவர்கள் வேத மயமான தங்களுடைய பகவானுக்கு சுக்ல கிருஷ்ணபக்ஷங்களில் பிதுர்த்தேவதைகளின்பொருட்டுத் தங்களுடைய பசுக்களால்யாகஞ் செய்கிறார்கள். சகலப்பிரஜைகளுக்கும் பிரபுவான சந்திரன் சந் தோஷிக்க சந்திரரூபியான பகவானைப் பூஜிக்கின்றனர்.

குசத்வீபம்.

சான்மலித்வீபத்தைச்சூழ்ந்திருக்கும் சுராக்கடலுக்கு இரண்டு பங்குஅதிகமாயுள்ளது இக்குசத்வீபம். அதுசுராக்கடலைச் சூழ்ந்திருக் கின்றது. அக்குசத்வீபம். அதற்குச்சமானமான அளவுள்ள நெய்க் கடலால் சூழப்பட்டிருக்கின்றது. அவ்விடத்தில் இந்தத்வீபத்தின் பெயர்க்குக் காரணமான குசஸ்தம்பம் என்னும் விருக்ஷம் தன்னு டைய சோலைகளின் காந்தியினால் திக்குகளைப் பிரகாசப்படுத்திக் கொண்டிருக்கிறது. பிரியவிரதனுடைய புத்திரனான இரண்யரேதா என்பவன் அரசன். அவன் வசு வசுதானன் திடருசி நாபி குப்தன் ஸ்துத்தியவிரதன் விவிக்தன் நமதேவகன் என்னும் தன்னுடைய ஏழுபுத்திரர்களுக்கு அந்தத்வீபத்தை அவ்வவர்பெயரால ஏழாகப் பகுத்துக்கொடுத்தனன். அங்கு சக்கரம் சதஸ்ருங்கம் கபிலம் சித்திரகூடம் தேவானீகம் ஊர்த்வரோமா திரவிணம் என்னும் ஏழுபர்வதங்களும், ரசகுள்ளியா மதுகுள்ளியா மித்திரவிந்தா ஸ்ருதவிந்தா தேவகர்ப்பா கதஸ்யமந்திரமாலிகா என்னும் ஏழுநதிக ளும் உள்ளன. அந்நதி தீர்த்தங்களைப் பானம்பண்ணுகிற மனிதர் கள் மகாதேஜசையடைகின்றனர். இந்தத்வீபத்திலுள்ள மனிதர்கள் குசலன் கோவிதன் அபியுக்தன் குலகன் என்னும் நான்குவருணஸ்த் தர்களாகவிருப்பர். இவர்கள் யாககர்மத்தைச்செய்யும சாமர்த்திய முடையவராகவும் எலலாம் அறிந்தவர்களாகவும் தேவர்களுக்குச் சமானமானமகிமையுடையவராகவும் இருத்தலினால் பிரமசொரூபத் திற்கு அவ்யத்தைவகிக்கிற அக்கினிசொரூபமான பகவானை புருஷ யஜ்ஞத்தினால் யாகஞ்செய்து வருவார்கள். இவ்வாறே எல்லாத்வீ பத்திலுள்ளவர்களும் பூஜிக்கின்றார்கள் என்றனர். (சுலோ-30.)

பன்னிரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

ஹரிகேச சக்யைநமஃ

பதின்மூன்றும் அத்தியாயம்.

சிருஷ்டத்வீப சபாசாரவர்ணனம்.

நாரதர் நாராயணரைநோக்கிஎல்லாவற்றையும் அறிந்தமஹானு பாவரே! நீர் சிருஷ்டத்வீபவரலாற்றைக்கூறுவீராக; அதைக்கேட்ட மாத்திரத்தில் பரமானந்தமுண்டாகுமல்லவா என்று வினவ நாராயணர் கூறுகின்றார்:—

க்ரவுஞ்சத்வீபம்.

குசத்வீபத்தைச் சூழ்ந்திருக்கும் நெய்க்கடலுக்கு இரண்டுபங்கதிகமாயுள்ளது இக்ரவுஞ்சத்வீபம். இது நெய்க்கடலைச் சூழ்ந்திருக்கிறது. இக்ரவுஞ்சத்வீபம். இதற்குச் சமானமான அளவுள்ள பாற்கடலாற் சூழப்பட்டிருக்கிறது. அவ்விடத்தில் க்ரவுஞ்சாத்ரி என்னும் பர்வதமே அத்தத்வீபத்தின் பெயரைப் பிரகாசப்படுத்துகிறது. மூன்சுப்ரமணியக்கடவுள் சத்தியாயுதத்தினல் பிளக்கப்பட்ட மலையும் இதுவேதான். பாற்கடலின் அலைகளால் மோதப்பட்டு காயும்வருணபகவானுல் காக்கப்பட்டதாயுமுள்ள இதற்கு ஸ்ரீமானுயும் சர்வலோகங்களாலும் நமஸ்கரிக்கப்பட்டவனுயுமுள்ள பிரியவ்ரதனுக்குப் புத்ரனான க்ருதபிருஷ்டன் அரசன். அவன் ஆமன் மதுருகன் மேஷபிருஷ்டன் சுதர்மகன் பிராஜிஸ்டன் லோகிதாரணன் வனஸ்பதி என்னும் தனது ஏழுபுத்ரர்களுக்கு அந்தத்வீபத்தை அவ்வவர்பெயரால் ஏழாகப் பிரித்துக்கொடுத்துத்தான் பகவானைச் சரணுகவடைந்தான். அங்கு சுக்லதர்மமான போஜன உபபர்ஹண கந்தகந்தன சர்வதோபத்ர என்னும் ஏழுபர்வதங்களும், அபயா அமிர்தௌகா ஆர்யகா தீர்த்தவதி விருத்திரூபவதி சுக்லா பவித்ரவதிகா என்னும் ஏழுநதிகளும் உள்ளன. இந்நதிகளின் பரிசுத்தமான ஜலத்தை புருஷன் ருஷபன் தத்வர்த்த :ரவிணன் தேவகன் என்னும் நான்குவருணத்தவர்களும் பானம்செய்கிறார்கள். இவர்கள் ஜலரூபமான பகவானை அஞ்சலியஸ்தர்களாய்ப் பூர்ணபக்தியுடன் யாகஞ்செய்து "ஆப: புருஷவீர்யா: ஸ்தபுனந்தீ பூ: புவஸ்வர: தானஃ பூதாமீவக்ஷி ஸ்புருஸதா மாத்மகா புவஃ என்பதால் துதிக்கின்றனர்.

சாகத்வீபம்.

கிரவுஞ்சத்வீபத்தைச் சூழ்ந்திருக்கும் பாற்கடலுக்கு இரண்டு பங்கதிகமாயுள்ளது இச்சாகத்வீபம். இது பாற்கடலைச்சூழ்ந்திருக்கின்றது. இச்சாகத்வீபம் முப்பத்திரண்டுலக்ஷயோசனை விஸ்தீரணமுள்ளது. இதற்குச் சமான அளவுள்ள தயிர்க்கடலால் சூழப்பட்டுள்ளது. அங்கு சாகமென்னும் விருக்ஷம் அந்தத்வீபத்தின் பெயரைப் பிரகாசப்படுத்துகின்றது. இதற்குப் பிரியவிரதனுடைய புத்திரனை மேதாதி என்பவன் அரசன். இவன் புரோஜபன் மனப்பூர்வஜபன் தவமானகன் தூம்பரானீகன் சித்திரரேபன் பகுரூபன் விஸ்வதிக் என்னும் தனது ஏழு புத்திரர்களுக்கு அந்தத்வீபத்தை அவ்வவர் பெயரால் ஏழாகப் பகுத்துக்கொடுத்து யோகத்தையடைந்தான். அங்கு ஈசானம் ஊருசிங்கம் பலபத்திரம் சதகேசரம் சகஸ்ரஸ்ரோதகம் தேவபாலம் மகாசனம் என்னும் ஏழுபர்வதங்களும், அனகா பிரதமா ஆயுர்த்தா உபயசிருஷ்டி அபராஜிதா பஞ்சபதீ சகஸ்ரஸ்ருதி நிஜதிருதி என்னும் ஏழுநதிகளும் உள்ளன. இந்தத்வீபத்திலுள்ளவர் சத்திய விரதன் கிருதவிரதன் தான விரதன் அநுவிரதன் என்னும் நான்கு வருணஸ்தர்களாக விருப்பர். இவர்கள் எந்தப் பகவான் பிராணவாயு சொரூபமாக விருக்கின்றனை எந்தப்பகவான் சர்வபூதங்களுடைய உள்ளும்புறம்பும் சர்வாந்தர்யாமியாயிருந்து ரக்ஷிக்கின்றனை எந்தப் பகவானிடத்தில் இந்தப் பிரபஞ்சமெல்லாம் சுவாதீனமாயிருக்கின்றதோ அந்தப்பகவானுகிய விஷ்ணுமூர்த்தி நம்மை ரக்ஷிக்கக்கடவரென்று ரஜோ தமோ குணங்களற்று பிராணயாமத்தினால் பூஜிக்கின்றனர்.

புஷ்கரத்வீபம்.

சாகத்வீபத்தைச் சூழ்ந்திருக்கும் தயிர்க்கடலுக்கு இரண்டுபங்கதிகமாயுள்ளது இப்புஷ்கரத்வீபம். இது தயிர்க்கடலைச் சூழ்ந்திருக்கின்றது. இப்புஷ்கரத்வீபம் இதற்குச்சமானமான அளவுள்ள சுத்தஜலத்தினால் சூழப்பட்டிருக்கிறது. அவ்விடத்தில் அக்கினி சுவாலையைப்போல்பிரகாசித்துக்கொண்டிருக்கும் பதினாயிரம்பொன்னிதழுள்ள தாமரைப்பூவிருக்கின்றது. அது பிரஹ்மாவுக்கு ஆசனமாயுள்ளது. இது இங்ஙனமிருக்க முன்சொல்லிய மானசோத்தர பர்வதம் கிழக்கு மேற்கு என்னும் எல்லைகளை அறிவதற்கு இரண்டுபக்கத்தும் இருக்கின்றது. இந்தப் பர்வதத்தினுடைய

உயரமும் அகலமும் பதினாயிரம்யோசனை. இதனைச்சூழ்ந்து நான்கு பக்கத்தும் இந்திரன் முதலிய உலோகபாலகர்களது பட்டணங்களிருக்கின்றன. இதற்குமேல், சூரியன்சென்று மேருபர்வத்தைப் பிரதக்ஷிணமாகவந்து முன்போல் இந்த மானசோத்தர மென்னும் பர்வதத்தில் தோன்றுகின்றான். இவ்வாறு சூரியன் சுற்றி வருவதாகிய அந்தக்காலம் நமக்கு ஓர்வருடமும் தேவர்களுக்கு இரவும் பகலுங்கூடிய ஓர்நாளுமாம். அந்த த்வீபத்தின் இரண்டு வருஷங்களுக்கு பிரியவிரதன் புத்திரனை வீதிஹோத்திரன் தனது புத்திரர்களான ரவணன் தாதகி என்னும் இருவரையும் ஆளும்வண்ணம் அதிபதிகளாக்கினான். அந்த இரண்டெல்லையிலுமுள்ள புருஷர்கள் சகலப்பிராணிகளுடைய கர்மச்செய்கைகளிலுங் கலந்து அவரவர் கர்மங்களையெல்லாம் அறிந்து அந்தந்தகர்மஸ்வரூபமாகவே யிருக்கின்ற பிரஹ்மலிங்கமாயும் பிரஹ்மசொரூபமாயும் பரமேஸ்வரனும் இருக்கின்ற பகவானை ஒன்றுமாயும் அத்வயமாயும் சாந்தமாயும் இருக்கின்ற உனக்கு நமஸ்காரமென்று பக்தி புடையவர்களாய்ப் பூஜிக்கின்றனர். (சு-ம்-36)

பதின்மூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

ஹரிஹி

ஹரிஹி

ஹரிஹி

திற்கும் அப்புறமுள்ள ஐம்பதுகோடி விஸ்தாரமான பூகோளத்தி னுடைய கால்கிலொருபங்கு உயரமுள்ளதாகச் சூரியன் முதலான கிரகங்களுக்கு முன்பியே ஈஸ்வரன் படைத்திருக்கின்றனன். இத்தப் பர்வதப் பிரகாசத்தினாலேயே சூரியன்முதல் துருவன் வரையிலு முள்ள கிரகங்களெல்லாம் காந்தியடைந்து மூன்று லோகத்திற்கும் பிரகாசத்தைச் செய்கின்றன. அதன்மீது நான்கு திக்குகளிலும் பிரமாவினால் சிருட்டிக்கப்பட்டு சமஸ்தலோகத்திற்கும் ஆதாரமாயு மிருக்கும் ருஷபம் புஷ்கரசூடம் வாமனம் பராஜிதம் என்னும் நான்கு திக்கஜங்கள் பிரகாசித்துக்கொண்டிருக்கும். அங்குத் தமது வீரிய வுபப் பிரஹ்மணங்களையும் தமது விபூதிகளாலுண்டாகும் விசுத்த தத்துவ ஐசுவர்யத்தையும்பிரகாசப்படுத்திக்கொண்டு அஷ்டசித்திக ளோடும் விஷ்வக்சேனர் முதலான சேனாதிபதிகளோடும் தனது ஆயுதங்களோடுஞ் சகல லோக க்ஷேமத்தின்பொருட்டு விஷ்ணு பகவான் கற்பாந்த பரியந்தம் தனது மாயையினால் சிருஷ்டிக்கப் பட்ட இவ்வுலகைக் காத்துக்கொண்டிருக்கிறார்.

இம்மலைக்கு வெளியில் யோகீஸ்வரர்களுக்கு வழியான சுத்த மான ஆகாயமிருக்கின்றது; ஆனால் அந்த சூரியப் பிரகாசமில்லை. பிரமாண்டத்தின் மத்தியிலிருக்கிற சூரியன் இப்பூமி ஆகாயம் இவ்விடத்தில்மாத்திரம் பிரகாசிக்கின்றன். சூரிய அண்டத்திற் கும் பூலோகத்திற்கும் மத்தியில் இருபத்தைந்துகோடி யோசனை தூரமிருக்கிறது. மிர்த்தண்டத்தினின்றும் பிறந்தபடியால் மார்த் தாண்டனென்றும் இரணியகர்ப்பத்திலிருந்து பிறந்தபடியால் இரண்டாண்டசமுத்பவன் என்றும் பெயர்பெற்ற சூரியன திக்கு கள் ஆகாயம் நரகம் சுவர்க்கம் பூமி இலைகளின் பேதங்களைத் தெரி யப்படுத்துகின்றன. சுவர்க்க மோக்ஷ நரகத்திற்கும் தேவர்களுக் கும் மானுடர் முதலான சர்வராசிகளுக்கும் சூரியன் அந்தர்யாமி யான கடவுளாக இருந்துகொண்டிருக்கின்றன். அச்சூரியன் தி கள் நிஷ்பாவாதி என்னும் தளங்களுக்கு மத்தியிலிருந்துகொ ண்டு கிரணங்களால் மூன்றுலோகங்களையும் பிரகாசப் படுத்துகின் றன். உத்தராயணத்திற்கு வரும்போது உயர ஏறுகின்றபடியால் ருஷபமுதல் ஐந்துராசிகளில் மெல்லநடந்து பகலை விருத்திசெய்யும் க்ஷணயனத்துக்கு வந்து கீழிறங்குவதினால் விருச்சிகமுதல் ஐந்து ராசிகளில் வேகமாய்நடந்து பகலைச் சுருக்கியும், விஷுவத் என்கிற

பெயரையடைந்து மேஷ துலாராசிகளில் சமமாய் நடப்பதினால் இராப்பகலைச் சமமாக்கியும் வருகிறன் என்றனர். (6-ம் - 28½

பதினைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

ஹாலா மதா லஸாயை நமஃ

பதினைந்தாம் அத்தியாயம்.

ரவி கமன மாந்தியாதி ப்ரகாரம்.



நாராயணர் கூறுகின்றார்:— இனிச் சூரியனுடைய நடையைப் பற்றிச் சொல்லுகிறேன் கேட்பீராக:—சீக்கிரநடை, மந்தநடை, அதிவேகநடை என நடை மூன்றுவகைப்படும். எல்லாக் கிரகங்களுக்கும் மூன்று ஸ்தானங்களுண்டு. அவை ஜாத்கவமென்னும் மத்தியஸ்தானம், ஐராவதம் என்னும் உத்தரஸ்தானம், வைஸ்வாநரம் என்னும் தக்ஷிணஸ்தானம் என்பவைகளாம். அஸ்வனி பரணி கிருத்திகை இம்மூன்றும் நாகவீதி என்றும், உரோகணி மிருகசீரிஷம் திருவாதிரை இம்மூன்றும் கஜவீதி என்றும், புனர்ப்பூசம் பூசம் ஆயிலியம் இம்மூன்றும் அயிராவதிவீதியென்றும், இம்மூன்று வீதியும் உத்தரமார்க்கமென்றும், மகம் பூர்வ பல்குனி உத்தர பல்குனி இம்மூன்றும் ருஷபவீதி என்றும், அஸ்தம் சித்திரை சுவாதி இம்மூன்றும் கோவீதி என்றும், விசாகம் அனுஷம் கேட்டை இம்மூன்றும் ஜாரத்கவி வீதி என்றும், இம்மூன்றும் மத்தியமார்க்கம் என்றும், மூலம் பூராடம் உத்திராடம் இம்மூன்றும் அஜவீதி என்றும், திருவோணம் அவிட்டம் சதயம் இம்மூன்றும் மார்க்கிவீதி என்றும், பூரட்டாதி உத்திரட்டாதி ரேவதி இம்மூன்றும் வைஸ்வானரி என்றும், இம்மூன்றும் தக்ஷிண மார்க்கமென்றும் சொல்லப்படும்.

சூரியன் உத்தராயணத்தை யடைந்து நாகத்தடியின் கயிற்றை இழுத்துப் பிடிப்பதாகிய ஆரோகணத்தால் தேரின் நடை மந்தமாய்ப் பகல் வீருத்தியடைந்தும் இரவு சுருங்கியும், தக்ஷிணயனத்தை யடைந்து மண்டலத்திற்கு வெளியே சென்று கயிற்றைத்தளர விடுவதாகிய அவரோகணத்தால் நடைவேகமாய்ப் பகல் குறைந்தும்

இரவுவிருத்தியடைந்தும், கயிற்றைஇழுக்காமலும் தளரவிடாமலும் மண்டலத்தின் மத்தியில் செலுத்தும்பொழுது சமமாய் இரவும் பகலும் சமத்தையடைந்தும் வருகின்றன. துருவன் தன்னிடத்துள்ள கயிற்றை எப்பொழுது இழுத்துப்பிடிக்கின்றனே அப்பொழுது சூரியன் மண்டலத்தினுள்ளும், எப்பொழுது தளர விடுகின்றனே அப்பொழுது புறம்பும் சுற்றி வருகின்றன்.

மேருபர்வதத்தின் கிழக்கில் தேவதானிகா என்னும் இந்திரபட்டணமும், தெற்கில் சம்யமம் என்னும் யமபட்டணமும், மேற்கில் நிம்லோசனி என்னும் வருணபட்டணமும், வடக்கில் விபாவரி என்னும் குபேரபட்டணமும் இருக்கின்றன. சூரியன்தேவதானிகா பட்டணத்தில் வரும்போது உதயகாலமும், சம்யம பட்டணத்தில் வரும்போது மத்தியானகாலமும், நிம்லோசனிபட்டணத்தில் வரும் போது அஸ்தமனகாலமும், விபாவரிபட்டணத்தில் வரும்போது அர்த்தராத்திரி காலமும் ஆகும். இக்கால வேற்றுமைகள் ஜனங்கள் அவ்வக்காலமறிந்து சஞ்சரிப்பதற்கு உண்டாயிருக்கின்றனவேயன்றி, சூரியன் எப்பொழுதும் இருப்பவனுதலால் அவனுக்கு உதயாஸ்தமனங்கள் கிடையாது. அச்சூரியன் மேருபர்வதத்தை எப்பொழுதும் சுற்றிக்கொண்டு வருவதால் ஒருபக்கம் உதயமும் ஒருபக்கம் அஸ்தமனமும் ஆகின்றனென்றும், இப்படியே சகல திக்குகளிலும் மூலைகளிலும் ஆகின்றனென்றும், யாருக்கு எவ்விடத்தில் காணப்படுகின்றனே அவ்விடத்தில் உதயமானனென்றும், எவ்விடத்தில் மறைகின்றனே அவ்விடத்தில் அஸ்தமனமானனென்றும் சொல்லப்படுகிறன். இந்திரன் முதலானவர்களுடைய எதிரில் இருந்துகொண்டு சூரியன் மூன்று பட்டணத்தில் சம்பந்திக்கிறன். விகாணஸ்தானத்திலிருந்துகொண்டு இரண்டு விகாணஸ்தானங்களையும், மூன்று மூலைகளையும், இரண்டு பட்டணங்களையும் சம்பந்திக்கிறன்.

எல்லாத்வீப வருஷங்களுக்கும் மேருமலை வடக்கிலிருக்கிறது. எவ்விடத்தில் சூரியன் காணப்படுகின்றனே அங்குள்ளவர். அந்தத் திக்கை கிழக்கென்று சொல்லுவர். சூரியன் முகமாய்நின்று உதயமாகிறனென்று சொல்லுவோருக்கு மேருபர்வதம் இடப்பாகத்திலிருக்கின்றது. சூரியன் இந்திர பட்டணத்திலிருந்து ஐம்பது விநாடிக்குள் இரண்டரைகோடியே பன்னிரண்டரை லக்ஷத்து

இரண்டாயிரம் யோசனை தாண்டி யமபட்டணத்தை அடைகிறான். இவ்வாறே மேற்கு வடக்கு கிழக்கு திக்குகளை மேற்கண்ட காலத்துக்குள் அவ்வளவுதூரம் தாண்டிவருகிறான். ஆகாயத்துக்கு இரத்னம்போலிருக்கின்ற கால சக்கரமாகிய சூரியன் சுற்றிவருவது காலத்தைத் தெரியப்படுத்துவதற்கேயாம். அவ்வாறே சந்திரனும் நக்ஷத்திரம் முதலான சகலகிரகங்களும் வரிசைக்கிரமமாக சூரியனுடனே திரிந்து உதயாஸ்தமனங்களை யடைகின்றன. இவ்வாறு சூரியன் தேரானது ஒரு முகூர்த்தத்துக்குள் முப்பத்துநான்கு லட்சத்து எண்ணூறுயோசனைதூரம் சுற்றுகின்றது. சூரியனது கால சக்கரம் ஆகாயத்தில் செல்லுகிறது. அத்தத்தேருக்கு ஒரே சக்கரம் பன்னிரண்டு இலைகள் மூன்றுவாய் ஆறுவட்டை இவைகளை எல்லாம் சேர்த்து ஒரு வருஷமென்று பண்டிதர்கள் சொல்லுகின்றார்கள். முப்பத்தாறுலட்சம் யோசனை உயரமும் அதில் நான்கிலொரு பாகம் அகலமுமுள்ள சூரியனது தேரில் சாரதியாக ஏற்படுத்திய அருணனால் கட்டப்பட்ட ஏழு குதிரைகள் உலக க்ஷேமத்தின் பொருட்டு அந்தத்தேரை இழுத்துக்கொண்டு போகின்றன. வாலகில்யரென்னும் அறுபதினாயிரம் ருஷிகள் வேதவாக்கியங்களினால் சூரியன் முன்னின்று தோத்திரஞ் செய்வதன்றி வேறு ருஷிகளும் கந்தர்வர்களும் அப்சரஸ்திரீகளும் சர்ப்பங்களும் ராக்கதர்களும் தேவர்களும் அச்சூரியனைத் துதிக்கின்றனர். அந்தச்சூரியன் ஒன்பதுகோடியே லட்சத்து ஐம்பத்திரண்டாயிரம்யோசனை சுற்றளவும் இரண்டு குரோசம்விஸ்தாரமும் உள்ள பூமண்டலத்தை ஒருக்ஷணத்துக்குள் சுற்றிவருகின்றான் எனறனர். (6-ம்-45)

பதினைந்தாம் அத்தியாயம் முற்றற்று.

ஸகார ரூபாயை நமஃ

பதினாறும் அத்தியாயம்.

சோமாதீனும்கமன வ்ருத்தாந்தங்கள்.

நாராயணர் கூறுகின்றார்:—நாரதரே! இனிச்சந்திரன் முதலிய கிரகங்கள் செல்லும் விசித்திரமான கதிகளைச் சொல்லுகிறேன்:

குலாலன் சுழற்றுகின்ற சக்கரத்தில் தங்கிய புழு முதலிய வேறு ஜன்மங்கள் அச்சக்கரம் சுழலும்போது அச்சுழற்சி அவை

களுக்கும் உண்டாவதுபோல் நவக்கிரக சக்கரத்தில் பொருந்திச் சுழல்கின்ற மனிதர்களுக்கு சுபாசுபமாகிய பலன்கள் மாறிமாறி உண்டாகின்றன. ஓ நாரதரே! இராசிக்கூட்டத்தினாலும் கால சக்கரத்தினாலும் மேருபர்வதத்தை எப்பொழுதும் பிரதக்ஷணமாகச் சுற்றிவரும் சூரியன்முதலிய கிரகங்கள் நக்ஷத்திரங்களின் மத்தியில் திரிகின்றதினாலும் வேறு வேறு ராசிகளை யடைகின்றதனாலும் அந்தக் கிரகங்களுடைய நடைகள் வேறுபோல் காணப்படுகின்றன.

ஆதிபுருஷனையும் உலகத்தைச் சிருஷ்டிக்கின்றவனையும் அதற்காதாரமாயும் உள்ள நாராயணன் ஆன்மாக்களுக்குக் கர்மசக்தியுண்டாதற்பொருட்டு தனது ஆன்மாவைச் சூரியன் முதலிய கிரகசொரூபியாகப் பரிணமிக்கச்செய்து திரிந்துகொண்டிருக்கின்றன் என்று வேதங்களாலும் வித்துவான்களாலும் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. ஆகலான் வசந்தருது முதலிய ஆறு ருதுக்களில் நாராயணர் காலரூபியாய் அந்த ருதுக்களுக்குரிய குணங்களைப்பிரகாசப்படுத்துகின்றார். இவரை மானுடர்கள் வேதங்களாலும் வருணமங்களாலும் கர்மானுஷ்டானங்களாலும் யோகமார்க்கத்தினாலும் பக்தி சிரத்தையோடு வழிபட்டு மேன்மையடைகின்றனர்.

அந்த நாராயணர் ஆகாயம் பூமி அந்தரம் என்னும் மூன்றிடங்களில் காலசக்கரத்தையடைந்து பன்னிரண்டு இராசிகளால் பன்னிரண்டு மாதங்களாகப்பிரித்து அம்மாதங்கள் கூடியது ஓர் வருடமென்றும், இரண்டு பக்ஷங்கூடியது ஓர் மாதமென்றும், பகலும் இரவுங்கூடியது ஓர் நாள் என்றும், இரண்டேகால் நக்ஷத்திரங்கூடியது ஒரு ராசி என்றும், இரண்டுமாதங்கூடியது ஒரு ருது என்றும், சூரியன் ஆகாயமார்க்கத்தில் வலம் இடமாக வருதலாகிய உத்தராயண தக்ஷிணாயனங்களை இரண்டயனங்களென்றும் சொல்லப்படும் அங்கங்களாக்கினர்.

சூரியன் ஆகாயத்தில் சஞ்சரிப்பதனால் உண்டாகும் காலமுழுவதையும் தனக்குள் அடக்கிக் கொண்டிருப்பதனால் வத்சர மென்றும், அது சம்வத்சரம் பரிவத்சரம் இதாவத்சரம் அநுவத்சரம் இத்வத்சரம் என ஐந்துவகையாமென்றும், அந்தவகை சூரியனுடைய மந்தநடை சீக்கிரநடை சமநடைகளால் உண்டாகுமென்றுங் கூறுவர். இதுவரையில் சூரியனுடைய கமனகதிகளைக் கூறினேன். இனிச் சந்திரன் முதலியோருடைய கமனகதிகளைக் கூறுகின்றேன்.

சந்திரன் சூரியனுடைய காந்தியினல் சூரியனுக்கு லக்ஷம் யோசனை உயரத்திலிருந்துகொண்டு சூரியனுடைய ஒருவருடபலனை இரண்டுபக்ஷங்கூடிய ஒரு மாதத்தில் கொடுக்கின்றன். வேகமான கதியுள்ள சந்திரன் நக்ஷத்திர சக்கரத்தையடைந்து இரண்டேகால் நக்ஷத்திரத்தால் தினபலனையும் வருஷபலனையுங் காட்டிக்கொண்டு சஞ்சரிக்கின்றன். அச்சந்திரன் பூரணகலைகளுடன் கூடியிருக்குங் காலத்தில்தேவர்களுக்கும், க்ஷீணகலைகளுடன் கூடியிருக்குங்காலத்தில் பிதர்க்களுக்கும் சந்தோஷத்தை விளைவித்து, கிருஷ்ணபக்ஷத்தில் இருளையும், சுக்லபக்ஷத்தில் பிரகாசத்தையுங் காட்டி எல்லாப் பிராணிகளுக்கும் பிராணனை விருக்கின்றன். இவன் ஒவ்வொரு நக்ஷத்திரத்தையும் முப்பது முகூர்த்தகாலம் வரையில் அனுபவிக்கிறன். அன்றியும் மனுமயனையும் உன்னமயனையும் அமிர்தமயனையும் அமிர்தத்துக்கு ஆகரனையும் அமிர்தமயமான காந்தியுள்ளவனையும், பதினாறு கலைகளையுடையவனையும் தேவர்கள் பிதர்க்கள் மானுடர்கள் ஸ்தாவரங்கள்முதலிய யாவர்க்கும் தனது தாரையால் சுகத்தை யுண்டுபண்ணுகின்றவனையும் இருத்தலால் சர்வமயன் என்று சொல்லப்படுகிறன். இந்தச் சந்திரன் மூன்றுலக்ஷம் யோசனை தூரத்திலுள்ள நக்ஷத்திர சக்கரத்தில் மேருபர்வதத்தைப் பிரதக்ஷிணமாக ஈச்வரனல் சேர்க்கப்பட்ட அபஜித்து நக்ஷத்திரத்தோடு இருபத்தெட்டு நக்ஷத்திரங்களையடைகிறன்.

இதற்குமேல் உலகத்திற்கு மிக்க அனுகூலத்தையும் சுகத்தையும் உண்டாக்குகின்றவனையும் மழையினுடைய தடையை நிவர்த்தி செய்கின்றவனையும் தீவரம் மந்தம் சமம் என்னும் மூன்றுகடையினையுடையவனையும் உள்ள சுக்கிரன் சூரியனுக்கு இரண்டுலக்ஷம் யோசனைக்குமேல் இருக்கின்றன்.

இம்மண்டலத்திற்குமேல் புதன் இரண்டுலக்ஷம் யோசனை உயரத்தில் சுக்கிரனைப்போலவே முன்சொன்ன மூன்று கடையோடுங் கூடிச் சுற்றிக்கொண்டிருக்கின்றன். இவன் எப்பொழுது சூரியனை விட்டுப் பிரிகின்றனோ அப்பொழுது பெருங்காற்று இடி மழை முதலான பயத்தை உண்டாக்குவன்.

இப்புதனுக்குமேல் இரண்டுலக்ஷம் யோசனை உயரத்தில் அங்காரகன் ஒவ்வொரு ராசியில் மும்மூன்றுபக்ஷம் வசிக்கின்றன். பன்

னிரண்டு வருடம் வரையில் வக்கிரிக்காமலிருந்தால் கிரகங்களின் அசுபத்தை அனேகமாய்த் தெரியப்படுத்துவான்.

இதற்குமேல் இரண்டுலக்ஷம்யோசனை உயரத்தில் பிரகஸ்பதி ஒவ்வொருராசியில் பன்னிரண்டுமாதம் சஞ்சரிக்கின்றார். இவர் வக்கிரிக்காமலிருப்பாரானால் பிராமணர்களுக்கு அனுகூலமாம்.

இதற்குமேல் இரண்டுயோசனை உயரத்தில் கோரரூபியான சனி பகவான் ஒவ்வொருராசியில் முப்பதுமாசம் சஞ்சரிக்கின்றான். சூரியன் புத்திரனை இவன் கிரகங்களுக்குள் அசுபனென்று காலம் அறிந்தவர்களால் சொல்லப்படுகிறான்.

இதற்குமேல் பதினெருலக்ஷம்யோசனை உயரத்தில் சப்தருஷி மண்டலம் இருக்கின்றது. அதில் உலகங்களுக்கெல்லாம் க்ஷேமத்தை விரும்புகின்றவர்களான ஏழுருஷிகளும் ஆகாயத்தில் பிரதக்ஷணமாகச் சுற்றுகின்றார்கள் என்றனர். (6-ம்-37.)

பதினைரும் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

ஸர்வக்ஞாயை நமஃ

பதினேழாம் அத்தியாயம்.

துருவமண்டலஸ்தானம்.

நாராயணர் கூறுகின்றார்:—சப்தருஷி மண்டலத்துக்குமேல் பதின்மூன்று லக்ஷம்யோசனை உயரத்திலுள்ள விஷ்ணுபதத்தில் மகா பாகவதனையும் ஐச்வர்யவானையும் யாவராலும் நமஸ்கரிக்கப்பட்டவனையும் உத்தானபாதனுடைய புத்திரனையும் இந்திரன் அக்னி காசிபர் தருமன் இவர்களோடு வாசஞ்செய்பவனையும் சுற்பாந்த பரியந்தம் ஜீவித்திருக்கின்றவனையும் உள்ள துருவன் அதிவேகமாய்ச் சுழலுகின்ற சகல ஜோதிர் கணங்களுக்கும் நவக்கிரக நக்ஷத்திரங்களுக்கும் ஆதார ஸ்தம்பம்போல் ஈச்வரனால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றான்.

மேழியில் கட்டப்பட்டு பிணையடிக்கும் பசுக்களைப்போல் காலசக்கரத்தில் எல்லாக்கிரகங்களும் வரிசையாய்க் கட்டப்பட்டவைகளாய் டேகை முதலான பக்ஷிகள் ஆகாயத்தில் உலாவுதல்போல் சுற்

பாந்தபரியந்தம் கர்மத்தைச் சாரதியாக்கி பிரகிருதி புருஷனுடைய சம்பத்தத்தால் பூமியில் விழாமல்துருவனைச்சுற்றி வருகின்றன. அந்தச்சக்கரம் சிசுமார சொரூபமாயும் சோதிரூபமாயும் கீழ்நோக்கிய பார்வையுடையதாயும் குண்டலம்போல் விருத்தாகாரமாயும் வலப்பக்கமாய்ச் சுழல்வதாயும் உள்ளது. இதனைச் சிலர் பகவானுடைய யோக கர்மத்தில் உபயோகப் படுத்துகின்றனர்.

இந்தச்சக்கரத்தின் வாலடியில் துருவனும், வால் நடுவில் பிரமனும், வால்நுனியில் அக்னி இந்திரன் இயமன் தாதா விதாதா இவர்களும், இடுப்பில் சப்தருஷிகளும், வலப்பக்கத்தில் உத்தராயண நக்ஷத்திரங்களும், இடப்பக்கத்தில் தக்ஷிணாயன நக்ஷத்திரங்களும் தாபிக்கப்பட்டிருக்கின்றன. அஜவீதியினுடைய பின்பாகத்தின் வலப்பக்கத்தில் புனர்வசுபுஷ்யமும், இடப்பக்கத்தில் திருவோணம் அவிட்டமும், பின் கால்களில் வலப்பக்கத்தில் ஆருத்திராவும், இடப்பக்கத்தில் ஆயில்யமும், சக்கரத்தின் வலப்பக்கத்தில் அபஜித்தும், இடப்பக்கத்தில் உத்திராடமும், வலக்கண்ணில்சிராவணமும், இடக்கண்ணில் பூர்வாஷாடமும், வலக்காதில் அவிட்டமும், இடக்காதில் மூலமும், இடப்பக்கத்திலிருக்கின்ற வளைந்த ஸ்தானத்தில் மகம்முதலான எட்டுஉத்தராயண நக்ஷத்திரங்களும், வலப்பக்கத்திலிருக்கின்ற வளைந்த ஸ்தானத்தில் மிருகசீரிஷ முதலிய எட்டு நக்ஷத்திரங்களும், கழுத்தின் வலப்பக்கத்தில் சததாரையும், இடப்பக்கத்தில் ஜேஷ்டா தாரையும், அது என்னும் மேல் நாம்பில் அகஸ்திய முனிவரும், கீழ்நாம்பில் இயமனும், முகத்தில் அங்காரகனும், உபஸ்தானத்தில் சனியும், முசுப்பின்மேல் பிரகஸ்பதியும், மார்பில் சூரியனும், இருதயத்தில் நாராயணரும், மனசில் சந்திரனும், ஸ்தனங்களில் அஸ்வனி தேவதைகளும், நாபியில் சுக்கிரனும் பிராண அபானஸ்தானங்களில் புதனும், கண்டத்துக்குள் இராகுகேதுக்களும் எல்லா ரோமத் துவாரங்களில் எல்லா நக்ஷத்திரங்களும் தாபிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வகைத்தான சிசுமார சக்ரமானது விஷ்ணு மூர்த்தியினுடைய சர்வதேக சொரூபமான சரீரம். இச்சரீரத்தை முனிவர்கள் நாடோறும் சந்தியா காலங்களில் பரிசுத்தர்களாயும் மவுனமாயும் தியானிக்கின்றார்கள். ஆகாயத்தை நோக்கினவர்களால் "நமோ ஜோதிர்லோகாய காலாய நிமிஷாம்பதயே மஹா புருஷாயா பிதி

மஹீ" என்னும் மந்திரத்தினால் ஜோதி சக்கரத்தை மூன்றுகாலத்திலும் ஜபித்துப் பூஜித்தால் பாவங்களெல்லாம்போம். இரக நக்ஷத்திர முதலியவற்றை ஸ்தாபித்துள்ள இந்தத் தெய்வ சக்கரத்தை முக்காலங்களிலும் நமஸ்கரித்தால் அதுவரையிலுள்ள பாவங்களெல்லாம் நீங்கிவிடும் என்றனர். (6-ம்-29.)

பதினேழாம் அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ

ஸர்வேச்வரீ நமஃ

பதினெட்டாம் அத்தியாயம்.

இராகுமண்டல ஸ்தானம்.

நாராயணர் கூறுகின்றார்:—சூரியமூர்த்திக்குக்கீழ் பதினாயிரம் யோசனை தூரத்தில் ராகு மண்டலம் இருக்கின்றது. நக்ஷத்திரம் போல் சஞ்சரிக்கின்ற சிம்ஹிகா புத்திரனை ராகு என்பவன் நக்ஷத்திரங்களோடு சேர்த்தகாரணத்தினால் ஆகாயத்தில் சஞ்சரிப்பதையும் அமரத்தன்மையையும் அடைந்து பௌர்ணமியில் சந்திரனைப் பதின் மூவாயிரயோசனை விஸ்தாரமுள்ளவனாகவும் அமாவாசையில் சூரியன் காந்தியை ஆயிரம் சூரியனளவுள்ளவனாகவும் தூரத்திலிருந்து மறைத்து தன் வியாபத்தை வெளிப்படுத்துகின்றவனாகின்றான். இச்செய்தியை விஷ்ணுமூர்த்தி அறிந்து அக்னி சுவாலைகளால் சூழப்பட்ட சுதரிசனம் என்னும் சக்காயுதத்தை ஏவ, அதனைக்காணும் ராகு ஓர் முகூர்த்தகாலம் பயந்தவனாய் சூரியசந்திரர்களை விட்டுத்திரும்புகின்றான். இதனை உலகில் உபராகம் என்று சொல்லுகின்றனர்.

அதன்கீழ் புண்ணியசீலர்களான சித்தர் சாரணர் வித்தியாதரர் இவர்களுக்குப் பதினாயிரம் யோசனை விசாலமுள்ள உலகங்களிருக்கின்றன. அவைகளின் கீழ் யக்ஷர் ராக்ஷசர் பிரேதங்கள் பூதங்கள் இவர்களுக்கும் உத்தமமான ஸ்தானங்களிருக்கின்றன. ஆகாயத்தில்எவ்வளவுதூரம் வாயுசஞ்சரிக்கின்றதோ அவ்வளவுதூரம் அந்தரிக்ஷமென்றும், மேகங்கள் சஞ்சரிக்கும் ஸ்தானபரியந்தம் அந்தாக்ஷமென்றும், அதற்குக்கீழ் நூறுயோசனை பரியந்தம் கரு

டன் டேகை அன்னப்பட்சிராஜா இவைகள் சஞ்சரிக்கத்தக்கவிடம் பூமி என்று பெயர் பெறும்.

ஓ தேவருஷியே! பூமியின்கீழ் நூறுயோசனை விசாலமுள்ள ஏழு பிலத்துவாரங்களிருக்கின்றன. அதற்குள் பதினாபிரம் யோசனை விசாலமுள்ள அதலம், விதலம், சுதலம், தராதலம், மகாதலம், ரசாதலம், பாதாளம் என்னும் ஏழுலோகங்கள் ஒன்றின்கீழ் ஒன்றாக அமைந்து கிடக்கின்றன. அங்கு மாயையில் வல்ல மயனால் நிர்மிக்கப்பட்ட தேவர்களுக்குங் கிடைத்தற்கரிய அழகான பட்டணங்களும், சுகத்தை மிகுதியாகக்கொடுக்கும் விசித்திரமான கிருகங்களும் கோபுரங்களும் சபைகளும் உத்தியான வனங்களும் அவ்விடங்களில் சுரர், அசுரர், நாகர் இவரெல்லாம் தத்தம் மனைவிகளுடன் உல்லாசமாயுமிருப்பர். மாடப்புறா மைநா முதலிய பக்ஷிக் கூட்டங்கள் தத்தம் பேடைகளுடன் மகிழ்ந்திருக்கும் பலவர்க்கங்களாலும் புஷ்பவகைகளாலும் மனத்துக்குச் சந்தோஷத்தைத்தரும் பெரிய தோட்டங்களும், ஸ்திரீகள் கிரீடிக்கத்தக்க கிரீடாஸ்தானங்களும் நானாவிதமான பக்ஷிகள் உலாவிக்கொண்டிருக்கும் தடாகங்களும் மச்ச முதலான ஜலசரங்களால் அலங்காரமாய்க்காணப்படும் நீர் நிறைந்துள்ள மடுக்களும் குட்டைகளும் ஆம்பல் கருநெய்தல் செங்குவளை முதலிய மலர்கள் நெருங்கியிருக்கும் ஓடைகளும் பஞ்சேந்திரியங்களுக்கு இன்பத்தை யுண்டுபண்ணப்பட்ட நானாவிதமான மானத சரசுகளும் தேவர்களுடைய சம்பத்தைக் கீழ்ப்படுத்தி விளங்குகின்றன.

இவ்வாறு நிர்மிக்கப்பட்டிருக்கும் அவ்விடங்களில் தயித்தியர்களும் தானவர்களும் நாகர்களும் பலசாலிகளாய் மனைவிமக்கள் பந்துக்கள் நட்பாளர்கள் வேலைக்காரர்கள் முதலானவர்களோடு தங்களுடைய கிருகங்களில் சந்தோஷத்தோடு கூடினவர்களாய் ஈஸ்வரனுடைய அனுக்கிரகத்தால் தடையில்லாத மாயையோடு காமமுதலானவற்றை யுள்ளவர்களாயும், ருதுக்காலங்களில் உண்டாகும் சுகங்களோடு கூடினவர்களாயும், உத்தியானவனங்களில் கிரீடிக்கின்றவர்களாயும், சுவர்க்கத்தைக்காட்டிலும் அதிகமான காமபோக ஐச்வர்ய சுகசம்பத்துக்களை அனுபவிக்கின்றவர்களாயும் வாசஞ்செய்து கொண்டிருக்கின்றனர்.

அவ்விடங்களில் இராப்பகல் எப்பொழுதும் பயமேகிடையாது. ஏனெனில் அங்குள்ள சர்ப்ப சிரேஷ்டங்களுடைய தலைகளிலிருக்கும் இரத்ன காந்திகளால் இருள்நீங்கி விடுகின்றது. அவ்விடத்திலிருப்பவர்களுக்கு ரசாயனங்களாலும், அன்னபானாதிகளாலும் ஸ்நானங்களாலும் நோயும் கிழத்தன்மையும் நரையும் நிறமாறுதலும் வேர்வையும் துர்க்கந்தமும் சந்தோஷமில்லாதிருப்பதும் கிடையாவாம். விஷ்ணு மூர்த்தியினுடைய தேஜோமயமான சுதரிசனமாகிய சக்கரத்தினால் மிருத்யுபயமுமில்லை. அந்தச்சக்கராயுதம் வெளிப்படும்பொழுது அதைப்பார்க்கின்ற அசுரஸ்திரீகளுடைய கர்ப்பம் கலங்கிப்போம் என்றனர். (சு - ம் - சுசு)

பதினெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

உ

ஸர்வ மங்களாயை நமஃ

பத்தொன்பதாம் அத்தியாயம்.

அதலாதிலோகத்ரய வர்ணனம்.

க. அதலம்.

நாராயணர் கூறுகின்றார் :—ஓ நாரதரே! அதலத்தில் மயன் புத்திரனை பலன்பிரசித்தனுய் சர்வப்பிரயோசனத்தையுங்கொடுக்க வல்ல தொண்ணூற்றாறு மாயைகளைச் சிருட்டித்தான். மாயாவித்தையில் விருப்பமுள்ள அனேகர் அவைகளை உபயோகப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். பலசாலியான அவன் கொட்டாவி விடும் பொழுது உலகினரை மோகிக்கச்செய்பவல்ல புஞ்சலி ஸ்வைரணி காமனி என்னும் மூன்று ஸ்திரீகள் வெளியில்வருவர். அவர்கள் பிலவழியாகப் பிரவேசிக்கின்றவரை இரகசியத்தில் ஆடகமென்னும் ரசாயனத்தினால் மிகுந்த முயற்சியோடு சுவாதீனம் செய்துகொண்டு தங்களுடைய விலாசமான பார்வையாலும், அன்போடு பொருந்திய புன்சிரிப்பாலும், ஆலிங்கனம் செய்வதனாலும், விநோதமான வார்த்தைகளாலும் சந்தோஷத்தை விளைவித்துக் கிரீடித்துக்கொண்டிருக்கும்பொழுது அவர்களை அனுபவிக்கும் புருஷர்கள் நாம்தான்

ஈச்வரன் நாம்தான் சித்தன், நமக்குப்பதினாயிரம் யானைபலம் இருக்கின்றதென்று மதம் பிடித்தவர்கள்போல் தம்மைத்தாமே புகழ்வார்கள்.

உ விதலம்

விதலத்தில் ஆடகேச்வரர் தனது பிரமதகணங்களால் சூழப்பட்டவராயும் பிரமனால் சிருட்டிக்கப்பட்ட சிருட்டிகளை விருத்தி செய்கின்றவராயும் தேவர்களால் பூஜிக்கப்பட்டவராயும் இருக்கின்றார். அவ்விடத்தில் பார்வதி பரமேச்வரருடைய வீரியம் ஆடகமென்னும் நதியாகப் பெருகி ஓடுகின்றது. அதில் உண்டாகின்ற ஆடகம் என்னும் சிறந்தபொன்னை தயித்தியஸ்திரீகள் பூஷணங்களாக்கி எப்பொழுதுந் தரித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

௩. சுதலம்.

சுதலத்தில் பலிச்சக்கிரவர்த்தி நல்ல கீர்த்தியுடனும் இந்திராதியரினும் சிறந்த சம்பத்துடனும் விஷ்ணுவைப்பக்தியோடு பூஜித்துக்கொண்டும்இருக்கின்றனன். விரோசனன்புத்திரனான அவனிடம் திருமால் இந்திரனுக்குப் பிரீதியை யுண்டாக்கும்பொருட்டு வஞ்சனையான எண்ணத்தோடு வாமனராய்வந்து அவனது சரீரந்தவிரமற்ற சம்பத்துக்களையும் திரிவிக்ரமரூபங்கொண்டு அவனால் ஆளப்பட்ட மூவுலகினையும் ஆக்ரமித்துப்பின் அவனை வருணபாசங்களாற் கட்டி மலையின்குகைபோன்ற இப்பிலத்தில் விட்டுச் சுகமாய்வாழ்ந்திருக்கச்செய்து தானும் துவாரபாலகனாயிருந்தனர். ஓர்காலத்தில் அங்கு இராவணன் வர அவனை அந்தவிஷ்ணுமூர்த்தி தனது காற்கடைவிரலால் தூக்கியெறிய அவன் பதினாயிரம் யோசனை தூரம் பிலத்திற்குவெளியே வீழ்ந்தனன்.

ஓ நாரதரே' பலி, விஷ்ணுமூர்த்தி காவலாளியாயிருக்கப்பெற்றும் வருணபாசத்தாற்கட்டி யிருத்தியதற்குக் காரணம்யாதெனின்! விஷ்ணுபக்தி செய்து பெற்ற செல்வங்களையே தான்பெறத் தகும் பயனாகவெண்ணி மகிழ்ந்திருந்தனனேயன்றி கர்மபந்தங்களை நிவிர்த்தி செய்யும் வகையை எண்ணினானில்லை. அதனால் அவனது செல்வத்தை வஞ்சனையால் கிரகித்துக் காவலுட்படுத்தினர். செல்வத்தின் உண்மையறிந்த முநிவர்கள் சாங்கியயோக சாதனங்களால் கர்மபந்தங்களை நிவிர்த்திசெய்கின்றனர். நாம் கர்மநிவிர்த்தியைத் தேடாமையால் சர்வதுக்கத்துக்கும் காரணமாயும் பரமாத்மா

வின் தியானத்தைத் தடுப்பதாயும் இருக்கின்ற மாயாமயமாக போக ஐச்வர்யத்தை வெளிப்படுத்தி அவைகளில் நம்மை மோகப்படுத்துகிறார். கர்மபந்த நிவிர்த்தியுடையவன் பக்தியில்லாதவனாய் நாமத்தை மாத்திரம் யுச்சரிப்பானாயினும் அவன் கர்மபந்தங்களையுதறி பகவானுக்கு ஆளாகின்றான். பிரகலாதன் தனது பிதா முதலிய ஐச்வர்யங்களைமறந்து விஷ்ணுவினுடைய தாசத்தன்மையை விரும்பினானாகலான் அவனது மகிமை மூவுலகிலும் பிரசித்து பெற்றிருக்கின்ற தன்றோ அதனையறிவீர் என்றனர். (௬-ம்-௩௨)

பத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

உ

ஸர்வ கர்த்ரை நம:

இருபதாம் அத்தியாயம்.

தலாதலாதிலோக சதுஷ்டய வர்ணனம்.

ச - தலாதலம்.

நாராயணர் கூறுகின்றார்:—அதலத்திற்குக்கீழ் தலாதலத்தில் திரிபுராதிபதியாய் மயனென்று பிரசித்திபெற்ற இராக்கதன் திரிபுரத்தைச் சங்கரர் தகனம் செய்த காலத்தில் அவருடைய அனுக்கிரகத்தினால் அரசாக்ஷிசெய்து கொண்டிருந்தனன். மாயை அறிந்தவர்களுக்கெல்லாம் குருவும் மாயையில் சமர்த்தனுமான அந்த மயன், தங்களுடைய காரியத்தை நிறைவேற்றிக்கொள்ளவேண்டுமென்கிற எண்ணமுடைய கோரரூபரான அசுரர்களால் பூஜிக்கப்படுகிறான்.

ரு - ரசாதலம்.

ரசாதலத்தில் காத்திரவேயர்களென்னும் சர்ப்பங்கள் மிக்க கோபமுள்ளவைகளாயும் அநேகம் சிரசுகளுடையவாயும் பிராஹ்மணர்களைப் பிரதானமாக உடையனவாயும் இருக்கின்றன. அவைகளில் குகன் தக்ஷன் சுவேணன் காலையன் என்னும் நான்கும் பிரதானமானசாதிகள். இவைகள் நீண்டசரீரமும் மகாபலமும் மகாகுரூரமும் உள்ளன. ஆயினும் கருடனிடத்துள்ள பயத்தினால் வெளி

யேபோலநின்றி இவ்வுலகில் பிரவேசித்துத் தனது பணிவி மக்கள் சினேகருடன் அதிகமதத்தோடு கிரீடித்துக்கொண்டிருக்கின்றன.

சு - மகாதலம்.

மகாதலத்தில் நிவாதகவசர்கள், காலகேயர்களென்று பிரசித்தியடைந்திருக்கின்ற இராக்கதர்கள் தேவர்களுக்கு விரோதிகளாய் ஆகாயத்திற் பறந்துசென்று அங்கிருந்தவண்ணம் மகா சாகசமான காரியங்களைச் செய்கின்றவர். அவர்கள் இந்திரனுடைய தூதியான சரமயினது மந்திரரூபமான வாக்கினால் ஓர்சமபம் அபஜயமடைந்து அடிக்கப்பட்டவர்களாய் இங்கு வசிக்கின்றனர்.

எ - பாதாளம்.

பாதாளத்தில் வாசுகி சங்கன் குளிகன் சுவேதன் தனஞ்சயன் மகாசங்கன் திருதாஷ்டன் சங்கசூடன் கம்பலாஸ்வதான் தேவோபதத்தகன் முதலான நாகலோகாதிபதிகளாயுள்ள பாம்புகள் மிகுந்த கோபமும் நீண்டசரீரமும் அதிகமானவிஷமும் ஐந்து ஏழு பத்து நூறு ஆயிரமாகப் படமும்ஒளிவீசும் இரத்தினங்களை முடிகளிலும் உள்ளவைகளாய் இருக்கின்றன. அவைகளுடைய இரத்தினகாந்திகளால் அங்கு சூழ்ந்திருக்கும் இருள் நாசமடைகின்றது. இவ்வுலகில் மூலஸ்தானத்தில் முப்பதினாயிரம்யோசனை விசாலமுள்ள இடத்தில் தாபசி என்னும் பகவானுடைய கலியான தஅநந்தனென்னும் பெயருள்ளதாய் சகலதேவர்களாலும் பூஜிக்கப்படுகின்றது நானென்னும் அஹங்காரத்திற்கு அந்தத்தாமசத்தையே லக்ஷணமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பார்க்கின்றவர்களுடைய நேத்திரங்களை ஒரு க்ஷணத்தில் இழுத்துவிடுகிறது. இந்தலோகமெல்லாம் ஆயிரம் சிரசுள்ள ஆதிசேஷனால் தாங்கப்பட்டிருக்கிறது.

சங்கர்ஷணரென்னும் உருத்திரபகவான் பதினொருகணங்களுடன் கூடினவராய் முக்கண்ணுள்ளவராய் திரிசூலத்தை எடுத்துக்கொண்டு மஹாபூதங்களையெல்லாம் நாசம்செய்கின்றவராய் எழுந்திருந்தார். அவருடைய திருவடித்தாமரைகளின் சிவந்த நககாந்தியினால் மேலானசர்ப்பங்களெல்லாம் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. அந்த நாகர்களெல்லாம் பக்தியோகத்தோடு சத்துவகுணமுடையவராய் அந்தச்சங்கர்ஷணமூர்த்தியைநமஸ்கரித்துக்கொண்டு தங்கள் தங்கள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பர்.

அவர்களுடைய இரண்டு தாடைகளும் காதுகளில் அணிந்திருக்கும் குண்டலங்களிலுள்ள மணிகளின் ஒளியினால் அழகுபெற்றிருக்கும். ஆதிசேஷனுடைய புத்திரிகளும் அழகான சரீரகாந்தியும் வெண்மையும் மிருதுவும் மனோகரமுமுடைய சரீரிகளாயும் நிர்மலராயும் நீண்டகைகளுடையவராயும் அங்கும் இங்கும் நாகர்களுடன் உலாவிக்கொண்டு சந்தனம் அகில் குங்குமப்பூ முதலியவற்றால் பரிமளிக்கின்றவராயும் சங்கர்ஷணருடைய சம்பந்தத்தினால் காமவேகமும் இனிமையான புன்சிரிப்பும் நாணமும் உடையவராயும் உலகினரைப்பார்ப்பர். அவ்வகைத்தான சர்ப்பக்கூட்டங்களோடு அளவிறந்த பலமும் கீர்த்தியும் நற்குணமும் உடைய ஆதிசேஷன் அவ்விடத்தில் வீற்றிருப்பன். அவன் உலகக்ஷேமத்தை எண்ணி கோபவேகத்தையடக்கி சத்துவகுணமுடையவனாய் சுராசுரர்களாலும் சித்தவித்யாதர கந்தர்வர்களாலும் முனிவர்களாலும் சர்ப்பங்களாலும் போற்றப்பட்டவனாய் யாவரையும் நல்ல நோக்கத்தோடு பார்க்கின்றவனாய் தேவர்களை இனியசொல்லால் திருப்தி செய்வதுமன்றி வைஜயந்தி என்னுங் கொடிமரத்தைத் தரித்தவனாய் நல்லதுளபமாலை வண்டுகள் ரீங்காரம் செய்யும் மணங் கமழும் புஷ்பமாலை நீலவஸ்திரம் முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்டவனாய் குண்டல முடையனாய் கலப்பையின் முதுகில் கையை ஊன்றிக்கொண்டு இந்திரனுடைய யானை பொன்மயமான ஆயுதத்தைத் தரித்திருப்பதுபோல் அலாயுதத்தை ஏந்தி கம்பீரமான லீலாவிநோதத்துடன் சாத்வீக குணமுடையவர்களால் சோபனம்பாட இருப்பன் என்றனர். (சு - ம் - கூஎ)

இருபதாம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

ஸர்வதாத்ரைநமஃ

இருபத்தொன்றாம் அத்தியாயம்.

ஆதிசேஷஸ்துதி, நரகாதிஸ்வரூபம்.

நாராயணர் கூறுகின்றார்:—பிரஹ்மபுத்திரனான சனாதனர் ஆதிசேஷனது விசேடங்களை எண்ணி அவனைப் பிரஹ்ம ஸ்வரூபமாக அறிந்து உபாசித்துத் துதிக்கின்றனர். ஓ ஆதிசேஷனே! உனது இச்

சையே சத்வ ரஜோதமோகுணங்கள் உற்பத்தி நாசங்கட்குக் காரணமாகின்றன. உனது ரூபமானது அழிவில்லாததாய் அமிர்தமயமாயிருக்கின்றது பரமாத்ம சொரூபமான உன்னை உலகில் அறிந்தவர் யாவர்? சத்துவகுணமானது எவனுடைய கிருபையினால் நிலைபெற்றிருக்கின்றதோ சதசத்ரூபமான இவ்வுலகம் எவனிடத்தில்சம்பந்தப்பட்டிருக்கின்றதோ சிம்ஹரூபத்தினிடத்தில் பக்தனை உத்தேசித்து எந்தப்பகவானுடையலீலை வெளிப்பட்டதோ அந்தப்பகவானைத்தன்னிடத்திலுடையவனாகிய உன்னை நமஸ்கரிக்கின்றேன். எவனுடைய நாமத்தை நினையாமல் உச்சரித்தாலும் கேட்டாலும், வியாதி முதலியவற்றால் துன்பப்பட்டேனும் கபடத்தினாலேனும் உச்சரித்தாலும் அவர்களுடைய பயங்களெல்லாம் நாசத்தை யடைகின்றன. அந்தப் பகவானாகிய உன்னைவிட்டு மோக்ஷத்தையடைய வேண்டியவன் எவனை ஆச்ரயிப்பான்? எவன் மலை நதி கடல் முதலியவற்றோடு கூடியிருக்கும் இம்மலைபோன்ற பூகோளத்தை ஓரணுவைபோல் முடியில் தாங்கியிருக்கும் உன்னுடைய பராக்கிரமத்தை ஒருவன் ஆயிரநாவுடையனாய்ச் சொல்ல எண்ணினாலும் முடியுமோ? இப்படிப்பட்ட மகிமையையும் பராக்கிரமத்தையுமுடைய நீ உலக க்ஷேமத்தின் பொருட்டு பூமியைமுடியில் தாங்கி இருக்கின்றனை. என்று துதிக்கின்றனர். ஓ நாதரே! இனிப்புண்ணிய பாபானுபவங்களுக்குக்காரணம் எதுவோ அதனையும், நரகத்தின் நாமங்களையும், அவனை யனுபவித்தற்குரியார் இவரென்பதையும் கூறுகின்றேன் :—

சம்சாரபந்தமுடைய ஆன்மாக்களாகிய அரசர் மாநுடர் ஏனையோர் அவரொழிந்த மிருகமுதலிய பக்ஷிகள் செய்யப்படும் கர்மபேதங்களே புண்ணிய பாவானுபங்கட்குக்காரணம். அவற்றையனுபவிப்பவர் யான் மு லாயினாரே என்று நாராயணர்கூற நாரதர், ஐயா! எல்லாம் செய்பவர் பகவானாயிற்றே, அவர் கஷ்டம் சுகம் என்று இரண்டுபேதமாகச்செய்வானேன் என்றுவினவ நாராயணர் கூறுகின்றார்:- ஓ நாரதரே! பகவான் அவரவர்செய்யும் கர்மங்கட்குரிய பலன்களைவகுத்துச் செய்பவரேயன்றி கர்மங்களைச் செய்பவராகார். ஆகவே ஆன்மாக்கள் சிலர் சத்துவகுணசம்பந்தமுடையவராயும், சிலர் இரஜோகுணசம்பந்தமுடையவராயும் சிலர் தமோகுணசம்பந்தமுடையவராயும் கர்மங்களைச்செய்தவனால் சத்துவகுண சம்பந்தமாகச் செய்யப்படும் கர்மாக்களுக்கு எப்பொழுதும் சுகமும் இரஜோ

குண சம்பந்தமாகச் செயயப்படும் கர்மாக்களுக்கு எப்பொழுதும் துக்கமும், தமோகுண சம்பந்தமாகச் செய்யப்படும் கர்மாக்களுக்கு எப்பொழுதும் துக்கமும் பகுத்தறியும் அறிவின்மையுமாகிய இரண்டும் உண்டாகின்றன. இவற்றின் பேதங்களால் ஆண்மாக்களுடைய அனுபவங்கள் ஆயிரமுகமாக சுகமேயாகவும் துக்கமேயாகவும் இரண்டுமேயாகவும் வருகின்றன. இம்மூக்குணசம்பந்தம்உயிர்களுக் குண்டாவதற்கு மூலகாரணமாயுள்ளது அஞ்ஞானமேயாம் இனி நரகாதிகளையும் அந்நரகங்கள் வருவதற்கான செய்கைகளையும் கூறுகின்றேன் :—

மூன்றுலகங்களுக்கு நடுவிலும், தென் திக்கிலும் பூமியின் கீழும், அதலலோகத்தின்மேலும், அக்னிஷ்வாத்தா முதலானபிதுர்க்கணங்களும் பிதுர்க்களும் இருந்து தமது கோத்திரத்தில் வருகின்றவர்களுக்குச்சிக்கிரத்தில்க்ஷேமம்உண்டாகவேண்டுமென்று கோருகின்றவர்களாய்த் தியானசமாதியிலிருப்பார்கள். இயமதருமன்தன்னிடத்தில் தனது கிங்கிலிபர்களால் கொண்டுவரப்பட்ட உயிர்களைநோக்கி அவரவர்களியற்றிய கர்மாக்களின் வேற்றுமைகளை விசாரித்துத் தகுதிகர்த்தாவாகிய பகவான்நியமித்திருக்கும் விதிகளையறிந்து அவரவர்க்குச்செய்யவேண்டிய தண்டனைகளைத் தூதர்களிடத்தில்சொல்லி அதுபோல்செய்யக் கட்டளையிடுவான். தண்டனைக்குரியநரகங்கள் சிலர் இருபத்தொன்பதென்றும், சிலர் இருபத்தெட்டென்றுங்கூறுவர். இருபத்தெட்டாவன:—தாமிஸ்ரம் அந்தாமிஸ்ரம் ரௌரவம் மகாரவரவம் கும்பீபாகம் காலசூத்ரம் அசிபத்திரவனம் பன்றிமுகம்அந்தகூபம் (பாழ்ங்கிணறு) கிரிமிபோஜனம் சந்தம்சம் வஜ்ரகண்டகம் சான்மலீ வைதரணீ பூயோதம் பிராணரோதம் விசசனம் லாலாபக்ஷம் சாரமேயாதனம் அவீசி அபானம் கூபாரகர்த்தமம் ரக்ஷோகணம் சம்போஜம் சூலப்புரோதம் தந்தசூகம் வடாரோதம் பர்யாவர்த்தனகம் சூசீமுகம் என்பனவாம்.

ஓகாரதரே! இந்நரகங்களில் இயமன் எதையாருக்குவிதிக்கின்றனை அதை அவர்கள் அனுபவிக்கும்படி இயமகிங்கரர் செய்வரென்றனர். (சு - ம் - உ-அ)

இருபத்தொன்றும் அத்தியாயம் முற்றிற்று.

ஸர்வ ஹந்திரைநமஃ

இருபத்திரண்டாம் அத்தியாயம்.

யாதனுகாரக பாதகவர்ணனம்,

நாரதர் கூறுகின்றார்:— நாராயணரே! நீர் முன்னேகூறியபடி நரகபேதங்களைக் கேட்டேன். இனி அந்தநரகவேதனையும் அது வருதற்கு உயிர்கள் செய்வனவற்றையுங் கேட்க விரும்புகின்றேன் என்ன நாராயணர்கூறுகின்றார்:—

க - தாமிஸ்ரம்.

பிறன்பொருளையும் மனைவியையும்சிசுவையும் எவன்கொள்ளை யடிக்கின்றனே அவனைக் காலதூதர் காலபாசத்தாற்கட்டி மகாசங் கடத்திற்குக் காரணமான தாமிஸ்ர நரகத்திற்தள்ளுவர். பின் னர் தண்டாயுதத்தால் அடித்துமிரட்டி எழுந்திருக்குந்தோறும் அதனிற்தள்ளுவர்; அதனல் மூர்ச்சித்துக் கிடப்பான்.

உ - அந்ததாமிஸ்ரம்.

பர்த்தாவை வஞ்சித்து உண்டமனைவி, மனைவியை வஞ்சித்து உண்டபர்த்தா இவர்கள் யமகிங்கரர்செய்யும் வேதனைகளால்வேரற் றமரம்போல் வாடி உலர்ந்து கண்ணிழந்து அந்ததாமிஸ்ரம் என் னும் நரகில் தள்ளப்படுவார்கள். அந்தகர்க்கிடமா யிருத்தலால் அது அப்பெயர்பெற்றது.

ங- ரௌரவம்.

தன்னுடையதல்லாத வீடு தனம் முதலியவற்றைத் தன்னு டையதென்று சொல்வன்மையால் கிரகித்தக்கொண்டு தன்குடும்ப த்தை ரக்ஷித்து பிறர்குடும்பத்தையழிக்கும் பூதத்துரோகி எவனே அவன்மரணகாலத்தில் யாதொருபொருளுமற்று கொடியவரும் அ ஞ்சத்தக்க ரௌரவத்தில் தள்ளப்பட்டு இவனல் பொருளிழக்கப் பெற்றவர் சர்ப்பத்தினும் கொடியவிஷமுள்ள ருரு என்னும் மிருக

வடிவ மெடுத்து அவனை ஹிம்சிப்பார்கள். அதனால் அதுரௌ ரவம் எனப் பெயர்பெற்றது.

ச - மஹாரௌரவம்.

குரு என்னும் அக்கொடிய மிருகங்கள் தூரத்திலிருந்து துன்பப்படுத்துவதேயல்லாமல் பின் அவனைச் சூழ்ந்துகொண்டு வெளியேவிடாமல் துன்பப்படுத்தும்; அதனால் அதைமகாரவரவம் என்று பெரியோர் சொல்லுவர்.

ஞ - கும்பீபாகம்.

மகாகுரூரனைப் பசுபக்ஷி முதலான ஜந்துக்களைக்கொன்றுசமைத்து எவன் உண்ணுகின்றானே அவனை யமபடர்கள் எண்ணெயிற் காய்ச்சி கும்பீபாகத்தில் தள்ளிவிடுவார்கள். அவன் பசுக்களுடைய ரோமங்கள் எவ்வளவுண்டோ அவ்வளவுஆயிரங்காலம் அதிலாழ்ந்துகிடப்பான். கும்பித்தீயில் பாகப்படும் பதார்த்தம் போல் இவனைப்பாகப்படுத்துவதால் அது அப்பெயர் பெற்றது.

ஈ - காலசூத்திரம்.

தாய்தந்தை அந்தணர் இவர்களை ஆதரணை செய்யாமல்எவன் நீக்கிவிடுகின்றானே அவனைக்காலதூதர்கள்காலசூத்திரத்தில்தள்ளுவர். அக்னி சூரியர்கள் தகிப்பர். அதனால்பசிதாகமுதலியவற்றால் பீடிக்கப்பட்டு உள்ளும் புறம்பும் தாபமுடையவராய்ச் சிலசமயம் இருந்தும் சிலசமயம்கிடந்தும் சிலசமயம்நின்றும் சிலசமயம்புரண்டும் சிலசமயம் ஓடியும் வருந்துவர். சூரியன் காலத்தைக்காட்டும் சூத்திரமாயிருத்தலால் அவனால் கொளுத்தப்படும் நரகமும் அப்பெயர் பெற்றது.

எ - அசிபத்திரம்.

தனது சாஸ்திரவழியைவிட்டு எவன் யாதொருகாரணமுமறியாமல் பாஷண்டமதங்களையடைகின்றானே அவன் யமபடர்களால் அசிபத்திரவனத்தில்தள்ளப்பட்டும்அசிபத்திரத்தாற்செய்தசாட்டியினால்அடிக்கப்பட்டும் அங்கும்இங்கும்ஓடும்போதுகற்களால்காலிடரப்பட்டும் அதன்பின் அந்தஅசிபத்திரமாகிய கத்தியினால்வெட்டப்பட்டும் மறுபடியும் அந்தக்கத்தியின் இருபக்கத்துமுள்ள கூர்மையினால் அறுக்கப்பட்டும் இவ்வாறு சரீரமுற்றும் காயமுள்ளவனாய் ஆஹா இறந்துபோயினேன் என்று மூர்ச்சித்து விழுந்து மிக

வும்வேதனையடைந்து மீளவும் எழுந்து எழுந்து இரடி இரடி விழு வான். இப்பொழுது சொல்லிவந்த வேதனைகளைப்போல் பாஷண்ட மதங்கள் எந்தமார்க்கத்தாலும் இன்பஞ்செய்யவறியாது துன்பமே செய்வனவாகலான் அந்தநரகம் அப்பெயர்பெற்றது.

அ - பன்றி முகம்.

எந்த அரசன் பிராஹ்மணனைச் சரீரதண்டனையும் எனையோ ரை அதர்மமாகச் சிக்ஷையும் செய்கின்றானே அவனைக் கால தூதர் பன்றிமுகம்போன்ற நரகில் தள்ளுவர். அதில் அவனு டைய கைகால்களை முறித்து அடித்து கரும்புபோல் ஆலை யில்நெருக்குவர். அதனால் அவன் தீனனைச் சோர்ந்து மூர்ச் சித்து வீழ்ந்துகிடப்பன். செய்வதை அறிந்து செய்யாமல் செய் யாதனவற்றைச் செய்தானகலின் உண்பதையுண்ணமல் உண்ணப் படாதனவற்றை யுண்ணும் பன்றிப்பெயர்பெற்ற அந்நரகம் தண்ட னைக்கிடமாயிற்று.

கூ - அந்தகூபம்

எவன் கீர்த்தியோடிருக்கின்ற பிராஹ்மணனைக் கொலைசெய் கின்றானே, எவன் பிராஹ்மணனை ரகசியமாய்க் கொலைசெய்கின் றானே, எவன் கடவுள்நியமனந்தவறுமல் ஜீவிக்கின்றவனைத் துரோ கஞ்செய்கின்றானே இவர்களையெல்லாம் அந்தகூபத்தில் தள்ளுவர். அதில் அவர்கள் குரூரமானபசுக்கள் மிருகங்கள் பக்ஷிகள் பாம்பு கள் கொசுக்கள் மூட்டுப்பூச்சிகள் ஈக்கள் தேள்கள் முதலிய வற்றால் மிகவும் பீடிக்கப்பட்டுத்தபித்துச் சுழன்றுகொண்டிருப்பர்.

கo - கிரிமிபோஜனம்

எவன் தேவதாபூஜை அதிதிபூஜைமுதலிய பஞ்சயஞ்ஜங்க ளைச்செய்யாமல் போஜனம் செய்கின்றானே அவனை லக்ஷம் யோச னைவிசாலமுள்ளகிரிமிபோஜன நரகிற்தள்ளுவர். அதில் அவன் புழு ரூபமெடுத்து பயங்கரமான அக்குண்டத்தில் வாழும்புழுக்களால் புசிக்கப்படுவான்.

கக - அக்னிகுண்டம்

எவன் பிராஹ்மணனுடையதாவது, வேறு எவனுடையதா வது பொன் இரத்தினமுதலியவற்றைப் பலாத்காரத்தால் அபகரிக்

கின்றனே அவனை எழுகினற்செய்த அக்னிகுண்டத்தில் தள்ளி வாட்டிக்காய்ச்சுவர்.

கஉ - வஜ்ரகண்டகம்.

சேரக்கூடாதஸ்திரீயைச் சேர்ந்தவனையும், சேரக்கூடாத புருஷனைச்சேர்ந்தவளையும் ஜாட்டியினல் அடித்து நன்றாய்க் காய்ச்சியிருக்கும் எழுநூ ஸ்தம்பத்தைத் தழுவியிருக்கும்படிச்செய்வர்.

கஙு - சான்மலீ.

உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் வேற்றுமைஎண்ணுது எல்லாஸ்திரீகளையும் எவன்சேருகின்றனே அவனைச்சான்மலி நரகிற் தள்ளி வஜ்ரகண்டகமென்னும் முட்களால் கொத்திக் கொத்தித் துன்பப்படுத்துவர்.

கசு - வைதரணி.

எந்த அரசாகூியில் அரசரானலும் பாஷண்டரானலும் சாஸ்திரதருமத்துக்குக் கேடுசெய்வாராயின் அவர்களை வைதரணி நரகிற் தள்ளுவர். சலமயமாயிருக்கும். அதில் தள்ளப்பட்ட அவர்கள் அதில்வசிக்கும் கொடியஜல ஜெந்துக்களால் சரீரமுற்றும் கடிக்கப் பட்டானும்இறவாதவர்களாய்த் தங்கள் கர்மபலத்துக்கீடாய் வெளிப்படும்படியான மலமூத்திரங்களானும் புண்களினின்றுங் கசியும் புண்ணீர் உதிரங்களானும், தலைமயிர் எலும்பு நகம் மாம்சம் கொழுப்பு சீ முதலியவைகளானும் நிறைந்துள்ள ஆற்றில் மொத்துண்டு மஹாசங்கடத்தை அனுபவிப்பர்.

கஙு - பூயோதம்.

ஆசாரத்தையும் நாணத்தையும்விட்டு தாழ்ந்தகுலத்து ஸ்திரீயை எவன் சங்கமஞ் செய்கின்றனே அவனும், ஆசாரத்தைவிட்டு பசுபக்ஷிகள் போல் எவன் உலாவி ஜீவிக்கின்றனே அவனும், மலம் மூத்திரம் சிலேத்துமம் உதிரம் இவை நிறைந்துள்ள நரகில் தள்ளப்பட்டவர்களாய் அவைகளையே மாறிமாறிப் புசிப்பவராயிருப்பர்.

கசு - பிராணரோதம்.

எந்தப்பிராஹ்மணன் நாய்கழுதைமுதலான ஈனஜந்துக்களுக்குத் தலைவனுயிருந்து நாடோறும் வேட்டையாடுகின்றனே, எவர்

கள் மிருகங்களைக்கொலைசெய்கின்றூர்களோ அவர்களை யமபடர் கள் பாணங்களாலடித்து வருத்தும்படிச்செய்வர்.

கள - வைசசி.

எவர்கள் டம்பாபிமித்தமாய் பசுக்களைக்கொன்று யாகங்களைச் செய்கின்றூர்களோ அந்தஅதமர்களை வைசசி நரகத்தில் தள்ளிக் குரூரமான ஜாட்டியினல் வீசியடிப்பார்.

கஅ - லாலாபக்ஷம்.

எவன் காமமோகிதனுய் தன்மனைவியைத் தனதுவீரியத்தைக் குடிக்கச்செய்கின்றூனே அவனை இந்திரியகுண்டத்தில் தள்ளிஅதி லாழ்த்தி அதனையே ஆகாரமாக உண்ணச் செய்வர்.

ககூ சாரமேயாதனம்

எந்தக் கள்வர்கள் வீடுமுதலானவற்றில் நெருப்பைவைக்கிறூர் களோ, எவர்கள் விஷத்தை யுண்ணும்படிச் செய்கின்றூர்களோ, எவர்கள் கூட்டங்கூட்டமாய் பிரஜைகளைக் கொல்லுகின்றூர்களோ எந்த அர்சர்கள் ராஜாங்கத்தைப் பாழாக்குகின்றூர்களோ அவர்க ளை நாயுணவைத்தின்னும்படிச் செய்வதல்லாமல் மகாகுரூரமான இருபதுக்குமேற்பட்ட நாய்களால் கடித்துத்தின்னச்செய்வார்கள். எழுநூறு நாய்களால் கடிக்கப்படும் நரகத்துக்கு சாரமேயாதனம் என்றுபெயர்.

இனி அவீசிமுதலான நரகங்களைக் கூறுகிறேன் என்றனர்.

(சு - ம் - டு உ.)

இருபத்திரண்டாம் அத்யாயம் முற்றிற்று.

ஓ

ஸநாதன்யைநமஃ

இருபத்துமூன்றும் அத்தியாயம்.

இதுவுமது.

உ0 - அவீசி

நாராயணர் கூறுகின்றூர்:—ஓதேவருஷியே! எந்தமனிதர்கள், ஒருவருக்கு ஒருபொருளைத் தானம்செய்யும்போதும், பிரீதியாகக்

கொடுக்கும்போதும், சாக்ஷிசொல்லும்போதும் தன்பேரைச்சொல் லுகின்றார்களோ அந்தப் பாவபுத்தி யுடையவர்களை அவீசி என்னும் கொடியநரகத்தில் நூறுயோசனை உயரமுள்ளமலையினுச்சியிலிருந்து விழும்படி யமபடர்கள் தள்ளுவர். அப்படிவீழும்பொழுது அந்த நரகிடமெல்லாம் நீரலைபோல் கண்ணுக்குத் தோன்றும். அந்த அலை தோற்றமாத்திரமாகையால் சரீரம்பொடிப்பொடியாய்ப்போம் போனாலும் உயிர்போவதில்லை. பொடியாய்க்கிடக்கும் அவர்களைக் காலனுதர்களைடுத்துக்கட்டி மீளவும் அந்நரகத்தில் தள்ளுவர்.

உக - பரிபாதனம்.

பிரஹ்மக்ஷத்திரிய வைசியரானாலும் வேறு எந்தச்சாதிய ரானாலும் சோமபான சுராபானங்களைச் செய்வாராயின் அவர் களைப் பரிபாதனநரகில் தள்ளி நெருப்பிற்காய்ச்சி உருக்கியிருக்கும் எழுகிரும்பைக் குடிக்கச்செய்வர்.

உஉ - க்ஷாரகர்த்தமம்.

எந்த அதமன் தன்னையே புகழ்ந்துசொல்லிக்கொண்டு பிறப் பிலும் தவத்திலும் வருணத்திலும் ஆஸ்ரமத்திலும் ஆசாரத் திலும் உயர்ந்திருக்கின்றவர்களை மதிக்காமல் அவமதிப்பானுயின் அவனை க்ஷாரகர்த்தம நரகிற்றள்ளித் தலைகீழாகக்கிடத்திப் பலதுன் பத்தை அனுபவிக்கச்செய்வர்.

உங - ரக்ஷோகணம்.

எவர்கள் மனிதனைப் பசுவைப்போற்கட்டி நரமேதயாகஞ் செய்கின்றார்களோ அவர்களையும், ஸ்திரீகளானாலும் புருஷர்களா னாலும் நரபசுவைப் புசிப்பார்களாயின் அவர்களையும் யமலோகத் தில் நரபசுவாகிய அவர்களைமுன்னின்றுஎங்களைக்கொன்றவர்கள் நீங்களல்லவா என்று சொல்லிக்கத்தியிலைறுத்து அவர்களுதிரத் தைக் குடித்துக் கூத்தாடுவார்கள்.

இவர்களைப்போலவே மாம்சபக்ஷணஞ் செய்கின்றவர்களும், புருஷனைக்கொன்று பக்ஷிக்கின்றவர்களும் அந்தந்தமாம்சத்துக் குரியமிருகாதிகளாலும் புருஷர்களாலும் கொல்லப்பட்டுத்தின் னப்படுவார்கள்.

உச - சூலப்ரோதம்.

எவர்கள் ஆரண்ணியத்திலாவது, கிராமத்திலாவது யாதொரு தீங்கும்செய்யாதவர்களைக் கொலைசெய்கின்றார்களோ, எவர்கள் பிறருக்குத் தங்களிடத்தில் நம்பிக்கையையுண்டாக்கிப் பின்னர் கொலைசெய்கிறார்களோ, எவர்கள் சூலத்தினாலாவது, யந்திரக் கயிற்றினாலாவது, தங்களைக் கொலைசெய்து கொள்ளுகின்றார்களோ இவரெல்லாம் சூலப்புரோத நரகில் தள்ளப்பட்டு சூலமுதலான வைகளில் கோர்க்கப்பட்டவர்களாய், பசிதாகங்களால் மிகவும் பீடிக்கப்பட்டவர்களாய், கூர்மையான மூக்குள்ள கழுகு கொக்கு முதலானவைகளால் அங்குமிங்கும் ஓடித்திரிந்து அலைபவர்களாய், அப்பொழுது நேரிடும் பிராணிகளையும் இம்சைப்படுத்துகின்ற சுபாவமுள்ளவர்களாய், தாங்கள் முன்செய்ததீயகர்மங்களை நினைத்து வருந்துகின்றவர்களாய், சகலதுன்பங்களையும் அனுபவிப்பர்.

உ௫ - தந்தசூகம்.

சர்ப்பமுதலான துஷ்டஜந்துக்களும், தேள்முதலான விஷப் பூச்சிகளும், ஐந்துமுகம் ஏழுமுகம் உள்ள குரூரஜந்துக்களும் சூழ்ந்திருந்து அதில்வீழ்பவரைப் பக்ஷித்துக்கொண்டிருக்கும்.

உசு - வாடாரோகம்.

குரூரபுத்தியுடைய எந்தமனிதர்கள் மலைமுழைகளிலும், பள்ளங்களிலும் கூண்டுமுதலியவைகளிலும் வளைகளிலும் இருக்கின்ற ஜந்துக்களை உபத்திரவப் படுத்துகின்றார்களோ அவர்களை அம்மலை முழை முதலானவற்றைப்போலிருக்கின்ற நரகங்களிற்றள்ளி விஷத்தினாலும் நெருப்பினாலும் புகையினாலும் வருத்துவர்.

உஎ - பிரியாவர்த்தனம்.

எவன் போஜனகாலத்தில் வந்திருக்கும் அதிதிகளைப் பார்த்துப் பொறாதவனாய் இவர்களைக் கொளுத்தவேண்டுமென்று லோபத்தினால் எண்ணுகின்றானோ அவனுடையகண்களைக் காக்கைகழுகு முதலான குரூரஜந்துக்களால் பிடுங்கிக்கொத்திப்பாதைப்படுத்தும் படிச்செய்வர் அவைகள் தமேயாயும் வந்து துன்பப் படுத்தும்.

உஅ - சூசீமுகம்.

எவர்கள் நாம் திரவியத்தையடைந்திருக்கும்செல்வவான்களாயிருக்கின்றோமென்று கர்வங்கொண்டிருக்கின்றார்களோ, எவர்கள்

பிறரைநோக்கி பணத்திற்குச் செலவு வருகின்றதென்று எண்ணி மனத்தில்வெறுப்பையும் முகத்தில்சுளிப்பையும் காட்டிச்சந்தோஷத்தை யடையாமலிருக்கின்றார்களோ, எவர்கள் பூதம்போல் பணத்தைக்காக்கின்றார்களோ இவர்களையெல்லாம் யமபடர்கள் சூசீமுக மென்னும் நரகில் தள்ளி எண்ணமுடியாத துன்பத்தைச்செய்வர். எவர்கள் பணத்தைக் கொடுப்பதாக வாங்கிப் பின்கொடுக்காமல் மோசம்செய்கின்றாரோ அவர்களைக் கயிற்றினால் கட்டி நெருக்கி எல்லா அவயவங்களையும் துன்பப்படுத்துவர்.

இப்போது என்னால் சொல்லப்பட்டனவும் சொல்லப்படாதனவுமான அநேகவிதமான பாவபேதங்களுக்குத்தக்கபடி நரகபேதங்களும் அவைகளில் அனுபவிக்கப்படும் துன்பப்பேதங்களும் உள்ளன. நாரதரே! பாபாத்மாக்களை யாதனை செய்வதான அந்த நரகபூமியை ஆயிரம்தேவவருஷம் நாலைடுத்துச்சொன்னாலும் முடியாது. எனெனில் அதர்மங்களைச் செய்கின்றமனிதர்களும் அவர்கள் அடையும் நரகஸ்தானங்களும் அநேகமிருக்கின்றன.

இவர்களைப்போலவே தர்மங்களில் ஆவலுள்ள புண்ணியசீலர்களும் அவரடையதக்க புண்ணியானுபவகதிகளும் உள்ளனவென்றறிவீராக. ஆகலான் ஒவ்வொருவரும் பாவகர்மங்களுக்குப் பயந்து குலதர்மாதிகளைத் தவறாது அனுஷ்டிக்கவேண்டும். எவர்கள் தேவி பூஜையைச்செய்கின்றார்களோ அவர்கள் ஓர்காலத்தும் நரகங்களையடையமாட்டார்கள். தேவியானவள் தன்னைப்பூஜிக்கின்றவர்களைச் சம்சார சாகரத்தினின்றும் கரையேற்றுகின்றனள் என்றனர். (சு-ப்-கூக)

இருபத்துமூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

ஸர்வா நவத்யாயைநமஃ

இருபத்துநான்காம் அத்தியாயம்.

தேவ்யாராதனக்ரமம்.

நாரதர்ஓபகவானே! தேவிபூஜையினுடைய லக்ஷணம்எப்படிப்பட்டது? எந்தவிதிப்படி பூஜிக்கத்தக்கவள்? அந்த ஆராதனை

யின்கிரமம்எப்படி? முன்னுள்ள பெரியோர்களால் எந்த ஆராதனைக் கிரமமாகத்தேவிபூஜிக்கப்பட்டாள்? தேவியானவள் எந்தவுபாயத்தினால் நரகத்தில்வீழாவண்ணம் ஆன்மாக்களைக்காக்கின்றாள்? என்றவினவ நாராயணர்கூறுகின்றார்:—ஓதேவருஷியே! நீர்மனஞ்சலனமற்றுக்கேட்பீராக:—எந்த ஆராதனைக்கிரமத்தினால் தேவிசந்தோஷத்தையடைகின்றாளோ அந்த விதிக்கிரமத்தை, சுதர்மத்தைப் பாதுகாக்கின்ற விஷயத்தில் எப்படி உறுதியாகச் சொல்லப்பட்டிருக்கின்றதோ அப்படிக்காக்கும்படி சொல்லப்பட்டிருக்கின்றது நீங்காது வருகின்ற சம்சார துக்கத்தைப் போக்கவேண்டியவர்கள் தேவியைப் பூஜிப்பார்களாயின் அந்தக் கோரமான சங்கடத்தினின்றும் நீங்குவர்.

சுக்லபக்ஷம் பிரதமைமுதல் பூர்ணைவரையில் சொல்லப்பட்டிருக்கும் பலனைவிரும்புவோர் அந்தத் திதிகளில் தேவிக்குப் பிரீதியுண்டாகும்வண்ணம் பூஜையும் அந்தணர்களுக்கு அந்தந்தத் திரவியதானமும் பின்வருமாறு செய்து பூர்ணையில் ஹோமமுஞ் செய்தல் வேண்டும். அவ்வோமத்தால் சகல அரிஷ்டநிவர்த்தியும் உண்டாகும்.

ஒவ்வொரு மாதங்களிலும் சுக்லபக்ஷ திருதியையில் இலுப்பை மரத்தையடைந்து மாதபூஜா நைவேத்தியங்களை பின்வருமாறு மாதக்கிரமமாகச்செய்து, மங்களா, வைஷ்ணவீ, மாயா, காலராத்ரீ, தாரத்யயா, மஹாமாயா, மாதங்கீ, காளீ, கமலவாசிநீ, சிவா, சஹஸ்ரசரணை சர்வமங்களரூபிணீ! இந்த நாமங்களால் தேவியை அந்த மதூகமரத்தடியில்பூஜித்து அந்தவிருக்ஷத்தில் தேவியாகியமஹேச்வரி இருப்பவளாகத் தியானித்துத் தோத்திரஞ் செய்யவேண்டும். அப்படிச்செய்தால் சர்வகாமசித்தியும் வீரதபூர்த்தியும் உண்டாகும்.

ஸ்தோத்ரம்.

தாமரைமலர்போல் திருக்கண்களை புடையவளே! உனக்கு நமஸ்காரம் ஜகத்தைத் தரிக்கின்றவளே! உனக்கு நமஸ்காரம். மஹேச்வரீ! மஹாதேவி! மஹாமங்கள மூர்த்தியை! பரமா! பாபஹரத்திரீ! (பாபங்களை நாசஞ்செய்கின்றவளே) பரமார்க்கப்ரதாயினீ! பரமேச்வரீ! பிரஜோத்பத்தீ! பரப்பிரஹ்மஸ்வரூபிணீ! மததாத்ரீ (மதத்தைக்கொடுக்கின்றவளே) மதோன்மத்தா! மாதங்கம்யா! மஹோந்நதா! மஹஸ்விநீ! முநித்யேயா! மார்த்தாண்ட சஹசாரிணீ! (சூரியனுடன் சஞ்சரிக்கின்றவளே) ஜயலோகேச்வரீ! பிராஜ்ஞே! (எல்லா

மறிந்தவளே) பிரளயாம்புத சங்நிபே! (பிரளயகால மேகத்துக்குச் சமானமானவளே) மகாமோக நிவிர்த்தியின்பொருட்டு சுராசுரர்களால் பூஜிக்கப்பட்டிருக்கின்றவளே! யமலோகபாவகர்த்திரீ! (யமலோகமில்லாமல் செய்கின்றவளே) யமபூஜ்யா! யமாக்ரஜா! (இயமனுக்குத்தலிவியே) யமநிச்ஹரூபா! (இயமனைச்சிக்ஷிக்கின்றரூபமுள்ளவளே) யஜ்ஞீ! (யாகஞ்செய்யத்தக்கவளே) உனக்கு நமஸ்காரம். எல்லாவுயிர்களிடத்தும் சமமான பாவனையுடையவளே! சர்வேசி! சர்வசங்கவிவர்ஜிதா! சங்கநாசகரீ! காம்யரூபா! காருண்யவிக்ரஹா! கங்காலக்ரூரா! காமாக்ஷீ! மீனாக்ஷீ! மர்மபேதினீ! மாதுர்யரூபா! சிலா! மதுரஸ்வரபூஜிதா! மஹாமந்திரவதி! மந்திரசம்யா! மந்திரப்ரியங்கரீ! மனுஷ்யமானஸதமா! (மனிதர்களுடையமனசில் வாசஞ்செய்கின்றவளே) மன்மதாரி) ப்ரியங்கரீ அரசு ஆல் வேம்பு மா விளா இலந்தை பலா எருக்கு சரீரம் முதலானபாலுள்ள விருக்ஷரூபிணீ! துக்தவல்லியில் வாசஞ்செய்கின்றவளே! தயனீயே! (தயையைச் செய்யத்தக்கவளே) தயாநிதே! தாக்ஷண்ய கருணாரூபே! ஜயஸர்வஜ்ஞ வல்லபே! என்று தோத்திரஞ் செய்யவேண்டும்.

தேவிக்குப் பிரீதிகரமான * இந்தத்தோத்திரத்தை மானுடன் நாடோறும் பக்தியுடன் செய்துவருவானையின் அவனுக்கு ஜன்ம

---

* நமஃ பஷ்காரநேத்ராயை ஜகத்தாத்ரை நமோஸ்துதே
மஹேச்வர்யை மகாதேவ்யை மஹாமங்கள மூர்த்தயே
பரமா பாபஹந்த்ரீச பரமார்க்க ப்ரதாயிநீ
பரமேச்வரீ ப்ரஜோத்பத்திஃ பாப்ரஹ்மஸ்வரூபிணீ
மததாத்ரீ மதோன்மத்தா மானகம்யா மஹாங்தா
மஸ்விநீ முநித்யேயா மார்த்தாண்ட சஹசாரிணீ
ஜய லோகேச்வரீ பிராக்ஜே பிரளயாம்புத சங்நிபே
மஹாமோஹ விநாசார்த்தம் பூஜிதாஸி சுராசுரைஃ
யமலோகா பாவகர்த்திரீ யமபூஜ்யா யமாக்ரஜா
யமநிக்ரஹ ரூபா யஜ்ஞீயே நமோநமஃ
சமஸ்வபாவா சர்வேசி சர்வசங்க விவர்ஜிதா
சங்கநாசகரீ காம்யரூபா காருண்ய விக்ரஹா

வியாதியும் பயமும் சத்ருபீடையும் நேரிடாது. அன்றியும் தருமார்த்த காம மோக்ஷங்களை விரும்பினோர்க்கு அவைகளும், பிராஹ்மணர்களுக்கு வேதசம்பத்தும், க்ஷத்திரியர்களுக்குவிஜயமும், வைசியர்களுக்குத் தனதான்யங்களும் சூத்திரர்களுக்குச் சுகாதிக்யமும் உண்டாகும். சிராத்தகாலத்தில் படனஞ்செய்தால் பிதுர்க்களுக்கு ஒருகல்பபரியந்தம் திருப்தியுண்டாகும். தேவபூஜ்யமான தேவி ஆராதனத்தை எவன் பக்தியுடன் செய்கின்றானோ அவன் தேவியி லுலகை யடைகிறான்.

தேவி பூஜையானது இம்மையில் சர்வ காமபலத்தையுங் கொடுத்து சர்வபாபத்தையும்போக்கி மரணகாலத்தில் நிர்மலமான அறிவையுங்கொடுக்கும். தேவிபூஜகன் தேவியினது பிரசாத மகிமையி னல் தேவியைப்போல்தேவிபக்தர்களால் எவ்விடத்தும்பூஜிக்கப்பட்டும், மானம் தனம் முதலியவற்றில் நிறம்பப்பெற்றும், நமக்கு நரகம் உண்டாகுமோ எனும் பயம் கனவிலும் இல்லாமல் அற்றும், புத்திர பவுத்திராதிகள் விருத்தியடையக்கண்டும், மஹாமாயா ஸ்வரூபிணியான அத்தேவியினிடத்தில் மறவாதபக்திமேன்மேலுண்டாக மகிழ்ந்தும் வாழ்வன். இவ்வளவு மகிமையும் மங்களகரமான மதுரை பூஜை ஒன்றினாலேயே உண்டாகத்தக்கதென் றறிவாயாக.

எவன் இந்த மதுரைபூஜையின் மகிமையை நன்றாயறிந்து செய்கின்றானோ அவன் அசோகதிடகாத்திரனாய் வாழ்வான்.

கங்காலக்ஷ்மா காமாக்ஷீ மீனாக்ஷீ மர்மபேதிநீ
மாதுர்யரூப சிலாச மதுராஸ்வர பூஜிதா:
மஹாமந்திர வதீமந்திர கம்பாமந்திர ப்ரியங்கரீ
மனுஷ்ய மானஸசமா மன்மதாரீ ப்ரியங்கரீ
அஸ்வத்த வடநிம்பாம்ர கபித்த பதரீகதே
பாஸார்க்க கரீராதி கூடாவிருக்ஷ ஸ்வரூபிணீ
துக்தவல்லி நிவாஸார்ஹே தயநீயே தயாகிகே
தாக்ஷண்ய கருணாரூபே ஜயசர்வக்ஞ வல்லபே

திதிபூஜை.

1.	பி - நெய்	ரோகநிவர்த்தி
2.	து - சர்க்கரை	ஆயுள்விருத்தி
3.	தி - பால்	சர்வதுக்கநிவிர்த்தி
4.	ச - பசுஷ்ணம்	விக்னநிவிர்த்தி
5.	ப - வாழைக்கனி	புத்திசூக்ஷ்மம்
6.	சஷ் - தேன்	தேககாந்தி
7.	சப் - வெல்லம்	சோகநிவிர்த்தி
8.	அ - தேங்காய்	தாபநிவிர்த்தி
9.	ந - நெற்பொரி	இகலோகசுகம்
10.	த - கறுப்பு எள்	யமலோகபயநிவிர்த்தி
11.	ஏ - தயிர்	தேவியாதிக்யம்
12.	து - அவல்	தேவியினிடத்து இன்பம்
13.	தி - கடலை	சத்ததிப்பெருக்கம் [மை
14.	ச - சத்துமா	சிவபெருமானுக்குப் பிரியனாந்தன்
15.	பௌ - பாயசம்	பிதுர்க்களிக்கரையேற்றுதல்

இதுபோலவே வார நக்ஷத்ர யோக கரண பூஜைகளையும் செய்தல் வேண்டும்.

வாரபூஜை.

1.	ஞா - பாயசான்னம்	5.	வி - சர்க்கரை
2.	தி - பால்	6.	வெ - வெள்ளைச்சர்க்கரை
3.	செ - வாழைக்கனி	7.	ச - பசுவின்நெய்
4.	பு - வெண்ணெய்		

நக்ஷத்திரபூஜை.

1.	அ - நெய்	5.	மி - பால்
2.	ப - எள்	6.	தி - நிலாடம்
3.	கி - சர்க்கரை	7.	பு - தயிர்பேடு
4.	ரோ - தயிர்	8.	பூ - மோதகம்

9. ஆ - பேனி
10. ம - கிருதமண்டகம் (தோய்
11. பூ - கம்சாரம் ந்தநெய்)
12. உ - வடபத்திரம் (பூரி)
13. அ - கிருதபூரம் (அல்வா)
14. சி வடை
15. சு - கோகரசகம்
16. வி - பூர்ணயம் கிழங்கு)
17. அ - மதுசூரணம் (வள்ளிக்
18. கே - வெல்லம்
19. மூ - அவல்
20. பூ - திராக்ஷி
21. உ - கர்ச்சூரி
22. தி - ராசகம்
23. அ . அப்பம்
24. ச - நவநீதம்
25. பூ - பயிறு
26. உ - மோதகம்
27. ரே - மாதுளம்பழம்

---

0 யோகபூஜை.

1. வி - வெல்லம்
2. பி - தேன்
3. ஆ - நெய்
4. சௌ - பால்
5. சோ - தயிர்
6. அ - மோர்
7. சு - அப்பம்
8. தி - நவநீதம்
9. சூ - வெள்ளரிக்காய்
10. க - கலியாண பூசனிக்காய்
11. வி - மோதகம்
12. து - பலாப்பழம்
13. வி - வாழைப்பழம்
14. அ - ஜம்புநாவற்கனி
15. வ - மாம்பழம்
16. சி - எள்
17. வி - நாரத்தை
18. வ - மாதுளம்பழம்
19. ப - இலந்தைப்பழம்
20. சி - நெல்லிக்கனி
21. சி - பாயாசம்
22. சா - அவல்
23. சு - கடலை
24. சு - தேங்காய்
25. பி - எலிமிச்சம்பழம்
26. ஐ - கசேரு சேஷம்)
27. வை - சூரணம் (கிழங்குவி

---

0 விஷ்கம்பம் பிரீதி ஆயுஷ்மான் சௌபாக்கியம் சோபனம் அதிகண் டம் சுதர்மம் திருதி சூலம் கண்டம் விருத்தி துருவம் வியாகாதம் அரிஷணம் வச்சிரம் சித்தி வியதிபாதம் வரியான் பரிகம் சிவம் சித்தம் சாத்தியம் சுபம் சுப்பிரம் பிரமம் ஐந்திரம் வைதிருதி.

0 கரண பூஜை.

1. ப - கம்சாரம்
2. பா - மண்டகம் (பாலேடு)
3. கௌ - பேணி
4. தை - மோதகம்
5. க - பூரி
6. வ - லட்டு
7. ப - கிருதபூரம் (அல்வா)
8. சகு - எள்
9. சது - தயிர்
10. நா - நெய்
11. கி - தேன்.

மாத பூஜை.

1. சி - ஐந்துவிதமானபக்ஷ்யம்
2. வை - வெல்லம்
3. ஆனி - தேன்
4. ஆடி - வெண்ணெய்
5. ஆவ - தயிர்
6. பூர - சர்க்கரை
7. அற் - பரமான்னம்
8. கா - பால்
9. மா - பேணி
10. தை - தயிரேடு
11. மாசி - பசுவின்நெய்
12. பங் - தேங்காய்

இனி நாமத்தைச் சொன்னலும் பூஜா சொரூபத்தைப் பார்த்தாலும் உலகங்களுக்கெல்லாம் ஆனந்தத்தை யுண்டாக்குவதும் குதூஹலத்தையும் முக்தி கிரமத்தையும் விளைவிக்கத்தக்க மகிமையைக் கொடுப்பதுமான பிரகிருதி பஞ்சகபூஜையை இனிச் சொல்லுகிறேன் முனிவரே கேட்பீராக என்றனர். (சு - 69.)

இருபத்துநான்காம் அத்தியாயம் முற்றிற்று.

—:0:—

ஆக அத்தியாயம் 24-க்குச் சுலோகம் (840)

—:0:—

எட்டாவது ஸ்கந்தம் முற்றிற்று.

—:❖:—

---

0 பவம் பாலவம் கௌலவம் தைதுலை கரசி வணசி பத்திரை சகுனி சதுஷ்பாதம் நாவகம் கிமஸ்துக்கினம்.

ஓ

ஸர்வாங்க சுந்தர்யை நம:

தேவீபாகவதம்.

ஒன்பதாம் ஸ்கந்தம்,

முதல் அத்தியாயம்.

பஞ்ச சக்தி வர்ணனம்.

ஆத்ருத காஞ்சிலியாம் ஆத்பா மாரூட யௌவநா டோபாம்
ஆகம வதம்ஸகலிகா மாநந்தா த்வைத கந்தலீம் வந்தே.

நாராயணர் கூறுகின்றார் :— கணேசமூர்த்திக்குத் தாயாகிய துர்க்காதேவி ராதை லக்ஷ்மி சரஸ்வதி சாவித்திரி இவ்வைவரும் ஐந்துவிதமான பிரகிருதிகள் என்று சொல்லப்படுவர் என்றுகூற, நாரதர் ஓ முநிசிரேஷ்டரே! அந்த ஐவரும் யாரால் உண்டுபண்ணப் பட்டவர்கள்? அவர்கள்யார்? அவர்கள் இலக்கண மென்ன? அவர் கள் எந்தசம்பந்தத்தால் ஐவரென் றெண்ணப்பட்டார்கள்? இவ் வைவரும் யாவராலும் தியானித்து வழிபடத்தக்கவர்களாக விருக் கின்றபடியால் இவர்கள் சரித்திரமும், இவர்கள் பூஜாவிதியும், இவர்களுடைய குணவிசேஷங்களும், இவர்களால் விரும்பப்பட்ட னவும், இவர்களுடைய அவதார சேஷத்திரங்களும் ஆகிய இவை யிற்றை விரிவாகச் சொல்லியருள வேண்டுமென்று கேட்டனர்.

நாராயணர் கூறுகின்றார்:—ஓ குழந்தாய்! இவர்கள் பிரகிருதி என்னும் பெயருடையவர்கள்; ஆதலால் அப்பெயரின் பதலக்ஷணை த்தை எவன் சொல்ல வல்லவனவன்? அங்ஙனங் கூடாதாயினும் நான் கேட்டி நக்கும் வண்ணம் ஒருவாறு கூறுகின்றேன்.

ப்ர என்பது ஸ்ருஷ்டி என்னும் பொருளையும், கிருதி என்பது கிருட்டி என்னும் பொருளையும் உணர்த்துவன வாகலின் கிருட்டி யில் மனவெழுச்சியுடையவர் என்றும், ப்ர என்பது சத்துவகுணத் தையும், கிரு என்பது ரஜோகுணத்தையும், தி என்பது தமோகு

ணத்தையும் உணர்த்துவன வாகலின் திரிகுணத்மகமாகிய சத்தி யோடுகூடிச் சிருட்டிப்பதில் இவர்கள் முதற்சத்திகளா யிருப்பவர் என்றும், ப்ர என்பது முதல் என்னும் பொருளையும், கிருதி என் பது சிருட்டி என்னும் பொருளையும் உணர்த்துவன வாகலின் சிரு ட்டியின் ஆதியிலுள்ளவர் என்றும் பொருள் படும்.

இவ்வாறு ஐவகைப்பட்ட பிரகிருதியாகிய சக்தி பரமாத்மா வாகிய பிரமத்தோடு கலந்திருக்கும் சித்சத்தியாம். ஆதலின் சிருட் டிகாலத்தில் வலப்பாகம் ஆணுருவாயும், இடப்பாகம் பெண்ணுரு வாயும் காணப்பட்டு விளங்குகின்றாள். ஆண் பெண்ணென இர ண்டு உருவமாகக் காணப்படினும் போகீந்திரர்கள் பரமாத்மா எப் படியோ அப்படி சக்தி என் றறிந்தவராகலின் அதனை இரண்டுரு வாகக்காணுமல் * அக்னியில் சூடுபோல் நித்தியமாயும் அழிவில்லா ததாயுமுள்ள ஒன்றுன பிரம சொரூபமாக வுணர்ந்து சர்வம் பிரம மயமென்று கூறுவர். இரண்டுருவாகக் காணப்பட்டதில் மூலப்பிர கிருதி (பெண்ணுரு) ஆனஈஸ்வரி, * கிருஷ்ணை (ஆணுருவானபுருஷ) ரைத் தோற்றுவிக்க வேண்டுமென்கிற விருப்பத்தினல் தற்செய லாய்ச் சுயேச்சையாகப்பிரிந்து தோன்றினள். தோன்றிய அம் மூலப்பிரகிருதியின் ஆக்ஞையினல் ஐவகைப்பட்ட சிருட்டிகளுண் டாயின.

க - வது துர்க்காதேவி.

பிரார்த்திக்கும் பகதர்களுக்கு அநுக்கிர கிக்கிறவளாயும் கணேச ஜனனியாயும் சிவப்பிரியையுமான துர்க்காதேவி விஷ்ணு மாயையாயும் பூரணபிரமசொரூபிணியாயும்பிரமாதிதேவர்களாலும் முனிவர்களாலும் மநுக்களாலும் துதிக்கப்பட்டவளாயும் சகல வஸ்துவையும் ஆக்ரமித்துக்கொண் டிருக்கிறவளாயும் கீர்த்தி யஜ ஸு மங்களம் சுகம் மோக்ஷம் முதலானவைகளைக் கொடுக்கின்ற வளாயும் சோகம் பீடை முதலானவைகளை நாசஞ்செய்கிறவளா யும் தன்னைச் சரணடைந்தவர்களையும் தீனர்களையும் காக்கின்ற வளாயும் தேஜோரூபிணியாயும் தேஜசுக்கு அதிஷ்டான தேவதை யாயும் சர்வசக்தி சொரூபிணியாயும் சக்திகளுக்கு ஈஸ்வரியாயும்

* அக்னி சூடு என் றிரண்டாகச் சொல்லப்படினும் வேறு பிரித்துக் காணக்கூடாமல் அக்னி என்று ஒன்றுகவே காணப்படு மாறுபோ லென்க. * கிருஷ்ணர் - சிவரூபம்.

சித்தேஸ்வரியாயும் சித்திபைக்கொடுக்கின்றவளாயும் புத்தி நித்தி ரை பசி தாகம் காந்தி சோம்பல் தயை கவனம் ஜாதி பொறுமை பிரமை ஞானம் துஷ்டி புஷ்டி லக்ஷ்மி தைரியம் மாயை ஆகிய சக்திசொரூபிணியாயும் பரமாத்மாவான *கிருஷ்ணரையடைந்திருக் கின்றவளாயும் நாராயணியாயும்தோன்றினள். இவளுடைய குண விசேடங்கள் அளவில்லன. அவைகளில் சிலவற்றை வேதங்களில் கூறியுள்ளன. * சிவபெருமான்.

உ - வது-இலக்ஷ்மிதேவி.

சுத்த சத்வ சொரூபிணியாயும் சர்வ சம்பத் சொரூபிணியா யும் அச்சம்பத்துகளுக்கு அதிஷ்டானதேவதையாயும் மனைக ரையாயும் காந்தி சாந்தி தாந்தி சொரூபிணியாயும் சுசீலையாயும் சர்வமங்கள சொரூபிணியாயும் லோபம் மோகம் காமம் ரோஷம் மதம் அகங்காரம் இவைகளைவர்ஜித்தவளாயும்இந்திரிய நிக்கிரகை யாயும் பக்தர்களிடத்தில்பிரீதியுள்ளவளாயும் விஷ்ணுபகவானது பி ரேமைக்குப் பாத்திரியாயும் அவரது பிராணனுக்குச் சமானமான வளாயும் அவரிடம் இனிமையாய்ப் பேசுகின்ற பதிவிரதையாயும் சர்வபல சொரூபிணியாயும் ஜீவனோபாய சொரூபிணியாயும் வை குண்டத்தில் பர்த்தாவுடன் வசிக்கின்ற இலக்ஷ்மியாயும் சுவ ர்க்கத்தில் சுவர்க்கலக்ஷ்மி இராஜனிடத்தில் இராஜலக்ஷ்மி கிரு கஸ்தருடைய கிருகங்களில் கிருகலக்ஷ்மி சர்வப்பிராணிகளிட த்தில் விரும்பும் சோபாலக்ஷ்மி புண்ணியர்களிடத்தில் பிரீதி லக்ஷ்மி க்ஷத்திரியரிடத்தில் கீர்த்தி லக்ஷ்மி வைசியரிடத்தில் வர்த்தக லக்ஷ்மி பாவிகளிடத்தில் கலகலக்ஷ்மி வேதோக்தரான பெரியோர்களிடத்தில் தயாலக்ஷ்மி என வழங்கப்பட்டவளா யும் இருக்கிறாள்.

ஊ - வது சரஸ்வதி தேவி.

எல்லாராலும் சம்மதித்துப் பூஜித்து வணங்கப்படும் மூன்று வது தேவியைக் கூறுகின்றேன். வாக்கு புத்தி வித்தை ஞானம் என்னும் இவைகளை அதிஷ்டித்திருப்பவளும் சர்வவித்தியா சொ ரூபிணியுமாகிய சரஸ்வதி தேவி தன்னை யுபாசிக்கின்றவித்வான்க ளுடைய புத்திஸ்வரூபிணியாயும் (அவர்கள்பாடும்) கவி ஸ்வரூபி ணியாயும் (அக்கவிகளுள் அமைந்துள்ள) யுக்தி ஸ்வரூபிணியாயும் (அந்தயுக்தியி லமைந்துள்ள) நுண்ணிய அர்த்த ஸ்வரூபிணியா

யும் அவ்வர்த்தத்தை மறவாதிருக்கச்செய்யவல்ல சிந்தனை ஸ்வரூபிணியாயும் (அவர்களால் தாபிக்கப்பட்ட) அநேக பிரகாரமான சித்தாந்த பேதஸ்வரூபிணியாயும் (அவ்வச்சித்தாந்த பேதங்களை அர்த்த விசாரங்களால் விளக்கத்தக்க) விசார ஸ்வரூபிணியாயும் (அவ்விசாரமுகத்தில் எடுத்துக் காட்டும்) வாக்கியபோத ஸ்வரூபிணியாயும் (அவ்வாக்கிய போதங்களால்) சர்வசந்தேகங்களையும் நாசஞ் செய்யவல்ல நாசகாரணியாயும் (அந்நாசத்தால் தெளியப்படும்)விசாரகாரணியாயும் (அவ்விசாரம்எதனைக்காட்டும்)கிரந்தகாரணியாயும் (அக்கிரந்தங்களை அறியச்செய்யவல்ல) சக்தி ஸ்வரூபிணியாயும் இவையேயன்றிச் சர்வ சங்கீத ஸ்வரூபிணியாயும் (அவ்வச்சங்கீதங்கட் கியைந்த) தாளபேத காரண ஸ்வரூபிணியாயும் (அதற் கியைந்த) விஷய க்யான ஸ்வரூபிணியாயும் அதற்கமைந்த கவித்வஸ்வரூபிணியாயும் (இவைகளால் ஆனந்திக்கும்) பிரபஞ்ச ஸ்வரூபிணியாயும் இவையேயன்றி வாக்யார்த்த வாதசொரூபிணியாயும் (அவ்வாக்யார்த்தங்களாலடையும்) சாந்தசொரூபிணியாயும் சகலவித்யாசொரூபிணியுந் தானே என்பது தோன்ற எப்போதும் வீணைபுத்தகதாரணியாயும் இங்ஙனங்கூறிவந்த வித்யாசம்பந்தங்களால் உண்டாகத்தக்க ஆத்ம பிரயோசனமாகிய) சுத்தசத்துவ சொரூபிணியாயும் சுசீலையாயும் விஷ்ணுவுக்கும் லக்ஷ்மிக்கும் இனிப்பானவளாயும் பச்சை கற்பூரம் சந்தனம்முல்லை மலர் சந்திரன் ஆம்பல் வெண்டாமரை இவைகளுக்குச் சமானமான நிறமுள்ளவளாயும் கிருஷ்ண பரமாத்மாவை இரத்தினமாலையால் பூஜிக்கின்றவளாயும் தபோரூபையாயும்தபஸ்விகளுக்குப்பலனைக்கொடுக்கின்றவளாயும் சித்தி வித்தை சொரூபிணியாயிருந்து அவைகளைக் கொடுக்கின்றவளாயும் இருப்பள். இந்தத்தேவியின் உபாசனையில்லாத அந்தணர்கள்வாக்கின் பிரயோஜனமாகிய வித்தியாபிரகாசமில்லாமல் உயிரிழந்த பிணம்போல் அசைவற்றிராமல் நடைப்பிணமாயுலாவுவாராவர். வேதத்தில் கூறப்பட்டுள்ள ஜகதம்பிகையான சரஸ்வதி தேவியினுடைய மகிமைகளில் சிலவற்றைக் கூறினேன்.

ச - வது சாவித்திரி தேவி.

பிராஹ்மணதி நான்குவருணம் வேதாங்கங்கள் சந்தஸ்சந்தியாவந்தனமந்திரம் தந்திரசாத்திரங்கள் இவைகட்குத் தாயாயும், பிராமணசாதி சொரூபிணியாயும் ஜபசொரூபிணியாயும் தபோரூபிணி

யாயும் அவைகளாலுண்டாகும்பிரஹ்மதேஜாரூபிணியாயும், அத னாலுண்டாகும் பவித்திர சொரூபிணியாயும் அவர்களால் செய்யப் படும் சமஸ்கார சொரூபிணியாயும், சாவித்திரி காயத்திரி சொரூ பிணியாயும் அவற்றை அதுட்டிக்கும் பிராமணப் பிரியையாயும் தீர்த்த ஸ்வரூபிணியாயும் அத்தீர்த்த ஸ்பரிசமாத்திரத்தில் சுத் தஞ்செய்கின்ற விருப்பமுள்ளவளாயும் சுத்த ஸ்படிகம்போல் பிர காசிக்கின்ற நிர்மலமான சுத்த சத்துவஸ்வரூபிணியாயும் அதனால் விளையத்தக்க பரமானந்த சொரூபிணியாயும் அச்சொரூபத்தை அநாதியாயுள்ளவளாயும் பரப்ரஹ்ம சொரூபிணியாயும் நிர்வாண பதத்தைக் கொடுக்கின்றவளாயும் அதனையடையப்பெற்ற பிரம ஞானிகளுடைய பிரமதேஜோமய ரூபிணியாயும் அந்தச் சக்திக்கு அதிஷ்டான தேவதையாயும் இருப்பள். அத்தேவியினுடைய பாத ரேணுவால் உலகமெல்லாம் பரிசுத்தமாகின்றது.

ரு - வது ராதாதேவி.

பஞ்சப்பிராணன்களுக்கும் ஆதிதேவியாயும் பஞ்சப்பிராண சொரூபிணியாயும் பிராணனிலும்மிக்கபிரீதிசொரூபிணியாயும் எல் லாத் தேவிகளிடத்திலுமுள்ள சுந்தர சொரூபிணியாயும் எல்லாரிட த்திலுமுள்ள சம்பத் சொரூபிணியாயும் எல்லாதேகத்திலு முள்ள வாமபாகசொரூபிணியாயும் குணத்திலும் தேஜஸிலும் நிறைந் திருக்கின்ற கவுரவஸ்வரூபிணியாயும் பராபரங்களுக்குச் சாரபூதை யாயும் அவைகளுக்கு ஆதிபாயும் அநாதியாயும் பரமானந்தஸ்வரூ பிணியாயும்புண்ணியவதியாயும் பூஜிக்கத்தக்கவளாயும்யாவராலும் பூஜிக்கப்பட்டவளாயும்ராஜகிரீடைக்கு அதிதேவதையாயும் பகவா னுடைய ராசக்கிரீடாமண்டபத்திலிருக்கிறவளாயும் ராசக்கிரீடை யால்அலங்கரிக்கப்பட்டவளாயும்ராஜக்ரீயைக்குஸ்வரியாயும் மஹா ரகஸ்யையாயும் ராஜஸ்தானத்திலும் கோலோகத்திலும் வசிக்கின்ற வளாயும் கோபிகாவேஷத்தை தரிக்கின்றவளாயும் பரம ஆஹ்லாத சொரூபிணியாயும் அளவில்லாத சந்தோஷ சொரூபிணியாயும் நிர்குணியாயும் நிராகாரையாயும் புண்ணியபாப சம்பந்தமில்லாத வளாயும் நிரீஹையாயும் நிரஹங்காரையாயும் நிராசையுள்ளவளா யும் பக்தானுக்கிரக காரணியாயும் வேதமார்க்கத்தால் தியானித்து அறியத்தக்கவளாயும் தேவர்களாலும் முநிசிரேஷ்டர்களாலும் ஞானநோக்கால் நோக்கப்பட்டவளாயும் நெருப்பினால் சுத்தமான

வஸ்திரத்தைத் தரித்தவளாயும் நானவிதமான அலங்காரத்தால் அலங்கரிக்கப் பட்டவளாயும் கோடி சந்திரன் உதித்தாற்போற் பிரகாசிக்கின்ற திருமேனியையுடையவளாயும் சர்வகாந்தியையு முடைய திவ்யசரீரமுள்ளவளாயும் கிருஷ்ணமூர்த்தியினிடத்தில் மிக்கபக்தியுள்ளவளாயும் சர்வசம்பத்தையுங்கொடுக்கின்றவளாயும் இடபரூபமான வராகஅவதார ரூபிணியாகவிருக்கின்ற தேவியி னுடைய பாததாமரையின் சம்பந்த விசேடத்தினல் பூமிதேவியைப் பரிசுத்தஞ்செய்கின்றவளாயும் புதியமேகத்திற் பிரகாசிக்கின்றமின் னல் போல் பகவானுடைமார்பில் ஸ்திரீரத்னமாய் விளங் குகின்றவளாயும் பூர்வம் பிரமன் தனது ஆத்மசுத்தியின்பொருட்டு அறுபதினாயிரம் வருடம்அரியதவம்புரிந்தும் கனவிலும் காண்பதற் கரிதான பாதபத்மத்தையுடையவளாயும் பின்னர் அப்பிரமன் பூலோகத்தில் தவம்புரிய இரக்கமுற்று பிருந்தாவனந்தோறும் தன்னைக்காணும்படிச் செய்தவளாயும் இருக்கின்றுள்.

(இதுவரையில்) பரிபூரணமானஐந்து வித்யாதேவிகளின் வர லாற்றின் மகிமைகளைக் கூறினேன். பிரதான அம்சரூபங்களாகவும் கலாரூபங்களாகவும் அக்கலைபுன் அநேகத்தில் ஒருபாகமாகவும்அத் தேவிகளிடத்திலிருந்து ஒவ்வொருபிரபஞ்சத்திலுள்ள தேவிகளும் சாதாரணஸ்திரீகளும் பிறந்தனர். இனி அவர்களுள் பிரதான அம் சரூபங்களைக் கூறுகின்றேன் கேட்பீராக.

உலகினையெல்லாம் பரிசுத்தஞ்செய்கின்றகங்காதேவி—பிரகிரு திதேவியின் பிரதான அம்சரூபிணியாயும, விஷ்ணுவின்டைய சரீரத்திலிருந்து ஜலரூபியாகப்பிறந்தவளாயும், பாவிகளதுபாவமா சிறகாட்டை ஜ்வலித்துக்கொளுத்துகிற அக்கினிபோன்றவளாயும், ஸ்நானபானங்களால் சுகமாகப் பரிசிக்கத்தக்கவளாயும், மோக்ஷத் தைக்கொடுக்கின்றவளாயும், கோலோகத்திற்குச்சுகமாகஏறுகின்ற படிபோன்றவளாயும், சுத்தமானநதிகளுக்குள் சிறந்தவளாயும், ஈஸ் வரனுடையசடையாகிய மேருவில் மூத்துப்போல் பிரகாசிகின்ற வளாயும், பரதகண்டத்தில் தவம்புரிவோர்க்கு அத் தவசித்தி யைக்கொடுக்கின்றவளாயும் இருக்கின்றவளாகும்.

சந்திரனைப்போலும் வெண்டாமரையைப் போலும் பால் போ லும் பிரகாசிக்கின்ற சுத்ததத்வ சொரூபிணியாயும், நிர்மலியாயும், நிரஹங்காரையாயும், பதிவிரதையாயும், நாராயணருக்குப் பிரியை

யாயு மிருக்கின்ற துளசிதேவி—பிரகிருதிதேவியின்பிரதான அம்ச சொரூபிணியாயும், பத்திரரூபிணியாயும், விஷ்ணுவினிடம் பிரிய மூள்ளவளாயும், விஷ்ணுபூஷணசொரூபிணியாயும், அவருடைய பாதத்திலிருப்பவளாயும்; தவ ம்சங்கல்பம் பூஜைமுதலானவைகளை யுண்டுசெய்கின்றவளாயும், புஷ்பங்களுக்குள் சிறந்த புஷ்பரூபி ணியாயும், எப்போதும் புண்ணியத்தைக் கொடுக்கின்றவளாயும், தெரிசனத்தினலும் பிரிசனத்தினலும் தரூஷணத்தில் முக்தியைக் கொடுப்பவளாயும், கலியுகத்திலுண்டாகும் பாவத்துக்கு உலர்ந்த கட்டையைக்கொளுத்தும் அக்கினிபோன்றவளாயும், பூதேவியைத் தன்பாதபரிசமாத்திரத்தில் பரிசுத்தஞ்செய்கின்றவளாயும், பெரி யோர்கள் செய்யும் தவம் தெரிசனத்தினலும் பரிசத்தினலும்சித்தி யாதற்குத் தீர்த்த சொரூபிணியாயும், சகலகர்மங்களும் வீணுகாது பிரயோஜனமடையச்செய்கின்றவளாயும்,பாரதவருடத்தில்மோகூ காமிகளுக்கு மோகூத்தையும் போகாமிகளுக்குப் போகத்தையும் கொடுக்கின்ற கற்பவிருஷம்போன்றவளாயும் இருக்கின்றவளாம்.

பாரதவருடத்தி லிருக்கின்றவர்களைச் சந்தோஷிக்கச்செய்ய பிரகிருதிதேவியின் பிரதான அம்சரூபிணியாயும்,பரதேவதையாயும் உள்ள மனஸாதேவி—சங்கரருக்குப்பிரியசிஷ்யையாயும், மஹா ஜ் ஞானசொரூபிணியாயும், அனந்தன் சகோதரியாயும், நாகங்களால் பூஜிக்கப்பட்டவளாயும், நாகேஸ்வரியாயும், நாகமாதாவாயும், நாகவாகினியாயும், நாகேந்திரகணங்களோடு கூடியிருப்பவளாயும், நாகபூஷண பூஷிதையாயும், நாகங்களால் நமஸ்கரிக்கப்பட்டவளா யும், நாகசயனிபாயும், சித்தயோகினியாயும், சுந்தரியாயும், இவை போலவே விஷ்ணுரூபிணியாயும், அவ்விஷ்ணுவினதுபக்தி பூஜை பாராயணம் இவற்றையுடையவளாயும், தவஞ்செய்கின்றவளாயும் தபோரூபிணியாயும்,தபோபலத்தைக்கொடுக்கின்றவளாயும் மூன்று லக்ஷம் தேவ வருஷம் வரை ஹரியைக்குறித்துத் தவஞ்செய்தவளா யும், ருஷிகளிலும் ஸ்திரீகளிலும் சிறந்த கீர்த்தியடைந்தவளாயும் சர்வமந்திராதிதேவதையாயும்,பிரஹ்மதேஜஸினல்ஜ்வலித்துக்கொ ண்டிருப்பவளாயும், பரப்பிரமசொரூபிணியாயும், பரப்பிரமத்தைத் தியானிப்பதில் ஆவலுள்ளவளாயும், கிருஷ்ணருடைய அம்சமான ஜாத்காருமுனிவருடைய பத்தினியாயும், பதிவிரதையாயும், ருஷிசி ரேஷ்டரான ஆஸ்திகமுனிவருக்குத்தாயாகியும் இருக்கின்றவளாகும்.

பிரகிருதி தேவியின் பிரதான அம்சரூபிணியான தேவசேனை யாயும், மாத்ருகாகணங்களில் பூஜிக்கப்பட்டவளாயுமுள்ள சஷ்டி தேவி—பிரகிருதியின் ஆறாவது அம்சமாகத் தோன்றினவ ளாயும், மூவுலகி லுள்ளவர்க்கும் புத்தி பௌத்திராதி சம்பத்துக்களைக் கொடுத்துக் காக்கும்சம்பத்சொரூபிணியாயும், சிசுக்களிடத்தில் வி ருத்தரூபிணியாகிய யோகினிவடிவா யிருப்பவளாயும், அதனால் உலகில் இடைவிடாது சிசுக்களை உத்தேசித்து ஒருவருடம் பூஜிக் கப் படுகின்றவளாயும், பிரசவக்கிரகத்தி லிருக்கும்போதே ஆறாவ து தினத்திலுனிம், இருபத்தோராம்தினத்திலும், மங்களத்தை உத் தேசித்துப் பூஜிக்கப் படுகின்றவளாயும், நித்தியமாயுள்ள இஷ்டகா மங்களைக் கொடுக்கத்தக்க தயாரூபிணியாயும், சிரேஷ்டமான மாத் ருவாயும், ஜலத்திலும் பூமியிலும் ஆகாயத்திலும் சிசுக்களுக்கு யா தொரு ஆபத்தும் வாராவண்ணம் காக்கும் ரக்ஷணகாரணியாயும் இருக்கின்றவளாம்.

பிரகிருதி தேவியின் முகத்தினின்றும் தோன்ற எப்போதும் சர்வமங்களத்தைக்கொடுக்கிற மங்களசண்டிகை—சிருஷ்டி காலத் தில் மங்களசொரூபிணியாயும் சங்காரகாலத்தில் கோபரூபிணியா யும் இருத்தலினால் மங்களசண்டிகையென்று பண்டிதர்களால் சொ ல்லப்பட்டனள். அவள் ஒவ்வொரு உலகங்களிலும் மங்களவரரந் தோறும் பூஜிக்கப்படுகின்றவளாயும் புத்திரன் பௌத்திரன் தனம் ஐஸ்வர்யம் கீர்த்தி முதலியவைகளை அதிசுலபத்தில் சந்தோஷித்து ஸ்திரீகளுக்கெல்லாம் கொடுக்கின்றவளாயும் இருக்கின்றவளாம்.

கோபங்கொடு சகலப்பிரபஞ்சத்தையும் ஒரு க்ஷணத்தில் சங்கரிக்கும் காளி—பிரகிருதியாகிய துர்க்கையின் முகத்தினின்று பாதி அம்சமான சும்பநிசும்பர்களின் யுத்தத்தில் தோன்றினவளா கிய தாமரைமலர்போன்ற கண்ணுள்ளவளாயும் தேஜஸினாலும் குணத்தினாலும் துர்க்காதேவிக்குச் சமானமானவளாயும் கோடி சூரியர்களுக்குச் சமானமாகப் பிரகாசிக்கின்ற சரீரமுள்ளவளாயும் சகலசத்திகளுள் பிரதானையாயும் மிக்க பலிஷ்டையாயும் சர்வசித் திகரையாயும் கிருஷ்ணரிடத்தில் பக்தியுள்ளவளாயும் அவருக்குச் சமானமான தேஜஸு விக்கிரமகுணங்கள் பாவனைகள்நிறம்முதலிய வற்றை யுடையவளாயும்நிஸ்வாசமாத்திரத்தில் சகலப்பிரமாண்டங்

களையும் அழிக்கத்தக்க மகா சக்தியையுடையவளாயும் அசுரயுத்தத்தை ஓர் கிரீடையாகச்செய்து தனது மகிமையை உலகினர் அறியச்செய்கின்றவளாயும் தர்மார்த்தகாமமோக்ஷங்களை அபேக்ஷிக்கின்றவர்களால் ஆராதிக்கப்பட்டவளாயும் இருக்கின்றவளாம்.

பிரமனதி தேவர்களாலும்முனிவர்களாலும் மானுடர்களாலும் தோத்திரஞ் செய்யப்பட்ட சுந்தரியான பூதேவி, பிரகிருதி தேவியின் பிரதான அம்சங்களாற் பிறந்தவளாயும் எல்லாவற்றிற்கும் ஆதாரமானவளாயும் சகலமான ஔஷதிரூபிணியாயும் இரத்னங்களுக்கு இருப்பிடமாயும் இரத்னகர்ப்பிணியாயும் சமுத்திரங்களுக்கெல்லாம் ஆதாரமானவளாயும் ஜனங்களாலும் அரசர்களாலும் பூஜித்துத் துதிக்கப்பட்டவளாயும் யாவருக்கும் ஜீவனோபாய ரூபிணியாயும் சர்வசம்பத்தையுந் தருகின்றவளாயும் இருக்கிறவளாம்.

ஓ முனிசிரேஷ்டரே! இனி, எந்தத்தேவிகளைவிட்டுத்தாவரஜங்கமரூபமாகவிருக்கின்ற இத்தப்பிரபஞ்சமெல்லாம் வேறு ஆதரவில்லாமலிருக்கின்றதோ; அந்தப்பிரகிருதிதேவியின் கலையினற் றோன்றிய கலாதேவிகளையும், அவர்கள் எவர்களுக்குப் பத்தினிகளாகவிருக்கின்றார்களோ அவர்களையுங் கூறுகின்றேன்:—

சுவாஹாதேவி - அக்னிபத்தினி; இவளில்லாவிடில் ஓமஞ்செய்யும் அவிசைத் தேவர்கள்பெற வல்லமையுள்ளவராகார். தக்ஷிணதேவியும் தீக்ஷாதேவியும் - யக்ஞபத்தினிகள்; இவர்கள் பூஜிக்கப்படாவிடில் பிரபஞ்சத்தில் எல்லாக்கருமமும் வீணாகும். தர்ப்பணகாலத்தில் உச்சரிக்கும் சுவதாதேவி - பிதுர்க்கள் பத்தினி; இவள் இல்லாவிடில் பிதுர்க்கள் பூஜை வீணாகும். சுவஸ்திதேவி - வாயு பத்தினி; இவள் தானம் வாங்கும்போதும் கொடுக்கும்போதும் பூஜிக்கப்படுகின்றாள். புஷ்டி - கணேசபத்தினி; இவளில்லாவிடில் எல்லோரும் கூவீனித்துவிடுவர். துஷ்டி - ஆதிசேஷபத்தினி; இவளில்லாவிடில் எல்லோருஞ் சந்தோஷமடையார். சம்பத்து - ஈசான பத்தினி; இவளில்லாவிடில் தாரித்திரத்தை யடைவர். திருதி—கபிலபத்தினி; இவளில்லாவிடில் தைரியமடையார். சதி - சத்திய பத்தினி; இவளில்லாவிடில் பந்துக்களுள்ளவராகார். தயையும் பதிவிரதையும் - மோகபத்தினி; இவர்களில்லாவிடில் எல்லோரும் யாதொருபயனையும் அடையார். பிரதிஷ்டை - புண்ணியபத்தினி;

இவள் பூஜிக்கப்படாவிடில் மனிதர்கள் உயிரோடிருப்பினும் மரண மடைந்தாரோடொப்பர். இவள்மனிதர்களுக்குப் புண்ணியத்தைக் கொடுக்கின்றவள். சம்சித்தியும் கீர்த்தியும் - சுகர்மத்துக்குப்பத்தினிகள்; இவர்கள் புண்ணியவான்களால் பூஜிக்கப்படாவிடில் லோகமெல்லாம் கீர்த்தியற்றுவிடும். கிரியை - உத்யோகபத்தினி; இவள்எல்லாராலும் பூஜிக்கப்படுகின்றாள். இவளில்லாவிடில்உலகம் சோம்பலையடையும். மித்தியாதேவி - அதர்மபத்தினி; இவள் சகலதுஷ்டர்களாலும் பூஜிக்கப்படுகிறாள். இவளில்லாவிடில் உலகம் பாழாய்விடும். இவள்கிருதயுகத்தில்காணப்படாதவளாயும்,திரேதா யுகத்தில் சூக்ஷ்மரூபிணியாயும், துவாபரத்தில் பாதியுருவமுள்ளவ ளாயும், கலியில் பூரணவுருவமுள்ளவளாயும், தனது பலத்தினால் எவ்விடத்தும் வியாபித்து தனது சகோதரனை கபடனோடு ஜீவ கள்தோறுந் திரிந்துலாவிக்கொண்டிருப்பள். சாந்தியும் லச்சையும்- சுசீலைக்குப்பத்தினிகள்; இவர்கள் எல்லோராலும் பூஜிக்கப்படுகி றார்கள். இவர்களில்லாவிடில் உலகம் பித்தம் பிடித்தது போலாகும். புத்தியும் மேதையும் திருதியும் - தியான பத்தினிகள்; இம் மூவ ரும் இல்லாவிடில் உலகம் அறிவில்லாமல் சித்தப்பிரமை பிடித்தது போல் ஆகிவிடும். காந்தி - தருமபத்தினி; இவளில்லாவிடில் பிர பஞ்சரூபமான பரமாத்மாவுக்கு ஆதாரமில்லை. சோபாசொரூப மான லக்ஷ்மி மதிபத்தினி; இவள்ஸ்திரீரூபமாயும் சரீர ரூபமாயும் தான்யாதிரூபமாயும் கவரவிக்கப்பட்டுப் பூஜிக்கப்படுகின்றாள். கா லாக்கினிதேவியும் சித்தயோகினியாகிய நித்திராதேவியும்-ஊருத்திர பத்தினிகள்; இவர்கள் உலகமுற்றும் வியாபிக்கின்றனர். சந்தி இரவு பகல் என்னு மூவரும்-காலத்துக்குப்பத்தினிகள்; இவர்க ளில்லாவி டில் நான்முகனாலும் கணக்கிடமுடியாது. பசியும் தாகமும் - லோப பத்தினிகள்; இவர்கள் எல்லோரிடத்தும் வியாபித்து கவலையுற்ற வராக்கி அவர்களால் மரியாதையுடன் புகழப்பட்டிருப்பர். பிரபை யும் (வெளிச்சமும்) தாஹிகையும் (கொளுத்தலும்) - தேஜஸின் பத்தினிகள்; இவர்களில்லாமல் பிரமனுஞ் சிருஷ்டிக்க வல்லவனல் ஸ். காலகன்னி என்னும் மிருத்யுவும் ஜரையும்-ஜீரத்துக்குப்பத் தினிகள்; இவர்களில்லாவிடில்பிரமனால்சிருஷ்டிக்கப்பட்ட உலகங்க ளெருங்கி இறந்துவிடும்.நித்திராபுத்திரிகளானதாந்தரையும்(சோம் பல்)பிரீதியும்-சுகத்திற்குமனைவிகள்; இவர்கள் உலகமுற்றும் வியா

பித்திருக்கின்றனர். சிரத்தையும் பக்தியும்-வைராக்கியத்துக்குப் பத்தினிகள்; இவாகள் ஜீவன்முக்தர்களிடம் ஆக்ரமித்திருப்பவர். தேவமாதாவான அதிதி, பசுக்களுக்குத் தாயானகாமதேனு, அசுரமாதாவான திதி கர்த்துரு வினதை தநு என்பவர்களும் இவர்களேயன்றி சந்திரபத்தினியான ரோகணி, சூர்யபத்தினியான ஸம்க்ஞா, மநுபத்தினியான சதரூபை, இந்திரபத்தினியானசசி; குருபத்தினியான தாரை, வசிட்டபத்தினியான அருந்ததி, கௌதமபத்தினியானஅகலிகை, அத்திரிபத்தினியான அநுசூயை, கர்த்தம பிரஜாபதி பத்தினியான தேவஹூதி, தக்ஷபத்தினியான பிரசூதி, பிதுர்க்களுடைய மானசிக புத்திரியான மேனகை, அகஸ்திய பத்தினியான லோபாமுத்திரை, குபேரபத்தினியான குந்தி, வருணபத்தினியான பிரசித்தி, வாயுபத்தினியான விந்தியா, தமயந்தி, யசோதை, தேவகி, காந்தாரி, திரௌபதை, சௌப்பியா, சத்தியவதி, விருஷபனுக்குப்புத்திரியாயும் ராதைக்குத்தாயாயுமுள்ளகுலோத்வஹா, மந்தோதரி, கௌசலை, சுபத்திரை, கௌரவி, ரேவதி, சத்தியபாமை, காளிந்தி, லக்ஷ்மணை, ஜாம்பவதி, அக்கினிஜிதி, மித்திரவிந்தை, லக்ஷ்மீவை, ருக்மணி, சீதை, காளி, பரிமளகந்தி, உஷை, அவளுடைய சகியான சித்திரலேகை, பிரபாவதி, பாதுமதி, மாயாவதி, ரேணுகை, பலராமர் தாயான ரோகணி, கிருஷ்ணனுக்குச் சகோதரியான ஏகதந்தை, துர்க்கை முதலியோரும் பிரகிருதியின் கலையாயுள்ளவர்கள்.

கிராமதேவிகளெல்லோரும் பிரகிருதிதேவியின் கலாம்சத்திற் பிறந்தவர்கள். பிரபஞ்சத்திலுள்ள ஸ்திரீகளெல்லாம் அந்தக்கலையின்அம்சாம்சத்திற் பிறந்தவர்கள். ஆகையினால் ஸ்திரீகளை அவமானஞ்செய்தால் பிரகிருதிதேவியை அவமானஞ்செய்ததாகும். புத்திரிபுத்திரணைப்பெற்ற பிராமணஸ்திரீயையும், எட்டுவயதுடையபிராமணகன்னிகையையும் வஸ்திர புஷ்ப சந்தனங்களால் பூஜித்தால் பிரகிருதிதேவியைப் பூஜித்ததாகும். நல்லொழுக்கமுள்ளபதிவிரதைகள் உத்தமஸ்திரீகள் ஆகிய இவர்கள் பிரகிருதியின் சத்வாம்சத்தினும், புருஷர்களால் அநுபவிக்கத் தகுந்தவர்களாயும் சுவாதீனர்களாயும் வீட்டுக்காரியங்களில் ஆவலுள்ளவர்களாயு முள்ளவர் மத்திமஸ்திரீகள்; இவர்கள் ரஜோகுணத்தினும், அறியப்படாத குலமும் பயங்கரமான முகமும் குலத்தை நாசஞ்செய்யும் துஷ்டத்தனமும் ஒருவர் சுவாதீனமில்லாமலும் கலகத்தில் ஆவலும் விபசா

ரத்தனமுமுள்ள பூலோகஸ்திரீகளும் சுவர்க்கத்திலுள்ள அப்சரஸ்திரீகளும் அதமஸ்திரீகள்; இவர்கள் தாமதகுணத்திலும் பிறந்தவர்களாம்.

இவ்வாறு பிரகிருதிதேவியின் அம்சங்களெல்லாவற்றையும்வர்ணித்தேன். அவர்களெல்லாம் புண்ணியகேஷத்திரமாகிய பரதகண்டத்தில் சுரதன்என்பவனால் பூஜிக்கப்பட்டார்கள்.: இராவணவதஞ் செய்யும்போது ராமசந்திரரால் மகாவருத்தத்தை நிவர்த்திசெய்கிறவளான துர்க்காதேவிபூஜிக்கப்பட்டாள்.மூன்றுலோகத்தாராலும் வணங்கப்படும் தக்ஷபுத்திரியான சதிதேவி பூஜிக்கப்பட்டுதக்பனிடத்துள்ள கோபத்தால்அக்கினிப்பிரவேசமாகி இமாசலபத்தினியாகிய மேனகையிடத்தோன்றி ஈஸ்வரனைமணந்தனள். கணேசர் கிருஷ்ணமூர்த்தியின் கலாம்சமாகவும் ஸ்கர்தர் விஷ்ணு கலாம்சமாகவும் தோன்றி பிறகு பார்வதிக்குப் புத்திரராயினர். இலக்குமிதேவி மங்களபூபனாலும் சாவித்திரி அஸ்வபதியாலும் சரஸ்வதி பிரமனாலும் முதலில் பூஜிக்கப்பட்டு பிறகு முனிவர்களாலும் தேவர்களாலும் மூவுலகத்தும் பூஜிக்கப்பட்டார்கள். ராதாதேவியை கோலோகத்தில் ராசமண்டலத்தில் கார்த்திகைமாத பூரணியில் பரமாத்மாவான கிருஷ்ணமூர்த்தி முதலில்பூஜித்தனர். பிறகு அவருடையஉத்தரவினால் கோபிகாஸ்திரீகள் கோபர்கள் சிறியபெண்கள் பிள்ளைகள் கோகூட்டங்கள் பிரமனதிதேவர்கள் முனிவர்கள் பக்தியோடு புஷ்பங்களாலும் தூபங்களாலும் பூஜித்துத் தோத்தரித்தனர்.சங்கரரால்ஆக்ஞாபிக்கப்பட்ட சுயக்ஞை என்பவள் பாரதவருஷத்தில் புண்ணிய கேஷத்திரங்களில் பூஜிக்கப்பட்டு பிறகு மூவுலகத்தாராலும் புஷ்ப தூபதீப நைவேத்தியங்களாற் பூஜிகப்பட்டுவருகிறாள். அவ்வாறே பிரகிருதிதேவியின் கலையினற்றோன்றியவரும் கிராமதேவிகளும் கிராமங்களிலும் நகரங்களிலும் பூஜிக்கப்படுகிறார்கள். நாரத முனிவரே! நீர்கேட்ட பிரகிருதிதேவிகளின் வம்லாறுகளை சாஸ்திரங்களிற் கூறியுள்ள லக்ஷணப்படிக் கூறினேன். இன்னும் எதனைக்கேட்க விருப்புகின்றனை யென்றனர். (சு ம்-கநி அ ஒ.)

முதலாம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

சர்வ சாக்ஷிண்யை நமः

இரண்டாம் அத்தியாயம்.

பஞ்சப் பிரகிருதியாதி உற்பத்தி.

நாரதர் கூறுகின்றார்:— ஓ பிரபுவே! எல்லாத்தேவிகளின் சரிதம் சுருக்கமாகக்கேட்டேன். ஆயினும் பிறருக்கு நான் போதிக்குமாறு எனது ஞாபகத்தில் நிற்கும்வண்ணம் விரிவாய்க் கூறவேண்டும். சிருஷ்டிக்கு ஆதியிலிருக்கின்றதேவி சிருஷ்டியின்பொருட்டு எப்படிஆவிர்ப்பவித்து எப்படி ஐந்துவிதமாகப் பிரிந்தாள்? எந்தஎந்தத் தேவி அம்சமாகவும், எந்தஎந்தத்தேவி கலையாகவும், எந்த எந்ததேவிதிரிகுணத் மகமாகவும் தோன்றினார்களோ அவர்களது அவதாரம் தியானம் பூஜை கவசம் தோத்திரம் ஐஸ்வர்யம் சௌக்கியம் மங்களம் இவைகளைச் சம்பிரதாயமாக விரித்துச்சொல்ல யான் கேட்கவேண்டுமென்னும் இச்சை யுடையவனாக விருக்கின்றேன் என்று பிரார்த்தித்தனர்.

நாராயணர் கூறுகின்றார் :— பரமாத்மா ஆகாயம் காலம் திக்கு பிரபஞ்சபூகோளம் கோலோகம் வைகுண்டம் இவைகள் நித்தியமாக விருக்கின்றன. இவைகளைப்போலவே பரப்பிரமத்தின்லீலையாய் அவனிடத்தில் ஐக்கியமாகவிருக்கும் பிரகிருதியும் நித்தியமாக விருக்கிறது. எவ்வாறெனின், தாமரைமலரில் காந்திபோலும், அக்னியில் சுடுகைபோலும், சந்திரனிடத்தில் நிலவைப்போலும், சூரியனிடத்தில் வெயிலபோலும் பிரகிருதி எப்போதும் அபின்னையாயிருக்கிறாள். குண்டலாதிகளைப் பொன்னையன்றித் தட்டானும், கடாதிகளை மண்ணையன்றிக் குயவனும் எவ்வாறு செய்யார்களோ அவ்வாறு ஜகத்சிருஷ்டியை அப்பிரகிருதியையன்றி மஹேஸ்வரரும் செய்யார். சர்வசக்தி சொரூபமாக விருக்கின்ற அப்பிரகிருதியின் சம்பந்தத்தினாற் பரமபுருஷன் சக்திமானென்றுசொல்லப்படுகின்றான். சக்தியென்பது ஐஸ்வர்யம் பராக்கிரமம் என்னும் இரண்டுபொருளடையது. அவ்விரண்டையுமே தமதுருவமாகக்கொண்டு அத்தப்பிர

கிருதி ஐஸ்வர்யரூபமாயும் பராக்கிரமரூபமாயுமிருந்து அவ்விரண்டையுந் தருதலால் பிரகிருதி சக்தியென்று சொல்லப்படும். பகம் என்னுஞ்சொல் ஞானம் சமர்த்தி சம்பத்து யஜசு பலம் என்னும் பொருளையுடையது. ஆதலால் பகரூபமானசக்தி அப்பிரகிருதியே யாகலின் பகவதி என்றுஞ் சொல்லப்படுகிறுள். அப்பகவதியோடு பரமாத்மா கூடியிருத்தலின் பகவானெனப்படுகின்றார். அதனால் அப்பகவான் தனதிச்சையால் உருவமுள்ளவராயும் உருவமில்லாதவராயு மிருக்கிறார். அவரை யோகிகள் தேஜோரூபராயும் உருவமில்லாதவராயும் தியானித்து பரப்பிரஹ்மமென்றும் பரமாத்மா வென்றும் ஈஸ்வரென்றும் துதித்து யாவராலும் அவர் காணக்கூடாதவரென்றும், யாவையும் அவர்காண்பவரென்றும், சர்வக்ஞரென்றும், சர்வகாரணரென்றும், எல்லாவற்றையுங் கொடுக்கின்றவரென்றும், சர்வசொரூபி என்றும் வழிபடுகின்றனர். இவ்வாறு வைஷ்ணவர் தியானிப்பதில்லை.

அவர்கொள்கையாதெனின், பிரகாசமுள்ள வஸ்து இல்லாமல் பிரகாசம் என்பது ஏது எனமறுத்து, பிரமதேஜசுள்ள வஸ்து தேஜோமயமண்டலத்திலிருக்கிறது. அது தன்னிச்சைவழி யிருப்பதாயும் சர்வரூபமாயும் சர்வகாரண காரணமாயும்மிகுந்தசுந்தரமாயும் மனோகரமாயும் சுந்தரமானவடிவமுடைய குழந்தையாயும் எப்பொருளினுஞ் சிறந்ததாயும் புதியநீர்கொண்ட மேகம்போல்பிரகாசமுள்ளகறுத்தமேனியுள்ளதாயும்சரத்காலமத்யானத்தில்மலர்ந்திருக்கும் தாமரைக்கூட்டத்தைப்பழிக்கின்ற நேத்திரமுடையதாயும் முத்துகளின்காந்தியைப்பழிக்கின்றமனோகரமானபல்வரிசையுடையதாயும் சிரம்மயில்தோகையின் இறகினாலும் மல்லிகைமாலைகளாலும்நிறைந்திருக்கிறதாயும் அழகானநாசியுள்ளதாயும் பக்தானுக்ரஹமானபுன்சிரிப்புள்ளதாயும் சுவலிக்கின்ற அக்கினியைப்போல்பிரகாசிக்கின்ற பொன்மயமான வஸ்திரத்தால் விளங்குவதாயும் புள்ளாங்குழலேந்திய இரண்டுகையுள்ளதாயும் ரத்னபூஷணங்களால் அலங்கரிக்கப்பட்டதாயும் சர்வலோகத்திற்கும் ஆதாரமாயும் பிரபுவாயும் சர்வசக்தியோடு கூடியதாயும் சகலஐஸ்வர்யத்தையுங் கொடுப்பதாயும் சர்வசுதந்தரமாயும் சர்வமங்களகரகாயும் அகண்டபரிபூரணமாயும் சித்தியாயும் சித்தேசமாயும் சித்திகாரகமாயும் உள்ள நித்தியமான பரப்பிரமமென்று தியானிக்கிறார்கள். ஜனனம் மரணம் கிழத்தனம்

நோய் சோகம் பயம் இவைகளைப்போக்கும் அப்பிரஹ்மத்தினுடைய இமைகொட்டுங்காலம் பிரமனுக்குப் பூரணவயதாமென்றும் இத்தன்மையுடையவஸ்துவே பரப்பிரஹ்மமென்றும்பரமாத்மாவென்றும் கிருஷ்ணமூர்த்தியென்றும் சொல்லல்படுமென்றும், கிருஷ்ணை என்பதில் கிருஷியென்பது பரப்பிரமபக்தி எனவும், ண என்பது அடிமைத்தன்மை எனவும் பொருள்படுதலால் அவ்விரண்டையுங்கொடுக்கும் அதற்கு கிருஷ்ணனென்று பெயர்வந்ததென்பர்.

இனிச் சித்தாந்தத்தைச் சொல்லுகின்றேன். பிரமமானபிரபு சிருட்டிக்கவேண்டுமென்னும் இச்சை தனது உள்ளத்திற்கொண்டு சங்கற்பிக்க அவ்விச்சையின் அம்சமான காலதத்வபிரேரேபத்தால் சித்சக்தியாய் அச்சக்தி ஒன்றுனே ஆதியில் சிருட்டித்தனர். எவ்வாறெனில்; தனதிச்சாமயமான இச்சாசக்தியினுல் பிரபு வலப்பாகம் புருஷரூபமாகவும் இடப்பாகம் ஸ்திரீரூபமாகவும் இரண்டுருக்கொண்டனர்: பின்னர் காமத்துக்கு ஆதாரரூபமான ஸ்திரீவுருவத்தை மகாகாமியாய்ப் பார்த்தனர். அவரால் பார்க்கப்பட்ட பெண்ணுருவுடையவள் அழகிய தாமரைமலர்போன்ற அழகையும் சந்திரமண்டலத்தை நிந்திக்கின்ற பிருஷ்டபாகத்தையும், வாழைமரத்தைப் பழிக்கின்ற மிக அழகான தொடைகளையம், அழகிய வில்வக்கனி போன்ற ஸ்தனங்களையும், புஷ்பத்தினுல் அலங்கரிக்கப்பட்ட லளிதையான சுருங்கிய இடையினையும், மனத்தைக் கவரத்தக்க சுந்தரத்தையும், சாந்தமான உருவத்தையும், புன்சிரிப்பையும் கடைக்கண்பார்வையையும் உடையவளாயும், வன்னிசுத்தமாயும் சுகமாயுமுள்ள வஸ்திரமணிந்த இடையுடையவளாயும், இரத்தினபரணங்களால் அலங்கரிக்கப் பட்டவளாயும், சகோரப் பக்ஷியைப்போல் கோடிசந்திரனுதித்தாற்போன்ற கிருஷ்ணமூர்த்தியினது திருமுகத்தைப் பார்க்கின்ற கண்களுடையவளாயும், நெற்றிதடவில் சந்தனப் பொட்டும் அதனடவில் கஸ்தூரிப்பொட்டும் அதனடவில் சிந்தூரப் பொட்டும் தரித்தவளாயும், மாலதிபுஷ்பத்தினுல் அலங்கரிக்கப்பட்டுள்ள மடிப்புள்ளகூந்தலுடையவளாயும், சிரேஷ்டமான ரத்னத்தை நடுநாயகமாகவுடையமுத்தாரமணிந்தவளாயும், பர்த்தாவைவிரும்புகின்றவளாயும், சந்திரனுதித்தாற்போன்றபிரகாசமுள்ளவளாயும், சந்தோஷத்தினுல்பூரித்தவருவமுள்ளவளாயும், யானை அன்னம் இவைகளின் கர்வத்தைபடக்கும் நடையினையுடையவளாயும் இருந்தனள்.

அவனை சிருங்காரரசம் ஒருருவுகொண்டதுபோல்சிருஷ்டித்தொழிற்குப் பிரபுவான கிருஷ்ணமூர்த்தி சிருஷ்டித்தானத்தில் பிரமனது ஒருதினமளவும் சிருஷ்டியில் ஆவலுள்ளவராய்க் கிரீடித்து சம்போகித்து அதனால் சிரமமடைந்தவராய் நித்தியானந்த சொரூபிணியானதேவியினிடத்தில சுபமானகாலத்தில் வீரியத்தைவிட்டனர். அந்தவீரியதேஜஸினால் சிரமப்பட்டதேவியினதுசரீரத்திலிருந்து வியர்வையும் நிஸ்வானமும்உண்டாயிற்று. அந்தவியர்வைமுழுவதையும் பூகோளம் கிரகித்துக்கொண்டது. பெருமூச்சியான நிஸ்வாஸக்காற்றானது சராசரமான சர்வப்பிராணிகளும் ஜீவிப்பதற்கு ஆதரவாய்விட்டது. அவ்வாயுவினுடைய இடப்பக்கத்திலிருந்து பிராணபத்தினி யுண்டாயினள். அவளுடைய புத்திரர்களாகிய பிராணன் அபானன் வியானன் உதானன் சமானன் என்பவர்கள் பிராணிகளுக்குப் பஞ்சப்பிராணனென்று சொல்லப்படுகின்றனர். தருமரூபமானஜலத்திற்கு அதிபதியானவருணன் இடப்பக்கத்தில் வாருணன்சக்தியான வாருணி தோன்றினாள் கிருஷ்ணருக்குப் பிராணசொரூபியான சித்சக்தி பிரமதேஜஸினால் ஜ்வலித்துக்கொண்டு பிராணனைக்காட்டிலும்அதிகபிரிய முள்ளவளாயும்,தினந்தோறும் அவரிடத்தில் சம்பந்தமுள்ளவளாயும் அவரதுமார்பில் வாசமுள்ளவளாயும், நூறுமன்வந்தரமிருந்து பிறகு பிரபஞ்சத்திற்கெல்லாம் ஆதாரமான பொன்போற்பிரகாசிக்கின்ற குழந்தையைப் பெற்று தயவில்லாமல் பிரமாண்டகோளஜலத்திலெறிந்தனள். அதனைப்பார்த்த கிருஷ்ணமூர்த்தி ஓ கடினசுபாவமும் கோப சுபாவமுமுள்ளவளே! நீ எதனால் இப்பிள்ளையை எறிந்தனையோ அதனால் நீயும் உன்னம்சமாகப் பிறக்கிற தேவதாஸ்திரீகளும் பிள்ளையின்றி நித்ய யௌவனமுள்ளவளாவீரென்று சபித்தனர்.

இவ்வாறிருக்கையில் அத்தேவியின் நாக்குநுனியில் விரைவாக ஓர்கன்னிகை மனோகரமான வெண்மையுருவமுள்ளவளாயும், வெள்ளைவஸ்திர முடையவளாயும், வீணையையும் புத்தகத்தையும் தரித்துக்கொண்டிருப்பவளாயும் ரத்னபூஷணங்களால் அலங்கரிக்கப்பட்டவளாயுந் தோன்றினாள். சிலகாலங்கழிந்தபின் அத்தேவி வலப்பாகம்ராதையாகவும் இடப்பாகம்லக்ஷுமியாகவும் பிரிந்தாள். அவ்வாறே கிருஷ்ணமூர்த்தியும் வலப்பாகம் இரண்டுகையுள்ள புருஷனாகவும் இடப்பாகம் நான்குகையுள்ள புருஷனாகவும் பிரிந்து

னர். பிறகு கிருஷ்ணமூர்த்தி வாக்தேவியையும் ராதை இலக்ஷ்மிதேவியையும் தான்குகையுள்ள நாராயணனுக்குப் பத்தினிகளாக விருக்கவேண்டுமென்றனர். அவ்வாறே இருவரும் நாராயணனுடை வைகுண்டத்தில் போயிருந்தனர். இவர்கள் பிள்ளையில்லால் இருப்பதையுணர்ந்த நாராயணர் தனது அங்கத்திலிருந்து தான்குகையுள்ளவர்களாயும் தேஹவடிவு குணம் உருவம் இவைகளால் விஷ்ணுவுக்குச்சமானர்களாயுமுள்ள கூட்டங்களைப்பிறப்பித்தனர். அவ்வாறே லக்ஷ்மிதேவி தனதுசரீரத்தினின்றும் கோடிகோடிதாசிகளைப்பிறப்பித்தனர். ஓமுனிவரே! கோலோகத்தில்பிரபுவான கிருஷ்ணருடைய ரோமகூபத்திலிருந்து அநேககோபர்கள் வயசு தேஜஸ் ரூபம் குணம் பலம் பராக்கிரமம் இவைகளால் தனக்குச்சமானமானவர்களாயும், பிராணனுக்குச் சமானமான பிரியமுள்ளவர்களாயும் பிறந்தனர். ராதையின் ரோமகூபத்திலிருந்து அநேக கோபிகன்னிகைகள் ராதைக்குச் சமானமானவர்களாயும் ராதைக்குப் பணிவிடை செய்கின்றவர்களாயும் பிரியமாய்ப் பேசுகின்றவர்களாயும் சந்தனபூஷண முதலானவைகளால் அலங்கரிக்கப்பட்டவர்களாயும்பிறந்தார்கள். இவர்களெல்லாம் நித்தியளவன முள்ளவர்களாய் முன்சாபத்தினால் பிள்ளையில்லாதவராகவே யிருந்தனர்.

இவ்வாறிருக்கையில் நாராயணியாயும் ஈசானியாயும் துர்க்காதேவியாயும் அனந்தியான விஷ்ணுமாயையாயும் கிருஷ்ணசக்தியாகியதேவி தோன்றினள். அந்தத்தேவி கிருஷ்ணனுடைய புத்தியை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவளாயும் தேவிகளுக்கெல்லாம் பீஜரூபமாயும் மூலப்பிரகிருதியாயும் பரிபூரணியாயும் தேஜோரூபினியாயும் உருக்கிவிட்ட பொன்போன்ற காந்தியுள்ளவளாயும் உதயகாலசூரியன்போல் பிரகாசிக்கின்றவளாயும் மூன்றுகண்ணியும் புன்சிரிப்பையும் உடையவளாயும் நானவிதமான ஆயுதங்களைத் தரித்துக்கொண்டிருக்கிற ஆயிரங்கையுள்ளவளாயும் பிரகாசிக்கும் வஸ்திரத்தைத் தரித்தவளாயும் இரத்தின பூஷணங்களால் அலங்கரிக்கப்பட்டவளாயும் இவளுடைய அம்சாம்ச கலையினாலே பிறந்தசகல ஸ்திரீகளிடத்திலும் ஜனங்களெல்லாம் மோகித்திருக்கச்செய்யும் மாயையுள்ளவளாயும் சகலசம்பத்தையுங் கொடுக்கின்றவளாயும் உலகத்தில்வசிக்கிறகாமிகளுக்குச்சகல கோரிக்கைகளையுங் கொடுக்கின்றவளாயும் கிருஷ்ணபக்தியைக் கொடுக்கின்றவளாயும் வைஷ்ண

வர்களுக்கு வைஷ்ணவியாயும் முமூக்ஷுக்களுக்கு மோக்ஷத்தையும் சுகிகளுக்கு சுகத்தையும் கொடுக்கின்றவளாயும் சுவர்க்கத்தில் சுவர்க்கலக்ஷ்மியாயும் கிருகத்தில் கிருகலக்ஷ்மியாயும் தபசிகளிடத்தில் தபசியாயும் ராஜாக்களிடத்தில் சம்பத்சொரூபிணியாயும் அக்னியில் உஷ்ணமாயும் சூரியனிடத்தில் வெயிலாயும் சந்திரனிடத்தில் நிலவாயும் தாமரையிடத்தில் சோபையாயும் இருக்கும் ஸ்வரூபிணியாயும் பரமாத்மாவான கிருஷ்ணமூர்த்தியினிடத்தில் சர்வசக்தி சொரூபமாயும் இருக்கிறாள்.

எந்தத்தேவியினால் ஆத்மா சக்தியுள்ளதாகவிருக்கின்றதோ எந்தத் தேவியினால் லோகமெல்லாம் சக்தியுள்ளதாகவிருக்கின்றதோ, எந்தத் தேவியில்லாவிட்டால் எல்லாலோகமும் இறந்தது போலத் தோன்றுமோ, எந்தத்தேவி சம்சாரமான விருக்ஷத்திற்கு வித்தாகவிருக்கின்றாளோ, எந்தத்தேவி ஸ்திதிரூபமாயும் புத்திரூபமாயும் பலரூபமாயும் இருக்கின்றாளோ, எந்தத்தேவி பசி தாகம் தயை நித்திரை சோம்பல் பொறுமை தைரியம் சாந்தி வெட்கம் துஷ்டி புஷ்டி பிரமை காந்தி முதலான உருவங்கொண்டிருக்கின்றாளோ, அந்தராதிகாதேவியானவள் சர்வேஸ்வரனை பகவானைத் தோத்திரஞ்செய்து அவனுக்கெதிரில் நின்றனள். பகவான் அவளுக்கு ரத்தினமயமான சிம்ஹாசனங் கொடுத்தனர்.

இவ்வாறிருக்கையில் பகவானுடைய நாபிக்கமலத்தி லிருந்து கமண்டலந் தரித்தவராயும், சம்பத்சொரூபராயும் ஞானிகளுக்குள் சிரேஷ்டமான தபசியாயும், பிரமதேஜஸினால் சுவலிக்கின்றவராயும், நான்கு முகங்களினால் துதிக்கின்றவராயும் உள்ள பிரமனும் நூறுசந்திரன் உதித்தாற்போல ஒளியுள்ளவளாயும், மிக்க அழகாயும், நெருப்பைப்போல் சுவலிக்கின்றவளாயும், ரத்னபூஷணங்களால் அலங்கரிக்கப்பட்டவளாகியும், ரத்னசிம்மாசனத்திலிருக்கின்ற பகவதியைத் துதிக்கின்றவளாயும் உள்ள ஓர்தேவியும் தோன்றினர்.

அப்போது கிருஷ்ணமூர்த்தி இடப்பாகம் மகாதேவ ரூபமாகவும், வலப்பாகம் கோபிகளுக்குப் பர்த்தாவான கிருஷ்ண பகவானாகவும் இரண்டுருக்கொண்டனர். அவைகளில் மகாதேவர்--சுத்தஸ்படிகம்போல் பிரகாசிக்கின்றவராயும், கோடிசூரியன் உதித்தாற் போல் காந்தியுள்ளவராயும், திரிசூலந்தரித்தவராயும், புலித்தோல்

உடையாகவுள்ளவராயும், உருக்கினிட்ட பொன்போன்றசடையுடை யவராயும், பஸ்மத்தினாற் பூசப்பட்டசரீரமுள்ளவராயும், புன்சிரிப் போடு கூடினவராயும் சந்திரனை சிரசிலுள்ளவராயும், திகம்பரரா யும், சர்வபூஷணங்களால் அலங்கரிக்கப்பட்டவராயும், நீலகண்டரா யும். வலக்கையில் ரத்னமாலேதரித்து ஐந்து முகங்களால் அகாதி யான பரப்பிரமத்தை விளக்குகின்றவராயும், சர்வகாரணகாரணரா யும், சத்தியசொரூபராயும், எல்லாமங்களத்திற்கும் மங்களமாயும் ஜன்மம் மிருத்யு கிழத்தனம் வியாதி சோகம் பயம் இவைகளை நீக் குகின்றவராயும், கிருஷ்ணமூர்த்திபாயும், மிருத்யுவுக்கு மிருத்யுவா யுமிருக்கிற பரமாத்மாவான ஈஸ்வரனை ஜபித்து ரத்னசிம்ஹாசனத் தில் வீற்றி நந்தனர். (சு-ம்-88)

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

ஸர்வாத்மிகாயை நம:

மூன்றும் அத்தியாயம்.

*கிருஷ்ண சிருஷ்ட தேவதாவ்ய வஸ்திதி.

நாராயணர் கூறுகின்றார்:—முன்ஜலத்தில்விடப்பட்டகுழந்தை யானது ஓருபிரமனது வயதளவுகாலம் ஜலத்திலிருந்து காலாக் தர த்தில் இரண்டுருக்கொண்டது அதன்மத்தியில் நூறுகோடி சூரி யன் உதித்தாற்போல் காந்தியுள்ள குழந்தையாயும் பசியினல் பீடிக் கப்பட்டு சிறிதுகாலம் அழுதுகொண்டிருப்பதாயும் ஜலத்தில் தாக குதலில்லாததாயும் அநேகப்பிரமாண்டங்களுக்குப் பிரபுவாகப்போ கிறதாயும் நாதனில்லாததாயும் ஆகாயத்தைப் பார்க்கிறதாயும் சிறி யதினுஞ் சிறியதாயும் பெரியதினும் பெரியதாயும் கிருஷ்ணமூர்த்தி யினது தேஜசில் பதினாறில் ஓர் அம்சமாயும் உலகுக்கெல்லாம் ஆதா ரமாயுமுள்ள மஹாவிராட் என்னும் பகவானும் இரண்டாவது ரூபமான மகாவிஷ்ணுபகவானும் தனித்தனி தங்களது ரோமகூபங் களில்சகலமானபிரபஞ்சங்களையும் சிருட்டித்தனர். அவர்களாற்சிரு ஷ்டிக்கப்பட்ட திரிமூர்த்திகளும் பிரபஞ்சங்களும் எண்ணமுடியா

---

* கிருஷ்ணனால் சிருஷ்டிக்கப்பட்ட தேவதைகளின் ஏற்பாடு.

ஒவ்வொரு பிரமாண்டத்திலும் ஒவ்வொரு பிரம விஷ்ணு ருத்திரர் இருக்கிறார்கள். பிரமலோகம்வரையில் எண்ணப்பட்டமேலேழுலோகமும் பாதாளம் அந்தமாக எண்ணப்பட்ட கீழேழுலோகமுங்கூடியுள்ளது ஒருபிரமாண்டம் என்று பெயர். அதற்குமேல் வைகுண்டம் அதற்குமேல் ஐம்பது கோடி யோசனை தூரத்தில் நித்தியமாயும் சத்திய சொரூபமாயுள்ளது கோலோகம். தாவரஜங்கம பேதங்களோடும் நால்வகைப்பட்ட வருண பேதங்களோடும் சர்ப்ப முதலாகச் சொல்லப்பட்ட ஊர்வனவாதி பேதங்களோடும் நாற்பத்தொன்பது தீவுகளோடும் பருவதங்களோடும் ஏழு சமுத்திரங்களோடும் கூடியிருக்கிறது பூலோகம். இப்பூவுலகிற்குமேல் புவர்லோகம் சுவர்லோகம் ஜனலோகம் தபோலோகம் சத்தியலோகம் பிரமலோகம் இருக்கின்றன. அவைகளும் அவைகளி லடங்கியுள்ள பிரபஞ்சங்களும் நாசமடையும். கோலோகமும் வைகுண்டமும் எக்காலத்தும் அழிவில்லாமல் நித்தியமாயிருக்கும். தேவியின் ரோமகூபம் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு அண்டம் இருக்கின்றது. இப்பிரமாண்டங்களின் கணக்கைகிருஷ்ண மூர்த்தியினாலும் கணக்கிட முடியாது. ஆகவே மற்று யாவரால் முடியுமென்று கூறலாம். ஒவ்வொரு பிரமாண்டத்திலும் திரிமூர்த்திகளும் முக்கோடி தேவர்களும் திக்பாலகர்களும் நவக்கிரகங்களும் நக்ஷத்திரங்களும் இருக்கின்றன.

பிறகுமஹாவிராட்புருஷன் ஆகாயத்தை அடிக்கடிபார்த்து தன்னைத்தவிர வேறொருவருமில்லாமையால் மிக்கசிந்தை யுடையவராய் கண்ணீர்விட்டுப் பின் ஞானத்தாற்றெளிந்து கறுத்த திருமேனியையும் இரண்டுதிருக்கரத்தையும் பொன்னாடையையு முடையவராய் பக்தானுக்கிரக காரணராய் அநாதியான பரப்பிரம்ம சொரூபராய் பரமபுருஷராய்ப் புள்ளாங்குழலோடும் தோன்றிய கிருஷ்ணபகவானைப்பார்த்துச் சிரித்தார். சிரித்த குழந்தையைத் தந்தையான பரமேஸ்வரன்பார்த்து நீ என்னைப்போல் ஞானமுடையவனாயும் பசிதாகம் கிழத்தனம் ரோகம் சோகம் மரணமுதலியெனவும் யாதொரு கோரிக்கையும் இல்லாதவனாயும் யாவருக்கும் வரத்தைக் கொடுக்கின்றவனாயும் அநேக பிரமாண்டங்களுக்கு ஆதாரமாயும் சிருட்டிக்குலயம் வருமளவும் இருப்பாயென்று கூறி அவனுடைய காதில் சிரேஷ்டமான பிரணவத்தை முதலிலும் அக்கினிபத்தினியின் நாமத்தை ஈற்றிலும் சதுர்த்தியந்தமான கிருஷ்ணன் என்பதை நடுவி

லுமுள்ள விக்கினங்களை யெல்லாம் போக்கும் சடாக்ஷர மந்திரத்தை மூன்றுதரம் உபதேசித்து எல்லாவுலகங்களிலும்: வைஷ்ணவர்கள் என்ன நிவேதனஞ் செய்கின்றார்களோ அதிற் பதினெறில் ஒருபாகம் உனக்கும் பதினேந்தில் ஒருபாகம் மஹாவிஷ்ணுவுக்குங்கொடுக்கவேண்டும். கிருஷ்ணமூர்த்தி நிர்க்குணராயும் பரிபூரணராயுமுள்ளவராதலால் நிவேதனத்தினால் அவர் திருப்தியடைவது ஒன்றுமில்லை. அவருக்குச்செய்யும் நிவேதனமெல்லாம் லக்ஷ்மிநாதனை விராட்டுக்கேயாகும் என்று கூறி மறுபடியும் அந்தவிபு யாது வேண்டுமென்று வினவினர்.

அதற்கு விராட்புருஷர் கிருஷ்ணமூர்த்தியான பரமேஸ்வரனைப்பார்த்து உன்மலரடியில் சலனமற்ற பக்தி நான் பிழைத்திருக்குங் காலம் பெரிதாயிருந்தாலும் சிறியதாயிருந்தாலும் அக்காலம் வரையில் எனக்கு நீங்காதிருத்தல் வேண்டும். இவ்வுலகில் உனது பக்தியிருக்கிறவன்தான் ஜீவன்முக்தனாய் வாழ்கின்ற புகழுடையவனவன். அஃதில்லாதவன் பிழைத்திருந்தாலும் பிணமெனப்பட்டு இகழுடையவனவன். உனது பக்தியில்லாதவனுக்கு ஜபம் தபம் யக்ஞம் பூஜை விரதம் உபவாசம் புண்ணியம் தீர்த்தயாத்திரை முதலியவைகளால் வரும் பிரயோஜனம் ஒன்றுமில்லை. அவனுடைய பிழைப்பு வீணே. ஏனெனில் எந்தப்பரமாத்மாவினால் பிழைத்திருக்கின்றானை அந்தப் பரமாத்மாவாகிய கிருஷ்ணனை யறியாதிருக்கின்றனல்லவா (எனவே ஜபமுதலிய செய்கைகளை யறிந்து அவற்றிற்குரிய பலனைக்கொடுப்பவன் பகவானென் றறியாமையினாலென்க.) எவ்வளவுகாலம் ஆத்மா சரீரத்திலிருக்கின்றதோ அவ்வளவுகாலம் சக்தியோடு கூடியிருக்கின்றான். அந்த ஆத்மா சரீரத்தை விட்டால் சக்திகளெல்லாம் நீங்கிவிடுகின்றன. ஆதலால் நீர் பிரகிருதிசக்திக்கு மேலான சர்வாத்மாவாக விருந்து (பிறரது இச்சையின் வழிநில்லாது. உமது இச்சைக்குட்படும் யாவற்றிற்கும் ஆதியாயும் அநாதியான பிரமதேஜஸாயும் இருக்கிறீரென்று துதித்தனர்.

அதனைக்கேட்ட கிருஷ்ணபகவான் விராட்புருடனைப் பார்த்து நீ என்னைப்போல் எண்ணிறந்தகாலம் இருந்து எண்ணிறந்த பிரம்மாக்களுக்குப் பிரபுவாய் ஒவ்வொரு அண்டத்திலும் அம்சத்தினால் கூறிய விராட்புருஷனாய் வாழக்கடவாய். உன்னால் பிறக்கப்போ

ற பிரமா பிரபஞ்சத்தையெல்லாம் சிருஷ்டிப்பன், அவன் நெற்றி யிலிருந்து பதினொரு உருத்திரர்கள் சிவரூபிகளாகத்தோன்றி அவ ருள் காலாக்னிருத்திரர் சகலப்பிரபஞ்சத்தையும் சங்கரிப்பர். விஷ் ணுவும் எனதுசிறிய அம்சமாகப்பிறந்து என்பக்தியுள்ளவராய் ரக்ஷி க்கப்போகின்றார். நீ எனது வரப்பிரசாதத்தினால் காடோறும் என் னையும் என் மார்பிலிருக்கும் மனைகரையான உன் தாயையும் நிச்சல புத்தியுடன் பார்ப்பாயாக. இனி என்னிடம் போகின்றேன். இங்கு நீ நிற்பாயென்றுகூறி பிரமனைப்பார்த்து ஓகுழந்தாய்! சிருஷ்டி நிமித் தம் விராட் புருஷனது காபிக்கமலத்தில் நீ பிறக்கக் கடவாயென்று உருத்திரரைப்பார்த்து ஓ குழந்தாய்! நீ பிரமனது நெற்றியில் தோன் றக்கடவாயென்று ஆக்ஞாபித்து மறைந்தனர். மகாவிராட் புரு ஷருடைய ரோமகூபத்தினின்றும் பிரமாண்ட கோளக சலத்தில் அவயம்சமாக சிறிய விராட்புருட்ர் கரியராயும் யௌவனரூபராயும் பீதாம்பரதாரியாயும் ஜலமயமான படுக்கையிற் படுத்தவராயும் புன் சிரிப்புள்ளவராயும் தோன்றினர். அவரது காபிக்கமலத்தில் பிரமன் தோன்றி ஒருலக்ஷம் யுகம்வரையில் தான்பிறந்த அக்கமல முழுவ தும் சஞ்சரித்துப் துனியையறியாது மிக்கசிக்தையோடு தன்னிட த்தையடைந்து பகவானைத்தியானித்து அத்தியானத்தின் திவ்ய நேத்திரத்தினால் சிறிய விராட்புருஷனையும் அவருடைய ரோமகூபத் தில் பிரமாண்டத்தையும் கோலோகத்தில் கோபர் கோபிகைகளோடு கிருஷ்ணமூர்த்தியையும் பார்த்துத் துதித்து அனுக்கிரகம் பெற்று சிருஷ்டிக்கு ஆரம்பித்தனர். பிரமனது மனதிலிருந்து சனகன் முத லான புத்திரர்கள் பிறந்தார்கள். அதற்குப்பின் பதினொருஉருத்திரர் கள் பிறந்தார்கள். சின்னவிராட்டின் இடதுபக்கத்திலிருந்து லோ கத்தையெல்லாம் ரக்ஷிக்கும் நான்குகையுள்ள விஷ்ணுபகவான் பிற ந்து சுவேத த்வீபத்தில் வாசஞ்செய்தார். பிரமாவானவர் சுவர்க்க த்தையும் மனிதர்களையும் பாதாளத்தையும் தாவரசங்கமங்களையும் சிருட்டித்தனர். இவ்வாறு சின்ன விராட்டினுடைய ஒவ்வொருரோ மகூபத்திலும் ஒவ்வொரு அண்டங்களிருக்கின்றது. அவ்வண்டங் கள்தோறும் திரிமூர்த்திகளு மிருக்கின்றார்கள். இதுவரையில் கிரு ஷ்ணபகவானுடைய கீர்த்தனஞ்சொன்னேன். இனி எதனை கேட்க விரும்புகின்றனை என்றனர். (சூ-ம்-62)

மூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

ஸர்வசௌக்ய தாத்ரை நம:

நான்காம் அத்தியாயம்.

சரஸ்வதி பூஜை கவசம்

நாரதர் நாராயணரை வினவுகின்றார்:—அமுதம்போன்ற சகல சரித்திரமும் முன் தேவரீர்கிருபையால் சொல்லக்கேட்டேன். இப் பொழுது பிரகிருதி சக்திகளுக்குள் எந்தத் தேவியினுடைய பூஜை மண்ணுலகில் எந்தமாநுடரால் நடத்தப்போகின்றது? எவரால்எந் தத்தேவி பூஜிக்கப்பட்டாள்? எவரால் எந்தத்தேவி தோத்திரஞ்செ ய்யப்பட்டாள்? எந்தெந்தத்தேவிகளால் எவரெவருக்கு வரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளையும் இவர்களுடைய சரித் திரங்களையும் நன்றாகச் சொல்லவேண்டு மென்றனர்.

நாராயணர் கூறுகின்றார்:—முற்கூறிய துர்க்கையாதி ஐவகைப் பட்ட சக்திகளுடைய அம்சரூபமாகவும் கலாரூபமாகவும் காளி வசுந்தரை கங்கை சஷ்டி மங்களசண்டிகை துளசி நித்திரை ஸ்வதா ஸ்வாஹா தக்ஷிணை என்பவர் தோன்றினர். இவர்களுடைய பூஜை பிரசித்தமாகவும், பிரபாவம் ஆச்சரியகரமாகவும், அமிர்தம்போன்ற சரிதம் செவிக்கினிமையான மங்களங்களுக்கெல்லாம் காரணமாக வும், புண்ணியகரமாகவும் உள்ளன. இவர்களுள் துர்க்கை ராதை என்பவர்களுடைய சரிதம் மிகப்பெரிதாயும் விரிவாயும் உள்ளதாக லான் அதனைப்பின்னர் கூறுகின்றேன். இப்பொழுது மற்றையவர்க ளுடைய சரித்திரங்களையும் ஆன்மாக்களுடைய கன்மப்பிரிவுகளை யுங் கூறலாமென்றெண்ணி அவற்றுள் முன்னர் எவளது அதுக்பிர கத்தால் மூடன் பண்டிதனுகின்றானோ அச்சரஸ்வதி தேவியினது சரிதத்தைச் சுருக்கமாகக் கூறுகின்றேன் கேட்பீராக:—

சரஸ்வதிதேவி பரப்பிரஹ்மசொரூபமாகிய கிருஷ்ணமூர்த்தியி னுடைய பத்தினியான ராதையின் திருமுகத்தினின்றுந் தோன்றி அப்பொழுதே கிருஷ்ணமூர்த்தியை நாயகனாக வேண்டுமென்று விரும்ப, அவர் காமரூபிணியாயும் சர்வலோகமாதாவாயுமுள்ள அவ

ளுடைய எண்ணத்தையறிந்து அக்கலாதேவியைப்பார்த்து எனது அம்சபூதனுயும், நான்கு கையுள்ளவனுயும், யௌவனத்தோடுகூடிய சுந்தரனுயும், சர்வகுண சம்பன்னனுயும், எனக்குச் சமானமானவனுயும், காமமுள்ளஸ்திரீகளின் காமத்தைப் பூர்த்திசெய்கின்றவனுயும், கோடிமன்மத .வடிவுள்ளவனுயும், லீலாலங்கிருதனுயும் நாராயணனெருவன் இருக்கின்ருன். அவனே நீ பர்த்தாவாக அடையக்கடவாய். ஓ சுந்தரீ! என்னைப் பர்த்தாவாகக் கொண்டு நீ இங்கிருக்க விரும்புவாயாகில் நான் தனித்திருப்பவல்லன். என்னுடன் ராதாதேவி யிருக்கின்ருள். அவள்தேஜஸு உருவம் குணம் முதலியவற்றில் எனக்குச் சமானமானவளாயும் என் பிராணனுக்கு அதிஷ்டான தேவதையாயும் இருக்கின்றமையால் உனக்கு க்ஷேமந்தான் எப்படி புண்டாகும். ஏனெனில் எவனுவது யாவரினும் பலவானுகை விருப்பன். அவன் மற்றெருவனைக் காக்கவல்லவனுவன். அவன் பலத்தில் குறைந்திருப்பின் வேறெருவனை சத்துருபயத்தினின்றும் நீக்கி எப்படி காக்க வல்லவனுவன். அஃதேபோல் நான் சர்வத்துக்கும் பிரபுவும், சர்வத்தையும் ரக்ஷிக்கும் சிக்ஷகனுமாயிருப்பனும் அந்த ராதாவை அடக்கியாளும் வன்மையுள்ளவனல்லன்; ஏனெனில் அவள் என்பிராணனுக்கு அதிஷ்டான தேவதையான மகாசக்தியாயிருத்தலின் நான் எப்படி அவளினுஞ் ஜெறந்த பலமுள்ளவனுவன். ஆகவே நானெப்படி அவளைவிட்டு உனக்குச் சுகத்தைக் கொடுப்பேன். இதனல் பிராணனிலும் புத்திரன் பிரியனுகலின் நாராயணனை நீ பர்த்தாவாகக் கொள்வாயென்றேன்.

நீ என்னுணைகடவாமல்அவனிடம்போவையாயின் உனக்குநீண்டகாலம்சுகமும் சந்தோஷமும் உண்டாகும். அந்த நாராயணனும் லக்ஷ்மிதேவியை புடைத்தானவனு யிருக்கும்பொழுது எனக்கு எப்படிச் சுகமுண்டாகுமென்று கேட்பாயாயின் அவள் லோபம் மோகம் காமம் குரோதம் மானம் இம்சை முதலியகுணங்கள் இல்லாதவளா யிருத்தலினலும், தேஜஸ் ரூபம் குணம் இவற்றில் உனக்குச்சமானமானவளா யிருத்தலினலும் உனக்குச் சுகமுண்டாவதிற் சந்தேகமில்லை. ஆதலின் உனது காலப்போக்கு மிகப் பிரீதியோடும் சந்தோஷத்தோடும் போகும் ஓ பெண்ணே! அந்தநாராயணனும் உங்களிருவரிடத்தும் சமமானகவுரவத்தை வகித்திருப்பன். இவ்வண்ணமாக வாழும் வாழ்வேயன்றி எல்லாப்பிர பஞ்சத்திலும்

மிக்கவுரவத்தோடுகூடியபூஜையையும்நீ அடையப்பெறுவாய். அந்த நாள் எந்தநாளெனின் மாசிமாதம் சுக்லபக்ஷம் பஞ்சமியும், வித்யாரம்பகாலமுமாம். பூஜிப்பவர்கள் யாவரெனின் மநுக்கள் மானுடர் தேவர் முனிவர் முழுமுக்ஷுக்கள் வசுக்கள் யோகீஸ்வரர் சித்தர் நாகர் கந்தர்வர் ராக்ஷசர்முதலியோர். இவர்களெல்லாம் கற்பந்தோறும் ஜிதேந்திரியர்களாகவும் நியமமுள்ளவர்களாகவும் கண்ணுவசாகையில் சொல்லியபடி கடத்திலாவது புஸ்தகத்திலாவது உன்னுருவை ஆவாஹித்துத் தியானித்துத் தோத்திரஞ்செய்வர். வாசனையுள்ளசந்தனத்தினால் பூசப்பட்ட சுவர்ணகுடிகைகளை பக்தியோடு சோடசோபசாரத்துடன் பூஜித்து கண்டத்திலாவது வலக்கரத்திலாவதுகவசமாக அணிந்துகொள்வர். வித்வான்கள்பூஜாகாலந்தோறும்ஜிதேந்த்

ஆவாகித்து கடத்திலிருப்பவளாகக் கண்டு மறுபடியும் சோட சோபசாரத்தால் பூஜித்தல்வேண்டும் இனிவேதத்திலும் தேவி ஆகமத்திலும் சொல்லப்பட்டிருக்கும் பூஜாவிதிப்படி உபயோகப்படும் நைவேத்தியங்களுள் சிலவற்றையும் அலங்கரிக்கவேண்டிய சந்தனங்களையும் நான்கேட்டிருக்கிறபடி சொல்லுகின்றேன்.

நவநீதம் தயிர் பால் பொரி எள் லட்டு கரும்பு கருப்பஞ்சாறு வெண்பாகு வெல்லம் மது சுவஸ்திகம் சர்க்கரை பிளவுபடாத வெண்மையான தானியஅகஷ்தை அதனுண்டான அவில் வெண்மையானமோதகம் நெய்யும் உப்புங்கலந்த வெண்பொங்கல் நெய் கலந்த தினை கோதுமை சுவஸ்திகம் இவைகளின் மா வாழைப் பழத்தையுரித்துப்பிசைந்து செய்கிறபலகாரம் பரமான்னம்நெய்யோடு கலந்த சுத்தான்னம் தேங்காய் இளனீர் கரும்பு வெட்டிவேர் பக்குவமான வாழைப்பழம் விளாம்பழம் இலந்தைப்பழம் அவ்வக்காலங்களில் உண்டாகும் வெண்மையானபழங்களும், நறுமணங்கமழும் வெண்மையான புஷ்பம் வெண்மையானசந்தனம் புதியவெண்மையான வஸ்திரம் வெண்மையானபுஷ்பமாலை அழகானசங்கு முத்தாபரணங்களுமாம்.

இனி வேதத்திற் கூறப்பட்டு யாவராலும் புகழப்பட்டசரஸ்வதிதேவியின் அநுக்கிரகம் கிடைக்கப்பெற்று புத்திப்பிரமை நிவர்த்தியாகும் தியானத்தைக் கூறுகின்றேன்:— வெண்ணிறமுடையவளாயும், புன்சிரிப்புடையவளாயும், சந்துஷ்டியாயும் புஷ்டியாயும் இருக்கிற திருமேனியுடையவளாயும், நெருப்பினற் சுத்தமானவஸ்திரமுள்ளவளாயும், வீணை புத்தகம் இவைகளைத் தரித்தவளாயும், சிரேஷ்டமான இரத்தின பூஷணங்களால் அலங்கரிக்கப்பட்டவளாயும், திரிமூர்த்திமுதலான தேவகணங்களால் நன்முகப் பூஜிக்கப்பட்டவளாயும், முனிசிரேஷ்டர்களால் நமஸ்கரிக்கப்பட்டவளாயும் இருக்கிற சரஸ்வதிதேவியைப் பக்தியோடு நமஸ்கரிக்கின்றேனென்னும் தியானத்தைச் சொல்லி மூலமந்திரத்தினால் தியானித்து அதனாலேயே அர்க்கியபாத்ய ஆசமனதிகள் கொடுத்து கவசத்தைத்துதித்து சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்க வேண்டும். ஓ முனிவரே! எவர்களிடம் இந்தத்தேவி இஷ்டமாகவிருக்கின்றாளோ அவர்களுடைய நித்தியவேலை நித்தியமாகவே முடிந்துவிடுகிறது. வித்யாரம்ப

த்திலும் வருஷகால முடிவிலும் பஞ்சமிதினத்திலும் யாவராலும் உபயோகப்படுத்துகிற மூலமந்திரமும், வேதத்தில் சொல்லப்படுகிற அஷ்டாக்ஷரமும், எவர்களுக்கு எந்தமந்திரம் உபதேசமோ அம்மந்திரமும் தியானத்துக்கு உரியனலக்ஷ்மி மாயை இவர்களுடைய பீஜாக்ஷரங்களை முதலிலும், சதுர்த்தியந்தமான சரஸ்வதிபதம் நடுவிலும், அக்கினிபத்தினியைக் குறிக்கிற பதம் ஈற்றிலுமுள்ள மந்திரம் பக்தர்களுக்குக் கற்பக விருக்ஷமாக விடுக்கிறது.

முற்காலத்தில் இம்மந்திரத்தை பாரதவருஷத்தில் கங்கைக்கரையிலுள்ள புண்ணிய க்ஷேத்திரத்தில் நாராயணர் வால்மீகருக்கும், பதரிகாச்சிரமத்தில் பிரமன் பிருகுமுனிவருக்கும், அவர் புஷ்கரத்வீபத்தில் சூர்யபர்வதத்தில்சுக்ரருக்கும்,சந்திரபர்வதத்தில் மரீசி பிரகஸ்பதிக்கும், பாற்கடலில் ஜரத்காருமுனிவர் ஆஸ்திகருக்கும், மேருபர்வதத்தில் விபண்டகர்ருஷ்யசிருங்கருக்குப், உருத்திரமூர்த்தி கணாதமுனிவருக்கும், கௌதமருக்கும்,சூரியன் யாக்ஞவல்கருக்கும் காத்தியாயனருக்கும், பலி அரசாளும் சுதலலோகத்தில் ஆதிசேடன் பாணினிக்கும் பரத்வாஜருக்கும் சாகடாயனருக்கும் உபதேசித்தனர். நான்குலக்ஷம் ஜபம்செய்கின்றவன் மந்திரசித்தியடைந்து அதனல் பிரகஸ்பதிக்குச் சமானனுப் விடுவான்.

முன் கந்தமாதன பர்வதத்தில் பிருகுமுனிவர் பிரமனேநோக்கி பிரமக்யானத்தை நன்முயறிந்தவர்களுக்குள் சிரேஷ்டமானவரே! எல்லாமறிந்தவரே! யாவற்றையும் படைத்தவரே! யாவற்றிற்கும் பிரபுவானவரே ! சகலபிரபஞ்சத்தையும் ஜயிப்பதற்காக எனக்கு சரஸ்வதியின் கவசத்தையும், அயாதையாமமென்னும் மந்திரங்களுடைய சமூகங்களையும் உபதேசஞ் செய்யும் என்று பிரார்த்திக்க பிரமதேவன் பிருகுமுனிவரைப்பார்த்து ஓ குழந்தாய்! வேதத்துக்குள் சாரமானதாய் வேதத்திற் கூறப்பட்டதாய் வேதத்தினுற் பூஜிக்கப்பட்டதாய் ரகசியமானதாய் கற்பகவிருக்ஷம்போல் காமத்தைத் தருகிறதால் ஒருவாலுங்கேட்டறியாத ஆச்சரியகரமான மந்திரங்களோடு கூடினகவசத்தைக் கோலோகத்தில் கிருஷ்ணபகவான் எனக்குபதேசித்தனர். சுக்ரோசாரி அக்கவசத்தைத்தரித்துத் தானவர்களுக்குள் கவரவத்தையடைந்தனர். பிரகஸ்பதி

அக்கவசத்தைப்படித்துப்புத்திமானுயினர். வால்மீகிமுனிவர் அக்கவசத்தைப்படித்தும் தரித்தும்கவிசிரேஷ்டராயினர். சுவாயம்புமநு அதனைத்தரித்து யாவராலும்பூஜிக்கப்பட்டவராயினர். அதுபோலவே கணுதர் கௌதமர் கண்ணுவர் பாணினி சாகடாயனர் தக்ஷன் காத்தியாயனர் சாதாதபர் சம்வத்தர் வசிட்டர்பராசரர் யாக்ஞவல்கர் இவர்கள் கிரந்தகர்த்தாக்களாயினர். ருஷியசிருங்கர் பரத்வாசர் ஆஸ்திகர் தேவலர் ஜைகிஷவ்யர் யயாதி இவர்கள் எல்லோராலும் பூஜிக்கப்பட்டனர். வியாசர் வேதப்பிரிவுகளையும் புராணங்கள் எல்லாவற்றையும் லீலையாகச் செய்பவராயினர். இந்தக்கவசத்திற்கு ருஷி - பிரஜாபதி, சந்தஸ் - பிரஹதி, தேவதை - சாரதாம்பிகை, விநியோகம் - எல்லாதத்துவங்களையறிவதிலும் எல்லாப்புருஷார்த்தங்களைச் சாதிப்பதிலும் நாவிதமான கவிகளைப்பாடுவதிலுமாம் என்றுசொல்லப்பட்டிருக்கிறது.

கவசம்.

சரஸ்வதி சிரசைக்காக்க, வாக்தேவி நெற்றியைக்காக்க. சரஸ்வதி காதுகளைக்காக்க, பகவதியான சரஸ்வதி நேத்திரங்களைக்காக்க, வாக்வாதினி நாசியைக்காக்க, வித்தியாதிஷ்டானதேவதை உதட்டினைக்காக்க, பிராஹ்மி பல்வரிசைகளைக்காக்க, ஐம் என்னும் ஏகாக்ஷரமந்திரம் கண்டத்தைக்காக்க,ஹ்ரீம் என்னும் அக்ஷரம் கழுத்தைக்காக்க, ஸ்ரீம் என்னும் அக்ஷரம்புஜங்களைக்காக்க, வித்யாதிஷ்டாத்ம தேவதை மார்பினைக்காக்க, வித்யாசொரூபிணி நாபியைக்காக்க,வாணிகரங்களைக்காக்க, சர்வாக்ஷரசொரூபிணி பாதங்களைக்காக்க, வாக்கதிஷ்டானதேவதை எல்லாவற்றையுங்காக்க, சர்வகண்டவாசினிகிழக்குதிக்கிற்காக்க, சர்வநாவுகளிலும்வசிக்கின்றவள் அக்கினிதிக்கிற்காக்க, சிரேஷ்டமாயும் சரஸ்வதி ரூபியாயுமிருக்கிற மந்திரராஜ தேவதை தென்திக்கிற்காக்க, மூன்றக்ஷர சொரூபிணி நைருதிதிக்கிற்காக்க, ஜிஹ்வாக்ரவாசினி மேற்குத்திக்கிற்காக்க, சர்வாம்பிகாதேவீ வாயுதிக்கிற்காக்க, கத்தியவாசினி வடக்குதிக்கிற்காக்க, சர்வசாஸ்திரவாசினி ஈசானதிக்கிற்காக்க, சர்வபூஜிதா ஊர்த்துவத்திற்காக்க, புத்தகவாசினி அதோதிக்கிற்காக்க, கிரந்த பீஜசொரூபிணி சர்வதிக்கிலுங்காக்க என்றுபதேசித்தனன்.

ஓபிரமருஷியே! சகலபிரபஞ்சத்தையும் வெல்லவல்ல பிரஹ்மரூபமான இக்கவசத்தை முற்காலத்தில் கந்தமாதனபர்வதத்தில்

தருமரிடம் நான்கேட்டேன். யான் உன்னிடம் பிரீதியுள்ளவனு தலில் அதை இப்பொழுது உனக்குக்கூறுகிறேன். நீ எவனுக் குஞ் சொல்லக்கூடாது. புத்திமான் ஆசிரியரை வஸ்திரம் சந்தனம் புஷ்பமுதலானவைகளால் அலங்கரித்துத் தண்டாகாரமாக நமஸ்க ரித்து இக்கவசத்தை உபதேசம் செய்யப்பெறவேண்டும். இதனை ஐந்துலக்ஷம் ஜபித்தால் சித்தியாகும். அச்சித்தியினால் சரஸ் வதியின் அனுக்கிரகமுண்டாய் பிரகஸ்பதிக்குச்சமானமான புத்தி யும், பேசுவதில்சாமர்த்தியமும், கவிசிரேஷ்டத்வமும், மூன்றுல கையும் வெல்லுப்படியான பராக்கிரமுங் கிடைக்கும். (சு - ம். கூக)

நான்காம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

சர்வ விமோஹிந்யைநமஃ

ஐந்தாம் அத்தியாயம்.

சரஸ்வதி தோத்திரம்.

நாரயணர் கூறுகின்றார்:—இனிக் கோரிக்கைகளைக்கொடுக்கிற சரஸ்வதிதோத்திரத்தைக் கூறுகிறேன். இது யாக்ஞவல்கியமுனி வரால்செய்யப்பட்டது. ஏனெனின்! அம்முனிவர்குருசாபத்தினால் சகலவித்தைகளையுமறந்து துக்கமுடையவராய் சூரியனையடைந்து சோகத்துடன் அழுது துதித்தனர். அவர் அவருக்கு வேத வேதா ந்தங்களைப் படிப்பித்து இவை உன்மனதில் ஸ்திரமாக நிற்பதற்கு சரஸ்வதிதேவியைத்துதிப்பாயென்று கூறிமறைந்தனர். அவ்வாறே யாக்ஞ வல்கிய நீராஷ பக்தியோடு தலைவணங்கித் துதிக்கிறார், லோகமாதாவே! புத்திபலமில்லாத என்னைநோக்கித்தயவுசெய்வாய். குருசாபத்தினால் கவனமற்று வருத்தப்படுகிறேன். கியானத்தையும் கவனத்தையும், வித்தையையும், சீடர்களுக்குப் போதிக்கும் சக்தி யையும்,கிரந்தம்செய்யும்படியானசக்தியையும், ஸ்திரமானவனுயும் நற்குணமுள்ளவனுயு முள்ள சிஷ்யனையும் பண்டிதருடைய சபை யில்விசாரம்செய்யும்போது புதிதுபுதிதாய்த் தோன்றுகின்றபுத்தி யையும் எனக்குக்கொடுப்பாய். தெய்வத்தின் ஆக்ஞையினால் எல்

லாம் மறந்துவிட்டது. எல்லாவற்றையும் புதிதாக வுண்டாகச்செய்வாய். எப்படித் தேவதை பஸ்மத்தில் மூளையுண்டாகச்செய்கிறதோ அப்படி என்னிடத்தில் வித்தியாமூளையை யுண்டாகச்செய்வாய். பிரமசொரூபிணியாயும் அநாதியான பரஞ்சோதி சொரூபிணியாயும் இருக்கிற சரஸ்வதி தேவியே! உனக்கு நமஸ்காரம். சர்வவித்தைக்கும் அதிதேவதையான சரஸ்வதிதேவியே! உனக்கு நமஸ்காரம். விசர்க்கம் (:)பிந்து(0) மாத்திரை (காலம்) இம்மூன்றிலும்எந்தத்தேவதை அதிஷ்டித்திருக்கிறாளோ அந்தசரஸ்வதிதேவியாகிய உனக்கு நமஸ்காரம். எந்தத்தேவி வியாக்கியான ரூபமாகவிருக்கின்றாளோ வியாக்கியானத்தை அதிட்டித்துக் கொண்டிருக்கிறாளோ எந்தச்சக்தியில்லாமல் கணிதசாஸ்திரக்காரன் எண்ணிக்கையைச்செய்ய வல்லவனல்லனோ அந்தசதுஸஸ்ஷ்டிகலா ரூபிணியாயும் சங்கியாரூபிணியாயும் இருக்கும் சரஸ்வதிதேவியாகியஉனக்கு அடிச்கடி நமஸ்காரம். சந்தேகத்தை நிவர்த்திசெய்யும் சித்தாந்தரூபிணியான உனக்கு நமஸ்காரம். ஞாபக சக்தியாயும், ஞானசக்தியாயும் புத்திசக்தியாயும் பிரதிபாசக்தியாயும்கற்பனைசக்தியாயும் இருக்கும் உனக்கு நமஸ்காரம். சனற்குமார் பிரமஞானர்த்தங்கேட்க அவர் சித்தாந்தஞ் சொல்ல வல்லமைபற்றுஊமையைப்போன்றிருக்கிருஷ்ணருடையஅநுக்கிரகத்தினால் உன்னைத்துதித்து உனது கிருபையால் உத்தமமான சித்தாந்தங்கூறினர். ஒருகாலத்தில் ஆதிசேடனைப்பூமிதேவி ஞானத்தைக்கேட்கஅவர் ஊமையைப்போல் மௌனியாய் மிகப்பயந்துகாசிபரையடைந்து அவருடைய ஆக்ஞையால் சரஸ்வதியாகிய உன்னைத்துதித்துஅறியாமையைத்தும் நீக்கவல்ல நிர்மலமான சித்தாந்தஞ் செய்தார். வியாசர் வால்மீகிமுனிவரைப் புராணசூத்திரத்தைக் கேட்கஅவரும் மௌனமாயிருந்து பிறகு சரஸ்வதி தேவியாகிய உன்னைநினைத்துத்துதித்துஉனதுவரப்பிரசாதத்தால்சித்தாந்தஞ்செய்தார். அந்தநிர்மலமானஞானத்தையும்,அறியாமையைப்போக்கும் புராணசூத்திரத்தையும் அவர்பால்கேட்டு சரஸ்வதி தேவியாகிய உன்னையறிந்து நாறுவருஷம் புஷ்கரத்வீபத்தில் தியானித்துவரமடைந்துகவிசிரேஷ்டராய் வேதவிபாகத்தையும் புராணங்களையுஞ்செய்தார். ஒருசமயம் மகேந்திரன் மகேஸ்வரரைத் தத்வஜ்ஞானங்கேட்கஅவர்ஒருக்ஷணகாலம்தேவியாகிய உன்னைநினைத்து உபதேசித்தனர்

மகேந்திரன் பிரகஸ்பதியை சப்தசாஸ்திரங்கேட்க அவர் புஷ்கரத்வீபத்தில் ஆயிரம் திவ்யவருஷம் உன்னைத்தியானித்து வரமடைந்து அதன் அர்த்தத்தை உபதேசித்தனர். இப்போதும் உபதேசஞ்செய்துகொள்ளும் சீடனும் செய்யும் குருவும் தேவியாகிய உன்னைத்துதித்து வாசிக்க ஆரம்பிக்கிறார்கள். ஓ தேவியே! நீ பூஜித்து தோத்திரஞ் செய்யப்பட்டவளாயும், வாக்குசம்பத்தைக்கொடுக்கின்றவளாயும் இருக்கின்றனை. தேவசுரர்களாலும் திரிமூர்த்திகளாலும் துதிக்கப்படுகின்றனை. ஆயிரமுகமுள்ளவனும் ஐந்துமுகமுள்ளவனும் நான்குமுகமுள்ளவனும் தோத்திரஞ்செய்யக் கூடாத உன்னை ஒருமுகமுள்ள யான் எவ்வாறு துதிப்பேன் என்றுகூறி அடிக்கடி அழுதுகொண்டு ஆகாரமில்லாதவராய் நமஸ்கரித்தனர்.

தேஜோ ரூபிணியானதேவி சந்துஷ்டியடைந்து அவரைநோக்கி நல்ல கவிசிரேஷ்டனாவாய் என்று ஆசிபுகன்று வைகுண்டமடைந்தனள். இத்துதியை எவன் படிக்கின்றானோ அவன் நல்லகவிசிரேஷ்டனாயும் பேசுவதில் சமர்த்தனாயும் பிரகஸ்பதிக்குச்சமானமானவனாயும் ஆகின்றான். மூடனாயினும் துஷ்டனாயினும்ஒருவருடம்படித்தால் பண்டிதனாயும் புத்திமானாயும் கவீஸ்வரனாயு மாகின்றான் என்றனர். (சு - ம் ௩௨.)

ஐந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

௨

சர்வாதாராயைநம:

ஆறாம் அத்தியாயம்.

லக்ஷ்மீ கங்கா சரஸ்வதீநாம் சாபாஜ் ஜன்ம ப்ராப்தி.

ஸ்ரீ நாராயணர் சரஸ்வதிதேவி கங்காதேவியினால் சாபமடைந்து பாரதவருடத்தில் நதியாக அவதரித்தாளென்று கூற, நாரதர் பூஜிக்கத்தகுந்த அவர்களுக்கு உண்டாகக்கூடாத சண்டை என்ன காரணத்தினாலுண்டாயிற்றென்றுவினவநாராயணர்கூறுகின்றார்:—

ஓநாரதரே! சரஸ்வதி கங்கை லக்ஷ்மிஎன்னுமுத்தேவிகளும் விஷ்ணுமூர்த்திக்கு மனைவிகள். இவர்களிடத்தில் அவர் சமமான

பீதியுள்ளவராய் வேற்றுமையின்றிச் சமீபத்தில் எப்போதும் இருக்கின்றவர். ஒருகாலத்தில் கங்கையானவள் சிரிப்புடனும் ஆசையுடனும் வேண்டுகோளுக்கிசையுங் கருத்துடனும் அடிக்கடி விஷ்ணுமூர்த்தியினுடைய முகத்தைப்பார்க்க, அவரும் க்ஷணகாலம் அவளுடைய முகத்தைப்பார்த்துச் சிரித்தனர். இருவரும் இவ்வாறு சிரிப்புடனிருப்பதைப் பார்த்திருந்த ஏனைய இருவரில் சத்வகுணமுடைய லக்ஷ்மிமனம்பொறுத சரஸ்வதியைப்பார்த்துச்சிரித்துத் தூண்டினள்; தூண்டவும் அவளுள்ளத்தில் உண்டாகிய அடங்காதகோபம் அதிகரித்துச்செவந்தமுகத்தையும் செவந்தகண்களையும் அடிக்கடி அதிகமாகத்துடிக்கும் அதரத்தையுமுடையவளாய் மன்மத வேகத்தால் சலிக்கப்பட்டுத் தன்கணவனைப் பார்த்துக்கூறுகின்றாள்:—சாதுவானபுருஷன்தரு சீலனையும் உத்தமனையும் யோக்யனையும் இருப்பானுகில் மனைவிகளிடத்தில் சமமானபுத்தியையுடையவனுக விருத்தல்வேண்டும். உமக்கு அஃதொழிந்துமிக்கஅழகுள்ள கங்கையிடத்தில் ஆசையும் சுகாரணமான கியானமும் அதிகமாக இருக்கிறது. லக்ஷ்மியினிடத்திலும் அப்படியே யிருக்கிறது. என்னிடஞ்சிறிதுமில்லை. லக்ஷ்மி கங்கையிடம் பீதியுள்ளவளாயிருத்தலின்கோபமின்றிப் பார்த்துக்கொண்டிருக்கிறாள். பாக்கியமில்லாதயான் இங்கு இருப்பதனல்யாதுபயன்? எவள்புருஷனுடையபீதியினல் வஞ்சிக்கப்படுகின்றாளோ அவளதுஜீவனம் பிரயோஜனமில்லாதது. இவ்வண்ணம் எனக்கு மனேஷ்டத்தையுண்டாக்கிய உம்மைச் சத்வகுணமுடையரென்று எவர்கள் சொல்லுகிறார்களோ அவர்கள் புத்தியில்லாதவர்களும் வேதமறியாதவர்களும் உமது வஞ்சகுணத்தையறியாதவர்களும் ஆவரென்றனள்.

இவ்வார்த்தைகளைக்கேட்ட விஷ்ணுமூர்த்தி அவளைப்பார்த்து ஆலோசனையுடையவராய் அவ்விடம் விட்டுவெளியே போயினர். சரஸ்வதிதேவி கோபமேற்கொண்டு சிறிதும் அஞ்சாமலும் வாய் கூசாமலும் கங்கையைப்பார்த்துப்பேசுகின்றாள்:— ஒவெட்கமில்லாதவளே! ஒழுக்கமற்ற காமத்தில் மிகுத்தவளே! நாயகன்மூன்வன்கர்வமடைகின்றாய்? அவரிடம் அதிகமாக உன் சௌபாக்கியத்தையறிவிக்க விரும்புகின்றனையோ? இப்போதே அவரெதிரில் உன்னை மானபங்கஞ் செய்கின்றேன். உனக்கே புருஷனை விருக்கின்றஎன்னுதன் என்னையென்ன செய்யக்கூடும்? என்றுகூறிக்கொண்டே

அவள் கூந்தலைப் பிடித்திழுக்கமுயன்றனள். அப்போது லக்ஷ்மி தேவி இடையே நின்று தடுக்க மிக்கபலசாலியும் பதிவிரதையுமான சரஸ்வதியானவள் அந்த லக்ஷ்மிதேவியைச் செடியாகவும் நதியாகவும் போகும்படிச் சபித்தனள்.

இவ்விபரீதத்தை யடைந்த லக்ஷ்மி ஒன்றும்பேசாமலும் பிரதி சாபமிடாமலும் கோபித்துக்கொள்ளாமலும் சரஸ்வதியின்கையைப் பிடித்துக்கொண்டே விசனப்பட்டனள். அதனைக் கெம்பீரத்தையும் துடிக்கும் அதரத்தையுமுடையவளான கங்காதேவி பார்த்து ஓ லக்ஷ்மி! மிக்க குரூரமான இச் சரஸ்வதியின் கையைவிட்டு விடுவாய். அவள் துஷ்டசுபாவமுள்ளவளாயும் அளவுகடந்து பேசுகின்றவளாயும் தூஷிக்கின்றவளாயும் எப்போதும் கலகத்தில் பிரீதியுள்ளவளாயு மிருக்கின்றாள். இவளுக்கு எவ்வளவு யோக்யதையும் சக்தியு மிருக்கின்றனவோ அவையெல்லாம் என்னிடம் காட்டிப் பலாபலன்களை அறிந்துகொள்ள இருக்கிறாள். இதனால் நீங்களிருவருடைய மகிமையையும் சௌரியத்தையும் இனி எல்லோரும் அறிந்து கொள்வார்கள். ஓ லக்ஷ்மிதேவி! உன்னைச் சபித்த இச் சரஸ்வதி நதிரூபத்தைப்பெற்று பாபிகளாகிய மனிதர்களை யடைந்து அவர்களுடைய பாபங்களையெல்லாம் கலியில் நீக்கப்போகின்றாள். இதில் சந்தேகமில்லை என்று சபித்தனள்.

அதனைக்கேட்ட சரஸ்வதிதேவி கங்காதேவியைப்பார்த்து நீயும் நதிரூபமாய் பூலோகத்தையடைந்து பாபிகளுடைய பாபங்களை யடையக்கடவாய் என்று சபித்தனள். அச்சமயத்தில் விஷ்ணு மூர்த்தி நான்கு கையுள்ள பரிசாரர்களோடு வந்து சரஸ்வதியின் கையைப்பிடித்து மார்பிலணைத்துக்கொண்டு அவள் கோபந்தணியுமாறு பழமையான அநேக ஞானங்களைச் சொல்லிப் பிறகு சண்டையையும் அதனுடைய மூலகாரணத்தையுங் கேட்டு லக்ஷ்மி தேவியைப்பார்த்து உன்னுடைய கலியினால் பூலோகத்தில் தருமத்துவஜருடைய கிருகத்தில் தாய் உதரத்திற் பிறக்காமல் அவருக்குக் கன்னிகையாயிருந்து தெய்வகதியாய் நேரிட்ட சாபத்தினால் என்னுடைய அம்சமான சங்கசூடனுக்கு மனைவியாகவிளங்கிப் பிறகு எனக்குப்பத்தினியாகவருவாய். சரஸ்வதிதேவியின் சாபத்தால் பாரதவருஷத்தில் துளசியென்னும் செடியாகவும், பத்மாவதி என்னும் நதி

ரூபமாகவும் ஆகக்கடவாய். ஓ கங்காதேவியே! நீயும் பகீரதனால் பாரதவருஷத்தில் சகலருடைய பாபத்தையும் நாசஞ்செய்கிற பாகீரதியென்னும் நதியாகி என்னம்சபூதனான சமுத்திரராஜனுக்கும் என்கலையினாற் பிறக்கும் சந்தனுமகாராஜனுக்கும் மனைவியாக விருப்பாய். இதுவேயுமன்றி சபத்தினிகளாகிய உங்கள் மூவரிடத்தும் உண்டாகிய கலகத்தினால் அடையவேண்டிய பிரயோஜனத்தையும் அடையப்போகின்றீர்கள் அது யாதெனின்! ஓ சரஸ்வதீ! நீ பிரமலோகத்தில் பிரமனுக்குப் பத்தினியாவாய். ஓ கங்கா! நீ சிவபெருமானுடைய இடத்தையடைவாய். ஓலக்ஷுமீ, நீமாத்திரம் இவ்விடத்திலிருக்கக்கடவாய். ஏனெனில் நீ சாந்தையாயும் கோபமில்லாதவளாயும் பக்தியுள்ளவளாயும் சத்வ சொரூபிணியாயும் மிக்கபதிவிரதையாயும் நல்லொழுக்கமுள்ளவளாயும் தர்மத்தை யனுஷ்டிக்கின்றவளாயும் இருப்பதால் என்னிடத்திலேயே வசிக்கத்தகுந்தவளாயிருக்கின்றனை. உன்னுடைய அம்சத்தினால் பிறக்கின்றவர்களும் தர்மிஷ்டராயும் பதிவிரதைகளாயும் மிக்க சாந்தமான உருவமும் நல்லொழுக்கமும் உள்ளவர்களாயும் எவ்வுலகத்தாராலும் கவுரவிக்கத்தக்கவர்களாயும் இருப்பார்கள். ஓலக்ஷுமியே! உலகில்மூன்று பத்தினிகளையும் மூன்று வேலைக்காரர்களையும் பந்துக்களில் மூன்றுபேரையும் உடையவர்களுக்குச் சுகமுண்டாகாது. அஃதேபோல பல பத்தினிகளாக விருக்கப்பெற்றார்க்கு இடம் ஒன்றாயிருப்பின் அது நன்மையைத் தராது. எவன் வீட்டில் ஸ்திரீ புருஷனைப்போலவும், புருஷன் ஸ்திரீக்குச் சுவாதீனனாகவும் இருப்பாரானால் அவ்விருவருடைய ஜன்மம் வீணாகுவதுமன்றி அடிக்கடி கலகமுண்டாகும். வாக்கினாலும் பெண்குறியினாலும் துஷ்டையாயிருக்கின்றவளைப் பத்தினியாகப் பெறுவானாயின் அவன் காடுபோய்ச்சேரவேண்டும். அவனுக்கு அப்பெருங்காடே சலம் பலம் முதலானவைகள். மேன்மையானதாகவும் சுகமானதாகவும் கிடைக்கக்கூடுமான வீட்டைக்காட்டிலும் சுலபமான இடமாகவிருக்கும். துஷ்டையின் சமீபத்தில் வசிப்பதைப்பார்க்கிலும் அக்கினி புலி பாம்பு இவைகளின் சமீபத்தில் வசித்தல் மிக்கசுகமாம். துஷ்டஸ்திரீகள் முகததாற் காட்டும் கரீரமானது வியாதி விஷம் இவைகளின் கொடூரங்களைக்காட்டிலும் மிக்க கஷ்டமும் சகிக்கக்கூடாதுமாம். ஸ்திரீயினால் ஆளப்பட்ட புருஷனுக்கு சாம்பராய்ப் போகுமளவும் பரிசுத்த முண்டாகாது.

பகலில் செய்யத்தக்க சத்கருமங்களெல்லாம் பிரயோஜனப்படாது. இகலோக பரலோகங்களில் நிச்தையொழிய வேறொரு சுகமும் விளையாது. புகழால்வரும் நல்லபெயரும் பராக்கிரமமும் இல்லாமல் எவன் ஜீவிக்கின்றானே அவன் வாழ்கின்றவனல்லன்; இறந்தவனவன். ஒருபத்தினியோடு வாழ்பவன் சுகத்தையும் வெகுபத்தினியுடன்வாழ்பவன் அசுகத்தையும் அடைவான். ஆதலால் நான் முற்கூறியபடி நீங்கள் மூவரும் அவ்விடங்களை அடைவீர்களாக. எவனுக்குப் பத்தினி தன்சுவாதீனமாயும் சொற்படி கேட்கின்றவளாயும் நல்ல ஆசாரமுள்ளவளாயும் நல்லபதிவிரதையாயும் இருக்கின்றாளோ அவனுக்கு சுவர்க்கமும் மோக்ஷமும் வேறில்லை, அவளிருக்குமிடமேயாம். அவன்தான் முத்தன்; பரிசுத்தன், சுகி. எவன் விபசாரிக்குப் பர்த்தாவாக விருக்கின்றானே அவன் அசுசிக்கும் சகல துன்பத்திற்கும் இடமாயுள்ளவன். அவன் பிழைத்திருந்தாலும் இறந்தவன்தான் என்றனர். (சு-ம். 67½.)

ஆறும் அத்தியாயம் முற்றிற்று

ஸர்வ கதாயை நமஃ

ஏழாம் அத்தியாயம்.

விஷ்ணுபக்த லக்ஷணாதி கதனம்.

நாராயணர் கூறுகின்றார்:— ஓ நாரதரே! இவ்வாறு விஷ்ணுமூர்த்தி ஆக்ஞாபித்தவுடன் தேவிகளெல்லாம் மிக்கதுக்கத்தோடு ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு புலம்பி நாயகனைப்பார்த்து நடுங்கிக் கண்ணீர்விட்டுக்கொண்டே சொல்லுகின்றனர்:— அவர்களில் சரஸ்வதி ஓசுவாமி! ஜன்மமுதற்கொண்டு துக்கத்தைக் கொடுப்பதான சாபமுடிவைக் கூறவில்லையே அதனைக்கூறும். கல்லபர்த்தாவினல் ஸ்திரீகள் விடப்பட்டால் அவர்கள் எங்ஙனம் ஜீவிப்பார்கள்? பாரதவருடத்தில் யோகத்தினல் சரீரத்தை விடப்போகிறேன். என்

னைக்காக்கத்தகுந்தவர் நீரன்றிமூவென்றுள். கங்கை,லோகநாயகரே! என்ன குற்றத்தினால் என்னை விட்டுவிடப்போகிறீர்? நான் என்தே கத்தை விடுகின்றேன். தோஷமில்லாத ஸ்திரீயை இம்சித்தால் அத னால்வரும்பலனை நீரடையக்கடவீர். எவன் தோஷமில்லாத ஸ்திரீ யை விடுகின்றானே அவன் சர்வேஸ்வரனுயிருந்தாலும் கோரமான நரகையடைகிறன் என்றனள். லக்ஷ்மி, ஓ பிரபுவே! சத்வகுணமு டைய உமக்குக் கோபம் ஏன் உண்டாயிற்று? இந்த இரண்டு மனை விகளும் உமக்குத்தகுந்தவர்கள். அவர்களிடம் நீர் இரக்கமுடைய வராயிரும். நான் சரஸ்வதியின் சாபத்தால் பாரதவருடம் போய்ச் சேருவேனுல் எவ்வளவுகாலம் அங்கிருப்பேன் உமது தரிசனம் எப்போதுகிடைக்கும். பூவுலகில் நதிரூபமாய் நான் செல்லும்போது ஸ்நானஞ்செய்பவர் என்னிடம் பாபத்தைக் கொடுக்கப்போகின் றர்கள். அவைகளை நான் எவ்வாறு போக்கிக்கொள்ளுவேன். என் கலையினுல் தருமத்துவஜருக்குப் பெண்ணுகி துளசிரூபத்தை யடை ந்து உம்மால் அதிஷ்டிக்கப்பட்ட விருக்ஷமாகப்போகிறேன். கரு ணைக்கடலே! நீர் என்னை எப்பொழுது திருவுளம்பற்றுவீர்? அத னைச் சொலலும். என்னைப்போல் சரஸ்வதியும் சாபத்தினுல் பார த வருடத்தை யடைவாளாயின் அவள் அச்சாபத்தினின்றும் நீங்கி உம்மைவந்தடைவாள். சரஸ்வதி பிரம்மாவின் வீட்டிற்கும் கங்கை ஈஸ்வரருடைய இடத்திற்கும்போக வுத்தரவுசெய்தீர். அவ்வார்த் தையை நீக்கிவிடவேண்டும். என்றுகூறி பர்த்தாவின் பாதத்தைப் பிடித்துக்கொண்டு நமஸ்கரித்தனள் பிறகு தன கூந்தலால் அவர் பாதங்களைச் சுற்றிக்கொண்டு அதிகமாக அழுதாள்.

அப்பொழுது விஷ்ணுமூர்த்தி லக்ஷ்மியைப் பார்த்து ஓ கமல லோசனீ! உனது வேண்டுகோளும் எனது வார்த்தையும் தவருமல் நடப்பிக்கிறேன். சரஸ்வதி சாபத்தின்படி ஓரு கலையினுல் நதிரூப மாகவும் என்சொற்படி பாதிகலையினுல் பிரமன்வீட்டிலும் என்வீட் டிலும் வசிக்கக்கடவள். அம்மாதிரியே கங்காதேவியும் பகீரதனுல் பூமியையடைந்து மூவுலகினையும் பரிசுத்தஞ்செய்யு .அப்பூமியிலும் எல்லோருக்கும் கிடைத்தற்கரிய சந்திரமௌலியினுடைய சிரசிலும் எனதுவீட்டிலும் அடையக்கடவள். அதனுல் இயற்கையாகவே சுத்தமுள்ளகங்கை ஈஸ்வரனுடைய சடையிற சேர்வதால் மிக்கபரி சுத்தையாவள். நீ உனது கலையினுடைய கலாம்சத்தினுல் பார த

வருஷத்தில் பத்மாவதி என்னும் நதியாகவும், தளகிவிருக்ஷமாக வும் ஆகக்கடவாய். நீங்கள் மூவரும் கலியில் ஐயாயிரவருடங் கழியு மாஞல் நதிரூபத்திலிருந்து என் வீடுவந்து சேருவீர்கள். உலகில் யாவரிடத்துண்டாயிருக்கும் சம்பத்துக்கும் விபத்தேதான்காரணம். விபத்தில்லாமல் சம்பத்து எவர்களுக்குண்டாகிறது? நதிரூபமான உங்களுக்குநேரிடும். பாபங்களெல்லாம் எனது மந்திரத்தை யுபாசிக் கும் சத்புருடர்செய்யும் ஸ்நானதரிசன பரிசங்களால் நசித்துவிடும். பூமியைப் பரிசுத்தஞ் செய்வதற்காகவே எனது மந்திரோபாசனை செய்யும் பக்தர்கள் வசிக்கின்றார்கள். ஆதலால் பூவுலகிலுள்ள தீர்த் தங்களெல்லாம் அவர்களுடைய பரிச நரிசனங்களால் பரிசுத்தம டைகின்றன. எவ்விடத்தில் அவர்கள் வசிக்கின்றார்களோ அவ்விட மும் எந்தத் தீர்த்தத்தினுல் பாதபிரக்ஷாளனஞ் செய்கின்றார்களோ அந்தத்தீர்த்தமும் பரிசுத்தமாகின்றதென்பதிற்சந்தேகமில்லை. ஸ்திரீ ஹத்தி கோஹத்தி பிராமஹத்தி குருதாரகமனம் நன்றிமறத்தல் இவைகளைச் செய்தவர்களும் ஏகாதசிவிரதத்தையும் சந்தியாவந்தனத் தையும் விட்டவனும் பொய்யில்லை என்கிற சாஸ்திரனும் மானுடக் கொலைசெய்கிறவனும் கத்தியினுல் ஜீவிப்பவனும் எருதின்மேல் ஏறு கின்றவனும் நம்பவைத்து கழுத்தைவெட்டுகின்றவனும் சிசுகொலைக் கொலை செய்கின்றவனும், பொய்சாட்சி சொல்பவனும் புதைத்து வைத்ததைக் களவாடுகின்றவனும அதிஉக்கிரமாகப் பேசுகின்றவ னும் எல்லோரையும் தூஷிக்கின்றவனும் பரஸ்திரீயைப் புணருகின்ற வனும் விபசாரியினுடைய புத்திரனும் அவளுக்குக கணவனுக இருப்பவனும் சூத்திரனுக்குச் சமையல்செய்கின்றவனும் எப்போ தும் கூலிக்குத் தேவபூசை செய்கிறவனும் கிராம புரோகிதனும் தீக்ஷையில்லாதவனும், தாய் தந்தை மனைவி சகோதர புத்திரர் புத் திரிகள் குருவின்குலம் உடன்பிறந்தவள் கண்ணில்லாத பந்துக்கள் மாமி மாமன்மார் ஆகிய இவர்கள் வருத்தப்படும்போது எவன் காப்பாற்றும லிருக்கின்றனே அவனும் அரசமரத்தை நாசஞ் செய்கின்றவனும் எனது பக்தர்களை நிந்திக்கின்றவனும் சூத்திர அன்னத்தையுண்கிற பிராமணனும் தேவதிரவியத்தையும் அந்தணர் சொத்தையும் அபகரிக்கின்றவனும் திராக்ஷை பஞ்சலோகஉப்புமுத லானரசத்தை விற்பனைசெய்கின்றவனும் பெண்விக்கிரயஞ்செய் கின்றவனும் சூத்திரர்கள்பிணத்தைக்கொளுத்துகின்றவனும் தேவ

பத்தி இல்லாதவனும் மகா அகங்காரத்தோடு கூடினவனும் தன்னைத்தான் புகழ்த்துகொள்ளுகின்றவனும் துஷ்டனும் சாதுக்களோடிக்கின்றவனும் எனதுபக்தனைத் தெரிசிப்பதினாலும் பரிசிப்பதினாலும் பரிசுத்தராகின்றனரென்று கூற, இலக்குமிதேவி எந்த முக்தரைத் தெரிசிப்பதினாற் பரிசுத்தமாவரோ எந்தப்பக்தருடைய பாததூள்களாலும் பாதங்களை அலம்புஞ்சலத்தினாலும் பூமிபரிசுத்தம் ஆகின்றதோ அவர்களையறியுங் குறிப்பைச்சொல்லும். ஜலரூபமான தீர்த்தங்களும் மண் கல்லுரூபமான தேவதைகளும் காலக்கிரமமாகச் சுத்திசெய்யுந் தன்மையுடையன. பக்தர்களோ ஒருக்ஷணத்தில் சுத்தஞ்செய்யுந் தன்மையுடையவரல்லவா என்று வினவினள்.

விஷ்ணுமூர்த்தி புன்சிரிப்புடன் அவைகளைக்கேட்டு பக்தருடையகுறி வேத புராணங்களிலும் மறைந்திருக்கிறது. ஓ லக்ஷ்மீ! புண்ணியரூபமாயும் பாபத்தை நாசஞ் செய்வதாயும் சுகத்தையும் பரமபக்தியையும் மோக்ஷத்தையுங் கொடுக்கிறதாயு முள்ள சாரமான ரகசியத்தைக் கவனமாகக் கேட்பாய். துஷ்டர்களுக்குச் சொல்லக்கூடாத இதனை என் பிராணனுக்குச் சமமான உனக்குக் கூறுகின்றேன்.

குருமுகத்திலிருந்து பகவானது மந்திரமானது எவன்காதில் விழுகிறதோ அந்த உத்தமனே வேதங்கள் பரிசுத்தன் என்று கூறுகின்றன. பகவத் பக்தியுடன் எந்தக்குலத்தில் பிறந்திருக்கினும் அவனது முன்னோர்கள் நூறு தலைமுறைபரியந்தம் நரகத்திலிருப்பராயினும் மோக்ஷமடைகிறார்கள். எந்த ஜந்துவாவது எவ்விடத்திலாவது பகவானது பக்தஜன்மமடையப் பெறின் அவைகள் உயிருள்ளகாலம் வரையில் சீவன் முக்திநிலையையடைந்து அந்தியத்தில் பரமபதத்தை யடைகிறது. எனது பக்தியுள்ளவன் மனிதனினும் தேவன்தான். எவன் எனது குணங்களுள்ளவனும் அக்குணத்திற்குத் தகுந்த ஜீவனமுள்ளவனும் எப்பொழுதும் எனது கதைகளைக் கேட்கின்றவனும் எனது குணத்தைக் கேட்டமாத்திரத்தில் ரோமங்கள் சிலிர்சிலிர்க்கின்றவனும் ஆனந்தத்தால் வாக்குக்குழறுகின்றவனும் ஆனந்தக் கண்ணீர் விடுகின்றவனும் மெய்மறக்கின்றவனும் ஆகின்றானே அவன் சாயுச்சியமுதலிய புருஷார்த்தங்களையும் பிரமத்தன்மையையும் அமரத்தன்மையையும் இந்திரத்தன்மை

யையும் மநுவாகவும் பிரமனுகவும் பிறக்கவேண்டுமென்பதையும் தர்ல்பமான சுவர்க்கத்தையும் கனவிலும்விரும்பான். அப்படிப்பட்ட பக்தர்கள் பாரதவருஷத்தில்திரிந்துகொண்டிருக்கிறார்கள். பக்தனுகுஞ் ஜன்மம்கிடைத்தல் துர்பலம். அவர்கள் எனது குணத்தைக் கேட்பதினலும் செவிக்கின்பமான கானங்களினலும் தினம் சந்தோஷத்தோடுகூடியிருந்து பூமியைப் பரிசுத்தஞ்செய்து முடிவில் எனது ஸ்தானத்தை யடைகிறார்கள். இவ்வாறு பக்தர்களது குறிப்பைக் கூறினவுடன் மூன்று தேவிகளும் அவ்விஷ்ணுபகவானது ஆக்ஞையின்படி நடந்தார்கள் என்றனர். (சுலோ 54½)

ஏழாம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

ஸர்வா வகுண வர்ஜிதாயை நமஃ

எட்டாம் அத்தியாயம்.

* கங்காதேவும் பாரதவருஷே ஜன்ம ப்ராப்தி.

• நாராயணர் கூறுகின்றார்:—சரஸ்வதிதேவி விஷ்ணுவினிடத்திலும் கங்கையின் சாபத்தினல் நதிரூபமாக பாரதவருஷத்திலும் பிரமனுக்குமனைவியாக பிரமலோகத்திலும் வசித்தனள். ஓநாரதரே! அவள் பாரதவருஷத்தில் வந்தபடியால் பாரதி என்றும், பிரஹ்மாவுக்குப் பத்தினியானதால் பிராம்ஹி என்றும், வாக்குக்கெல்லாம் தேவியானபடியால் வாணி என்றும், பாவிகளுடைய பாவங்களைக் கொளுத்தும் அக்கினியைப்போல் மஞ்சள் நிறமுள்ள நதியாகயாவரும் எளிதிற் காணவந்தமையால் சரஸ்வதி என்னும் அழைக்கப் படுகின்றுள். கங்கை சரஸ்வதியின் சாபத்தினல் நதிரூபமாயினள். அவள் பகீரதனல் வரவழைக்கப்பட்டபடியினல் பாகீரதி என்று சொல்லப்பட்டாள். பூதேவியின் பிரார்த்தனையால் கடோமாக வரும் அப்பாகீரதியைச் சிவபெருமான் சிரசில் தரித்தனர். லக்ஷ்மிதேவி சரஸ்வதியின் சாபத்தினல் பாரதவருஷத்தில் பத்மாவதி நதி

* கங்கை முதலிய மூவரும் பாரதகண்டத்தில் பிறப்படைதல்.

ரூபமாகவும் தர்மத்துவஜரிடத்தில் பெண்ணுகவும் பரிசுத்தஞ்செய் கிற துளசிவிருக்ஷமாகவும் ஒவ்வொருகலியினுல் தோன்றினள். இம் மூவரும் கலியுகத்தில் ஐயாயிரம் வருடம் சென்றபின்னர் நரரூபத் தைவிட்டு வைகுண்டத்தை யடையப்போகின்றனர். அவர்களோடு காசியும்பிருந்தாவனமுந்தவிர எத்தப்புண்ணியதீர்த்தங்களும்போம். சத்சிவசொரூபங்களும் சாளக்கிராமமும் ஜகந்நாதமும் பதினுயிரம் வருடத்துக்குமேல் பரமபதத்தையடையும், முன்சென்ற தீர்த்தங்க ளோடு சாதுசங்கம் சிரார்த்தம் தர்ப்பணம் வேதோக்தமான கர் மங்கள்தேவபூஜை தேவநாமம் தேவகீர்த்தனை வேதம்சாஸ்திரம் சத் புருஷர் சத்தியம் தருமம் நிராமதேவதை விரதம் தவம் உபவாசம் முதலான புண்ணியங்களும் நசித்துப்போம். கபடஆசாரமுள்ளவர் களாயும் கோணவழியுள்ளவர்களாயும் துளசியில்லாத பூஜையுள்ள வர்களாயும் துஷ்டர்களாயும் குரூரர்களாயும் டாம்பீகர்களாயும் மகா அலங்காரத்தோடு கூடினவர்களாயும் திருடர்களாயும் கொலை செய்கின்றவர்களாயும் சொத்துக்களுக்கு இவன் எஜமானன் என்ற பேதந்தவிர ஸ்திரிகளுக்கு இந்தப் புருஷன் எஜமானன் என்கிற தருமத்தை விட்டவர்களாயும் இஷ்டம்போல் விவாகஞ் செய்கின் றவர்களாயும் புருஷர்களெல்லாம் ஸ்திரீகளுக்கு சுவாதீனர்களா யும் வீடுகள்தோறும் விபசாரத்தினுலும் மிரட்டுகலினுலும் தாவிப் பதினுலும் தண்டிப்பதினுலும் தங்கள் பர்த்தாக்களைப் பிரிந் தின்றவர்களாயும், வீட்டிற்குத் தாமே எஜமானிகளாயும் புரு ஷன் வீட்டிற்கு வேலைக்காரனுயும் பிள்ளைக்குத் தந்தைகள் வேலைக் காரர்களாயும் மனையாட்டி சம்பந்தமானவரும் அபிமான ஸ்திரீ சம்பந்தமானவரும் பந்துக்கள் வீட்டிற்கு அதிகாரிகளாயும் வித்யா சம்பந்தமான பந்துக்களுடன் சம்பாஷணேபேனும் இல்லாதவர்க ளாயும் பந்துக்களும் மற்றையரும் பழக்கத்தினுலாக முறைமை பாராட்டுகின்றவர்களாயும் புருஷர்கள் ஸ்திரீகளின் ஆக்கினையை மீறி ஒருதாழிலேயேனும் நடத்த வல்லமையற்றவர்களாயும் நான்கு வருணத்தவரும் தத்தம் ஆசாரங்களேயும் சாஸ்திரங்களேயும் விடுத் தத் திருக்கருடைய ஆசாரத்தையும் சாஸ்திரத்தையும் கைக்கொ ள்ளுகின்றவர்களாயும் சூத்திரர்களுக்கு அந்தணர் முதலிய மூவ ரும் சமையல் முதலிய வேலைக்காரராயும் சரீரத்தைக் கஷ்டப்படுத்தி யோடுந் தொழிலுடையவராயும் வ்ருஷபத்திலேற்றித் திரிகின்றவர்க

ளாயும் எல்லாஜனங்களும் சத்தியமில்லாதவர்களாயும் இருப்பார் கள். சந்தியாவந்தனமும் யக்ஞ சூத்திரமும் நசித்துப்போகும். பூமி பயிரையும் மரங்கள் பலத்தையும் ஸ்திரீகள் பிள்ளைகளையும்பசு க்கள் பாலையும் பால் நெய்யையும் தம்பதிகள் பிரீதியையும் கிருகஸ் தர்கள் சத்தியத்தையும் ராஜாக்கள் பராக்கிரமத்தையும் அதிகமாக வுடையவராகார். சனங்கள் வரிகட்ட சக்தியற்றும் பெரியநதிகள் நடபாவி குளம் ஜலமில்லாமலும் நான்குவருணங்களும் தருமமும் புண்ணியமு மில்லாமலும் இருக்கும். இலக்ஷத்தில் ஒருவனைது புண்ணியவனாக இருக்கமாட்டான். புருஷர்களும் ஸ்திரீகளும் குழந்தைகளும் கெட்டநடத்தையையும் விகாரமான உருவங்க ளையும் விகாரமான வார்த்தைகளையும் உடையவர்களாயிருப்பர். சிலபட்டணங்களுள்ளும் கிராமங்களுள்ளும் சிலவற்றில் மனிதர்க ளேயில்லாமலும் சிலவற்றில் மனிதர்களும் சிலவற்றில் வீடுகள் நஷ்டமாயும் சிலவற்றில் வீடுகளும் சிலவற்றில் புல் மூளைத்துக் காடுசூழ்ந்தும் இருக்கும். ஆரண்ணியவாசிகள் கப்பத்தினால் பீடிக் கப்படுவர். குளம் ஏரி ஆறுகள் பயிரிடும் இடங்களாகும். உயர்ந்த வம்சத்திற் பிறந்தவர் தாழ்வடைவார். பொய்யர்களும் துஷ்டர்க ளும் சூதர்களும் அதிகாரவர். விளைநிலமெல்லாம் விளைவில்லாம லும், மிகஅற்பர்கள் உயர்ந்தவர்களாயும், பொருளுள்ளவர்களாயும் இருப்பர். தெய்வபக்தியுள்ளவர் நாஸ்திகராயும் நகரத்திலுள்ளவர் தயையின்றி இம்சிக்கின்றவராயும் மாதாடரைக் கொலைசெய்கின்றவ ராயு மிருப்பர். ஸ்திரீகளும் புருஷர்களும் குள்ளராகவும் வியாதி யுள்ளவராகவும் ஆயுள் குறைந்தவராகவும்எவ்வனமில்லாதவர்களா கவும் பதினறுவயதில் நரைத்தவர்களாகவும் இருபதுவயதில்கிழத் தன்மை அதிகரித்தவர்களாகவும் எட்டுவயதுபெண் ருதுவடைந்து பிள்ளைகளைப் பிரதிவருஷத்திலும் பிரசவிக்கிறவர்களாகவும் பதி னறுவயதில்கிழவிகளாகவும் போவார்கள். பிள்ளைப்பேறுடையவர் கள் சிலராகவும் மலடிகள் பலராகவுமிருப்பர். நான்கு வருணத்தவ ரும் கன்னிகையை விக்கிரயஞ் செய்வார்கள். பெண் கோதரி மருமகள் தாய் மனைவி மருமகள் இவர்கள் விபசாரத்தொழிலால் கொண்டுவரப்பட்ட அன்னத்தைப் புசிக்கப்போகிறார்கள். விஷ்ணு நாமங்களை விக்கிரயஞ் செய்வார்கள். கீர்த்தியுண்டாக வேண்டுமென் று பலர்முன் ஏற்போருக்குத் தானங்கொடுத்துப் பின் அவர்க

ளிடத்தில் அவைகளை அபகரிப்பர். தேவாலயங்களும் பிராமணர்க
ளும் ஆசிரியரும் தன்னிலாவது பிறராலாவது செல்வமுடையவரா
யிருப்பின் சாத்தியப்படுமாறில் பிடுங்கிக்கொள்வர். சிலர்கன்னிகை
யையும் சிலர் மாமியையும் சிலர் மருமகளையும் சிலர் சாதிபார்க்கா
மல் எல்லாஸ்திரீகளையும் சிலர் சிறியதாயார் உடன்பிறந்தாள் தமை
யன்பெண்சாதிஇவர்களையும்புணரத்தகாதஸ்திரீகளையும்புணருவா
ர்கள். இவ்வாறே வீடுகள்தோறும் தான்சொந்தத்தாயைவிட்டு மற்ற
வர்களிடத்தில் மனம்போனபடியே புணருவார்கள். புருஷனுக்கும்
இவள்தான் ஸ்திரிஎன்றும், ஸ்திரீகளுக்குஇவன்தான் புருஷனென்றும்
நியமமில்லாமற்போகும். சனங்களுக்கும் கிராமங்களுக்கும் இன்ன
இன்ன வஸ்துக்கள்தான் உரித்தானவை என்கிற நியமமும் இல்லா
மற்போகும். எல்லோரும் பொய்களவு பேராசை கொலைமுதலிய
வைகளையுடையவராவர். நான்குவருணத்தவரும் பாபிஷ்டர்களா
வர். திராக்ஷலோகம் ரஸவஸ்துக்கள் முதலியவற்றைவிக்கிரயஞ்
செய்வர். பிராமணர் எருதின்மேலேறுவர், சூத்திரர் சவத்தைத்தக
னஞ்செய்வர், சூத்திரான்னத்தைப் புசிப்பர், சூத்திரஸ்திரீகளைப்
புணருவர், அமாவாசைராத்திரியில்புசிப்பர், சந்தி சௌசம் யக்ஞ
சூத்திரம் பஞ்சயக்ஞம் இவைகளைக்கைவிடுவர். விபசாரியுங் தாமச
காரியும் சமையல்செய்கின்றவராவர். அன்னத்துக்கும் அல்குலுக்
கும் பிரமசரியாதி ஆச்சிரமங்கட்கும் விதித்தநியமங்கள் இல்லாமற்
போம். இவ்வாறுகப்போகும் அந்தணர்களேயன்றி எனையோரும்
தூருக்காவர். மரங்களெல்லாம் ஒருகையளவுள்ளனவாகும். மனித
ர்களெல்லாம் ஒருகட்டைவிரலளவுள்ளவராவர். கலியுகமுடிவில்
யஸஸ் என்கிற பிராமணனுக்கு நாராயணம்சமாக கல்கி என்னும்
மகாபலமுள்ள பிள்ளைபிறந்து நீண்டவாளினல் உயர்ந்ததுரைமே
லேறி மூன்றிராத்திரிக்குள் துருக்கர் எல்லோரையும் வெட்டிமறை
யப்போகிறார். பூமி அரசனில்லாமல் திருடர்களால் பீடிக்கப்படும்.
பிறகு மேகமானது ஆறுநாள்வரையில் ஒருகம்பத்தினளவாக நீர்த்
தாரைகளைப்பெய்து பூமியில் சனம் வீடு மரம் இல்லாமற் செய்து
விடும். ஒழிவிலே அதன்பின்னர் பன்னிருசூரியர் உதித்து பூமியை
உலர்த்திவிடுவர். கலியுகமுட்முடியும். பிறகுகிருதயுகம்பிறந்து தபச
சத்வகுணமும் ஆச்சிரமம் ஆகிய இவைகளோடுகூடின தருமம் பூர
ணமாய் நடக்கும். அப்போது பிராமணர் தவம் தருமசிந்தனை

வேதவுணர்ச்சி முதலியவற்றையுடையவராகவும், வீடுகள்தோறும் ஸ்திரீகள் தருமத்தினின்றுந் தவறாதபதிவிரதைகளாகவும், ராஜாக்களெல்லாம் க்ஷத்திரியராகவும், பராக்கிரமம் தருமவழியே செங்கோன் செலுத்துமுறைமை புண்ணியத்தில் ஆசைபிராமணவிசுவாசம் இவற்றையுடையவராகவும், வைசியர்வாணிபத்தில் ஆவலும் புண்ணியத்தில் ஆசக்தியும் சூத்திரர் புண்ணியம்தருமம் இவற்றில்ஆவலும் மேல்வருணத்தவருக்கு வேண்டியவற்றைச் செய்வதில் ஊக்கமும் உடையவராயிருப்பர். இந்த நான்குவருணத்தவரும் தேவியினிடத்தில்பக்தியும்தேவிமந்திரத்தில் ஆசக்தியும்உள்ளவர்களாய்த் தேவியைத் தியானித்துக்கொண்டிருப்பர். புருஷர் ருதுகாலசங்கமஞ்செய்வர். சுருதிஸ்மிருதி புராணங்களை ஆராய்ந்தறிவர். அதர்மத்தின்லேசங்கூடஇல்லாமல் தருமம்பூரணமாகவும், திரேதாயுகத்தில் முக்காலாகவும் துவாபரத்தில் அரையாகவும்கலியுகமுதலில்காலாகவும் முடிவில் சூனியமாகவும் நடக்கும்.

வாரங்கள் ஏழாகவும் திதிகள்பதினைந்தாகவும்மாதம்பன்னிரண்டாகவும் ருதுக்கள் ஆறாகவும் பக்ஷம் இரண்டாகவும் அயனம் இரண்டாகவும் நான்குயாமம் ஒருராத்திரியாகவும் அப்படியே ஒருபகலாகவும் இரவும்பகலும்கூடியதினம்முப்பது ஒருமாதமாகவும்கணக்குபேதத்தால் வருஷம் ஐந்தாகவும் இருக்கின்றன. இவ்வாறு யுகங்கள் வந்துபோய்க்கொண்டே யிருக்கும். மனிதர்களுக்கு ஒருவருடம் தேவர்களுக்கு ஒருதினம். மனிதர்களுக்கு முன்னூற்றறுபதுயுகம் கழிந்தால் தேவர்களுக்கு ஒருயுகம். எழுபத்தொரு தேவயுகம் ஒருமன்வந்தரம். அது இந்திரனுடைய காலத்துக்குச் சமமாகும். இருபத்தெட்டு இந்திரர்காலங்கழிந்தால் பிரமனுக்கு ஓர்காளாகும். நூற்றெட்டுவயதானால் பிரமனுக்கு ஆயுள்முடிந்துவிடும். அப்போது பிராகிருத பிரளயமுண்டாகின்றது; பூமி சலத்தினால் மூடப்படும். மும்மூர்த்திகளும் மஹரிஷிகளும் சகலஞானிகளும் சத்யரூபமான சிதாத்மாவில் ஐக்கியமாகின்றனர். பிரகிருதியும் சிதாத்மாவில்இலயமடையுங்காலம் தேவிக்கு ஒரு இமை கொட்டுங்காலமாம். இவ்வாறு அளவில்லாத பிரமாண்டங்கள் லயித்துப்போகின்றன. மறுபடி தேவி சிருட்டிக்கிரமத்தால் ஒருநிமிஷகாலத்தக்குள் சிருட்டித்துவிடுகிறாள். இப்படி சிருஷ்டி லயம் கற்பங்கள் எத்தனையோ கடந்துவிட்டன. இதன்கணக்கையும் பிரமாண்டங்களின் கணக்கையும்

ள்வனறிவான். எல்லாவற்றிற்கும் ஈஸ்வரன் பரமாத்மா ஒருவனே. சச்சிதானந்தரூபத்தைத் தரிக்கிற பரமாத்மாவின் அம்சந்தான்பிரமனுதி சகலதேவர்களும். கூடத்விராட்-மகாவிராட்புருஷனுடைய அம்சம்; அவர் பரமாத்மாவின் அம்சமே. பிரகிருதிஎல்லாம் கூடத்விராட் அம்சம். பிரகிருதியிலிருந்துஅர்த்தநாரீஸ்வரர்தோன்றினர். கோலோகத்தில் இரண்டுகையுள்ளவராயும்வைகுண்டத்தில்நான்குகையுள்ளவராயுமுள்ள கிருஷ்ணனும் நாராயணனும் அப்பிரகிருதிரூபந்தான். பிரமன்முதல் துரும்பு பரியந்தமுள்ள சகலசிருட்டியும் பிரகிருதி சம்பந்தம். இதன்சம்பந்தமான சகலமும் நசித்துப்போகும். இவ்வாறு சிருட்டிக்குக்காரணமாயும் சத்யமாயும் நித்தியமாயும் அநாதியாயும் தனதிச்சைப்படி நடக்கிறதாயுமிருக்கிற நிர்க்குணமான பரப்பிரமம் பிரகிருதிக்குமேற்பட்டது. அப்பிரமத்துக்கு ஒருபேதமும் உருவமுங் கிடையாது. அப்படியிருந்தும் பக்தர்களுக்கு அநுக்கிரகஞ்செய்யும் எண்ணத்தினாலேயே சர்வத்தையுஞ்சிருட்டித்து சங்கரிக்கிறார். அப்பிரமத்தின் தபசினாலும் ஞானத்தினாலும்வற்றிற்கும் பிரபுவாய் சம்பத்துடையவராய், எல்லாமறிந்தவராய், சகலரூபியாய், சகலலோகத்திலும்வியாபியாய், சர்வத்தையும் ரக்ஷிப்பவராய், சகலசம்பத்தையுங் கொடுக்கிறவராய் இருத்தலாகிய ஆறுகுணங்களையும் விஷ்ணுமூர்த்தி உடையவராயினர். அதனால் பகவான் என்று யாவராலும் அழைக்கப்பட்டவராய் சகலத்துக்கும் பிரபுவாயிருக்கிறார். அவரைப்போலவே அப்பரப்பிரமத்தினுடைய பக்தியினாலும் சேவையினாலும் மகாமாயா சொரூபிணியான பிரகிருதிதேவி சர்வசக்திக்கும் ஈஸ்வரியென்றும், சச்சிதானந்தசொரூபிணியான பகவதி என்றுஞ்சொல்லப்படுகிறாள். அவளுடைய சேவையினாலும் தபசினாலும் சாவித்திரிதேவியும் வேதமாதாவாயும் அதற்கு அதிஷ்டான தேவதையாயும் பிராமணர்களால் பூஜிக்கத்தக்தவளாயும் இருக்கிறாள். சர்வவித்தைகளுக்கும் அதிஷ்டான தேவதையான சரஸ்வதிதேவியும் அவளுடைய தியானசேவைகளினால் பண்டிதர்களால் பூஜிக்கப்பட்டிருக்கிறாள். அப்படியே சர்வகிராமங்களுக்கும் அதிபதிகளாயுள்ள கிராமதேவிகளும்பூஜிப்பவர்களுக்கு சர்வசம்பத்தையும் கொடுக்கின்றவர்களாகவும் தோத்திரஞ்செய்கின்றவர்களுக்குச் சகல அரிஷ்டங்களையும் நீக்குகின்றவர்களாகவும் இருக்கின்றனர். கிருஷ்ணனிடப்பாகத்திலுண்டாகி அவ

ருக்கு அதிஷ்டானியாய் அவரதுபிராணனைக்காட்டிலும் பிரியையா யிருக்கிற ராதிகை அச்சக்திசேவையினால் யாவரினுஞ்சிறந்த மேன் மை சௌந்தர்யம் சௌபாக்கியம் மானம் கௌரவம் முதலியவற் றையுடையவளாய் கிருஷ்ணனுடைய வக்ஷஸ்தலவாசினியாய் அவ ருக்குப்பத்தினியாய் ஆயினள். அவள் முன்பு சதசிருங்கமென்னும் பர்வதத்தில் ஆயிரந்தேவவருடம் புருஷனை அடைவதற்காகத்தவம் புரிந்து மகாதேவியின் அநுக்கிரகங் கிடைக்கப்பெற்றாள். அப்போ துகிருஷ்ணமூர்த்தி தன்மார்பில் அமர்த்தித் தன்னைப்போல் ஸ்தி ரமாகவும் தன்னிடம் பக்தியுள்ளவளாகவும் சௌரியம் மேன்மை பிரீதி கௌரவம் இவைகளில் தன்னினுஞ் சிறந்தவளாகவும், தனது பிரீதிக்குப் பாத்திரையாகவும், எல்லாமனிஷிகளுள் உயர்ந்தவளாக வும், தன்னாற் பூசிக்கப்பட்டவளாகவும் இருத்தி என்பிராணனுக் குச் சமானமானவளே! எப்போதும் உன் சுவாதீனமாக விருக்கின் றேன் என்றனர்.

எந்தெந்தத்தேவிகள் மகாதேவியைக்குறித்து எவ்வளவு தப ஞ்செய்தார்களோ அவ்வளவான கௌரவத்தை யடைந்தார்கள். துர்க்காதேவி ஆயிரம்தேவவருடம்இமாலயத்திலும்,சரஸ்வதிதேவி லக்ஷம்தேவவருடம் கந்தமாதன பர்வதத்திலும், இலக்குமி புஷ்க ரத்திலும், சாவித்திரி அறுபதினாயிரந் தேவவருடம் மலயத்திலும் தவங்கிடந்து யாவராலும்பூஜித்துவணங்கப்பட்டு எல்லாவற்றையுங் கொடுக்கும் வன்மையை யடைந்தனர். திரிமூர்த்திகள் நூறுமன் வந்தரம் தவம்புரிந்து தங்கள்தொழிலில் வல்லவரானார்கள். கிருஷ் ணன் பத்து மன்வந்தரம் தவம்புரிந்து கோலோகமடைந்து சுகமுற் றனர். தருமன் பத்துமன்வந்தரம் தவம்புரிந்து சகலருக்கும் பிரா ணபூதனும் ஆதாரனும் பூஜிக்கத்தக்கவனானான். இவ்வாறு சகல தேவரும் முனிவரும் மநுக்களும் பிராமணர்களும் தேவியைக்குறி த்துச்செய்யும் தபசினாலேயே கௌரவமடைந்தனரென்று வேதங் கூறியவாறு எடுத்துச்சொல்லும் புராணத்தை நான் ஆசிரியரிடங் கேட்டவண்ணங் கூறினேனென்றனர். (சு ம்-கக0)

எட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

ஸர்வாருணாய நம:

ஒன்பதாம் அத்தியாயம்.

வசுதேவோற்பத்தி.

நாரதர், பிரமன்முதலிய சகலதேவர்களும் ஜலதத்வத்தில் ஒடுங்குங்காலமே பிரளயகாலமெனவும், அக்காலமே தேவி தனது கண்ணிமைகொட்டும் அளவுக்குள்ளெனவுங் கேட்டுள்ளேன்; அப்பொழுது இப்பூமி ஏந்தஜலத்தில் எங்கே மறைந்திருந்து சிருஷ்டிகாலத்தில் எப்படி உற்பத்தியாகின்றுள் என்றனர்.

நாராயணர் கூறுகின்றார்:— இவ்வுலகம் சிருஷ்டியாகுந்தோறும் சலத்தில் மறைந்திருக்கும் பூமிதான் முன்னுண்டாகின்றது. இதனை மேதினி என்பர். அதற்குக்காரணம் மதுகைடபர்களைத் திருமால் கொல்லத் தொடங்குங்கால் இப்பூமி ஜலத்தில் மறைந்து கிடந்ததென்றும், அதனைக்கண்ட அவர்கள் நமக்கு மரணமில்லையென்று மகிழ்ந்து கிடக்கும் அச்சமயத்தில் பூமிவெளிப்படத் திருமால்அவர்களைக்கொல்லும்பொழுது அவர்கள் உடம்பிலுள்ள மேதை பூமியிற்கலந்ததென்றும், அதனால்பூமிக்குமேதினி எனப் பெயர்வந்தது என்றும்கூறுவர். இதுனக்குடன்பாடில்லை. எனக்குத் தருமர்சொல்லியிருக்கின்றார். அதாவது இப்பூமிசலத்திலிருக்குமகாவிராட்புருடனுடைய சரீரமெல்லாம்வியாபித்து ரோமகூபங்களிடமும் நிறைந்திருந்து வெகுகாலங்கழிந்தபின்னர் வெளிப்படுகின்றாரென்றும், இது பலமுறையென்றும், இதுபோலவே சலத்தால் மறைபட்டு வெளிப்படுவதென்றும் கூறினர். இத்தகைய பூமி சப்தத்வீபங்கள் சப்தசமுத்திரங்கள் புண்ணியதீர்த்தக்கள் மேலுங் கீழுமுள்ள உலகங்கள் இமயமுதலிய அரியபெரிய பர்வதங்கள் தேவர்கள் நவக்கிரகங்கள் முதலியயாவும் தங்கியிருப்பதற்கு ஆதாரமாயுள்ள சிறப்புடைத்தானதென்றும், இவளை இரணியாக்கதன் கவர்ந்து பாதாளத்தில் கொண்டுபோய் வைத்தபோது விஷ்ணுமூர்த்தி வராஹரூபங்கொண்டு பாதாளத்திற்சென்று தாமரைப்பொகுட்டைப்போல் மேலே மிதக்கும்படிக் கொண்டுவர பிரமாதிதேவர்களெல்லாம் மகிழ்ந்

தனென்றும், அச்சமயத்தில் தனது திவ்யசொரூபத்தோடு மகா சுந்தரவதியாய் அவள்நிற்க வராஹ வுருவங்கொண்டதிருமால்அவ ளைக்கண்டு காமாந்தகராய்த் தனதுருவெடுத்து ரதிகலியில் சமர்த் தர்களான இருவரும் தத்தம் நிலைமறந்து காமரசலீலை யாழ்ந்து இரவுபகல் தோன்றுமல்லொருவருடனுகிரீடித்தனரென்றும், கடோசன் என்னும் பிள்ளையைப் பெற்றனரென்றும், பின் தெளிவுற்று தமது முன்னுருவும் முன்னிலையும் மனதுக்குத்தோன்ற வராஹவுருக்கொ ண்டு தம்மால் கிரீடிக்கப்பட்ட அவளும் பூமிதேவியென் றுணர்ந்து மகிழ்ந்து அவளுக்கு வஸ்திராப்ரணதிகளும் உண்பனவாகிய சுவை யோடுகூடிய உணவாதிகளையும் மிகுந்த வுபசாரத்தோடுங் கொ டுத்து அவளைப்பார்த்து நீ எனக்கு ஸ்ரீதேவிவைப்போலும் ஓர்மனை யாட்டியாயினுஎன்று கூறினரென்றும், பின்னர் அவளைப் பார்த்து ஓ பூதேவீ. சகலத்துக்கும் ஆதாரமாயிருந்து முனிவர்க ளாலும் மநுக்களாலும் தேவதானவசித்தர்களாலும்பூஜிக்கப்படுவா யென்றும், தானஞ்செய்யுந்தினத்திலும் பிரயாணகாலத்திலும் வித் தை கிரகம் கடபாவி குளம் முதலானவற்றை ஆரம்பஞ்செய்யுங்கா லங்களிலும் விவசாயத்திலும் பூஜிக்கப்படுவாய் என்றும், எந்த மூடர்கள் இக்காலங்களில் உன்னைப்பூஜைசெய்கிறதில்லையோஅவர் கள் நரகினையடையக்கடவர் என்றும் அனுக்கிரகஞ்செய்தனர்.

அதனைக்கேட்ட வசுதாதேவி ஓ பகவானே! உமது ஆஜ்ஞையி னல் வராகரூபியாய் தாவரசங்கமங்களோடு எல்லாவுலகங்களையும் ஓர் விளையாட்டாகத் தாங்குகின்றேன். முத்து சிப்பி சிவலிங்கம் தேவி விஷ்ணுபிம்பங்கள் சங்கம் தீபம் யந்திரம் யஜ்ஞசூத்திரம் ஜபமாலை புஸ்தகம் துளசி புஷ்பம்புஷ்பமாலை மணிக்கம் வச்சிரம் பொன் கோரோசனம் சந்தனம் தீர்த்தம் சாளக்கிராமம் இவை களை ஆசனமில்லாமல்வைப்பாராயின் அவைகளைத்தாங்க வல்லமை யற்று நான்மிகவும் வருந்துவேன் என்றாள். பகவான் ஓ சுந்தரீ! எந்தமூடர்கள் நீசொல்லியவைகளை ஆசனத்தில் வைக்காமல் உன் னிடம் வைக்கின்றார்களோ அவர்கள் நூறுதேவவருடம் காலசூத் திரம் என்னும் நரகினையடையக்கடவர் என்றார்.

மந்திரம் தியானம் தோத்திரம்.

இவாதுஆஜ்ஞையினல் வசுதாதேவியைக் கண்ணுவசாகையி லுள்ள (ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் க்லீம் வசுதாயை ஸ்வாஹா) என்

கிற மந்திரத்தினாலும், வெண்டாமரைப்போல்கிறமும் சரத்கா லசந்திரன்போல் முகமும் சந்தனத்தினாற்ரூபப்பட்ட சர்வாங்க மும் உள்ளவளாயும், இரத்தினபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு அவைகளுக்கு ஆதாரமாயிருக்கின்றவளாயும், இரத்தினத்தைகைப் பத்தில் உடையவளாயும், இரத்தினகரத்தோடுகூடினவளாயும், கெ ருப்பினல்சுத்தமானவஸ்திரத்தை அணிந்தவளாயும், புன்சிரிப்புடை யவளாயும், பூஜிக்கத்தக்கவளாயும் இருக்கின்ற பூமிதேவியே உன்னை நமஸ்கரிக்கின்றேன் என்கிற தியானத்தினாலும் ஜலத்தைக்கொடுக் கிறவளே! ஜலசொரூபியா யிருக்கின்றவளே! ஜலத்துக்கெல்லாம் ஆதாரமாயிருக்கின்றவளே! சலம் போல் பரிசுத்தஞ் செய்கின்றவ ளே! யக்ஞவராஹ ரூபியான பகவானுக்குப் பத்னியே! ஜயத்தைக் கொடுப்பாய். ஜயத்தை யுண்டு பண்ணுகின்றவளே! மங்களங்க ளுக்கெல்லாம் ஆதாரமானவளே! மாங்கல்லியரூபமாக விருக்கின்ற வளே! மங்களத்தைக் கொடுக்கின்றவளே! மங்களத்துக்குப் பிரபு வானவளே! சம்சாரத்தில் மங்களத்தை எனக்குக்கொடுப்பாய், சர்வத்துக்கும் ஆதாரமானவளே! எல்லாமறிந்தவளே! சர்வசக்தி யோடு கூடினவளே! சர்வகாமத்தையுங் கொடுக்கின்றவளே! சம்சா ரத்தில் எனக்குச் சகல இஷ்டத்தையுங் கொடுப்பாய். புண்ணிய ரூபியாயிருக்கின்றவளே! புண்ணியத்துக்குப் பீஜரூபமாயுள்ளவ ளே! அனுகியானவளே! புண்ணியத்துக்கு ஆச்ரயமானவளே! புண் ணியவான்களுக்கு ஸ்தானமானவளே! புண்ணியத்தைக் கொடுக் கின்றவளே! சகலபயிருக்கும் இருப்பிடமாயுள்ளவளே! சகலபலத் தையுங் கொடுக்கிறவளே! காலத்தில் சகலபயிர்களையும் ஹரிக் கின்றவளே! சகலமான பயிர்வடிவங்களாக இருக்கின்றவளே! ஓ பூதேவியே! அரசர்களுக்குச் சகலதனரூபியாகவும் முக்கியஸ்தான மாகவும்இருப்பதோடு சுகத்தையும் பூமியையும்கொடுக்கின்றவளே! எனக்குப் பூமியைக்கொடுப்பாய் என்கிற தோத்திரத்தினாலும் முத லில் வராஹனும் பிறகு மலோனும் மநுக்களும் முனிவர்களும் மா தேவர்களும் பூஜித்தனர்.

இத்தோத்திரத்தை எவன்காலையில் படிக்கின்றானோ அவன் கோடிஜன்மம் பலவானாகவும் ராஜாதிராஜனாகவும்பிறப்பான். ஒரு தாம்பிரபத்திரத்தில் தானமாகக்கொடுத்த பூமியை வாங்கியத னாலுண்டாகும் பாபம்போய்ப் பூதானங்கொடுத்த பலன் கிடைக்

கும் அன்றியும் கிணறுவெட்டுதல் பூமியை அபகரித்தல் பூமியில் வீரியத்தைவிடுதல் தீபத்தை பூமியில் வைத்தல் முதலிய பாபங்கள் நீங்கி நூறு அஸ்வமேத பலனை அடையலாமென்பதிற் சந்தேக மில்லை என்றனர். (சு-ம் 63)

ஒன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

உ

ஸர்வமாதாயை நமஃ

பத்தாம் அத்தியாயம்.

* தராபராதே நரகப்ராப்தி.

நாரதர் பூதானத்தா லுண்டாகும் புண்ணியத்தையும் பூதான த்தை அபகரித்தல் முதலிய குற்றங்களால் நேரிடும் பாபங்களையும் அதனல் நேரிடும் நரகங்களையும் அக்குற்றங்களை யொழிக்கும் சாந் திகளையும் விரிவாக உரைத்தருள வேண்டுமென்று வினவ நாராய ணர் கூறுகின்றார்:—

பூதானம் மிகச்சிறந்தது; வேதகர்மங்களை விடாமல் அநுஷ்டி த்துவரும் சத்பிராமணனுக்குத் தனக்குள்ளபூமியில் சாணளவாயி னும் தானஞ்செய்பவன் சிவலோகத்தையும், எல்லாப் பயிர்களும் விளைந்து நக்கும் பூமியைத் தானஞ்செய்பவனும் அப்பூமியில் எவ்வ ளவு அணுக்களுண்டோ அவ்வளவுகாலம் விஷ்ணுலோகத்தையும், கிராமம் பூமி தான்யம் இவைகளைத் தானஞ்செய்பவன் தேவி லோ கத்தையும், இவ்வகையான தானங்களைப் புகழ்கின்றவன் தன் குலத்தோடு வைகுண்டத்தையும் அடைகின்றனர். தானவது பிறராவது தானஞ்செய்ததும் பிராமண விருத்தியால் சம்பாதித்தது மான பூமியை அபகரிக்கின்றவன் சந்திரசூரியருள்ளவும் கால சூத்திரநரகத்தை யடைவதுமன்றி அவனது புத்திரபௌத்திராதி யநும் பூமி சம்பந்தும் சந்ததியும் அற்று மகாதரித்திரத்தை யநுப விக்குக் கோரமான நரகங்களையும் அடைகின்றனர். பசுக்களது வழியையடைத்துப் பயிரிடுகின்றவன் நூறுதிவ்யவருஷம் கும்பி

* பூமிதேவிக்குத் குற்றஞ்செய்தால் வரும் நரகம்.

பாகத்தையும், மாட்டுமந்தையிருக்கும் இடத்தையும் தடாகத்தை யும் பயிரிடும் பூமியாக்கிப் பயிரிடுகின்றவன் பதினொரு இந்திரர் ஆயுள்பரியந்தம் அசிபத்திர வனத்தையும், அம்புவாசியால் பூமியை வெட்டுவோன் நான்குயுகம கிருமிதம்சமென்னும் நரகத்தையும், இதரருடைய கிணறு புஷ்கரணி சிதலமாகமறைந்திருக்க அதனை உத்தாரணஞ்செய்யாமல் வேறுகிணறு முதலியவற்றை உண்டாக்கு வோர்கள் அவற்றாலுண்டாகும் புண்ணியத்தைச் சிதலமாகிணறு வெட்டினவனுக்குக் கொடுத்துவிட்டுப் பதினொரு இந்திரர் ஆயுள் வரையில் தப்தகுண்டத்தையும் அடைகிறார்கள். ஐந்துபிடிமண் வெளியேயெடுத்துவீசாமல் பிறன்கிணற்றில் ஸ்நானஞ்செய்கின்றவன் ஸ்நானபலனையுமிழந்து நரகினையுமடைவன். கர்மமிகுதியினால் பூமியில் வீரியத்தைவிட்டவன் அந்தப் பூமியினுடைய தூள் ஒன்றுக்கு ஒருவருஷகாலம் ரௌரவத்தையடைவன். பிறனது தடாகத்தில் சேற்றையெடுத்து வெளியிலிடுகின்றவன் சேற்றின் துளி ஒன்றுக்கு ஒருவருஷம் பிரமலோகத்தை அடைவன். சிரார்த்தஞ் செய்யும் பூமியின் சொந்தக்காரனுக்குப் பணங்கொடாது பிதுர்க்களுக் குப் பிண்டமிட்டவன் நரகினை அடைவன். பூமியில் தீபம்வைப்ப வன் ஏழுசன்மங் குடியனையும் புத்தகத்தைவைப்பவன் சன்மாந்தி ரத்தில் குஷ்டரோகியாயும் முத்துமுதலிய ரத்னங்களையும் பொன் னையும் வைப்பவன் ஏழுபிறப்பு குருடனையும், சிவலிங்கம் தேவியின் பதமை இவைகளைவைப்பவன் நூறுமன்வந்தரம் புழுக்களைத் தின்ப வனையும் பிறப்பன். சங்கு யந்திரம் புஷ்பம் துளசி முதலியவைகளை யும் ஜபமாலை புஷ்பமாலை கற்பூரம் கோரோசனம் சந்தனக்கட்டை ருத்திராக்ஷம் தர்ப்பை முதலியவைகளையும் பூமியில் வைக்கின்ற ர்வமன்வந்தரகாலம் வரையில் நரகினையடைவர். யக்ஞசூத்திரத்தை யும் புத்தகத்தையும் வைப்பவர் இந்த ஜன்மத்தில் பிரமஹத்திசெய் த பாவத்தை யடைவதுமன்றி சன்மாந்திரத்திலும் பிரமயோனியில் பிறக்கார். யாகஞ்செய்ததனால்உண்டாகிய உஷ்ணத்தைப் பாலினால் நனைக்காதவன் ஏழுசன்மம் கொதிக்கும் பூமியையடைந்து தபிப் பான். பூகம்பகாலத்திலும் கிரகணகாலத்திலும் பூமியை வெட்டு கின்றவன் மகாபாபியாய் அங்கஹீனனாய்ப் பிறப்பான்.

இப்பூதேவிஎல்லோருக்கும் ஸ்தானமாயிருத்தலால் பூமியென் றும், காசியபருக்குச் சம்பந்தமுள்ளவளாகையால் காஸ்யபியென்றும்

சகலவிஸ்வத்தையும் தாங்குவதனால் விஸ்பம்பரையென்றும், அளவில்லாத ரூபமுடையவளாகையால் அனந்தையென்றும், பிருதுசக்கிரவர்த்தியின் புத்திரியாயும் விசாலமாய்ப் பெருத்திருப்பதினலும் பிருதிவி என்றுஞ் சொல்லப்படுகிறாள் என்றனர். (சு-ம்-30)

பத்தாம் அத்தியாயம் முற்றிற்று.

சர்வாபரண பூஷிதாயை நமஃ

பதினோராம் அத்தியாயம்.

கங்கோற்பத்தி வர்ணனம்.

நாரதர், கங்கை சரஸ்வதியின் சாபத்தினால் பூவுலகில் எந்த யுகத்தில் எவனால் பிரார்த்திக்கப்பட்டு எனது ஆக்ஞையால் எப்படி அவதரித்தாள் என்று நாராயணரைக்கேட்க அவர்கூறுகின்றார்:—

இராஜாக்களுக்கெல்லாம் பிரபுவாயும் ஸ்ரீமானுயும் சூரியவம்சத்திற் பிறந்தவனுயுமுள்ள சகரன் - வைதர்ப்பி, சைப்பியை என்னும் இரண்டு மனைவியருடன் வாழுங்காலத்தில் சைப்பியைக்கு அஸமஞ்சனென்பவன்பிறந்தான். வைதர்ப்பிபிள்ளைவேண்டுமென்று சங்காரைப் பூசிக்க அவரது அநுக்கிரகத்தால் கர்ப்பமுண்டாகி நூறுவருடஞ் சென்றபின்னர் மாம்சபிண்டத்தைப் பெற்றனள். அதனைக்கண்டு சம்புவைத் தியானித்து அடிக்கடி யழ, அவர் பிராமணரூபமாக வந்து அப்பிண்டத்தை அறுபதினாயிரம் பாகமாகச் செய்ய அவைகளெல்லாம் பிள்ளைகளாய்விட்டன. சூரியகாந்தி போன்ற தேகமுள்ளவர்களான அவர்கள் கபிலமுனிவருடைய சாபத்தால் பஸ்பமாய்விட்டனர். அதைக்கேட்ட அஸமஞ்சன் அழுது கொருங்கினவனத்தில் லக்ஷம்வருடம் கங்கையைக் கொண்டுவரும் பொருட்டுத் தவம்புரிந்தும் அவனெண்ணம் முடியாமல் மரணமடைந்தனன். அவனைப்போலவே அவன் புத்திரனை அம்சுமான் லக்ஷம்வருடம் தவம்புரிந்து மரித்தான். அவன் புத்திரனுகிய பகீரதன் லக்ஷம்வருடம் தவம்புரிந்து கிருஷ்ணபகவானைத் தியானித்து அடிக்கடி நமஸ்கரித்து வம்சத்தைக் கரையேற்றும்

வரத்தை அடைந்தான். பிறகு அந்த கிருஷ்ணமூர்த்தி கங்கை யைப்பார்த்து ஓ சுரேஸ்வரீ! இப்போது நீ சரஸ்வதி சாபத்தி னால் சிக்கிரமாகப் பரதவருஷத்துக்குப் போய்ச் சகரருடைய புத்திரர்களை யெல்லாம் உன்சம்பந்தமான காற்றினால் பரிசுத்த மாக்குவாய். அவர்கள் சன்மாந்திரத்தில் செய்திருந்த பாபங்க ளொழிந்து எனது பரிசாரகர்களாய் ஒரு துன்பமுமின்றி என் சமீபத்தில் வாழ்வார்கள் என்று சொல்லி, ஓ கங்கே! நீ பூலோ கத்தில் அளவிறந்த மகிமையோடு பூஜிக்கப்படுவாயென்று அவை களுக்கூறுகின்றார்:-கோடிஜன்மங்களில் மனிதர்களாற்செய்யப்பட்ட பாபங்களெல்லாம் உனதுகாற்றின் பரிசத்தால் நசிக்கும். தெரிச னத்தைப்பார்க்கிலும் உனதுபரிசம் பத்துப்பங்கு புண்ணியத்தைக் கொடுக்கும். சாதாரண தினத்தில் மௌசலஸ்நானமாத்திரத்தில் பிரமகத்தி முதலானதும் அநேககோடி ஜன்மங்களிற் செய்ததும் புத்திபூர்வகமாகச் செய்ததுமான பாவங்கள் நசித்துவிடுகிற தென் று வேதத்திற் கூறியுள்ளது. புண்ணியதினத்தில் ஸ்நானஞ்செய்வ தனுண்டாகும் பலனை வேதங்களானுஞ் சொல்ல முடியாமையால் தங்கள் சக்திக்குத் தக்கவாறு சொல்லுகின்றன. திரிமூர்த்திகளும் தேவர்களும் முழுவதும் சொல்லமுடியாதொழிந்தனர். ஓ கங்கா தேவியே! சாமான்யதினத்தில் சங்கல்பஞ்செய்து ஸ்நானஞ் செய் வதனாலுண்டாகும் புண்ணியம் மௌசலஸ்நானத்தைக் காட்டி லும் பதின்மடங்கதிகம். சூரியசங்கிரமண காலங்களிலும் அமா வாசையிலும் செய்யும் சங்கல்பஸ்நானபலன் சாதாரணதினத்திற் செய்யும் சங்கல்பஸ்நானபலனைக்காட்டிலுஞ் சிறந்தது. தக்ஷிணாயன ஸ்நானபலன் இரண்டுபங்கதிகம். அதனைக்காட்டிலும் பதின்மடங் கதிகம் உத்தராயண புண்ணியகாலத்திற் செய்யும் ஸ்நானம். சாதுர்மாஸ்ய பௌர்ணமாவாசையில் செய்யும் ஸ்நானபலனுக்கு அளவேயில்லை அக்ஷயமாம். உத்தராயணகாலத்திற்செய்யும் புண்ணி யத்துக்குச் சமமென்று வேதத்திற் கூறியிருக்கின்றது. மேற் குறித்த தினங்களில் ஸ்நானத்தை முன்னிட்டுச்செய்யும் தானம் சா தாரணதினத்தில்செய்யும் புண்ணியபலனைக் காட்டிலும் நூறுமடங் கதிகம். மன்வந்திராதிகளிலும் மாதமாதசுக்லபக்ஷ சப்தமியிலும் பீமாஷ்டமியிலும் அசோகாஷ்டமியிலும் நவமியிலும் நக்ஷத்திர களிலும் செய்தால் மேற்கூறியபலனுக்கு இரண்டுபங்கதிகமாம்.

அவைகள் உனக்கும் துர்லபமானவை. தசராவிலும் தசராதசமியிலும் செய்தால் யுகாதியிற்செய்த பலனும் வாருணியில் செய்தால் நந்தாதிதிப்பலனும் மகத்பூர்வத்தில் செய்தால் மேற்கூறியபலனைக் காட்டிலும் நான்குபங்கு புண்ணியமும் துலிமகத்பூர்வத்தில் அதனைக்காட்டிலும் நான்குபங்கு புண்ணியமும் கிடைக்கும். சாதாரண நாளிற்செய்யும் ஸ்நானத்தைக்காட்டிலும் கோடிபங்கதிகம் சந்திரகிரகணகாலத்தில் செய்யும் ஸ்நானம். அதனைக்காட்டிலும் பதின் மடங்கதிகம் சூரியகிரகணகாலத்திற் செய்யும் ஸ்நானம். அதனைக் காட்டிலும் நூறுபங்கதிகம் அர்த்தோதயகால ஸ்நானம் என்று கூறினர்.

கங்காதேவி ஓபிரபுவே! சரஸ்வதி சாபத்தாலும் பகீரதன் தபசினாலும் உமதுஆக்ஞையினாலும் பாரதவருடத்தை நான் அடைவேனால் பாபிகள் என்னிடம் ஸ்நானஞ்செய்து அளவில்லாத பாபங்களைக் கொடுக்கப்போகிறார்கள். அவைகள்என்ன உபாயத்தினால் நசிக்குமோ அதனையும், பாரதவருடத்தில் எவ்வளவுகாலமிருந்து பரமபதத்தை வந்தடைவேனோ அதனையும், எனக்கென்னென்ன அபேக்ஷைகளுண்டோ அவைகளை அறிந்து அதற்கேற்றவைகளையும் கூறியருளவேண்டுமென்ன, விஷ்ணுபகவான் கூறுகின்றார்:—

ஓ தேவரியே! உனது கோரிக்கைகளை நானறிந்தவன்தான். சலரூபமாகவிருக்கின்ற உனக்கு லவணசமுத்திரம் கணவனாகும். அக்கடல் என்னம்சம்; நீலகண்டமிசுவம்சம் உலகில்மகாசமர்த்தனை புருஷன் சமர்த்தியான ஸ்திரீயோடுசேருவது மிக்கசுகமுள்ளது. பாரதவருஷத்தில் சரஸ்வதிநதி முதலிய நதிகளைக்காட்டிலும் நீ ஒருத்தியே சௌகர்யமுள்ளவளாயிருப்பதினால் புனர்ச்சிகாலத்தில் சமுத்திரராஜனுக்கு இனிப்பாகவிருப்பாய். ஓதேவேஸ்வரீ! இதற்குமுதல் கலியுகத்தில் ஐயாயிரம்வருஷம் சரஸ்வதி சாபத்தால் பாரதவருடத்திலிருப்பாய். நீ இனிக்தோறும் சமுத்திரராஜனோடு ரகசியத்தில் ரசிக்கப்போகின்றாய், சிருங்காரசமர்த்தியான நீ அவனுடைய புனர்ச்சி விசேடத்தால் நீ சந்தோஷமடையப்போகிறாய். பாரதவருஷத்திலிருக்கிற ஜனங்களெல்லாம் பகீரதனால் செய்யப்பட்ட தோத்திரத்தினால் உன்னைத் துதித்துப் பூசிப்பார்கள். கண்ணுவசாகையில் சொல்லியவிதிப்படி எவன் உன்னை தோத்திரஞ்செய்து துதிக்கின்றானோ அவன் அஸ்வமேதபலனை யடைகிறான். எவன் நாறுயோஜ

னை தூரத்திலிருந்து கங்கை கங்கையென்று உன்னை ஸ்மரிக்கின்றவனே அவன் சகலபாபங்களினின்றும் விடுபட்டு எனது லோகத்தையடைகின்றான். ஆயிரம்பாபிகள் ஸ்நானம் செய்வதனாலுண்டாகும் பாபம் பிரகிருதி தேவியின் பக்திமான்களுடைய பரிசத்தாலும், ஆயிரம்பாபிகளது பரிசபாபம் பிரகிருதிதேவியின் மந்திரத்தை உச்சரிப்பவன் செய்யும் ஸ்நானத்தாலும் நசித்துப்போம். இவ்வாறு பாபங்களையெல்லாம் ஒழித்துவிட்டு திறந்தசரஸ்வதி நதிமுதலிய நதிகளோடு ஒன்றுக பாரதவருஷத்தில் வசித்துப் பின்னர் வரப் போகின்றனை. எங்கு உனது குணகீர்த்தனங்களைச் செய்கின்றார்களோ அவர்கள்தான் பரிசுத்தர்கள். உனது ரேணு பரிசமாத்திரத்தில் பாபி பரிசுத்தனுவான். உனது கீர்த்துளிகள் எத்தனை மனிதன் மேல்படுகிறதோ அவர்கள் அவ்வளவுகாலம் தேவலோகத்தில் வசிப்பார்கள். எவர்கள் புத்திபூர்வகமான பக்தியோடு எனது நாமத்தை ஸ்மரித்துக்கொண்டு உன்னிடம் மரிக்கின்றார்களோ அவர்கள் எனது லோகத்தையடைந்து பரிசாரர்களால் பிராகிருதிகம் என்னும் அநேக பிரம பிரளயத்தைப் பார்ப்பார்கள். அநேக புண்ணியத்தைச் செய்தவனுடைய பிரேதசரீரமானது உன்னிடம் விழும். அந்தப் புண்ணியத்தால் அவனை வைகுண்டமடைவித்து பின் சுகசரீரங்களை யனுபவிக்கும் சரீரத்தைத் தந்து அது முடிந்தவுடன் சாரூப்பியத்தையுங் கொடுத்து எனது சபையில் சேர்ந்தவனுகச் செய்துக்கொள்வேன். அஞ்ஞானியானவன் உன் சலசம்பந்தத்தால் பிராணனை விடுவானுயின் அவனுக்கு சாலோகங்கொடுத்து சபையிற் சேர்த்துக் கொள்ளுகிறேன். வேறெவ்விடத்திலாவது உன்னை நினைத்துக்கொண்டே மரணமடைவோனை பிரமவயதுபரியந்தம் சாலோகத்தையும் அநேகபிராகிருத லயபரியந்தம்சாரூப்யத்தையுங்கொடுத்து சிறந்த ரத்னங்களிழைத்த வாகனங்களிலேற்றிப் பரிசாரகர்களோடுகூலோகத்தை யடைவித்து எனக்குச் சமமான உருவமுள்ளவனுக்குவேன். என் மந்திரத்தை உபாசிக்கின்றவர்கள் பரிசுத்தமானவிடத்திலிருந்தாலும் அபரிசுத்தமான விடத்திலிருந்தாலும் அதனால் குறைவும் விசேஷமுமில்லை. என் மந்திரத்தை யுபாசித்து என் நிவேதனத்தை புசித்துவருபவன் லீலையாக மூவுலகத்தையும் பரிசுத்தஞ்செய்ய வல்லமை யுள்ளவனல்லவா? எனது பக்தர்களுடைய பந்துக்களும் எவ்விடங்களில் ஜ்ஞானபூர்வகமாய்த் தியானிக்கின்றவர்களும்

ரத்னவிமானமூர்ந்து துர்லபமான கோலோகத்தை யடைவார்கள். எந்தெந்தவிடத்தில் என்பக்தர்களின் சம்பந்த முண்டாகிறதோ அவ்விடத்தி லிருப்பவர்களெல்லாம் ஜீவன்முக்தர்களாய் விடுகிறார் கள். என்று கங்கையைப்பார்த்துக்கூறி பிறகு பாகீரதனைப்பார்த்து நீ கங்காதேவியைத்தஞ்சித்து பக்தியோடு பூசையும் செய்யென்று ஆக்ஞாபிக்க அவ்வாறே பகீரதன் பூசித்து பக்தியோடு கவுதமரால் கூறியுள்ளதியானத்தினாலும் தோத்திரத்தினாலும் அடிக்கடி பரமாத்மாவான கிருஷ்ணபகவானை நமஸ்கரித்தான். பிறகு யாவரும் தங்களிடத்துக்குச் சென்றார்கள் என்றனர். நாரதர் எந்தப் பூஜாக்கிரமத்தினால் எந்தத் தோத்திரத்தினால் கங்காதேவியைப் பூசித்தாரென்ற விவைகளைக் கூறியருளுமென்ன நாராயணர் கூறுகின்றார்:—

நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்து கணேசன் சூரியன் வன்னி விஷ்ணு சிவன் தேவி இவர்களைப்பூசித்துப் பிறகு இஷ்ட தேவதையைப் பூசிப்பதற்கு அதிகாரியாகவேண்டும். கணேசரை விக்னங்களை நாசஞ்செய்வதற்கும், சூரியனை ஆரோக்கியத்திற்கும் அக்னியைப் பரிசுத்தத்திற்கும், விஷ்ணுவைசம்பத்துக்கும், சிவனை ஞானத்திற்கும், தேவியை மோக்ஷத்திற்கும் பூசித்தால் கெடுதி சேரிடாமல் தியானம் முடியும் என்றனர். (சு-ம்-75)

பதினொன்றும் அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீகணேசாய நமஃ

பன்னிரண்டாம் அத்தியாயம்.

கங்கா ஸ்வரூபாதி.

நாராயண சகலபாபத்தையும் போக்கும்படியான கண்ணுவ சாகையிலுள்ள கங்காதேவியின் தியானத்தை நாரதரே கேட்பீராக என்று கூறுகின்றார்:—

(தியானம்) வெண்டாமரைபோலும் நிறமுள்ளவளாகவும், பாபங்களை நிவர்த்திக்கின்றவளாகவும், கிருஷ்ணருடைய சரீரத்தில் தோன்றி அவருக்குச் சமானமானவளாகவும், பவித்ரதையாகவும்,

வன்னிசுத்தமான வஸ்திரங்களாலும் ரத்னபூஷணங்களாலும் அலங்கரிக்கப் பட்டவளாகவும், நூறுசரத்கால சந்திரனைப்போல் பிரகாசிக்கின்றவளாகவும், புன்சிரிப்புள்ளவளாகவும், எப்போதும் விளங்கும் யௌவனமுள்ளவளாகவும், நாராயணருடைய பிரிய முள்ளவளாகவும், சாந்தையாகவும், சௌபாக்கியத்தோடு கூடினவளாகவும், மாலதி புஷ்பமுள்ள கூந்தலுள்ளவளாகவும், சிந்தூரப் பொட்டினுல் மனோகரையாகவும், சந்தனப்பொட்டோடு கூடியிருக்கிற நாஸிதமான கஸ்தூரிப்பொட்டை நெற்றியி லணிந்தவளாகவும், பக்குவமாய்ப் பழுத்த கோவைக்கனிபோன்ற அதரமுடையவளாகவும், முத்துவரிசைபோன்ற பல்வரிசையினுல் பிரகாசிக்கின்ற முகமுள்ளவளாகவும், கடாக்ஷத்தோடு கூடின மனோகரமான நேத்திரமுள்ளவளாகவும், கடினமாயும் பில்வபழம்போன்ற ஸ்தனங்களுள்ளவளாகவும், மென்மையான இடையுள்ளவளாகவும், வாழைமரத்தை நிந்திக்கிற தொடையுள்ளவளாகவும், பாதுகையோடுகூடிய தாமரைமலர்போன்ற திருவடியுள்ளவளாகவும், குங்குமப்பூச்சும் மருதாணிப்பற்றும் உடையவளாகவும், இந்திரன் முடியிலுள்ள மந்தார புஷ்பத்தினுடைய ரசத்தினுல் செவந்தபாத முள்ளவளாகவும், தேவர்களாலும் முனிவர்களாலும் சித்தர்களாலும் கொடுக்கப்படும் அர்க்கியத்தை ஏற்பவளாகவும், தபஸ்விகளுடைய சிரசாகிற வண்டுக்கூட்டங்களோடு கூடினவளாகவும், முமுக்ஷுக்களுக்கு மோக்ஷத்தையுங் காமிகளுக்கு சர்வசுகத்தையும் பகதர்களுக்கு அநுக்கிரகத்துடன் வரத்தையும் கொடுப்பதில் சிறந்தவளாகவும். விஷ்ணுபத (வியாபகஸ்தான) த்தில் தோன்றினவளாகவும் விஷ்ணுபதியென்னும் பெயருள்ளவளாகவும் இருக்கின்ற கங்காதேவியை நமஸ்கரிக்கின்றேன்.

இந்தத் தியானத்தினுல் கங்காதேவியைத் தியானித்து ஆசனம் பாத்யம் அர்க்கியம் ஸ்நானீயம் அநுலேபனம் தூபம் தீபம் நைவேத்தியம் தாம்பூலம் சீதளசலம் வஸ்திரம் பூஷணம் மால்யம் கந்தம் ஆசமனீயம் முதலாயுமுள்ள படுக்கைஆகிய பதினறு உபசாரங்களைச் செய்தபின்பு தோத்திரமும் நமஸ்காரமும் செய்தல் வேண்டும்.

(தோத்திரம்) பாபத்தை நசித்துப் புண்ணியத்தை விருத்திசெய்ய வல்ல சிவபிரானுடைய சங்கீதத்தில் மோகமடைந்தவளாயும், கிரு

ஷ்ணமூர்த்தியினுடைய அங்கத்திலும், ராதாதேவியினது சரீரத்திலும் சலரூபமாகப் பிறந்தவளாயும் இருக்கின்ற கங்காதேவிக்கு நமஸ்காரம். ராதாதேவியிடமிருந்து எந்தத்தேவியினது ஜனனம் சிருட்டிக்கப்பட்டு ராசாமண்டலத்திலும் சிவசங்கர சந்நிதானத்திலும் பூலோகத்திலும் உண்டாயிருக்கிறதோ அந்தக் கங்காதேவியை நமஸ்கரிக்கிறேன். கோபாலர்களாலும் கோபிகா ஸ்திரீகளாலும் செய்யப்பட்ட சுபமான ராதாமகோத்ஸவ தினமாகிய கார்த்திகை பௌர்ணமியில் எந்தத்தேவி உற்பத்தியானாளோ அந்தக் கங்காதேவிக்கு நமஸ்காரம். கோடியோஜனவிஸ்தாரமும் கோடியோசனை ஆழமும் லக்ஷம்கோடியோஜன நீளமுமுள்ளவளாய் கோலோகத்தைச்சூழ்ந்துகொண்டிருக்கிற கங்காதேவிக்கு நமஸ்காரம். அறுபதுலக்ஷம் யோசனை அகலமும் அதற்கு நான்குபங் கதிகங் கொண்ட நீளமுமாக எந்தத்தேவி வைகுண்டத்தில் நிறைந்திருக்கின்றனளோ அந்தக்கங்காதேவிக்குநமஸ்காரம். மூப்பதுலக்ஷம்யோசனைவிஸ்தாரமும் அதற்கு ஐந்துகொண்ட நீளமுமுள்ளவளாகஎந்தத்தேவி பிரமனுலகிலிருக்கின்றனளோ *** மூப்பதுலக்ஷம் யோஜன அகலமும் அதற்குநான்கு கொண்ட நீளமுமுள்ளவளாக சிவலோகத்தில் *** லக்ஷம்யோஜன அகலமும் அதற்கேழுகொண்ட நீளமுமாகதிருவமண்டலத்தில்எந்தத்தேவி *** லக்ஷம்யோசனை அகலமும் அதற்கைந்துகொண்டநீளமுமாக சந்திரமண்டலத்தில் *** அறுபதினாயிரம்யோசனை அகலமும் அதற்குப் பத்துகொண்டநீளமுமாக சூர்யமண்டலத்தில் *** லக்ஷம் யோஜன அகலமும் அதற்குஐந்து கொண்டநீளமுமாகத்தபோலோகத்தில் *** ஆயிரம்யோஜன அகலமும் அதற்குப் பத்துகொண்ட நீளமுமாக சனர்லோகத்தில் *** பத்துலக்ஷம் யோசனை அகலமும் ஐம்பதுலக்ஷம் யோசனை நீளமுமாக மகாலோகத்தில் *** ஆயிரம்யோசனை அகலமும் லக்ஷம்யோசனை நீளமுமாக கைலாயத்தில் *** நூறுயோசனை அகலமும் ஆயிரம்யோசனை நீளமுமாக மந்தாகினி என்னும் பெயருடன் இந்திரலோகத்தில் *** பத்துயோசனை அகலமும் நூறுயோசனை நீளமுமாக போகவதியென்னும் பெயரோடு பாதாளத்தில் *** இரண்டுமயில் அகலமும் அதற்குக் குறைவாயும் அளகநந்தை என்னும் பெயரோடு பூமியில் கிருதயுகத்தில் பால்போலும், திரேதாயுகத்தில் சந்திரன்போலும் துவாபரத்

தில் சக்தனம்போலும், கலியில் சலம்போலும் * * * சுவர்க்கத்தில் எப்போதும் பால்நிறம்போலும் * * * ஏதன் திவலைபட்ட மாத்திரத்தில் பாபிகளுடைய பிரமஹத்தியாதி பாவங்கள் நீங்கிக்கியானசம் பத்துண்டாகிறதோ அந்த கங்காதேவிக்கு நமஸ்காரம்.

இவ்வாறு பாபத்தைப்போக்கிப் புண்ணியத்தையுண்டாக்குவ தான கங்கையின் தோத்திரசம்பந்தமான இருபத்தொரு சுலோ கங்கள் சொல்லப்பட்டன. இதனை எவனொருவன் சுரேஸ்வரியைப் பக்தியோடு பூஜித்துத் துதிக்கின்றானே அவன் பிரதிதினம் அஸ்வ மேதபலனை யடைகிறனென்பதில் சந்தேகமில்லை. மனவி புத்திரன் கீர்த்தி இவையில்லாதவன் அவ்வவற்றையும் அடைந்து கங்காஸ் நானபலனையும் அடைகிறன். ரோகி அரோகியாகின்றன். பந்திக்கப் படுகிறவன் கட்டினின்றும் விடுபடுகின்றன். மூர்க்கன் பண்டிதனாகி ன்றன். தற்சொப்பனமெல்லாம் சுபமாய்விடும். பகீரதன் இந்தத் தோத்திரத்தினால் கங்கையைச் சகரபுத்திரா விறந்தவிடத்துக் குக் கொண்டுபோயினன் அவர்கள்மீது அந்தக் கங்காதீர்த்தக் காற்றுபட்டமாத்திரத்தில் பரமபதமடைந்தனர்.

பகீரதனால்கொண்டுவரப்பட்டமையால் பாகீரதியென்று பெ யர்பெற்றது. இவ்வாறு புண்ணியத்தையும் மோக்ஷத்தையும் கொ டுக்கின்ற கங்கையின் உபாக்யானம் சொல்லப்பட்டது. மறுபடி என்னகேட்க விரும்புகின்றனை என்று வினவ நாரதர் உலகைப் பரிசுத்தஞ்செய்கிற கங்கை எங்கு எக்காரணத்தால் எப்படி திரிபத கை என்று பெயர் பெற்றனள்? அவ்விடமிருப்பவர் யாவர்? அவர் கள் என்னசெய்தார்கள்? எனக்கு இவற்றைவிஸ்தாரமாகச்சொல்ல வேண்டுமென்று வினவ நாராயணர் கூறுகின்றார்:—

கார்த்திகை பௌர்ணமியில் ராதைக்கு மஹோத்ஸவம் நடந் தது. அப்போது கிருஷ்ணன் அவளைப்பூசிக்க பிரமாமுதலான வர்களும் சனகாதிருஷிகளும் ஆராதித்து சந்தோஷமடைந்திருந் தனர். அவ்வாறிருக்குங் காலத்தில் கிருஷ்ணனால் கட்டளையிடப் பட்ட சரஸ்வதி சுந்தரதாளத்தோடு வீணையினால் மனோகரமாகப் பாடினன். பிரமன் சந்தோஷமடைந்து சிரேஷ்டமான ரத்னஹா ரத்தையும், ருத்திரமூர்த்தி துர்பலமான மணியையும், கிருஷ்ணன் கவஸ்துவ மணியையும், ராதை விலையில்லாத ரத்னஹாரத்தையும்

நாராயணர் மனோகரமான மாலையையும், லக்ஷ்மி விலையில்லாத ரத்னகாதோலையையும், விஷ்ணு மாயையும் துர்க்கையும் நாராயணியும் மூலப்பிரகிருதியும் பகவதியும் ஈசானியமானவர்கள் பிரமபக்தியையும் தர்ம புத்தியையும், யமன் கீர்த்தியையும், வன்னி வன்னிசுத்தமான வஸ்திரத்தையும் வாயு மணிநூபுரங்களையும் கொடுத்தார்கள்.

இவ்வாறிருக்கப் பிரமாவினுல் பிரார்த்திக்கப்பட்ட உருத்திரமூர்த்தியானவர் ராதோல்லாசத்தோடு கூடின சங்கீதத்தைப்பாட சகலதேவர்களும் சித்திரம்போல் மூர்ச்சித்து வருத்தப்பட்டுதெளிந்து எங்கும்சலமயமாகவும் கிருஷ்ணனும்ராதாவும் இல்லாமையாகவும் இருப்பதைக்கண்டனர். எல்லாக்கோபர்களும் கோபிகளும் தேவர்களும் அழுதனர். ராதா கிருஷ்ணன் சலமாய்விட்டார்களென்று பிரமன் தியானத்தினுலறிந்தனன். பிறகு பிரமன் முதலிய தேவர்களெல்லாம் பரமேஸ்வரனைக்குறித்து உம்முடைய திருவுருவை காட்டும். அதுவன்றே நாங்கள் விரும்புவதென்று சொல்லும்பொழுது மதுரமாயும் தெளிவாயும் யாவரும்கேட்கும்படி அசரீரிகூறுகின்றது:—"நான் சர்வாத்மாவாயுள்ளவன். இந்தச்சக்திபக்தானுக்ரகாரணமானசரீரமுள்ளவர். எங்களிருவருடைய சரீரங்களால் உங்களுக்காகவேண்டியவையாவை? மதக்களும் மதுடர்களும் முனிவர்களும் வைணவர்களும் எங்களுடைய மந்திரோச்சாரணையால் பரிசுத்தமெய்தி எங்களது பதத்தையடைவர். எங்களைப் பார்க்க விரும்புவீர்களாயின் சம்புவானவர் தேவசபையில் விஷ்ணுமாயையோடுகூடி எல்லாப்பலனையும் கொடுக்கவல்ல அபூர்வமானமந்திரங்களையும், தோத்திரங்களையும், தியானசுலோகங்களையும், பூஜாவிதிக்கிரமங்களையும், கவசங்களையும், உத்தமசாஸ்திரங்களையும், வேதாங்கங்களையும், வேதசாரத்தையும், சிருட்டித்து குருவாயிருந்து காப்பாற்றுகின்றேனென்று திடமானபிரதிக்ஞை செய்வாராஞல் உங்களெண்ணம் நிறைவேறும். எவர்கள் பக்தியில்லாதவர்களோ அவர்கள் என்விஷயமான தோத்திராதிகளைச்செய்யார். அவைகளை அநுட்டித்து உபாசிப்பவர் நூற்றிலொருவர், ஆயிரத்திலொருவரேயாம். என்மந்திரத்தினுல் பரிசுத்தமானவர் என்னுடைய லோகத்தை அடைவர். கோலோகத்தில் வசிப்பவரெல்லாம் மந்திர உபாசனைகளால் வந்தவரேயன்றி வேறல்லர். இம்மந்திரோபாசனையில்லாவிட்டால் பிரமாண்டமெல்லாம் பிரயோஜனமற்றதாகும். சிருட்டி

தோறும் மானிடர்களோடுசுகமாகச்சிருட்டித்து சிலரைச்சுவர்க்கத்திலும், சிலரைப்பூமியிலும், வசிக்கச்செய்வாய்."என்றுகூறியது.

அதனைக்கேட்ட பிரமன் ஈஸ்வரரிடஞ்சொல்ல ஞானேசனாகிய சிவபெருமான் கேட்டு எவன் கங்காசலத்தைக் கையிலெடுத்துப் பொய் சொல்லுகின்றனோ அவன் பிரமாவுக்கு வயது எவ்வளவோ அவ்வளவுகாலம் காலசூத்திர நரகையடைவன் என்று கங்காசலத்தைக் கையிலெடுத்து அசரீரி கூறியவண்ணம் பிரதிக்ஞை செய்ய கிருஷ்ணமூர்த்தி ராதையோடும் ஆவிர்ப்பவித்தனர். அவரைத் தேவர்கள்பார்த்துப் பரமானந்தமெய்தி மீண்டும் உற்சவஞ் செய்தனர். பின்னர் சம்புவானவர் ரகசியமானதாயும் துர்லபமானதாயு முள்ள முத்திதீபமென்னும் நூலொன்றியற்றினர்.

சலரூபமாய் கோலோகத்தில் வசிக்கிறவளாயும் ராதாகிருஷ்ணர்களிடம் பிறந்தவளாயும் புக்திமுக்தியைக் கொடுக்கின்றவளாயும் கிருஷ்ணசொரூபிணி யாயுமுள்ள அந்தக்கங்கை பரமாத்மாவினல் அங்கங்குந் தாபிக்கப்பட்டு பிரமாண்டத்தில் எங்கும் பூஜிக்கப்படுகின்றனள் என்றனர். (சு - ம் - எசு)

பன்னிரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

ஊ

காலஹந்திரைகமஃ

பதின்மூன்றும் அத்தியாயம்.

கங்கா வைகுண்ட கமனம்.

நாரதர், ஓ சுரேஸ்வரரே! ஐயாயிரவருடம் கலியில்கழியும் போது அந்தக்கங்கை எவ்விடத்திற்குப்போனள்? அதை எனக்குச் சொல்லவேண்டுமென்றுவினவ,நாராயணர்கூறுகின்றனர்:—சரஸ்வதி சாபத்தினல்பாரதவருஷத்தையடைந்த கங்கை, சாபமுடிவில் வைகுண்டத்தையடைந்தனள். அவ்வாறே சரஸ்வதியும் பத்மாவதியும் வைகுண்டமடைந்தனர். விஷ்ணுவுக்கு கங்கைசரஸ்வதி இலக்குமி துளசியென்றுநான்குமனைவிகளன்றனர்.நாரதர் எக்காரணத்தினல்

அந்தக் கங்காதேவி விஷ்ணுபாதத்தி லுண்டானவளென்றும், பிரமன் கமண்டலத்தி லுண்டாவனவளென்றும், சிவபெருமானுக்குப் பிரியமானவளென்றும், நாராயணனுக்கும் பிரியமானவளென்றும், சொல்லப்படுகிறுள் என்றுவினவ நாராயணர் கூறுகின்றூர்:—

முன்காலத்தில் கோலோகத்தில்ராதாகிருஷ்ணனுடைய சரீரத்திலிருந்து சலரூபமாகவுண்டான கங்கை ராதாகிருஷ்ணும்சமாயும், ஜலத்துக் கதிதேவதையாயும் எவ்விதத்தும் உவமை சொல்லுவதற்கரிய சர்வாங்க சுந்தரமுடையவளாயும் காமத்தோடு கூடினவளாயும் கிருஷ்ணனுடைய சமீபத்தில்வந்து நாணமுடையவளாய் வஸ்திரத்தினுல் முகத்தைமறைத்துக்கொண்டு கண்களால் அவரது முகத்தை இமைகொட்டாமல் பார்த்து அவரது சௌந்தரியவிசேடத்தினுல் மயங்கி மோகங்கொண்டு புணர்ச்சியி லாவலுள்ளவளாய் ரோமங்கள் சிலிர்சிலுக்க மூர்ச்சித்தனள். அச்சமயத்தில் அங்கு ராதிகாதேவி, சண்பகமலர்போன்ற மேனியும் யானைநடைபோன்ற நடையும் உடையவளாய்விலையில்லாத ரத்னங்களாலிழைக்கப்பட்ட நானவிதபூஷணங்களால் அலங்கரிக்கப்பட்டவளாய்இரண்டுபீதாம்பரங்களை இணைத்துத்தரித்தவளாய் சிந்தூரம் சந்தனம் கஸ்தூரிகளால் இடப்பட்ட மூன்றுபொட்டுடையவளாய் பரிமள மிக்க பாரிஜாதமலர்நிறைந்த கூந்தலுடையவளாய் கோடிசந்திரர் ஏககாலத்தில் தோன்றினுற்போல் தோன்றி, மேன்மையும் சிகப்பும்வாய்ந்து கிருஷ்ணமூர்த்தியினுல் கொடுக்கப்படும் அர்க்கியசலத்தை ஏற்றுமுள்ள பாதாம்புஜங்களை அடிக்கடி பையப்பையவைத்து, சிறந்த ரத்ன விமானத்தினின்றும் இறங்கி, ருஷிகளும்ஸ்திரீகளும் இருபக்கத்தும் சாமரைவீசவும்,மூப்பதுகோடி கோபிகாஸ்திரீகள்சூழ்ந்து வரவும், கோபத்தோடு கண்சிவந்து உதடுதுடிக்க கிருஷ்ணமூர்த்தியினுடைய சமீபத்தி லிருக்கின்ற சிங்காதனத்தில் வீற்றிருந்தனள். அத்தேவியைக் கிருஷ்ணன்பார்த்து சடுதியில் எழுந்து இனியவார்த்தைகளால் இனிப்புண்டாகப்பேசிப் புன்சிரிப்போடும் புகழ்ந்துகொண்டிருக்க, அங்கிருந்த கோபிகளும் மிகவும்பயந்து வணங்கியகழுத்துடன் பக்தியோடு துதித்தனர். கங்கையானவள் சிக்கிரமா யெழுந்து குசலப்ரஸ்னஞ்செய்து தாழ்ந்த இடத்தில் நின்று பயந்தவளாய் உலர்ந்தநெஞ்சும் தாடையும் உதடுமுள்ளவளாய் கிருஷ்ணனுடைய பாதத்தில் தியானத்துடன் சரணமடைந்து துதித்தாள். கிரு

ஷ்ணமூர்த்தி அவளுக்கு அபயங்கொடுக்க நிம்மதியான மனமுடையவளாயினள்.

பிறகு கோபத்துடனிருக்கும் ராதேஸ்வரியை இமைகொட்டாது கங்கைபார்த்து மனவாட்டத்தோடு நிற்க, ராதைசாந்தையாய்ப்புன்சிரிப்புடன் ஜகதீசனைப்பார்த்துக்கூறுகிறாள்:—ஓ ஜகதீசனே! உன்முககமலத்தையும் உன்னழகையும் புன்சிரிப்போடுகண்டு மூர்ச்சையடைந்துவஸ்திரத்தினால் முகத்தை மறைத்துக்கொண்டுன்னை அடிக்கடிபார்க்கும் இவள்யார்?நீரும் அவளைப்பார்த்துக் காமுகராய்ப்புன்சிரிப்புடனிருக்கின்றீர். நானிருக்கும்போதேஇப்படிப்பட்டதுர்நடத்தையைஅடிக்கடி செய்துவருகின்றீர். நான் உம்மிடம் வைத்தபிரீதியினால் பொறுமை யடைகிறேன். ஸ்திரீசாதிகள் இளகியமனமுடையவரென்றும், அல்பத்துக்கெல்லாம் ஆசைப்படுகின்றவர்களென்றும் சொல்வது மெய்யே. ஓ பிரபுவே! இனி நீர் மோகித்திருக்கும் மனிவியை அழைத்துக்கொண்டு இக்கோலோகத்தைவிட்டுப் போகாதிருப்பீராயின் உமக்கு நன்மையுண்டாகாது. நீர் முன்னர் சந்தனவனத்தில் விரஜையோடு கூடியிருக்கும் போது நான் பார்த்தேன். அப்போது தோழிகளுடைய வசனத்தால் பொறுமையடைந்திருக்க என்வரவையறிந்து மறைந்து விட்டீர்.

அந்த விரஜையோகோடியோசனை விசாலமும்நான்குகோடியோசனை நீளமுமுள்ள நதிரூபமாய் விட்டாள். அவளும் இப்போது இங்கு வந்திருக்கிறாள். நான் அந்தப்புரத்துக்குப்போகும்போதுநீர் விரஜை விரஜை யென்று கூச்சலிட்டுக்கொண்டு அழுதீர். அவ்விரஜை சலரூபத்தைவிட்டு அலங்காரத்தோடுகூடினவளாய் உன்னிடம் வர நீர்கூடிக்கலந்தீர்.ஒருக்கால் சண்பகவனத்தில்சோபையென்னும் கோபியோடு கூடினீர். அப்போதும் நான் காண என் சப்தத்தைக் கேட்டு மறைந்து விட்டீர். அவள் சந்திர மண்டலத்தை யடைந்து சந்திரகாந்தியாய் விட்டாள். நீர்மனவருத்தமுற்று அவளிடத்தில் வைத்த ஆசையால் அவளுடைய காந்தியை வேறு வேறுகப் பிரித்து ரத்தினம் பொன் மணி ஸ்திரீகளுடைய முகம் அரசன் தளிர் பத்திரம் புஷ்பம் பழம் பயிர் ராஜகிருகம் தேவகிருகம் கோட்டை முதலியவற்றிற் கலந்திருக்கும்படிச் செய்து அவைகளைக்கண்டுமகிழ்ந்தீர்.ஒருகாலத்தில் பிருந்தாவனத்தில் பிரபை யென்னும் கோபியோடு கூடியிருந்தீர். அப்போதும் பார்த்தேன். நீர் என்வரவையறி

ந்து மறைந்து விட்டீர். அவள் சூரியமண்டலம்போய் தேஜோ ரூபமாய்விட்டாள். அப்போதும் நீர் அவளுடைய தேஜசைக் கண் ணிடத்திலும் அக்கினி யிடத்திலும் யக்ஷர் கிம்புருடர் புருஷ சிரேஷ்டர்கள் வைணவர்கள் சர்ப்பங்கள் பிராமணர்கள் முனிவர் கள் தபஸ்விகள் சௌந்தர்யமுள்ள ஸ்திரீகள் கீர்த்தியுள்ளவர்கள் இவர்களிடத்திலும் கலந்திருக்கும்படிச்செய்தும் பார்த்தும் ஆசை யடங்காது வருத்தப்பட்டீர். ஒருகாலத்தில் ராசாமண்டலத்தில் வசந்த காலத்தில் ரத்னகிருகத்தில் சாந்தியென்னும் கோபிகைக்கு ரத்ன தீபங்களோடு கூடிய புஷ்பப்படுக்கையில் நீர் சந்தனம் ரத்ன பரணமுதலியவற்றை கொடுக்கவும், அவள் உமக்குத் தாம்பூலமும் கொடுக்கத்தரித்துக்கொண்டிருக்குஞ்சமயத்தில் நான்வரவென்சப்த த்தைக்கேட்டுமறைந்தீர். அவள்உன்னிடம்மறைந்துசற்குணசொரூ பியாயினள். நீர் வருத்தத்தோடு அவளை ஆரண்யம் இலக்குமி இய மன் மந்திரோபாசனை செய்கின்றவர்கள் தபஸ்விகள் தர்மிஷ்டர் கள் இவர்களிடத்துச்சிறிதுசிறிதாய் வசிக்கும்படிச்செய்தீர். ஓர்கா லத்தில் க்ஷமை யென்னும் கோபியுடனிருந்தீர். அதையும் நான் காண நீர் என்வரவையறிந்து அந்தப்புரத்திற் சென்று அவளோடு கூட சந்தனப்பூச்சுகளாலும் புஷ்பத்தினாலும் அலங்கரிக்கப்பட்ட படுக்கையில் மெய்மறந்து இருவருக்கும் உண்டாகிய புதிய சங்கம த்தினால் தூங்கி விட்டீர்கள். நான் உங்களிருவரையும் எழுப்பி னேன். அதனைமறந்திருப்பீர்; எண்ணிப்பாரும். எழுந்தபின்னர் நீர் அணிந்திருந்த பீதாம்பரம் முரளிவனமாலை கவுஸ்துவமணி இரத் னகுண்டலம் இவையெல்லாம் பிடுங்கிக்கொண்டேன். தோழியினு டையவார்த்தையினால் மீண்டும் கொடுத்து விட்டேன். அப்பொ ழுது நீர் மிகவும் பயந்து கிருஷ்ணவர்ணத்தையடைந்து வெட்கத் துடன் ஓதுங்கினீர். க்ஷமையும் தேகத்தைவிட்டு பூமியோடு கல ந்து சிறந்தகுணமுடையவளானாள். நீர் அழுதுகொண்டே விஷ்ணு வைணவர் தார்மிகர்கள் தருமம் துர்ப்பலர் தபஸ்விகள் தேவர்கள் பண்டிதர் இவர்களுக்கும் பிரித்துக்கொடுத்தீர். உம் முடைய குணத்தையும் செய்கையையும் நானறிவேன் என்று சொ ல்லிவெட்கத்தோடு தலைவணங்கியிருக்கும்கங்கையைப்பார்த்தனள். அதையறிந்த கங்கையானவள் சலத்தில்மறைந்தனள். ராஜித அந்நீரைப்பானஞ்செய்து கொப்பளிக்கபத்தனித்தாள். கங்கை கிரு

ஷ்ணன்பாதத்தைச் சரணமடைந்துமறைந்தனள். ராதை அக்கங் கையைக்காணுமல் எங்குந்தேட சலாதாரமுள்ள இடமெல்லாம் சலமின்றியும் சலசெந்துக்கள் இறந்திருப்பதையும் பார்த்தனள். திரிமூர்த்திகள் முதலிய தேவர்களும் ஆதிசேடன் முதலிய நாக லோகவாசிகளும் மதுக்கள் முனிவர்முதலிய பூலோகவாசிகளும் நெ ஞ்சலர்ந்தவர்களாய்கோலோகமடைந்து பிரகிருதிபரமாயும் ராதை யின் வக்ஷஸ்தலத்திலிருக்கிறவருமான பகவானை நமஸ்கரித்துத் துதித்து ஒருவரையொருவர் பார்த்து யாவரும் பிரமனைநோக்கி நமது அபிப்பிராயத்தைப்பிரபுவுக்குத்தெரிவித்தீராவென்றுசொல் லபிரமன், திருமால் உருத்திரருடன் பகவானைச்சமீபித்துப்பார்க்க, அவர் அநேகராகத்தெரிய மதிமயங்கி இவருள்ளவர்சேவிக்கத்தக்க வர், எவர்சேவகர் என்று நிரூபிக்கச் சக்தியற்றவனு யிருக்கும் அப்பொழுதே ஒருக்ஷணகாலம் தேஜோமயமாயும், ஒருக்ஷணகா லம் உருவமுள்ளவராயும், ஒருக்ஷணம் ராதையோடும், ஒருக்ஷணம் தனித்தும், ஒருக்ஷணம் ராதாரூபத்தைத்தான்தரித்தும், தன்னுரு வத்தை ராதைதரித்தும், இருக்கக்கண்டு அந்தப்பகவான் இந்தப் புருஷரூபமா இந்தஸ்திரீவுருவமா என்றுதியானிக்கவும் சக்தியற்று ஞானதிருஷ்டியினல் ஹ்ருதயகமலத்திலிருக்கிற கிருஷ்ணனைத் தியானித்துப்பக்திரோடுதுதித்தனர்.அப்போதுராதையின்வக்ஷஸ்த லத்திலிருக்கிற கிருஷ்ணர் தெரிசனமாயினர். அவர் பிரமன் முதலி யோரது அபிப்பிராயத்தையறிந்து நீங்களனைவரும் சுகமா? உங் கட்கு அடிக்கடி சுபமுண்டாகுகவென் றுசீர்வதித்து ராதையினு டைய பயத்தால் என்பாதத்தில் மறைந்திருக்கிற கங்கைவெளிப் படின் அவளை வாயினுண்டுமிழ ராதை எதிர்பார்த்துக்கொண்டிருக் கிறாள்; அவளை உங்களிடம் கொடுத்துவிடுகிறேன், அவளைப்பய மில்லாமல் இருக்கச்செய்யுங்க ளென்றனர். அவ்வார்த்தையைக் கேட்டபிரமன் ராதாதேவியை நோக்கி வேதவாக்கியங்களால் துதி த்து கங்கை ராசமண்டலத்தில் உங்களிருவரிடமிருந்து தோன்றின வளல்லவா? முன் உருத்திரர் பாடியவீணஸ்வரத்தால் மெய்மறந்து போனபோது உங்களிடத்தில் சலரூபமாகவெளிப்பட்டவளல்லவா? ஆகையால் இவள் கிருஷ்ணருடைய அம்சமாயிருக்கின்ற உன் பெண்ணல்லவா? இந்தக் கங்கை எந்தெந்தலோகத்தில் எந்தெந்த பெயருட னிருப்பினும் உன்பெண்ணேயாம், ஆகையால் அவள்

உனதுமந்திரத்தைக் கிரகித்துப் பூசிக்கக்கடவள் என்றுகூற, ராதை புன்சிரிப்புடன் சமாதானமடைந்தனள். உடனே கங்கை கிருஷ்ண மூர்த்தியினுடைய காலின் கட்டைவிரலி லிருந்து வெளிவந்தனள். பிரமன் அந்தகங்காசலத்தில் சிறிது எடுத்து தன் கமண்டலத்தில் அடைத்துக்கொண்டு ராதிகாதேவியினது மந்திர பூஜா ஸ்தோத்திர கவசாதிகளையும் சாமவேதத்தில் கூறப்பட்டுள்ள புரச்சர்யாதிகளையும் உபதேசிக்க, அவைகள் கங்கை அநுஷ்டித்து விஷ்ணு லோக மடைந்தனள். ஆதலால் இலக்குமி சரஸ்வதி கங்கை துளசி இந்த நால்வரும் விஷ்ணுபத்தினிகள்.

ஓ பிரமனே! இப்பொழுது ஜலப்பிரளயகாலம். தேவர் முனிவர் முதலான யாவரும் என்னிடக்காண இங்குவந்திருக்கின்றபடியால் அழியாதிருக்கின்றனர். எத்தனையோ பிரஹ்மவிஷ்ணுக்கள் என்னிடத்தில் இலயத்தை யடைந்திருக்கின்றனர். நானேபிரமனுப்பிரபஞ்சங்களைச் சிருஷ்டித்திருக்கிறேன். இங்கு பிரளயகாலங்கள் என்றுசொல்லப்படுவதாகிய காலக்கிரமங்கள் கிடையா. இன்னும் அனேகப்பிரளயங்கள் வரப்போகின்றன. இனி நீ எல்லாவுலகங்களையும் சிருஷ்டிசெய்யக்கடவாய். கங்கை உன்னிடம் நான்சொன்னபடியே வருவாள் என்றனர். (சு-ம் கஉசு.)

பதின்மூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

காமேஸ்வரை நமஃ

பதினைன்காம் அத்தியாயம்.

* கங்கா விஷ்ணுவோஸ்ல வம்மத்த காரணம்.

நாரதர், கங்கை வைகுண்டம் போனாளென்று கூறினீரே யல்லாமல் மனுஷ்யான விஷயத்தைக் கூறினீரல்லை என்று நாராயணரைக்கேட்க, அவர் கூறுகின்றார்:—

ஓ நாரதரே! கங்கை வைகுண்டம் போனபோது பிரமனும் அங்கு சென்று வைகுண்டநாதரை நமஸ்கரித்து, இதோ வந்தி

* கங்கைக்கும் விஷ்ணுவுக்கும் சம்பந்தகாரணங் கூறல்.

ருக்கின்ற கங்காதேவியைப்பார்த்தீரா! என்று அவளைப்பற்றி கோலோகத்தில் நடந்தவைகளை விரிவாகக்கூறி அவள் மிகவும் ரசிகமுடையவள். நீரும் எங்களிலுஞ்சிறந்த ரசக்ஞர். ஆகையால் இவளை அழைத்துவந்தேன். காந்தர்வ விவாகத்தினால் மனைவியாகக் கொள்ளவேண்டும். இவள் உமக்கு வலிதிற் கிடைத்தவள். தானே கிடைத்த கன்னிகையை ஒருவன் கொள்ளாமற் போவானுயின் அவனிடம் இலக்குமி கோபங்கொண்டு நீங்குவாள். எனெனில் எல்லாஸ்திரீகளும் பிரகிருதியின் கலாம்சங்களாதலால் பண்டிதனுயுள்ளவன் அவமானஞ் செய்யான். ஆகையால் இவளை எவ்விதத்தும் தள்ளக்கூடாதென்று கூற அவர் காந்தர்வவிவாகத்தால் அவள்கையைப்பிடித்துக்கொண்டு சந்தோஷத்துடன் கிரீடித்தனர்.

அதனைக்கண்ட சரஸ்வதிதேவி துக்கமடைந்தும் இலக்குமியினல் தூண்டப்பட்டும் காடோறும் பொறுமைகொண்டும் சாபத்துக்கிடஞ்செய்து கொண்டனர் என்றனர். நாரதர் துளசியோடு நான்கு பத்தினிகளென்றீரே அவள் வரலாற்றைக் கூறவேண்டுமென்றனர். (சு-ம்-உகூ.)

பதினன்காம் அத்தியாயம் முற்றிற்று.

காமிதார்த்தாயை நமஃ

பதினைந்தாம் அத்தியாயம்.

* பிரஹ்மாதினும் வைகுண்ட கமனஞ்.

நாராயணர் கூறுகின்றார்:—தக்ஷஸாவர்ணி என்னும் மநு விஷ்ணுபக்தனுயும் அவருடைய அம்சபூதனுயுமிருந்தான். அவன் புத்திரன் பிரமஸாவர்ணி, அவன்மகன் தர்மசாவர்ணி, அவன்மகன் உருத்திர ஸாவர்ணி, அவன்மகன் தேவசாவர்ணி, அவன்மகன் இந்திரசாவர்ணி, அவன்மகன் விருஷபத்துவஜன். சிவபெருமானிடம் பக்தியுள்ளவன். இவனுக்கு முற்பட்டவர்கள் விஷ்ணுபக்தவர்கள். மூன்றுதேவயுகம் இவனது ஆச்சிரமத்தில் சிவபெருமான் வசித்திருந்தனர். இவனிடம் சிவபெருமானுக்கு மிக்கபிரியமுள்ளவர். இவன்

* பிரமன்முதலானவர்கள் வைகுண்டமடைதல் முதலானவை.

நாராயணன் இலக்குமிதேவி சரஸ்வதி தேவி முதலானவர்களை மனத்திலும் நினைத்தவனல்லன். தன்னுடைய ஆஞ்ஞையில் சகல தேவர்களுடையபூஜைகளையும் நிறுத்திவிட்டான். புரட்டாசிமாதத்தில் வரும் மகாலக்ஷ்மியின் பூஜையையும் மாகமாதத்தில்வரும் சரஸ்வதி பூஜையையும் விஷ்ணுபூஜையையும் யக்ஞத்தையும் ஒரு பொருளாக மதிக்காமலும் செய்யாமலும் இருந்தான். சூரியன் அவனிடத்தில் கோப முடையவனாய் சிவபெருமான் அவனுக்குக் காரணமாயிருக்கின்றா ரென்பதையும் எண்ணாமல் சம்பத்தில்லாத வனைக் கடவதென்று சபித்தனன்.

அதுகண்டபகவானாகியசங்கரர் சூரியனை சூலாயுதத்தால்துறத்த அவன் பிரமலோகமடைந்து பிரமன்முதலானவர்களோடு வைகுண்டஞ்சென்று நாராயணரைச் சரணடைந்து துதித்துத்தாங்கள்வந்த காரணத்தைக்கூற, அவர் அபயந்தந்து இனிச்சங்கரரால் பயமுண்டாகாது. அந்தப்பகவான் சர்வேஸ்வரர். பக்தர்களுக்குச் சுவாதீனமாயிருக்கின்றவர், பக்தர்களுக்கு ஆத்மாவாயிருக்கின்றவர். பக்தப்பிரியர், எனக்குப்பிராணனைக்காட்டிலும் பிரியமானவர், பிரமாண்டத்தில் அவரைக்காட்டிலும் தேஜஸ்விகிடையாது. அத்தமகாதேவர் லீலையாகவே கோடிசூரியரையும் கோடிபிரமரையும் சிருஷ்டிக்க வல்லமையுள்ளவர். அவருக்கு அசாத்தியமானகாரியம் உலகத்தில் ஒன்றுங்கிடையாது. நான்அவருடைகல்யாணகுணத்தைச் சிந்தித்துக்கொண் டிருக்கிறன். சிவன் மங்களத்துக்கு அதிஷ்டானமாயிருக்கிறபடியால் சிவனென்றும் கூறுகின்றார்கள். என்றுசொல்லும் பொழுது சூலஹஸ்தராய் ஈஸ்வரர் விருஷபத்தினின்றுமிறங்கி அங்குள்ள சுகாசனத்தில் வீற்றிருந்து யாவராலும் பூஜிக்கப்பட்டிருந்தனர். அவரை விஷ்ணுமூர்த்தி தேவரீர் கோபத்தோடும் இங்கு வந்தகாரணம் யாதோவென்றனர். சங்கரர் என்பக்தனாகிய விருஷபத்துவஜனைச் சூரியன் சபித்தான். அவனிங்குவந் திருக்கிறபடியினால் அவனைக்கொல்ல வந்தேனென்றார். என்பக்தனை சூரியனுடையசாபம் என்னசெய்யும்? இவன்சாபம் போகத்தக்க செல்வத்தைப் போக்குமேயன்றி போதலியறியாது எனதுபக்தியைப் போக்குமா? என்பக்தர்களுக்குச் செல்வமிருந்தாலென்! இல்லாதொழிந்தாலென்! செல்வத்தை அவர்களை வெறுக்கின்றார்கள். அதனைக் கொடுவென்று என்னைக்கேட்பதுமில்லை என்றுசொல்லவும், விஷ்ணு

வானவர் தேவரீர் கூறியது உண்மையே, தேவரீருடைய பக்தனுக்கு ஆயுள்முடிந்து, தேவரீருடையபதமடைந்தான், இனி அச்சூரியனைக் கொல்வதனு லென்னபயன், க்ஷமிக்கவேண்டுமென்ன அவர்வேண்டு கோளின்படியே கோபந்தணிந்து சென்றனர். நாரதரே! பின்னர் அந்த விஷ்ணுமூர்த்தி தேவர்களைப்பார்த்து அவன்புத்திரன் ரதத் துவஜனும் அரசாண்டு மரணமடைந்தான். அவன்புத்திரன்தருமத் துவஜன் குசத்துவஜனென்னு மிருவர் செல்வத்தில் ஆசையுடைய வர்களாய் என்னுடைய பக்தர்களாய் இலக்குமியைக்குறித்துத்தவம் புரிய அவள் அவர்களுக்குப் புத்திரியாகப்பிறந்து சகலசம்பத்தை யும் உண்டாக்க அவர்கள் அடைவார்கள் என்றுகூறி யாவருக்கும் விடைகொடுத்து அந்தப்புரஞ்சென்றனரென்றார். (சு-ம்-நிகழ)

பதினேந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

காம ஸஞ்ஜீவிந்யை நமஃ

பதினாறும் அத்தியாயம்.

* குசத்வஜ க்ருஹே மஹாலக்ஷ்மி ஜன்ம ப்ராப்தி.

நாராயணர் கூறுகின்றார்:—முற்கூறிய அவ்விருவரும் உக்கிர மான தபசினல் இலக்குமியைப்பூஜித்துத் தங்கள் இஷ்டப்படி வெவ்வேறு வரம்பெற்று மிக்கபிரபுவாயும் புண்ணிய வான்களா யும் புத்திரவான்களாயு மிருந்தனர். குசத்துவசன் பத்தினியான மாலாவதி இலக்ஷ்மி அம்சமான புத்திரியைப்பெற்றாள். அவள் சிறிதுநேரம்சென்றபின் ஞானவதியாய் வேதசப்தத்தை ஸ்பஷ்ட மா யுச்சரித்துக்கொண்டு சூதிகாகிருகத்தைவிட்டு வெளியே வந் தாள். பிறந்தபோதே வேத த்வனிசெய்தபடியால் அவளைப்பண்டிதர் வேதவதியென்றழைத்தனர் அப்பெண் ஸ்நானஞ்செய்து தவஞ்செய் யக் காட்டிற்குப் போகும்பொழுது பந்துக்கள் தடுத்தும் சென்று புஷ்கரக்ஷேத்திரத்தில் ஒருமன்வந்தரம் லீலையாகஉக்ரமான தவம்புரி ந்தனள். அவ்வாறுபுரிந்தும் தேகம் இலோக்காமலும் வருந்தாமலும் யெளவனவதியாயுமிருந்தாள். அப்பொழுது அசரீரி ஓ பெண்ணே!

---

* குசத்துவஜர் கிருகத்தில் இலக்குமி அவதரித்தல்.

உனக்கு மறுசன்மத்தில் விஷ்ணு பர்த்தாவாகவருவர் என்றுசொல்லிற்று. அதனைக்கேட்டுச் சந்தோஷித்து பின்னரும் கந்தமாதன பர்வதத்தில் நீண்டகாலமிருந்து தவம்புரிந்து பிறகு ஓர்க்ஷணகாலம் சிரமபரிகாரமாக சும்மாஇருந்தனள். அப்போது இராவணன் அவளெதிரேவர அவனுக்கு அதிருசியான பழமும் அதிசீதள்மானஜலமும் கொடுத்தாள். அப்பாபிஷ்டன் புசித்து உட்கார்ந்து நீயாரென்று கேட்டு அவளது பெருத்தபிருஷ்டபாகத்தையும் தனத்தையும் மற்ற அவயவங்களையுங்கண்டு மோகித்து அவளைக்கிரீடிக்க மூயன்றன். அப்பதிவிரதை கோபங்கொண்டு அவனைக் கைகால் திரும்பவொட்டாது தம்பிக்கச்செய்துவிட்டனள். அவன் ஊமையாய் மனத்தினுல் இலக்ஷ்மியைத் துதிக்க லக்ஷ்மிதேவி மனமிரங்கி முன்போல் செய்துவிட்டனள். அதைக்கண்டவேதவதி நீஎன்விஷயமாய் பந்துக்களோடு மரணமடைவாயென்று கூறித்தேகத்தைவிட்டனள். இராவணன் அச்சரீரத்தைக் கங்கையிலிட்டு என்னவேலை செய்தேனென்றழுதுகொண்டே தன்னிடம் போயினன். அந்த இலக்ஷ்மி காலாந்தரத்தில் ஜனகமகாராஜனுக்குப் புத்திரியாகப்பிறந்து சீதையென்னும் பெயரோடு அழகான இராமனைப் புருஷனைப் பெற்று அநேககாலங்கிரீடித்திருந்தனள்.அவர் பிதுர்வாக்கியத்தைப் பரிபாலிக்கக் காட்டிற்குப்புறப்படும்போதுசீதையும் இலக்குமணனும்வர, அவர்களோடு ஆரணிய சஞ்சாரஞ்செய்து கடற்கரையில் வந்தனர்.

அப்போது அக்கினிதேவன் பிராமணவுருவத்தோடு வந்து வருந்தும் இராமனைப்பார்த்து வருந்தி ஓ பகவானே! சீதையை அபகரித்துக்கொண்டு போகுங்காலஞ் சமீபித்திருக்கிறது. தெய்வச் செயலைத்தடைசெய்யமுடியாது. தெய்வத்தைக்காட்டிலும் பலமானது வேறுகிடையாது. லோகமாதாவான தேவியை என்னிடம் வைத்துவிடுவாய். நான் சாயாதேவியை உனக்குக்கொடுக்கிறேன். நீ அவளை வைத்துக்கொள்.இராவணன் செய்தி எல்லாம்முடிந்தபின் உன்னிடம்விடுகிறேன், நான் தேவர்களால் அனுப்பப்பட்ட அக்கினிதேவன் என்றுசொல்லவும், இராமர் இச்செய்தியை இலக்குமணருக்குத் தெரிவிக்கவில்லை. அக்கினிதேவன் சொல்லியதுபோல் மாயையால் சீதையைக்கற்பித்து இராமருக்குக்கொடுத்து விட்டு சீதையை அவரிடம் பெற்றுக்கொண்டு போம்போது ஓ ராமரே! இந்தரகஸ்யத்தை ஒருவருக்கும் சொல்லவேண்டாமென்று கூறிப்போனன்.இந்

தச்செய்தி இலக்குமணருக்கே தெரியாதென்றுல் வெறெவர்க்குத் தெரியும். இஃதிப்படியிருக்கப் பொன்மானைப்பார்த்து சீதையினது வேண்டுகோளைமுடிக்க ஸ்ரீராமர்சீதையை இலக்குமணருடைய காவலில்வைத்துவிட்டுமானின் பின்சென்று அடிக்கஅது இலக்ஷ்மண என்று கூச்சலிட்டு இறந்து விமானமூர்ந்து வைகுண்டமடைந்து துவாரபாலகருள் ஒருவனுய்விட்டது. சீதை இலக்குமணரை இராமரிடம்அனுப்ப அச்சமயத்தில் இராவணன் சீதையை இலங்கைக்குக் கொண்டுபோய்விட்டான். இராமரும் இலக்குமணனைப்பார்த்து சீதையைத் தேடிக்காணுமல் அழுதுகொண்டு காவிரிக்கரையிலிருக்கும்போது சீதையின் இருப்பையறிந்து வானரர்களைச் சகாயமாய்ச்சேர்த்துக்கொண்டு சமுத்திரத்தில்பாலங்கட்டி இலங்கையையடைந்து இராவணனைக்கொன்று சீதையைமீட்டு அவளை அக்கினி பரீக்ஷைசெய்யும்போது அக்கினிதேவன் தான்வைத்திருந்த சீதையை வெளிவரும்படிச்செய்தான். அப்பொழுது சாயாதேவி அக்கினியையும் இராமனையும்பார்த்து யான்போகும்வழியென்னவென்று கேட்க, நீ புஷ்கரத்துக்குச்சென்று தவம்புரிந்து சுவர்க்கலக்ஷ்மியாக ஆவாய் என்று உத்தரவுகொடுக்க, அவள் மூன்றுலக்ஷம் தேவவருடம் தவஞ்செய்து சுவர்க்க லக்ஷ்மியாயினள். பிறகு அவள் நீண்டகாலங்கழித்து யக்ஞகுண்டத்திற்பிறந்துபாண்டவர்களுக்குப் பத்தினியாயினள்.கிருதயுகத்தில் வேதவதியாயும் திரேதாயுகத்தில் சீதையாயும், துவாபரத்தில் திரௌபதையாயும் இருந்தபடியால் திரிகாயணியென்று பெயர்பெற்றுள் என்றனர். நாரதர் அவள் ஐந்து புருஷரைக் கொள்வதற்குக்காரணம் என்னையோவென்று வினவினர். நாராயணர் கூறுகின்றார்:—சாயாதேவி சங்கரரைக்குறித்துத் தவங்கிடந்து காமமுடையவளாய் சங்கரர் பிரத்யக்ஷமானபொழுது எனக்குப் பர்த்தா கொடு கொடு என்று ஐந்துதரம் கேட்டாள். சிவபெருமான் அவள் பிரார்த்தனையைக் கேட்டுப் பெண்ணே! நீ விரும்பியவண்ணம் உனக்கு ஐந்துபுருஷர்கள் வரப்போகின்றார்கள். என்று வரங்கொடுத்து மறைந்தனர். அதனல் பஞ்சபாண்டவர்களுக்குப் பத்தினியாயினள்.இவள் செய்தி யிங்ஙனமிருக்க, இராமர் விபீஷணனுக்கு இலங்கையைப் பட்டங்கட்டி சீதையோடு அயோத்திக்குச்சென்று பதினேராயிரம்வருடம் அரசாண்டு வைகுண்டம் போனர்.இலக்ஷ்மி அம்சமான வேதவதி இலக்ஷ்மியிடம்சேர்ந்த

னள். ஓ நாரதரே! வேதவதியினுடைய சரித்திரத்தைச்சொன் னேன். இனி தருமத்துவஜரின் பெண்ணினுடைய சரித்திரத்தைக் கூறுகின்றேன னென்றனர்.

பதினேழும் அத்தியாயம் முற்றிற்று.

ஷ

கல்யாயை நமः

பதினேழாம் அத்தியாயம்.

வேதவதிதுளஸ்யுபாக்கியானம்.

நாராயணர் கூறுகின்றார்:—தருமத்துவஜருடைய பத்தினியா கிய மாதவியென்பவள் அரசனோடு கந்தமாதனத்தில் புஷ்பசயனத் தில் சந்தனப்பூச்சுடன் மலர்மணங்கமழும் சந்தனக்காற்று வீச ரமித்திருந்தாள். இருவரும் சுரதக்கிரீடையில் அதிகரித்தவர்களாய் திருப்தியற்று நூறுதேவவருடம் இரவுபகல் தெரியாது இருந்தனர். ஒருநாள் அரசன் அரசாக்ஷியைநினைத்து அவளைவிட்டுப்போயினன். அவள்மாத்திரம் திருப்தியடையாமல் நூறுவருடம் கர்ப்பமாயி ருந்து கார்த்திகைபௌர்ணமி சுக்கிரவாரத்தில் புஷ்பநக்ஷத்திரத்தில் ஒருபெண்ணைப்பெற்றாள். அப்பெண்குழந்தை இலக்குமியாகையால் எல்லா அவயவங்களும் சுந்தரத்திற்சிறந்து அழகாய் விளங்கிற்று. அவ்வாறு ஒருவிதத்தினாலும்ஒப்புச்சொல்வதற்கில்லாமலிருந்தபடி யால் துளசி எனப்பெயர்பெற்றனள். அஃதாவது துள என்றால்— ஈடு.சி என்றால்-இல்லாதது என்பதுபொருள். பின்னர் அப்பெண் தவஞ்செய்பவெண்ணி பதரிவனஞ்சென்று மனதை நாராயணர் பர்த்தாவாகவேண்டுமென்னும் சங்கற்பத்தில் நிறுத்தி ஒருவஸ்து வையும் பாராமல் ஒரேகாலில் நின்று மழையில் நனைந்தும், வெயி லில் காய்ந்தும் பஞ்சாக்கினிமத்தியி னின்று கொளுத்தப்பட் டும் இருபதினாயிரம்வருடம் சலத்தையும் பழத்தையும், மூப்பதி னாயிரம்வருடம் இலைகளையும், நாற்பதினாயிரவருடம் வாயுவையும் புசித்துப், பதினாயிரம் வருடம் நிராகாரமாய்த் தவம்புரிந்தாள். அவளுக்குப் பிரமன் பிரத்யக்ஷமாய் ஓ துளசியே! உனக்கு ஹரியி

டும் பக்திவேண்டுமா? தாசத்தன்மை வேண்டுமா? அமரத்தன்மை வேண்டுமா? என்று கேட்க, துளசி நீர் எல்லாமறிந்தவராகையால் நான் வெட்கமடைய வேண்டுவதில்லை நான் கோலோகத்தில் கோபிகாஸ்திரீயாய் கிருஷ்ணனுக்கு இஷ்டையாயும் கிங்கரியாயும் தோழியாயும் மனைவியாயுமிருந்தேன், அவருடைய சம்போகத்தில் திருப்தியடையாமல் மோகமடைந்திருந்த என்னை ராதைபார்த்து கோவித்தனைமிரட்டி நீ மானுடயோனியை யடையக் கடவாயென்று சபிக்க பகவான் என்னை நோக்கி பூமியில் நீ தவங்கிடத்து பிரமாவின்வரத்தால் என் அம்சமும் நான்கு கையுமுள்ள புருஷனை அடைவாயென்று சொல்லிமறைந்தனர். நான் இவ்வுலகில் சன்ம மடைந்தேன் ஆகையால் பகவானைப் பர்த்தாவாக வரங்கொடுப்பா பென்றனள். பிரமன் அவ்வார்த்தையைக் கேட்டு கிருஷ்ணன் சரீரத்திலிருந்து பிறந்த சுதர்மனென்கிற கோபாலன் முற்காலத்தில் உன்னைப்போலவே உன்னைப்பார்த்து மோகமடைந்து அக்காமத்தைப் பூர்த்திசெய்து கொள்ள வல்லமையற்றவனுயினன். அப்போதுராதைபார்த்து கோபித்து உன்னைச்சபித்ததுபோல்சபித்தாள். அதனால் பூலோகத்தில் மதுவம்சத்தில் சங்கசூடனென்னும் பெயருள்ளவனுப் பிறந்திருக்கிறன். அவனுக்குப் பூர்வஜன்மவாசனை தெரியும். நீயும் பூர்வஜன்ம வாசனை யுள்ளவளாகையால் நீ அவனுக்குப் பத்தினியாகக் கடவாய். பிறகு நாராயணனைப் பர்த்தாவாக அடைவாய். நீ விருக்ஷரூபமாகப் பிறக்கப்போகிறாய். நீ எல்லா புஷ்பகளினுஞ்சிறந்தவளாயும் விஷ்ணுவுக்குப்பிராணனிலும் பிரியையாயும் இருக்கப்போகிறாய். நீ இல்லாமல் பூசித்தால்சகலதேவர்களுடைய பூசனையும் வீணாகும். பிருந்தாவனத்தில் பிருந்தாவனி என்னும்பெயருடனிருப்பாய். கோபாலர்களும் கோபிகாஸ்திரீகளும் உன்னைக்கிருஷ்ணனைப் பூஜிக்கப்போகிறார்கள். விருக்ஷத்துக்கு அதிஷ்டானரூபியாய் கிருஷ்ணனோடு எப்போதும் கிரீடிக்கப்போகிறாய் என்றனுக்கிரகஞ் செய்தனர். எனக்கு இரண்டுகரமுடைய கிருஷ்ணனிடமிருக்கிற ஆசை நான்குகரமுள்ள நாராயணனிடமில்லை. ஆனால் பகவான் ஆஜ்ஞையினால்இப்போது சதுர்ப்புஜனைக்கோருகின்றேன். உன் கருணையால் துர்லபமான கிருஷ்ணனைப் பர்த்தாவாக வடைந்து என்கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்வேன். ராதாவினிடமிருந் துண்டான என்பயத்தை நீக்கிவிடும் என்றாள். பிரமன்

பதினறு அக்ஷரமுள்ளராதிகாமந்திரத்தை யுபதேசிக்கிறேன். அதனல் நீ அவளுக்குப் பிராணனுக்குச் சமானமானவ ளாகப்போகிறாய். உங்களிருவருக்கும் இருக்கும் சிருங்காரரசத்தை அவளறிய மாட்டாள். கிருஷ்ணனுக்கும் அவளிடமிருக்கும் பிரீதி யுன்னிட மிருக்கும் என்று கூறி ராதாமந்திரத்தையும் பூஜாவிதியையும் கவசத்தையும் புரஸ்சரணவிதியையும் உபதேசித்து ஆசீர்வதித்துப்போயினர் துளசி பிரமனுடைய வரத்தினல் இலக்குமியைப்போல் சகலசித்தியையடைந்து சகலலோகத்துக்கும் துர்பலமானபோகத்தை விஷ்ணுவோடனுபவித்துத் தவத்தினல டைந்த சிரமமொழிந்து சுகமான ஆகாரங்களையுமுண்டு சந்துஷ்டையாய் புஷ்பசயனத்தில் படுத்தாள் என்றனர். (சு - ம் - சஅ)

பதினேழாம் அத்தியாயம் முற்றிற்று.

ஷ

கடிந ஸ்தனமண்டலாயைநமஃ

பதினெட்டாம் அத்தியாயம்.

* துளஸிசங்கசூடயோஸ்ஸம்வாதம்.

நாராயணர்கூறுகின்றார்:—இரதியைப்போல் யௌவனமுள்ள வளாய் சயனித்திருக்கையில் மன்மதன் அவள்மீது பஞ்சபாணங்களையும்விட சிறிதுநேரம் மூர்ச்சித்தாள். ஒருக்ஷணம் பயத்தையும், ஒருக்ஷணம் சோம்பலையும், ஒருக்ஷணம் தாபத்தையும், ஒருக்ஷணம் சுகத்தையும், ஒருக்ஷணம்தெளிவையும், ஒருக்ஷணம்கல கத்தையும் அடைந்து படுக்கையிலிருந் தெழுந்து வெளியேதிரிவாள். மறுபடி படுப்பாள். புஷ்பத்தாலும் சந்தனத்தாலும் செய்யப்பட்ட படுக்கை முள்ளினற்செய்ததுபோலும், வீடு குகைபோலும், வஸ்திரம் அக்கினிபோலும், சிந்தூரப்பொட்டு காயம்போலும் அவளுக்காய் விட்டது. அப்படியிருக்கும் அவள்கணவில் அழகும் யௌவனமும் புன்சிரிப்பும் உடையவனையும்இரகசியனையும் சந்தனப்பூச்சுடன்இரத்தினத்தினு லலங்கரிக்கப்பட்டவனையும் மாலைதரித்தவனையும் ஒரு புருஷன் தோன்றி தன் முகமலரை முத்தமிடுகிறவனையும் சுத

* துளசிக்கும் சங்கசூடனுக்கும் சம்வாதம்.

கதையைச் சொல்லுகிறவனையும் வெகு இனிப்பாய்ப்பேசுகின்றவனையும் படுக்கையில் தன்னோடு இரமித்தவனையும் மறுபடியும் கட்டிக்கொண்டு பேசுகிறவனையும் போகின்றவனையும் வருகின்றவனையும் இருந்தான். அவனைப்பார்த்துக் கூறுகிறாள் — ஓபிராணநாதனே! எங்குப்போகின்றீர் போகவேண்டாம் நில்லும் என்று கூறினாள். மறுபடி நித்திரைதெளிந்து அடிக்கடி அழுதுகொண்டிருந்தாள். அப்பொழுது சங்கசூடனென்கிற அந்தயோகி ஜைகிஷவ்யரிடமிருந்து கிருஷ்டமந்திரத்தைப்பெற்று புஷ்கரத்தில் சித்திசெய்துக்கொண்டு கவசத்தைக் கழுத்தில்தரித்துப் பிரமனதுவரத்தால் கோரிக்கைநிறைவேறப்பெற்று பதரிகாவனம் வந்தான். அழகிலும் அலங்கார விசேடங்களிலும் சிறந்திருக்கின்ற சங்கசூடனைத் துளசி பார்த்துத் தன்முகத்தை வஸ்திரத்தினால் மூடிக்கொண்டு புன்சிரிப்போடுஅடிக்கடி பார்த்துக்கொண்டும் புதுபுருஷ சங்கம இச்சையால் தலைவணங்கியுமிருந்தாள். அந்தஸ்திரீயை சங்கசூடன்பார்த்து அவள்சமீபத்தில் உட்கார்ந்து, நீயார்? யாருடையபெண்? ஸ்திரீகளுக்குள் கௌரவிக்கத் தக்கவளாயிருக்கின்றாய், உன்னடிமையான எனக்குப்பதில்சொல்லுவா யென்றான். அவளதைகேட்டு காமத்தோடும் புன்சிரிப்போடும் முகத்தை வஸ்திரத்துக்கொண்டு கூறுகிறாள்:— நான் தருமத்துவஜருடையபெண்; காட்டில் தவஞ்செய்கிறேன். நீர் யார்? வந்தபடி போய்விடும். நற்குலத்திற்பிறந்தவள் தனியே யிருக்கும்போது நற்குலத்திற்பிறந்தவன் நீயாரென்று கேட்கக்கூடாதென்று வேதத்தில் கேள்விப்பட்டிருக்கிறேன். மிக்க காமியும் நல்லகுலத்திற் பிறவாதவனும் தருமசாஸ்திர விசாரணையும் வேதாந்த சிரவணமும் இல்லாதவன்தான் அந்தஸ்திரீயை இச்சிப்பான். மேலுக்கு அழகுள்ளவளாயும் உள்ளே மதம்பிடித்தவளாயும் புருஷனுக்கு யமரூபியாயும், அமிர்தத்தை வாக்குநுனியில்வைத்து உள்ளே விஷகும்பம்போலிருக்கின்றவளாயும், கத்தியின் கறுக்குப்போன்ற மனத்தோடு மேலுக்கு இனிப்பாய்ப் பேசுகின்றவளாயும், தன் காரியத்தை நிறைவேற்றிக்கொள்ள எப்பொழுதும் ஆவலுள்ளவளாயும், தன்காரிய முடியுமளவும்பார்த்தாசொற்படி கேட்கின்றவளாயும், காரியமில்லாதசமயத்தில் தூஷிக்கிறவளாயும், மனதில் பாபகாரியத்தையே வைத்திருப்பவளாயும் இருக்கின்ற ஸ்திரீகளுடைய சரித்திரங்களோ வேதபுராணங்கள் தூஷிக்கின்றன. அவர்களை யார் நம்புவார்கள். அவர்களுக்கு யார் இஷ்டமானவர்கள்! யார் இஷ்டமில்

லாதவர்கள்! அவர்கள் அப்போ தப்போதும் புதிதுபுதிதாய்ப்பர்த் தாக்களைத் தேடுவார்கள். அழகானபுருஷனைப்பார்த்து மனதிலிச்சி ப்பார்கள். வெளியில் பதிவிரதாதருமமுடையவர்போல்பிரிகடனஞ் செய்வார்.அவரெல்லாம் மிக்ககாமமுள்ளவர்களாயும் மன்மதனுக்கு ஸ்தானமாயுமிருப்பவராகும். அநேகர்மனதுக்குள் மைதுன இச்சை யுடையவர்களாய் இரகஸ்யத்தில் தனக்கிஷ்டமானபுருடனைப் பார் த்துச் சிரிக்கின்றவளாயுமிருப்பர். நான்குபேர் பார்க்கும்போது வெட்கமுடையவராயும், மைதுனம் நேரிடாமல்போனால் கோபத் தோடுசண்டையிடுகின்றவராயும், அதிகமைதுனம் நடக்கும்போது மிக்க சந்தோஷமுடையவராயும்,அல்பமைதுனத்தால் துக்கமடை கிறவராயும், நல்லருசியான அன்னத்தையும் சயனத்தையும் கோரு கின்றவராயும் சுந்தரனையும் சிருங்கார ரசமறிந்தவனையும்அழகாயும் யுவாவாயும் குணசாலியாயு மிருக்கிற புருஷனை இடைவிடாமல்எப் போதும் கோருவார்கள். பிள்ளையைக்காட்டிலும் அதிகஸ்நேகத் தை சம்போகமறிந்த புருஷனிடத்தில் வைப்பார்கள். கிழபுருஷ னையும் மைதுனஞ்செய்ய வல்லமை யில்லாதவனையும் அடிக்கடி கலகஞ்செய்து கோபத்தோடு சண்டைக் கிழுப்பார்கள். சர்ப்பம் எலியை விழுங்குவதுபோல் வாக்குவசனத்தினால் புருடனைப்பட்சிப் பார்கள். அசாத்தியமான வேலையைச் செய்கின்றவராயும் சர்வ தோஷத்துக்கும் ஸ்தானமாக இருக்கின்றவராயும் பிரமவிஷ்ணுக்க ளால் சாதிக்கத்தகாத மோகமுடையவராயும் தபோமார்க்கத்து க்குத் தாப்பாளாயும் மோக்ஷத் துவாரத்துக்குக் கதவாயும் பக்தி யைத் தூரத்தில் ஓதுக்கினவராயும் சர்வமாயைக்கும்பாண்டமாயும் சம்சாரமாகிற ஜெயிலில் வருகின்றவருக்குவிலங்குபோன்றவராயும் இந்திரசால சொரூபிகளா யிருக்கின்றவராயும் பொய்மையேஉரு க்கொண்டுவந்தாற் போன்றவராயும் வெளிக்கழகா யிருக்கின்றவரா யும் உள்ளே விகாரமான அங்கமுள்ளவராயும் நோய்க்கிடஞ்செய் யும் மலசலங்களுக்கு ஆதாரமா யிருக்கின்றவராயும் துர்க்கந்தத் தோடு கூடினவராயும் இருப்பர். இவரெல்லாம் பிரமனல்சிருட்டிக் கப்பட்டிருப்பினும் முமுக்ஷுக்களுக்கு விஷமா யிருப்பர். அவர்க ள் கண்ணுலும்பாரார், நீணவாலும் நீணயார் என்றனள். இதனைக் கேட்ட சங்கசூடன்சிரித்து கூறப்பட்டவையெல்லாம் பொய்யல்ல; சில உண்மையாயும் சில பொய்மையாயு மிருக்கின்றன. நானும் சில கூறுகின்றேன் கேட்பாயாக:—

பிரமன் எல்லாவுயிர்களையும் மோகிக்கச் செய்யும் படியான ஸ்திரீரூபத்தைக் கொண்டாடத் தக்கதாகவும், துஷிக்கத்தக்கதாகவும்சிருஷ்டித்திருக்கிறான்இலக்குமி சரஸ்வதிராதிகா துர்க்காசாவித்திரிஇவர்கள்அம்சத்தால் சிலஸ்திரீகள் சிருட்டிக்கப்பட்டார்கள். இவர்களெல்லாம் உண்மையான ஸ்திரீகளென்றுசொல்லப்படுவார். அவர்கள் சிலாகிக்கத் தகுந்தவராயும் சர்வமங்களத்தையும் கொடுக்கத்தகுந்தவராயும் இருப்பவர். சதரூபை தேவஹூதி சுவதா சுவாஹா தக்ஷிணை சாயாவதி ரோகிணி வாருணி சசி குபேரபத்தினி அதிதி திதி லோபாமுத்திரை அருசூயை கோடபி அகலிகை அருந்ததி மேனை தாரை மண்டோதரி தமயந்தி கங்கை சமனஸா புஷ்டி துஷ்டி ஸ்மிருதி மேதா கலிகா வசுந்தரை ஷஷ்டி மங்கனசண்டி தருமகாமினி சுவஸ்தி சிரத்தா சாந்தி காந்தி க்ஷாந்தி நித்திரா தந்திரா க்ஷூத் (பசி) பிபாஸா(தாகம்)சந்தியாராத்திரி திவா சம்பத்து த்ருதி கீர்த்தி கிரியா சோபா பிரபா தவா இன்னும் இவர்போன்றவரும் தெய்வத்தன்மையுடைய உத்தமஸ்திரீகளென்று புகழப்படுவார். விபசாரிரூபமாய் எந்த எந்தஸ்திரீரூபங்களிருக்கின்றனவோ அவைபுகழப்படாதவை. எந்தெந்த ஸ்திரீரூபம் சத்வப்பிரதானமாக விருக்கின்றனவோ அவைமிகவும் கொண்டாடத்தக்கவை. அவையெல்லாம் சகலலோகத்துக்கும் பதிவிரதாரூபங்களென்றுப் பிரமாவினல் சிருட்டிக்கப்பட்ட உண்மையான ரூபமென்றுஞ் சொல்லப்படும். ஸ்திரீரூபம் தமோரூபமென்றும் இரஜோரூபமென்றும் இருவகைப்படும். இரஜோ அம்சத்திற் பிறந்தவர்கள் போகத்திலாசை உள்ளவர்களாகையால் மத்திமஸ்திரீகளென்றும், அவர்கள் புருஷரைச் சம்போகத்தினல் சுவாதீனஞ்செய்து கொள்வரென்றும், எப்போதும் தங்கள் காரியத்திலேயே சாக்கிரதையாயிருப்பரென்றும், மகாகபடமுள்ளவர்களாயும் மோகத்தைச் செய்கிறவர்களாயும் தருமத்தைச் செய்யாதவர்களாயும் பதிவிரதா தருமத்தைச்செய்யாது அத்தருமத்தை இழந்தவர்களாயுமிருப்பரென்றும், தமோகுண அம்சத்திற் பிறந்த ஸ்திரீகள் ஒருவருக்கும் அடங்காதவர்களென்றும் அவர்கள் அதமஸ்திரீகளென்றும் சொல்லப்படுவார்கள். நல்லகுலத்திற் பிறந்தவனும் பண்டிதனும் பரஸ்திரீயை நீயாரென்றுகேட்கமாட்டார்கள். சலமற்றவிடத்திலும் சனமற்றவிடத்திலும் ரகஸ்யத்திலும் பரஸ்திரீயைக்கேட்கக் கூடாதென்று சொல்லிப் பின் பிரமாவின் ஆக்ஞையால் நான் உன்

னிடம் வந்தேன். காந்தர்வவிவாகத்தால் உன்னைக் கொள்ளப்போகின்றேன். நான் மநுவம்சத்திற்பிறந்த சங்கசூடனென்னும்அரசன் என்று தன்பூர்வஜன்மத்தையும் அவளுடைய பூர்வ ஜன்மத்தையும் கூறி நான் உன்னை ஆசைப்பட்டிருக்கிறேன். இனிஉனக்கு ராதிகையினுடையபயம்வேண்டாம் என்றனன்.

இவ்வாறு சொல்லக்கேட் துளசி புன்சிரிப்புடன் இப்படிப்பட்டபுருஷனே புகழத்தக்கவன், இப்படிப்பட்டபுருஷனைஅடையப் பிரபஞ்சத்தில் விரும்புகின்றனர் என்றுள்ளத் துள்ளே மகிழ்ந்து அரசனைப் பார்த்துக் கூறுகிறாள்:— இப்போது நாமிருவரும்செய்த விசாரத்தால் நானும் உன்னைச் செயித்தாகவும், நீரும் என்னைச் செயித்ததாகவுஞ் சொல்லலாம். அதாவது இருவருடையசெய்திகளையும் அறிந்தோம். ஏவன் ஸ்திரீயினால் செயிக்கப்படுகிறானே அவன் அசுத்தனும் நிந்திக்கப்பட்டவனுமாவன்; அவனைப் பிதுர்க்கள் தேவர்கள் மநுக்கள் மநுடர் தாய் தந்தை சகோதரர்கள் நிந்திக்கின்றார்கள். சுத்தமுள்ளபிராமணன் ஜனனமரணத்தீட்டுகளைப்பத்து தினத்திலும், அரசன் பன்னிரண்டு தினத்திலும் வைசியன் பதினைந்து தினத்திலும், சூத்திரன் ஒருமாதத்திலுஞ் சங்கரசாதி தாயின்சாதியை அநுசரித்தும் சுத்தியடைகின்றனர். ஸ்திரீயினால் ஜயிக்கப்பட்டவன் சிதா தகனகாலத்தில் சுத்தியடைவானேயன்றி அவளிருக்குங்காலத்தில் சுத்தியடையான். அவன் கொடுக்கும் பிண்டதர்ப்பணாதிகளைப் பிதுர்க்கள் இளிப்பாகக்கொள்ளார். தேவர்களும் பூசையை ஏற்றுக்கொள்ளார். ஒருவன் ஞானம் தவம் ஜபம் ஹோமம் பூசை வித்தை யசஸ் முதலானவைகளையுடையவனாயிருப்பினும் அவைகளால் அவனுக்கு என்னபிரயோஜனம்.வித்தை பிரபாவம் ஞானம் இவைகளையறிந்தஉன்னைப் பரிக்ஷித்தேன். ஸ்திரீ புருஷனைப்பரிக்ஷித்தே தனக்குப்புருஷனை வரிக்கவேண்டும். குணமில்லாதவனையும் விருத்தனையும் அஜ்ஞானியாயும் தரித்திரனையு மூர்க்கனையும் ரோகியாயும் குத்ஸிதனையும் அதிகோபமுள்ளவனையும் மிக்க துர்முகனையும் நொண்டியாயும் அங்கஹீனனையும் குருடனையும் செவிடனையும் சகடனையும் ஊமையாயும் நபும்ஸகனையும் பாபியாயும் இருக்கின்ற வரனுக்கு எவன் பெண்ணைக்கொடுக்கின்றானே அவன் பிரமஹத்திபாவத்தை யடைகிறான். சாந்தனையும் குணவானையும் பண்டிதனையும்சாதுவாயுமிருக்கின்ற வரனுக்குக்

கொடுக்கின்றவன் பத்துயக்ஞபலனை யடைகிறான். எவன் கன்னிகையை ரக்ஷித்து விக்ரயஞ்செய்கின்றானோ அவன் கும்பீபாகமடைந்து கன்னிகையின் மலசலத்தைப் புசித்தவனுப் பதினைன்கு இந்திரபட்டம் வரையில் புழுக்களாலும் ஈக்களாலும் பிடுங்கித் தின்னப்படுவான். கடைசியில் பூமியிற்பிறந்து வியாதியோடுகூடிய சண்மடைந்து மாம்சத்தைச் சுமந்து விற்றுக்கொண்டு திரிவான் என்றனன்.

அப்போது பிரமன் கூறுகிறான்:— ஓ சங்கசூடனே! பேசுவானேன். இவளைக் காந்தர்வவிவாகத்தால் விவாகஞ்செய்துக்கொள். நீ புருஷசிரேஷ்டன். இவள்ஸ்திரீரத்தினம். சமர்த்தனானபுருஷன்சமர்த்தையோடுகூடுவதுகுணம். தடையில்லாமல் நேர்ந்தசுகத்தைஎவன் விடுவான். எவன்விரோதமில்லாமல் வரும் சுகத்தைவிடுகின்றானோ அவன்மிருகத்துக்குச்சமானமானவன். அதில்சம்சயமில்லை. ஒபதிவிரதையே! தேவதானவர்களை நாசஞ்செய்யவல்ல மகாகுணசாலியாயும் அழகனுமான புருஷனை எதற்காக நீபரிக்ஷிக்கின்றாய். விஷ்ணுவிடத்தில் இலக்குமி, கிருஷ்ணனிடத்தில் ராதிகை, என்னிடம்சாவித்திரி, சிவனிடத்தில் சிவை: வராஹனிடத்தில் பூதேவி, யாகத்தில்தக்ஷிணை, அத்திரியிடத்தில் அநுசூயை, நளனிடத்தில்தமயந்தி, சந்திரனிடத்தில் ரோகணி, மன்மதனிடத்தில் ரதி, காசிபரிடத்தில் அதிதி, வசிட்டரிடத்தில் அருந்ததி, கௌதமரிடத்தில் அகலிகை, கர்த்தமரிடத்தில் தேவஹூதி, பிரஹஸ்பதியிடத்தில் தாரை, மதுவிடத்தில் சதரூபை, அக்னியிடத்தில் சுவாஹா, இந்திரனிடத்தில் சசி, கணேசரிடத்தில் புஷ்டி, ஸ்கந்தரிடத்தில் தேவசேனை தருமனிடத்தில் சதி இவர்களெல்லாம் எப்படி சௌபாக்கியமுள்ளவர்களோ அப்படி நீ இச்சங்கசூடனிடத்தில் சௌபாக்கியமுள்ளவளாயும் பிரியமுள்ளவளாயும் இருப்பாய். இச்சுந்தர புருஷனோடுகூடி எந்தெந்தஸ்தானங்களில் கிரீடிக்கவேண்டுமோ அந்தந்த ஸ்தானங்களில் கிரீடித்திருப்பாய். பிறகு கோலோகத்தில் கிருஷ்ணனை அடையப்போகிறாய். சங்கசூடன்மரித்தபிறகு வைகுண்டத்தில் சதுர்ப்புஜனையும் அடைவானென்றனர். (சு - ம். க00ஒ)

பதினெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

கலபோரவே நமஃ

பதிஞென்பதாம் அத்தியாயம்.

துளஸீ சங்கசூடயோர் விவாஹம்.

நாராயணர் கூறுகின்றார்:—இவ்வண்ணம் பிரமன் கூறிச்சென்றபின்னர் அரசன் அவளை விவாகம்செய்துகொண்டான். சொர்க்கத்தில் துந்துபிவாத்தியம் கோஷித்தது. புஷ்பவருடம் பொழிந்தது. அவன் அவளுடு கிரீடித்து மகாமோகிதர்களாய் சம்போக சுக சமுத்திரத்தில் மூழ்கினவர்களாய் ஒருவிதமான செந்துக்களும்சஞ்சரிக்காத ஆரணியத்திலும் பூந்தோட்டத்திலும் நதிதீரங்களிலும் புஷ்ப சந்தனப் படுக்கையிலும் இருந்து, வித்தை அறுபத்துநான்கென்றுசொல்லுதுபோல் ஸ்திரீசுகமும்அறுபத்துநான்குவிதமென்றுகாமநூலில் கூறியுள்ளபடி அவைகளையெல்லாம் அநுபவித்தும் திருப்தியுண்டாகாவண்ணம் பர்த்தாமனதை கிரீடையாலிழுத்துவிட்டாள். அவனும் காமரசசுபாவமறிந்தவனுகையால்நாயகியின்மனத்தைக்கிரகித்துவிட்டான். ஓநாரதரே! அவர்களுடையலீலா விநோதங்களை முற்றுங்கூறமுடியாது ஆயினும் சிலகூறுகின்றேன்:—

அவனது மார்பிலணிந் திருக்கும் சந்தனத்தோடு கெற்றியிலிருக்கும் திலகம் இவள்கெற்றியிலழுந்தவும், அவளது கெற்றியிலிருக்கும் சிந்தூரத்தோடு பதரிகாபத்திரம்போல் அவனிடத்தில் அழுந்தவும் இரண்டுருவமாகக் காணமுடியாமல் ஒருருவமாகவேயிருப்பர். அவளுடைய தனங்களில் இவனுடைய நகக்குறிகளும் இவனுடைய இடதுபக்கத்தின் விலாப்புறத்தில் அவளுடைய அஸ்தத்தோடு ஆபரண முத்திரைகளும் இவளுடைய உதட்டில் அவனது பற்குறிகளும் அவனது இரண்டுகன்னங்களில் இவளதுபற்குறிகளும் இருக்கக்கண்டு மகிழ்வார்கள். சுரதக்கிரீடை தெரிந்த அவ்விருவரும் ஆலிங்கனமும் சும்பனமும் அங்கமர்த்தனமும் ஒருவருக்கொருவர் மாறிமாறிச் செய்வர். அவ்வாடலை நிறுத்தி இருவருமெழுந்து தமக்கிஷ்டமான அலங்காரங்களைச் செய்துகொண்டு குங்குமப்பூதிலகத்தை அவளுக்கு இவன் வைப்பான். அவள் இவனுக்குச் சந்தனம்பூசி பரிமளமுள்ள தாம்பூலத்தைக் கொடுப்பாள்.

வன்னிசுத்தமான இரண்டு வஸ்திரங்களையும் பாரிசாத புஷ்பமாலை களையும் விரல்களில் இரத்தினமோதிரங்களையும் அணிந்துகொண் டு அவனெதிரில்நின்று உனக்கு நான் தாசியென்றுசொல்லி பரமபக் தியோடு நமஸ்கரித்துப் புன்சிரிப்போடு இமைகொட்டாது அவனை ப்பிரீதியோடு மார்பின்மேலேற்றி அணைத்துக்கொண்டு வஸ்திரத்தி னல் மூடப்பட்டிருக்கிற முகமலரையும் கண்ணையும் உதட்டையும் சும்பனஞ்செய்வாள். அதனல் இவன் மிகவும் மகிழ்ந்தவனய் அவ ளுக்கு வருணனிடமிருந்து கொண்டுவந்த இரண்டு வஸ்திரங்களை யும்மூன்றுலோகத்தும் துர்லபமான இரத்தினபர்ணங்களையும்சுவா ஹாதேவி தரித்திருந்த இரண்டுகால் தண்டைகளையும் சாயாதேவி யின் தோள்வளைகளையும் ரோகணியின் குண்டலங்களையும் இரதியி ன் மோதிரங்களையும் கைவளைகளையும் விஸ்வகர்மாவினல் கொடுக்க ப்பட்ட விசித்திரமான சங்கையும் நெற்றிப்பொட்டையும் படுக்கை யையும் பூஷணங்களையும் கொடுத்துச் சிரித்து மங்களப் பிரதான மான பூஷணங்களில் சிலவற்றை அவளுக்கணிந்து தலையிலும் கன் னத்திலும் நெற்றியிலும் சிலபொட்டுகளிட்டு சந்தனத்தால் சந்திர ரேகைபோல் மூன்றுரேகை நெற்றியிலிழுத்து அதற்குச் சுற்றிலும் குங்குமப்பூவால் சித்திரமான வேலைசெய்து நடுவே தீபம்போல் சிந் தூரத்தாலெழுதி பாதங்களிலும் கை கால்களிலும் மருதாணிப் பொட்டிட்டு காலைத் தன்மார்பில் வைத்துக்கொண்டு ஓ தேவியே! உனக்கு நான் தாசனென்று சொல்வான். தபோவனத்தை விட்டு வேறு இடத்தையடைந்து மலயம் மேரு இமையம் கந்தமாதனம் முதலிய பர்வதங்களிலும் வேறு அழகான இடங்களிலும் புஷ்பத் தோட்டங்களிலும் தேவ வுத்தியான வனங்களிலும் குகைகளிலும் துங்கபத்திரை முதலிய நதி நதங்களிலும் குளிர்ந்த காற்றுள்ள விடங்களிலும் மணற்குன்றுகளிலும் விசித்திரமான சந்தனக்காட் டிலும் சண்பகம் தாழை முல்லை மல்லிகை படர்ந்த இடத்திலும் ஆம்பல் தாமரைகளுள்ள குளங்களிலும் கற்பகவிருக்ஷ வனங்களி லும் சனமில்லாத நல்ல பூமியிலும் கிரீடித்திருந்தனர்.

அப்படி இருந்தும் இருவருக்கும் திருப்தியுண்டாகாமல் ஓமத் தில் நெய்யைவிட்டால் அக்னி அதிகரிப்பதுபோல் காமம்அதிகரித் தது. மேற்கூறிய இடங்களையெல்லாம் விட்டு அவளோடு தன்னுச்

சரமம்வந்து கிரீடித்து நானவிதமான சுகத்தை யநுபவித்துக் கொண்டு ராக்ஷசர்கள் பிசாசங்கள் கந்தர்வர்கள் யாவரையும் உள்ளடங்கி ஒருமன்வந்திரம் அரசாண்டுவந்தனன். யாகாதிகளும் தருமங்களும் உலகிலில்லாதபடியினால் தேவர்களெல்லாம்யாசகர்களைப் போல் திரிந்து மகாவருத்தத்தோடு பிரமனையடைந்து சங்கசூடன் வலாற்றைக்கூறியழுதார்கள். அப்போது பிரமன் தேவர்களுடு வைகுண்டஞ்சென்று முதல் துவாரமுதல் பன்னிரண்டு துவாரங்களிலுள்ள துவாரபாலகர்களிடங்கூற அவர்களால் உள்ளேசென்று ஆயிரம்யோசனை விஸ்தார முள்ள சபையில் விஷ்ணுவைத்தரிசித்துத்தாம்வந்தசெய்தியைக்கூறினன். அவர்கூறுகிறார்.—ஓ பிரமனே! நீகூறியவையாவும் நானறிவேன்.அவன் கிருஷ்ணமூர்த்தியினுடைய பரமபக்தனன கோபாலன். அவருடன் அவனிருக்கும்போது ராதை மிரட்டினுள். அவர் வாய் மூடியிருந்தார். அதனைக்கண்ட சுதர்மன் அவள் மீது கோபித்து அவரெதிரில் அவளைமிரட்ட அவள் இலக்குமிமுதலான தோழிகளைப்பார்த்து அவனைவெளியே துரத்த உத்தரவுசெய்தாள். அதனையறிந்த சுதர்மன் நான்மிரட்டவில்லை என்று சொல்லியும் அவனிடத்துக் கோபங்கொண்டவளாய்த் தள்ளிவிட்டார்கள். இவ்வுண்மையறியாத ராதை இலக்குமிமுதலான தோழிகளை சுதர்மன் அடித்தானென்று கேட்டு மகாகோபங் கொண்டவளாய் நீ இராக்ஷஸயோனியை யடைவாயென்றுசபிக்க, தானித்துக்கொண்டும் கிருஷ்ணமூர்த்தியை நமஸ்கரித்துக்கொண்டும் அழுதுகொண்டும்போயினன். அவனைராதைகண்டுகருணையால் ஓ சுதர்மனே! நீ போகவேண்டாமென்றுதடுத்தும் அவன்போக, அடாகுழந்தாய்! எங்குப்போகிறாய் போகவேண்டாமென்று அவன்பின்சென்றாள். கோபர்களும்கோபிகளும் கண்ணீர்விட்டனர் கிருஷ்ணர் அவளைப்பார்த்து நீங்கள் அவனைத்தடுக்கவேண்டாம். ஒருக்ஷணத்துக்குள் சாபத்தை அனுபவித்தொழித்து இங்குவருவான் என்றுகூறி சுதர்மனைப்பார்த்து நீபோய்வா என்றார். ஆனால் கோலோகத்தில் ஒருக்ஷணகாலம் பூலோகத்தில் ஒரு மன்வந்தரமாம். அவன் யோகமாயையறிந்தவன், பலசாலி, நீ சூலாயுதத்தை வாங்கிக்கொண்டு பூலோகம் போய்வருவாய். சிவனர் இருக்கின்றார்; அவனைச்சங்கரிப்பார். அவன்கழுத்தில்மந்திரகவசத்தைத் தரித்திருக்கிறான். அதனால் எப்பொழுதும் ஜயத்தையடைகின்றான். அவனை இம்சிக்க ஒருவராலும் முடியாது. ஆனால்

உன்பத்தினிக்கு எப்பொழுது பதிவிரதாபங்கம்நேரிடுமோ அப்பொழுது உனக்கு மரணம் என்று அவனுக்கு வரங்கொடுத் திருக்கின்றனை. ஓபிரமனே! அவ்வரத்தின்படி நான்முடித்துவிடப்போகிறேன். எப்படியென்றால் நான் பிராஹ்மண வுருக்கொண்டு அவன் பத்தினியிடத்தில் வீரியத்தைவிடப்போகிறேன். உடனே அவள் மரணமடைந்து பிறகு மனைவியாவாள் என்று விடை கொடுத்தனர். எல்லாரும் பாரத வருஷத்தையடைந்தார்கள். (சு-ம் - கூச)

பத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

உ

கலாநாத முக்யைநமஃ

இருபதாம் அத்தியாயம்.

சங்கசூடேன இந்திராதீனா யுத்தம்

நாராயணர் கூறுகின்றார்:—வைகுண்டத்தில் விஷ்ணுமூர்த்தி இராக்கதர்களை உருத்திரமூர்த்தி சங்கரிப்பாரென்று கூறியதை உறுதியாகப்பிடித்து பிரமன் தேவர்களுடன் பூலோகத்தில் சந்திரபாகாநதிக்கரையிலுள்ள ஆலமரத்தடியில்வந்து உருத்திரமூர்த்தியைத்தியானித்தனன். அவரும் அங்குவந்தனர். அவரிடத்தில்சங்கசூடன் செய்திகளையும் அவனைப்பற்றி விஷ்ணுசொல்லிவிடுத்ததையும், விடாதுசொல்லி தேவரீர் அந்தச் சங்கசூடனை எவ்விதமாய்ச் சங்கரிக்கவேண்டுமோ அவ்விதத்தைத் தேடவேண்டுமென்றுசொல்லிப் பிரார்த்தித்துத் தன்னிடம்போய்ச் சேர்ந்தனன்.

உருத்திரமூர்த்தி சித்ராதனென்னும் புஷ்பதந்தனாகியஓர்கந்தர்வனை யழைத்து நீ சீக்கிரமாகச் சங்கசூடணிடத்தில் தூதாகப் போவாயென்று ஆக்ஞாபித்தனர். அவன் அப்படியே அவனது நகரடைந்து பார்க்கும்போது அது இந்திரலோகத்தையும் குபேரபட்டணத்தையும் கீழ்ப்படுத்தி எல்லாவற்றிலுமேம்பட்டு ஐந்துயோசனை அகலமும் பத்துயோசனை நீளமும், உள்ளதாய்ஸ்படிகக் கல்லினாற் செய்யப்பட்டதாய் ஏழு அகழிகளால் சூழப்பட்டதாய்

---

* சங்கசூடனுக்கும் இந்திராதியருக்கும் யுத்தம்.

இரத்னமயமாய்ப் பிரகாசிக்கின்றதாய் நூறுநூறு வீதிகளாற் சூழ்ந்ததாயிருக்கும் அதன்மத்தியில் அரசனுடைய ஆலயத்தைக் கண்டான்.

அந்தக் கிருகமானது சத்துருக்களுக்கு நெருப்பைப்போல் கொதித்து அவர்கள் உள்ளேபோவதற்கு ஒருவிதத்துக் கூடாமல் தடுத்தும், ஏனையோர்க்கு அதிகசுபமாய்ச் செல்லவிடுத்துமுள்ள நான்கு அகழிகளாற் சூழப்பட்டும் இரத்தின சிகரங்களோடு பன்னிரண்டு துவாரங்களால் பிரகாசிக்கப்பட்டும் அவைகள் மகாவீரர்களான காவற்காரர்களால் நிரம்பப்பெற்றும் இருப்பதைக்கண்டு உள்ளே சென்று, அங்கு அதிபயங்கர ரூபியாய் சூலாயுதத்தையேந்தி காவலாளியாயிருக்கின்ற பிங்களாக்ஷனென்பவனைக் கண்டு தன்வரவைக் கூறினன். அவன் உள்ளேவிட்டான். அங்குள்ள துவாரபாலகனைக்கண்டு நான்யுத்தத்தை தெரிவிக்கவந்த உருத்திரதூதன். நீ உள்ளேசென்று அரசனுக்குத் தெரிவிப்பாய் தாமதஞ் செய்யவேண்டாமென்று கூறினன். அவனப்படியேசென்று அரசனுக்குத் தெரிவித்து அவனுக்ஞையைப்பெற்று தூதனிடம்வந்து நீஉள்ளே போகலாமென்று சொல்ல தூதனும் உள்ளேசென்று மூன்றூறுகோடி அசுரர்கள் சூழ்ந்து சேவித்துநிற்ப பொற்குடை பிடிக்க சாமரைகள் அசைக்க சிங்காதனத்தில் வீற்றிருக்கும் சங்கசூடனைக்கண்டு கூறுகின்றான்:—

ஓ அரசனே! நான்சிவதூதன்; புஷ்பதந்தனென்னும் பெயருடையவன். தேவர்கட்கு இராஜ்யத்தையும் அவர்களது அதிகாரத்தையும் கொடுத்துவிடு; அல்லது அவர்களுடன்யுத்தஞ்செய். இது நிச்சயம். உருத்திரமூர்த்தி சந்திரபாகா நதிக்கரையில் ஆலமரத்தடியில் இருக்கிறார். நான் அவரிடம் என்னசொல்வது அதனைக் கூறுவாயென்றான். அவ்வார்த்தையைக் கேட்ட சங்கசூடன் சிரித்து விடியற்காலம் நான் வருகிறேன். நீபோவாயென்ன உருத்திரரிடஞ்சென்று சங்கசூடன் வார்த்தையைக்கூறினன். அவ்வாறிருக்கையில் குமாரசுவாமி வீரபத்திரர் ஆகியபுத்திரர்களும், நந்தி மகாகாளர் சுபத்திரன் விசாலாக்ஷன் பாணன் பிங்களாக்ஷன் விகம்பனன் விரூபன் விகுர்த்தி மணிபத்திரன் பாஸ்கலன் கபிலாக்ஷியன் தீர்க்கதமிஷ்டன் விகடன் தாம்பரலோசனன் முதலிய மஹாசிவகணத்தலைவர்களும், காலகண்டன் பலிபத்திரன் காலஜிஹ்

மன் குடீசரன் பலோன்மத்தன் ரணஸ்லாகி துர்ஜயன் துர்க்க மன் ஆகிய அஷ்டபைரவர்களும் ஏகாதசஉருத்திரர்களும் அஷ்டவசுக்களும் இந்திரனும் பன்னிரண்டு சூரியரும் சந்திரனும் விஸ்வகர்மாவும் அஸ்வனிதேவதைகளும் காமதேனுவும் உக்ரதமிஷ்டனும் உக்ரசண்டனும், கோடரனும் கைடபனும் மூன்றுகோடியோகினிகளுடன் பயங்கரமான பத்திரகாளியும், பூதப் பிரேதபிசாசுகளும் கூஷ்மாண்டவரென்னும்பிரமராக்ஷதர்களும் வேதாளங்களும் இராக்ஷசர்களும்யக்ஷர்களும் கின்னரர்களும் வந்துமஹாதேவரை டமஸ்கரித்துப்பக்கத்தில் நின்றனர். இவரிங்ஙனமிருக்க, சங்கசூடன் உள்ளேபோய் துளசிக்கு யுத்தசமாசாரத்தைச் சொல்ல அவள் நெஞ்சுலர்ந்து அவனைப்பார்த்து ஹேபிராண பந்துவே! நாதனே! என்மார்பின்மேல் ஒருக்ஷணமிருப்பாய். என்பிராணனுக்கு மூக்கிய தேவனே! என்னுடைய பிராணனை ஒருக்ஷணம் காப்பாற்றுவாய். நான் மனதில் நினைத்தசுகத்தை யனுபவிக்கக் கண்களால் உன்னைப் பார்த்துக்கொண்டே யிருக்கிறேன். என்மனம் அலைகிறது, பிராணன் ஆடிக்கொண்டே யிருக்கிறது. இன்று விடியற்காலம் ஒரு துற்சுவப்பனம் கண்டேன். அதன்படியே சொல்லக்கேட்டேன் என்று அவள்சொல்ல அரசன் அதனால் வருத்தப்படாமல் ஸ்நானஞ்செய்து சாப்பிட்டு உண்மையாயும் நன்மையாயும் தகுதியாயுமுள்ள சிலவார்த்தைகளைச் சொல்லத்தொடங்கினன்:—

சுகமும் துக்கமும் பயமும் சோகமும் காலசம்பந்தத்தால் உண்டாகின்றது. எவ்வாறெனின்! ஓர்மரமானதுதோன்றுவதும்பின் தளிர்ப்பதும் கிளைகளாகப்பிரிவதும் பூ அரும்புவதும் மலர்வதும் காய்ப்பதும் பழுப்பதும் பின் உலர்ந்துபோவதும் காலத்தாலன்றி ஆகின்றதா? இதுபோலவே பிரவஞ்சமும்காலதத்துவத்தினாலேயே தோன்றி நின்றழிக்கின்றன. திரிமூர்த்திகளும் காலத்தைக்கொண்டேதத்தம் தொழில்களைச் செய்கின்றார்களே யன்றி காலத்தை விட்டுத் தாங்களே கர்தாக்களென்று அவைகளைச் செய்வதில்லை. ஏனெனில் செய்யமுடியாது. அத்தத்துவமோபிரகிருதியாகிய பராசக்தியினுடைய இச்சா சக்தியினால் நிர்மிக்கப்பட்டது. காலதத்துவாதீதமாயுள்ளவர் பராசக்தியும் அவள் நாயகனுகிய விஸ்வாத்மாவான பரமேஸ்வரனுமேயாம். அவர்கள்காலதத்துவத்தை நியமித்து அதன்வழியாக அந்தந்த உயிர்களைக் கொண்டே அந்தந்த உயிர்களை உண்டாக்கியும் அப்படியே ரக்ஷித்தும் அப்படியே அழித்தும்

வரச்செய்கிறார். அவர்களைச் சரணமடைவாய். உயிர்களையன்றிப் பஞ்சபூதங்களும் இந்திராதி திக்பாலகர்களும் சூரிய சந்திராதிகிரு கங்களும் அந்தந்தகால அளவின்படியே தத்தம் தொழில்களைச் செய்து வருகின்றனர். இவ்வாறுகாலதத்துவத்தாற் செய்விக்கின்ற அவர்களே பந்துக்களன்றி மற்றையராகார். ஏனையோரைநினைப்பது அறியாமையேயாம். நீ அவர்களையே பந்துக்களாகநினைப்பாய். நீயார் நான்யார் நம்மிருவரையுங்கூட்டியது காலதத்துவமேயன்றே. அது இப்போதும் நம்மைப்பிரிக்கவந்தது. எல்லாம் காலவயத்த தென் றறிந்தபண்டிதர் எதற்கும் அஞ்சவும் அஞ்சார். வருந்தவும் வருந் தார். இனி நீ நாராயணனை அடையுங்காலம் வந்துவிட்டது. அவர் பதரிகாச்சிரமத்துக்கு வரப்போகின்றார். நீயும் அவருக்கு மனைவி யாகப் போகிறாய். பின் நானும் என்சாபமொழிந்து அங்கு வரப் போகின்றேன். இதில் சந்தேகமில்லை. என்ன பயமிருக்கின்றது என்று அவளைத்தேற்றி சந்தனம் பூசி பூச்சூட்டி அவளுடன் அன் றிராத்திரி புஷ்பசயனத்தில் முன்போல் கிரீடித்து இரவைப்போ க்கி உதயகாலத்தில் எழுந்திருந்தான். அவள் பழையபடியே அழ த்தலைப்பட்டு ஆகாரத்தைவிட்டுசோகங்கொண்டாள். சங்கசூடன் தன்மார்பில் அவளை அணைத்துக்கொண்டு முன்போல் சிலதத்துவ ஞானங்களை அவள்மனந் தெளியும்வண்ணஞ் சொல்லியும் சிலதிரு ஷ்டாந்தங்களைக் காட்டியும் சமாதானப்படுத்தி அவளுக்கு ஆசை யுள்ள கிரீடையில் இறங்கி அவளுக்குண்டாகவேண்டிய இன்பரச ங்களையெல்லாம் உண்டாக்கித் தானும் அதனல்மகிழ்ந்தவனுய் அர் த்தநாரீஸ்வரரைப்போல ஒரேசரீரிகளாய்ப் பிரிவற்ற ஆனந்தத்தில் மயங்கி அவளுக்கு இவன் பிராணனுய், இவளுக்கு அவள் பிராண னுய்ச் சுரதலீலையில் தோல்வியற்று வெற்றியுடையவர்களாகவே யிருந்தனர் என்றனர். (சு-ம்-சூ அ)

இருபதாம்அத்தியாயம் முற்றிற்று.

ஓ

கசஜிதாம் புதாயைநமஃ

இருபத்தொன்றும் அத்தியாயம்.

சங்சூட மஹேஸ்வரயுத்தம்.

நாரயணர் கூறுகின்றார்:—கிருஷ்ணமூர்த்தியிடம் பக்தியுள்ள சங்கசூடன், மறுநாள் மங்களகரமான தீர்த்தத்தில்ஸ்நானஞ்செய்து ஆன்னிகத்தைமுடித்து இஷ்டதேவதாநமஸ்காரஞ்செய்து நெய்தேன்பொரி இலைகளோடு பொன்மணிவஸ்திரம் முதலியவற்றை பிராமணர்களுக்கு நித்தியம் தானங்கொப்பதுபோல் கொடுத்து, உயர்ந்தஇரத்தினங்களாலும், முத்துக்களாலும், செய்யப்பட்டஆபரணங்களை யாத்திரா மங்களநிமித்தம் ஆசாரியருக்குத் தானமாகக் கொடுத்து, பின்னர் பிள்ளைக்குப் பட்டாபிஷேகஞ்செய்து, யானை குதிரை முதலியவற்றையும், வறுமையுடையஅந்தணர்களுக்கு இரத்தினங்கள் ஆயிரம் பாத்திரங்கள் இரண்டுலக்ஷம் பட்டணங்கள் நூறுகோடி கிராமங்கள் இவற்றையும் மனக்களிப்புடன் தானங்கொத்து, சதுரங்கசேனைகளோடு இராஜ்யசம்பத்தை மகன்வசமாக்கி, தன்மனைவியையும் பாதுகாத்துவரும்படி நியமித்து, யாவருக்கும்சொல்லவேண்டுவன வெல்லாம் சொல்லி, அதன்பின்னர் யுத்தத்தில் முயற்சியுள்ளவனும், தூதர்களால் அளவிறந்த சேனைகள் லக்ஷம் குதிரைகள் லக்ஷம்யானைகள் பதினாயிரம் ரதங்கள் மூன்றுகோடி வில்லாட்கள் மூன்றுகோடி கவசமுள்ளவர்கள் மூன்றுகோடி சூலதாரிகள் ஆகிய இவர்களைக்கூட்டிக்கொண்டு யுத்தசாஸ்திரத்தில் வல்ல ஒருமஹாரதனை மூன்றுலக்ஷம் அக்ஷோணிக்குச் சேனாபதியாக்கி முப்பதுகோடி அக்ஷோணிசேனைகளை மூலபலமாக வைத்து, நாராயணரைத் தியானித்து பாசறையினின்றும் வெளியே வந்து, இரத்தினவிமானத்தின்மேலேறி பெரியோர்களை யெல்லாம் நமஸ்காரஞ்செய்து புறப்பட்டு இந்தப் பரதகண்டத்தில் மேற்கு சமுத்திரத்திற்குக் கிழக்கிலும், மலையபர்வதத்துக்குத் மேற்கிலும், ஸ்ரீசைலத்துக்கு வடக்கிலும், கந்தமாதன பர்வதத்துக்கு தெற்கிலும், ஐந்துயோசனை அகலமும், ஐந்நூறுயோசனை நீளமுமுள்ளதாயும், ஸ்படிகம்போல் பிரகாசிக்கின்றதாயும் எப்பொழுதும்அழி

வில்லாமல் சலப்பெருக் குடையதாயும், லவணசமுத்திரத்திற்குப் பிரியையாயுமுள்ள மஹாவியாயும்சகல சௌபாக்கிய முடையதாயும் இமாலயத்திலிருந்து புறப்பட்டு சரயூநதியோடு கலந்ததாயும், கோமதிநதியை இடப்பாகத்தில் உடையதாயும், மேற்குசமுத்திரசங்கம முடையதாயு முள்ள சிறந்தபத்திரா நதியால் சூழப்பட்டதாய் மனோகரமாய்ப் பிரகாசிக்கின்ற அந்த நதிக்கரையை வந்தடைந்து, அங்கு சித்தாஸ்ரமமாய் சித்தசூக்ஷ்மமாயுள்ள ஆலமரத்தடியில் கோடிசூரியப் பிரகாசராய், யோகாசனராய், புன்னகையோடு சுத்தஸ்படிகம்போல் பிரகாசிக்கின்றவராய், பிரமதேஜோரூபராய் திரிசூலதாரியாய், பக்தமிருத்யுஹராராய், சாந்தசொரூபராய், கவுரீ காந்தராய் மனோஹரராய் தவபலப் பிரதராய் சர்வசம் பத்காரராய், எளிதில் சந்தோஷிக்கின்ற எளிய கருணையாள ராய், மலர்ந்த திருமுகமுள்ளவராய், பக்தானுக்ரஹகாதராய், விஸ்வநாதராய், விஸ்வபீஜராய். விஸ்வரூபராய்! விஸ்வத்தைத் தோற்றுவிக்கின்றவராய், விஸ்வரக்ஷகராய், விஸ்வசங்காரராய், விஸ் வதரராய், காகார்ணவதாரணராய், நாகார்ணவதாரணராய், ஜ்ஞா னப்ரதராய், ஜ்ஞானபீஜராய், ஜ்ஞானனேத்ராய், வீற்றிருக் கின்ற பரமேஸ்வரரைக் கண்டமாத்திரத்தில் விமானத்தை விட் டிறங்கி பக்தியோடு நான்பெறவேண்டிய பேறெல்லாம்பெற்றவனாயி னேன் என்று தலையால் தண்டாகாரமாக வணங்கி. அதன்பின்னர் இடப்பக்கத்திலிருந்த பத்ரகாளியையும் ஸ்கந்தரையும் நமஸ்காரம் செய்தனன். அம்மூவரும் அவனை ஆசீர்வதித்தனர். நந்தீஸ்வரர் முதலான கணங்களெல்லாம் வந்து அவனைக்கலந்து ஒருவரை யொருவர் ஆலிங்கனஞ்செய்து மகிழ்ந்தனர். சங்கசூடன் யாவர்க் கும் இனியமொழிகூறி சிவபெருமான் அருகே நின்றனன்.

அப்பொழுது மஹாதேவர் அவனைப்பார்த்து ஓ அரசனே! நீ பெரிய சம்பிரதாயத்தில் வந்தவன், உன்னுடைய வம்ச த்துக்கு முதலாயிருந்தவன் சிருட்டிகர்த்தாவாகிய பிரஹ்மா வினுடைய புத்திரனை டீசி, அவன்மகன் கஸ்யபன், அந்த கஸ் யபனுக்கு பதின்மூன்றுபத்தினிகள். அவருள் தனுவென்பவளுக்கு நாற்பதுபிள்ளைகள், அவருள் ஒருவன் விப்ரஜித் என்பவன், அவன் மகன் தம்பன், அவன்மகன் நீ, அவர்களும் நீயும் பராக்கிரமத்தி னும் தவத்தினும் மந்திரசித்தியினும் சகலஐஸ்வர்யத்தினும் சமா

னமில்லாதவர்கள். உன்னுடைய வம்சத்தவருடைய பெருமை உல
கமெல்லாம் பரவவந்த நீ கோலோகத்திலிருந்து வந்தகாரணம்உன
க்கேதெரியும். பூர்வஜென்ம பரம்பரையும் இனிவரப்போகிற எதிர்
காலச் செய்தியும் அறியும் படியான அனுக்கிரகத்தைப்பெற்றிருக்
கின்றவன். அவையெல்லாம் நானெடுத்துச் சொல்லவேண்டிய தில்
லை. எந்தலோகத்திலும் நீ விரும்பத்தக்கது ஒன்றுமில்லை. ஆகை
யால் தேவர்களுடைய இராஜ்யத்தால் உனக்காகவேண்டியதென்ன
அதை அவர்களுக்குக் கொடுத்துவிடுவாயாக. உனக்கு அதனினுஞ்
சிறந்தவுலகங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவைகளை நீ சுக
மாக ஆண்டுகொண்டிருப்பாய். தேவர்களெல்லாம் அவர்களுடைய
ஸ்தானங்களில் வாழும்படிச்செய்வாய். எந்தப்பிராணிகளுக்கும்
இம்சையும் செய்யவேண்டாம். இம்சைசெய்வதே பிரம்மஹத்தி
என்று சொல்லப்படும், ஏனெனில்எல்லாவுயிர்களிடத்தும்பிரம்ம
சொரூபமான பரமேஸ்வரனை நான் நிறைந்திருத்தலால் என்க.
பிரம்மஹத்தி என்று சொல்லப் படுவதாகிய அது, இந்தப் பிர
ஹமத்தி பதினறில் ஒருபங்குக்குக்கூட இணையாகாது. பிராணிகளை
விரோதஞ் செய்துகொள்வதும், இம்சைசெய்வதும் எதற்காக
வென்று நீயோசித்துப்பார்ப்பாய். பிறர்செல்வத்தை விரும்பி
யேயன்றி வேறில்லை. அச்செல்வமோ ஒருவரிடத்திலாவது நிலை
பெற்றிருப் துண்டோ, முன்னிருந்ததுண்டோ, முன்னிருந்தது
மில்லை, இப்போதிருப்பதுமில்லை. இரண்டு காலத்தும் நிலையற்ற
தன்மையே வெளிப்படுதலால் இனிப் பின்வருவோர் நிலைபெற்றி
ருக்குமென் றெண்ணிப் பிறருக்கு இம்சைசெய்வது அறிவின்மை
யோ! அறிவுடைமையோ! நீயே ஆராய்ந்து பார்ப்பாய், வறுமைக்
குக்காரணம் பிறர் செல்வத்தை விரும்புதலேயாம் அதனை யொ
ழிப்பாராயின் யாவரும் எப்போதும் செல்வமுடையவரே! செல்
வமில்லாதவர் உலகில் ஒருவரும் இரார். செல்வத்தோடுசிருட்டி
யேயன்றி அது இல்லாமல் சிருட்டியாவதில்லை. இஃதுண்மை.
இதனையறிவோர் சிலர், அறியாதவர் பலர், மற்றுமுண்மை கூறு
கிறேன்:—பிரமனும் ஒரே நிலையாகத் தன்னுடைய அதிகார செல்
வத்தை அனுபவிக்கின்றானோ? இல்லையே. எத்தனை யோதடவை
சிருட்டி செய்வதற்குத் தெரியாமல் மயங்குகின்றான். அப்போ
தப்போது பிரகிருதிதேவியாகிய பராசத்தியின் கிருபையினால்
அம்மயக்கந்தெளிந்து சிருட்டிக்கத்தொடங்குவான். அப்படியே

தான் செய்யும் இரகஸ்யத்தொழிலும் தடுமாறித் தடுமாறி நடந்து வருகின்றது. சந்திரனும் கலைதேய்ந்தும் வளர்கின்றதுமாகக் காணப்படுகின்றனையன்றி சோடசகலையோடு பிரகாசிக்கின்ற காலத்தும் ஒருநிலையாக இருந்தானில்லை. கிரஹணகாலங்களில் மறைபடுகின்றன். சூரியனும் காலையில் மந்தவொளியாயும், நடுப்பகலில் கடுகடுத்தச்சுடும் ஒளியாயும், அந்தியில் அவ்விரண்டுமன்றி ஒளியைப்போலும் காணப்படுகின்றன். கிரஹணகாலங்களில் அம்மூவகையுமின்றி ஓர் பொன்பில்லை மாத்திரமாய்ப் பிரகாசிக்கின்றன். குன்றுதிருப்பதாகிய தருமமும் கிருதயுகத்தில் பூர்ணமாயும் திரேதாயுகத்தில் காற்பங்குகுறைந்தும், துவாபாயுகத்தில் அரைப்பங்கு குறைந்தும், கலியின் ஆரம்பத்தில் முக்காற்பங்கு குறைந்தும், இருப்பாயுள்ள மற்றைக் காற்பங்கும் வருடந்தோறும் குறைந்து முடிவில் சந்திரனுக் கொருகலைபோல் தருமம் என்னும் சொல் வாசனையேயுடிருக்கும். இவ்வாறுகவே சராசரமாகவிருக்கின்ற ஒவ்வொன்றையும் பார்க்குமளவில் ஒன்றேனும் ஒருதன்மையா யிருப்பதில்லை. இதனை ஒவ்வொருவரும் அறியலாம். செல்வத்தில் வாழ்ந்த இந்திரனும், தன்னுடைய செல்வம் போதாமல் தேவசெல்வத்தை விரும்பியபடியும், சுதலலோகத்தில் என்ன செல்வத்தோடு இப்போது இருக்கின்றார்கள்! அவனும் வாழ்ந்தானில்லை, இவனும்பெற்று ஒழிக்காதிருந்தானில்லை. இன்னும் எவ்வளவென்று சொல்லுவேன். ஈஸ்வரனும் பிரஹ்மசொரூபமாயும் பரமாத்மாவாயும் இருக்கின்றகாலனுவமே காலவேற்றுமையில்லாமல் ஒரு நிலையாயுள்ளேன். அதனால் பிரபஞ்சம் லயமாகுந்தோறும் பார்த்துக்கொண்டே யிருக்கின்றேன். இன்னமும் பார்க்கப்போகின்றேன். நான் ஒரு தொழிலுஞ் செய்யாதவன். எவனொருவன் எனது காமலைபவகுணனுபவங்களைக் கீர்த்தனஞ் செய்கின்றனனே அவனைத்தான் சக்திரூபி புருஷரூபி ஆக்மா ஜீவன் காலரூபமாயிருக்கின்ற பரமாத்மா என்று சொல்லப்படும். காலரூபமாயிருக்கின்ற மிருத்யுவும் கருடனைக்கண்ட பாம்பைப்போல் அவனைக்கண்டவுடன் ஓடுவான். அவன்தான் ஜன்மம் ரோகம் பயம் ஜரை இவையெல்லாம் இல்லாதவன்; பிரஹ்மாவினுல் சிருட்டியும் திருமாலால் ரக்ஷகமும் உருத்திரனுல் சங்காரமும் செய்யப்படாதவன். ஓ அரசனே! நீயும் அவனைப்போலாவாயென்றுகூற சங்கசூடன் சொல்லிவந்தனவெல்லாமும் மவுனி

யாயும் மிகவியத்துடனும் இனிப்பாயுங்கேட்டு அத்தப்பரமேஸ்வரை அடிக்கடி புகழ்ந்துபின்னர் தான் சிலசொல்லத்தொடங்கினன்.

ஓ கடவுளே! தேவீரால் யாது சொல்லப்பட்டதோ அது வேறுவகையாய் எக்காலத்தும்மாறாது. ஆயினும், பலியினிடத்தில் திருமால் வஞ்சனையாகச் சென்று அவனுடைய ஐஸ்வர்யங்களைக் கவர்ந்துக்கொண்டு அவனைக்காலால் சுதலத்திலழுத்திவிட்டார். கான் பின் அங்கிருந்த செல்வங்களையெல்லாம் கொண்டுவந்தீதன் என்னைப்போல் கொண்டுவர விஷ்ணுவினாலும் முடியாது. இரண்யன் இரண்யாக்ஷன் தேவர்களுடைய வஞ்சனையால் பிராதாவினால் கொல்லப்பட்டார்கள். சமுத்திர மதனஞ்செய்யும்போது மோகினியாய் திருமால்வந்து எங்களினத்தவரை மயக்கி அமிர்தகலசத்தை அபகரித்து எங்களை வஞ்சித்தார். இதுபோலும் எங்களினத்தில் வந்த ஒவ்வொருவரையும் தேவர்கள் மாறிமாறி வஞ்சித்துக்கெடுத்தவிதத்தை நானிப்பொழுது சொல்லுவதென்றால் முடியுமோ தேவர்களிடத்தில் எங்களினத்தவருக்குத் தமோவஷமுண்டாய் இப்படிசெய்வதற்குக் காரணம் அவர்கள் செய்யும் வஞ்சனைச்செயலேயாகும். கர்மபலத்துக்கிடாய் இருவருக்கும் ஜயாபஜயங்களுண்டாகின்றன. அவைகள் மாறிமாறிவரினும் அவர்கள் செய்யும் வஞ்சனையும், இவர்கள் செய்யும் இம்சையும் உள்ளத்தில் மாறியதில்லை. தேவர்களுடைய வஞ்சனைபைப் பிரகிருதிதேவியேயறிவாள். அதனை நினைக்குந்தோறும் என்னெஞ்சம் பதைக்கின்றது. தேவீருக்கோ இவையெல்லாம் ஓர்கிரீடையாகும். ஓ! ஸ்வாமின் தேவர்களுக்குஜஸ்வர்யம் வருவது அவர்கள்செய்யும் வஞ்சனையாலுமன்று, அசுரர்களுக்கும் வருவது இவர்கள்செய்யும் யுத்தத்தினாலுமன்று. எவரிடத்துப் பிரகிருதிதேவியின் கிருபை எதவரையிலிருக்கின்றதோ அவர்களிடத்தில் அதவரையிலிருக்கின்றது. இதுவரையில் சொல்லி வந்தவையெல்லாம் எங்களிருவருக்கும் என்றமுள்ள வழக்கு தேவீரோ எங்களுக்கெல்லாம் வேண்டுந்தோறும் செல்வத்தைக் கொடுத்துவந்தவரேயன்றி எங்களிடத்துள்ள செல்வத்தை அபகரிக்க வேண்டுமென்று எண்ணியதுமில்லை; வஞ்சனைச் செயலைச் செய்ததுமில்லை. அங்ஙனமிருக்க இப்பொழுது தேவீர் இங்குவந்து என்னிடம் தூதனையனுப்பி யுத்தத்திற்கு யழைத்தகாரணம் யாதோ தெரியவில்லை. ஆயினும் தேவீரும் வந்துவிட்டீர், நானும வந்துவிட்டேன். இனி யுத்தஞ்செய்யாமற்போவது தேவீருக்கு அழகுமல்ல

எனக்கு மேன்மையுமல்ல. நாமிருவரும் யுத்தஞ்செய்யாமற் போவோமானால் நம்மை உலகத்தார் பிரயோஜனமற்றவரென்று பழிப்பர். ஆனால் எங்களிடத்தில் நீர் பந்து என்கிற முறைமையில்லாமல் கடவுள் என்கிற முறைமையுடையவர். கடவுளாயிருக்கின்ற நீர் என்னோடு யுத்தஞ்செய்வதற்கு லஜ்ஜையுண்டாகும். எனக்கும் உம்மிடத்தில் கடவுளென்கிற பியாபகமிருந்தால் யுத்தம்செய்வதுளப்படியென்று எனக்கோர் யோசனை யுண்டாயிருக்கிறது. ஆகையினால் நான் கடவுளென்கிற பியாபகத்தை உம்மிடத்தில் விட்டுவிடவேண்டும். நீரும் என்னைப் பந்துவென்றெண்ணி யுத்தஞ்செய்ய ஆரம்பிக்கவேண்டும் என்றான். ஆனால் யுத்தத்தின் பிரயோஜகர் நீரன்று; நானேயென்பதில் ஐயமில்லை. ஆகவே ஜயாபஜயத்தைப்பற்றியகீர்த்தி அபகீர்த்திகள் எனக்கேயாமன்றி உமக்கொன்று மில்லை என்றான்.

இவையெல்லாங் கேட்ட முக்கண்ணர் அவன் சொல்லிவந்த வைகளுக்குத் தகுதியாயும் உசிதமாயுமுள்ளவைகளைக் கூறுகின்றார்:—ஓ அரசனே. நீ சொல்லிவந்தவையெல்லாம் மிகவும் வியப்புடைத்தானதே. உன்னுடைய வம்சம் பிரஹ்ம வம்சமேயன்றி வேறில்லையே! அத்தப்பிரஹ்ம சப்தத்திற்கு நான் உரித்தானவனல்லவா! ஆகவே, வம்சத்திற்குக் கர்த்தாவாகிய நான் யுத்தஞ்செய்வதற்கு லஜ்ஜையடையவேண்டிய காரணம் ஏது! இத்ஞாயங்களுக்கியே முன் நான் திரிபுரர் முதலியவரோடும், தேவி சம்பந்தர் முதலானவர்களோடும் யுத்தம் செய்திருக்கின்றோம். மதுகைடபர் இரணியன் இரணியாக்ஷன் முதலானவரோடு விஷ்ணுமுதலான தேவர்கள் யுத்தஞ்செய்தது, நீ கூறியபடி தாயாதி முறைமையைக்கொண்டுதான். நான் யுத்தஞ்செய்யவந்த காரணத்தைச் சொல்லிவிட்டேனாகையால் உன்னோடு போர்செய்வதில் எனக்கு லஜ்ஜை இல்லை என்பதை நன்றாய்த்தெரிந்துகொள். அன்றியும் நீயெல்லாரினும் மிகச் சிறந்தவன் என்று சொல்லிச் சும்மாயிருந்தனர். இவர் ஆண்மாக்களுடைய குறிப்பறிந்து எதுவுஞ் செய்கின்றவராதலால் அப்போதும் அவன்குறிப்பை நோக்கியிருந்தனர். சங்கசூடன் சங்கரர் ஆலமரத்தடியிலிருந்து சொன்ன குறிப்புணர்ந்து மந்திரிகளுடன் அதிவேகமாய் அப்பொழுதே எழுந்திருந்தனன் என்றார். (சு-ம-82.)

இருபத்தொன்றும் அத்தியாயம் முற்றிற்று.

உ

கடர்க்ஷஸ்யந்திகருணாயை நமஃ

இருபத்திரண்டாம் அத்தியாயம்.

நாரத நாராயண சம்வாதம்.



நாராயணர் கூறுகின்றார்:—எழுந்திருந்த சங்கசூடன் சிவபெருமானை நமஸ்கரித்து மந்திரிகளோடு விமானத்திலேறித் தன்னுடையசேனைகளைத் தூண்டினான். இருவரும் யுத்தத்துக்கு ஆரம்பஞ்செய்யவே சேனாதிபதி முதலிய யாவரும் முறையே யுத்தஞ்செய்யத் தலைபட்டனர். எவ்வாறெனில் மஹேந்திரன் விருஷபர்வனோடும், சூரியன் விப்ரசித்தியோடும், சந்திரன் தம்பனோடும், யமன் காலேஸ்வரனோடும், அக்னி கோகர்னனோடும், குபேரன் காலகேயனோடும் விஸ்வகர்மா மயனோடும், மிருத்யுபயங்கரன் சங்காரமயனோடும், வருணன் விகங்கணனோடும், வாயுசஞ்சலனோடும், புதன் த்ருதபிரஷ்டனோடும், சநி ரக்தாக்ஷனோடும், சயந்தன் இரத்னசாரனோடும், வசுக்கள் வர்ச்சோகணங்களோடும், அஸ்வனிதேவகை தீப்திமானோடும், நளகூபரன் தூம்பரனோடும், தர்மன் துரந்தரனோடும், மங்களன் உசாக்ஷனோடும், பாநு சோபாகரனோடும், மன்மதன் பிடரனோடும், விஸ்வன் சபலாசனோடும், ஏகாதசருத்திரர் மஹாபயங்கராளென்னும் பதினொருவரோடும், மகாமாரி உகரசண்டன் முதலானவர்களோடும், நந்திதேவர்முதலியோர் இராக்கதக்கூட்டங்களோடும், பிரளயகாலத்திலும் மிக்கபயங்கரமான யுத்தத்தைச் செய்தனர். இவ்வாறு இரண்டுசேனைகளும் ஒருவரோடொருவர் யுத்தம்புரிய, சம்புவடமூலத்தில் கால்யாசுதனோடும், சங்கசூடன் சிங்காதனத்தில் அனேக அசுரர்களோடும் வீற்றிருந்தனர். சங்கரருடைய சேனைகளும் தேவர்களும் அசுரர்களால் தோற்கப்பட்டு காயப்பட்டோடினர். அதைக்கண்ட் முருகர் கோபித்து தேவர்களுக் கபயங்கொடுத்து தமது தேஜஸினால் கணங்களுக்குச் சாந்திசெய்து வன்மையுண்டாக்கி தானொருவராகவே யுத்தம்புரிந்து நூறு அக்குரோணியை ஒருக்ஷணத்தில்கொன்றனர். காளி அசுரர்களை நாசஞ்செய்து உக்கிரங்கொண்டு ராக்ஷஸ ரக்கத்தை உருஞ்சியும், பத்து லக்ஷம் நூறுலக்ஷம் கோடிகோடியாய் யானைகளை ஒருகையினாலெடுத்து

முகத்தில்வைத்து வாயிலிட்டுத் தின்றுந்திரிவாள். ஓ முனிவரே! ஸ்கந்தரது பாணசமூகங்களால் அடிபட்டுப் பயந்தவர்களாய்தான வர்களோடிப்போயினர். அதுகண்ட விருஷபர்வன் விப்ரசித்து தம்பன் விகங்கணன் முதலியயாவரும் முருகரோடு யுத்தம் புரிந்தனர். மகாமாரியும் இளையாத யுத்தஞ்செய்தனள். இராக்கதர்கள் கந்தரது சக்தியாயுதத்தால் மனக்கலக்கமுள்ளவர்களாயோடினர். சுவர்க்கத்திலிருந்து புஷ்பவருடம் பொழிந்தது. அரசன் விமான மூர்ந்து இடைவிடாமல் மழைபொழிவதுபோல் பாணங்களைப்பொழிய எங்கும் அந்தகாரமும், பாணம் ஒன்றோடொன்று உராய்வதினால் நெருப்பும் உண்டாயிற்று. நந்தீசர் முதலியோரும் தேவர்களும் ஓடிப்போனர்கள். போர்களத்தில் கார்த்திகேயரொருவரே நின்றார். அரசனே ஓயாமல் ஒருவராலும் தடைசெய்யக்கூடாததாயும் பயங்கரமானதாயும் இருக்கும் பர்வதமாரியையும் சர்ப்பமாரியையும் சிலாமாரியையும் மாமாரியையும் பொழிந்தான். அதனால் இடைவிடாத பனியினால் மறைபடும் சூரியன்போல் மறைபட்டிருந்தனர். அவரது தனுசையறுத்து ரதத்தைப் பொடிபடுத்தி மயூரத்தை அலைத்து சக்தியாயுதத்தையும் விடாமற்றடுத்தான். முருகர் அவனது வெற்றிப்பாட்டைக்கண்டு வேறொருதனுசையெடுத்து மற்றொரு இரதத்தின்மீதேறி அஸ்திரசஸ்திரங்களையெடுத்து அளவில்லாத யுத்தஞ்செய்யத்தொடங்கி தம்மைமறைத்திருந்த திவ்யாஸ்திரங்களையும் சர்ப்பங்களையும் மரங்களையும் மலைகளையும் இந்திராஸ்திரத்தாலறுத்து மேகாஸ்திரத்தினால் நெருப்பைத்தணிவித்து அவனது தேரையும் மிகுபயற்சியுள்ள சாரதியையும் கிரீடத்தையும் நாசப்படுத்தி அரசன்மார்பில் வெண்மையான காந்தியுள்ள சக்தியாயுதத்தையெறிந்தனர். அரசன் மூர்ச்சித்துப் பின்பு எழுந்துவேறு தேரேறி தனுசைப்பிடித்து மாயையினால் மழைபோல் அஸ்திரங்களைப்பொழிந்து ஸ்கந்தரை மறுபடியும் மறைத்துச் சக்தியாயுதத்தை விடுத்தான். அது மார்பிற்றாக்குவதற்குமுன் காளிகாதேவி விரைந்தோடிவந்து அவரை மார்பிலணைத்தெடுத்துக்கொண்டு குமாரனருமையறியாத அத்தப்பாவியின்முன் இருக்கலாமா என்று சிவனிடங்கொண்டுபோனள். சிவனர் மகிழ்ந்து அக்காளியினது அன்புக்குமகிழ்ந்து ஓ காளீ! என் குமாரனிடம் நீ அன்புள்ளவளாயிருந்தபடியால் இவனுடனிருந்து யுத்தஞ்செய்வாயென்று தணுப்பினர். நந்திகேசர் முதலானவரும்பின்றொடர்ந்தனர். எல்லாத்தேவர்களும்

கந்தர்வ கின்னர ராக்ஷசர்களும் அநேக வாத்தியங்களும் பின்தொடர்ந்தன. காளியும்யுத்தகளத்தையடைந்து சிங்கநாதஞ்செய்ய அதனால் அசுரரெல்லாம் மூர்ச்சித்தனர். அடிக்கடி அட்டகாசஞ்செய்தாள். தேன் மத்யத்தைக்குடித்துக் கூத்தாடினாள். பயங்கரமான கோரப்பல்லுடன் தடியும் கோடரியையுந் தாங்கினவராயும் மதுபானஞ்செய்பவராயும் மோகினி டாகினி கணங்களும் வந்து சூழ்ந்தன. சங்கசூடனும் காளியைப்பார்த்து அதிசீக்கிரம் வந்து இராக்கதர்கள் பயப்படாவண்ணம் அபயந்தந்து போருக்காரம்பித்தனன். காளியும்பிரளயாக்கினிக்குச்சமானமான கெருப்பைப்பொழிந்தாள். அதை அரசன் மேகாஸ்திரத்தினால்அணைத்துவிட்டான் காளி வருணாஸ்திரத்தைப் பிரயோகித்தாள். தானவன் காந்தர்வாஸ்திரத்தினாலறுத்தான். காளி அக்கினிபோல்சுவலிக்கும் மஹேஸ்வராஸ்திரத்தைவிட்டாள். அரசன் சதாசிவாஸ்திரத்தாலறுத்துத் தள்ளினான். காளி மந்திரபூர்வமாய் மகா வீரபத்திராஸ்திரத்தை விட்டாள். அதைக்கண்ட அரசன் இரதம்விட்டிறங்கி தண்டம்போல் வீழ்ந்து நமஸ்கரித்தான். பிரளயகாலாக்கினிபோன்ற அது ஆகாயத்திலே போய்விட்டது. பின்னர் காளி பிரமாஸ்திரத்தை மந்திரபூர்வகமாக விடத் தானும்அதைவிட்டுத்தடுத்தான். காளியானவள் திவ்யாஸ்திரங்களெல்லாம்விட அரசனும் அவைகளையேவிட்டுத் தடுத்தான். பின்னர் ஒருயோசனை நீளமுள்ள சத்தியை முயற்சியோடு எறிய அவன் அதனைஅஸ்திரங்களால் ஒடித்தனன். தேவிகோபங்கொண்டு மஹாபாசுபதாஸ்திரத்தை யெடுத்துவிடும்போது அசரீரி இதனால் அரசனுக்கு மிருத்யுஇல்லை அவனுடைய பத்தினிக்கு எவ்வளவு காலம் பதிவிரதாதர்ம மிருக்கின்றதோ அதுவரையில் அவனுக்கு மரணமில்லையென்று பிரமன் வரங் கொடுத்திருக்கிறானென்று கூற, காளி அவனைவிடாமல் லீலையாசப்பசியினால் லக்ஷம் இராக்கதர்களை விழுங்கி சங்கசூடனையும் விழுங்க ஓடினாள். அவன் பாணங்களால் தடுத்துவிட்டான். பின்பு ஜொலிக்கும் கத்தியைவீச அதனையும் அஸ்திரங்களாலறுத்துவிட்டான். பின்பு ஓரேவிழுங்காய் விழுங்கி விடுகிறேனென்று வோட மகாசித்தனை அரசன் ஓர் பேருருவங் கொண்டான். காளி கோபங்கொண்டு வேகமுள்ள முஷ்டியினால் தேரையும்சாரதியையும் நாசப்படுத்திச் சூலத்தையெறிந்தாள். அவன் அதை இடக்கரத்தால் பிடித்துக்கொண்டான். தேவியானவள் முஷ்டியால் கோபத்தோடு அடித்தாள். அவன் மூர்ச்சையடை

ந்து பிறகு ஏழுந்திருந்து தேவியோடு கைசண்டையிட்டு தேவிவஸ்திரத்தைப் பராக்கிரமத்தினலறுத்துவிட்டான். மாத்ருபக்தியினல் பின்பாணம்விடவில்லை. தேவி கோபங்கொண்டவளாய் அசுரனையெடுத்துச் சுழற்றிச் சுழற்றி மேலெடுத்து வீச அவன் அங்கிருந்து குதித்து ஓடிவந்து பத்திரகாளியை நமஸ்கரித்து விமானத்திலேறியிருந்தனன். காளி பசியினல் ராக்ஷசருடைய ரக்தங்களைக் குடித்தும் மாம்சங்களைத்தின்றுகொண்டும் சங்கரரிடஞ்சென்று யுத்தசமாசாரம் கூறி இப்போது லக்ஷம்பேர்தான் மிகுந்திருக்கிறார்கள் அவர்கள் நான் சாப்பிடும்போது செத்திப்போனவர்கள் என்று சொல்ல அவர் சிரித்தனர். ஓ மகாதேவரே! அவனையுங்கொல்ல பாசுபதமெடுத்தபோது அசரீரி தடுத்துவிட்டது. அவனும் மகாஞானியானபடியால் என்மீதபாணம்விடவில்லை யென்றுள் என்றனர். (சுமம். 75)

இருபத்திரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

ஊ

கபாலி ப்ராண நாயிகாயை நமஃ

இருபத்து மூன்றும் அத்தியாயம்.

மஹேஸ்வரி ஸ்கந்தாதினம் சங்கசூடேன மஹாயுத்தகதனம்.

நாராயணர் கூறுகின்றார்:—ஞான சொரூபரான சிவனர் கேட்டுத் தன் கணங்களோடு யுத்தத்துக்குச்செல்ல சங்கசூடன் இவரைப்பார்த்து விமானம்விட்டிறங்கிப் பரமபக்தியோடு தண்டாகாரமாய்விழுந்து நமஸ்கரித்து மறுபடியும் இரதத்தின்மீதேறி தனுசை வளைத்து நாறுவருஷம் இருவரும் யுத்தஞ்செய்தனர். இருவரும் தோல்வியெற்றி யடையவில்லை. பகவானும் அரசனும் ஆயுதத்தை வைத்துவிட்டு சங்கசூடன் இரதத்தின்மீதும் சிவனர் விருஷபத்தின்மீதும் சுகமாயிருந்தனர். சிவனர் யுத்தத்தில் இறந்துபோனவரையெல்லாம் உயிர்பெற்றெழும்படிச்செய்தனர். இவ்வாறிருக்கையில் ஓர் விருத்தாப்பியமுள்ள கிழப்பிராமணன் பசியினல் யுத்த பூமிக்குவந்து அரசனைப்பார்த்து எனக்குப் பிரஜை கொடுக்கவேண்டும்; நீ சகலசம்பத்தையும் கொடுக்கத்தகுந்தவன். நானதிகமான ஆசை

மில்லாதவன், ஓர் பொருளில்மாத்திரம் ஆசையுடையவன் என்மனதி லிருக்கும் அக்கோரிக்கையைமாத்திரம் நீ நிறைவேற்றவேண்டும். நான் கொடுக்கிறேனென்று சத்தியஞ்செய்து கொடுப்பையானால் பிறகுசொல்லுகிறேன் என்றான். அரசன் அப்படியே ஆகட்டுமென்று மலர்ந்தமுகத்தோடும் சத்தியத்தோடும் சத்தியஞ்செய்ய, எனக்கு உனது மந்திரகவசம் வேண்டுமென்று வஞ்சனையாகக்கூறினான். அரசன் சொற்றவறுமல் கொடுக்க அவன் வாங்கிக்கொண்டு பின்னர் சங்கசூடனுருவைத்தாங்கி துளசியிடஞ்சென்று புணர்ந்து போயினன். சம்புவும் சங்கசூடனும்வருங்காரணத்தை யறிந்தவராகையால் யுத்தம் முடியவேண்டிய முறைப்படி சங்கசூடன் போருக்காரம்பித்தான். சம்புவானவர் அவனைச் சங்கரிக்க பிரயாசைபோலும் தடைசெய்யக்கூடாததாய் செயிக்கக்கூடாததாய் சத்துருக்களாசஞ்செய்யவல்லதாய் கிரீஷ்மகால சூரியனைப்போல் பிரகாசிக்கின்றதாய் ஆயிரம் வில்நீளமும் நூறுமுழமும் பெருமையுள்ளதாய் பிராணனெடுகூடினதாய் பிரஹ்மரூபமாய் நித்தியமானதாய் வாக்கினுற் சொல்லக்கூடாததாய் பிரமாண்டத்தைச்சங்கரிக்கவல்லமையுள்ளதாயிருக்கிற பெரிய சூலாயுதத்தை ஓர் விளையாட்டாக எடுத்துச்சுழற்றி சங்கசூடன்மேலெறிந்தனர். அரசன் தன்கையிலிருந்தவில்லை எறிந்துவிட்டு வணங்கித் தனது இஷ்டதெய்வத்தைத் தியானித்திருந்தனன். சூலமும் சுழன்று அரசன் மேல் வீழ்ந்து அவனைப் பஸ்மஞ்செய்தது. உடனே அவன் திவ்யரூபங்கொண்டு கோலோகத்திலிருந்துவந்த இரத்ன விமானத்திலேறிக் கோலோகஞ்சென்று ராதாகிருஷ்ணருடைய பாதங்களைப் பக்தியோடு நமஸ்கரித்தான். அவ்விருவர்களும் சுகர்மனைப்பார்த்தமலர்ந்தமுகமுள்ளவர்களாய்ப்பிரீதியினல்மார்பிலணைத்துக்கொண்டனர். பின்சூலாயுதம் விட்டவரிடம்சென்றது சங்கசூடனுடைய எலும்புகள் பூவுலகில்சங்குவடிவங்களாயின. அவைதேவார்ச்சனைக்குப்பரிசுத்தமானவைகள். சங்குசலமானது தேவர்களுக்கு மிகவும் பிரீதியைக் கொடுக்கின்றது. சிவனுர் தவிர மற்றத்தேவர்களுக்குப் புண்ணியதீர்த்தம்போல் பரிசுத்தமாயிருக்கிறது. சங்கு சப்தம் எங்குண்டாயிருக்கிறதோ அங்குலக்குமிதேவி வாசமாயிருக்கின்றனள். சங்குதீர்த்தத்தால் ஸ்நானஞ்செய்கின்றவன் சர்வதீர்த்தங்களிலும் ஸ்நானஞ் செய்தவனுகின்றன். சங்கு எங்கிருக்கின்றதோ அங்கு லக்குமிதேவியும் இருக்கின்றனள். அமங்கலங்களெல்லாம் தூரத்

தில் விலகிப்போம் எவ்விடத்தில் சங்கம் இல்லையோ அவ்விடத்தில் இலக்குமி பயந்தவளாய் கோபங்கொண்டு வேறிடத்துக்குச் செல்கின்றாள். சிவனுர் அரசனைச் சங்கரித்துச் சந்தோஷத்தோடு விருஷபாரூடராய்க்கணங்களாற் சூழப்பட்டவராய்ச் சிவலோகஞ்சென்றனர். தேவர்களெல்லாம் பிரஹ்மானந்தமடைந்தனர். சுவர்க்கத்தில் துந்துபிமுழங்கிற்று. கந்தர்வ கிண்ணரர்கள் பாடினர். இருடிகள் போற்றினர். ஆகாயத்தில் புஷ்பவருஷம் வருஷித்தது. (சு-ம் கூ0)

இருபத்துமூன்றும் அத்தியாயம் முற்றிற்று

ஊ

காருண்ய விக்ரஹாயைநமஃ

இருபத்துநான்காம் அத்தியாயம்.

துளஸி சங்கம வர்ணனை

நாரதர், எந்தரூபத்தினல் துளசியிடம் விஷ்ணுகர்ப்பாதானஞ் செய்தார் என்றவினவ நாராயணர் கூறுகின்றார்:—பகவான் சங்கசூடனிடம் கவசத்தைப்பெற்று அவனுருக்கொண்டுசேனைகள்சூழ ஜயபேரிமுழங்கப் போயினர். துளசி அம்முழக்கத்தைக்கேட்டு மிக்கஅன்போடு பலகணிவழியில் நாயகன்வரவைப் பார்த்துக்கொண்டே அந்தணர்களுக்கும் பிக்ஷுக்களுக்கும் அங்கஹீனர்களுக்கும் தானங்கொடுப்பித்தும், சிறைச்சாலையி லிருப்பவரை விடுவித்தும் இருந்தனள். மாயாசங்கசூடனும் நகரிற்பிரவேசித்து தன னரண்மனைக்குள்ளே போக, துளசி எதிர்கொண்டு பார்த்தாவைப் பார்த்துச் சந்தோஷத்தோடு பாதப்ரக்ஷாளனஞ் செய்து நமஸ்கரித்து இரத்தினசிங்காதனத்தில் வீற்றிருக்கச்செய்து காமாபேக்ஷையுள்ளவளாய் கற்பூரமுதலிய வாசனைகள் சேர்ந்த தாம்பூலத்தைக் கொடுத்து, இப்போது யுத்தத்திற் சென்று திரும்பிவந்தபடியினல் எனது ஜன்மமும் பிழைப்பு சபலமாய்விட்டது. ஓ! பிரபுவே! சகலப்பிரவஞ்சங்களையும் சங்கரிப்பவரான சங்கரரிடம் உனக்கு எப்படி ஜயமுண்டாயிற்று என்றுகேட்க, விஷ்ணு சிரித்து ஓ மனைவியே! எங்களிருவருக்கும் ஒருவருடம் பூரணமானயுத்த முண்டாயிற்று. அவர்களெல்லாம் இறந்தனர். பிரமன் எங்கள் இருவரிடம்

பிரீதியுடையவனுய் என்னை வேண்டியவாறே தேவர்களுக்கு இராஜ்யத்தைக்கொடுத்து வந்துவிட்டேன். சிவனுர் தன்னிடம் போய்ச்சேர்ந்தனரென்றுகூறி, அவளுடன்சுகபோகத்தையனுபவிக்கும்போது அத்துளசி தன்னுயகனுடைய செயலுக்கு மாறுக எல்லாக் கிரீடைகளுமிருப்பதால் சந்தேகங்கொண்டு அவரைப்பார்த்து நீயார்! அதனைச்சொல். நான் உன்னுடைய சுகத்தை அனுபவித்து என்பதிவிரதா தருமத்தைப் போக்கடித்துக்கொண்டேன். அது மிகவுந் தூரத்திலோடிப்போயிற்று. இவ்வா றென்னைக்கெடுத்தவன்னைச் சபிக்கிறேனென்று சொன்னுள்.அவ்வார்த்தையைக்கேட்ட விஷ்ணு சாபத்துக்கஞ்சி தனது நீலமேகம்போலும் பிரகாசிக்கும் உண்மைத்திருவுருவைக்காட்ட அவள் அவ்வுருவைக்கண்டு மிகவும் மனங்கூசி மூர்ச்சித்து பின்தெளிந்துகூறுகின்றுர்:ஓ விஷ்ணுவே! நீ என்னகாரியஞ்செய்தாய்! உன்னிடம் தயையென்பது சிறிதுமில்லாமற்போயிற்று. சலிப்பில்லாத எனது கற்பைச்சலிக்கும்படிச்செய்து என்னை வஞ்சித்து விட்டனை, என்னுடைய பதிவிரதா தருமத்தை அறியாமற்போயினை, உனக்கறிவில்லை, உனதுநெஞ்சம் என்னைக்கெடுக்கும் விஷயத்தில் வன்மைபெற்றிருந்தபடியால் கல்லாகக்கடவாய்; எவர்கள் உன்னைச் சாதுவாகச்சொல்லுகின்றுர்களோ அவர்கள் பிரமையடைந்தவர்க ளென்பற் சந்தேகமில்லை, நீ தேவர்கள் பொருட்டு இப்படிச் செய்தேனென்பாய், அவர்களுக்கு நன்மையைத் தேட எண்ணியதுபோல் எனக்கு எண்ணினையா! கற்புப்போனுல் மீண்டும் வருமா!மற்றவையெல்லாம் போகலாம்வரலாம், இந்தஅருமைகளில் ஒன்றேனும் எண்ணு தொழிந்தனையே! என்று வருந்தும்பொழுது அந்தவிஷ்ணுஅவளுக்குஉண்மையைச் சொல்லத்தொடங்கினுர்:— அம்மாவது ஓ பெண்ணே! பாரதவருஷத்தில் என்னைப்பற்றி நீ நீண்டகாலம்வரையில் தவஞ்செய்தாய். சங்கசூடனும் உனக்காகத் தவஞ்செய்தான். அதனுல் அவன் உன்னை விவாகஞ்செய்துகொண்டு சுகித்தான். நீ என்னைக்குறித்துச் செய்த தவத்துக்குப் பலன் கொடுக்கும் சமயம்வந்துவிட்டது. அதனுல் நானும் வந்துவிட்டேன். நீ இந்தச்சரீரத்தை விட்டு திவ்யதேகமெடுத்து என்னுடன் ரமிக்கப்போகின்றுய். உன்னுடம்பு பாரதகண்டத்தில் கண்டகி என்னும் புண்ணிய நதியாய் மனிதர்களைப் பரிசுத்தஞ்செய்யும். உன்னுடைய ரோமங்கள் விருக்ஷங்களிற்சிறந்த துளசி என்னும் புண்ணிய விருக்ஷமாய் மூன்றுலகிலும், கோலகிலும், விரஜாநதிதீரம்,

ராதாமண்டலம், பிருந்தாவனம், பாண்டீரம், சண்பகவனம்சந்தன வனம், மாதவி தாழை முல்லை மல்லிகை மாலதி இவைகள் நிறைந் துள்ளவனம் ஆகிய இடங்களிலும் நிறைந்திருக்கும். அத்துளசி யின் மகிமையை இன்னமும் சொல்லுகிறேன் அவைகளைக்கேட்டுப் பதிவிரதா பங்கத்தை நான் செய்தேனென்றும் நீ அப்படியே ஆனா யென்றும் கவலைப்படும் மனக்கவலையை விடுவாயாக.

புண்ணியகேஷத்திரங்களில் துளசிச்செடி யிருக்குமாயின் அத னடியில் நான்முதல் எல்லாத்தேவர்களும் குடியிருப்போம். அத னடியிற் றங்கும்சலம் சகலபுண்ணியதீர்த்தமென்றுசொல்லப்படும். அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தவருக்குச்சகலதீர்த்தபலனுண்டா கும். எனக்கு ஆயிரம்பாற்குடங்களால் ஸ்நானஞ்செய்வுத்தால் எவ்வளவு திருப்தி யுண்டாகுமோ அவ்வளவு திருப்திதுளசிதீர்த்த அபிஷேகத்தால் உண்டாகும். எவர்கள் துளசிதீர்த்தத்தை மரண காலத்தில் பானஞ்செய்கின்றார்களோ அவர்கள் சர்வபாவத்தினி ன்றும் விடுபட்டு விஷ்ணுலோகப் பிராப்தராய் அங்குள்ளவரால் பூஜிக்கப்படுவார். தீர்த்தங்களில் பிராணனை விடத்துணிந்தவன் கையிலாவது உடம்பிலாவது வைத்துக்கொண்டு விடுவானுயின் அவ னும் விஷ்ணுபதத்தையடைவான். துளசி தீர்த்தத்தைப் பானம் பண்ணினவரும் துளசிக்கட்டையை மணிப்போலாக்கி மாலையாகத் தரித்துக்கொண்டவரும் லக்ஷம்அஸ்வமேத பலனையடைவர். துளசி யை கையிலெடுத்துக்கொண்டு எதைச்செய்கிறேனென்று எவன் பிரமாணஞ் செய்கிறானே அதைச் செய்யாதுயின் அவன் கால சூத்திர நரகினையடைகிறான். துளசிமாத்தடியில் போய்ச் சத்தியம் செய்பவன் பதினன்கு இந்திரர்வரையில் கும்பிபாகத்தை யடைவான். பவுர்ணமி அமாவாசை துவாதசி மாதப்பிறப்பு நடுப் பகல் இரவு இரண்டுசந்திக்காலங்கள் நீட்டுக்காலங்கள் அசுசியா யிருக்குங் காலங்கள் எண்ணெயிட்டுக் கொண்டிருக்குங்காலம் இக் காலங்களில் துளசியை எடுத்தால் என்னுடையதலையை அறுத்தவ ராவர். துளசி மூன்றுநாளைக்கு உபயோகப்படும். எடுத்துவைத்த அந்தத்துளசி சிரார்த்தம்விரதம் பிரதிஷ்டை தேவதார்ச்சனைமுத லியகாலங்களிலும் தானகாலங்களிலும் சுத்தமானதென்று கொள் ளத்தகும். பூமியிலாவது ஜலத்திலாவது வீழ்ந்திருந்தாலும் அதை னைச் சலத்தாற் சுத்திசெய்து உபயோகித்துக் கொள்ளலாம்.

ஓ துளசி என்னும் பேருடையாய்! நீ துளசிச்செடி யாவதா லுண்டாகும் விசேஷங்களெல்லாங் கேட்டனையன்றே. இதுபோ லும் உனது ரூபமாகிய நதியும் சமுத்திர ராஜனுக்குப் பத்தினியா கப்போகின்றது. நீ கோலோகத்துக்குப் போய் கிருஷ்ணமூர்த்தி யோடு கிரீடித்துக்கொண் டிருக்கப்போகின்றாய். என்னைக்கல்லாகச் சபித்தனையல்லவா! அதனல் கண்டகி நதிக்கரையில் மலையாகப்போ கின்றேன், அந்தக்கல்லி கோரப்பற்களோடுகூடியகொடியகீடங்கள் கோடிகோடியாய் வந்து துளைத்துத் துவாரமாக்கி உள்ளேசென்று தங்களுடைய கோரப்பற்களால் குக்குடாண்டம்போல் அனேக மாகக் கொத்திக்கொத்தித்தின்றிட்டி அவற்றுள் ஓவ்வொன்றை சக் கரமுதலிய அடையாளங்கள் உள்ளனவாகக் கொந்திக் கொந்தி என்னுடைய அவதாரமூர்த்தங்களென்றுசொல்லும்படிச்செய்யும். அவற்றுள் ஒரு துவாரத்துள் நாலுசக்கரமும் மேலேவனமாலையும் அனேகவிசித்திரமாகக்காணப்படும்ரதாகாரமும்நீர்கொண்டமேகம் போல்நிறமுள்ளது லக்ஷ்மிநாராயணரென்றும், வனமாலையில்லா மல்மற்றவையுள்ளன லக்ஷ்மிஜனார்த்தனர் என்றும், இரண்டுதுவா ரத்துள் நான்கு சக்ரமும் வனமாலையில்லாமல் ரதாகாரமாகவும் செய்யப்பட்டுள்ளது ரகுநாதரென்றும், மிகச்சிறியதாய் இரண்டு சக்கரமாத்திரம்உள்ளதுவாமனரென்றும், மிகச் சிறிதாய்வனமாலை யோடு இரண்டு சக்ரமுள்ளது ஸ்ரீதரரென்றும், இனிமனிதர்களுக் குச் சம்பத்தைக் கொடுப்பதென்றும், பெரிதாகவும் விருத்தாகார மாகவும்இரண்டுசக்கரமாத்திரமாகவுமுள்ளதுதாமோதரரென்றும் நீளமும் மிகப்பெரிதும் மிகச்சிறிதுமில்லாமல் மத்திமமாயும், ஏழு சக்கரமும் சரத்பூஷணத்தோடு கூடியுமுள்ளது ராஜராஜேஸ்வர ரென்றும், அது ராஜசம்பத்தைக் கொடுப்பதென்றும், மத்தியமா யும், விருத்தாகாரமாயும், இரண்டு சக்கரத்தோடு அம்பறாத்தூணி யும் பாணஅடியும் உடைத்தாயுமுள்ளது ரணராமரென்றும், பதி னைந்து சக்கரத்தோடு பெரியதாயும் நீர்கொண்டமேகம்போன்றதா யுமுள்ளது ஆதிசேடரென்றும், அது புருஷார்த்தத்தைக் கொடுப் பதென்றும், சக்ராகாரமாயும் இரண்டுசக்கரத்தோடும்கோஷ்பதத் தோடுமேககாந்தியும் மத்திமமாகவுமுள்ளது மதுசூதனரென்றும், ஒருசக்கரமுள்ளதுசுதர்சனரென்றும்,மறைபட்டசக்கரமாய்த்தோ ன்றுகிறது கதாதரரென்றும், இரண்டுசக்கரத்தோடும்ஹயக்ரீவரூப மாகக்காணப்படுவது ஹயக்ரீவரென்றும், இரண்டுசக்கரமும்திறந்

தவாயும் பயங்கரரூபமும் உள்ளது நரசிங்கரென்றும், அதுவைராக்கியத்தைக் கொடுக்குமென்றும், இரண்டுசக்கரமும் பெரியவாயும் வனமாலையுமுள்ளது லக்ஷ்மிநரசிம்மரென்றும், இதுகிருகஸ்தர்களுக்குச் சுகங்கொடுப்பதென்றும், துவாரமுகப்பில் இரண்சக்கரமும் சமமான ஆகாரமும் பிரகாசமுமுள்ளது வாசுதேவரென்றும், அது சகலகாமபலத்தையும் கொடுப்பதென்றும், சூக்ஷ்மமானசக்கரமும் ஒருரந்தரத்துக்குள் அநேகரந்தரமும் நீர்கொண்ட மேகம் போலுமுள்ளது பிரத்யுமனரென்றும், அது கிருகஸ்தர்களுக்குச் சுகங்கொடுப்பதென்றும், துவாரமத்தியில் இரண்டுசக்கரமும் புருஷ்டபாகம் பெருத்தும் உள்ளது சங்கரஷணமூர்த்தியென்றும், அது மனிதர்களுக்குச் சுகங்கொடுப்பதென்றும், விருத்தகாரமாயும் அழகுள்ள செம்பட்டுநிறமாயும் உள்ளது அநிருத்தரென்றும், அது கிரகஸ்தர்களுக்கு சுகங்கொடுப்பதென்றுஞ் சொல்லப்படும். இந்த சாளக்கிராமங்களில் லக்ஷ்மியோடு விஷ்ணுவானவர் சாந்நித்தியமாயிருப்பர். பூஜைசெய்வோருக்கு சாளக்கிரமம் சத்ராகாரமாயிருந்தால் அது ராஜ்யத்தையும், விருத்தமாயிருந்தால் அதுமகாசம்பத்தையும், சகடம்போலிருந்தால் அது துக்கத்தையும், சூலதுனி போலிருந்தாலும் மூர்த்தி பின்னப்பட்டிருந்தாலும் அவைமரணத்தையும், விகாரமுகமாயின் தரித்திரத்தையும், பிங்களவர்ணமாயிருந்தால் அது ஹானியையும், சக்கரம் பிளவுபட்டிருந்தால் அது வியாதியையும் உண்டாக்கும்.

சாளக்கிராமங்கள் உற்பத்திக்கிடமாயிருக்கும் அம்மலையின் கற்கள் ஒன்றோடொன்று கூடிப்புணர்ந்து கிரீடித்துக்கொண்டிருக்கும். அருகிலுள்ள கண்டகநதியில் வீழ்கின்றகற்கள் சாளக்கிராமங்களாய் உலகினருக்குப் பூஜாயோக்கியமாகின்றன. அவை சூரியதாபத்தினால் பிங்களநிறமாயும் பெரிதாயும் ஆகின்றன.

இந்தச் சாளக்கிராமபூஜை யுடையோர்க்கு அதன் சம்பந்தமான தீர்த்தஸ்பரிசமேசகலதீர்த்தஸ்நானமென்றும், அந்தப்பூஜை செய்வதே சகலயாகமும் செய்வதாமென்றும், யாகதீக்ஷை பெற்றதாமென்றும், விரதங்களாலும் தவங்களாலும் வேதபாராயணங்களாலும் உண்டாகும் புண்ணியமாமென்றும், அதன் அபிஷேகதீர்த்த பானமே தேவாலுக்கிரகத்தை யடைவிக்குமென்றும, அவனுடைய ஸ்பரிசத்தைத் தீர்த்தங்களெல்லாம் விரும்

பும்படிச் செய்யுமென்றும், பரிசுத்தமான சிவன்முத்தனுக்கு மென்றும், விஷ்ணுபதத்தை யடையச்செய்து அவர் அதிகாரத்தையுஞ் செய்யச்செய்யுமென்றும், செய்திருந்த, பாவங்களெல்லாம் கருடனைக்கண்ட பாம்பைப்போல் நடுங்கும்படிச் செய்யுமென்றும், அவனது அந்த ஜன்மம்வரையிலுள்ள லக்ஷம் பிதுர்க்களைக் கரையேற்றச் செய்யுமென்றும் அவனுடையபாததூளி மூதேவியையும் புனிதமாக்குமென்றும், அத்தூளிபட்டவனையும் விஷ்ணுபாதத்தில்ஐக்கியஞ்செய்யுமென்றும்,சாளக்கிராமத்தைவைத்துக்கொண்டு பொய்சொல்லுகிறவன் லக்ஷமன் வந்தரம்வரையில் அசிபத்திரவனமென்னும் நரகத்தை யடைவானென்றும், சாளக்கிராமத்தின்மேலிருக்கும் துளசியை எடுக்கிறவன் ஜன்மாந்தரத்தில் ஸ்திரீயைப் பிரிவானென்றும், சங்கத்திலிருக்குந் துளசியை எடுக்கிறவனுக்கு ஏழுசன்மம் வரையில் மனையாட்டி வந்து வந்து இறப்பாளென்றும், சங்கத்தையும் துளசியையும் சாளக்கிராமத்தையும் ஒன்றுகவைத்துப் பூஜிப்பவன் மஹாஜ்ஞானியாய் விஷ்ணுவுக்குப் பிரியனாய்விடுகிறான் என்றும் சொல்லப்படும். ஓ பெண்ணே! நம்மிருவருக்கும் சாபத்தாலுண்டாகும் வடிவங்களால் உலகிற்குவரும் நன்மைதீமைகளைச்சொன்னேன்.

ஓ துளசி! நல்லபுருஷனோடு ஒருநாள் சுகமனுபவித்த ஸ்திரீயானவள் அவனைவிட்டுப் பிரிவதென்றால் அவளுக்கு எவ்வளவோ துக்கமும் கஷ்டமும் உண்டாகின்றன. ஒருமன்வந்தரம்வரையில் அளவில்லாத சுகத்தையனுபவிப்பதற் குரியனாயிருந்த அவனிறந்துவிட்டானென்றால் உனக்குண்டாகும் கஷ்டத்துக்களவேது என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே துளசி தேகத்தைவிட்டுதிவ்யரூபத்தோடும் விஷ்ணுமூர்த்தியினுடைய வக்ஷஸ்தலத்தில் வசித்திருக்கும் வாழ்வுபெற்றுய்ந்தனள். சங்கசூடனும் வந்த நாராயணரும் தம்மிடம்போயினர். ஓ நாரதரே! துளசி விஷ்ணுவுக்குப்பத்தினியான காரணங்கூறினேன் என்றார். (சு - ம்-கoஉ)

இருபத்துநான்காம் அத்தியாயம் முற்றிற்று.

காந்தாயை நமஃ

இருபத்தைந்தாம் அத்தியாயம்.

துளஸி பூஜாவிதானம்

நாரதர், துளசியானவள் வைண்டத்திற் சென்றபின்னர் அங்கு நடந்த விசேஷங்களையும், அவளுடைய பூஜாஸ்தோத்திரங்களையும், அவளைப் பூசித்தவர் இன்னாரென்பதையும் அறியவிரும்புகிறேனென்ன, நாராயணர் கூறுகின்றார்:—துளசி திவ்யசுந்தரரூபியாய் வைகுண்டம்போனபோது அங்கிருந்த லக்ஷ்மி கங்கை சரஸ்வதிஎன்னுமூவரும் கண்டனர். அவருள் இருவர் பொறுமையற்றிருந்தனர். சரஸ்வதி அவளுடையரூபலாவண்ய சவுந்தரியங்களைக்கண்டு பொறுதவளாய் பகவான் சமீபத்திலிருந்தும் அவரையும் எண்ணாமல் கோபங்கொண்டு கையாலடித்தனள். துளசி நாணமுற்றவளாய் அங்கிருந்த பகவானுக்குந்தெரியாமல் மறைந்து பூலோகத்தில் துளசிவனத்தில் வந்திருந்தனள். ஹரியானவர் அவளது பிரிவாற்றாது சரஸ்வதிக்கு மனங்குளிருமாறு சரசசல்லாபத்துடன் துளசியினது நன்மைகளைக்கூறி அவளிடம் விடைபெற்று, துளசிவனம்போய் "லக்ஷ்மீ மாயா காமவாணீ பீஜபூர்வம் தசாக்ஷரம் - பிருந்தாவனேதி ஜேந்தஞ்ச வன்னிஜாயம்தமேவசஃ" இப்படிக்கூட்டப்பட்ட மந்திரத்தினால் சந்தன புஷ்பங்களைக்கொண்டு பூஜித்து தூபமும் நெய்த்தீபமுங்காட்டி நைவேத்யாதி வுபசாரங்கள் செய்து "பிருந்தையென்பது மரங்கள்நெருங்கி அடர்ந்திருப்பதற்குப் பொருளாகலின் பண்டிதர்கள் என்மனோவியாகிய துளசி ஓரிடத்தில் நெருங்கியிருக்கின்ற துளசிவனத்தில் இருந்தபடியினால் அவளைப் பிருந்தையென்று சொல்லுகிறார்கள், அவளை நான் பஜிக்கின்றேன், மூற்காலத்தில் எந்தத்தேவி பிருந்தாவனந்தோறும் இருந்ததனால் பிருந்தாவதீ என்று பெயர்பெற்றாளோ அவளை நான் பஜிக்கின்றேன், எவள் சகல பிரபஞ்சத்திலும் பூஜிக்கப்பட்டு விஸ்வபூஜிதை என்று பெயர் பெற்றாளோ அவளை நான் பஜிக்கின்றேன், அளவில்லாத பிரபஞ்சம் உன்னால் பரிசுத்தஞ் செய்யப்பட்டமையால் விஸ்வபாவனி என்று பெயர் பெற்ற வுன்னை நான் விரகத்தால் நினைக்கின்றி

கின்றேன், புஷ்பங்களில் பிரியமுள்ளதேவர்களும் அவைகளால் சந்தோஷத்தையடையாமல் உன்னால் சந்தோஷமடைகின்ற படியால் புஷ்பசாரை என்றுபெயர்பெற்றனை, ஆதலால்எனக்கும் நீசந் தோஷத்தைக் கொடுக்கவேண்டு மென்று உன்னை விரும்புகிறேன், அடைந்தமாத்திரத்தில் ஆனந்தத்தை யுண்டாக்குந் தன்மையால் நந்தினி என்று பெயர்பெற்ற துளசியே! உன்னால் நானும் ஆனந்தத் தையடைய நினைக்கின்றேன், எவ்வுலகத்திலும் உனக்குச் சமான மான ஸ்திரீகளில்லாதபடியினால் துளசிஎனப் பெயர்பெற்ற உன்னை நானும் சரணடைகின்றேன், கிருஷ்ணமூர்த்தி உன்னால் உருக் கொண்டு ஜீவிக்கின்றபடியால் கிருஷ்ணஜீவினி என்றுபெயர்பெற்றி ருக்கின்றனை யாதலால் நானும் உன்னால் ஜீவிக்க உன்னைப்புகழ்ந்து போற்றுகின்றேன்" என்றுஅவளைப்போற்றிப்புகழ்ந்து "உன்னைக்கா ணுமல் நான்வருந்துகின்றேன், நான் காணும்படி நீவருவாயாக" வென் று அவளுடைய மந்திரத்தை யுச்சரித்தனர். துளசி சந்தோஷித் தவளாய் வெளிப்பட்டுவந்து ஹரியைவணங்கினள். அவர்மகிழ்ந்த வராய்யாவராலும் புகழும் பூஜையும்தோத்திரமும் அவளுக்குண் டாகுமாறு பலஆசிகள்கூறி அவளை யழைத்துக்கொண்டு தன்னி டம் போயினர். அங்குப்போனவுடன், ஹரி சரஸ்வதியினுடைய அனுமதியைப்பெற்று பின் அவளைக்க வந்தவளாகையால் சரஸ் வதிதேவி கோபம் ஒழிந்தவளாய்எதிரேவந்து அவள்கையைப்பற்றி யிழுத்துக்கொண்டுபோய் தன்பக்கலில் உட்கார வைத்துக்கொண் டாள். அப்படியே இலக்ஷ்மியும் கங்கையும் இழுத்திழுத்துதங்கள் தங்கள் பக்கங்களில் வைத்துக்கொண்டு பின்னர் யாவரும் ஒன்றாய் அந்தப்புரம்போய் சுகமாய் வாழ்ந்தனர்.

நாரதரே! இவ்வண்ணம் அந்தஹரி புகழ்ந்து போற்றியபடியி னால்தான், துளசிவனத்தில் மறைந்திருந்த அந்தத்துளசி சரஸ்வதி யினால் அடிபட்ட அவமானத்தையும் துக்கத்தையும் மறந்து அவ ரடியில் வீழ்ந்து நமஸ்கரிக்கத்தக்கவளாயினள். காண்போமென்று வந்த இவரும் காணப்பெற்றார். அவர்புகழ்ந்த * பிருந்தா, பிருந்தா வதீ, விஸ்வபூஜிதா, விஷ்வபாவனீ, புஷ்பசாரா, நந்தனீ, துளசீ, கிருஷ்

---

* பிருந்தா பிருந்தாவதீ விஸ்வபூஜிதா விஸ்வபாவனீ, புஷ்பஸா ரா நந்தனீச-துளசீ கிருஷ்ணஜீவினீ: ஏதந் நாமாஷ்டகஞ் சைவஸ்தோ த்ரம் நாமார்த்த ஸம்யுதம், ய: படேத்தாஞ்சஸம்பூஜ்ய ஸோச்வ மேத பலம் லபேத்.

ணஜீவிநீ இந்த எட்டுநாமங்களும் காரண நாமங்களாகையால் இத னைப்படனஞ்செய்வோர் அஸ்வமேதபலனையடைவர். இவளுடைய ஸ்தோத்திரம் கண்ணுவசாகையிற் கூறப்பட்டிருக்கின்றது.

துளசிபூஜைக்குத் துளசிவிருக்ஷமே முக்கியரூபமானது. ஆவா கனாதிகள் அதிற்செய்யாமலே ஏனைய சந்தன புஷ்ப தூப தீப நை வேத்யாதி வுபசாரங்கள் செய்யலாம். அவள் புஷ்பசாரமாயும் பரி விரதையாயும் எல்லாவற்றையும் பரிசுத்தஞ் செய்கின்றவளாயும் மனோஹரையாயும் செய்யும்பாபங்களைக் கொளுத்துகின்றஅக்கினி ஜ்வாலையாயும் உள்ளவளென்று சாத்திரங்களிற் சொல்லப்பட்டிரு க்கின்றபடியினாலும் அவளுடைய பூஜைக்கு ஆவாகனம் வேண்டிய தில்லை. பூஜித்தபின்னர் அந்தப்பத்திரத்தை சிரசில் வைத்துக்கொ ள்ளவேண்டும். அது சர்வகாமபலத்தையும் சிவன்முத்தியையும் வி தேகமுத்தியையும் கொடுக்கும். முன்னேசொல்லிய தோத்திரத்தை யும் பூஜையையும் கார்த்திகைமாசம் பௌர்ணமி அவள் ஜன்மதின மாகையால் அன்றுசெய்வாராயின் அவரவர்குறை தீர்ந்து இஷ்ட காமங்களைப்பெறுவர் என்றனர். (சு ம்-சசை)

இருபத்தைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

காந்தி தூத ஜபா வல்யைநமஃ

இருபத்தாரும் அத்தியாயம்.

சாவித்திரி பூஜாவிதி.

நாரதர், வேதமாதாவான சாவித்திரி பிறந்தகாரண மென்ன? யாரால் பூஜிக்கப்பட்டாள்? என்றுவினவ நாராயணர் கூறுகின்றார்:- ஓ முனிவரே! சாவித்திரிதேவி பிரமனாலும்வேதகணங்களாலும் பண் டித கணங்களாலும் பாரதவருஷத்தில் அஸ்வபதியென்னும்அரசனு லும் பின்னர் நான்குவருணத்தாராலும் பூஜிக்கப்பட்டாள். இவ ருள் அஸ்வபதி என்னும் அரசன் பத்திரதேசத்தில் பகைவர்பலத் தையும் மித்திரர்களது துக்கத்தையும் நாசஞ்செய்கின்ற வல்லமை யுள்ளவனு பிருந்தனன். அவனது மனைவியாகிய மாலதி என்பவள்

வசிட்ட ருபதேசத்தால் சாவித்திரி தேவியினது ஆராதனத்தைப் பக்தியோடுசெய்தும் அந்தத்தேவி பிரத்யக்ஷ மாகாமையால் மனக் கவலையுடன் மனைவந்து சேர்ந்தனள். கணவன் அதுகண்டு அத்தே வியைத் தான் பூசிக்கவெண்ணி புஷ்கரக்ஷேத்திரத்தில் நூறுவரு டம் தவம்புரிந்துவந்தனன். அவனும் அத்தேவியைக்காணாது மன வருத்த மடைந்திருக்கும்போது லக்ஷம் காயத்திரிஜபம் செய்யும் படி அசரீரிவாக்குண்டாயிற்று. அச்சமயத்தில் பராசரமுனிவர்வர அவரை அரசன்வணங்கிநிற்க, முனிவர் கூறுகின்றார் :— திரியை ஒருதரம் ஜபித்தால் இராப்பகல் செய்த பாவமும், நூறு தரஞ்செபித்தால் ஒருமாதஞ் செய்தபாபமும், ஒருலக்ஷஞ் செபித் தால் இந்தச்சென்மத்திற் செய்தபாபமும், பத்துலக்ஷம் செபித் தால் வேறுசென்மத்திற் செய்தபாபமும்போம். பிராமண ரிவ்வாறு பத்துத்தரஞ்செபித்தால் முக்தியுண்டாகும். இந்தஜபத்தைத் தீர்த் தத்திலாவது தேவாலயத்திலாவது கிழக்குமுகமாக வுட்கார்ந்து உடம்பை அசைக்காது வணங்குந்தலையோடும் கையைப் பாம்பின் படம்போலும்வைத்துக்கொண்டு அநாமிகையின் மத்யரேகையிலி ருந்து கீழ்முகமாய் வலமாகத் தர்ச்சனிஅடிரேகைவரையில் செய்ய வேண்டும். இவ்வாறன்றி வெண்டாமரைக் கொட்டையினாலாவது ஸ்படிகத்தினாலாவது ஜபமாலையாகச் செய்துகொண்டு அதனைக் கோரோசனத்தாற்பூசி அரசிலையிலாவது தாமரையிலையிலாவதுவை த்து நூறுரு காயத்திரியை ஜபித்து பஞ்சகவ்யத்தினாலாவது கங்கா தீர்த்தத்தினாலாவது அபிஷேபித்துப் பூஜித்து அந்தமாலையை எடு த்து காயத்திரியை பத்துலக்ஷம்ஜபித்தால் சாவித்திரிதேவு பிரத் தியக்ஷமாவாள். மூன்று ஜன்மத்திற்செய்த பாபமும் ஒழியும்.

ஓ அரசனே! சந்திசெய்யாதவன் சர்வகர்மத்திலும் அருகனல் லன். அதனைச்செய்யாமற்போனால் பகலிற்செய்தசந்திகர்மபலனைக் கொடுக்காது. எவன் காலைமாலைகளிற் சந்தியைச்செய்யவில்லையோ அவன்சூத்திரன்போல் பிராமணகர்மத்திலிருந்து வெளியேதள்ளத் தக்கவனாவன். எவன் பிழைத்திருக்கும் வரையில் மூன்று சந்திகளை யும் செய்கின்றானோ அவன் தேஜஸினாலும் தவத்தினாலும் சூரிய னுக்குச் சமானமாவன். எவன் சந்தியால் சுத்தமானவனோ அவன் தான் சீவன்முக்தன் தேஜஸுள்ளவன். அவன்சம்பந்த மாத்திரத் தில் தீர்த்தங்களும், அவன் பாததூளியினால் பூமியும் சுத்தமாப்

விடும். அவனுடைய பாபங்கள் கருடனைவிட்டுச் சர்பங்கள் நீங்குவதுபோல் விலகுகின்றன. சந்தியைவிட்டவனிடம் பிதுர்க்கள்பிண்டத்தையும் தேவர்கள் பூஜையையும் பெற்றுக்கொள்ளார். மூலப்பிரகிருதிக்குப்பக்தனாகாதவனும், அதன் மந்திரத்தை ஜபிக்காதவனும், அத்தேவி உற்சவத்தைச் செய்யாதவனும், முச்சந்திகளைச்செய்யாதவனும், ஏகாதசிவிரத மில்லாதவனும், பகவானுக்கு நிவேதனஞ் செய்யாமல் புசிக்கிறவனும், விருஷபத்தின்மே லேறுகின்றவனும், சூத்திரான்னத்தைப்புசிக்கின்றவனும். சூத்திரசவத்தைக்கொளுத்துகிறவனும், சூத்திரஸ்திரீக்குப் பர்த்தாவானவனும், சூத்திரனுக்குச் சமையல்செய்கின்றவனும், அவனிடமிருந்து தானம்வாங்குகின்றவனும், அவனுக்குயாகஞ் செய்கின்றவனும், கத்தியினல் சீவிக்கின்றவனும், கன்னிகையையும் ஹரிநாமத்தையும் வித்தையையும் விற்பவனும், பிள்ளையும் பர்த்தாவும் இல்லாதவளது அன்னத்தைப் புசிக்கிறவனும், ருதுஸ்நானஞ்செய்தபெண் அன்னத்தைப்புசிப்பவனும், வட்டியில் சீவிப்பவனும், சூர்யோதயகாலத்தில்தூங்குகின்றவனும், மச்சம் சாப்பிடுகிறவனும், பூசைமுதலியவைகளை விட்டிருக்கிறவனும் விஷமில்லாத பாம்புக்குச் சமானமானவன் என்று கூறிப் பின் சாவித்திரிதேவியினது ஜபமுதலியவைகளை உபதேசித்து அரசனை இஷ்டசித்தியாம்படி ஆசீர்வதித்து பராசரமுனிவர் தன்னாச்சிரமத்துக்குப் போயினர்.

ஓ நாரதரே! இவ்விரதத்தை ஜேஷ்டகிருஷ்ண திரயோதசியாகிய சுத்தகாலத்தில் ஆரம்பித்து சதுர்த்தசியில் பக்தியோடு பதினன்குவருஷம் பதினன்கு வகைப்பட்டபழங்களோடும பதினன்கு வகைப்பட்ட நிவேதனங்களை விதிப்படிச்சமர்ப்பிக்கவேண்டு. எவ்வாறெனின், பிராமணமுகமாக முன்னர் கணேசனையும் தினேச (சூரிய) னையும் வன்னியையும் விஷ்ணுவையும் சிவனையும்சிவையையும் பூசித்துப் பின்னர் தேங்காய் மாவிலைபுடன்கூடிய மங்களமான கடத்தைத்தாபித்துசாவித்திரிதேவியை (தியானம்) "உருக்கிவிட்ட பொன்னிறமுள்ளவளாயும், பிரமதேஜஸினல் சொலிக்கின்றவளாயும்,கிரீஷ்மகால (ஆனி ஆடி) மத்தியானத்திலிருக்கும் ஆயிரஞ்சூரியகாந்தியைப்போல முள்ளவளாயும், புன்னகையரும்பும் பிரசன்னமுகமுள்ளவளாயும், இரத்தின பூஷணங்களால் பூஷிக்கப்பட்டவளாயும், வன்னிசுத்தமான வஸ்திரதாரியாயும், பக்தானுக்கிரகசீர

முடையவளாயும், சுகத்தையும் முக்தியையும் கொடுக்கிறவளாயும், சாந்தையாயும், காந்தையாயும், பிரமபத்தினியாயும், சர்வசம்பத் சொரூபிணியாயும் சர்வசம்பத்தைக்கொடுக்கிறவளாயும், வேதத்துக்கு அதிஷ்டானதேவதையாயும், வேதசாஸ்திர சொரூபிணியாயும், வேதபீஜசொரூபிணியாயும் இருக்கிற அந்தச்சாவித்திரியைப்பஜிக்கின்றேன்'' என்கிற தியானத்தினால் தியானித்து நைவேத்தியத்தைக்கொடுத்துத் தன்சிரசில் கையைவைத்துக்கொண்டு மறுபடியும் தியானித்து கடத்தில்ஆசனம் பாத்தியம் அர்க்கியம் ஸ்நாநீயம் அனுலேபனம் தூபம்தீபம் நைவேத்தியம் தாம்பூலம் குளிர்ந்தசலம் வஸ்திரம் பூஷணம் மாலை கந்தம் ஆசமனீயம் மஞ்ஜுகரமான படுக்கை என்னும்சோடசோபசாரத்துடன் வேதோக்தமந்திர பூர்வமாகப்பூசித்துத் துதித்து விதிப்படி நமஸ்கரிக்கவேண்டும். கடத்தில் பூஜிப்பதேயன்றி தாருவினாலாவது பொன்னினாலாவது பிம்பங்களை யமைத்துப்பூஜிக்கலாம். அதுவும்மிக்கபுண்ணியத்தைக்கொடுக்கும். பரிசுத்தமான சலமும் பாத்யசலமும் அறுகும் புஷ்பமும் சேர்ந்த அர்க்கியசலமும் சங்குசல அபிஷேகமும் புண்ணியத்தையும் பிரீதியையும்,சுகந்தமான கந்தோதக அபிஷேகம்ஸ்நேகத்தையும் பரிமளத்தையும்,கந்தத்திரவியம் பிரீதியையும் திவ்யகந்தத்தையுங் கொடுக்கும். ஓதேவியே! என்னால் கொடுக்கப்பட்ட ஸ்நாநீயமும் கந்தோதகஸ்நானமும், சர்வமங்களரூபமாயும் சர்வமங்களத்தையும் புண்ணியத்தையும் கொடுக்கிறதாயும் நல்லபரிமளத்தோடு கூடியதாயும் சுகத்தைக்கொடுப்பதாயுமுள்ள தூபமும், ஜகத்தைப்பார்ப்பதற்குக் காந்தியையுண்டுசெய்து அந்தகாரத்தை நாசஞ்செய்கிறதாயு முள்ளதீபமும், பசியைப்போக்கிச் சந்துஷ்டியையும் வலிவையும் இன்பத்தையும் செய்யவல்ல ருசியோடுகூடிய நைவேத்தியமும் அங்கீகரித்தல்வேண்டும். கற்பூரமுதலியவற்றால் பரிமளிப்பதாயும் ரம்யமாயும் துஷ்டியையும் புஷ்டியையும் செய்வதாயுமிருக்கிற சிறந்த தாம்பூலமும், மிகவும்குளிர்ந்து தாகநாசத்தைச்செய்கிறதாயும் உலகத்துக்கெல்லாம் பிராணரூபமாயுமிருக்கிற குளிர்ந்தசலமும், சபைக்கும் தேகத்துக்கும் அழகையும் பிரகாசத்தையும். உண்டுசெய்வதாயும் பஞ்சியினாலும் பூச்சியினாலும் உண்டானதாயு முள்ள வஸ்திரமும், பொன்னாற்செய்யப்பட்டதாயும் புண்ணியம்ஐஸ்வர்யம் இவையிற்றைக் கொடுக்கிறதாயுமிருக்கிற இரத்தினபூஷணங்களும், பலவித விருக்ஷங்களில் பலவிதரூபமாகவுள்ள பழவர்க்கங்களும், சர்வ

மங்களரூபமாயும் சர்வமங்களத்துக்கெல்லாம் மங்களமாயும் அதிக காந்தியோடு கூடினதாயும் பிரீதியைக் கொடுக்கிறதாயுமுள்ள பல விதமான புஷ்பமாலைகளும், புண்ணியத்தைக்கொடுக்கும் பரிமள முள்ள கந்தமும், பால்ய சோபையை விருத்திசெய்கிற அழகிய சிந் தூரமும், சுத்தமான கிரந்தியோடுகூடிய புண்ணியமான நூலினல் செய்யப்பட்டதாயும் வேதமந்திரத்தால் பரிசுத்தஞ்செய்யப்பட்ட தாய மிருக்கிற யக்ஞோபவீதமும் ஆகிய இவைகளையெல்லாம் அங்கீகரித்தல் வேண்டுமென்று மூலமந்திரத்தினல் கொடுத்துத் துதிக்கவேண்டும். விரதத்தில் பிராமணனுக்குத் தக்ஷிணைகொடுக்க வேண்டும். இலக்குமியாயாகாம பீஜங்களைப் பூர்வத்திலும் சதுர்த்தி யந்தமான சாவித்திரியை நடுவிலும் சுவா: என்பதை அந்தத்திலும் உள்ளதை அஷ்டாக்ஷரமந்திர மென்கின்றனர். மத்தியான்னத்தில் சொல்லப்படும் சாவித்திரிதோத்திரம் சர்வகாமபலத்தையுங்கொடுக் கும். அது பிராமணனுக்கு ஜீவனரூபமாயும் கோலோகத்தில் கிருஷ் ணனல் பிரமனுக்குக் கொடுக்கப்பட்டதாயுமுள்ளது. கிருஷ்ணன் ஆக்ஞையால் பிரமன் அதைத்துதிக்க சாவித்திரி சந்தோஷித்து அவனைப்பார்த்தாவாக இச்சித்து சத்தியவுலகில் பிரமனைடிருக்கி றாள். அத்தோத்திரத்தைக் கேட்பீராக. ஓசச்சிதானந்த ரூபை யே! மூலப்பிரகிருதி ரூபிணியே! இரண்யகர்ப்ப ரூபிணியே! பிர சன்னமாகக்கடவாய். தேவஸ்வரூபிணியே! பரமானந்த ரூபிணி யே! நித்தியையானவளே! நித்யமான புருஷனுக்குப் பத்தினியா னவளே! நித்யானந்தசொரூபிணி யாயிருக்கின்றவளே! பிராமண சாதி சொரூபமாக விருக்கின்றவளே! ஜ்வலிக்கும் அகனிபோன்ற வளே! அவர்களாற்கூறப்படும் சகலமந்திரரூபமாக இருக்கின்றவ ளே! பராத்பரமானவளே! மோக்ஷத்தையும் பிரமதேஜசையும் கொ டுக்கிறவளே! பிரசன்னமாகக்கடவாய். மனுவாக்குக் காயங்களி னல் செய்யப்படும் பாவங்களெல்லாம் உன்னை ஸ்மரித்தமாத்திரத் தில் பஸ்மமாய்விடும் என்றுகூறி, பிரஹ்மா அச்சபையில் நிற்கும் போது சாவித்திரி மகிழ்ந்து பிரமனுலகடைந்தனள். இத்துதியை அஸ்வபதிதுதித்து தன்மனோபீஷ்டத்தை யடைந்தான். எவன் சந் தியாவந்தனத்தின்பின் இதனைவாசிக்கின்றனனை அவன் நான்குவே தங்களையும்படித்தபலனை அடைகிறன் என்றனர். (சு - ம். அ 2)

இருபத்தாறும் அத்யாயம் முற்றிற்று,

ஓ

கலா லாபாயைநமஃ.

இருபத்தேழாம் அத்தியாயம்.

* அஸ்வபதிளசாவித்திரிஜன்மாதி

நாராயணர் கூறுகின்றார்:—அஸ்வபதியானவன் இந்தத்துதி யால்பூஜிக்கதேவி,பிள்ளையைப்பார்த்துச் சொல்வதுபோல் அரசனை அன்புடன்நோக்கி ஓமகாராஜனே! உன்பத்தினி பெண்ணையும், நீ புத்திரனையும் பெறப்பிரார்த்திக்கின்றீர்கள். அவ்வரீஷ்டம் காலக் கிரமமாக உண்டாகுமெனச் சொல்லி பிரமனுலகடைந்தாள். அர சன்வீட்டுக்குப்போனபின் சிலகாலங்கழித்து ஓர் பெண்பிறந்தது. அதற்குச் சாவித்திரி எனப் பெயரிட்டான். அக்குழந்தை சுக்ல பக்ஷசந்திரன்போல் வளர்ந்து பௌவனமடைந்து சத்யசந்தனையும் துணவானையுமுள்ள துயுமத்சேனன்புத்திரனாகிய சத்தியசேனனைப் பர்த்தாவாகக் கோரினள். அவளெண்ணப்படியே அரசன் சுவர்ண பூஷிதையாய் விவாகஞ்செய்துவைத்தனன். சத்தியசேனனும் சந் தோஷமாய்த் தன்வீடுசேர்ந்து ஒருவருஷங்கழித்துத் தன்தகப் பன் ஆக்ஞையால் கட்டைவெட்டிவரவும் பழம்பரித்துவரவும் காட் டுக்குப்போக, சாவித்திரியும் தெய்வவசமாய்க் கூடவேசென்றாள். சத்யசேனன்தற்செயலாய் மரத்திலிருந்து வீழ்ந்துயிர்துறக்க, அவ னையமன் அங்குஷ்டஅளவான சரீரமுள்ளவனைக் கட்டிக்கொண்டு போக, சாவித்திரியும் பின்னேபோயினள். சாதுக்களுக்குள் சிறந்த யமன் தன்பிஇவருஞ் சாவித்திரியைப் பார்த்துக் கூறுகிறாள்:— ஷ்யதேகத்தோடு எங்குவருகின்றீர்? வரவிருப்பமிருந்தால் தேகத் தைவிட்டுவருவாய். மனிதன் பஞ்சபூதசரீரத்தோடு என்லோகத் தை அடையவல்லமையுள்ளவனல்லன். இந்ததேகம் எனது உல கத்தில்எப்பொழுதும் அழியுந்தன்மையுடையது. ஓபதிவிரதையே! உன்பர்த்தாவுக்கு ஆயுள் முடிந்துவிட்டது. அவன் தான்செய்த கர் மத்தையனுபவிக்க இப்போது என்லோகத்துக்கு வருகிறான். எந் தவுயிர்களும் கர்மத்தினுண்டாகி கர்மத்தினாலேயே நசித்துப்போ கின்றன. சுகம் துக்கம் பயம் சோகம் முதலியனவெல்லாம் கர்மத் தினாலேயே அடைவிக்கப்படுகின்றன. கர்மத்தினால் தான் இந்தி

* அஸ்வபதியிடம் சாவித்திரி சென்றமடைதல்.

ராதி சரீரங்களைப் பெறுவதுமாம். எவன் சம்வரனுக்கு அடிமையாகின்றனே அவன் இப்பிறப்பினின்றும் விடுபடுகின்றன். இது நிச்சயம். உயர்ந்த பிராஹ்மணாதி சாதித்தன்மைகளும், இழிந்த சாதித்தன்மைகளும், சராசராதி சரீரத்தன்மைகளும், இராஜ போகாதிகளும், சகலசித்திகளும், சிவசாரூபாதி பதப்பிராப்திகளும், அவரவர்செய்யும் கர்மபேதங்களால் அடையப் படுவனவேயாம். இதில் ஐயமில்லை என்றுசொல்லுகிறார் பெரியோர் என்று இயமன் கூறினன் என்றனர். (சு-ம்-உ)

இருபத்தேழாம் அத்தியாயம் முற்றிற்று.

கம்பு கட்யை நமः

இருபத்தெட்டாம் அத்தியாயம்.

* தர்மராஜம் பிரதி சாவித்திரீகிருத அத்யாத்ம பிரஸ்நः

நாராயணர் கூறுகின்றார்:—சாவித்திரி இயமன்வார்த்தையைக் கேட்டுப்பரமபக்தியோடு அவனைப்பார்த்து கர்மம்என்றால் என்ன? எதனால் அதுஉண்டாகின்றது? அக்கர்மத்துக்கு எது எது? தேகியார்? தேகம் எது? எவன் கர்மத்தைச்செய்விக்கிறவன்? தியானம் என்றால் என்ன? புத்தி என்றால் என்ன? பிராணிகளுக்குப் பிராணன்எது? இந்திரியங்கள் எது? அவைகளின் இலக்கணங்களென்ன? தேவதைகள்யார்? அவைகளின்? புசிப்பிக்கின்றவன்யார்? புசிக்கின்றவன்யார்? போகமாவதென்ன? பிராயச்சித்தமாவதென்ன? சிவன்யார்? பரமாத்மாயார்? இவைகளையெல்லாம்நீர் நன்றாகத் தெரிவிக்கத்தக்கவராயிருக்கின்றீர் என்றாள். தருமராஜன் கூறுகின்றான்:—வேதத்தில் எந்தக்கருமம் சொல்லப்பட்டதோ அதுதான் சிறந்த சுபகரமான கருமம். வேதாங்கிகாரமல்லாத அவைதிகக்கர்மங்கள் அசுபகரமான கருமமாம். சங்கற்பமற்றதான பூஜை கர்மத்தை நசிப்பித்துப் பரமபக்தியை யுண்டாக்கும். அதனையுடையவன் கருவபலத்தை யனுபவிக்கிறதில்லை. அவனுக்குச் சுகதுக்க ரூபமான

* இயமனைப்பார்த்து சாவித்திரி கூறிய ஆத்மவித்தை பிரஸ்னை.

சம்சார சம்பந்த முண்டாகிறதில்லை. எவன் பிரஹ்மபக்தி யுடை டையவனே அவன்ஜன்மம் மிருத்யுஜராவியாதிசோகம்பயம் இவை களற்ற முக்தனென்று வேதங் கூறுகின்றது. ஓ பதிவிரதையே! வே தத்தினுற் கூறப்பட்டதும் சகலருக்குஞ் சம்மதமானதுமான பக்தி நிர்வாண பக்தி எனவும்,விஷ்ணுரூபபக்தி எனவும் இருவகை. அவ ற்றுள் வைணவர்கள் உருவபத்தியையும் பிரஹ்மவித்துக்களும்யோ கிகளும் நிர்வாணபக்தியையும் விரும்புகின்றனர். பரமாத்மா வாகிய பிரகிருதியானவள் கர்மத்தை விளைவிக்கும் பீஜரூபமாயும் எப்பொ ழுதும் அந்தக்கர்மபலத்தைக் கொடுக்கின்றவளாயும் கருமரூபமா கிய சூத்திரங்களைக் கைப்பற்றிக்கொண்டு பின் தான்அந்தக் கர்மரூ பிணியாய் அவ்வக்கர்மத்துக்குத் தக்க சராசரமாகிய சரீரங்களைப் பஞ்ச பூதங்களாலாக்கி அச்சரீர சம்பந்தங்களால் ஆன்மாக்களுக் குண்டாகும் அறிவின்பேதத்தால் அநுபவிக்கவேண்டிய கர்மங்க ளை அனுபவிக்கும் வண்ணஞ் செய்து அவ்வனுபவ திசையில் கர் மானுபவ நீக்கமுடையவர்களை முத்தியிலும் அஃதுடையவர்களை மீண்டும் பிறப்பிலுஞ் சேர்ப்பிக்கின்றாள். எங்ஙனமெனின், பெத் தான்மாக்களைப் பஞ்சபூதகாரியமாயும் பஞ்சவாயுக்களாலும் பஞ்ச தன்மாத்திரைகளாலும் பஞ்சேந்திரியங்களாலும் இயங்கப்பட்டு அனுபவிக்கப்படும் கருவியாயும் வாயுவாலும் பிராணனாலும் வன் மை மென்மை பெற்றுள்ள சரீரவாசிகளாகச் செய்தும் பின் சரீர நீக்கத்தில் இவ்வுலகினின்றும் வேறுபடுத்தி சூரியமண்டல வாயு மண்டல முதலிய இடங்களில் வசிக்கச்செய்து பின் பிறந்து பிறந் து இறந்து இறந்து வரும்படியாகவும் முத்தான்மாக்களை மீண்டும் பிறத்தற் கேதுவாகிய பதங்களில் தங்கச்செய்யாது பரம வியாபக மாயும் நிர்க்குண பரப்பிரஹ்மமாயும் சர்வகாரண காரணராயும் இருக்கின்ற பிரஹ்மசொரூபத்தோடு ஒன்றுபக்கலக்கும்படியாயுஞ் செய்கின்றாள். இவ்வுண்மை யறிந்தவர் ஞானிகளாய் மோக்ஷசுகத் தையும், அறியாதார் அஞ்ஞானிகளாய்ப் பிறவித் துன்பத்தையும் அநுபவிக்கின்றனரென்றறியக்கடவாயென்றனன். இவையெல்லாங் கேட்டசாவித்திரிவினவுகின்றாள்:—நான்கேட்கவேண்டியவை சிலவுள வாகலின் பர்த்தாவையும் ஞானக்கடலாகிய உம்மையும் விட்டுநான் எவ்விடத்திற்குப்போவேன். இதுநிச்சயம். நான் எந்தெந்தக் கேள் வியைக் கேட்கின்றேனோ அவைகட்கெல்லாம் நீர் உத்தரவுசொல்ல வேண்டும்.ஜீவர்கள் எந்தெந்தக் கருமபேதத்தினால் யோனி பேதங்

கனையும் சுவர்க்க நரகங்களையும் மேலான குருபக்தியையு மடைகின்ற னர்? எந்தெந்தக் கர்மத்தினல் யோகிகளாயும் ரோகிகளாயும் ஆகின்ற னர்? எத்தக்கர்மத்தினல் தீர்க்காயுளையும் அற்பாயுளும் துக்கத்தையும் சுகத்தையும் அடைகின்றனர்? எந்தெந்தக்கர்மத்தினல் அங்கஹீனல் குருடுசெவிடு கைகால்முடம் புத்திப்பிரமம் பேராசை சோரத்தனம் முதலியவற்றை யடைகின்றனர்? எந்தெந்தக்கர்மத்தினல் சித்தியும் சாலோகமுதலிய பதவிகளும் பாஹ்மத்துவமும் தபஸ்வித்தன்மை யும் சுவர்க்க முதலியசுகமும் வைகுண்டமும் கோலோகமும் பெற கின்றனர்? நரகம் எத்தனை விதம்? என்னென்ன பெயருள்ளவை? யார் யார் எந்தெந்த நரகினையடைந்து அவைகளில் எவ்வளவுகாலம் இருக்கின்றனர்? எந்தக்கர்மத்தினல் வியாதியுண்டாகின்றது? ஓ தரு மரே நாம் விரும்பிய வெல்லாம் கேட்டேன், அவைகட்கு விடைகூற வேண்டு மென்று வினவினள் என்றனர். (சு-ம். 30½)

இருபத்தெட்டாம் அத்தியாம் முற்றிற்று.



வ

ஸ நிர்ஜித பல்லவாயை நம:

இருபத்தொன்பதாம் அத்தியாயம்.

* தர்மராஜம்பிரதி சாவித்திரீகிருததான தர்மாதிபிரவ்ந:



நாராயணர் கூறுகின்றார்:— தருமராஜன் சாவித்திரியின் வார்த் தையைக்கேட்டு ஆச்சரியமடைந்து சிரித்து ஓ குழந்தையே! அரசன் தவத்தினலும் சாவித்திரியின் வரத்தாலும் அத்தேவியின் ஓம்சமா ய்ப்பிறந்தவளாகையால் நீ பன்னிரு வயதிள்ளவளாயினும் உனது ஞானமானது பெரியஞானிகளிடைய ஞானத்திலும் சிறந்திருக்கி றது. விஷ்ணுவின் மார்பிலிருக்கும் இலக்குமியைப்போலும், சிவ பெருமானது சரீரத்திலிருக்கும் பார்வதியைப்போலும், மற்றைய கற்புடைய ஸ்திரீகளைப்போலும் சௌபாக்கியவதியாய் சத்யவானிட த்திலிருப்பாய். இன்னமும் உனக்குவேண்டிய வரங்களைக்கேட்பா

* சாவித்திரி தருமராஜனைப்பார்த்துச் செய்யும் தானதர்மபிரஸ்னை.

யென்ன, சாவித்திரி எனக்கு நூறு அவுரசபுத்திரர்களும் என் தந்தைக்கு நூறு பிள்ளைகளும் என்மாமனுருக்குக் கண்களும் இராஜ்ய லாபமுமுண்டாகவேண்டும். லக்ஷம்வருடம் கழிந்தபின்னர் எனது நாயகனோடு கான் பரமபதத்தை யடையவேண்டு மென்றனள். ஓ பெண்ணே! இப்போது நீ வேண்டியவையன்றி உன்மனதிலுள்ள யாவையும் அடைவாயென்றன்.

அவள் மகிழ்ந்து, கர்மவேற்றுமைகளும், அவை தோன்றுமிடமும், அவற்றைச்செய்வோர் இவரென்பதும், அனுபவிப்போர் இவரென்பதும், ஈஸ்வரன் இவ்வுலகினைப் பரிபாலித்து வருகிற முறைமையினையும் கேட்க விருப்புகின்றேன் என்றவினவ இயமன் கூறுகிறன். ஓ நல்லாய் கர்மம், சுபம் அசுபம் என இருவகைப்படும். அவைதோன்றுதற்கிடமாக இருப்பதோடு அவற்றின் சேடங்களையும் அனுபவிக்கும் இடமாகவுமிருப்பது இப்பரதகண்டமேயாம். ஏனைய வுலகமெல்லாம் அவை தோன்றுவதற்கு இடமாகா; அவற்றைப் பெருக்கமாக அனுபவித்தற்கு இடங்களாம். அவற்றைச்செய்வோரும் அனுபவிப்போரும் சுரர் தைத்தியர் கந்தர்வர் தானவர் ராக்ஷசர்மனிதர் முதலியவர்களாம். கர்மங்கள் தோன்றுமிடத்தில் தோற்றுவிப்பதும், அவற்றைச் செய்வோரைச் செய்விப்பதும், செய்தவற்றை அனுபவிக்கச்செய்வதும் அவ்வனுபவத்தை மாறுது அவ்வவ் விடங்களில் அனுபவிக்கச் செய்வதுமே ஈஸ்வரன் பரிபாலிக்கின்ற முறைமையாம் என்று கூறிப் பின்னரும் சொல்லுகின்றன். அறிவுடையாளே! இதனல் கர்மங்களைச் செய்கின்ற சீவர்களே அந்தக் கர்மானுபவங்களைத் தாங்களே வருத்தி எண்ணிய இடங்களில் அனுபவிக்க அறியாரென்றும் எல்லாம் செய்வோன் ஈஸ்வரனென்றும் சீவர்களோ பரதகண்டத்தில் சுபாசுபகர்மங்களைச் செய்வதும் அக்கர்மானுபவங்களை சுவர்க்கநரகங்களில் மாறிமாச்சுழன்று ஓயாது அனுபவிப்பவருமாக விருப்பரென்றும், இவ்வகையாய் சுவர்க்க நரகங்களில் மொத்துண்டுழலச்செய்யும் சுபாசுபகர்மங்களை நிர்மூலம்செய்வது முற்கூறியுள்ள நிர்வாணபக்தி பிரகிருதி பக்தி என்னும் இரண்டுமேயாமென்றும் அறியக்கடவாய்.

இவ்வாறு அருளுகின்ற ஆண்மாக்கள் சுகமுற்று இன்பமடையும் வண்ணம் தர்மகர்ம புண்ணியபாவ பலப் பிரயோஜனங்களை எடுத்துக்காட்டுவது புராணங்களும் ஸ்மிருதிகளுமேயாம். அவற்றுள்

பாதகண்டம் ஒன்றே தருமமுதலியவை செய்தற்குரிய இடமெனவும் அவை செய்தற்கு வருணஸ்ரமாதிகள் எல்லை எனவும் வகுக்கப்பட்டுள்ளன. வருணம் நான்களுள் பிராஹ்மணஜாதியான்மாதுட சாதிகளுக்குள் சிறந்தவனென்றும், அதற்குக்காரணம் சாத்திரங்களில் சொல்லப்பட்ட தருமங்களை விடாமற்செய்யும் யோக்கியனுகளினென்றும், அவர்களில் சகாமன் நிஷ்காமன் என இருவகையினரென்றும், அவருள் நிஷ்காமனை பிரஹ்மனிஷ்டன் மிகச் சிறந்தவனென்றும், சகாமன் செய்யுங் கர்மத்துக்குரிய பலனை விரும்புகின்றவன் என்றும், அப்பலனை யடையத்தக்கவன் என்றும் சொல்லப்படும். நிஷ்காமன் பலனைவிரும்பி எந்தக்கருமத்தையும் செய்யாதுசெய்யுங் கடமையாகச் செய்கின்றவன். அவன் தேகம் நீங்கும்பொழுது யாதொருதுன்பத்தையும் அடையான். மீண்டும் பிறக்கான். பிரஹ்மபதத்தை யடைவான். சகாமர்கள் அந்த அந்த கர்மத்துக்குரிய பதங்களையடைந்து மீண்டும் பாதகண்டத்திற் பிறந்து காலக்கிரமத்தால் நிஷ்காமராகின்றனர். வைணவர்கள் என்றும் சகாமர்கள். அவர்களுக்கு நிர்மலமான புத்தி யுண்டாவதில்லை. ஸ்வதர்மத்திலும் தீர்த்தயாத்திரையிலும் மேலானதவத்திலும் ஆசையுள்ளவர்கள் பிரமலோகத்தை யடைகின்றனர். சத்கர்மத்தில் ஆசையும்பக்தியும் உடையவர் சூரியலோகத்தை யடைகின்றனர். பிரகிருதியாகிய தேவியினிடத்திலும், சிவன் கணபதி முதலாகச் சொல்லப்பட்ட தேவர்களிடத்திலும் எவர்கள் பக்தியைச் செய்கின்றார்களோ அவர்களெல்லாம் மணித்வீபமுதலிய அந்தந்த தெய்வங்களுடைய பதவிகளை யடைகின்றனர். இவர்களெல்லாம் தேவபதங்களையடையினும் மீண்டும் பாதகண்டத்தில் வந்து பிறப்பர். பிறவியெடுத்தல் ஒழியாது. எப்பொழுது நிஷ்காமசித்தியுண்டாகின்றதோ அப்பொழுது பிறவாநெறியாகிய முக்திசித்திக்கும்.

இனிக்காமியத்தை எண்ணிச் செய்வோரடையும்பயனைக்கேட்பாயாக:-சுதர்மபரிபாலகர் சுதர்மபரிபாலகனை பிராஹ்மணனுக்குக் கன்னிகாதானம் செய்தவர்களும், பலாபேக்ஷையுடையவர்களும் பதினைஞ்சு இந்திரர்வரையிலும், பொன் வெள்ளி முதலியவைகளையும் வஸ்திரங்களையும் கெய்முதலியவற்றையும் பிராஹ்மணர்களுக்குத் தானங்கொடுக்கின்றவர்கள் ஒரு மன்வந்திரம்வரையிலும் சந்திரலோகத்தில் வசிப்பர். பொன் தாம்பிரம் பசு இவற்றைத் தானஞ்செய்வோர்

சூரியனுலகில் பதினாயிரம்வருடம் ரோகமின்றி சுகமாய்வாழ்வர். பூமியையும் விசேஷமாகத்தனத்தைப்பும் தானஞ்செய்வோர் விஷ்ணுலோகத்திலும் ஸ்வேத த்வீபத்திலும் சந்திரசூரியர்கள் உள்ளவரையில் சுகமாய்வாழ்வர். எவரெவர்கள் எந்தெந்தத் தேவதைகளை யுத்தேசித்துப் பூதானம் உப்பரிகை முதலியவற்றோடு கூடிய கிருகதானமும் கிராமதானமும் செய்கின்றார்களோ அவரவர்கள் அந்தந்தத் தேவதைகளுடைய பதங்களையடைகின்றார்கள். தடாகப்பிரதிஷ்டை செய்வோன் ஜனலோகத்தில் ஒருதுகள் ஒன்றுக்கு ஒருவருடமாக வாழ்கின்றான். சத்பிராமணனுக்கு ஓர்கன்னிகையைத் தானஞ் செய்தவன் காலாயிரம் வில்லளவுள்ளதும் அதிற்சிறிது குறைவுள்ளதுமான பத்து கடபாவியைத் தானஞ்செய்தபலனை யடைகிறான். தடாகத்தை ஜீர்ணோத்தாரணஞ்செய்தாலும், சேறுமுதலியவற்றை எடுத்தாலும், நூதனமாய்ச் செய்தபலனுண்டாகும். அரசமரத்தைப் பிரதிஷ்டை செய்தவன் தபோலோகத்தையடைகிறான். சுந்தவனத்தைத் தானஞ் செய்தவன் திருவலோகத்தையடைந்து பதினாயிரம் வருடம் சுகமாய் வாழ்கின்றான். ஆலயத்துக்கு விமானதானஞ் செய்கின்றவன் பரம பதத்தையடைந்து ஒருமன்வந்தரம் வாழ்கின்றான். சித்திரமமைந்துள்ள விமானதானன் செய்கின்றவன் சுகுபங்கதிகமாயும், சிகிகை தானஞ்செய்தால் அதிற்பாதியும், டோலிதானஞ் செய்தால் நாறுமன்வந்தரமும் வாழ்வான். பகவான் உலாப்போதற்குரிய வீதியை மாளிகைகளோடு இருக்கச்செய்கின்றவன் பதினாயிரம்வருடம் இந்திரலோகத்திலிருப்பான். எவரெவர் எந்தெந்தச் சுகத்தை விரும்புகின்றார்களோ அவரவர் அததற்குரியதிரவியங்களைப் பிராமணர்களையாவது தேவர்களையாவது உத்தேசித்துத் தானங்கள் செய்வராயின் அந்தந்தச்சுகத்தை யடைகின்றனர். செய்யாதவரடையார். அஃதாவது எந்தப்பொருள்வேண்டுமோ அந்தப்பொருளைத் தானங்கொடுத்தால்தான் அப்பொருள் கொடுத்தவனுக்கு வருமென்பதாம். சுவர்க்காதி சுகங்களை யனுபவித்தவன் மீண்டும் பாரதவருடத்தில் பிராஹ்மணனாகவே பிறந்து வீட்டுநெறிகூட முயலுவான்; முயலாவிடின் மீண்டுஞ் சுவர்க்கசுகத்தையே யடையப்போவான். க்ஷத்திரியர் முதலானவர்களும் பிரஹ்மசித்தி வேண்டுமானால் பிராஹ்மணராகவே பிறத்தல்வேண்டும். அப்பிறப்புக் கூடுதல் அரிது. அது சன்மாந்திரங்களிற்செய்த புண்ணியபலத்தால் வரத்தக்கது. ஓ பதிவிரதையே! இதுவரையில் யான் சொல்லி வந்ததால் புண்ணியபாவங்கள் இரண்டென்றும், அந்

தக்கர்மாக்கள்தான் அவரவர்களுக்குச் சுகதுக்கங்களைக் கொடுப்ப தென்றும், அந்தக்கர்மங்களைச் சீவர்கள் செய்யாமலிருப்பதில்லை என் றும், அஃதோபோல் அந்தக்கருமங்களும் அனுபவதிற்குவராமல் போவதில்லைஎன்றும் துக்கானுபவத்தாலுண்டாகும் கஷ்டம் தெய்வ சகாயத்தாலும் தீர்த்தஸ்நான விசேஷத்தாலும், ஞானிகளுடைய தேகபரிசத்தாலும் நீங்கிவிடுமென்றும், ஆசாரதருமங்களையும் பிறர்க் கீதலையும் நிராசையையும் விட்டவர்கள் நரகினையடையாரென்றும் பெரியோர்சொல்லுவர் என்றறிவாயாக என்றனன். (சு-ம் 70½)

இருபத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.



கல்பவல்லீ ஸம புஜாயை நம:

மூப்பதாம் அத்தியாயம்.

* தான தருமாதி நிரூபணம்.



சாவித்திரி, இயமனைநோக்கி தானதருமாதிகளுடைய விசேஷங் களைக்கேட்க விரும்புகின்றேன் என்றுவினவ இயமன் கூறுகின்றான்:- பாதகண்டத்தில் அன்னதானத்தைச் செய்கிறவன் ஒன்னத்துக்கு ஒருவருடமாகச் சிவலோகத்தில் வாழ்வான். அன்னதானத்துக்கு மேல் தானமென்பது ஒன்று முன்னுமில்லை இப்போதுமில்லை இனியு மில்லை. அத்தானத்துக்கு அந்தணரேயன்றி ஏனைய சாதியாரும் உரிய வராவர். இதற்குயோக்கியர் அயோக்கிய ரென்பதுமில்லை. காலநியம மும் இல்லை. நல்லபாலுள்ள பசுவை வேதியருக்குத் தானஞ்செய்கிற வன் கோலோகத்திலும், புண்ணிய தீர்த்தக்கரையில் செய்தவன் அவ் வுலகில் தூறுவருடமும், தேவாலயத்தில் செய்தவன கோடிவருஷ மும், காமியார்த்தமாய்ச் செய்தவனும், சயனதானஞ் செய்தவனும் சந்திரலோகத்திலும், இரண்டு முகமுடைய பசுவைத்தானஞ் செய்த வன் ஒருவருடம் விஷ்ணுலோகத்திலும் வாழ்வார். வெண்மையான குடையைத் தானஞ்செய்தவன் ஆயிரமவருடம் வருணலோகத்திலும்,

* தருமராஜனை சாவித்திரி தானதருமாதிகளை வினுதல்.

வஸ்திரதானஞ்செய்தவன் பதினாயிரம் வருடம் வாயுலோகத்திலும், சாளக்கிராமத்தோடு வஸ்திரதானம் செய்தவன் சூரியசந்திராருள்ளவரையில் வைகுண்டத்திலும், தீபதானம் செய்தவன் அக்கினிலோகத்திலும், கஜதானஞ்செய்தவன் இந்திரனோடு அவனது அர்த்தாசனத்திலும், அஸ்வமும் சிவிகையும் தானஞ்செய்தவன் பதினொரு இந்திரருடைய காலமளவும் வருணலோகத்திலும், நல்ல தோட்டத்தைத் தானஞ் செய்தவன் ஒருமன்வந்தரமும், வெண்சாமரையைத் தானஞ் செய்தவன் பதினாயிரம்வருடம் வாயுலோகத்திலும் வாழ்வர். தானியத்தையும் இரத்தினத்தையுந் தானஞ்செய்தவர்கள் புத்திசூக்ஷுமத்தையும் சிரஞ்சீவித்தன்மையும் அடைவர். ஏற்போரும் வைகுண்டத்தை யடைவர். பௌர்ணமியில் டோலோற்சவம் செய்கிறவன் சிவன்முத்தனாய் இவ்வுலகசுகத்தையும் அனுபவித்து தேகாந்தத்தில் பரமபதத்தையும் அடைகிறன். அந்த உற்சவத்தை உத்தரபல்குனி நக்ஷத்திரத்தில் செய்தால் இருநூறுமன்வந்தரம் விஷ்ணுபதத்தில் வாழ்வான். தாம் பரபாத்திரத்தில் நிலதானஞ் செய்கிறவன் ஒரு எள்ளுக்கு ஒரு வருடம் சிவலோகத்தில் வசித்து, பின்னர் பூலோகம்வந்து உத்தம சாதியிற்பிறந்து சுகியாயும் சிரஞ்சீவியாயுமிருப்பன். பதிவிரதைக்குரிய நற்குண நற்செய்கைகளும், ரூபலாவண்ணிய விசேடங்களும் நிறைந்துள்ள கன்னிகையை சர்வாபரணத்தோடு அவள்போலும் உத்தமகுணம்வாய்ந்துள்ள அந்தணனுக்குத் தானஞ்செய்கின்றவன் பதினொரு இந்திரர்கள்வரையில் சந்திரலோகத்தில் தேவதாசிகளோடு கூடிக்களந்து சுகித்தும், பின் கந்தர்வலோகத்தில் ஊர்வசியோடு பதினாயிரம்வருடம் கிரீடித்திருந்தும் அதன்பின் ஆயிரஞ்சன்ம பரியந்தம் நல்ல உத்தம ஸ்திரியோடும் கூடி இல்லறதருமத்தில் வழுவாது வாழ்ந்தும் சுகித்திருப்பன். நல்ல மதுரமான கனிகளைத் தானஞ் செய்கிறவன் கனிவொன்றுக்கு ஓர் விருக்ஷமாக இந்திரலோகத்தில் வாழ்ந்துப் பின் நல்ல மானுஷாட்டியையும் நன்மக்களையு மடைந்து நற்கனிகள் நிறைந்துள்ள சிருங்கார உத்தியான வனத்தில் வாழ்வன். சாதாரணமான கனிகளைத் தானஞ்செய்கிறவன் சுவர்க்கத்தில் ரீண்ட காலம் வாழ்ந்து பாதகண்டத்தில் பிறக்கின்றன், நானாவிதமான பலவர்க்கங்களாலும் பல திரவியங்களாலும் நிறைவித்து கிருஹதானஞ் செய்கின்றவன் நாறுமன்வந்திரம் வரையில் சுவர்க்கத்தில் வசித்துப் பின் பாதகண்டத்திற் பிறந்து மஹாதான புருஷனாக வாழ்வான். நல்ல விளைநிலத்தைப் புண்ணிய க்ஷேத்திர

வாசிக்குத் தானஞ்செய்கிறவன் நூறுமன்வந்தரம் வைகுண்டத்தில் வாழ்ந்து பின்பரதகண்டத்தில் வந்து சக்கரவர்த்தியாகின்றான். அவனைப் பூமிதேவியும் நூறுசண்மம் வரையில் அரசனுக்கவேவைத்து தன்னையாளும்படிச் செய்வாள். சகலபிரயோசனத்தையும் கொடுக்கும் ஓர் கிராமத்தைத் தானஞ்செய்கிறவன் லக்ஷமன்வந்தரம் வைகுண்டத்தில் வாழ்ந்து, பின் பரதகண்டத்தில் நல்லகுலத்தில்வந்து லக்ஷம் கிராமத்துக்கதிகாரியாகின்றான். அவனைப் பூமிதேவியும் லக்ஷஜன்மம் அப்படியே வாழச்செய்வள். நல்ல ஜனங்களோடும் நல்ல பலவிருக்ஷங்களோடும் நல்ல கொடிவகைகளோடும் நல்ல தாமரைத் தடாகங்களோடும் கூடியுள்ள அரிய நகரத்தைத் தானஞ்செய்கின்றவன் பத்து லக்ஷம் இந்திரர் வரையில் கைலாசத்தில் வாழ்ந்து, பின்பரதகண்டத்தில் இராஜேந்திரனய் லக்ஷங் கிராமங்களையுடையவனய் லக்ஷம் வருடம் வாழ்வானென்பதிற் சந்தேகமில்லை, அப்படிப்பட்ட நல்ல நூறு கிராமத்தைத் தானஞ்செய்கின்றவன் கோடிமன்வந்தரம் வைகுண்டத்தில் வசித்துப் பின் பரதகண்டத்தில் வந்து ஜம்புத் வீபத்துக் கதிபதியாய் இந்திரசம்பத்துடையவனுப் ராஜராஜாக்களெல்லாம் அடிபணியத்தக்கவனுய் கற்பாந்தபரியந்தம் வாழ்கின்றான். பூமிக்குரிய சர்வாதிகாரத்தோடு பூதானஞ்செய்கிறவன் அதற்கு கான்குபங்கதிகமாய்ப் பெறுவான். ஜம்புத் வீபத்தையே நல்ல தபஸ்விக்குத் தானங் கொடுக்கின்றவன் சர்வக்ஷேத்திர வாசபலனையும், சர்வதீர்த்தஸ்நான பலனையும், சர்வதான பலனையும் அடைகின்றான்; அவனடையாததொன்றுமில்லை. தேவிபக்தனுகின்றவனுக்கு அம்மையிலும் இம்மையிலும் அடையப்படுவதொன்றில்லை. ஸ்ரீதேவியின் சிறந்த ஸ்தானமாகிய மணித்வீபத்தில் நீங்காது வாசஞ்செய்யப் பெறுவதே அவன் பெறத்தகும் பேறுகும். மீண்டுப் பிறப்பதென்பதையறியான், பிரமர்களுடைய இறப்பையெல்லாம் பார்த்துக்கொண்டே யிருப்பன். தேவி மந்திரத்தை யுபாசிக்கின்றவாகளும் பிறவியெடுக்கும் அல்லலிவிட்டு நிவ்ய விபூதிமான்களாய்த் தேவியினது சாரூப்பியமாகிய நிவ்யரூபத்தைப் பெற்று அத்தேவியினது பாதசேவையைச் செய்துகொண்டிருப்பர். சேதனசேதனங்கள் எத்தனைமுறை அழிவெய்தினும் அவர்கள் அழிவெய்தார். கார்த்திகை மாசத்தில் துலாதானஞ் செய்கின்றவர் மூன்றுயுகம் விஷ்ணுபதத்தில் சுகித்திருந்துப் பின் பூமியிற் பிறந்து ஜிதேந்திரியர்களாய் ஈஸ்வரப்பிரியடைவர். அருணோதயகாலத்தில் கங்கைமத்தியில் ஸ்நானஞ்செய்கின்றவர் அறுபதினுயிரம் வரு

டம் விஷ்ணுலோகத்திலிருந்துப் பின் பூவுலகில் நல்ல ஜன்மமடைந்து விஷ்ணுமந்திரத்தை ஜபித்து முன்போல் விஷ்ணுலோகத்தை யடைகின்றார். அதுபோல் நித்தியமும் ஸ்நானம் செய்கின்றவர் பரிசுத்தர்களாய் ஒவ்வோரடிக்கு ஒவ்வோர் அஸ்வமேதபலனை யடைகின்றனர். அவரது பாததூளியினல் பூதேவி பரிசுத்த மடைகின்றாள். அவர்கள் சூரிய சந்திரர் உள்ளவரையில் பரமபத வாசிகளாகிப் பின் நற்குலத்திற்பிறந்து ஈஸ்வர பக்தியுடையவராய் ஜீவன் முத்தர்களாய் ருஷிகளுக்குள் சிறந்த பிரஹ்ம தேஜோ ரூபராய் சர்வதர்மத்திலும் ஆசையுள்ளவர்களாய் பண்டிதர்களாய் இந்திரிய நிக்ரகர்களாய் வாழ்வர். சூரியன் மீனம் கடகம் இந்தராசிகள் நடுவிலிருக்கும்போது பரிமளமுள்ள நல்லதீர்த்தமாத்திரமாயினும் சுத்தாத்மாக்களுக்குக் கொடுக்கின்றவன் கைலாயத்தில் பதினைந்து இந்திரர்வரையில் வாழ்ந்திருந்து, பின் நல்லகுலத்திற் பிறந்து ரூபவானுய் சுகமுள்ளவனுய் சிவபக்தனுய் வேதவேதாந்த முணர்ந்தவனுய் வாழ்கின்றவனுவான். வைகாசிமாதத்தில் மா தானஞ் செய்கின்றவர் அந்தமாவின் ஒருதுகளுக்கு ஒருவருட மாகச்சிவலோகத்திலிருந்துப் பின்பூலோகத்தில் வந்து சிவபக்தியுடையவனுய் பண்டிதனுய் புத்திரபாக்கிய முடையவனுய் சீமானுய்ப் பூமிமானுய் வாழ்கின்றவனுவான், சித்திரையிலாவது மாகமாசத்திலாவது சங்கரனைப் பூசித்துக் கையில் நிம்பெடுத்துக்கொண்டு பக்தியோடு இரவும் பகலும் ஒருமாதமாவது அந்திப்பாதியாவது பத்துநாளாவது ஏழுநாளாவது இரண்டுநாளாவது நிருத்தஞ்செய்கின்றவன் சிவலோகத்தில் வசிப்பன். ஸ்ரீராமநவமியை அணுஷ்டிக்கின்றவன் ஏழுமன்வந்தரம் விஷ்ணுலோகத்திலிருந்து பின்பிறந்து இராமபக்தனுய் செல்வவானுய் வாழ்கின்றவனுவான். பிரகிருதிதேவிக்கு சுத்தகாலசம்பந்தமான பூஜையை எருமை வெள்ளாடு முதலான நைவேத்தியங்களாலும் தூபதீப நிருத்தகீதாதி உபசாரங்களாலும் பலவிதமான மங்களத்தையுஞ் செய்கின்றவன் சிவலோகத்தில் ஏழுமன்வந்தரம் சுகமடைந்து மீண்டும் பிறந்து நிர்மலமானபுத்தியையும் நிகரற்ற சம்பத்தையும் புத்திர பௌத்திராதி விருத்தியையு மடைவதுமன்றியானேகுதிரைகளோடு கூடியவனுய் ராஜாக்களுக்கெல்லாம் பிரபுவாய் ராஜபோகத்தோடு வாழ்வான். ஒருவருஷம் பிரதிசுக்லாஷ்டமியிலும் பாரதவருடத்தில் புண்ணியகூஷேத்திரத்தில் சோடசோபசாரத்

துடன் மகாலக்ஷ்மியைப் பூசிக்கின்றவன் கோலோகத்தில்பதினெ
குஇந்திரர்வரையில்வசித்துஉற்குலத்திற்பிறந்து ராஜ ராஜேஸ்வரனு
வன். கார்த்திகைபூரணியில் ராசமண்டலஞ்செய்து நூறுகோபர்க
ளையும் நூறுகோபிகைகளையுங் கூட்டி மண்ணிலாவது கல்லிலாவது
ராதாகிருஷ்ணரை எழுதி சோடசோபசாரத்துடன் பக்தியோடு
பாரதவருடத்தில் பூசிப்பவன் பிரமனுயுள்பரியந்தம் கோலோகத்
தில் வசித்துப் பின் பாரதவருடத்தில்வந்து கிருஷ்ணபக்தனுய் கிரு
ஷ்ணமந்திரத்தைப்பெற்று கோலோகமடைந்து கிருஷ்ணசாரூபத்
தையடைந்து கணங்களுக்கதிபதியாவான். அவனுக்குப் பிறப்புண்
டாகாது. சுக்லகிருஷ்ண பக்ஷ ஏகாதசியில் விஷ்ணுவைகுறித்து
ஆராதிக்கின்றவன் வைகுண்டத்தில் பிரமனுயுள்வரையில்வசித்துப்
பின் பிறந்து கிருஷ்ணபக்தனுய் தேகத்தைவிட்டு கோலோகத்தை
யடைகிறன். பாத்திரபத சுக்லபக்ஷ துவாதசியில் இந்திரனை வுபா
சிக்கின்றவன் அறுபதினுயிரம் வருடம் இந்திரலோகத்தில் சுகித்தி
ருப்பன். ஆதிவாரத்திலும் மாதசங்கிரமணத்திலும் சுக்லபக்ஷசப்த
மியிலும் சூரியனைக்குறித்து அவிசான்னம் உபயோகிக்கின்றவன்
சூரியலோகத்தில் பதினெரு இந்திரர் வரையிலிருந்துப்பின் பிறந்து
அரோகியாய்ச் சம்பத்துடன் வாழ்வான். ஜேஷ்டமாத கிருஷ்ண
சதுர்த்தசியில் சாவித்திரியைப் பூசிப்பவன் ஏழுமன்வந்தரம்பிரம
லோகத்திலிருந்து பின் பூமியில்வந்து அளவில்லாத பராக்கிரமும்
ஆயுளும் ஞானமும் சம்பத்தும் உள்ளவனுகின்றன். மாகமாத சுக்ல
பஞ்சமில் சரஸ்வதியை சோடசோபசாரத்துடன் பூசிப்பவன்
மணித்வீபத்தில் பிரமனுயுள் வரையில் பூஜ்யனுயிருந்துப் பின்புசக
ரேஸ்வரனுகப் பூமியில் வாழ்வான். பசு பொன் முதலானவைகளைத்
தானஞ்செய்கிறவன் பசுவின்ரோமம் ஒன்றுக்கு இரண்டு வரு
டமாக விஷ்ணுலோகத்திலிருந்துப் பின்பிறந்து புத்திர மித்திர
களத்திர சம்பத்திற் குறைவற்றவனுய் ராஜாராஜேஸ்வரனுய் வாழ்
வன். பரிசுத்தமான மிருஷ்டான்னத்தைக் கொடுக்கின்றவன் அவ
னது ரோமம் ஒன்றுக்கு ஒரு வருஷமாக விஷ்ணு லோக
த்திலிருந்துப் பின் சுகமுள்ளவனுயும் தானஞ் செய்கின்றவனு
யும் சிரஞ்சீவியாயும் சம்பத்துள்ளவனுயுங் நிகரற்ற பராக்கிரம
முள்ளவனுயும் பிறந்தனுபவிப்பன். ஹரிநாமத்தைக் கூறுகின்றவன்
நாமம் ஒன்றுக்கு ஒருவருடம் விஷ்ணுலோகத்தில் வசித்துப் பின
இவ்வுலகிற் பிறந்து சுகமுற்றவனுய் தான்யவானுயிருப்பன். அதனை

நாராயண கூஷத்திரத்திலிருந்துகூறின் கோடிபங்கு அதிகமும் கோடிவுரு ஜபிப்பின் சர்வபாப நிவர்த்தியும் ஜீவன்முக்தியும் விஷ்ணு சாரூபமும் வைகுண்டவாழ்வு முண்டாகும். பார்த்திபலிங்கத்தை மரணபரியந்தம் பூசிப்பவன் சிவலோகத்தில் ஒரு தூளுக்கு ஒரு வருடமாகவிருந்துப்பின் பிறத்து இராஜாராஜேந்திரனுவன். சாளக்கி ராமசிலையைப் பூஜித்து அதன் தீர்த்தத்தைப் பானஞ்செய்கின்ற வன் வைகுண்டத்தில் நூறுபிரமன் வரையிலிருந்துப்பின் பிறந்து ஹரிபக்தனுய் கிருஷ்ணலோகஞ் சென்றிருப்பன். எல்லாவிரதங்க ளையும் தபசுகளையும் செய்தவன் வைகுண்டபதத்தில் பதினுன்கு இந்திரர்வரையில் சுகமுள்ளவனுயிருந்துப்பின் பாரதவருஷத்தில் ராஜேந்திரனுய் பிறந்து முக்தனுவான். சகலதீர்த்தங்களிலும் ஸ்நா னஞ்செய்து பிரதக்ஷிணஞ் செய்கின்றவன் மோக்ஷமடைகின்றன். அவன்மீண்டும் பிறப்பதில்லை. பாரதவருஷத்தில் அஸ்வமேதஞ் செய்கின்றவன் குதிரையின் ரோமம் ஒன்றுக்கு ஒருவருஷமாக இந்திரன் அர்த்தாசனத்தில் வீற்றிருப்பன். ராஜசூய யாகத்தினுல் நான்குபங்குபலன் கிடைக்கும். தேவியஜ்ஞம் எல்லா யாகங்களி னுஞ்சிறந்தது. அதற்குச் சமானமானது மூவுலகிலுங்கிடையாது. அதனைத் திரிபுரசங்காரசமயத்தில் பிரம விஷ்ணு உருத்திரர்கள் செய்தார்கள். தக்ஷனும் இந்த யாகத்தைச் செய்து தக்ஷபிர ஜாபதியாய்த் தானெண்ணியவாறே யாவுமடையும் ஆற்றலுடைய வனுய்த்தேவியைத்தன்மகளென் றழைக்கும் பாக்கியம் பெற்றனன் இவ்வாறே தர்மராஜன் கஸ்யபர் ஆதிசேடன் கர்த்தமப்பிரஜாபதி சுவாயம்புமநு பிரியவிரதன் சனற்குமாரர் கபிலர் முதலிய யாவரும் செய்தனர். தேவியாகம் ஒன்றைச்செய்தால் ஆயிரம் ராஜசூயபாக பலனையடைகிறன். தேவியக்ஞத்தைப்போல் அதிபலனைத் தரத் தக்கது ஒன்றேனுங்கிடையாது. ஆகையால் இதைச்செய்தவன் நூறுவருடம் சிரஞ்சீவியாய்ச் சீவித்து சீவன்முக்தனுய் ஞானப்ர காசனுய் வாழ்வான். தேவர்களில் மஹாதேவரும், ருஷிகளில் நாரதரும், சாஸ்திரங்களில் வேதமும், நான்கு வர்ணங்களில் பிராமணவர்ணமும், புண்ணியதீர்த்தங்களில் கங்கையும், பரிசுத்தவ ஸ்துக்களில் விபூதியும், விரதங்களுக்குள் ஏகாதசியும், புஷ்பங்க ளுக்குள் துளசியும், நக்ஷத்திரங்களுக்குள் சந்திரனும், பக்ஷிகளில் கருடனும், ஸ்திரீகளுக்குள்பிரகிருதி ராதை வாணி பூமி இவர்களும் கரணங்களுக்குள் மனமும், பிரஜாபதிகளுக்குள் பிரமனும், பிரஜை

களுக்குள் அரசனும், வனங்களுக்குள் பிருந்தாவனமும், வருஷங்களுக்குள் பாரதவருஷமும்சம்பத்துகளுக்குள் இலக்குமியும்,வித்வான்களுக்குள் சரஸ்வதியும்,பதிவிரதைகளுக்குள் துர்க்கையும், சௌபரக்கியவதிகளுக்குள் ராதிகையும் எப்படிச் சிறந்தவர்களோ அப்படி சர்வயக்ஞத்திலும் தேவியக்ஞம் சிறந்ததாம். நூறு அஸ்வமேதத்தால் இந்திரபதமும் ஆயிரம் அஸ்வமேதத்தால் விஷ்ணுபதமுங்கிடைக்கின்றன.அப்படியே பிருதிவி என்பவன் ஆயிரம் அஸ்வமேதஞ்செய்து வைகுண்டமடைந்தனன். தேவியினது பதம் சகலவிரதங்களையும் தபங்களையும் வேதசிரவணங்களையும் பூ பிரதக்ஷணங்களையும் செய்து முற்றுப்பெற்றவர்க்கே கிடைக்கும் தேவியினது பாதகமலபூசையே வேதபுராண ஹிதிகாசங்களின் சாரமானதாகும். அதனால் தேவிவர்ணனையும் தியானமும் நாமமும் குணகீர்த்தனமும் தோத்திரமும் ஸ்மரணமும் சேவிப்பதும் ஜபமும் பாதோதகபானமும் நைவேத்தியபக்ஷணமும்பிரதிதினமும்செய்வதில் யாவரும் ஆசையாயும் சர்வசம்மதமாயும் இஷ்டமாயுமிருக்கின்றனர். ஆகையால் நீ அந்தர்குணமான பரப்பிரகிருதிரூபமாகவிருக்கின்ற பரப்பிரமரூபிணியைப் பிரதிதினமும் சேவிப்பாய். ஓ குழந்தையே! இனி நீ உன் பர்த்தாவைப்பெற்று வீட்டிற்சென்றுசுகமாக வாழக்கடவாய். மனிதர்களுடைய கர்மவிபாகத்தை உனக்குக்கூறினேன். யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதாயும் விரும்பப்பட்டதாயும் உள்ள கர்மவேற்றுமை யறிகின்றவர்களுக்குத் தத்வஞானம் உண்டாகுமென் றறிவாயாக என்றனர். (சு-ம்-கஉசு)

மூப்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

கஉ

கஸ்தூரி திலகோ ஜ்வலாயை நம:

மூப்பத்தொன்றும் அத்தியாயம்.

* சாவித்திரியோ யமரூ,தேவீமூலமந்திராதிதானம்

நாராயணர்கூறுகின்றார்:—இயமனிடம்சாவித்திரி தேவிசங்கீர்த்தனத்தைக்கேட்டுக்கண்ணீரும்பிப்புளகாங்கிதங்கொண்டுஒருவாக்

---

* சாவித்திரிக்கு இயமன் மூலமாகமுதலானவைகளை உபதேசித்தல்.

த்தை சொல்லுகின்றாள். ஓதருமராஜனே! சக்தியின் உத்கீர்த்தனம் யாவரையும் உத்தரிக்கச்செய்யுங் காரணமாயுள்ளது. கேட்போருக்கும் சொல்வோருக்கும் பிறப்பிறப்புமுதலிய யாவும்நீங்கும். தானவர் சித்தர் தபஸ்விகளாலும் செய்யப்பட்டது அதுவேயாம். வேதவாக்கியங்களால் புகழ்வதுவும் அவளதுசேவையேனப்படும். அதுவேதான் தவமும் யோகமும் அவற்றுலடையும் பதமுமாம். மோக்ஷமும் அமரத்துவமும் சர்வசித்தியும் ஆகிய இவையெல்லாமும் சக்தி கீர்த்தனஞ்செய்யும் சேவகனுடைய ஒருகலைக்குச் சமானமாகாது. ஆகலான் அத்தேவியினது கீர்த்தனவிதியைக் கூறும். ஓதருமராஜரே! மனிதர்களதுசுபகர்மத்தைக் கூறியதுபோல் அசுபகர்மத்தையுங் கூறவேண்டுமென்று பிரார்த்தித்து யமாஷ்டகத்தால் அவனைத்தோத்திரஞ்செய்கிறாள்.

முன் சூரியன் தபசினால் தர்மத்தையாராதித்து உம்மைப் பெற்றதனால்தருமராஜனெனப்பெயர்பெற்ற உம்மை நமஸ்கரிக்கின்றேன். சர்வசாக்ஷியாயிருக்கின்ற உமக்குச் சர்வப் பிராணிகளிடத்திலும் சமத்துவம் இருக்கின்றதனால் சமனெனப் பெயர் பெற்ற உம்மை நமஸ்கரிக்கிறேன். பிரபஞ்சத்தில் சர்வப்பிராணிகளுக்கும் நாசமுண்டாக்குவதனால் இயமனென்று பெயர்பெற்ற உம்மை நமஸ்கரிக்கிறேன். காலத்துக்குத்தக்கவாறு சர்வப்பிராணிகளையும் நாசஞ்செய்கின்றபடியால் கிருதாந்தனெனப் பெயர்பெற்ற உம்மை நமஸ்கரிக்கின்றேன். பாபிகளைச் சுத்திசெய்யத்தண்டாயுதத்தைத் தரித்திருக்கிறபடியால் தண்டதரனெப் பெயர்பெற்ற உம்மை நமஸ்கரிக்கின்றேன். தபஸ்வியாயும் பிரமநிஷ்டராயும் ஜிதேந்திரியராயும் சீவர்களுக்குக் கர்மபலத்தைக் கொடுக்கின்றவராயும் இருக்கிறபடியால் இயமனெனப் பெயர் பெற்ற உம்மை நமஸ்கரிக்கின்றேன். உம்முடைய ஆத்மாவையே தோட்டமாகவுடைத்தானவராயும் சர்வக்ஞராயும் பாபிகளுக்குக் கஷ்டத்தைக் கொடுக்கின்றவராயும் புண்ணியமித்திரராயும் இருப்பதால் புண்ணிய மித்திரனெனப் பெயர்பெற்ற உம்மை நமஸ்கரிக்கின்றேன், பிரமாவின் அம்சத்தாலும் பிரமதேஜசினாலும் பிரகாசித்து பிரஹ்மத்தை தியானிக்கின்ற ஈசராகிய உம்மை நமஸ்கரிக்கின்றேன்.

ஓ முனிவரே! இந்த அஷ்டகத்தை பிராதக்காலத்தில் படிக்கின்றவனுக்கு இயமபயம் போவதோடு சகலபாபங்களும் போம்.

மகாபாபியானவன் இதனைப்படிப்பானுயின் அப்பாவத்தா லனுபவி க்கப்படும் தேகதண்டனையாதிகளும் அவனுக்கு இயமனுல் செயய ப்படா என்றூர். (சு - ம்-களஉ)

மூப்பத்தொன்றும் அத்தியாயம் முற்றிற்று.

ஹகா ரார்த்தாயை நமஃ

மூப்பத்திரண்டாம் அத்தியாயம்.

நானவித நரககுண்டஸ்வரூபம்,

நாராயணர் கூறுகின்றூர்:—பிறகு தருமராஜன்மாயாபீஜமான மகாமந்திரத்தை விதிப்படிஉபதேசித்து ஓபெண்ணே! ஆன்மகோடி கள்செய்யும் புண்ணியபாவ கர்மங்களுக்குத் தக்கவாறு சுவர்க்க நரகங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றுள் புண்ணிய பே தங்கள் எத்தனையுண்டோ அத்தனைவிதமாக சுவர்க்கலோக சுகா னுபவபேதங்களும், பாவபேதங்கள் எத்தனையுண்டோ அத்தனை விதமாகத்துக்கானுபவநரகபேதங்களும் உண்டாக்கப்பட்டிருக்கின் றன. ஆகலான் புண்ணியகர்மாவையே செய்தவர் நரகினையும், அஃ தேபோல் பாபகர்மாவைச் செய்தவர் சுவர்க்கத்தையும் அடையார் இரண்டையுஞ்செய்தவர் அந்தந்தக்கர்மாக்களின்பலாபலத்துக்குத் தக்கபடி முன்னுக இரண்டையும் அடைகின்றனர். இப்பேதங் களை இவ்வுலகிலுங் காணலாம். சிலர் பிறந்தநாள்தொட்டு இறக்கு மளவும் சுகத்தையே அனுபவித்தும், சிலர்துக்கத்தையே அனுப வித்தும், சிலர் முன்னே சுகத்தையும், சிலர் பின்னேதுக்கத்தையும் சிலர் முன்னேதுக்கத்தையும் பின்னே சுகத்தையும் அனுபவித்தும் வருகின்றனர். சுவர்க்கநரகங்களாகச் சொல்லப்பட்ட அவ்விடங் களைப்போலவே இங்கும் சுகத்தையே கொடுக்கின்ற இடங்களும் துக்கத்தையே கொடுக்கின்ற இடங்களும், அப்படியே ஊர்வன நீர் வாழ்வன விலங்கு பறவைகள் முதலிய சரீரபேதங்களும் காணப் படுகின்றன. அச்சரிரங்கள் துன்பஞ்செய்வனவாயும், செய்யாத வாயும், துக்கத்தை யனுபவிப்பனவாயும், சுகத்தை யனுபவிப்பன

வாயும், தாவரங்களும் உபயோகப்படத்தக்கவையாயும், படாதவை யாயும் இருக்கின்றன. இவையெல்லாம் சுவர்க்க நரகானுபவங்கள் உண்டென்றறிதற்கு அமைக்கப்பட்டுள்ள அடையாளங்களேயாகும். அன்றியும் சுவர்க்க நரக அனுபவ விசேஷங்களை அனுபவிப்பாரும் இங்குளராகலின் அவர்களுக்காகவும் அமைக்கப்பட்டுள்ளன வென்றும் அறிவாயாக.

இனி, புராணபேதங்களால் நாமபேதப்பட்டிருக்கின்ற நரகங்களின் பெயர்களைக் கூறுகின்றேன் கேட்பாயாக:—வன்னிகுண்டம் தப்தகுண்டம் க்ஷார (உப்பு) குண்டம் மலகுண்டம் மூத்திரகுண்டம் சிலேஷ்மகுண்டம் விஷகுண்டம் தூஷிகா (கண்மல) குண்டம் வஸா (சிலேநீர்க்) குண்டம்சுக்லகுண்டம்ஸ்ருக்(இரக்த)குண்டம் அஸ்ரு (கண்ணீர்க்) குண்டம் காத்ரமல (தேகஅழுக்கு)குண்டம் கர்ணவிட்(காதுகுரும்பி)குண்டம் மஜ்ஜாகுண்டம்மாம்சகுண்டம் நகுண்டம்லோமகுண்டம்கேசகுண்டம்அஸ்திகுண்டம்தப்த தாம்பிரகுண்டம் லோககுண்டம் சர்மகுண்டம் நன்முய்க்காய்ச்சின கட்குண்டம் மூட்குண்டம் விஷநீர்க்குண்டம் விஷகுண்டம் காய்ச்சின எண்ணெய்க்குண்டம் இடித்துக்கொண்டே யிருக்கும்உலக்கைக்குண்டம் புழுக்குண்டம் பூய (ஆவியோடின அவிந்த) குண்டம் சர்ப்பகுண்டம் கொசுகுகுண்டம் பயங்கரமான விஷகுண்டம் வச்சிர தம்ஷ்டிரகுண்டம்தேள்குண்டம்சர(பாண)குண்டம்சூலகுண்டம் பயங்கரமான கத்திகுண்டம் கோளகுண்டம் முதலைக்குண்டம் காககுண்டம் மந்தானகுண்டம் பீஜகுண்டம் வச்சிரகுண்டம் தப்தபாஷாணகுண்டம் தீஷ்ணபாஷாணகுண்டம் லாலா (சொள்) குண்டம் மலீகுண்டம் சூர்னகுண்டம்சக்கரகுண்டம் வக்கிரகுண்டம் கூர்மகுண்டம் மகோல்பனம் ஜ்வாலாகுண்டம் பஸ்மகுண்டம் தப்த (கொளுத்துங்) குண்டம் தப்தசூசி (காய்ச்சியிருக்கும் ஊசி) அசிபத்திரவனம் க்ஷுரதாரம்(கத்திகறுக்கு) ஆட்டுமுகம்கோகாமுகம் நக்ரமுகம் (முதலை) கஜதம்சம் (யானைக்கடி) கோமுகம் கும்பீபாகம் காலசூத்திரம் மத்சியோதம் கிருமிகந்துகம் பாம்ஸுபோஜ்யம்(தூளியைச்சாப்பிடுதல்) பாசவேஷ்டம் (கயிற்றால் கட்டிப்போடல்) சூலப்ரோதம் (சூலத்தில்கோர்த்தல்) பிரகம்பனம் (அசைத்தல்)உல்காமுகம் (கொள்ளிக்கட்டை)அந்தகூபம் வேதனம்(குத்தல்) தாடனம் (அடித்தல்) ஜாலரந்திரம் (ஜன்னல்சந்து) தேக சூர்னம்

(தேகத்தைப்பொடிப்படுத்தல்) தலனம் (பிளத்தல்) சோஷணம் (வற்றச்செய்தல்) கஷம் (தேய்த்தல்) சூர்ப்பம் (முறம்) ஜ்வாலா முகம் தூமாந்தம் (புகையிருட்டு) நாகவேஷ்டனம் (பாம்புசுற்றிக்கொள்ளுதல்) இவ்வகைத்தாய் துக்கிதர்களுக்குத் துக்கத்தையும்கிலேசத்தையும் கோரமானபயங்கரத்தையும் இழிவையும்கொடுக்கத்தக்க நரகங்கள்எண்பத்தாறுள்ளன.பதியிரதையான ஓ சாவித்திரீ! இவைகள் பாபிகளுக்குக் கஷ்டத்தைக் கொடுக்கின்ற வர்களாயும் மதமத்தர்களாயும் பயங்கரர்களாயும் தண்டபாச கதாசூல ஹஸ்தர்களாயும் குரூரர்களாயும் தமோகுண முடையவர்களாயும் தயையற்றவர்களாயும் தேஜஸ்ஸுள்ளவர்களாயும் பயமற்றவர்களாயும் செவந்தும் பச்சையாயுமுள்ள கண்ணுடையவர்களாயும் யோகத்தோடும் சித்தியோடும் கூடினவர்களாயும் பலவித ரூபத்தைத் தரித்தவர்களாயும் எல்லாத்தொழில்களையும் அஞ்சாது செய்கின்றபாபிகளால் மரணகாலத்தில் காணப்பட்டவர்களாயும், தன்கர்மத்திலேயே பிரீதியுள்ளவர்களாயும் சாத்தர்களாலும் சௌரர்களாலும் காணபத்தியர்களாலும் புண்ணியஞ் செய்தவர்களாலும் சித்தர்களாலும் யோகிகளாலும் சுதந்தரமற்றவர்களாலும் காணத்தகாதவர்களாயும், பலவான்களாலும் பயமற்றவர்களாலும் சுவப்பனத்தில் காணப்படுகிறவர்களாயுமிருக்கிற படர்களாலும் பதினாயிரம் கிங்கரகூட்டங்களாலும் எப்போதும் ரக்ஷிக்கப்படுகின்றனவாயும் இருக்கின்றன. இனி எவரெவர்கள் எதிலெதில் வசிக்கவேண்டுமோ அதனையுங் கேட்பாயாக என்றனர். (சு-ம் உ அ)

முப்பத்திரண்டாம் அத்யாயம் முற்றிற்று.

கலா லாபாபைரம.

முப்பத்துமூன்றும் அத்தியாயம்.

* நரககுண்ட பதந யோக்ய பாபலக்ஷணம்.

தருமராஜன் கூறுகின்றார்:—ஈஸ்வரசேவையில் பிரீதியுள்ளவனும், சுத்தமானவனும் யோகசித்தனும், விரதமுள்ளவனும், தபஸ்

* நரககுண்டத்தில் வாழத்தக்க பாபிகளின் இலக்கணம்.

வியும், பிரமசாரியும், நரகினையடையார் இதுநிச்சயம். இளைத்திருக்கும் பந்துக்களைச் சுடுசொல்லால் சுடுகின்றவன் வன்னிகுண்டத்தில் அவன் தேகரோமம் எவ்வளவோ அவ்வளவு வருஷகாலமிருந்துப்பின் பாபிகளா லுயிருடன் கொளுத்தப்படும் மிருகசென்மத்தை மூன்றுதரம் அடைகின்றன். பசிதாகத்தால் மிகவும் வருத்தப்பட்டுத் தன்வீட்டுக்குவந்த பிராமணனைப் புசிப்பிக்காதவன் துக்கத்தைச்செய்கிற தப்தகுண்டத்தில் தன்ரோமத்துக்கு ஒருவருடமாக நீர்வரண்ட இடத்தில் கெருப்பினால் கொளுத்தப்பட்ட இடத்தில் ஏழுஜன்மம் பக்ஷியாகப்பிறக்கின்றன். ஞாயிற்றுக்கிழமை மாதப்பிறப்பு அமாவாசை சிராத்ததினம் இக்காலங்களில்வஸ்திரங்களுக்கு அழுக்குப்போக உப்பைச்சேர்க்கின்றவன் க்ஷாரகுண்டத்தில் நூறுக்கு ஒருவருடமாக இருந்துப்பின்ஏழுசன்மம் வரையில் வண்ணானைப்பிறக்கின்றன். மூலப்பிரகிருதியையும் வேதசாஸ்திர புராணிதிகளையும் பிரம விஷ்ணு சிவ பார்வதி சரஸ்வதிமுதலியவர்களையும் நிந்திக்கின்றவர்கள் பயங்கரமான மேற்கூறிய குண்டத்தில்அநேகற்பகாலமிருந்துப் பின் சர்ப்பயோனியையடைகிறார்கள். தேவி நிந்தாபராதமான குற்றத்துக்குப் பிராயச்சித்தங்கிடையாது. ஒருவன் தானேயல்லாமல் தன்னாலும் பிறராலும் உண்டாக்கப்பட்ட விருத்திகளை அவர்களுக்குப் பயன்படுத்தாமல் ஒருவனே அபகரிக்கின்றவன் அறுபதினாயிரம்வருடம் மலகுண்டத்தில் மலத்தைச் சாப்பிட்டுக்கொண்டேயிருந்துப்பின்மலத்தில் புழுத்த புழுவாகின்றன். ஜீர்ணமான தடாகத்தைப்புதுக்காது நூதனமாகத்தடாகமெடுப்பவன் மூத்திரகுண்டத்தையடைந்து வெட்டுமண்ணாளிக்கு ஒருவருடம் அதனையேயுண்டு நூறுவருடம் விருஷபமாய்ப் பிறக்கின்றன். பக்ஷ்யபோஜ்யத்தோடு கூடின அன்னத்தை உண்பருடனிருந்துண்ணுமல் ஒருவனுப்புசிக்கிறவன் சிலேஷ்மகுண்டத்திலிருந்து நூறுவருடம் அதனையே புசித்துப் பாரதவருடத்தில் நூறுவருடம் பிரேதமாயிருந்து சிலேஷ்மத்தையும்மூத்திரத்தையும் சிலத்தண்ணீரையும் புசித்துப் பிறகு சுத்தியாவான். தாய்தந்தை குரு பத்தினி பிள்ளை பெண் நாதனற்றவன் இவர்களைப் போஷிக்காதவன்விஷ(கர)குண்டத்திலிருந்து அதை நூறுவருடம் புசித்து பின்நூறுவருடம் பூதயோனியையடைந்து பிறகு சுத்தியாகின்றன். அதிதியைபார்த்து கண்ணைக் கோணல்செய்கின்றபாபியினுற்கொடுக்கப்படும் தர்ப்பணசலத்தை தேவர்களும் பிதுர்க்களும்

கிரகியார். பிரஹ்மஹத்திமுதலான பாபங்களைச் செய்கின்றவர்கள் தூஷிகாகுண்டத்திலிருந்து நூறுவருடம் அதனேபுசித்துப்பின் நூறுவருடம் பூதயோனியையடைந்துப்பின்பு சுத்தியாகிறார். பிராமணனுக்குத் திரவியங்கொடுத்து மறுபடியும்வாங்கி மற்றொருவருக்குக் கொடுக்கின்றவன் வஸாகுண்டத்தில் நூறுவருடமிருந்து அதனேயேபுசித்துப் பாரதத்தில் ஏழுதரம் ஒணைகப்பிறந்துப்பின்குரூரனையும் அற்பாயுளுடையவனையும் தரித்திரனையும் பிறப்பான். புருஷனை ஸ்திரீயாவது ஸ்திரீயைப் புருஷனவது சுக்கிலத்தைக் குடிக்கும்படிச் செய்கின்றவர்கள் சுக்ல குண்டத்திலிருந்து நூறுவருடம் அதனேயேகுடித்து நூறுவருடம்புழுவாய்ப்பிறந்துப் பின்சுத்தியாகின்றனர். குருவையும் பிராமணனையும் இரக்தம்வரும்படி அடிக்கிறவன் இரக்தகுண்டத்தில்வீழ்ந்து நூருவருஷம் அதனேயே குடித்துப் பின் பாரதத்தில் ஏழுதரம்புலிஜன்மமடைந்துபுனிதனாகின்றன். பகவானது சங்கீர்த்தனஞ்செய்தும் நிருத்தஞ்செய்தும் பகவானது குணத்தைப்பாடியும் இருக்கிற பக்தனைப்பார்த்துக் கண்ணீர்வரச் சிரிக்கின்றவன் கண்ணீர்க்குண்டத்திலிருந்து நூறுவருடம் அதனேயே உண்டு மூன்றுசன்மம் சண்டாளனாய்ப்பிறந்து சுத்தனாகின்றன். கினேகனிடம் பிரதினம்விரோதிக்கின்றவன் தேகத்திலுண்டாகும் அழுக்குக்குண்டத்தில் நூருவருட மிருந்து மூன்று சன்மம் கழுதையாயும் நரியாயும் பிறந்து சுத்தனாகின்றன். செவிடனைப் பரிகசிக்கின்றவன் காதுகுறும்பிகுண்டத்தில் நூறுவருடம் அதனேயேபுசித்துப் பின் ஏழுசன்மம் தரித்திரனையும் ஏழுசன்மம் அங்கஹீனனையும் பிறக்கின்றன். உலோபத்தினால் தன்னே ரக்ஷித்துக் கொள்வதற்காக ஒருவன் சீவனத்தைக் கெடுக்கின்றவன் மஜ்ஜாகுண்டத்தில் லக்ஷம்வருடம் அதனேப்புசித்துப் பின் ஏழுவருஷம் மூயலாகவும் ஏழுவருடம் மீனாகவும் மூன்றுவருடம் பன்றியாகவும் ஏழுவருடம் கோழியாகவும் பிறந்துப்பின் மான் முதலான ஜன்மங்களேயுமடைந்து சுத்தியடைகின்றன். தன்கன்னிகையைக் காப்பாற்றித் திரவியாபேக்ஷையினால் விற்பனேசெய்கின்ற மூடன் மாம்சகுண்டத்தில் கன்னிகையின் ரோமத்துக்கொருவருடமாக அதனேயே புசித்துநூருவருடமிருந்து எனது தூதர்கள் அடிக்கும் அடியைப்பெற்று பூமியில்பிறந்து இரக்தமாம்சங்களேத் தலேயிற் சுமந்து அதினின்றும் பெருகும் ரக்தத்தைப் பசியினால்நக்கிப்பிறகு அறுபதினாயிரம் கன்னிகைகளின் மலத்திற் புழுவாயும் ஏழுசன்மம் வேட-

ஞ்யும் மூன்றுசன்ம்ம பன்றியாயும் ஏழுசன்மம் கோழியாயும்ஏழு சன்மம் தவளையாயும் ஏழுசன்மம் ஆட்டையாயும் ஏழுசன்மம் காக்கையாயும் பிறந்து சுத்தியடைவான். விரதம் சிரார்த்த முதலிய புண்ணியதினங்களில் சங்கடஞ்செய்கின்றவனும், கூவரகர்மஞ்செய்துகொள்ளுகின்றவனும்,சர்வகர்மத்திலும்அசுத்தனுயிருக்கின்றவனும், இவரெல்லாம் நகம்லோம (ரோம) ம் நிறைந்துள்ளகுண்டங்களிலிருந்து பாவஞ்செய்கிற தினம்ஒன்றுக்குஒருதேவமானவருஷம் அவைகளேயதின்பவராய்த்தடியிலடிக்கப்படுவர்மயிரோடுகூடிய மண்ணினற்செய்த பார்த்திபலிங்கத்தைப் பூசிக்கின்றவன் லிங்கத்தின் தூள்ஒன்றுக்குஒருவருஷமாகரௌரவகுண்டத்திலிருந்துகடைசியில் சிவபெருமானுடைய கோபத்தால துருக்களுப்பிறந்து நூறுவருடத்துக்குமேல் இராக்கத சன்மமடைந்து சுத்தியாகின்றன். பிதுர்க்களுக்கு விஷ்ணுபாதத்தில் பிண்டங் கொடுக்கா திருக்கின்றவன் ரோமத்துக்கு ஒருவருடமாகஅஸ்திகுண்டத்திலிருந்துபின்பு நாயாய் ஏழுதரம்பிறந்து எலும்பைக்கடித்துத்தின்று, பிறகு மகாதரித்திரனுப்பிறந்து தேகசுத்தியடைகின்றன். கர்ப்பிணியான ஸ்திரீயை அநுபவிக்கின்றவன் தகிக்கப்பட்ட தாம்பரகுண்டத்தில் நூறுவருஷமிருக்கின்றன். பிள்ளையும்பர்த்தாவுமில்லாதவள்ருதுஸ்நானம்செய்தவள் இவர்களிடம் அன்னம் புசிக்கின்றவன் லோககுண்டத்தில் நூறுவருடமிருந்து வண்ணானகவும்பின் ஏழுசன்மம் காக்கையாகவும் இரணமூளலவனுகவும் தரித்திரனுகவும் பிறந்து சுத்தியாகின்றன். * தேவதிரவியத்தை 0 தோல்கையினுல்தொடுகின்றவன் நூறுவருடம் சர்மகுண்டத்திலிருக்கின்றன். சூத்திரனுல் உத்தரவுகொடுக்கப்பட்டவனுய்ச் சூத்திரான்னத்தைப் புசிக்கின்றவன் நூறுவருடம் நன்றுய்க் காய்ச்சப்பட்ட கள்குண்டத்திலிருந்து, பிறகு ஏழுசன்மம் சூத்திர சிரார்த்தான்னத்தைப்புசிக்கின்றவனுகப்பிறந்து சுத்தனுகின்றன். வாக்கினுல் துஷ்டனுய்க் கொமையாய்ப் பேசுகின்றவனும் பிரபுவை அடிக்கின்றவனும் தீக்ஷணமான முட்குண்டத்தில் அதனேய தின்பவராய் இவரடித்த அடியினும் நான்குபங்குதிகமாக என்றூதரால் அடிக்கப்பட்டவராய், பிறகு சிரேஷ்டமான குதிரைசென்மமெடுத்து சுத்தியாகின்றர். பிழைத்திருக்கும் மாநுடனைக்கொல்லுகின்றவன் விஷகுண்டமடை

ன

* சந்தனபுஷ்பபழமுதலானவை.

0 தன்தேகமுதலியவைகளைத்தொட்டதை.

ந்து அதனையே ஆயிரம்வருடமுண்டு பிறகு மாநுடனைக்கொல்லுஞ் சுபாவமுடையவனாயும்இரணமுடையவனாயும் நூறுசன்மமடைந்து பிறகு ஏழுசன்மம் குஷ்டரோக முள்ளவனாவன். பசுவையாவது எருதையாவது பாரதவருடத்தில் தானாவது வேலைக்காரனைக் கொண்டாவது தடியினால் அடிக்கின்றவன் நான்குயுகம்வரையில் நன்றாய்க்காய்ச்சப்பட்ட தைலகுண்டத்தில்அம்மாடுகளின்ரோமத்துக் கொருவருடமாகஇருந்து எருதாய்ப்பிறப்பான். பிராணிகளைக் குந்தாயுதத்தாலாவது நெருப்பினாற்காய்ச்சிய லோகத்தினாலாவது கொல்லுகின்றவன் குந்த குண்டத்தில் பதினாயிரவருடமிருந்துப் பின் நல்லயோனியையடைந்து வியாதியுடையவனாகக்கஷ்டப்பட்டு சுத்தமாகின்றான். வீணாக மாம்சத்தைத் தின்னும் பிராமணனும் ஈஸ்வர நிவேதனமாகாத அன்னத்தைப் புசிப்பவனும் கிருமிகுண்டத்தையடைந்து, தன்ரோமம் எவ்வளவோ அவ்வளவுகாலம் அதனையே புசித்து,மூன்றுசன்மம் துருக்கனாகப்பிறந்துப் பின் பிராமணனாகப் பிறக்கின்றார். சூத்திரனுக்கு யாகஞ்செய்விக்கின்றவனும், சூத்திரான்னத்தைப் புசிக்கின்றவனும், சூத்திரசவத்தைக் கொளுத்துகின்றவனும்பூயகுண்டத்தில்தங்கள்ரோமம்எவ்வளவோ அவ்வளவுவருடகாலமிருந்து அதனையேபுசித்து யமதூதர்களால் அடிக்கப்பட்டவர்களாய்,பின்பு ஏழுசன்மம் சூத்திரராயும்மகாரோகிகளாயும்தரித்திரர்களாயும்செவிடராயும் ஊமையாயும்பிறக்கின்றார்கள்.சிரசில்பத்மமிருக்கிறசர்ப்பத்தைக் கொல்லுகின்றவன் தன்ரோமம்எவ்வளவோ அவ்வளவு வருடகாலம் சர்ப்பகுண்டத்தில் சர்ப்பங்களினால் கடிக்கப்பட்டும் யமதூதர்களால் அடிக்கப்பட்டும் சர்ப்பத்தின் மலத்தைப் புசிக்கின்றவனாயிருந்துப்பின் சர்ப்பமாய்ப்பிறந்து,பிறகு அசுரனாயும் சர்ப்பத்தினால்கடிபடுகின்றவனாயும் அற்பாயுள்களில் கஷ்டமான மரணத்தை அடைகின்றவனாயுமிருப்பன். தெய்வத்துக்குக் கொடுக்கப்பட்ட விருத்தியைக்கொண்டு சீவிக்கின்றவர்களையும்சுவல்பசெந்துக்களைக் கொல்லுகின்றவர்களையும் அவர்களால் எத்தனை செந்துக்கள்மரணமடைந்தனவோ அவ்வளவுகாலம் தப்தகுண்டத்தும் கொசுகுகுண்டத்தும் அவைகளால்புசிக்கப்பட்டவராய் ஆகாரமில்லாதவராய் யமதூதர்களால் கைகால்கள் கட்டப்பட்டு அடிக்கப்பட்டவராய்ப் பிறகு அற்பசெந்துக்களாகவும் துருக்கராகவும் அங்கங் குறைவுள்ளவராகவும்பிறந்துசுத்தராகின்றார். தேனீக்களைக்கொன்று தேனைப்புசிக்கின்றமூடன், விஷகுண்டத்தில்ஒருசீவனுக்

னும் நூறுவருடம் சக்கரகுண்டத்தில் வசித்து யமதண்டனையடைந்து மூன்றுசன்மம் வாணியராகவும் பின் வியாதி யுள்ளவ ராகவும் ரோகமுள்ளவராகவும் பிறந்துசுத்தியடைகின்றார்கள். பசுவினிடத்தும்பிராமணரிடத்தும்வக்ர தன்மையைகாட்டுகின்றவன்வக்ரகுண்டத்தில் நூறுயுகமிருந்து பிறகு ஏழுசன்மம் வக்ரமான அங்கமுள்ளவனாயும் தரித்திரனாயும் வம்சமற்றவனாயும் பாரியை யற்றவனாயும் பிறந்து சுத்தியடைகின்றான். கூர்மமாம்சத்தைப் புசிக்கிறபிராமணன் கூர்ம குண்டத்தில் நூறுவருடம் அவைகளால் கடிக்கப்பட்டு பின் மூன்றுசன்மம் ஆமையாகவும் பூனையாகவும் பன்றியாகவும் மயிலாகவும்பிறந்து சுசியாகின்றான். பிராமணனது தயிர் நெய் திருடுகின்றவன்ஜ்வாலாகுண்டத்தையும்,பஸ்மகுண்டத்தையும்அடைந்து நூறுவருடமிருந்து எண்ணெயினால்காய்ச்சப்படுகிறவனாய்ஏழு சன்மம் மீனாகவும், எலியாகவும்பிறந்து பிறகுசுத்தமடைகின்றான். சுகந்த தைலத்தையாவது நெல்லிக்காயையாவது வேறெந்தவாசனை திரவியத்தையாவது புண்ணியக்ஷேத்திரமான பாரதவருஷத்தில்திருடுகின்றவன் தக்த (காய்ச்சிய) குண்டத்தில் இராப்பகலுந் தன்மயிருக்கொருவருஷங் கொளுத்தப்பட்டு ஏழுசன்மம் மூஞ்செலியாயும், மூன்றுசன்மம் கஸ்தூரிமிருகமாயும், ஏழுசன்மம் புழுகுபூனையாயும் பிறந்து பிறகு மனிதனாவான். பாரதவருஷத்தில் தகப்பனார் காலமுதலாக அனுபவித்துவரும் பூமியைத் தன்பலத்தினாலாவது கபடத்தினாலாவது இம்சையினாலாவது அபகரிப்பவன் தக்த சூசி (காய்ச்சியஊசி) குண்டத்தில் இராப்பகலுந்தபிக்கின்றவனாய்க்காய்ச்சிய எண்ணையில் விழுந்த ஜீவன் துடிப்பதுபோல்துடித்து ஆகாரமற்றவனாய்க் கூவிக்கொண்டுயமதூதர்களால் அடிக்கப்பட்டு அறுபதினாயிரவருடம் மலப்புழுவாயிருந்துப்பின்பூமியில் தரித்திரனாகப் பிறந்து துன்பமனுபவித்து மீண்டும் அந்தச்சூசிகுண்டத்திலேயே ஏழு மந்வந்தர பரியந்திரம் தபிக்கப்பட்டவனா யிருந்து பிறகு பூமியற்ற தரித்திரனாய்ப்பிறந்து துன்பத்தையனுபவித்து சுத்தனாய் பிறகு தன்னுடைய ஜன்மத்தையடைந்து சுயதர்மத்தைச் செய்யத் தொடங்குவான். கர்மானுபவ தேகமுள்ளவர் எவ்வளவு இம்சையடைந்தாலும் நசிப்பதேயில்லை. (சு-ம்-௧௨௭)

முப்பத்துமூன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

உ

ஹாடகோ ப்ரணே ஜ்வலாயை நமஃ

முப்பத்துநான்காம் அத்தியாயம்.

அவசிஷ்ட நாககுண்ட பதனயோக்ய பாபலக்ஷணம்,

தருமராஜன் கூறுகின்றான்:—தயையற்றவனாய் ஜீவனைக்கத்தியினால் துண்டிக்கின்றவனும் பணஆசையினால் மநுஷ்யனைக் கொல்லுகின்றவனும் அசிபத்ர (கத்திபோன்றஇலையுள்ள)வனத்தில் பதினான்குஇந்திரர்பரியந்தம்வசிப்பான். அந்தப்பாபிகளுக்குள் எவர்கள் பிராஹ்மணனைக் கொன்றார்களோ அவர்கள் நூறுமந்வந்தரம்வரையில் மேற்சொன்ன அசிபத்திரவனத்தில் கத்தியினுடைய கறுக்கினால் எப்பொழுதும் வெட்டப்பட்டவராய் ஆகாரமற்றவர்களாய் எமதூதர்களா லடிக்கப்பட்டவராய் நூறுஜென்மம் புழுகுபூனையாயும், நூறுஜன்மம் பன்றியாயும், ஏழுஜன்மம் கோழியாயும், ஏழுஜன்மம் நரியாயும், ஏழுஜன்மம் புலியாயும், மூன்றுஜன்மம் செந்நாயாயும், ஏழுஜன்மம் தவளையாயும்பிறந்து தூதர்களால் அடிக்கப்பட்டவராயும், கடாவாய்ப்பிறந்து சுத்தியடைகின்றனர். பட்டணத்தையாவது கிராமத்தையாவது கொளுத்துகின்றவன் க்ஷுரதாரமென்னும் (கத்திகறுக்கு) குண்டத்தில் விழுந்து மூன்றுயுகபரியந்தம் பாபத்தை யனுபவித்துப் பிறகு கொள்ளிவாய்ப் பிசாசாகப் பிறந்து உலகமெல்லாம் அலைந்து திரிந்து பிறகு ஏழுஜன்மம் மலத்தைப்புசிக்கும் ஜெந்துவாகவும் ஏழுஜன்மம் புழுவாகவும் மகாசூலை நோயுடையவனாகவும் ஏழுஜன்மம் குஷ்டரோக முடையவனாகவும் பிறந்துப் பின்னர் சுத்தியாவான். பிறனொருவன்காதில் முகத்தை வைத்துப் பிறநிந்தைசெய்கின்றவனும் பிறரது தோஷத்தை வெளியிடுவதிற் சந்தோஷமுடையவனும் தேவதைகளையும் பிராமணர்களையும் நிந்திக்கிறவனும் சூசிமுக (ஊசிநுனி) குண்டத்தில் மூன்றுயுகபரியந்தம் வசித்துப் பிறகு தேளாயும் பாம்பாயும் ஏழுஜன்மம் வச்சிரகிரீடப் புழுவாயும் ஏழுசன்மம் பஸ்மகீடப்புழுவாயும் பின்பெருவியாதியுள்ளவராயும் பிறந்து சுத்தியடைகின்றார். கிருகஸ்தர் வீட்டில் ஆடுமாடுகளையாயினும் ஏனைய வஸ்துக்களையாயினும் திரு

---

* மிகுந்த நரககுண்டங்களில் விழத்தகுந்த பாபிகளின் குறிப்பு.

டுகின்றவன் கோகாமுகத்தில் மூன்றுயுகம் தூதர்களா லடிக்கப்பட்டுப் பின் ஏழுஜன்மம் வியாதியோடுகூடினபசுவாகவும் மூன்றுசன்மம் ஆடாகவும், மூன்றுஜன்மம்செம்மறியாடாகவும் நித்யதரித்திரனாகவும் பந்துபாரியை இல்லாதவனாகவும்மனஸ்தாப முள்ளவனாகவும்பிறந்துசுத்தனாகின்றான்.சாதாரணதிரவியத்தைத்திருடுகின்றவன் நக்ரமுகநரகினையடைந்து மூன்றுவருடமிருந்து ஏழுஜன்மம் ரோகமுள்ள பசுவாகவும் பின் மகாரோகமுள்ள மநிதனாகவும் பிறந்து சுத்தியாகின்றான். பசு யானை குதிரை மரம் இவைகளைக் கொல்லுகின்றவன் மூன்றுயுகம் கஜதம்சம் என்னும் நரகில்தூதரால் அங்கு சத்தாலடிக்கப்பட்டு மூன்றுஜன்மம் யானை குதிரையாயும் பின்துருக்கனாயும்பிறந்து சுத்தியாகின்றான். சலத்தை அருந்தும் பசுவைத் தடைசெய்பவன் கோமுகாகார (கோமுகத்தின் ஆகார) முள்ளதுமானதும் புழுகுடன்காய்ச்சப்பட்ட சலமுள்ள நரகடைந்து ஒரு மன்வந்தரம் தபிக்கப்பட்டு பசுமாடில்லாதவ னாகவும் தரித்திரனாகவும் ஏழுஜன்மம் பறையனாகவும பிறந்துப்பின்சுத்தியடைகின்றான். கோஹத்தி பிரமஹத்திக்குச் சமானமான பாபங்களைச்செய்கின்றவன் புணரக்கூடாதஸ்திரீயைப் புணருகின்றவன் ஸ்திரீஹத்தி செய்கின்றவன் பிச்சையெடுப்போனைக் கொல்லுகின்றவன் கர்ப்பத்தைச்சிதைக்கின்றவன் பதினான்குஇந்திரபதம்வரையிலும் கும்பீபாகத்தில் வசித்துத்தூதராலடிக்கப்பட்டு நெருப்பிலும் முள்ளிலும் காய்ச்சப்பட்ட எண்ணெயிலும் கொதிக்கும்சலத்திலும் இரும்பிலும் தாம்பரத்திலும் ஒவ்வொரு க்ஷணகாலமிருந்து ஆயிரம்சன்மம்கழுதையாகவும் நூறுசன்மம் பன்றியாவும் ஏழுசன்மம் காக்கையாகவும் ஏழுசன்மம் சர்ப்பமாகவும் அறுபதினாயிரவருடம் புழுவாகவும் பலசன்மம் குஷ்டரோகிகளாகவும் தரித்திரராகவும் பிறப்பார் என்றனன்.

சாவித்திரிவினவுகின்றாள்:—பிரமஹத்திக்கும் கோஹத்திக்கும் [illegible]மமானபாவங்களெவை?எந்தஸ்திரீ மாநுடரால் அடையத் தகா[illegible]வள்? எவன்சந்தியைவிட்டவன்? அதீக்ஷிதனானபுருஷன் யார்? [illegible]ர்த்தப்பிரதிக்கிரகம் செய்யும் பிராமணன்யார்? கிராமயாஜியார்? [illegible]ப்பிரன்யார்?தேவலகன்யார்? சூத்திரர்களுக்குச் சமையல்செய்கி[illegible]றவனும் அவர்களை மதிக்கின்றவனும் சூத்திரஸ்திரீக்குப் பர்த்தா[illegible]கின்றவனும் ஆகிய இவர்களுடைய அடையாளங்கள் எவை?இவைகளை விரித்துச்சொல்லுவீரென்றான். பரப்பிரஹ்மத்தினிடத்

தும் அவருடைய வேறு அர்ச்சாபிம்பத்தினிடத்தும் சிவம் சிவலிங்கம் சூரியன் சூரியகாந்தக்கல் கணபதி துர்க்காதேவி இவர்களிடத்தும் குரு இஷ்டதேவதை தாய் இவர்களிடத்தும், பிரஹ்மஞானிகளிடத்தும் விப்ரபாததீர்த்தம் சாளக்கிராம தீர்த்தங்களிடத்தும், சிவ விஷ்ணு நைவேத்தியங்களிடத்தும், சர்வேசனிடத்தும் சர்வேசரானகிருஷ்ணமூர்த்தியிடத்தும், சர்வகாரணத்துக்கும்காரணமாயும் யாவருக்கும்முற்பிறந்தவராயும் சகல தேவர்களுக்குந் தலைவராயும் சர்வாந்தர்யாமியாயும் மாயையால் அநேக ரூபமுள்ளவராயும் நிர்க்குணராயும் ஏகரூபராயும் இருக்குங் கடவுளிடத்தும், சக்திபக்தர்களிடத்தும் சக்திசாஸ்திரங்களிடத்தும் பேதபுத்தி செய்கின்றவரும், வேதப்பிரதி பாத்யமான பிதுர்க்கர்மங்களையும் தேவதாபூசைகளையும் விடுகின்றவரும், பரிசுத்தமான வஸ்துக்களில் பரிசுத்தமாயும் ஞானானந்த ஸ்வரூபியாயும் அநாதியாயும் தேவர்களுக்கெல்லாம் பிரபுவாயும்இருக்கின்ற ஈஸ்வரனைப்பூஜிக்காதவரும், நிந்திக்கின்றவரும், சர்வகாரணரூபிணியாயும் காரணப்பிரஹ்ம ஸ்வரூபிணியாயும் சர்வசக்திசொரூபிணியாயும் யாவருக்கும் மாதாவாயும் இருக்கும்பிரகிருதிமகாதேவியைநிந்திக்கின்றவரும்,கிருஷ்ணசென்மாஷ்டமி ஸ்ரீராமநவமிமஹாசிவராத்திரிஏகாதசிஞாயிற்றுக்கிழமை பஞ்சபருவம் இவைகளில் விரதானுஷ்டானங்களை விட்ட சண்டாளராகிய மகாபாபிகளும், அம்புவாசியால் பூமியை வெட்டுவோரும் ஜலத்தில் சௌசமுதலியவற்றைச் செய்வோரும் குரு தாய் தந்தை பதிவிரதையான மனைவி பிள்ளைபெண் இவர்களைப் போஷிக்காதிருக்கின்றவரும், கலியாணமாகாதவரும், பிள்ளையின் முகத்தைப் பாராதவரும் ஈஸ்வரபக்தி யில்லாதவரும், ஈஸ்வரபூசைசெய்யாதவரும், ஈஸ்வரருக்குநிவேதனமாகாத அன்னத்தைப் புசிப்பவரும், ஈஸ்வரபக்தியைச்செய்யாதவரும், புண்ணியமானபார்த்திபலிங்கபூஜை செய்யாதவரும், பிரஹ்மஹத்தி செய்தவனுக்கு ஒப்பாவர். பசி எடுத்தவனை நிவாரணஞ்செய்தவனும், பசுமத்தியிலும் பிராமண மத்தியிலும் போகின்றவனும், எருதின்மீது ஏறுகின்றவனும், கோவுக்கு எச்சிலைக்கொடுக்கின்றவனும், அதனைத் தடியா லடிக்கின்றவனும் காலாலுதைக்கின்றவனும், எருதின்மே லேறுகின்றவனைப் புசிப்பிக்கின்றவனும்,எருதின்மே லேறுகின்றவனது அன்னத்தைப் புசிக்கின்றவனும், சூத்திரனுக்கு யாகஞ் செய்விக்கின்றவனும், அவனுடைய அன்னத்தை புசிக்கின்றவனும், நெருப்பில் பாதங்களைக் கா

ய்ச்சுகின்றவனும் காலை அலம்பாமல் வீட்டில் நுழைகின்றவனும், எண்ணெயுள்ளகாலோடு புசிகின்றவனும், காலில் எண்ணெய்பூசிக் கொண்டு சயனிக்கின்றவனும், சூரியோதயத்தில் புசிக்கின்றவனும், பிள்ளையும் பர்த்தாவும் இல்லாதவளது அன்னத்தைப் புசிக்கின்றவனும், மூன்றுசந்திகளை அநுட்டிக்காமலிருக்கின்றவனும், பர்த்தாவிடத்திலும் தேவதையிடத்திலும் பேதத்தை நினைக்கின்ற ஸ்திரீயும், குரூரமானவார்த்தையோடு பர்த்தாவையடிக்கின்றவளும், பசுக்கள் வருவதற்கு வழியில்லாமல் பயிரிடுகின்றவனும், தடாகத்தைக் கெடித்துப்பயிரிடுகின்றவனும், கோட்டையில் பயிரிடுகின்றவனும், கோவதைசெய்ததற்குப் பிராய்சித்தம் செய்துகொள்ளாதவனும், பாதுகாப்பதற்குப் புத்திரனில்லாமையாலாவது அஞ்ஞானத்தினாலாவது கோவை மாற்றிவிடுகின்றவனும், பசுவைப்படைத்து அரசனும் தெய்வத்தானும் வரும் ஆபத்துக்காலங்களில் அதனைக்காவாது துன்பத்தைச் செய்கின்றவனும், தேவபிம்பங்களையும் பிராணிகளையும் அக்னி ஜலம் நைவேத்தியம் புஷ்பம் அன்னம் இவைகளைத் தாண்டுகின்றவனும், ஸ்ரீவன்நாஸ்திஎன்றுவாதிக்கின்றவனும் வஞ்சிக்கின்றவனும், பொய்மையை உண்மையென்று வாதிக்கின்றவனும், அந்தணர்களையும் குருவையும்துவேஷிக்கின்றவனும், வஞ்சிக்கின்றவனும், தெய்வரூபமான பிம்பங்களையும், குருவையும், பதிவிரதையையும் கண்டவுடன் நமஸ்காரஞ்செய்யாதிருக்கின்றவனும், நமஸ்கரிக்கின்றவனுக்கு ஆசீர்வாதஞ் செய்யாத பிராஹ்மணனும், வித்தியார்த்திக்குவித்தியாதானஞ் செய்யாதிருக்கின்றவனும்கோஹத்திசெய்தவர்க்குச் சமானமானவரென் றறிவாயாக.

அன்றியும் மனிதர்கள் தங்கள் தங்கள் வருணத்துக்குரிய ஸ்திரீகளை அடையவேண்டுமென்று வேதவித்துக்களாலும் வேதங்களாலும் நியமனஞ்செய்திருக்க அதையெண்ணாது மாறிச்செய்வதும், சூத்திரர்கள் பிராஹ்மணஸ்திரீகளையும், பிராஹ்மணர்கள் சூத்திரஸ்திரீகளையும் அடையக்கூடாதென்று நியமனஞ்செய்திருக்க அதைஎண்ணாது அதைச்செய்வதும், செய்யக்கூடாதென்பவற்றைச் செய்வதும் கோஹத்திசெய்த பாவத்தைக்கொடுக்குமென்றும் பெரியோர்கூறுவர். சூத்திரன் பிராமணஸ்திரீயை யடைந்தாலும் பிராமணஸ்திரீ சூத்திரனையடைந்தாலும் நூறுபிரமஹத்திபல

னையடைந்து இருவரும் கும்பீபாகத்தையடைவர். சூத்திரஸ்திரீ யைப் பிராமணனடைவானுகில் அவன் சூத்திரனே என்றும், அவன் பிராமணனுலும் பறையனிலும் நீசனுகக் கருதப்படுகிறு னென்றும், பிதுர்க்களுக்கும் மற்றையதேவர்கட்கும் அவன்கொடுக் கும்பிண்டம் விஷ்டைக்கு (அமேத்தியத்துக்குச்) சமமானதென் றும் அவன்செய்யும் தர்ப்பணம் மூத்திரத்துக்குச் சமானமென் றும், அவனுற் கொடுக்கப்பட்டவை யெல்லாம் பிதுர்க்களையும் தே வர்களையும் அடைவதில்லையென்றும், கோடிஜன்மமாய்த் தேவதார்ச் சனையாலும் தபசினுலும் சம்பாதிக்கப்பட்ட புண்ணியமானது சூத் திரஸ்திரீயினிடம் வைத்தமோகத்தினுல்நசித்தேபோகின்ற தென்று ஞ்சொல்லுவர். இதிற்சம்சயமில்லை. சுராபானஞ்செய்த பிராமணன் மலத்தைப் புசித்தவனுவானென்றும், சூத்திரனுமாவானென்றும், தப்தமூத்திரையினுலும். தப்தசூலத்தினுலும்கொளுத்தப்பட்டதே கத்தையுடையவனும். ஏகாதசியில் புசிக்கின்றவனும், கும்பீபாகத் தையடைவானென்றும், குருபத்தினி ராஜபத்தினி மாற்றுந்தாய் மகள் மருமகள் மாமி கர்ப்பஸ்திரீ உடன்பிறந்தாள் சகோதரன்பத் தினி மாமன்பெண்சாதி தகப்பனைப்பெற்றபாட்டி தாயைப்பெற்ற பாட்டி அவளுடைய சகோதரிகள் பிதாக்களுடைய கன்னிகை சிஷ் யை சிஷ்யன்பத்தினி பிள்ளையினுடைய பெண்சாதி, சகோதர புத் திரனுடைய மனைவி இவர்களெல்லாம் அடையத் தகாதவரென்று பிரமதேவர் கூறுகின்றபடியால் அவர்களைக் கூடுகின்றவனும், நூறு பிரமஹத்தியின் பலனையடைவானென்றும் வேதங்களிற் கூறப்பட் டிருக்கின்றன. இவரெல்லாம் ஒரு கர்மத்துக்கும் அருகரல்லர் தொடத்தகுந்தவருமல்லர். உலகத்தாராலும் வேதத்தாலும் நிந்திக் கப்படுவர். சிறிதேனும் கடத்தற்கரிதான கும்பீபாகத்தில் வீழ்வர். எந்தப்பிராமணன் சந்தியை அசுத்தமாகச்செய்கின்றுனே, அல் லது செய்யாமலே விடுகின்றுனே, அவன் சந்தியா ஹீனனென்று சொல்லப்படுகின்றுன். வைஷ்ணவம் சைவம் சாக்கியம் சௌரம் காணபத்திய முதலிய சமயிகளை அகங்காரத்தினுல் சிறப்புச் செய் யாதவர்களும்மந்திரத்தை அகங்காரத்தினுல் கிரகிக்காதவர்களும் அதீக்ஷிதர்களென்று சொல்லப்படுகின்றனர். பிரவாகத்தில் நாலு முழம்வரையில்எல்லையாகவைத்துக்கொண்டு நாராயணர்வசிக்கின்ற படியால் அந்த நாராயண க்ஷேத்திரத்தில் இறந்துபோகின்றவன் விஷ்ணுபதமடைகின்றுன். காசி பதரிகாஸ்ரமம் கங்கை சமுத்திரத்

தோடு சேருமிடம் புஷ்கரம் ஹரிஹரக்ஷேத்திரம் பிரபாசம் காமரூபஸ்தலம் ஹரித்துவாரம் கேதாரம் மாத்ருபுரம் சரஸ்வதி நதிதீரம் பிருந்தாவனம் கோதாவிரி கௌசிகிநதி திரிவேணி இமாசலம் ஆகிய இந்தத் தீர்த்தங்களிலும் ஏனையதீர்த்த கட்டங்களிலும் ஆசையினால் தானம்வாங்கிக்கொள்பவன் கும்பீபாகத்தை யடைகின்றான். சூத்திரனிடம் ஊழியஞ்செய்கின்றவனும் யாகஞ்செய்கின்றவனும் கிராமபுரோகிதனும் கிராமயாஜியும் தேவதையினால் சீவிக்கின்றவனும் தேவலகனும் சூத்ரபாகத்தினால் சாப்பிடுகின்றவனும் சூபகாரன் என்று சொல்லப்படுவான். சந்தியக்ஞம் பூஜனம்இவை களற்றவர் பிரமத்தன் பதிதனெனப்படுவார். ஓ நல்லபெண்ணே! சூத்திரஸ்திரீ சம்பந்தம் செய்தவனுடைய குறிகளைக் கூறினேன். குலடை முதலானவரது பாபத்தை இனிக் கூறுகின்றேன் என்றனர். (சு-ம்கூகஉ)

முப்பத்துநான்காம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

ஹாரஹாரி குச போகாயை நமஃ

முப்பத்தைந்தாம் அத்தியாயம்.

இதுவுமது.

தருமராஜன் கூறுகின்றான்:—கர்மநாசம் தேவசேவை அன்றியில் உண்டாகாது. சுத்தகர்மத்தினால் சுத்தமான சுவர்க்காதி பலனும் குத்ஸிதமான கர்மத்தினால் நரகமும் உண்டாகின்றன. ஓ பதிவிரதையே! பும்ஸலி அன்னத்தைப் புசிக்கின்றவனும், இதரஸ்திரீயை அடைகின்றவனும், காலசூத்திரநரகில் நூறுவருஷமிருந்துபின் பிறந்து ரோகியாய்அந்தக்கருமத்தைபனுபவித்துசுத்தராகின்றனர். கணவன் ஒருவனேடிருப்பவள் பதிவிரதையென்றும், இருவரோடிருப்பவள் குலடைஎன்றும்,மூவரோடிருப்பவள்தர்ஷணிஎன்றும், நால்வரோடிருப்பவள் பும்சலிஎன்றும், ஐவரோடும் அறுவரோடும் இருப்பவள் வேசிஎன்றும், எழுவரோடும்எண்மரோடும்இருப்பவள் யுங்கிஎன்றும், அதற்குமேற்பட்டவரோடு இருப்பவள்மஹாவேசிஎன்றுசொல்லப்படுவர். பதிவிரதைதவிர மற்றவர்களையடைந்தவன் மச்யோதரநரகினையும், இங்ஙனங் கூறிவந்தமுறைப்படி குல

டைமுதலிய ஸ்திரீகளை அநுபவிக்கின்றவர் மூறையே நூறு நானூறு அறுநூறு எண்ணூறு ஆயிரம் பதினாயிரம்வருஷங்களாகும்பீபாகத்தில் வீழ்ந்து யமதூதர்களால் கொடுமையான வேதனையயடைகின்றனர். அவ்வாறனுபவிப்பதுமன்றிகுலடையையடைந்தவன் தித்திரிபக்ஷியாகவும், தர்ஷணியை யடைந்தவன் காக்கையாகவும், பும்சலியை யடைந்தவன் கோகிலமாகவும், வேசியையடைந்தவன் செந்நாயாகவும், புங்கியையடைந்தவன் பன்றியாகவும், ஏழுசன்மம்வரையில் பிறந்துவருவார். மகாவேசியை யடைந்தவன் இலவம் பஞ்சுமரமாகவும் பிறக்கின்றான். சந்திரசூரிய கிரஹணகாலங்களில் புசிக்கின்றவன் அன்னத்துக்கு ஒருவருஷமாக கிருமிகந்துகம் என்னும் நரகிற்படந்து பூமியில் வயிற்றுநோயுள்ளபிராமணனும், குன்மவியாதியுள்ளவனும், குருடனும் பல்லில்லாதவனும் பிறந்து பாபநிவர்த்தியடைகின்றான். ஒருவனுக்கு வாயினால் கொடுக்கிறேனென்று சொன்னகன்னிகையை மற்றொருவனுக்குக் கொடுக்கின்றவனும், அவளைப்பெற்றுக்கொண்டவனும், பாம்ஸகுண்டத்தில்வீழ்ந்து அதையேபுசித்து நூறுவருடம்யமதூதர்களால்அடிக்கப்படுவார். பக்தியோடு பார்த்திபலிங்கத்தைப் பூசிக்காத பிராமணன்எனதுதூதராலடிபட்டு சரசைஎன்னும்நரகில்வசித்துசிவனதுகோபத்தினால் சூலப்புரோதமென்னும் நரகினையடைந்து அதில்நூறுவருஷங்கிடந்து ஏழுசன்மம் துஷ்டமிருகங்களாகவும், அதன்பின் ஏழுசன்மம் கூலிக்குச்செய்யும் தேவபூஜகனாகவும் பிறந்து சுத்தியடைகின்றான். பிராமணனை மிரட்டி அடங்கச்செய்கின்றவனும், பயத்தினால் நடுங்கச்செய்கின்றவனும், பிரகம்பனமென்னும் நரகில் ஒருரோமத்துக் கொருவருடமாக வசிப்பர். பார்த்தாவை மிக்ககோபத்தோடு பார்க்கின்றவளும் கடுமையாய்ப்பேசுகின்றவளும், உல்காமுகநரகத்தில் ஒருரோமத்துக்கொருவருடமாகஇருந்துனதுகிங்கர்களால் வாயில் கொள்ளிக்கட்டை வைக்கப்பட்டும் தலையில் தடியினலடிக்கப்பட்டும் பெருந்துன்பத்தை அநுபவித்து ஏழுசன்மம்வரையில் அமங்கலியாய்ப் போதலாகிய வைதவ்யத்தையடைந்து வியாதியோடிருந்து பின்சுத்தியாகின்றனர். சூத்திரனை அநுபவிக்கும் பிராணஸ்திரீயானவள் நன்றாய்க் காய்ச்சப்பட்ட சவுக்சத்தை யுடைத்தானதாயும், இருளடைந்ததாயும் இருக்கும் அந்தகூபம் என்னும் கிணற்றில்கிடந்து இரவும்பகலும் அதிலுள்ள நீரைக்குடித்து தூதராலடிக்கப்பட்டு இவ்வண்ணம் பதினான்குஇந்திரர்வரையில் அனு

பவித்து, பின் ஆயிரஞ்சென்மம் பெண்காக்கையாகவும், பின் நூறு நூருகப் பெண்பன்றியாகவும், பெண் நரியாகவும், பெட்டைக்கோழியாகவும், அதன்பின் எவ்வேழுசன்மமும் பெட்டைபுராவாகவும், பெண்குறங்காகவும். அதன்பின்சண்டாளஸ்திரீயாகவும், வண்ணத்தியாகவும்கூபரோகமுள்ளவளாகவும், பும்சலியாகவும் குஷ்டரோகமுள்ளவளாகவும், பின் வாணிச்சியாகவும் பிறந்து சுத்தியாவாள். வேசி-வேதனம் என்னும் நரகிலும், புங்கி- தாடணம், தண்ட என்னும் நரகிலும், மஹாவேசி-சாலாந்தர மென்னும் நரகிலும், குலடை- தேகசூர்ணத்திலும், தன்னிஷ்டப்படிநடக்கின்றவ ளென்னும் சுவைரிணி-தனனமென்னும் நரகிலும், தர்ஷணி-சோஷ்பனம் என்னும் நரகிலும் கிடந்து, தூதர்களா லடிக்கப்பட்டு ஒருமன்வந்தரம் வரையில் மலமூத்திரங்களையுண்டு, பின்லக்ஷம் வரும் மலபுழுக்களாய்ப்பிறந்து சுத்தியடைவர். நான்கு வருணத்தவரும் தத்தமக்குரியவருணத்திலேயே பரஸ்திரீகளைக்கூடினவர் கஷம்என்னுநரகிற் றள்ளப்பட்டு, பன்னிரண்டுவருடம் அந்நீரைக்குடித்துப் பின்னர் சுத்தியாவார்கள். இதுபோலவே ஸ்திரீகளும் தத்தம்வருணத்தில் பரபுருஷரை விரும்புவார்களாயின் அவர்களும் அத்தக்கதியையே யடைவார்கள். க்ஷத்திரிய வைசியர் பிராஹ்மண ஸ்திரீயை விரும்புவார்களாயின் அவர்கள் தாயைப்புணர்ந்தபாபிகளைப்போலாகிப்பதினொன்று இந்திரர்வரையில் சூர்ப்பநரகிற்கிடந்து, சூர்ப்பாகாரமான புழுக்களால் கடிக்கப்பட்டு, காய்ச்சியமூத்திரத்தைக் குடித்து என்தூதரால் அடிக்கப்பட்டு, துன்பமடைந்து பின் ஏழுஜன்மம் பன்றியாயும், ஏழுசன்மம் சூத்திரராயும் பிறந்து சுத்தியாவார். கையில் துளசியைவைத்துக்கொண்டு பிரதிஜ்ஞைசெய்ததைத் தவறிப் பொய்ச்சத்தியம் செய்கின்றவனும், கங்காசலத்தையாவது, தேவதாபிம்பத்தையாவது தேவதா சிலையையாவது கையில்வைத்துக்கொண்டு பிரதிஜ்ஞைசெய்தபடி செய்யாது விட்டவனும், வலக்கை பிராஹ்மணன் பசுநெருப்பு இவைகளைத்தொட்டும்தேவாலயத்திலிருந்தும் பிரதிஜ்ஞை செய்ததைக் காப்பாற்றாதவரும், மித்திரத்துரோகிகளும், நன்றி மறந்தவர்களும், நம்பியிருந்தவரைக் கொல்லுகின்றவரும், ஜ்வாலாமுகி என்னும் நரகிற் பதினொன்று இந்திரர் வரையிற் கிடந்து நெருப்புத்தழலால் கொளுத்தப்பட்டு தூதராலடிக்கப்படுவர். துளசியைதொட்டுச் சபதஞ்செய்து அதைத்தவறினவர் ஏழுசன்மம் சண்டாளராகவும், அஃதேபோல் கங்கையைத்தொ

ட்டுத்தவறினவர் ஐந்துஜன்மம் தருக்கராகவும்தேவசிலையைத்தொட்டுத் தவறினவர் ஏழுஜன்மம்மலப்புழுவாகவும்,தேவபிம்பத்தைத் தொட்டுத் தவறினவர் ஏழுஜன்மம் பிரமராகுமியாகவும்,வலக்கையைத்தொட்டுத் தவறினவர் ஏழுஜன்மம் சர்ப்பமாகவும், தேவாலயத்தில் சத்தியத்தைச்சொல்லித் தவறினவர் ஏழுஜன்மம் கூலிக்குத்தேவபூஜை செய்கிறவராகவும், பிராமணன் முதலானவர்களைத் தொட்டுத் தவறினவர் ஏழுஜன்மம் புலியாகவும், மூன்றுசன்மம் செவிடாகவும், ஊமையாகவும், பந்துக்கள்பரம்பரையும்வம்சபரம்பரையும் அற்றவராகவும் பிறந்து சுத்தராகின்றார். மித்திரத்துரோகஞ்செய்தவன் கீரிப்பிள்ளையாகவும், நன்றிமறந்தவன் முட்செடியாகவும், விசுவாசமுடையவனைக் கொன்றவன் ஏழுசன்மம்புலியாகவும், பொய்சாக்ஷிசொன்னவன் ஏழுசன்மம் தவளையாகவும் பிறந்து சுத்தமடைகின்றனர்.

நித்தியகன்மத்தைவிட்டவன் தனதுகுலத்தில்முன்னேழுசந்திகளையும், பின்னேழுசந்ததிகளையும் கெடுக்கின்றவனும், சடத்தன்மையனும்,காணப்படும் பிராஹ்மணனும் வேதவாக்கியங்களில்சுபிக்கையற்றவனும் விரதாதிகளை விட்டவனும் சத்புருஷாளுடைய சொற்களை நிந்திக்கின்றவனும் வீணுகச்சிரித்துக்கொண்டிருக்கின்றவனும் பிறரைக்காரணமில்லாமல்தூஷிக்கின்றவனும்உலகிற்றடுமாறித்திரிந்து பின் தூமாந்தநரகில் நூறுவருடம்வீழ்ந்துகிடந்துஅங்குபுகையைத்தின்று மறுபடி நூறுஜன்மம் மீன்முதலான ஜலசெந்துக்களாகப் பிறந்து சுத்தியடைவான். தேவப்பிராமணனைப் பரிகசிக்கின்றவன் தன்குலத்திலிருந்த பத்துஜன்மம் முன்னோர்களையும் பத்துஜன்மம் பின்னோர்களையும் நரகிற் றள்ளினவனும் தானும் புகையினுலிருளடைந்த முற்கூறிய நரகத்தையடைந்து புகையினுல்பீடிக்கப்பட்டவனும் அதனையே புசிக்கின்றவனும் நானூறுவருஷம் வசித்து ஏழுசன்மம் எலியாய்ப்பிறந்து பலவித பக்ஷி புழுவிருக்ஷ மிருகங்களாகவும் பிறந்து பின்மனிதனைப் பிறக்கின்றான். பிராமணனைப்பிறந்து சோதிடத்தினும் வைதியத்தினும் அரக்குமுதலிய லோகங்களையும் பழரசங்களையும் விற்பதினும் சீவிக்கின்றவன் நாகவேஷ்டநரகில் சர்ப்பங்களால் சுற்றப்பட்டவனும் ரோமத்துக்கொருவருடம் வசித்து பின்பக்ஷிகளாய்ப்பிறந்து ஏழு ஏழுசன்மம்கணக்கனுகவும்,வைசியனுகவும், இடையனுகவும்,வேலை

க்காரனுகவும் பிறந்து பின் சுத்தியாகின்றன். ஓபதிவிரதையே! பிரசித்தமாயிருக்கின்ற நரககுண்டங்களையும் அதில்வீழத்தக்க பிரசித்தமான பாபிகளையுங் கூறினேன். இன்னும் பிரசித்தியற்ற அநேகசிறு குண்டங்களுள. அவைகளில் பிரசித்தியற்ற பாபகர்மங்களைச் செய்தவர்கள் வீழ்ந்து துக்கமனுபவித்துப் பலவிதசன்ம மெடுக்கிறார்கள். வேறு என்னகேட்கவிரும்புகின்றனையென்றார். (சு ம்-நிகூ ஒ)

முப்பத்தைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

ஹாகின்யை நமஃ

முப்பத்தாரும் அத்தியாயம்.

* கர்மபந்த நிவர்த்த கோபாயம்

சாவித்திரி வினவுகின்றன்:—ஓமஹாநுபாவனே! வேதவேதாந்தங்களின்கரையறிந்த தருமராஜனே! எது புராண இதிகாசங்களின் சாரமாயும், யாவருக்கும் இஷ்டமாயும், தர்மத்தைப் போக்கடிக்கத் தக்கதாயும், புகழத்தக்கதாயும், சுகத்தையும் சர்வாபீஷ்டத்தையும் கொடுக்கத்தக்கதாயும், சர்வமங்களத்தையு மூண்டாக்கத் தக்கதாயும் உள்ளதோ, எதனல் மனிதர் பயத்தையும் துக்கத்தையும் காணர்களோ, முற்கூறிய நரகங்களில்வீழார்களோ, அவற்றைப்பார்க்கவு மாட்டார்களோ, ஜன்மம் மிருத்யு முதலியன நேரிடாவோ அவைகளையும், நரககுண்டங்கள் எவ்விதமாக நிர்மிக்கப்பட்டனவோ பாவிகள் அந்நரகங்களை எவ்விதரூபங்கொண்டு அநுபவிக்கின்றார்களோ, இவ்வுலகில் மனிதர் பஸ்மமாகும்போது வேறு லோகத்தை எப்படியடைகின்றனரோ, அங்கு எந்தச் சரீரத்தால் சுபாசுபதர்மங்களை யனுபவிக்கின்றனரோ, நீண்டகாலந் துக்கம் அநுபவித்தும் அது நசிக்கிறதில்லையோ, நரகத்தை அனுபவிக்கும் அத்தேகம் எவ்விதமானதோ அவைகளையும் விரித்துக் கூறவேண்டுமென்று வினவ, தருமராசன் பகவானைஸ்மரித்து வேதமுதலிய சகலகலைகளிலுஞ்

* கர்மபந்த நிவர்த்திக் குபாயம்.

சொல்லப்பட்டதாயும, பக்திவிருக்ஷத்தை மூலக்கச்செய்வதாயும் கர்மரூபமான விருக்ஷத்தை வெட்டிச்சாய்ப்பதாயும், மோக்ஷலோகத்துக்கேறும் சோபானங்களாயும், சாலோக சாமீப்ய சாரூப்பிய சாஷ்டி முதலானளைகளைக் கொடுப்பதாயும் உள்ளவற்றைக் கூறுகின்றேன். கணேசாதி பஞ்சதேவதாபூசை, பகவதி நாமசங்கீர்த்தனம், தேவியினிடம் மறவாதபக்தி, புண்ணியதீர்த்த ஸ்நானம், பகவானது நித்தியபூசை, திரிசந்தியிலும் செய்யப்படுங் கர்மங்கள், தேவீசேவையில்சிரத்தை,தனதுவருணதருமத்திலும்,ஆஸ்ரமதருமத்திலும் தவறாமை, சிவோபாசனை,சிவாதி தேவதா மந்திரோபாசனை, எல்லாத் தெய்வங்களிலுஞ்சிறந்த தேவி மந்திரோபாசனை, தேவதாபூசைகளில் அடிக்கடி மதுபர்க்க நிவேதனஞ்செய்தல்முதலியனவாம், இவற்றை விடாமற் செய்துவருகின்றவர்கள்கிங்கர்களால் தண்டிக்கப்படார்;எனதுலோகத்தை யடையார்,சித்ரகுப்தர்கள் அவர்களுடைய பாவபுண்ணியங்களை எழுதுதவற்கும் அஞ்சுவர். அவர்கள்போகுமிடம் பிரமனுலகத்திற்கு மேம்பட்ட இடம் அவர்களுடைய பரிசமாத்திரத்தில் சகலபாபக்களும் நசித்துப் போம். ஆயிசங்குலத்தைப் பரிசுத்தஞ் செய்யத் தக்கவர்களா அவர்கள்தான் பாக்கியவான்கள். சுடர்விட்டெரிகின்றகெருப்பில் உலர்ந்தகட்டைகளையும் சருகுகளையும் இட்டால் அவை எப்படிப் போமோ அப்படி அவர்களைப்பார்த்தமாத்திரத்தில் பாவங்களெல்லாம் போம். காமக்குரோதாதிகளெல்லாம் அவர்களைவிட்டு அவற்றையுடையார்பால்போய்ச் சேரும். மிருத்யுபயம் ரோகம் ஜரை சோகம், காலம், அசுபம், சந்தோஷம்,முதலியவெல்லாம் அவர்களைக் காணப்பெற்றால் ஓளித்துக்கொள்ளும்.

இனி,தேகத்தினுடைய விவாணத்தைக்கேட்பாயாக:—பிருதிவிமுதலிய பஞ்சபூதத்தினின்றும் தேகம் காரியப் பட்டதாகும். பூதங்கள் நாசமுடைத்தாஞ்சாகலின் அவற்றின்காரியமாகியதேகரூபமும் நாசமடையும். ஆகவான் தேகிதேகத்தை விட்டுப போமாயின்அது நாசத்தையடைந்து பஸ்மமாய்ப்போகின்றது.பூதசம்பந்தமாயிருக்கிற இந்தத்தூலதேகத்தைவிட்டதேகி அங்குஷ்டஅளவாயுள்ள சூக்குமதேகத்தோடு யமலோகத்தை யடைந்து அங்கு அக்னிமயமாய்ப் பிரகாசிக்கும் யாதனைசரீரவாசியாவான்.அச்சரீரத்தின்வன்மையால்அங்குசெய்யப்படும்முன்சொல்லியதண்டனை

னரலும் நரககுண்டவேதனைகளாலும் உண்டாகும் சகிக்கக்கூடாத பெரு
த்துன்பங்களெல்லாம் பொறுத்து அனுபவிக்கும்படி யானவனுகின்றன். எவ்வளவுதுன்பங்கள் அவைகளா லுண்டானலும் அனுபவிக்குமேயல்லா மல் அவைகளால் அச்சரீரம் நாசமடைகிறதில்லை. இனி நரககுண்டலகூத் தரைக் கூறுகின்றேன் கேட்பாயாக வென்றன்.

(6-ம்-33½)

மூன்பத்தாறும் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

ஹரிய வர்ஜிதாயை நம.

மூப்பத்தேழாம் அத்தியாயம்.

நரககுண்டலக்ஷணர்.

தருமராஜன் கூறுகின்றன்—பிரளய ஆரம்பம்வரையில் நியாதிருக்க நஸ்வரனுல் நிர்மிக்கப்பட்ட நரககுண்டங்கள் பூரணசந்திர் மண்டலாகாரம்போல் விரூத்தாகாரமாயும், ஆழ்ந்த பள்ளமூடையனவாயும், பற்பல பேதமாயுள்ள பாஷாணகற்களால் நெருப்பைப்போல் எரிப்பனவாயும், பாவிகள் பார்த்தமாத்திரத்தில் கிலேசத்தையுண்டுசெய்வனவாயு முள்ளன. அவற்றுள் அக்னிகுண்டம் - இரண்டு மைல்தூரம் விசாலமானதாயும்தூறு முழம் உயரம் தணலேபுடையதாயும் நாற்புரமும் அண்டினவரைக் கொளுத்துகின்றதாயும் பெருஞ்சத்தத்தோடு கூடியிருக்கிற பாபிகளால் நிறம்பினதாயும் அடிக்கிறதூதர்களால் சூழ்ந்து காக்கப்பட்டதாயுமிருக்கிறது. தப்தகுண்டம்-ஒருமைல் விசாலமாயும் காய்ச்சப்பட்ட சலத்தோடும் துஷ்டஜெந்துக்களோடும் நிடமான அடியிலுண்டாகும்கோரமான காசு என்கிறசப்தத்தோடும் இருக்கின்றது. க்ஷாரகுண்டம்-ஒருமைல் விசாலமாயும்காய்ச்சிய உப்புரோல் நிறைக்கப்பட்டதாயும் காக்கைகளால் சூழப்பட்டதாயும் தூதர்களால் அடிபட்டு அதனுல்காப்சாற்றுவீர்காப்பாற்றுவீர்என்றுகூக்குரலிடுகின்ற பாபிகளால் நிறம்பப்பட்டதாயு முள்ளது.மலகுண்டம் - இரண்மைல் விசாலமுள்ளதாயும், துர்க்கந்தத்தோடு கூடியதாயும்,தூதர்களால் அடி

பட்டு அதனையேபுசிக்கின்ற குரூரமான பாபிகளோடு அதிலுள்ள புழுக்களால் தின்னப்பட்டபாவிகளும் நிறம்பினதாயிருக்கின்றது. மூத்திரகுண்டம் நான்குமைல்விலாசமுள்ளதாயும்,காய்ச்சப்பட்ட மூத்திரத்தாலும் கிருமிகளாலும், அக்கிருமிகளால் புசிக்கப்படுகின்றவர்களாய், உலர்ந்ததாடை கண்டம் உடையவர்களாய்தூதர்களா லடிபட்டுக் கூவுகின்றவர்களாயுள்ளபாவிகளாலும்நிறம்பப்பட்டிருக்கின்றது.சிலேஷ்மகுண்டம்-சிலேஷ்மத்தாலும்,புழுக்களாலும் பாபிகளாலும், நிறைந்திருக்கின்றது. விஷகுண்டம்-ஒருமைல் அகலமுள்ளதாயும் விஷத்தையுண்டு விஷப்பூச்சிகளால் உண்ணப்பட்டும் சர்ப்பம்போன்ற ஆகாரத்தோடு வச்சிரம்போன்றபற்களுமுள்ள பாபிகளால் நிறம்பப்பட்டதாயு மிருக்கின்றது. நேத்ரமலகுண்டம்-ஒருமைல் அகன்று புழுக்களோடிருக்கின்றது. வஸாகுண்டம் நான்குமைல் அகன்றுசகிக்கக்கூடாத சிலைநீரால்நிரம்பி அதனையே யுண்கிறபாபிகளால் நிறைந்திருக்கிறது. சுக்லகுண்டம் - ஒருமைல் விலாசமுள்ளதாய்ச்சுக்லத்தோடும்புழுக்களோடும் அப்புழுக்களால் பக்ஷிக்கப்படும் பாவிகளோடும் நிறைந்திருக்கின்றது. இரக்தகுண்டம்-மிகவும் ஆழமான ஓர்நடபாவியாய் இரக்தத்தாலும் அதனைக் குடிக்கும் பாபிகளாலும் நிறைந்திருக்கிறது. கண்ணீர்க்குண்டம்-நான்கு நடபாவி அளவுடன் புழுக்களோடும் அவைகளால்உண்ணப்பட்டு அழுகின்ற பாவிகளோடும்நிறைந்துள்ளது.காத்ரமலகுண்டம்-மனிதசரீரத்தின்மலத்தினாலும், தூதராலடிப்பட்டுமனக்கவலையுடன் இருக்கின்றவர்களாலும், புழுக்களால் தின்னப்பட்ட பாவிகளாலும் நிறைந்துள்ளது.கர்னமலகுண்டம்-நான்கு நடபாவி அளவுள்ளதாய் கர்னமலத்தினாலும் பெரிய புழுக்களாலும் அப்புழுக்களால்உண்ணப்படுகின்றபாவிகளாலும்நிறைந்துள்ளது.மஜ்ஜாகுண்டம்-நான்குவாபி அளவினதாய் வெள்ளைமாம்சங்களால் நிறைந்ததாய்த் துர்க்கந்தத்தோடிருக்கிறது. மாம்சகுண்டம்-ஒருவாபி அளவுள்ளதாய், இளகிய மாம்சமுடையதாய்,அதனையேபுசிக்கின்றவர்களாலும், புழுக்களால் புசிக்கப்படுகின்றவர்களாலும், கன்னிகையை விக்ரயஞ்செய்த பாபிகளாலும் நிறைந்திருக்கிறது.நக,லோமகேச, அஸ்தி குண்டங்கள் - நான்குவாபி அளவுள்ளவைகளாய் பயங்கரமான தூதர்களால் அடிக்கடி அடிக்கப்படும் பாவிகளால் நிறைந்திருக்கின்றன. தாம்பரகுண்டம்-நான்குமைல்விசாலமுடையதாயும், நன்றாய்ச் சுடர்விட்டெரியும் கொள்ளிகட்டைகளை பே

லை யுடைத்தாயும், லக்ஷங்கணக்காண காய்ச்சிய பதுமைகளோடுங் கூடிய தாயும், அப்பதுமைக ளொவ்வொன்றையும் தழுவிக்கொண்டு அழுதுகொண்டிருக்கும் பாபிகளையுடைத்தாயு மிருக்கிறது. லோஹகுண்டம்-நான்குமைல் விஸ்தீரணமுடையதாயும், நன்றாய்க்காய்ச்சப்பட்ட இரும்பைஆதாரமாகவுடையதாயும், சுவலிக்கும் நெருப்புத்தணலை யுடையதாயும், இரும்புப்பதுமைகளால் தழுவப்பட்டு அழுதுக்கொண்டிருக்கும் பாவிகளை யுடையதாயும் இருக்கிறது. சர்வகுண்டமும் தப்த சுராகுண்டமும்-அரைவாபி அளவினவாயும், தூதர்களால் அடிக்கப்பட்டு அவைகளையே புசிக்கும் பாவிகளால் நிறைந்திருக்கின்றன. சான்மலிகுண்டம்-லக்ஷம் புருஷப்பிராமணம் ஆழமாயும், இரண்டுமைல் அகலமாயும், வில்போலும் வளைந்த கூரியமுட்களால் குழப்பட்டுப் பிரகாசிப்பதாயும், காயப்பட்டவர்களாயும், தூதர்களால் மரத்தினின்றுந் தள்ளப்பட்டு கீழே விழுகின்றவர்களாயும், ஜலங்கொடுப்பீர்களா! ஜலம்கொடுபீர்களா! என்றுகூவுகின்றவர்களாயும், நெஞ்சவர்ந்தவர்களாயும், அதிபயத்தினால் மிகநடுக்கினவர்களாயும், தடிகளாற் பிளக்கப்பட்ட தலையுடையவர்களாயும், ஒடுகிறவர்களாயும், காச்சப்பட்ட எண்ணையைக்குடித்துச் சீவிப்பவர்களாயும் இருக்கிற பாவிகளால் நிரபியதாயு மிருக்கிறது விஷநீர்க்குண்டம் - தக்ஷசர்ப்பங்களுடைய விஷஜலங்களால் நிரம்பப்பட்டதாயும், இரண்டுமைல் அகலமுள்ளதாயும், அவ்விஷநீரையே குடித்து எனது தூதர்களால் அடிக்கப்பட்ட பாபிகளால் நிறைந்ததாயுமிருக்கிறது. தைலகுண்டம்-காய்ச்சிய எண்ணெய் நிறைந்து தளதள என்கிற தணல்களால் சுத்தப்பட்டிருப்பதுமன்றி பயத்தினால் விகாரமாய்க் கூவுகின்றவர்களாயும், தூதர்களா லடிபட்டு ஓடுகின்றவர்களாயும், உள்ள பாபிகளாள் நிறைந்திருக்கிறது. குந்தகுண்டம்-இரண்டுமைல் அகலமுள்ளதாயும், காடாந்தமான இருட்டோடு கூடியதாயும், பயத்தையும் துக்கத்தையும் கொடுப்பதாயும், சூலாகாரமாயும் கூர்மையான நுனிவுள்ளதாயும், இரும்பாயுதங்களால் நிறைந்ததாயும், கத்திமுதலிய ஆயுதங்களால் செய்த படுக்கைரூபமாயும், பாவிகளால் நிறைந்ததாயும் இருக்கின்றது. கிருமிகுண்டம்-எட்டுமைல்விளாச முள்ளதாயும், கட்டுத்தரியன் பாம்புபோலும் நீண்டும் பயங்காரமாயும் தீஷணமான பற்களுடையதாயும், விகாரமாயு மிருக்கிற புழுக்களும், தூதர்களால் அடிக்கப்பட்டும், கண்டமும் தாடையும் உலர்ந்துமுள்ளபாபிகளும் நிறைந்ததாயு மிருக்கின்றது. பூயகுண்டம்-எட்டுமைல்

அகலமுள்ளதாயும், அதனையே பக்ஷிக்கின்ற பாவிகளால் நிறைந்ததாயும் இருக்கிறது சர்ப்பகுண்டம்-பனைமரம் அளவுள்ள கோடிகோடி சர்ப்பங்களாற் சுற்றப்பட்ட சரீரமுடையவர்களாயும் அச்சர்பத்தினால் பக்ஷிக்கப்பட்டும் தூதர்களாலடிக்கப்பட்டும் கூவுகின்றவர்களாயுமுள்ள பாபிகளால் நிறைந்திருக்கிறது, மசககுண்டம் தப்த குண்டம்-விஷ்குண்டம்-இம்மூன்றும் ஒவ்வொன்றும் அரைகுரோசம் அளவினையுடையதாய், கொசுகு முதலியவைகளால் நிறைந்துள்ளதாய் தூதர்கள்கைகால்களைக்கட்டி அடிக்கும் அடியால் பீரிட்டுவரும் ரத்தவெள்ளத்தால்மூழ்கி ஆஹா என்றுகூச்சலிடும் பாபிகளால் நிறைந்துள்ளனவச்சிரதம்ஷ்ட்ரவிருச்சிககுண்டங்கள் - அரைவாபி அளவுள்ளனவாய்பாபிகளால்நிறைந்துளளனபாணம்சூலம்கத்திஎன்னு மூன்றுகுண்டங்கள்-ஒவ்வொன்றும் அரைவாபி அளவுள்ளதாய் அவ்வவ்தாயுதங்களால் நெருக்கப்பட்டுள்ளதாய் ரத்தமயமான சரீரங்களுடைய பாவிகளால் நிறைந்துள்ளது. கோளகுண்டம்-அரைவாபி அளவுள்ளதாய்க் காய்ச்சியநீரும்பாவிகளைத்தின்னும் புழுக்களும் இருளும் நிறைந்துள்ளது. நக்ரகுண்டம் ஒருகுரோசம் அளவுள்ளதாயும் அநேக முதலைகளால் நிறைந்து தூர்க்கந்தமுடையதாயும் பாவிகளுக்குத்துக்கத்தைக்கொடுப்பதாயுமுள்ளது. காககுண்டம்-அரைவாபி அளவுள்ளதாயும் மலமூத்திரசிலேஷ்மங்களாலும் அவைகளைத்தின்பவர்களாயும் காக்கைகளால் குத்தப்பட்டு விகாரமுள்ள சரீரத்தையுடையவர்களாயுமுள்ளபாவிகளாலும் நிறைந்துள்ளது. மந்தானகுண்டமும் பீஜகுண்டமும் - நூறுவில்லளவுள்ளனவாய் அவைகளையேதின்று கூச்சலிடுகின்றபாவிகளால் நிறைந்துள்ளன. வச்சிரகுண்டம்.நூறுவில்லளவுள்ளதாய் இருளும் வச்சிரப்பூச்சிகளும் அவைகளால் தின்னப்படும் பாவிகளும் நிறைந்துளது. தப்தபாஷாண குண்டம்-இரண்டுவாபி அளவுள்ளதாய்,சிவந்தநெருப்புத்தணலைவீசும்கற்களாலும்அதில்துடிக்கும் பாபிகளாலும் நிறைந்துளது. தீஷ்ணபாஷாணகுண்டம்-கத்திமுனைபோன்று கூர்மையான சுடுங் கற்களாலும் மகாபாபிகளாலும் நிறைந்துளது. லாலாகுண்டம்-ஒருகுரோசம்அளவினையுடையது. மசிகுண்டம் - நூறுவில்லளவுள்ளதாய் காய்ச்சப்பட்டமையாலும் அதில் வீழ்ந்துகிடக்கும் மலைபோலும் கறுத்தபாவிகளாலும் நிறைந்துளது. சூர்னகுண்டம்:ஒருகுரோசம் அளவுள்ளதாய் அதனையே

தின்னும்பாபிகளால்நிறைந்துளது.சக்ரகுண்டம்-குலாலன்சக்காம் போல் பதினாறுவட்டைகளோடும் அதில் அகப்பட்டுத்தூள்படும் பாவிகளோடும் எப்போதும் சுழற்றுகொண்டேயிருக்கும். வக்ர குண்டம்-இரண்டுகவ்யூதி அளவுள்ளதாய் ஆழ்ந்து அநேகவாள் வுள்ள குரூரூபமாய்ச் சுடுநீரும் பாவிகளைத் தின்னுமபுழுக்களும் நிறைந்துளது.கூர்மகுண்டம்-பளபளப்பாயும் பயங்கரமாயும்பாவி களைத்தின்று கூச்சலிடுகின்றதாயுமுள்ள அநேகஆமைகளால்நிறை ந்துள்ளது.ஜ்வாலாகுண்டம்-ஒருகுரோசம் அளவுள்ளதாய் அதில் வீழும்பாபிகள் கிலேசப்பட்டு கூக்குரலிடும் தக்கவோசையால் நிறைந்துளது. பல்மகுண்டம்-ஒருகுரோசம் ஆழமும் சுடுசாம்ப லும் அதனையே புசிக்கும் பாபிகளும் நிறைந்திருக்கப் பெற்றுளது. தப்தகுண்டம்-சுடுகின்றகற்களும் இரும்பும் அதில் நன்றாய்க்காய்ச் சப்பட்டபாவிகளும் நிறைந்ததாயும் ஒருகுரோசம் அளவுள்ளதா யும் இருளோடு கூடியதாயும் பயங்கரமாயும் காத்ரமாயுமுள்ளது. தப்தசூசி-இரண்டுகவ்யூதி அளவுள்ளதாய் நன்றாய்க்காச்சப்பட்ட உப்புநீரையுடையதாயும் இருளடந்ததாயும் ஜலசெந்துக்களையும் அவைகளால்தின்னப்படும்பாவிகளையுமுடையது.அசிபத்ரகுண் டம்-அரைகுரோசம் அளவுள்ளதாய் யாலவணங்கினன்னும்மரத் தினடியிலிருப்பதாய் அதனின்றும் வீழும் கத்திபோன்ற இலை களால் வருந்துகின்ற பாவிகளாலும் அம்மரத்தில்றுனியினின்றுந் தள்ள காப்பாற்றுவீர்என்று கூக்குரலிடும் பாவிகளாலும்நிறைந் துள்ளது.க்ஷுரதாரம்-தூறுவில்லளவுள்ளதாய்க்கத்திமுனை போன்ற ஆயுதங்களையுடையதாய் அதில்வீழ்ந்துரத்தத்தில் மூழ்கினபாவி களையுடையதாயிருக்கின்றது. சூசிமுகம்:ஐந்துவிரல் அளவுள்ள தாய் ஊசிமுனையுள்ளதாய்மிக்கக்கிலேசத்தைக்கொடுப்பதாயுள்ளது. கோகாமுகம்-இருபது வில்லளவுள்ளதாய்வாயைத் திறந்துகொண் டிருக்கும் கோகா என்னும் ஜந்துக்கள்நிறைந்த கூபரூபமாய் மகா கிலேசத்தைக் கொடுப்பதாயுள்ளது. நக்ரமுகம்-பதிறு வில்லள வுள்ளது. கசதம்சம்-நூறு வில்லளவுள்ளது. கோமுகம் - முப்பது வில்லளவுள்ளது. கும்பீபாகம் - இரண்கவ்யூதி அளவுள்ளதாய், காலசக்கிரத்தோடு கூடியதாய், சுட்டிபோன்றதாய்,லசுதம்புருஷப் பிரமாணம் ஆழமும்,அகலமுமுள்ளதாய்;மற்றக் குண்டங்களினும் நான்குமடங்கு அதிகமான துன்பத்தைக்கொடுப்பதாய்;எல்லாகுண் டங்களினும்பெரியதாயுள்ளது. காலசூத்திரகுண்டம்-தூதர்களால்

கட்டப்பட்டு அதில்தள்ளப்பட்டு மூர்ச்சித்துபிரக்ஞைதப்பாவண்ணம் மீண்டுமீண்டும் எடுக்கப்பட்டும் தள்ளப்பட்டும்கிலேசமுள்ள பாவிகளால் நிறைந்துள்ளது. மச்யோதம் ஒருகூபஅளவுள்ளஆழமும், இருபத்துநான்கு கிணற்றகலமுமுள்ளதாய், ஜந்துக்களால் தின்னப்பட்டு மீகுந்தவர்களை யுடைத்தானதாய், தொட்டமாத்திரத்தில் எல்லாவியாதிகளையும் உண்டாக்கும் சுட்டநீருடையதாயுள்ளது. கிருமிகந்தகம்-நூறுவில்லளவுள்ளதாய் அருந்துதம்என்னும் பெயருடையதாய், பாவிகளைபட்சிக்கிற புழுக்களோடும்ஆஹாளன்னும் சத்தத்தோடுங் கூடியுள்ளது. பாம்புபோச்யம்-நூறு வில்லளவுள்ளதாய் உமித்தழல்போன்ற வறுத்தமணலாலும், அதைப்புசிக்கிறபாவிகளாலும் நிறைந்துள்ளது. பாசவேஷ்டம் - ஒடுகுரோசம் அளவுள்ளதாய், பாபிகள்வீழ்ந்தமாத்திரத்தில் கட்டுப்படுவதாயுள்ளது. சூலப்புரோதம்-இருபதுஅளவுள்ளதாய்,சூலநோயை யுண்டாக்குவதாயுள்ளது பிரகம்பன்-அரைகுரோசம் அளவுள்ளதாய், பனிஜலத்தினாலும், அதில்வீழ்ந்துதொங்குஞ்சரீரமுள்ள பாவிகளாலும் நிறைந்துள்ளது. உல்காமுகம்-இருபதுவில்லளவுள்ளதாய், பாவிகளின்முகத்தை அநேகக் கொள்ளிக்கட்டைகளால்சுடுவதாயுள்ளது. அந்தகூபம் லக்ஷம் புருஷப்பிரமாண மளவும், அகலமும், நூறுவில்லளவு ஆழமுமுள்ளதாய் ஒருவருக்கொருவர் தெரிந்துக் கொள்ளக்கூடாத மிக்க இருளோடு கூடியதாயும் புழுக்களால்தின்னப்படும் பாபிகளால் நிறைந்துள்ளது வேதணம்-இருபதுவில்லளவுள்ளதாய், நானாவித ஆயுதங்களால் அடிபடுகிறபாவிகளால் நிறைந்துள்ளது. தாடனம்-பதினாறு வில்லளவுள்ளதாய், தண்டத்தினால் அடிபடுகிற பாவிகளால்நிறைந்துள்ளது. ஜால ரந்தரம்-இருபதுவில்லளவுள்ளதாய், மீன்வலையில் அகப்படுவதுபோல் அகப்பட்டுவருந்தும் பாவிகளோடுகூடியது. தேகசூரணம்-இருபதுவில் அகலமும், கோடிபுருஷப்பிரமாணம் ஆழமுமுள்ளதாய், இருளோடுகூடியதாய், சரீரத்தைப் பொடிப்படுத்துவதா யுள்ளது. தலனம்-பதினாறுவில்லளவுள்ளதாய், தூதர்களால் பிளந்தெறிதப்படுகின்ற பாவிகளால் நிறைந்துள்ளது, சோஷணம் - மூப்பது வில்லளவுள்ளதாய், நூறு புருஷப்பிரமாண ஆழமுள்ளதாய் இருட்டோடும் வறுத்தமணலோடும் கூடியதாள்ளது க்ஷயம் - நூறு வில்லளவுள்ளதாய், நானாவிதமான சர்மங்களை யுடையதாய், அதையே புசிக்கிற பாவிகளால் நிறைந்துள்ளது. சூர்ப்பம் - பண்ணிரண்டு வில்லளவுள்ளதாய் வறு

த்த இருப்புப்பொடிலோடு கூடியதாய் தூதர்களால் அடிக்கப்படும் பாகிகள் நிறைந்துளது ஜ்வாலாமூகம் இருபதுவில்லளவுள்ளதாய் உள்ளும்புறம்பும் நெருப்பைவீசுவதாய்வீழ்ந்தமாத்திரத்தில்மூர்ச்சையடையச் செய்வதாயுள்ளது. தூமாந்தம் அரைவாபி அளவுள்ளதாய் நூறுவில்லளவு ஆழமுள்ளதாய் இடிந்திருக்கிறதாய்புகையோடுகூடியதாயிருக்கிறது. நாகவேஷணம் - நூறு வில்லளவுள்ளதாய் நாகங்கள் நிறைந்ததாயுள்ளது. பாபிகளில்லாத நாகங்களும் இனிவரும் பாபிகளுக்கு இடமில்லாத நாகங்களுமில்லை. ஓசாவித்திரீ! எண்பத்தாறு நாககுண்டங்களின் லக்ஷணத்தைக்கூறினேனென்றனன். (சு-ம்-118½)

முப்பத்தேழாம் அத்தியாயம் முற்றிற்று.

ஹரித் பதி சமாராத்யாயை நம:

முப்பத்தெட்டாம் அத்தியாயம்.

* தேவிபக்தி உத்கர்ஷம்

சாவித்திரிகூறுகின்றாள்:—சாரத்துக்கெல்லாம்சாரமானதேவி பக்தியை எனக்குக்கொடும். அதுபுருஷர்களடையவேண்டிய முத்திமார்க்கத்துக்குப்பீஜமாயும், சாஸ்மாகியமுத்திக்குக்காரணமாயும் நரகார்ணவத்தைத் தாண்டச்செய்வதாயும், சர்வாரிஷ்டத்தையும் நிவர்த்திக்கப்பண்ணுவதாயும், கருமவிருக்ஷத்தை யறுப்பதாயும், நாடோறும் செய்திறபாவங்களை அரிப்பதாயும் இருப்பதால் எனக்குக் கொடுமென்கிறேன். ஓ தருமமே? தேவியினது பக்தி சேவையை விருத்திசெய்யுஞ் சாதனமென்று சொல்லுவதால் அதன் லக்ஷணமென்னை? அது எத்தனைவகைப்படும்? அந்தப்பக்திக்குவிரோதமான செய்கைகளைக் கண்டிக்கவேண்டிய கண்டனங்களெவை? அவைகளையும்சொல்லவேண்டும். ஏனெனில் ப்ரஹ்மாவினுல்ஸ்திரீஜாதியானது தத்துவஞானமில்லாமல் சிருட்டிக்கப்பட்டிருப்பதால் எனக்கு அச்சாரமான ஜ்ஞானத்தை அவசியமாமச்சொல்லவேண்

---

* தேவி பக்தியினுடைய உயர்வு.

டும் தானம் யஜ்ஞம் விரதம் தவம் தீர்த்தயாத்திரை முதலியவற்றைச் செய்வதனால் வருப்புண்ணியமானது அஞ்ஞானிக்கு உபதேசஞ்செய்கிற புண்ணியத்தில்வரும் பதினாறுபங்கில் ஓர்பங்கினுக்கும் ஈடாகமாட்டாது ஓ ஐயா! தந்தையைக் காட்டிலும் தாயையும், தாயைக்காட்டிலும்ஞானோபதேசஞ் செய்கிறகுருவையும் நூறுபங்கதிகமாகச்சிறப்பிக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறபடியால் நீர்தான் எனக்குத் தெய்வமென்றாள். தருமன் கூறுகின்றான்—ஓசாவித்திரீ. நீ முன்கேட்டவரங்களைக்கொடுத்தேன் இப்போது கேட்பவன் கூறுபவன் பிரஸ்னைசெய்பவன் ஆகிய இவர்களுடைய குலத்தை உத்தரிக்கச்செய்வதான தேவியினது குணகீர்த்தனங்களையுங் கேட்க வீரும்புகின்றாய். உனக்கு அத்தேவியினிடத்தில் மேன்மேலும் பக்தியுண்டாகுக. நிதேவியினது குணகீர்த்தனங்களை ஆயிரமுகமுடைய ஆதிசேஷனாலும் ஐந்துமுகமுடைய மிருத்யுஞ்சயராலும் ஆறுமுகமுடைய முருகனாலும் நான்குமுகமுடைய பிரமனாலும் நான்குவேதங்களாலும் விஷ்ணுமூர்த்தியினாலும்கணேசராலும் யோகீந்திரர்களாலும் சாரபூதமான சாஸ்திரங்களாலும் மற்றும் எவர்களாலும் பதினாறுபங்கில் ஓர்பங்கேனும் சொல்லமுடியா. கலிமகளும் சொல்லத்சத்தியற்று அறிவில்லாத சடம்போலாயினாள். பிரமபுத்திரர்களும் தருமசீலருமான சநத்குமாரர் சநந்தனர் சநாதனர் சநகரென்றெண்ணப்பட்டவரும் கபிலரும் சூரியமூர்த்தியும் எடுத்துச்சொல்லச் சத்தியற்றவராய் அசக்தராயினர். இவரெல்லாம் இவ்வாறுயினரென்றால் நானொருவனே சொல்லவல்லவனோவேன். பிரமனாதி மும்மூர்த்திகளும் தேவியினது பாதாம்புஜங்களைத் தியானிக்கின்றார்களே யல்லாமல் அவளது குணானுபவங்களைச் சொல்லத் துணிந்தாரல்லர். தேவியினது குணானுபவங்களைச் சொல்லச்சக்தியற்று அவளையாரொருவர் தியானிக்கின்றார்களோ அவர்களுக்குச் சாத்தியமாகாத பொருள் ஒன்றுஞ்கிடையாது; தியானஞ்செய்யாதவர்கள் யாரோ அவர்களுக்குத்தான் ஒருபொருளுஞ் சாத்தியமாகமாட்டாது. இதனை வேதவித்துக்களாகிய பிரமஞானிகள் சிறிதறிவார்கள். அவர்களினும் பிரமதேவர் அவரினும் கணேசர் அவரினும் ஞானகுருவாகிய ஸ்கந்தமூர்த்தி அவரினுஞ் சர்வஜ்ஞரான சம்பு அதிகமாயறிவார். அச்சம்பு தருமருக்கும் அவர் சூரியமூர்த்திக்கும் உபதேசித்தனர். என் தந்தையாகிய அவர் தேவியைப்பூசித்து தவத்தின் பலத்தையடைந்தார். ஓ சாவித்திரீ! பூர்வத்தில் நான் நகா

த்தைவிட்டு விஷயங்களில் ஆசையற்று வைராக்கியத்தை மேற் கொண்டு தவஞ்செய்யத்தொடங்க என்தந்தை நீவினவிய தேவியின தது குணகீர்த்தனங்களைக் கூறினர். அவைகளைக் கூறுகின்றேன்:—

தேவியானவள் தன் குணவிசேஷங்களைத் தானேயறிந்தாள். (எனவே அறிவிக்கத்தக்கவளாகிய அவளே அறிவிக்கத் தொடங்கு வாளாயின் அதுஅ ளுக்கும் அடங்காதென்றபடி(இங்ஙனமான அருமையுடைத்தாயின் அவளது குன்சீர்த்தனங்களை வேறுயாவ ரறிய வல்லுனராவர். ஆகாயத்தை யளக்கத்தொடங்கினால் அது இவ்வளவென்று அளக்கமுடியுமோ அதுபோல் தேவியினுடைய குணகீர்த்தனங்களை மனம் அளக்கத்துணியினு முடியாதென்க. இவ்வரியபெரிய தன்மையையுடைய சக்தியானவள், சர்வாத்மாவா யும் சர்வபகவானையும் சர்வகாரணகர்த்தாயும் சர்வேஸ்வராராயும் சர்வாத்ய (முதல்வ) ராயும் சர்வவித்தாயும் சர்வபரிபாலகாயும்நித் யரூபியாயும் நித்யதேகியாயும் நித்யானந்தாயும் நிராகிருதாயும் நிரங்குச (தடையில்லாதவ) ராயும்நிராசங்காயும் நிர்க்குணராயும் நிராமயராயும் நிர்லிப்த (கர்மபந்தமில்லாதவ) ராயும் சர்வசாக்ஷியா யும் சர்வாதாரராயும் பராத்பராயுமிருக்கின்ற சர்வேஸ்வருக்கு மாயாவிசிஷ்ட பிரகிருதி சத்தியாயிருக்கின்றாள். அங்ஙனம் சத்தி யாயிருப்பதுமன்றி அந்த சர்வேஸ்வரரான புருஷனுகவு மிருக்கின் றாள். எதுபோலெனின் அக்னியும் அவ்வக்னிக்குவேறுகத் தனித்து நில்லாத உஷ்ணசக்திபோலும் புருஷனும் பிரகிருதியுமாகப்பேத மின்றியிருக்கின்றனள். அந்தப் பிரகிருதி சத்திதான் சச்சிதானந்த ரூபையான மகாமாயை உருவம்போல் காணக்கூடாத சச்சிதானந் தத்தன்மையுடைய அச்சத்திபக்தானுக்கிரக காரணார்த்தமாய் உரு வங்கொண்டிருக்கின்றாள். ஓ சுந்தாமுள்ளவளே! அனுக்கிரககாரணி யாயிருக்கின்ற அந்தச்சத்தியானவள் முதலிய ராதாரூபமான ஓர் அழகிய ஸ்திரீயையும் கிருஷ்ணரூபமான ஓர்புருஷனையும் சிருஷ்டித் தாள். அந்தப்பகவானைப் பக்தர்கள்தியானித்து வழிபடுகின்றனர்.

அப்த ராதாகாந்தனைப் படைத்தவளாகிய அந்தத்தேவினது ஆஜ்ஞாபயத்தினால்பிரமதேவன் எல்லாவுயிர்களையும் படைத்துஅவ ரவர்கன்மானு சாரத்தை யனுசரித்து அவரவர் அனுபவிக்கவேண் டியவற்றை அவரவர்தலையி லெழுதிவிடுகிறான். விஷ்ணு மூர்த்தி யானவர் அவரவர்செய்யும் தவமுதலிய செயல்களுக்குரிய பலன்

களைத் தேவியினது உக்திவைப்பெற்றுக் கொடுத்துவருகின்றூர். அதுபோலவே காலாக்கினிருத்திரரும் சங்காரத்தொழிலைச்செய்து வருகின்றூர். மிருத்புஞ்சனுகிய சிவபெருமான் பரமானந்தயுக்தனுய்ப் பக்திவைக்கியத்தோடுகூடிய யோகியைப்போலிருந்து போகிகளுக்கு ஞானனுக்கிரகத்தைச் செய்யும் பிரபுவாயிருக்கின்றூர். வாயுதேவன் அதிவேகமாய்ச் சுழன்றும், சூரியன் எப்பொழுதும் தாபத்தைச்செய்தும், இந்திரன் மழையைப்பெய்வித்தும், மிருத்யு எல்லாவுயிர்களிடத்தும் பிரவேசித்தும், அக்னி எல்லாவற்றையுந் தஹித்தும், வருணன் சீதளதத்தைச்செய்தும், திக்பாலகர்கள் திக்குகளைக்காத்தும் வருகின்றனர். ராசிச்சக்கரமும் கிரகங்களும் சுழன்றும், விருக்ஷங்களெல்லாம் புஷ்பலத்தைக்கொடுத்தும் காலதத்துவமானது வெவ்வேறு பேதபட்டும் வருகின்றன. சலத்திலும் பூமியிலுமுள்ள உயிர்கள் ஜீவித்தும் யுத்தமுகத்தாலும் விஷங்களாலும் காலாகாலங்களில் மரித்தும் வருகின்றன. பர்வதமுதலியவைகளோடுகூடி கடலால் சூழப்பட்டுள்ள இப்பூமி அனந்தனுலும் அதன்கீழ்கூர்மத்தாலும் அதன்கீழ் ஜலத்தாலும் வாயுவாலும் அந்தத்தேவியின் ஆக்ஞா பயத்தினுலேயே தாங்கப்பட்டிருக்கிறது. இருபத்தெட்டு இந்திரர்கள் முடிந்தால் பிரமனுக்கு ஓர் இரவும் பகலுமாகிய ஓர்நாளாம். அவ்வாறு முப்பதுநாளாயின் ஒருமாதம், அவ்வாறுன இரண்டுமாதம் ஒருருது, பன்னிரண்டுமாதம் ஒருவருஷம், அப்படி நூறுவருஷமானுல் பிரமனுயுள் முடியும். அவன் முடிவு கிருஷ்ணனுக்கு ஓர்கண்ணிமை கொட்டுங்காலமாம். இது பிராகிருதபிரளயமெனப்படும். அப்பிரளயத்தில் சகலதேவர்களும் சராசரங்களும் பிரமனும் கிருஷ்ணமூர்த்தியினுடைய நாபிக்கமலத்திலும், பாற்கடலிலும் வைகுண்டத்திலுமிருக்கிற சதுர்ப்புஜனன விஷ்ணு இடப்பாகத்திலும், நியானுதீசனன ருத்திரன் ஜ்ஞானத்திலும் லயமடைகின்றனர். நாராயண அம்சமான ஸ்கந்தர் அவர் மார்பிலும் கிருஷ்ணம்சமான கணேசர் தோளிலும் மறைகின்றனர். துர்காதேவியான விஷ்ணுமாயையிடம் சகலசக்திகளும், அந்தமாயாதேவியும் கிருஷ்ணன்புத்தியிலும் மறைந்து புத்திக்கதிஷ்டான தேவியாகவிருக்கிறுள். லக்ஷ்மியம்சமான யாவரும் கோபிகளும், தேவஸ்திரிகளும் ராதையிடம் மறைகின்றனர். அந்தராதாதேவி கிருஷ்ணனுடைய பிராணனிலும், சாவித்திரி சரஸ்வதியினிடத்திலும் வசிக்கின்றனர். சர்வவேதங்களும் சாஸ்திரங்களும் சரஸ்வதிதேவியிடம் லயமாகின்

றன. அவள் பரமாத்மாவாகிய கிருஷ்ணமூர்த்தி நாவிலும், கோபாலர் அவர்ரோமத்திலும், யாவருடைய பிராணன்கள் பிராணனிலும் அக்னி ஜாடராக்கினியிலும், வருணன் ரேதஸினியிலும், பக்தர்களெல்லாம் பாதாரவிந்தத்திலும் விராட் அம்சமானவர்களெல்லாம் உருவத்திலும் ஐக்கியமாகின்றனர். அவரது ரோமகூபங்களில் உலகங்களிருக்கின்றன. இமைகொட்டுங்காலத்தில் கண்ணைத்திறக்கும்போது இவ்வுலகம் சிருட்டியையும், மூடும்பொழுது பிரளயத்தையும் அடைகின்றபடியால் இவ்வளவு பிரமப்பிரளயமானதென்று சொல்லமுடியாது. பூமியின்தூள் எவ்வளவோ அவ்வளவென்று சொல்லமுடியும். அவர் பிரளயத்தில் பிரகிருதிதேவியிடம் லீனமாகின்றார். அப்பிரகிருதியாகிய பராசத்தி ஒருத்தியே சேஷித்திருக்கின்றாள். நிர்குணனான பரமபுருஷன் என்று சொல்லப்படுகின்றவரும் அவளே. அந்தப்பிரகிருதியே சத்ரூபமாய் ஆகியிலிருந்தாளென்று வேதவித்துக்களறிந்து சொல்லுகின்றனர். அவ்வாறு அவ்யக்தையாயும் அவ்யாக்ரதையாயும் அதியிலும் அந்தத்திலு மிருக்கிற சித்ரூபியான அவள் பெருமையை யாவர் சொல்ல வல்லவராவர். ஆகலான் அவளுக்குப் பக்திசெய்வதுதான் சிறந்தது நான்குவேதங்களிலும் கூறப்பட்டிருக்கிற சாலோக சாமீப சாரூப நிர்வாணங்களும் சிறந்ததன்று. ஆகவே பக்தர்கள் அப்பரமாத்மாவின் சேவையையே விரும்புகிறார்களல்லாமல் பிரமத்தன்மையாவது அமரத்தன்மையாவது திவ்யரூபந் தரிப்பதையாவது சுகமானமோக்ஷத்தையாவதுவிரும்புகின்றார்களில்லை. ஏனெனில் அவைகள் பரமாத்மாவின் சேவையில்லாதன. பக்தியே அப்பரமாத்மாவின் சேவையை விருத்திசெய்கிறது. இதுதான் முத்தியினுலுண்டாகும் இன்பத்திற்கும் பக்தியினுலுண்டாகும் இன்பத்திற்குமுள்ள பேதம். இனி நிஷேதகண்டனஞ் சொல்லுகிறேன் கேட்பாயாக, பக்திக்கு நிஷேதமானது போகங்களை விரும்பிச்செய்யுங் கர்மங்களேயாம். ஆகலான் அக்கர்மங்களைவிட்டு லிபுவாகியபரமாத்மாவினது சேவைசெய்வதே மேலான சுபகருமமும் தத்துவஞானமும். இனி நீ உன்பர்த்தாவுடன் உன்னிடத்தை யடைவாயென்று ஆசிகூறி அவள்புருஷனை உயிர்ப்பித்துத் தான் தன்னிடம்போக எத்தனிக்கும்போது சாவித்திரி இயமனது பாதங்களைப் பிடித்துக்கொண்டு பிரிவாற்றுமையால் கூக்குரலிட்டுத்துக்கித்தழுதாள். இயமன் அவளழுகையைக்கண்டு மனமிரங்கி கூறுகிறான்:-ஓ சாவித்திரீ! நீபாரத

வருஷத்தில் புண்ணியக்ஷேத்திரத்தில் ஸகலம்வருஷம் நல்லசுகமநுப
வித்து முடிவில் தேவலோகத்தை யடைவாய். நீ உன் வீட்டிற்குப்
போய் சாவித்திரிவிரதத்தை அநுட்டிக்கக்கடவாய். அதனைப் பதினொ
ருவருடம் அநுட்டித்தால் ஸ்தீரீகளுக்கு மோக்ஷம்சித்திக்கும். அவ்
விரததினம் ஜ்யேஷ்டமாசம் சுக்லபக்ஷசதுர்த்தசி. பாத்ரபதமாசப்
சுக்லபக்ஷ அஷ்டமிதிதி மகாலக்ஷ்மியின் விரததினம். அது பதினொ
ருவருடம் செய்யவேண்டியது. எவள் அதனை யநுட்டிக்கிறளோ
அவள் விஷ்ணுடையபாதாரவிந்தத்தையடைவாள். மங்களத்தைக்
கொடுக்கிற மங்களசண்டிகையை பிரதி மங்களவாரத்திலும், சஷ்டி
தேவியைப் பிரதிசுக்லபக்ஷசஷ்டியிலும், எல்லாசித்தியையுங் கொடு
க்கவல்ல ராதாதேவியை அஷ்டாசங்கிராந்தியிலும், கார்த்திகைமாத
சுக்கலபக்ஷ அஷ்டமியிலும், துக்கத்தைப்போக்கடிக்கும் துர்க்கா
தேவியான பிரகிருதிதேவியைப் பிரதிசுக்லபக்ஷஅஷ்டமியிலும் உப
வாசமிருந்து பூஜிக்கவேண்டும். தனத்தையாவது சந்தானத்தையா
வது விரும்புகின்றவள் சங்கல்பஞ்செய்துகொண்டு இப்பிரகிருதி
தேவியைப் புருஷன் புத்திரனுள்ள பதிவிரதையினிடத்திலாவது யந்
திரத்திலாவது பிம்பங்களிலாவது ஆவாகித்து விதிப்படி பூசிப்பாளா
யின் விரும்பியவற்றைப்பெற்று இம்மையில் சுகமடைந்து மறுமை
யில் தேவியின்பதத்தை யடைவாள். பரமேஸ்வரி எப்பொழுதும்
பூஜிக்கத்தக்கவளாயும், எல்லாதேவி ரூபமாயும் இருக்கிறபடியால்
எந்தத்தேவியைப் பூஜிக்கினும் அப்பூஜை அவளையே யடைகிறது
என்றுகூறி தர்மராஜன்சொல்ல சாவித்திரியும் தன்னுயகனுடன் தன்
னிடம் போய்ச்சேர்ந்து விரதங்களை அநுட்டித்துப் புத்திரர்களைப்பெ
ற்று லக்ஷம்வருடம் சுகத்தோடிருந்து முடிவில் புருஷனுடன்தேவி
பதத்தையடைந்தனள். சாவித்திரி தகப்பன் காலக்கிரமமாய்ப் புத்
திரனையும் அவள் மாமன் ராஜ்யத்தையும் கண்களையும் அடைந்த
னர். சாவித்திரி சூரியனுக்கும் மந்திரங்களுக்கும் அதிஷ்டானதே
வதை யாகலின் சாவித்திரிதேவி யெனப் பெயர்பெற்றனள். ஓ நார
தரே! சாவித்திரி வரலாறும் சிவகர்மப்பிரிவுகளுங் கேட்டீரன்றே
இது கேட்கவிரும்புகின்றது யாதென்று வினவினர். (சு-ம்.74.)

முப்பத்தெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

ஹடாத்காரஹதாசுராயை நமஃ

மூப்பத்தோராம் அத்தியாயம்.

மகாலக்ஷ்மி உபாக்யானம்.

நாரதர், ஓ பிரபுவே! மகாலக்ஷ்மியின் சரித்திரம் யாது? அத்தேவியை யார் பூஜித்தது? எவ்வாறிருந்தாள்? அவளது குணகீர்தானமென்ன என்று வினவ, நாராயணர் கூறுகின்றார்:—

கிருஷ்டிக்கு ஆதியில் பரமாத்மாவின் இடதுபாகத்திற்றோன்றியபெண்ணுருவம்-நிறம் தேஜஸ் வயது காந்தி யஸஸ் வஸ்திரம் ஆகாரம் பூஷணம் குணம் புன்சிரிப்பு காடக்ஷம் பிரீதி இனிய வார்த்தை முதலானவற்றில் சமானமுடையதாய் வலப்பக்கத்தில் ராதிகாதேவியாயும், இடப்பக்கத்தில் லட்சுமிதேவியாயும், இரண்டுருவங் கொண்டதென்று முதல் அத்தியாயத்தில் கூறியிருக்கிறேனல்லவா, அந்தலட்சுமி மகாலக்ஷ்மியெனப்படுவாள். லட்சுமி என்றால் கருணையுடன் பார்க்கின்றவள் எனப் பொருள்படும். அத்தேவி சுத்ததத்துவ சொரூபிணியாயும், கோபாலர்களாலும் கோபிகைகளாலும் சூழப்பட்டு சதுர்ப்புஜனுகிய விஷ்ணுவுடன் வைகுண்டமடைந்து அவருக்கு நாயகியாயிருந்து சுவர்க்கத்தில் இந்திரசம்பத் ரூபமான சுவர்க்க லட்சுமியாயும் பாதாளத்தில் நாகலட்சுமியாயும், இராஜாக்களிடத்தில் இராஜ்யலட்சுமியாயும், கிருகஸ்தனிடத்தில் கிருகலட்சுமியாயும், யக்ஞத்தில் தக்ஷிணாரூபமாயும், தாமரையில் சோபாரூபையாயும் சந்திரனிடத்தில் சந்திரிகையாயும், சூரியனிடத்தில் காந்தியாயும், பூஷணம் பழம் ரத்னம் ஜலம் அரசன் அரசபத்தினி திவ்யஸ்திரீ கிருகம் சமஸ்தமான பயிர் வஸ்திரம் சுத்தி செய்யப்பட்ட ஸ்தானம் தேவபதமை அழகானபாத்திரம் மாணிக்கம் முத்துமாலை வச்சிரமணி பால் சந்தனம் மரத்தின்கீழ் புதிதான மேகங்கள் முதலானவைகளிடத்தில் வசித்து ஆதலால் விரும்பத்தக்க சௌபாக்கியமாயுமிருக்கின்றாள். அத்தேவியை விஷ்ணு மூர்த்தி பாற்கடலில் சித்திரை தை புரட்டாசி முதலிய மாதங்களிலும், மங்களவாரங்களிலும், பிரமன் புரட்டாசிமாத சுக்கிலாஷ்டமியிலும், மறு வருஷமுடிவிலும், மகரசங்காந்தியிலும், மாக

சங்காரத்தியிலும் பூசித்தனர். மஹேந்திரன் கேதரன் நீலன் சுபலன் நளன் துருவன் உத்தானபாதன் பலி காசிபர் தக்ஷன் கர்த்தமன் விவஸ்வன் (சூரியன்) பிரியவிரதன் சந்திரன் குபேரன் வாயு யமன் வன்னி வருணன் முதலானவர்களாலும் மனித சிரேஷ்டர்களாலும் ருஷிகளாலும் சத்புருடர்களாலும் கிருகஸ்தர்களாலும் காந்தர்வர்களாலும் நாகங்களாலும் பூஜிக்கப்பட்டிருக்கின்றனள். இவ்வாறு எல்லாவிடத்திலும் எல்லாராலும் பூஜிக்கப்பட்டு எல்லாசம்பத்துக்கும் அதிஷ்டான தேவதையாயும் சம்பத்ரூபமாயு மிருக்கிறாள் என்றனர். (சு-ம்-22)

முப்பத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

உ

ஹர்ஷ ப்ரதாயை நம:

நாற்பதாம் அத்தியாயம்.

மஹாலக்ஷுமி ஜன்மகாரணம்.

நாரதர் நாராயணரைநோக்கி இலக்குமிதேவி பாற்கடலில எவ்வாறு பிறந்தனளென்றுவினவ, நாராயணர் கூறுகின்றார்:— ஓர்காலத்தில் இந்திரன் மதுபானத்தினாற் மதித்தவனாய் மிக்ககாமத்தோடு அரம்பையுடன்கூடி காமாந்தகனாய் ஆரணியத்தில் கிரீடித்திருக்கும்போது கைலாயத்தைநோக்கி வருகின்ற தூர்வாசர் அவ்வழியாய் வர இந்திரன் அவரையும் அவருடன்வந்த சிஷ்யர்களையும் நமஸ்கரித்துத்துதிக்கும்போது முநிவர்சிஷ்யருடன்ஆசீர்வதித்துத்,தமது கையிலுள்ள பரப்பிரம சொரூபமாகிய பகவானது பிரஸாதமாகிய பாரிஜாதமாலையைக் கொடுத்தனர். இந்திரன் அதனையோற்று யானையின்மத்தகத்தின்மீது வீசினன். அதுபட்டமாத்திரத்தில் யானையானது ரூபத்திலும் குணத்திலும் தேஜசிலும் விஷ்ணுவுக்குச் சமானமாய் இந்திரனைவிட்டு காட்டுக்குத் தவஞ்செய்யச்சென்றது;அதைப் போகவொட்டாமல் தடுக்க இந்திரன் வல்லமையற்றவனாயினான். தூர்வாசர் அதனைக்கண்டு கோபங்கொண்டு கூறுகின்றார்:— அடா! நீ சம்பத்தினால் கர்வமடைந்திருக்கின்றனை; அதனால் நான் கொடுத்த புஷ்பமாலையை யானையின்மீதெறிந்தனை. பரமமதியாகிய

பகவானுக்கு நிவேதித்த நைவேத்தியம் பலம் புஷ்பம் சலம்எதுகிடைக்கினும் அப்போதே அவைகளைக் கிரகித்துப் பக்தியுடன் பிரயோஜனப்படுத்திக் கொள்ளாதவன் பிரமஹத்திக்குப் பாத்திரனுய்ச் சம்பத்தழிந்து புத்தியுமாறி ஸ்தானப் பிரஷ்டத்தையும் அடைவன். பூர்வ புண்ணியத்தால் கிடைக்கும் நிவேதனத்தைப் புசிக்கின்றவன் சிவன்முக்தனுவன். எவன் நிவேதனத்தைப் புசித்து நமஸ்கரிக்கின்றுனே அல்லது துதிக்கின்றுனே அவன் ஈஸ்வரனுக்குச்சமான மானவனுவன். அவனது பரிசமாத்திரத்தில் தீர்த்தங்களெல்லாம் பரிசுத்தமாகின்றன. ஓ மூடனான இந்திரனே! அவனது பாததூளியினுல் பூமி பரிசுத்தமடைகின்றது. நரககுண்ட பதனயோக்ய பாபலட்சனங்களுடைய பாபிகளாயினும் நிவேதனத்தை உண்ணப் பெறுவாராயின் சுத்தியாகின்றனர். இத்தகைய ஈஸ்வர பிரசாதமான மலர்மாலையை அவமதித்தபடியினுல் லட்சுமி உன்னை விட்டு வைகுண்டமடையக் கடவாளாக என்று சபித்து, ஓ, இந்திரனே! ஈஸ்வரனுக்கு ஆட்பட்ட நான் உனக்கும் உன்னையொத்த தேவர்களுக்கும் பயப்படமாட்டேன். உங்கட்கே பயப்படாதயான் மற்றவர்களை லட்சியஞ்செய்வேனே? உன் தகப்பனுராகிய காசிபரும் குருவாகிய பிரகஸ்பதியும் என்னை என்னசெய்வார்கள். ஈஸ்வர பிரசாதத்தை யாவர் நிந்தித்துப் போகின்றார்களோ அவர்கள்தான் என்னுல் போற்றப்படும் ஐஸ்வரியவான்கள் அவரைப் பூசிப்பதுதான் நலம் நீ என்னுல் போற்றப்பட்டவன்றென்று இகழ்ந்தனர். அப்பொழுது இந்திரன் அவர் பாதத்தில் வீழ்ந்தழுது ஓ முனிவரே! மாயையைப் போக்கவல்லவரே எனக்குத்தகுந்த சாபங்கொடுத்தீர், நான் இப்போது நஷ்டமான சம்பத்தைக்கேட்கவில்லை; ஞானத்தைக் கேட்கின்றேன். ஐஸ்வர்யம் ஆபத்துக்குக் காரணமாயும் ஞானத்துக்குக் காரணமாயும் முக்திமார்க்கத்துக்குத்தாப்பாளாயும் பக்தியைத்தூரத்தில் விலக்குவதாயுமுள்ளது என்பதை இன்றுகண்டேன் என்று சொல்லவே முனிவர் கூறுகின்றார்:— ஜன்மம் மிருத்யு ரோகம் ஜரை சோகம் இவைகளுக்குப் பீஜமாயிருக்குஞ் சம்பத்தாகிற இருட்டால் மறைக்கப்பட்ட மனிதன் முக்திமார்க்கத்தைக் காணுன். சம்பத்தினாலும் சுராபானத்தினாலும் மதித்தவர்கள் மூடர்களே; இவர்களை ஞானவான்கள் சூழ்ந்திரார். பாவத்துக் கேதுவானவரே சூழ்ந்திருப்பர். சம்பத்தால் மதித்தவன் விஷயசுகத்திற் பரவசனுய் மகாகாமியாய் ராஜவிகளுய் சத்வமார்க்கத்தைக் காணுன். விஷயத்தில் மூடர்

களாயிருப்பவர்கள் ராஜஸர்களென்றும் தாமஸர்களென்றும் இரு விதமாயிருக்கிறார்கள். சாஸ்திரமறியாதவன் தாமஸ விஷயாந்தகன் என்றும் அறிந்தவன் இராஜஸவிஷயாந்தகன் என்றும் சொல்லப் படுவார்கள். சாஸ்திரம் பிரவர்த்திபீஜம் நிவர்த்திபீஜம் என்று இரு வழிகாட்டுகின்றது. மதுவேண்டுமென்று தேனீ சஞ்சரிக்கின்றது போல் ஆதியில் ஆத்மாக்கள் பிரவர்த்தி மார்க்கத்தில் சுகம்வேண்டு மென்று சஞ்சரிக்கின்றார்கள். சுகபலம் வருங்காலத்தில் மனதுக்கு ஆயாசம் ஜரை மிருத்யு ஜன்மம் இந்த ரூபமான சங்கடங்கள் கோரிடு கின்றன. நேரினும் ஆன்மாக்கள் கர்மப்படி நானாவிதமான யோனிக ளிற் பிறந்து சந்தோஷமானகாரியத்தைச் சாதிக்கிறதுபோல் திரிந்து கொண்டிருக்கின்றனர். இவர்களில் ஆயிரத்தி லொருவனோ நூற்றிலொருவனோ கடவுள் தன் கடாக்ஷத்தால் சத்சங்கத்தை யடைவித்துப் பிறகு தத்வஞானமாகிற ஓடத்திலேற்றி முக்திமார்க் கத்தைக் காண்பிக்கின்றார். அப்போது ஜீவன் சம்சாரபந்த சாகரத் தைத்தாண்ட தபசிலும் யோகத்திலும் முயலுகின்றான். மகாசுகத் தைக் கொடுக்கிற முக்திமார்க்கத்தை நிர்விக்னமாய்ப்பார்க்கின்றான். ஓ இந்திரனே! இவ்வுண்மைகளை நீ உன் குருமுகமாகத் கேட்ட தில்லையா? என்று சொல்லிப்போயினர்.

பிறகு இந்திரன் தினம் தினம் வைராக்கிய விருத்தியடைந்த வனுப் ஓர்நாள் அமராவதிக்குச் சென்று அங்கு பயங்கரமற்றுச் சொ ல்லமுடியாத உபத்திரவஞ்செய்கின்ற அசுரர் கூட்டம் நெருங்கியிருப் பதையும் தன்னுடைய கூட்டத்தார் பந்துக்கள் சூன்யமா யிருப்ப தையும் பார்த்து, மந்தாகினி கரைக்குத் திரும்பிவந்து பரப்பிரமத் தைத் தியானிக்கின்றவராயும் கங்கா நதிக்கரையில் நின்று கிழக்கு முகமாய்ச் சூரியனைப்பார்க்கின்றவராயும்உரோம புளகாங்கிதத்தோ டும் பரமானந்தத்தோடுங்கூடினவராயும் தருமசிரேஷ்டராயும்பந்து வர்க்கங்களிற்சிறந்தவராயும் சகோதரர்களிற் பெரியவராயும்அசுரர் களுக்கு அரிஷ்டரூபராயு மிருக்கிற குருவைப்பார்த்து, தூரத்தில் நின்று ஜாமுடிவில் எழுந்த அவரை நமஸ்கரித்து கூக்குரலிட்ட ழுது தனக்கு நேர்ந்ததைக்கூறி யம பிரகஸ்பதி பகவான் கோபங் கொண்டவராய்ச் சொல்லுகின்றார்:—

ஓ சுரசிரேஷ்டனே! நீ ஏன் அழுகின்றனை? நீதியறிந்தவன் விபத் துண்டான காலத்திலும் பயப்படமாட்டான். ஏனெனில் சம்பத்தும்

விபத்தும் ஸ்திரமானதல்ல. அவை முன் சன்மங்களில்செய்தகர்மத்துக்குத்தக்கபடி கேரிடும். மேலும் சம்பத்தும் விபத்தும் தங்களாலேயே ஜன்மாந்திரத்தில் செய்யப்பட்டவையாம். வண்டிச்சக்கரமானது உருளும்போது அதன் இலைகள்மாறிமாறி எவ்வாறு உருண்டு வருகின்றனவோ அவ்வாறே சன்மதிதை மாறிவரும். அவ்விஷயத்தில் அழுகையென்ன? பாரதவருஷத்தில் அநுபவிக்கப்பட்டுவருவதெல்லாம்தன்னல்செய்யப்பட்டகர்மமல்லவா? அதுசுபமாகவிருந்தாலும், அசுபமாகவிருந்தாலும், கற்பகோடிகாலமானாலும், அனுபவிக்காமல் முடியாது. அவசியமாகத்தாங்கள்செய்தகர்மத்தை அனுபவித்தே தீரவேண்டுமென்று சாமவேதசாகையில் பரமாத்மாவானவர் பிரமனுக்குஉபதேசித்திருக்கின்றார். கர்மம்செய்கிர்வர்களுக்குகர்மசேஷமிருக்குமானால் அதற்குத்தக்கபடி பாரதவருடத்திலாவது வேறிடத்திலாவது சன்மம் கிடைக்கிறது. கர்மத்திலேயே பிரமசாபமும் ஆசீர்வாதமும் லட்சுமிவாசமும் தரித்திரமும் அடைகின்றன. கோடிசன்மத்திற்கு முன் செய்தபாபமாயினும் அது பிராணிகளை நிழல்போல்பின்தொடர்ந்து வருகின்றது. அனுபவித்தாலன்றிப் போகாது அது காலபேதத்தாலும் தேசபேதத்தாலும் பாத்ரபேதத்தாலும் கர்மங்களுக்குறைவும் ஆதிக்யமும் உண்டாகின்றன. வஸ்துக்களின் தானத்திலுண்டாகும் புண்யம் அந்தந்தத்தினங்களுக்குத்தக்கவாறு பலத்தைக்கொடுக்கும். சிலதினம்கோ பலனை அதிகமாகக்கொடுக்கும், காலதேசபாத்திரங்கள் சமமாகவிருந்தால் சமமானபலத்தையும், தேசம்பேதமாயிருக்குமானால் கோடிபங்குஅதிகமானபலத்தையும், பாத்திரம் சமமாயிருந்தால்சமமானபலத்தையும் பாத்திரம் விசேடமாயிருந்தால் நூறுபங்கு அதிகமானபலத்தையும் கொடுக்கிறது. பயிர்களை விருத்திசெய்கிறவன் மகிமை, கேஷத்திரத்தின் மகிமை, தீர்த்தத்தின் மகிமையாகிய இவைகளுக்குத்தக்கபடி உலகில் உழவினுலுண்டாகும் பிரயோஜனம் உண்டாகின்றது. சாதாரணதினத்தில் தானஞ்செய்தால் சாதாரணபலத்தைக் கொடுக்கும். அமாவாசையிலும் மாதப்பிறப்பிலுஞ் செயதால் நூறுபங்குபலன் அதிகமாயும், சாதுர்மாஸ்யபௌர்ணமியில் அளவில்லாதபலனும் சந்திரகிரகணத்தில் ஒன்றுக்குக் கோடிபங்குபலனையும், சூரியகிரகணத்தில் அதனினும் பத்துபங்கு அதிகமானபலனையும், அக்ஷயம் என்னும் புண்ணியகாலத்தில் அக்ஷயமானபலத்தையுங் கொடுக்கிறது. இவ்வாறுதினத்துக்குத்தக்கபடிபுண்ணியபலன்கிடைக்கிறது

தானத்தில் எப்படியோ அப்படியே ஸ்நானம் ஜபம் முதலிய புண்ணிய கிருத்தியங்களுக்கும் கிடைக்கிறது. இவ்வாறு மநுஷ்யாளுடைய புண்ணியகாமங்களை யறியவேண்டியது. குயவன் தண்டசக்கரங்களாலும் சுழற்றுவதாலும் எப்படிகடத்தைச்செய்கின்றானோ அப்படிப் பிரமன் கர்மசூத்திரத்தினால் பலத்தைக் கொடுக்கின்றான். எவருடைய ஆக்ஞையால் சலப்பிரபஞ்சமும் சிருட்டியாகின்றதோ அவரை நமஸ்கரியுங்கள். அவர் பிரமனையுஞ் சிருட்டித்தவர். அவர் சகலத்தையும் ரக்ஷிக்கின்றவர், சங்கரிக்கின்றவர். ஆபத்ரூபமான சம்சாரத்தில் பகவானை நினைப்பவன் ஆபத்தில் நின்றும் சம்பத்தையடைகிறான் என்று சங்கர் கூறுகின்றார் என்றுகூறி ஆசீர்வதித்தனர். (சு-ம்-92)

நாற்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

ஹரிர் போக்திரை நமஃ

நாறபத்தொன்றும் அத்தியாயம்.

இந்திராதீனும் பிரஹ்மலோக கமனம்.

பின்பு இந்திரன் குருவுடன் பிரமசபைக்குச் சென்று நமஸ்கரித்து நடந்ததைச்சொல்ல, பிரமதேவன் தேவராஜனை நோக்கிகூறுகின்றார்:. நீ என் வம்சத்தில் பேரனுக்குப் பிள்ளையாகவும், மகாசமர்த்தனாகவும், பிரகலாதனுக்குச் சிஷ்யனாகவும், தேவர்களுக்குப் பிரபுவாகவும, இருக்கின்றாய். என் புத்திரனாகிய தட்சப்பிரஜாபதி உன் தாயின் தந்தையாகவு மிருக்கின்றான். மூன்றுதலமும் எவனுக்குச் சுத்தமாக விருக்கின்றதோ அவனுக்கும், எவன் தாய் பதிவிரதையோ எவன் தந்தை ஜிதேந்திரியனை சுத்தனோ அவனுக்கும், அவனுக்குமாதாமகனும், தாயுடன்பிறந்தவனும் சுத்தராயிருப்பாரோ அவனுக்கும் அகங்காரம் எவ்வாறிருக்கும். உலகில் மநிதன் தகப்பன் தோஷத்தாலும், தாயைப்பெற்றவன் தோஷத்தாலும், குருதோஷத்தாலும் தோஷமுள்ளவனாகின்றான். சர்வாந்தராத்மாவான பகவான் எல்லா தேகத்திலும் பிரவேசித்திருக்கிறான். அவன் எப்போது வெளி

யேபோகின்றனே, அப்போது இச்சரீரம் பிணமாய்விடுகிறது. மன சுக்கும் இந்திரியங்களுக்கு நான் பிரபு, சங்கரன் ஆன்மாவின் ஜ்ஞானரூபன், விஷ்ணுபிராணன், பிரகிருதிதேவி புத்தி, பிரகிருதிதேவியின் கலைகளான சகலசத்திகளும் நித்திரை முதலான சத்திகள். சரீரத்துள்ளடங்கிய சீவனுக்கு அச்சத்திமயமாயிருக்கின்ற சரீரத்தைப்போகார்த்தமாகக்கொடுக்கப்பட்டதுஆன்மாவுக்குஈசனானவன் தேகத்தைவிட்டு வெளிப்படும்போது ராஜாவெளிப்பட்டால் மற்றவர்களும் வெளிப்படுவதுபோல் பிராணன் முதலானவைகளும் வெளிப்படுகின்றன. அதுபோல்தூர்வாசரால்கொடுக்கப்பட்ட ஈஸ்வரப் பிரசாதம் உன்னிடம் இருப்பதற்கில்லாமல் எப்போது போய்விட்டதோ அப்போதே லக்ஷ்மியும் அவள் சம்பந்தமான சகலசம்பத்துக்களும் உன்னைவிட்டுப் போய்விட்டன. நீ தெய்வத்தினால்வஞ்சிக்கப்பட்டவனாயினை. தெய்வமோ மிக்கபலமுள்ளது. பாக்கியஹீனத்தினால் மூடனாயிருப்பவனை எவன் ரக்ஷிக்கவல்லமையுள்ளவனென்றுகூறி, பிரமன் தேவர்களோடும் பிரகஸ்பதியோடும் வைகுண்டம்போய் லக்ஷ்மிபதியைப்பார்த்துச் சேவித்துத் துதித்து இந்திரன் குறையைக்கூறினன். திருமால் பூஷணம் வாகனம் சோபை காந்தி சம்பத்து இவைகளில்லாமலும் பயந்திருக்கிற அவர்களைப் பார்த்துக் கூறுகின்றனர். தேவர்களே! நீங்கள் பயப்படவேண்டாம். நானிருக்க உங்களுக்கென்னகுறை? சகல ஐஸ்வர்யத்தையும் கொடுக்கிற லக்ஷ்மியைக்கொடுக்கிறேன். ஆனால் இக்காலத்துக்குத தந்தது யும் நன்மையை யுண்டுசெய்வதாயும் சத்யமாயும் சாரமாயும் முடிவில்சுபத்தைச்செய்வதாயுமுள்ள ஒருவார்த்தையைக் கூறுகின்றேன். கேளுங்கள்:— அளவில்லாத இப்பிரபஞ்சத்திலுள்ள ஜனங்களெல்லாம் என் சுவாதீனர்களாயிருந்கின்றார்கள். நான் ஈஸ்வர பக்தர்களுக்குச் சுவாதீனனாயிருக்கின்றேன். ஆகையால் அவர்களுக்குக் கோபம்வரும்படிச் செய்கின்றவருடைய கிருகத்தில் நான் வசியேன் இது நிச்சயம். ஆகையால் சங்கரருக்குச் சமானரான தூர்வாசருக்கு நீ கோபம்வரும்படிச்செய்து அவரால் சாபமேற்றிருக்கிற படியால் இலக்குமி நீங்கிவிட்டாள். எவ்விடத்தில் சகல சம்பத்துடன் சிவார்ச்சனையும் பிராமணபோஜனமும் இல்லையோ அங்கு இலக்குமி இருக்கமாட்டாள். ஓ தேவர்களே! ஈஸ்வர பக்த நிந்தனை எங்கிருக்கின்றதோ அங்கிருந்து மகாலக்ஷ்மிகோபமாய் வந்துவிடுகிறாள் அன்றியும் விரததினங்களில் புசிக்கின்றவன், ஈஸ்வரநாமத்தை விக்ரயஞ்

செய்கின்றவன், தனது கன்னிகையை விக்ரயஞ் செய்கின்றவன் அக்கினியைப் பரியாய்ப் போகச்செய்கின்றவன், பாபிகள் வருகின்ற வீட்டிலிருப்பவன் சூத்திரசிரார்த்தான்னத்தைப் புசிப்பவன், சூத்திர சம்பந்தமாக எவ்விதகாரியங்களையும் செய்கின்ற பிராமணன், விருஷபத்தை வாகனமாக வைத்திருப்பவன், அசுத்தனபுடையவன் மகாகூரமான நெஞ்சும் ஹிம்சிக்கிறசெயலும் உடையவன், பிரஹ்மணநிந்தனைசெய்கின்றவன், பர்த்தாவும் பிள்ளையுமில்லாத ஸ்திரீ அன்னத்தைப் புசிப்பவன், தானத்தை நகத்தினால் கிள்ளுகின்றவன் பூமியை நகங்களாற்கீறுகின்றவன், சூரியோதயத்தில் போஜனமும் பகலில் நித்திரையும் மைதுனமும், செய்பவன், ஆசாரத்தைக் கைவிட்டவன், சூத்திரனிடம் பிரதிக்கிரகம் செய்கின்றவன், தீக்ஷையில்லாதவன், ஈரக்காலோடும் அரையில் வஸ்திரமில்லாமலும் சயனிக்கிறவன், அடிக்கடி சிரிப்பும் வீண்வார்த்தையு முடையவன், தலையில் எண்ணெயிட்டுக்கொண்டு வேறு உறுப்புகளைத்தொடுகின்றவன் தன் சரீரத்தில் வாத்தியமடிக்கிறவன், விரதம் உபவாசமில்லாம லிருப்பவன், சந்தியாவந்தனமின்றி அசுசியாயிருப்பவன், எப்போதும் துவேஷிக்கிறவன், ஜீவஹிம்சை செய்கிறவன் தயையில்லாம லிருப்பவன், இவர்களுடைய வீட்டிலிருந்து இலக்குமி விலகிவிடுவாள். அவரவரிடங்களில் அவரவர்களுடைய இஷ்டதேவதா பூஜை கீர்த்தனை பிரசம்சை பக்தபிரசம்சை சங்கத்தொனி பகவான் சேவை தியான முதலானவைகள், சிவலிங்கார்ச்சனம், சிவநாம கீர்த்தனம் துர்காதேவி யர்ச்சனை, பிராமணபோஜனம் நடக்கின்றனவோ அவ்விடங்களிலெல்லாம் இலக்குமி வசிப்பாள் என்றுகூறி, இலக்குமியைப்பார்த்து ஈஸ்வரானுக்கிரகத்தால் பாற்கடல் கடைய வருங்காலத்தில் நீ ஒருகலியால் அங்குப் பிறக்கவேண்டிய தென்று ஆச்ஞாபித்துப் பிரமனோகாக்கி விடைகொடுத்தனர். தேவர்கள் வெகுகாலங் கழித்து ஈஸ்வரானுக்கிரகம்பெற்றுப் பாற்கடலைக் கடைந்து தன்வந்தரி அமிர்தம் உச்சைஸ்வரம் ஐராவதம் நாலுவிதாந்தம் சுதர்சனம் லக்ஷ்மி வனமாலை முதலியன வுண்டாகப்பெற்று மகிழ்ந்தனர் இலக்குமியும் தேவர்களிடம் இந்திரன்காணக் காட்சிகொடுத்துச் சம்பத்துண்டர்களும்படிச் செய்தனள். ஓ நாரதரே! நீர் இன்னமும் என்னகேட்க விருப்புகின்றீ ரென்று வினவினர். (சு-ம்-59)

நாற்பத்தொன்றும் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

ஹார்த்த சந்தம ஸாபஹ்ராயை நமஃ

நாற்பத்திரண்டாம் அத்தியாயம்.

இலக்ஷ்மி பூஜாமந்திர ஸ்தோத்ரம்

நாரதர் இந்திரன் செய்த இலக்குமியின் பூஜாவிதியும் தோத்திரமுஞ் சொல்லவேண்டுமென்று வினவ நாராயணர் கூறுகின்றார்:- இந்திரன் ஸ்நானஞ்செய்து இரண்டு வஸ்திரந்தரித்துப் பாற்கடலின் கண்சென்று பஞ்சாயதன பூஜைசெய்து கடத்தைத்தாபித்து அதில் பரமேஸ்வரியான இலக்குமியை ஆவாகித்து, சந்தனத்திற்றோய்ந்த பாரிஜாதபுஷ்பத்தை யெடுத்துக்கொண்டு "சகஸ்ரதளபத்மஹஸ்தகர்ணிகாவாசினீம்பராம், சரத்பார்வண கோடீந்துப் ரபாமுஷ்டகராம்பராம், ஸ்வதேஜஸா ப்ரஜ்வலந்தீம் சுகத்ருஷ்யாம் மனோஹாரம், ப்ரதப்த காஞ்சனநிபா சோபாமூர்த்திமதீம்ஸதீ, ரத்ன பூஷண பூஷாட்யாம் சோபிதாம்பீதவாஸஸீம், ஈஷத்தாஸ்ய ப்ரசன்னாஸ்யாம், சஸ்வத்சு ஸ்திரயௌவனும் சர்வசம்ரத் ப்யதாத்ரீஞ்சமகாலக்ஷ்மீம்பஜேசுபாம்" என்று தியானித்து பக்தியோடு ஓவ்வொரு மந்திரத்தினலும் சோடசோபசாரஞ்செய்து, சிறந்தும் உயர்ந்து மிருக்கின்ற நானவித வஸ்துக்களையும், விலையுயர்ந்த ரத்னத்தையும் ஆசனத்தையும். ஓ மகாலட்சுமியே பெற்றுக்கொள்வாயாக. சுத்தமான இந்த கங்காதீர்த்தத்தைக் கிரகித்துக்கொள்வாயாக. புஷ்பம் சந்தனம் அறுகு முதலானவற்றோடு கூடிய சங்கமத்தியிலிருக்கின்ற அர்க்கியசலத்தையும் கிரகிப்பாயாக. சுகந்த புஷ்ப தைலத்தையும் நல்லதேக சுந்தரத்தைக்கொடுக்கின்ற நெல்லிக்கனியையும் அங்கீகரிப்பாய். நல்லபட்டுவஸ்திரத்தையும், பஞ்சு வஸ்திரத்தையும், ரத்ன பூஷணத்தையும் சுவர்ண பூஷணத்தையும், நல்ல கந்தகத்தோடு கூடிய சந்தனத்தையும் வாங்கிக்கொள்வாயாக. மரத்தினது மெழுக்குப்போன்ற கந்தத்திரவியங்களந்த தூபத்தையும், உலகத்துக்கு நேத்ரசொரூபமாயும், பரிசுத்தமாயும், இருட்டைப் போக்குகின்ற தாயும், சுகத்தைக் கொடுப்பதாயுமுள்ள தீபத்தையும் பெற்றுக்கொள்வாயாக. நானவித உபகரணங்களோடு கூடியதாயும், நானவித ஆகாரத்தோடு மிருக்கின்ற நைவேத்தியத்தைப் பெற்றுக்கொள்வாயாக. பிரமஸ்வரூபமாயும், பிராண ரட்சண காரணமாயும்,

துஷ்டியும் புஷ்டியுங்கொடுக்கின்ற அன்னத்தைப் பெற்றுக்கொள்வாயாக. சாலியன்ன சம்பந்தமாயும், நன்முப்பக்குவமாயும், சர்க்கரைபாலோடு கலந்ததாயும் இருக்கின்ற பரமான்னத்தைப்பெற்றுக்கொள்வாயாக. சர்க்கரைபாலோடு கூடியதாயும் மனோகரமாயும் ருசியாயுமிருக்கின்ற சுவஸ்திகத்தைப் பெற்றுக்கொள்வாயாக. நானாவிதமான பக்குவான்னங்களையும், காமதேனுவின் ஸ்தனத்தில் பெருகியிருக்கிற மதுஷ்யாமிர்தத்தையும் பெற்றுக்கொள்வாயாக. கரும்பிலிருந் துண்டானதாயும், அக்கினியில் பக்குவப்பட்டதாயு முள்ள வெல்லத்தைக் கிரகிப்பாயாக. யவை கோதுமை இவைகளின் மாவிலுண்டானதும், நெய் வெல்லம் கலந்ததுமான கூரான்னத்தைக் கிரகித்துக்கொள்வாயாக. அரிசிமாவோடு கூடினதாயும் பக்குவமாயும் சுவஸ்திகம் முதலானதோடு கூடியிருக்கின்ற என்னால் கொடுக்கப்பட்ட நிவேதனத்தைப் பெற்றுக்கொள்வாயாக. குளிர்க்கியான காற்றைக் கொடுப்பதாயும், ஒடுக்கமான காலத்தில் சுகத்தைக் கொடுப்பதாயமிருக்கிறவிசிறியும், சாமரமும் ஒப்புக்கொள்வாயாக. பச்சைகர்ப்பூர முதலானவைகளால் பரிமளிக்கப்பட்டதாயும், நாவினுடைய அரோசிகத்தைப் போக்குவதாயுமிருக்கிற தாம்பூலத்தைப் பெற்றுக்கொள்வாயாக. நன்முப்பரிமளம் ஏற்பட்டதாயும், குளிர்ச்சியாயும், தாகத்தைத் தணிக்குஞ் சக்தியுள்ளதாயும், சகலப் பிராணிகளுடைய பிழைப்புக்குக் காரணமாயுமிருக்கிற தீர்த்தத்தைப் பெற்றுக்கொள்வாயாக. தேகத்தின் சௌந்தர்யத்தை விருத்திசெய்வதான பஞ்சியினாலுண்டான வஸ்திரத்தையும் பட்டுவஸ்திரத்தையும் பெற்றுக்கொள்வாயாக. தேகத்துக் கலங்காரஞ்செய்யத்தக்க சுவர்ன பூஷணங்களையும், ரத்னபூஷணங்களையும் பெற்றுக்கொள்வாயாக. சுகத்தையும் சர்வமங்களத்தையுங் கொடுக்கிற கந்தத்தை ஆக்ராணஞ்செய்வாயாக. புண்ணிய தீர்த்தத்திலிருந்து கொண்டுவரப்பட்ட இந்த ஆசமனீய தீர்த்தத்தைப் பெற்றுக்கொள்வாயாக. ரத்னஹாரங்களாலும் வஸ்திரங்களாலும் புஷ்பசந்தனங்களாலும் அலங்கரிக்கப்பட்ட படுக்கையைப் பெற்றுக்கொள்வாயாக. பூமியில் எந்தெந்தவஸ்துக்கள் அபூர்வமாயும் துர்லபாயுமிருக்கின்றனவோ அவைகளையெல்லால் பெற்றுக்கொள்வாயாகவென்று மூலமந்திரத்தாற் கொடுத்து விதிப்படி அம்மந்திரத்தைப் பத்துலக்ஷம் செபித்தான். அதனால் அவனுக்கு மந்திர சித்தியுண்டாயிற்று. பிரமாவினால் கொடுக்கப்பட்டதாயும் வைதிக சம்பந்தமாயும்

மந்திர ராஜமாயும் பிரசித்தமாயும் கற்பவிருக்ஷமாயும் இருக்கிற சுவாஹா என்பதனோடுகூடியிருக்கிற இம்மந்திரத்தினால் குபேரன் பரமைஸ்வர்ய மடைந்தான். பிரபுவான தக்ஷஸாவர்ணிமநுவும், மங்களனும், சப்ததீபங்களுக்கும் பிரபுவாயிருந்தனர். பிரியவிரதன் உத்தானபாதன் கேதாரன் இவர்கள் சர்வசித்தியுமடைந்தனர். இம்மந்திரத்தால் இந்திரனுக்கு இஷ்டசித்தியுண்டாகும்போது இலக்குமி தேவி சிறந்த விமான மூர்ந்து சப்தத் வீபத்தோடு கூடின பூமியைத் தனது காந்தியினால் மறைக்கின்றவர்களாய், வெண்சண்பகப்பூ நிறமுடையவளாய், ரத்னபூஷணங்களால் பூஷிக்கப்பட்டவளாய், பிரசன்னமானமுகமுடையவளாய், பக்தானுக்கிரகத்தில் ஆவலுள்ளவளாய், கோடிசந்திர பிரகாசமுள்ள ரத்னமாலையைத் தரித்தவளாய், வரங்கொடுப்பவளாய் வந்தனள். சர்வலோகத்துக்குந் தாயாயும், சாந்தையாயுமிருக்கின்ற அந்தத்தேவியை இந்திரன் பார்த்து உரோம புளகாங்கிதமுடையவனும், ஆனந்தபாஷ்பஞ்சொரிந்து கைகூப்பிப் பிரமாவினால் கூறப்பட்ட சிறந்ததோத்திரத்தைச் செய்தனன்:—

கமலவாசினியின் பொருட்டு நமஸ்காரம், நாராயண பத்தினியின் பொருட்டு நமஸ்காரம். கிருஷ்ணனுக்குப் பிரியமானமகாலக்ஷ்மியின்பொருட்டு நமஸ்காரம். தாமரைமலர்போன்ற கண்ணும் முகத்தையுமுடைய தேவியின்பொருட்டு நமஸ்காரம். பத்மாசனத்தில் வீற்றிருக்கின்றவள்ளாயும், பத்மத்தைக் கையிலுள்ளவளாயும், விஷ்ணுவின் பத்தினியாயுமிருக்கின்ற உன்பொருட்டு நமஸ்காரம். சர்வசம்பத்சொரூபிணியாயும், சர்வாலும் பூஜிக்கத்தகுந்தவளாயும், ஹரிபக்தியையும் சந்தோஷத்தையும்கொடுக்கின்றவளாயும் இருக்கின்ற உன் * * *. கிருஷ்ணமார்பை வசிக்குமிடமாகவும், கிருஷ்ணனைப் புருஷனாகவுமுடைய உன் * * *. சந்திரகாந்த சொரூபிணியான உன் * * *. சம்பத்துக் கதிஷ்டான தேவதையாயும், மகாதேவியாயுமிருக்கின்ற உன் * * *. விருத்திசொரூபையாயும், விருத்தியைக் கொடுக்கின்றவளாயுமிருக்கின்ற உன் * * * வைகுண்டத்தில் எந்தலக்ஷ்மியுண்டோ, பாற்கடலில்எந்தலக்ஷ்மியுண்டோ, இந்திர கிருகத்தில் எந்த ஸ்வர்க்கலக்ஷ்மியுண்டோ நீ அந்தந்தலக்ஷ்மி சொரூபமாயிருக்கின்றவள். ராஜகிருகத்தில் ராஜலக்ஷ்மியாயும், கிருகஸ்தருடைய கிருகத்தில் கிருகலக்ஷ்மியாயும்

கிருகதேவதையாயும், சமுத்திரத்திற் பிறந்த காமதேனுவாயும், யக்ஞத்துக்குப் பத்தினியான தக்ஷிணையாயும், தேவமாதாவான அதிதியாயும் தாமரைக்குளத்தில் தாமரைப்பூவாயும், அக்நி, ஹோமத்தில் சுவாஹாகாரமாயும, கவ்யஹோமத்தில் சுவதாவாயும், விஷ்ணுஸ்வரூபமாயும், சகலருக்கும் ஆதாரமான பூமி சொரூபமாயும் சுத்த தத்வ சொரூபமாயும், நாராயணனே முக்கியமானஸ்தானமாகவுள்ளவளாயு மிருக்கின்றாய். கோபம் இம்சை முதலானவைகளால் விடப்பட்டவளாயும், வரத்தைக் கொடுக்கின்றவளாயும், சரஸ்வதிசொரூபமாயும், பரமார்த்தத்தைக் கொடுக்கின்றவளாயும், விஷ்ணுபக்தியைக் கொடுக்கின்றவளாயு மிருக்கின்றாய். நீ இல்லாவிட்டால் உலகம் பஸ்மமாய்விடும், சகலப்பிரபஞ்சமும் மரித்த பிராயமாய்விடும். எல்லோருக்குஞ் சிறந்த தாயாயும், பந்து ரூபியாயும், புருஷார்த்தங்களுக்குக் காரணமாயு மிருக்கின்றாய். குழந்தைக்குத் தாய் எப்படிப் பால்கொடுத்துக் காப்பாற்று கின்றாளோ, அப்படிச் சகலரையும் ரக்ஷிக்கின்றாய். தாயில்லாதல குழந்தை தெய்வாதீனமாய்ப் பிழைக்கிறது, நீ யில்லாமல் ஒருவனும் பிழைக்கமாட்டான். இது நிச்சயம். பிரசன்னசொரூபியான நீ என் விஷயத்தில் தயைசெய்வாயாக. ஓதேவியே! என்னுடைய ஸ்தானங்களெல்லாம்சத்ருக்களால்ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. அதைநீக்கி எனக்குக் கொடுக்கவேண்டும். உன்னைவிட்டு நான்எப்போதுவிலகி விட்டேனோ அதுமுதல் பந்துஹீனனும், பிரக்ஞாகனும் சர்வசம்பத்ஹீனனு மிருக்கின்றேன். தேவியே! ஞானத்தையும், தருமத்தையும், சகலசௌபாக்கியத்தையும் எனக்குக்கொடுக்கவேண்டும். பிரபாவத்தையும், பிரதாபத்தையும் சர்வாதிகாரத்தையும், யுத்தத்தில் ஜயத்தையும், ஐஸ்வர்யத்தையும் எனக்குக்கொடுக்கவேண்டும் என்று சகலதேவர்களோடும் துதித்துக் கண்ணீர்பெருக சிரசினால் நமஸ்கரித்தான். எல்லாதேவரும் தங்கள்வேண்டுகோளின்படி வேண்டிப் போற்றியவர்க்கும்வரங்கொடுத்து அழகான புஷ்பமாலையை இந்திரனுக்கு அநுக்கிரகித்து மறைந்தனள். தேவர்கள் தங்கள் தங்களிடஞ்சென்றனர். இத்தோத்திரத்தை எவன் முக்காலமும் படிப்பானோ அவன்சகலஅரசர்களுக்குள்பிரபுவாய்,குபேரனுக்குச் சமானமாவன். இத்துதியை ஐந்துலக்ஷம் ஜபித்தால் சித்தியாய்விடும். அப்படிச் சித்தியானவன் ஒருமாதம் ஒழிவின்றிக்கூறுவானால் மகாசுகியாகவும், சிறந்தராஜாவாகவும் ஆகின்றான் என்றனர். (சு-ம்-எநி)

நாற்பத்திரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

ஹல்லீ ஹாலஸ்யஸுந்துஷ்டாயை நமஃ

நாற்பத்துமூன்றும் அத்தியாயம்.

சுவாஹாசக்தி உபாக்யானம்.

நாரதர்வினவுகிறார்:—ஓமகானுபவரே! உருவத்தினும், குணத்தினும்,ஹரிக்குச் சமானமான நாராயணமுனிவரே! தபஸ்விகள் முனிவர்கள் வேதவித்துக்கள் சித்தர்கள் யோகிகள் என்றுசொல்லப்பட்டவர்களுள் நீரே சிறந்த முனிவர். இலக்ஷ்மிதேயினது வரலாற்றை எனக்குக் கூறினீர். இனி ஒருவருக்குந் தெரியாவண்ணம் பாதுகாக்கத்தக்கதும், சகலகாரியத்துக்கும் உபயோகமாகத்தக்கதும் வேதபுராணங்களில் கூறப்பட்டதுமான உபாக்கியானத்தைக் கூறவேண்டும் என்று வினவ நாராயணர், நாரதரே!புராணங்களில் அப்பிரகாசமாயுள்ள வேதோக்த தர்மசம்பந்தமான பல உபாக்யானங்கள் நான் கேட்டிருக்கின்றேன்; அவற்றுள் நீர்எதனை விரும்புகின்றீர் என்றனர். நாரதர், சர்வகர்மங்களிலும் செய்யப்பட்ட அவிசு ஹோமங்களில் சுவாஹாதேவியும்,பிதுர்ஹோமத்தில் சுவதாதேவியும், தக்ஷிணைதபு சகலவிடங்களிலும் புகழப்பட்டிருக்கின்றார்கள்; இவர்கள் சரித்திரத்தையும், ஜன்மபலத்தையும், பிராதான்யத்தையும் கேட்கவிரும்புகின்றேன் என்றனர். அவ்வார்த்தையைநாராயணர்கேட்டுச்சிரித்துசிருஷ்டிக்காதிபில்சகலதேவர்களும் பிரமலோகத்திற்குப்போய் தங்கள் ஆகாரத்தைப்பற்றி விண்ணப்பிக்க, பிரமன் யஜ்ஞரூபியான விஷ்ணுவைத் தியானித்தனர். அவர் ஒருகலையால் யக்ஞரூபமாக அவதரிக்க அந்தயக்ஞத்தில்பிராமணர்கள் பலவிதமான அவிசைக்கொடுத்தார்கள். கொடுத்தும் அவைகளைத் தேவர்கள் அடையவில்லை. அதனல் தேவர்கள் மீண்டும்பிரமதேவனுக்கு விண்ணப்பஞ்செய்ய பிரமன் கிருஷ்ணமூர்த்தியைச்சரணமடைந்து அவராக்ஞையால் பிரகிருதிதேவியைப் பிரார்த்திக்க அவள் தனது கலையினல் சர்வசக்திரூபமாயும், அதிசுந்தரமாயும், கறுத்தநிறமுள்ளவளாயும், மனோகரையாயும், புன்சிரிப்புள்ள முகமுள்ளவளாயும் பக்தானுக்கிரகையாயும் பிரமனை நோக்கி என்ன வேண்டுமென்றனள். அதற்கவன் கூறுவான்.—அக்னிக்குக் கொ

ளுத்துஞ் சக்தி யில்லாமையால் நீ அவனுக்குக் கொளுத்துஞ் சக்தியாகவேண்டும். உன்னாமத்தை உச்சரித்துத் தேவர்களுக்கு அவிசு ஹோமஞ் செய்வார்களாயின் அதை அவர்கள் அடைந்து ஆனந்தமடையும்படிச் செய்யவேண்டும். அக்னிக்குச் சம்பத்தாகவும், கிருகலக்ஷுமியாகவும் இருக்கின்ற உன்னைத்தேவரும் மநிதரும் பூஜிப்பார்கள். அதனைக்கேட்ட சுவாஹாதேவி துக்கித்து நான் கிருஷ்ணமூர்த்தியை யடையப்போகின்றேன். அவனைத் தவிரமற்றவர்களையடையக் கனவிலும் எனக்கு இஷ்டமில்லை. நீயும் ருத்திரரும் ஆதிசேடனும் யமனும்மற்றுமுள்ளாரும் செய்து வரும் தொழில்களெல்லாம் அவருடைய கிருபையினாலல்லவா. ஆகலான் நானும் அவரையே சிந்தித்துக்கொண்டிருக்கிறேன் என்றுகூறி பத்மநாபனைக்குறித்து லக்ஷம் வருஷம் ஒற்றைக்காலில்நின்று தியானித்துத் தவம்புரிந்து கிருஷ்ணமூர்த்தியைத் தெரிசித்து காமத்தினால்மூர்ச்சித்தனள். சர்வக்ஞனாகிருஷ்ணன் அவளபிப்பிராயமறிந்து அவளைக்கையினால்எடுத்துநிறுத்திக்கூறுகிறார்:— நீ வராஹ அவதாரத்தில் உன் அம்சத்தால் என்பத்தினியாகக்கடவாய். அப்போது நீ நக்னிஜிதன் புத்திரியாய்ப்பிறந்து நாக்னிஜிதீ என்றுபெயருள்ளவளாவாய். இப்போது அக்னிக்குத்தசனசக்தியாயிருந்து அவனுக்குப்பத்னியாகவும் மந்திரங்களுக்கெல்லாம் அங்கமாகவும் பூஜிக்கத்தக்கவளாகவும் இருக்கக்கடவாய். உன்னை அக்னி மிக்க விஸ்வாசத்தோடு கௌரவித்துப்பத்னியாக்கிக்கொண்டுஉனக்குத் திருப்தியுண்டாகும்படி ரமிப்பானென்றுகூறி மறைந்தனன்.

பிறகு பிரமாவின் உத்தரவின்படி அக்னிதேவர்,பயத்துடன் சாமவேதத்தில் கூறியுள்ள தியானத்தினால் ஜகதம்பிகையைத் தியானித்துத் துதித்து, மந்திரபூர்வகமாய் சுவாஹாதேவியை மணந்து, ஆயிரம் தேவருடம் ரமித்திருக்க அவள் கருப்பமடைந்து பன்னிரண்டுவருடஞ் சென்றபின்னர் தக்ஷணாக்னி காருகபத்யம் ஆகவனீயம் என்னும் மூன்று பிள்ளைகளைப் பெக்றனள். ருஷிகளும் முனிவர்களும் பிராமணர்களும் க்ஷத்திரியர்களும் சுவாஹாஎன்பதையீற்றிலுடையமந்திரத்தை யுக்சரித்து அவிர்த்தானஞ்செய்தனர். தேவர்களும் அவிசை யடைந்தார்கள். சுவாஹாவோடுகூடின மந்திரங்களெல்லாஞ் சபலமடைந்தன. சுவாஹாவோடு கூடினமந்திரத்தை எவன் உச்சரிக்கின்றானோ அவனுக்குச் சர்வசித்தியுமுண்டாம்.

விஷமில்லாத சர்ப்பம்போலும் வேதமில்லாதபிராமணன்போலும் பர்த்தாசேவையில்லாத ஸ்திரீபோலும் வித்தையில்லாத புருஷன் போலும் பழமூள்ள கிளையில்லாத விருக்ஷம்போலும் சுவாஹா வோடு கூடாத மந்திரமானது நிந்திக்கத்தக்கது; ஹோமஞ்செய்தா லும்பலனுண்டாகாது. சாமவேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறதியா னமும், துதியும், பூஜாவிதியுங்கூறுகின்றேன். எல்லாயக்ஞமும் ஆரம் பிக்குஞ் சமயத்தில் கடத்தில் சுவாஹாதேவியைப் பூஜித்துச் செய் தால் பலன்சித்திக்கும். மந்திரத்துக்கு அங்கமாயிருக்கின்றவளாயும் மந்திரசித்தி சொரூபையாயும், சித்தியாயும், சித்திதையாயும், கர்ம பலத்தைக்கொடுக்கின்றவளாயும் தியானித்துமூலமந்திரத்தினுல்பா த்ய முதலானவைகளை கொடுத்து பூஜிக்கின்றவன் எல்லாப்பலத்தை யுமடைவான். இது நிச்சயம். சுவாஹா, வன்னிப்ரியா, வன்னிஜா யா, சந்தோஷகாரணி, சத்தி, கிரியா, காலதாத்ரி, பரிபாககரி, த்ருவா (ஸ்திரமானவள்) நராணம்சதாகதிः (மனிதர்களால்சதாசரணமடை கின்றவள்) தாஹிகா (கொளுத்துகிறவள்) தகனகூமா (கொளுத்துவ தில் வல்லமையுடையவள்) சம்சார சாரரூபா, கோரசம்சாரதாரிணீ (கோரமான சம்சாரத்தினின்று கரையேற்றுகின்றவள்) தேவஜீவன ரூபா, தேவபோஷணகாரிணி என்கின்ற இப்பதினாறு நாமங்களையும் அவனொருவன் பக்தியோடு படிப்பானே அவன் இவ்வுலகிலும் மே லுலகிலும் சர்வசித்தியடைவான். அவனுடையஎல்லாக்கர்மங்களும் அங்கஹீனமாகமாட்டா. புத்திரஹீனன் புத்திரனையும் பத்னிஹீ னன் அரம்பைக்குச்சமானமான சுந்தரஸ்திரீயையும் அடைவர் என்றனர். (சு - ம். நிச)

நாற்பத்துமூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

உ

ஹம்ஸமந்திரார்த்த ரூபிண்யைநமः

நாற்பத்துநான்காம் அத்தியாயம்.

சுவதா உபாக்யானம்.

நாராயணர் கூறுகின்றார்:—இனிச்சுவதா உபாக்கியானத்தைக் கூறுகின்றேன் கேட்பீராக. இதுபித்துர்க்களுக்குத் திருப்தியையுண் டாக்கும் சிராத்த காலத்தில் அதிகமானபலத்தைக் கொடுக்கும்.

பிரமன் சிருட்டிக்காதியில் நான்குசரீரமுள்ள பிதுர்க்களையும், மூன்றுதேஜோரூபமான பிதுர்க்களையும்சிருட்டித்து சுகரூபராயும் மனோகரராயுமுள்ள அவர்களுக்கு ஆகாரமாக சிராத்தத்தில்செய்யும் தர்ப்பணத்தையும்ஸ்நானகாலத்திற்செய்யும்தர்ப்பணத்தையும் தேவபூஜை முன்னிட்ட சிரார்த்தத்தையும் கற்பித்தனர். முச்சந்தியிலும் செய்யவேண்டிய ஆன்னிகமாகிய அநுட்டானகர்மங்களைப் பிராமணன் செய்யவேண்டியதென்று வேதத்தில் விதிக்கப்பட்டிருக்கிறபடியால் எந்தப்பிராமணன் தினம் சிரார்த்ததர்ப்பணமும் முச்சந்தியும் பலியும் வேதத்தொனியும் செய்யாமலிருக்கின்றானே அவன் விஷமில்லாத பாம்புபோல் யாவராலும் அவமதிக்கத் தக்கவனாவான். தேவி சேவையில்லாதவனும், ஈஸ்வரனுக்கு நிவேதிக்காமல் புசிக்கின்றவனும் சாம்பராகும் மரணகாலம்வரையில் சுத்தியடையமாட்டான் அவன் ஒரு கர்மத்துக்கும் உபயோகப்படமாட்டான். பிரமன் பிதுர்க்கள் நிமித்தம் சிரார்த்தாதிகளை நியமித்திருக்கின்றபடியால் பிராமணன் முதலானவரும் அவ்வாறே சிரார்த்தாதிகளைக் கொடுத்துவந்தனர்.ஆனால்அதனைப்பிதுர்க்கள் அடையச் சகதியற்றவர்களாய் பசியடைந்து பிரமனிடம் விண்ணப்பித்தனர். அவர்மான சீகமாக ஓர்மனோகரமான கன்னிகையுருவம் யௌவனம் நூறுசந்திரனுக்குச் சமானமான காந்தியுள்ள முகம் வித்தை குணம் மூதலியவற்றையுள்ளவளாயும், பிரகிருதிதேவியின் அம்சமாயும் பதிவிரதையாயும் வெண்சண்பகப்பூ நிறமும் ரத்ன பூஷணலங்கிரதமும் சுத்தமும் புன்சிரிப்பும் வரமளிக்குஞ்சத்தியும் சுபகரமும் நல்லநடையும் சுவதா என்னும் பெயரும் உள்ளவளாயும், லட்சுமியின் லக்ஷணமுடையவளாயும், நூறுதளமுள்ளதாமரைமலரில் பொருந்திய பாதங்களுடையவளாயும், பிதுர்தேவதைகளுக்குப் பத்னியாயும். தாமரைபோன்ற முகமும், நேத்திரமுமுடையவளாபுஞ் சிருட்டித்து அவர்களுக்குக் கொடுத்து சுவாதாவோடு கூடின மந்திரத்தைப் பிதுர்க்களைத்திருப்திசெய்யவேண்டுமென்று பிராமணர்களுக்குரகசியத்தில் உபதேசித்தனர். அவ்வாறே அவர்களும் கிரமப்படிசெய்துவந்தனர். தேவர்களுக்குசுவாஹாமந்திரமும் பிதுர்க்களுக்கு சுவாதாமந்திரமும்சிறந்தன. தக்ஷிணைஎல்லாகர்மங்களிலுஞ்சிறந்தது. அஃதில்லாறயாகமும் நாசமாகும். பிதுர்க்கள்தேவர்கள் பிராமணர்கள் முனிவர்கள் மநுக்கள் முதலிய யாவரும்சுவதாதேவியைப் பூசித்துத் துதித்தார்கள். இந்த சுவதாவின் வரலாறு

யாவருக்குஞ் சந்தோஷத்தை விளைவிக்கும். வேறெதைக்கேட்கவிரும்புகின்றனை என்றனர். நாரதர் சுவதாதேவியின் பூசாவிதியையும் தியானமும் துதியுங் கேட்கவிரும்புகின்றேன் என்றனர். நாராயணர் கூறுகிறார்:—ஓநாரதரே! நீர்கேட்டவைகள்வேதத்திற்கூறப்பட்டிருக்கின்றன. அவை எல்லாமங்களத்தையும் உண்டாக்கும். நீ எல்லா வேதங்களையும் அறிந்திருக்கின்றனை. மீண்டும் என் அதனைக்கேட்க விரும்புகின்றனை. சரத்கால கிருஷ்ணபக்ஷ திரயோதசி மகாநக்ஷத்திரத்திலும் சிரார்த்ததினத்திலும் சுவதாதேவியைப் பூசித்துப் பிறகு சிரார்த்தத்துக் காரம்பிக்கவேண்டியது. அகங்காரத்தினால் இத்தேவியைப் பூசிக்காமல் எவன் சிரார்த்தத்துக்கு ஆரம்பிக்கின்றானே, அவன் சிரார்த்தர்ப்பண பலன்களையடையமாட்டான். பிரமாவின் மனதிற்பிறந்த கன்னிகையாயும், எப்போதும் ஸ்திரமான யௌவனமுடையவளாயும் பூஜ்யர்களான பிதுர்தேவதைகளுக்கும், சிரார்த்தங்களுக்கும், பலத்தைக்கொடுக்கின்றவளாயுமுள்ள சுவதாதேவியை நமஸ்கரிக்கின்றேன் என்று தியானித்து மங்களமான கலசத்தில்ஆவாகித்து மூலமந்திரத்தால் பாத்யாசமனதிகளைக் கொடுத்து ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் சுவதா தேவ்யை சுவாஹாஎன்றுச்சரித்துப் பூசித்து நமஸ்கரிக்கவேண்டுமென்றுவேதத்தில் கூறியிருக்கின்றது.

இனிப்பிரமதேவனால் கூறப்பட்டதாயும், மனிதர்கள் இச்சிக்கும் சகலசுகத்தையுங்கொடுப்பதாயுமுள்ள துதியைக்கூறுகின்றேன் கேட்பீராக:—சுவதாஎன்றுச்சரித்தமாத்திரத்தில் புண்ணியதீர்த்த ஸ்நானபலமும் சர்வபாப நிவர்த்தியும் வாஜபேயபலமும் உண்டாகும். மூன்றுதரம் உச்சரித்தால் சிரார்த்தம் பலி தர்ப்பணம்இவைகளின் பலமும் உண்டாகும். சிரார்த்ததினத்தில் சுவதாவின்தோத்திரத்தைத் ச்சாவதானமாய்க் கேட்கின்றவன் சிரார்த்தஞ்செய்த பலனையடைகிறான். சந்தேகமில்லை. சுவதா என்று மூன்றுதரம் மூன்றுகாலங்களிலும் உச்சரிக்கின்றவன் பதிவிரதாதருமமும்வணக்கமும் புத்திரப்பேறும் நற்குணங்களும் உடையவளாகிய மனைவியை யடைகிறான் ஓ ஸ்வதாதேவியே! பிதுர்களுக்குப் பிராணனுக்குச் சமானமாயிருக்கின்றனை, பிராமணர்களுக்கு ஜீவனரூபியாயிருக்கின்றனை. சிரார்த்தத்துக்கு அதிஷ்டான தேவதையாயிருக்கின்றனை. பலத்தைக் கொடுக்கின்றவளாயிருக்கின்றனை. புண்ணிய ரூபிணியாயிருக்கின்றனை. நித்யையாயும், சத்யரூபிணியாயும், சிருட்டிகாலத்தில் ஆவிர்ப்பவித்தவளாயும், பிரளயகாலத்தில்மறைகின்றவளா

யும் இருக்கின்றனை. ஸ்வஸ்திः நமः சுவாஹः சுவதா தக்ஷிணை இம் மந்திரமெல்லாம் வேதத்தில் கர்மபூர்த்திக்காக ஈஸ்வரனல்நிர்மிக்கப் பட்டன. என்று இவ்வாறு சொல்லிமுடிக்கும்போது சுவதாதேவி ஆவிர்ப்பவித்தாள். அவளைப் பிரமன் பிதுரர்களுக்குக்கொடுத்தான் பிறகு சகலரும் தங்களிடஞ்சென்றனர். எவன் இத்துதியைக்கேட் பானை அவன்சகல தீர்த்தயாத்திராபலத்தையும்,தன்மனதிலெண் ணும் கோரிக்கைகளையும் அடைவான். என்றனர். (சு-ம்-நூசு ஏ)

நாற்பத்துநான்காம் அத்தியாயம் முற்றிற்று.

ஊ

ஹரினைபாதான நிர்முக்தாயைநமः

நாற்பத்தைந்தாம் அத்தியாயம்

தக்ஷிணைபாக்யானம்

நாராயணர் கூறுகின்றார்:—இனித்தக்ஷிணைபாக்கியானங்கூறு கின்றேன் கேட்பீராக.முற்காலத்தில் கோலோகத்தில் கிருஷ்ணனுக் குப் பிரியமானவளாயும், ராதாவுக்குச் சமானமானவளாயும், யாவ ராலும் பூஜிக்கத்தக்கவளாயும், மனோகரையாயும், சுந்தரியாயும், நல்லகாந்தியாயும்பற்கள் வித்தை, குணம், ரூபம், மிருதுவானசரீ ரம் முதலியவைகளை யுடையவளாயும். மேகலையணிந்தவளாயும் தாமரைமலர்போன்ற கண்ணுள்ளவளாயும், யௌவனமுள்ளவளா யும், சிறிதுபுன்சிரிப்புள்ள முகமுள்ளவளாயும்,ரத்னபரணங்களால் பூஷிக்கப்பட்டவளாயும், வெண்சண்பகப்பூ நிறமுள்ளவளாயும், கோவைப்பழம்போன்ற உதடுள்ளவளாயும், மான்போன்ற கண்ணு டையவளாயும் அன்னநடை யுள்ளவளாயும் காமசாஸ்திரத்தில் சமர்த்தையாயும், சுபாவமாய் ஆசையுள்ளவளாயும், பிறருடைய அபிப்பிராயமறிந்தவளாயும் ரசக்ஞையாயும்,ரசிகராசிகளுக்கிருப்பி டமாயும் ரசிகநாயகியாயும் ரஹிகசுகத்தை யறிந்தவளாயுமுள்ள சுசீலை என்னும் ஓர்கோபிராதையின் எதிரில் கிருஷ்ணமூர்த்தியினு டைய மார்பின் வலப்பாகத்தில் வசித்திருந்தாள். அப்பொழுது கிருஷ்ணமூர்த்தி கோபிகளுக்குள் சிறந்த ராதையைப் பார்த்துப் பயந்து தலைகுனிந்துநிற்ப, ராதைகண் சிவந்து உதடுதுடித்து அவர் சமீபத்தில் வருவாளாயினள். கிருஷ்ணமூர்த்தி அவள்வருகையைக்

கண்டு மறைந்தோடினர். ஓடிப்போகிற கிருஷ்ணமூர்த்தியைச் சுசீலை முதலியவர்கள் பார்த்துப்பயந்து நடுங்கினர். சுதர்மன் முதலான மூன்றுலக்ஷம்கோபர்களும் லக்ஷங்கோடி கோபிகாஸ்திரீகளும் பயந்து கைகூப்பிவணங்கின கழுத்துடையவர்களாய் எங்களை ரக்ஷிப்பாயென்று சரணமடைந்தனர். பரமேஸ்வரியான ராதிகாதேவி சுசீலையைநோக்கி இனி நீ கோலோகத்துக்குள் வருவையாயின் பஸ்மமாகக்கடவையென்று சபித்தனள். பிறகு ராதைஅந்தராசக்கிரீடையில் கிருஷ்ணமூர்த்தியை அழைக்கவராமையால் க்ஷணகாலத்தைக் கோடியுகமாகநினைத்துக் கூறுகிறாள்:— ஓ பிராணநாதனே! வாரும். என்பிராணனுக்குஅதிஷ்டானதேவனே! நீயில்லாமல் என்பிரானன் போகின்றது. ஸ்திரீயின் கர்வமும் சுகமும் புருஷபாக்கியத்தினால் விருத்தியடைகின்றன. ஆதலால் ஓபகவானே! நான் உன்னை எப்பொழுதும் நமஸ்கரிக்கிறேன். குலஸ்திரீகளுக்குப் புருஷன் தான் பந்து தெய்வம் வழி சம்பத்துமுதலியவைகளாம். தருமத்தையும் சுகத்தையும் பிரீதியையும் அரிஷ்டநிவர்த்தியையும்சன்மானத்தையும் கௌரவத்தையும் ஸ்திரீகளுக்குக் கொடுக்கிறவன் பர்த்தாதான். நாயகன்தான்சாராத்சாரமானபிரபு. அவன்தான்பந்துக்களை விருத்திசெய்கிறவன். பந்துக்களுள்பர்த்தாவுக்குச்சமானமான பந்துகிடையாது. பரிக்கிறபடியால பர்த்தாவென்றும், பரிபாலிக்கின்ற படியால் பதியென்றும், சரீரத்துக்குப் பிரபுவானபடியால் சுவாமி என்றும், காமத்தைக்கொடுக்கிறபடியால் காந்தனென்றும், சுகத்தை விருத்திசெய்கிறபடியால் பந்துவென்றும், பிரீதியைக் கொடுக்கிறபடியால் பிரியன் என்றும், ஐஸ்வர்யத்தைக் கொடுக்கின்றபடியால் ஈசன் என்றும், பிராணனுக்குப் பிரபுவாக இருக்கின்றபடியால் பிராணநாயகனென்றும், ரதியைக் கொடுக்கின்றபடியால் ரமணன் என்றும் சொல்லப்படுகிறான். பர்த்தாவைக்காட்டிலும் பிரியமான பொருள் ஒன்றேனுங் கிடையாது புத்திரன் பர்த்தா சுக்லத்திலிருந்து பிறந்தபடியால் சுதனுயிருக்கின்றான். நல்லகுலஸ்திரீகளுக்கு நூறுபிள்ளைகளிருப்பினும் அவர்களைக்காட்டிலும்பர்த்தாவே பிரியமானவன். நற்குலத்திற் பிறக்காத ஸ்திரீ பர்த்தாவையறிந்துகொள்ளவல்லமையுள்ளவளாகாள் எல்லாப்புண்ய தீர்த்தஸ்நானமும், தக்ஷிணையோடுகூடிய எல்லா எக்ஞமும், எல்லாபூபிரதக்ஷணமும், எல்லாத்தபசுகளும், விரதங்களும், உபவாசங்களும், இன்னும் அநேகவிதமான புண்ணியகர்மங்களும், குருசேவை பிரா

மணசேவை வேதசேவையாதிகளும் கணவன்பாத சேவைக்குப்பதி
னறில் ஒரு பங்குக்கூட சமானமாகாது. குரு சிறந்த பிராமணன்
தேவர்கள் இவர்களைக்காட்டிலும் பர்த்தாவே சிறந்தவன். புருஷர்
களுக்கு வித்யாதானஞ்செய்த குரு எப்படிச்சிறந்தவரோ, அப்படி
நல்லகுடியிற்பிறந்த ஸ்திரீகளுக்கு புருஷனே சிறந்தவன். இலக்ஷங்
கோடிகோபிகாஸ்திரீகளுக்கும், இலக்ஷங்கோடிகோபாலர்களுக்கும்,
அளவில்லாத பிரமாண்டங்களுக்கும், கோலோகப்பிரபுக்களுக்கும்,
என்கணவனுகிய உனது அநுக்கிரகத்தால் நான் ஈஸ்வரியாயிருக்கி
ன்றேன், ஸ்திரீசுபாவமாகையால் நீ இங்கிருக்கின்றாய் என்பதையறி
யாமல் இருக்கிறேன் என்று கூறி கிருஷ்ணமூர்த்திபைப் பக்தியி
னல் தோத்திரஞ்செய்து நாதனே நாதனே எனக்குத் தெரிசனத்
தைக்கொடும். நான் உன் பிரிவால் துக்கப்பட்டுக் கொண்டிருக்கி
றேன் என்றழுதாள். பிறகு சுசீலை என்கிற தக்ஷிணைதேவி கோலோக
த்தைவிட்டுப் பூலோகத்திற்குவந்து நீண்டகாலந் தவம்புரிந்து இலக்
குமியின்சரீரத்தில் பிரவேசித்தாள். அக்காலத்தில் தேவர்கள் ஒரு
பெரியயாகத்தைச்செய்து அதன்பலனையடையாமற்போயினர். அக்
காரணத்தை பிரமனிடஞ்சென்றுகேட்க, அவர் கிருஷ்ணனைத்தியா
னிக்க, அவர்முகாலக்ஷ்மிதேகத்திலிருந்துமாதுலக்ஷ்மியைப்பிரி
த்தெடுத்துபிரமாவுக்குத்தக்ஷிணையாகக்கொடுத்தார். பிரமன் அவளை
க்கர்மபூர்த்திக்காக யக்ஞமூர்த்திக்குக் கொடுத்தனர். யக்ஞமூர்த்தி
அவளுடைய சவுந்தர்யாதி விசேஷங்களைக்கண்டு மோகித்து மூர்ச்
சையடைந்து பிறகு அவளையே விவாகஞ் செய்துகொண்டு மானுட
சஞ்சாரமற்ற விடத்தில் நூறுதிவ்யவருடம் கிரீடித்திருந்தனர்.
அத்தேவி பன்னிரண்டுவருடம் கர்ப்பந்தரித்து சர்வ கர்மாக்களுக்
கும் பலரூபமான பிள்ளையைப்பெற்றனள். அப்பிள்ளையை யக்ஞஞ்
செய்கின்றவர்களுக்கு யக்ஞமூர்த்தி கொடுத்தனர். தேவர்கள்
அதனால் சந்தோஷமும் பரிபூரணமான மனோதமும் முடையவர்
களாய்த் தங்களிடம்போய்ச் சேர்ந்தனர். இச்செய்தி தருமமால்
நான் கேட்டிருக்கின்றேன். கர்த்தா கர்மத்தைச்செய்துசீக்கிரமாகத்
தக்ஷிணையைக் கொடுத்தால் பலனடைவான் என்று வேதத்தில்கூறி
யிருக்கிறது. ஓ முனிவரே! கர்த்தா கர்மபூர்த்தியாகும்போது தெரி
யாமையாலாவது கர்மவசத்தாலாவது பிராமணர்களுக்குத்தக்ஷிணை
யைக் கொடுக்காமலிருந்தால் அக்கர்மம் பலனைக்கொடுப்பதில்லை.
ஒருமுகூர்த்தங்கழிந்தால் இரண்டுபங்கும், ஒருதினமாத்திரிகழிந்தால்

நூறுபங்கும், மூன்று இராத்திரி கழிந்தால் அதற்கு இரண்டு பங்கும், ஒருமாதங்கழிந்தால் இலக்ஷம்பங்கும், ஒரு வருடங்கழிந்தால் மூன்றுகோடி பங்குமாக அந்தக்கர்மபலம் நஷ்டத்தையடைகின்றது. இவ்வாறு பிராமணசொத்தை யபகரித்தவன் ஒருகர்மத்துக்கும் அதிகாரியல்லாதவனையும் பின்புதரித்திரனையும், வியாதியுள்ளவனையும் பிறப்பான். அவன் வீட்டிலிருந்து தாருணமான சாபத்தைக்கொடுத்து இலக்குமி நீங்கிவிடுகின்றாள். அவனால் கொடுக்கப்பட்ட தர்ப்பணம் சிரார்த்தம் இவைகளைப் பிதுர்க்கள் கைக்கமாட்டார்கள். இவ்வாறே தேவர்கள் பூஜைக்கும் அக்னி ஆகுதிக்கும் தானங்கொடுப்பதற்கும் யாசிப்பதற்கும் யோக்கியனுகான். யஜமானனுயிருந்து தக்ஷிணையைக் கொடாதிருக்கிறவனும், யாசித்தும் கொடாமலிருக்கிறவனும் ஆகிய இருவர்களும் கட்டியகயறு அறுபட்ட யானையைப்போல் குப்புறபாக நரகில்வீழ்ந்து இலக்ஷம்வருடம் இயமதூதர்களால் அடிபட்டுவருந்தி பின்பு சண்டாளனுயும் வியாதியுள்ளவனுயும் தரித்திரனுயும் பிறப்பான். அதுவுமல்லாமல் முன்னேழு பின்னேழு பிதுர்க்களையும் நரகில் தள்ளி விடுவான்.

ஓநாரதரே! தக்ஷிணையின்மகிமையைக்கூறினேன். இனிஎதனைக் கேட்க விரும்புகின்றீர்? என்றுகேட்க, நாரதர் தக்ஷிணையில்லாமல் செய்கிற யக்ஞத்தின் பலனை யார் அடைகிறது? முற்காலத்தில் யக்ஞமூர்த்தியால்செய்யப்பட்ட தக்ஷிணை பூஜாவிதி எப்படி? இவ்விரண்டையும் கூறும் என்று வினவ நாராயணர் கூறுகின்றார்:— தக்ஷிணையில்லாத கர்மத்துக்குப் பலன் ஏது? தக்ஷிணையோடுகூடிய கர்மத்துக்கே பலனுண்டு. தக்ஷிணையில்லாத கர்மம் பலிச்சக்கிரவர்த்தியை யடைகிறது. சந்தேகமில்லை. ஏனெனில் பலிச்சக்கிரவர்த்தியின்பொருட்டு வாமனுவதாரஞ்செய்த பகவான், அவனை நோக்கி யார் தக்ஷிணையில்லாமற் செய்கின்றார்களோ அந்தக் கர்மமும் வேதமறியாத பிராமணர்களுக்குக் கொடுத்த போஜனமும், சிரத்தையில்லாத தானமும், சூத்திரஸ்திரீயை விவாகஞ்செய்துகொண்ட பிராமணர்களுக்குக் கொடுத்த பூஜாத்திரவிய முதலானதும், அசத் பிராமணனால் செய்யப்பட்ட யக்ஞமும் அசுசியானவன் செய்கிறபூஜையும் குருபக்தியில்லாதவனுடைய கருமமும் உன்னை அடையக்கடவது என்று கூறினர்.

இனித் தக்ஷிணைதேவியினுடைய தியானமும், துதியும், பூஜாவிதியும், கண்ணுவசாகையில் கூறியிருக்கிறமுறையேகூறுகின்றேன்.

கர்மத்தில்சமர்த்தையான அத்தக்ஷிணாதேவியையஜ்ஞமூர்த்தியடைந்து அவளது ரூபத்தினால் மோகித்துத் துதிக்கத் தொடங்கினார்:—

ஸ்தோத்திரம்.

முற்காலத்தில் கோலோகத்தில் சிறந்த கோபிகாஸ்திரீயாயும், ராதைக்குச்சமானமாயும். தோழியாயும், கிருஷ்ணனுக்கு இஷ்டமான மனைவியாயுமிருந்தனை. கார்த்திகை பௌர்ணமியில் ராதாமகோற்சவமான ராசக்கிரீடையில் இலக்ஷ்மியினுடைய தக்ஷிணபுஜத்திலிருந்து பிறந்தனை. அதனால் தக்ஷிணாதேவியென்று பெயரெய்தினை. அதற்குமுன் சுசீலையென்றுபெயர் பெற்றிருந்தனை. ராதாசாபத்தினால் கோலோகத்திலிருந்து வீழ்ந்து என்பாக்யத்தால் என்னிடம் வந்துசேர்ந்தனை. என்னிடம் தயைசெய்து என்னையேபர்த்தாவாகச் செய்துகொள்வாய். கர்மிகளுக்கும் கர்மங்களுக்கும் பலத்தைக் கொடுப்பவளாயிருக்கின்றாய். நீயில்லாமற்போனால் யாவருடைய கர்மமும் வீண்தான். மும்மூர்த்திகள் திக்பாலர்கள் முதலான சகலதேவர்களும் நீயிராதகர்மத்துக்குப் பலன்கொடுக்க வல்லமையுடையவர்களல்லர். பிரமன் கர்மரூபியாயும் மஹேஸ்வரன் பலரூபியாயும், விஷ்ணு யஜ்ஞரூபியாயும் இருக்கின்றனர். நீ இம்மூவருக்கும் சாரரூபியா யிருக்கின்றனை. பரப்பிரம சொரூபியாயும், நிர்க்குணமாயு மிருக்கிற பராசக்தியும், கிருஷ்ணனும் உன்னை பலத்தைக்கொடுக்கிற சக்தியாகச் செய்திருக்கிறார்கள். ஓ அழகான பெண்ணே! நீ எனக்கு ஜன்மங்கள் தோறும் சக்தியாயிருக்கின்றனை. நான் உன்னோடு கூடியிருப்பேனானால் சர்வ காரியங்களிலும் வல்லமையுள்ளவனா யிருக்கின்றேன்.

என்றிவ்வாறு துதித்து எதிரேநிற்க, தேவி சந்தோஷத்தோடு அவனையடைந்தாள் இத்துதியை எவனொருவன் இராஜசூயயாகம் வாஜபேயம், கோமேதம், நரமேதம், அஸ்வமேதம், லாங்கல (கலப்பை)யாகம், கீர்த்தியையுண்டுசெய்கிறயாகம், தனத்தைக்கொடுக்கிற யாகம், பூமியைக்கொடுக்கிற யாகம், கஜமேதம், லோகயஜ்ஞம் சொர்னயஜ்ஞம், இரத்னயஜ்ஞம், தாம்பரயஜ்ஞம், சிவயஜ்ஞம், ருத்ரயஜ்ஞம், விஷ்ணுயஜ்ஞம், இந்திரயஜ்ஞம், சத்ருவையிம் சிக்கின்ற வருணயஜ்ஞம் பாபத்தைப்போக்குகின்ற யஜ்ஞம் சுசியஜ்ஞம் தர்மயஜ்ஞம் பாபத்தைப்போக்குகின்ற யஜ்ஞம், கர்மயஜ்ஞம், பத்

ரகம் என்னும் யோனியாகம் ஆகிய இவைகளைத் தொடங்குகின்ற காலத்தில் படிப்பானுயின் அவன் கர்மம் தடையில்லாமல் முடியும்.

பூஜாவிதி

இனித்தியானமும் பூஜாவிதியையும் கூறுகின்றேன்:—கலசத்தில் இலக்ஷ்மியின் வலதுதோளில் இலக்ஷ்மியின் கலாசொரூபமாய்ப் பிறந்தவளாயும், சர்வசாரியங்களிலுஞ்சமர்த்தையாயிருக்கின்றவளாயும், விஷ்ணுசக்திசொரூபிணியாயும், சுத்தியைக்கொடுக்கின்றவளாயும், சுத்திரூபமாயிருக்கிறன்றவளாயும், சுசீலையென்னும்பெயருள்ளவளாயும் இருக்கின்ற தக்ஷிணாதேவியை நமஸ்கரிக்கின்றேன் என்று தியானித்து மூலமந்திரத்தினால் ஆவாகித்து தாமரைப்புட்பமுதலானவைகொண்டு வேதோக்தப்படி ஓம் ஸ்ரீம் க்லீம் ஹ்ரீம்தக்ஷிணையை சுவாஹா என்று சமர்த்தனான புருஷன் பூஜிக்கவேண்டும். பிரீதியையும் எல்லா கர்மபலன்களை கொடுப்பதாயுமுள்ள தக்ஷிணோபாக்யானத்தை எவன் கேட்பானோ அவன் கர்மங்கள் அங்கஹீனமாயிருப்பினும் பூர்ணபலமுள்ளதாய் விடும். புத்திரனில்லாதவன் நல்ல புத்திரனையும் பார்யையில்லாதவன் சிரேஷ்டமான அங்கமுள்ளவளாயும், வணக்கமுள்ளவளாயும், இனிப்பாய்ப்பேசுகின்றவளாயும் பதிவிரதையாயும், சுத்தையாயும் நற்குலத்திற் பிறந்தவளாயும் உள்ளபார்யையடைவான். வித்தை யில்லாதவன் வித்தையையும், தனமில்லாதவன் தனத்தையும், பூமியில்லாதவன் பூமியையும் சந்ததியில்லாதவன் சந்ததியையும் அடைவார்கள். சங்கடகாலத்திலும் பந்துவைவிட்டுப் பிரிந்திருக்கும் காலத்திலும் ஆபத்காலத்திலும் எவன் கேட்பானோ அவன் அவ்வச்சங்கடங்களிலிருந்து நீங்கிவிடுவான்; இதிற் சம்சயமில்லை. என்றனர். (சு-ம். கூ அ)

நாற்பத்தைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

ஹரிஷ்ண்யைநமஃ

நாற்பத்தாறும் அத்தியாயம்.

ஷஷ்டி தேவி உபாக்கியானம்.

நாரதர் கூறுகின்றார்:—அநேக தேவர்களுடைய உபாக்கியானங்களைக் கேட்டேன். அம்மாதிரிபோல் பிரகிருதியின்கலைகளாயுள்ள

ஷஷ்டிதேவி மங்களசண்டிகை மனஸாதேவி இவர்களுற்பத்தியைக் கேட்க விரும்புகின்றேனென்று வினவ நாராயணர் கூறுகின்றார்:— சஷ்டிதேவி பிரகிருதிதேவியின் ஆறுவது அம்சத்திற்பிறந்தவளாகையால் ஷஷ்டியெனப் பெயர் பெற்றனள். அவள் குழந்தைகளுக்கு அதிஷ்டான தேவதையாய்ப் பக்தர்களுக்குப் புத்திரப் பேற்றைத் தருபவளாய் அப்பாலர்களுக்கு ஆயுளைக்கொடுப்பவளாய் எப்போதும் குழந்தைகள் பக்கலிலிருந்து காக்கின்றவளா யிருக்கின்றாள். இவள்தான் ஸ்கந்தருக்குப் பிராணப்பிரியபான தேவசேனையென்பவள். நான் தருமரிடம் கேட்டவண்ணம் கேட்பவர்களுக்குப் புத்திரோற்பத்தியை யுண்டுசெய்யும் அவளது பூஜாவிதியையும் இதிகாசத்தையுங் கூறுகின்றேன்.

சுவாயம்புமநுவுக்குப் புத்திரனை பிரியவிரதன் யோகேந்திரனுய் விவாகமில்லாமல் தவம்புரிய, பிரமதேவன் முயற்சியால்மாலினி என்பவளை விவாகஞ்செய்துகொண்டு நீண்டகாலம் புத்திரப்பேறின்றி வருத்திக் காசிபரால் புத்திரகாமேஷ்டி யாகஞ்செய்து அந்த யக்ஞ அவிசை மாலினிக்குக்கொடுத்தான். அவள் அதனைப்புசித்து சருப்பமடைந்து பன்னிரண்டு தேவவருடம் சென்றபின் சுவர்ணம் போல் பிரகாசமும், கண்திறந்தும் உயிரிழந்து மிருக்கிற ஓர் பிள்ளையைப் பெற்றாள். அச்சிசுவை சகலபந்துக்களும் பார்த்து அழுதார்கள். தாய் மூர்ச்சித்தனள். ஓ முனிவரே! அரசன் குழந்தையை மயானத்துக்குக்கொண்டுபோய் மார்பில்வைத்துக்கொண்டு கதறினன். பின்பு அரசன் அக்குழந்தையை விடாமல் தன்பிராணனை விட முயற்சித்தான் இவ்வாறு புத்திரசோபத்தால் ஞானயோகத்தையும் மறந்து நிற்குஞ்சமயத்தில் ஆகாயத்தில் நிர்மல ஸ்படிகம் போலும் சிரேஷ்டமான இரத்தினங்களால் நிர்மிக்கப்பட்டதாயும், தேஜசினால் சொலிப்பதாயும், வெண்பட்டினால் சூழப்பட்டதாயும், நானாவித புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டதாயும் இருக்கிற விமானத்தையும், அதில் பார்க்குந்தோறும் பிரீதியை யுண்டுசெய்கின்றவளாயும், மனோக்யையாயும், வெள்ளைச் சண்பக மலர்போன்ற நிறமுள்ளவளாயும், நிலையுள்ள யௌவன முள்ளவளாயும், புன்சிரிப்புடையவளாயும், அனேககோடி இரத்தின பூஷணங்களால் அலங்கரிக்கப்பட்டவளாயும், கருணைக்கடலாயும், யோகத்தினால் சாதிக்கத்தக்கவளாயும், பக்தர்களுக்கு அநுக்கிரகஞ்செய்வதில் ஆவலு

ள்ளவளாயுமுள்ள தேவியையும் பார்த்து பிரீதியோடு துதித்து குழந்தையைக் கீழேவிட்டுப் பூஜையில் சந்துஷ்டியுடைய தேவியை நோக்கி நீர்யார்? யாருடையபத்நி? யாருடையமகள்? ஸ்திரீகளுக்குள் புண்ணியசாலியாயும் பூசிக்கத்தக்கவளாயு மிருக்கின்றீரென்று கேட்க, தேவசேனை அசனிப்பார்த்து முன்தேவாசுரர்களுக்குயுத்தம் நடக்கும்போது நான் சேனபதியாயிருந்தமையால் தேவசேனை யென்று பெயர் பெற்றேன். நான் பிரமாவின் மானசிகபுத்திரி என் நாயகன் ஸ்கந்தமூர்த்தி மாத்ருகைகளில் பிரசித்திபெற்றவள். பிரகிருதியின் ஷஷ்டாம்சத்திற் பிறந்தவளாகையால் ஷஷ்டிதேவி என்றுபெயர் பெற்றுள்ளேன். பிள்ளையில்லாதவர்களுக்குப் பிள்ளையையும் பத்னியில்லாதவர்களுக்குப் பத்னியையும் தரித்திரர்களுக்குத் தனத்தையுங் கர்மிகளுக்கு அவரவர்கள் கர்மத்தையுங் கொடுக்கிறவள். சுகம் துக்கம் பயம் சோகம் சந்தோஷம் மங்களம் சம்பத்து விபத்து எல்லாம் கர்மத்தினு லுண்டாகிறது. வம்சகூபமும், இறந்தவர் பிழைக்கிறதும், சிரஞ்சீவியாயும், குணவானுயும், அங்கங்குறைந்தவனுயும், ஸ்திரீயில்லாதவனுயும் ரூபவானுயும் தர்மிஷ்டனுயும், ரோகியாயும், வியாதியாளனுயும் ஆரோக்யமுள்ளவனுயும், இருப்பதெல்லாம் கர்மத்தினுலன்றி வேறில்லை. ஆதலால் கர்மம் சிறந்ததென்று சொல்லப்படும்.

ஓநாரதமுனிவரே! இவ்வாறுகூறி குழந்தையையெடுத்துலீலையாகப் பிழைப்புமூட்டினுள். அக்குழந்தை எழுந்து சிரித்தது. அதனை அரசன் பார்த்துக்கொண்டிருக்கும்போது அத்தேவி எடுத்துக்கொண்டு ஆகாயத்தில் போகமுயற்சித்தனள். மீண்டும் அரசன் துக்கத்தினுல் நெஞ்சுலர்ந்தவனுய்த் துதித்தான். அந்தத்துதியால் சந்தோஷமடைந்து தேவி அரசனைநோக்கி வேதத்தில்கூறியிருக்குங் கர்மத்தை யுபதேசித்தாள். ஓ அரசனே! நீ சுவாயம்புமநுவின் புத்திரனுகையால் மூன்றுலோகத்திலும் பிரசித்திபெற்றவனு யிருக்கின்றுய்; என் பூஜையை யாவரையும் செய்யச்செய்து நீயுஞ் செய்வாயானுல் உன் குழந்தையைக் கொடுக்கிறன். குணவானுயும், நல்லபண்டிதனுயும், பூர்வஜன்ம வுணர்ச்சியுடையவனுயும், யோகீந்தரனுயும், நாராயண கலாஸ்வரூபனுயும், நூறுயாகஞ் செய்கிறவனுயும், க்ஷத்திரியர்களுக்குட் சிறந்தவனுயும், அவர்களால் நமஸ்கரிக்கப்பட்டவனுயும், மதம்பிடித்த இலக்ஷம் யானையின் பலமுள்ளவனுயும்,

தனவானுயும், சுத்தனுயும் வித்வான்களுக்குப்பிரியவானுயும், யோகிகளுக்கும் தபஸ்விகளுக்கும் ஞானிகளுக்கும் சித்திபைக்கொடுக்கின்றவனுயும், லோகத்தில் கீர்த்தியுள்ளவனுயும், சகலசம்பத்தையுங் கொடுக்கிறவனுயும் சுவ்விரதன் என்னும் பெயருள்ளவனுயும் வாழ்வான் என்றுகூறி குழந்தையைக்கொடுத்தாள். பிரியவிரதனும் பூசைசெய்வதைப்பற்றி ஒப்புக்கொண்டான். தேவியும் ஆசீர்வதித்துத் தன்னிடம்போய்ச் சேர்ந்தாள். அரசனும் மந்திரிகளோடு வீடுவந்து யாவருக்கும் நடந்தசெய்தியைக் கூறினன். யாவரும் அதனைக்கேட்டு மகிழ்ந்தனர். பின்பு அரசனும் தேவியைப்பூசித்து பிராமணர்களுக்குத் தானங்கொடுத்து குழந்தைபிறந்த ஆறும்நாளில் பிரசவ அரையில் தேவியின் பூசைசெய்வித்து இருபத்தொன்றும் நாளில் பாலகர்களுக்குச் செய்யவேண்டிய சுபகிருத்தியங்களைச் செய்வித்து ஒவ்வொரு சுக்லபக்ஷம் சஷ்டியில் உற்சவம்நடத்தினன்.

பூஜாவிதி.

இனிக்கௌதமரால் தருமருக்குக் கூறப்பட்டபூஜாவிதியைக்கூறுகின்றேன்:—கலசத்திலாவது சுவரில் எழுதப்பட்ட சித்திரத்திலாவது புத்திரனைக்கொடுப்பவளாயும், கருணைக்கடலாயும் ஜகன்மாதாவாயும் வெண்சண்பகநிறமுடையவளாயும் இரத்தினபூஷணங்களால் அலங்கரிக்கப்பட்டவளாயும், பரிசுத்தமானவளாயும், தேவசேனை என்னும் பெயருள்ளவளாயுமிருக்கிற தேவியை நமஸ்கரிக்கிறேனென்று தியானித்து, ஆவாகித்து தன்சிரசில் புஷ்பத்தைவைத்து மறுபடியும் மூன்றுமந்திரத்தைச் செபித்து பாத்யம் ஆசமனம் அர்க்கியம் கந்தபுஷ்ப தூபதீபநைவேத்யம் அழகானம்பலங்கள்முதலானவைகளால் பூஜிக்கவேண்டும். ஓம் ஹ்ரீம் ஷஷ்டிதேவ்யை சுவாஹா என்னுமந்திரத்தைத் தன்சக்திக்குத்தக்கபடி செபிக்கவேண்டும். பின்பு சாமவேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஸ்தோத்திரத்தினால் துதித்துப் பக்தியோடு நமஸ்கரிக்கவேண்டியது. அஷ்டாக்ஷர மந்திரத்தினால் இலக்ஷம் உரு ஜபித்தால் அவன் நல்ல புத்திரனையடைவான் என்று பிரமதேவன் கூறுகின்றன். புத்திரப் பேற்றையும் அவரவர் விரும்பும் விருப்பங்களையும் தரும் தோத்திரம் வேதத்தில் மறைந்திருக்கிறது. இதனால் பிரியவிரதன் துதித்துப் புத்திரனையடைந்தான். எவன் இத்தோத்திரத்தை ஒருவருடங் கேட்கின்றனே அவன் நீண்டகாலஞ் ஜீவி, திருக்கும் புத்திரனைப்பெறுவான். எவன் தேவியைப் பூசித்து ஒருவருடம் கேட்கின்றனே அவன் மலடியாயினும் பிரசவிக்கிறாள். அக்குழந்தையாலவன் வீர

னுயும் குணவானுயும் வித்யாவானுயும் யஸஸ்வியாயும் தீர்க்காயுள் உள்ளவனுயும் பிறப்பான். வந்தியை மிருதவத்ஸவந்தியை என்னு மவர்கள் ஒருவருடம் கேட்பார்களானுல் புத்திரனைப்பெறுவார். குழந்தைகளுக்கு ரோகம் நேரிட்டிக்கும்போது தாய் தந்தையர் கேட்பார்களானுல் ஒரு மாதத்துக்குள் ரோகம் நீங்கும் என்றனர்.

(சு-ம் எஉ)

நாற்பத்தாறும் அத்தியாயம் முற்றிற்று.

உ

ஹரி ஸோதர்யை நமஃ

நாற்பத்தேழாம் அத்தியாயம்.

மங்கள சண்டி உபாக்கியானம்.

—(-*-)—

நாராயணர் கூறுகின்றார் :—ஓ பிரமபுத்ரரே! இனி வேதப்பிர சித்தமானதும் வித்வாம்சர்களால் அறியப்பட்டதுமான மங்கள சண்டி உபாக்கியானத்தைக் கூறுகின்றேன். எந்தத்தேவி மிக்க சமர்த்தையாயும், மகா கோபமுள்ளவளாயும், கல்யாண காரியங்களில் மங்களையாயு மிருந்தாலே அவள் மங்கள சண்டியென்று சொல்லப் படுகிறுள். மதுவம்சத்திற் பிறந்து ஏழுத்வீபங்களுக்கும் அரசனு மிருந்த மங்களனென்பவனுல் பூஜிக்கத்தக்கவளாய் அவனது இஷ்டத்தைப் பூர்த்திசெய்தபடியால் மங்களசண்டிகையென்றுசொல்லப் படுகிறுள். மூர்த்திபேதத்தால் தூர்க்காதேவியாயும் மூலப்பிரகிருதியாயு மிருக்கிறுள். கருணைக்கடலாயும் ஸ்திரீகளுக்கு இஷ்டதேவதையாயுமிருக்கிறுள். திரிபுர சங்காரகாலத்தில் விஷ்ணு முதலான சகலதேவர்களும் திரிபுரஜபமுண்டாகும்பொருட்டுச் சகலதிரவியங்களாலும் பூஜித்துப் போற்றும்போது மங்களசண்டி தூர்க்காஸ்வரூபிணியாய் அமர்களைப்பார்த்து நீங்களஞ்சவேண்டாம், உருத்திர மூர்த்தியால் திரிபுரஜயம் உண்டாகுமென்று அதற்கிரகஞ்செய்து மறைந்தனள். திரிபுரசங்காரமானபின்னர் விஷ்ணு முதலானவர்கள் அந்த மங்களசண்டியை அருக்கியம் பாத்யம் ஆசமனங்களாலும், பரமான்னம் மாப்பண்டங்களாலும், தேன் பால் பலங்களாலும்,

திருப்தியாகும்படிச்செய்து பின்னர் நிருத்தகீதவாத்தியங்களாலும், நாமகீர்த்தனங்களாலும், தியானங்களாலும், திருப்தியுண்டாக்கி மேற்கூறிய பூஜைகளுக்கெல்லாம் "ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் க்லீம் சர்வ பூஜ்யே தேவீமங்களசண்டிகே ஹும் ஹும் பட் ஸ்வாஹா: என்னும் இருபத்தொரு அக்ஷரங்களாலாகிய மூலமந்திரத்தையே கொண்டு முடித்தனர். சகல காமத்தையும் கொடுக்கும். இதனைப் பத்து லக்ஷஞ்ஜபித்தால் மந்திரம் சித்தியாகும். நாரதரே! வேதத்திலுள்ள தியானத்தைக் கேட்பாயாக. பதினைவயதுள்ளவளாயும் ஸ்திரமான யௌவனமுள்ளவளாயும், கோவைப்பழம்போன்ற அதரமுள்ளவளாயும், அழகான பற்களுள்ளவளாயும், சரத்கால தாமரைபோன்ற முகமுள்ளவளாயும், வெண்சண்பகப்பூ நிறமுள்ளவளாயும், கருநெய்தல்போன்ற கண்ணுள்ளவளாயும், சகலலோகத்தையும் தரிக்கிறவளாயும், சகலருக்கும் சகலசம்பத்தையும் கொடுப்பவளாயும், சம்சார அந்தகாரத்திற்குத் தேஜோரூபமாயும் விளங்குகின்ற தேவியை நமஸ்கரிக்கின்றேன் என்பதாம். ஓ முனிவரே! தோத்திரத்தைக் கேட்பாயாக.

ஸ்தோத்ரம்.

'ரக்ஷாரக்ஷ ஜகன்மாத தேவீமங்கள சண்டிகே, ஹாரிகே விபதாம் ராசே ஹரக்ஷேமங்களகாரிகே (உசு) ஹரக்ஷ மங்கள தக்ஷேச ஹரக்ஷமங்கள தாயிகே, சுபேமங்கள தக்ஷேச சுபேமங்கள சண்டிகே (உள) மங்களே மங்களார்ஹேச சர்வமங்கள மங்களே, சதாம்மங்கள தே தேவி சர்வேஷாம் மங்களாலயே (உஅ) பூஜ்யே மங்களவாரேச மங்களா பீஷ்டதைவதா, பூஜ்யேமங்கள பூபஸ்ய மநுவம்ஸஸ்ய சந்ததம், (உக) மங்களாதிஷ்டாத்ருதேவி மங்களானஞ்ச மங்களே, சம்சார மங்களாதாரே மோக்ஷமங்கள தாயிநீ (உ0) சாரேசமங்களாதாரே பாரேச சர்வமங்களாம், பிரதிமங்களவாரேச பூஜ்யேமங்கள கஸ்பதே" (உக) என்று பிரதிமங்கள வாரத்திலும் மங்களசண்டிகையைத் துதித்து உருத்திரமூர்த்தி சர்வமங்களத்தையும் பெற்றுச் சென்றனர். இவ்வாறே அங்காரகனும் மங்களன் என்னும் அரசனும் ஸ்திரீகளும் மங்களத்தை விரும்பும் புருஷர்களும் தேவர் முனிவர் மநுக்கள் மனிதர்கள் முதலிய யாவரும் பூஜித்துத் தத்தமக்கு வேண்டிய மங்களத்தைப் பெற்றனர். இத்துதியைச் சாவதானமாகக் கேட்கின்றவர்களும் புத்திரமித்திராதிகளோடு மங்களத்தைப் பெறுவர்; அமங்களத்தை என்றும் பெறார்.

மனஸாதேவி உபாக்கியானம்.

இனி மனஸாதேவியின் உபாக்கியானத்தைக் கூறுகின்றேன். காசிபமுனிவரால்மனதால் உற்பத்தியானவளாகலினாலும், பரமாத்மாவான ஈச்வரனை மனதால் தியானிக்கின்றவளாகலினாலும் மனஸாதேவி எனப்படுகின்றாள். பரமாத்மாவுக்கு ஸ்தானமாயும் விஷ்ணு சம்பந்தமாயும் சித்தயோகினியாயும் இருக்கிற அவள் மூன்றுயுகம் தவம்புரிந்தபோது பரமாத்மா கட்டைபோலிருக்கிற அவளைப்பார்த்து ஜரத்காரு என்றழைத்து அவள் கோரிக்கையை யநுக்கிரகித்து, அத்தேவிக்குச் சகலரும் பூசிக்கும்படியாகவும் செய்வித்துத் தானும் மேன்மை பாராட்டினபடியால் ஜரத்காரு என்றும், விஸ்வ பூஜீதா என்றும் பின்பு சகலலோகத்தாராலும் பூசிக்கப்பட்டவளாய் ஜகத்கௌரி என்றும் பிரசித்தியான பெயரை யடைந்தனள். சிவ சிஷ்யையானபடியால் சைவை என்றும், விஷ்ணுப் பிரியையான படியால் வைஷ்ணவி என்றும், பரிக்ஷித்தினுடைய யாகத்தில் சர்ப்பங்களெல்லாம் ரக்ஷித்தபடியால் நாகேஸ்வரி என்றும், நாகபகினி என்றும், விஷத்தைப் போக்கடிக்க வல்லமை யுள்ளவளாகையால் விஷஹரி என்றும், ஈச்வரரிடஞ் சித்தயோகமடைந்தபடியால் சித்த யோகினி என்றுஞ் சொல்லப்படுகிறாள்.

அந்தத் தேவியை மகாஞான சொரூபமாயும், யோகஸ்வரூபமாயும், மிருத சஞ்சீவினி ஸ்வரூபமாயும், மஹா ஞானத்தோடு கூடினவளாயும், பண்டிதர் கூறுகின்றனர். ஆஸ்திசமுனிவருக்குத் தாயானபடியால் ஆஸ்திகமாதாவென்றும், ஜரத்காருமுனிவருக்குப் பிரியையாசையால் ஜரத்காருப்பிரியை என்றுஞ் சொல்லப்படுகிறாள். ஜரத்காரு ஜகத்கௌரீ மனஸா சித்தயோகினீ வைஷ்ணவீ நாகபகினீ சைவீ நாகேச்வரீ ஜரத்காருப்பிரியா ஆஸ்தீகமாதா விஷஹரீ விஸ்வ பூஜிதா இப்பன்னிரு நாமங்களையும் எவன் பூஜாகாலத்தில் படிப்பானை அவனுக்கும் அவன் வம்சத்துக்கும் சர்ப்ப பயமில்லை. சர்ப்பமேறியிருக்கும் படுக்கையிலும் பாம்பிருக்கும் வீட்டிலும், போனிலும் பாம்பு சுற்றப்பட்ட சரீரத்திலும் இத்துதியைப் படித்தால் சர்வாபத்தும் நீங்கும்; சந்தேசமில்லை எவன் தினம் படிப்பானை அவனைப்பார்த்தால் சர்ப்பமெல்லாம் ஓடிப்போகும். பத்துலக்ஷம் செபித்தால் சித்தியாகும். சித்தியானவன் விஷத்தைப்புசிக்க வல்லமையுள்ளவனுவன். சர்ப்பங்களைப் பூஷணமாப்பூண்டு சர்ப்பத்தின் மேல் ஏறுகின்றவனுவன். சர்ப்பத்தின்மீது படுத்துச் சித்தபுருஷன் போலிருப்பான். கடைசியில் விஷ்ணுவுடன் கிரீடிப்பான் என்றனர். (சு - ம் நி.அ.)

நாற்பத்தேழாம் அத்தியாயம் முற்றிற்று.

ஹாஹா ஹஃஹஃமுக ஸ்துதாயை நமஃ

நாற்பத்தேட்டாம் அத்தியாயம்.

மனோஹராக்யானம்.



நாராயணர் கூறுகின்றார்:—ஓ முனிவரே! சாமவேதத்திற் கூறியுள்ள தியானமும், பூஜாவிதியும், என்னிடம்கேட்டுக்கொள்வீர். வெண்சண்பகப்பூ நிறமுள்ளவளாயும், பத்திரபுஷ்பங்களாலலங்கரிக்கப்பட்டவளாயும், வண்ணசுத்தமான வஸ்திரத்தைத் தரிக்கிறவளாயும், சர்ப்பத்தை மாலையாக அணிந்தவளாயும், மகாஞாபகத்தோடு கூடினவளாயும், ஞானிகளுக்குட் சிறந்தவளாயும், சித்தர்களுக்கதிஷ்டானதேவதையாயும், சித்தியுள்ளவளாயும், சித்தியைக்கொடுக்கின்றவளாயு மிருக்கின்ற தேவியை நமஸ்கரிக்கின்றே னென்று தியானித்து நிவேதனங்களாலும், தூபங்களாலும், புஷ்பங்களாலும் வேதோக்தமான மூலமந்திரங்களாலும் பூசித்தல் வேண்டும். ஓ முனிவரே! பக்தர்களுடைய கோரிக்கையைக்கொடுக்கும்படியான "ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் க்லீம் ஐஞ்ச மனஸா தேவ்யைஸ்வாஹஃ என்னும் பன்னிரண்டு அக்ஷரமுள்ள இது, கற்பக விருக்ஷம்போல் கேட்டதையெல்லாங் கொடுக்கத்தக்கது. எவனுகிலும் ஐந்துலக்ஷம் உரு செபிப்பானனால் மந்திரசித்தி யுண்டாகும். அவனுக்கு விஷ்ணு அமிர்தத்துக்குச் சமானமாக இருக்கும். அவன் தன்வந்திரிக்குச் சமானனுவன். எவன் ஸ்நானஞ்செய்து ரகஸ்யமான ஸ்தானத்தில் உட்கார்ந்து மிக்கமுயற்சியோடு தேவியைப் பக்தியுடன் பூசிப்பானே அவன் தன்வந்திரியாய்விடுவன் எவன் பஞ்சமியில் தேவியைத்தியானித்துப் பலியைகடத்துவானே அவன் தனவானுயும் புத்ரவானுயும் கீர்த்திமானுயு மிருப்பான். முன்னொருகாலத்தில் மனிதர்கள் சர்ப்பபயமுள்ளவர்களாய்க் காசிபரைச்சரணடைய அவர் பிரமனேடுகூடி அநேக மந்திரங்களைச் சிருட்டித்தனர். வேதபீஜங்களுக்குத் தகுந்தாற்போலபிரமன் உத்தரவின்படி தேவியை மனத்தினுல் சிருட்டித்தார். அதனுல்அவள் மனஸாதேவி என்று சொல்லப்பட்டாள். அத்தேவி கைலாயத்தையடைந்து ஆயிரம் சிவவருடம் சந்திரசேகரைப்பக்தியோடு பூஜித்துச் சேவித்துவந்தாள். அதிசிக்கிரத்தில் ச

துஷ்டியடைகிறசிவபெருமான் மகிழ்ந்து மஹாஞானத்தைக் கொடுத்து மிகப்பிரியோடும் படிப்பித்து அஷ்டாக்ஷரமாகிய லக்ஷ்மி மாயா காமபீஜத்தோடு ஜெர்ந்தங்கூடிய கிருஷ்ணமந்திரத்தை உபதேசித்து புரச்சரணைக் கிரமத்தையும் பூஜைமுதலியவைகளையுங் கற்பித்து புஷ்கரக்ஷேத்திரத்திக்குத் தவம்புரிய அனுப்பினர். அங்கு மூன்றுயுகம் தவம்புரிந்து கிருஷ்ணனைத்தெரிசித்து அவருடைய கருணையினல் சித்தியடைந்தனள். சிறுபெண்ணுமாவும் இளைத்தசரீரமுள்ளவளாகவுமிருக்கின்ற அவளைக்கருணைக்கடலான கிருஷ்ணமூர்த்தி பார்த்து வேண்டியவரங்களைக்கொடுத்து ஆதரித்து உருத்திரகாசிபர் முதலியவர்கள் ஆதரிக்கவும் மநுக்கள் முனிவர் நாகங்கள் மாநுடர்கள் பூசிக்கவும் செய்தனர். பின்பு ஜரத்கால முனிவர்யாசிக்கப்படாதவராய் பிரமாவின் ஆக்ஞையால் விவாகஞ்செய்துகொண்டு நீண்டகாலந் தவம்புரிந்து தபசினல் சிரமமடைந்தவராய் மனைவியின் மடையில் தலைவைத்து ஆலமரத்தடியில் ஈச்வரனை நினைத்துக்கொண்டுறங்கினர். அப்போது சூரியாஸ்தமனகாலம் நெருங்க பதிவிரதையான அந்த ஸ்திரீ எவனொருவன் நித்யமாலசாயங்கால சந்தியைச் செய்யாமலிருக்கின்றனோ அவன் பிரமஹத்தியாதிபாபங்களையடைகிறனென்றும், எவன் காலைமாலை சந்தியாவந்தனஞ் செய்யாமலிருக்கின்றனோ அவன் அசுசியாய் பிரமஹத்தியாதிபாவங்களுக்குரித்தானவனுகின்றன் என்றும் வேதத்தில் கூறியிருக்கின்றபடியால் நம் புருஷன் பாவத்தையடைவானென்று தர்மலோபபயத்தால் எழுப்பிவிட்டனள். ஓ முனிவரே! அவர் எழுந்து மிக்க கோபங்கொண்டு ஓ பெண்ணே! நான் தூங்கும்போது நீ அதனைக்கெடுத்தனை? எந்தஸ்திரீ பர்த்தாவுக்கு அபசாரஞ் செய்கின்றனோ அவளாற் செய்யப்படும் அநுட்டானம் விரதம் தபசு தானம் எல்லாமும் வீண்தான்; எவள்பர்த்தாவைப் பூசிக்கின்றனோ அவள் ஈச்வரனைப் பூசித்தலாவாள். பதிவிரதை பூசைக்காகவே பரமாத்மாபர்த்தாரூபங்கொண்டிருக்கிறர். எல்லாத்தானமும் எல்லாயஞ்ஞமும் எல்லா தீர்த்தஸ்நானமும் எல்லாவிரதமும் எல்லாத்தபசும் எல்லாஉபவாசமும் எல்லாத்தருபமும்எல்லாப்பூசையும்சத்யமும் புருஷன்பூஜைச்சுப் பதினுறிலொருபங்குக்கீடாகாது. எவள் புருடனைவிடாது பூசிக்கின்றனோ அவள் புருஷனுடு பரமபதத்தில் பரமாத்மாவின் பாதத்தையடைகிறள். பர்த்தாவுக்கு விரோதமான வேலை செய்கின்றவளாயும் இஷ்டமில்லாத வார்த்

தையை இஷ்டம்போல் சொல்லுகிறவளாயும் இருப்பவள் அசுரர் குலத்திற் பிறந்தவள்தான். அவள் சந்திர சூரியருள்ள வரையில் கும்பிபாகத்திலிருந்து பிறகு புத்திரனும் பர்த்தாவுமில்லாத சண்டாள ஸ்திரீயாகப் பிறப்பாளென்று கூறவே மனஸாதேவிபயந்து நான் சந்தியாலோப பயத்தினால் நித்திராபங்கஞ்செய்துவிட்டேன்; துஷ்டையான என் விஷயத்தைப்பொறுத்துக்கொள்ளும். சிருங்காரம் ஆகாரம் நித்திரை இவைகளுக்கு எவன் பங்கஞ்செய்வானோ அவன் சந்திரசூரியருள்ளவரையில் காலசூத்ர நரகையடைவானென்று கூறிப்பர்த்தாவின் பாதத்தில் வீழ்ந்து பக்தியோடுகதறி அழுதாள். சூரியனைச்சபிக்க முயற்சி செய்கிற அம்முநிவரைச் சூரியன் சந்தியாதேவியோடுவந்து முநிவரைக்கண்டு ஓபிராமணரே! நீர்தேவியைச்சபிப்பது உசிதமல்ல, அஸ்தமன காலத்தைப்பார்த்து தருமலோபபயத்தினால் உம்மை எழுப்பினாள். எழுந்த நீர் கோபிக்கச் சரணாக அடைகின்றாள். பிராமணர்களுடைய இருதயம் எப்போதும் நவநீதத்துக்குச் சமானமாகவிருக்கும். அவர்களுக்கு அரைக்ஷணந்தான் கோபமிருக்கும். ஆனால் அதற்குள் உலகமெல்லாம் பஸ்மமாய்விடும். மறுபடியும் உலகத்தைச் சிருட்டிக்கவல்லவன் பிராமணனைக்காட்டிலும் தேஜஸுள்ளவன் ஒருவனுங்கிடையாது. பிராமணர் பிரமாவின் அம்சமாகையால் பிரமதேஜஸினால் ஜொலித்துக்கொண்டு பரப்பிரம மூர்த்தியைத்தியானித்துக்கொண்டிருப்பாரென்றனர். அதனைக்கேட்ட முநிவர் சந்தோஷித்துத் தன்பிரதிக்ஞையைப் பூர்த்திசெய்ய அழுதுகொண்டிருக்கும் மனஸாதேவியை விட்டுத் தன்னிடம் போயினர். அவள் மனவருத்த மடைந்து தன் குருவான சம்புவையும் இஷ்டரான பிரம விஷ்ணுக்களையும் ஜன்மத்தைக்கொடுத்த காசிபரையும் தனக்கு ஆபத்துக்காலமாகிய அக்காலத்தில் நினைக்க எல்லோரும் வந்தனர். அவர்களையெல்லாம் நமஸ்கரித்துத் துதித்து குசல பிரச்னை செய்தனள். அச்சமயத்தில் பிரமன் அவள் வார்த்தையைக்கேட்டு விஷ்ணுமூர்த்தியை நமஸ்கரித்து இவளுடைய பர்த்தா புத்திரோற்பத்தி செய்யாமல் எப்படி ஸ்திரீயை விடலாம். ஆகையால் தர்மமாக புத்திரோற் பத்திசெய்ய வேண்டும். எவன் புத்திரோற்பத்திசெய்யாமல் வைராக்யமடைந்து மனைவியை விடுகிறானோ, அவன் புண்ணியமெல்லாம் ஜல்லடையில் ஜலம் ஒழுகுவதுபோலாகுமென்றனர். அதனைக்கேட்ட முநிவர் மந்திரபூர்வகமாக அவள் நாபியைத்தொட்டுக் கூறுகின்றனர் ;—ஓ

மனஸா! இக்கர்ப்பத்தால் உனக்குப் புத்திரனுண்டாவான். அவன் சிறந்தஜிதேந்திரியனுயும், தர்மிஷ்டனுயும், பிராமண சிரேஷ்டனுயும், தேஜஸ்வியாயும், தபஸ்வியாயும், கீர்த்திமானுயும், குணவானுயும், வேதமறிந்தவனுயும், ஞானிகளுக்குள்ளும் யோகிகளுக்குள்ளும் தலைவனுயும், ஈச்வரபக்தியுள்ளவனுயு மிருப்பான் அவன் குலத்தைக் கடைத்தேற்றிவிடுவான். அவன் ஜனன மாத்திரத்தில் பிதுர்க்கள் கிருத்தனஞ்செய்யப் போகின்றூர்கள். எவள் நல்லொழுக்க முள்ளவளோ அவள் பதிவிரதை. எவள் பிரியமாய்ப் பேசுகின்றனளோ அவள்தான் பிரியை. எவள் பிள்ளைபெற்றவளோ அவள்தான் தர்மிஷ்டை. எவள் குலத்தை ரக்ஷிக்கிறூனோ அவள்தான் குலஸ்திரீ. ஈச்வரபக்தியைக் கொடுக்கிறவன் பந்து. இஷ்டமான சுகத்தைக்கொடுக்கிறவன் பந்து வல்ல, தெய்வ சம்பந்தமான கவசத்தைக் கொடுக்கிறவன்றன்பிதா, எவள்கர்ப்பவாசத்தைமகனுக்கு நீக்குகின்றூளோ அவள்தான் கர்ப்பத்தைத் தரிக்கிறவள். தயாரூபமானவளும் அவள் தான். சகோதரியும் அவள்தான். யமபயத்தை விடுவிக்கிறவளும் அவள்தான். எவன் பரமாத்மாவின் பக்தியையும், பரமாத்ம மந்திரத்தையும்உபதேசிக்கிறூனே எவன் ஞானத்தைக்கொடுக்கிறூனே அவன்தான் குரு. பரமாத்மாவை நினைப்பதுதான் ஞானம். ஆப்பிரஹ்மஸ்தம் பரியந்தமான பிரபஞ்சம் எவனிடத்தில் உற்பத்திநாசம் அடைகிறதோ அவனே யறிவதைக் காட்டிலும் ஞானம் வேறென்னவிருக்கிறது. வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற யக்ஞங்களெல்லாம் ஈச்வரசேவையேயாம். தத்வங்களுக்குள் சிவதத்வம் மிகவும் சாரமானது. இதரதத்துவங்களெல்லாம் பலமில்லாதவை. என்னுல் உனக்கு ஞானோபதேசம் சொல்லப்பட்டது. எவன் ஞானோபதேசஞ் செய்கின்றூனே அவன்தான்சுவாமி எவன்ஞானத்தையடைந்தும்சம்சாரபந்தம்விடாமலிருக்கின்றூனேஅவன் பந்தத்துக்குக்காரணம் ஆகின்றன். அவன்தான் சத்துரு. ஈச்வரபக்தியோடு கூடியஞானத்தை எந்தக்குருவுபதேசஞ் செய்யாமலிருக்கின்றூனே அந்தச்குரு சிஷ்யனைச் சஞ்சரித்தவனுகின்றன். ஏனெனில் அவன் சம்சாரபந்தத்திலிருந்து விடுவிக்காதிருக்கின்றவனல்லவா? நன்மக்கிலேசத்தினின்றும் யமவாதனையினின்றும் விடுவிக்காதிருக்கின்றவன் எப்படிக்குரு ஆவான். எப்படித்தந்தையாவான். எப்படிப் பந்துஆவான். பரமானந்தரூபமாயும் ஸ்திரமாயுமிருக்கிற ஈச்வரனுடைய இடத்தை எந்தக் குருவானவன் காட்டாமலிரு

ப்பானோ அவனெப்படிக் குருவாகவும் பந்துவாகவுமிருப்பான். ஆதலால் ஒ பதிவிரதையே! நிர்க்குணனாயும் பரப்பிரமசொரூபியாயும் பக்தர்களைக் கைவிடாதவனாயு மிருக்கிற பரமாத்மவைச் சரணடைவாய். அப்பரமாத்மாவினுடைய சேவையினால் சகலகர்மங்களும் நசித்துப்போகின்றன. உன்னை நான் ஓர்காரணத்தால் விட்டேன். நான்விட்டேனென்னும் குற்றத்தை நீ பொறுத்துக் கொள்ளவேண்டும். பொறுமையுள்ள பதிவிரதைகளுக்கு சத்வகுண ஆதிக்யத்தினால் கோபங்கிடையாது. நான் புஷ்கரக்ஷேத் திரத்திற்குச் சென்று தவம்புரியப்போகின்றேன்; நீ உன்னிஷ்டப்படி போகலாம். ஆசையில்லாதவர்களுடைய மனமானது பரமாத்மாவின் பாதாரவிந்தத்தையே சம்பந்தித்திருக்கும் என்றனர். இவ்வாறுகூறிய ஜரத்காருவின் வார்த்தையைக்கேட்டு துக்கபீடிதையான மனஸாதேவி பிராணநாயகனைப் பார்த்துக் கூறுகின்றாள்:—குருவே! பிரபுவே! நான் நித்ராபங்கஞ்செய்ததில் என்னைவிடும்படியான தோஷமேயில்லை. எங்கு உம்மை நான் நினைப்பேனோ அங்கு நீர் தெரிசனங்கொடுக்கவேண்டும். பந்துக்களைவிட்டுப் பிரிந்திருக்கிறது மகாசங்கடத்தையுண்டுசெய்யும். புத்திரவிரகம் அதைக்காட்டிலும் பெரிது. பர்த்தாவைவிட்டுப் பிரிந்திருப்பது பிராணனைவிட்டுப் பிரிந்திருப்பதைக்காட்டிலும் பெருந்துக்கம். பதிவிரதா ஸ்திரீகளுக்கு நூறுபிள்ளைகளைக்காட்டிலும் பர்த்தா அதிகமானவர். எல்லாவஸ்துக்களினும் புருஷன் பிரியமானவஸ்து ஆகையால் பிரியனென்று சொல்லப்படுகிறான். புத்திரவான்களுக்கும் பிள்ளைகளிடத்தும், வைஷ்ணவர்களுக்கு விஷ்ணுவினிடத்தும், ஒற்றைக்கண்ணனுக்குக் கண்ணிடத்தும், தாகமெடுத்தவனுக்குச்சலத்தினிடத்தும், பசித்தவர்களுக்கு அன்னத்தினிடத்தும், காமுகர்களுக்கு மைதுனத்தினிடத்தும், திருடர்களுக்குப் பொற்றனத்தினிடத்தும், குத்ஸிதஸ்திரீ களுக்குப்பரபுருஷர்களிடத்தும், வித்வான்களுக்குச்சாத்திரத்தினிடத்தும் வர்த்தகர்களுக்கு வியாபரத்தினிடத்தும், மனம்சம்பந்தித்திருப்பது போல் பதிவிரதைகளுக்குப் பர்த்தாவினிடத்திலேயே சம்பந்தித்திருக்கும் என்றுசொல்லி பர்த்தாவின் பாதத்தில் வீழ்ந்தாள். கருணைக்கடலான அவர் அவளை மார்பிலணைத்து கண்ணீரினால் முழுகச்செய்தனர். அவளும் அவருடைய மார்பைக்கண்ணீரினால் மூழ்கச்செய்தாள். அப்போது அவ்விருவரும் பரமேச்வரன் பாதாரவிந்தத்தைத் தியானித்து ஞானத்தினால் சோகம் நீங்கினார்

கள். ஜரத்காருதன்பத்தினியிடம் உத்தரவுபெற்றுக்கொண்டு தவம் புரியச்சென்றனர். மனஸாதேவி மஹாபத்தியோடு தனது குருவான உருத்திரரிடஞ்சென்றனள். பார்வதிதேவி அவளைப்பார்த்து சமாதானப்படுத்தி இரக்கமுற்று உருத்திரமூர்த்தியினால் ஞானோபதேசஞ்செய்வித்துசந்தோஷத்துடன்வாழ்திருக்கும்படிசெய்தனர். சிலநாள் சென்றபின் ஓர் சுபதினத்தில் சத்புத்திரனைப் பெற்றனள். அந்தப்புத்திரன் கர்ப்பத்திலேயே தாயுடன் ஞானோபதேசமுணர்ந்தவனதலால் ஞானப்பிரகாசனுப்க் காணப்படுவதைக்கண்டு ஞானிகளும் யோகிகளும் போற்றினர். உருத்திரமூர்த்தியும் அவனுக்கு ஜாதகர்மம் செய்வித்துத் தானங்களை அளவில்லனவாகக் கொடுப்பித்துப் பின்னர் அங்கங்களோடுகூடிய நான்கு வேதங்களையும் அத்யயனஞ் செய்வித்தனர். அவன் மிருத்யுஞ்சயனே பரன்என்னும் ஞானத்திலும் ஆசார்யபக்திபினுஞ் சிறந்தவனிருக்தலால் ஒ பார்வதி இவன் ஆஸ்திகனென்னும் பெயருடையவனுகக்கடவன் என்று ஆசீர்வாதித்தனர். பின்புசிலநாள் கழித்து உருத்திர மூர்த்தியிடத்தில் மந்திரோபதேசம்பெற்று புஷ்கரத்துக்குப்போய் மூன்று லக்ஷவருடம் தவங்கிடந்து மறுபடி உருத்திர மூர்த்தியிடம் வந்து சிலகாலம் வசித்து அப்பெருமானிடம் விடைபெற்று மனஸாதேவியோடு காசிபரிடம் வந்தனன். காசிபர் மிகவும் சந்தோஷித்து நூறுலக்ஷம் ரத்னம் பிராமணர்களுக்குத் தானங்கொடுத்து போஜனமுஞ் செய்வித்தார். குழந்தையின் தேஜசை அதிதியும் திதியும் இன்னும் வேறுஸ்திரீகளும் கண்டு சந்தோஷிக்க வாழ்ந்திருந்தனன். அப்போது பரிக்ஷித்துமகனஜனமேஜயன்தன்பிதா சர்ப்பத்தால்இறந்தகாரணத்தால் பகைகொண்டு சர்ப்பயாகஞ் செய்பத்தொடங்கினன். அப்போது எல்லாச்சர்ப்பங்களும் அந்த யாகத்தீயில் வந்து வீழ்கின்றபோது பரிக்ஷித்தைக்கொன்ற தக்ஷன் இந்திரனைச் சரணடைந்து அவன் காவலிலிருக்கும்போது அச்செய்தியைப் பிராமணர்கள் அறிந்து இந்திரனோடு தக்ஷனைச் சங்கரிக்க எத்தனித்தார்கள். இந்திரன் முதலானவர்கள் பயந்தவர்களாய் மனஸாதேவியிடம்போய்ப்போற்றினர்கள். அவள் தன்மகனைக்காட்ட அவள் குறிப்புணர்ந்தயாவரும் ஆஸ்திகரை அடைந்து எங்கட்குப் பிராணபிக்ஷை தரவேண்டுமென்று பிரார்த்திக்க, அவர் பிராமணர்களுடைய அபிப்பிராயத்தை அங்கீகரித்து அவர்கள் வேண்டியபடிவரங் கொடுத்து எக்ஞத்தை முடித்து யாவருக்கும் தக்ஷிணைகொடுத்து

விடைகொடுத்தனர். இந்திரன் முதலியோர் மனஸா தேவியை யடைந்து பூஜித்துத் துதித்தனர். அப்பூஜாவிதியையும் கூறுகின் றேன் கேட்பாயாக:—

விதிப்படி ஸ்நானஞ்செய்து இரண்டு வஸ்திரந்தரித்துக்கொண்டு அநுட்டானத்தை முடித்து இரத்தின சிங்காதனத்தில் தேவியை வீற்றிருக்கச்செய்துபக்தியோடுரத்தினகும்பத்தில்கங்காசலத்தைக் கொண்டுவந்து அபிடேகித்து வன்னி சுத்தமானவஸ்திரம் சந்தனம் புஷ்பாதிகளால் அலங்கரித்து அர்க்கியங்கொடுத்து பஞ்சாயதன பூசையைச்செய்து, பின்பு மனஸாதேவியைப் பூஜித்து ஸ்ரீமனஸா தேவ்யைஸ்வாஹ: என்னும் மந்திரத்தினால் அர்க்கியபாத்ய ஆசமனதி களைக்கொடுத்து சோடசோபசாரங்களைச் செய்து வாத்யகோஷங் களைச் செய்வித்து புஷ்பங்களை மாரிபோல் புஷ்பாஞ்சலிபுரிந்து புள காங்கிதங்கொண்டு பதிவிரதைகளில் சிரேஷ்டமான உம்மைத்தோத் திரஞ்செய்ய விரும்புகின்றேன். பராத்பரையான உன்னைத் துதி க்க எனக்கு வல்லமையில்லை. வேதத்தில் தோத்திரலக்ஷண குண த்தை விவரித்துச் சொல்லியிருக்கிறது. பிரகிருதத்தில் அவைகளை எண்ணிச் சொல்லுதற்கு எனக்குச் சக்தியில்லை. நீ சுத்த தத்வ சொரூபையாயிருக்கின்றவள், கோபம் இம்சை இவைகளை விட்டிருப் பவள். ஆதலால் அந்த ஜரத்காருமுனிவர் உன்னிடம் உன்மையில் தோஷம் வைப்பதற்கின்றி உன்னை யாசித்துக் கேட்டுக்கொண்டார். அப்படிப்பட்ட நல்லொழுக்க முள்ளவளான நீ எனக்குத் தாயான திதியைப்போல் பூசிக்கப்பட்டாய். தயாரூபமான நீ எனக்குச் சுகோ தரியாயிருக்கின்றனை. க்ஷமாரூபமான நீ எனக்குத் தாயாயிருக்கின் றாய். உன்னால் என் பிராணன்களும் புத்திரகளத்ராதிகளும் காக் கப்பட்டன. நான் உன்னைப் பூஜிக்கின்றேன். என்னிடம் உனக்குப் பிரீதி விருத்தியடையவேண்டும். சகல லோகத்துக்கும் தாயாரான தேவியே! நீ சகலராலும் பூசிக்கத் தக்கவளா யிருந்தாலும் நான் அந்தப்பூசையை விருத்திசெய்கின்றேன். எவர்கள் ஆஷாடசங்கிர மணத்திலாவது ஆஷாட பஞ்சமியிலாவது மாதமுடிவிலாவது தினந் தோறுமாவது பூசை செய்வார்களோ அவர்களுக்குப் புத்திர பௌத்ராதிகளும் தனமும் விருத்தியாகும்; கீர்த்தி புகழ் வித்தை குணம் உள்ளவர்களாயும் இருப்பார்கள், எவர்கள் உன் னைப் பூசிக்காமலும் நிந்திக்கின்றவர்களாகவும் இருக்கின்றார்க

ளோ அவர்கள் சம்பத்தில்லாதவர்களாகவும் சர்வபயமுள்ளவர்களாகவும் ஆவார்கள். வைகுண்டத்தில் இலக்குமி விஷ்ணுவோடிருப்பதுபோல் ஜரத்காருமுனிவரை நீ யனுசரித்திருக்க உன்னை உனது தந்தை சிருட்டித்தார். என்னைக்காக்க நீ மனஸா என்கிற பெயருள்ளவளாக இருக்கின்றனை. சக்தியினுடைய அம்சத்தால் நீ மனஸாதேவியாக அவதரித்தாய். இப்போது சித்தயோகினியாயிருக்கின்றனை. அதனால் பூஜிக்கப்பட்டவளாயும் நமஸ்கரிக்கப்பட்டவளாயு மிருக்கின்றனை. எதனால் தேவர்கள் மனோபக்தியினால் பூசிக்கின்றார்களோ அதனால் உன்னை மனஸாதேவி என்கின்றார்கள். நீ சத்திய சொரூபமாக இருக்கின்றாய். எவன் உன்னை மனதினால் தியானிக்கின்றானே அவன் உன்னை அடைவான். என்றிவ்வாறு துதித்துப் பாலினால் அபிஷேகஞ்செய்து மிகப்பிரீதியோடு பூசிக்கவும் அத்தேவி தர்லபமான ஞானத்தை உபதேசித்தனள். இத்துதியைத் தேவியைப்பூசித்து படிக்கின்றவனுக்கும் அவன் வமிசத்தோர்க்கும் சர்ப்பபயமில்லை. விஷம் அமிர்தம்போலிருக்கும். இத்துதி சித்தியாக ஐந்துலக்ஷம் ஜபிக்கவேண்டும் என்றனர். !(சு-ம்-145)

நாற்பத்தெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

ஹாங்விருத்தி விவர்ஜிதாயை நமஃ

நாற்பத்தொன்பதாம் அத்தியாயம்.

சுரபி உபாக்யானம்.

நாரதர், ஓ மூநீஸ்ரேஷ்டரே! கோலோகத்திலிருந்துவந்த சுரபியென்னும் தேவியார்? அவளதுசரித்திரம்என்ன? என்றுவினவ, நாராயணர் கோக்களுக்கு அதிட்டானமானவளும், கோக்களை முதலில்பெற்றவளும், பிரதானமானவளும், கோலோகத்தில்சிருட்டிக்கு முன்பிறந்தவளுமான சுரபியின் சரிதையைக் கூறுகின்றார்:—

பிருந்தாவனத்தில் கோபிகாஸ்திரீகளால் சூழப்பட்டவராய் கிருஷ்ண ராதிகையோடு ரகஸ்யத்தில் விளையாடிக்கொண்டிருக்

குஞ்சமயத்தில் பாலைக்குடிக்க எண்ணங்கொண்டவராய் லீலையாகத் தன்பக்கலில் சுரபியை மனோரதமென்னுங் கன்றோடும் சிறந்த பாலோடும் சிருட்டித்தார். ஸ்ரீதாமாளன்பவள் புதியபாத்திரத்தில் அமிர்தத்தைக்காட்டிலும் ருசியாயும், ஜனனமிருத்யு முதலானவைகளை நீக்குவதாயும் இருக்கிற அப்பசுவின்பாலைக் கறந்தாள். அதனை அந்தக் கோபிகாபதி பானஞ்செய்யுஞ் சமயத்தில் பால்பாத்திரம் உடைந்து நூறுயோசனை சுற்றளவு ஓர் குளமாய் நிறைந்துவிட்டது. பூலோகத்தில் இதனை க்ஷீர சரஸ் என்று வழங்குகின்றனர். அது கோபிகளுக்கும் ராதைக்கும் கிரீடாசரஸாகி ரத்னங்களால் நிறைக்கப்பட்டிருந்தது. காமதேனுவின் ரோமங்களிலிருந்து லக்ஷங்கோடி கோபாலர்களோடு லக்ஷங்கோடி காமதேனு பிறந்தன. பின்னர் அந்தப்பசுக்கள் அதிகமாகச் சந்ததிவிருத்தியடைந்தன. அதனால்சகல லோகமும் காமதேனுவைப் பூசிக்கத்தொடங்கிற்று. அப்பூசைசாயங்காலத்தில் தீபத்தோடு செய்யத்தக்கது என்று தருமர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அதற்குரிய மூலமந்திரம் தியானம் துதி பூஜாவிதி முதலியவைகளையுங் கூறுகின்றேன் கேட்பீராக:—

பிரணவத்தை முதலாகவும், நமஃ என்பதை இறுதியாகவுமுடைய சுரப்யை என்னும் ஆறுஅக்ஷரத்தாலாகிய மந்திரத்தை லக்ஷம் உருஜபித்தால் சித்தியாகும். பக்தர்களுக்குக் கற்பகவிருக்ஷமாயிருப்பது. யஜுர்வேதத்திற் கூறப்பட்ட தியானமும்பூஜையும் புக்தியையும் விருத்தியையும் முக்தியையும் சகல காமங்களையுங் கொடுக்கும். லக்ஷ்மிசொரூபிணியாயும், ராதைக்குத் தோழியாயும், கோக்களுக்கு அதிஷ்டான தேவதையாயும், பசுக்களுக்குத் தலைமையாயும், தாயாயும் பரிசுத்தமான ஆகாரமுள்ளதாயும், பக்தர்களுக்கு சர்வகாமத்தையுங்கொடுப்பதாயும், சகல பிரபஞ்சத்தையும், பரிசுத்தஞ் செய்கிறதாயுமுள்ள சுரபிதேவியை நமஸ்கரிக்கின்றேன் என்று தியானித்து கலசத்திலாவது, கம்பத்திற்செய்யப்பட்ட கோசிரசிலாவது, பிரத்யக்ஷமான கோசிரசிலாவது, சலத்திலாவது, அக்னியிலாவது காமதேனுவைப் பிராமணன் பூஜித்தல்வேண்டும். மறுதினம் முற்பகலில் தீபத்தோடு பூஜித்தல்வேண்டும். இவ்வாறு எவனொருவன் செய்வானோ அவன் எல்லாராலும் பூசிக்கப்படுவான்.

முன்னொருகாலத்தில் விஷ்ணுமாயையால் காமதேனு பாலியடக்கத் தேவர்கள் சிந்தாகுலமுற்று பிரமலோகத்தையடைந்து பிர

மனத்துதிக்க அவருடைய ஆக்ஞையால் இந்திரன் காமதேனுவை நமோதேவ்யை மஹாதேவ்யை ஸுரப்யைசநமோநமஃ கவாம்பீஜ ஸ்வரூபாயை நமஸ்தே ஜகதம்பிகே. (24) நமோராதா ப்ரீ யாயைச பத்மசாயை நமோநமஃ, நமஃ கிருஷ்ணப்ரியாயைச கவாம் மாத்ரே நமோநமஃ (25) கல்பவிருக்ஷஸ்வரூபாயை ஸர்வே ஷாம் ஸததம்பரே கூரதாயை தனதாயை புத்திதாயை நமோ நமஃ (26) ஸுபதாயை ஸுபத்ராயை கோப்ரதாயைநமோநமஃ யசோதாயை கீர்த்திதாயை தர்மதாயை நமோநம: (27) என்று துதித்தான். துதித்தவுடன் லோகமாதாவான சுரபி சந்தோஷ மடைந்து எதிரேவந்து வரத்தைக்கொடுத்து கோலோகம்போய்ச் சேர்ந்தது. தேவர்களும் தங்களிடம் சேர்ந்தார்கள். அப்போது பசுக்கள் பாலைக் கறக்கத்தொடங்கினர்; அப்பாலிலிருந்து தயிர் நெய் யுண்டாயிற்று. அதனால்யாகங்களைச்செய்யத்தேவர்கள் திருப் தியடைந்தார்கள். இத்துதியை எவன்படிப்பானோ, அவன் கோசம் புத்ரள்ளவனாகவும், தனவானாகவும், கீர்த்திமானாகவும் இருப்பான். அவன்தான் சகலபுண்ணியதீர்த்தங்களிலும் ஸ்நானஞ் செய்தவன். அவன்தான் யக்ஞத்திலும் தீக்ஷைசெய்து கொண்டவன். அவன் இம்மையில் சுகமடைந்து மறுமையில் பிரமபதத்தை யடைவன். அவன் மீண்டும் பிறவாது பிரமபுத்ரனுவன் என்றனர். (4-33)

நாற்பத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

ஹரயங்க வீக ஹ்ருத யாயைநமஃ

ஐம்பதாம் அத்தியாயம்.

ராதா துர்க்கா விதானம்.

நாரதர், சம்சாரபந்த நிவர்த்தியைச் செய்வதும் வேதத்திற் கூறப்பட்டுள்ளதுமான ராதா துர்க்காதேவிகளுடைய சரித்திரத் தைச் சொல்லவேண்டும், பராசக்திகளான அவ்விருவருடைய மகி மைகளைக் கேட்டு எவனுடைய மனத்தில் பக்தியுண்டாகாம லிருக் கும்? இப்பிரபஞ்சம் யாருடையஅம்சமோ, எல்லாப் பிரபஞ்சமும்

யாருடைய ஆக்ஞைக்கு உட்பட்டிருக்கிறதோ, யாருடைய பக்தியால் முக்தியுண்டாகுமோ அதனையும் கூறியருளுவீரென்ன நாராயணர் கூறுகின்றார்:—

வேதத்தில் கூறப்பட்ட ரகஸ்யத்தைக் கூறுகின்றேன். அது வெகு ரகசியமாயும் சாராத்சாரமாயும் பராத்பரமாயும் உள்ளதாகையால் சாதாரணமானவர்களுக்கு வெளியிடக்கூடாது. உலகமுண்டாகுங்காலத்தில் சம்வித்சொரூபமான மூலப்பிரகிருதிதேவி, பிரானன் புத்தி இவைகளுக் கதிஷ்டாநியாய்; ரக்ஷை சிக்ஷைசெய்து கொண்டிருக்கின்றனள். அசையும்பொருள் அசையாப்பொருள்களாயுள்ள விராட்புருஷன் முதலான சகல சீவர்களும், அச்சத்திகளுக்குச் சர்வசுவாதீனமாகவிருக்கின்றனர். அவர்களுடைய அனுக்கிரகப் பிரசாதமன்றியில் மோக்ஷங்கிடைப்பதரிது. ஆதலால் பிரசாதமுண்டாவதற்கு நாடோறும் அவர்களுடைய சேவையைச் செய்துவரவேண்டும். அது மந்திரமன்றியில் செய்யக்கூடாதாகையால் பராத்பரரூபமாயும், திரிமூர்த்திகளால் சேவிக்கப்பட்டதாயும் உள்ள ராதிகாமந்திரத்தைக் கூறுகின்றேன் கேட்பீராக:—

மந்திரம் ஸ்ரீராதா என்பதாம். அதனைச் சதுர்த்தியந்தமாகவும் அதன்பின் அக்னிபத்னியின் பெயரையும் சேர்க்க ஆறு அக்ஷரமாகின்றது. அம்மகாமந்திரம் தருமமுதலிய புருஷார்த்தங்களைத்தரத்தக்கதாயும், மாயைக்குப் பீஜமாயும், சிந்தித்தவற்றைக் கொடுக்கும் சிந்தாமணிபோன்றதாயும் உள்ளது. இம்மந்திர மகாத்மியத்தை ஆயிரங்கோடி முகமும், நூறுகோடி நாக்கும் படைத்தாலும் சொல்லமுடியாது. முதலில் கிருஷ்ணமூர்த்தி பக்தியோடு மூலதேவியினால் உபதேசிக்கப்பெற்றார். அந்த கிருஷ்ணர் விஷ்ணுமூர்த்திக்கும், அவர் பிரமனுக்கும், அவர் விராட்டுக்கும் உபதேசித்தனர். அம்மந்திரத்தை நான் செபித்து ருஷியாயினேன். பிரமாமுதலான சகலமான தேவர்களும் ராதிகையைப் பூசிக்கின்றனர். ராதாபூஜையில்லாமல் கிருஷ்ணன்பூசை உபயோகமில்லை. ஆதலால் சகல பக்தர்களும் ராதிகையைப் பூசித்தல் வேண்டும். கிருஷ்ணனுக்குப் பிராணனும் அவருடைய ராஜக்கிரீடைக்கு எஜமானியாயும், கிருஷ்ணனைத் தன் சுவாதீனத்தில் வைத்திருப்பவளாயும், அவரும் அவளைவிட்டு ஒரு க்ஷணமும் நீங்காதவராயும் இருக்கின்றார். ராதனம் என்றால் புருஷார்த்தத்தைச் சாதிப்பது என்று பொருள். பக்தர்க

ளுக்கு புருஷார்த்தங்களைக் கொடுக்கின்றபடியால் ராதையென்று சொல்லப்படுகிறாள். அம்மந்திரத்துக்கு ரான்ருஷி, சந்தஸு காயத்ரி, தேவதைராதிகா, சக்திபீஜமும்சக்திஸ்வரூபமும் முன்சொல்லப்பட்டிருக்கின்றன. மூலமந்திராவர்த்தியினால் அங்கன்னியாசம் கரன்னியாசம் செய்து, பிறகு சாமவேதத்தில் சொல்லப்பட்ட தியானத்தை முன்சொல்லியபடி வெண்சண்பக நிறமுடையவளாயும், சரத்கால சந்திரன்போன்ற முகமுடையவளாயும், அச்சந்திரன்போன்ற நேத்திரமுடையவளாயும், கோடிசந்திரனைப்போல் பிரகாசிக்கின்றவளாயும், கோவைப்பழம்போன்ற உதடுள்ளவளாயும், பெருத்தபிருஷ்டமுடையவளாயும், ஒட்டியாணத்தோடுகூடிய நிதம்பமுடையவளாயும், குந்தமொக்குக்குச் சமானமான தந்தமுடையவளாயும், வன்னிசுத்தமான வெண்பட்டைத் தரித்தவளாயும், புன்சிரிப்புள்ள முகமுள்ளவளாயும், யானையின் மத்தகம்போன்ற தனமுடையவளாயும், எப்போதும் பன்னிரண்டுவயதுள்ளவளாயும் இரத்தபூஷணங்களால் பூஷிக்கப்பட்டவளாயும், சிருங்காரரசரூபமான ரசிகையாயும், பக்தர்களை அநுக்கிரகிக்கும் ஆவலுள்ளவளாயும், மல்லிகைமாலதி முதலிய புஷ்பமாலைசூடிய கூந்தலால் பிரகாசிக்கின்றவளாயும், மிருதுவான சரீரமுள்ளவளாயும், ராஸமண்டலமத்தியில் வசிக்கிறவளாயும், வரதாபயங் கொடுக்கின்றவளாயும், சாந்தையாயும், எப்போதும் ஸ்திரமான யௌவனமுள்ளவளாயும், ரத்னசிங்காதனத்தில் வீற்றிருக்கின்றவளாயும், அநேககோபிகளுக்கு ஸ்வாமினியாயும், கிருஷ்ணப்பிரியையாயும், வேதத்தில் துதிக்கப்பட்டவளாயும், பரமஸ்வரியாயு மிருக்கின்றவளென்று ராதாதேவியைத் தியானித்து கலசத்திலாவது, எட்டுதள யந்திரத்திலாவது, ஆவாகித்துவிதிப்படி ஆசமனமுதலானஉபசாரங்களைமூலத்தாற்கொடுத்து மதுபர்க்கத்தையும் பால்கொடுக்கும் பசுவையுங் கொடுக்கவேண்டும். பிறகு ஸ்நானவேதிகையில் தேவியை எழுந்தருளச்செய்து, அப்யங்கன முதலான ஸ்நானங்களைச்செய்து வஸ்திரம் சந்தனம் துளசி பாரிஜாதம் தாமரைமுதலிய நானாவிதபுஷ்பம் ஆகிய இவைகளைக்கொடுத்து அக்னி ஈசானியன் நிருதி வாயு இவர்கள் மத்தியில் திக்பூஜைசெய்யவேண்டும். பின்பு பிரதக்ஷிணமாக கிழக்குமுதல் ஈசானியம் ஈறுகவுள்ள எட்டு தளங்களில் மாலாவதி மாதவி ரத்னமாலை சுசீலகை சசிகலை பாரிஜாதை அமராவதி பிரியகாரணி ஆகிய இவர்களையும், அவர்களுக்கு வெளிப்பக்க

த்திலும் அதற்குப் புறம்பிலும் பிரமன் முதலான திக்பாலகர் களையும், வச்சிரம்முதலிய ஆயுதங்களையும் பூஜித்து ராஜோபசாரங் களைச்செய்து, சகஸ்ரநாமங்களால் அருச்சித்து தேவியைச் சந்தோ ஷப்படுத்தி தேவிமந்திரத்தை ஆயிரம் உருசெபிக்கவேண்டும். ரா தைக்குப் பிரியமான தேவியை எவன் இவ்வாறு பூசிப்பானே அவன் கோலோகத்தில் சுகமாய் பரமாத்மாவுக்குச் சமானமாயிருப்பான். கார்த்திகைபௌர்ணமியில் ராதா ஜன்மோற்சவத்தைச் செய்கின்ற வனுக்கு ராதாதேவி எப்போதும் சான்னித்தியத்தைத் தருகின்றாள். ஏதோ வொரு காரணத்தால் கோலோகத்தில் பிருந்தாவனத்தில் ராதாதேவி விருஷபாது மகளாகப்பிறந்து நிலையாகவசித்துக்கொண் டிருக்கிறாள். இங்குச்சொல்லியிருக்கும் மந்திரங்களுடைய அக்ஷர கணக்கின்படி புரச்சரணை செய்யவேண்டும். ஜபத்தில் பத்தி லொருபாகம் எள்ளினால் மூன்று ஹோமமுஞ் செய்யவேண்டும் என்றனர்.

நாரதர் நாராயணரைநோக்கி ஓ முனிவரே! தேவி எதனால் சந்தோஷமடைவாளோ அந்தத்துதியைச் சொல்லவேண்டுமென்று கேட்க நாராயணர்கூறுகின்றார்:-நமஸ்தே பரமேஸ்வரி நிராசமண்டல வாஸினீ ராஸேஸ்வரி நமஸ்தேஸ்து கிருஷ்ணப்பிராணாதிகப்பிரியே. (46) நமஸ் த்ரைலோக்கிய ஜநநீ பிரசித்த கருணார்ணவே, பிரஹ்ம விஷ்ணுவாதி பிர்த்தேவைர் வந்தியமானபதாம்புஜே. (47) நமஸ் ஸரஸ்வதீ ரூபே நமஸ் ஸாவித்ரிஸங்கரீ, கங்கா பத்மாவதி ரூபே நமஸ் ஸாவித்ரி ஸங்கரீ. (49) கங்கா பத்மாவதீ ரூபோ ஷஷ்டி மங்களசண்டிகே, மனஸே துளஸீ ரூபே நமோ லக்ஷ்மீஸ்வரூ பிணீ, (49) நமோ துர்க்கே பகவதீ நமஸ்தே ஸர்வரூபிணீ, மூலப்ர குருதி ரூபாந்த்வாமஃ பஜாம்கருணார்ணவாம். (50) ஸம்சார ஸாக ராதஸ்மாந் சுந்தராம் பதயாம்குரு. இத்துதியை எவன் முக்காலத் திலும் ராதையைத் தியானித்து வாசிப்பானே அவனுக்குக் கிடைக் காத பொருளொன்றுமில்லை. தேக முடிவில் கோலோகராச மண் டலத்தில் வசித்திருப்பான். இந்தரகசியத்தை எவனுக்குஞ் சொல் லக்கூடாது.

இனி நிஜத்தமாத்திரத்தில் எல்லா ஆபத்துகளையும் நீக்குபவ ளாயும் உலகில் யாவராலும் வணக்கப்பட்டவளாயும், எல்லோரா லும் உபாசிக்கத் தகுந்தவளாயும், சிவசக்தி சொரூபமாயும், அற்பு

தமான மகிமையுடையவளாயும், சகலருடைய புத்திக்கும், அதிதே வதையாயும், அந்தர்யாமி சொரூபமாக இருக்கின்றவளாயும், துக்க மென்னுஞ் சங்கடத்தை நீக்குகிறபடியால் துர்க்கையென்று பிர சித்தி யடைந்தவளாயும், வைணவர் சைவர் இருவர்களாலும் உபா சிக்கப்பட்டவளாயும், மூலபிரகிருதி ரூபையாயும், முத்தொழிலைச் செய்கின்றவளாயும் இருக்கின்ற துர்க்காதேவியினது விதானத் தைச்சொல்லுகிறேன் கேட்பீராக:—

பிரமவிஷ்ணு ருத்திரர்கள் ருஷிகளாகவும், காயத்ரி உஷ்ணிக் அநுஷ்டிப்பு இவைசந்தஸ்ஸுகளாகவும், மாகாளி. மகாலக்ஷ்மி சரஸ்வதி இவர்கள் தேவதைகளாகவும் ரக்ததந்திகா, துர்க்கா பிராமரி மூவரும் பீஜங்களாகவும், நந்தா சாகம்பரி பீமர் மூவரும் சக்திகளாகவும், தர்மார்த்த காமமோக்ஷங்கள் விநியோகமாகவும் சொல்லப்படும். இவைகளை சிரசு முகம் இருதயம் ஸ்தனம் இவ் விடங்களில் முறையே நியசிக்கவேண்டும். மூன்று பீஜங்களிலாவது, நான்கு பீஜங்களிலாவது, இரண்டு பீஜங்களிலாவது, எல்லாப்பீஜங் களிலாவது, சிகை கண் காது நாசி முகம் புஜம் இவ்வாறங்கங்களில் நியாசஞ்செய்யவேண்டியது. கட்கம் சக்கரம் கதை பாணம் சாபம் பரிகம் சூலம் பிரண்டி சிரசு சங்கம் இவைகளைத் தரித்திருக்கின்ற வளாயும், மஹாகாளிஸ்வரூபமாயும், முக்கண்ணுடையவளாயும், நானவித பூஷணங்களால் அலங்கரிக்கப்பட்டவளாயும், கறுத்த மேகராசியைப்போல் பிரகாசிக்கின்றவளாயும், பத்துமுகம் பத்துக் காலுள்ளவளாயும், மதுகைடப நாசத்துக்காகப் பிரமாவினால் தியா னிக்கப்பட்டவளாயு மிருக்கிற தேவியைத் தியானிக்கின்றேன் என்று மஹாகாளியையும்; ஜபமாலை பரசு கதை பாணம் சூலிசம் கமலம் தநுசு குண்டிகை தண்டம் சக்தி கத்தி கவசம் மணி சுரா பாத்திரம் சூலம் பாசம் சுதரிசனம் இவைகளைத்தரித்துக்கொண்டு செவந்தகாந்தியோடிருக்கிறவளாயும், செந்தாமரைப்பூவை அடைந் திருக்கிறவளாயும், மாயாசொரூபிணியாயும், மகிஷாசுரனை நாசஞ் செய்தவளாயும் இருக்கின்ற மஹாலக்ஷ்மியைத் தியானிக்கின்றேன் என்று மகாலக்ஷ்மியையும்; மணி சூலம் கலப்பை சங்கு உலக்கை சக்கிரம் தநுசு பாணம் இவைகளைக் கரங்களில் ஏந்தினவளாயும், சும்பன் முதலானவர்களைச் செயித்த வாணிபீஜஸ்வரூபிணியாயும், சச்சிதானந்தசொரூபிணியாயும் இருக்கிற மஹா சரஸ்வதியை தியா

னிக்கின்றேன் என்று மஹா சரஸ்வதியைப்புத்தியானிக்கவேண்டும். இனியந்திர பூஜையைக் கூறுகின்றேன்:— மூன்று ஆறுகோணங்களோடும், எட்டு தளபத்மம்இருபத்துநான்கு தளபத்மங்களோடும், பூபுரகத்தோடும் கூடியிருக்கிற யந்திரத்தைச் சிந்தித்து கலசத்திலாவது யந்திரத்திலாவது பதுமைகளிலாவது, பாணலிங்கத்திலாவது, இலிங்கத்திலாவது, சூரியனிடத்திலாவது, அகுயமாகத் தியானித்துப்பின்னர் ஜயாதி சக்திகளோடு கூடிய பீடபூஜையைச் செய்ய வேண்டும்.

பிறகு முக்கோணத்துள் பூர்வகோணத்தில் சரஸ்வதியோடு கூடிய பிரமனையும், தெருதிகோணத்தில் இலக்ஷ்மியோடு கூடின விஷ்ணுவையும், வாயுகோணத்தில் பார்வதியோடுகூடிய சம்புவையும், தேவிக்கு வடபக்கத்தில் சிம்ஹத்தையும். வாமபாகத்தில் மகிஷனையும், ஷட்கோணத்தில் கந்தை ஜயை ரக்ததந்தை சாகம்பரி துர்காதேவி பிராமிதேவியையும், அஷ்டதளபத்மத்தில் பிராம்ஹி மாகேச்வரி கௌமாரி வைஷ்ணவி வராஹி நாரசிம்ஹி ஐந்திரி சாமுண்டா இவர்களையும், இருபத்து நான்கு தளபத்மத்தில் முதலில் விஷ்ணுமாயை சேதனை புத்தி நித்திரை க்ஷுதை சாயா சக்தி பரா திருஷ்ணை க்ஷாந்தி ஜாதி லஜ்ஜை சாந்தி சிரத்தை கீர்த்தி இலக்ஷ்மி திருதி விருத்தி சுருதிஸ்மிருதி தயைதுஷ்டிபுஷ்டிமாதா பிராந்திரதி இவர்களையும், பூபுரகோணத்தில் கணபதிக்ஷேத்ரபாலகர் வைரவர் யோகினிகள் இவர்களையும்; யந்திரத்திற்கு வெளியில் இந்திரன் முதலானவர்களையும் வச்சிராதி ஆயுதங்களையும் பூசித்துப் பின்தேவிக்கு ராஜோபசாரஞ் செய்யவேண்டும். பின் வாக்பவம் சம்புவனிதா காமபீஜம் சாமுண்டா என்பவைகளை சதுர்த்தியந்தமான துர்க்காநாமத்தோடுகூட்டி உச்சரிப்பதாகிய நவாவர்ண மந்திரத்தை அர்த்தந்தெரிந்தவனுய் ஜபித்து சப்தசதி தோத்திரத்தைப்படிக்கவேண்டும் மூவுலகிலும் இத்துதிக்குச் சமானமில்லை.

இதில் சந்தோஷிப்பதுபோல் வேறெவைகளிலும் சந்தோஷிப்பதில்லை. இவ்வண்ணம் தினந்தோறும் மாஹாதேவியைப்பூஜித்தால் சதுர்விதபுருஷார்த்தங்களுக்கு இருப்பிடமாய் விடுகிறான். எதனுல் சகலகாரியமும் சித்தியாகுமோ அந்தத்துர்க்காபூஜையை இப்போதுசொன்னேன் பிரமவிஷ்ணு முதலியதேவர்களும், இலக்ஷ்மி முதலிய சகல தேவிகளும் ஞானிகளும் யோகிகளும் ஆச்ரமிகளும் சிவையைத் துதிக்கிறார்கள். துர்க்காதேவியின் ஸ்மரணையிருந்தால்

தான் ஜனன மெடுத்ததற்குப்பலன். பதினென்கு மநுக்களும், சகல மானதேவர்களும், தேவிபாதாரவிந்தத்தைத் தியானித்தே தங்கள் தங்கள் பதவிகளை யடைந்தனர். அதிக ரகசியமான பிரகிருதிதேவி யின் பஞ்சகத்துவமும் அவரவர் அம்சமும் சொல்லப்பட்டன. இத னைக்கேட்ட மநிதன் புருஷார்த்தங்களையும் புத்திரனில்லாதவன் புத்திரனையும் வித்யார்த்தி வித்தையையும், இவைபோலும் எவரெ வர் எதை எதையடைய விரும்புகின்றனரோ அவரவர் அவ்வ வைகளையும் அடைகின்றனர். இதனை நவராத்திரியில் தேவிசந்நி தியில் பாராயணஞ் செய்தால் சந்தோஷமடைவாள். எவன் ஒவ் வொரு அத்தியாயத்தை நாடோறும் படிப்பானே அவனுக்குத் தேவி சுவாதீனமாய்விடுவாள். தேவிக்கு இஷ்டன் அவனைப்போல் ஒருவனுமில்லை.

இவ்விஷயத்தில் பரிகூஹயும் பார்க்கலாம். எவ்வாறெனின்; ஓர் கன்னிகையின் கையிலாவது, ஓர் பிள்ளையின் கையிலாவது, ஓர் புஷ்பத்தைக் கொடுத்துத் தான் கோரிக்கையை நினைத்துக்கொண்டு புத்தகத்தின்மேல் புஷ்பத்தை வைக்கச்செய்து தெரிந்துகொள்ள லாம். புத்தகத்தையும் மாயா தேவியையும் பூசித்து ஒன்றுக ஸ்நா னஞ்செய்த சுத்தமான கன்னிகையைவரவழைத்துப்பூசித்துப்பொ ன்னுற் செய்யப்பட்ட ஓர் ஈர்க்கை நடுவேநாட்டி பரிட்சைசெய்தால் சுபமோ அசுபமோ எவ்வாறிருக்கின்றதோ அவ்வாறே நடக்கும். இதுநிச்சயம். மத்யமாகவந்தால் மத்யமாகவே யிருக்கும் என் றனர். (சு-ம். 100)

ஐம்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் 50-க்குச் சுலோகம் (3624)

ஒன்பதாம் ஸ்கந்தம் முற்றிற்று.

ஹரிகோபாருணும் சுகாயை நம:

தேவீ பாகவதம்.

பத்தாம் ஸ்கந்தம்.

முதலாமத்தியாயம்.

சுவாயம்புவின் விருத்தாந்தம்.

துங்காபி ராம குசபர சிரிங்காரித மாஸ்ரயாமி காஞ்சிகம்
சங்கர பரதந்திரம் ஸ்ருங்கா ராத்வைத தந்திர சித்தாந்தம்.

நாரதர் கூறுகின்றார்:—ஓ நாராயணரே! பூமிக்கெல்லாம் ஆதாரமா யிருக்கின்றவரே! தேரால் சகல ரகஸ்யீங்கட்குங் காரணமா யும்சகல பாபங்கட்கும் நாசகரமாயுள்ள தேவியினது சரித்திரஞ் சொல்லக்கேட்டுள்ளேன்; தேவியானவள் எல்லா மன்வந்தரங்களி லும் எந்த வுருவமா யுள்ளவள்? எந்தெந்த வுருவங்களாகத் தோன்றுகின்றவள்? பக்தவத்ஸலியாகிய அத்தேவி எந்தெந்தப் பக்தர் களால் பூஜிக்கப்பட்டவளாய்த் தோத்திரஞ் செய்யப் பட்டவளாய் அவர்களுடைய மநோரதங்களைப் பூர்த்திசெய்திருக்கின்றாள்? அந்த மஹிமையோடு கூடிய சரித்திரங்களைக் கிருபாசமுத்திரமா யுள்ள தாங்கள், கேட்டதும் ஆவலுள்ள எனக்குச் சொல்லி யருளு மென்றனர்.

நாராயணர் கூறுகின்றார்:— ஓ மஹரிஷியே! பக்தர்களது பாபத்தை நாசஞ்செய்கிறதாயும் அவர்கட்குப் பக்தியை யுண்டுபண்ணுவதாயும் அவர்களடையவேண்டிய மகா சம்பத்துக்குக் காரணமாயு மிருக்கின்ற அந்தத் தேவியினது சரித்திரங்களைக் கேட்பாயாக வென்று கூறுகிறார்:— பூர்வத்தில் உலகைப்படைத்தற்குக் காரண ராகிய பிரமதேவர் நாராயணரது நாபிக்கமலத்திலிருந்து வெளியே வந்தனர். அவருடைய மனத்திலிருந்து சுவாயம்புமனுவும் அவர் பத்னியாகிய சதரூபையுந் தோன்றினர். பின்னர் அம்மனுவானவர் மிகவும் பரிசுத்தமான கிருப்பாற்கடற் கரையின்கண் மகா பாக்கிய பலப்பிரதையான தேவியை மிருத்திகையினாற் பிரதிஷ்டைசெய்து உண்ணத்தக்க ஆகாரங்களையொழித்துச் சுவாசத்தையடக்கி நியம

மாகக் கொண்ட வீரதங்களால் சரீரம் இளைக்கப்பெற்றுக் காமக் குரோதாதிகளை யடக்கிப் பூமியில் ஓர் காலியூன்றி அசைவறநின்று தெளியினது பொன்னடிகளை உள்ளக்கமலத்தில் வைத்து வாக்பவ மென்னும் மந்திரத்தை ஜபித்துக்கொண்டு நூறுவருடம் ஸ்தாவ ரம்போ லிருந்தனர்.

அப்பொழுது தேவியானவள் வெளிப்பட்டுவந்து, ஓ அரச னே! உனக்கு வேண்டிய வரங்களைக் கேளென்றுள். ஆனந்தத்தை விளைவிக்கும் அந்த வாக்கை அரசன்கேட்டுத் தன் மனதி லெண் ணியவாறு தேவர்களாலும் அடைதற்கரிதான இவ்வரத்தைக் கேட்கலுற்றனன். ஓ விசாலமான கண்ணுடையாளே! யாவருடைய உள்ளத்திலும் வாசஞ்செய்கின்றவளே! யாவராலும் பூஜிக்கத் தகுந்தவளே! எல்லா லோகங்களையுந் தரிக்கின்றவளே! எல்லா மன்வந்தரங்கட்கும் மங்களமானவளே! நீ நன்றாய் விளங்கவேண் டும். உனது கடாக்ஷ வீக்ஷணயத்தாலன்றோ பிரம விஷ்ணு ருத் ரர்கள் சிருஷ்டி திதி சங்காரங்களைச் செய்து வருகின்றனர்! உனது ஆக்ஞையினலன்றோ இந்திரன் மூன்றுலகத்திற்கும் அதிபதியா யிருக்கின்றன்! பிரேத நாயகனாகிய காலன் பிராணிகளைத் தண் டிக்கின்றன்! ஜலஜந்துக்களுக்கு அதிபதியாகிய வருணன்எம்பான்றவர் களை ரக்ஷிக்கின்றன்! குபேரன் நிதிபதியாயிருக்கின்றன்! அக்கினி நிருதி வாயு ஈசானன் உன் அமிசத்திற் பிறந்து உன் பக்தியினல் விருத்தி யடைகின்றனர்! ஓ தேவியே! அவர்கட்கெல்லாம் வரங் கொடுத்ததுபோல் சுவர்க்க காரியத்தில் பிரவேசித்திருக்கும் எனக் கும் இப்போது வரங்கொடுக்கத் தகுமானல் என்னை நோக்கிவரும் இடையூறுகளெல்லாம் இடையூறுபட்டொழியக்கடவது. சித்ரூ பையே! என்னல் ஜபிக்கப்பட்ட வாக்பவ மந்திரத்தை எவர்கள் ஜபிக்கின்றார்களோ அவரது காரியங்கள் சீக்கிரத்தில் சித்தியாக வும், இச் சம்வாதத்தைப் படிக்கின்றவர்களுங் கேட்கின்றவர்களும் புத்தி முத்திகளை எளிதாகவடையவும், இவற்றோடு யாவர்க்கும் இன்பத்தை விளைவிக்கும் இன்சொல்லும் புத்திர பௌத்திராதி விருத்தியும் ஞானசித்தியும் கர்ம மார்க்க சித்தியும் பூர்வ ஜன்ம ஞானமும் உண்டாகவும் அருள்செய்ய உன்னைச்சேவித்துப் பிரார்த் திக்கின்றேன் என்றனர்.

(சு-ம்-23½)

முதலாம் அத்தியாயம் முற்றிற்று.

லகாரார்த்தாயைநமஃ

இரண்டாமத்தியாயம்.

விந்தியாசல விருத்தாந்தம்.

விஷ்ணு சகோதரியாயும் வரதேஸ்வரியாயும் சர்வலோக பூஜ்யையாயுமுள்ள தேவி அநுக்கிரகிக்கிறாள்:—பூமியைப் பரிபாலிக்க வல்ல ஓ அரசனே! சுவாயம்பு மனுவே! உன்னால் பிரார்த்திக்கப் பட்டபடியாவும் உண்டாகும்படி நான் அதுக்கிரகஞ்செய்தேன். அசுர நாசனியாயும் மதித்தற்கரிய அளவிறந்த பராக்கிரம சாலினியாயு மிருக்கின்ற நான் வாக்பவ மந்திரத்தோடு நீ செய்துவந்த தவத்தினால் சந்தோஷமடைந்தேன். உனக்குச் சத்துருவில்லாத ராஜ்ஜியமும், வம்சவிருத்தியைச் செய்யவல்ல புத்திரர்களும், என்னிடத்தில் திடமான பக்தியும், தேகாந்தத்தில் மீண்டும் பிறவாதெறியாகிய மோக்ஷமும் முனக்குண்டாகக்கடவனவென்று கூறி அரசன் யார்த்துக்கொண்டிருக்கும்போதே, அவள் திருவுருக்கரந்து சூரியன் செல்லுங்கதியைத் தடுத்தும் அகஸ்திய முனிவரால் அடக்கப் பெற்றதுமான விந்தமலையை யடைந்தனன்.

இருடிகள் வினவுகின்றனர்:—ஓ சூதரே! விந்தமலை என்பது யாது? அது யாதுகாரணமாய் ஆகாயத்தில் லெழுந்து சூரியன் செல்லத்தக்க மார்க்கத்தைத் தடுத்தது? அகஸ்தியர் மேலோங்கி இறுமாந்திருந்த அந்தப்பர்வதத்தை எவ்வாறு அடக்கினர். அதை யெமக்கும் எங்கட்கு விரிவாய்ச் சொல்லவேண்டும். ஓ சாந்த சீலரே! தேவரீர் திருமுகத்தினின்றும் பெருகாநின்ற தேவி சரித்திரமென்னும் அமுதத்தை நாங்கள் பானஞ்செய்தும் திருப்தியடைந்தோமில்லை இன்னமும் அந்த அமுதத்தினிடத்து ஆசையேவளருகின்றது என்றனர்.

சூதர் கூறுகின்றார்:— விந்தமலைகளுக்குட் சிறந்தது. பல பருப்பதங்களால் பூஜிக்கத்தகுந்த மேம்பாடுடையது. அநேக விதமான விருக்ஷங்களால் நெருங்கியுள்ள ஆரண்யங்களாலும் மலர்கள் நெருங்கியுள்ள புதர்களாலும் நதிதீரங்களாலும் சூழப்பட்டது. மான் பன்றி புலி வேங்கை வானரம் கரி முதலிய விலங்கினங்கள் தன்னிடத்து உல்லாசமாக வுலாவப்பெற்றது. கின்

னர கிம்புருடர்களாலும் அப்சரஸ்திரீகளாலும் நிறையப்பெற்றது. இக்கது சிறப்புடைய அவ்விந்த மலையைநோக்கித் தன்னிச்சை வழி எவ்வுலகத்துக்கும் உலாவவல்ல நாரதர் மிக்க பிரீதியோடு தற்செயலாய் வந்தனர். அவர் வருகையைக்கண்ட அவ்விந்தமலை திடுக்கிட்டு விரைந்தெழுந்து அர்க்கிய பாத்திய ஆசமனீகளைக் கொடுத்து சுகமாய் ஆசனத்தில் வீற்றிருக்கச்செய்து பூஜித்து அவரைப்பார்த்து, ஓ உத்தமரே! இக்கு யாதுகாரணங் கருதிவந் தீர்? தேவரீரிக்கு வரப்பெற்றதனால் எனது சிருகம் விலை மதிக்கக் கூடாததாயிற்று, சூரியனுடைய சஞ்சாரமானது எப்படித் தேவர்களுக்கு நன்மையைத் தருவதோ அப்படியே தேவரீரது சஞ்சாரமும் தேவர்கட்கு நன்மையைத் தருவதன்றோ! அபூர்வமான சங்கதி ஏதேனு மிருக்குமானால் அதனைச் சொல்லுமென்று வினவ நாரதர் கூறுகின்றனர்:—

இந்திரனுக்கு வைரியாயுள்ள விந்தமே! நானிப்போது பொன் மலையாகிய மேருவினின்றும் வருகின்றேன். அதில் லோகபாலகர்களான இந்திராதியர்கள் வசிக்குங் சிருகங்களை அவரவர் வசித்தற்குரிய உலகங்களைப்போற் கண்டேனென்று சொல்லிப் பெருமூச்சுவிட்டனர். விந்தமலை, ஓ முனிபுங்கவரே! நீர் பெருமூச்சுவிடுங் காரணத்தைக் கூறுமென்ன, அவர் கூறுகிறார்:—ஓ விந்தமே! மேருமலை இப்போது கொண்டிருக்கும் இறுமாப்பை என்னென்று சொல்லுவேன். இமயபர்வதம் பார்வதியாருக்குத் தந்தையான படியால் சிவபெருமானுக்கு மாமனாராய் அவ்விசேடத்தால் யாவராலும் பூஜிக்கும் பெருமையை யடைந்தது. ஸ்ரீகைலாயமும் சிவபெருமான் தன்னிடம் நீங்காது வீற்றிருக்கப்பெற்ற காரணத்தால் யாவராலும் வணங்குந் தன்மையைப்பெற்றது. நிடத நீலகந்தமாதன முதலிய பருப்பதங்களும் ஒவ்வோர் காரணத்தால் சிறப்படைந்திருக்கின்றன. மேரு, தான் ஆயிரங்கிரணங்களோடு கூடிய சூரியன் சகல கிரகங்களோடும் நக்ஷத்திரங்களோடும் நாடோறும் வலம்வரப் பெற்றுள்ளதென்றும் அதனால் தனக்குச் சமானமானதும் மேம்பட்டதும் உலகில் ஒரு மலையுமில்லை யென்றும் தானே சிறந்ததென்றும் அலங்கரித்திருக்கின்றதை இன்று கண்டேனுகையால் பெருமூச்செறிந்தேன். ஆனால் தவஞ்செய்வோனுகிய யான் ஒருவரடைந்திருக்கும் அலங்காரத்தைச் சிந்திக்கவேண்டியது மில்லை. பிறரிடத்திற் சொல்லவேண்டியது.

மில்லை. நீ என்னைப்பார்த்து அபூர்வமான சங்கதி ஏதேனுமிருக்குமானால் அதனைச் சொல்லுமென்று கேட்டபடியினால் வார்த்தை மேல் வார்த்தையாய்ச் சொல்லவந்தது. இனி யான் என்னிடம் போய் வருகின்றேனென்று பிரமனுலகம் போயினர். (சூ-ம். 28.)

இரண்டா மத்தியாயம் முற்றிற்று.

ஓ

லதாபூஜ்யாயைநமஃ

மூன்றும் அத்தியாயம்

விந்திய கிருதபானு மார்க்க நிரோதனம்.



சூதர் கூறுகின்றார்:—நாரதமுனிவர் சென்றபின் மேருமிக்க இறுமாப் படைந்திருக்கின்றதென்று கேள்வியுற்ற விந்தியமலை சிந்தாகுலமடைந்து, நாம் அந்த மலையைக் கர்வபங்கஞ் செய்யாமற் போவோமாயின் நமக்கென்ன சிறப்பிருக்கின்றது? நாம் அதனை எப்படி வெல்வோம்? வெல்லாதொழியின் நமது மனம் எப்படித்தணியப்போகின்றது? நமது வன்மையையும் ஆண்மையையும் வேருப்பிற்றான் சுட்டவேண்டுமென் றெண்ணிக்கொண் டிருக்கும்போதே மேருமலையின் இறுமாப்பை யடக்கத் தாம் செய்யவேண்டிய காரியமிதுவென்று தெளிவாய் மனதிற் றோன்றிற்று. அது யாதெனின், சூரியன், கிரகாதி நக்ஷத்திரங்களோடு நாடோறுந் தன்னை வலம் வருகின்ற தென்கிற இவ் வொன்றினாலன்றே அளவில்லாத அகங்காரங்கொண்டிருக்கிறது. இன்று நமதுகைகளால் அந்தச் சூரியன் வரும் மார்க்கத்தைத் தடைசெய்வோமாயின் அவனைப்படி அதை வலம்வரப் போகின்றான், அவ்வாறு வலம்வரானையின் அந்த மேருகர்வ பங்கமடையு மென்பதில் சந்தேகமுண்டோ என்று நிச்சயித்தமேயாம் அவ்வாறேஅக்கணமே உன்னதமான தனது சிகரங்களால் ஆகாயத்தை யளாவிச்சென்று சூரியனைப்போது உதயகிரியி லுதிக்கப்போகின்றான்; நாமெப்போது தடுக்கப் போகின்றோம் என்றெண்ணிக்கொண்டே அவ்விரவெல்லாம் கீழ்த்திசையை நோக்கி யிருக்கும்போது பிராஹ்ணை (முற்பகல்) அபரான்ணை (பிற்பகல்) மத்யான்ணை (நடுப்பகல்) எனற மூன்று காலங்களைக் காட்டி அக்காலங்களால் தேவர்களுக்கு அவ்யத்தையும் பிதுர்க்க

ஞக்குக் கவ்யத்தையும் ஏனைய பூத பலி முதலியவற்றையும் செய்விக்கின்றவனும், உலகிலுள்ளார் யாவரையும் தந்தந் தொழில்களில் முயல்விக்கின்றவனும், தாமரை மலரவும் ஆம்பல் குவியவும் செய்கின்றவனுமாகிய சூரியன் உதித்து, பிரிவரும் தன்பிரிய நாயகன் தன்னை நெடுநாட் பிரிந்திருக்க அதனு லுண்டாகிய விரகநோயி லிருக்கின்ற தலைவியைத் தனது காட்சியால் அந்நோயைத் தணிப்பவன்போல் கிழக்குத் திக்கையும் அக்கினித்திக்கையும் பிரகாசப்படுத்தி சமாதானமாக்கித் தக்ஷிணதிக்கைநோக்கிச்செல்லும்போது இரதத்திற் பூட்டியிருக்கும் குதிரைகள் செல்லுவதற்கு வழிதெரியாது மயங்கி யிடர்ப்பட்டன. அதுகண்ட அருணனென்னுந் தேர்ப்பாகன் சூரியனைப்பார்த்து, ஓ அர்க்கமூர்த்தியே! விந்தமலை இப்போது மேருமலையோடு பகைத்து அம் மலையை நீர் வலம்வரா வண்ணம் தடுப்பதற்குத் தான் மேலோங்கி நாம் போகவேண்டிய மார்க்கம்தெரியாவண்ணஞ்செய்திருக்கின்றதென்றனன். அதுகேட்ட அருக்கனும் கூறுகிறான்:—ஆஹா! இச்செய்கை மிக ஆச்சரியமாகவிருக்கின்றது! தெய்வத்தின்செயல் இப்படியு மிருந்ததா! அதன் செயலே செயல். வீரனுள்ளவன் தன்மார்க்கத்தில் பிரவேசிப்பனுயின் அவன் எந்தக் காரியத்தைத் தான் செய்யத் துணியான்! அதுபோல் இந்த விந்தம் செய்துவிட்டது. அந்தோ! குதிரைகள் போவதற்கு வழிகாணமல் தத்தளிக்கின்றனவே! நாம் ராகுவினுல் விழுங்கப்பட்டு ஒளிமழுங்குங் காலத்திலேயும் தடையின்றிப் போய்க்கொண்டிருக்கின்றோம். அப்படிப்பட்ட நாம் இன்று இந்தமலை தடுப்பதனுலுண்டாகிய இருளை நம தொளியாலோட்டிக் குதிரைகளுக்குப் போகும்படியான மார்க்கத்தைக் காட்டுவதற் கில்லாமற் போயிற்றே! இந்தமலை இப்படியே வழிவிடாமல் தடைசெய்துகொண்டிருந்தால் நாமென்செய்ய வலியுடையோம்! ஊழின் வலியேவலியென்றனன். இவ்வாறு விசனித்து தேவர்களாவது இதனைக்கண்டு எவனைச் சரணமடையவேண்டுமோ அவனைச் சரணடைந்து வழிதேடினரில்லை; இன்னது செய்யலாமென்று நமக்கும் நிச்சயப்படவில்லையென்று சித்ரகுப்த ஞெயர்கட்கும் காலநிர்ணயத்தை யறிவிக்கவல்ல சூரியன் கவலையுற்றனன். ஓ இருடிகளே! தெய்வ சங்கற்பத்தால் இவ்வண்ணம் சூரியன் தடைபட்டு நிற்கவே தேவபிதுர்க்களுக்குச் செய்வதாகிய சுவாகாகாரமும் சுவதாகாரமும் நின்றுவிட்டன. அவை நிற்கவே அநேகமாக உயிர்கள்

நசித்துப் போயின. தென்றிசையில் இருளடைந்து அங்குள்ளா செல்லாம் கண்ணைத் திறப்பதற்கு மின்றி மூடிக்கொண்டனர். உத் தரதிக்கிலும் கிழக்குத் திக்கிலும் சூரியனுடைய ஒளி மிகுந்து எரிக்கத் தொடங்கியபடியினல் அசுரர் இறந்தனர். அசுரர் வாடிப் போயினர். அசுரர் ஆவென்று ஓடிப் போயினர். இந்தி ரன் முதலிய தேவர்களெல்லாம் பயமுற்று என்செய்வோமென்று ஏங்கினர். (சு-ம்-26½)

மூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

லயஸ்தித்யுத்பவேஸ்வர்யை நம:

நான்காம் அத்தியாயம்

ருத்ரம்பிரதி இந்திராதிஸ்வ விருத்தாந்தகதனம்.



சூதர் கூறுகின்றார்:—என்செய்வோமென்று ஏங்கிய இந்தி ராதி தேவர்கள் பிரமனை யழைத்துக்கொண்டு தேவதேவனும் கிரிஜாபதியாயும் சந்திரசேகரனுமிருக்கின்ற உருத்திரமூர்த்தி யிடஞ் சென்று அவரது பிரபாவத்தைக் காட்டவல்ல தோத்தி ரங்களாலும் அடிக்கடிச் செய்யும் நமஸ்காரங்களாலும் வழிபடத் தொடங்கினர். ஓ கருணைக்கடலே! பார்வதிதேவியாரால் கொண்டா டத்தக்கவரே! அன்பர்களுக்கு அஷ்டமாசித்தி விபூதியைக்கொ டுக்கின்றவரே! மஹா மாயா விலாசத்துக்கு ஸ்தானமா யுள்ள வரே! பரமாத்ம சொரூபரே! விருஷபாரூடரே! அமரீசரே! கைலாசவாசரே! அக்கினிஸ்வரூபரே! யோகஸ்வரூபரே! யோகிக ளுக்குப் பதியானவரே! உமக்கு நமஸ்காரம். யோகிகளுக்கு ஈச ரே! உமக்கு நமஸ்காரம். யோகத்துக்குப் பலத்தைக் கொடுக் கின்றவரே! தீனர்களுக்குத் தானஞ்செய்கின்றவரே! கிருபா சா கர மூர்த்தியே! பக்தர்களது பீடையைப் போக்கடிக்கின்றவரே! உக்ரமான வீரியமுடையவரே! குணமூர்த்தியே! விருஷபத்வ ஜரே! காலஸ்வரூபரே! காலகாலரே! உமக்கு நமஸ்காரம் என்று துதித்து வணங்கியபொழுது சிவபெருமான் தேவர்களைப்பார்த்து, நீங்கள் நீங்கள் உத்தமமாகிய தோத்திரத்துக்கு மகிழ்ந்தேனென்று கைத்துக்கொண்டே உங்களது மனோரதத்தைப் பூர்த்திசெய்கின்

றேன்; வேண்டுவது யாதென்று கேட்க, தேவர்கள் கூறுகின்றார்:— ஓசர்வதேவேசயயே! கிரீசரே! சந்திரமௌளியே! துக்கிகளுக்குச் சுகங்கொடுக்கின்றவரே! மகாபலமுள்ளவரே! எங்களுக்கிப்போது சுகத்தைக் கொடுத்தருளும். விந்தமலையானது மேருமீவாடு துவேஷங் கொண்டு சூரியனுடைய மார்க்கத்தைத் தடுக்கும்பொருட்டு மேலோங்கி வளர்ந்து யாவருக்குந் துக்கத்தை விளைவித்து விட்டது ஆகையால் தேவரீர் அந்தமலையையடக்கிச் சுகத்தைக் கொடுக்க வேண்டும். சூரியனைத் தடைசெய்துவிட்டால் காலநிர்ணயம் எப்படியேற்படும். ஸ்வாஹா ஸ்வதா என்கிற மந்திரங்களாற் செய்யத்தகும் கிரியைகள் கெட்டிருக்கும் இவ்வுலகிற்கு எவன் புகலிடமாவான்? பயமுற்றிருக்கும் எங்களுடைய துக்கங்களைத் தொலைக்கத்தக்கவர் நீரென்றே காண்கின்றோம். ஓ கிரிஜாபதியே, தயைசெய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அப்பொழுது உருத்திரமூர்த்திசிரித்துத் தேவர்களைப் பார்த்து; சத்திகளிலே ஒருவரா யெண்ணப்பட்டவராயும் பிரபுவாயும் உங்களால் பூஜிக்கத் தக்கவராயும் இருக்கின்ற விஷ்ணுமூர்த்தி அவ் விந்தமலையினது விருத்தியை அடக்கவல்லவர் ஆதலால் அவர்தான் உங்களுடைய துக்கத்தைப் போக்கடிக்கத் தக்கவராவர் என்று கூறவே பிரமனுதி தேவர்கள் வைகுண்டத்தை யடைந்தனர். (சுலோ 19)

நான்காம் அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீ

ஸாஸ்யதர்சன சந்துஷ்டாயைநமஃ

ஐந்தாம் அத்தியாயம்.

விஷ்ணுஸ்துதி.

சூதர் கூறுகின்றார்:— வைகுண்டத்துக்குப்போன தேவர்களெல்லாம் பிரபுவாயும் லக்ஷ்மி பதியாயும் ஜகத்குருவாயும் கமலாக்ஷனாயும் காந்தி ஸ்வரூபமாயும் விளங்கும் விஷ்ணு மூர்த்தியைப் பார்த்துப் பக்தியோடு வாய்குழறிக்கொண்டே ஓ ஸ்ரீயப்பதியே! மஹா புருஷரே! அசுரசங்காரரே! மன்மதனைப் படைத்தவரே! சர்வகாம பலப்ரதரே! கோவிந்தரே! மஹாயக்ஞ சொரூபரே! ஜகதோற்பத்தி காரணரே! மத்ஸ்யாவதாரரே! வேதோத்

தாரணஞ்செய்தவரே! சத்யவிரதரே! பூதநாயகரே! உமக்கு நமஸ்காரம். தேவகாரியங்களை மூடிக்கின்றவரே! அமரர்களுக்கு அமிர்தமுண்டாகும் பொருட்டு கூர்மரூபமெடுத்தவரே! உமக்கு நமஸ்காரம் அசுர சங்காரத்தின்பொருட்டு வராஹ நரசிம்ஹ வாமனாவதாரங்களையெடுத்தவரே! பக்தர்களுடைய ஆபத்தைப்போக்கப் பெண்ணுருவெடுத்தவரே! உம்மைக்காட்டிலும் தயவுள்ளவர்கள் யாவரிருக்கின்றனரென்று தோத்திரஞ் செய்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தனர். அவர்கள்செய்த தோத்திர நமஸ்காரங்களை யேற்றுக்கொண்ட விஷ்ணுமூர்த்தி பிரசன்னராய் ஓ தேவர்களே! உங்கள் தோத்திரத்தைக் கேட்டு மகிழ்ந்தோம், உங்களுடைய சங்கிகொணுத துன்பத்தைத் தொலைத்து விடுகிறும், பெறுதற்கரிய இவ்வரத்தை யென்னிடம் பெற்றுக்கொள்ளுங்கள், இப்போது நீங்கள்செய்த துதியை யென்னிடம் பக்தியுள்ளவர்கள் படனம் பண்ணுவார்களானால் அவர்கள் இம்மை மறுமைகளில் எப்தவேண்டிய வெல்லாச் சுகங்களும்பெற்று வாழக்கடவர் என் றருளிச்செய்து மறுபடியுந் தேவர்கள் சில சொல்லத் தொடங்கினர். (சு-ம்-உஎ)

ஐந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

கூ

•லாபாலாப விவர்ஜிதாயைநமஃ

ஆறும் அத்தியாயம்.

* இந்திரகிருத அகஸ்திய பிரார்த்தனை.

சூதர் கூறுகின்றார்:— விஷ்ணுமூர்த்தி அருகிலிருக்கம் பெற்ற தேவர்கள் கலங்கியமனந் தெளிந்தவராய்க் களிப்படைந்து, ஓ தேவதேவரே! மஹாவிஷ்ணுவே! விந்தமலை சூர்யமார்க்கத்தைத் தடைபடுத்தி யிருக்கின்றதனால் உலகில் நடக்கவேண்டிய எல்லாக் கருமங்களுங்கெட்டு நாங்களுஞ் சுகமிழந்து திக்கற்றவர்களானோம் நாங்கள் எவ்விடத்திற் செல்வோம்? என்னசெய்வோம்? என்றனர், திருமால் கூறுகிறார்: — ஓ தேவர்களே! எந்தத் தேவி எல்லாவுலகம் படைத்தனளோ ஆதியானவளோ குலவர்த்தினியோ அந்தத் தேவியாகிய பகவதியை மிக்க அன்புடன் பூசித்தவரான மஹா

* இந்திரன் செய்துகொண்ட அகத்தியர் பிரார்த்தனை.

தேஜஸுள்ள அகஸ்தியமுனிவர் காசிக்ஷேத்திரத்திலிருக்கின்றனர் அவரே விந்தியபர்வதத்தின் பலத்தை யடக்கச் சக்தியுள்ளவர். ஆதலால் பிராமண சிரேஷ்டரான அவரைச் சந்தோஷப்படுத்த வாரணசிக்குச் செல்வீர்க ளென்றார். விஷ்ணுவினல் கூறக் கேட்ட தேவர்கள் மிக்க சந்தோஷமும் வணக்கமும் உள்ளவர்களாய்க் காசியை யடைந்து மணிகர்ணிகையில் ஸ்நானஞ் செய்து தேவர்களுக்கும பிதுர்க்களுக்கும் தர்ப்பணஞ்செய்து பலவிருக்ஷங்கள் நிறைந்துள்ளதாயும் மயில் சாகசம் ஹம்சம் சக்கிரவாகம் முதலிய பக்ஷிகள் வாழப்பெற்றதாயும், பெரும்பன்றி முள்ளம் பன்றி புலி மான் மரை வேங்கை முதலிய மிருகங்கள் உலாவத்தக்கதாயுமுள்ள பெரிதான அகஸ்தியர் ஆசிரமத்தை யடைந்துபிரஜ்வலமதேஜஸினல் பிரகாசிக்கிற அம்முனிவரைக்கண்டு பூமியில் தண்டம்போல் வீழ்ந்து நமஸ்கரித்து கூறுகிறார்கள்:— பிராஹ்மணர்களுக்கெல்லாஞ் சிரேஷ்டரே! பூசிக்கத்தக்கவரே! பூமிக்குத் தேவரானவரே! வாதாபிபலத்தை நசிக்கச்செய்தவரே! கலசத்திற் பிறந்தவரே! லோபாமுத்திரைக்குப் பர்த்தாவானவரே! மித்ராவருணனிடம் உற்பத்தியானவரே! சர்வவித்தைக்கும் இருப்பிடமானவரே! அகஸ்திய முனிவரே! உமக்கு நமஸ்காரம். யாருடைய உற்பத்தி மாத்திரத்தினல் ஜலம்தெளிந்து போகின்றதோ அப்படிப்பட்டவுமக்கு நமஸ்காரம். நாணற்புஷ்பம்போல் பிரகாசிக்கின்ற திருமேனி யுடையவரே! லங்காவாசப் பிரியரே! சடைமுடியுடைய சிஷ்யர்களை யுடையவரே! உமக்கு நமஸ்காரம். சகல தேவர்களாலுஞ் சேவிக்கத்தகுந்த சத்குணராசியா யுள்ளவரே! வரிஷ்டரே! உமது பத்தினியோடு உமக்கு நமஸ்காரம். உம்மைச் சரண்புகுந்தோம். ஓ சுவாமின்! மகாமகிமை யுள்ளவரே! விந்தியத்தினல் உண்டாயிருக்கிற பீடையினல் பீடிக்கப்பட்டிருக்கின்றோம். அதாவது விந்தியபருவதத்தால் சூரியமார்க்கம்தடைபட்டமுலகும் கோலாகலமாய் விட்டது. உம்முடைய தபோபலத்தினல் அம்மலையின் வேகத்தை யடக்குவீராக. உமது மகிமையினல் அம்மலை யடங்கிவிடு மென்பதற்குச் சந்தேகமில்லை யென்று தாம் வந்த காரியத்தை விண்ணப்பிக்க, பரமதார்மிகரான அகஸ்தியர் மிகவுஞ் சந்தோஷித்து சிரித்தமுகத்தோடுந் தேவர்களை நோக்கி, நீங்கள் சிறந்தவர்கள், மூவுலகுக்கும் பிரபுவானவர்கள், திக்பாலகர், மகாமஹிமை யுள்ளவர், சிக்ஷிப்பதிலும் ரக்ஷிப்பதி

ஹம் சமர்த்தர், எவன் அமராபதிக்குப் பிரபுவோ எவனுக்கு வச்சிரம் ஆயுதமோ எவனுடைய வாசலில் அணிமா முதலான அஷ்டசித்திக ளிருக்கின்றனவோ அவனே உங்களுக்கெல்லாம் அரசனு யிருக்கின்றன், அவ்யகவ்யங்கள் வகிக்கின்றவனும் சர்வ தேவர்களுக்கும் முகமாயிருக்கின்றவனுமாகிய அக்னிபகவானுக்கு ஆகாதது யாது? ராக்ஷஸ கணங்களுக்குப்பிரபுவும் எல்லாருடைய கர்மங்களுக்குச் சாக்ஷியுமாகிய சூரியனுக்கு இயலாததுயாது? ஓ தேவர்களே! பாசதண்டத்தைக் கையிலேந்திய இந்தயமனுக்கு யாதுமுடியாதது? ஆயினும் இக்காரியம் என்சக்தியா லாகவேண்டு மெனில் அப்படியே முடிக்கச் சித்தமாயிருக்கிறேன் என்று முனி வர் கூற தேவர்கள் சந்தோஷித்தவர்களாய்த் தத்தம் இடங்களுக் கேகினர் என்றனர். (சு-ம். உஎஉ)

ஆறும் அத்தியாயம் முற்றிற்று.

லக்ஷ்மீதரக்ஞாயைநமஃ

ஏழாம் அத்தியாயம்.

* அகஸ்திய கிருத விந்திய விருத்திகுண்டனம்.

சூதர் கூறுகின்றார்:—பிராமண சிரேஷ்டரான அகத்தியமுனி வர் தேவர்களுடைய வார்த்தையைக்கேட்டு ஓ தேவர்களே! உங் கள் வேண்டுகோளின்படியே யான் செய்கிறேனென்று கூற, அத னைக்கேட்ட தேவர்களும் பிராமண சிரேஷ்டர்களும் உய்ந்தோமெ ன்று சந்தோஷித்துத் தத்தமிடம் போய்ச்சேர, பின்னர் அகத்திய முனிவர் தம்பத்தினியைப்பார்த்து, ஓ ராஜபுத்திரியே! இப்போது தேவர்கள் நம்பால்வந்து விந்தமலை சூரியன் செல்லுமார்க்கத்தைத் தடைபடுத்திய தென்றும் அத்தடை என்னாலொழிய வேண்டுமென் றும் பிரார்த்திப்பதாகிய பிரார்த்தனை நாம் காசியில் வாசஞ்செய் யுவிரும்பிய விருப்பத்துக் கிடையூறாக ஏற்பட்டதென்று நினைக் கிறேன், பூர்வம் உண்மையறிந்த முனிவர்கள் மோக்ஷோபேக்ஷை யுடையவர்களால் அவிமுக்தஸ்தானமாகிய காசிவாசம் விடத்தக்க

---

* விந்தியமலையின் விருத்தியை அகத்தியர் அடக்குதல்.

தல்லவென்றும் அங்ஙனம் வசிப்பாராயின் அவர்களுக்கு விக்னம் அவசியம் நேரிடுமென்றுங் கூறியிருக்கின்றனர், அதுபோலவே இப்போது தடைவந்துவிட்டது, இதற்கு நானென்செய்வது ஓஎன் அன்புள்ள மணிவீயே! என்று மனம்வருந்தி, மணிகர்ணிகையில் ஸ்நானஞ்செய்து விஸ்வநாதனைத்தரிசித்து தண்டபாணியைப் பூஜித்து காலராஜனையடைந்து, ஓ காலராஜனே! நீண்டகையுள்ளவனே! பக்தர்களது பயத்தைபோக்குபவனே! காசிப் பட்டணத்திலாசையோடுவசிக்கும் என்னை எதற்காகத் தூரத்தில் தூரத்திவிடுகின்றனை? நீகாசியில் வசிப்பவர்களுக்கு வரும் விக்னங்களை நாசஞ்செய்கின்றவனல்லவா! இங்குள்ள பக்தர்களுடைய பீடையைத்தொலைத்து ரக்ஷிக்கின்ற நீ காசியினின்றும் என்னைவிலக்கி மனவருத்தத்தை யுண்டாக்குகின்றனையே; நான் பிறர்மேற் கூறும் அபவாதத்தினைக் கேட்டதுமில்லையே; கோளும் பொய்யும் சொன்னது மில்லையே; இப்படிப்பட்ட பாபச்செயல்களைச் செய்யாத என்னை எந்தப் பாவகர்மஞ் செய்ததாக காசியினின்றும் விலக்குகின்றனை? என்றனர். இவ்வாறு அகத்தியமுனிவர் காலராஜனைத் துதித்துப் பிரார்த்தித்துப் பின்னர் சர்வவிக்னத்தையும்நாசஞ்செய்பவரான ஸ்ரீசாக்ஷி விக்னேஸ்வரரை யடைந்து தெரிசித்துப் பூசித்துப் பிரார்த்தித்து பட்டணத்தை விட்டுவிலகித் தென்திசைநோக்கிச் சென்று காசையைநினைந்து நினைந்து மனைவியுடன் மனவருத்தப்பட்டுக்கொண்டே ஆகாயத்தை யளாவிய விந்தகிரியினெதிரில் ஒருக்ஷணத்திற்போய் அதனைப்பார்த்து நின்றனர். அந்தமலை இவரைக் கண்டதும் ஒழியாத அகங்கார மொழிந்து மெய்நடுங்கி சிற்றுருக் கொண்டுவந்து அவரைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து வணக்கத்துடன் நிற்க, அதனைப்பார்த்து அகஸ்தியர் ஓ குழந்தாய்! யான் தென்திசைக்குப்போக இச்சையுடையேனு யுள்ளேன். நீ யுயர்ந்திருப்பையாயின் நானெவ்வா றுன்னைக் கடப்பேன். இப்போது நீ இருத்தல்போல் நான் வருமளவு மிருத்தல் வேண்டுமென்று கூறி அம்மலைமீதேறி அதனைக்கடந்து தென்திசை யடைந்து ஸ்ரீசைலத்தைத்தரிசித்துப் பொதியமலைக்குப்போய் அவ்விடத்தில் வசித்திருந்தனர். ஓ மஹருஷிகாள்! விந்தமலையின் செய்தியிதுவாகும். அம்மலை அகஸ்தியபகவானால் அடக்கப்பெற்ற மகிமையுள்ளதாகலின் அம்மகிமை எக்காலத்தும் விளங்கும் பொருட்டுத் தேவியும் அதில் வாசஞ்செய்கின்றாள். ஆதலால் விந்தியா

சலவாசினி யென்று உலகில் அவளுக்கோர் நாமமு முண்டாயிருக் கின்றது.

ஓ முநிவர்களே! இச்சரிதத்தை நால்வகைப்பட்ட வர்ணச் சிரமிகள் கற்றாலும் கேட்டாலும் ஞானம் வெற்றி தனம் தானி யம் என்பவற்றையும் அறம்பொருள் இன்பம் என்பவற்றையும் முறையே பெறுவர்.

ஓ ஸ்வாயம்புவே! இது விந்தபர்வதத்தின் சரித்திரமென்று சொல்ல அம்மநுவானவன் சந்தோஷித்துத் தேவியைப் பக்தி யோடு பூசித்துத் தனது மன்வந்தரத்துக்குட்பட்ட ராஜ்யத்தை யடைந்தனன். இன்னமும் உனக்குக் கூறவேண்டுவது யாதென் றனர். (சு-ம். உஊ)

ஏழாம்அத்யாயம் முற்றிற்று.

லாவண்ய சாலிந்யைநமஃ.

எட்டாம் அத்யாயம்.

ஸ்வாரோசிஷாதி மநுசரித்ரம்.

சௌனகமுநிவர் கூறுகின்றார்:— சூதபகவானே! தேவரீர் முதல் மன்வந்தரமாகிய சுவாயம்புவைப்பற்றிக் கூறியருளினீர். இதுபோலவே ஏனைய மநுக்களுடைய விருத்தாந்தங்களைக்கேட்க ஆவலுடையவனு யிருக்கின்றேன் சொல்லு மென்றனர். சூதமுநி வர், ஓசவுனகரே! நாரதரும் நாராயணரை அப்படியே கேட்டி ருக்கின்றார், அம்முறையே நானுங்கூறுகின்றேன் கேட்பீராக வென்று சொல்லத்தொடங்கினர்:—

நாரதர் நாராயணரைநோக்கி மநுக்களுடைய வுற்பத்தியைக் கூற வேண்டுமென்று கேட்க நாராயணர் கூறுகிறார்:— ஓமகாமுநி வரே! முதல் மநுவாகிய சுவாயம்புமநு தேவி பூஜாவிசேடத் தால் பகையில்லாத ராஜ்யத்தையடைந்து தானெண்ணியபடிசகல தருமங்களையும் விருத்திசெய்தனன். அவனுக்குப் பிரியவிரதன் உத்தானபாதன் என்று இரண்டு புத்திரர்கள்பிறந்து பிரசித்திபெற் றிருந்தனர். அவருள் மூத்தோனாகிய பிரியவிரதனுக்கு சுவாரோ சிஷன் என்னும் புத்திரன்பிறந்து இரண்டாவது மநுவாயினன்.

அவன் காளிந்திநதிக்கரையில் ஓர் பர்ணசாலையமைத்து அதிலிருந்து உலர்ந்த சருகுகளைப் புசித்துக்கொண்டு தேவியினது திருவுருவத்தை மண்ணினுலமைத்து மிக்கபக்தியுடன் பன்னிருவருடம் பூசித்து அரியதவம்புரிந்து வந்தனள். அப்போது தேவி ஆயிரஞ்சூரிய ருதித்தாற்போல் அவன் முன்றோன்றி அவனைத் தமது திருக்கைகளால் கருணையுடனேக்கி ஓ சுவாரோசிஷனே! உனக்கு சர்வமன்வந்தரங்களுடைய ஆதிபத்யத்தையும் கொடுத்தேனென் றறுக்கிரகஞ்செய்தனள். அதனுல் அம்பிகை ஜகத்தாத்ரி-தாரிணி என்னும் நாமங்களால் பிரசித்தியடைந்தனள். இவ்வாறு சர்வ சத்ருக்களாலும் விடப்பட்ட ராஜ்யத்தை அந்த சுவாரோசிஷாவடைந்து சகல ராஜ்யதர்மங்களையும் ராஜ்யங்களையும் தனது குமாரனிடம் ஒப்புவித்துத் தான்சுவர்க்கலோகம் போய்ச்சேர்ந்தனன். அதன்பின்னர் பிரியவிரதன்மகனுகிய உத்தமன் மூன்றுவது மநுவாகிக் கங்கைக்கரையில் தவங்கிடந்து வாக்பவமந்திரத்தை மாநசிகமா யுச்சரித்து மூன்றுவருடம் உபவாசமாயிருந்து தேவி யநுக்கிரஹத்தைப்பெற்று, பக்தியுடன் சிறந்த தோத்திரங்கள் செய்து சத்துருபயமற்ற ராஜ்யத்தையும் பெருகிய சந்ததியுமுடையனுய் ராஜ்யசுகத்தையும் தர்மசுகத்தையுங் குறைவின்றி யநுபவித்து ராஜவிருடிகளடையுங் கதியையடைந்தனன். அதன்பின்னர் பிரியவிரதன் மகனுகிய தாமசன் நான்காவது மநுவாகி நர்மதாநதியின் தென்கரையில் காமராஜகூடத்தை ஜபித்து ஜகத்சொரூபிணியான தேவியை வசந்தகாலத்திலும் சரத்காலத்திலும் நவராத்திரி பூஜையினுல் ஆராதித்துச் சந்தோஷிப்பித்து அவளது கருணையையடைந்து தோத்திரஞ்செய்து சத்துருபாதையில்லாத ராஜ்யத்தையடைந்து மகாபலசாலிகளாயும்சூரராயுமுள்ள பத்துப்பிள்ளைகளைப்பெற்று தனது பத்னியுடன் சுவர்க்கத்தையடைந்தனன். அதன்பின்னர் சவன்சகோதரனை ரைவதன் ஐந்தாவது மநுவாகிக் காளிந்திநதிக்கரையில் வாக்பலத்தைக்கொடுப்பதாயும் வெகுசாதகமாயு மிருக்கிற காமபீஜத்தை ஜபித்து அதனுல் சகலசித்தியைக் கொடுப்பதான பலத்தையும்பெற்றுத் தன்ராஜ்யத்தை படைந்து நெடுங்காலமழியாத சந்ததிப்பெருக்குடையவனுய்த் தர்மத்தை ஸ்தாபித்து நானுவிதபோகங்களை யநுபவித்து சுவர்க்கத்தையடைந்தனன். (சு-ம். உசூ)

எட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

ஊ

லகுசித்திதாயை நமஃ

ஒன்பதாம் அத்தியாயம்.

சாகஷ்மநு ருபாக்கியானம்.

நாராயணர் கூறுகின்றார்:—ஓ நாரதரே! இன்னமும் உத்தமமாகிய தேவீமகாத்மியத்தை உனக்குச்சொல்ல நான் ஆவலுள்ளவனாயிருக்கின்றேன். பூர்வத்தில் அங்கராஜனுடைய புத்திரன் தேவியின் உபாசனையினால் ராஜ்யமடைந்ததைக்கேளும். அவ்வங்கராஜ புத்திரன் ஆறுவது மநுவாகிப் புலகருஷியை நமஸ்கரித்து ஓ மகருஷியே! சரணமடைந்தவர் பீடையைப் போக்கவல்ல தவசீலரே! உம்மைச் சரணடைந்தேன். எதைக் கைக்கொண்டு நான் சம்பத்தையடையப் பெறுவேனோ அதனை யடியேனுக்குணர்த்துவதன்றி அகண்ட பூமண்டலாதிபத்தியமும் ஒருவராலும் வெல்லக்கூடாத புஜபலமும் அஸ்திர சஸ்திரப் பிரயோக சாமர்த்தியங்களும் நீண்டகால மிருக்குஞ் சந்ததியும் இகபோகமும் முடிவில் மோக்ஷமும் எப்படிக்கிடைக்குமோ அந்தவுபாயத்தையும் எனக்குபதேசிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க, புலகமுநிவர் ஓ அரசனே! நீ தேவியைப் பூசிப்பையாயின் அவளநுக்கிரகத்தால் எல்லாமு முண்டாகுமென்றனர்.

அரசன் தேவிபூஜை எப்படிப்பட்டது அதனைச் செய்யும்விதமெப்படியென்ன, முநிவர் நீ ஸ்ரீ தேவியினது மந்திரங்களிற் சிறந்த வாக்பவ மந்திரத்தை எப்பொழுதும் ஜபித்துவருவாயாக. அதுசித்திபுத்திகளைக் கொடுக்கத்தக்கது. அதனினுஞ்சிறந்த மந்திரங்கிடையாது. ஸகலசித்தியையுஞ் சீக்கிரத்தில்கொடுக்கும். இம்மந்திர ஜபத்தினாலேயே மும்மூர்த்திகளும் முத்தொழில்களைச்செய்யும் வல்லபத்தைப் பெற்றனர். ஏனைய லோகபாலகர்களும் நிக்கிரஹாநுக்கிரகங்களைச் செய்ய வல்லவராயினர். ஆகையால் நீ அந்தத்தேவியைப் பூஜித்து அந்தமந்திரத்தை ஜபித்து மஹதைஸ்வர்ய மடையக் கடவாயென் றுரைபுகன்றனர்.

அந்த அங்கபுத்திரன் அவ்வாசியையேற்று விரஜாநதிக் கரையையடைந்து முதல்வருடந் தளிர்களையும் இரண்டாம்வருடம் சலத்தையும் மூன்றாம்வருடம் வாயுவையுமாகப் பன்னிரண்டுவருடம்

மாறிமாறிப் புகித்து வாக்பவமந்திரத்தை முக்காலத்தும் தவறுது ஜபித்து அரிய தவஞ்செய்து வந்தனன். அந்த ஜபதப விசேடத்தால் அவனுக்கு முன்னர் சுபகரமான மனமுண்டாயிற்று. அம்மனமுண்டான பின்னர் சகலதேவ சொரூபிணியாய் தேஜோரூபிணியாய் தேவி எதிர்நின்று, ஓ அரசனே! உனக்கென்ன அபேக்ஷையிருக்கின்றதோ அதனைக் கேட்பாயாக வென்றாள். அரசன் ஆனந்தபரவசனாய், ஓ தேவதேவஸ்வரீ! நீ சர்வசராசரங்களிலும் அந்தர்யாமியாயிருக்கின்றபடியால் என்மனக்கருத்தை நீயேயறிவாய்; ஆயினும் சகலதேவர்களாலும் பூஜிக்கப்பட்ட நீ என் பாக்கியவசத்தால் தரிசனந்தந்து என்னை யாதுவேண்டுமென்று விளுவுகின்றமையால் ஆளப்பட்டுவருகின்ற இந்தராஜ்யத்தைநான் ஆளச்செய்வாயென்று பணிந்தனன். தேவி, அன்பனே! அப்படியே நீயாளக்கடவாய்; அன்றியும் உன்னிலும் எட்டுப்பங்குப் பலமுள்ள புத்திரர்கள் பிறப்பர். ராஜ்யமும் சத்துருபய மில்லாமலிருக்கும், முடிவில் நீ மோக்ஷமும் பெறுவாயென் றனுக்கிரகஞ் செய்து திருவுருக் கரந்தனள். ஓ முனிவரே! சாக்ஷாந்மனுவாவானவன் தேவியினுடைய அனுக்கிரகபலத்தால் மகாபலவான்களாயும் அனேகக்காரியங்களைச் சாதிக்கவல்ல மகாசூரர்களாயும் தேவியிடத்தில் மறவாத பக்தியுடையவர்களாயும் செல்லுமிடங்களிலாறுஞ் சிறப்பினையடையத் தக்கவர்களாயுமுள்ள புத்ரசம்பத்தோடு ராஜ்யசம்பத்தையும் யாதொருகுறைவின்றி யநுபவித்துத் தேவியினது பதத்தை யடைந்தனன் என்றனர். (சு-ம்-உக)

ஒன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

லக்ஷ்மீரமை ஸவர்ணபாயை நமஃ

பத்தாம் அத்தியாயம்.

வைவஸ்வத மநோ ருபாக்யானம்.

நாராயணர் கூறுகின்றார்:—ஓ நாரதமுனிவரே! இனி ஏழாவது மநு வைவஸ்வத மநுவாகும். அவன் தேவியினது அநுக்கிரகப் பிரசாதத்தால் மன்வந்தராதிபதியாய், பரமானந்த திருப்தனாய், சர்வத்ர பூஜ்யனாய் வாழ்ந்திருந்தனன். இவனைப்போலவே அவனுக்குப்பின் எட்டாவது மநுவாகிய சாவர்ணிமநு என்பவன் சன்மார்

திரத்தில் தேவியை யாராதித்துப் பெற்றுவந்த வரத்தால் அவனும் மநுவந்தராதிபதியாய் சர்வராஜ பூஜ்யனுய் மஹா பராக்கிரமசாலி யாய் மஹா தீரனுயிருந்தன னென்றனர்.

அப்போது நாரதர் ஓ நாராயணரே! அந்த வைவஸ்வதமநு பூர்வ ஜன்மத்திற் செய்த பூஜையின் விசேடம் எப்படிப்பட்ட தென்று அறிய ஆவலுள்ளவனுயிருக்கின்றேனென்று வினவ நாரா யணர் ஓ முநிவரே! பூர்வத்தில் அவன் சைத்ர வம்சத்திற்பிறந்து சுரதனென்னும் பெயருடையனுய் ததுர்ப்பாணியனுய் குணக்ர கண்யனுய் தனுர்ஜ்ஞதனுய் யாசகபோஷகனுய் சத்ருநாசகனுய் பெரு மையிற் சிறந்தவனுய் சர்வசாஸ்திர பாரங்கதனுய்ப் பிரகாசித்துக் கொண் டிருந்தனன். சிலகாலங் கழிந்தபின்னர் இவன் பகைவனு கிய சுரதனென்பவன் வல்லவனுய்ச் சதுரங்க சேனைகளோடும் போர்க்குவர இவன் வெல்லும் வலியற்று ஊழின்வலியால் அவ னுக்கு மெலிவுற்றுத் தோல்வி யடைந்தனன். அடையவே அப் பகைவன் இவனது இராஜ்யாதி சகல சம்பத்துகளையுங் கொள்ளை கொண்டு இவனையும் துறத்திவிட்டனன். அப்போது அந்த வைவஸ் வதன் யாதொரு துணையுமின்றி ஓர் குதிரைமீ தேறிக்கொண்டு மாறுட சஞ்சாரமில்லாத ஆரணியத்துட் பிரவேசித்து அங்குமிங் கும் உலாவித் திரிந்துவருநாளில் ஓர்நாள் ஓராச்ரமத்தைக்கண்டு அதனுள் துழைந்தனன். அங்கு துழைந்தபோதே இவனுக்கு மனவுபசாந்தி யுண்டாயிற்று. அவ்வாச்ரமத்தில் அநேக சிடர் களோடும் தீர்க்கதிருஷ்டி என்கிற முநிவர் இருக்கக்கண்டு களிப் படைந்தவனுய் அவரைச் சரணமடைந்து அவருடைய சீடர்களில் தானும் ஒருவனுக இருந்துவரும் ஓர் நாளில் அம்முநிவர் தமது நித்ய பூஜைமுடித்து அங்கிருக்குந் தருணத்தில் மிக்க விநயத் தடன் அவரடிபணிந்து ஓ முநிபுங்கவரே! தேவரீரால் பிரவஞ்ச சுகம் மித்தையென்று அறிந்தவனுயிருந்தும் என் இராஜ்யத்தைச் சத்துருக்கள் கொள்ளையிட்ட விஷயத்தைப்பற்றி என்மனம் மிக வும் வருந்துகின்றது. இராஜ்யத்தை யடையவேண்டு மென்னும் ஆசையும் நானென்னும் அகங்காரமும் என்னிடவில்லை. இதற்கு நா னென்செய்வேன்? நா னென்னகதியாய்ப் போவேன்? எவ் வழியாய்ச் சுகமடைவேன்? இப்போது வேதவித்தாய் பரம சிரேஷ்டரா யிருக்கின்ற உமதனுக்கிரகத்தால் இவ்விசாரத்தைப் போக்கப் பிரார்த்திக்கின்றேன் என்றன். முநிவர் ஓ அரசனே!

நீ கவலிகொள்ளற்க, தேவியினுடைய மஹிமையினல் சகல காமங்களுஞ் சித்திக்கும் நீ ஐயுறவேண்டாம். அதுநிற்க, எனக்கோர் ஆச்சரிய முண்டாயிற்று. என்னெனின் மஹா மாயாசொரூபிணியாகிய அத்தத் தேவியானவள் சர்வப் பிராணிகளுடைய மனத்தையுந் தன் மாயாவசமாக்கிப் பிரபஞ்சத்தில் தக்கமொன்றே தோன்றவுஞ்செய்து அத்துக்கத்திற்றானே மோகத்தையும் உண்டுபண்ணுகின்றனளே இதனினும் ஆச்சரியமான தொன்றுண்டோ! சகலப் பிரபஞ்சத்தையும் பிரமரூபிணியாகச் சிருட்டித்தும் விஷ்ணு ரூபிணியாக ரக்ஷித்தும் உருத்திர ரூபிணியாகச் சங்கரித்தும் வருகிறுள். காளராத்திரியாய்ச் சகல காமங்களைக் கொடுக்கிறுள். சகலத்தையுஞ் சங்கரிக்கிறுள். இலக்ஷ்மிதேவியாயிருக்கிறுள்; அவளிடம் சகலப் பிரபஞ்சமும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. முடிவில் அவளிடத்திலேயே லயமடைகிறது. ஆகையால் அவளே பாத்பரை ஒ அரசனே! அவளநுக்கிரகம் எவனுக் குண்டாகிறதோ அவன் மோகத்தைத் தாண்டுகிறுன்; இல்லாவிடில் முடியாது. (சு - உடுஉ)

பத்தாம் அத்தியாயம் முற்றிற்று.



லக்ஷ்மணக்ரஜ பூஜிதாயை நம:.

பதினேராம் அத்தியாயம்.

மஹாகாள்யுத்பத்தி.



அரசன் கூறுகின்றுன் :—ஓ முனிபுங்கவரே! தேவரீரால் சொல்லப்பட்ட தேவியானவள் யாவள்? ஆன்மாக்களை மோகப்படுத்துகின்றவள் யாவள்? அவள் என்னகாரணத்துக்காக மோகப்படுத்துகிறுள்? எதற்காகத் தோன்றுகின்றுள்? அவள் உருவமென்ன? அவள் சுபாவமென்ன? இவை எல்லாம் எனக்குக் கருணையுடன் சொல்லியருளுமென்றுன். முனிவர் ஓ பூபதி! அப்படியே சொல்லுகின்றேன்.

முன்னெரு யுகத்தில் சங்காரகாலத்தில் நாராயணர் சமுத்திரத்தில் சேஷசாயியாய் நித்திராதேவிக்குச் சுவாதினராய் யோகநித்திரை செய்யும்போது அவர் காதிலுள்ள மலத்திலிருந்து கோரரூபிகளாய் மது கைடபரென்னும் அசுரர் இருவர் தோன்றி பிரம

தேவனைக் கொல்வதற்கெண்ணிச் சென்றார்கள். அவர் வருகை யைப் பிரமன்கண்டு பயமுற்று ஓ நித்திரைசெய்கின்ற நாராய ணரே! பகவானே! அசுரர்களைக் கொல்வதற்கு நீர் வரவேண்டு மென்று பிரார்த்தித்தனன். பிரார்த்தித்தும் அவர் வராமையைக் கண்டு அந்தோ! அவர் என்செய்வார் அவர் நித்திராதேவியின் வசப்பட் டிருக்கின்றாரன்றே என்று சிந்தித்து அவரைத் தன் வசப் படுத்திக்கொண்டிருக்கும் நித்திராதேவியைத் துதிப்போ மென் றெண்ணி ஓ தேவதேவீ! ஜகத்தாத்ரீ! பக்தாபிஷ்ட பலப் பிரதே! ஜகன்மயே! மஹாமாயே! சமுத்திரசயனே! சிவே! உன்னுடைய ஆக்ஞைக்கு உட்பட்டு யாவரும் தத்தந்தொழிலைச் செய்து வருகின்றனர். ஓ காலராத்ரீ! மஹாராத்திரீ! மோஹராத் திரீ! மதோத்கடே! வியாபிநீ! வசகா! (யாவர்க்குஞ் சுவாதீன மானவளே) மான்யா! (யாவராலும் கவுரவிக்கத்தக்கவளே) மஹா நந்தத்திற்கு ஸ்தானமா யிருக்கின்றவளே! மஹநீயா! மஹாராத் யா! மாயாமதுமதீ! மஹீ! பராபரே! (சர்வப் பிராணிகளுக்கும் பரமாத்மாவா யிருக்கின்றவளே) லஜ்ஜா! புஷ்டே! க்ஷமா! கீர்த்தி! காந்தீ! காருண்யவிக்ரஹா! காமதீயா! ஜகத்வந்தியா! ஜாக்ரதா திஸ்வரூபிணீ! பரமா! பரமேசானீ! பராநந்தா! பராபரணே! ஏகானேகஸ்வரூபா! ஸத்விதீயா! த்வயாத்மிகா! திரயீ! திரிவர்க் கநிலயா! துரீயா! துர்யபதாத்மிகா! பஞ்சமீ! பஞ்சபூதேசி! ஷஷ்டே! ஷஷ்டோபசாரீ! சப்தமீ! சப்தவாரேசி! சப்த சப்த வரப்ரதா! அஷ்டமீ! வசுநாதா! நவக்ரஹ மயிஸ்வரீ! நவராக களாரம்யா! நவசங்கியா! நவேசர்வரீ! தசமீ! தசதிக் பூஜ்யா! தசாஸ்யா! வ்யாபினீரமா! ஏகாதசாத்மிகா! ஏகாதச ருத்ரநிஷே விதா! ஏகாதசி திதிப்ரீதா! ஏகாதசகணஜிபா! துவாதசி! துவா தசபூஜா! துவாதசாதித்யஜன்மபூ:! திரயோதசாத்மிகாதேவி! திர யோதசகணப்ரியா! திரியோதசாபிதா பின்னே! விஸ்வேதேவாதி தைவதா! சதுர்த் தசேந்திரவரதா! சதுர்த்தச மநுப்ரசூ:! பஞ் சாதிக தசிவேத்யா! பஞ்சாதிக தசிதிதி:! சோடசி! சோடசபுஜா! சோடசேந்துகலாமயி! ஷோடசாத்மக சந்திராம்சு வியாப்ததிவ் யகளேபரா! (சந்திரனது பதினாறுகலையின் வியாப்தமான திவ்ய சரீரமுள்ளவளே) ஓ தேவேசி! நிர்க்குணே! தர்மசோதயே! என்று துதித்து விஷ்ணுமூர்த்தி உன்னல் நிரிக்கப்பட்டவராயி ருக்கின்றார். மதுகைடபர்களாகிய இவ்வசுரர்களோ மகா கோபத்

தேர்வுசெய்திருக்கிறார்கள். இவர்களைச்சங்கரிக்கப் பரமாத்மாவாகிய விஷ்ணுமூர்த்தியை நித்திரையினின்று எழுந்திருக்கச் செய்வாயாக வென்று பிரமன் வேண்டினன். அந்தத் தாமசிதேவியாகிய நித்திராதேவியானவள் கருணையுடையவளாய் அந்த விஷ்ணுமூர்த்தியை விட்டு நீங்கி அவ்வசுரர்கள்பாற்சென்று அவர்களை மோகிக்கச் செய்தனள். விஷ்ணுமூர்த்தி நித்திரையினின்று நீங்கி எழுந்திருந்து அசுரர்களைப்பார்த்து அவர்களோடு போர்புரிய வெண்ணி மஹா பராக்கிரமத்தோடும் ஐயாயிரம் வருடம் யுத்தஞ்செய்தனர். அங்ஙனஞ்செய்தும் அவர்கள் சாதலின்றி மேலிட்டு வருதலைக் கண்டு விஷ்ணுமூர்த்தி உபாயத்தாற் கொல்லக்கருதி அவர்களைப் புகழ்ந்து சந்தோஷமூட்டி எனக்கொரு வரங்கொடுக்க வேண்டு மென்றனர். அவர்கள் இவருடைய வஞ்சத்தை யறியாமல் அப்படியே தருகின்றோமென்றார்கள். அவ்விஷ்ணு இதுதான் நல்லசமயமென்றெண்ணி நீவிர் என்னால் இறக்கப்பட வேண்டுமென்று சொல்ல, அவர்கள் எங்களைச் சலமில்லாதவிடத்திற் கொல்லக் கடவாயென்று வரங்கொடுத்தனர். பின்னர் விஷ்ணுமூர்த்தி தன் தொடையின்மீது அவர்கள் தலைகளைவைத்துக் கொன்றனர்.

ஓ அரசனே! என்னால் சொல்லப்பட்ட தேவி மதுகைடபரை யழிக்கும்பொருட்டு பிரமன் தோத்திரஞ்செய்ய அக்காலத்தில் மஹா காளியாயும் சர்வ யோகேஸ்வ ரேஸ்வரியாயுந் தோன்றினளென்று அறியக்கடவாய். இனி மஹாலக்ஷ்மியின் உற்பத்தியைச் சொல்லுகின்றேன். (சு-ம் ஈச)

பதினோராம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

லப்யேதராயை நம:.

பன்னிரண்டாம் அத்தியாயம்.

மஹாலக்ஷ்மியுத்பத்தியாதி.

மூன்றிவர் கூறுகின்றார் :—மகிஷாசுரன் சகல லோகங்களையும் சகல நிக்பாலர்களையும் வென்று ஆண்டிருக்குஞ்சமயத்தில் தேவர்கள் பிரமதேவரை யழைத்துக்கொண்டு சங்கரரும் விஷ்ணுவும்

இருக்குமிடஞ்சென்று மகிஷனுடைய கொடுமைகளைக்கூறி அவனை வெல்லும் உபாயம் யாதென்று சிந்தாகுலப்பட, விஷ்ணுமூர்த்திக்கு அதிக கோபமுண்டாயிற்று. அதுபோலவே உருத்திரமூர்த்திக்கும் பிரமனுதி ஏனையதேவர்களுக்கும் அடங்காத கோபமுண்டாயிற்று. இவ்வாறு யாவரிடத்தும் உண்டாகிய கோபாக்னியானது ஒவ்வோரொளியாய் வெளிவரலாயிற்று. அவ்வொளிகளுள் ஆயிரம் சூரியப்பிரகாசமுள்ள சம்புவினொளி முகமாகவும், யமனுடைய ஒளி தலைமயிராகவும், விஷ்ணுவினுடைய ஒளி கைகளாகவும், சந்திரனொளி ஸ்தன்யங்களாகவும், இந்திரனொளி இடையாகவும், வருணனொளி முழங்கால்களாகவும், பூதேவியினொளி நிதம்பமாகவும், பிரமனொளி பாதமாகவும், சூரியனொளி கால்விரல்களாகவும், வசுக்கள் ஒளி கைவிரல்களாகவும், குபேரனொளி நாசியாகவும், பிரஜாபதியினொளி பற்களாகவும், அக்னியினொளி மூன்று நேத்ரமாகவும், சாத்தியர்கள்ஒளி இரண்டு புருவமாகவும், வாயுவின் ஒளி இரண்டு காதுகளாகவும் ஆயின. இவ்வாறு சகல தேவர்களுடைய தேஜோரூபங்களே ஒருருவாய் மகிஷனைச் சங்கரிக்க மஹாதேவி, மஹாலக்ஷ்மி யென்னுந் திருநாமத்துடன் தோன்றினள். பின்னர் சிவனுர் சூலமும், விஷ்ணுமூர்த்தி சக்கிரமும், வருணன் சங்கமும், அக்னி சக்தியும், வாயு வில்லும் பாணமும், இந்திரன் வச்சிரமும் ஐராவதம் கண்டாமணியும், யமன் காலதண்டமும், சூரியன் காந்திமாலையும், காலன் கடகம் கவசமும், சமுத்திரராஜன் ஹாரம் வஸ்திரம் குண்டலம் சூடாமணி தோள்வளை சர்ப்பாபரணம் அட்டிகை நூபுரமுதலியனவும், விஸ்வகர்மா மோதிரமும், ஹிமவான் நானவிதமான இரத்னங்களும் சிம்ஹமும், குபேரன் சுராபான பாத்திரமும், ஆதிசேடன் நாகஹாரமும் கொடுத்து மகிஷாசுரனைக் கொல்லவேண்டுமென்று போற்றி வாழ்த்தினர். தேவி சந்தோஷித்து கர்ச்சித்து மகிஷனோடு யுத்தஞ்செய்வதற்கு வர அவ்வசுரன் சிக்ஷுரன் துர்த்தரன் துன்முகன் பாஷ்கலன் தாம்பிரகன் பிடாலன் முதலானவர்கள் சூழ எதிர்த்துவந்து போர் செய்தனன். தேவி அவர்களையெல்லாம் நாசஞ்செய்து மகிஷனையும் பாசத்தினாற்கட்டி கத்தியினல் சிரசை வெட்டித் தொலைத்தனள். அதுகண்டு தேவர்களெல்லாம் போற்றி வாழ்த்தினர். இவ்வாறு மகாதேவி மகிஷனைக்கொல்ல மகாலக்ஷ்மியாய்த் தோன்றினளென்று அறிவாயாக.

புண்ணியசீலனாகிய அரசனே! இனி சரஸ்வதி தேவியினது உற்பத்தியைச்சொல்லுகிறேன். சும்பன் நிசும்பன் என்னும் இரண்டசுரர்களைக்கொல்ல ஹிமகிரியில் தேவரெல்லாந் தேவியைத் தியானித்து பக்தரது பீடையைத் தொலைக்க வல்லமையுள்ள தேவியே! தானவர்களைச் சங்கரிக்கும் உருவமுள்ளவளே! ஜராமரண வர்ஜிதையே! சர்வோத்கிருஷ்டையே! சர்வதேவர்களுக்கும் ஈஸ்வரியே! பக்திக்குச் சுலபமானவளே! மகாபல பராக்கிரமமுள்ளவளே! திரிமூர்த்திகள்முதலிய சகலதேவருடைய ஸ்வரூபியே! அளவில்லாத பராக்ரமமுள்ளவளே! முத்தொழில் செய்கின்றவளே! காந்தியைக் கொடுக்கின்றவளே! தாண்டவத்தில் பிரியமுள்ளவளே! சந்தோஷத்தைக் கொடுக்கின்றவளே! ஓமாதவீ! கருணைக்கடலே! தயை செய்வாயாக, நிசும்ப சும்பர்களுடைய பயத்தை நீக்கிவிடுவாயாக வென்று தோத்திரஞ்செய்ய தேவியின் கோசத்திலிருந்து கௌசிகையென்னுந் தேவிதோன்றித் தேவர்களைப்பார்த்து நான் அவ்வசுரர்களைக் கொன்றுவிடுகிறேன்; நீவிரஞ்சற்க என்றுகூறி பொன்மயமான குகையில் தூழைந்துவிட்டனள். சண்டன் முண்டன் இருவரும் அவ்வம்பிகையைப் பார்த்து சும்ப நிசும்பர்களிடம் சென்று நாங்கள் ஒரு ஸ்திரீரத்னத்தைப் பார்த்தோம். அவள் உன் சம்போகத்துக்குரியவள். அவளைப்போலும் ஒருஸ்திரீ மூன்று லோகத்துங்கிடையாது என்று சொல்ல; அவன் சுக்கிரீவனைத் தூதாகத் தேவியினிடம் அனுப்பினன். அவன் தேவியினிடஞ் சென்று சும்பனுடைய பிரபாவங்களில் ஒன்றேனும் விடாமற்கூறி நீ அவனுக்கு மனையாட்டியாவாயென்றான். தேவி நீசொல்வது வாஸ்தவந்தான்; ஆனால்எனக்கொரு பிரதிக்ஞையுண்டு. அஃதாயாதெனில் எவன் என்மதத்தையும் பலத்தையும் போக்குவானோ, என்னெதிரில் எவன்நின்று யுத்தஞ்செய்வானோ அவன் என்னை மணவியாக அனுபவிக்கவேண்டும் என்பதேயாம். இவ்வாறு உங்கள் அரசனே நீ யுத்தஞ்செய்யச் செய்வையாயின் என் பிரதிக்ஞையை நான் மூடித்தவிடுவேன் என்று கூறியனுப்பினள். அவன் அப்படியே அவனுக்குக்கூற அவன் கோபங்கொண்டு தூம்பரனென்பவனைப்பார்த்து, ஓ தூம்பரனே! இந்தச் சுக்ரீவனால் சொல்லப்பட்டவளிடம் சென்று அவள் தலைமயிரைப் பிடித்திழுத்துக் கொண்டு சீக்கிரம் வருவாயாகவென்று ஏவினன். அவன் அறுபதினாயிரம் சேனையோடுசென்று தேவியைப்பார்த்து எங்கள் எஜமா

னனை நீ புருஷனாக அடைவாய்; இல்லாவிடில் உன் மயிரைப்பிடித் திழுத்துப் போவேனென்றான். தேவி அப்படியே செய்வாய் என்று நகைத்துக்கூறி ஓர் ஹுங்காரஞ்செய்து அவனைக் கொன்றனள். அவன் சேனைகளை அவளது ஊர்தியாகிய சிம்ஹங்கொன்று விட்டது. இதனைக்கேட்ட சும்பன், சண்டன் முண்டன் இரக்த பீஜன் என்னும் இவர்களை முறையே யேவினன். அவர்களைத் தேவி சூலத்தினால் கொல்லப் பின்னர் சும்பநிசும்பர்கள் போருக்கு வந்து நீண்டகாலம் யுத்தஞ்செய்து மாண்டார்கள். பின்னர் தேவரெல்லாம் போற்றி வாழ்த்தினர். ஓ அரசனே! மஹாதேவி சும்பநிசும்பர்களைக் கொல்ல மஹாசரஸ்வதி திருவுருவங் கொண்டனளென் றறிவாய். இதுகாறும் முத்தேவிகளின் உற்பத்தியுங் கூறப் பட்டதென்க.

பராவரேஸ்வரியான தேவி சர்வலோகத்தையும் முத்தொழிற் படுத்தி அவரவர் வேண்டுவனவான கோரிக்கைகளைக் கடாக்ஷிக்கின்றாள். ஆகையால் ஜகன்மோஹினியாகிய அவளையடைவாய். அவள் உனது காரியத்தை நிறைவேற்றுவா ளென்றுசொல்ல, அரசன் முனிவர் வார்த்தையைக் கேட்டுச் சகலத்தையுங் கொடுக்குந் தேவியைச் சரணடைந்தவனுயெண்ணி நிராகாரனுய் மனமடங்கினவனுய்த் தேவியைத் தியானிக்கின்றவனுய் மிருத்திகையினால் தேவியைத் தாபித்து பக்தியோடு பூஜித்துவந்தனன். பூஜைமுடிவில் தன் சரீரத்திலிருந்து உதிரத்தை யெடுத்துப் பலிகொடுத்தான். தேவி சந்தோஷித்து பிரத்யக்ஷமாய் வேண்டியதைக் கேளென்றாள். அரசன் தன் அஞ்ஞானநாசத்தையும் உத்தமமான ஞானத்தையும் சத்ருபாதையில்லாத இராஜ்யத்தையுங்கேட்டனன். தேவி ஓ அரசனே! இச்சன்மத்திலேயே நீ வேண்டியதைத் தந்தேன். மறுசன்மத்தில் சூரியனிடத்திலிருந்து சாவர்ணி மநுவாகவும் அந்த மநுவந்தரத்துக்கு நீயே பிரபுவாகவும் ஆகப்போகிறாய்; அதிகமான சந்ததியும் அடையப்போகிறா யென்றுகூறி மறைந்தனள். அவனும் பிறகு தேவி அனுக்கிரகித்தபடியே மநுவாயினன். மஹரிஷிகாள்! நீவிர் வேண்டியவாறு சாவர்ணிமநுவின் விருத்தாந்தங் கூறினேன். இதைப் படிப்பவரும் கேட்பவரும் தேவி அநுக்கிரகத்துக்குப் பாத்திரமாவார்களென்று அறிவீர்களாக. (சு - ம் - கூ)

பன்னிரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

உ

லப்தசக்தி சுலபாயை நமஃ.

பதின்மூன்றாம் அத்தியாயம்.

அவசிஷ்டஷண்மநு விருத்தாந்தகதனம்.

நாராயணர் கூறுகின்றார்:—ஓ நாரதரே! விசித்ரமான மற்ற மநுக்களுடைய சரித்திரங்களையுஞ் சொல்லுகிறேன். அவைகளைக் கேட்டமாத்திரத்தில் தேவிபக்தி யுண்டாகும். கரூஷன் ப்ரஷத்ரன் நாபகன் த்ருஷ்டன் சரியாதி திரிசங்கு என்று வைவஸ்வத மநுவுக்கு மகாபலசாலிகளாகிய ஆறுபுத்திரர்க ளிருந்தனர். இவர்கள் உத்தமமான காளிந்திநதிக்குச் சென்று நிராகாரராய் வெவ்வேறாக மஹீமயீ மூர்த்தியாகிய தேவியைத் தாபித்து நானாவிதமான உபசாரத்தால் பூசித்தும், சருகு சலம் வாயு புகை காந்தி முதலியவைகளைக் கிரமமாய்ப் புசித்துந் தவம்புரிந்துவர, இவ்விரண்டு வகையான சாதனத்தால் அரிய நிர்மலமான புத்தியுடையவர்களாயும் அவ்வறிவால் சர்வமோக விநாசினியாகிய தேவியினது திருவடியை விட்டுநீங்காத சிந்தனை யுடையவர்களாயும் அச்சிந்தனாவிசேடத்தால் பரமாத்மாவைவிட்டு இவ்வுலகெல்லாம் இல்லை என்கிற ஞானமுடையவர்களாயும் பன்னிரண்டாண்டு தவம்புரிந்து வந்தனர். ஓ மஹேஶ்வரீ! ஈசானீ! ஜயஜய! கருணாலயே! வாக்பவாராதன ப்ரியே! வாக்பவப்பிரதிபாதிதே! க்லீங்கார விக்ரகே! தேவீ! க்லீங்கார ப்ரீதிதாயினீ! (க்லீங்காரத்தினாலே பிரீதியைக் கொடுப்பவளே) காமராஜ மனோமோததாயினீ! (காமராஜ மந்திரத்தினால் மனதுக்குச் சந்தோஷத்தைக் கொடுப்பவளே) ஸ்வரதோஷிணீ! (ஸ்வரத்தில் சந்தோஷப்படுகின்றவளே) மகாமாயே! மோதபரே! (சந்தோஷத்தையே ப்ரதானமாக உள்ளவளே) மகா சாம்ராஜ்யதாயினீ! விஷ்ணுர் அர்க்க ஹர சக்ரா ஸ்வரூபே! (விஷ்ணு சூரியன் உருத்திரன் இந்திரன் இவர்கள் சொரூபமாக விருக்கின்றவளே) போகவர்த்தினீ! (போகத்தை விருத்தி செய்கிறவளே) ஜயஜய! என்று துதிக்க, தேவி மலர்ந்தமுகத்துடன் அரசகுமாரர்களைப் பார்த்து ஓ மஹான்களே! நீவிர் நிஷ்கல்மஷமான சித்தத்தோடு என்னைத்தியானித்து உபாசித்துச்செய்த தவத்

தினுல் சந்தோஷமடைந்தேன். நீங்கள் மனதில் எண்ணியிருக்கும் அபிஷ்டங்களைக் கொடுப்பதற்கே நான் பிரசன்னமா யிருக்கின்றே னுதலால் அவற்றைக் கேளுங்களென்றுள். அக்குயாசர்கள் ஓதேவி! சத்துருபாதையில்லாத ராஜ்யமும் நெடுங்காலம்ஜீவித்திருக்கும் சந்த தியும் இடையேயழிவெய்தாத போகமும் காந்தியும்கீர்த்தியும் பத்தி யும் ஆகிய இவையெல்லாம் எக்காலத்தும் நீங்காமலிருக்கச் செய்வது வே எங்கட்கு இதமான வரமாகுமென்றுர் பரமேஸ்வரி நீங்கள் வேண்டியபடியே தீர்க்கசந்ததியும் தீர்க்கசம்பத்தும் !தீர்க்கானுபவ மும் தீர்க்கலாபமும் தீர்க்க ஐஸ்வர்யமும் தேஜஸும் எனது அநுக் கிரகத்தாற் கிரமமாய்ப் பெறலதுமன்றி நீங்கள் மன்வந்தரங்களுக்கும் அதிபதிகளாக விருக்கக்கடவீர்களென்று பிராமரியாகிய ஜகதம்பிகை திருவாய்மலர்ந்து மறைந்தனள். இவ்வாறுவரம்பெற்ற அவ்வுத்தம மான இராஜபுத்திரர்கள் அச்சன்மத்தில் அகண்ட பூமண்டலாதி பதி களாய் மஹாபோகானுபவ புருஷர்களாய் சந்ததிப் பெருக்குடைய வர்களாய் வாழ்ந்து மறுமையில் சாவர்ணி யென்னும் பட்டப்பெய ருடைய மநுக்களாயினர்.

இனி அம்மநுக்கள்வந்த முறைமையைக் கூறுகின்றேன்:—தா கூஷசாவர்ணி என்பவன் ஒன்பதாம் மநுவாயும், மேருசாவர்ணி என் பவன் பத்தாம்மநுவாயும், சூர்யசாவர்ணி என்பவன் பதினேராம் மநுவாயும், சந்திரசாவர்ணி என்பவன் பன்னிரண்டாம் மநுவாயும், ருத்ரசாவர்ணி என்பவன் பதின்மூன்றும் மநுவாயும் விஷ்ணுசா வர்ணி என்பவன் பதினான்காம் மநுவாயுமாயினர். இவரெல்லாம் பிராமரியினுடைய அநுக்கிரகத்துக்குப் பாத்திரர்களாகவும் அவளு டைய ஆராதனத்தை மறவாதவர்களாகவும் மஹாபல பராக்கிரம சாலிகளாகவும் யாவராலும் போற்றத்தக்கவராகவு மிருந்தனரென் றுர்.

இதனைக்கேட்ட நாரதமுனிவர் ஓ ஐயா! பிராமரியென்னுந் தேவி யார்? அத்தேவியுண்டான காரணமென்ன? அவ் வம்பிகை யெப்படி யிருப்பாள்? சோகநாசமாயும் விசித்திரமாயு முள்ள அச் சரிதையைச் சொல்லுமென்று கேட்க வியாசர் கூறுகின்றுர்:— ஓ நாரதனே! தம்மக்களிடத்துக் காரணங்கருதாது தாய்க்குண்டாகும் இரக்கத்தைப்போல் அம்பிகை கருணையினுற்கொண்ட அத்தப் பிரா ரி தேவியினுடைய திருவுருவ வரலாறு முதலியவற்றைக் கூறுகின் றேன் கேட்பாயாக:—

பூர்வம் அருணன் என்னும் அசுரன் மஹா பலசாலியாய்த் தேவர்களிடத்துத் துவேஷமுடையவனுய் பாதலத்தில் தன்னினத்தவர் வசிக்கும் ஸ்தானத்திலிருந்து சிலநாள்களித்து தேவர்களோ யழிக்க வேண்டுமென் றெண்ணி இமயமலையை நோக்கிச் சென்று கங்கைக் கரையில் ஓர் பர்னசாலை யமைத்துக்கொண்டு அதிலிருந்து காயத்திரியை ஜபித்துப் பதினுயிரம்வருடம் ஜலபானஞ்செய்தும், பதினுயிரம் வருடம் வாயுபட்சணஞ்செய்தும், பதினுயிரம் வருடம் யாதுமின்றி நிராகாரனுயிருந்தும் தவம்புரியும்போது அவன் சரீரத்தினின்றும் ஓர்க்கினி எழுந்து ஸகலலோகத்தையும் பஸ்மீகரப்படுத்திற்று. அப்போது தேவர்களெல்லாம் இதுவென்ன வென்று நடுக்கமுற்று பிரமனிடஞ்சென்று சரணடைந்து தங்கட்குண்டாகிய நடுக்கத்தைக் கூற, பிரமதேவன் அதனைக்கேட்டு காயத்திரி தேவிசமேதனுப் அண்ணவாகனனுடனுப் அவ்வசுரனிடஞ்சென்று அசுரன் சரீரத்தில் பிராணன்மாத்திர மிருப்பதையும் சரீரமெல்லாம் ஓட்டை ஓட்டையாயிருப்பதையும் வயிறு உலர்ந்திருப்பதையும் கண்கள் தியானநாட்டத்தோடிருப்பதையும் இரண்டாவது அக்கினிபோல் பிரகாசிப்பதையும் பார்த்து ஓ குழந்தாய்! என்னவரம் வேண்டும் கேளென்ன அவன் கண்ணைத்திறந்து காயத்திரியோடும் நான்குவேதங்களோடும் கமண்டலம் செபமாலை இவைகளுடன் பிரமசொரூபமாகப் பிரகாசிக்கின்ற பிரமனைப்பார்த்து எழுந்து நமஸ்கரித்துப் போற்றி ஓ பிரம தேவரே! யான்மரணமடையா திருத்தல் வேண்டுமென்று உம்மைப் பிராத்திக்கின்றே னென்றுன். பிரமன் அவனை இனிது நோக்கி ஓ அசுரனே! யான்முதலாகச் சொல்லப்பட்ட விஷ்ணுவாதி சகல தேவர்களும் மரணத்துக் குட்பட்டுள்ளாமென்றுல் ஏனையோர்க்குச் சொல்லவேண்டுமா ஆகையால் என்னுல் கொடுக்கக்கூடுமான\வரமெதுவோ அதனைக்கேட்பாயாக நீ புத்திகாணுகலின் கோபங்கொள்ளற்க என்றுன். அசுரன் ஓருட்டிகர்த்தாவே! எனக்கு யுத்தத்தாலும், அஸ்திரசஸ்திரங்களாலும், புருஷர்களாலும், ஸ்திரீகளாலும், இரண்டுகால் நான்குகாலுள்ள சேந்துக்களாலும்மரணமுண்டாகாமல் வேறெந்த விதத்தினுலாவது மரணம்வந்தால் வருக; இப்போது தேவர்களையெல்லாம் வெல்லுதற்கான அளவில்லாத பலத்தைக் கொடுப்பாயாகவென்று கேட்டனன். அப்படியே யாகுகவென்று கூறித் தன்னிடம் போயினன். பின்னர் அசுரன் கர்வமடைந்து பாதாளத்திலிருக்கும் அசுரர்களையெல்லாம் வெளியே யழைத்துவந்து ஒருவனை நோக்

ஈரீ அமராவதிக்குச்சென்று இந்திரனைக்கண்டு யான்யுத்தத்தை விரும்பியுள்ளேனென்று சொல்வாயாகவென்று தூதனுப்ப அவன் அதுபோல் சென்று இந்திரனுக்குச்சொல்ல அதனைத்தே வேந்திரன்கேட்டுப் பயமுற்றுப் பிரமதேவரையடைய அவரும் விஷ்ணுவினிடம் போக அவரும் பிரமனுதியர்களோடு ருத்திரரிடம்போய் ஆலோசித்தனர். இவர்கள் செய்தி யிங்ஙனமிருக்க, அசுரன் சுவர்க்கலோகத்துக்குத் தூதனுப்பியபின் சூரியன் யமன் அக்னி முதலானவர்களை யோட்டித் தானே அவ்வவர்களைப்போல் உருக்கொண்டு அவ்வத்திக்குகளிலிருந்து மூவுலகையும் ஆண்டுவந்தனன். சூரியன் முதலானவர்கள் கைலைக்குச்சென்று சிவபெருமானைச் சரணடைந்து தத்தம் குறைகளைக் கூறும்பொழுது தேவர்கள் மிகவும் வருத்தமுற்று அந்தோ ! அவன் யுத்தத்தினாலும் அஸ்திர சஸ்திரங்களினாலும் விலங்கு முதலியன வற்றாலும் மரணமடையாத வரத்தைப் பிரம்மாவினிடம் பெற்றிருக்கின்றனனே நாங்கள் என்செய்வோமென்று ஏங்குங்கால் "நீங்கள் தேவியையடையுங்கள்; அவள் உங்களிஷ்டத்தைப் பூர்த்தி செய்வாள் ; அசுரன் செய்யும் காயத்திரி ஜபத்தைச் செய்யாது விடுவானுனல் மிருத்யுவுக் காளாவான் " என்று அசரீரிவாக்குண்டாயிற்று. அவ்வாக்கை இந்திரன்கேட்டு அக்கணமே தன்னுரியரை அழைத்துஎன்னுரியரே! தேவர்கள்படுந் துன்பத்தைத்தேவரீரறிவீரன்றே, அதனையொழிப்பார் தேவரீரன்றி யாவருள்ளார், ஆகலான் எங்களை வருத்தும் அந்த அருணன் என்னும் அசுரனிடஞ்சென்று அசரீரிவாக்கின்படி அவன் தேவிகாயத்திரி ஜபத்தைச் செய்யாமலிருத்தற்கு எவ்விதஞ் செய்யவேண்டுமோ அவ்விதஞ் செய்யும், நாங்களும் தியானயோகத்தினால் தேவியைப் பிரார்த்திக்கின்றோம். அவள் உமக்கு அங்கு சகாயஞ்செய்வாள், என்று கூறி ஜாம்பூநதேஸ்வரியை யடைந்து மாயாபீஜத்தை ஜெபித்துப் பூஜையில் ஆவலுள்ளவர்களா யிருந்தனர். தேவகுருவும் அக்கணமே அருணனிடம்போக அசுரன் அவரைப்பார்த்து ஓ முநிவரே ! நீர் என்வந்தீர் ? உம்மிடத்தில் நான்பிரீதிவைத்தவனல்லவோபிரீதிவைத்தவன்என்சத்ருவல்லவா எனக்கூறத்தேவகுரு,ஓ அசுரனே! என்னால்பூசிக்கப்பட்டதேவியைநீ பிரதிதினம் பூஜித்து வருகின்றதனால் நீ என்னிடம் பக்ஷம் வைத்தவனல்லவோ ? ஆகலான் நான் உன்னை பார்க்க வந்தேன் என்றார் அவ்வொரு சொல்லானே அசுரன் மகிழ்ந்தவனுப் தான்செய்துவரும் ஜபவிசேடத்தை யெண்ணிச் செருக்குற்றான். அதனாலும் தேவமாயையினாலும் பரமமந்திரமான திரிபாகஜபத்தை மறந்

தனன். மறக்கவே அவன்பாலுள்ள தேஜஸும் ஒழிந்துபோயிற்று. தேவகுரு தான்வந்த கார்யம் முற்றுப்பெற்றதென்று இந்திரனிடம் போய்ச்சொல்ல அவன் சந்தோஷித்து மஹேஸ்வரியைத் தேவர்களோடு பூசித்துவந்தனன். அனேககாலங் கழித்தபின் ஒருநாள் உலகமாதாவாயும் உலகங்கட்கெல்லாம் மங்களத்தை கொடுப்பவளாயும் சகலவேதங்களாலும் புகழ்பட்டவளாயும், சர்வாத்மிகையாயும் சர்வஜநியாயும் சர்வேஸ்வரியாயும் கோடிசூரியப்பிரகாசையாயும் கோடிமன்மத சௌந்தரியமுடையவளாயும் விசித்திரமான சந்தனப்பூச்சுடையவளாயும் விசித்திரமான வண்டுகள் மொய்த்திருப்பதாபாலுள்ள நவமணிமாலைகளைத் தரித்தவளாயும் அதுபோலவே பலவிசித்திரமான வண்டுகளோடு கூடின புஷ்பமாலையைத் தரித்தவளாயும் அளவில்லாத பெண்வண்டுகள் ஹ்ரீம் என்கிற மந்திரவைப் பக்கத்துக்குக் கோடிகோடி சத்தித்துக்கொண்டு தொடர்ந்து வரப்பட்டவளாயும் சிங்காரவேஷங்களெல்லாம் நிறையப்பெற்றவளாயும் வரதாபமுடையவளாயும் சாந்தையாயும் கருணைபூர்த்த சாகரையாயும் சர்வவேதங்களாலும் எடுத்தாளப்பட்டவளாயும் சர்வாத்மிகையாயும் சர்வமங்கள ரூபிணியாயும் சிவையாயும் எல்லாமாயுமுள்ள தேவி பிரசந்நமாயினள். அத்தேவியை சகல தேவர்களுஞ் சந்தோஷம்நிறைந்த மனத்துடன் களிப்போடுங்கண்டு வணங்கித் துதிப்பாராயினர்:— ஓ தேவியே! ஓ மகாவித்யா ஸ்வரூபிணியே! சிருஷ்டி திதிலயங்கட்குக் காரணியே! உனக்கு நமஸ்காரம். தாமரைப்பூபோன்ற கண்ணுடையவளே! உனக்கு நமஸ்காரம். சகலத்துக்கும் ஆதாரமாக விருக்கின்றவளே! உனக்கு நமஸ்காரம். விஸ்வ தைஜஸ பிராக்ஞையாயும் விராட் சொரூபிணியாயும் சூத்ராத்மிகையாயும் இருப்பவளே! உனக்கு நமஸ்காரம். அவ்யாக்ருத சொரூபிணியே! கூட்ஸ்தரூபிணியே உனக்கு நமஸ்காரம். ஹேதுர்க்காதேவியே! சிருஷ்டித்பிலகப்படாதவளே! துஷ்டரைச்சங்கரிக்கின்றவளே! சரீரமில்லாதவளே! பிரேமகம்பிபமானவளே! பர்க்கஸ்வரூபிணியாகிய தேவியேஉனக்கு நமஸ்காரம். ஸ்ரீ காளிதேவியாகிய தாயே! உனக்கு நமஸ்காரம். நீல சரஸ்வதியே! உனக்கு நமஸ்காரம். பயங்காமானகருவிழியுள்ளவளே! உனக்கு நமஸ்காரம். பயங்காமான ரூபமுள்ளவளே உன்னை தினந்தோறும நமஸ்காரஞ் செய்கிறோம், பீதாம்பாதாரீ! திருபுரசுந்தரீ! பைரவீ! மாதங்கீ! தூமாவதீ! உனக்கு நமஸ்காரம். அறுபட்ட தலையுள்ளவளே! பாற்கடலின்கண் வீற்றிருக்குங்கன்னீ! சாகம்பரீ! சக்ததந்தமுள்ளவளே! உனக்கு நமஸ்காரம். நிசும்ப சும்பர்களைச்

சங்கரித்தவளே ! ரக்தபீஜனே நாசஞ்செய்தவளே ! தூம்பரலோசனனே நாசஞ்செய்தவளே ! விருத்திராசுரனேச்சங்கரித்தவளே! சண்டமுண்டாதி தானவர்களைச் சங்கரித்தவளே ! சிவே ! உனக்கு நமஸ்காரம் ! விஜயே ! கங்கே ! சாரதே ! பிருத்வீரூபே ! தயாரூபே ! தேஜோரூபே உனக்கு நமஸ்காரம். பிராணரூபே ! மகாரூபே ! பூதரூபே ! உனக்கு நமஸ்காரம். விஸ்வமூர்த்தேதயாமூர்த்தே தர்மமூர்த்தேநமோநம : ஜ்யோதிர்மூர்த்தே தேவமூர்த்தே ஞானமூர்த்தே உனக்கு நமஸ்காரம். காயத்ரீவரதே ! தேவீ ! சாவித்ரீ! சரஸ்வதீ சுவாஹே! சுவதே ! தக்ஷிணே ! உனக்கு நமஸ்காரம் என்று கூறி எந்தத்தேவி சகல வேதங்களாலும் அகப்படவில்லை அகப்படவில்லை யென்று சொல்லப்படுகின்றளோ அப்படிப்பட்ட தேவியைப் பிரத்யக்ஷமாய்க் கண்டோமல்லவா ? பிரமங்களால் சூழப்பட்டிருப்பதனால் பிராமரியென்று சொல்லப்படுகின்ற உன்னை நித்தியம் நமஸ்கரிக்கிறோம். உன்னை இருபக்கத்திலும் நமஸ்கரிக்கிறோம். முன்னும் பின்னும் நமஸ்கரிக்கிறோம் மேலுங்கீழும் நமஸ்கரிக்கிறோம் எல்லாவிடத்து நமஸ்கரிக்கிறோம். மணித்வீபத்தில் வசிக்கின்ற மகாதேவியே! அகிலாண்டகோடி பிரஹ்மாண்டநாயகியே ! ஜகன் மாதாவே ! தயை செய்வாயாக. பராத்பரையே ! சகலபுவனத்துக்கும் ஈஸ்வரியே ! உத்தமத்துக்செல்லாம் உத்தம மானவளே! ஜய ! சிறந்த கல்யாண குணத்துக்கு ஸ்தானமாகவிருக்கின்றவளே ! புவனேஸ்வரியே ! பரமேஸ்வரியே எங்கட்குபிரசன்னமாவாய்என்றனர் இவ்வாறு துதிக்கிற தேவர்கள் துதியைக்கேட்டு லோகமாதாவானதேவி குயிலொலித்தலைப்போலும் தேவர்களைப்பார்த்து ஓ தேவர்களே ! நீங்கள் வேண்டும் வரங்களைக் கொடுக்க சித்தமாயிருக்கின்றோம் கேளும் என்றுள். தேவர்கள் தாங்கள்படும் துக்கத்துக்குக் காரணமான அசுரன் செய்தியைச்சொல்ல, தேவிகேட்டுத் தன் திருக்காங்களி லிருக்கும் பிரமாங்களையும் தன்னை எப்பக்கத்துஞ் சூழ்ந்திருக்கும் பிரமகளையும் நாஞவிதரூபமெடுக்கச்செய்து அவைகளை அசுரனிடம் ஏவினள். அவ்வண்டுகள் மூவுலகமும்நிறைந்துகுருவிக்கூட்டங்களைப்போல் தொகை தொகையாகப் புறப்பட்டு ஆகாயமுற்றுமறைத்து பூமியிலிருளுண்டாக்கி எங்கும் பிரமரமயமாய் ஜனங்களெல்லாம் பிரமித்து ஆச்சரியமடையச்செய்து இராக்கதக் கூட்டங்கள் எங்கெங் கிருக்கின்றனவோ அங்கங்குஞ் சென்று அவர்கள் மார்பைத்துளைத்து அங்கங்கே மரணமடையச்செய்தன. அந்தோ ! பாணங்கள் மார்பைத்துளைப்பதுபோல் வண்டுகள் துளைத்ததை நோக்குங்கால் யுத்தமுகத்தில்

வீரர்களாலும் செய்தற்கரிது. அன்றியும் யுத்த முகத்தில் வீரர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும் பேச்சில்லாமலே ஒருக்ஷண காலத்தில் சகலரிடத்தும் மரணவோசையுண்டாய்விட்டது. பின்னர் பிரமரங்கள் அசுரர்களை முடித்து விட்டு தேவியினிடம் போய்ச்சேர்ந்தன. இதனைக்கண்ணுற்ற அமரரெல்லாம் ஜகன்மாதாவின்செயல் என்ன ஆச்சரியம் என்ன ஆச்சரியம் என்றதிசயித்துச்சந்தோஷசாகரத்தில் மூழ்கிப் பிரமராம்பிகையை நானுவித உபசாரங்களாலும் திரவியங்களாலும் பூஜித்து ஜபசப்தத்தோடு புஷ்பத்தை வாரிவாரித் திருமேனியின் மேற்றூவி துந்துபிமுதலிய வாத்தியங்களைமுழக்கி அப்சரஸ்திரீகளை நடிக்கச்செய்தனர். முனிவர்களெல்லாம் வேத கோஷஞ்செய்தனர். கந்தர்வர்கள் மிருதங்கமுதலிய வாத்தியங்களை வாசித்தனர். மணி சங்கு முதலியவற்றின் துவனிகள் மூன்றுலோகமும் நிறைந்தன. ஏனவரெல்லாம் நானுவித தோத்திரஞ் செய்து சிரமீது கைகளைக்கூப்பி ஜயமாதா! ஜயஈசானீ! என்று பிரதாபங்கள் கூறினர்.

இவ்வாறு யாவரும் செய்புஞ்செயலைத் தேவிகண்டு சந்தோஷமடைந்து ஒவ்வொருவருக்கும் வரமளித்து அவரவர்களால் பிரார்த்திக்கப்பட்ட தன் பக்தியையும் நெரித்து மறைந்தனள். ஓ முனிவீர! பிரமரி சரித்திரம் நீர் விரும்பியவண்ணஞ் சொன்னேம். இதனைப் படிப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும்சகலபாவமும்நாசமாம். கேட்டமாத்திரத்தில்ஆனந்தத்தையும் பின்சம்சாரநாசத்தையும் உண்டாக்கும். இதுவேபுமன்றி இத்தஸ்கந்தத்தில் சகலமநுக்கள் சரித்திரமும் சொல்லப்பட்டது. தேவிமகாத்மியத்தைப் படிப்பவர்களும் கேட்பர்களும் பயங்களினின்றும் விடுபட்டவர்களாய்த் தேவிசாயுச்சியமடைவார்கள். (சு 1ம்—கஉஎ)

கந்தம் அத்தியாய முற்றிற்று.

ஆக அத்தியாயம் கந - க்குச் சுலோகம் (நியசு.)

ஆகஸ்கந்தம் (கம்) க்கு அத்தியாயம். உஅம்.
ஸ்லோகம். (கநிகஎந)
பத்தாவது ஸ்கந்தம் முற்றிற்று.

ஓ

லாங்கலாயுதாயைநமஃ

தேவீபாகவதம்.

பதினொன்றும் ஸ்கந்தம்.

முதலாம் அத்தியாயம்.

சதாசார விதிக் கிரமம்

காஞ்சீ ரத்நவிபூஷாம் காமபிகந்தர்ப்ப ஸுதிகா பாங்கிம்பர மாங் களாமுபாஸே பரசிவ வாமாங்க பீடிகாஸீம்நாம்.

நாரதமுனிவர் கூறுகின்றார்;—ஓநாராயணரே!ஓரக்ஷகமூர்த்தியே! உம்மால் சொல்லப்பட்ட தேவியினது சரித்திரங்கள் மிகவும் ஆச்சரியகரமாயும்மீபரமோத்தமமாயும் இருக்கின்றன.இப்பொழுது சொல்லிவந்த சரித்திரங்களில் தேவியினது அவதாரவிசேடங்கள் தேவர்களுடைய பிரார்த்தனைக்கீடாக அசுரர்களைச் சங்கரிப்பதற்காகக்கொண்ட கோலங்களென்றும் அவரதுசகலாதிகார பிரபுத்வ விசேடங்களெல்லாம் உயிர்களிடத்துவைத்த பூரணகிருபையென்றும் வெளியாயிற்று. ஓநாராயணரே! பக்தர்களிடத்து கருணைகூரியாகிய தேவி எந்தச்செய்கையில் சந்தோஷமடைந்து அதுக்கிரகிப்பாள்? அவளுக்கு எப்பொழுதும் பிரியமாயுள்ளது எது? அந்த ஆசாரத்தைச் சொல்லுமென்றுகேட்க நாராயணர் கூறுகின்றார்:—

ஓ தத்வக்ஞராகிய நாரதரே! விதிக்கிரமமாயுள்ள சதாசார அநுட்டானமே தேவிக்கு எப்பொழுதும் பிரீதியாயுள்ளது. ஆகலான் அஃதொன்றே போதுமான சாதனமென்றறிவாய்.எந்தஆசாரங்களையும் நடத்திக்காட்ட வேண்டியவன் பிராமணனுகையால் அவன் தனக்கென்று ஏற்பட்ட கர்மாநுஷ்டானங்களை காலையி

லெழுந்து செய்யவேண்டும். அவனப்படிச் செய்தால்தான்உபகார மாகும். உதயமுதல் அஸ்தமிக்கிறவரையில் எந்தெந்த கர்மங்கள் தனக்கு விதிக்கப்பட்டிருக்கின்றனவோ அவற்றையேஅவன்செய்ய வேண்டும். வேறொன்றுஞ் செய்யலாகாது; அக்கர்மங்கள் நித்தியம் நைமித்திகம் நிந்திக்கப்படாதகாமியம் எனச்சொல்லப்படும். அவற் றால் தன் (ஆத்ம) க்ஷேமத்தை விருத்திசெய்துகொள்ள வேண்டும்.

தாய் தந்தை புத்திரன் புத்திரி மனைவி ஞாதி இவரெல்லாம் இம்மூவித கர்மங்களைப்போலும் ஆத்மக்ஷேமத்தைச் சிறிதேனும் விருத்திசெய்யமாட்டார்கள். ஆகையால் அம்மூவகையான சத்கர் மங்கள்தான் சகாயமாயும் நாடோறும் ஏறும் சஞ்சிதத்தைத் தடுப் பதற்கு சாதகமாயும் உள்ளவை. இக்கர்மானுஷ்டான மில்லாமற் போனால்கடத்தற்கரியஅஞ்ஞானந்தகாரத்தை ஒருவிதத்துங்கடக்க முடியாது. ஆசாரமென்பதும் இதுவே. இவைதான் பிரதமதர்ம மென்றுசொல்லப்படும். அதுசுருதியுக்ததர்மமென்றும், ஸ்மிருதியு க்ததர்மமென்றும இருவகைப்படும். சுருதியினாலும் சுருதிசம்பந்த மான ஸ்மிருதியினாலுஞ்சொல்லப்பட்டவைதான் மிகவுஞ்சிறந்தன. ஆகலான் அவ்விரண்டையுமே அந்தணன் உரிமையாகக் கைக்கொ ண்டு தினந்தோறும். ஆசாரதருமத்தில் ஆவலுள்ளவனா யிருத்தல் வேண்டும். ஏனெனில் ஆசாரமே சகலசுபங்கட்கும் காரணமா யுள் ளது,ஆயுள்விருத்திசெய்வது, சந்ததிப்பெருக்கையுண்டாக்குவது, குறைவின்றி எக்காலத்தும அன்னத்தைக்கொடுப்பது, பாபத்தை நாசஞ்செய்வது, இகபரங்களில் மிக்கசுகத்தை யுண்டுபண்ணுவது, அஞ்ஞானத்தால் மோஹிக்கப்பட்ட ஆத்மாக்களுக்குத் தருமரூப மான ஒரு மகா தீபமாயுள்ளது, முக்திமார்க்கம் இதுவாமென்று காட்டுவது, சிரேஷ்டத்தன்மையை விளைவிப்பது, சத்கருமமும்சத் கருமத்தால் ஞானமும் உண்டாகுவது, ஆகலான் ஆசாரந்தான் சிறந்தது;இதனினுஞ்சிறந்தது ஒன்றில்லை. இவ்வண்ணமேமநுவினு ங்கூறப்பட்டுள்ளது. எல்லாவற்றிற்கும் ஆதாரமாயுள்ள ஆசார மொன்று இருக்குமானால் எல்லாப்பொருளையும்எளிமையாயடைய லாம்.எந்தப்பிராமணன் ஆசாரமில்லாமலிருக்கின்றானே அவன்சூத் திரனைப்போல வெளியில்ஒதுக்கிவைக்கத்தக்கவன். ஏனெனின் ஆ சாரமுடைமையே பிராமணத்துவமும் அஃதின்மையே சூத்திரத் துவமும் ஆகலான்சாதியினால் சமமாகக் கொள்ளுதல்கூடாது.சூத்

திரனெப்படியோ அப்படியே அவனும். ஓநாரதரே! இப்பொழுது சொல்லிவந்த ஆசாரமானது சாஸ்திரீயமென்றும் லோகரீதி என்றும் இரண்டுவிதமாம். சாஸ்திரீயமானதர்மம் அறியாதவன்லோகரீதியானதருமத்தை யறிந்து அவ்வழி நிற்றல்வேண்டும். சுகத்தைக்கோரத்தக்கவன் இவ்விரண்டிலொன்றை அநுட்டித்தல்வேண்டும். லோகரீதியானதருமமாவன,—கிராமதருமம் சாதிதருமம் தேசதருமம் குலதருமம் என்பன. இவ்விதமாகிய ஆசாரங்களைவிட்டுத்துராசாரமாயிருக்கிறபுருஷன் உலகத்தாரால் நிந்திக்கப்படும் நிந்தனைக்குப் பாத்திரவானகவும் எப்போதுந் துக்கத்தையடைகிறவனகவும் வியாதியினல் பீடிக்கப்பட்டவனகவும் இருப்பான். அறத்தை விட்டவனிடதுப் பொருளும் இன்பமும் பொருந்தாவாம். ஓநாரதரே! வேதமொழிந்த ஏனைய நூல்களில் கூறப்பட்டவை தருமமானலும் அசுகத்தைகொடுப்பதானல் அதை அநுட்டிக்கக்கூடாது என்று கூறவே நாரதர் ஒழுனிவரே! தருமங்களைப் பலசாஸ்திரங்கள் பலவகையாகக் கூறுகின்றபடியால் அவைகளில் செய்வன தவிர்வன இவையாமென்று எப்படிநிச்சயித்துச் செய்யக்கூடும் என்று கேட்டனர்.

நாராயணர் கூறுகின்றார்:—ஓநாரதரே! சுருதி ஸ்மிருதியென்னும் இரண்டும் இரண்டுகண்களாகும்; புராணம் ஹ்ருதயமாகும். இம்மூன்றில் சொல்லப்பட்டவையே தருமங்களாம். இம்மூன்றுக்கும் விரோதமாகச் சொல்லப்பட்டவை தருமமாகா. மூன்றிலும் ஒன்றுக்கொன்று விரோதம் உண்டாகுமானல் வேதத்திற் சொன்னவையே பிரமாணமெனக் கொள்ளல்வேண்டும். வேதத்திற் சொல்லப்பட்டவையும் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்குமானல் இரண்டு தருமத்தையுங் கொள்ளவேண்டும். அவற்றைவிடுதல் கூடா. ஸ்மிருதியில் ஒன்றுக்கொன்று விரோதமிருக்குமானல் அதை வேறு வேறு விஷயங்கட்கென்று பிரித்துவிடவேண்டும். புராணங்களில் ஒன்றுக்கொன்று விரோதமானதருமமிருக்குமானல் அதைக் கொள்ளக்கூடாது. எந்தத்தருமங்களும் வேதத்துக்கு விரோதமில்லாதிருக்குமாயின் அவைகளைக் கரிக்கலாம். பிரத்தியகூமாய் வேதத்துக்கு விரோதங் காணப்படுமாயின் அவை பிரமாணமாகமாட்டா. எவ்விதத்தாலும் வேதம் தருமமார்க்கத்தைக் காட்டவந்ததாகலான் அதற்கு விருத்தமில்லாமலிருக்கிறதரு

மங்களே பிரமாணமாகும். மற்றவைகள் பிரமாணமாகமாட்டா. எவன் வேதபிரமாண்யத்தைவிட்டு மற்றைப்பிரமாணத்தைப்பிரமாணமாக எண்ணியநுட்டிக்கின்றனே அவனைச்சிக்ஷிக்கவே யமலோகத்தில் நரககுண்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆதலால் சர்வப்பிரயத்தனத்தாலும் வேதத்திற் சொல்லப்பட்டதர்மங்களையே யநுட்டிக்க வேண்டுமன்றி அதிற்சொல்லப்படாதன ஸ்மிருதியாகவிருந்தாலும் புராணமாகவிருந்தாலும் வேறுதந்திரங்களாகவிருந்தாலும் வேறுசாஸ்திரங்களாகவிருந்தாலும்அநுட்டித்தல்கூடா. ஏனெனின் சுருதிக்குவிரோதமானவைபிரமாணமாகமாட்டா. சாஸ்திரமென்று பெயர் பெற்றனவெல்லாம் பிரமாணங்களாமென்று ஒருசாஸ்திரத்தைப் பிடித்துக்கொண்டு எவர்கள் அனுஷ்டிக்கின்றார்களோ அவர்கள் தலைகீழாக நரகப்பெருக்கில்மூழ்கிவிடுகிறார்கள். அவர்களாவார் காமாசாரர்களும் * பாசுபதர்களும் லிங்கதாரிகளும் தப்தமுத்ராங்கிதர்களும் வைகானசர்களேயாம். இவர்களெல்லாம் வேதமார்க்கத்திற்குப்புறம்பாயுள்ளவராதலால்இவர்களெல்லாம்நரகமடைதல் திண்ணம். இதனால் மாநுடன் வேதாங்கீகாரமாகிய தருமங்களையே அனுஷ்டிக்கவேண்டுமென்று ஏற்பட்டிருக்க நானிப்போது எழுந்தெழுந்துஅடிக்கடிசொல்லவந்தது என்னையெனின்!எதையடிக்கடி செய்யவேண்டுமோ கொடுக்கவேண்டுமோ எதையொருவனுக்குக் கொடுப்பிக்கவேண்டுமோ மிருதுவான எந்தவாக்தருமம் செய்யவேண்டுமோ அவையெல்லாம் என்னாலேயே போதிக்க வந்தனவல்லவென்று உலகினர்க்கு அறிவித்தற்கேயாம். எனவே நூல்களில் என்னால்விதிக்கப்பட்டனவாகக்காணப்பட்டனவெல்லாம் என்னால் விதிக்கப்பட்டனவன்று,அநாதியாயுள்ள வேதத்தால் விதிக்கப்பட்டனவேயாமென்று அறிதற்கேயாம்.

இனிஒருவனுக்கு உபபாதகம் மகாபாதகங்களெல்லாம் நேர்ந்திருந்தபோதிலும் அவன் இராத்திரியில் ஒருசாமகாலம் பிரமத்தியானஞ் செய்யவேண்டும். அந்தத்தியானம் எவ்வாறு செய்யவேண்டுமெனின் சத்துவகுண முள்ளவனுய் தொடையின்மேல் கால்களுடையவனுய் மார்பைப் பார்க்கும்படி முகத்தைச் சிறிது உயரட்டுத்திக் கண்ணைமூடினவனுய் பற்கள் ஒன்றுக்கொன்று படாதவனுய் இரண்டு தாடைகளிலும் சரிக்காத நாவுடைய

* வாமாசாரமுடையவர்.

வனுய் மூடினவாயுடையவனுய் அசையாதசரீரமுடையவனுய்சிறிது உயரமான ஆசனத்தில் வீற்றிருக்கின்றவனுய் இரண்டுபங்காவது மூன்றுபங்காவது பிராணுயாமத்தை ஆரம்பிக்கவேண்டும். அதன்பின்னர் இருதயவாசியாய் இருதயத்தில் தீபம்போல்பிரகாசிக்கும்பகவானைத் தியானித்து அப்பகவானிடத்தில் ஆத்மாவைப்பொருந்தியிருக்கச்செய்யவேண்டும். இதுதான் தியானமுறையாகும்.

இனிப் பிராணுயாமம் சதூமம் விதூமம் சகர்ப்பம் அகர்ப்பம் சலக்ஷ்யம் அலக்ஷ்யமென ஆறுவகைப்படும். இந்தப்பிராணுயாமத்துக்குச் சமானமான சாதனம் வேறென்றில்லை.அதற்கேதுவே சாதனமானது. அந்தப்பிராணுயாமம் ரேசகபூரககும்பகங்களால் செய்வதாகும். இதுமூன்று வர்ணரூபமாயிருக்கும். இந்தப் பிராணுயாமம் தன்மயத்தைச் செய்யுந் தன்மையுடைத்தான தாகையால் இதனைப் பிரணவமென்றும் கூறப்படும். இடைகலையினல் வாயுவைப் பூரித்து உதரத்தில்கும்பித்து அந்தவாயுவைப் பதினுறுமாத்திரை யளவுகாலம் மெதுவாகப் பிங்கலையினல் ரேசித்தலே சதூமப் பிராணுயாமம் எனப்படும்.

இவ்வாறு பிராணுயாமம் செய்து "ஆதாரேலிங்கஞபி பிரகடிதஹ்ருதயே தாஞமூலே லலாடே - துவைபத்மே ஷோடசாரே துவிதச தளதளதுவாசதார்த்தே சதுஷ்கே-வாசார்தே பாலமத்யே டபகடசஹிதே கண்டதேசே ஸ்வராணும்-ஹம் கூம் தத் வார்த்த யுக்தம் சகலதளகதம் வர்ணரூபம் நமாமி" என்று தியானித்து செந்தாமரையில் வசிக்கின்றவளாயும் அச் செந்தாமரைத்தூள் போன்ற நிறமுள்ளவளாயும் ஸ்வரனல் நியமிக்கப்பட்ட சின்ன முடையவளாயும் தாமரைநூல்போன்ற ஆகாரமுள்ளவளாயும் சூரியன் அக்கினி சந்திரன் இவர்களுக்குச் சமானமான முகமுள்ளவளாயும் ஸ்தனங்களால் பிரகாசிக்கின்றவளாயும்உள்ள தேவியை எவன் மனதில் கூணகாலம் நினைக்கின்றனனே அவன்முக்தன்.அவன்தான் இருப்பதாகிய இருப்பு தேவியின் இருப்பே, நடை தேவியின் யாத்திரையே, என்னுடைய புத்தி தேவியின்சிந்தையே, பேசுவது தேவியின் தோத்திரமே, நானும் சர்வாத்மகமாக விருக்கின்ற தேவிஸ்வரூபமே,சகலதேவர்களுடையஅருச்சனைதேவியின் அருச்சனையே, நான் தேவி, நான் தேவியைக்காட்டிலும்வேறுனவனல்ல,

நான் தேவிஸ்வரூபமான பிரமனே, நான்சோகத்துக்குப் பாத்திரனல்ல, நான்சச்சிதானந்தரூபனு யிருக்கின்றேன்என்று தன்னைநினைத்துக்கொள்ளவேண்டும். முதல்பிரயாணத்தில்பிரகாசிக்கிறவளாயும், பிரதிபிரயாணத்தி (திரும்புகாலி)ல் அமிர்தம்போ லிருக்கிறவளாயுட்,பிறகுஹ்ருதயத்தில்சஞ்சரித்துக்கொண்டு ஆனந்தமயமாயிருக்கிறவளாயுமுள்ள ஸ்திரீரூபமான சக்தியைச் சரணமடைகிறேன் என்று தியானித்து பிறகு ஈஸ்வர் சொரூபமாகவுள்ள நிஜகுருவை பிரமரந்திரத்தில் தியானித்து விதிப்படி சோடசோபசாரங்களாற் பூசித்து ஜிதேந்திரியனுய் "குருர்பிரஹ்மோ குரோர்விஷ்ணு குருதேவோ மஹேஸ்வரः; குருசாக்ஷாத் பரப்ரஹ்ம தஸ்மைஸ்ரீ குருவேநம" என்றுதுதித்து வெளியே புறப்படவேண்டும்.(சு-ம்-சகூ)

முதலாம் அத்தியாயம் முற்றிற்று.

வ

லக்ஷ்சாமரஹஸ்த ஸ்ரீசாரதாபரி வீஜிதாயைநமः.

இரண்டாம் அத்தியாயம்.

சௌசவிதி.

நாராயணர் கூறுகின்றார்:—அந்தணன்வேதங்களை நன்முயறிந்திருப்பினும் ஆசாரஹீனனுயிருப்பானுயின் அவனை அவ்வேதங்கள் பரிசுத்தஞ் செய்யாவாம். அன்றியும் ஓர்கூட்டிலிருக்கிற பக்ஷியானது இரக்கைமூளைத்தவுடன் பறந்தோடுவதைப்போல் மரணகாலத்தில் உடம்பாகிய கூட்டைவிட்டு இவன் ஒடும்போது இவனிடத்தில் வாழ்ந்திருந்த வேதங்களும் இவனைவிட்டு ஓடிப்போம். இஃதுண்மையாகலின் ஓநாரதரே! அந்த ஆசாரத்தைக் கூறுகின்றேன் கேட்பாயாக.

பிராமணன் பிராஹ்மி முகூர்த்தகாலத்தில் எழுந்திருந்து அதுமுதல் செய்யவேண்டியனையெல்லாம் நன்குணர்ந்து ஒன்றேனும் விடாமற்செய்துவரவேண்டும். ஓஅரசனே! அவையாவையெனின்! இரவு பிற்பக்கத்து நான்காம் ஜாமத்தில் எழுந்து வேதாத்

யனஞ் செய்தல்வேண்டும். அதன்பின் சிறிதுகாலம் தனது இஷ்டதெய்வத்தைச் சிந்தித்தல்வேண்டும். யோகியானஞ் பூர்வஞ்சொல்லியவாறு பிரமத்தியானஞ் செய்தல்வேண்டும. அத்தியானத்தால் எப்பொழுதும் சிவப்பிரஹ்மைக்கியமுண்டாம். அங்ஙனமான அவ்வைக்கியதியானத்தை நாடோறுஞ் செய்துவருவானுயின் அந்தகூணத்திலேயே அவன் ஜீவன்முத்திநிலையை யடைவன்.

இனிப் பிராமிஎன்னுங் காலம் யாதெனின், ஓர்நாளுக்குரிய நாழிகை அறுபதில் ஐம்பத்தாறுவது நாழிகைமுதல் அறுபது நாழி பரியந்தத்துக் குள்ளாகிய ஐம்பத்தைந்து நாழிகையாகுமாயின் அது பஞ்ச பஞ்ச வுஷத்காலமாம். ஐம்பத்தேழுநாழிகையாகுமாயின் அது அருணோதயகாலமாம். ஐம்பத்தெட்டு நாழிகையாகுமாயின் அதுபிராதக்காலமாம். அதற்குமேல் சூரியோதயகாலமாம். அக்காலத்தில் கிருகத்தைவிட்டுப்புறப்பட்டுநிருதிதிசைக்கண் சென்று ஈர்க்கணைவிடுதூரத்திற்கு அப்புறம்போய் உழுதபூமி போகும்வழி சுடுகாடு மலை இடிந்தகோயில் பள்ளமுள்ளவிடம் ஜலமுள்ளவிடம் சூளைபோட்டவிடம் புற்றிடம் புல்படர்ந்தவிடம மலவிசர்ஜனஞ் செய்திருந்தவிடம் எதேனுஞ்செத்துக்கழிருக்குமிடம் ஆகிய இவ்விடங்களல்லாத விடங்களில் யாகத்துக்கு உதவாதபுற்களாவது இலைகளாவது போட்டு தேவர்களையும் இருடிகளையும் பைசாசங்களையும் இராக்கதர்களையும் சர்ப்பங்களையும் அப்புறம் போகவேண்டுமென்று வேண்டிக்கொண்டு, பிரமசாரியாயின் பூணூல்முழுவதும், கிருகஸ்தனுயின் ஓர்சுற்றும் காதில்சுற்றிக்கொண்டும் வானப் பிரஸ்தனுயின் பின்புறமாய் விட்டுக்கொண்டும், வஸ்திரத்தினுல் சிரசைச்சுற்றி மூடிக்கொண்டும் மவுனமாய் மூச்சுவிடாமலும் எச்சில் உமிழாமலும் காற்று அக்னி பிராஹ்மணன் சூரியன் ஜலம் பசுக்கள் இவைகளைப் பாராமலும் பகலில் வடக்குமுகமாயும், இரவில் தெற்குமுகமாயும், மலஜல விசர்ஜனம் செய்தல் வேண்டும். அதன்பின் எழுந்திருந்து அவற்றை உலர்ந்த புல்லாலாவது சருகுகளாலாவது மறைத்து தண்ணீர் நிருக்கு மிடத்துக்குப்போய் பாத்திரத்தில் தண்ணீரை முகந்துகொண்டு வேறிடத்துக்குப்போய் பிராமணன் வெண்மண்ணையும் ஏனையோர் செகப்பு மஞ்சள் கருப்பு மண்களையும ஒவ்வொருதரத்துக்கும் பச்சைநெல்லிக்காயளவுக்குக் குறையாமல் ஆண்குறிக்கு இரண்டுதரமும்,

குதத்துக்கு ஐந்துதரமும், கைகளுக்குப் பத்துத்தரமும், இரண்டு கைகளையுஞ் சேர்த்து ஏழுதரமும், முன்னர் இடக்காலுக்கு நான்குதரமும், பின்னர் வலக்காலுக்கு நான்குதரமும் சுத்திசெய்தல் வேண்டும். இவ்வண்ணம் மண்ணுற்செய்யப்படும் சுத்தியை கிருகஸ்தன் இரண்டுபங்கும், பிரமசாரி மூன்றுபங்கும் வானப்பிரஸ்தனும் சந்நியாசியும் நான்குபங்கும் செய்தல்வேண்டும். இது பகற்காலத்தில்செய்யவேண்டியவிதி. இரவில்இதிற்பாதி. வியாதியாளர்க்கும்பதிதர்களுக்கும் வழிப்போக்கர்களுக்கும் பாதியேதான். ஸ்திரீகளுக்கும் சூத்திரர்களுக்குப் குழந்தைகளுக்கும் சக்தியில்லாத வர்களுக்கும் இவ்வளவென்றில்லை; நாற்றம்போமளவும் செய்தல்வேண்டும். இங்ஙனம்கூறிவந்த விதிப்படி எல்லாவருணத்தவரும் சவுசஞ்செய்துகொள்ளவேண்டியது. அதற்குக்குறைந்து ஒருகாலத்தும் கொள்ளக்கூடாது, எந்தத்தேசத்தில் எந்தநிறமுள்ளமண் அகப்படுமோ அதனையுங்கொள்ளலாம். ஆனல் சலத்துள் இருக்கிற மண்ணும் தேவாலயமண்ணும் புற்றுமண்ணும் எலியறுத்தமண்ணும் குப்பைமண்ணும் சௌசஞ்செய்தமண்ணும் ஒருவன்செய்து மிகுந்தமண்ணும் எடுத்துக்கொள்ளக்கூடாது. மூத்திர விசர்சனத்தைக் காட்டிலும் மலவிசர்ச்சனத்திற்கு இரண்டுபங்கும் மைதுனத்தில் மூன்றுபங்குமண்ணுமாகக் கொள்ளவேண்டியது. மூத்திரசவுசத்திற்கு குறிக்கு ஓர்பங்குமண்ணும் கைக்கு மூன்றுபங்குமண்ணும்இரண்டு கையும் ஒன்றுசேர்த்து இரண்டுபங்கு மண்ணுமாகக் கொள்ளவேண்டும். இவ்விதி மலசௌசத்திற்குக் கொள்ளவேண்டுமென்று மநுவால் விதிக்கப்பட்டதாகும்.

ஓ நாரதரே! கொப்பூழின்கீழ் செய்யவேண்டிய சுத்திக்கு இடக்கையும், அதற்கு மேலிடத்தில் செய்யவேண்டிய சுத்திக்கு வலக்கையும் நியமித் திருக்கின்றபடியால் அந்நியமத்தின் படியே செய்யவேண்டியதன்றி மாறிச்செய்தல் கூடாது. சுத்திசெய்வதற்குக் கொண்டுபோவதாகிய சலபாத்திரத்தை மலமூத்திர விசர்ச்சனஞ் செய்வதற்குமுன் கொண்டு போகவேண்டுமேயன்றி விசர்ச்சனஞ் செய்தபின்னர் கொண்டுபோதல் கூடாது. மலஜலமோசனம் செய்தபின்னர் உடனே சுத்திசெய்துகொள்ள வேண்டுமேயன்றி அஞ்ஞானத்தினலாவதுமந்தமதியினலாவதுசிலநேரம்பொறுத்திருந்துசெய்தல்கூடாது. இப்போது எதுஎதுசெய்தல் தவறென்றுகூறி

யதோ அவையிற்றை அலக்ஷியமாகவெண்ணி மனம்போற் செய் வராயின் அவர்கள் விதித்திருக்கும் பிரயச்சித்தத்தை அவசி யம்செய்துக்கொள்ளல்வேண்டும். அஃதாவதுமூன்றுநாள்வரையில் ஆகாரத்தைவிட்டு நீரைமாத்திரம் உண்டு இரவும் பகலும் நீங்கா மல் மந்திரஜபஞ்செய்து பரிசுத்த மடைதலாம்.

இனி மலவிர்ச்சனம்செய்தால் பன்னிரண்டுதரமும், மூத்திர விசர்ச்சனஞ்செய்தால் நான்குதரமும் நீரால்வாய்கொப்பளித்தல் வேண்டும். இதற்குக் குறைந்து செய்தால் அதுசுத்தியாகாது. நீர் உமிழும்போதுதலைகுனிந்து இடதுபக்கம்உமிழ்தல்வேண்டும். வாய் சுத்திசெய்துகொண்டபின் ஆசமனஞ்செய்து தந்தசுத்தி செய்தல் வேண்டும்.

அச்சுத்தியின்விதி யாதெனின்,—தந்தசுத்திக்குக் கொள்ளப் படும் காஷ்டத்தை முள்மரம் பாலுள்ளமரம் முதலியவைகளிற் கொள்ளாமல் கரஞ்சம், அத்தி, மா, கடப்பை, சண்பகம், இலந்தை முதலிய மரங்களையடைந்து ஆயுள்விருத்தி பலம் புகழ் காந்தி சந்தானவிருத்தி கோவிருத்தி தனவிருத்தி பிரமக்யானம் புத்தி ஆகிய இவைகளைக் கொடுக்கவேண்டுமென்று வனதேவதை யைப்பிரார்த்தித்து கனிஷ்டிகைவிரலளவு பருமனும் பன்னிரண் டங்குல நீளமுமுள்ளதாகக் கொள்ளல்வேண்டும். இவை நேரி டாததினங்களிலும், அமாவாசை பிரதமை சஷ்டி நவமி ஏகா தசி முதலிய திதிகளிலும், சங்கிரமணகாலங்களிலும் காஷ்டத் தால் தந்தசுத்திசெய்யாமல் நீரால் பன்னிரண்டுதரம் வாய்கொப் புளித்தல்வேண்டும். இங்ஙனம் விலக்கியதினங்களில் காஷ்டத்தால் ஒருவன் தந்தசுத்திசெய்வானையின் அவன் சூரியனைப் பகைத்தவனு யும் தன்குலத்தைத் தானே நாசஞ்செய்தவனுயும் ஏழுதலைமுறை பிதுர்க்களைஹத்திசெய்தவனுயும் ஆய்விடுவன். ஆகையால்விலக்கிய காலங்களில் காஷ்டத்துக்கும் தந்தத்துக்கும் சம்பந்தஞ்செய்வது ஒழிந்து நீரால் ஆசமனஞ்செய்து இரண்டுதரம் அதரத்தைத் துடைத்து தர்சனி அங்குஷ்டங்களைச்சேர்த்துநாசித்துவாரங்களை யும், அங்குஷ்ட அநாமிகைகளைச்சேர்த்து இரண்டுகண்களையும் இரண்டுசெவிகளையும், கனிஷ்ட அங்குஷ்டங்களைச்சேர்த்து நாபி யையும் இருதயத்தையும், விரல்களைச்சேர்த்து சிரசையும் நியசிக்க (தொடல்) வேண்டும்.

ஓ நாரதனே! தந்தசுத்தி செய்யுங்காலம்—சந்தியாகாலங்கள் ஜபகாலங்கள் போஜனகாலங்கள் தேவபிதுர்க்காரியங்கள் செய்யும் மத்தியகாலங்கள் ஸ்திரீசங்கமகாலங்கள் யாகம் தானம் பிரஹ்மயஜ்ஞாதிகளியற்றும் காலங்கள் ஆகிய இக்காலக்களிலும், ஜபஞ்செய்யும்ஸ்தானம் குருசந்நிதானம் ஆகிய இவ்விடங்களிலும், மலஜல மோசனங்களிலும் செய்தலாகாது. நின்றுகொண்டேனும் நடந்து கொண்டேனும் செய்தலுங்கூடாது.

இங்ஙனங் கூறிவந்த விதிகளில் பிரமாணபுத்தியும் சிரத்தையு முள்ளவன் தேசம் காலம் சக்தி தேகநிலைமை ஆகிய இவைகளையறிந்து யுக்தம்போல் செய்யலாமென்றும், பிரமாணபுத்தியும் சிரத்தையும் இல்லாதவன் செய்யாதொழியின் குற்றமாகுமேயன்றிஉள்ளவன்செய்தல் குற்றமாகாதென்றுங்கூறினர். (சு - ம். சஉ)

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

ஊ

லஜ்ஜாபதஸமாராத்யாயைநம:

மூன்றும் அத்தியாயம்.

ஸ்நானவிதி.

நாராயணர் கூறுகின்றார்,—ஓநாரதனே! முன்கூறியவாறு மல ஜல விசர்ஜனமும் தந்தசுத்தியும் விதிப்படி செய்துமுடித்தபின்னர் ஸ்நானஞ்செய்யவேண்டியது. இதுவும் இன்றியமையாத ஒழுக்கமாதலால் அவ்விதியைக் கேட்பாயாக.

இந்தத்தேகமானது மிகவும் மலினத்தோடுகூடி பிருப்பதாகவானும், ஒன்பது துவாரங்களிலும் மலமே ஒன்புதுவிதமாகவசித்துக்கொண்டிருத்தலினாலும், இம் மலசுத்திக்காகப் பிராதக்காலத்தில் ஸ்நானம் விதிக்கப்பட்டிருக்கிறது. அன்றியும் சங்கமம் செய்யக்கூடாத ஸ்திரீயோடு சங்கமஞ்செய்தபாவமும், தானம் வாங்குவதனால் உண்டாகும் பாவமும், இரகசியமாய்ச்செய்யும் பாவமும், ஸ்நானஞ்செய்வதனற் றொலைந்துபோதலினாலும், ஸ்நானஞ்செய்யாமல் செய்யும் நித்தியகர்மங்களெல்லாம் நிஷ்மலமாய்ப் போம் ஆதலினாலும், பிராதக் காலத்தில் தினந்தோறும் தீர்த்தஸ்நானம் செய்யும்படி விதிக்கப்பட்டிருக்கின்றது. ஏழுநாள் தர்ப்பையுக்த

னாய்ச் சந்தியாவந்தனாதிகளை யுத்தேசித்து காலையில் ஸ்நானஞ்செய்யாதவனும், மூன்றுநாள் சந்தியாவந்தனஞ் செய்யாதவனும், பன்னிரண்டுநாள் அக்னிஹோத்ரமில்லாதவனும் சூத்திரத்தன்மையையடைவான். பிராதக்கால ஸ்நானத்தை விட்டவனுக்கும் அக்னிஹோத்திர காலந்தவறினவனுக்கும் காயத்திரியின் ஜபபலன் இம்மையேயன்றி மறுமையினும் கிடைத்தலரிது.

ஓ நாரதனே! பிராமணனானவன் ஸ்நானத்தாலுண்டாகும் சுத்தியையும் பலத்தையும் எண்ணிப்பிராதக்காலத்தில்நதிதீரத்திற் சென்று ஓங்காரத்தோடுகூடிய காயத்திரியை ஸ்மரித்து சிகையை முடித்து முன் ஆசமனஞ்செய்து ஹ்ருதயம் தோள் கண்டம் இவ்விடங்களை நியசித்துப் * பிராணாயாமஞ் செய்தல்வேண்டும்.

அக்னியும் வருணனும் தேவர்களும் சந்திரசூரியர்களும் வாயுவும் காதுகளில் வசிக்கின்றார்களாதலால் பதிதனோடு பேசினாலும் பொய்சொன்னாலும் தும்மினாலும் எச்சிலுமிழ்ந்தாலும் வலக்காதைக் கையினால் தொட்டால் சுத்தமுண்டாம்; ஆதலால் அதனைத் தொடல்வேண்டும்.

தேவருஷி பித்ருக்களைச் சந்தோஷப்படுத்துவதான தர்ப்பணங்களைச்செய்து ஜலத்தினின்றும் வெளியேவந்து சுத்தமானவஸ்திரதாரணமும், பஸ்மருத்திராக்ஷதாரணமு முடையனாதல்வேண்டும்

கர்மயோகசாதகன் எப்போதும் ஜபத்துக்கு அவசியமாகக் கொள்ளும் உருத்திராக்ஷதாரண முறைமையாதெனின்:—கண்டத்தில் முப்பத்திரண்டும் சிரசில்இருபதும் இரண்டுகாதுகளில்தனித்தனி ஆறும் இரண்டுகைகளில் தனித்தனி பன்னிரண்டும் இரண்டு புஜங்களில் தனித்தனி பதினாறும் மார்பில் நூற்றெட்டும் சிரசில் ஒன்றுமாகத் தரித்தல்வேண்டும். இவ்வண்ணம் தரிக்கப்பெற்றவன் நீலகண்டனாய்ப்பிரகாசிப்பன். சிகை காது கண்டம் கரம்உதரம்உபவீதம் முதலியவிடங்களில் தரிக்கும் உருத்திராக்ஷமாலைகளைப் பொன்னினாலாவது வெள்ளினாலாவது கட்டி பூஷணம்போலும் அணிந்துகொள்ளலாம். அணிந்துகொள்ளும்போது பஞ்சாக்ஷரத்தையாவது பிரணவத்தையாவது உச்சரித்துப் பத்தியுடன் அணி

---

* பிராணாயாமம என்பது வெளிவாயுவைப்பிராணவாயுவோடு சேர்ப்பித்தலாம்.

தல்வேண்டும். சிவஜ்ஞானத்துக்கு ருத்திராக்ஷதாரணம் சாக்ஷாத் சாதனமென்று சிகையில்தரிப்பானுயின் அவனைத்தாரகதத்வமாகவும் இரண்டுகாதில் அணிந்தவனை தேவிதேவனுகவும், யஜ்ஞோபவீதத்திலணிந்தவனைப் பிரமனுகவும் கைகளில்தரித்தவனைத் திக்பாலதையாகவும் பாவித்துப்போற்றவேண்டும். இந்த ருத்திராக்ஷதாரணத்துக்கு பிராமணுதி நான்குஜாதிகளும் பிரமசரியாதி நான்காஸ்ரமிகளும் அதிகாரிகளேயாவர்.

பிராஹ்மணன் ருத்திராக்ஷத்தை மந்திரம் உச்சரித்தேதரித்தல்வேண்டும். எனையோர்க் கவ்விதியில்லை. எவரெவர் எப்படியாயினுந்தரிகைப்பெற்றுல் அவரவர் உருத்திரராவதிற்றடையில்லை. காணப்படாததைக் காண்பதனுலும், கேட்கப்படாததைக் கேட்பதனுலும், நினைக்கப்படாததை நினைப்பதனுலும், முகரப்படாததை முகர்வதனுலும், உண்ணப்படாததை உண்பதனுலும் சொல்லப்படாததைச் சொல்வதனுலும் செய்யப்படாததைச் செய்வதனுலும் நடக்கப்படாததை நடத்துவதனுலும் கொடுக்கப்படாததைக் கொடுப்பதனுலும்வரப்பட்ட பாவபேதங்களெல்லாம் ருத்திராக்ஷதாரணத்தால் ஒழிந்துபோம். ருத்திராக்ஷதாரணமுடையோன் புசிப்பானுயின் அதுருத்திரனுகிய மஹாதேவன்புசிப்பதே. அதுபோலவே அவன் பருகுதனவற்றைப்பருகினுலும், வேறு எதனையனுபவித்தாலும். அவையெல்லாம் அந்த ருத்திரமூர்த்தியேயனுபவிப்பதாகும். இங்ஙனமான சிறப்புடையருத்திராக்ஷத்தை எவன்தரிப்பதற்கு நாணமடைகின்றனே அவன் கோடிஜன்மபரியந்தம் சம்சாரதுக்கத்துக்காளாயிருப்பனேயன்றி மோக்ஷசாதனத்துக்கு ஆளாகான். எவன் ருத்திராக்ஷதாரியைக்கண்டு பரிகாசஞ் செய்கின்றனே அவன்சங்கரசாதியிற் பிறந்தவனென்று நிச்சயமாய் நினைக்கத்தக்கவனுவன். எவன் உருத்திராக்ஷதாரிகளைக்கண்டுவஸ்திரமாவது தானியமுதலியவைகளேயாவதுகொடுக்கின்றனேஅவன் சகலபாபங்களினின்றும் விடுபட்ட புண்ணியசீலனென்று உலகினரால் நினைக்கத்தக்கவனுய் முடிவில் சிவலோகமடையப்பெறுவான். பிதுர்த்திவசங்களில் உருத்திராக்ஷதாரிகண் அறுசுவையோடுஉண்பிப்பாயின் பிதுர்க்களெல்லாம்நாங்கள்பிழைத்தோம் பிழைத்தோமென்று சந்தோஷிப்பார்கள் எவன் உருத்திராக்ஷதாரியினது பாதத்தைப்பிரக்ஷாளனம் (சுத்தி) செய்துஅதனைத்தீர்த்தமாகவெண்ணி

மேலே புரோக்ஷி(தெளி)த்துக் கொள்ளுகிறேனே அவன் சகலபாபங்களினின்று நீங்கிச் சிவலோகமடைகின்றான். உருத்திராக்ஷத்தையணிந்து உருத்திரத்தன்மையைப்பெற்று உருத்திரனென்று பெயர் பெறுகின்றனர். அஃதேபோல் உருத்திராக்ஷத்தையணிந்து பிரஹ்மத்வத்தை யடைந்து பிராஹ்மணனாகின்றான். ஆகலான் உருத்திராக்ஷத்தை எவ்வகையான ஆபரணங்களிலும் சேர்த்துத் தரித்தல் வேண்டும். அதனிலும் சிறப்புடைய தொன்றுமில்லை. ஆகலான் எந்தச் சாதியிற் பிறந்த எந்த மாநுடனாவது சாதாரணமாய்க் கிடைத்தற்குக்கூடிய உருத்திராக்ஷத்தை எந்த அங்கத்திலாவது மந்திரத்தோடாவது மந்திரமின்றியாவது பக்தியோடாவது அஃதின்றியாவது வெட்கப்பட்டாவது தரிப்பானாயின் அந்தமாதுடன் சர்வபாபவிமுக்தனாய் சிவஜ்ஞானத்தை யடைகிறான். இன்னமும் இதன்மகிமையைச் சொல்ல எனக்குச் சக்தியில்லை. ஓநாரதனே! இதுகாறும் நான்சொல்லிவந்த பலகாரணங்களாலும் பலமகிமைகளாலும் சத்புருஷனாயுள்ளவன் சர்வப்பிரயத்தினத்தினாலும் உருத்திராக்ஷதாரணம் செய்துகொள்ளவேண்டும்.

இனி மூன் ஸ்நானஆரம்பத்தில் காயத்ரி மகாமந்திரத்தைத் தியானிக்கவேண்டுமென்று கூறினேனன்றே அந்தக்காயத்ரியின் மகிமையைக்கேட்பாய்;—கானம் செய்கின்றவர்களைக் காக்கின்றபடியால் காயத்ரி எனப்பெயர்பெற்றது. அது ஓங்கார மந்திரத்தோடும் மூன்று வியாகிருதியோடும் கூடியிருப்பது. இதுதான் வைதிகமந்திரம். இதனைவேதசம்பன்னனான பிராஹ்மணன் வைதிகதர்மத்தில் புத்தியையுடையவனாய் எப்பொழுதும் ஜபித்தல் வேண்டும். லவுகீகமந்திரங்களால் வரப்பட்டபலன் கோகிருங்கத்தில் கடுகு எவ்வளவுகாலம் நிற்குமோ அவ்வளவுபலன்றான் கிடைக்கும். ஆதலால் இந்த லவுகீகமந்திரத்தினால் நூறு ஜபஞ் செய்தாலும் பிதுர்க்களைக் கரையேற்றமாட்டாது.

வைதிகமந்திரம் செபத்தோடுகூடியது சகர்ப்பம் என்றும் தியானமாத்திரமாயிருப்பது அகர்ப்பமென்றும் சொல்லப்படும் என்றனர். (சு-ம். ஈஊத)

மூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

உ

லம்படாயைகம:

நான்காம் அத்தியாயம்.

உருத்திராக்ஷவுற்பத்தியாகி.

நாரதர்:நாராயணரே! இப்போதுமம்மால் உருத்ராக்ஷமகிமை கூறப்பட்டதன்றே; அந்த உருத்திராக்ஷத்துக்கு அவ்வளவுமகிமை யும் பூஜ்யதையும் வருதற்குக்காரணம் யாது கூறுமென்ன, நாராய ணர் கூறுகிறார்:—

ஓ முனிஸ்ரேஷ்டனே! நீ கேட்டபடியே பூர்வத்தில் கிரீசப்பிர புவாயிருக்கின்ற மஹாருத்திரரை ஷண்முகக்கடவுள் வினவ அம் மஹாதேவர் தமதுகுமாரனுகிய ஷண்முகக்கடவுளைக் கருணையுடன் பார்த்து அந்த உருத்ராக்ஷத்தின் உண்மையைக் கூறுகின்றேன் கேட்பாயாகவென்று கூறத்தொடங்கினர்:—

ஓ குழந்தாய்! பூர்வத்தில் திரிபுரரென்னும் அசுரர் ஓருவரா லும் ஜயிக்கக்கூடாதவரா யிருந்ததுமன்றித் திருமால் பிரமன் முத லிய தேவர்களும் அவ்வசுரரால் அடிக்கப்பட்டவராயினர். அத னல் அவர்கள் எம்மிடம்வந்து தங்கள்குறைகளைக்கூறினர். அக்கு றைகளைக் கேட்ட யாம் வேறொருசிந்தனையற்று மனேகரமாயும் சகலதேவஸ்வரூபமாயும் அக்கினிபோற் சுடர்விட்டெரிப்பதாயும் பயங்கரமான ரூபமுள்ளதாயும் சர்வவிக்னங்களையும் நிவிர்த்திசெய் வதாயும் துக்கசிந்தனைகளைப் போக்கடிப்பதாயும் அகோரமென்னும் பெயருள்ளதாயும் பிரகாசிக்கின்ற மகாஸ்திரத்தை ஆயிரந்திவ்யவ ருஷம் கண்களைமூடிக்கொண்டுசிந்தித்திருந்து பின்னர்விழித்தேம். அப்பொழுது எமது மூன்றுகண்களிலிருந்து ஜலபிந்துக்கள்விழுந் தன. அதினின்றும் மஹாஉருத்திராக்ஷ விருக்ஷங்களுண்டாயின.ஓ ஷண்முகனே! எமது ஆக்ஞையால் யாவருக்கும் நன்மையுண்டாக் கும்பொருட்டு அவ்விருக்ஷங்களினின்றும் மூப்பத்தெட்டு பேதமா யுள்ள உருத்திராக்ஷங்களுண்டாயின. அவற்றுள் வலக்கண்ணுகிய சூரியநேத்திரத்திற் றோன்றியவை கபிலநிறமுடையனவாய்ப் பன் னிரண்டு பேதமாயும், இடக்கண்ணுகிய சோமநேத்திரத்திற்றோன் றியவை வெண்ணிறமுடையனவாய்ப் பதினாறுபேதமாயும், அக்னி நேத்திரத்திற்றோன்றியவை கறுப்புநிற முடையனவாய்ப் பத்துப்

பேதமாயும்உள்ளன. இவற்றுள் வெண்ணிறமுள்ளது பிராமணசாதியென்றும், செங்நிறமுள்ளது க்ஷத்திரியசாதியென்றும். மிச்ர (கல்ந்த) நிறமுள்ளது வைசியசாதியென்றும், கருமைநிறமுள்ளது சூத்திரஜாதி என்றுஞ் சொல்லப்படும். இனி அம்மணிகளுடைய முகங்கள் இத்தனையென்பதும் அவற்றின் சொரூபங்கள் இன்னதென்பதும் அவற்றாலுண்டாகும் பிரயோசனங்கள் இவையென்பதுங் கேட்பாயாக.

ஒருமுகமுள்ள ருத்திராக்ஷம்—சாக்ஷாத் சிவசொரூபம்; பிரமஹத்தியைப்போக்கும். இரண்டுமுகமுள்ளது—தேவதேவிசொரூபம்; அது புத்திபூர்வம் அபுத்திபூர்வம் என் றிரண்டு விதமாயுள்ள பாவங்களைப்போக்கும். மூன்றுமுக முள்ளது—சாக்ஷாத் அக்னி சொரூபம்; அது ஸ்திரீ ஹத்தியை ஓர்க்ஷணத்திற் போக்கும். நான்குமுகமுள்ளது—பிரமசொரூபம். அது நரஹத்தியைப் போக்கும். ஐந்துமுக முள்ளது—காலாக்னி ருத்திர சொரூபம். அது புசிக்கக்கூடாதனவற்றைப் புசித்ததனாலும்சங்கமஞ் செய்யக்கூடாத ஸ்திரீயைச் சங்கமஞ் செய்ததனாலும் உண்டாகிய பாவங்களையும் இவைபோன்ற பாவங்களையும் போக்கும். ஆறுமுகமுள்ளது—சுல்பிரமணியசொரூபப். அது பிரஹ்மஹத்தியாதி பாவங்களைப் போக்கும். இது வலக்காதில் அணிமத்தக்கது. ஏழுமுகமுள்ளது—மன்மதசொரூபம். அது பொன்முதலியவற்றைக் களவு செய்த பாவங்களைப் போக்கும். எட்டுமுகமுள்ளது—விநாயக சொரூபம். அது அன்னகூபம் தூலகூடம் சுவர்ணகூகிம் துஷ்குல ஸ்திரீசங்கமம், குருபத்தினிசங்கமம் முதலானபாவங்களையும் சர்வ விக்கினங்களையும் போக்கி சகலகுணங்களையும்கொடுத்து அந்தியத்தில் பரமபதத்தைக்கொடுக்கும். ஒன்பதுமுகமுள்ளது—வவரவஸ்வரூபம். அது புத்திமுத்திகளையும் எமன்குச்சமானமான குணத்தையும் கொடுக்கும். ஆயிரம் புருணஹத்தியையுப் நூறு பிரமஹத்தியையும்போக்கிஅந்தியத்தில் எம்மையடைவிக்கும். இதுஇடத்தோளில் அணியத்தக்கது. பத்துமுகமுள்ளது—விஷ்ணுசொரூபம். அது கிரகதோஷங்களையும் பூதபேதாள பைசாச பிரஹ்ம ராக்ஷசாதி பீடைகளையும்சர்ப்பவிஷங்களையும் போக்கும். பதினொருமுக முள்ளது—ஏகாதசருத்ரசொரூபம். அதே ஆயிரம் அஸ்வமேதம் நூறுவாஜபேயம் கோடிகோதானம் செய்த பலனைக் கொடுக்கும்.

இதுசிகையி லணியத்தக்கது. பன்னிரண்டுமுகமுள்ளது துவாதசாதித்தசொரூபம்; அதுகோமேத அஸ்வமேதங்கள் செய்தபலன்களைக் கொடுக்கும். கொம்புள்ள மிருகங்களாலும் ஆயுதபாணிகளா யிருக்கின்றவர்களாலும் புலிமுதலிய துஷ்டமிருகங்களாலும் உண்டாகும் பய கம்பனைதிகளும் தேகவியாதிகளால் உண்டாகும் துன்பங்களும் ஆனை குதிரை மான் பூனை சர்ப்பம் எலி தவளை கழுதை நாய் இவைகளைக் கொன்றதனு லுண்டாகும் பாவங்களும் போகும். இதுகாதுகளில் அணியத்தக்கது. பதின்மூன்று முகமுள்ளது ஷண்முகக்கடவுளுக்குச் சமானமானது. அது தாய் தந்தை சகோதரன்முதலியோர்களைக் கொன்றபாவங்களைத் தொலைக்கும். சர்வகாமங்களையுங் கொடுக்கும். ரசம் ரசாயன முதலிய சகல போக்ய பதார்த்தங்களையும் நினைத்தவண்ணங்கொடுக்கும். இதிற் சந்தேகமில்லை. பதினொன்று முகமுள்ளது—எவனுக்குக் கிடைக்கிறதோ, எவன்தரிக்கின்றானோ அவன் சிவபெருமானுக்குச் சமானமானவனுய்த்தேவர்களால் பூஜிக்கப்பட்டுமோக்ஷத்தையடைகிறன். அதன்மகிமை சொல்லமுடியாது. இந்த உருத்திராக்ஷமஹிமையையும் அதனை யணிவதனுலுண்டாகும்பயன்களையும் அடிக்கடிசொன்னாலும் என்னசையடங்குமோ. உருத்திராக்ஷதாரியே பரகதியையடையத்தக்கவன். அவனே எப்போதும் தேவர்களால் பூஜிக்கத்தக்கவன். ஆகலான் பிராஹ்மணன் பக்தியோடு ஒரு உருத்திராக்ஷத்தை சிரசில்தரித்திருத்தல் வேண்டும்.

சிரமுதலிய அங்கங்களில்அணியும் உருத்திராக்ஷமாலைகளுக்கு இருக்கவேண்டிய மணிகளின் விதி யாதெனில், சிரமாலைக்குமணிகள் இருபத்தாறும், மார்புமாலைக்கு ஐம்பதும், தோட்களுக்குப்பதினாறும், மணிக்கட்டுகளுக்குப் பன்னிரண்டுமாம். நூற்றெட்டு ஐம்பது இருபத்தேழு என்னும்எண்களோடுகூடிய உருத்திராக்ஷமாலைகளைத் தரிக்கப்பெற்றாலும் ஜபிக்கப்பெற்றாலும் அவனுக்கு ஒவ்வொரு க்ஷணத்துக்கு ஒவ்வொரு அஸ்வமேதபலனுண்டாவதோடு இருபத்தொரு குலத்தை யுத்தாரணஞ்செய்த பலனும் எப்பொழுதும் சிலோகமே வாழுமிடமாக விருந்து பூஜ்யமாய் வாழும்வாழ்வும் உண்டாகும் என்றனர். (சு - ம் - ஈ0.)

நான்காம் அத்தியாயம் முற்றிற்று

ஐந்தாம் அத்தியாயம்.

ஜபமாலாவிதி.

சிவபெருமான் கூறுகின்றார்:—ஷண்முகனே! இனி உனக்கு ஜபமாலையின்விதியைக் கூறுகின்றேன் கேட்பாயாக உருத்திராக்ஷத்தின் மேற்பக்கமாகிய முகம் பிரஹ்மா, கீழ்ப்பக்கமாகிய புருஷ்டம் விஷ்ணு, நடுக்கண்டமாகிய வட்டவடிவம் உருத்திரன். இவ்வாறு திரிமூர்த்திசொரூபமாயிருத்தலால் போகமோக்ஷத்தைக் கொடுப்பதாகும். இது வெண்மை செம்மை கறுமை என்னும் மூன்று நிறத்தையும், முட்போன்ற வடிவத்தையும், பஞ்சமுகத்தையும் உடையது. இதனை ஜபமாலையாகக் கோர்த்துக் கொள்ளுங்கால் முகத்தோடுமுகமும் பின்னோடு பின்னுமாகப் பசுவின்வாலைப்போல் இருபத்தைந்து மணிகளைக் கயிற்றிற்கோர்த்துச் சேர்த்து அதில் மேருவாகக் கோர்க்கும் உருத்திராக்ஷத்தின்முகம் மேல்நோக்கியிருக்க நாகபாசத்தாற் சேர்த்துக் கொள்ளல்வேண்டும். ஜபமந்திரம் சித்தியாதற்பொருட்டு அந்த ஜபமாலையைப் பஞ்சகவியத்தானும் சந்தன நீர்த்தத்தானும் அபிடேகஞ் செய்து பின்னர் சிவசத்திமந்திரங்களால் நியசித்து, அஸ்திரமந்திரத்தால் தொட்டு கவசத்தால் அவகுண்டனஞ்செய்து மூலத்தால் அபிமந்திரித்து சத்யோஜாதாதிகளால் புரோக்ஷித்து மூலமந்திரம் நூற்றெட்டுருசெபித்து சுத்தபூமியில் வைத்து சகலகாரணனாகிய பரமசிவனே உமையோடு பிரதிஷ்டை செய்தல்வேண்டும். அது சர்வகாம பலத்தையுங் கொடுக்கும். எந்தத் தெய்வத்துக்கு எந்தமந்திரமோ அந்தமந்திரத்தால் பூசித்தல்வேண்டும். ஜபமாலையைச் சிரசிலாவது கழுத்திலாவது காதிலாவது தரித்துக் கொள்ளல் வேண்டும். ஜிதேந்திரியனாய் உருத்திராக்ஷ மாலையைத் தரித்துக்கொண்டே ஜபஞ்செய்ய வேண்டும்.

கண்டத்திலும் சிரசிலும் மார்பிலும் காதுகளிலும் தோள்களிலும் விதிப்படி உருத்திராக்ஷங்களை மிகபக்தியோடு தினமுந் தரித்தல் வேண்டும். ஸ்நானம் ஜபம் ஹோமம் வைஸ்வதேவம் சிவார்ச்சனை

பிராயச்சித்தம் சிரார்த்தம் தீக்ஷை முதலியவைகளைச் செய்கின்ற காலத்து உருத்திராக்ஷதாரணம் விசேடமெனப் புகழ்ந்து விதிக்கப் பட்டிருக்கிறது. ஆகையால் வைதிககர்மங்களை அறிவின்மையால் ஒருவன் உருத்திராக்ஷதாரணமின்றிச் செய்வானாயின் அவன் நரகமடைவதிற் சந்தேகமில்லை.

உருத்திராக்ஷத்தைக் கயிற்றிற்கோர்த்து சிரசிலும் கண்டத்திலும் தரிக்கவேண்டும். உருத்திராக்ஷத்தைப் பொன் மணி இவைகளோடுசேர்த்துக் கோர்ப்பது சுபமாகும். மற்றவைகளோடு சேர்ப்பது அசுபமாகும். அசுசியாய் எப்போதும் உருத்திராக்ஷம் தரித்தல் கூடாது. உருத்திராக்ஷ மரத்திலுண்டான காற்றிலகப்பட்ட தினை முங்கூடமறுபடியும் திரும்பாத புண்ணியலோகத்தை யடைகிறது. ஓ ஷண்முகனே! உருத்திராக்ஷந் தரிக்கப்பெற்றவன் பாபஞ்செய்பவனாலும் அவன் அப்பாவத்தினின்றும் விடுபடுகிறானென்று ஜாபாலோபநிடதங் கூறுகின்றதல்லவா! இவ்வண்ணங் கூறியதே யல்லாமல் நாற்கால் செந்துக்களும் உருத்திராக்ஷந் தரிக்கப்பெறுமாறால் அவைகளும் உருத்திரத்தன்மையை யடைகின்றனவென்றால் மனிதர்கள் உருத்திராக்ஷமாலிகையைத் தரிக்கப்பெறுவார்களாயின் அவர்கள் உருத்திரத்தன்மையை யடைவார்களென்பதைச் சொல்லவேண்டுமோ. உருத்திராக்ஷ மொன்றைச் சிரசில் எப்போதும் தரித்துக்கொண்டிருந்தால் அது சகலபாவத்தையும் சகலதுக்கத்தையும் நாசஞ்செய்யும். யாவர் உருத்திராக்ஷத்தால் அலங்கரிக்கப்பட்டு சம்புநாமத்தை யுச்சரிக்கின்றார்களோ அவர்கள்தான் பாகவதோத்தமரென்று சொல்லப்படுவார். எந்தவிதமான சிரேயசை விரும்புகின்றவர்களும் உருத்திராக்ஷதாரணஞ் செய்து கொள்ளல்வேண்டும். சிகை கண்டம் காது கை வயிறு இந்தவிடங்களில் தரித்துக்கொண்டால் அது சகலநன்மைகளையும் கொடுக்கும். திரிமூர்த்திகளும் அவர்களுடைய விபூதியாக விருப்பர். ஆதலால் இதரதேவதைகளிடத்தில் பக்தியுடையவர்களாயிருந்தாலும் உருத்திராட்சந் தரித்தல் வேண்டும். (இவ்வுண்மையை யுணர்ந்தே) சப்தருஷிகளும் ஏனையருஷிகளும் இவர்களுடைய வம்சத்திற் பிறந்தவர்களும் சிரௌதகர்மங்களை யனுஷ்டிக்கின்றவர்களும் உருத்திராட்சதாரணஞ் செய்துகொண்டு சுகத்தை யடைகின்றனர். இதைத் தரிப்பதில் சிரத்தை யில்லாதவர்களுக்கு உண்மையான வேதநித்தியும் மோட்சமும் உண்டாகிறதில்லை யென்றும் ஒருவனுக்கு

அகேக சன்மமுடிவில் மகாதேவனுடைய அனுக்ரகத்தால் உருத்திராக்ஷத்தைத்தரிக்க இச்சையுண்டாகிறதேயன்றி தன்னுடைய சுபாவ அறிவால் உண்டாகிறதில்லை என்றும் ஜாபால உபநிடதங் கூறுகின்றதல்லவா!

ஓ புத்திரனே! உருத்திராக்ஷமகிமையை யுணர்ந்த முனிவர்களும் அப்படியே கூறுகின்றனர். இந்த உருத்திராக்ஷத்தினால் உண்டாகும் பிரயோசனம் மூவுலகினும் பிரசித்தி பெற்றருக்கின்றது. கனிரூபமாயிருக்கின்ற உருத்திராட்சத்தைக் கண்ணினாற் கண்டால் மகாபுண்ணியமும், கையினால் தொட்டால் அதனினுங் கோடிபலனும், உடம்பில் தரித்துக்கொண்டால் அதனினும் நூறுகோடி புண்ணியமும் உண்டாம் அந்த உருத்திராக்ஷத்தில் காடோறும் ஜபஞ் செய்துவந்தால் அவனினும் ஆயிரத்து நூறுலக்ஷங்கோடி பலனுண்டாம் என்பதிலும், சிரம் கண்டம் காது மார்பு கைகள் இந்த அங்கங்களில் எவன் தரித்துக் கொள்ளுகிறானே அவன் உருத்திரசொரூபி என்னும் விஷயத்திலும் சந்தேகமேயில்லை.

இந்த உருத்திராக்ஷதாரியானவன் இப்பூவுலகில் சகலப்பிராணிகளாலும் தன்பம் அடையப்படாதவனுய் சம்புவைப்போல் திரிந்து கொண்டிருப்பன். இதுவுமன்றி சுராசுரர்களால் எவ்வண்ணம் சிவபெருமான் சேவிக்கத்தக்கவனுயிருக்கின்றாரோ அவ்வண்ணமே இந்த உருத்திராட்சதாரியும் யாவராலும் சேவிக்கத்தக்கவனுயிருப்பன். யாவரினுந்தாழ்ந்த கீழ்மகனுயிருந்தாலும் தன்சாதித்தொழிலை விட்டு வேறுசாதித்தொழிலைச் செய்பவனுயிருந்தாலும் சகலபாவங்களோடு கூடினவனுயிருந்தாலும் உருத்திராட்சதாரணஞ் செய்துகொள்பவனு யிருப்பானுயின் அவன் பாவதகினின்றும் விடுபட்டவனுய் மேலானதொழிலைச் செய்யும் மேன்மகனுகின்றான். காயாயிருந்தாலும் கழுத்தில் உருத்திராட்சந் தரித்திருக்கப் பெறுமானுல் அதுவும் முத்தியை யடையுமென்று சொல்லப்பட்டிருக்கிறபோதுமானுடனுக்கு என்சொல்லவேண்டும். ஒருவன் ஜபத்தியானங்களில்லாதவனுய் உருத்திராட்சமாத்திரம் தரிப்பவனுயிருப்பின் அவன் சர்வபாவங்களினின்றும் விடுபட்டவனுய் மேலானகதியை யடைகிறான். ஆகலான் ஒருருத்திராட்சத்தையாவது எத்தனத்தோடு தரிக்கவேண்டும் அப்படித்தரிக்கின்றவன் இருபத்தொரு தலைமுறைகளை உய்வித்து

சிவலோகத்தில் பூஜிக்கப்பட்டவனுய் யிருப்பன். ஓ ஷண்முகனே! இன்னமும் உருத்திராக்ஷவிதியைச் சொல்லுகிறேன் கேட்பாயாக வென்றார். (சு-ம் 358)

ஐந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

லாங்கலாயுதாயை நமः

ஆறும் அத்தியாயம்.

உருத்திராக்ஷமகிமை.

ஈஸ்வரர் கூறுகின்றார். ஓ ஷண்முகனே! குசக்கிரந்தி புத்திரவரம் என்று சொல்லப்பட்ட அநேகமணிகளில் ஒன்றேனும் உருத்திராட்சத்தின் பதினறி லொருபங்குக்கும் ஒப்பாகாது. புருஷர்களில் விஷ்ணுவும் மிருகங்களில் சூரியனும் நதிகளில்கங்கையும் இருடிகளில் காசிபரும் குதிரைகளில் உச்சைஸ்ரவமும் தேவர்களில் மஹாதேவரும் தேவிகளில் கௌரியும் எவ்வாறு சிறப்புடையவர்களோ அவ்வாறேமணிகளில் உருத்திராக்கமணி சிறப்புடையது இதனைத் தரிப்பதைக்காட்டிலும் தரியும் அணிவதைக் காட்டிலும் விரதமும் தானஞ் செய்வதைக்காட்டிலும் குறைவற்றதானமும் வேறில்லை. ஆகலான் சாந்தியுள்ள சிவபக்தர்களுக்கு உத்தமமான உருத்திராட்சத்தைத் தானஞ்செய்யவேண்டும். இத்தான புண்ணியபலத்தின் முடிவை என்னுற் சொல்லிமுடியாது உருத்திராட்சத்தைக் கண்டத்திற் தரிக்கின்றவனுக்கு எவன் அன்னங் கொடுக்கிறானே அவன் தனது இருபத்தொரு தலைமுறைகளைக் கடைத்தேறச்செய்து சிவலோகமடைகிறான். எவனது நெற்றியில் விபூதியில்லையோ! எவனது சரீரவுறுப்புகளில் உருத்திராட்சதாரணமில்லையோ! எவனது கிருகத்தில் சிவபூஜையில்லையோ! அவன் பிராஹ்மணனுயினும் சக்கிலியினும் அதமனுவன். உருத்திராட்சம் ஒருவனது சிரசில் இருக்குமாயின் அவன் மாமிசத்தைப் புசித்தாலும் மதுபானஞ்செய்தாலும் சண்டாளசம்பந்த மடைந்தாலும் அவ்வப் பாவங்களினின்றும் விடுபடுகிறான். சகலவேதங்களையும் அப்பியாசஞ்செய்து சகல யஜ்ஞங்களையும் தவங்களையும் தானங்களையுஞ் செய்தால் எந்தப்பல முண்டாகுமோ அந்தப்பலமும்

நான்குவேதங்களையும் புராணங்களையும் சர்வவித்தைகளையும் படித்தால் எந்தப்பயனுண்டாகுமோ அந்தப்பயனும் தீர்த்தயாத்திரை செய்வதனால் எந்தப் புண்ணியமுண்டாகுமோ அந்தப்புண்ணியமும், உருத்திராக்ஷம் தரிப்பதனால் அப்போதே யுண்டாகும் ஒருவன் மரணகாலத்தில் உருத்திராக்ஷத்தைத் தரித்துக்கொண்டு இறப்பானுகில் அவன் சிவத்தன்மையடைந்து மீண்டும் பிறவாதெறியைப் பெறுகின்றன், உத்திராக்ஷத்தைக் கண்டத்திலாவது கரத்திலாவது அணிந்து கொண்டு ஒருவன் இறப்பானுகில் அவனது தலைமுறையைப் புனிதமாக்கி சிவலோகத்தை யடைகிறன், பிராமணரானுலும் சண்டாளரானுலும் குணமுள்ளவரானுலும் குணமில்லாதவரானுலும் பஸ்மருத்திராக்ஷங்களைத் தரிப்பாராயின் அவர் சிவத்தன்மையை யடைவர். சுத்தராகவிருந்தாலும் அசுத்தராக விருந்தாலும் உண்ணுதனவற்றை உண்பவரானுலும் மிலேச்சரானுலும் சண்டாளரானுலும் சகலபாபங்களோடு கூடினவரானுலும் அவர்கள் உருத்ராக்ஷதாரண மாத்திரத்தில் உருத்திரமூர்த்திகள் என்பதில் சந்தேகமில்லை.

சிரசில் தரித்தால் ஒருகோடிபங்கும், காதுகளில் தரித்தால் பத்துகோடிபங்கும், கண்டத்தில் தரித்தால் நூறுகோடிபங்கும், உச்சியில் தரித்தால் லயிரங்கோடிபங்கும், உபவீதத்தில் தரித்தால் பதினுயிரங்கோடி பங்கும், தோளில் தரித்தால் லட்சங்கோடிபங்குமான பலனும் மணிக்கட்டில் தரித்தால் மோட்சசாதனமும் உண்டாகும்.

உருத்திராட்சத்தை யணிந்தவன் வைதிகர்மத்தைச் சிறிது செய்வானுயினும் அவன் பக்தியோடு மூற்றுஞ் செய்தபலனை அடைகிறன். பக்தியில்லாதவனுயும் பாவங்களை நாடோறும் செய்பவனுயும் உள்ள மனிதனேயாயினும் அவன் கண்டத்தில் உருத்திராட்சந் தரிப்பானுயின் சர்வபாபத்தினின்றும் விடுபட்டு முக்தனுகின்றன். எவன் உருத்திராட்சத்தில் மனமுள்ளவனை எவன் அதைத்தரிக்கின்றனை அவன் மஹேசலோகத்தில் இலிங்கமூர்த்தியைப்போல் யாவராலும் நமஸ்கரிக்கத்தக்கவனுகின்றன். வித்தையில்லாதவனுயினும் வித்தையுடையவனுயினும் உருத்திராட்சந் தரிப்பானுயின் அவன் கோகதேசத்துச் கர்த்தபம் (கழுதையைப்) போல் சிவலோகமடைகிறன் என்று கூறினர்.

ஸ்கந்தமூர்த்தி ஓ பிரபுவே! கழுதை எந்தக்காரணத்தால் உருத்திராட்சத்தைத் தரித்து சிவலோகமடைந்தது? அதனை அருள்செய்ய வேண்டு மென்றனர். சிவபெருமான், அப்பனே! விந்தியபர்வதத்தில் ஓர்கழுதை உலாவிக்கொண்டிருந்தது. அதன் முதுகின்மேல் வியாபாரியொருவன் உருத்திராட்ச மூட்டையைச்சுமத்தி கடத்திக் கொண்டுபோக அது அதிகபாரத்தினால் அம்மூட்டையைச் சுமக்க லாற்றாது வருத்தமுற்று பூமியில் வீழ்ந்து உயிர்விட்டது. அப்போதே அது திருநேத்திரமும் திரிசூலமும் உடைய சிவரூபமடைந்து என் சமீபத்தை யடைந்தது; என்றுகூறி மறுபடியும் உருத்திராட்சமகிமையைக் கூறத்தொடங்கினர்.

தரிக்காமல் சுமந்ததற்கே சிவசாரூப்பியத்தைக் கொடுக்கும் அரியமகிமையுடைய உருத்திராட்சத்தை ஒருவன் தரிப்பானானால் அவன் உருத்திராட்சதில் எத்தனைமுகம் இருக்கின்றதோ அத்தனை முகத்திற்கும் ஒல்வொருயுகம் அளவாக சிவலோத்தில் பூஜிக்கப் படுகிறான்.

இதுபோன்ற அருமகிமைகளைக் கூறத்தொடங்குவோர் தங்கள் சிடர்களுக்குச் சொல்லவேண்டுமேயன்றி, சிடராகாதவர்க்கும் பஸ்மருத்திராட்சங்களில் பக்தியில்லாதவர்களுக்கும் பஸ்மம் இத்தன்மைத்தென்றும் உருத்திராட்சம் இத்தன்மைத்தென்றும் அறியப் பெறாத மூடர்களுக்கும் ஒருபொழுதும் சொல்லக்கூடாது.

ஓ குமாரனே! உருத்திராட்சதாரண புண்ணியத்துக்கு எவ்வகைத்தான புண்ணியம் சமமாகும்? ஆகையால் உண்மையையறிந்தமுனிவர்கள் உருத்திராட்சந் தரிப்பதையே பெரியவிரதமாகச்சொல்லுவர். எவன் நியமமுள்ளவனாய் ஆயிரம் உருத்திராட்சந் தரிப்பானே அவன் உத்திரமூர்த்தி எப்படியோ அப்படியேதான். அவனைத் தேவர்களெல்லாம் வணங்குவர் ஆயிரம் உருத்திராட்சம்கிடைக்காமற் போமாயின் தோள்களில் தனித்தனி பதினாறும், மணிக்கட்டுகளில் தனித்தனி பன்னிரண்டும், மார்பில் நூற்றெட்டும் கண்டத்தில் முப்பத்திரண்டும் உச்சியில் ஒன்றுமாக எவன்தரிப்பானே அவன் உருத்திரமூர்த்தியைப்போல் பூஜிக்கப்படுகிறான். முத்து பவளம் ஸ்படிகம் வெள்ளி வைடூரியம் பொன் இவைகளோடு கலந்து தரிப்பவன் சிவனேயாய் விடுவான் உருத்திராட்சமாத்திரம் தரிப்பானுயின் சூரியனைக்கண்ட இருள்போல் அவனைப் பாவங்கள் விட்டுப்போம்.

உருத்திராட்ச மாலையைக்கொண்டு ஜபிக்கிற மந்திரமானது அளவில்லாத பலனைக்கொடுக்கும். அநேக புண்ணியங்களைக் கொடுக்கத் தக்க உருத்திராட்சங்களில் ஒன்றேனும் தரிக்கப் பெறுதவனது ஜன்மம், பஸ்மத்தினுல் திரிபுண்டரம் அணியப்பெறுதவனது சரீரம் எவ்வாறு வீணுகுமோ அவ்வாறு வீணுனதாகும், எவன் உருத்திராட்சத்தைச் சிரசில் தரித்து ஸ்நானஞ் செய்கின்றனே அவனுக்கு கங்காஸ்நானபலன் உண்டாகிறதில் சந்தேகமில்லை. ஒருமுகம் ஐந்துமுகம் பதினெருமுகம் பதினன்குமுகம் உள்ளருத்திராட்சங்கள் சங்கரஸ்வரூபமென உலகினரால் தியானித்துப் பூஜிக்கப்பட்டு வருகின்றன. தரித்திரன் உருத்திராக்கமணியினிடத்தில் பக்தியுள்ளவனுய்த் தரிப்பானுயின் அவன் உலகாளும் அரசனுவன் இதற்குப் புராணசம்மதமான ஓர் இதிகாசங் கூறுகின்றேன் கேட்பாயாக:—

கோசலதேசத்தில் தர்மாத்மாவாயும் வேத வேதாந்தங்களை அறிந்தவனுயும் திரிகாதன் என்னும் பெயரோடு ஓர் பிராமண னிருந்தான். அவனுக்கு அழகான உருவமுள்ளவனுய் யவ்வன வயதுள்ளவனுய் மன்மதன்போல் அழகுள்ளவனுய் பாகஞ்செய்பவனுய் அதனல் தீக்ஷிதனென்று அழைக்கப்பட்டவனுய் குணநிதி யென்னும் பெயருடையவனுய் ஓர் புத்திரனிருந்தான். அவன் சுதீக்ஷணன் என்னும் தனது ஆசிரியனுடைய முக்தாவளி என்னும் பத்தினியைத் தனது சௌந்தரியத்தினுலும் யௌவனத்தினுலும் மதகர்விதத்தினுலும் மோகிக்கச்செய்து சிலகாலம் அவளுடன் கலந்து குருவினிடத்துள்ள அச்சத்தினல் அவருக்கு விஷங்கொடுத்துக் கொன்று பின் யாதொரு அச்சமுமின்றி குருபத்தினியுடன் புணர்ந்திருந்தனன் இதனை அவனது தாய்தந்தையர்க ளறிய, அதனை இவனறிந்து அவ்விருவருக்கும் விஷங் கொடுத்துக் கொன்று தன்கையிலுள்ள பொருளெல்லாவற்றையும் அழித்து பின்னர் அந்தணர்களுடைய கிருகத்தில் திருடுவதற் காரம் பித்தனன். அதுவுமன்றி கட்குடியனுய் ஒருவரையு மதியாது திரிந்துக்கொண்டிருந்தனன். இவனது செய்தியெல்லாம் ஞானிகள் அறிந்து அவனைப் பயமுறுத்தி ஊரிலில்லாவண்ணம் துரத்த, அவன் அவ்விடம்விட்டு குருபத்தினியோடு ஓர் பெருங்காடு அடைந்து அம்மார்க்கத்தில் வரும் அந்தணரிடத்துள்ள பொருளைக் கொள்ளையிட்டு அநேகநாள் கழித்துவந்தனன். அப்போது அநேகயமபடர்கள் ஓர் புறமும் கணங்கள் ஓர் புறமும் வந்து இவனைக்கொண்டுபோக முயன்றனர்.

அக்காலத்தில் யமதூதர் சிவதூதர்களைப்பார்த்து இவன் என்ன புண்ணியஞ் செய்தானென்று இவனைக் கொண்டுபோக வந்தீர்கள் என்று கேட்க, சிவதூதர்கள் ஓ யமபடர்களே! இறந்துபோன இவ்விடத்துக்குப் பத்துமுழந் தூரத்தில் உருத்திராட்ச மிருக்கின்றதல்லவா? இவ்வளவு சமீபத்தில் இறக்கப்பெற்ற இவன் எப்படிப் பாவியாவான்? நீவிர் உருத்திராட்சமகிமையை நன்றுயறிந்திருப்பீர்களாயின் இவனைக் கொண்டுபோவதற்கு துணிந்து இங்குவருவீர்களா? வென்றுகூறி அவனுக்குச் சிவரூபங்கொடுத்து திவ்யவிமானத்தி லேற்றிச் சிவசன்னிதியிற் சேர்த்தனர். இவ்வண்ணம் பாபத்தை நசிக்கச்செய்து மகாபுண்ணியத்தைக் கொடுப்பதாயுள்ள உருத்திராட்ச மகிமையைச் சுருக்கமாய்க் கூறினே னென்றனர். (சு-ம் 54)

ஆறும் அத்தியாம் முற்றிற்று.

உ

லப்தாஸாயை நம:

ஏழாம் அத்தியாயம்.

உருத்திராக்ஷலக்ஷணம் மந்திரவிந்யாசம்.

ஓ நாரதரே! இவ்வண்ணம் ஷண்முகக்கடவுள் தமது தந்தைபால் உருத்திராட்சமகிமையைக்கேட்டு மகிழ்வெய்தியதைக் கூறினேன். இனி கதாசாரவழியினல் அதனது லட்சணத்தையும் மந்திரவிந்யாசத்தையும் கூறுகின்றேன் கேட்பாயாக:—

உருத்திராட்சத்தைத் தெரிசனஞ்செய்தால் லட்சம் பங்கும், பரிசித்தால் கோடிபங்கும், தாரணஞ்செய்தால் கோடி கோடி பங்கும், ஜபஞ்செய்தால் நூறுலட்சங்கோடிபங்கும், தாரணத்தோடு ஜபஞ் செய்தால் ஆயிரலட்சங்கோடி பங்குமாகப் புண்ணிய முண்டாம். பத்திராட்சிமணி தாரணத்தினலும் மகாபுண்ணிய முண்டு. நெல்லிக்காயளவுள்ள உருத்திராட்சம் உத்தமம், இலந்தைக்கனி யளவுள்ளது மத்திமம், கடலை யளவுள்ளது அதமம் என்று சொல்லப்படும்.

உலகின்கண் பிரமகூத்திரியாதி நான்குசாதிகளும் தங்கள் தங்களுக்குரிய உருத்திராகூஷங்கள் இது இதுவா மென்று அறிந்து அணிந்து சுகமாகும்பொருட்டு சிவாஜ்ஞையினால் வெண்மை செம்மை பொன்மை கருமை நிறமுள்ள நான்குசாதிகளாக உண்டாக்கப்பட்டிருக்கிறது. சமானமாயும் மேனியையுடையதாயும் திடமானதாயும் முள்ளோடுகூடினதாயும் உள்ளமணிகள் சுகமானவை. புழுக்களினால் அடிப்பட்டதும் அறுக்கப்பட்டதும் பிளக்கப்பட்டதும் முள்ளில்லாததும் காயத்தோடு கூடினதும் மேற்பரணியில்லாததுமான மணிகள் நீக்கத்தக்கவை. தற்செயலாய் துவாரமுள்ளவை சிறந்தன. மனிதரால் துவாரஞ்செய்யப்பட்டவமைத்திமம். சமமாயும் மேனியாயும் திடமாயும் குண்டாயுமுள்ளஉருத்திராக்க மணிகளைப் பட்டுநூலால் கோர்த்துத் தரித்தல்வேண்டும். பக்கமுற்றிலும் ஒரேபருமனையும் மிகவிலக்ஷணமாயும் பொன்னைப்போல் மாற்றுடையதாயு முள்ள உருத்திராகூஷங்கள் சிரேஷ்டமானவைகளாம். அம்மணிகள் சிவபூஜையில் அணியத்தக்கவைகளாம்.

அணியும்முறைமை எங்ஙனமெனின்! சிகையில் ஒன்றும், சிரசில் முப்பத்திரண்டும், கண்டத்தில் முப்பத்தாறும், கண்டத்தடியில் ஐம்பதும், தோள்களில் தனித்தனி பதினாறும், மணிகட்டுகளில் தனித்தனி பன்னிரண்டும், உதரபந்தனமாக ஐம்பதும், உபவீதமாக நூற்றெட்டும் அணிதல்வேண்டும். கண்டத்திலணியுமாலை இரண்டாகவும் மூன்றாகவும் அணிதல்வேண்டும். இவ்வாறணிதலேயன்றி குண்டலம் கிரீடம் கர்ணபூஷணம் முத்தாரம் தோள்வளை கடகமுதலாகச் சொல்லப்பட்ட ஆபரணங்களைப்போலும் செய்து அணிதல்வேண்டும்.

அக்காலமன்றி தூங்கும்போதும் ஏதேனும் பானஞ்செய்யும்போதும் மற்றெத்தொழிலைச் செய்யும்போதும் உருத்திராகூஷதாரணம் இல்லாதிருத்தல்கூடாது. அம்மாலையினளவுயாதெனின்! முப்மதுமணிகள் ஐந்நூறுமணிகள் ஆயிரமணிகள் இம்மூவகையும் முறையே அதமம் மத்திமம் உத்தமம் எனச்சொல்லப்படும்.

சிரசில் ஈசானமந்திரத்தாலும், காதுகளில் தற்புருஷமந்திரத்தாலும், நெற்றியிலும் இருதயத்திலும் அகோரபீஜமந்திரத்தாலும் வயிற்றில் வாமதேவமந்திரத்தாலும், ஏனைய அங்கங்களில்அங்கமந்

திரங்களானும் உருத்திராக்ஷத்தைத் தரிக்கவேண்டும். உருத்திராக்ஷத்தைக் கயிற்றில் மூலமந்திரத்தால் கோர்க்கவேண்டும். பரத்துவத்தைப் பிரகாசப்படுத்துகிற ஏகமுக உருத்திராக்ஷத்தைத்தரிப்பவனுக்குப் பரதத்வம் பிரகாசிக்கும். அர்த்தநாரீசமாகிய இரண்டுமுக உருத்திராக்ஷந் தரிப்பவனுக்கு அவ்வீஸ்வரனுடையபிரீதியுண்டாகும். திரேதாக்கினிசொரூபமாகியமூன்றுமுகஉருத்திராக்ஷந் தரிப்பவனுக்கு ஸ்திரீயத்திநீங்கி அக்கினிதேவனுடைய சந்தோஷங்கிடைக்கும். பிரமனது சொரூபமாகியநான்குமுகஉருத்திராக்ஷம் தரிப்பவனுக்கு சம்பத்தும், ஆரோக்கியமும், ஞானசம்பத்தும், தேகசுத்தியும் உண்டாகும். பஞ்சப்பிரஹ்ம சொரூபமாகிய ஐந்துமுக உருத்திராக்ஷம் தரிப்பவனுக்கு மஹேஸ்வரனுடைய சந்தோஷங்கிடைக்கும். சுப்பிரமண்யசொரூபமான ஆறுமுகஉருத்திராக்ஷந்தரிப்பவனுக்கு அவரது அனுக்கிரகங்கிடைக்கும். இந்த ஆறுமுகஉருத்திராக்ஷத்துக்கு விநாயகரையுந் தெய்வமாகக் கூறுவர். சப்தமாதருக்களைத் தெய்வமாகவுடைய ஏழுமுகஉருத்திராக்ஷந்தரிப்பவனுக்கு மகாசம்பத்தும், ஆரோக்கியமும், ஞானசம்பத்தும் பரிசுத்தத்தன்மையு முண்டாகின்றன. இதற்குச் சூரியனையும் தெய்வமாகச் சொல்லுவர். அஷ்டவசுக்களைத் தெய்வமாகவுடைய எட்டுமுக உருத்திராக்ஷம் தரிப்பவனுக்கு அஷ்டவசுக்கள் கங்கை இவர்களுடைய பிரியமும் சத்யத்வமு முண்டாகும். இயமனைத் தெய்வமாகவுடைய ஒன்பதுமுக உத்திராக்ஷந்தரிப்பவனுக்கு இயமபயமுண்டாகாது. தசதிக்தேவதா சொரூபமாகிய பத்துமுக உருத்திராக்ஷம் தரிப்பவனுக்கு அந்தந்ததேவதா பிரீதி யுண்டாகும். ஏகாதச ருத்திர சொரூபமாகிய பதினொருமுக உருத்திராக்ஷந் தரிப்பவனுக்குச் சகலசவுக்கியமும் உண்டாகும். இதற்கு இந்திரனையும் தெய்வமாகக் கூறுவர். விஷ்ணுஸ்வரூபமான பன்னிருமுக உருத்திராக்ஷந் தரிப்பவனுக்கு அவர் பிரீதியுண்டாகும். இதனைப் பன்னிரு சூரிய சொரூபமெனவும் கூறுவர். மன்மதசொரூபமான பதின்மூன்றுமுக உருத்திராக்ஷந்தரிப்பவனுக்கு அவனதுபிரீதியும்காமசித்தியும் சுகமும் உண்டாகும். உருத்திரமூர்த்தி சொரூபமாகிய பதினான்குமுக உருத்திராக்ஷம்தரிப்பவனுக்குச்சர்வவியாதிகளும்நீங்கி ஆரோக்கியமுண்டாகும். மத்யம மாம்சம் வெண்காயம் பூண்டு முருங்கை இலேஷ்மாதகம் விட்வராகம் இவைகளை உருத்திராக்ஷந்தரிப்பவன்

நீக்கவேண்டும். கிரகணகாலம் விஷு சங்கிரமணகாலம் உத்திராயனம் தக்ஷிணாயனம் அமாவாசை பௌர்ணமி இவைபோன்ற புண்ணியதினங்களில் மனிதன் தரிப்பானாயின் அவன் சர்வபாவத்தினின்றும் விடுபடுகிறான் என்றனர். (சு-ம்-சக)

ஏழாம் அத்தியாயம் முற்றிற்று.

உ

லப்தஸம்பத்ஸமுந்நத்யை நமஃ.

எட்டாம் அத்தியாயம்.

பூதசுத்தி

நாராயணர் கூறுகின்றார்:—ஓ நாரதரே! பூதசுத்திக்கிரமத்தை கூறுகின்றேன் கேட்பீராக:—குண்டலினி என்னும்பரதேவதையை மூலாதாரத்திலிருந் தெழுப்பி சுழும்நைமார்க்கத்தை யடைந்து பிரமரந்திரத்தைப் பொருந்தியிருப்பதாக ஸ்மரித்துப் பின்ஹம்சமந்திரத்தினால் சீவனைப் பரப்பிரஹ்மத்தில் சேர்த்து அதன்பின் பிருதிவிமண்டலத்தை, பாதமுதல் முழங்கால்வரைக்கும் நாற்கோணமாயும் வச்சிரரூபமாயும் லம்என்னும் பீஜமுடையதாயும்பொன்வர்னமுடையதாயும், அப்புமண்டலத்தை முழங்கால் முதல் நாபிவரையில் அர்த்தசந்திரனைப்போன்றதாயும் கோகநதரூபமாயும் வம் என்னும் பீஜமுடையதாயும் வெண்ணிறஞடையதாயும், அக்கினிமண்டலத்தை நாபிமுதல் ஹ்ருதயம்வரையில் முக்கோணமாயும் சுவஸ்திகத்தோடு கூடினதாயும் ரம்என்னும்பீஜமுடையதாயும் ரக்தவர்ன முடையதாயும், வாயுமண்டலத்தை ஹ்ருதயமுதல் புருவமத்திவரையில் விருத்தமான ஆறுபிந்துக்களை அடையாளமாக வுடையதாயும் யம்என்னும் பீஜமுடையதாயும் தூம்பறநிவமுடையதாயும் ஆகாயமண்டலத்தை புருவமத்திமுதல் பிரமரந்தரம் வரையில் விருத்தமாயும் நிர்மலமாயும் மனோகரமாயும் ஹ0 என்னும் பீஜமுடையதாயும் ஸ்மரிக்கவேண்டியது. இவ்வாறு ஒவ்வொருபூதத்தை

யுஞ்சிந்தித்துத் தனித்தனியாகப் பூமியைச்சலத்திலும், சலத்தை அக்கினியிலும், அக்கினியை வாயுவிலும், வாயுவை ஆகாயத்திலும் ஒடுக்கி, ஆகாயத்தை மகாஅகங்காரத்திலும், அதை மஹத்தத்துவத்திலும், அதைப் பிரகிருதியிலும், அதை மாயையிலும், அதை ஆத்மாவிலும் ஒடுக்கி யாவும் சுத்தஞான சொரூபமானதாகச் சிந்திக்கவேண்டும்.

பின்னர் பாவபுருஷனை வயிற்றின் இடதுபக்கத்திலிருக்கின்றவனுகவும் கரியநிறமுள்ளவனுகவும் அங்குஷ்டபரிமாண முள்ளவனுகவும் பிரமஹத்திரூபமான சிரசுள்ளவனுகவும் பொன்னைத் திருடியபாவமாகிய கையையுடையவனுகவும், சுராபானபாவமே இருதயமாகவும் குருபத்தினியைப் புணர்ந்தபாவமே இடையாகவும் உபபாதகங்களே இரண்டுகால்களாகவும்கட்கமிருகத்தினுடைய தோலைத் தரித்தவனுகவும் துஷ்டனுகவும் கீழ்நோக்கிய முகமுடையவனுகவும் காணச் சகிக்கக் கூடாதவனுகவும் சிந்தித்து வாயு பீஜத்தை ஸ்மரிக்கின்றவனுய் வாயுவைப்பூரித்து பாபபுருபத்தை வற்றச்செய்ய வேண்டும். பின்னர் அதனையும் சரீரத்தையும் வன்னிபீஜத்தால் தகித்துச் சாம்பராக்கிக் கும்பகஞ்செய்து வாயுபீஜத்தால் ரேசித்துஅந்தப்பஸ்மத்தை வெளிப்படுத்தி அமிர்தபீஜத்தால் நனைத்து பிருதிவிபீஜத்தால் பொன்னண்டம்போல் திரட்டி முகுராகாரமாகப் பாவித்து ஆகாயபீஜத்தால் முன்போல் கடினமாக்கி சிரசுமுதல் பாதபரியந்தமான அங்கங்களை எற்படுத்தி அதில் ஐம்பூதங்களை பிரவேசிக்கச்செய்து,பின்னர் சோகமென்னும் மந்திரத்தால் ஆத்மாவை இருதயகமலத்தில் சேர்த்து சிவத்தோடுகூடியிருக்கிற சுதாமயமாகவிருக்கும் குண்டலினிசக்தியை இருதயகமலத்தில் ஸ்தாபித்து மூலாதாரத்தையடைந்தவளாகப் பாவித்து இரக்தசமுத்திரத்தில் ஓர்பெரியகப்பல்போல் பிரகாசிக்கின்ற செந்தாமரைமலரில் பிரகாசிக்கின்றவளாயும், தாமரைமலர்போன்ற கரங்களில் சூலம் கரும்புவில் அங்குசம் பஞ்சபாணம் இவைகளை அடையாளமாகத் தரித்தவளாயும், சிருக்கையும் கபாலத்தையும் தரித்தவளாயும் முக்கண்ணுடையவளாயும் பெரிய ஸ்தனகும்பங்களுடையவளாயும், பாலசூரியனைப்போன்றநிறமுள்ளவளாயும், சிரேஷ்டமாயுமுள்ள பிராணசத்தி எங்கட்குச் சுகத்தைச் செய்யட்டும் என்று பரமாத்ம சொரூபியான பிராணசத்தியைத் தியானித்து சர்வாதிகார சித்திக்காக

பஸ்மதாரணஞ் செய்யவேண்டும். இனிச்சுருதி ஸ்மிருதிகளில்சொல்லப்பட்டிருக்கிற பஸ்மதாரண விதியையும் அதன் பலத்தையுங் கூறுகின்றேன் என்றனர்.

எட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

ஹ்ரீங்காரிண்யைநமஃ

ஒன்பதாம் அத்தியாயம்.

சிரோவிரதவிதி

நாராயணர் கூறுகின்றார்:—சிரோவிரதமென்கிற பஸ்மவிரதத்தை எந்தப்பிராமணர்கள் விதிப்படி அநுஷ்டிக்கின்றார்களோ அவர்களுக்கு அஞ்ஞானத்தைப் போக்கடிப்பதாகிய பிரஹ்மவித்தையை உபதேசித்தல வேண்டும். ஏனெனில்.சிரோவிரதத்துக் குரிமையாகாதவர் பிரஹ்மவித்தைக்கும் உரியராகார். இதில் சிரத்தையற்றவர் சுருதிகளிலும் ஸ்மிருதிகளிலும் சொல்லப்பட்டஆசாரங்களையுடையவராயினும் அவை அவர்களுக்கு த்ருதொருபயனையுஞ்செய்யமாட்டா. இந்தவிரதமானது பூர்வீகர்களால் பூர்வீகமாக அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இந்தச் சிரோவிரதத்தினாலேயே பிரமனுதிதேவர்களெல்லாம் தெய்வத்தன்மையடைந்து தேவர்களானார்களேயன்றி வேறெவ்வாற்றானும் ஆனார்களில்லை.அவர்கள் தமக்கு அஞ்ஞானசம்பந்தத்தாலும் அசுரராதியுத்தங்களாலும் வரும் சகலபாபதோஷ பிரஹ்மத்தியாதிகளை அவ்விரதமொன்றினை நீங்கப்பெற்றுச் சுகமடைகின்றனர்.

இந்த மகிமையறிந்த புத்திமான்கள் சிரோவிரதத்தை விதிவத்தாக அநுஷ்டித்து வருகின்றனர். இந்தப்பஸ்ம விரதத்தைச் சிரோவிரதமென்று.அதர்வசிரசால் சொல்லப்பட்டது. ஆகையால் எல்லாவிரதங்களுக்கும் சிரசாயிருகின்ற இந்தப்பஸ்மவிரதத்தை யாரொருவர் அநுட்டிக்காமற் போகின்றார்களோ அவர்களுக்கு வேறு எந்தவிதமான விரதங்களாலும் புண்ணியங் கிடைத்தலரிது.

இந்தச் சிரோவிரதமானது வேதத்தினுடைய சாகாபேதங்களால் அநேகவிதமான பெயர்பெற்று வழங்கிவருகின்றது. சார்த்தூலமென்னும் சாகையில் இதனைச் சிறப்பாகச்சொல்லப்பட்டிருக்கிறது. சிவபெருமானுக்கு எப்பொழுது நீங்காதுள்ள சித்குண சமூகங்களில் ஒவ்வொரு குணவிசேஷங்களை ஒவ்வொருபெயரிட்டு வேதசாகைகள் கூறினும் அவ்வக்குண விசேஷங்களைக்காட்டும் அவ்வப் பெயர்களெல்லாம் அச்சிவபெருமானையே குறிப்பிப்பது போல் பஸ்மவிரதமும் சாகாபேதங்களால் வெவ்வேறுபெயர்களைப் பெற்றுவழங்கிவரினும் அவையெல்லாம் பஸ்மவிரதமாகிய அச்சிரோவிரதத்தையே குறிப்பிப்பதாகும். சிரோவிரதத்தைக் கொள்ளாதவன் ஏனையவிரதங்களையெல்லாம் கொண்டானாயினும் கொள்ளாதவனேயாவன். சிரோவிரதத்தைக் கைக்கொண்டவன் எல்லாவிரதங்களையும் எல்லாவித்தைகளையும் உடையஅதிகாரியே யாவான். இதிற் சந்தேகமில்லை. இவ்விரதம் பாவக்காட்டைக் கொளுத்தும் நெருப்பாகவிருத்தலானும் சகலவித்தைகளையும் பெறுதற்குச் சாதனமாகவிருத்தலானும் அதர்வணமானது சூக்ஷ்மமாகவும் சூக்ஷ்மார்த்தமாகவும் பிரகாசப்படுத்தியிருத்தலானும் மிகப்பிரீதியோடு இதனை நாடோறும் அனுஷ்டித்து வரவேண்டும்.

இச்சிரோவிரதத்தின் விதி யாதெனின்! சுத்தமாகிய பஸ்மத்தை "அக்னிரிதி" என்றற்றொடக்கத்தனவாகியமந்திரங்களை யுச்சரித்து சகல அங்கங்களிலும்பொருந்தச் சரீரமுற்றும்உத்தூளனஞ் செய்துகொள்ளுதலேயாம். சந்தியாகாலத்தில் இவ்வாறுசரீரமுற்றும் பூசிக்கொள்ளுதல் விசேடமாம். அன்றியும்ஞானேதயமானது எவ்வளவுகாலத்தில் உண்டாகும்படியான பரிபாகம்வருமோ அவ்வளவுகாலம் உத்தமனானவன் இவ்விரதத்தைவிடாது அனுஷ்டித்து வரவேண்டும். காலநிர்ணயஞ்செய்து சங்கற்பித்துக் கொள்ளவேண்டுமாயின்பன்னிரண்டுவருடமாவதுஒருவருடமாவது, ஆறுமாதமாவது, மூன்றுமாதமாவது; இவ்விரதத்தை யநுஷ்டிக்கிறேனென்று சங்கற்பித்துக் கொள்ளலாம்.

இவ்வாறு ஞானேதயத்தை யுத்தேசித்து காலத்தை நிச்சயித்து சங்கற்பமுஞ் செய்து சிரோவிரதமெனப்படும் பஸ்மஸ்நானத்தை விதிப்படிவிடாது அனுஷ்டித்து வருபவன் எவனோ அவனுக்கு எந்தகுருவானவன் உபதேசிக்காமலிருக்கின்றானோ அவனு

டையவித்தையும் குணமும் நசித்துப் போகுமல்லவா! சம்பத்சொரூபமாகிய சர்வேஸ்வரன் காருண்யமுடையவரல்லவா! அவ்வாறே பிரமவித்யாகுருவும் கருணையுடையவராக இருத்தல் வேண்டுமல்லவா! ஏனெனில் ஆயிரஞ்சன்மங்களில் எவர்கள் வேதகர்மங்களை அனுஷ்டித்துவருகின்றார்களோ அவர்களுக்கு சிரோவிரதத்தில் சிரத்தையுண்டாகுமே யன்றி ஏனையோர்க்கு ஒருபோதும் உண்டாகாதல்லவா! அநேகசென்மங்களில் வேதகர்மங்களை அநுஷ்டிக்காதவனுக்கு அஜ்ஞானம்மேலிட்டு அதனால் சிரோவிரதத்தில் துவேஷமுண்டாகுமேயன்றி சிரத்தையுண்டாகாது. அவ்வத்துவேஷத்தால் அவனுக்கு ஆத்மஜ்ஞானம்உண்டாகாது. ஆகலான்எவர்கள்சிரோவிரதஸ்நானஞ் செய்தவர்களோ அவர்களே பிரம்ஹவித்யோபதேசத்துக்கு நேரான அதிகாரிகள். ஏனையோர்கள் அதிகாரிகளாகார். இப்படியே வேதத்திலும் எந்தப்பிரமாணர்களால் பாசுபதவிரதம் அன்போடு அநுஷ்டிக்கப்பட்டதோ அவர்களுக்கேபிரஹ்மோபதேசம் செய்யத் தக்கதென்று சாசனஞ் செய்திருக்கின்றது. வேதாந்தங்களினும் எவன் பசுவோ அவன் அந்தப் பசுத்தன்மையை இவ்விரதத்தினாலேயே நீக்கிக்கொள்வான்; அதனால் அவன் மீண்டும்பசுத்தன்மையடையும் பாபிஷ்டனாகான். என்று*நிச்சயித்திருக்கிறது.

திரியம்பகமந்திரத்தாலும் தாரகத்தோடு கூடிய சிவமந்திரத்தாலும் திரிபுண்டரதாரணம் தினந்தோறுஞ் செய்யவேண்டுமென்று ஜாபாலோபநிடதத்தால் சொல்லப்பட்டிருக்கிற படியால் கிருகஸ்தன் - மூன்றுவர்த்தி ஓங்காரத்தோடும் ஹ்ரஸ்மந்திரத்தாலும் பிக்ஷுகன் திரியம்பகமந்திரத்தாலும், பிரணவத்தாலும், சிவமந்திரத்தாலும், பிரமசாரி - மேதாவிமுதலிய மந்திரங்களாலும், தினம் திரிபுண்டரந் தரித்தல் வேண்டும். பிராமணன் நெற்றியில் குறுக்காக விதிப்படிப் பிறந்த பஸ்மத்தினாலாவது தினந்தோறும் திரிபுண்டரந் தரிக்கவேண்டும். ஆதியாயுள்ளபிராமணன் திரிபுண்டரம் எப்போதும் பஸ்மத்தினாலேயே தரிக்கவேண்டும். ஒழுங்குவர்க

---

* பலவிரதங்களினும் பாசுபதவிரதமொன்றே வேதாந்த வுபதேசத்துக்கு சாக்ஷாத்சாதனமென்று வேதமும், அந்தசிரோவிரதமே பசுத்தன்மையை யொழித்து சிவத்தன்மையைக்கொடுக்கும் ஆற்றலுடைய தாகலான் அவனுக்கு ஞானசாதனமாகக் கூறும் சிரவண நிதித்யாசனாதிகள் வேண்டாமென்று வேதாந்தமும் அநுபவிட்டுப்பிரமாண பூர்வகமாய்க் கூறியுள்ளன வென்க.

வே!ளவர்கள் திரிபுண்டரம் தரிப்பார்களோ அவர்களோ பிராமணர்கள் வேதசித்தமான திரிபுண்டரதாரணத்தையும் தேவகுண்டனத்தை யும் சிவலிங்க பூஜையையும் மோகத்தினாலும்விடக்கூடாது. சந்தியா சிகள் திரியம்பகமந்திரத்தாலும்தாரகத்தோடுகூடின பஞ்சாக்ஷரத் தாலும் பிரணவத்தாலும் நெற்றியிலும் இருதயத்திலும் இரண்டு கைகளிலும் திரிபுண்டரம் தினந்தரிக்கவேண்டும். பிரமசாரி கவு ணபஸ்மாவை திரியாயுஷ மந்திரத்தாலும் மேதாவிமந்திரத்தாலும் திரிபுண்டரமாகத்தினம் தரிக்கவேண்டும். சூத்திரன் நமோந்தமான சிவமந்திர மொன்றினாலேயே உத்தூளனமும் திரிபுண்டரமும் பக்தி யுடன் தரிக்கவேண்டும். எல்லாத்தருமங்களிலும் இதுவேமேலான தென்று சிரேஷ்டமான திரிபுண்டரதாரணமும் உத்தூளனமும் நாடோறும் பக்தியோடு தரித்தல் வேண்டும்.

அக்னிஹோத்திர பஸ்மத்தை யாவது விரஜாஹோம பஸ்மத் தையாவது ஆதரவுடன் எடுத்துச்சுத்தமானபாத்திரத்தில் வைத்து க்கொண்டுகைகால்களைச் சுத்திசெய்து சுத்தமான விடத்திலிருந்து ஆசமனஞ்செய்து மனதைச்சுவாதீனஞ்செய்துகொண்டவனுப்பஞ் சபிரஹ்ம மந்திரத்தால் சிறிது சிறிதாகவும்மெதுவாகவும் எடுத்துக் கொண்டு மூன்றுவர்த்தி பிராணயாமஞ்செய்து அக்னிரிதிமுதலிய ஏழுமந்திரங்களால் மூன்றுவர்த்தி மந்திரித்து ஓமாபோஜ்யோதி: என்கிற மந்திரத்தையுச்சரித்துத் தியானித்து அக்னிரிதிமுதலிய மந்திரங்களைச்சொல்லி முதலில் வெண்மையான பஸ்மத்தால் சரீ ரத்தை உத்தூளனஞ் செய்யவேண்டும். இவ்வாறு செய்பவன் விர க்தனுய் பாபமில்லாதவனுகின்றன். அவ்விஷயத்தில் சந்தேகமி ல்லை. பின்னர் சலாதியனும் ஜகன்னாதனுமான விஷ்ணுமூர்த்தியை த்தியானித்து பஸ்மத்தை சலத்தோடுகலந்து அக்னிரிதியாதி மந்தி ரத்தால் குழைத்து சாம்பவமூர்த்தியைத் தியானித்து ஊர்த்துவபு ரகில் ஊத்தூளனஞ் செய்து, அந்தத்தியானத்தினாலேயேபிரமரூ பமாகிய வெண்ணீற்றினால் நெற்றி மார்பு தோள் இந்த விடங் களில் ஆச்சிரமத்துக்குத் தக்கபடி மத்திமை அநாமிகை அங்குஷ்ட விரல்களினால் திரிபுண்டரத்தை அநுலோமவிலோமமாக மூன்று காலமும் பக்தியோடும் தரிக்கவேண்டும். (சு - ம். சகூ.)

ஒன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

ஶ்ரீங்காராதயேநமஃ

பத்தாம் அத்தியாயம்

கவுணபஸ்மவர்ணனம்.

நாராயணர் கூறுகின்றார்:—வேதமறிந்தவர்களுக்குள் சிறந்த பிரஹ்மருஷியே அஞ்ஞானத்தை நீக்கும் ஞானசாதகமாகவிருக்கின்ற கவுணபஸ்மம் நித்தியாக்கினி விரஜாக்னி ஔபாசனக்னிசமிதாக்நி பசனக்நி தாவாக்னி முதலிய பல அக்னிகளில் உண்டாகிற படியால் பலபெயர்களைப்பெறும். ஓமுனிவரே! நித்தியாக்னியாகிய அக்னிஹோத்திரத்தினுண்டானதும் விரஜாக்னியிலுண்டானதுமான பஸ்மம் அந்தணர் முதலிய மூன்று வருணத்தவர்களும், ஔபாசனக்நிபஸ்மம் கிருதஸ்தர்களும், சமிதாக்நிபஸ்மம் பிரமசாரிகளும், பரம்பரையாய் வேதாத்தியயனஞ் செய்துவரும் அந்தணரது வீட்டிலுள்ள பசனக்னிபஸ்மம் சூத்திரர்களும், தாவாக்நியென்னும்காட்டுத்தீயிலுண்டாகிய பஸ்மம் ஏனையவருணத்தவர்களும் தரித்தல் வேண்டும்.

இங்ஙனங் கூறியவைகளில் விரஜாக்நிபஸ்மோத்பத்தி எவ்வாறெனில்,—தீக்ஷிதன் சித்ராபௌர்ணமிக்கு முன்வரும்திரயோதசிதிதியில் தன்னிருப்பிடத்திலாவது புண்ணியக்ஷேத்திரத்திலாவது பூந்தோட்டத்திலாவது வனத்திலாவது ஸ்நானஞ்செய்து நித்யகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு ஆசாரியரையடைந்து அவரைப்பூசித்துநமஸ்கரித்து அநுக்ஞைபெற்றுநித்தியபூஜையைவிசேஷமாகச்செய்து பின்னர் "சுக்லாம்பரதரம்" என்பதாதிகளால் விக்நேஸ்வரரைப் பிரார்த்தித்து சுத்தயக்ஞோபவீதத்தையும் வெண்மையான புஷ்பமாலையும் அணிந்துகொண்டுகிழக்குமுகமாகவாவது வடக்குமுகமாகவாவது தர்ப்பாசனத்திலிருந்து தர்ப்பையோடு கையை முஷ்டியாகப்பிடித்து மூன்றுதரம் புராணயாமஞ் செய்து மஹாதேவரையுந் தேவியையுந் தியானித்து அவர்களிடம் இவ்விரதத்தைச்சரீரமுள்ளவளாவது பன்னிரண்டு வருடமாவது ஆறுவருடமாவது மூன்றுவருடமாவது ஒருவருடமாவது ஆறுமாதமாவது மூன்றுமாதமாவது ஒருமாதமாவதுபன்னிரண்டுகாளாவது ஆறுகா

ளாவது மூன்றுநாளாவது ஒருநாளாவது செய்கிறேனென்று விஞ் ஞாபநவழியாகச் சங்கற்பித்துக்கொண்டு பின்னர் விரஜாஹோம காரணமாய் விதிப்படி அக்னியைக்கொண்டுவந்து நெய்யாலும் சமித் தாலும் சருவாலும் பலமந்திரத்தால் ஹோமஞ்செய்ய, தத்துவசுத் தியைத் தன்னிடம் மனசிலுல்செய்து மந்திரங்களெல்லாம் தனது தேகத்தைச் சுத்திசெய்யவேண்டுமென்று ஸ்மரிக்கவேண்டும். அதா வது:—பிரதிவ்யாதி பூதங்களும் சப்தமுதலிய தன்மாத்திரைகளும் வாக்முதலிய கன்மேந்திரியங்களும் சுரோத்திரிய முதலிய ஞானே ந்திரியங்களும் துவக்குமுதலிய சப்ததாதுக்களும் மனம் புத்தி அகங்காரங்களும் சத்வமுதலிய மூன்று குணங்களும் மூலப்பிரகி ருதியும் புருஷன் ராகம் வித்தை கலைநியதி காலம் மாயையும், சுத் தவித்தை ஈஸ்வரன் சதாசிவன் சத்திசிவன் முதலியதத்துவங்களும் எனதுதேகத்தில் சுத்தியடைய வேண்டுமென்று சிந்தித்து விரஜா மந்திரங்களால் ஓமஞ்செய்து சுத்தனுய் விடுதலாம். பின்னர் கோம யத்தைக் கொண்டுவந்து பிண்டமாகச்செய்து அபிமந்திரித்து அக் னியில் வைத்து அத்தினத்தில் அந்த அக்னியை ரக்ஷித்து விடியற் காலத்தில் சதுர்த்தசியில் முன்சொல்லியவாறு சம்ஸ்காரங்கள்செ ய்து அன்று ஆகாமில்லாதவனுய் மிகுந்த காலத்தைக்கழிக்க வே ண்டியது. பௌர்ணமி உதயத்தில் முன்போல் ஓமஞ்செய்து ஓமா ந்தத்தில் சிவாக்கினியை உபசங்காரஞ் செய்தலாகும். இந்த விரஜா க்னிபஸ்மத்தை எத்தனத்தோடு எடுத்து சடையுடையவனுயினும் முண்டிதனுயினும் சிகையுடையவனுயினும் ஸ்நானஞ்செய்து நூ ணமில்லாமலிருப்பானுகில்திகம்பரனுகவாவது காஷாயதாரிபாகவாவது கிருஷ்ணசர்மதாரியாகவாவது ஏகவஸ்திர முள்ளவனுகவாவது நார் மடிதரித்தவனுகவாவது தண்டமுள்ளவனுகவாவது முஞ்சியுள்ளவ னுகவாவது இருத்தல் வேண்டும். பின்னர் பாதங்களைச் சுத்திசெ ய்து இரண்டுதரம் ஆசமித்து தனது சரீரத்தை சகளீகரணஞ்செ ய்து மேற்படிவிரஜாக்கினியாண்டான அந்தப்பஸ்மத்தைஎடுத்து "அக்னிரிதி" முதலிய மந்திரங்களாலும் அதர்வண மந்திரங்களா லும் முறையாக சிரசுமுதல் பாதபரியந்தமான அங்கங்களைத்துடை த்து அம்மந்திரங்களாலேயே அவ்வங்கங்களைத் தொட்டுப் பின்னர் பிரணவத்தாலாவது சிவ மந்திரத்தாலாவது உத்தூளனஞ் செய்து திரிபுண்டரத்தை "திரியாயுஷ" மந்திரத்தால் அணிந்துசிவபாவனை யையடையவேண்டும்.

இவ்வண்ணமான இப்பாசுபத விரதத்தை மூன்று காலத்திலேயும் செய்ய வேண்டும். இந்தவிரதமானது புத்திமுத்தியைக் கொடுத்து பசுத்வத்தை நிவிர்த்தி செய்யுமாதலால் பாசுபதவிரதத்தைச்செய்து பசுத்துவத்தை விட்டு மகாதேவரும் இலிங்க மூர்த்தியுமாகிய சதாசிவமூர்த்தியைப் பூசித்தல் வேண்டும். இந்த பஸ்மஸ்நாநமானது மஹாபுண்யகரமாயும் சர்வசவுக்கியகரமாயும் ஆயுஷ்கரமாயும் திடகரமாயும் ஆரோக்யகரமாயும் சம்பத்தை விர்த்தி செய்கிறதாயு மிருக்கின்றது. ஆதலால் சகலசம்பத்தும் விருத்தியடைவதற்காகவும் ரக்ஷார்த்தமாகவும் மங்களார்த்தமாகவும் பஸ்மத்தைத் தரிக்கவேண்டும். அதைத் தரிப்பவர்களுக்கு மகாமாரிபயமில்லை. இப்பஸ்மம் மூன்றுவிதம். இனி அதனைக் கூறுகிறேன் கேட்பீராக என்றனர். (சு - ம் - ஈஉ.)

பத்தாம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

ஹரீம்மத்யாயைநமஃ

பதிஞென்றும் அத்தியாயம்.

பஸ்மத்ரை வித்தியம்.

நாரதர் கூறுகின்றார்:—ஓ தேவருஷியே! பஸ்மம் மூன்றுவிதம் என்றது எப்படி? அதனைக்கேட்க மிக்க ஆசையுடையவனாக இருக்கின்றேன் என்று சொல்ல, நாராயணர் மகாபாதகங்களை நாசஞ் செய்கிறதாயும் மகாகீர்த்தியைஉண்டுபண்ணுவதாயுமுள்ள பஸ்மம் சாந்திகம் பௌஷ்டிகம் காமதம் என மூவகைப்படுமென்று அவற்றைச்சொல்லத்தொடங்கினர்.

சாந்திகபஸ்மம் - பசுவின் யோனிசம்பந்தமாகவே கோமயத்தை விதக்கையிலெடுத்துபிரஹ்மமந்திரத்தால் தகிப்பதாம். பௌஷ்டிகபஸ்மம்—பசுவின்யோனியிலிருந்து பூமியில் விழுவதற்குமுன் பிடித்து ஷடங்கமந்திரத்தால் தகிப்பதாம். காமதபஸ்மம் - பசுயின் போனினின்றும் கீழேவிழுந்துபூமிசம்பந்தப்பட்டகோமயத்தைக் கையிலெடுத்து பிரசாதமந்திரத்தால் தகிப்பதாம்.

இந்தக்காமதபஸ்மத்தின் விதியாவதுயாதெனின்! பௌர்ணமி அமாவாசை அஷ்டமி முதலிய திதிகளில் பிராதக்காலத்தி லெழுந் திருந்து பரிசுத்தனுய் தொழுவத்தில்போய் கோக்கூட்டத்தை நமஸ் கரித்து பிராமணன்முதலிய நான்குவருணத்தவருக்கும் முறையே உரிமையாகச்சொல்லப்பட்ட வெண்மை செம்மை கபிலம் கறுப்பு என்னும் நிறமுள்ள பசுக்களின் கோமயங்களைப் பிரசாதமந்திரத் தினு லெடுத்து இருதயமந்திரத்தினுல் உருட்டி சூரியகிரணத்தால் உலர்த்தி மனேகரமாயும் பரிசுத்தகரமாயுமுள்ள விடத்தில் உமி யோடாவது பத்ரோடாவது பிரசாதமந்திரத்தால் வைத்து அர ணியினு லுண்டான அக்னியினுலாவது ஸ்ரோத்திரியினுடைய வீட் டினுள்ள அக்னியினுலாவதுசிவபீஜமந்திரத்தினுல்தகித்துப்பின்னர் அவ்வக்னி குண்டத்திலிருந்து அப்பஸ்மத்தை யெடுத்து புதியபா த்திரத்தில் வைத்து அதனேடு தாழம்பூ பாடலிபுஷ்பம் வெட் டிவேர் சந்தனம் குங்குமப்பூ பச்சைகர்ப்பூரம் முதலியவைகளை சத்யோஜாத மந்திரத்தால் சேக்கக்கடவன். இந்தப்பஸ்மத்தி னுல் ஸ்நானஞ்செய்பவன் முன் சலஸ்நானஞ்செய்து செய்யவே ண்டும். சலஸ்நானஞ்செய்ய அசக்தனுயின் பஸ்மஸ்நானமொன் றையே செய்யலாம். எவ்வாறெனில்! கைகால்களைச் சலத்தினுல் சுத்திசெய்துகொண்டு ஈசானமந்திரத்தால் சிரசையும், தற்புருட மந்திரத்தால் நெற்றியையும், அகோரத்தால் இருதயத்தையும், வாமதேவத்தால் நாபியையும், சத்யோஜாதத்தால் மற்றஅங்கங் களையும் பஸ்மத்தினுல் உத்தூளனஞ்செய்து முன் உடுத்திருந்த வஸ்திரங்களைக் கழித்து சுத்தமான வஸ்திரந்தரித்து கைகால்களை அலம்பிக்கொண்டு ஆசமனஞ்செய்து உத்தூளனமில்லாமல் தர்ச் சனி மத்திமை அநாமிகை என்னும் மூன்றுவிரல்களால் முற்பக லில் சலத்தோடும், பிற்பகலில் சலமின்றியும் தலை நெற்றி கழுத்து இருதயம் தோள்முதலிய இடங்களில் திரிபுண்டரந்தரித்தல்வேண் டும். ஐந்துவிரலால் சிரசில் பிரசாதமந்திரத்தாலும், மூன்றுவிர லால் நெற்றியில் சிரோமந்திரத்தாலும், மத்திமைவிரலால் வலக் காதில் சத்யோஜாதமந்திரத்தாலும் இடக்காதில் வாமதேவமந்திர த்தாலும், கழுத்தில் அகோரமந்திரத்தாலும், மூன்றுவிரலால் ஹ்ரு தயத்தில் இருதயமந்திரத்தாலும், வலக்கையில் சிகாமந்திரத்தா லும், இடக்கையில் கவச மந்திரத்தாலும், மத்திமைவிரலால் நாபி யில் ஈசானமந்திரத்தாலும் தரிக்க வேண்டும்.

மூன்றுரேகைகளில் கீழ்ரேகை பிரஹ்மாவென்றும் மத்தியரேகை விஷ்ணுவென்றும் மேல்ரேகை ம்ஹேஸ்வரன் என்றுஞ்சொல்லப்படும். ஒருரேகைக்கு ஈஸ்வரனே தேவதையாம். சிரோமத்யத்தில் பிரமனும். நெற்றியில் ஈஸ்வரனும், காதுகளில் அஸ்வனி தேவதைகளும், கண்டத்தில் கணேச தேவதையுமாம். பிராமணன் தவிர மற்றமூவர்கள் உத்தூளனஞ்செய்தல்கூடாது. மற்றைச்சாதியார் மந்திரமின்றிப் பஸ்மந்தரிக்க வேண்டும் என்றனர். (உஎ)

இருபத்துநான்காம் அத்தியாயம் முற்றிற்று.

ஊ

ஹ்ரீம்சிகாமணயே நமஃ

பன்னிரண்டாம் அத்தியாயம்.

* கல்பாந்தரோக்தரீத்யா பஸ்மதாரணம்.

நாராயணர் கூறுகின்றார்:— ஓதேவருஷியே! இனி சர்வகாம பலத்தையுங்கொடுக்கும் அதிரகஸ்யமான பஸ்மோத்தூளன பலத்தைக்கேட்பீராக. காராம் பசுவினுடைய சாணத்தைப்பூமியில்விழுவதற்குமுன் எடுக்கவேண்டும். கீழேவிழுந்திருக்குமாயின் இளகலாயும் மிகவுங்கடினமாயும் துர்க்கந்தமாயும் விழுந்துசாவதானமாயும் இல்லாமலிருக்குஞ் சாணத்தை மேலுங்கீழுங்கழித்து மத்தியிலிருக்குங் கோமயத்தையெடுத்து உருண்டையாகவுருட்டிசிவாக்னிமுதலிய அக்னிகளில் மூலமந்திரத்தாலிட்டு அக்னியிலிருந்தெடுத்து நன்றாகச் செய்யப்பட்டதாயும் திடமான பொன் முதலிய லோகங்களினுலாவது மரத்தினுலாவது வெண்பட்டினுலாவது சுத்தமான வஸ்திரத்தினுலாவது வேறேதேனும் சுத்தமானவைகளினுலாவது திடமானதாயும் சுத்தமானதாயும் சுத்தி செய்யப்பட்டதாயும் புரோக்ஷிக்கப்பட்டதாயும் சுபகரமாயு முள்ள பாத்திரத்தில் மந்திரத்தினுல் அபிமந்திரித்து பஸ்மாவை வைத்துத் தனத்தைப் போல் காப்பாற்றவேண்டும். எங்கேனும் பிரயாணமாகும்போது பஸ்மத்தைத் தானுவது பரிசாரகனுலாவதுஎடுத்துக்கொள்ளவேண்

---

* கல்பாந்தரங்களிற் சொல்லியவிதிப்படி விபூதிதரித்தல்.

டும். அதனை அயோக்கியனுடைய கையில் கொடுத்தலும், அசுசியானவிடத்தில் வைத்தலும், நீசனுடையபரிசம் நேரிடுதலும், வீசியெறிதலும் தாண்டுதலுங்கூடாது. கல்பங்களில் சொல்லப்பட்ட விதிப்படி பஸ்மத்தை யெடுத்து மந்திரித்து உபயோகப்படுத்த வேண்டும். என்னால் சொல்லப்பட்டதும் ஸ்மிருதிசம்பந்தமானதுமான பஸ்ம விரதத்தைச் செய்கின்றவன் சிவதுல்யனுவான் என்பதிற் சந்தேகமில்லை. வேதோக்த கர்மங்களை யநுட்டிக்கிறவர்களான சைவர்கள் சிவசந்நிதியில் பக்தியோடு பிரார்த்தித்துச் சம்பாதித்த பஸ்மத்தையும், தாந்திரீக பூஜகர்களால் தந்திரோக்த மார்க்கத்தால் சித்தித்த பஸ்மத்தையும் தரிக்கவேண்டுமேயன்றி ஏனையவிடங்களில் பஸ்மங்கொடுக்கப்படுமாகில் வைதிகர்கள் பெற்றுக்கொள்ளக்கூடாது. சாதாரணமான பஸ்மாவை சூத்திரர்களும் காபாலிகர்களும் பாஷண்டர்களும் மற்றுமுள்ள வேதபாக்கியர்களும் பெற்றுக்கொள்ளலாம். திரிபுண்டரத்தைப்பக்தியோடு தரிக்கவேண்டும்; உல்லங்கனஞ்செய்யக்கூடாது. எது வேதத்தில் விதிக்கப்பட்டுள்ளதோ அதைவிட்டவன் பதிதனாய்விடுவான். பக்தியோடு திரிபுண்டரதாரணத்தையும் தேகமுற்றும் பஸ்மத்தை உத்தூளனஞ் செய்வதையும் பிராமணன் மந்திரத்தால் செய்யவேண்டும். அதை விட்ட அந்தணன் பதிதனாய்விடுவான். உத்தூளனத்தையும் திரிபுண்டரத்தையும் எவர்கள் பக்தியோடு தரிக்கவில்லையோ அவர்களுக்குக் கோடிகோடி சன்மங்களாலும் சம்சாரநிவிர்த்தி உண்டாவதில்லை. எவர்கள் சொல்லப்பட்ட வித்தியோடு பஸ்மதாரணஞ் செய்யாமலிருக்கின்றார்களோ அவர்கள் ஜன்மம் பன்றிஜன்மம்போலென் றறிவாய் மாதுடர்களுடைய சரீரமானது திரிபுண்டரத்தை விட்டிருக்குமானால் அந்தத்தேகம் ஸ்மசானத்துக்குச்சமானமானதாய்ப் புண்ணியவான்களால் பார்க்கத்தகாததாய் விடும். பஸ்மமில்லாத நெற்றியைச் சுடு. சிவாலயமில்லாத கிராமத்தைச்சுடு. சிவார்ச்சனமில்லாத சன்மத்தைச்சுடு. சிவாஸ்ரயமில்லாத வித்தையைச்சுடு என்று வேதங்கூறுகின்றது. எவர்கள் திரிபுண்டரத்தை நிந்திக்கின்றார்களோ அவர்கள் சிவபெருமானை நிந்தித்தவர்களாவர். எவர்கள் பக்தியோடு தரிக்கின்றார்களோ அவர்கள் சிவனையே தரிக்கின்றவர்களாவர். எப்படி அக்னியில்லாமல் பர்வதம் பிரகாசிக்கிறதில்லையோ அப்படி சிவார்ச்சனம் எல்லாத்திரவியங்களையுமுடையதாய்ப் பஸ்மமாத்திரம் இல்லாததாயின் அது பிரகாசமில்லாததா

கும். எவர்கள் திரிபுண்டரமும் உத்தூளனமும் செய்கிறதில்லையோ அவர்களால் முன்செய்யப்பட்ட புண்ணியங்களெல்லாம் விபரீத மாகமுடியும். பஸ்மத்தைத் திரிபுண்டரமாக வேதமந்திரங்களால் தரிக்கவேண்டும். வேதத்தில் சொல்லப்பட்ட ஆசாரத்தையனுஷ் டிக்காமற்போவது ஸ்மார்த்தவிதிக்கு அனர்த்தகாரணமாகின்றது. எவன்திரிபுண்டரத்தைத் தரிக்காமற்போகின்றானே அவனைச் செய் யப்பட்டனவெல்லாம் செய்யப்படாதனவாயும் கேட்கப்பட்டன வெல்லாம் கேட்கப்படாதனவாயும் படிக்கப்பட்டன வெல்லாம் படிக்கப் படாதனவாயும் போவதுமன்றி அவனுக்கு வேதயக் ஞம் தபம் விரதம் உபவாச முதலிய யாவும் வீணுப்முடியும் எவன் பஸ்மத்தைவிட்டு முத்தியை விரும்புகின்றானே அவன் வி ஷபானத்தினல் தனக்கு நித்யத்துவத்தை ஆசைப்படுகின்றவனு க்கு ஒப்பாவன். பிரஹ்மா சிருஷ்டியினலும் திரிபுண்டரதாரண த்தைக் காண்பித்திருக்கின்றனர். எவ்வாறெனில்! அவர்நெற்றியைக் குறுக்காயும்ஊர்த்துவமாயும்சிருஷ்டித்திருக்கின்றாரல்லவா! விருத்த மாகச்சிருஷ்டித்தாரில்லையல்லவா! மாறுடருக்கேயல்லாமல்சர்வப்பி ராணிகளுக்கும் நெற்றியில் திரியக் ரேகைகள் காணப்படுகின்றன வல்லவா! அப்படி காணப்பட்டும் மூடமனிதர்கள் திரிபுண்டரதார ணஞ் செய்கிறதில்லை. திரியக்புண்டரம் அன்றியில் பிராமணனல் எது அநுஷ்டிக்கப்படுகின்றதோ அது தியானசாதனமுமல்ல, மோ க்ஷசாதனக் கிரியையுமல்ல, தானமுமல்ல, தபசுமல்ல. வேதாத் யயனத்தில் சூத்திரன் எப்படியதிகாரியாகானே அப்படியே திரி புண்டர தாரணமன்றியில் பிராமணன் சிவபூஜைக்கதிகாரியாகான்.

பிராமணன் கிழக்குமுகமாக விருந்து கைகால்களைச் சுத்தி செய்து பிராணயாமமும் சங்கல்பமும் பண்ணி அக்னிஹோத்திரத் தால் உண்டான பஸ்மத்தை எடுத்து ஈசான மந்திரத்தால்சிரசிலும் தற்புருஷத்தால் முகத்திலும், அகோரத்தால் இருதயத்திலும்,வாம தேவத்தால் நாபியிலும், சத்யோஜாதத்தால் பாதங்களிலும் தரித்து பின்னர் பிரணவத்தால் சர்வாங்க உத்தூளனஞ் செய்யவேண் டும். இதனைப்பிரமருஷிகள் ஆக்நேயஸ்நான மென்று சொல்லுகி ன்றார்கள். இதனைச் சர்வகர்மசித்திக்காக முதலில் அறிவுள்ளவன் செய்து பிறகு கைகால்களைச் சுத்திசெய்துகொண்டு திரியக்புண்ட ரத்தை விதிப்படி நெற்றி மார்பு கண்டம் முதலியவிடங்களில்பஞ்சப்

பிரம மந்திரத்தினாலேயே தரித்தல்வேண்டும். இப்படித்திரிபுண்டாரம் தரிக்கப்பட்டால் அதுசர்வகர்மங்களுக்கும்பரிசுத்தகரமாயிருக்கும் சூத்திரரிடத்தும் அந்திய சாதியரிடத்தும் பஸ்மம் வாங்கத்தக்க தன்று. அக்னிஹோத்திரபஸ்மத்தினால்பூசப்பட்டவனுய்கர்மங்களை யநுஷ்டிக்கவேண்டும். அவ்வாறன்றி அநுஷ்டித்த கர்மங்கள்பலிக்க மாட்டா. எவன் திரிபுண்டரந் தரிக்கவில்லையோ அவனுடைய சத்தியமும் சௌசமும் ஜபமும் ஹோமமும் தீர்த்தயாத்திரையும் தேவாதிபூஜையும் வீணாகும். எவன் பஸ்ம உருத்திராக்ஷந்தரிக்கின்றனை அவனது ரோகம் பாவம் வியாதி துர்ப்பிக்ஷம் திருடு முதலி புவை நாசகரமாய் எந்தப் பாப்பிரமத்தினிடமிருந்து சீவன் திரும்பவதில்லையோ அந்தப்பிரமத்தை யடைகிறன் பக்திபாவனனை. விப்பரள் பிராமணனுலும் தேவர்களாலும் பூஜிக்கத்தக்கவனுவன் சிரார்த்தத்திலும் யக்ஞத்திலும் ஜபத்திலும் ஹோமம்திலும் வைஸ்வதேவத்திலும் சிவார்ச்சனையிலும் திரிபுண்டரந்தரிக்கிற மாதுடன் பரிசுத்தனுய் மிருத்துவை ஜயிக்கிறன். இன்னமும் பஸ்மமகாத்மியத்தைக் கூறுகின்றேன் கேட்பாயாக என்றனர். (சு - சகஉ.)

பன்னிரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

உ

ஹ்ரீங்காரகூடாக்னிகாயைநமஃ

பதின்மூன்றும் அத்தியாயம்.

பஸ்மமகிமை.

நாராயணர் கூறுகின்றார்:—ஒருநாளாவது ஒருவன் பஸ்மந்தரிப்பானுயின் அவனுக்குண்டாகும் புண்ணியபலத்தைச் சொல்லுகிறேன் கேட்பாயாக. என்னெனின்! அவன் மகாபாதகங்களைச் செய்திருப்பின் அவைகளும் வேறுபாதகங்களும் நசித்துப்போம் இது சத்தியம்! சத்தியம்!! சந்தேகமில்லை. வைதிகசுருதியானதுபஸ்மத்தை உத்தூளனமாகவும்திரிபுண்டரமாகவும் தரித்தால் சங்கியாஞானமும், வானப்பிரஸ்தன் விரக்தியும், கிருகஸ்தன் இல்லறதருமவிருத்தியும், பிரஹ்மசாரி வேதாத்யயனசித்தியும், சூத்திரன்புண்

ணியவிருத்தியும், ஏனையோர் பாலைநாசமும் அடைவரென்று ஓரிடத்திலும், பஸ்மோத்தூளனமும் திரிபுண்டரதாரணமும் சர்வப்பிராணிகளையும் ரக்ஷிக்கும்படி பாருட்டென்று ஓரிடத்திலும், பஸ்ம உத்தூளனத்தின் பொருட்டும் திரிபுண்டரதாரணத்தின் பொருட்டுமே வேதங்களில் யஜ்ஞங்களெவிதிக்கப்பட்டிருக்கின்றனவென்று ஓரிடத்திலும், பஸ்மோத்தூளனமும் திரிபுண்டரமும் சர்வதர்ம சித்தியின் பொருட்டென்று ஓரிடத்திலும், அவை மகேஸ்வர சொரூபமாகிய சிவலிங்கார்சனத்தின் பொருட்டென்று ஓரிடத்திலும், யாவருக்கும் விஞ்ஞானோத்தம் உண்டாகும் பொருட்டென்று ஓரிடத்திலும் விதிக்கப்பட்டிருக்கிறது. திரிமூர்த்திகளாலும் இரண்யகர்ப்பனாலும் வருணன் முதலியவர்களாலும் உமை லக்ஷ்மி சரஸ்வதி என்னு மூவராலும் ஏனைய தேவதாஸ்திரீகளாலும் யக்ஷ ராக்ஷஸ கந்தர்வ சித்தவித்தியாதரர்களாலும் முனிவர்களாலும் பஸ்மோத்தூளனமும் திரிபுண்டரமும் தரிக்கப்பட்டிருக்கின்றன. நான்கு வருணத்தாராலும் சங்கரசாதிகளாலும் தரிக்கப்பட்டிருக்கின்றன. பஸ்மோத்தூளனத்தையும் திரிபுண்டரத்தையும் தரிக்கின்றவர்களே சிரேஷ்டர்களும் வித்வான்களுமாவர். அவை தரிக்கப்பெறுதவர் சிரேஷ்டர்களுமாகார்; வித்வான்களுமாகார்.

முக்தி என்கிற ஸ்திரீயை வசீகரஞ்செய்து கொள்ளவேண்டியவனுக்கு சிவலிங்கம் உருத்திராக்கம் பஞ்சாக்ஷரம்பஸ்மமென்னும் இவைகள் அவஷ்யதங்களாம். பஸ்மோத்தூளன முள்ளவன் மூர்க்கனாலும் பண்டிதனாலும் அவன் எவ்விடத்தில் புசிக்கின்றானே அவ்விடத்தில் இடபக்கொடியுடைய பரமேஸ்வரன் தேவியோடு புசிக்கின்றான். சரீரமுற்றும் விபூதியினால் மறையப்பெற்றவனது பின்னை தொடர்ந்துபோகிறவன் மஹாபாதகனாயினும் அவன் அப்பாதகத்தினின்றும் நீங்கினவனாய் மானுடரால்பூஜிக்கத்தக்கவனாகின்றான். அப்படியே சர்வாங்க பஸ்மதாரியை பக்தியோடு தோத்திரஞ்செய்கின்றவன் பாதகனாயினும் அவன் விமுத்தனாய் யாவராலும் தோத்திரஞ்செய்யப்படுவான். திரிபுண்டரதாரணஞ்செய்தவனுக்கு ஒருவன் அன்னமாத்திரங் கொடுப்பானாலும் அவன்மேலான சகல சத்கர்மங்களையும் அனுஷ்டித்தவனாவானென்று சொல்லப்படுவான். எந்தப் பிராஹ்மணன் சிரசில் திரிபுண்டரந்தரித்திருக்கின்றானே அவன் கீடகதேசத்தில் வசித்தாலும் அந்த க்ஷேத்தி

ரத்தை மானுடர்கள் காசிக்ஷேத்திரத்துக்குச் சமானமாக நினைத்து காடோறும் வசித்தல்வேண்டும். ஆசாரமுடையவனுலும் அனாசாரமுடையவனுலும் யோகவானுலும் தரித்திரவானுலும் பூஜிசாதனமுடையவனுயிருப்பின் அவனை எனது புத்திரனுகக் கருதிப் பூஜித்தல்வேண்டும். ஐஸ்வர்ப்யாகிய விபூஜிசாதனத்தைக் கபடத்தினுலாவது ஒருவன் அணிவானுயின் அவனடையுங் கதியை தூறுயாகஞ் செய்தவனும் அடையான். விளையாட்டினுலாவது பயத்தினுலாவதுஒருவன்பஸ்மதாரியைத்தொடுவானுனல் அவன் விதிப்படி பஸ்மத்தைத் தரித்தவனேயாய் என்னைப்போல் பூசிக்கத்தக்கவனுமாவான். திரிபுண்டாரதாரணமானது திரிமூர்த்திகளுக்கும் பார்வதி தேவிக்கும் லக்ஷ்மிதேவிக்கும் சரஸ்வதிதேவிக்கும் திருப்திகாரணமாயுள்ளது. திரிபுண்டரதாரணத்தினுல் அடையும் புண்ணியம் போல் தானம் யாகம் குரூரமானதவம் தீர்த்தயாத்திரை முதலியவற்றைச் செய்தாலும் அடையமுடியாது. மேற்கூறிய தான முதலிய வைகளும் தியானங்களும் திரிபுண்டரதாரணத்தின் பதினேழில்ஒருபங்குக்கு ஒப்பாகா. அரசன் தனது அடையாளந் தரிக்கப் பெற்றவனைத்தன்னவனுக எப்படி எண்ணுகிறனே அப்படியே மஹாதேவரும் தன்னுடைய அடையாளமாகிய பஸ்மதிரிபுண்டரங்களை யணிபவனைத் தன்னவனுகவே எண்ணுகிறார். பிராஹ்மணனுலும் அன்னியனுலும் சித்தசுத்தியுடையவனுப் பஸ்மதாரியாயிருப்பானுயின் அவன் சிவபெருமானைத் சுவாதீனஞ்செய்து கொண்டவனுவன். சகல ஆஸ்ரம தருமங்களையும் சகல அனுஷ்டான தருமங்களையும் செய்யாதுவிட்டு திரிபுண்டரத்தைமாத்திரம் ஒருதரம் அணிவானுயின் அவன் சமுசாரதாபத்தினின்றும் விடுபடுவான். பஸ்ம திரிபுண்டரங்களை யணிந்தவனது குலத்தை ஞானமுடையதா விரதாசாரமுடையதா என்று பரிக்ஷித்தல் கூடாது. அவனது குலம் பூஜ்யமான குலமேயாகும். சிவமந்திரத்தைக் காட்டிலும் மேலான மந்திரமும், சிவாசாரத்தைக்காட்டிலும் மேலான ஆசாரமும் சிவபரத்தைக் காட்டிலும், மேலானபரமும், சிவார்ச்சனையின் புண்ணியத்தைக் காட்டிலும்மேலான புண்ணியமும், பஸ்மஸ்நானத்தைக்காட்டிலும் மேலான தீர்த்தஸ்நானமும், சிவாக்னி வீரியத்தைக்காட்டிலும் மேலான வீரியாக்னியும் எப்படியில்லையோ அப்படியே பஸ்மதாரணத்தைக் காட்டிலும் வேறு மேலானதாரணமில்லை.

சண்டாளனு யிருந்தாலும் மூடனுயிருந்தாலும் அதமனுயிருந்தாலும் பண்டிதனுயிருந்தாலும் சகலதுக்கத்தையும் துவம்சம்பண்ணத்தக்கதாயும் சகலபாபத்தியும் போக்கடிக்கத்தக்கதாயும் உள்ள பஸ்மத்தைத்தரித்தவனுய் எந்த தேசத்தில் நித்தியம் வசிக்கின்றனே அந்தத்தேசத்தில் சதாசிவமூர்த்தி உமாதேவியோடு சகல பூதகணங்களோடு சகல தீர்த்தங்களோடும் எப்போதும் சாந்நித்தியமாயிருப்பர்.

பஞ்சபிரஹ்ம மந்திரத்தினுல் பவித்திரமாயிருக்கின்ற பஸ்மமானது காமதகனராகிய மஹேஸ்வரரது திருமேனியில் பூஜ்யமாயிருப்பதாகலின் யாவரும் தங்களுடைய நெற்றியை பஸ்மத்துக்கு யிடமாக்கி சகலபீடா நிவாரணமாகத், திரபுண்டரத்தைப் பொருந்தத் தரித்தல் வேண்டும் என்றனர். (சு-ம் 35)

பதின்மூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

ஹ்ரீங்கார சசி சந்திரிகாயை நம:

பதினன்காம் அத்தியாயம்.

இதுவுமது.

நாராயணர் கூறுகின்றார்:—பஸ்மத்தால் பூசப்பட்ட சரீரமுள்ளவனுக்கு எவனெருவன் சந்தோஷத்தோடு தனத்தைக் கொடுக்கின்றனே அவனுடைய சகலபாவங்களும் நசித்துப்போகின்றன. இதிற் சந்தேகமில்லை. சுருதிகளும் ஸ்மிருதிகளும் எல்லாப்புராணங்களும் பூதிமகிமையையே கூறுகின்றன. ஆதலால் பிராமணன் சிகாபஸ்மத்தைத் திரிசந்திகளிலும் திரிபுண்டரமாகத் தரிப்பானுயின் சகலபாபங்களினின்று நீங்கிச் சிவலோகமடைகின்றன். யோகியானவன் பாதாதிகேசபரியந்தம் திரிசந்திகளிலும் பஸ்மத்தினுல் ஸ்நானஞ்செய்வானுயின் சீக்கிரத்தில் யோகத்தையடைகிறன். மகாபுருஷனனவன பஸ்மஸ்நானத்தினுல் குலத்தை உத்தாரணஞ் செய்கின்றவனுகிறன். இந்த ஸ்நானமானது ஜலஸ்நானத்தைக் காட்டிலும் அளவில்லாத குணமுள்ளது. சர்வதீர்த்தஸ்நானங்களினுலும் எந்தப்பலனுண்டோ எந்தப் புண்ணியமுண்டோ அவையெல்லாம் இந்தப் பஸ்மஸ்நானம்செய்பவன் அடை

வன். அவன் மகாபாதக வுபபாதகங்களோடு கூடினவனுனலும் அவைகளைக் கட்டையைக்கொளுத்தும்அக்னியைப்போல்கொளுத் தப்பட்டவனுமாகின்றன். இதிற் சந்தேகமில்லை.

ஆகலான் பஸ்மஸ்நானத்தைக் காட்டிலும் சுத்தமானஸ்நா னம்வேறில்லை இல்லையென்று சிவபெருமான் ஆதியில்கூறி, தானும் பஸ்மஸ்நானஞ் செய்திருக்கின்றனர். பிரமன் முதலிய தேவர்க ளும் முனிவர்களும் செய்திருக்கின்றனர். ஆதலால் ஆக்நேய மென்னும் சிரோவிரதஸ்நானமாகிய பஸ்மஸ்நானத்தைச் சர்வப்பிர யத்தனத்தாலும் செய்யவேண்டியது. அவ்வாறு எவன் செய்கின் றனனோ அவன் மாம்சமயமான இந்த நாற்றமுடைய சரீரியாயிருந் தாலும் சிவரூபியேயாவன். அதற்குச் சந்தேகமில்லை. யார் பஸ்ம தாரிகளைப்பார்த்து சந்தோஷமடைகின்றார்களோ அவர்கள்தேவர்க ளாலும், முனிவர்களாலும் நித்தியம் பூஜிக்கத்தக்கவனுகின்றனர். அதற்குச் சந்தேகமில்லை. சர்வாங்கமும் பஸ்மந் தரித்தவனைப் பார்த்து எவனெழுந்திருக்கின்றனனோ அவனை இந்திரன் பார்த்து சாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்கிறன். ஒருவன் பஸ்மதாரணயுக்த னுய் உண்ணப்படாதனவற்றை உண்டாலும் அதனுல் அவனைத் தோஷமுடையவனுகஎண்ணிப் பெரியோர்கள்விசாரித்தல்கூடாது பிரஹ்மசாரி கிருகஸ்தன் வானப்பிரஸ்தன் என்னும் மூவரும் முன்னர் சலத்தில ஸ்நானஞ்செய்து பின்னர் பஸ்மஸ்நானம் செய் வாசாயின் அவர்கள் சகலபாவத்தினின்றும் விடுபட்டவர்களாய் சிறந்தகதியை யடைகின்றனர். சந்நியாசிகளுக்கு ஆக்நேய பஸ்ம ஸ்நானஞ் சிறந்தது.

சலஸ்நானத்தைப் பிரகிருதி என்றும், பந்தமென்றும் சொல் லுவர். பிரகிருதியாகிய பந்தத்தைத் தொலைப்பதற்கே இந்த பஸ்ம ஸ்நானம் விதிக்கப்பட்டிருக்கிறது. ராகூஷணுக்கும், மங்களகாரத்துக் கும், பரிசுத்தத்துக்கும் எந்தப் பதார்த்தம் உள்ளதென்று தேவர் கள் பூர்வத்தில் யோசித்துப்பார்த்து பஸ்மந்தா னென்றறிந்து தே வர்க்குப் பிரியம் உண்டாகும்படியாய் அதனைக் கொடுத்தார்கள். ஆகையால் ஆக்நேயஸ்நானமென்னும் சிரஸ்நானத்தை யாதொரு வன் செய்கின்றனனோ அவன் பிறவிக்குக்காரணமாகிய பாசத்தினின றும் நீங்கி சிவலோகத்தில் பூஜ்யனுய் வாழ்கின்றவனுகின்றன் அன் றியும் இந்த ஸ்நானத்தால் ஜ்வரம் பிரஹ்மராக்ஷச பிசாசம் பூத

சேஷ்டைகள் குஷ்டம் குல்மம் பகந்தரமுதலிய அறுபத்துநான்கு வாதரோகங்களும், சிலேட்டும ரோகங்களும், வியாக்ரமுதலிய துஷ்டமிருக பயங்கரங்களும், சோராதி பயங்களும் சிங்கத்தைக்கண்ட யானையைப்போல் நசித்துப்போம். எவன் பஸ்மத்தை சுத்தமான சீதளஜலத்தினால் குழைத்துத் திரிபுண்டரமாக அணிகின்றானோ அவன் பரப்பிரஹ்மசொரூபத்தை யடைகின்றன். அதற்குச் சந்தேகமில்லை. விதியுக்தமாகிய வன்னிவீரியத்தினுண்டாகிய பஸ்மத்தைத் தரித்தால் அது நெற்றியிலெழுதியிருக்கும் யமசம்பந்தமான எழுத்தைத் தொலைத்துவிடும். இதுநிச்சயம். இதுபோலும் கண்டத்தில் தரிப்பதால் கண்டத்திலுண்டாகும் பாபமும், கைகளில் தரிப்பதால் கைகளாற் செய்தபாபமும், மார்பில் தரிப்பதால் மனதினாற் செய்தபாபமும், நாபியில் தரிப்பதால் ஆண்குறியினால்செய்த பாபமும், புருஷ்டபாகத்தில் தரிப்பதால் அதனாற் செய்த பாபமும் பக்கங்களிற் தரிப்பதனால் பரஸ்திரீகளை ஆலிங்கனாதிகள் செய்த பாபமும்நசித்துப்போம். ஆக்கினிஎல்லாவிடங்களிலும் மூன்றுகுறியுள்ள பஸ்மதாரணம் புகழத்தக்கதேயாம். எவ்வாறெனில், முன்கூறிய பஸ்மம் பிரஹ்ம விஷ்ணு மஹேஸ்வராகிய மூவரையும் மூவுலகினையும் மூன்று அக்கினிகளையும் முக்குணங்களையும் குறிக்கிறதாயிருக்கின்றது. இவ்வகைத்தான பஸ்மம் பூசிய வித்வானுகிய பிராமணன் மகாபாதகங்களால் உண்டான தோஷங்களினின்றும் க்ஷணத்தில் விடுபடுகின்றன். இவ்விஷயத்தில் சம்சயமில்லை. பஸ்மநிஷ்ட சம்பந்தமுடையவனது தோஷங்கள் பஸ்மமென்னும் அக்கினி சம்பந்தத்தினாலே கொளுத்தப்படுகின்றன. பஸ்மஸ்நானத்தினால் சுத்தாத்மாவான புருஷன் ஆத்மஞ்ஞானமுடையவனென்று சொல்லப்படுகின்றன். பஸ்மம்பூசிய எல்லா அவயவங்களுடையவனும், பஸ்மத்தினால் பிரகாசிக்கும் திரிபுண்டர முடையவனும், பஸ்மத்தில் படுத்துக்கொண்டிருக்கிறவனும் இருக்கிறபுருஷன் பஸ்மநிஷ்ட (பஸ்மத்தில் ஸ்திரமான விசுவாச முடையவ) னென்றுசொல்லப்படுகின்றன. பூதம்பிரேதம் பிசாசம் இவைமுதலானகிரகங்களும்சிக்க முடியாத ரோகங்களும் பஸ்மநிஷ்டனுடைய சந்நிதானத்தினாலே ஓடிப்போகின்றன. பாசித்த (பிரகாசித்த) வினாலே பசிதமென்றும், கல்மிஷத்தைப் பக்ஷிப்பதினால் பஸ்மமென்றும், ஐஸ்வர்யத்தையுண்டாக்குவதனால் பூதியென்றும், ரக்ஷிப்பைச் செய்கின்றபடியினால் ரக்ஷையென்றும் சொல்லப்படுகின்றது. திரிபுண்டரதாரணத்தைப்

பார்த்து பூதப்பிரேத முதலானவையெல்லாம் சிவபெருமானே நினைத்தமாத்திரத்தில் பாவம்எப்படிநசித்துப்போகின்றதோ அப்படி பயந்து ஒடுங்கி நசித்துப்போகின்றன. பஸ்மஸ்நானஞ் செய்கின்றவன் செய்யக்கூடாத காரியம் ஆயிரஞ்செய்தவனுயிருந்தபோதிலும் அப்பாபத்தை அப்பஸ்மம் வனத்தைக்கொளுத்தும் அக்கினியைப்போல் கொளுத்தி விடுகின்றது. எந்தப் பிராமணன் ஈடில்லாத பாபங்களைச்செய்து மரணகாலத்தில் பஸ்மஸ்நானஞ் செய்கின்றானே அவன் அப்பாவங்களினின்றும் சீக்கிரம் விடுபடுகின்றான். எவன் பஸ்மஸ்நானத்தினுல் சுத்தாத்மாவாயும் குரோதத்தைச் செயித்தவனுயும் இந்திரியங்களை யடக்குகின்றவனுயும் இருக்கின்றனே அவன் சிவனது சமீபத்துக்கு வந்து மறுபடியும் திரும்பிப்போகிறதில்லை. சந்திரன் வனஸ்பதியை யடைகிறகாலத்தில் பஸ்மத்தை உத்தூளனஞ் செய்துகொண்ட சரீரமுடையவனுய் சிவபெருமானைப் பூசித்துத் தெரிசிப்பானுயின் அவன் எல்லாப் பாவங்களினின்றும் விடுபடுகின்றன். ஆயுள்சம்பத்து மோக்ஷம் இவைகளை விரும்பின பிராமணன் நாடோறும் பஸ்மத்தைத் தரித்துவரல்வேண்டும் பிரமவிஷ்ணுக்களை சிவாத்மகமாகவிருக்கின்ற திரிபுண்டரமானது பரமபுண்ணியத்தைக் கொடுக்கிறது. எந்தக் கோரமான ராக்ஷஸர்களுண்டோ எந்தப் பிரேத முதலிய பைசாசங்களுண்டோ எந்த அற்பசெந்துக்களுண்டோ அவைகளெல்லாம் திரிபுண்டரந் தரித்திருக்கின்றவனைப் பார்த்து விலகிப்போகின்றன. இதிற் சந்தேகமில்லை. சௌசமுதலான கர்மங்களைச்செய்து பின்னர் நிர்மலமான தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பாதமூதல் சிரசுபரியந்தம் பஸ்மத்தினுல் உத்தூளனஞ் செய்யவேண்டும். இந்தப் பஸ்மஸ்நானமானது உள்ளும்புறம்பு மூள்ள மலங்களைப்போக்கும். வாருணஸ்நானம் தேகத்தின் புறம்பேயுள்ள மலத்தைமாத்திரம் போக்கும். ஆகையினுல் வாருணஸ்நானத்தை ஒருக்கால்விட்டாலும் பஸ்மஸ்நானத்தில் எப்பொழுதும் பிரீதியுள்ளவனுய் அதைத் தரித்துவரல்வேண்டும். இதிற் சம்சயம் வேண்டாம். ஓ மகாமுனியே! ஆக்னேய ஸ்நானமென்று சுருதியிற் சொல்லப்படும் பஸ்மஸ்நானமன்றியில் செய்யப்பட்டனவெல்லாம் செய்யப்படாதனவேயாம். பிராணிகளுடைய உள்ளும்புறம்பு மூள்ள மலங்களை விரைவில் சுத்திசெய்வதாகிய அந்தப் பஸ்மஸ்நானம் சிவபூஜாபலனைக்கொடுக்கும். பிரதினம் கோடி வாருணஸ்நானம் மிக்க ஆதரவுடன் செய்தவனுயிருந்தாலும் பஸ்மஸ்நானம்

ன்றியில் சுத்தாத்மாவாகான். வேதமானது எந்தபஸ்ம ஸ்நானமகி மையை யுண்மையாயறிந்ததோ, சர்வதேவ சிகாமணியாகிய மஹா தேவர் எந்தபஸ்ம ஸ்நானத்தை யறிந்தாரோ, அதைச்செய்யாமல் தாதொருவைதிகன் வைதிககர்மத்தைச் செய்கின்றானே அவன் அந் யத்தர்மத்தின் பதினறிலொருபங்கின் பாகபலத்தைக்கூட அடை கிறதில்லை. பரிசுத்தமான வஸ்துக்களிலெல்லாம் பரிசுத்தமானது பஸ்மமென்றும் அப்பஸ்மஸ்நானம் எவன்விதிப்படி செய்கிறானே அவன் சகலவைதிகர்மங்களிலும் அதிகாரமுள்ளவ னென்றும் வேதங் கூறுகின்றது. அஜ்ஞானத்தினால் எவன் இந்த பஸ்மஸ்நா னத்தைச் செய்யாமலும் விடுகின்றானே அவன் மகாபாதக னென் றும் பதிதனென்றும் சொல்லப்படுவான்; எவன் பஸ்ம ஸ்நானம் செய்கின்றானே அவன் அளவில்லாத வாருணஸ்நானத்தினால் எந் தப்பலனை அடைகிறானே அதைக்காட்டிலும் அதிகமான பலனை யடைகிறான். பஸ்மஸ்நானம் நித்யகர்மமென்று சொல்லப்படு கிறபடியால் முக்காலத்திலும் பிரயத்தனபூர்வமாகச் செய்யவேண் டும். விதிப்படி சௌசமுதலியவைகளைச் செய்தவனாயினும் பஸ் மஸ்நானமில்லாதவன் பரிசுத்தனுமாகான்; ஒருகாரியத்திலும் அதி காரியுமல்லன். அபானவாயு விட்டாலும் கொட்டாவி விட்டாலும் கக்கினாலும் துப்மினாலும் மலமூத்ரங்களை விசர்சனஞ் செய்தா லும் பஸ்மந்தரிக்கவேண்டும். இதுகாறும் என்னால் சொல்லிவந்த பஸ்மஸ்நானமஹிமை ஒருபாகமேயன்றி முற்றுமன்று. இனி அந்த பஸ்மஸ்நானத்தாலுண்டாகும் பலத்தைக்கூறுகின்றேன சாவதான மாய்க் கேட்பீராக என்றனர். (சு-ம்57)

பதினான்காம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

ஹ்ரீங்கார பாஸ்கர ருச்யை நம:

பதினைந்தாம் அத்தியாயம்.

திரிபுண்டர ஊர்த்துவபுண்டர மஹிமா.

நாராயணர் கூறுகின்றார்:—"அக்னிரிதியாதி" மந்திரங்களினால் சோதனைசெய்து பஸ்மத்தை நெற்றிமுதலானவிடங்களில்அந்தணர் களை தரிக்கவேண்டும். பிராஹ்மணன் க்ஷத்திரியன் வைசியன் என்

னுமூவரினும் துவிஜன்தான் திரிபுண்டரத்தை பிரயத்தனத்துடன் தரிக்கவேண்டும். எவனுக்கு உபநயனகர்மம் செய்யப்படுகிறதோ அவன்தான் துவிஜன் என்று சொல்லப்படுகிறான். ஆதலால் சுருதி கூறிய திரிபுண்டரத்தைத் துவிஜர்கள் தரிக்கவேண்டியது. அவசியம் விபூதிதரிக்காமல் வேதகர்மங்கள் செய்யப்பட்டாலும் அவையெல் லாம் செய்யாமைக்கொப்பாம். பஸ்மதாரணமின்றிச்செய்யும் காயத் திரிவுபதேசமும் வீணாகவே முடியும். ஆகையால் பஸ்மத்தைத் தரித்தே காயத்திரியை ஜபிக்கவேண்டும். ஓ முனி ஸ்ரேஷ்டரே! பிரஹ்மண்யவிஷயத்தில் காயத்திரியை மூலகாரணமாகச்சொல்லுகி றார்கள். அம்மந்திரமானது பஸ்மதாரணமன்றியில் எவனுகிலும் உப தேசிக்கப்படுகிறதில்லை. நெற்றியில் எவ்வளவுகாலம் பஸ்மந்தரிக்க வில்லையோ அவ்வளவுகாலம் காயத்திரியை ஜபிக்க அதிகாரமில்லை. நெற்றியில் பஸ்மம் இல்லாமலிருப்பின் இது பிரஹ்மண்யமில்லா யைக் குறிப்பிப்பதாகும். ஓ பிராஹ்மணரே! இப்போது என்னால் சொல்லப்பட்டவையெல்லாம் பிரமாணத்தோடு சொல்லப்பட்ட தாகும். எவனது நெற்றியில் மந்திரபூர்வகமான பஸ்மம் பிரகாசிக் கின்றதோ அவனே பிராஹ்மணன்; அவனே வித்துவான். இது சத்தியம்! சத்தியம்!! என்று வேதத்தில் சொல்லப்படுகின்றது. இரத்தினத்தைக் கண்டால் ஒருவனுக்கு எப்படி இயற்கையாய்ப் பிரீதியுண்டாகிறதோ அப்படிப்பஸ்மத்தைக்காணும்போது பிரீதியுண் டாயின் அவன்தான் பிராஹ்மணன் என்னால் சொல்லப்படுகிற இது சத்தியம்! சத்தியம்!! இரத்தினத்திடத்தில்இயற்கையாய்ப்பிரீதியுண் டாதல்போல்ஒருவனுக்குப்பஸ்மாவில் பிரீதியுண்டாகாமற் போகுமா னால் அவனதுசன்மம் சன்மத்தினாலும் * சண்டாளமுடைத்தென்று அறியக்கக்கது. இதுசத்தியம்! சத்தியம்!! எவர்கள் பஸ்மதாரணத் தைச் செய்யாமல் விட்டு 0 கனி முதலியவைகளைப் புசிக்கின்றார்க ளோ அவர்களெல்லோரும் கோரமான நரகமடைவார்க ளென்பதிற்

---

* விபூதியினிடத்தில் பிரீதியில்லாமையினால் சண்டாள சென்ம மென்று கூறுவதல்ல அவனதுசன்மமே சண்டாள சன்மமென் றறியத்தக்க தென்க.

0 கனி முதலியவைகளைப் புசிப்பதாயிருந்தாலும் பஸ்மதார ணஞ் செய்துகொண்டே புசிக்கவேண்டுமென்றிக் கனிதானே என்று சாமானியமாக எண்ணி பஸ்மந்தரிக்காமற் புசித்தால் கோரமான நரகம் அடைவரென்க,

சந்தேகமில்லை. பஸ்மதாரணம் செய்துகொள்ளாமல் பொன்னைத் தூலையிலிட்டுத் தானஞ் செய்வதாகிய தூலாபார்தானத்தை ஒருவன்செய்தாலும் அவன் அப்பலனை யடைவதுமின்றிப் பதிதனுமாவான். பிராஹ்மணன் உபவீதமாகிய யஜ்ஞசூத்திரமின்றி எப்படி நித்தியகர்மம் செய்யக்கூடாதோ அப்படியே பஸ்மதாரணமின்றி சந்தியாவந்தனஞ் செய்யக்கூடாது. சந்தியாவந்தனஞ் செய்யுங்காலத்தில் தோளிலிருக்கும் உபவீதமானது ஒருகால் விலகுமானால் அது குற்றமாய் முடியுமென்று அக்குற்றம் உண்டாகாமற்பொருட்டு அவ்வுபவீதத்துக்குப் பிரதியாக வஸ்திரமுதலானவற்றை உபவீதமாகத்தரித்துக்கொண்டு காயத்திரிமுதலான ஜபங்களைச் செய்யவேண்டுமென்றும், உபவாசமுதலானதும் செய்யவெண்டுமென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. அதுபோலும் பஸ்மதாரணத்துக்கும் பிரதியாக வேறொரு அடையாளங்களைத் தாரணஞ்செய்து கொண்டுநித்தியகர்மங்களைச்செய்யும்படி விதிக்கப்படவில்லை. பஸ்மதாரணத்தை விட்டு எவன் சந்தியாவந்தனஞ் செய்கின்றானை அவன் தோஷத்தை யடைகிறான். அங்கியூதியாயுள்ளவன் வேதங்களைக்கேட்பானையின் எப்படி தோஷமடைகின்றானை அப்படியே பிராஹ்மணன் பஸ்மதாரணமின்றிச் சந்தியாவந்தனஞ் செய்வானையின் தோஷமடைகின்றான்.

ஆகையால்வேதசம்பந்திகளாகியவைதிகர்சிரௌதபஸ்மத்தை மிக்கபிரயத்தனத்தோடுசம்பாதிக்கவேண்டும். அந்தபஸ்மங்கிடைக்காதபக்ஷத்தில் ஸ்மார்த்தபஸ்மமாவது, அது அகப்படாதபக்ஷத்தில் லவுகீகபஸ்மமாவது சம்பாதிக்கவேண்டும். எவ்வகைப்பட்டதாயினும் பஸ்மம்பரிசுத்தமானதே. ஆகலான்எக்காலத்தில் எந்தப் பஸ்மம்கிடைக்கின்றதோ அந்தப்பஸ்மத்தைப்பிராமணர்கள் அவசியந் தரித்துக்கொண்டு சந்தியாவந்தனஞ் செய்தல்வேண்டும். பஸ்மம் எவ்வகைத்தாயினும் பஸ்மத்தைத் தரித்துக்கொண்டு சந்தியாவந்தனஞ் செய்தல்வேண்டும். எவ்வகைத்தானபஸ்மதாரியாயினும் அந்தப் பஸ்மநிஷ்டனிடம்பாபங்கள் சிறிதும்அணுகா. ஆகையால் அவசியம்பிராமணர்கள் பஸ்மதாரணத்தைச்செய்யும் நியமத்தைக் கொள்ளவேண்டும். திரிபுண்டரதாரணம் வலக்கை நடுமூன்றுவிரல்களினால் ஆறங்குலநீளங் குறையாது இரண்டுநேத்திரக்கடைவரையில் நெற்றியில் அநுலோமமாகஒருசமயம்தரிப்பானையும்அவன்

உருத்திரனேயாவன். அந்த மூன்றுவிரலில் அநாமிகை அகாரம் மத்திமை உகாரம் தர்ச்சனி மகாரம் எனவும், திரிகுண சொரூபம் எனவும் சொல்லப்படும். இத்திரிபுண்டரதாரண மகிமாவிஷயத்தில்அநாதியாயுள்ள இதிகாசம் ஒன்றுளது அதைக்கேட்பீராக:—

பஸ்மத்ரிபுண்டர ருத்ராக்ஷதாரியாய் சிவசங்கர சர்வாத்மன் ஸ்ரீமாதஃ ஜகதம்பிகே என்னு நாமங்களை மூன்று முறை உச்சரிக்கின்றவராய் தூர்வாசர் ஓர் சமயம் பிதுர்லோகம் போகும்போது கவ்ய வாலாதி பிதுர்த்தேவர்கள் எல்லோரும் எதிர்கொண்டழைத்து பாத்யாசமனார்க்கியங்கொடுத்து ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்தல் முதலிய உபசாரங்களைச்செய்ய, அவர்களோடு துர்வாசமுநிவரும் அளவளாவி நானாவித்மாயுள்ள கதாரூபமான சம்பாஷணைகளைச்சம்பாஷித்துக்கொண்டிருந்தனர். அச்சமயத்தில் கும்பீபாகமுதலியநரகங்களிலுள்ள மஹாபாபிகளுடைய மகாகோரமான சப்தம் இவருடையசெவியிற்புகுந்தது. அக்கோர சப்தம்யாதோவெனில், ஐயோ அடிக்கப்பட்டோம்! ஐயோ இறக்கப்பட்டோம்! ஐயோகொளுத்தப்பட்டோம்! ஐயோ அறுக்கப்பட்டோம்! ஐயோ பிளக்கப்பட்டோம்!! என்று கதறிப் புலம்பும் பேரோசைகளேயாம். இவ்வாறு ஓலமிடும் பாவிகளுடைய அழுகைக்குரலைக்கேட்டு தூர்வாசர்துக்கமுள்ளவராய் பிதுர்நாதரைப்பார்த்து இதுயாருடைய கூக்குரலென்று கேட்டனர். அவர்ஓமுனிவரே! இங்குயமபுரியிருக்கின்றது! அதில்பாபிகள்பாபாநுபவத்தைஅநுபவிக்கும்பொருட்டு யமன்தன்னைப்போன்றபயங்கரமான அநேகதூதர்களோடு வசித்துகொண்டிருக்கின்றனன். அங்குபயங்கரமானயமதூதர்களால் சூழப்பட்டதாய் பாவிகளுககுப் பாபானுபவங் கொடுப்பதாயுள்ள எண்பத்தாறு நரகங்களிருக்கின்றன. அவற்றுள்கும்பீபாகமென்னும் நரகம் மிகவும் கொடுமையாயும் தலைமையாயும் உள்ளது, அந்தநரகத்தில் இருப்பவர்களுடைய வாதனையை வர்னிப்பதற்கு நூறுவருஷமானாலும் முடியாது. அது எவர்கள் சிவத்துரோகிகளோ, எவர்கள் தேவி விஷ்ணு வேதம் சூரியன் கணேசன் பிராமணர்கள் ஆகிய இவர்களையும். மாதா பிதா குரு தமையன் இவர்களையும், புராணம் ஸ்மிருதி இவைகளையும் தூஷிக்கின்றார்களோ, எவர்கள் காமாசாரர்களாய் மனம்போனவழி செல்கின்றார்களோ, எவர்கள் தப்தமுத்திரங்கிதர்களோ, எவர்கள் திரிசூலதாரிகளோ, அவர்களெல்

லாம் வீழ்ந்து கிடக்கும் நரகமாகும். உம்மால் இப்போது கேட்கப் படும் பயங்கரமான சப்தமானது மேற்கூறிய பாபிகளுடைய கோர சப்தங்களேயாகும். இக்கோரசப்தத்தைக் கேட்கின்றவர்களுக்கும் வைராக்கியமுண்டாய்விடும் என்றுகூறினர். அதனைக்கேட்ட தூர் வாசமுனிவர் அந்நரகத்தைப் பார்க்கவேண்டுமென்னும் எண்ணத் தோடு எழுந்திருந்து கும்பீபாகத்தைச் சமீபித்து அதனை ஓர்கணம் தலைகுனிந்துப்பார்த்தனர். இம்மகாமுனிவர் பார்த்தமாத்திரத்தில் நரகத்தில் ஆழ்ந்துகிடக்கும் சர்வபாபிகளுக்கும் சொர்க்கலோகத் தைக்காட்டிலும் அதிகசுகமுண்டாயிற்று. அஃதுண்டாகவேசிலர் நகைக்கின்றவராயும், சிலர் பாடுகின்றவராயும், சிலர்நிருத்தஞ்செய் கின்றவராயும், சிலர் ஒருவரோடொருவர் கூடி விளையாடுகின்றவரா யும் ஆயினர். அன்றி மிருதங்கம் முரசம் டக்கா துந்துபி இவைக ளுடைய இனியசத்தமும்பஞ்சமஸ்வரம்(குயிலோசை)போல்கேட் கப்பட்டது. வசந்தகால புஷ்பக் கொடிகளுடையகாற்று வீசிற்று. குனிந்துபார்த்தவராகிய முனிபுங்கவர் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர். அவருடன்வந்த யமபடர்கள் பயமும் ஆச்ச ரியமும் அடைந்தவர்களாய் அதிசிக்கிரத்தில் தருமராஜனிடஞ்செ ன்று ஓ மகாராஜனே! இப்போ திவ்விடத்தில் ஒரு பேராச்சரியம் நடந்தது. அதாவது கும்பீபாகத்திலிருக்கின்ற பாபிகளுக்கு சொர்க்கலோகத்தினும் அதிக சுகமுண்டாயிற்று; அதனைக்கண்ட எங்களுக்குப்பயமுண்டாயிற்று. இதன்காரணம் தெரியாமல்உம்மு டையசம்பத்தில் அதிசிக்கிரமாயோடிவந்தோமென்றுகூற, அதனைக் கேட்டயமனும்அதிசயித்து வீரைவாக எழுந்து மதத்தபெரியகடா மீதேறி அக் கும்பீபாகத் தருகேவந்து அங்குவிளங்திருக்கும் சுகத் துக்குக்காரணமறியாது இவ்வதிசயத்தை இந்திரனும் மற்றத் தேவர்களும் அறியவேண்டுமென் றெண்ணி தேவலோகத்திற்குத் தூதர்களே யனுப்பினன். அத்தூதர்களால் அதிசயத்தைக்கேள்வி ப்பட்ட இந்திராதிதேவர்களும் பிரமவிஷ்ணுக்களும் திக்பாலகரும் கும்பீபாகத்தை யடைந்து அதனைச்சூழ்ந்துநின்று சுவர்க்கலோக வாசிகளைக் காட்டிலும் சுகமனுபவிக்கும் கும்பீபாகவாசிகளைப் பா ர்த்து ஆச்சரியமும் பயமும் அடைந்தவர்களாய் இதன்காரணம் யாதோ தெரியவில்லையென்றும், இது ஆச்சரியம் ஆச்சரியமென் றும், பாபானுபவத்துக்கு ஏற்பட்ட இக்குண்டத்தில் சுகமுண்டா

குமானுல் இனி: எவர்கள் பாபத்துக்களுசுவார்கள்? பரமேஸ்வரனுல் தேவலோகவாசிகளாகிய நமக்குச் சுகமென்றும் நரகவாசிகளாகிய பாபிகளுக்குத் துக்கமென்றும் ஏற்படுத்தப்பட்டவிதி எப்படித் தள்ளப்பட்டது? அவரது சங்கல்பம் எப்படிமாறிப்போயிற்று? இது ஆச்சரியம்! இது ஆச்சரியம்!! என்று பலமுறையும் சொல்லிநிற்க அச்சமயத்தில் விஷ்ணுமூர்த்தி சகலதேவர்களோடும் கயிலாயம் டைந்து அங்கு கோடிமன்மதப் பிரகாசமுள்ளவராயும் பார்வதியோடு கூடினவராயும ரமணீயமான அவயவங்களுள்ளவராயும் கான்திக்கெல்லாம் இருப்பிடம் போன்றவராயும் எப்போதும் பதினறு வயதுள்ளவராயும் பலவித அலங்காரங்களால் பூஷிக்கப்பட்டவராயும் அநேக கணங்களாற் சூழப்பட்டவராயும் பரசிவையைப் புகழ்ந்து கொண்டிருப்பவராயு மிருக்கின்ற சந்திரமௌளியை வேதங்களாற் புகழ்ந்து நமஸ்கரித்து கும்பீபாகத்திற்கண்ட அதிசயத்தைக் கூறி, ஓ பிரபுவே! நாங்களனைவரும் அவ்வதிசயத்தின் காரணத்தையறியாது தேவரீரிடம்வந்தோம், ஒமஹாதேவரே! நீர்சாவக்ஞராகையால் இதன்காரணத்தைக் கூறியருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். பஸ்மோத்தூளிதராகிய சிவபெருமான் அவைகளைக்கேட்டு மலர்ந்தமுகமுடையவராய் ஓவிஷ்ணுவே! நீங்கள்கண்ட ஆச்சரியத்துக்குக்காரணம் வேருன்றில்லை. அது பஸ்மமஹிமைதான். பஸ்மத்தினுல் எவ்விதமான ஆச்சரியந்தானுண்டாகமாட்டாது. சைவபுங்கவராகிய துர்வாசமுநிவர் கும்பீபாகத்தையடைந்து குனிந்து பார்த்தனரல்லவா? அப்போது அவர்நெற்றியில்அணிந்திருந்தவிபூதியானது காற்றினுல் அந்நரகத்தில் வீழ்ந்தது. அதனுலுண்டாகிய அதிசயம் நீங்கள்கண்ணுற்றஅதிசயமாகும். இனி அக்கும்பீபாகமானது பிதுர்லோகத்தி லிருப்பவர்களுக்குப் புண்ணியதீர்த்தமாகப் போகின்றது. அதில்அவர்கள் ஸ்நானஞ்செய்து சுகமடையப்போகிறூர்கள். இனி அத்தீர்த்தம் பிதுர்த்தீர்த்தமெனவழங்கப்படும். அது மூன்றுலோகங்களிலுமுள்ள புண்ணியதீர்த்தங்களைக் காட்டிலும் சிரேஷ்டமாகப்போகின்றது. அங்கு எனதுருவமாகிய சிவலிங்கமும் சதவியுந் தாபிக்கப்பட்டு பிதுர்லோகவாசிகளால் பூஜிக்கப்படும். அங்குநடக்கும்தேவிபூஜையினுல் மூன்றுலோகத்தாராலும்பூஜிக்கப்படும். இவ்வளவும் பஸ்மமகிமைதான் பஸ்மமகிமைதான் என்று மதுரவாக்கோடும் மேகத்தொனிபோற் கூறியருளினர். அதைக் கேட்ட தேவர்கள் நமஸ்கரித்து விடைபெற்று கும்பீபாகத்தருகில்

வந்து தருமராஜன் முதலியவர்களைப்பார்த்து சிவபெருமானது திருவாக்கைக்கூற, யாவருஞ் சந்தேகமொழிந்துகாரணமறிந்து ஆஹா இது நல்லது இதுநல்லதுஎன்றுபுகழ்ந்தனர். அரிப்பிரஹ்மாதிகள் பஸ்மமஹிமையைப் புகழ்ந்தனர். பிதுர்க்களும் நமக்குப் புண்ணியதீர்த்தலாபங் கிடைத்ததென்று சந்தோஷித்தனர். அப்பொழுதே அதன்கரையில்சிவலிங்கத்தைத் தேவியோடுஸ்தாபித்துத்தேவர்கள் பூஜைகொண்டாடினர். அதில் முள்ளிருந்த பாவிகளெல்லாம் மூழ்கி எழுந்து விமானமேறி கைலாயம் அடைந்து பத்திரகணங்களென்னும் பெயருடையவர்களாய் இப்போதும் வசித்துக்கொண்டிருக்கின்றனர். கும்பீபாகநரகம் தீர்த்தகுண்டமாகவே அந்தநரகத்தை அதற்கு வெகுதூரத்தில் நிர்மாணஞ்செய்து அங்கு சைவர்களாயுள்ளார் போகக்கூடாதென்று தடைசெய்து விட்டார்கள். ஓ முனிவரே! என்னுற்சொல்லப்பட்ட இப்பஸ்மமகிமையைக்காட்டிலும் சிறந்தமகிமையுடையது ஒன்றிருக்கின்றதா?

ஓநாரதரே! இனி அதிகாரிகளுடைய பேதத்தைநோக்கிவஷ்ணவஆகமப்பிரகாரம் ஊர்த்துவபுண்டரவிதியையும்பிரமாணத்தையும் வர்ணம் மந்திரம் தேவதை பலன் முதலியயாவையுங் கூறுகின்றேன் கேட்பீராக:—ஊர்த்துவபுண்டரத்துக்குரிய மண்ணை பர்வதசிகரத்திலும் நதிக்கரையிலும் விசேடமானசிவக்ஷேத்திரங்களிலும் சமுத்திரக்கரையிலும் புற்றிடத்திலும் துளசியின்வேரிலும் எடுக்கவேண்டும். வேறிடத்தில் எடுத்தல்கூடாது. கறுத்தமண் சாந்திகரத்தையும், செகப்புமண் வசீகரத்தையும், பொன்னிறமண் சம்பத்தையும் வெள்ளைமண் தருமத்தையுங் கொடுக்கும். அங்குஷ்டவிரல் புஷ்டியையும், மத்திமையுளையும், அநாமிகை அன்னத்தையும் பிரதேசினி (தர்ச்சனி) முத்தியையும் கொடுப்பதால் அவ்வவ்விரல்களால் இடவேண்டியதேயன்றி நகத்தினுல்தீண்டலுமாகாது. அந்த ஊர்த்துவபுண்டரத்தைத்தீபம்போலவும்மூங்கில் இலைபோலவும் தாமரையரும்புபோலவுமேயன்றி மச்சம் கூர்மம்சங்கம்இவைகளைப்போலவுந்தரித்துக்கொள்ளலாம். பத்தங்குலம்உத்தமம். ஒன்பதங்குலமும் எட்டு ஏழு ஆறு அங்குலம் மத்திமம். நான்கு மூன்று இரண்டு அங்குலம் அதமம். இவையே ஊர்த்துவபுண்டரத்தின் அளவாகும். நெற்றியில் கேசவனையும், உதரத்தில் நாராயணனையும், மார்பில் மாதவனையும், நெஞ்சுக்குழியில்கோவிந்தனையும், வலப்

பக்கவயற்றில் விஷ்ணுவையும், இடப்பக்கவயற்றில் வாமனரையும், வலதுபுஜத்தில் மதுசூதனரையும், இடதுபுஜத்தில் ஸ்ரீதரரையும், வலக்காதின்கீழ் திரிவிக்கிரமரையும், இடதுகாதின்கீழ் ருஷீகேசரையும், புருஷ்டத்தில் பத்மநாபரையும், பின்கழுத்தில் தாமோதரரையும் இவ்வாறுபன்னிரண்டிடங்களில்பன்னிரண்டுநாமங்களையும்உச்சரித்துட்டுப் பின்சிரசில் வாசுதேவரை ஸ்மரித்துத் தரித்துக்கொள்ளல்வேண்டும்: பூஜாகாலத்திலும் ஹோமகாலத்திலும்விடியற்காலத்திலும் சாவதானமாயிருந்து முன்சொன்ன நாமங்களையுச்சரித்து ஊர்த்துவபுண்டரந் தரிக்கவேண்டும். அசுசியானவனுயிருந்தாலும் கெட்டநடத்தை யுடையவனுயிருந்தாலும் பாகத்தைச்செய்கிறவனுயிருந்தாலும் சிரசில்ஊர்த்துவபுண்டரம் உடையவனுயின் அவன் பரிசுத்தனே. ஊர்த்துவபுண்டரத்தைத் தரித்தவன் சக்கிலியாயிருந்தாலும் அவன் எவ்விடத்திலிருந்தாலும்விமானமூர்ந்து விஷ்ணுலோகத்தையடைந்து அங்குள்ளவர்களால் கௌரவிக்கப்படுகின்றன். ஏகாந்திகளாயிருக்கின்ற மஹாநுபவரும் நடுவே விசாலமுள்ள விஷ்ணுபாதம் போறன் புண்டரங்களைச் செய்துகொள்ளுகிறார்கள். நடுவில் மஞ்சட்பொடியுள்ளதாகவுஞ் செய்கிறார்கள். அதனைச்சிலர் சூலாகாரமாகவும் சிலர் சந்தில்லாமலும் சிலர் தீபத்தைப்போலும் சிலர் தாமரையிதழ்போலும் சிலர் மூங்கிலிலைபோலும் தரிக்கிறார்கள். சில சாமானியவைணவர்கள் சந்தோடும் சிலவைணவர்கள் சந்தில்லாமலும் தரிக்கிறார்கள். சந்தில்லாமல் இட்டுக்கொள்ளும் விஷயத்தில் தோஷமில்லை. ஏகாந்திகளாயும் பிரபன்னர்களாயும் பரமேகாந்திகளாயும் இருக்கும் வைஷ்ணவர்களுக்கு சந்தில்லாமல் இட்டுக்கொள்ளும் விஷயத்தில் மிகுந்ததோஷ முண்டாகின்றது. எவன் அழகானஊர்த்துவபுண்டரத்தை மத்தியில் இடமிருக்கும்படி நமோநாராயணமான கேசவாதிநாமங்களால் இட்டுக்கொள்ளுகின்றனோ அவன் எனக்குக் கோயில் கட்டினவனுவான். ஊர்த்துவபுண்டர மத்தியில் விஷ்ணுலக்ஷ்மியோடு வீற்றிருக்கின்றவராய் விநோதிக்கிறார். எவன் ஊர்த்துவபுண்டரத்தை மத்தியிலிடமில்லாமல் வைக்கிறனோ அந்த அதமப்பிராமணன் லக்ஷ்மியையும் விஷ்ணுவையும் விலக்கி விடுகிறவனுயும் இருபத்தொரு நரகத்தையடைகிறவனுயுமாகிறான். கோணமில்லாமலும் பக்கங்கள் ஒழுங்காயும் மத்தியில் விசாலமாயும் தடித்தாமரை மச்சம் தீபம் இவைகளைப்போலும் இடவேண்டும். பிராம

ணன் சிகோபவீதம் ஊர்த்துவபுண்டரந் தரிக்கவேண்டும் அஃதில்லாமல் செய்யும் கிரியை வைணவருக்கு வீணகமுடியும்.

ஊர்த்துவபுண்டரம் திரிசூலம் வர்தனுலம் சதுரஸ்ரம் அர்த்தசந்திரம் இலிங்கம் முதலானகுறிகளே வேதநிஷ்டர்தரிக்கலாகாது. சூன்மத்தால் சாதியடைந்தவன் வேதமார்க்கத்தை அநுசரித்துநெற்றியில் பிரமையினுலேனும் வேறு புண்டரத்தை யணியக்கூடாது. பிரசித்திக்கும் காந்திக்கும் விஷ்ணுவாகமமாதிகளில் வேறுபுண்டரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. சொல்லப்பட்டிருப்பினும் வைதிக அனுஷ்டானமுடையவன் சுருதிப்பிரதிபாதகமான பஸ்மத்திரிபுண்டரத்தைவிட்டு அவைகளைத் தரிக்கக்கூடாது. நெற்றியில் பஸ்மத்தைத்திரிபுண்டரமாகத் தரிக்கவேண்டியதேபன்றிமோகத்தினுல் வேறுபுண்டரத்தை வைதிகன் தரிப்பானுயின் அவன் நரகமடைவான். வேதமார்க்கநிஷ்டன் மோகத்தினுல் வேறுபுண்டரந் தரிப்பானுயின் அதோகதியடைவான். இதிற்சந்தேகமில்லை. வேதமார்க்கத்தையுடையவன் விக்ரகாதிரூபங்களாயிருக்கின்ற திருமால்அடையாளங்களைத்தரிக்கக்கூடாது. சிரௌத தர்மநிஷ்டர்களுக்குசிரௌததர்மத்திற்கூறப்படுங் குறியே குறியாகும். சிரௌத தர்மானுஷ்டானமில்லாதவர்கள் சிரௌத தர்மத்திற்கூறுத குறிகளைத் தரித்துக்கொள்ளலாம். எத்தத்தேவதை வேதசித்தமோ அத்தத்தேவதையின் குறியே வைதிகமாகும். சுருதிப் பிரதிபாதகமில்லாத தேவதையின் குறிகள் வேதசம்பந்தமில்லாத அவைதிகக்குறிகளெனப்படும். மஹாதேவர் சாக்ஷாத் சம்சாரமோசகரென்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறர். அவர், பக்தர் உபகாரத்தின்பொருட்டு சிரௌதகுறியைத் தரிக்கின்றனர். வேதத்தில் சொல்லப்பட்ட விஷ்ணுவுக்கும் சிரௌதகுறியன்றி வேறுகுறிகளில்லை.

சிரௌதகுறி என்பது திரிபுண்டர உத்தூளனங்களேயாம். அசிரௌதக்குறி ஊர்த்துவபுண்டர முதலானவைகளாம், திரியக் திரிபுண்டரமல்ல. வேதமார்க்க நிஷ்டர்களால் வேதோக்தவழியாக நெற்றியில் திரியக் திரிபுண்டரமே தரிக்கத்தக்கது என்றனர்.

(சு - ம் - ககஅ)

பதினேந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

ஹரீங்காராம்போஜ சஞ்சலாயைநமஃ

பதினேழாம் அத்தியாயம்.

சந்தியோபாசனம்.

நாராயணர் கூறுகின்றார். பஸ்மதாரணமான்மியத்தை ஒரு வாறு விரித்துக்கூறினேன். இனி சந்தியோபாசனத்தைக் கூறுகின் றேன் கேட்பீராக:—

சந்திகள் பிராதஸ்ஸந்தி, மத்தியானஸந்தி, சாயம்ஸந்தி என மூவகைப்படும். அவற்றுள் பிராதஸ்ஸந்தி சூரியவுதயத்துக்குள் நக்ஷத்திரம் தெரியுங்காலம் உத்தமம் என்றும், நக்ஷத்திரந் தோன் றுக்காலம் மத்திமம் என்றும், சூரியன் காணுங்காலம் அதமம் என் றும்சொல்லப்படும். மத்தியானசந்திசூரியன் ஆகாயநடுவில் இருக் குங்காலம் உத்தமமென்றும், சாமம்சந்தி சூரியன் காணப்படுங்கா லம் உத்தமமென்றும், சூரியன்அஸ்தமிக்குங்காலம் மத்திமமென் றும், நக்ஷத்திரங் காணுங்காலம் அதமமென்றுஞ்சொல்லப்படும்.

பிராஹ்மணன் விருக்ஷமெனவும், சந்திகள் அதன் வேர் என வும், வேதம் கிளைகள் எனவும், அவ்வேதத்திற்கூறும் கர்மதர்மங் கள் இலைகள் எனவும் சொல்லப்படுகின்றமையால் விருக்ஷவிருத்தி எண்ணுவோன் முயற்சியோடு வேரைக் காப்பற்றல் வேண்டும். வேரறுமானால் விருக்ஷமும் இலைகளும் இல்லையாமன்றே, எவன் சந்தி அறியவில்லையோ எவன் அதனை அனுஷ்டிக்கவுல்லையோ அவரெல்லாம் ஜீவித்திருப்பினும் அந்தணராகார்; சூத்திரர்களே யாவர். அவர்கள் மரணமடையின் நாயாய்ப் பிறப்பார்கள். ஆக லான் அந்தணர்கள் நாடோறும் சந்திக்குரிய காலங்களையறிந்து சந்தியோபாசனஞ் செய்தல்வேண்டும் அவ்வாறு செய்யாராயின் அவர்கள் எந்தக் கர்மங்களுக்கும் அதிகாரிகளாகார். உதயத்திலும் அஸ்தமனத்திலும்முன்றுநாழிகைக்குமுன் சந்தியாவந்தனஞ்செய் தல்வேண்டும். அந்தக்காலத்துக்கு மேற்பட்டால் பிராயச்சித்தமும் உண்டு. அஃதாவது: அர்க்கியம் நான்காவர்த்தியும், தேவியினது

மந்திரம் நூற்றெட்டாவர்த்தியும் செய்தல்வேண்டும். எந்தக்காலத்துக்கு எந்தக்கர்மமோ அந்தக்கர்மத்தை அந்தக்காலத்துக்குரிய சந்தியாதேவியை உபாசித்துச் செய்தல்வேண்டும்.

சந்திகளை வீட்டிற்செய்தால் சாதாரணம். பசுத்தொழுவத்தில் செய்தால் மத்திமம், நதிதீரத்தில் செய்தால் உத்தமம். தேவி ஆலயத்தில் செய்தால் உத்தமோத்தமம். சந்தியினால் உபாசிக்க வேண்டியவள் தேவியா யிருக்கின்றபடியால் மூன்றுசந்தியையும் தேவியாலயத்திற்றானே செய்தால் அதனால் உண்டாகும்பலன் அனந்தமாம். பிராமணனுக்குச் சிறந்த தெய்வம் தேவியைக்காட்டிலும் வேறில்லை. வேதமும் விஷ்ணுவையுபாசிப்பதும் சிவனையுபாசிப்பதும் நித்தியமல்ல; மஹாதேவியான காயத்திரியை உபாசிப்பதுதான் நித்தியமானது என்று கூறுகின்றது. ஆகலான்சகலவேத சாரமாயுள்ளது காயத்திரியை அருச்சித்தலேயாம். பிரஹ்மாதிதேவர்களாலும் வேதங்களாலும் காயத்திரிஜபிக்கப்பட்டும் உச்சரிக்கப்பட்டும் வருகின்றது. ஆகலான் உபாசிக்கத்தக்கது காயத்திரியே. யாவர்க்கும் உபாசனாமூர்த்தி வேதமாதாவும் ஆதிசக்தியுமாகியகாயத்திரிதேவியாகவே யிருத்தலினால் யாவரும் சாக்தர்களேயல்லாமல் ஒருவரும் சைவருமாகார். வைணவருமாகார்.

யாவரும் ஆசமனமும் பிராணயாமமுஞ்செய்து, கேசவன் நாராயணன் மாதவன் கோவிந்தன் விஷ்ணு மதுசூதனன் திரிவிக்ரமன் வாமனன் ஸ்ரீதரன் ருஷீகேசன் பத்மநாபன் தாமோதரன் சங்கரஷணன் வாசுதேவன் பிரத்யும்னன் அநிருத்தன் புருஷோத்தமன் அதோக்ஷஜன் நரசிம்மன் அச்சுதன் ஜனார்த்தனன் உபேந்திரன் ஹரி கிருஷ்ணன் இந்த இருபத்துநான்கு நாமங்களையும் ஓங்காரபூர்வகமாயும், ஸ்வாஹாந்தபூர்வகமாயும் உச்சரித்து ஜலத்தை அள்ளி உட்கொண்டு நமோந்தமாகத் தொடவேண்டும். பின்னர் அந்தநாமங்களில் கேசவாதி மூன்றுமந்திரங்களால் ஆசமித்து, அதன்பின்னுள்ள இரண்டுமந்திரங்களால் கையையும், அதன்பின்னுள்ள இரண்டுமந்திரங்களால் முகத்தையும் சுத்திசெய்து, அதன்பின்னுள்ள இரண்டு மந்திரங்களால் மார்ச்சனமும், அதன்பின்னுள்ள ஒவ்வொருமந்திரத்தால் கை சிரம் பாதம் இவைகளைப் புரோக்ஷணஞ்செய்து இவ்வாறு

பன்னிரண்டும்போக, அதன்பின்னுள்ள சங்கரஷணதி பன்னிரண்டுநாமங்களால் பன்னிரண்டு இடங்களைத் தொடவேண்டும்.

ஆசமனம்செய்யும்போது இடக்கையால் ஜலத்தைத் தொட்டுக்கொண்டே வலக்கையிலுள்ள கனிஷ்டை அங்குஷ்டவிரல்களை விலக்கி அக்கையைப் பசுவின்காதுபோல் வைத்து, அதில் உளுந்தழுந்தும் அளவினதாக ஜலத்தைக்கொண்டுஆசமனஞ்செய்யவேண்டும். ஆசமனம் செய்யும்போதெல்லாம் ஜலத்தைத் தொட்டுக்கொண்டிராமலிருந்தால் அந்தஜலம் சுத்தமாகாது. ஆசமனதீர்த்தம் ஓர் உளுந்தளவுக்குக் குறைவாகவும் அதிகமாகவும் கொண்டால் அது சுராபானஞ் செய்வதினொடொக்கும், இவ்வாறு விதிப்படி ஆசமனஞ்செய்தபின்னர் பிராணயாமஞ் செய்யவேண்டும். அது எவ்வாறெனில், நாசியின் தக்ஷிணநாடியை அங்குஷ்டவிரலாலும், உத்தரநாடியை கனிஷ்டிகை அநாமிகை விரல்களாலும் பிடித்துக்கொண்டு மத்திமை தர்ஜனிவிரல்களைவிட்டு பிரணவத்தை நினைத்து நான்குபாதத்தோடுகூடிய காயத்திரியைச் சிரோமந்திரத்துடன்உச்சரித்து தக்ஷிணநாடியால் வாயுவை ரேசித்து வாமநாடியால் உதரத்திற்பூரித்து கும்பகத்தால் வாயுவைத் தாரணஞ்செய்தலாம்.

இவ்வாறு ரேசக பூரக கும்பகங்களைச் செய்வதைத்தான் சகலசாஸ்திரங்களானும் முனிவர்களானும் யோகிகளானும் பிராணயாமமென்றுசொல்லப்படுகின்றது. ரேசகம்—வாயுவைவெளியில் விடுவது. பூரகம்-சுத்தவாயுவைப்பூரிப்பது. கும்பகம் - வாயுவைவிடுவதும்பூரிப்பதுமின்றிச்சமமாகநிறுத்துவது. பூரகஞ்செய்யுஞ்சமயத்தில் நாபிமத்தியில் கருநெய்தலின் இதழ்போல் கரியநிறத்தையும், சதுர்ப்புஜங்களையுமுடைய விஷ்ணுமூர்த்தியையும், கும்பகம் செய்யும் சமயத்தில் இருதயத்தில் கமலாசனருடனும், சிருட்டி கர்த்தாவாய், ஜகந்நாதனாயிருக்கின்ற நான்குமுகமுள்ள பிதாமகனையும், ரேசகஞ்செய்யுஞ் சமயத்தில் நெற்றியில் சுத்தஸ்படிகம்போல் பிரகாசிக்கின்றவராயும் நின்மலராயும் பாவத்தை நாசஞ்செய்கின்றவராயு முள்ள மகேஸ்வரரான சங்கரரையும் தியானிக்கவேண்டும். அந்தத் தியானத்தினால் பூரகத்துக்கு விஷ்ணுபதத்தையும், கும்பகத்துக்கு நான்முகன் பதத்தையும், ரேசகத்துக்குப் பரம்பொருளான சிவசாயுச்சியத்தையும் அடையக்கூடும். முன்னே

விஷ்ணு நாமங்களால் சொல்லிவந்த ஆசமனாதிகள் புராணத்திற் கூறப்படும் விதியாகும்.

இனி, சகலபாபங்களையும் போக்கும்படியான சிரௌதாச மனத்தைச் சொல்லுகின்றேன்:—முதலில் பிரணவத்தையுச்சரித்து காயத்திரியின்பாதம் ஒவ்வொன்றுக்கு வியாகிருதியுடன் உச்சரித்தல் சிரௌதாசமனமெனவும், வியாகிருதியைமுன்னிட்டு காயத்திரியைச் சிரசோடு கூடினதாயும் ஒவ்வொன்றும் பிரணவத்தோடு கூடினதாயும் மூன்றுதரம் உச்சரித்து ஐந்துவிரல்களினால் மூக்குநுனியைப் பிரணவத்தா லழுத்தல் பிராணாயாமம் எனவும் சொல்லப்படும். இந்தப் பிராணாயாமம் கிருகஸ்தவானப் பிரஸ்தர்களுக்குப் பாபங்களையெல்லாம் போக்கத்தகுந்த முத்திரை எனவும், கனிஷ்டிகை அநாமிகை அங்குஷ்டங்களால் பிடிப்பது எதிகளுக்கும் பிரமசாரிகட்கும் பாபத்தையொழிக்கும் முத்திரை எனவும் கூறுவர்.

"ஆபோஹிஷ்டா" என்னு மூன்றுமந்திரங்களை யுச்சரித்து தர்ப்பையோடு கூடின சலத்தால் அம்மூன்று மந்திரங்களின் முடிவிலாவது அந்தந்த மந்திரங்களின் முடிவிலாவது சாவதானமான மனமுள்ளவனாய்த் தன்னைப் புரோக்ஷணஞ் செய்துகொள்ளவேண்டும். ஒன்பது பிரணவத்தோடுகூடின பயோஹிஷ்டை மந்திரங்களால் புரோக்ஷணஞ்செய்தால் ஒருவருடஞ் செய்தபாபம் நசிக்கும். பிறகு ஆசமனம்புரிந்து சூரியமந்திரத்தால் ஒரு ஆசமனமுஞ் செய்தல்வேண்டும். அதனால் அந்தக்கரணத்தை அநுசரித்துள்ள பாபங்கள் நசித்துப்போம். பிரணவசம்பந்தமான வியாகிருதிகளோடு கூடிய காயத்திரியினாலும் பிரணவசஹிதமான "ஆபோஹிஷ்டை" என்னும் சூக்தத்தாலும் மார்ச்சனம்செய்யவேண்டும். கோகர்ணாகாரமாக வலக்கையில் ஜலத்தையெடுத்து நாசிவரையில் தூக்கி வாமகுக்ஷியில் பாபத்தைநினைத்து புருஷன் கிருஷ்ணவர்ணனென்று உச்சரித்து (த்ருபத)ருக்கையும்உச்சரித்துதக்ஷிணநாசியின்வழியாய் சுவாசமார்க்கத்தினால் அந்தப்பாபம் கைஜலத்தில் வந்ததாகப் பாவித்துக் கண்களால் பார்க்காமல்இடம்பக்கத்திலிருக்கும் கல்லின்மீதுவிட்டுத் தனதுசரீரம் பாபமில்லாததென்று பாவித்தல்வேண்டும்.

பிறகு எழுந்திருந்து இரண்டுபாதங்களையும் சமமாகச்சேர்த்துக்கொண்டு தர்ச்சனியில் அங்குஷ்டம் சேராமல் விலக்கி சூரியனைப்பார்த்து காயத்திரியால் அபிமந்திரித்த சலத்தை அஞ்சலியாக எடுத்து பிராதஸ்ஸந்தியிலும் சாயம்சந்தியிலும் மூன்றுதரமும் மாத்யான்னத்தில் ஒருதரமும் அர்க்கியம்விட்டு ஆதித்யமந்திரத்தால் பிரதக்ஷிணஞ்செய்யவேண்டும். அர்க்கியஜலத்தைப் பிராதஸ்ஸந்தியில் சிறிதுவளைந்தும், மத்தியானத்தில் தண்டம்போல் நின்றும், சாயங்காலத்தில் ஆசனத்திலிருந்தும் விடவேண்டும். இந்த அர்க்கியஜலத்தை எடுத்து எதற்காக விடுகின்றதோ அந்தக்காரணமும் சொல்லுகின்றேன் கேட்பீராக.

மகாவீரர்களாயும் நன்றிமறந்தவர்களாயும் பயங்கரர்களாயும் இருக்கின்ற முப்பதுகோடி "மந்தேஹா" என்னும் ராக்ஷசர்கள் சூரியனைவிழுங்க இச்சிக்கிறார்கள். அவர்கள் இச்சையைக்கெடுப்பதற்குத் தேவகூட்டங்களும் ருஷிகளும் சந்தியை உபாசித்து உதகாஞ்சலியாகிய அர்க்கியத்தை விடுகிறார்கள். விட்டவுடன் அந்த அர்க்கியஜலம் வச்சிர வுருவங்கொண்டு அந்தராக்ஷசர்களைக் கொளுத்துகின்றது. இதுதான் அதன் காரணம். ஆகலான் பிராஹ்மணர்கள் நாடோறும் சந்தியை உபாசிக்கின்றார்கள். இச்சந்தியோபாசனம் மகாபுண்ணியத்தை உண்டாக்குகிறதென்று சொல்லப்படும்.

ஓநாரதரே! இனி இங்கு விதிப்படிச்செய்யும் அர்க்கியத்துக்கு அங்கபூதமான மந்திரம்யாதெனின்! நான் சூரியஜ்யோதிரூபமாய்விட்டேன். இவ்விதமான சோதிரூபாமாயிருக்கின்ற நான் சுக்ல சோதிரூபமாயுள்ள ஜலசொரூபியாய்விட்டேன். பிரமரூபமான காயத்திரியே! வரத்தைக்கொடுக்கின்றவளே! நீ ஜபானுஷ்டான சித்திக்காக எனது இருதயத்தில் பிரவேசிக்கவேண்டும். என்பதேயாம். இந்தமந்திரத்தை மிக்க சிரத்தையுடன் உச்சரித்தமாத்திரத்தில் சந்தியாபலம்சித்திக்கும். பிறகு சுத்தமான ஸ்தானத்தில்ஆசனமிட்டு அதிலிருந்து வேதமாதாவான காயத்திரியை ஜபிக்கவேண்டும்.அவ்வாசனத்திலேயேபிராணயாமத்துக்குப்பின் பிராதஸ்ஸந்தியில் முனிவர்களால்கேசரிமுத்திரைசொல்லப்பட்டிருக்கிறது. அஃதாவது,—மனமும் நாக்கும் ஆகாயத்தில் சஞ்சரிக்கின்றவாயும், கண் புருவத்துக்குள் நுழைந்திருக்கிறதாயும் இருப்பதாகும். இம்முத்திரைக்குச் சமானமான முத்திரையும் சித்தாசனத்துக்குச்

சமானமான ஆசனமும் கும்பகத்தின் காற்றுக்குச் சமானமான காற்றுமில்லை. ஓநாரதரே! இது உண்மை. உண்மை. மணிபோல் பிரணவத்தை யுச்சரிப்பதால் மிகவும் முயற்சியோடு வாயுவைச் செயித்து ஸ்திரமான ஆசனத்தில் ஸ்திரமாய்நிற்கின்றவனுப் யான் எனதென்பது அற்றவனுய் இருக்கவேண்டும். இனிச் சித்தாசனத்தின் லக்ஷணத்தைக் கூறுகின்றேன் கேட்பீராக:—

யோனி ஸ்தானத்தைக் கால்விரலின் மூலம் அடைத்ததாகவும் ஆண்குறியைப் பாதத்தால் மறைத்ததாகவும், மற்றொருகால் இருதயத்தை யடைத்ததாகவும் செய்து ஒரே மனதுள்ளவனுயிருந்து சரீரத்தைச் சமமாகவிருத்தி ஸ்தம்பம்போலிருக்கின்றவனுப் இந்திரியங்களை யடக்கினவனுய் சலிக்காத நேத்திரத்தினுல் புருவமத்தியைப்பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். இவ்வாறிருத்தல் யோகிகளுக்குச் சுகத்தைக்கொடுக்கிற சித்தாசனமெனச் சொல்லப்படும்.

நாசரகிதையாயும் பிரஹ்மத்தோடும் கூடினவளாயும் வேதமாதாவாயும்வரத்தைக்கொடுக்கின்றவளாயும்காயத்திரிசொரூபிணியாயும் இருக்கின்ற ஓதேவீ! என்னிடத்தில்வந்துதோத்திரரூபமாகிய தவத்தை அங்கீகரித்துக்கொள்வாய். மத்தியானத்தில்எந்தப்பாபஞ் செய்யப்பட்டதோ அந்தப்பாபம்அந்தமத்தியானப் பொழுதினும், இராத்திரியில் எந்தப்பாபஞ் செய்யப்பட்டதோ அந்தப்பாபம்அந்தராத்திரியிலும் விடுப்படவேண்டியதுஎன்றும், சர்வாபரணசொரூபிணியாயும்சந்தியாவித்தியா சொரூபிணியாயும்சரஸ்வதீசொரூபிணியாயும் விருத்தபருவத்தை யடையாதவளாயும் சர்வதேவிஸ்வரூபிணியாயுமிருக்கின்ற ஓமஹாதேவியே! உனக்கு நமஸ்காரம் என்றும், "ஓஜோஸீத்" யாதிமந்திரங்களினுல்தேவியை ஆவாஹனஞ் செய்துக்கொள்ள வேண்டியது. உன்னைக் குறித்துஎன்னுல் எந்த அநுட்டானங்கள் செய்யப்படுகிறதோ அவையெல்லாம் சம்பூரணமாக முடியவேண்டுமென்று பிரார்த்திக்கவேண்டும். பின்னர்பிரஹ்மாவினுலும் விஸ்வாமித்திரராலும் வசிட்டராலும் உண்டான காயத்திரி சாபவிமோசனம் அவ்வவர் நாமங்களை நினைப்பதாலுண்டாகும்.

இருதய கமலமத்தியில் புருஷப்பிரமாணராயும் சத்யாத்மகஸ்வரூபராயும் சகத்ஸ்வரூபராயும் நித்தியராயும் பரமாத்மஸ்வரூபராயும் சித்ரூபராயும் வாக்குக் கெட்டவராயும் ஒன்றுனவராயும்இருக்கின்ற மூர்த்தியை நாடோறும் தியானிக்கவேண்டும்.

இனிச்சந்திக்கு அங்கபூதமாயிருக்கின்றநியாசாதிகளைச் சொல்லுகிறேன் கேட்பீராக:—பிரணவ பூர்வமாகவும்நமோந்தமாகவும் மந்திரங்களை யுச்சரித்து அந்தந்தவிடங்களில் நியாசஞ் செய்யவேண்டும். எப்படியெனின்,—பூ: என்பதால் பாதங்களையும், புவ: என்பதால் முழங்கால்களையும், சுவ: என்பதால் இடையையும், ம: என்பதால் நாபியையும், ஜந: என்பதால்இருதயத்தையும். தபஸன்பதால் கண்டத்தையும், சத்யம்ஸ என்பதால்நெற்றியையும்நியசித்துப்பின்தத்ஸவிதுஸ்என்பதால்அங்குஷ்டங்களையும், வரேண்யஸ்என்பதால்தர்ச்சனிகளையும், பர்க்கோதேவஸ்யஸ்என்பதால் மத்திமைகளையும், தீமஹி ஸ்என்பதால்அநாமிகைகளையும், தியோயோந: ஸ்என்பதால்கனிஷ்டிகைகளையும், ப்ரசோதயாத்ஸ்என்பதால்கரதலகரபுருஷ்டங்களையும் நியசித்து, (இது கரந்நியாசம்) அதன்பின்னர் பிரமஸ்வரூபமான தத்ஸவிது ஸ்என்பதால் ஹ்ருதயத்தையும், விஷ்ணுஸ்வரூபமான வரேண்யம் ஸ்என்பதால் சிரசையும்,ருத்ரஸ்வரூபமான பர்க்கோதேவஸ்ய ஸ்என்பதால் சிகையையும், சக்திஸ்வரூபமான தீமஹீ ஸ்என்பதால் கவசங்களையும், காலாத்மஸ்வரூபமாகியதியோயோநம: ஸ்என்பதால் நேத்ரத்திரயங்களையும் நியசித்து, (இது அங்கநியாசம்) ப்ரசோதயாத் சர்வாத்மஸ்வரூப அஸ்திராய ஸ்என்பவைகளால் கையைத்தட்டி, பிரணவ பூர்வகமான பூ: புவ: சுவ: ஸ்என்னும் மந்திரங்களால் திக்பந்தனமும் செய்தல்வேண்டும் இனிப்பாபத்தைப் போக்கும் அகோரநியாசத்தைக் கூறுகின்றேன்.

தத் ஸ்என்பதால் பாதாங்குஷ்டங்களிலேயும், ஸ்ஸ்என்பதால்குல்பங்களிலேயும், வி ஸ்என்பதால் ஜங்கங்களிலேயும், து ஸ்என்பதால்ஜானுக்களிலேயும், வர ஸ்என்பதால்ஊருக்களிலேயும், ரே ஸ்என்பதால்குஹ்யஸ்தானத்திலேயும், ணி ஸ்என்பதால் லிங்கத்திலேயும், ய ஸ்என்பதால் இடையிலேயும்,ப ஸ்என்பதால்நாபியிலேயும், ர்கோ ஸ்என்பதால்இருதயத்திலேயும்,தே ஸ்என்பதால்ஸ்தனங்களிலேயும்,வ ஸ்என்பதால்ஹ்ருதியிலேயும், ஸ்ய ஸ்என்பதால் கண்டத்திலேயும், தீ ஸ்என்பதால் முகத்திலேயும், ம ஸ்என்பதால் தாலுவிலேயும், ஹி ஸ்என்பதால்நாசிநுனியிலேயும், தி ஸ்என்பதால்நேத்ரமண்டலத்திலேயும்,யோ ஸ்என்பதால் புருவநடுவிலேயும், யோ ஸ்என்பதால் நெற்றியிலேயும் ந: ஸ்என்பதால பூர்வமுகத்திலேயும், ப்ர ஸ்என்பதால் தக்ஷிணமுகத்திலேயும், சோ ஸ்என்பதால் பச்சிமமுகத்திலேயும், த ஸ்என்பதால் உத்தராமுகத்திலே

யும், யா என்பதால் மூர்த்தினியிலேயும், த் என்பதால் சர்வ்வியா பகமாகவும் நியசிக்கவேண்டும். இந்தநியாசத்தை ஜபத்தில் ஆசக்தியுள்ள சிலர் இச்சிக்கிறதில்லை.

பிறகு மகாதேவியாகியும் ஜகன்மாதாவாகியும் மகேஸ்வரஸ்வரூபிணியாகியும் இருக்கின்ற காயத்திரிதேவியை செம்பருத்தி புஷ்பம்போல் காந்தியுள்ளவளாயும், கௌரியாயும், செந்தாமரையை ஆசனமாகவுடையவளாயும், செவந்தசந்தனத்தையும்செவந்தமாலையையும் அணிந்தவளாயும், நான்குமுகமும் நான்குகைகளும் எட்டுக்கண்களும் உடையவளாயும், சிருக் ஸ்ருவம் ஜபமாலை குண்டிகைகளைத் தரிததவளாயும், சர்வாபரணங்களினால் பிரகாசிக்கின்றவளாயும், ருக்வேதத்தை அத்யயனஞ் செய்கின்றவளாயும், ஹம்ஸவாகனரூடையாயும், ஆகவநீயம்என்னும் அக்கினிமத்தியில் வசிக்கின்றவளாயும், பிரஹ்மசொரூபிணியாயும், நான்குபாதங்களையும் எட்டு உதரங்களையும் எழுசிரசுகளையும் உடைத்தானவளாயும், மஹேஸ்வர சொரூபிணியாயும், அக்னிமுக முடையவளாயும், உருத்ரசொரூபமான சிகையையும், விஷ்ணுசொரூபமான சித்தத்தையும், பிரம்மசொரூபமான கவசத்தையும் உடையவளாயும், சாங்கியாயனம் என்னுங் கோத்திரத்தை யுடையவளாயும், ஆதித்ய மண்டலத்திலிருப்பவளாயும் தியானிக்கவேண்டும்.

பிறகு சம்முகம், சம்புடம், விததம், விஸ்த்ருதம் த்விமுகம், திரிமுகம், சதுர்முகம், பஞ்சமுகம், ஷண்முகம், அதோமுகம், வியாபகாஞ்சலி, சகடம், யமபாசம், கிரதிதம், சம்மூகோன்முகம், பிரலம்பம், முஷ்டிகம், மச்சம், கூர்மம், வராகம், சிம்ஹாகிராந்தம், மகாக்ராந்தம், முத்கரம், பல்லவம் ஆகிய இருபத்துநான்கு முத்திரைகளைத் தேவிக்குத் தெரிசனஞ்செய்வித்து திரியம்பக ருக் என்னும் பெயருடைய மகா புண்ணியகரமான நூறு அக்ஷரத்தோடுங் கூடிய காயத்திரியை ஒருதரஞ் செபிக்கவேண்டியது. ஓங்காரபூர்வகமாக பூ புவ சுவ என்னும் பதத்தோடுகூடியதும் இங்குசொல்லப்பட்ட இருபத்துநான்கு அக்ஷரத்தோடு கூடியதுமான காயத்திரியையும் ஜாதவேதசம் என்னும் பெயருடைய ருக்கையும்உச்சரிக்கவேண்டியது. எந்தப்பிராமணன் தினம் இவ்வாறு ஜபிக்கின்றானோ அவன் சந்தியாவந்தன பலத்தையும் பூர்த்தியாக அடைந்துசுகம் பெறுவான் என்றனர். (சு-ம்-கo சு)

பதினேழும் அத்யாயம் முற்றிற்று.

ஓ

ஹரீங்காரகந்தாங்குரிகாயை நமஃ.

பதினேழாம் அத்தியாயம்.

சந்தியாதிகிருத்தியம்.

நாராயணர் கூறுகின்றார்:—காயத்திரி மந்திரத்தின் பாதங்களைத் தனித்தனியாக ஜபிக்கவேண்டும். இவ்வாறு ஜபித்தால் பிரமஹத்திதோஷங்கிவிடும். பாதங்களைக்கூட்டி ஜபித்தால் பிரமஹத்தியைக் கொடுப்பதுமன்றி நூறுகற்பகோடிகாலம் தலைமையாக இருக்கச்செய்யும். ஆறுபிரணவத்தால் சம்புடமாயிருக்கின்ற காயத்திரி மந்திரம் மூன்றுவித்தமாக இருக்கின்றது. தருமசாஸ்திரங்களிலும் புராணங்களிலும் இதிகாசங்களிலும் பஞ்சப்பிரணவயுக்தமாய்க்காயத்திரியை ஜபிக்கவேண்டுமென்று கூறியிருக்கின்றன. ஜபத்தினுடைய எண்ணிக்கையில் எட்டாவது பாகத்தில் காயத்திரியினது காலாவது பாதத்தைக்கூட்டி பிராஹ்மணசிரேஷ்டன் ஜபிப்பானுயின் சாயுஜ்யத்தையடைகிறான். அவ்வாறு ஜபிக்காவிட்டால் பலனைக் கொடுக்கமாட்டாது. ஆறுபிரணவத்தோடு கூடியிருக்கின்ற காயத்திரி யோகிகளுக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. பிரமசாயும் கிருகஸ்தனும் மோக்ஷகாமிகளாயிருப்பாராகில் "துரீயபாதோ காயத்திரியாஃ பரோரஜஸி ஸாவதோம, தியான மஸ்ய பிரவக்ஷ்யாமி ஜபஸாங்க பலப்பிரதம்" என்றபடி துரீயபதத்தைச் சேர்த்து ஜபிக்கவேண்டும். நாடோறும்ஜபபலத்தை முற்றுங்கொடுக்கும்படியானதியானத்தைச்செய்யவேண்டும்.

அஃதாவது, மலர்ந்த பத்மரூபமாயும்சோமசூரியாக்கினிசொரூபமாயும், பிரணவசொரூபமாயும், அகிந்தியமாயுமுள்ளபீடம்யாதொரு தேவதைக்கோ அப்படிப்பட்ட பீடத்தை இருதயத்தில்கற்பித்துக்கொண்டு ஆசலமாகவும் பரபசூக்ஷ்ம சொரூபமாகவும் தேஜோரூபமாகவிளங்கும் ஆகாசசாரமாகவுமிருக்கிறசச்சிதானந்தரூபமானது எனக்குச்சுகந்தோஷத்தையுண்டாக்குக என்று தியானித்து திரிசூலமுத்திரை யோனிமுத்திரை தேனுமுத்திரை அக்ஷமாலாமுத்திரை இலிங்கமுத்திரை கமலமுத்திரை மஹாமுத்திரை ஆகிய ஏழுமுத்திரைகளைத் தரிசிப்பித்து சச்சிதானந்த சொரூபிணியா

யிருக்கின்ற காயத்திரியை பக்தியினல் நமஸ்கரித்து பூஜைசெய்து (லம்) பிருதிவியாத்மனே கந்தம் சமர்ப்பயாமி நமோநம: (ஹம்) ஆகாசாத்மனே புஷ்பம்சமர்ப்பயாமி நமோநம: (யம்) வாயுவாத்மனே தூபம் சமர்ப்பயாமி நமோ நம: (ரம்) வன்னியாத்மனே தீபம் சமர்ப்பயாமி நமோ நம: (வம்) அமிர்தாத்மனே நைவேத்தியம் சமர்ப்பயாமி நமோ நம: என்று அங்குஷ்டமுதல் கனிஷ்டாந்தம் வரையில் நியசிக்கும் பஞ்சோபசாரமும் (யம் ரம் லம் வம் ஹம் என்று செய்யும் புஷ்பாஞ்சலியுமாகிய முத்திரைகளைக்காட்டி அதன் பின்னர் கிரமும் கண்டமும் அசையாமலும், பற்கள் மறைவாகவும் இருந்து காயத்திரிதேவியை மனதில் நினைத்து அந்த காயத்திரி மந்திரத்தை நூற்றெட்டுருவாவது இருபத் தெட்டுருவாவது பத்துருவாவது ஜபித்தல் வேண்டும், இதற்குக் குறைவாகவும் ஜலமத்தியிலும் ஜபிக்கலாகாது. ஜபாந்தத்தில் சுரபி கியானம் சூர்ப்பம் கூர்மம் யோனி பங்கஜம் லிங்கம் நிர்வாணகம் என்னும் இவ்வெட்டு முத்திரைகளையும் தெரிசிப்பித்து காயிபருக்குப் பிரீதியான சொல்லியுடையவளே! நான்செய்த நோத்திரங்களில் அக்ஷரம் பதம் ஸ்வரம் இவைகளால் உண்டாகிய குற்றங்கள் முழுமையும் க்ஷமிக்கவேண்டியது என்று பிரார்த்தித்து, "தேவீம் உத்தமே" என்கிற மந்திரத்தைக்கூறி விசர்சனம்செய்து, காயத்திரீ சந்தஸு, விஸ்வாமித்திரருஷி, சவிதா தேவதா என்பதாகளைச் சொல்லி விநியோகமுஞ் செய்து, காயத்திரியாதி தர்ப்பணங்களைச் செய்யத் தொடங்கி பூ: ருக்வேதபுருஷம் தர்ப்பயாமி, புவ: யஜுர்வேதபுருஷம் தர்ப்பயாமி, சுவ: சாமவேத புருஷம் தர்ப்பயாமி, மஹ: அதர்வணபுருஷம் தர்ப்பயாமி, ஜந: இதிகாசபுராண புருஷந் தர்ப்பயாமி, தப: சர்வாகமபுருஷந் தர்ப்பயாமி, சத்யம் சத்யலோக புருஷந் தர்ப்பயாமி, ஓம் பூ: பூலோகபுருஷந் தர்ப்பயாமி, புவ: புவர்லோக புருஷந்தர்ப்பயாமி, சுவ: சுவர்க்கலோகபுருஷந் தர்ப்பயாமி, ஓம் பூ: ஏகபதாம் காமகாயத்திரீம் தர்ப்பயாமி, புவ: த்விபதாம் காயத்திரீம் தர்ப்பயாமி, ஸ்வ: திரிபதாம் காயத்திரீம் தர்ப்பயாமி, ஓம் பூ: புவ: சதுஷ்பதாங்காயத்திரீம் தர்ப்பயாமி, உஷ்ணீம் தர்ப்பயாமி, காயத்திரீம் தர்ப்பயாமி, சாவித்திரீம் தர்ப்பயாமி, ஸரஸ்வதீம் தர்ப்பயாமி, வேதமாதரம் தர்ப்பயாமி, பிருதிவீம் தர்ப்பயாமி, அஜாம் தர்ப்பயாமி, கவுஸிகீம் தர்ப்பயாமி, சாங்கிருதம் தர்ப்பயாமி, சார்வஜிதீம் தர்ப்பயாமி, காயத்திரீம் தர்ப்பயாமி என்று தர்ப்பணஞ்செய்து, தர்ப்பணத்தில் சாந்தியின் பொருட்டு ஜாதவேதமந்திரம், மானஸ்தோகமந்தி

ரம், கிரியம்பகமந்திரம், தச்சம் யோருகிமந்திரம் ஆகிய இவைகளை ஜபித்து, அதோதேவா என்னு மந்திரங்களால் சர்வாங்கங்களையும் பரிசித்து, ஸ்யோகா என்னும் பிருதிவி மந்திரத்தால் பூமியையும், கோத்ரப்பாவரங்களையும் உச்சரித்து ஸமஸ்கரிக்கவேண்டும். இச்சந்தியாவிதியை பிராதக்காலத்தில் செய்யும்படி விதிக்கப்பட்டிருக்கின்றது.

அந்த ஸந்திக்குப்பின் அக்னிஹோத்திரம் செய்து, பஞ்சாயதன பூஜாஞ்ச தத: குர்யாத் ஸமாஹித:; சிவம் சிவம் கணபதிம் சூர்யம் விஷ்ணும் ததார்ச்சயேத். பவுருஷேண து ஸூக்தேன வ்யாஹ்ருத்யாவா ஸமாஹித:, மூலமந்திரேணவாகுர்யாத் திரிஸ்ருத இதிமந்திரித: என்றபடி பரமேஸ்வரியை மத்தியிலும், ஈசானத்தில் விஷ்ணுவையும், அக்னிதிக்கில் ஈஸ்வரரையும், நைருதிதிக்கில் கணேசரையும், வாயுதிக்கில் சூரியனையும் அமைத்து புருஷசூக்த|மந்திரத்தினாலாவது வ்யாகிருதி மந்திரத்தினாலாவது மூலமந்திரத்தினாலாவது தேவிசூக்தத்தினாலாவது சோடசோபசார பூஜைசெய்யவும். இவ்வண்ணம் தேவிபூஜை செய்த பிறகு இதரதேவர்களையும் பூஜைசெய்ய வேண்டும் தேவிபூஜையைக் காட்டிலும் புண்ணியத்தைக் கொடுக்கும் பூஜை ஒன்றுமில்லை. ஆகையால் சந்திகள்தோறும் சந்தியோபாசனையும் பூஜையும் செய்யும்படி சுருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அகஸ்தையினால் விஷ்ணுவையும், துளசியினால் கணேசரையும், தூர்வையால் தூர்க்கையையும், தாழம்பூவினால் ஈஸ்வரரையும் அர்ச்சிக்கலாகாது. மல்லிகை சாதி குடமல்லிகை பலா கல்யாணமுருக்கு வகுளம் குங்கும (குறுக்கத்தி) லோத்ரம் கரவீரம் சிம்ஸபா பாரிஜாத பங்கூகம் அகஸ்தியபுஷ்பம் மதந்தம் சிந்துவாரம் பலாசம் அசோகம்புல் பில்வதளம் குசமஞ்சரி சல்லகீ மாதவீ அர்க்கபுஷ்பம் மந்தாரை தாழைமலர் கர்ணிகாரம் கதம்பகுசுமம் புன்னாகம் சண்பகமுதலாகச் சொல்லப்பட்ட தேவிக்குப் பிரீதிகரமான புஷ்பங்களினால் அர்ச்சித்தி தூபதீப நைவேத்தியஞ் செய்து மூலமந்திரத்தை ஜபித்து வேதாப்பியாசஞ் செய்து பிறகு தினத்தினுடைய மூன்றவது பாகத்தில் நியமமுடைய வனுப்ப் பூஜையைப் பூர்த்திசெய்யவேண்டு மென்றனர். (சு-ம் 47.)

பதினேழாம் அத்தியாம் முற்றிற்று.

ஹ்ரீங்காரைக பராயணயை நம:

பதினெட்டாம் அத்தியாயம்.

ஸ்ரீதேவிபூஜா விசேஷம்.



நாரதர், மனிதர்கள் யாரொருவரை ஆச்ரயித்து இருகிருத்யா கின்றார்களோ அந்த மகாதேவியினது பூஜாவிசேஷத்தைக் கேட்க இச்சையுடையவனா யிருக்கின்றேன் என்று வினவ, நாராயணர் கூறு கின்றார்:—ஓ முனிவரே! புத்தி முத்தியைக் கொடுப்பதாயும், சகல ஆபத்துக்களையும் சந்தேகமின்றி அப்பொழுதே போக்கடிப்பதாயு முள்ள தேவியினது பூஜாவிதியை நீர்விரும்பியபடி சொல்லுகிறேன் கேட்பீராக.

முன்னர் ஆசமனஞ்செய்து மௌனமாயிருந்து சங்கற்பம் பூத சுத்தி மாத்ருகாந்யாசம் ஷடங்கந்யாசம் ஆகிய இவைகளைச் செய்து கொண்டு பின்னர் சங்கஸ்தாபனமும் சாமான்யார்க்கியமுஞ் செய்து அந்தச் சாமான்யார்க்கியத்தைக் கொண்டு அஸ்திரமந்திரதால் பூஜா திரவியங்களைப் புரோக்ஷித்து குருவினிடம் அனுக்ஞைபெற்று பிட பூஜையைச்செய்து தேவியைத்தியானித்து அதன்பின்னர் ஆசனாதி உபசாரங்களோடு பக்திபிரேமையுடன் பஞ்சாமிர்தத்தையும் ரசவர்க் கங்களையும், கரும்புரச முள்ள நூறுகலசங்களையும், மாம்பழரச முத லானவைகளையும், வேதபாராயணத்தோடு அபிஷேகஞ் செய்யவேண் டியது. கரும்பின்ரச அபிஷேகத்தினால் மறுபிறப்புண்டாக மாட் டாது. மாம்பழரசத்தினால் ஜகதம்பிகைக்கும் சரஸ்வதி லக்ஷ்மிக்கும் அபிடேகஞ்செய்தால் நித்தியனாயிருப்பன். திராக்ஷாரசத்தினால் மஹேசானியை அபிஷேகித்தால் அந்தரசத்தின் அணுக்கள் எவ்வ ளவோ அவ்வளவுகாலம் தேவி லோகத்தில் குடும்பத்துடன் வசிக்க இடமுண்டாம். கற்பூரம் அகரு குங்குமப்பூ கஸ்தூரி இவைகளோடு சந்தனத்தைத் தேவிக்கு அபிஷேகித்தால் நூறுஜன்மத்தில் செய்த பாபம் நீறாய்விடும். பாற்குடங்களினால் அபிஷேகித்தால் கற்பகாலம் பாற்கடலில் வாசமுண்டாகும். தயிர் தேன் நெய் சர்க்கரை இவைகளி னால் தேவியை அபிஷேகித்தால் அவ்வக்கடல்களாலும் ஆதிபத்ய முண்டாகும். அன்றியும் இவைகளை அன்புடன் ஆயிரம் கலசத்தினால்

அபிஷேகித்தால் இம்மை மறுமைகளில் சுகானுபவமுண்டாகும். இப்போது சொல்லிவந்த அபிஷேகங்கட்கெல்லாம் வேதபாராயணமிருத்தல் வேண்டும். இரண்டு மிட்டுவஸ்திரங்கள் சமர்ப்பிக்கின்றவன் வாயுலோகத்தில் வசிப்பான். இரத்னபரணங்களைச் சமர்ப்பிக்கிறவன் குபேரனுவான். தேவிதிருமேனியில் கஸ்தூரிசந்தனத்தையும், நெற்றியில் கஸ்தூரிதிலகத்தையும் பாதத்தில் லக்தபத்ரகம்போலும் சீமந்தசிந்தூரத்தையும், சமர்ப்பிக்கிறவன் தேவர்களுக்குத் தலைவனுய் இந்திரனுடைய சிங்காதனத்தில் சமமாய் வீற்றிருப்பான். தேவிபூஜைக்குரி அநேகவிதமான புட்பங்களில் கிடைத்தவரையில் பூஜிக்கிறவன் கைலாயமடைவான் மூன்று தளத்தோடு கூடிய பில்வத்தை செவ்வந்தசந்தனத்திற்றேய்த்து நமோந்தமாக மாயா பீஜமந்திரத்தை நான்காம் வேற்றுமையுடன் உச்சரித்து பரமபக்தியோடு தேவிபாதகமலங்களில் சமர்ப்பிக்கிறவன் மறுவாதிருன், வில்வபத்திரங்களால் பராசக்தியை அமோகமாக அர்ச்சிக்கின்றவன் இம்மையிலும் மறுமையிலும் துக்கமடைகிறதில்லே. புஷ்னேஸானிக்கு நிர்மலமான கோடிவில்வம் சமர்ப்பிக்கிறவன் பிரமாண்டத்துக் கதிபதியாவான். புது குருக்கத்தி புஷ்பத்தை அஷ்டகந்தத்திற் கலந்து கோடிகணக்காக அர்ச்சிக்கின்றவன் பிரமாவின் சம்பந்தமாகின்றுன். மாலதி (சாதி) மல்லிகையினுல் முன்போல் அஷ்டகந்தங்கலந்து கோடிகணக்காக அர்ச்சிக்கின்றவன் நான்முகனுகின்றுன். இதுபோலும் பத்துகோடி சமர்ப்பிக்கின்றவன் மிகவுந் துர்லபமான விஷ்ணுத்வத்தை யடைகிறுன். இப்போது விஷ்ணுவாயிருக்கின்றவரும் பூர்வத்தில் இவ்வாறு அர்ச்சித்துப் பெற்றவராகும். நூறுகோடியாக அர்ச்சிக்கின்றவன் சூக்ஷாத்மத்வத்தை யடைகிறுன். இப்போதுள்ளவரும் இவ்வண்ணம் பக்திப்பிரயத்தனத்தோடு செய்து பெற்றவரேயாகும். இரண்ய கர்ப்பரும் இப்படியே. ஜபாகுஸுமம் பந்துகம் மாதளம் இந்தப் புஷ்பங்களினுல் அருச்சனை செய்தாலும் மேலேசொல்லியபலன் கிடைக்கும். இவைகளல்லாத வேறு புஷ்பங்களினுல் ஸ்ரீதேவியை அருச்சிக்கின்றவனது புண்ணியத்தை ஈஸ்வரனுலும் சொல்லமுடியாது. அந்தந்த ருதுக்களில் உண்டாகும் புஷ்பங்களால் தேவியைக்குறித்து நியமமாய் வருடந்தோறும் சகஸ்ரநாமங்களால் பக்தியோடு அருச்சிக்கின்றவன் மகாபாதக உப பாதங்களினின்றும் விடுபட்டு தேகாந்தத்தில் துர்லபமாகிய தேவியினது ஸ்ரீ பதாம்புஜத்தை யடைந்து தேவதைகளோடு வசிக்கிறுன். இவ்விஷயத்தில் சம்சயமில்லே. காசில் கர்பூரம் சந்தனம் கில்

ஹம் நெய் குங்கிலியம் இவைகளைக்கலந்து தேவிக்குத் தூபங் கொடுக் கிறவனுக்கு தேவி காட்சிதந்து திரிலோகாதி பத்யத்தைக் கொடுக் கின்றாள். கர்ப்பூரங்கலந்த தீபம் நாறுவது, ஆயிரமாவது காட்டுகின்ற வன் எப்போதும் சூர்யலோகத்தில் வசிப்பான். இவைகளைச் சந்தே கித்து விசாரிக்கவேண்டியதில்லை.

தேவிக்கு முன்பாக லேஹ்ய சோஷ்யாதி ஷட்ரசங்களோடு மஹா போஜ்ய நிவேதனத்தையும், திவ்யமாயும், மிருதுவாயும் இரசங்க ளோடு கூடினதாயும் உள்ள கானுவித்மான பலங்களையும், சொர்ண பாத்திரத்தில் வைத்து நாடோறும் நிவேதனம் செய்து வருவானுயின் ஸ்ரீமகாதேவி திருப்தியடைவாள். ரஜ்ஜு சர்ப்பமயமா யிருப்பது போல் யாவும் அவள்மயமா யிருப்பதால் மூன்றுலோகமும் திருப்தி யடையும். கற்பூரங்கலந்ததாயும் சீதளமாயும் கலசத்திலுள்ளதாயும் மகத்தாயும் சுபகரமாயுமுள்ள கங்காதீர்த்தத்தைத் தாகசாந்தியின் பொருட்டு நிவேதித்து கற்பூரம் ஏலம் லவங்கம் இவைகளோடு முக வாசனையை யுண்டுபண்ணும் தாம்பூலத்தை பக்தியினுல் தேவிக்குக் கொடுத்தால் அவள் திருப்தியடைந்து பிரசன்னமாகின்றாள். பின்னர் மிருதங்கம் வீணை முரசம் டக்கா துந்துபி மோகத்தை யுண்டுசெய்யும் காகளம் இப்படிப்பட்ட வாத்திய கோஷங்களாலும் வேதபாராய ணம் புராணம் ஸ்தோத்திரம் இவைகளினுலும் தேவியைத் திருப்தி செய்து குடை சாமரம் முதலான ராஜோபசாரங்களைத் தினமும் கடாத்தி அநேகவிதமாகப் பிரதக்ஷிண நமஸ்காரம் புரிந்து ஜகதம்பி கையைக் குறித்து அடிக்கடி கூறுமை கேட்கவேண்டும். ஸ்மரணமாத் திரத்தில் தேவிபிரசன்னை யாகின்றாளென்றல் இப்படிப்பட்ட வுபசா ரங்களால் தேவி பிரசன்னையாகின்றா ளென்றல் இப்படிப்பட்ட வுப சாரங்களால் தேவி பிரசன்னையாகின்றாளென்பதில் ஆச்சரியமென்ன? மாதாவுக்குப் புத்திரர்களிடம் கருணையுண்டாவது இயற்கையாதல் போலும் ஜகன்மாதாவுக்குப் பக்தர்களிடம் சுபாவமாக கருணை யுண் டாவதைப் பற்றி சொல்லவேண்டுவ தென்ன? இது விஷயத்தைப் பற்றி பிரகத்ரதன் என்னும் இராஜருஷியினுடைய பிரீதிகாரமும் பக் திப்பிரதமுமான ஓர்புராணகதையைச் சொல்லுகிறேன் கேட்பீராக:-

பொதியமலையில் ஓர் பக்கத்தில் ஓர் சக்கிரவாளப் பருதியிருக் கிறது, அது ஓர் காலத்தில் பறந்துகொண்டே கானதேசங்களைச் சுற்

றிக்கொண்டு பூர்வபுண்ணிய விசேடத்தால் முத்தியைக் கொடுக்கும் காசியையடைந்து அன்ன பூரணிஸ்தானத்தை விட்டு நீக்காது தினமும் பிரதக்ஷணமாகப் பறந்துகொண்டேயிருந்து காலாந்தரத்தில் சுவர்க்கத்தை யடைந்து அங்கு தேவரூபத்தோடு இரண்டு கற்பகாலம் வரையில் பலவிதமான போகங்களை அனுபவித்து உத்தமோத்தமமாகிய க்ஷத்திரியகுலத்தில் பூர்வஞானத்துடன் பிறந்து பிரகதத்தன் என்று பிரசித்தியடைந்தவனும் மகத்தானயாகங்களைச் செய்கின்றவனும் சத்தியவாதியாயும் ஜிதேந்திரியனும் திரிகாலமும் அறிந்தவனும் சார்வபௌமனும் அஷ்டாங்க யோகத்தில் ஆசக்தியுள்ளவனும் இருந்தான். பூவுலகில் பூர்வஜன்மவுணர்ச்சியுடையவனிருக்கிறானென்று பலமுனிவர்கள் கேள்விப்பட்டு அவனிடம்வந்தனர். அரசன் அவர்களை விநயத்துடன் ஆசனங்கொடுத்து உபசரித்தனன். முனிவர்கள் அரசனைநோக்கி பூர்வஜன்மவுணர்ச்சியும் திரிகாலஞானமும் எவ்வாறு எந்தப்புண்ணியத்தால் உமக்குக் கிடைத்ததென்று வினவினர். அரசன் பூர்வத்தில் நான் நீசசரீராமுள்ள சக்கிரவாளப்பகூயியாயிருந்து புண்ணியவசத்தால் ஞானமில்லாமலே காசியில் அன்னபூரணியைப்பிரதக்ஷிணஞ் செய்துவந்தேன். அதனால் சுவர்க்கமடைந்து அங்கு இரண்டு கற்பகாலம் சுகல்போகங்களையும் அநுபவித்துப் பின் பூமியில் இச்சரீரம்பெற்று திரிகாலக்ஞான முள்ளவனாயிருக்கின்றேன், ஜகதம்பிகையின் பாதஸ்மரணையின் பலத்தை யாரிவர்கள், இதனை நினைத்த மாத்திரத்தில் எனது கண்களினின்றும் ஆனந்தபாஷ்பம் பெருகுகின்றது. எவர் சர்வமாதாவாகிய தேவியை உபாசிக்கவில்லையோ அப்படிப்பட்ட பாபமாகிய துஷ்டசண்மத்தை நிந்திக்கவேண்டும். சிவோபாசனை விஷ்ணுவுபாசனை நித்தியமான தல்ல. சக்தியுபாசனையே நித்தியமானதென்று சுருதியிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதிகமாக என்னசொல்ல வேண்டும். பகவதியின் பாதாம்புஜம் நிரந்தரம் சேவிக்கத்தக்கது. தேவியை சகுண சொரூபமாகவேனும் நிர்குணசொரூபமாகவேனும் சேவிப்பதைக் காட்டிலும் சிரேஷ்டமானது வேறொன்றில்லையென்று கூற, முனிவர்கள் மலர்ந்த நெஞ்சமுடையவர்களாய்த் தங்கள் தங்களிடம்போய்ச் சேர்ந்தனர், தேவியினது பூஜாபலம் இவ்வளவென்று யாவரால் சொல்லமுடியும்; யாவரால் கேட்கமுடியும். எவர்களுக்கு ஜன்மசாபல்லியமுண்டோ

அவர்களுக்குத்தான் தேவியினிடத்தில் சிரத்தையுண்டாக்கும். எவர்கள் ஜன்மசாங்கர்யமுடையவர்களோ அவர்களுக்கும் தேவியினிடத்தில் சிரத்தை யுண்டாகிறதில்லை என்றார். (சு-ம் 71)

பதினெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

ஹரீங்கார தீர்க்கிகா ஹும்வியை நம:

பத்தொன்பதாம் அத்தியாயம்.

மாத்யாந்நிகசந்தி.

நாராயணர் கூறுகின்றார்:—ஓ நாரதரே! யாதொரு அனுட்டானத்தினால் உத்தமமான பலனுண்டாகிறதோ அப்படிப்பட்ட சுபகரமானமாத்யாந்நிக சந்தியாவிதியைச் சொல்லுகிறேன் கேட்பீராக:—யௌவன சொரூபிணியாயும் வெண்ணிறமுடையவளாயும் முகத்தண்ணுடையவளாயும் வரத்தைக் கொடுக்கின்றவளாயும் வரதம் அக்ஷமாலை திரிசூலம் அபயம் இவைகளோடு கூடிய திருக்கரங்களுடையவளாயும் விருஷபவாகன முடையவளாயும் யசுர்வேத சொரூபிணியாயும் ருத்திரசொரூபிணியாயும் தமோகுண முடையவளாயும் புவர்லோக வாசினியாயும் சூர்யசொரூபமாக விருக்கின்றவளாயும் சூர்யமார்க்கத்தில் சஞ்சரிக்கின்றவளாயும் மாயாரூபிணியாயும் ஆதிதேவியாயுமிருக்கிற சாவித்திரிதேவியை நமஸ்கரிக்கின்றேன் என்று தியானித்து அர்க்கியம்பிரதானம் புஷ்பம் அல்லது பில்வசகிதமாக மேல் நோக்கி சூரியனுக்கு நோகவிட்டு பிராதஸ்ஸந்தியில் சொன்ன பிரகாரம் உபசம்ஹாரஞ் செய்யவும்.

மாத்யாந்நிகஸந்தியில் சாவித்திரியை சிலர் இச்சிக்கிறார்கள். அது அசம்பிரதாயமாக விருக்கிறது; அது காரியஹானியைச் செய்யும். அதற்குக் காரணத்தைச் சொல்லுகிறேன்:—சூரியனைச் சக்திகளில் மத்தேஹானி என்னும் இராக்ஷசகூட்டங்கள் பக்ஷிக்க இச்சிக்கிறார்கள் என்னும் காரணத்தைச் சுருதியில் சொல்லியிருக்கிறது. ஆகையால் சந்திகளில் பிரணவத்தோடு கூடியகாயத்திரியினால் சலத்தை அபிமந்திரித்து அர்க்கியம்விடுகிறார்கள். அவ்வாறு செய்யாவிடில் சுரு

தியைக் கொன்றவனுவன். ஆகர்ஷணமந்திரத்தால் புஷ்பசகிதமாகவா வது பில்வம் தூர்வை இவைகளினுலாவது சூத்தோக்தமாய் அர்க்கி யத்தைப் பிரயத்தின பூர்வமாக எவன் விடுவானே அவன் சந்தியா பலத்தைப் பூரணமாக அடைகிறுன்.

இனி மாத்தியாந்திக தர்ப்பணத்தைக் கூறுகின்றேன்:—புவ: பூர: புருஷம்-யஜுர்வேதம்-மண்டலம் - இரண்யகர்ப்பம் - அந்தராத் மானம் - சாவித்ரீம் - தேவமாதரம் - சாங்கிருதிம் - சந்தியாம்-யுவதீம்- ருக்திராணீம் - தீம்ருஜாம் - சர்வார்த்தானும் - சித்திகரீம் - சர்வமந்தி ரார்த்தசித்திதாம்-பூ: புவ: சுவ: புருஷம் இவைகளோடு தர்ப்பயாமி நமோநம: என்பதை முடிவிற்கூட்டித் தர்ப்பிக்கவேண்டும்.

அதன்பின் உதுத்தியம் என்கிற சூக்தத்தாலும், சித்ரம்தேவா னும் என்னும் சூக்தத்தாலும் சூர்ய உபஸ்தானஞ்செய்து மந்திரசாத னத்தை இச்சிக்கிறவனுக ஜபம்செய்ய வேண்டும். எவ்வாறெனின், பிராதக்காலத்தில் நிமிர்ந்தகையோடும், மத்தியானத்தில் இருதயத்தி னிடத்துப் பொருந்தியகையோடும், சாயம்சந்தியில் கவிழ்ந்தகையோ டும் அங்குஷ்டவிரலால் அநாமிகையிரலின் நடுரேகையிலிருந்து கனி ஷ்டாதி கிரமமாக தர்ஜனிவிரலின் அடிவரையிலுள்ள ரேகைகளைத் தொட்டுத் தொட்டு எண்ணி எண்ணி ஜபிப்பதாகும். இவ்வா று கைபிற்செய்வதைக் கரமாலேயென்று சொல்லுவர்.

பசு தாய் தந்தை சிசு இவர்களைக் கொன்றபாவமும், குருபத்னி யைப் புணர்ந்தபாவமும், பிராஹ்மணனது நிலந்திருடியபாவமும், பிரஹ்மணன் மதுபானஞ்செய்வானுயின் அந்தப்பாவமும் மனவாக் குக் காயங்களால் மூன்றுஜென்மங்களிற் செய்தபாபமும் காயத்தி ரியை ஆயிரம் உரு ஜபித்தால் நீங்கிவிடும்.

காயத்திரியை ஒருமுறைஜபித்தால் நான்குவேதங்களையும் அத்தி யயனம் செய்தபலனும், காயத்திரியின் அர்த்தத்தை தெரிந்து ஒரு முறைஜபித்தால் நான்குவேதங்களின் அர்த்தத்தை தெரிந்து அத்தி யயனஞ்செய்தபலனும் உண்டாகும். இதன மகிமையறியாது ஜபம் செய்தால் அதுஒருபயனையும் உண்டாக்காது, வீணுகும்இதுவரையில் மாத்தியாந்திகசந்தியின் விதியைக்கூறினேன், இனி பிரஹ்மயஜ்ஞவிதி யைக் கூறுகின்றேன் என்றனர். (சு-ம் 24)

பத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

—••○••—

உ

ஹ்ரீங்காரோ த்யான கேகிந்யை நமஃ

இருபதாம் அத்தியாயம்.

பிரஹ்மயக்ஞாதிவிதி.

—(-*-)—

நாராயணர் கூறுகின்றார்:—ஓநாரதரே! பிராமணன் மூன்றாவர்த்தி ஆசமனஞ்செய்து உதட்டை இரண்டுமுறை துடைத்து ஒருமுறை முகத்தைத் தடவி ஜலத்தைக் கையிலெடுத்து கைகளிலேயும் பாதங்களிலேயும் புரோக்ஷணஞ்செய்து அதன்பின் சிரம் கண் நாசி காது இருதயம் மௌளி முதலான இடங்களைத்தொட்டு வலக்கையில் இரண்டு தர்ப்பையும் இடக்கையில் மூன்று தர்ப்பையும் வைப்பதுமன்றி உபவீதத்திலும் சிகையிலும் ஆசனத்திலும் இரண்டு பாதங்களிலும் தர்ப்பைகளைவைத்து தேசகாலங்களைக் கூறி சர்வபாப விமோசனத்தின்பொருட்டு சூத்ரோக்த தேவதாபிரீத்யர்த்தம் பிரஹ்மயஜ்ஞஞ் செய்கிறேனென்று சங்கற்பித்து ஆரம்பத்தில்காயத்திரியைமூன்று முறைஜபித்து ‘ அக்நிமீளே, யதங்கேதி, அக்னிர்வை மஹாவிரதம், ஏசஷபந்தா, விதாமகவத், இஷேத் ஓர்ஜே, அக்ன ஆயாஹி, ஸந்நோதேவி, என்பதாதி வேதமந்திரங்களையும் சம்ஹிதாமந்திரங்களையும் விரதமந்திரங்களையும் சாந்திரமானாதி ஐந்து வருடங்களைக் குறிக்கும் ஜோதிட சம்பந்தமான மயரசதஜப கௌக்மா என்னும் அக்ஷரங்களை முதலாகவுடைய ஜோதிஷசூத்திரங்களையும், அதாதோ தர்மசிஞ்ஜாஸாம் அதாதோபிரஹ்ம சிஜ்ஞாஸா தச்சம்யோரிதிபிரஹ்மணேநமஃ “என்பதாதி வேதாந்தசூத்திரங்களையும் உச்சரித்து பிரஜாபதி பிரஹ்மா வேதாஃ தேவாஃ ருஷயஃ சர்வாணிசந்தாம்ஸி ஓங்காரஃ வஷட்காரஃ வியாஹ்ருதயஃ சாவித்திரி காயத்ரியக்ஞாஃ த்யாவா பிருதிவீ அந்தரிக்ஷம் அஹோராத்திரம் சங்கியாசித்தாஃ கடல்கள் நதிகள் பர்வதங்கள் க்ஷேத்திரங்கள் ஓஷதிகள் அரண்யங்கள் கந்தர்வர்கள் அப்சரசுகள் நாகங்கள் பக்ஷிகள் பசுக்கள் சாத்தியர் பிராமணர்கள் யக்ஷர்கள் ராக்ஷசர்கள் பூதங்கள் என்பதாதி நாமங்களைக்கூறி தேவதர்ப்பணஞ்செய்து, பின்னர் பூணூலை மாலையாக அணிந்துகொண்டு சதர்ச்சிஃ மத்தியமாஃ கிருத்ஸமதஃ விச்வாமித்ரஃ வாமதேவஃ அத்ரிஃ பாரத்வாஜஃ வசிஷ்டஃ ப்ரகாதஃ

பாவமாந்யஃ க்ஷுத்ரசூக்தஃ மஹாசூக்தஃ சநகஃ சநந்தனஃ சநாதனஃ சநத்குமாரஃ கபிலாஃ சூரிநாஃ ஓஹலிஃ பஞ்சசீரிஷஃ இவர்கள் நாமங்களைக்கூறி ருஷிதர்ப்பணஞ்செய்து, பூணூலை இடப்பாகமாக மாற்றிக்கொண்டு சுமந்து ஜைமினி வைசம்பாய நஃ பைலாஃ சூத்ரயுக்பாஷ்யஃ பாரதஃ மஹாபாரதஃ தர்மாசாரியஃ இவர்களும் திருப்தியடையும் பொருட்டுத்தர்ப்பணஞ்செய்து, ஜானந்திஃபரஹவிஃ கார்க்கஃ கவுதமஃ சாகலஃ பாப்ரவ்யஃ மாண்டவ்யஃ மாண்டூகஃ கர்க்கீ சக்ரவீஃ வடபாஃ ப்ராதிதேயிஃ சுலபாயுக்தஃ மயித்ரேயஃ கஹோளஃ சவுஷிதகஃ மஹாகவுஷீதகஃ இவர்களுக்கும் மறுபடி பாரத்வஜஃ பைங்கியஃ மஹாபயிங்கஃ சுயஜ்ஞஃ சாங்கியாயனஃ மைத்ரேயஃ மஹைதரேயஃ பாஷ்கலஃ சாகலஃ சுஜாதவக்த்ரஃ அவுதவாஹிஃ சவுஜாமிஃ சௌநகஃ ஆச்வலாயநஃ இவர்கள் நாமங்களைக்கூறி ஆசர்யதர்ப்பணஞ் செய்து, பின்னர்* என்குலத்தி லுண்டானவர்கள் கோத்திரத்தில் வந்தவர்கள் புத்திரஹீனர்களாக இறந்தவர்கள் என்னால் வஸ்திரத்தைநனைத்துப் பிழிந்துகொடுக்கும் சலத்தைக்கிரகித்து திருப்தியடையுங்கள் என்று யாவருக்குந் திருப்தியுண்டாகும்படித்தர்ப்பணஞ்செய்து பிரதக்ஷிண நமஸ்காரஞ் செய்யவேண்டும்.

இவ்வண்ணஞ்செய்வதுபிரஹ்மயக்ஞவிதியென்றறிக. யாதொரு சாதகன் உத்தமமாயிருக்கிற இவ்விதியைச் செய்கின்றானோ அவன் சர்வவேத வேதாங்க படனத்தினால் அடையும் பயனையடைகிறான். அதன்பின்னர் நாடோறும் வைச்வதேவம் நித்யசிரார்த்தம் அதிதிபூஜை இவைகளை நடத்தி தினத்தின் ஐந்தாவது முகூர்த்தகாலத்தில் பசுவுக்கிறையும் பிராமணர்களுடன் போஜனமு முடித்து ஆறாவது ஏழாவது முகூர்த்தங்களில் புராணாதி சிரவணங்களும் செய்து எட்டாவது முகூர்த்தகாலத்தில் சாயம்சந்தியை யுத்தேசித்து வெளியேபோக வேண்டியது. ஓ நாரதரே! எந்த அநுட்டானத்தினால் மஹாமாயா ஸ்வரூபிணி பிரசன்னமாகின்றாளோ அந்தசாயம் சந்தியைச் சொல்லுகிறேன் கேட்பீராக :—

யோகசாதகன் சாயங்காலத்தில் நிலைபெற்றமனதுடையவனாய் ஆசமனபிராணாயாமங்களைச்செய்து பத்மாசனத்தில் அசைவற்றவனாயிருந்து சுருதிஸ்மிருதி சம்பந்தமான கரும ஆரம்பத்தில் பிராண

---

0 ஏகேசாஸ்மத் குலே ஜாதா அபுத்ரா கோத்ரிணோ மிருதாஃ, தேகிருஷ்ணந்து மயாதத்தம் வஸ்திர நிஷ்பீடனோதகம்.

வாயுவைக் கர்ப்பத்தில் பூரகஞ்செய்து தியானித்து மந்திரத்தையுச் சரித்து பூரககும்பக ரேசகங்களால் சலக்ஷணத்தோடு தேவியைத் தியானித்தலாகிய பூகசுத்தியைச் செய்யவேண்டும். இதனைச்செ ய்யாமல் தியானித்தல்கூடாது. சரஸ்வதிதேவியை விருத்தரூபிணி யாயும் கரிய நிறத்தையுடையவளாயும் கரியவஸ்திரத்தைத் தரித்த வளாயும் சங்கம் சக்கிரம் கதை பத்மம் இவைகளைத் தரித்திருக்கும் திருக்கரங்களையுடையவளாயும் கருடவாகனரூடையாயும் நவரத்ன மயமான ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவளாயும்மணிகளோடு கூடிய மேகலாபரணத்தையுடையவளாயும் விலையுயர்ந்த மகுடத் தைத்தரித்தவளாயும் நகூத்திரம்போன்ற முத்தாரங்களைத் தரித்த வளாயும் தாடையில் ஒளிவீசும் தோடுகளையணிந்த காதுகளையுடை யவளாயும் பீதாம்பரத்தைத் தரித்தவளாயும் சச்சி தானந்தரூபிணி யாயும் சாமவேதத்தோடு கூடினவளாயும் சத்திய மார்க்கத்தை யுடையவளாயும் சுவர்க்கத்திலுள்ளவளாயும் சூரியமார்க்கத்தில் நடப் பவளாயும் இருக்கின்ற ஒதேவி! நான் உன்னை ஆவாகனஞ்செய்கின் றேன். நீ சூர்யமண்டலத்தினின்றும் வருவாயாக. இவ்வண்ணமாகத் தியானித்து சாயம்சந்தியைச்செய்ப சங்கல்பிக்கவும்.

சாதகனானவன் சுத்தமனத்துடன் "ஆபோஹிஷ்டேதி" என் கிறமந்திரத்தினால் புரோக்ஷணமும் "அக்னிச்சேதி" என்கிற மந்தி த்தால் ஆசமனமும்செய்து இரண்டுபாதங்களையும் சேரவைத்துக் கொண்டு அஞ்சலியாகச் ஜலத்தைக் கரத்திலேந்தி சூரியமண்டலத் தில் வசிக்கும் தேவதையைத் தியானித்து காயத்திரியையுச்சரித்து சூரியப்பிரீதியாக அர்க்கியத்தை ஜலக்கரையில்விடவேண்டும். ஞான சூனியனாயிருக்கிற மூடாத்மாவானவன் ஜலத்தில் அர்க்கியத்தைவிடு வானாயின் ஸ்மிருதிமந்திரங்களை உல்லங்கனஞ் செய்தவனாகவும்பிரா யச்சித்தத்தைக் குரியவனாகவும் ஆகின்றான். சூரியவுஸ்தானத்தின் பொருட்டு "அஸாவாதித்ய" என்கிறமந்திரத்தையுச்சரித்துப் பிரத க்ஷிணஞ்செய்யவும் பின்னர்கிருஷ்ணஜனமுதலிய ஆசனங்களி லிருந் து ஆயிரமாவது ஐஞ்ஞூறுவது தேவி தியானபூர்வகமான காயத் திரிஜபம் செய்யவேண்டும் பிராதக்காலத்தில் உபஸ்தானாதிகள் எப் படிச் செய்யப்பட்டதோ அப்படியே சந்தியா காலத்திலும் செய்ய வேண்டும்.

இனி சாயஞ்சந்தியில் செய்யப்படும் தர்ப்பணாதிகள் வருமாறு :—வசிஷ்டர் ரேவாத்திரர் சரஸ்வதி விஷ்ணுரூபமுள்ள தேவதைகள் சந்தஸ்ஸ்வஃ சாமவேதம் மண்டலம் இரண்யகர்ப்பன் பரமாத்மா சரஸ்வதி காயத்திரி சங்கிருதி சந்திரை விருத்தை வைஷ்ணவீ உஷஸி நிம்ருஜீம் சர்வசித்திகாரணி சர்வ மந்திராதிபதி பூஃ புவஃ சுவஃ ஸ்வஸ்சபூருஷம் சர்வ மந்திராதிபதிகை இவர்களுக்குத் தர்ப்பணஞ் செய்வது சுருதிசம்மதமாகும். பாபநாசனமாயும் சர்வதுக்கஹரமாயும் வியாதிநாசனமாயும் மோக்ஷப்ரதமாயும் சதாசாரப் பிரதானமாயும் உள்ள சாயம் சந்தி விதியைச்சொன்னேன். சந்தியை அனுஷ்டிப்பதனல் தேவியானவள் பக்தர்கள் விரும்புவனவற்றைக் கொடுக்கின்றவளாகின்றுள் என்றனர். (சு - ம் - சருஉ)

இருபதாம் அத்தியாயம் முற்றிற்று.

———

ஓ

ஹ்ரீங்காராரண்ய ஹரிண்யை நமஃ

இருபத்தோன்றும் அத்தியாயம்.

காயத்திரி புரச்சரணகர்மம்.

———

நாராயணர் கூறுகின்றார்:—இனி பாவநாசனமாயும் புண்ணியகரமாயும் அபீஷ்டங்களைக் குறைவறக்கொடுக்கின்றதாயுமுள்ளகாயத்திரிபுரச்சரணையைக் கூறுகின்றேன் கேட்பீராக :—

மலையினுச்சியிலாவது நதிதீரத்திலாவது வில்வமூலத்திலாவது ஜலதீரத்திலாவது பசுக்களைக் கட்டுமிடத்திலாவது தேவாலயத்திலாவது அரசமரத்தடியிலாவது உத்யானவனத்திலாவது துளசிவனத்திலாவது புண்ணிய க்ஷேத்திரத்திலாவது ஆசாரியர்சன்னிதியிலாவது எந்தவிடத்தில் சித்தம் லயமாகுமென்று தோன்றுகின்றதோ அந்தவிடத்திலாவது புரச்சரணசெய்ய வுத்தேசித்தவன் செய்வானுயின் மந்திரசித்தியுண்டாகும் சந்தேகமில்லை.

எந்தெந்த மந்திரங்களை உபதேசஞ் செய்யப் பெற்றனை அந்தந்தமந்திர சித்தியின்பொருட்டு புரச்சரணை செய்ய வேண்

டியது. வியாகிருதிபூர்வகமாய்க் காயத்திரிமந்திரத்தைப் பதினாயிரம் உருஜபிக்கவேண்டும். நாரசிஹ்மம் சவுரம் வாராஹமுதலிய மந்திரங்களாயினும், வேதசம்மந்தமான மந்திரங்களாயினும் காயத்திரியை விட்டுச் செய்தால் அம்மந்திரங்கள் பலனைக்கொடுக்க மாட்டா. ஏனெனில் வேதமாதாவாயும் ஆதிசத்தியாயும் இருக்கின்ற காயத்திரியைப் பிராஹ்மணர்களெல்லாம் உபாசிக்கின்ற படியால் அவர்கள் சாக்தர்களேயல்லாமல் சைவர்களுமல்லர் வைணவர்களுமல்லர். மந்திரசோதனைக்குப்பூர்வாங்கமாகவும் உத்தமமாகவுமுள்ள ஆத்மசோதனையைச் செய்து, பின் தந்திரசோதனையையும் புரச்சரணையையும் செய்யவேண்டும். ஆத்மதத்துவசோதனைக்கு மூன்று லக்ஷமாவது ஒருலக்ஷமாவது ஜபிக்கவேண்டுமென்று சுருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆத்மசுத்தியைச் செய்யாமல் ஜபஹோமாதிகள் செய்தால் அவைகள் நிஷ்பலமாகுமென்று அறிதல் வேண்டும். தேகத்தைத் தவத்தினால் வாட்டிய பிதுர்க்களுக்கும் தேவர்களுக்கும் தர்ப்பிக்கவேண்டியது. தவத்தினால் சுவர்க்கத்தை யடைவதேயல்லாமல் பிரஹ்மத்தையும் அறிகின்றான். க்ஷத்திரியன் புஜபலத்தினாலும் வைசியனுஞ்சூத்திரனும் தனத்தினாலும் தங்களுக்குண்டாகும் ஆபத்தினின்றும் நீங்குகின்றார்கள். பிராமணனே ஜபஹோமாதிகளால் ஆபத்தினின்றும் நீங்கவேண்டியவனாயிருக்கின்றபடியால் பிரயத்தனத்துடன் அவைகளைச் செய்யவேண்டும். பிராமணனுக்கு விதிப்படி கிருச்சிரம் சாந்திராயணமுதலிய விரதங்களால் தேகத்தைவாட்டுதலே உத்தமமானதபசாகும். சுத்தமானபிரஹ்மாந்தத்தை நான்குபாகமாகச்செய்து முதற்பாகம்பிராமணர்களுக்கும் இரண்டாவதுபாகம் பகவுக்கும் மூன்றாவதுபாகம் அதிதிகட்கும் கொடுத்து நான்காவதுபாகத்தை பத்தினியுடன் தான்புசிக்கவேண்டும். அந்தந்த ஆச்சிரமங்கட்குத் தக்கவாறு போஜனங்கொள்ளுமவிதியைக்கூறுகின்றேன்:—கிருகஸ்தன்எட்டுக்கவளமும் வானப்பிரஸ்தன் நான்குகவளமும் பிரமசாரி திருப்தியாகுமளவும் கொள்ளவேண்டும். கவளமென்பது-குக்குட அண்டத்தினளவாம். உண்பதற்குமுன் கோமூத்திரசலத்தினால் அன்னத்தை ஒன்பது அல்லது ஆறு அல்லது மூன்றுதடவை சாவித்திரிருக்கையும் அதன்சம்பந்தமான மந்திரங்களையும் உச்சரித்து விதிப்படி இடைவிடாதகையால் புரோக்ஷிக்கவேண்டும்.

சோரனிடத்திலும் சண்டாளனிடத்திலும் க்ஷத்திரியவைசியரிடத்திலும் அன்னத்தை எந்தப்பிராமணன் கொடுக்கப்பெறுகின்றானோ அவனை அதமனாக விதியில் சொல்லப்பட்டிருக்கிறது. சூத்திரரது அன்னத்தினாலேயும் சூத்திரசகவாசத்தினாலேயும் சூத்திரனோடு சமான ஆசனத்திலிருப்பதனாலேயும் அந்தணர்கள் சூரிய சந்திரர்கள் உள்ளவரையில் கோரமான நரகத்தன்பத்தை யடைவார்கள். சந்தஸ்பகளோடுகூடிய காயத்திரிக்கு எவ்வளவு அக்ஷரங்களுள்ளனவோ அந்த ஒவ்வொரு அக்ஷரத்துக்கும் ஒவ்வொரு லக்ஷஞ்செய்ய வேண்டுமென்பது விச்வாமித்திரருடைய சம்மதம். உயிரில்லாத தேகம் எப்படியோ அப்படிப்போல புரச்சரணை செய்யாத மந்திரமானது சகலகர்மங்களிலும் யோக்கியமுடையதல்லவென்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனி ஆடி புரட்டாசி என்ற மாதங்களும் மலமாதங்களும், செவ்வாய் சனி வியதிபாதம் வைத்ருதியோகங்களும், சதுர்த்தி சஷ்டி அஷ்டமி நவமி திரயோதசி சதுர்த்தசி அமாவாசை திதிகளும், பிரதோஷகாலம் இராக்காலங்களும் பரணி கிருத்திகை திருவாதிரை ஆயில்யம் கேட்டை அநுஷம் சிராவணம் ஜன்மநக்ஷத்திரம் இந்தநக்ஷத்திரங்களும், மேஷம் கடகம் துலாம் மகரம் கும்பம் இந்தலக்னங்களும் புரச்சரணைசெய்தற்குரியகாலங்களல்லவாம். சந்திரபலம் தாராபலம் சுக்லபக்ஷம்இவைகள் கூடியகாலத்தில் புரச்சரணைசெய்தால் மந்திரசித்தியுண்டாகும். புரச்சரணை செய்வதற்கு முன் ஸ்வஸ்திவாசனபூர்வகமாய் நாந்திசிரார்த்தம்செய்து பிராமணர்களுக்கு அன்னதானம் வஸ்திரதானங்களும் கொடுத்து அதன் பின்னர் அவர்களிடத்தில் அநுக்ஞைபெற்று சிவபெருமானுக்கெதிர்முகமாகவும் பிராஹ்மணமுகமாகவும் இருந்து ஜபிக்கவேண்டியது. காசி கேதாரம் மஹாகாளம் நாசிகம் திரியம்பகம் இந்த பஞ்சமகாக்ஷேத்திரங்கள் பூமண்டலத்தில் தீபம்போல் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. அவ்விடங்களில் ஆசனங்களுள் தீபம்போல் பிரகாசிக்கின்ற கூர்மாசலத்திலிருந்து ஜபிக்கவேண்டும். ஆரம்பதினத்தில்எவ்வளவுஎண்ணிக்கையாக ஜபிக்கப்படுகிறதோ அவ்வளவு அளவாகவே ஜபிக்க வேண்டுமேயன்றி அதிகமாகவும் குறைவாகவும் ஜபித்தல் கூடாது. நாள்தோறும் தவறாது பிராதக்காலந்தொடங்கி மத்தியான்னகாலம் வரையில் எண்ணிக்கைப்படி மனம் அசைவில்லாமலும் சுத்தியாகவும் தியானத்துடனும் மந்திரார்த்த சிந்தனையுடனும் விதி

யுடன் செய்யவேண்டும். ஜபசங்கியையில் பத்தில் ஒரு பங்குஹோமத்தை நெய் பால் எள் பத்திரங்கள் புஷ்பங்கள் சானியங்கள் மதுரமான திரவியங்கள் ஆகிய இவைகளால் மந்திரசித்தியின்பொருட்டுச் செய்யவேண்டும். தர்மார்த்தகாமமோக்ஷங்களைக்கொடுக்கின்றகாயத்திரிதேவிநித்தியகைமித்திகாமியங்களினுற்சேவிக்கத்தகுந்தவள்இவ்வுலகிலும்மேலுலகிலும் காயத்திரிக்குச்சமானமான மந்திரமொன்றுமில்லை. மத்தியான்னகாலத்தில் அதிகபோஜனஞ் செய்யாதவனுயும் மூன்றுகாலங்களிலும் ஸ்நானஞ்செய்பவனுயும் தேவதார்ச்சனை செய்பவனுயும் ஜலத்தில்நின்று மனதை மந்திரத்தில் அநியமாகவிருத்தி ஜபிக்கும் கிரியையோடு கூடிய அறிவுடையவனுப் மூன்று லக்ஷம் ஜபிக்கவேண்டியது. அவ்வாறின்றி மனதை இச்சையின்வழி வேறு காரியங்களில் விடுவானுயின் அவனுக்குசித்தியுண்டாகாது. எது வரையில் தன்காரியம் சித்திக்கவில்லையோ அது வரையில் ஜபிக்க வேண்டும். இனிச் சாமான்ய காமியகர்மத்துக்குரிய விதியைச் சொல்லுகின்றேன்:—

சூரியோதயத்தில் ஸ்நானஞ்செய்து தினம் ஆயிரம் காயத்திரி ஜபம்செய்யவேண்டும் ஒருவருடம் ஆறுமாதம் மூன்றுமாதம் ஜபஞ் செய்துவரின் இதற்குள் ஆயுள் ஐச்வர்யம் ஆரோக்யம் தனம் இவைகளெல்லாம் சித்தியாகும் தாமரைப்புஷ்பத்தை நெய்யில் தோய்த்து லக்ஷம் ஓமஞ் செய்வானுகில் மோக்ஷசித்தியுண்டாகும். இதில் சந்தேகமில்லை. மந்திரசித்தியில்லாமல் ஜபஹோமாதிகள் செய்தால் அவைகள் நிஷ்பலமாம். பாலினுலாவது தயிரினுலாவது இருபத்தைந்து லக்ஷம் ஓமஞ்செய்தால் தேகத்தோடு முக்தியடைகிறன். இது மகருஷிகளுடைய சம்மதம். அஷ்டாங்கயோகசித்தியும் இதனுலேயே யுண்டாகிறது. குருபக்தியும் நியத ஆகாரமுமுடையவனுய் மந்திரஜபஹோமங்கள்எவன்செய்கின்றனே அவனுக்குச் சர்வசித்தியும் உண்டாகும். ஒருநாள் பஞ்சகவ்யபோஜனமும் ஒருநாள் வாயுபக்ஷணமும்ஒருநாள் பிராமணஅன்னபோஜனமும் உள்ளவன்காயத்திரிஜபபலனை யடைகிறன். கங்கை மத்தியில் நின்று கங்காஜலத்தையுண்டு நூறு காயத்திரி ஜபத்தைச் செய்கிறவன் எல்லாப்பாபங்களினின்றும் விடுபடுவதுமன்றி சாந்திராயணவிரதாதிகளை யநுட்டித்த பலனையும் அடைகிறன். அரசனும் பிராமணனும் தனதுகிருகத்திலிருந்து இந்தப் புரச்சரணையாகிய தவத்தைச் செய்யலாம். பிரஹ்ம

சாரி கிருகஸ்தன் வானப்பிரஸ்தன் ஆகிய இவர்களுக்கு அவரவர்கள் அதிகார பேதப்படி பலனுண்டாகும். மோக்ஷ காமியானவன் வேத விதியாகவாவது ஸ்மார்த்த விதியாகவாவது அக்னிகார்யாதி சதாசாரங்களைச் செய்தல்வேண்டும். பிரஹ்மசாரி இவ்விரதத்தைத் தொடங்குவானுயின் பழங்களையாவது கிழங்குகளையாவது ஜலத்தையாவது சுத்தமாகக் கிடைக்கும் பிக்ஷான்னத்தில் எட்டுக்கவளமாவது புசித்தல்வேண்டும். இவ்வண்ணஞ் செய்வானுயின் மந்திரசித்தியுண்டாகும், தரித்திரமுடையவன் அதினின்றும் விடுபடுவான். இதனைச் சிரவணஞ்செய்தவனும் பலத்தாகிய சித்தியையடைகிறான் என்றனர். (சு - ம் - நூறு)

இருத்தொன்றும் அத்தியாயம் முற்றிற்று

ஓ

ஹரீங்கார வாலவல்லர்யை நமஃ

இருபத்திரண்டாம் அத்தியாயம்.

வைச்வதேவம்.

நாராயணர் கூறுகின்றார்:—ஓ நாரதரே! புரச்சர்ய விதியைக் கூறிவரும்போது பிரஹ்மவைச்வதேவவிதி எனது நினைவுக்கு வந்தது; அதனால் அவ்விதியையுங்கூறுகின்றேன்:—யக்ஞம்-தேவயக்ஞம் பிரஹ்மயக்ஞம் பூதயக்ஞம் பித்ர்யக்ஞம் மானுடயக்ஞம் எனஐந்துவகைப்படும். அவைகள் கிருகஸ்தனால் செய்யப்படும் சுள்ளிமுதலான ஐந்துவகையானபாவங்களை யொழிக்கும்பொருட்டு ஏற்பட்டுள்ளன. இவ்வைச்வதேவத்தைக் குண்டத்திலாவது தண்டிலத்திலாவது செய்யவேண்டுமேயன்றி அடுப்பிலும் இரும்பு பாத்திரத்திலும் வெற்றுத்தரையிலும் வரட்டியிலும் செய்தல் கூடாது. தேவர்கள் அக்னிமுகமாயிருப்பதால் அவ்வைச்வ தேவாக்னியை கையினலாவது முறத்தினலாவது கிருஷ்ணசனத் தினலாவது வஸ்திரத் தினலாவது ஜ்வலிப்பிக்கக்கூடாது. முகத்தினலேயே ஜ்வலிப்பிக்க வேண்டும். வஸ்திரத்தினல் செய்தால் வியாதியும் முறத்தினல்

தனநாசமும் கையினல்மரணமும்உண்டாமாகலின் கர்மசித்தியையு
ண்டாக்கும் முகத்தினுலேயேசெய்தல்வேண்டும். தயிர்நெய்கிழங்கு
காய் கனி தண்ணீர் இவைகளாலும் இவைகள் கிடைக்காவிடில்
விறகுகிழங்குபுல்முதலியவைகளாலும் ஓமம்செய்யலாம். மேற்கூறி
யவைகளெயெல்லாம் நெய்யினற் புரோக்ஷித்துச் செய்தல்வேண்
டும. ஓமதிரவியங்கள் காரமும் புளிப்பும் தைலசம்பந்தமும்இல்லா
தனவா யிருத்தல்வேண்டும். சுத்திசெய்வதற்கு நெய்யில்லாவிடின்
பால் தயிர் இவைகளாலும் அவைகளில்லாவிடில் தீர்த்தத்தினலும்
செய்யலாம். உலர்ந்ததும் பழமையானது மானவைகளாற் செய்
தால் குஷ்டரோகமும், சேஷப்பட்டதைச் செய்தால் சத்துருக்
களுக்குச் சுவாதீனமாய்விடுதலும், காரவஸ்துக்களாற் செய்தால்
தரித்திரமும், உப்பினற்செய்தால் அதோகதியும் உண்டாகும், ஓம
த்தை அக்னியின் வடப்புறத்தில் ஜ்வலிக்கும்தழலிற்செய்யவேண்
டும். சுள்ஸ் வேஷணி உபகரம் கண்டினி உதகும்பம் என்னும்
*ஐவகைப் பாவங்களைப்போக்கவல்ல இந்தவைஸ்வதேவத்தைச்செ
ய்யாமல் எந்த மூடப்பிராமணன் புசிக்கின்றனனோஅவன் காலபாசத்
தாற் கட்டுப்பட்டுத் தலைகீழாக நரகில் வீழ்வான். காய்கள் கீரை
வகைகள் கிழங்கு வகைகள் பழவர்க்கங்கள் இவற்றில் எதையாகார
மாகக் கற்பித்துக் கொள்ளுகிறனோ அதனை ஓமஞ்செய்யவேண்டும்.
வைஸ்வதேவம் செய்வதற்குமுன் சந்நியாசி பிக்ஷையை யுத்தேசித்
துவந்தால் வைஸ்தேவத்துக்குரிய பாகத்தை யெடுத்து வைத்து
விட்டு பிக்ஷையிடவேண்டும். வைஸ்வதேவத்தினு லுண்டாகும்
தோஷத்தை பிக்ஷுவுக்கு பிக்ஷைகொடுப்பதினல் போக்கிக்கொள்
ளலாம். பிக்ஷுவுக்கு பிக்ஷை கொடாததினு லுண்டாகும் குற்றத்
தை வைஸ்வதேவத்தால் மாற்றமுடியாது. சந்நியாசிகளும் பிரஹ்ம
சாரிகளும் சமைத்திருக்கும் அன்னத்துக் குரியவர்களாதலால்அவ
ர்களுக்கு அன்னங்கொடாமல் எவன் சாப்பிடுகிறனோ அவன்சாந்
திராயணவிரதத்தை யநுட்டிக்கக்கடவன்.

அதிதியானவன்ஒருவனதுகிருகத்தில் புசிப்பதற்கின்றிகுறைவு
டையவனகப் போவானுயின் அப்பொழுதே தன்பாபத்தை அவ

* விறகையெறிப்பது, மிளகாய்முதலியவை அரைப்பது, மெழு
குவது, காய்கரிகளைத்திருத்துவது, சலமெடுப்பது ஆகிய இவைக
ளாலுண்டாகும் ஐவகைப்பாவங்கள்.

னுக்குக்கொடுத்து அவனது புண்ணியத்தைத் தான்கிரகித்துக்கொண்டுபோவான். வைஸ்வதேவத்துக்குப்பின்னர் பசுவுக்கு ஆகாரங் கொடுக்கவேண்டும். எவ்வாறெனின் விஷ்ணுசொரூபமாக விருக்கின்ற ஹோமாதாவே! நாள்தோறும் விஷ்ணுபதத்தி லிருக்கின்றவளே! பால்கறக்கும்காலவளவு என்வீட்டின் தாழ்வாரத்தில் வீசிக்க வேண்டும் என்று பிரார்த்தித்து கோப்யோநமஃ என்று பூஜித்து உனக்கு நான்கொடுக்கும் ஆகாரத்தை நீ கொள்ளவேண்டும்என்று துதித்துக்கொடுக்கவேண்டும். இவ்வண்ணஞ்செய்வானால் காம தேநு திருப்தியடையும்.

ஓ நாரதரே! தாய் தந்தை குரு சகோதரன் புத்திரன் அடிமை அடுத்தவன்தனக்குப் பழக்கமில்லாதவன் அதிதி போஜனவேளைக் குவருகின்றவன் அக்னி இவர்களெல்லாம் போஷிக்கத்தக்கவர்கள். இவ்விதிகளையறிந்த கிருகஸ்தன் இப்போது சொல்லிவந்த வைகளையெல்லாம் செய்வானாயின் இகலோக பரலோக கதியையடையான். தரித்திரனாயுள்ள பிராமணன் பஞ்சயக்ஞத்தைச் செய்வானாயின் தனவானாகிய பிராமணன் சோமயாகஞ் செய்தபலனை அடைவான்.

ஜனன மரணம் நரை திரை முதலியவற்றைப் போக்குகின்ற பிராணாக்கினி ஹோத்திரத்தைக் கூறுகின்றேன். இவ்விதியையறிந்தவன் மூன்று கடன்களினின்றும் எல்லாப்பாவங்களினின்றும் விடுபடுவான். இவனது இருபத்தொரு தலைமுறையில் வீழ்ந்துகிடக்கும் பாவிகளும் கரையேறுவார்கள். அன்றியும் எல்லா யாகபலன்களையும் எல்லாப்பதங்களிலுஞ் செல்லும் சுதந்தரமும் உடையவனவன்.

இருதயம் கிழ் அக்னியாகவும், மனம் கடைகிற கட்டையாகவும், பிராணவாயு கயிறுகவும்,கண்கள் அத்வரி(எஜமானன்)ஆகவும் அக்னியை யுண்டாக்கி தர்ஜனி மத்திமை அங்குஷ்டங்களாகிய மூன்று விரல்களால் பிராணாகுதியும், மத்திமை அநாமிகைகளோடு அங்குஷ்டத்தைச்சேர்த்து அபானாகுதியும், கனிஷ்டிகை அனுமிகைகளோடு அங்குஷ்டத்தைச்சேர்த்து வியானாகுதியும், கனிஷ்டிகை தர்ஜனிகளோடு அங்குஷ்டத்தைச்சேர்த்து உதானாகுதியும், எல்லா விரல்களையுஞ் சேர்த்து சமானாகுதியும் தனித்தனி அன்னத்தை

எடுத்துக்கொடுத்தல்வேண்டும். இவ்வாறு ஆகுதிகளைக்கொடுக்கும் போது முதலில் பிரணவத்தையும் முடிவில் ஸ்வாஹாஎன்பதையுங் கூட்டி உச்சரித்தல்வேண்டும்.

• முகத்தில் ஆகவனீயத்தையும், இருதயத்தில் காருகபத்தியத் தையும், நாபியில்தக்ஷிணாக்கினியையும், நாபிக்கடியில்" சப்யன்அவ சத்யஃ" என்பவைகளையும் பாவித்துவாக்சகுஹோதா (ஹோமஞ்செ ய்கின்றவன்) ஆகவும், பிராணன் - உத்காதா(மந்திரத்தையுச்சரிக்கி ன்றவன்)ஆகவும்,கண்கள்-அத்வரியாகவும், மனம்-பிரஹ்மா(சாக்ஷி யாயிருக்கின்றவன்) ஆகவும்,காதுகள்-ஆக்னித்ரஃ(அக்கினியைரக்ஷி க்கின்றவர்கள்) ஆகவும், அகங்காரம்-பசுவாகவும்,பிரணவம்-ஆசன மாகவும், புத்தி-பத்னியாகவும் கிருகஸ்தன்-யாககர்த்தாவாகவும், மார்பு-வேதிகையாகவும், உரோமங்கள்-தர்ப்பைகளாகவும்,கைகள்- சிருஸ்ருவங்களாகவும் தியானித்தல்வேண்டும்.

பிராணவமந்திரத்துக்குப்பொன்னிறமாயுள்ளஜடராக்னிருஷியா கவும், சூரியன் தேவதையாகவும், காயத்திரி சந்தசாகவும்பாவித்து க்கொண்டு பிராணயஸ்வாஹா என்று ஆகுதிகொடுத்து, ஆதித்ய தேவாயநமஃ என்றுச்சரித்தும், அபானகுதிமந்திரத்துக்கு பசுவின் பால்போலும் வெண்ணிறமுள்ள சிரத்தாக்னி ருஷியாகவும், சந்தி ரன் தேவதையாகவும், உஷ்ணிக் சந்தஸாகவும்பாவித்துக்கொண்டு அபானயஸ்வாஹா என்றுஆகுதிகொடுத்து, ஸோமாயநமஃ என்று ச்சரித்தும், வியானகுதிமந்திரத்துக்கு தாமரைபோலும் நிறமுள்ள அக்னி ருஷியாகவும், அக்னிதேவன் தேவதையாகவும், அனுஷ்டு சந்தஸாகவும் பாவித்துக்கொண்டு வியானயஸ்வாஹா என்றுஆகு கொடுத்து, வியானயநமஃ என்றுச்சரித்தும், உதானகுதி மந்திரத் துக்கு இந்திரகோபம்போலும் நிறமுள்ள அக்னிருஷியாகவும், வாயு தேவன் தேவதையாகவும், ப்ருஹதீ சந்தசாகவும் பாவித்துக்கொ ண்டு உதானயஸ்வாஹா என்று ஆகுதிகொடுத்து, உதானவாயவே நமஃ என்றுச்சரித்தும், சமானகுதி மந்திரத்துக்கு மின்னல் போலும்நிறமுள்ள அக்னி ருஷிபாகவும், மேகம் தேவதையாகவும் பங்தி சந்தஸாகவும் பாவித்துக்கொண்டு சமானயஸ்வாஹாஎன்று ஆகுதிகொடுத்து,சமானவாயவேநமஃஎன்றுச்சரித்தும், பஞ்சாகுதி களைச்செய்து ஆறாவது ஆகுதியாக வைஸ்வானரன்என்னும் மகாக்னி

ருஷியாகவும், காயத்திரிசந்தஸாகவும், தனதுஆத்மாவே தேவதையாகவும் பாவித்துக்கொண்டு பரமாத்மநாய ஸ்வாஹா என்று ஆகுதிகொடுத்து, பரமாத்மநாயநமஃ என்றுச்சரித்துப் பிராணாக்னிஹோமத்தைச் செய்தல்வேண்டும்.

இவைகளையறிந்து செய்கின்றவன் பிரஹ்மசொரூபத்தையடையகின்றான். இப்போது சொல்லிவந்தவையாவும் சங்கிரகமென்றறிவாயென்றனர். (சு - ம் - சரி ஒ.)

இருபத்திரண்டாம் அத்யாயம் முற்றிற்று.

ஓ

ஹ்ரீங்கார பஞ்ச சுக்தையநமஃ

இருபத்துமூன்றும் அத்தியாயம்.

புரஸ் சர்யா நிரூபணமம்.

நாராயணர் கூறுகின்றார்:—உத்தமனாகியசாதகன் "அமிர்தாபிதானம்" என்கிறவாக்கியத்தை உச்சரித்து பரிகலத்திலுள்ள சேஷமாகிய உசிஷ்டான்னத்தை "ஏகேசாஸ்மத் குலேஜாதா தாசாதாஸ்யோந்ந காம்க்ஷிணஃ, தேசர்வே திருப்திமாயாந்து மயாததத்தே நபூதலே" என்குலத்திலுண்டான அடிமைப்பெண்கள் அடிமையாட்கள் என்னுல்கொடுக்கும் இந்தமீதிஅன்னத்தால் திருப்தியடைவர் என்றுகூறி பூமியில்வைத்தல்வேண்டும். இதுபோலும் ஆபோஜனதீர்த்தசேஷத்தை விடும்போது "ரௌரவே அபுண்யநிலயே பத்மார்புதநிவாசிநும் ஆர்த்தினும் உதகம்தத்தம் அக்ஷய்யம் உபதிஷ்டது" என்னுல்கொடுக்கப்படும் இந்தசேஷ ஜலத்தால் ரௌரவாதி அபுண்யவிடங்களிலிருப்பவரும் திருப்தியடைந்துயாதொருகுறைவின்றியிருத்தல்வேண்டும் என்றுகூறிவிடல்வேண்டும். போஜனம்செய்தபின் கையிலணிந்திருக்கும்பவித்திரத்தைப் போஜனபாத்திரத்திற்குச் செய்யும் பரிசேஷணமாகிய மண்டலத்தில் முடியவிழ்த்துப்போடவேண்டும். அதைவிட்டுப் பரிகலத்தில்போ

டுவானுயின் பங்திதோஷனுய்விடுவான். போஜனுந்தத்தில் ஆபோ ஜனங்கொண்டபின்னர் பரிகலத்தைத் தொடுதல்கூடாது. ஒருகால் தொட்டாலும் அன்றி நாய் சூத்திரர் தொட்டாலும்அன்றிரவு ஆகாரமில்லாமலிருந்து மறுநாள் ஸ்நானுதிகர்மங்களை முடித்துக்கொண்டு பஞ்சகவ்யத்தை யுட்கொள்வானுயின் சுத்தனுவான்.

மூற்கூறியவாறு பிராணுகுதிஒன்றைக் கொள்வானுயின் அது கோடியாகபலனைக்கொடுக்கும் பஞ்சப்பிராணுகுதி செய்வானுகில் ஐந்துகோடி யக்ஞபலனைக்கொடுப்பதுமன்றி எண்ணிறந்த பலன்களையுங்கொடுக்கும்.பிராணுக்னிஹோமவிதி யறிந்தவனுக்கு எவன் அன்னங்கொடுக்கின்றுனே அவனும் ஏற்றவனும் சுவர்க்காமபலனையடைகிறுர்கள். பவித்திரமணிந்தகையோடும் எவன் ஆகாரத்தைக்கொள்ளுகின்றுனே அவன்ஒவ்வொருகவளத்திற்கு ஒவ்வொருமுறை பஞ்சகவ்யத்தைக்கொண்டபலனை யடைகின்றுன்.

புரஸ்சரணை செய்பவன் மூன்றுகாலம் ஸ்நானம் பூஜை ஜபம் தர்ப்பணம் ஹோமம் பிராஹ்மணபூஜை பூமியிலே சயனம் இவற்றைச்செய்பவனுயும் தருமசிந்தையுடையவனுயும் விநயமுள்ளவனுயும் எப்போதும் சாந்தமுள்ளவனுயும் சுபமானவார்த்தையுடையவனுயும் குரூரமற்றவனுயும் இந்திரியநிக்ரஹனுயும் ஸ்திரீ சூத்திரன் பதிதன்நீசஹாஹீனன் விராத்தியன் நாஸ்திகன் அயோக்யன் அசுத்தன் தேவபிராஹ்மணர்கள் ஆசாரியர்குரு இவர்களை நிந்திக்கின்றவர்கள் மாதா பிதாக்களைத்துவேஷிக்கின்றவர்கள் சண்டாளர் இவர்களிடம் வார்த்தையில்லாதவனுயும் குறைவாயும் இஷ்டமாயும் இதமானமாயும் உள்ள ஆகாரமுடையவனுயும்இருத்தல்வேண்டும். ஜபஹோம அர்ச்சனுதி காலங்களில் நமஸ்கரிக்கத் தக்கவர்கள் நேரிட்டால் அவர்களுக்கு நமஸ்காரஞ் செய்யவேண்டுமேயன்றி அவர்களிடம் பேசுதல் கூடாது. மைதுனவிஷயமான உல்லாச வார்த்தைகள் அதற்குரிய கூட்டத்தார் இவர்களோடு எப்போதும் மனவாக்குக் காயங்களால் கூடுதல் கூடாது. இப்படி எவ்விதத்தும் மைதுனப் பிரஸ்தாபம் இல்லாதிருப்பதுதான் * பிரஹ்மசரியம். இவ்விதி அரசனுக்கும் கிருகஸ்தனுக்கும் விதிக்கப்பட்டது.

---

* ஈண்டு பிரமச்சரியம் ஆச்சிரமத்தைக் குறித்ததல்ல.

இவர்கள் ஓமமுன்னிலையில்கொண்ட தன்பத்தினியினுடையருது காலத்தையறிந்து பிரயத்தனத்தோடு இரவில்சங்கமஞ்செய்யவேண்டும். இவ்வாறுசெய்வதால் மந்திரபுரஸ்சரணை நியமத்தைமேற்கொண்டிருத்தலாகிய பிரமசரியவிதிக்கு விரோதமில்லை. எனெனில் ருணத்திரயத்தை விசாரியாமலும் புத்திரோற் பத்தியைச் செய்யாமலும் யாகஞ்செய்யாமலும் மோக்ஷத்தையபேக்ஷிக்கிறவன் நரகினையடைகிறன். அவன்ஜன்மம் ஆட்டின்கழுத்தில் தொங்குவதாகிய அசைதாடிஎப்படியாதொன்றுக்கும் பயன்படுவதில்லையோ அப்படி இவன் எதற்கும் பயன்படான். என்பதால் பிரமசரியத்தால் ருஷிகடனையும் திலங்கொண்டுசெய்யும் தர்ப்பணத்தால் பிதுர்க்கடனையும் யக்ஞத்தால் தேவகடனையும் அவசியம்நீக்கிக்கொள்ளவேண்டும். ஏனெனில் யாவரும் அம்மூவரிடத்தும் கடன்பட்டவராகையால் அக்கடன் தீர்த்தற்பொருட்டுஆஸ்ரமத்தை அநுட்டிக்கவேண்டும். ஈங்கிவைநிற்க.

பால் காய் கனி அவிசு பிக்ஷான்னம் இவைகளிலொன்றை ஆகாரமாகக்கொள்ளவேண்டும். சாந்திராயணவிரதமுங் கொள்ளவேண்டும். உப்பு காரம் புளிப்பு போஜனத்துக்கருகமில்லாத வெண்காயம்முதலியவை தாம்பூலம் இரண்டுகாலபோஜனம்மதத்திருத்தல் சுருதிக்கும் ஸ்மிருதிக்கும் விரோதமாகாடத்தல் இவைகளை நீக்கவேண்டும். சூதாடுதலிலும் ஸ்திரீகளோடு சம்பாஷணைகள் செய்வதிலும் நித்திரைசெய்வதிலும் வாதஞ்செய்வதிலும் காலத்தை வீணாகப்போக்காமல் தேவதாபூஜையிலும் தோத்திரங்களிலும் ஆகமசாஸ்திர விசாரணையிலும் போக்கவேண்டும்.

தினம் திரிகால ஸ்நானம் பிரமசரியவிரதம் மௌனம் போசனம் சூத்ரகர்மசம்பந்தமில்லாமை நித்தியபூஜை நைமித்திகபூஜை நித்தியதானம் ஆனந்தஸ்துதி கீர்த்தனம்குரு தேவதா பக்தி ஜபம் ஆகிய பன்னிரண்டு காரியங்களும் சித்தியைக் கொடுக்கத்தக்கது. தினம் சூரியமூர்த்திக் கெதிரில் ஜபமும் தேவதாரூபமான பதுமையிலாவது அக்னியிலாவது பூஜையும் செய்தல்வேண்டும். ஸ்நானம் பூஜை ஜபம் தியானம் ஹோமம் தர்ப்பணம் இவைகளை நிஷ்காமமாகச்செய்து தேவதையிடத்தில் நிஷ்காமமாகச் சமர்ப்பிக்கவேண்டும். இவ்வாறுசெய்வது புரஸ்சரணையாம். ஆகையால் பிரா

ஹ்மணன் ஜபஹோமபரனுயிருப்பின் நிர்மல ஆத்மாவாகின்றன். பஞ்சபூதங்களையும் ஒடுக்கிச்செய்தலாகிய தவத்தை நியமமாகச் செய்யின் சுவர்க்கமும் சம்பத்துமேயன்றி வித்வேஷணம் சம்ஹரணம் மாரணம் ரோகநாசனம் ஆகியசித்திகளும் சித்தியாய்விடும். எந்தத்தேவதையைக்குறித்து எந்தருஷிகள் தோத்திராதிகள் செய்து எந்தப்பலனையடைந்தார்களோ அந்தத்தேவதையைக்குறித்து தவஞ்செய்பவரும் அந்தப்பலனையடைவர்.

மேற்கூரியகர்மங்களுக்குரிய விதானங்களைக் கூறுகின்றேன் கர்மசித்திக்குக்காரணம் புரஸ்சரணையேயாகலின் அதனை ஆரம்பிக்குங் காலத்தில் பிரஜாபத்தியகிருச்சரம் அநுஷ்டித்து க்ஷவரம்ஸ்நானம் முதலானவைகளைச் செய்து நித்யகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு இரவும் பகலும் மௌனியாகவும் சத்யவிரதனுகவுமிருந்து பவித்திரங்களாகிய வியாகிருதிகளையும் சாவித்திரியையும் பிரணவத்தோடு ஜபித்து, பிறகுசுத்தமும் பாவனமுமாகிய ஆபோஹிஷ்டேதி சூக்தங்களையும், மங்களகரமாயிருக்கின்ற பவமானசூக்தங்களையும் கர்மாவுக்கு முன்னும்பின்னும் உச்சரிக்கவேண்டியது ஜபம்-ஆயிரம் உருவாவது நூறுருவாவது பத்துருவாவது செய்யவேண்டியது. ஓங்காரபூர்வமாக வியாகிருதிகளையும் சாவித்திரியையும் ஜபிக்கவேண்டியது. அவ்விதமாகவே தர்ப்பணமும் செய்வது மன்றி குரு ருஷி சந்தஸ் தேவதைகளுக்கும் தர்ப்பணஞ் செய்யவேண்டும்.

பிரஜாபத்திய சாந்தபன பராக சாந்திராயண கிருச்சரங்கள் பஞ்சமகா பாதகங்களையும், தப்தகிருச்சரம் எல்லாப்பாதகங்களையும் கூணத்திற்போக்கும். மூன்றுசாந்திராயணத்தினல் பிரமஹத்தியையும், எட்டுசாச்திராயணத்தினல் தேவதைகளை நிதரிசனமாகக் காணுதலையும், சகலவேத கலிக்யான அநுக்கிரகத்தையும், பத்துசாந்திராயணத்தினல் சகல இஷ்டார்த்தங்களையும் அடையலாம்

பிரஜாபத்தியம்—மூன்றுநாள்பகலிலும். மூன்றுநாள் இரவிலும், மூன்றுநாள் யாராவதுகொடுப்பதையும்புசித்தும்,மூன்றுநாள் புசியாமலும் இருப்பதாகும்.

சாந்தபனம்—ஒருநாள் பஞ்சகவ்வியத்தைப்புசித்து ஒருநாள் உபவாசமாயி ருப்பதாம்.

மகாசாந்தபனம்—மூன்றுநாள்ஒவ்வொருகவளம் புசித்துமூன்றுநாள்உபவாசமாயிருப்பதாகிய அதிகிருச்ரத்தைப்போல் மூன்றுமுறை கொள்வது.

பராகம்—பன்னிரண்டுநாள்உபவாசமாகவிருப்பதாகும். இது சர்வபாபங்களையும் போக்கும்.

தப்தகிருச்சரம்—ஜலம் பால் நெய் வாயு இவைகளை மும்மூன்றுநாள் உஷ்ணமாயுண்பதாகும்.

சாந்திராயணம் - சுக்லபக்ஷம் பிரதமைமுதல் ஒவ்வொருகவளமாக அதிகமாக்கியுண்டு கிருஷ்ணபக்ஷத்தில் ஒவ்வொருகவளமாகக் குறைத்துண்டு அமாவாசையில் உபவாசமாக இருப்பதாகும். சிசுசாந்திராயணம் - மூன்றுசந்தியிலும் ஸ்நானஞ்செய்து காலையில் நான்குகவளமும், மாலையில் நான்குகவளமும், ஏழுநாளைக்குக்கொள்வதாகும். எதிசாந்திராயணம் - மத்தியானத்தில் எட்டுகவளம் ஏழுநாளைக்குக்கொள்வதாகும்.

இதனை உருத்திரர்களும் ஆதித்யர்களும் வசுக்களும் அறுட்டித்துத் தத்தம்பதவிகளை யடைந்து சௌபாக்கியத்தை யுடையவரானர்கள். இவ்விரதத்தை ஏழுநாள் விதிப்படிச்செய்வானுகில் தோல் இரத்தம் மாம்சம் நரம்பு மேதை மச்சை வபை இவைகள்சுத்தமாகின்றன. புரஸ்சரணைசெய்பவன் சுத்தாத்மாவாயும் சத்தியவானும் ஜிதேந்திரியனுயும் இருந்து இக்கிருச்சிரங்களில் ஒன்றையநுட்டித்துச் செய்வானுகில் இஷ்டசித்திகள் சித்திக்குமென்பதில் சம்சயமில்லை. ஒவ்வொருவிரதத்துக்கும் மத்யானபோஜனமாவது இராப்போஜனமாவது மூன்மூன்றுநாள்செய்யவேண்டும்.

ஓநாரதரே! அன்னியருக்குத் தெரிவிக்கக்கூடாததாயும் வேதசாரமாயும் அதிரகசியமாயும்சர்வபாபநாசகரமாயும் எல்லாப்பலன்களையுங் கொடுப்பதாயுமுள்ள தேகசோதனை பூர்வகமான புரஸ்சரணைக்கிரமத்தைக் கூறினேன் என்றனர். (சு - ம் - கூ.)

இருபத்துமூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

ஹ்ரீங் காராங்கண தீபிகாயைநமஃ

இருபத்து நான்காம் அத்தியாயம்.

காம்ய கர்மவிதி.

நாரதர், இதுபோலவே சாந்தியாதிகிருத்யங்களையும் சொல்லியருளவேண்டுமென்றுவினவ, நாராயணர் அதிரகசியமாயுள்ளதும் துஷ்டர்களுக்கும் தூஷணர்களுக்குஞ் சொல்லக்கூடாததுமான நீர்கேட்டசாந்தியைச் சொல்லுகின்றேனென்றனர். பூத பைசாச பயங்களுக்கும் பாதகங்களுக்கு வன்னிசமித்தினால்ஹோமஞ்செய்தால் நிவாரணமாகும். பாலுள்ளவிருக்ஷங்களின்சமித்துக்களால் ஹோமஞ்செய்தாலும், சூரியசம்பந்தமான ருக்குகளைச் சொல்லி ஜலத்தில் தர்ப்பித்தாலும் முழங்கால்ஜலத்தினின்று ஜபித்தாலும் பூதரோகங்கள் நிவர்த்தியாகும். கழுத்தளவுஜலத்தினின்று ஜபித்தால்பிராணசந்தேகமானபாபம் நிவர்த்தியாகும். ஸ்வர்னம்வெள்ளி தாம்பிரம் பாலுள்ளமரம் இவைகளினுற் செய்த பாத்திரங்களிலாவது மண்பாத்திரத்திலாவது பஞ்சகவ்யம்சேர்த்து அதற்குரிய மந்திரமும் ஜபித்து இடதுகையில் பிடித்துக்கொண்டுஜ்வலிகின்றஅக்னியில் பாலுள்ளமரங்களின் சமித்துக்களை பஞ்சகவ்யத்தில் தோய்த்து ஆயிரம் ஆகுதிசெய்து தர்ப்பையினால் அப்பஞ்சகவ்யத்தைத் தொட்டு பூதாதிகளால் பீடிக்கப்பட்டவர்கள் மீதிலாவது வீடுகள் முதலிய இடங்களிலாவது மந்திரங்களைச் சொல்லித்தெளித்தால் நிவர்த்தியாகும். பிறகு தேவியைத்யானித்து பலிமுதலியவைகளைக் கொடுக்கவேண்டும். அப்பலியினாலும் நிவர்த்தியாகும். வீடு கிராமம் பட்டினம் ராஜதானி இவ்விடங்கள் தோஷமடைந்திருந்தாலும் இதனால் நிவர்த்தியாகும்.

சுவர்னம் வெள்ளி தாம்பிரம் மண் இவைகளாற் செய்யப்பட்ட கும்பங்களை நூலினுற்சுத்தி நான்குதிக்குகளிலிருந்து கொண்டுவந்த ஜலத்தினால் பூரித்து மணலில்மண்டலஞ்செய்து தான்யங்களைப்பரப்பி அதன்மீது கும்பத்தைவைத்து ஏலம் சந்தனம் கர்ப்பூரம் ஜாதிபுஷ்பம் பாதிரி மல்லிகை பில்வபத்திரம் இவைகளை

அதிற் சேர்த்து பாலுள்ள விருக்ஷங்களின் தளிர்களை அதன்முகப் பில்வைத்து கூர்ச்சங்களிட்டு நியமமுள்ள மூன்றுபிராமணர்களைக் கொண்டுஆயிரம் உரு பூஜாபூர்வமாக ஜபஞ் செய்வித்து அத்தீர்த்த த்தால் பூதாதிகள்பிடித்த மனுஷ்யனுக்கு அபிடேகித்தால் நிவிர்த்தி யாய்ச்சுகமடைவான். மிருத்யுரோகங்களும் நிவர்த்தியாகும். அர சன் செய்தால் தீர்க்கமான ஆயுளையடைவான். ஜபஞ்செய்த மூன்று பிராமணர்களுக்குச் சந்துஷ்டியாய் சக்திக்குத்தக்கபடி மரியாதை செய்ய வேண்டும்.

குடசி என்னும் சமித்தைப் பாலில் தோய்த்துமிருத்யுஞ்சயமந்தி ரத்தினால் ஓமித்தால், சர்வவியாதியும், மாந்தளிரைப் பாலில்தோய் த்து ஓமித்தால்சுரமும், மாந்தளிரையாவது சோமலதையென்கிற கொடியைக் கணுவுகள்தோறும் ஒடித்தாவது பாலில்தோய்த்து சூரியமந்திரத்தால் ஓமித்தால் க்ஷயமும், தேன் நெய் சர்க்கரை களால் ஓமித்தால் வெண்குஷ்டமும், சூரியன்பொருட்டு பாயசமா வது அவிசாவது நிவேதித்து ஓமித்து சேஷத்தைப்புசித்தால் ராஜ க்ஷயமும், சங்கவிருக்ஷ புஷ்பத்தால் ஓமித்தால் குஷ்டரோக மும், நாயுருவி அரிசியினால் ஓமித்தால் அபஸ்மாரவியாதியும்,பாலு ள்ள மரசமித்துக்களால் ஓமித்தால் உன்மாதமும், அத்தி சமித்தி னால் ஓமித்தால் மேகவியாதியும், தேன் கருப்பஞ்சாறுகளால் ஓமித் தால் பிரமேகவியாதியும், மது த்ராயத்தானும் கபிலைப்பசுவின் நெய் யானும் ஓமித்தால் வைசூரியும், அத்தி ஆல் அரசு இவைகளினால் ஓமித்தால் பசு யானை குதிரை இவைகளின்வியாதியும் நீங்கும்.

வீட்டில் தேன்கூடு புத்து உண்டாகுமானால் வன்னிசமித்து நெய் அன்னம் இவைகளால் ஓமித்தால் தோஷநிவர்த்தியாகும். மேகஇடியினாலும் பூகம்பங்களாலும் உண்டாகிறபயம் ஏழுநாள் சீந்தல்கொடியினால் ஓமித்தால் நிவர்த்தியாகி ராஜதானி முதலான வைகளும் சுகமடையும். காற்று அக்னி சத்துருஇவைகளால் உண் டாகும் பயம் மண்கட்டிகளை நூறு உருஜபித்து நான்குதிக்குகளி லும் இறைத்தால் நீங்கும். விலங்கு முதலியவற்றால் கட்டுண்டவன் நூறு உருஜபித்தால் கட்டுகள்விலகிவிடும். விஷரோகம் பூதரோக முள்ளவர்களைத் தொட்டுக்கொண்டு நூறு உருஜபித்தால் நீங்கி விடும். சலத்தை மந்திரித்துண்டாலும் விபூதியைமந்திரித்து சிரசில் தரித்துக்கொண்டாலும் பூதாதிரோகங்களும் சமஸ்தமானவியா தி களும்நீங்கித் தீர்க்காயுளுண்டாகும்.

புஷ்பஹோமங்களைப் பிராமணமுகமாகச்செய்து அவர்களைத் தன்சக்திக்குத்தக்கபடித் திருப்திசெய்வித்தால் சம்பத்துண்டாகும். செந்தாமரையாலாவது சாதிபுஷ்பத்தாலாவதுசாலிதண்டுலத்தாலாவது பில்வசமித்துக்களாலாவது பில்வபத்திரங்களாலாவது பில்வபுஷ்பங்களாலாவது பில்வபலங்களாலாவது பாயசம் நெய் இவைகளில் தோய்த்து ஏழுநாள் ஓமஞ்செய்தால் சம்பத்துண்டாகும். நெற்பொரியை நெய் தேன் கருப்பஞ்சாறு என்னும் மதுக்களோடு சேர்த்து ஓமித்தால் வரனுக்கு விரும்பிய கன்னிகையும் கன்னிகைக்கு விரும்பியவரனுங்கிடைப்பார்கள். செங்கழுநீர் புஷ்பங்களினால் ஏழுநாள் ஓமித்தால் சுவர்ணமும், சூரியனைக்குறித்து அர்க்கியங்கொடுத்தால் மறைந்திருக்கும் பொன்னும், அன்னத்தால் ஓமித்தால் அன்னமும், நெற்கதிரால் ஓமித்தால் மிக்கதானியமும் கரீஷசூர்ணங்களால் ஓமித்தால் பசுக்களும் கிடைக்கும். பிரியங்கு தண்டுலத்தினால் செய்த பாயசத்தை நெய்யோடு ஓமித்தால் பிரஜைகள் விருத்தியடைவர். சூரியனைக்குறித்து அன்னம் பாயசம் இவைகளைநிவேதித்து ஓமித்து சேஷத்தை புஷ்பவதியானஸ்தீரீ நான்காம் நாள்ஸ்நானஞ் செய்தபின் போஜனஞ் செய்வாளாகில் சுபுத்திரனைப் பெறுவள்.

குருத்துள்ள உலராதசமித்துக்களாலாவது குருத்தோடுகூடிய பாலுள்ள விருக்ஷசமித்துக்களை மதுத்திரயங்களோடாவது பொன்னிறச்செய்த மலர் அரும்புகளாலாவது ஓமித்தால் ஆயுள் விருத்தியடையும். நெற்கதிரினால் நூறு ஓமமியற்றினால் ஆயுளும் பொன் முதலியவைகளுமுண்டாகும். பால் தேன் நெய் இவைகளாலாவது வன்னி அன்னம் பால் நெய் இவைகளாலாவது கல்லாலமரத்தின் சமித்து பால் இவைகளாலாவது ஏழுதினம் நூறு ஓமஞ்செய்தால் அவமிருத்யுநிவாரணமாம். பாலியாகாரமாகக்கொண்டு மிருத்யுஞ்சயமந்திரத்தினால் ஏழுநாள் ஜபஞ்செய்தால் ஜயப்பிரதமும், நிராகாரணியும் மௌனியாயும் மூன்றுநாள்ஜபித்தால் யமபயநிவர்த்தியும் உண்டாகும். ஜலத்தில்மூழ்கி ஜலத்தில் நின்று செபிப்பானால் அக்கணமே மிருத்யுவினின்றும் விடுபடுகின்றான். பில்வமரத்தடியில் ஒருமாதம் ஜபித்தால் ராஜ்யசம்பத்தையும் பில்வத்தளிர்வேர் பழம் இவைகளால் ஓமித்தால் ராஜ்யத்தையும். நூறுபத்மத்தினால் ஒருமாதம் ஜபித்தால்ராஜயாதிபத்தியத்தையும், யாவகு என்னும் தான்

யத்தை கதிரோடு ஓமித்தால் கிராமாதிபத்தியத்தையும், அரசமர த்தின்சமித்துக்களால் ஓமித்தால் யுத்தத்தில் ஜயமடைந்து அரசத் தன்மையையும், எருக்குசமித்துக்களால் ஓமித்தால் மண்டலாதி பத்யத்தையும் அடையலாம். வஞ்சியினது பத்திரபுஷ்பங்களைப் பா லிலும் பாயசத்திலும் தோய்த்து ஏழுநாள் நூறுஹோமஞ் செய் தாலும் நாபியளவு ஜலத்தில் ஏழுநாள் ஜபித்தாலும் புஷ்டியடைகி றன். ஜலத்தில் பஸ்மத்தை நூறு ஆகுதிசெய்தால் அதிக மழை சமனமாகும். முருக்கு மரசமித்தினால் ஓமித்தால் பிரஹ்மதேஜ, ஸும், முருக்குமரபுஷ்பம்ஓமித்தால் எல்லா இஷ்டகாமியங்களும் பாலில் ஓமித்தால் ஞானவிருத்தியும், நெய்யினால் ஓமித்தால் புத்தி விசேஷமும் உண்டாகும். ஜலத்தை அபிமந்திரித்துப் பானஞ்செய் தால் பிரமக்யானமும், புஷ்பங்களினால் ஓமித்தால் வஸ்திராதிகளும் உண்டாகும். உப்பை தேன்கலந்து ஓமித்தால் இஷ்டம் தானேசெய் தவனியடையும், பில்வபுஷ்பங்களை தேனில்தோய்த்து ஓமித்தால் இஷ்டத்தைச் செய்தவனடைகிறன்.

ஜலத்தில்நின்றுகொண்டு கையால்ஜலத்தையெடுத்து ஸ்நானஞ் செய்வானுகில் சிரேஷ்டமான புத்தி ஆயுள்விர்த்தி நிச்சிந்தை இவைகளையடைகிறன். இந்தஸ்நானத்தை ஒருவருக்காகச்செய் தாலும் தானும் அவனும் பலத்தைபடைவார்கள்.

பரிசுத்தமான இடத்தில் ஒருமாதம் ஆயிரம் உருநாளொன்று க்குஜபித்தால் ஆயுள்விர்த்தியும்,இரண்டுமாதம் ஜபித்தால் ஆயுளும் ஆரோக்கியமும், மூன்றுமாதம் ஜபித்தால் அவ்விரண்டுடன் சம்ப த்தும், நான்குமாதம் ஜபித்தால் அம்மூன்றுடன் புத்திரர் பத்னி கீர்த்தி இவைகளும், ஐந்துமாதம் ஜபித்தால் புத்திரன் பத்னி ஆயுள் ஆரோக்யம் சம்பத்து வித்தையுமுண்டாகும். இவ்வாறு மாதம் வளர வளர சம்பத்துக்களும் விருத்தியடைகின்றன.

கையையுயர்த்தி ஒருபாதத்தில்நின்று நிராசையாக ஒருமாதம் மூன்றூறு உரு தினந்தோறும் ஜபித்தால் இஷ்டங்களெல்லா மடை கிறன். ஆயிரத்து நூற்றெட்டுருஜபித்தால் எல்லாம் உண்டாகிறது நிச்சல புத்தியாக ஆயிரம் உரு ஜபித்தால் ஒருமாதத்தில் மோக்ஷ முண்டாகும். மூன்றுலக்ஷம் ஜபித்தால் எல்லாம் சித்தியாகும்.

ஒருமாதம் நீரில்மூழ்கி நூறு உருஜபித்தால் இஷ்டகாயங்களும், மூன்றுலக்ஷம் உருஜபித்தால் சர்வமூண்டாகின்றன ஜலத்தில் ஏகபாதனுப் நின்று கையைமேலேயுயர்த்தி நிராசையுடையவனுப் இராத்திரியில் உப்பில்லாத போஜனமுடையவனுப் ஒவ்வருடம்ஜபித்தால் ருஷியாகின்றான். இரண்டுவருடம் ஜபித்தால் சமஸ்தவித்தையும், மூன்றுவருடம் ஜபித்தால் திரிகாலஞானமும், நான்குவருடம் ஜபித்தால் மகாதேவப்பிரத்யக்ஷமும், ஐந்துவருடம் ஜபித்தால் அணிமாதிகுணங்களும், ஆறுவருடம் ஜபித்தால் எவ்விதரூபம் எடுக்க எண்ணினுமா அவ்விதமான ரூபம் எடுக்கும் வன்மையும், ஏழுவருடம் ஜபித்தால் தேவதாரூபமும், ஒன்பதுவருடம் ஜபித்தால் மநுத்வமும், பத்துவருடம் ஜபிதத்தால் இந்திரத்துவமும், பதிஞெருவருடம் ஜபித்தால் பிரஜாபதித்வமும், பன்னிரண்டுவருடம் ஜபித்தால் பிரமத்வமும் உண்டாகும். இப்படிப்பட்ட தவங்களைப்புரிந்து எல்லாவற்றையும் அடைகின்றனர். சிலருஷிகள் கனிகளையும் சிலர் மூலங்களையும் சிலர் சருகுகளையும் சிலர் பால் சிலர் நெய் சிலர் சோமபானம் சிலர் பிரஷான்னம் அவிசு இவைகளையுண்டு எல்லாவற்றையும் அடைகிறுர்கள்.

சுவர்னம் திருடல் சுராபானம் குருபத்னி கமனம் ஆகிய இப்பாவங்கள் ஒவ்வொன்றுக்கு ஒரு மாதம் நாள் ஒன்றுக்கு மூவாயிரம் உருஜபித்தால் நீங்கும் இஃதேபோல் வனத்தில் குடிசையிலிருந்து ஒரு மாதம் ஜபித்தால் பிரம்ஹத்திதோஷம் நீங்கும். பன்னிரண்டு நாள் ஜலத்தில் மூழ்கி தினம் ஆயிரம் உருஜபித்தால் சகலபாவங்களும் நீங்கும். நியமமாயும் மௌனியாயும் ஒருமாதம்வரையில் பிராணுயாமத்தோடு மூவாயிரம் உருஜபித்தால் மகாபாதகநிவர்த்தியுண்டாகும்; ஆயிரம் பிராணுயாமத்தால் பிரஹ்மஹத்திநீங்கும். ஆயிரம் பிராணுயாமத்தால் பிரஹ்மஹத்திநீங்கும். ஆறுதரம் ரேசகபூரகங்களை அப்பியாசஞ்செய்வது ஒரு பிராணுயாமமாகும். இது சர்வபாபத்தையும் போக்கும். ஆயிரம்முறை ஒருமாதத்துக்குள் அப்யசித்தால் ராஜஹத்திநீங்கும். தனித்தனி பதினுயிரம் உரு காயத்திரிஜபஞ்செய்தால் சேரக்கூடாதஸ்திரீகளோடுசேர்ந்ததும் திருடியதும் கொலைசெய்ததும் புசிக்கக்கூடாததைப்புசித்ததும் ஆகிய பாவங்கள் நீங்கும். நூறுபிராணுயாமம் செய்தால் சகல பாவமும் நீங்கும் ஒருமாதம் வனத்தில் உபவாசமாய் ஆயிரம் பிராணுயாம அப்பாசமும், மூவாயிரம் காயத்திரிஜபமுஞ்செய்தால் சகலபாபமும் நிவர்த்தியாகும். பிராணுயாம அப்யாசத்தை இருபத்துநான்காயிரம் செய்

தால் கிருச்சரம் என்றும், அறுபத்து நான்காயிரம் சாந்திராயணத் திற்குச் சமானமென்றுஞ் சொல்லப்படும். உதயாதிசந்திகளில் நூறு பிராணயாம அப்யாசமும், நூறு காயத்திரிஜபமும் செய்தால் சர்வ பாவமும் நாசமடையும். இப்போது கூறியவைகள் யாவும் சாந்தி கர்மசுத்தியென்று சொல்லப்படும். இவை ரகசியங்களுள் அதிரகசிய மான படியால் மீ பாதுகாத்தல் வேண்டும். இது வரையில் ஆசாரசங்கிரகத்தைச் சுருக்கமாகச் சொல்லி வந்தேன். இதனை விதிப்படிசெய்தால் துர்க்காதேவி சந்தோஷித்து பிரசன்னமாவாள். நித்ய நைமித்திக காம்யகர்மங்களை விதிப்படி அநுட்டித்து வந்தால் புத்திமுக்திப்பிரயோஜன முண்டாகும். ஆசாரந்தான் முதலாயுள்ள தருமம். அதற்குத்தலைவி ஈஸ்வரியே. இவ்வாறு சகலசாஸ்திரங் களிலுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இசசதாசாரத்துக்கு மகத்தான பலனுண்டு. ஆசாரமுடையவன் எப்போதும் பரிசுத்தனும் சுக முடையவனுமிருப்பான். அவனை எப்போதும் தன்யன். இதுசத் யம்! ஓ நாரதரே தேவியினது பிரசாதத்தை யுண்டுசெய்கிற சதாசார க்கிரமத்தை எவன் கேட்கின்றானோ அவன் இகலோக பரலோ மாகாசம்பத்தையும் சௌக்கியத்தையும் உடையவனுமிருப்பன். இது காறும் சதாசாரக்கிரமாதி மகிமைகளைக் கூறினேன். இனி எதனைக் கேட்க விரும்புகின்றனை யென்றனர். (சு - ம் 100)

இருபத்து நான்காம் அத்தியாயம்
காம்யகர்ம விதி முற்றிற்று.

ஆக அத்தியாயம் 24 - க்குச் சுலோகம் (1241.)

பதினொன்றும் ஸ்கந்தம் முற்றிற்று.

ஓ

ஸ்ரீங்காரகந்தாரசிம்ஹைநமஃ

தேவீபாகவதம்

பன்னிரண்டாம்ஸ்கந்தம்.

முதலாமத்தியாயம்.

காயத்ரீவிசாரம்.

கம்பாதீரசரணம் கருணாகாரகித த்ருஷ்டி பாதாநாம் |
கேளீவநம மநோமே கேஷாம் சித்பவது சித்விலாஸாநாம் ||

நாரதர் கூறுகின்றார்:—ஓதேவ! தேவரீரால் சதாசாரவிதியை க்கேட்டதேயன்றி சர்வபாபங்களையும் போக்கவல்லதாயும் ஒப்பில் லாதமகத்துவமுடையதாயுமுள்ள தேவியினது கதாவமிர்தம் உமது முகமாகிய தாமரையினின்றும் பெருகிவரக் கண்டேன். சாந் திராயணவிரதத்தை முதலாகவுடைய எந்தவிரதங்கள் சொல்லப் பட்டிருக்கின்றனவோ அவையெல்லாம் ஒருவனுல் சாதித்தற்கு அருமை யுடைத்தென்றும் கஷ்டத்தினுல் சாதிக்கத்தக்கதென்றும் அறிகிறேன். ஆகையினுல் பிராணிகளுக்குச் சுகமானசாதனத் தால் சாதிக்கக் கூடியதாயும் தேவி அநுக்கிரகங் கிடைக்குமாறு செய்வதாயும் சுகமான அநுட்டானத்தினுல் சித்திப்பதாயுமுள்ள கர்மா எதுவோ அந்தக்கர்மாவைக் கிருபையினுல் சொல்லுவீராக. ஓ சுவாமிந்! சதாசாரவிதியில் காயத்திரிக்கு எந்தவிதி சொல்லப் பட்டிருக்கின்றதோ அந்தவிதியில் முக்கியமாயுள்ளது எதுவோ அதுவும், அதிகபுண்ணித்தைக் கொடுக்கத்தக்கது எதுவோ அதுவும், தத்துவ சங்கையாகச் சொல்லப்பட்ட காயத்திரிவர்ன ங்கள் எவைகளோ அவைகளும், அவைகளுக்குரிய ருஷிகளும் சந்தஸுகளும் தேவதைகளும் ஆகிய இவைகளெல்லாம் ஓ பிர பூவே! எனக்குச் சொல்லுவீராக. இவைகளைக் கேட்கவேண் டுமென்னும் ஆவலானது என்மனதில் அதிகமாக விருக்கின்றது

என்றூர். காரணயணாகூறுகின்றூர்:—பிராமணனெவன் இதரமான அனுட்டானங்களைச் செய்தாலும் செய்யாதுவிட்டாலும் காயத்திரியைமாத்திரம் விடாதுசெய்வானுயின் அவன் கிருதகிருத்யனுகின்றூன். சந்தியாகாலங்களில் அர்க்கியங்கொடுத்து காயத்திரியை மூவாயிரம் செபிப்பானுயின் அவன் தேவர்களால் பூஜிக்கப்படுகிறூன். நியாசங்களைச் செய்தாலும் செய்யாவிட்டாலும் காயத்திரியைமாத்திரம் செபித்தல்வேண்டும். அந்தக்காயத்திரி செபத்தைச் சச்சிதானந்த ரூபிணியாயிருக்கின்ற தேவியைத் தியானித்து பலாபேக்ஷையின்றிச் செய்வானுயின் அந்தக்காயத்திரியின் ஒரு அக்ஷரசித்திக்கே மும்மூர்த்திகளுக்கும் சோமசூர்யாக்னிகளுக்கும் சமானமாகுந்தன்மையை அந்தப்பிராமணன் அடைகின்றூன். ஓ முனிவரே! இனிக் காயத்திரி வர்ணத்துக்குரிய ருஷி சந்தஸ் தேவதை இவைகளை உண்மையாய் முறைப்படிச்சொல்லுகிறேன் கேட்பீராக.

ருஷிகள்.

வாமதேவர் அத்திரி வசிட்டர் சுக்ரர் கண்ணுவர் பராசரர் விஸ்வாமித்ரர் கபிலர் சவுநகர் யாக்ஞவல்கர் பரத்துவாசர் ஜமதக்கினி கௌதமர் முத்கலர் வேதவியாசர் லோமசர் அகஸ்தியர் கௌசிகர் வத்ஸர் புலஸ்தியர் மாண்டுகர் தூர்வாசர் நாரதர் கஸ்யபர் இந்த இருபத்து நால்வரும் வர்ணங்களுக்குரிய ருஷிகளாகச் சொல்லப்படுகின்றனர்.

சந்தஸ்கள்

காயத்ரு உஷ்ணிக் அநுட்டுப் ப்ருஹதி பங்தி திரிஷ்டுப் ஜகதீ அதிஜகதி சக்வரீ அதிசக்வரீ த்ருதிः அதிருதிः விராட் பிரஸ்தாரம் பங்தி கிருதிः ப்ருகிருதிः ஆகிருதிः விகுர்திः சங்கிருதிः அக்ஷரபங்திः பூ புவः சுவஹ ஜோதிஷ்மதீ இந்த இருபத்து நான்கும் சந்தஸ்களாகச் சொல்லப்படுகின்றன.

தேவதைகள்.

ஆக்னேயம் பிரஜாபத்தியம் ஸௌம்யம் ஈசானம் சாவித்திரம் ஆதித்யம் பார்ஹஸ்பத்யம் மைத்ராவருணம் பகதெய்வதம் சார்யமஸ்வரம் கணேசம் துவாஷ்டரம் பௌஷ்ணம் ஐந்திராக்னம் வாயவ்யம் வாமதேவ்யம் மைத்ராவருணி வைஸ்வதேவம் மாத்ருகம் வைஷ்ணவம் வசுதெய்வகம் ருத்ரதெய்வதம் கௌ

பேரம் ஆஸ்வினம் மகாபாபங்களைப் போக்கடிப்பதாயும் பரம சிரேஷ்டமாயுமுள்ள இந்த இருபத்துநான்கும் தெய்வங்களாகச் சொல்லப்படுகின்றன. இவைகளைக் கேட்டமாத்திரத்தில் சாங்கமாகக் காயத்திரியை ஜபஞ்செய்தால் எந்தப்பலனுண்டாகுமோ அந்தப்பலனுண்டாகும். (சு - ம் - உஎ)

முதலாம் அத்தியாயம் முற்றிற்று.

ஹ்ரீங்காராம்புஜபிருங்கிகாயை நமः

இரண்டாம் அத்தியாயம்.

காயத்திரியாः சக்திவர்ணதி கதனம்,

நாராயணர்கூறுகின்றார்:— ஓ முனிவரே! மஹாபாபங்களைப் போக்கவல்ல இருபத்துநான்கு வர்ணங்களுக்கு எந்தச்சக்திகள் எந்தநிறங்கள் எந்ததத்துவங்கள் எந்தமூத்திரைகள் சொல்லப்பட்டிருக்கின்றனவோ அவைகளை முறையாகச் சொல்லுகிறேன் கேளும்.

வாமதேவீ பிரியை சக்தியா விஸ்வா பத்ரவிலாசினீ பிரபாவதீ ஜயா சாந்தா காந்தா துர்க்கா சரஸ்வதீ வித்ருமா விசாலேசா வியாபிநீ விமலா தமோபஹாரிணீ சூட்சுமா விஸ்வயோனீ ஜயாவசா பத்மாலயா பாரசோபா பத்ரா திரிபதா இச்சக்திகளேயாம்.

நிறங்கள்

சண்பகம் காசாம்பூ பவளம் ஸ்படிகம் தாமரை இளஞ்சூரியன் * சங்கு குருக்கத்தி சந்திரன் இளந்தாமரையிலை பத்ராகம் இந்திரநீலம் முத்து குங்குமம் மை ரக்தம் வைடூரியம் தேன் மஞ்சள் குருக்கத்திப்பால் சூரியகாந்தி கிளிவால் சதபத்திரம் (தாமரை) தாழை மல்லிகை அலரி இம்மலர்களுக்குரிய நிறங்களே நிறங்களென்று சொல்லப்படும்.

தத்துவங்கள்

பிருதிவிமுதலியபஞ்சபூதம், கந்தமுதலியபஞ்சதன்மாத்திரை, உபஸ்தாதி பஞ்சகன்மேந்திரியங்கள், ஆக்ஞாதி பஞ்சஞானேந்

---

* சங்கு குருக்கத்திச்சந்திரன் இம்மூன்றையும் ஒரேநிறமாகக்கொள்க

தைக்காக்க, வி என்னும் அக்ஷரம் நேத்திரங்களைக்காக்க, துகாரம் கபோலங்களைக்காக்க, வகாரம் நாசியைக்காக்க, ரகாரம் முகத்தைக்காக்க, நிகாரம் மேலுதட்டைக்காக்க, யகாரம் கீழுதட்டைக்காக்க, பஹ)காரம் வாயின் மத்தியைக்காக்க, கோ(ஓ)காரம் முகவாய் கட்டையைக்காக்க, தே(ஏ)காரம்கண்டத்தைக்காக்க, வகாரம் தோள்களைக்காக்க, ஸ்யகாரம் வலதுகையைகாக்க, தீகாரம் இடக்கையைக்காக்க, மகாரம் இருதயத்தைக்காக்க தி(யி)காரம் வயற்றைக்காக்க, தி(யி)காரம் நாபியைக்காக்க, யோகாரம் இடுப்பைக்காக்க, யோகாரம்குஹ்யத்தையும் நவபதாக்ஷரம் தொடைகளையுங்காக்க, மகாரம் முழங்கால்களைக்காக்க, சோகாரம் கணுக்கால்களைக்காக்க, த(ஔ)காரம் புறங்கால்களைக்காக்க, யாகாரம் இரண்டு பாதங்களையுங்காக்க, தகாரம் சர்வாங்கங்களைக்காக்க.

இத்திவ்யமான கவசம் நூறுவிதமான துன்பங்களைப் போக்கடிப்பதாயும் அறுபத்துநான்கு கலைஞானங்களைக் கொடுப்பதாயும் மோக்ஷகாரகமாயு மிருக்கிறது. இதனைப் படித்தாலுங் கேட்டாலும் ஆயிரம் பசுக்களைத் தானஞ்செய்தபலனை யடைந்து சர்வபாபங்களினின்றும் விடுபட்டுப் பிரமலோகபத்தை யடைகிறார்கள்.

ஸர்வாந் காமா நவாப்நோதி தேவீரூபஸ்ச ஜாயதே |
காயத்ரீ கவசஸ் யாஸ்ய பிரஹ்மவிஷ்ணு மஹேஸ்வராஃ || (நி)

ருஷயோ ருக்யஜுஸ்ஸாமா தர்வச்சந்தாம்ஸி நாரத |
பிரஹ்மரூபா தேவதோக்தா காயத்ரீ பரமாகளாஃ || (கூ)

தத்பீஜம் பர்க்க யித்யேஷா சக்திருக்தா மநீஷிபிஃ |
கீலகஞ் சதியஃப்ரோக்தம் மோக்ஷார்த்தே விநியோஜனம் || (ஏ)

சதுர்ப்பிர் ஹ்ருதயம் ப்ரோக்தம் த்ரிபிர் வர்ணைஸ் சிரஸ்மதம் |
சதுர்ப்பிஸ்யாச் சிகாபஸ்சாத் த்ரிபிஸ்து கவசம் ஸ்மிருதம் || (அ)

சதுர்ப்பிர் நேத்ரமுத்திஷ்டம் சதுர்ப்பிஸ்யாத் ததஸ்ரகம் |
அதத்தியானம் பிரவக்ஷ்யாமி ஸாதகா பிஷ்டதாயகம் || (கூ)

முக்தா வித்ரும ஹேமநீல தவளச் சாயைர் முகைஸ்திரீ க்ஷணைர் |
யுக்தாமிந்து நிபத்த ரத்ன மகுடாம் தத்வார்த்த வர்ணத்மிகாம் ||

காயத்ரீம் வரதா பயாக்குச கசாஸ் சுப்ரங் கபாலங்குணம் |
சங்கம் சக்ரமதாரவிந்த யுகளம் அஸ்தைர் வஹந்தீம் பஜே || (கo)

ராயத்ரீ பூர்வதஃபாது ஸாவித்ரீ பாதுதக்ஷிணே |
ட்ரஹ்ம சந்தியாதூமே பஸ்சா துத்தராயாம் சரஸ்வதீ || (கக)

ஹும் மனதில்சிந்தித்தாலும் சர்வபாபங்களினின்றும் விடுபட்டுச் சகல காமங்களையும் அடைந்து தேவீசொரூபமாகின்றான். காயத்திரிகவசத்திற்கு பிரமவிஷ்ணு மஹேஸ்வரர்களே ருஷிகள், நான்கு வேதங்களே சந்தஸுகள், பிரமசொரூபமே தேவதை, பரமாகளா காயத்திரி பீஜம், பர்க்கன் சக்தி, தியஃ கீலகம், மோக்ஷார்த்த மே விநியோஜநம். இந்த நியாசங்களைச் செய்தபின்னர் நான்கு வர்னங்கள் இருதயத்தினிடத்தும், மூன்று வர்னங்கள் சிரத்தினிடத்தும், நான்கு வர்னங்கள் சிகையினிடத்தும், மூன்றுவர்னங்கள் கவசமந்திரமாகத் தோள்களிடத்தும், நான்குவர்னங்கள் நேத்திரங்களிடத்தும், நான்குவர்னங்கள் அஸ்திரமந்திரமாகத் திக்பந்தனத்துக்கு மாகக்கொண்டு நியாசஞ் செய்யும்படிச் சொல்லப்பட்டிருக்கின்றன. இனிச் சாதகனுக்கு அபீஷ்டத்தைக் கொடுக்கும் தியானஞ்சொல்லுகிறேன். முத்து பவளம் சுவர்னம் நீலம் வெண்மைஇந்த நிறங்களோடுகூடிய முகமுடையவளாயும் மூன்று நேத்ர முடையவளாயும் சந்திரனோடு கூடிய ரத்னமகுட முடையவளாயும். தத்வார்த்தங்களுள்ள வர்ன சொரூபிணியாயும் வரதம் அபயம் பாசம் அங்குசம் வெண்ணிறமுடைய கபாலம் சங்கம் சக்கரம் இரண்டு தாமரை இவைகளைக் கையிற் றுங்கினவளாயுமுள்ள காயத்திரிதேவியைப் பஜிக்கின்றேன் என்பதாம். (கo)

க வ ச ம்.

காயத்திரி கிழக்குதிக்கில் காக்க, சாவித்திரி தெற்குதிக்கில் காக்க, ப்ரஹ்மசந்தி மேற்குதிக்கில்காக்க, சரஸ்வதீ உத்தரதிக்கில் காக்க, பாபஹாரிணியாயும் மேசம்ரக்ஷிணியாயும் ஜலசாயினி யாயுமுள்ளபார்வதீ அக்னிதிக்கில் காக்க,ராக்ஷஸர்களைப் பயப்படுத்தும் யாதுதானி நைருதிதிக்கில் காக்க, பவமான விலாசிநீ வாயுதிக்கில் காக்க, ருத்ராணீ ஈசானதிக்கில்காக்க, பிரஹ்மாணீ எனது ஊர்த்துவபாகத்தைக்காக்க, வைஷ்ணவீ அதோபாகத்தைக்காக்க, இந்த ப்ரகாரம் இந்தச்சத்திகள் பத்துத் திக்குகளிலுங்காக்க, புவனேஸ்வரீ சர்வாங்கத்தையுங்காக்க, தத்பதம் எனது பாதங்களைக்காக்க, சவிதுப்பதம் கணைக்கால்களைக்காக்க, வரேண்யம்இடையைக்காக்க, பர்க்கம் நாபியைக்காக்க, தேவஸ்யம் எனது இருதயத்தைக்காக்க, தீமஹீ முகவாய்க்கட்டையைக்காக்க, தியப்பதம் நேத்ரங்களைக்காக்க, யஃபதம் நெற்றியைக்காக்க, நஃபதம் சிரசைக்காக்க, பிரசோதயாத் சிகையைக்காக்க, தத்பதம் சிரசைக்காக்க, ஸகாரம் பாலத்

திரியங்கள், பிராமணன் அபானன் வியானன் சமானன் ஆகியநான் குவாயுக்கள். இவ்விருபத்துநான்குமே தத்துவங்களென்றுசொல் லப்படும்.

மூத்திரைகள்.

சம்முகம் (எதிர்கூப்புதல்) சம்புடம் விததம் (விரித்தல்). விஸ்ரிதம் துவிமுகம் த்ரிமுகம சதுர்முகம் பஞ்சமுகம் ஷண்மு கம் அதோமுகம் வியாபகாஞ்சலி சகளம் யமபாசம் கிரதிதம்(சேர் த்தல்) சம்முகோன்முகம் பிரலம்பம் முஷ்டி மச்சம் கூர்மம் வரா ஹம் சிம்ஹாக்கிராந்தம் மகாகிராந்தம் முத்கரம் (உலக்கை) பல்ல வம் (தளிர்) திரிசூலம் இவ் விருபத்துநான்கும் தனிமுத்திரைக ளெனவும் யோனி சுரபி அக்ஷமாலை லிங்கம் பத்மம் மஹாமுத் திரை இவ்வாறும் நன்நான்குக்கு ஒருவொரு மகாமுத்திரைக ளெனவுஞ சொல்லப்படும். (சு-ம்-கஅ.)

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

ஹ்ரீங்கார ஸ்ரீமதீனுமாத்வைநமஃ

மூன்றும் அத்தியாயம்.

காயத்திரீகவசம்,

நாரதர் கூறுகின்றார்:— ஓ சுவாமிந்! சர்வஜகந்நாதரே! அறு பத்துநான்கு கலைகளும்வல்லவரே! யோகிகளுக்குள் சிரேஷ்ட மானவரே! எனக்குச் சிலசந்தேகங்க ளிருக்கின்றன. அவை என்னவென்று தேவரீர் கேட்டருளவேண்டும். எந்தப்புண்ணியத் தினல் பாபத்தினின்றும் விடுபட்டு நான் பிரமசொரூபமாகளப்படி யாயினேனு என்தேகம் தேவதாரூபமாயும் மந்திரரூபமாயும் எப் படியாகுமோ, அந்தக்கர்மாவையும் விதிபூர்வமான நியாசம்ருஷி சந்தஸு தெய்வம் விதியோடுகூடிய தியானம் இவைகளை அறியா திருக்கின்றேனுகலின் அவற்றைக்கேட்க இச்சிக்கின்றேனென்றனர்.

நாராயணர் கூறுகின்றார்:— * அதிபரமரகசியமான காயத்திரீ கவசமென ஒன்றிருக்கின்றது. அதனை ஒருவன் படனஞ்செய்தா

---

* நாராயண: || அஸ்தியேகம் பரமம்குஹ்யம் காயத்ரீ கவசந்ததா | படநாத் தாரணாந் மர்த்ய சர்வபாபை: ப்ரமுச்யதே || (சு)

பார்வதீ மேதசம்ரக்ஷே பாவகீ ஜலசாயிநீ |
யாது தாநீ திசம்ரக்ஷேத் யாதுதாந பயங்கரி || (கஉ)

ஸாவமாநீ தசம்ரக்ஷேத் பவமான விலாசிநீ |
திசம்ரௌத்ரீ சமேபாது ருத்ராணீ ருத்ர ரூபிணீ || (கங)

ஊர்த்வம் பிரன்மாணி மேரக்ஷே ததஸ்தாத் வைஷ்ணவீ ததா |
ஏவந் தசதிரோ ரக்ஷேத் சர்வாங்கம் புவனேஶ்வரீ || (கச)

தத்பதம் பாதுமே பாதௌ ஜங்கேமே சவிது:பதம் |
வரேண்யம் கடிதேசேது நாபிம் பர்க்கஸ் ததைவச || (கரு)

தேவஸ்ய மேதத்திருதயம் தீமஹீதிச கல்லயோ: |
தியஃபதஞ்ச மேநேத்ரே யஃபதம்மே லலாடகம் || (கசு)

நஃபாது மேபதம்மூர்த்நீ சிகாயாம்மே ப்ரசோதயாத் |
தத்பதம் பாதுமூர்த்தாநம் ஸகார: பாதுபாலகம் || (கஎ)

சக்ஷுஷீது விகாரார்நோ துகாரஸ்து கபோலயோ: |
நாஸாபுடம் வகாரார்நே ரகாரஸ்து முகேததா || (கஅ)

நிகாரவூர்த்வ மோஷ்டந்து யகாரஸ் த்வதரோஷ்டகம் |
அஸ்யமத்யே பகாரார்ணோ கோகாரஶ் சுபுகேததா || (ககூ)

தேகார: கண்டதேசேது வகார ஸ்கந்ததேசகம் |
ஸ்யகாரோ தக்ஷிணம்ஹஸ்தம் தீகாரோ வாமஹஸ்தகம் || (உ0)

மகாரோ ஹ்ருதயம் ரக்ஷேத் திகாரம் உதரேததா |
திகாரோ நாபிதேசேது யோகாரஸ்து கடிந்ததஃ || (உக)

குஹ்யம்ரக்ஷது யோகார ஊரூத் வவ்நஃ பதாக்ஷரம் |
மகாரோ ஜாநுநீரக்ஷேச் சோகாரோ ஜங்கதேசகம் || (உஉ)

தகாரம் குல்பதேசேது சாகார: பதயுக்மகம் |
தகார வ்யஞ்சனஞ்சைவ சர்வாங்கேமே யதாவது || (உங)

இதந்து கவசந்திவ்யம் பாதாசத விநாசநம் |
சதுஷஷ்டி களாவித்யா தாயகம் மோக்ஷகாரகம் || (உச)

முச்யதே சர்வபாபேப்ய பரம் ப்ரஹ்மாதி கச்சதி |
படநாச் சிரவணாத் வாபி கோசகஸ்ர பலம்லபேத் || (உரு)

மூன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

ஹ்ரீங்கார தருமஞ்சர்யைநமஃ

நான்காம் அத்தியாயம்.

காயத்ரீ ஹ்ருதயம்

நாரதர் கூறுகின்றார்:—பகவானே! தேவதேவசேர! சீவர்களால் தோத்திரம்செய்யப்பட்டவரே! ஜகத்பிரபுவாகிய நாராயணரே! காயத்ரீமந்திரத்திற்குத் திவ்பசொரூபமாக விருக்கின்ற கவசம் தேவரீரால் கேட்கப்பெற்றேன். ஜபிப்பதனாலும் மனதிற்றரிப்பதனாலும் சகலவிதமான புண்ணியங்களும் வருகின்றனவோ அந்த ஸ்ரேஷ்டமாகிய காயத்ரீ ஹ்ருதயத்தை இப்போது நான்கேட்க இச்சிக்கிறனென்றனர். நாராயணர் கூறுகின்றார்:—ஓநாரதரே! நீவிரும்பியபடி அதர்வண வேதத்தில் நன்றாகச் சொல்லப்பட்டிருக்கிற ரகசியத்திலும் அதிரகசியமாகிய தேவீஹ்ருதயத்தை நானிப்போது சொல்லுகிறேன். வேதமாதாவாயும் விராட்ரூபிணியாயும் மகாதேவியாயு மிருக்கின்ற காயத்ரியைத் தியானஞ்செய்து அந்தத்தேவியுடைய அங்கங்களிற் சொல்லப்படுந் தேவதைகளைத் தியானிக்கவேண்டும். எவ்வாறெனின் சாதகன் பிண்டபிரமாண்டங்கள் அத்தேவியிடத்தில் ஐக்கியமாயிருக்கின்றபடியால் தன் சரீரத்தைத்தேவியினதுரூபசொரூபமாகத் தியானிக்கவேண்டியது. வேதவித்துக்கள் தன்னைத் தேவீசொரூபமாக நினைக்காதவன் தேவீ தியானத்துக்கு யோக்யனல்லனென்று சொல்லுகிறார்கள். ஆகையால் தன்தேகத்தில் இந்தத் தேவதைகளைப் பேதமின்றித் தியானிக்கவேண்டும். தியானித்தபின் தன்மயத்தனதாலப் பிறகு சொல்லுகிறேன். இத்தக்காயத்ரீ ஹ்ருதயத்துக்கு நாராயணரிஷியாகிய நானேருஷி, காயத்ரியே சந்தஸ், தேவதை பரமேஸ்வரி, அங்கன்னியாஸம் முற்கூறியபடி மாதுடசஞ் சாரமில்லாத விடத்தில் ஆசனத்தில் ஏகாக்ர மனத்துடன் தியானிக்கவேண்டியது. அதன் பிறகு அர்த்தந் நியாசஞ் செய்யவேண்டும். எப்படியெனில் சிரசில் சுவர்க்கதேவதை, பல்வரிசையில் அஸ்வனிதேவதைகள், அதரத்தில் உபயசந்தி, முகத்தில் அக்னி, நாக்கில் சரஸ்வதி, கண்டத்தில் பிரகஸ்பதி, ஸ்தனத்தில் அஷ்டவசுக்கள், புஜத்தில் சப்தமருத்துக்கள், ஹ்ருதயத்தில்

மேகம், வயிற்றில் ஆகாயம், நாபியில் அந்தரிக்ஷம், இடையில் இந்திரன் அக்னி, புருஷ்டங்களில் விஞ்ஞானதனம் பிரஜாபதி தொடைகளில் கைலாயம் இமபம், முழங்காலில் விஸ்வதேவர்கள், கணுக்கால்களில் கவுகிகர், ஆண்குறியில் அயனம், பாதங்களில் பிருதிவி, விரல்களில் வனதேவதைகள், ரோமங்களில் ருஷிகள், நகங்களில் முகூர்த்தங்கள், அஸ்திகளில் கிருகங்கள், ரக்த மாம் சங்களில் ருதுக்கள் சம்வத்ஸரங்கள் நிமிஷங்கள் இராப்பகல் சந் திர சூரியர்கள். இவ்வண்ணமாக அர்த்த நியாசஞ்செய்து சிரோ ஷ்டமாயும் திவ்பமாயும் ஆயிரங் கண்ணுள்ளவளாயும் இருக்கின்ற அந்தக் காயத்திரி தேவியைச் சரணாக அடைகின்றேன். என்று சொல்லி "ஓம் தத்ஸவிது" என்னும் மந்திரங்களைச் சொல்லித் தியானித்தல் வேண்டும்.

இந்தக் காயத்திரி இருதயத்தைஇந்தமுறைப்படி எவன் காலை யில் தியானிக்கின்றானே அவன் ராத்திரியிற்செய்த பாவத்தினின் றும் விடுபடுகின்றான். எவன் மாலையில் தியானிக்கின்றானே அவன் பகற்பொழுதிற்செய்த பாவத்தினின்றும் விடுபடுகின்றான். எவன் இரண்டுபொழுதினும் தியானிக்கின்றானே அவன் பாவமில்லா தவனாகவே ஆகின்றான். இதுவேயுமன்றி அவன் சர்வ தீர்த்தங் களிலும் ஸ்நானஞ்செய்தவனாகின்றான். சகல தேவதைகளாலும் தெரியப்பட்டவனாகின்றான். சொல்லத்தகாத சொல்லைச் சொல் வதனாலும் உண்ணக்கூடாத பக்ஷ்ய போஜ்ய சோஷ்ய முதலிய வற்றை உண்பதனாலும் அசாத்ய சாதனங்களைச் செய்வதனாலும் நூறாயிரம் தூர்த்தானங்களை வாங்குவதனாலும் சர்வதானங்களை வாங்குவதனாலும் சமானமாக விருந்து உண்ணக்கூடாதவர்களோ டிருந்து உண்பதனாலும் பிரமசரிய நிலையினின்றும் தவறுதலா லும் உண்டாகும் பாவங்களினின்றும் விடுபடுகின்றான். ஆயிரம் யாகஞ்செய்தால் எந்தப்பலனை அந்தப் பலனையும் அறுபதினாயிரம் காயத்திரி ஜபஞ் செய்தால் எந்தப்பலனை அந்தப் பலனையும்அடை கிறான். இதனை எட்டுப் பிராம்மணர்கள் கிரகிக்கும்படி யுபதே சித்தால் சித்தியுண்டாகும். ஆகையால் பிராமணன் பிராதக் காலத்தில் சுசியுடையவனாய் இதனைத் தியானிப்பானாயின் சர்வ பாவங்களினின்றும் விடுபட்டவனாய் பிரமலோகத்தில் பூஜிக்கப் படுகிறான் என்று கூறினர்.

நான்காம் அத்யாய முற்றிற்று.

ஓ

ஸகாராக்ஷரமஃ

ஐந்தாம் அத்தியாயம்.

காயத்ரீ தோத்திரம்.

நாரதர் நாராயணரைப்பார்த்து ஓ பக்தானுக்ரகம் புரிகின்றவரே! சகலமு முணர்ந்தவரே! தேவரீர் அடியேனுக்குப் பாபத்தைப்போக்குங் காயத்திரி ஹருதயம் சொல்லியருளினீர் ராகலான் காயத்திரீ தோத்திரத்தையும் எனக்குச் சொல்லவேண்டு மென்று கேட்க நாராயணர் கூறுகின்றார்—ஆதிசக்தியாயும் ஜகன்மாதாவாயும் பக்தானுக்ரக காரணியாயும் சர்வ வியாபிநியாயும் அந்தமில்லாதவளாயும் திரிசந்தி சொரூபிணியாயு மிருக்கின்ற ஓ காயத்ரீ உனக்கு நமஸ்காரம். ஓ காயத்ரீ! நீதான் சந்தீ நீதான் காயத்திரீ நீதான் சாவித்திரீ நீதான் சரஸ்வதீ நீதான் பிராம்ஹீ நீதான் வைஷ்ணவீ நீதான் ரௌத்ரீ நீதான் ரக்தை நீதான் ஸ்வேதா நீதான் கறுப்பு. ஓ பகவதீ ! நீயே பிராதக்காலத்தில் பாலா சொரூபிணியாயும் மத்யானகாலத்தில் யௌவன சொரூபிணியாயும் சாயங்காலத்தில் விருத்தசொரூபிணியாயு மிருக்கின்றாயென்று முநிவர்கள் எக்காலத்தும் சிந்திக்கின்றனர். அம்ஸவாகனரூடையாயும் கருடாரூடையாயும் வ்ருஷபாரூடையாயும் பூமியில் ருக்வேதத்தைத் தியானஞ் செய்கின்றவளாயும் தபஸ்விகளால் எந்தத்தேவி காணப்படுகின்றாளோ அந்தரிக்ஷத்தில் யஜுர்வேதத்தைப் படிக்கின்றவளாக எவள் பிரகாசிக்கின்றாளோ எங்கும் சாமத்தைக் கானஞ் செய்கின்றவளாக எவளிருக்கின்றாளோ அவள் பூமியில் சஞ்சாரஞ் செய்கின்றவளா யிருக்கின்றாளென்றும், நீயே ருத்ரலோகத்தை யடைந்திருக்கிறாய், நீயே விஷ்ணுலோகத்தில் நிவாசிநியா யிருக்கின்றாய், பிரமலோகத்தில் மநுஷ்யாளுக்கு அநுக்ரக காரணியா யிருக்கின்றாய் சப்தருஷிகளுக்குப் பிரீதியை யுண்டாக்குகின்றாய், மாயா சொரூபிணியா யிருக்கின்றாய் அநேகவரங்களைக் கொடுக்கின்றவளா யிருக்கின்றாய் பார்வதி பரமேஸ்வரர்களது கரங்களின் வியர்வையினின்றும் நேத்திரங்களின் கண்ணீரினின்று உண்டானவளாயிருக்கின்றாய். யாவருக்கும் ஆனந்தத்தை யுண்டுசெய்கின்றவளா யிருக்கின்றாய், தசதுர்க்கா சொரூ

பிணியாயிருக்கின்றாயென்றும் கூறப்படுவதுமன்றி, அடையத்தக்க வளாயும் வரத்தைக் கொடுக்கின்றவளாயும் சிரேஷ்டையாயும்உத்தமஸ்திரீயாயும் குருத்வமுடையவளாயும் வராஹ சொரூபிணியாயும் சப்தவாராஹியாயும் நீலகங்கையாயும் சத்தியாயும் சர்வபோகமோக்ஷங்களைக் கொடுக்கின்றவளாயும் மத்யலோகத்தில் பாகீரதியாயும் பாதாளத்தில் போகவதியாயும் திரிலோகவாஹினியாயும் தேவீஸ்தானத்திரய நிவாசினியாயும் நீய பூதலோகத்தில் (தாத்ரீ) சகலத்தையும் தாங்குகின்றவளாயும் சோகதாரணியாயும் புவலோகத்தில் வாயுசக்தியாயும் சுவர்லோகத்தில் தேஜஸுக்கு நிதியாயும் மகாலோகத்தில் மஹாசித்தியாயும் ஜனர்லோகத்தில் ஜநநியாயும் தபோலோகத்தில் தபஸ்வினியாயும் சத்தியலோகத்தில் சத்யவாக்காயும் விஷ்ணுலோகத்தில் காமேயாயும் பிரமலோகத்தில் காயத்திரியாயும் ருத்ரலோகத்தில் பரமசிவனது அர்த்தாசன வாசினியாகியகவுரியாயும்,எனக்கும்மகத்துக்கும் பிரகிருதியாயும்சமானமான அவஸ்தா சொரூபிணியாயும் சபளப் பிரமசொரூபிணியாயும்பராபரையாயும் இச்சாசத்தி கிரியாசத்தி ஞானசத்தி என்னும் மூன்று சத்திகளாயும் இருக்கின்றாயென்றும் கங்கை யமுனை விபாசை சரஸ்வதி சரயு தேவிகா சிந்து நர்மதா ஐராவதி கோதாவரிசதத்துரு காவேரி தேவலோகதா கௌசிகி சந்திரபாகை விதஸ்தை சரஸ்வதி கண்டகீ தபதீ தோயதா வேத்ரவதி என்கிற தீர்த்த சொரூபிணியாயும் சரீரத்திலுள்ள இடைகலை பிங்கலை சுஷும்நை காந்தாரி அஸ்தஜிக்வை பூஷை அலம்பூஷை குஹூஹூ சங்கினி பிராணவாஹினி என்று சொல்லப்பட்ட நாடிகளாயும் இருக்கின்றாயென்றும், இருதய கமலத்தில் பிராண சக்தியாயும் கண்டத்தில் ஸ்வப்நாயகியாயும் தாலுவில் சதாதாரையாயும் பிந்துஸ்தானத்தில் பிந்துமாலினியாயும் மூலத்தில் குண்டலினி சத்தியாயும் கேசமூலத்தில் வியாபிநியாயும் சிகைமத்தியில் வியாபிநியாயும் சிகைநுனியில் மநோன்மணியாயும் இருக்கின்றாயென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இன்னும் விரிவாய்ச் சொல்வதினால் பிரயோஜன மென்ன. மூன்றுலகத்திலும் எது எது விருக்கின்றதோ அவையெல்லாம் நீயேதான். ஓ மஹாதேவி!ஓ ஈஸ்வரியே!ஓ சந்திசொரூபிணி!உன்னை நமஸ்கரிக்கிறேனென்று எவன் சந்தியாகாலத்தில் பக்திசிரத்தையோடு பாராயணஞ் செய்கின்றானோ அவனுக்கு அளவில்லாத புண்ணியத்தைக் கொ

டுக்கும். மகாபாபத்தைப்போக்கும். மகாசித்தியைக் கொடுக்கும்.புத்திரஹீனனுக்குப் புத்திரனையும் தனஹீனனுக்குத் தனத்தையும் சகலதீர்த்த ஸ்நான பலத்தையும் தவம் யக்ஞம் யாகம் முதலிய பலன்களையும் வேண்டினவர்க்குஅவ்வப்பலன்களையுங் கொடுக்கும்.போக மோக்ஷங்களை வேண்டினவர்க்கு இம்மையில் போகங்களையும் அந்தியத்தில் மோக்ஷத்தையும் அடையும்படிச் செய்யும். இத்துதியை எந்தெந்த ஸ்நாநகாலங்களில் எவன் படித்து எந்த ஜலத்தில் ஸ்நானஞ்செய்தபோதினும் சந்தியா காலத்தில் ஸ்நானஞ்செய்த பலனையடைவன். இதிற் சந்தேகங்கிடையாது. ஓ நாரதரே! இது அமிர்தவாக்கியமாகும். இது சத்தியம்; சத்தியம். (சு-ம்-உகூ)

ஐந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

ஸமரஸாயைநமஃ

ஆறும் அத்தியாயம்.

காயத்ரீ சஹஸ்ரநாமம்.

நாரதர் நாராயணரைப்பார்த்து ஓ பகவானே! சகலமு முணர்ந்தவரே! சகலசாஸ்திரங்களிலும் வல்லவரே! நாராயணரே! தேவரீரால் சுருதி ஸ்மிருதி புராணங்களின் ரகசியங்களைக் கேட்கப் பெற்றேன். ஓ தேவ! எந்த வித்யா பிரவர்த்தகத்தால் பாவநாச முண்டாகுமோ எதனால் பிரமவிக்யான முண்டாகுமோ எதனால் மோக்ஷசாதன முண்டாகுமோ எதனால் பிராமணர்களுக்கு நல்லகதியுண்டாகுமோ எதனால் மிருத்யுநாச முண்டாகுமோ எதனால் இகலோக பரலோக பலனுண்டாகுமோ அதை ஆதிமூதலாகக் குறைவில்லாமற் சொல்லவேண்டும். ஓ பத்மலோசனரே! என்று பிரார்த்தித்தனர். ஸ்ரீ நாராயணர் கூறுகின்றார்:— பிராக்ஞராகியும் தோஷமில்லாதவராகியு மிருக்கின்ற ஓ மகாசாதுவாகிய நாரதரே! நீர்கேட்டதாகிய ஒவ்வொன்றும் நல்லகேள்விகளாகலின் பாவநாசனமாயும் திவ்யமாயும் சுபமாயு மிருக்கும் காயத்ரி நாமங்கள் ஆயிரத்தெட்டுள்ளன. அவை பகவானுல் சிருஷ்டியின் ஆரம்பத்தில் சொல்லப்பட்டன. அவைதான் அந்தணர்கட்கு அக்கணமே பாவநாசத்தைச் செய்வதும் மோக்ஷசாதனத்தைக் கூட்டுவதும் பிரஹ்மஞானத்தை விளைவிப்பதும் மிருத்யுபயத்தைப்போக்கி நல்லகதியை யுண்டாக்குவதுமாம். அவற்றைப் பிரயத்தனத்துடன் உமக்குச் சொல்லுகிறேன் கேளும். அந்த சகஸ்ர நாமத்துக்கு ருஷி பிரஹ்மா, அநிஷ்டுப்பு சந்தஸு, காயத்

திரிதேவதை பீஜம் ஹல் ஸ்வரம் சக்தி அங்கன்னியாச கரன் னியாசம் மாத்ருகாக்ஷரங்கள் என்னும் இவைகள் உள்ளன. இனிச் சாதகனுக்கு இதங்கொடுக்கும் பொருட்டு தியானஞ்சொல்லுகி றேன்:— சிகப்பு வெளுப்பு கறுப்பு பொன் தவளம் ஆகிய நிறத் தோடும் திரிநேத்திரத்தோடும் புதிய சிகப்பு புஷ்பமாலையோடும் நவரத்நமணிகளின் பிரகாசத்தோடும் விளங்கும் குமாரியாயும் காயத்திரியாயும் பத்மாசனியாயும் கரதலத்தில் பிரகாசிக்கும் தாம ரைபோன்ற பாத்ரமுடையவளாயும் பத்மாக்ஷியாயும் வரத்தைக் கொடுப்பவளாயும் அன்னவாகன முடையவளாய. மிருக்கின்ற தேவியைத் தியானஞ் செய்கின்றேன் என்று தியானித்தல் வேண்டும்.

அசிந்திய லக்ஷணையைநமஃ
அவ்யக்தாயைநமஃ
அர்த்தமாத்ருமஹேஸ்வர்யைநமஃ
அமிர்தார்ணவமத்யஸ்தாயைநமஃ
அஜிதாயைநமஃ
அபராஜிதாயைநமஃ
அணிமாதி குணதாராயைநமஃ
அர்க்கமண்டலசம்ஸ்திதாயைநம
அஜரா ஜாயைநம
அபராயைநமஃ (கo)
தர்மாயைநமஃ
அக்ஷசூத்ர தராயைநமஃ
தராயைநமஃ
அகாராதிக்ஷகாராந்தாயைநமஃ
அரிஷட்டவர்க்க பேதின்யைநமஃ
அஞ்சநாத்ரி ப்ரதீகாசாயைநமஃ
அஞ்சநாத்ரிநிவாஸின்யைநமஃ
அதித்யைநமஃ
அஜபாயைநமஃ
வித்யாயைநமஃ (உo)
அரவிந்த நிபேக்ஷணையைநமஃ
அந்தர் பஹிர் ஸ்திதாயைநமஃ
அவித்யா த்வம்ஸின்யைநமஃ
அந்தராத்மிகாயைநமஃ
அஜாயைநமஃ
அஜமுகா வாஸாயைநமஃ

அரவிந்த நிபாநநாயைநமஃ
அர்த்த மாத்ராயைநமஃ
அர்த்த தானக்ஞாயைநமஃ
அரிமண்டல மர்த்தின்யைநம (சo)
அசுரக்ன்யைநமஃ
அமாவாசியைநமஃ
அலக்ஷ்மிக்ன்யைநம
அந்தியஜார்ச்சிதாயைநமஃ
ஆதிலக்ஷ்மிபைநமஃ
ஆதிசக்தியைநமஃ
ஆக்ருத்திக்ன்யைநமஃ
ஆயதா நநாயைநமஃ
ஆதித்ய பதசாராயைநமஃ
ஆதித்ய பரிஸேவிதாயைநம (சo)
ஆசார்யாயைநமஃ
ஆவர்த்தநாயைநமஃ
ஆசாராயைநம:
ஆதிமூர்த்தி நிவாசின்யைநம:
ஆக்நேயைநம:
ஆமர்யைநம:
ஆத்யாயைநம
ஆராத்யாயைநம:
ஆசனஸ்திதாயைநம:
ஆதார நிலயாயைநம: (நo)
ஆதாராயைநம:
ஆகாசாந்த நிவாஸின்யைநம:

ஆத்யாசூஷ சமாயுக்தாயைநம:
ஆந்தராகாசரூபிண்யைநம:
ஆதித்யமண்டல கதாயைநம:
ஆந்தரத்வாந்த நாவிந்யைநம:
இந்திராயைநம:
இஷ்டதாயைநம:
இஷ்டாயைநம:
இந்தீவரநிபேக்ஷணயைநம (கூ0)
இராவத்யைநம:
இந்திரபதாயைநம:
இந்திராணயைநம:
இந்திரரூபிண்யைநம:
இக்ஷுகோதண்டசம்யுக்தாயைந
இக்ஷுசந்தானகாரிண்யைநம:
இந்திரநீல சமாகாராயைநம:
இடாபிங்கள ரூபிண்யைநம:
இந்திராக்ஷ்யைநம:
ஈஸ்வரீதேவ்யைநம: (எ0)
ஈஹாத்ரய விவர்ஜிதாயைநம:
உமாயைநம:
உஷாயைநம:
உடுநிபாயைநம:
உர்வாருக பலானனயைநம:
உடுப்ரபாயைநம:
உடுமத்யைநம:
உடுபாயைநம:
உடுமத்ய காயைநம:
ஊர்த்வாயைநம: (அ0)
ஊர்த்வகேஸ்யைநம:
ஊர்த்வாதோகதிபேதிந்யைநம:
ஊர்த்வபாஹுப்ரியாயைநம:
ஊர்மிமாலாவாக்கிரந்ததாயிந்யை
ருதாயைநம.
ருஷபேநம:
ருதுமதீபைநம:
ருஷிதேவ நமஸ்கிருதாயைநம:
ருக்வேதாயைநம:
ருணஹர்த்ரியைநம: (கூ0)
ருஷிமண்டலசாரிண்யைநம:
ருத்திதாயைநம:
ருஜுமார்க்கஸ்தாயைநம
ருஜுதர்மாயைநம:
ருதுப்ரதாயைநம:
ருக்வேதநிலயாயைநம:
ருஜ்விண்யைநம:
லுப்ததர்மப்ரவர்த்தின்மைநம:
லூதாரிவரஸம்பூதாயைநம:
லூதாதிவிஷஹாரிண்யைந (க00)
ஏகாக்ஷராயைநம
ஏகமாத்ராயைநம:
ஏகாயைநம:
ஏகைகநிஷ்டிதாயைநம:
ஐந்திர்யைநம:
ஐராவதா ரூடாயைநம:
ஐஹிகாமுஷ்மிக ப்ரதாயைநம:
ஓங்காராயைநம
ஔஷத்யைநம
ஔதாயைநம: (கக0)
ஔதப்ரோத நிவாஸிந்யைநம:
ஔர்வாயைநம:
ஔஷத ஸம்பந்நாயைநம:
ஔபாஸந பலப்ரதாயைநம:
அண்டமத்யஸ்திதாதேவ்யைநம:
அரீகாரமதுரூபிண்யைநம:
காத்யாயிந்யைநம:
காளராத்ரைநம:
காமாக்ஷியைநம:
காமசுந்தர்யைநம: (கஉ0)
கமலாயைநம:
காமிந்யைநம:
காந்தாயைநம:
காமதாயைநம:
கஉகண்டிந்யைநம:
கரிகும்ப ஸ்தனபராயைநம:
கரவீரசுவாசிந்யைநம:
கல்யாண்யைநம:
குண்டலவத்யைநம:
குருகுல்லாநிவாஸிந்யைநம:

குருவிந்த தளாகாராயைநம:
குண்டல்யைநம:
குமுதா லயாயைநம:
காளஜிஹ்வாயைநம:
கராலாஸ்யாயைநம:
காளிகாயைநம:
காலரூபிண்யைநம:
கமநீய குணயைநம:
காந்தியைநம
கலாதராயைநம: (கசo)
குமுதவத்யைநம:
கௌசிக்யைநம:
கமலா காராயைநம:
காமசார பிரபஞ்சிந்யைநம:
கௌமார்யைநம:
கருணா பாங்கியைநம:
ககுபந்தாயைநம:
கரிப்ரியாயைநம:
கேசர்யைநம:
கேசவநுதாயைநம: (கஞo)
கதம்பகுசும ப்ரியாயைநம:
காளிந்தியைநம:
காவிகாயைநம:
காஞ்சியைநம:
கலஸோத்பவஸம்ஸ்துதாயைநம:
காமமாதாயைநம:
க்ரதுமத்யைந:
காமரூபாயைநம:
க்ருபாவத்யைநம:
குமார்யைந: (கசo)
குண்டநிலயாயைநம
கிராத்யைநம:
கீரவாஹநர்யைநம:
கைகேயைநம:
கோகிலா லாபாயைநம
கேதகி குஸுமப்ரியாயைநம:
கமண்டலுதாராயைநம:
காள்யைநம:
கர்மநிர்மூல காரிண்யைநம:

கலஹம்ஸ கத்யைநம: (களo)
க்ஷுதாகிருதகௌதுகமங்களாயை
கஸ்தூரிதிலகா யைநம:
கம்ராயைநம:
கரீந்திரகமனயைநம:
குஹ்வைநம:
கர்ப்பூர லேபனயைநம:
கிருஷ்ணயைநம:
கபிலாயைநம:
குஹ்ராஸ்ரயாயைநம:
கூடஸ்தாயைநம: (கஅo)
குதராயைநம:
கம்ராயைநம:
குஹ்யஸ்தாகிலவிஷ்டபாயைநம:
கட்கேட கராயைநம
கர்வாயைநம:
ஈகசர்யைநம:
ககவாகனயைநம:
கட்வாங்க தாரிண்யைநம
க்யாதாயைநம:
ககராஜோ பரிஸ்திதாயைநம:
கலக்நீயைநம:
கண்டிதஜராயைநம:
கடாக்யான ப்ரதாயிந்யைநம
கண்டேந்து திலகாயைநம:
கங்காயைநம:
கணேசகுஹ் பூஜிதாயைநம
காயத்ரீயைநம:
ஈகாமத்யைநம:
கீதாயைநம:
காந்தார்யைநம: (உoo)
கான லோலுபாயைநம:
கௌதம்யைநம:
காமிந்யைநம
காதாயைநம:
கந்தர்வாப்ஸரஸேவிதாயைநம,
கோவிந்தசரணக்ராந்தாயைநம:
குணத்ரயவிபாவிதாயைநம:
கந்தர்வைநம:

கஹ்வர்யைநம:
கோத்ராயைநம: (உ௧௦)

கிரீசாயைநம:
ககனாயைநம:
கம்யைநம,
குஹாவாஸாயைநம
குணவத்யைநம:
குருபாபப்ரணாசிந்யைநம:
குர்வியைநம:
குணவத்யைநம:
குஹ்யைநம:
கோப்தவ்பாயைசம (உ௨௦)

குணதாயிந்யைநம:
கிரிஜாயைநம:
குஹ்பமாதங்கீநம
கருடத்வஜவல்லபாயைநம:
கர்வாபஹாரிண்யைநம:
கோதாயைநம:
கோகுலஸ்தாயைநம:
கதர்தராயைநம:
கோகர்ணநிலயாசக்தாயைநம:
குஹ்பமண்டலவர்த்திந்யை உ௩௦

தர்மதாயைநம:
கந்தாயைநம:
கண்டாயைநம:
கோரதானவமர்த்திந்யைநம:
க்ருணிமந்திரமயைநம.
கோஷாயைநம
கனஸம்பத்திதாயிந்யைநம:
கண்டாரவப்ரியாயைநம:
க்ராணாயைநம:
க்ருணிசந்துஷ்டிகாரிண்யை உ௪௦

கநாரிமண்டலாயைநம:
கூர்ணாயைநம:
க்ருதாயைநம:

கநவேகின்மைநம
ஜ்ஞானதகதுமயீயைநம:
சர்ச்சாயைநம:
சர்ச்சிதாயைநம:
சாருஹாஸிந்யைநம:
சடுலாயைநம:
சண்டிகாயைநம: (உ௫௦)
சித்ராயைநம:
சித்ரமால்பவிபூஷிதாயைநம:
சதுர்ப்புஜாயைநம:
சாருதந்தாயைநம
சாதுர்யைநம:
சரிதப்ரதாயைநம:
சூலிகாயைநம:
சித்ரவஸ்திராந்தாயைநம.
சந்திரம: கர்நகுண்டலாயைநம:
சந்திரஹாஸாயைநம: (உ௬௦)
சாருதாத்ரியைநம:
சகோர்யைநம:
சந்திரஹாஸிந்யைநம:
சந்திரிகாயைநம:
சந்திரதாத்ரியைநம:
சௌர்யைநம:
சோராயைநம
சண்டிகாயைநம
சஞ்சிதவாக்வாதிந்யைநம
சந்திரசூடாயைநம (உ௭௦)
சோரவிலாசிந்யைநம
சாருசந்தனலிப்தாங்யைநம
சஞ்சத்சாமரவீஜிதாயைநம
சாருமத்யாயைநம
சாருகத்யைநம
சந்திலாயைநம
சந்திரரூபிண்யைநம
சாருஹோமப்ரியாயைநம
சார்வாசரிதாயைநம
சக்ரபாகுகாயைநம (உ௮௦)
சந்திரமண்டலமத்யஸ்தாயைநம
சந்திரமண்டலதர்ப்பணாயைநம

சக்ரவாகஸ்தந்யைநமஃ
சேஷ்டாயைநமஃ
சித்ராயைநமஃ
சாருவிலாஸிந்யைநமஃ
சித்ஸ்வரூபாயைநமஃ
சந்திரவத்யைநமஃ
சந்திரமாயைநமஃ
சந்தனப்ரியாயைநமஃ ௨௯0
சோதயித்ரியைநமஃ
சிரப்ரச்ஞாயைநமஃ
சாதகாயைநமஃ
சாருஹேதுக்யைநமஃ
சத்ரயாதாயைநமஃ
சத்ரதராயைநமஃ
சாயாயைநமஃ
சந்தஃபரிச்சதாயைநமஃ
சாயாதேவ்யைநமஃ
சித்ரநிகாயைநமஃ ௩00
சந்நேந்திரிய விஸர்ப்பிண்யைநமஃ
சந்தோநுஷ்டுப்ரதிஷ்டாந்தாயை
சித்ரோபத்ரவபேதிந்யைநமஃ
சேதாயைநமஃ
சத்ரேச்வர்யைநமஃ
சிந்நாயைநமஃ
சூரிகாயைநமஃ
சேதனப்ரியாயைநமஃ
ஜநந்நியைநமஃ
ஜந்மரஹிதாயைநமஃ ௩௧0
ஜாதவேதாயைநமஃ
ஜாந்மயைநமஃ
ஜார்நவ்யைநமஃ
ஜடிலாயைநமஃ
ஜேத்ரைநமஃ
ஜராமரணவர்ஜிதாயைநமஃ
ஜம்புத்வீபவத்யைநமஃ
ஜ்வாலாயைநமஃ
ஜயந்தியைநமஃ
ஜலசாலிந்யைநமஃ ௩௨0
ஜிதேந்திரியாயைநமஃ
ஜிதக்ரோதாயைநமஃ

ஜிதாமித்ராயைநமஃ
ஜகத்ப்ரியாயைநமஃ
ஜாதரூபமயைநமஃ
ஜிஹ்வாயைநமஃ
ஜானக்யைநமஃ
ஜகத்யைநமஃ
ஜராயைநமஃ
ஜநித்ரைநமஃ ௩௩0
ஜன்ஹுதநயாயைநமஃ
ஜகத்ரயஹிதைஷிண்யைநமஃ
ஜ்வாலாமுக்யைநமஃ
ஜபவத்யைநமஃ
ஜ்வரக்நியைநமஃ
ஜிதவிஷ்டபாயைநமஃ
ஜிதக்ராந்தமயைநமஃ
ஜ்வாலாயைநமஃ
ஜாக்ரத்யைநமஃ
ஜ்வரதேவதாயைநமஃ ௩௪0
ஜ்வலந்தியைநமஃ
ஜலதாயைநமஃ
ஜ்யேஷ்டாயைநமஃ
ஜாகோஷாஸ்போடதிங்முக்யை
ஜம்பிந்யைநமஃ
ஜ்ரும்பணாயைநமஃ
ஜ்ரும்பாயைநமஃ
ஜ்வலந்மாணிக்ககுண்டலாயைநம
ஜிஞ்சிகாயைநமஃ
ஜணநிர்க்கோஷாயைநமஃ ௩௫0
ஜஞ்சாமாருதவேகின்யைநமஃ
ஜல்லகீவாத்யகுசலாயைநமஃ
ஞரூபாயைநமஃ
ஞபுராஸ்மிருதாயைநமஃ
டங்கபாணசமாயுத்தாயைநமஃ
டங்கின்யைநமஃ
டங்கபேதின்யைநமஃ
டங்கீகணச்ருதாகோஷாயைநமஃ
டங்கநீயமஹோரஸாயைநமஃ
டங்காரகாரணீதேவ்யைநமஃ
டடசப்தநிநாதிந்யைநமஃ

டாமர்யைநம:
டாகின்யைநம:
டிம்பாயைநம:
டுண்டுமாரைகநிர்ஜிதாயைநம:
டாமரீதந்த்ரமார்க்கஸ்தாயைநம:
டமட்டமருநாதிக்யைநம:
டிண்டீரவஸஹ்ருதாயைநம:
டிம்பலஸத்கிரீடாபரிவ்ருதாயை
துண்டிவிகநேசஜநந்யைநம:
டக்கஹஸ்தாயைநம:
டிலிவ்ரஜாயைநம:
நித்யக்ஞாநயைநம:
நிரூபமாயைநம:
நிர்க்குணயைநம:
நர்மதாநத்யைநம:
நிர்குணயைநம:
நிரபதாயைநம:
தந்த்ரியைநம:
துளஸ்யைநம: கூஅ0
தருணயைநம:
தருவேநமஃ
நிரிவிக்ரமபதரக்ரரந்தாயைநமஃ
துரீயபதகாமிந்யைநம:
தருணநித்யசங்காசாயைநம:
தாமஸ்யைநம:
துஹிநாயைநம:
துராயைநம:
நிரிகாலக்யாநசம்பந்நாயைநம:
த்ரிவள்யைநம: கூசு0
நிரிலோசநயைநம:
த்ரிசக்த்யைநம:
த்ரிபுராயைநம:
துங்காயைநம:
துரங்கவதநயைநமஃ
நிமிங்கிலகிலாயைநம:
தீவ்ராயைநம:
நிரிஸ்ரோதாயைநம:
தாமஸாநிந்யைநம:
தந்த்ரமந்த்ரவிசக்ஷணாயை

தநுமத்யாயைநம:
த்ரிபிஷ்டபாயைநம:
த்ரிசக்த்யாயைநம:
த்ரிஸ்தந்யைநம:
தோஷாசம்ஸ்தாயைநம:
தாலப்ரதாபிந்யைநம:
தாடங்கிந்யைநம:
துஷாராபாயைநம:
துஹிநாசலவாஸிந்யைநம:
தந்துஜாலசமாயுக்தாயைநம:
தராஹராவலிப்ரியாயைநம:
திலஹோமப்ரியாயைநம:
தீர்த்தாயைநம:
தமாலகுஸுமாக்ருத்யைநம:
தாரகாயைநம:
த்ரியுதாயைநம:
தன்வியைநம:
த்ரிசங்குபரிவாரிதாயைநம:
தலோதர்யைநம:
திலோபாஷாயைநம: சூ0
தாடங்கப்ரியவாதிந்யைநம:
த்ரிஜடாயைநம:
நித்தர்யைநம:
நிரிஷ்ணுயைநம:
த்ரிவிதாயைநம:
தருணகிருத்யைநம:
தப்தகாஞ்சநசங்காசாயைநம:
தப்தகாஞ்சநபூஷணயைநம:
த்ரியம்பிகாயைநமஃ
நிரிவர்க்காயைநமஃ சஙு0
த்ரிகாலக்யாநதாயிந்யைநம:
தர்ப்பணயைநம:
த்ருப்திதாயைநம:
த்ருப்தாயைநம:
தாமஸ்யைநம:
தும்பருஸ்துதாயைநம:
தார்க்ஷ்யஸ்தாயைநம:
த்ரிகுணகாராயைநம:
த்ரிபங்கியைநம:
கதுர்வல்லபாயைநம: சச0

தாத்கார்யைநமஃ
தாரவாயைநமஃ
தந்தாயைநமஃ
தோஹிந்யைநமஃ
தீநவத்ஸலாயைநமஃ
தாநவாந்தகரீயைநமஃ
தூர்க்காயைநமஃ
துர்க்காசுகிபர்ஹிண்யைநம:
தேவரீத்யைநமஃ
திவாயைநமஃ சரு0
ராத்ரியைநமஃ
த்ரைலபத்யைநமஃ
துந்துபிஸ்வனயைநமஃ
தேவயாந்யைநமஃ
துராவாஸாயைநமஃ
தாரித்ரியவிநாசிந்யைநமஃ
தாமோதரப்ரியாயைநமஃ
தீப்தாயைநமஃ
திச்வாஸாயைநமஃ
திக்விமோஹிந்யைநமஃ சசு0
தண்டகாரண்யநிலயாயைநமஃ
தண்டிந்யைநமஃ
தேவபூஜிதாயைநமஃ
தேவவந்திதாயைநமஃ
திவிஷடாயைநமஃ
தேவேஷிண்யைநமஃ
தானவாகிருத்யைநமஃ
தீனதாஸ்துத்யாயைநமஃ
தீக்ஷாயைநமஃ
தைவதாயைநமஃ சள0
தீஸ்ரூபிண்யைநமஃ
தாத்ரியைநமஃ
துரத்தராயைநமஃ
தேந்வைநமஃ
தாரிண்யைநமஃ
தர்மசாரிண்யைநமஃ
துரந்தராயைநமஃ
தராயைநமஃ
தாராயைநமஃ
தனதாயைநமஃ சஅ0

தான்யதோஹிந்யைநம:
தர்மசீலாயைநம:
தநுர்த்யக்ஷாயைநம:
தநுர்வேதவிசாரதாயைநம:
த்ருத்யைநம:
தான்யாயைநம:
த்நதபதாயைநம:
தர்மர ஜப்ரியாயைநம:
த்ருவாயைநம:
தூமாவத்யைநம: சகூ0
தூமகேச்யைநம:
தர்மசாஸ்திரப்ரகாசிந்யைநம:
நந்தாயைநம:
நந்தப்ரியாயைநம:
நித்ராயைநம:
நிருமதாயைநம:
நந்தஜாத்மிகாயைநம:
நர்மதாயைநம:
நளின்யைநம:
நீலாயைநம: டு00
நீலகண்டசமாச்ரயாயைநம:
நாராயணப்ரியாயைநம:
நித்யாயைநம:
நிர்மலாயைநம:
நிர்க்குணயைநம:
நிதியைநம:
நிராதாராயைநம:
நிரூபமாயைநம:
நித்யசுத்தாயைநம:
நிரஞ்சனயைநம: டுக0
நாதபிந்துகளாதீதாயைநம:
நாதபிந்துகளாத்மிகாயைநம:
நிருசிம்ஹிந்யைநம:
நகதராயைநம:
நிருபநாகவிபூஷிதாயைநம:
நரகக்லேசசமன்யைநம:
நாராயணபதோத்பவாயைநமஃ
நிரவத்யாயைநம:
நிராகாராயைநம:
நாரதப்ரியகாரிண்யைநம:

நாஞ்ஜ்யோதிசமாக்யாதாயைநம:
நிதிதாயைநம:
நிர்மலாத்மிகாயைநமஃ
நவசூத்ரதராயைநம:
நீதியைநம:
நிரூபத்ரவகாரிண்யைநம:
நந்தஜாயைநம:
நவரத்நாட்யாயைநம:
நைமிசாரண்யவாசிந்யைநம:
நவநீதப்ரியாயைநம: நுகூ
நாரீயைநம:
நீலஜீமூதகிஸ்வனுயைநம:
நிமேஷிண்யைநம:
நதீரூபாலயாயை:
நீலக்ரீவாயைநம:
நிசேச்வர்யைநம:
நாமாவல்யைநம:
நிசும்பக்நீயைநம:
நாகலோகநிவாசிந்யைநம:
நவஞாம்பூனதபிரக்யாயைநம:
நாகலோகாதிதெய்வதாயைநம:
நூபுராக்ராந்தசரணுயைநம:
நாசித்தப்ரமோதிந்யைநம:
நிமக்நாரக்தநயனுயைநமஃ
நிர்க்காதசமநிஸ்வனுயைநம:
நந்தநோத்யானநிலயாயைநம:
நிர்வ்யூஹோபசாரிண்யைநம:
பார்வத்யைநம:
பரமோதாராயைநம:
பரப்ரஹ்மாத்மிகாயைநம:
பராயைநம:
பஞ்சகோசவிநிர்முக்தாயைநம:
பஞ்சபாதகநாசிந்யைநம:
பரசித்தவிதாணஜ்ஞாயைநம:
பஞ்சிகாயைநம:
பஞ்சரூபிண்யைநம:
பூர்ணிமாயைநம:
பரமாயைநம:
ப்ரீத்யைநம:
பரதேஜப்ரசாசிந்யைநம: நுகூ0

புராண்யைநம:
பௌளூஷ்யைநம:
புண்யாயைநம:
புண்டரீகநிபேக்ஷணயைநம:
பாதாளதலநிர்மக்நயைநம:
ப்ரீசாயைநம:
ப்ரீதிவிவர்த்திந்யைநம:
பாவந்யைநம:
பாதசஹிதாயைநம:
பேசலாயைநம: நுள0
பாவநாசிந்யைநம:
ப்ரஜாபத்யைநம:
பரிஸ்ராந்தாயைநம:
பர்வதஸ்தனமண்டலாயைநம:
பத்மப்ரியாயைநம:
பத்மசம்ஸ்தாயைநம:
பத்மாக்ஷ்யைநம:
பத்மசம்பவாயைநம:
பத்மபத்ராயைநம:
பத்மபதாயைநம: நுஅ0
பத்மிந்யைநம:
ப்ரியபாஷிண்யைநம:
பசுபாசவிநிர்முக்தாயைநம:
பரந்தீநம:
புரவாஸிந்யைநம:
புஷ்கலாயைநம:
புருஷாயைநம:
பார்வாயைநம:
பாரிஜாதகுசுடப்ரியாயைநம:
பதிவ்ரதாயைநம: நுகூ0
பவித்ராங்கீநம:
புஷ்பஹாஸபராயணுயைநம:
ப்ரச்ஞாவதீசுதாயைநமஃ
பௌத்ரியைநம:
புத்ரபூஜ்பாயைநம:
படஸ்விந்யைநம:
ட்டிபாசதராயைநம:
பங்திபைநம:
பிதிர்லோகப்ரதாயிந்யைநம:
புராண்யைநம: சுஉ0

புண்யசீலாயைநமஃ
ப்ரணதார்த்திவிநாஷிந்யைநமஃ
ப்ரத்யும்நஜநன்யைநமஃ
புஷ்டாயைநமஃ
பீதாமகபரிக்ருஹாயைநமஃ
புண்டரீகபுராணவாஸாயைநமஃ
புண்டரீகசமாநநாயைநமஃ
ப்ருதுஜங்காயைநமஃ
ப்ருதுபுஜாடநமஃ
ப்ருதுபாதாயைநமஃ சுக0
ப்ருதூதரீயைநமஃ
ப்ரவாளசோபாயைநமஃ
பிங்காளக்ஷ்யைநம:
பீதவாஸாயைநம:
ப்ரசாபலாயைநம:
ப்ரஸவாயைநம:
புஷ்டிதாயைநம:
புண்யாயைநம:
ப்ரதிஷ்டாயைநம:
ப்ரணவாகத்யைநம: சுஉ0
பஞ்சவர்ணாயைநம:
பஞ்சவாண்யைநம:
பஞ்சிகாயைநம:
பஞ்சாஸ்திதாயைநம:
பாமாயாயைநம:
பஞ்சோதிஷேநம:
பரப்ரீத்யைநம:
பராகத்யைநம:
பராகாஷ்டாயைநம:
பரேசாநீயைநம: சுஙு0
பாவநீயைநம:
பாவகத்புத்யைநம:
புண்யபத்ராயைநம:
பரிச்சேத்யாயைநம:
புஷ்பஹாஸாயைநம:
ப்ரதூதராயைநம:
பீதாங்கியைநம:
பீதவஸநாயைநம:
பீதசையாயைநமஃ
பிசாசிந்யைநமஃ சுச0

பீதக்ரியாயைநம:
பிசாசக்நீயைநம:
பாட்டலாக்ஷ்யைநம:
படுக்ரியாயைநம:
பஞ்சபக்ஷ்யப்ரியாசாராயைநம:
பூநாப்ராணகாதிந்யைநம:
புந்நாகவநமத்யஸ்தாயைநம:
புண்யதீர்த்தகிஷேவிதாயைநம:
பஞ்சாங்கியைநம:
பராசக்தியைநம: சுடு0
பரமாக்லாதகாரிண்யைநம:
புஷ்பாண்டஸ்திதாயைநம:
பூஷாயைநம:
போஷ்தாகிலவிஷ்டபாயைநம:
பாநப்ரியாயைநம:
பஞ்சசிகாயைநம:
பக்நகோபரிசாயிந்யைநம:
மஞ்சமாத்ராத்மிகாயைநம:
ப்ருத்ருயைநம:
பதிகாயைநம: சுசு0
ப்ருதுதோஹிந்யைநம:
புராணந்டாயைமாஞ்சாயைநம:
பாடலீபுஷ்பகந்தியைநம:
புண்யப்ரஜாயைநம:
பாரதாத்ரியைநம:
பரமார்க்கைகதோசராயைநம:
ப்ரவாளசோபாயைநம:
பூர்ணசாயைநம:
ப்ரணவாயைநம:
பல்லவோதர்யைநம: சுள0
பலிந்யைநம:
பலதாயைநம:
பல்கவேநம:
பூதகாரியைநம:
பலகாகிருத்யைநம:
பணீந்திரபோகசயநாயைநம:
பணிமண்டலமண்டிதாயைநம:
பாலபாலாயைநம:
பஹுரூபாதாயைநம:
பாலாதபநிபாம்சுகாயைநம:

பலபத்ரப்ரியாயைநம:
வக்தியாயைநம:
படபாயைநம:
புத்திஸம்ஸ்துதாயைநம:
பந்தீதேவ்யைநம:
பிலவத்யைநம:
படிசக்நியைநம:
பலிப்ரியாயைநம:
பாந்தவ்யைநம:
போதிதாயைநம: சுசுஂ
புத்யைநம:
பந்துகுஸுமப்ரியாயைநம:
பாலபாநுப்ரபாகாராயைநம:
ப்ராம்ஹ்ம்யைநம:
ப்ராம்ஹணதேவதாயைநம:
ப்ருஹஸ்பதிஸ்துதாயைநம:
ப்ருந்தாயைநம,
பருந்தாவநவிஹாரிண்யைநம:
பாலாகிரீயைநம:
பிலாஹாராயைநம: எ00
பிலவாஸாயைநம:
பஹுதகாயைநம:
பஹுநேத்ராயைநம:
பஹுபதாயைநம:
பஹுகர்ணவதம்விகாயைநம:
பஹுபாஹுயுதாயைநம:
பீஜரூபிண்யைநம:
பஹுரூபிண்யைநம:
பிங்களாதகலாதீதாயைநம:
பிங்களாதஸ்வரூபிண்யைநம:
பத்தோதாங்குளித்ராணயை
பதரிகாச்ரமவாஸிந்யைநம:
ப்ருந்தாரகாயைநம:
ப்ருஹஸ்கந்தாயைநம:
ப்ருஹத்யைநம:
பாணபாதிந்யைநம:
ப்ருந்தாத்யரூஷாயைநம:
பஹுமதாயைநம:
விதிதாயைநம:
பஹுவிக்ரமாயைநம: எஉ0

பக்தபத்மாஸநாசீநாயைநம:
பில்வபத்ரதலஸ்திதாயைநம:
போதித்ருமநிஜாவாஸாயைநம:
படிஸ்தாயைநம:
பிந்துதர்ப்பணயைநம:
பாலாயைநம:
பாணசனவத்யைநம:
படபாணலவேகின்யைநம:
ப்ரஹ்மாண்டபகிரந்தஸ்தாயை
பிரஹ்மகங்ணசூத்ரிண்யைநம:
பவாந்யைநம:
பீஷ்ணவத்யைநம:
பாவிந்யைநம:
பஹுரிண்யைநம:
பத்ரகாள்யைநம:
புஜங்காரூஷ்யைநம:
பாரத்யைநம:
பாரதாசயாயைநம:
பைரவ்யைநம:
பீஷணகாராயைநம: எசo
பூதிதாயைநம
பூகிமாலிந்யைநம:
பாமிந்யைநம:
போகநிரதாயைநம:
பத்ரதாயைநம:
பூரிவிக்ரமாயைநம:
பூதாவாஸாயைநம:
ப்ருகுலதாயைநம:
பார்க்கவ்யைநம:
பூசுராரச்சிதாயைநம: எருo
பாகீரத்யைநம:
போகவத்யைநம:
பவநஸ்தாயைநம:
பிஷக்வராயைநம:
பாமிந்யைநம:
போகிந்யைநம:
பாஷாயைநம:
பவாந்யைநம:
பூரிதக்ஷிணயைநம:
பர்க்காத்மிகாயைநம: எசுo

பீமவத்யைநம:
பவபந்தவிமோஹிந்யைநம:
பஜனீயாபைநம:
பூததாத்ரியைநம:
ரஞ்சிதாயைநம:
புவநேச்வர்யைநப:
புஜங்கவலயாயைநம:
பீமாயைநம:
பேருண்டாயைநம:
பாகதேயிந்யைநப: எஎ0
மாதாயைநம:
மாயாயைநப:
மதிமத்யைநம:
மதஜிஹ்வாடைநம:
மதுப்ரியாயைநம:
மஹாதேவ்யைநம:
மஹாபாகாயைநம:
மாலிந்யைநம:
மீநலோசனயைநம:
மாயாதீதாயைநம: எஅ0
மதுமத்யைநம:
மதுமாம்ஸாயைநமஃ
மதுத்ரவாயைநம:
மாநவ்யைநம:
மதுஸம்பூதாயைநம:
மிதுலாபுரவாஸிந்யைநம:
மதுகைடபஸம்ஹர்த்ர்யைநம:
மேதிந்யைநம:
மேகமாலிந்யைநப:
மங்தோதர்யைநப: எகூ0
மகாமயாயைநம:
மைதல்யைநம:
மஸ்ருணப்ரியாயைநம:
மகாலக்ஷ்மியைநம:
மகாகாள்பைநம:
மஹாகந்யாயைநம:
மஹேச்வர்யைநம:
மாஹேந்த்ர்யைநம:
பேருதநயாயைநம:
மந்தாரகுஸுமார்ச்சிதாயைநம:

மஞ்சுமஞ்ஜீரசரணயைநம:
மோக்ஷதாயைநம:
மஞ்சுபாஷிண்யைநம:
மதுரத்ராவிண்யைநம:
முத்ராயைநம:
மலயாயைநப:
மலயாந்விதாயைநம:
மேதாயைநப:
மரகதச்யாமாயைநம:
மாகத்யைநம: அக0
மேனகாத்மஜாயைநம:
மஹாமார்யைநம:
மஹாவீராயைநம:
மஹாச்யாமாயைநம:
மதுஸ்துதாயைநம:
மாத்ருகாயைநம:
மிஹிராபாஸாயைநம:
முகுந்தபதவிக்ரமாயைநம:
மூலாதாரஸ்திதாயைநம:
முக்தாயைநம: அஉ0
மணிபூரகவாஹிந்யைநம:
ம்ருகாக்ஷியைநம:
மஹிஷாரூடாயைநம:
மஹிஷாஸுரமர்த்திந்யைநம:
யோகாசனயைநம:
யோககம்யாயைநம:
யோகாயைநம:
யௌவநகாச்ரயாயைநம:
யாவத்யைநம:
யுத்தமத்யஸ்தாயைநம: அங0
யமுனயைநமஃ
யுகதாரிண்யைநம:
யக்ஷிண்யைநம:
யோகயுக்தாயைநம:
யக்ஷராத்ப்ரஸூதிந்யைநம:
பாத்ராயைநம:
பானவிதானக்யாயைநம:
யதுவம்சஸமுத்பவாயைநம:
யகாராதிஹகாராந்தாயைநப:
யாஜ்ஞஷ்யைநம: அச0

யக்ஞரூபிண்யைநமஃ
யாமின்யைநமஃ
யோகநிரதாயைநமஃ
யாதுதானபயங்கர்யைநமஃ
ரூக்மண்யைநமஃ
ரமராயைநம:
தாமாயைநமஃ
ரேவத்யைநமஃ
ரேணுகாயைநமஃ
ரத்யைநமஃ அநு0
ரௌத்ர்யைநமஃ
ரௌத்ரிப்ரியாகாராயைநமஃ
ராமமாதாயைநமஃ
ரதிப்ரியாயைநமஃ
ரோஹிண்யைநமஃ
ராஜ்பதாயைந:
ரேவாயைந:
ரமாயைநம:
ராஜீவலோசனயைநமஃ
ராகேச்யைநமஃ அகூ0
ரூபஸம்பந்நாயைநமஃ
ரத்நஹிப்ஹாஸஸ்திதாயைநம:
ரக்தமால்யாம்பரதராயைநமஃ
ரக்தகந்தாநுலேபநாயைநமஃ
ராஜஹம்ஸமாரூடாயைநமஃ
ரம்பாயைநமஃ
ரக்தபலிப்ரியாயைநமஃ
ரமணீயயுகாதாராயைநமஃ
ராஜீதாகிலபூதலாயைநமஃ
ரூருசர்மதரீதாஞ்யைநமஃ அஎ0
ரதின்யைநமஃ
ரத்நமாலிகாயைநமஃ
ரோகேச்யைநமஃ
ரோசசம்பந்யைநமஃ
ராவிண்யைநமஃ
ரோபஹரிணிண்யைநமஃ
ராமசந்திரபதாக்ராந்தாயைநமஃ
ராவணச்சேதகாரிண்யைநமஃ
ரத்நவத்ஸரரிச்சிந்நாயைநம:
ரதஸ்தாயைநம: அஅ0

ரூக்மபூஷணயைநமஃ
லஜ்ஜாதிதேவதாலோலாயை
லளிதாயைநமஃ
லிங்கதாரிண்யைநமஃ
லக்ஷ்மியைநமஃ
லாலாயைநமஃ
லுப்தவிபாஷாயைநமஃ
லோகிண்யைநமஃ
லோகவிஸ்ருதாயைநமஃ
லஜ்ஜாயைநமஃ அகூ0
லம்போதரீதேவ்யைநமஃ
லாக்யைநமஃ
லலநாயைநமஃ
லோசதாரிண்யைநமஃ
வரதாயைநமஃ
வந்திதாயைநமஃ
வித்யாயைநமஃ
வைஷ்ணவீயைநமஃ
விமலாக்ருத்யைநமஃ
வராஹ்யைநமஃ கூ00
விரஜாயைநமஃ
வர்ஷாயைநமஃ
வரலக்ஷ்மியைநமஃ
விலாசிந்யைநமஃ
விந்தாயைநமஃ
வ்யோமமத்யஸ்தாயைநமஃ
வாரிஜாஸநஸம்ஸ்திதாயைநமஃ
வாருண்யைநமஃ
வேணுஸம்பூதாயைநமஃ
வீதிஹோத்ராயைநமஃ கூச0
விரூபிண்யைநமஃ
வாயுமண்டலமத்யஸ்தாயைநமஃ
விஷ்ணுரூபாயைநமஃ
விதிக்ரியாயைநமஃ
விஷ்ணுபத்நியைநமஃ
விஷ்ணுமத்யைநமஃ
விசாலாக்ஷியைநமஃ
வசுந்தராயைநமஃ
வாமதேவப்ரியாயைநமஃ
வேளாயைநமஃ கூஉ0

வஜ்ரிண்யை நம:
வஸுதோஹிந்யை நம:
வேதாக்ஷரபரீதாங்கியை நம:
வாஜாபேயபலப்ரதாயை நம:
வாஸவியை நம:
வாமஜநந்யை நம:
வைகுண்ட நிலயாயை நம:
வராயை நம:
வியாஸப்ரியாயை நம:
வர்மத்ராயை நம: (930)
வால்மீகி பரிஸேவிதாயை நம:
சாகம்பர்யை நம:
சிவாயை நம:
சாந்தாயை நம:
சாரதாயை நம:
சரணாகத்யை நம:
சாதோதர்யை நம:
சுபாசாராயை நம:
சும்பாசுர விமர்ந்திந்யை நம:
சோபாவத்யை நம: (940)
சிவாகாராயை நம:
சங்கரார்த்த சரீண்யை நம:
சோணாயை நம:
சுபாசயாயை நம:
சுப்ராயை நம:
சிரஸ்ஸந்தானகாரிண்யை நம:
சராவத்யை நம:
சராநந்தாயை நம:
சரத்ஜ்யோத்ஸநர்யை நம:
சுபாநநாயை நம: (950)

சரபாயை நம:
சூலிந்யை நம:
சுத்தாயை நம:
சபர்யைநம:
சுகவாஹனாயை நம:
ஸ்ரீ மத்யை நம:
ஸ்ரீ தராநந்தாயை நம:
சிரவணானந்ததாயிந்யை நம:

சர்வாண்யை நம:
சர்வரீவந்தியாயை நம: (960)
ஷட்பாஷாயை நம:
ஷட்ருதுப்ரியாயை நம:
ஷடாதாரஸ்திதாதேவ்யை நம:
ஷண்முகப்ரியகாரிண்யை நம:
ஷடங்கரூபாயை நம:
சுமத்யை நம:
சுராசுர நமஸ்கிருதயாயை நம:
சரஸ்வத்யை நம:
சதாதாராயை நம:
சர்வமங்கள காரிண்யைநம: (970)
சாமகானப்ரியாயை நம:
சூக்ஷ்மாயை நம:
சாவித்ரியை நம:
சாமசம்பவாயை நம:
சர்வாவஸாயை நம:
சதாநந்தாயை நம:
சுஸ்தந்யை நம:
ஸாகராம்பராயை நம:
ஸர்வை ஸ்வர்யப்ரியாயை நம:
ஸித்தயே நம: (980)
ஸாதுபந்துபராக்ரமாயை நம:
ஸப்தருஷிமண்டலகதாயை நம:
சோமமண்டலவாஸிந்யை நம:
சர்வக்ஞாயை நம:
சாந்த்ரகருணாயை நம:
சமானாதி கவர்ஜிதாயை நம:
சர்வோத்துங்காயை நம:
சங்கஹீனாயை நம:
சத்குணாயை நம:
சகலேஷ்டதாயை நம: (990)
சாகாயை நம:
சூர்யதநயாய நம:
சுகேஸ்யை நம:
சோமசம்ஹத்யை நம:
ஹிரண்யவர்ணாயை நம:
ஹரிண்யை நம:
ஹீங்கார்யை நம:

ஹம்ஸவாஹிந்யைநம:
க்ஷௌமவஸ்திரபரீதாங்கியைநம:
க்ஷீராப்திதநயாயைநம: (1000)
க்ஷமாயைநம:
காயத்திரியைநம:
சாவித்திரியைநம:
பார்வத்யைநம:
ஸரஸ்வத்யைநம:
வேதகர்ப்பாயைநம:
வராரோஹாயைநம:
ஸ்ரீகாயத்திரியைநம:
பராம்பிகாயைநம:

சகலபாபங்களைப் போக்கடிப்பதாயும் புண்ணியத்தைக்கொடுப்பதாயும் மகத்தான சம்பத்தைக் கொடுப்பதாயும் இருக்கிற காயத்திரி சகஸ்ரநாமம் இதுவாகும். ஓ முனீந்திரரே! சந்தோஷத்தை யுண்டுபண்ணுநின்ற இந்த சகஸ்ரநாமம் பிராமணுளோடு அஷ்டமி திதியில் விசேடமாய்ப்படித்து ஜப ஹோமங்களும் பூஜை தியானங்களும் விசேடமாய்ச் செய்யவேண்டியது. இந்த சஹஸ்ரநாமத்தை ஒருவருக்குங் கொடுக்கக்கூடாது. நல்ல பக்தனுயும் நல்ல சிஷ்யனுயும் இருக்கிற பிராஹ்மணனுக்குச் சொல்லவேண்டியது. சாதகன் பந்துவாயிருந்தாலும் பிரஷ்டனுயிருப்பானுயின் அவனுக்குக் காண்பிக்கக்கூடாது. எவனது கிருகத்தில் இந்த சகஸ்ரநாமம் இருக்கிறதோ அவனுக்கு ஓரிடத்திலிருந்தும் பயம்வராது. மஹாலக்ஷுமி சஞ்சலையாயிருந்தாலும் அவனிடத்தில் ஸ்திரமாயிருப்பாள். இது பரமரகஸ்யமாயும் புண்ணியத்தைக் கொடுப்பதாயும் தரித்திரனுக்கு நிதியையும் முமுக்ஷுக்களுக்கு மோக்ஷத்தையம் காமிகளுக்கு சர்வ காமங்களையும் கொடுப்பதாயுமிருக்கிறது.

இதைப் படிக்கிறவன் ரோகியாயினும் அரோகியாகிறான். பந்தத்தில் கட்டுப்பட்டிருப்பினும் அக் கட்டினின்றும் விடுபடுகிறான். பிரஹ்மஹத்தி சுராபானம் சுவர்ண அபகரணம் இவைகளைச் செய்தோரும், குருபத்தினியைக் கூடினவனும் ஒருக்கால் படனஞ்செய்யப் பெறுவாராயின் அவர்கள் அவ்வப்பாதகங்களினின்றும் விடுபடுகின்றனர். இவர்களேயன்றி பெறக்கூடாத தானங்களைப் பெறுகின்றவனும் உண்ணக் கூடாதனவற்றை யுண்டவனும் பாஷாண்டனும் பொய் சொன்னவனும் இவர்களோடு கூடியிருந்தவனும் படனஞ் செய்வாராயின் அவர்களும் அவ்வப்பாபங்களினின்றும் விடுபடுவர். ஓ நாரதரே! என்னால் சொல்லப்பட்ட இந்த சகஸ்ரநாம ரகசியமானது பரிசுத்தமாகிய மனிதர்களுக்கு பிரஹ்ம சாயுச்சியத்தைக் கொடுக்கும். இது சத்தியம் சத்தியம் சம்சயமில்லை.

(சு ம்-165)

ஆறும் அத்தியாயம் முற்றிற்று.

ஸகலாகம சம்ஸ்துதாயைநம:

ஏழாம் அத்தியாயம்.

தீக்ஷாவிதி.

நாரதர் கூறுகின்றார்:—காயத்திரியினது பலத்தையும், மஹா ஸ்ரேயஸ்ஸையும் மகா பாக்கியத்தையும் கொடுப்பதா யிருக்கிற சஹஸ்ர நாமத்தையும், தேவரீரால் கேட்கப்பெற்றேன். பிரஹ்ம க்ஷத்திரிய வைசியர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் எந்தத் தீக்ஷையில்லா மல் அதிகாரஞ் சித்திக்காதோ அந்த வுத்தமமான தீக்ஷாவிதியை மூன் சாமான்யமாகக் கேட்டுள்ளேன். அதனை இப்போது விரி வாகச் சொல்லவேண்டுகிறேன்.

நாராயணர் கூறுகின்றார்:—பரிசுத்தாத்மாக்களாயிருக்கிற சிஷ் யர்களுக்கு எந்தத் தீக்ஷையினால் தேவாக்னி குரு பூஜைக்கு அதி காரம் உண்டாகிறதோ, எந்தத் தீக்ஷை திவ்யமான ஞானத்தைக் கொடுத்து அஜ்ஞானமாகிய பாவத்தை நாசஞ்செய்கிறதோ, எது யாதொரு காரணம் வேண்டாது வெகுபலத்தைக் கொடுக்கிறதோ, குரு சிஷ்யர்கள் அதி பரிசுத்தர்களாக விருப்பதற்கு எதனை யபே க்ஷிக்கின்றார்களோ, அந்தத் தீக்ஷையைத்தான் தீக்ஷை என்றும் அதனை அவசியம் செய்துகொள்ள வேண்டுமென்றும் நிகமாகமங் களையறிந்த சமர்த்தர்கள் கூறுகின்றனர்.

இனி அந்தத் தீக்ஷாவிதியைக் கேட்பீராக. ஆசிரியர் விதித்த படி மலமோசனாதி க்ருத்தியங்களையும் நதிக்கரையை யடைந்து ஸ்நானம் சந்தி முதலிய நியமங்களையும் செய்து, பின்னர் கமண்ட லத்தைக் கையிற்றூங்கிக்கொண்டு, மவுனமாய் நதிக்கரையினின்றும் புறப்பட்டு க்ருகத்துக்குப்போய் யாக மண்டபத்தை யடைந்து சிரேஷ்டமான ஆசனத்தில் உட்கார்ந்து ஆசமனப் பிராணயாமஞ் செய்து சாமான்யார்க்கியத்தில் கந்தபுஷ்பங்களிட்டு ஏழுதரம் அஸ் த்ரமந்த்ரத்தால் ஜபித்து அந்தத் தீர்த்தத்தைக்கொண்டு அந்த மந் த்ரத்தினாலேயே த்வார முதலிய இடங்களைப் புரோக்ஷித்து, பின் னர் பூஜையையாரம்பித்து வாசக்காலின் மேற்படியின் தக்ஷிணத்தில் கணபதியையும், உத்தரத்தில், சரஸ்வதியையும், நடுவில் லக்ஷ்மி யையும் ஸ்தாபித்து, அவரவர் மந்த்ரங்களால் கந்தபுஷ்ப அர்க்கி

யங்களைக் கொண்டு பூஜித்து, பின்னர் மேற்படி துவாரத்தின் தக்ஷிணசாகையில் கங்கையையும் கணபதியையும், வாம சாகையில் சோஷத்ர பாலகரையும் யமுனையையும், கீழ்ப்படியில் அஸ்திர தேவரையும் ஸ்தாபித்து, முன்போலவே அவ்வவர் மந்திரங்களைக் கொண்டு பூஜித்து, இந்தப் பரிவாரமூர்த்திகளை யெல்லாம் தேவி மயமாகப் பாவித்துத் தியானித்து, பின்னர் திவ்ய முத்திரையி னல் மேலிடத்திலுள்ள விக்னங்களையும், அஸ்திர மந்திரத்தால் அந்தரிக்ஷ விக்னங்களையும், பாத தாடனத்தினல் பூமியிலுள்ள விக்னங்களையும் போக்கிப் பின்னர் தக்ஷிணங்கிரிணியினல் வாமசா கையின்கண் பிரவேசித்து, தீர்த்த கலசத்தை ஸ்தாபனஞ்செய்து, பின்னர் நிருதிதிக்கில் வாஸ்துபதி பிரஹ்மாவை ஸ்தாபனஞ் செய்து கந்த புஷ்பாதிகளைக்கொண்டு சாமான்யார்க்கியத்தால் பூஜித்து, அதற்குப் பின்னர் பஞ்சகவ்வியத்தைக்கொண்டு மண் டப தோரண ஸ்தம்பமவரையில் புரோக்ஷித்து, இதுவரையில் சொல்லிவந்த தேவதைகளை யெல்லாம் தேவிமயமாக மனதில் பாவித்து, பக்தியோடு மூலமந்திரத்தை ஜபித்துப் புரோக்ஷணஞ் செய்து அஸ்திரமந்திரத்தை யுச்சரித்து மண்டப ஸ்தானத்தைத் தாடனஞ்செய்து அஸ்திர மந்திரத்தோடு ஹும் என்னும் மந்திரத் தை யுச்சரித்து அப்யுக்ஷணஞ்செய்து, ஆகாயத்தில் தூபங்கம முமபடி தூபங்கொடுத்து தர்ப்பை கூர்ச்சத்தால் சுத்திசெய்ய வேண்டியவை யெல்லாம் சுத்திசெய்து அந்தக் கூர்ச்சத்தை ஈசா னய திக்கில் வைத்துவிடடு, பின்னர் புண்யாஹவாசனம்செய்து ஏழைப் பிராமணர்களைப் போஜன பதார்த்தங்களால் சந்தோஷிப் பித்து, பின்னர் கிழக்குமுகமாக ஆசனத்தில் உட்கார்ந்து, தன் ஆசி ரியரை நமஸ்காரஞ்செய்து தியானிக்க வேண்டிய தெய்வத்தை அந்தத் தெய்வமந்திரத்தால் தியானித்து முன் சொன்னபடி பூத சுத்தி முதலியவற்றைச் செய்து, பின்னர் சிரசில் மூஷியையும், முகத்தில சந்தஸ்ஸையும் இருதயத்தில் தேவதையையும் குஹ் யத்தில பீஜத்தையும் பாதங்களில் சக்தியையும் முறையாக நிய சித்து, அதன்பின்னர் தாள்த்ரயமும் சோடிகா முத்திரையினல் மூன்றுதரம் திக்பந்தனமும் பிராணயாமமுஞ்செய்து மூலமந்தி ரத்தையுச்சரித்து, பின்னர் தேகத்தினிடத்தில் மாத்ருகாந்யாசஞ் செய்யவேண்டியது எவ்வாறெனில் சிரசுமுதல் பாத பரியந்தம் மந்திரவித்தாயுள்ள ஓம் அம்நம என்னும் மந்திரத்தால் நியசித்து,

அதன்பின்னர் மூலமந்திர ஷடங்கமந்திரங்களின் ஆதியில் பிரணவத்தையும், அந்தத்தில் நம, ஸ்வா, வஷட், ஹூம், வௌஷட், பட் என்பவைகளைச் சேர்த்து அங்குஷ்டமுதல் கனிஷ்டிகாந்தம்வரையிலும் ஹ்ருதயாதி ஸ்தானங்களிலும் செய்வதாகிய கரந்நியாச அங்கந் நியாசங்களைச்செய்வதும், பின்னர் வர்ணந்நியாசங்களைக் கல்பங்களில் எந்த எந்த விடங்களில் எப்படி எப்படிச் செய்யும்படிச் சொல்லப்பட்டிருக்கின்றனவோ அப்படி யப்படி மூல மந்திரத்தைக் கூட்டிச்செய்வதும் உத்தமம். இந்தப்படி கல்பப்பிரகாரம் வர்ணந்நியாசஞ்செய்து முடிந்தபின்னர் தனது சரீரத்தைத் தேவிக்குப் பீடமாகக் கற்பித்துப் பூஜையாதிகளைச் செய்யவேண்டும்.

எங்ஙனமெனின், வலதுதோள் இடதுதோள், வலதுதொடை இடதுதொடை, முகம், இடது விலாப்புறம் நாபி வலது விலாப்புறம் இவ்வெட்டிடங்களில் முறையே தர்மம் ஞானம் வைராக்யம் ஐஸ்வர்யம் அதர்மம் அஜ்ஞானம் அவைராக்யம் அநைஸ்வர்யம் என்னும் எட்டுமந்திரங்களால் நியசித்து, இவ்வெட்டுள் தர்மாதி நான்கு மந்திரங்களை நான்கு கால்களாகவும், அதர்மாதி நான்கு மந்திரங்களைக் காத்திரமாயுள்ள பீடப்பரப்பாகவும் பாவித்து, மத்திய ஸ்தானமாகிய மிருதுவாயுள்ள இருதய கடுவில் அனந்தனென்னும் மந்திரத்தால் நியசித்தும், நிர்மலமாயுள்ள பிரபஞ்ச பத்மமாகிய அந்த இருதயகமலத்தில் பன்னிரண்டு கலையோடுகூடிய சூரியன் பதினாறு கலையோடுகூடிய சந்திரன் பத்துக்கலையோடுகூடிய அக்னி என்னும் மூவரையும் அவரவர் மந்திரக்களால் சங்கிரகமாக நியசித்தும், அதன்மேல் சத்வம் ரஜஸ் தமஸ் என்னும் முக்குணங்களைநியசித்தும் அதன்மேல் ஆத்மா அந்தராத்மா பரமாத்மா என மூன்றுவிதமாயுள்ள ஆதமஸ்வரூபத்தினிடத்தில் ஞானாத்மாவை நியசித்தும் செய்வதாகிய பாவனா பூஜையையே பீடபூஜை என்று வித்வான்கள் கூறுகின்றனர்.

ஓ நாரதரே! இவ்வாறுபீடத்தைக் கற்பித்துக்கொண்ட பின்னர் "அநாசனயநம" என்னும் மந்திரத்தினால் ஆசனத்தைப் பூஜித்து. அவ்வாசனத்தில் தியானிக்கப்படும் தியேயமூர்த்தியாகிய பராம்பிகையைத் தியேய மந்திரத்தைக்கொண்டு தியானித்து, யதாவிதியாக மானசிகமாய்ச் சர்வோபசாரங்களையுஞ்செய்து அவ்வம்பிகைக்குச் சந்தோஷத்தை விளைவிப்பதாகிய மூத்திரைகள்

வைகளோ அந்த முத்திரைகளைக்காட்டிச் சந்தோஷிப்பித்து, பின்னர் அவ்வாசனத்துக்கு இடப்பாகத்தின் அக்ரத்தில் சதுரஸ்ரமாகவும் அதனுள் விருத்தாகாரமாக ஷட்கோணமும், அதனுள் திரிகோணமாக மண்டலமும் அமைத்து, அதன் மத்தியில் சங்கமுத்திரைகாட்டி, பின்னர் ஷட்கோணங்களை அக்னிதிக்கு முதலாக ஷடங்க மந்திரத்தால் நல்லமலர்களைக்கொண் டர்ச்சித்து, சங்கத்திக்கு ஆதாரபாத்திரத்தை அந்த ஷட்கோண மத்தியில் வைத்து, அஸ்திரத்தால் புரோக்ஷித்து "மம் வன்னிமண்டலா யோக்தர்த்தோக சகளாத்மநே, அமுகதேவ்யா அர்க்யபாத்ர ஸ்தாநாயநம" என்கிற மந்திரத்தை யுச்சரித்து அக்னிமண்டலத்துக்குச் சொல்லியிருக்கும் பத்துக்கலைகளையும் கிழக்குமுதல் பிரதக்ஷணக் கிரமமாகப் பூசித்து; மூலமந்திரத்தால் புரோக்ஷிக்கப்பட்ட சங்கத்தை யெடுத்து மூலமந்திரோச்சாரணையோடு முன்சொன்ன ஆதாரபாத்திரத்தின்கண் வைத்து, "அம் சூர்யமண்டலாயோக்தாத்வாக சாந்தே களாத்மநே - அமுகதேவ் யார்க்ய பாத்ராயநம" என்றும், "ஸம் ஸங்காயபதம் புரோக்ஷயம் நம" என்றும் உச்சரித்துப் புரோக்ஷணஞ்செய்து, சூரியனுக்குச் சொல்லியிருக்கும் பன்னிரண்டு கலைகளையும் பூஜித்து, யதாக்கிரமமாக அப்பன்னிரு கலையையும் ஸ்தாபித்து, மாத்ருகா மந்திரத்தையும் மூலமந்திரத்தையும் விலோமமாக வுச்சரித்து, அத்தச் சங்கத்தில் ஜலத்தைப் பூரித்து சந்திரமண்டலத்துக்குரிய பதினாறு கலைகளையும் நியசித்துப் பின்னர் "உம் ஸோமமண்டலா யோகதாம் தேஷோட ஸகளாத்மநே - அமுகார்க்ய பாத்ராயநம" என்கிற மந்திரத்தை யுச்சரித்து, புஷ்பாஞ்சலி சஹிதமாக இருதயாதியானத்தோடு ஸ்ருணிமுத்திரையினால் ஆவாகனஞ்செய்து, அந்த மந்திரத்தையே எட்டுத்தரமும், அஃதேபோல் மூலமந்திரத்தை எட்டுத்தரமும் ஜபித்து அவற்றோடு இருதயாதி ஷடங்கங்களையும் ஜபித்து மச்சமுத்திரையால் (அத்யுக்ஷணஞ்செய்து), கையைமூடி பின்னர் அந்தச் சங்கத்துக்கு தக்ஷிணதிக்கில் புரோக்ஷண பாத்திரத்தைவைத்து அதில் சங்கதீர்த்தத்தைச் சிறிதுவிட்டு அந்தத் தீர்த்தத்தால் சகல பூஜாத்ரவியங்களையும் தன்னையும் புரோக்ஷித்து அப் பூஜாத்ரவியங்களையும் தன்னையும் சுத்தமாகப் பாவித்துப் பின்னர் தன்னெதிரில் வேதிகை யொன்றையும் அதன்மேல் சர்வதோபத்ரமென்னும் மண்டலத்தையும் கற்பித்துக்கொண்டு அதன்மத்தியில்

கர்ணிகை யெழுதி கெல்லியும் அரிசியையும் ததும்பப் பரப்பி அதன்மேல் சிதிலமில்லாமல் லக்ஷணத்தோடுகூடிய தர்ப்பை கூர்ச்சத்தைவைத்து ஆதாரசக்திமுதல் பீடம்வரையில் அருச்சித்துப் பின்னர் கறுப்பில்லாத இரண்டு மண்குடத்தை உள்ளும் புறம்பும் அஸ்திரமந்திரத்தை யுச்சரித்துத் தீர்த்தத்தால் சுத்திசெய்து மூன்றிழையோடுகூடிய நூலால்சுற்றி அந்தக் கும்பகலசத்தினுள் கூர்ச்சமும் சுவரத்தினமும் இட்டு தாராமந்திரத்தால் சுத்த புஷ்பங்களைக் கொண்டு அருச்சித்துப்பின்னர் அந்தக் கும்பத்துக்கும் பீடத்துக்கும் ஐக்கியபாவனை நியாசஞ்செய்து பின்னர் பிரதிலோமமாக மாத்ருகா மந்திரத்தை ஜபித்து அதனோடு மாலாமந்திரத்தை ஜபித்து அந்த ஜபோச்சாரணையோடு கும்பத்தில் தீர்த்தத்தைப். பூரித்து அரசன்றளிர் பலாவின்றளிர் மாந்தளிர் இவைகளைக் கும்பமுகப் பில்வைத்து அக்ஷதைகளைபிட்டு இரண்டு வஸ்திரந்தரித்து பிராணஸ்தாபன மந்திரத்தால் பிராணப்பிரதிஷ்டைசெய்து பின்னர் தேவி கற்பத்திற் சொல்லியிருக்கின்றபடி ஆவாஹனை முத்திரைகளால் பராசக்தியைச் சந்தோஷிப்பிக்கச்செய்து தியானித்து, (ஸ்வாகதந்தே மஹாதேவி என்று) குசலப்பிரஸ்னஞ் செய்ததாகவும், அதற்குத்தேவி (வர்த்தஸ்வ ஸ்வாகதம் என்று) உத்தரமளித்ததாகவும் எண்ணி சுவாகதார்க்கியமும் பாத்யாசமனார்க்கியமும் கொடுத்து மதுபர்க்கநிவேதனம் செய்து பின்னர் ஸ்நானார்த்தமாகத் தைலாதிகளையும் சந்தனாதி சுகந்தங்களையும் சமர்ப்பித்து சுகப்புப் பட்டுவஸ்திரங்களாலும் நானாவிதமான ஆபரணங்களாலும் அலங்கரித்து, பின்னர் தேவியினது அங்கங்களில் மாத்ருகா நியாசஞ்செய்து பச்சைகர்ப்பூரம் கஸ்தூரி குங்குமப்பூ முதலிய நல்லவாசனையோடுகூடிய சந்தனத்தையும், குருக்கத்தி முதலிய வாசனையுள்ள மலர்களையும் சாத்திப் பின்னர் அகில் லாமிச்சை சந்தனம் தேன் சர்க்கரை முதலியவைகலந்த தூபமும் தீபமுங்காட்டி அநேகவிதமாயுள்ள நைவேத்ய பதார்த்தங்களை நிவேதனஞ் செய்யவேண்டும். அப்படிச் செய்யும்பொழுது முன் புரோக்ஷணத்துக்கு அமைத்துள்ள அர்க்கியதீர்த்தத்தால் ஒவ்வொன்றையும் புரோக்ஷித்து நிவேதனஞ் செய்யவேண்டுமே யன்றி புரோக்ஷண மில்லாமல் செய்யக்கூடாது. நிவேதனமான பின்னர் தேவியினுடைய சாங்கங்களைப் பூஜிப்பதாகிய அங்கபூஜையைச் செய்து பின்னர் வைஸ்வதேவஞ் செய்யவேண்டும். எப்படியெ

னின், தக்ஷிணபாகத்தில் செல்லிப்பரப்பி அதில் அக்னியைஸ்தாபித்து மூர்த்தியைக் கிரமமாக ஆவாஹித்துப் பூஜித்து, காராமந்திரத்தினாலும் மூலமந்திரத்தினாலும் இருபத்தைந்துமுறை பாயஸத்தினாலும் நெய்யினாலும் ஹோமஞ்செய்து மறுபடியும் வியாஹருதிமந்திரத்தால் ஓமஞ்செய்து சந்தன புஷ்பங்களால் அர்ச்சித்து அக்னியிலிருக்கும் மூர்த்தியைப் பீடத்தில் யோஜித்து அக்னிக்குப் பாயாசபலிகொடுத்து அக்னியை விசர்ஜனஞ்செய்துப் பின்னர் பராசக்தியின் ஆவரண தேவதைகளை கந்தபுஷ்பமுதலிய வைகளால் பூஜித்து பராசக்திக்குப் பஞ்சோபசாரஞ்செய்து தாம்பூலங்கொடுத்து சத்ரசாமரங்களால் உபசரித்து தேவிமந்திரத்தை ஆயிரம் உருஜபித்து தேவிக்கு ஈசான்யதிக்கில் சமர்பித்து வேதிகைக்கு ஈசான்யபாகத்தில் கரகத்தை ஸ்தாபனஞ்செய்து அதில் துர்க்காமந்திரத்தை ஆவாஹித்துப் பூஜித்து அந்தக் கரகத்தை ரக்ஷிக்கவேண்டுமென்று சொல்லி கையிலெடுத்துக்கொண்டு அக்கரகத்திலிருந்து ஜலம் கீழேவிழும்படி பிரதக்ஷிணமாக அந்தவிடத்தை நீனைத்து கரகத்தை முன்னிருந்த விடத்திலேயே ஸ்தாபித்து அங்கு அஸ்திரமந்திரத்தால் அஸ்திரதேவதையைப் பூஜிக்கவேண்டும். பின்பு ஆசாரியர் சிஷ்யனுடன் மவுனமாய்ப் போஜனஞ் செய்து யாகசாலையில் நியமத்தோடு நித்திரைசெய்ய வேண்டும்.

இனிக்குண்டத்தையும் தண்டிலத்தையும் சம்ஸ்காரஞ் செய்யுநிமித்தம் ஆசிரியர் சுத்தியோடு எந்தவிதியினால் எந்தவிதஞ்செய்யவேண்டுமோ அதைச்சொல்லுகிறேன். ஆசாரியர் தேவிமூலமந்திரத்தையுச்சரித்து, குண்டத்தையும் ஸ்தண்டிலத்தையும் நிரீக்ஷித்து, அஸ்திரத்தால் புரோக்ஷித்து, மேற்படி மந்திரத்தால் தாடனமும் கவசத்தால் அப்யுக்ஷணமும் செய்து, மூன்று தர்ப்பைகளால் மேற்குமுதல் கிழக்குவரையிலும் தெற்குமுதல் வடக்குவரையிலும் மூன்று ரேகையிழுத்து, பிரணவத்தால் குண்டத்தை அப்யுக்ஷணஞ்செய்து, ஆகாரசக்திமுதல் பீடம்வரை பூஜித்துபரமகாரணர்களாகிய வாகீஸ்வரி வாகீஸ்வரர்களை கந்தபுஷ்பங்களால் பூஜித்து, வாகீஸ்வரி வாகீஸ்வரரோடு கூடிக்கொண்டும் காமாதுரையாயும் ருதுஸ்நானத்தையுடையவளாயும் இருவரும் சிறிதுகாலம் கிரீடிக்கின்றவர்களாயும் தியானித்துப் பிறகு வன்னியை ஒரு பாத்திரத்தில் வைத்துக்கொண்டு அதினின்றும் சிறிது அக்னியை மருதநிலத்தில் ராக்ஷஸப்பிரீதியாகத் தள்ளிவிட்டு முன்

குண்டத்துக்குச்சொல்லியதுபோல் அவ் வக்கினிக்குசதுஸ்ஸம்ஸ் காரஞ்செய்து, (ரம்) என்னும் அக்னி பீஜத்தைஉச்சரித்து, அக்னி யினிடமிருந்து அவ்வக்னி தன் சைதன்னியத்தில் கலந்ததாகவும் மீண்டும் அவ்வக்னியினிடம் சேர்த்ததாகவும் பாவித்து, பிரணவ தால் எழுதாரம் அபிமந்திரித்து, தேனுமுத்திரைகொடுத்து, அஸ்தி ரத்தால் ரக்ஷையும் கவசத்தால் அவகுண்டனமுஞ்செய்து, பாத்தி ரத்தோடு கையி லெடுத்துக்கொண்டு, குண்டத்துக்குமேல் மூன்று தரம் பிரதக்ஷிணமாகச்சுற்றி, அவ்வக்னியைச் சிவபீஜ மாகவும் குண்டத்தை தேவியோனியாகவும் பாவித்துக்கொண்டு, இரண்டு முழங்காலும் பூமியில் தாங்கும்படியிருந்து குண்டத்தில் அக்னியை யிட்டு இருவருக்கும் ஆசமனங் கொடுத்து அதன்பின்னர் சித் பிங்கள ஹர தகபச இவைகளை இரட்டித்துச் சொல்லி, "சர்வக்ஞா க்ஞாபய ஸ்வாஹா" என்னும் வன்னிதீப மந்திரத்தினல் ஜொலிக் கச்செய்து, சுவலித்துக்கொண்டிருக்கிற அக்னியைத் தியானித்து, நான்கு திக்கிலும் முகமுள்ளதாயும் விசேஷ பிரகாசத்தோடு கூடியதாயும் நிர்மலமாயும் சுவர்ணம்போல் பிரகாசிப்பதாயும் ஒமத் தையே ஆகாரமாயுள்ளதாயும் வேதமாதாவாயும் விசேஷமாய்ச் சொலித்துக்கொண் டிருப்பதாயும் உள்ள அக்னியை நமஸ்கரிக் கிறேனென்னும் மந்திரத்தினல் விசேட ஆதரவுடன் தோத்திரஞ் செய்து, அதன்பின் "ஸஹஸ்ரார்ச்சி சுவஸ்திபூர்ண உத்திஷ்ட புருஷ: தூம வ்யாபீ ஸப்தஜிஹ்வோ தநுர்த்தவ" என்னும் வன்னி மந்திர ஷடகங்களையும் அக்நியின் பூர்வபச்சிம தக்ஷிணத்தர நைருதி ஈசான ஸ்தானங்களில் நியசித்து, மங்களமாயுஞ் சிறந்த தாயுமுள்ள இஷ்டசக்தி ஸ்வஸ்திகம் இவைகளைத் தரித்துக் கொண்டு பத்மாசனத்திலிருப்பதாகவும் மூன்று கண்களை யுடைய தாகவும் பொன்னிற முள்ளதாகவும் அக்னியைத் தியானித்து, பிறகு குண்டத்து மேகலையில் நான்கு பக்கமும் ஜலத்தினல் பரி சேஷணஞ் செய்து, அதன்பிறகு தர்ப்பையை நான்கு பக்கமும் பரிஸ்தரணமிட்டு, அதன்மீது பரிதியாக நான்கு சமித்துக்களை வைத்து, குண்டமத்தியில் அஷ்ட தளபத்மமும் அதனடுவில் ஷட்கோணமும் அதனடுவில் விருத்த கோணமும் அதனடுவில் திரிகோணமுமாகப் பாவிக்கவேண்டும். அல்லது முன்னரே எழுத வேண்டும். பின்னர் அவ்வக்னியை வைஸ்வாநர! ஜாதவேத! லோகிதாக்ஷ! நீர் இந்தஸ்தானத்தை வஹிக்கவேண்டும். வஹித்து

சகல காரியங்களையுஞ் சாதிக்கக் கடவீர் என்று ஸ்வாஹா மந்திரத்தால் பூஜித்து, மத்யமாயிருக்கிற ஷட்கோணத்தில் ஹிரண்யா! ககனே! ரக்தா! கிருஷ்ணே! ஸுப்ரபா! பஹுரூபா! அதிரக்திகா! என்னு மந்திரங்களாலும் கேசரங்களில் அங்கமந்திரங்களாலும் அர்ச்சித்து, எட்டு தளங்களில் ஜாதவேதா சப்தஜிஹ்வா ஹவ்ய வாஹந அஸ்வோதரஜ: சஞ்ஜோந்ய: வைஸ்வாநர கௌமாந தேஜ விஸ்வமுக தேவமுக என்பவர்களைப் பூஜித்து, அவ்வவ் விடங்களில் அவரவர்கள் பிரஸந்நமா யிருப்பதாகவும், நான்கு பக் கங்களிலும் லோகபாலகர் ஆயுதசஹிதமாக இருப்பதாகவும் தியா னித்துப் பூஜித்து, அதன்பிறகு சிருக் சிரவம் ஆஜ்யம் இவைகளை சம்ஸ்காரஞ்செய்து, பிறகு சிரவத்தால் ஆச்சியத்தை ஆஜ்யபாத் திரத்தின் தக்ஷிணத்தி லிருந்தெடுத்து, அக்னியின் தக்ஷிணநேத் திரத்தில் அக்னியே ஸ்வாஹா என்னு மந்திரத்தால் விட்டு, பிறகு வாமபாகத்தினின்றும் நெய்யை எடுத்து, அக்னிவாம நேத்திரத் தில் சோமாய ஸ்வாஹா என்னும் மந்திரத்தால்விட்டு, பாத்தி ரத்தின் நடுவிலிருந்து நெய்யையெடுத்து, அக்நீ ஷோமாப்யாம் ஸ்வாஹா என்னும் மந்திரத்தால் மத்யநேத்திரத்தில் விட்டு, மறுபடி தக்ஷிணதிக்கி லிருந்தெடுத்து, அக்நிமுகத்தில் அக்நயே ஸ்விஷ்ட க்ருதேஸ்வாஹா என்னு மந்திரத்தாலும் தாராமந் திரத்தோடு கூடிய வ்யாகிருதி மந்திரங்களினாலும் ஓமஞ்செய்து, பிறகு அக்னி மந்திரத்தினால் மூன்றுதரமும் பிரணவத்தால் கர்ப் பாதானம் பும்ஸவனம் விஷ்ணுபலி சீமந்தோன்னயனம் ஜாதகர்மம் நாமகர்மம் உபநிஷ்க்ரமணம் அன்னப்ராசநம் கர்ணவேதம் சூடா கர்மம் உபநயனம் விரதபந்தனம் மஹாநாம்யவிரதம் உபநிஷத்விர தம் கோதானவிரதம் உத்வாஹம் என்னும் கிருத்யங்களுக்குப் பதி னாறு ஹோமமும் செய்து, அதன்பிறகு வாகீஸ்வர வாகீஸ்வரிகளைப் பூசித்து உத்வாஸனஞ்செய்து, பின்னர் ஐந்து சமித்தால் அக்னி யைக் குறித்து ஓமஞ் செய்துப்பின் ஆவரண தேவதைகளுக்கும் ஒவ்வொரு ஹோமஞ்செய்யவேண்டும். அதன் பின்னர் சிருவத்தி னால் நெய்யையெடுத்து சிருக்கில் நான்குதரம் விட்டு சிருவத்தினால் சிருக்கைமூடி தன்னு சனத்தினின்றெழுந்து வௌஷட் என்பதை இறுதியாகவுடைய அக்னி மந்திரத்தினால் பூர்ணாகுதி செய்ய வேண்டும்.

பின்பு கணேசமந்திரத்தால் பத்தாகுதிசெய்து, வன்னியில் பீடத் ததைப்பூசித்து, உத்தேசதேவதையைத்தியானித்து, அந்தஅக்னியில்

அந்தத் தேவதையைக்குறித்து நெய்யினல் அக்னிமுகமும் தேவதையின் முகமும் ஐக்கியமாக விருக்கிறதாகப் பாவித்து, இருபத்தைந்துஹோமம் மூலத்தாற் செய்து, பின்னர் ஏகிபாவமாகப் பாவித்து, அக்னியை ஆத்மாவினிடம் ஒடுக்கிக்கொண்டு ஷடங்க தேவதைகளுக்கு ஹாகுதிகளைத் தனித்தனிசெய்து, அதன்பிறகு பதினெரு ஆகுதிசெய்து, இதனல் வன்னிக்கும தேவிக்கும் நாடிசந்தானஞ் செய்து, கற்போக்த திரவியங்களைக் கொண்டாவது எள்ளினலாவது தேவதையினுடைய மூலமந்திரத்தால் ஆயிரத்தெட்டாவர்த்தி ஹோமஞ் செய்யவேண்டியது. இவ்விதம் ஹோமஞ் செய்தபிறகு தேவி சந்துஷ்டையா யிருப்பதாகவும் அப்படியே ஆவரண தேவதைகளும் வன்னியாதி தேவதைகளும் சந்துஷ்டையா யிருப்பதாகவும் பாவித்து பிறகு ஸ்நான சந்தியாதிகளைச் செய்தவனுயும் இரண்டு வஸ்திரங்களையும் ஆபரணங்களையும் அணிந்தவனுயும் கையில் கமண்டலந் தரித்தவனுயும் சுத்தனுய மிருக்கிற சிஷ்யனை குண்டத்துக்குச் சமீபத்தில் வரவழைத்து, ஆசாரியராகிய தன்னையும் சபையிலுள்ளோரையும் குலதெய்வத்தையும் நமஸ்கரித்து தர்ப்பாசனத்தில் உட்காரும்படிச் செய்து, கிருபையுடன் கூடிய நோக்கத்தோடு அவனைப் பார்த்து, அவனுடைய சைதன்னியம் தன்னிடத்தில் சேர்ந்ததாகப் பாவித்து, தேவி அநுக்கிரகத்துக்கு எப்படி யுரியவனவனை அப்படி சிஷ்யனுடைய சரீரத்தை திருஷ்டியினலும் அத்வாக்களை (வழியை) ஓமத்தினலும் சோதனை செய்யவேண்டியது. எவ்வாறெனில் அவனுடைய சரீரத்தில் ஷடத்துவாக்களைத் தியானித்து, பாதங்களில் காலாத்வாவையும் சந்தியில் தத்வாத்வாவையும் நாபியில் புவனத்வாவையும ஹ்ருதயத்தில் வர்ணத்வாவையும் நெற்றியில் பதார்த்வாவையும் சிரசில் மந்திராத்துவாவையும் தியானித்து, அந்தந்த அத்வாக்களை ஸ்வாஹாந்தமாக வுச்சரித்து, எள்ளோடுகூடிய நெய்யிற்றேய்த்த கூர்ச்சத்தினல் சிஷ்யனைத் தொடவேண்டும். பிறகு பிரணவத்துடன் கூடிய அத்வமந்திரத்தினல் எட்டெட்டாகுதிசெய்து, அதன்பிறகு ஷடாத்வாக்களை பிரஹ்மத்தில் ஒடுங்கினதாகப் பாவித்து, மறுபடி சிருட்டிமார்க்கமாய் அத்வாக்கள் பிரஹ்மத்திலிருந் துண்டானதாகப் பாவித்துத் தன்னிடம் ஒடுங்கிய சிஷ்ய சைதன்னியத்தை சிஷ்ய சரீரத்தில் யோஜித்து, அதன்பிறகு பூர்ணுகுதி செய்யவேண்டும். அதன் பின்னர் குண்

டத்திலிருக்கிற தேவதையைக் கலசத்தில் யோஜித்து மறுபடி வ்யாகிருதி ஹோமஞ்செய்து, அக்நியினது அங்க ஆகுதிகளை ஒவ் வொருதரஞ் செய்து, அக்நியைத் தன்னிடம் ஒடுக்கிக்கொண்டு, நேத்திர மந்திரத்தினால் சிஷ்ய நேத்திரத்தை வஸ்திரத்தினால் கட்டி, குண்டத்தினின்று மண்டலத்தை அடைவித்து, அவன் கையில் புஷ்பத்தைக்கொடுத்து, மூக்கிய தேவதையிடத்தில் புஷ் பாஞ்சலி செய்வித்து, நேத்திரபந்தத்தை யவிழ்த்து, குசாசனத் தில் உட்காரச்செய்து, தேகத்தில் பூதசுத்தியும் மந்திர நியாசங் களும் செய்து, சிஷ்யனை எழுப்பி, வேறுமண்டலத்தில் உட் காரவைத்து, கும்பத்திலிருக்கிற தளிர்களை சிரசில் வைத்து, தேவி மந்திரத்தைஜபித்து, தெய்வ ஸ்வரூபமாக விருக்கின்ற கலச ஜலங்களைக்கொண்டு அபிஷேகஞ் செய்து, ரக்ஷார்த்தமாக வர்த் தினி ஜலத்தைத் தெளித்தல் வேண்டும். பிறகு சிஷ்யன் இரண்டு வஸ்திரந்தரித்து விபூதியணிந்து குருசந்நிதியில் உட்கார வேண் டும். கருணைநிதியாகிய ஆசாரியர் தன் இருதயத்தினின்றும் பரா சக்தியை வெளிப்படச்செய்து சிஷ்யன் இருதயத்திலடைந்ததா கப் பாவித்து சிஷ்யனை கந்தபுஷ்பாதிகளால் அருச்சித்து தனக் கும் தேவிக்கும் ஐக்கியபாவமாகவெண்ணி மகாதேவி மந்திரமா கிய தேவிகாயத்திரியை சிஷ்யன் வலக்காதில் மூன்றுமுறை யுபதே சித்தல் வேண்டும். பிறகு தனது தக்ஷிண அஸ்தத்தை சிஷ்யன் சிர சில்வைத்து நூற்றெட்டுரு சிஷ்யன் ஜபிக்கும்படிச் செய்யவேண் டும். ஜபித்தபின்னர் சிஷ்யன் தேவஸ்வரூபமாயிருக்கிற ஆசாரி யரைப் பூமியில் தண்டாகாரமாக நமஸ்கரித்து வேறு சிந்தை யின்றி சர்வத்தையும் ஆசாரியார்ப்பணஞ் செய்து யாகசம்பந்த முடைய பிராமணர்களுக்கு தக்ஷிணைகொடுத்து சந்தோஷிக்கச் செய்து போஜனமுஞ் செய்வித்து சுமங்கலிகட்கும் கன்னிகைக ளுக்கும் பிரஹ்மசாரிகளுக்கும் தீனர்களுக்கும் ஆதரவு அற்ற வர்களுக்கும் தரித்திரர்களுக்கும் தன் சம்பத்துக்குத் தக்கபடி திருப்திசெய்வித்து கிருதார்த்தனாயினேனென்று நினைத்து தினம் இந்த மஹாமந்திரவை ஆராதித்து வரவேண்டும். ஓ நாரதரே! உனக்குத் தீக்ஷாவிதியை விமரிசையாகச் சொன்னேன். ஆகையால் நீ தேவி பாதாம்புஜத்தைப் பஜிக்கவேண்டியது. இதைக்காட்டி லும் பரமான தருமம் வேறுகிடையாது. வைதிகன் வேதோக்தத் திற் சொல்லியபடி உபதேசஞ் செய்யக்கடவன். தாந்திரீகன் தாந்

திரீகப்படி உபதேசஞ் செய்யக்கடவன். சாரமுள்ள இந்தத் தீக்ஷாவிதியை அந்தந்தப் பிரயோகமுள்ளவர்கள் அந்தந்தப்படி நடத்தவேண்டியது. உன்னால் கேட்கப்பட்டவை யெல்லாம் என்னால் சொல்லப்பட்டது என்று நாராயணர் நாரதருக்குக் கூற அவர் நமஸ்கரித்துத் தேவி தரிசனத்தை மனதில் நினைத்துக்கொண்டு பராம்பிகையின் பாதகமலங்களைப் பஜித்துப் பரமகதியடைந்ததாக வியாசர் ஜனமேஜயனுக்குக் கூறினார். (சு-ம். கரு.௫௨)

ஏழாம்அத்யாயம் முற்றிற்று.

உ

ஸர்வ வேதாந்த தாத்பர்ய பூம்யைநமஃ

எட்டாம் அத்யாயம்.

* கேநோபநிஷத் அர்த்தவர்நநம்.

ஜனமேஜயன் கூறுகின்றான்:— பகவானே! சர்வதர்மங்களையும் சர்வ சாஸ்திரங்களையும் அறிந்தவர்களில் சிரேஷ்டரே! சகலமான பிராஹமணர்களுக்கும் வேதத்தில் சத்தியுபாசனை சொல்லப்பட்டிருக்கிறது. மூன்று சந்திகளிலும் வேறு காலங்களிலும் சத்தியுபாசனையே செய்யப்பட்டு வருகின்றது. ஆகவே அச்சத்தியைவிட்டு எந்தக் காரணத்தால் வேறு தேவதையை யாவர் கிரகிப்பார்கள்.

சிலர் வைணவர்களாயும் சிலர் காணாபத்யர்களாயும் சிலர் மரவுரி தரித்தவர்களாயும் சிலர் திகம்பரர்களாயுமுள்ள காபாலிகர்களாயும் சிலர் பவுத்தர்களாயும் சிலர் சார்வாகர்களாயும் பிரிவுபட்டவர்களாய் வேதத்தில் சிரத்தை யில்லாதவர்களாக விருக்கின்றனர். ஓ சர்வஜ்ஞரே! மங்களத்தை விடுகிறதற்கு ஒருவருக்கும் புத்தி பூர்வகமாய் இச்சையுண்டாகாது. அப்படி யிருக்க, இவர்கள் இப்படி யிருக்கிறதற்குக் காரணமென்னை என்பதனையும், முன் கூறியுள்ள மணித்வீப வர்ணனையில் தேவியினது மகத்தானதும் சிரேஷ்டமானதுமான ஸ்தானம் எப்படிப்பட்டது? எப்படி யிருக்கிறது? என்பதனையும் சொல்லவேண்டும். ஆசாரியராயுள்ளார் எந்தவிதமான ரகசியத்தையும் சொல்லுகிறார்களாகையால் தேவரீர் என் விண்ணப்பத்துக் கிரங்கிச் சொல்லவேண்டுமென்று பிரார்த்திக்க வியாசர் கூறுகின்றார்:—

---

* கேநோப நிஷத்தின் அர்த்தவர்னனை.

ஓ ஜனமே ஜயனே! நீ கேட்டபடி எதைக் கேட்பதினால் பிராஹ்மணர்களுக்கு வேதத்தில் சிரத்தை யுண்டாகுமோ அதனையும், மணித்வீபத்திலுள்ள தேவியினுடைய ஸ்தான வைபவத்தையும் கூறுகின்றேன். சமயத்துக்கு உசிதமான கேள்வியை நன்றாய்க் கேட்டனை. நீ மிகவும் புத்தியுள்ளவனையும் வேத அபிப்பிராயத்தில் சிரத்தையுள்ளவனையும் காணப்படுகின்றாய்.

பூர்வத்தில் அசுரர்கள் மிகுந்த கர்வ முடையவர்களாய் தேவர்களோடு நூறுவருட காலமாய் நானாவிதமான அஸ்திரங்களாலும் சஸ்திரங்களாலும் விசித்திரமான மாயைகளாலும் உலகம் அழியும்படி ஆச்சரியகரமான யுத்தஞ்செய்தார்கள். அப்போது பராசத்தியின் கிருபையால் தேவர்கள் ஜயமடைந்தார்கள். அசுரர்கள் அபஜயமடைந்து பாதாளத்தை யடைந்தார்கள். : இதன்பிறகு தேவர்கள் பராசத்தியின் செயலை யறியாது தங்களுக்கு நேர்ந்த பராக்கிரமத்தை யெண்ணி நமக்கேன் ஜயமுண்டாக மாட்டாது. நமது மகிமை சர்வோத்தம மானதன்றோ! பாமரர்களாயும் பராக்கிரம மில்லாதவர்களாயு மிருக்கின்ற தைத்தியர்களெங்கே! யஸலோடு கூடினவர்களாயும் சிருஷ்டி திதி சங்காரங்கள் செய்கின்றவர்களாயும் இருக்கின்ற நாமெங்கே! பாமரர்களாகிய தைத்தியர்கதை ஒரு கதையா! என்று மோகத்தினால் ஒருவருக்கொருவர் சொல்லித் திரிந்தனர். அப்பொழுது அவர்களுக்கு அனுக்கிரகஞ்செய்ய கிருபா சம்பூரணியாகிய ஜகதம்பிகை யக்ஞரூபமாக ஆவிர்ப்பவித்தனள்.

எப்படி யென்றால், கோடிசூரியப் பிரகாச முடையதாயும் கோடி சந்திர சீதளகிரணப் பிரகாசமுடையதாயும் ஒரே சமயத்திலுண்டான கோடி மின்னற்காந்தி யுடையதாயும் கை கால் முதலிய உறுப்புக்கள் தோன்றுததாயும் இதற்குமுன் ஒருவராலுங் காணக்கூடாத சுந்தரமுடையதாயு மிருக்கின்ற தேஜஸோடுங் கூடிய ஓர் யக்ஞ உருவத்தோடு தோன்றினள்.

அப்போது தேவர்கள் இது வென்ன! இதுவென்ன!! என்று ஆச்சரிய முடையவர்களாயும் பெரிதாயும் செய்யக் கூடாததாயு மிருக்கிற இம்மாயை தானவர்களால் உண்டாகிய சேஷ்டையா? அல்லது நமக்கு அதிசயகரமாக வேறு யாவராலாவது செய்யப்பட்டதா? என்று யாவரும் ஒருங்கேகூடி ஓராலோசனை செய்த

னர். அதாவது நம்மில் யாராவது அந்த யக்ஷஸினுடைய சமீபம் போகவேண்டியது? போய் அதன் வரலாற்றை யறிந்து செய்ய வேண்டியவற்றைச் செய்ய வேண்டியது என்று தீர்மானித்துக் கொண்டு தேவேந்திரன் அக்னிதேவனைக் கூப்பிட்டு எங்களுக்கு நீ முகமாயிருப்பதால் நீ முன்னேபோய் யக்ஷஸ் யாரென்று அறிந்து கொள்வாயென்று கூற, அவ்வக்னிதேவன் உடனே விரைவாகச்சென்று யக்ஷஸின் சமீபத்திற்போய் நீ யாரென்று கேட்டான். அந்த யக்ஷஸ் அக்னிதேவனைப் பார்த்து நீயார்? உன்னிடம் என்னபல மிருக்கின்றது? என்முன்னே அவைகளைக் கூறுவாய் என்று கேட்க, அவன் நான் அக்னி ஜாத வேதஸ், என்றும், சர்வத்தையும் தகனஞ் செய்யும் சக்தியுள்ளே னென்றும் கூறினன். யக்ஷஸ் அக்னிதேவ னெதிரில் ஓர் துரும்பை எறிந்து அவனைப்பார்த்து நீ லோகத்தை யெல்லாம் கொளுத்துஞ் சத்தியுள்ளேனென்று கூறினையே இச் சிறுதுரும்பைக் கொளுத்துவையோ? என்ன, அவன் சகல பலத்தோடும் அதனைக் கொளுத்த எத்தனித்தான். எவ்வளவு எத்தனித்தும் கொளுத்த முடியாமல் நாணமுற்றுத் தேவர்களிடம் போய்ச் சேர்ந்து அவர்களுக்குத் தான் போய்வந்த காரியங்களை நன்று யறிந்து கொள்ளும்படிச் சொல்லி நமக்கு என் இந்த வீணை அகங்கார முண்டாயிற்று இதனால் ஆவது என்னென்று கூற, தேவர்கள் அவனை விட்டு வாயு தேவனைப்பார்த்து ஜகமெல்லாம் உன்னிடஞ் சேர்ந்திருக்கின்றது, உன்னசைவினால் உலகமுற்றும் இருந்துகொண் டிருக்கின்றது, எல்லா வுயிர்கட்கும் பிராண ரூபமா யிருக்கின்றாய், சர்வசக்தியையுந் தரிக்கின்றவனு யிருக்கின்றாய், ஆகையால் நீயே அந்த சிரேஷ்டமான யக்ஷஸினிடம் போய்வருவாய், உன்னைத்தவிர வேறெருவரும் அறிவதற்குச் சமர்த்தரில்லை என்று சொல்ல, வாயுதேவன் உடனே அகங்காரத்தோடும் அந்த யக்ஷஸினிடம் போயினன். யக்ஷஸ் அவனைப்பார்த்து நீயார்? உன்னிடம்யாது சக்தியிருக்கின்றது? என்முன் சொல்லுவாயென்று கேட்க, வாயுதேவன் அதிக அகங்காரத்தோடும் நான் மாதரிஸ் (வாயு) வாயிருக்கின்றேன். என்னிடத்தில் சகலத்தையும் சலிப்பிக்கச் செய்யும் வீரியமும் கிரகிக்கும் வீரியமும் இருக்கின்றன. என் சேஷ்டையினால் சகல ஜகத்தும் விகாரப் படுகிறது என்று கூற, யட்சஸ் இதோ உன்முன்னிருக்கிற இந்தத்திரணத்தை உன்னிஷ்

டப்படிச் சலிக்கச் செய்வாய். அப்படிச் செய்யாவிடில் உன்னை யனுப்பிய இந்திரனிடம் போய்ச் சேருவாயென்று சொல்ல, உடனே அந்த வாயுதேவன் சர்வசக்தியோடு கூடினவனுய் அந்தத் திரணத்தை அந்த ஸ்தானத்தினின்றும் பெயரும்படி எத்தனித்தான். அது தன்னிடமிருந்து ஒரு சிறிதும் சலிக்காமலிருப்பதைக்கண்டு கர்வமெல்லாம் அடங்கினவனுய் நாணி இந்திரனிடம் போய்ச் சேர்ந்து தனக்குக் கர்வபங்க முண்டான காரணத்தைச் சொன்னன். சொல்லவும் தேவர்களெல்லாங் கேட்டு நாம் என் வீணை கர்வங்கொண்டோம். இந்த யட்சனை யறிய நமக்குச் சாமர்த்தியமோ இல்லாமற் போயிற்று. அந்த யட்சனோ அதிக பயங்கரத்தை விளைவிப்பதாயும் ஒருவராலுங் கண்டறியாத தேஜஸையுடையதாயும் காணப்படுகிறது என்று இந்திரனைப் பார்த்துச் சொல்லி மறுபடியும் தேவர்களெல்லாம் நீ தேவராஜனைபடியால் நீயே அந்த யட்சனுடைய உண்மையை யறியவல்லவனுவாய் என்று பிரார்த்தித்தனர். உடனே இந்திரன் அந்தயட்சனைத் தூறத்தப் போயினன். பராத்பரமாகிய அது ஓடிப்போகாமல் அவனெதிரில் அதிவேகமாயோடிவந்து மறைந்துபோயிற்று.

போகவும் இந்திரன் அதிக வெட்கமடைந்து, நம்மை இந்த யட்சனு ஒருபொருளாக மதிக்காமலும் நம்மை யொன்றும் வினவாமலும் போயிற்று, நமக்குமுன்வந்த அக்னி வாயுவினிடமோ பேசிற்றுஎன்று பெருங்குறைவடைந்து கூறுகிறுன்:— நாம் தேவகூட்டத்தில் போகக்கூடாது. அவர்களிடம் இந்த அவமானத்தை என்னவென்று சொல்லுகின்றது. அவர்களிடம் அதைக் கூறுவதினும் உயிரைவிடுவதுமேலானது. எனெனில்மகான்களுக்கு மானந்தான் பெரிதான தர்மமாயுள்ளது மானங் கெடுமானுல் இறந்தவனுக்குச் சமானமாகு மல்லவா இதிற் சம்சயமில்லை என்று நிச்சயித்து கர்வத்தைவிட்டுக் கர்வபங்கஞ்செய்த அந்த யட்சனை சரணுகதி யடைந்தான். அச்சமயத்தில் ஓ இந்திரனே! நீ மாயாபீஜத்தை ஜபஞ்செய், அதனுல் சுகமடைவாய் என்று ஓர் ஆகாயவாக்குண்டாயிற்று. அதுகேட்டு லட்சவருஷம் நிராகாரனுயத்தியானத்தினுல் கண்ணை மூடிக்கொண்டு பராத்பரமாகிய மாயாபீஜத்தை ஜபஞ்செய்தான். அப்போது தற்செயலாக சித்திரைமாசம் நவமிதிதி மத்தியானத்தில் முன் தேஜோரூபமாக யட்சனுண்டான அந்த ஸ்தானத்தில் ஒரு பேரொளி உண்டாயிற்று.

அவ்வொளி, நடுவில் குமாரியாயும் அப்போது தோன்றிய யவ்வனியாயும் ஜபா புஷ்பம்போன்ற காந்தியையும் கோடி யிளஞ் சூரியர்போன்ற பிரகாசத்தையும் சிரோபூஷணமாக பாலசந்திரனையும் வஸ்திரத்தினுள்ளே பிரகாசிக்கின்ற தனத்தையும் பாசாங்குச வரதா பயங்களாக விருக்கும் அஸ்தங்களையும் மிருதுவாகிய தளிர் போன்ற மேனியையும் உடையவளாயிருப்பதுமன்றி மனோகரையாயும் பக்தர்களுக்குக் கற்பகவிருக்ஷம் போன்றவளாயும் நானவித மான ஆபரணங்களால் அலங்கரிக்கப் பட்டவளாயும் திருநேத்திர தாரியாயும் மல்லிகை மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட கூந்தலையுடையவளாயும் நான்கு வேதங்களும் வடிவங்கொண்டு நான்குதிக்கிலும் நின்று தோத்திரஞ் செய்யப் பட்டவ ளாயும் தந்த காந்திகளால் பூமியானது பத்மராகம்போல் பிரகாசிக்கச் செய்கின்றவளாயும் பிரஸந்நையாயும் புன்னகையோடு கூடிய முக முடையவளாயும் கோடி மன்மதர்கள்போல் அழகுடையவளாயும் செவந்த ஆடையுடையவளாயும் செவந்தசந்தனத்தினால் பூசப்பட்டவளாயும் சிவையாயும் ஹைமவதியாயும் சர்வ காரணங்களுக்கும் காரணியாயும் காரணங்களுதாத கருணைகரையாயும் உமாதேவி தோன்றினாள். அத்தேவியைத் தேவேந்திரன் நிறைந்த அன்புடன் தெரிசித்துக் கண்கள் ஆனந்தநீர்பொழிய சரீரம் புளகாங்கிதங்கொள்ள நமஸ்கரித்துத் துதித்து இந்த யக்ஷஸ் என்ன? எங்கிருந்துண்டாயிற்று? அதன் வரலாற்றைக் கூறவேண்டுமென்று வினவ, தேவி கூறுகின்றாள்:—ஓ இந்திரனே! அந்த யக்ஷஸ்காரணத்திற்குக் காரணமாகிய என் ஸ்வரூபம், தோஷரகிதமாயும் சர்வசாக்ஷியாயும் மாயாதிஷ்டான மாயுமுள்ள பிரஹ்ம ஸ்வரூபம். இனிச் சகலவேதங்களும் எதனுடைய பாதங்களை நமஸ்கரிக்கின்றனவோ, சகல தபசுகளும் எதைச் சொல்லுகின்றனவோ, பிரஜைகள் எந்தவஸ்துவின்மீது அன்புவைத்து பிரஹ்மசரியத்தை ஆசரிக்கின்றனரோ, அந்தப் பதத்தைச் சங்கிரகமாகச் சொல்லுகின்றேன். ஓம் என்கிற ஏகாக்ஷரம் பிரஹ்மம், அதைபோ ஹ்ரீம் சொரூபமாகவும் சொல்லுவர். இந்த இரண்டும் எனக்குப் பீஜமந்திரங்கள். முக்கியமாகிய இந்த இரண்டு பீஜஸ்வரூபமா யிருக்கின்ற நான் ஜகத்தைச் சிருஷ்டிக்கிறேன். அதில் ஒருபாகம் சச்சிதானந்த சொரூபமாகவும் மற்றொன்று மாயாபிரகிருதி எனவுஞ் சொல்லப்படும். பராசத்தியாயும் சக்திமதியாயும் ஈஸ்வரியாயும் இருக்கின்ற என்னிடத்தில் அந்த மா

யை சந்திரனிடம் சந்திரிகை எப்படி அபேதமா யிருக்கிறதோ அப்படி அபேதமாயும் சமமாயு மிருக்கிறது. ஜகத்பிரளயத்தில் என்னிடம் அபேதமாயிருக்கும் பிராணிகளுடைய கர்மங்களின் பரிபாகவசத்தால் மறுபடி அவ்யக்தமாயிருக்கிற அந்தமாயை வியக்த (பிரகாச)மாகின்றது. அந்தர்முகமாகவிருக்கின்றஅவஸ்தையாதோ அதுதான் மாயை; பகிர்முகமாயிருக்கிற மாயை யாதோ அதுதான் தமசு. அந்தத்தமசிலிருந்துசத்வமும், சிருட்டி ஆரம்பத்தில்ரஜஸும் உண்டாகின்றன. பிரமவிஷ்ணு ருத்திரர்கள் இம்முக்குணமுடையவர்கள். பிரமனுக்கு ரஜோகுணமும், விஷ்ணுமூர்த்திக்கு சத்வகுணமும், உருத்திர மூர்த்திக்குத்தமோகுணமும் அதிகரித்திருக்கும். உருத்திரர் சர்வகாரணரூபத்தையும் அடைவதற்குக் காரணமாயிருக்கிறார். பிரஹ்மா ஸ்தூலதேகமும் விஷ்ணு சூக்ஷுமதேகமும் உருத்திரர் காரண தேகமும் துரியம் நானுகவும் உள்ளேன். சமாவஸ்தையா யிருக்கின்ற தென்று எது சொல்லப் படுகிறதோ அது சர்வாந்தர்யாமியா யிருக்கின்ற நான்தான். உருவமில்லாமலிருக்கின்ற பிரஹ்மம்எதுவோ அந்தப்பிரஹ்ம ரூபமும் நானேதான். என்னுருவை நிர்க்குணம் சகுணம் என்று சொல்லப்படும். நிர்க்குணம் மாயையில்லாதது; சகுணம் மாயையோடு கூடியது. அந்த இரண்டுருவமாயிருக்கிற நான் சகல சகத்தையுஞ் சிருட்டித்து அதற்குள்பிரவேசித்துச்சீவர்களுடையகர்மங்களை அநுசரித்து எப்போதும்அவர்களைத்தூண்டிக்கொண்டிருக்கிறேன். சிருட்டிதிதிசங்காரங்களில் திரிமூர்த்திகளையும் பிரேரணைசெய்து கொண்டிருக்கிறேன், வாயுசலிப்பதும், சூரியன்சஞ்சரிப்பதும், இந்திரன்அக்கினியமன் முதலிய நீங்கள் சஞ்சரிப்பதும் எனது ஆஞ்ஞையினால்தான். என் அநுக்கிரகத்தால் நீங்கள் சயத்தையடைந்தீர்கள். மரத்திலுறச்செய்யப்பட்ட பதுமை போன்றவர்களாகலான் உங்களை நான் ஆட்டிவைக்கின்றேன். அவ்வவர்களின் கர்மங்களையநுசரித்து சர்வத்தையுஞ்செய்யும் சுந்தரியான். ஆதலால் சிலசமயம் உங்களுக்கு ஜயமும், சிலசமயம் அசுரர்களுக்கு ஜயமும் உண்டாகும் வண்ணம் செய்கின்றேன். சர்வரூபமா யிருக்கின்ற என்னை நீங்கள் கர்வத்தினால் மறந்து கரையில்லாத மோகமடைந்து அகங்காரத்தினுற் சூழப்பட்டவராயினீர். உங்களுக்கு அநுக்கிரகஞ் செய்வதற்காக உங்களுடைய தேகத்தினின்றும் வெளிப்பட்டிருக்கிற சிரேஷ்டமான தேசஸ் என்தேசஸ். ஆகையால் உங்களுக்குண்

டாயிருக்குங் கர்வத்தை விட்டு சச்சிதானந்த ரூபிணியா யிருக்கி ன்ற என்னைச் சரணமடைவீர்கள் என்றுகூறினள்.

மூலப் பிரகிருதியாயும் ஈஸ்வரியாயு மிருக்கிற மகாதேவியைத் தேவர்கள் பக்தியோடு துதிக்க அப்போதே மறைந்தனள். பிறகு பகவதியினுடைய பராத்பரமாகிய பாததாமரையை எல்லாத்தேவர் களும் அகங்காரமற்று ஆராதித்து மூன்றுகாலங்களிலும் காயத்தி ரிஜபத்தையே செய்து யக்ஞ பாகங்களைக் கொடுத்து வழிபட்டு வந் தனர். இப்படி கிருதயுகத்தில் சகல பிராமணர்களும் காயத்திரிமந் திரம் பிரணவம் ஹ்ருல்லேகாமந்திர சபம் ஆகிய மந்திர ஜபங்களி ல் மிகுந்த ஆசையுடையவர்களாக விருந்தார்கள். வேதத்தில் சில விடங்களில் விஷ்ணு வுபாசனை நித்தியமாகச் சொல்லப்பட்டிருப்பி னும் அது நித்தியமல்ல. ஆகையால் அந்த விஷ்ணு வுபாசனையும் அந்தத்தீக்ஷையும் சிவோபாசனையும் இல்லாதவர்களா யிருந்தாலு மிருக்கலாம். சகல வேதங்களினாலும் காயத்திரி யுபாசனை நித்திய மாகச் சொல்லப்பட்டிருக்கிற படியால் அவ்வுபசரணை யில்லாமல் இருக்கக்கூடாது. இல்லாத அந்தப் பிராமணனுக்கு எந்தப் பிரகா ரத்தினாலும் அதோகதி யுண்டாகிறது. பிராமணனுக்குக் காயத்தி ரியினால் கிருத கிருத்திய முண்டாகிறது. அவனுக்கு காயத்திரிய பேக்ஷைதவிர வேறு அபேக்ஷை வேண்டியதில்லை. அதை ஜபிக்கிற பிராமணன் மோக்ஷமடைகிறான். உலகத்தில் தர்மத்தைப் பரிபாலி க்க வந்த மநுவானவர் அந்தணர்கள் வேறு கிருத்தியங்களைச் செ ய்தாலும் செய்யாவிட்டாலும் காயத்திரி யுபாசனை மாத்திரம்விடா மல் செய்யவேண்டிய தென்றும் அதைவிட்டு வேறு உபாசனைசெய் கின்றவன் நரகடைவானென்றுங்கூறியி ருக்கின்றனர். ஆதலால் ஓரா சனே! முதல் யுகத்தில் காயத்திரி ஜபபராயிருக்கின்ற பிராமண சிரேஷ்டர்கள் தேவி பதாம்புசத்தில் பக்தியுள்ளவர்களா யிருந்தா ர்களென் றறிவாய் என்றனர். (சு-ம்-கூ உ)

எட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

ஓ

ஸதஸதாஸ்ரயாயைநமஃ

ஒன்பதாம் அத்தியாயம்.

* பிராக்மணனும் கவுதமசாபம்.

வியாசர் கூறுகின்றார்:—அரசனே! காயத்திரி ஜபவிசேடத்தை கவுதம முனிவர் சரித்திரத்தால் தெரிவிக்கிறேன் கேட்பாயாக. ஓர்காலத்தில்பிராணிகளுடைய கர்மவசத்தால்பன்னிரண்டுவருடம் இந்திரன் மழைபெய்விக்காமலிருக்க அதனால் மனிதர்கள் சாகும் படியான துர்ப்பிக்ஷ முண்டாகி பிணங்களுடைய கணக்கை எண்ணமுடியாமற் போய்விட்டது. சிலர் பசியினால் குதிரைகளையும் பன்றிகளையும் சிலர் மனித சபங்களையும் புசித்துவந்தனர். சிசுக்களைத் தாயும் ஸ்திரீகளைப் புருஷர்களும் சாப்பிட்டனர். இவ்வாறு பிராணிகளெல்லாம் பசியினால் பீடிக்கப்பட்டு உண்ணுதனவெல்லாம் உண்ண, அப்பொழுது பிராமணர்களில் அனேகர் கூடி நாமனைவரும் கவுதமரிடம் போவோம் அவர்தபசையே தனமாகவுடையவர் காயத்திரி ஜபத்தை மறவாதவர் அவர் நமது வறுமையைப் போக்குவார் அவருடைய ஆச்சிரமம் சுபிக்ஷமாயிருக்கிறதென்று அநேகர் போயிருக்கின்றனர். ஆனபடியால் அவருடையஆச்ரமத்தை யடைவோம் என்று ஆலோசித்து, குடும்பிகளாயும் அக்னிஹோத்திரத்தோடும் பசுமாட்டை யோட்டிக்கொண்டு வேலைக்காரர்களோடும் அவ்வாச்சிரமத்தினுடைய நான்கு திக்கின்வழியாக வந்துசேர்ந்தனர். அக்கூட்டங்களைக் கவுதமர் பார்த்து நமஸ்கரித்து ஆசனங்கொடுத்து அர்க்கியபாத்திய ஆசமனாதிகளால் பூஜித்து குசல ப்ரஸ்னம் வினவி நீங்களனைவரும் இங்குவந்தகாரணம் யாதோவென்று கேட்டனர். அவ்வந்தணர்கள் அடங்காத துக்கத்தோடும் தங்களுடைய விருத்தாந்தங்களைத் தனித்தனியே சொன்னார்கள். கவுதமர் மிகவும் இரக்கமுடையவராய் துக்கமடைந்திருக்கிற அந்தப்பிராமணர்களைப்பார்த்து அபயங்கொடுத்து கூறுகின்றனர்:—ஓ பிராமணர்களே! இவ்வாச்சிரமம் எப்போதும் உங்களுடையதுதான். நான் உங்களுடைய அடியவனாயிருக்கின்றேன்.

* அந்தணர்களுக்கு கவுதமர் இடுஞ் சாபம்.

அவ்வா றிருக்கும்பொழுது உங்களுக்கு என்னசிந்தனையிருக்கின்ற
து? நான் தன்யனுய்விட்டேன். நீங்களெல்லோரும் மஹாதபோதனர்
கள். உங்களுடைய தெரிசனமாத்திரத்தில் தீயவொழுக்கங்களெல்
லாமரிய நல்லொழுக்கங்களாய் விடுகின்றன. உங்கள் பாததூளியி
னல் என்கிருகம் சுத்தமாய்விட்டது. உங்கள் அநுக்கிரகத்தால்
என்னைவிட தன்யராயுள்ளவர் யாவர்! நீங்கள் யாவரும் சந்தி ஜபம்
பாராயண முதலியவற்றைச் செய்துகொண்டு சுகமாயிருங்களென்
று சொல்லினர். பிறகு காயத்திரிதேவியைத் தியானித்து மிக்க பக்
தியோடு வணங்கிய கழுத்துடையவராய் வந்தித்துத் துதிக்கின்ற
னர். ஹேதேவி! வித்யே! ஹே வேதமாதாவே! பராத்பரே! வ்யாகிரு
திமுதலிய மகாமந்திரரூபியே! பிரணவரூபிணியே! சமாஸவஸ்த
ரூபிணியே! ஹ்ரீங்காரரூபிணியே! சுவாஹா சுவதாரூபிணியே! சக
லார்த்தத்தையுங் கொடுக்கின்ற வுன்னைநமஸ்கரிக்கின்றேன். பக்தர்க
ளுக்குக் கற்பகவிருக்ஷம்போலும் அவஸ்தாத்ரயங்களுக்கு சாக்ஷியா
யும் துரீயாதீதஸ்வரூபிணியாயும் சச்சிதானந்த ரூபிணியாயும் சகல
வுபநிஷத்துக்களாலும் அறியத்தகுந்தவளாயும் சூரியமண்டலவாசி
னியாயும் பிராதக்காலத்தில்சிவந்தநிறமுள்ள பாலையாயும் மத்யான
காலத்தில் சிறந்தயவ்வனையாயும் சாயங்காலத்தில்கறுப்புநிறமுள்ள
விருத்தையாயு மிருக்கின்ற வுன்னை நித்தியம் நமஸ்கரிக்கின்றேன்.
சர்வப்பிராணிகளது ஞானேதயத்துக்கு அரணியா யிருப்பவளே!
பரமேஸ்வரியே! நீ எங்களாலுண்டாகும் அபராதத்தை க்ஷமிக்க
வேண்டும் என்று பிரார்த்தித்தனர். ஜகன்மாதாவும் பரமகலாரூபி
யாயு மிருக்கின்ற காயத்திரிதேவி பிரத்யக்ஷமாய் தெரிசனந்தந்து,
எதனல் யாவரையும் ரக்ஷிக்கப்படுமோ அப்படிப்பட்ட சர்வபோ
ஷண பாத்திரத்தைக்கொடுத்து, ஓ கவுதமா! நீ எதனை விரும்பு
கின்றனையோ அவைகளை யெல்லாம் இப்பாத்திரங் கொடுக்கும், நீ
பெற்றுக்கொள்ளென்று கூறி மறைந்துபோயினள்.

பின்னர் பர்வதத்துக்குச் சமமாக அன்னராசிகளும் அறுசுவை
பதார்த்தங்களும் திவ்வியமான பூஷணங்களும் பட்டுகளும்வஸ்திரங்
களும் யக்ஞத்துக்குரிய திரவியங்களும் பாத்திரங்களும் இவைபோ
லும் கவுதமமுனிவரால் வேண்டப்படுவன வெல்லாமும் அப்பாத்
திரத்திலிருந் துண்டாயிற்று. முனிவர் கண்டு மகிழ்ந்து எல்லாப்பி
ராமணர்களையும் வரவழைத்து அவைகளை யெல்லாங் கொடுத்த
னர். மறுபடியும் அப்பாத்திரத்தி லிருந்து பசு எருமை ஆடு மூத

லியவைகளும் அவைகட்கு ஆகாரமான அநேகவித புற்களும் யக்ஞத்துக்குரிய கிருச்சவமுதலிய சம்பாரங்களும் திரிலோகத்தும் எந்தெந்த வஸ்துக்களு சுந்தர முள்ளனவாகக் காணப் படுகின்றனவோ அவைகளெல்லாமும்ஊண்டாக அவைகளையும் முனிவர்கொடுக்கப்பெற்றுக்கொண்டு அந்தணர்கள் மிக்கசந்துஷ்டர்களாய் யக்ஞஞ் செய்ய ஆரம்பித்தனர்.

ஓ அரசனே! அந்தவிடத்தைப் பார்க்கும்போது சுவர்க்கத்துக்குச் சமானமாகப் பிரகாசித்தது. பிராமணர்களும் பிராமணஸ்திரீகளும் வஸ்திராதி பூஷணங்களாலும் சந்தனகி; சுகந்தபுஷ்பங்களாலும் அமரரைப்போலும் அப்சர ஸ்திரீகளைப் போலுங் காணப்பட்டனர். இவ்வாறு கௌதமர் ஆச்சிரமம் நித்யோத்ஸவத்தோடு கூடினதாயும் சிறிதும் ரோகமுதலிய பயமற்றதாயும் அசுரபயம் சிறிதும் அணுகாததாயும் நான்குபக்கமும் நூறு யோசனைதூரம் விசாலமுள்ளதாயும் பிரகாசித்தது. இவ்விதமான சிறப்பால் அந்தணர்களே யன்றி இதரமானவர்களும அங்குவர, அறிவிற் சிறந்த கௌதமர் யாவருக்கும் அபயமளித்துப் போஷித்து வந்தனர். அவ்வாச்சிரமத்தில் நடக்கும் சாஸ்திரோக்தமான அநேக யாகங்களால் தேவர்கள் சந்தோஷமடைந்து கௌதமரதுகீர்த்தியைச்சொல்லிக்கொண்டிருந்தனர். இந்திரன் தனது சபையில் மநிதர்கள் சாகும்படியான இந்தக்ஷாமகாலத்தில் அவிசு வபை முதலானவையுண்டாதல் துர்லபமாயிருக்க அவையெல்லாம் அளவில்லாமலுண்டாகின்றன. இங்குள்ள நமது கற்பகவிருக்ஷம் நம்முடைய மநோரதத்தைப் பூர்த்திசெய்கின்றது என்று சொல்லிக் கொண்டிருந்தனன். இவ்வாறு இந்திராதி தேவர்களால் போற்றத்தக்கவரா யிருந்தும் கௌதமர் சிறிதும் அகங்காரமின்றிப் பன்னிரண்டுவருடம்முநிகணங்களையெல்லாந் புத்திரர்களைப்போல் காத்துவந்தனர்.

இதுவுமன்றிச் சகல முநிசிரேஷ்டர்களும் அந்தந்த விடங்களில் காயத்திரி தேவியாகிய ஜகதம்பிகையைப் பூசிக்க முக்கியமான விடங்களை யேற்படுத்தினர். அவ்விடங்களில் இன்னும் பக்தியோடு புரஸ்சரணைசெய்யும் பிராமணர்களுக்கு தேவி காலையில் பாலையாயும் நடுப்பகலில் யுவதியாயும் மாலையில் விருத்தையாயும் தோன்றுகின்றாள். அப்படிப்பட்ட இடத்தில் மகதிஎன்னும்வீணையை மீட்டிக்கொண்டும்காயத்திரிதேவியினுடைய பரமகுணங்களைக்

கானஞ்செய்து கொண்டும் நாரதர் பரிசுத்தாத்மாக்களாகிய ருஷிகளுடைய சபாமத்தியில் வந்துட்கார்ந்தனர். அப்போது கௌதமர் முதலியோர் சாந்தராகிய அவரைப் பூஜித்தார்கள். நாரதரும் கௌதமருடைய கீர்த்தியை யெடுத்துச்சொல்ல ஆரம்பித்து, ஓ பிரம்ஹருஷியே! தேவசபையில் தேவேந்திரன் நீர் ருஷிகளைப் போஷிப்பதனு லுண்டாகிய கீர்த்தியைச் சொல்ல அதை நான்கேட்டு உம்மைப்பார்க்கவந்தேன், ஹேமுநிஸ்ரேஷ்டரே! ஜகதம்பிகையின் அதுக்கிரகத்தால்தன்யாராயிருக்கின்றீரென்று கூறி, முன்சொன்னகாயத்திரி ஸ்தானத்தைச் சேர்ந்து பிரீதியினால் விகசித்தியிருக்கும்நேத்திரங்களை யுடையவராய் ஜகதம்பிகையைப் பார்த்து விதிப்படிதுதித்து சுவர்க்கம்போய்ச் சேர்ந்தனர்.

பிறகு கௌதமரால் போஷிக்கப்படும் பிராமணர்களெல்லாம் கௌதமருடைய உத்கரஷத்தைக் கேள்விப்பட்டு அசூயை (பொறுமை)யினால் கர்வமடைந்து எவ்விதஞ்செய்தால் இவரது கீர்த்தி போய்விடுமோ அவ்விதஞ் செய்யவேண்டுமென்று எத்தனித்திருக்கும்போது பூமியிலெங்கும்மழைபொழிய ஆரம்பித்தது. எல்லாத் தேசங்களிலும் சுபிக்ஷமுண்டாயிற்று. அதை அவ்வந்தணர்கள்கேட்டு கவுதமரைக் சபிக்கத்தனித்தார்கள். அந்தோ! இத்தப்பிராமணர்களுடைய தாய்தந்தையர்கள் எவ்விதமான புண்ணியஞ்செய்தவர்களோ அவர்களுடைய உற்பத்தி எப்படிப்பட்டதோ? ஓஅரசனே! நானறியேன். (என்றால் இவர்களைப் பெற்றவர்களுடைய பாவத்துக் களவில்லை என்றும் அவர்களுடைய வுற்பத்திகுற்றமுடையதென்றும் கூறியதாகும்) காலமகிமையையாவரால்சொல்லமுடியும்.

ஓபூபாலனே! அவ்வந்தணர்கள் எவ்விதமாய்ச் சபிக்கத்தொடங்கினரென்றால் மிகக்கிழமாயும் பிராணன்போகும் சமயமாயுமுள்ள ஓர் மாயாரூபமான பசுவை நிர்மித்து அதனைக் கவுதமர் ஹோமஞ் செய்யுங்காலத்தில் அவ்வேமசாலையை யடையும்படிச் செய்தனர். கௌதமர் அதனை ஹும்ஹும் என்னுஞ் சப்தத்தால் தடுத்தனர். அப்பசு அவ்வொலிக்குப் பயந்து பிராணனைவிட்டது. அங்கிருந்தருஷிகளெல்லாம் துஷ்டராகிய இந்த கவுதமரால் பசுகொல்லப்பட்டதென்று கூச்சலிட்டு ஆரவாரஞ்செய்தனர். கௌதமர் ஓமதத்தைப் பூர்த்திசெய்துவிட்டுப் பசுவானது இறந்ததைக்கண்டு மிக

வும் ஆச்சரியமடைந்து சமாதிநிஷ்டராய்த் தியானஞ்செய்து பசு இறந்தகாரணத்தைச் சிந்தித்துஅறிந்துக்கொண்டு அப்போதேபிர ளயகால வருத்திரைப்போல்கோபித்துகண்செவந்துக்கூறுகிறார்:- ஹேபிராமண அதமர்களே! நீங்கள்வேதமாதாவாகிய காயத்திரியி னிடத்திலும்அதன்தியானத்திலும்ஜபத்திலும் பராமுகர்களாயிருக் கக்கடவீர். வேதத்தினிடத்தும் அதிற்கூறும்யாகங்களிடத்தும்அந் தவசனங்களிடத்தும்ஈஸ்வரனிடத்தும்ஈஸ்வரவிஷயமானசாஸ்த்ரங் களிடத்தும் மந்திரத்தினிடத்தும் அசத்புத்தி யுடையவர்களாயும் அஃதேபோல்மூலப்பிரகிருதியிடத்தும் ஸ்ரீ தேவியிடத்தும்அவர்க ள் தியானித்தினிடத்தும் கதைகளிடத்தும்நீங்கள்பராமுகமாகவிருக் கக்கடவீர். தேவிமந்திரத்தினிடத்தும் தேவிஸ்தானத்தினிடத்தும் தேவியுபாசனைகர்மத்தினிடத்தும்தேவிவுற்சவதரிசனத்திலும் தேவி நாமவுச்சாரணையிலும் தேவிபக்தனைச் சமீபிப்பதிலும் தேவிபக்தனு டைய பூசையிலும் ஈஸ்வரனுடைய வுற்சவத்திலும் தெரிசனத்தி லும் ஈஸ்வரபக்த பூசை செய்வதிலும் பஸ்ம ருத்திராக்ஷ பில்வ முதலியவைகளிலும் கிரௌதாசார ஸ்மார்த்தா சாரங்களிலும் ஜ்ஞானமார்க்கத்திலும் அத்வைதஜ்ஞானத்திலும் சாந்திதாந்தியாதி சாதனங்களிலும் நித்யகர்மாநுஷ்டானங்களிலும் அக்னிஹோத்ர முதலியவற்றைச் செய்வதிலும் வேதாத்தியயனஞ் செய்வதிலும் வேதப்பிரவசனத்திலும் கோதான முதலிய தானங்களிலும் பிதுர் ஸ்ரார்த்தாதிகளிலும் சாந்திராயணமுதலிய கிருச்சிரமபிராயச்சித் தங்களிலும் பராமுகர்களா யிருக்கக்கடவீர்கள். ஸ்ரீ தேவியைத் தவிர இதரதேவதைகளித்து பக்திசிரத்தையோடு கூடினவர்களா யும் சங்க சக்கிராங்கிதர்களாயும் இருக்கக்கடவீர். காபால தந்திர த்திலும் பௌத்தசாஸ்திரங்களிலும் பாஷண்டாசாரத்திலும் ஆச க்தியுள்ளவர்களாகக் கடவீர். பிதா தாய் மகன் உடன்பிறந்தவன் கன்னிகை பாரியை இவர்களை விற்பனை செய்யுந் தொழிலுடையவ ராவீர்கள். வேதம் தீர்த்தம் தர்மம் இவைகளை விக்ரயஞ் செய்யக் கடவீர்கள். பாஞ்சராத்திரம் காமசாஸ்திரம் காபாலிகம் பௌத் தம் இந்தமதங்களில் சிரத்தையுடையவராகக் கடவீர்கள். மாதா கன்னிகை உடன்பிறந்தார் பரஸ்திரீ இவர்களோடு புணரக்கடவீர். உங்களுடைய வம்சத்தி லுண்டாகும் ஸ்திரீ புருஷர்கள் நான்கொடு த்த சாபத்தீயால் தகிக்கப்பட்டவர்களாக உங்களைப்போலவே ஆகக்

கடவர்கள். நான் திகமாகச்சொல்லுவதனுலென்ன. மூலப்பிரகிருதி யாயும் ஈஸ்வரியாயும் சிரேஷ்டையாயுமிருக்கிற காயத்திரி உங்களிடம் கோபித்தவளாகக்கடவள். இருள்மயமாயிருக்கிறகிருகம் உங்கட்கு ஸ்தானமாக சித்திக்கக்கடவது என்றனர். இவ்வண்ணமான கொடுஞ் சாபத்தைக்கொடுத்து சலத்தைத்தொட்டு பின்னர் மிக்க ஆவலுடன் தனது பூஜாஸ்தானத்தை யடைந்து காயத்திரி தேவியைத் தெரிசித்து நமஸ்கரித்தனர். அப்போது சிரேஷ்டமாகிய தேவி சாபகிரஸ்தாளாகிய பிராஹ்மணருடைய கிருத்யத்தைப் பார்த்து புன்சிரிப்பாகச் சிரித்தனள். நாளைக்கும் அத்தேவி அங்கு சிரிப்பு புடையவளாகச் காணப்படுகிறாள். ஓ அரசனே! அத்தேவி முனி சிரேஸ்டராகிய கௌதமரைப் புன்சிரிப்புடன் பார்த்துக் கூறுகிறாள்:— பாம்புக்கு கொடுத்த பால் எப்படி விஷமாகின்றதோ அப்படி இவர் களுக்கு நீ செய்த நன்றியாயிற்று. மகாபாக்கிய சாலியாகிய ஹே கௌதமனே! மனவெப்பமொழிந்து சாந்தியடையக்கடவாய். உலகரீதி இப்படிப்பட்டது என்று கிருவாய் மலர்ந்தனர். கவுதமர் தேவியை நமஸ்கரித்துத் தன்னிடத்தை யடைந்தார். பிறகு பிராமணர்களெல்லாம் கவுதமர் சாபத்தால் தஹிக்கப்பட்டு வேதாசிகளமறந்து காயத்திரியையு மறந்தனர்.

பின்னர் இவர்களெல்லாம் எங்கங்கொண்டவர்களாய் கவுதமரைக் கண்டாகாரமாய் நமஸ்கரித்து லக்ஷையிழல் இறங்கின முகமுடையவர்களாய் வேறொரு வார்த்தையுஞ் சொல்லாமல் அழுக்கிரகிக்கவேண்டும் என்று நான்குபக்கமஞ் சூழ்ந்து பிரார்த்தித்தார்கள். கருணாசாலியாகிய கவுதமர் அவர்களைப்பார்த்து கூறுகின்றார்:— என் சொல் எப்போதும் பொய்யாது. நீங்களனைவரும் கிருஷ்ணவதாரம் வரையில் கும்பீபாகத்திலிருக்கக்கடவீர். கலியுகத்தில் உங்களுக்குச் சன்மமுண்டாகும். அப்போது நான் சொன்னவையெல்லாம் உண்மையாய்ச்செய்யத் தக்கவர்களாவீர்கள். அச்செய்கைவங்களைப்விட்டுப்போகாது சாபவிமோசனத்தில் ஆசையிருந்தால் காயத்திரியின் பாதபங்கஜத்தைச் சேவியுங்களென்று சொல்லியனுப்பினர். பிறகு இது பிராரத்தம் என்று சொல்லி கோபத்தைவிட்டு மனஞசாந்தியடைந்தனர்.

பின்னர் கவுதமர் கூறியபடியே கிரிஷ்ணவதார முடிந்து கலிகாலமுண்டான காலத்தில் சாபமடைந்தவர்களாகிய அந்தணர்களெல்லாம் கும்பீபாகத்தினின்று வெளிப்பட்டுப் பூமியிற்றோன்றி கிரி

சக்தியைவிட்டும் காயத்திரி ஜபத்தைவிட்டும் வேதத்தில் பக்தியை யிழந்தும் பாஷண்டமதத்திற் புகுந்தும் அக்னி கோத்திர முதலிய சத்கர்மங்களைக் கைவிட்டும் தேவர்களுக்கும் பிதுர்க்களுக்கும் அன்னதிகள் கொடுப்பதைக் கைவிட்டும் தருமமூலத்தை யறியாதவர்களாய் தப்த முத்திரைகளைத் தரித்தவர்களாய் மனம்போன வழியே ஆசாரங்களை யநுட்டிக்கின்றவர்களாய் காபாலிகளாயும் பௌத்தர்களாயும் கூமணுளாயும் பண்டிதர்களாயிருந்தாலும் துராசாரத்தைக் கைக்கொண்டவர்களாயும் பரஸ்திரீகளிடம் ஆசையுள்ளவர்களாயும் இருப்பவராயினர். ஓ அரசனே! அவர்கள் அப்போது செய்யும் கர்மங்களால் மறுபடி கும்பீபாகத்தை அடையப்போகிறார்கள். ஆகையால் எவ்விதத்தினாலும் நித்யமாகிய பரமேஸ்வரியுபாசனையைச் செய்யவேண்டியது. அதைவிட்டு வேறு வுபாசனை நித்யமானதன்று. சக்தியுபாசனைதான் நித்தியமானது. அஃதில்லாவிடில் கீழே வீழ்வான். இதுவரையில் அந்தணர்களுக்குத் தேவியினிடம் பக்திவராமைக்குக் காரணம் கவுதமசாபமெனக் கூறினேன். இனி பவாரணியாயும் ஆத்யையாயுமிருக்கிற புவனேஸ்வரியினுடைய மேலான ஸ்தானம் எதுவோ அந்த மணித்வீபவர்ணனையைச் சொல்லுகின்றேன் கேட்பாயாக.

ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீலாயை நமஃ

பத்தாவது அத்தியாயம்.

மணித்வீப வர்ணனம்.

வியாசர் கூறுகின்றார்:—பிரமலோகத்தின் மேற்பாகத்தில் சர்வலோகமும் இருக்கிறதென்று எது கேட்கப்பட்டதோ அதுதான் மணித்வீபமென்று சொல்லப்படும். இதிற்றான் தேவி பிரகாசிக்கின்றாள். இது வைகுண்டம் கைலாசம் கோலோகம் என்பவைகளையும் பூலோகமுதலிய எல்லாவுலகங்களையும் தன்னுட்கொண்டிருத்தலால் சர்வலோகமென்றும் தேவிதான் எப்பொழுதும் வசிப்பதற்குத் தனது சுவேச்சையாக மூலப்பிரகிருதி

யினின்றும் கற்பிக்கப்பட்டபடியினல் சர்வலோகாதிகம் என்றும் சொல்லப்படும். இதனினுஞ் சிறந்ததும் அழகான இவ்வுலகத்துக்குச் சமானமானதும் மூவுலகினும் இல்லை. பிறவித் துன்பத்தை நாசஞ்செய்கிற இந்த மணித்வீபம் திரிலோகத்துக்கும் கொடை போலிருக்கிறது. இதுவே பிரமாண்டத்துக்குச் சாயையாயும் அனேக யோசனை தூரம் அகலமுள்ளதாயும் அழகாயும் நாற்புறமும் அமிர்தசாகரத்தால் சூழப்பட்டதாயுமுள்ளது. அக்கடலானது காற்றினல் மோதும் அலைகளையுடைத்தானதாயும், இரத்னம்போற் பிரகாசிக்கின்ற மணற்பரப்பை யுடைத்தானதாயும் அநேகவித மான மச்சங்களாலும் சங்கினங்களாலும் வியாபரிக்கப்பட்டதாயும், அலைமடிந்து வீழுந்தோறும் சிதறும் திவலைகளினல் குளிர்ந்திருக் கும் நிலப்பரப்பை யுடைத்தானதாயும், அநேகமான கொடிமரங்க ளோடு கூடியுள்ள மரக்கலங்களை யுடைத்தானதாயும், நான்கு பக் கங்களினும் விருக்ஷங்களால் பொலிவுபெற்றிருக்குந் தன்மையை யுடைத்தானதாயும் உள்ளது.

அதற்கு வடக்கில் நான்கு துவாரத்தோடுங்கூடி ஏழுயோசனை உயரமுள்ள (1) இரும்பினல் அமைக்கப்பட்ட மதில் ஒன்றிருக் கின்றது. அதில் அநேக அஸ்திர சஸ்திரந் தரித்தவர்களாயும், யுக் தத்தில் சமர்த்தர்களாயும் உள்ள காவலாளிகள் வாசஞ்செய்வர். ஒவ்வொருதுவாரங்களில் எண்ணிறந்த துவாரபாலகர்களும், சேனை யினுடைய பத்தகணங்களும். ஜகதீஸ்வரியினுடைய தெரிசனர்த்தம் வருகின்றவர்களுடைய கூட்டங்களும் நெருங்கியிருப்பதோடு அவர்க ளுடைய வாகனங்களும் அணியணியாய் நெருங்கிக்கிடக்கும். விமா னங்கள் ஒன்றோடொன்று உராய்வதினல் உண்டாகும் மணிகளின் ஓசை எங்கும் பரவியிருக்கும். திசைகளெல்லாம் குதிரைகள் கனைக் கும் கணைப்பொலியாலும் அவைகளின் குளம்படியின் படபடப் பொலியாலும் காதகளெல்லாம் செவிடுபடும். ஜனமேஜயனே அந் தத் திசைகளில் கையில்பிரம்பவைத்திருக்கிறகூட்டத்தவர்கள் வா சைவரிசையாய் நிற்பார்கள். அவர்கள் அவ்வழியாய்வரும் தேவகண ங்களைத் தாங்கள் தாங்கியிருக்கும் பிரம்பினலடிக்க அவ்வடியினல் அவர்களெல்லாம் அலறும்|ஓசையும் நிறைந்திருக்கும். அந்தக்காலா கலத்தினல்இதுஇன்னவோசை இதுஇன்னசப்தமென்றறியமுடியா. இவ்வோசைகளேயன்றி இன்னும் அனேகவிதமான தவனிக

ளும் துவனித்துக்கொண்டிருக்கும். இதனால் இது இன்ன சத்த மென்றும், இது இன்ன வோசை என்றும், இது இன்ன ஒலி என் றும் ஒருவராலும் அறிதற்குக்கூடா. அந்த மார்க்கங்களில் நீர் நிறைந்திருக்கிற தடாகங்களும் இரத்தினமயமான விருக்ஷங்களும் பிரகாசிக்கும்.

அதற்குவடக்கில் வெண்கலமயமான மண்டபம் ஒன்றுண்டு. அதைச்சூழ்ந்து ஆகாயத்தை யளாவியிருக்கும் கோபுரங்களோடு மகத்தான (2) வெண்கலம் பிரகாரம் ஒன்றுளது. அதுமுன்சொன்ன பிரகாரத்திலும் நூறுமடங்கு அதிகமான காந்தியோடுபிரகாசிக்கும். அங்கு உலகில் எவ்வளவு விருக்ஷசாதிகளுண்டோ அவ்வளவும் எப் போதும் நறுமணங்கமழும் புஷ்பம் தளிர் இவைகளோடு கூடினதா யிருக்கும். பலா மகிழம் வெள்ளிலோத்தி செம்பாலை கரணிகாரம் கோங்கு அசோகு தேவதாரு முதலிய விருக்ஷசாதிகளுடைய வனங் களும் உபவனங்களும் இவ்வனங்களோடு பிணினியை யுடைய மதத்தவிருக்ஷங்களும் அநேக தடாகங்களும் அங்குசூழ்ந்திருக்கும். மேலேசொல்லிய அந்த வனங்களில் ஆறு ருதுக்களும் உண்டாக வேண்டியபலன்கள் எவை எவையோ அவைகளெல்லாம் தவறாது எப்போதும் உண்டாகும். குயிலோசைகளாலும் வண்டுகளுடைய ரீங்கார சப்தங்களாலும் அநேக பக்ஷிகளுடைய சஞ்சாரங்களி னும் அநேகவிதமான ரசங்கள் நதிகளாய்ப்பெருகி வருவதினாலும் புரு கிளி அன்னம் இவைகளுடைய ரக்ஷைகளின் அசைவினால்உண் டாகும் காற்றினால் அசைகிற விருக்ஷங்களினாலும் அவ்விருக்ஷங்க ளின் சுகந்தத்தைக் கவர்ந்துவருகிற காற்றினாலும் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருக்கிற அநேக பெண்மான்களாலும் நிருத்தஞ் செய் கின்ற மயில்கூட்டங்களின் சுகமான கேகா சப்தங்களினாலும் சோபித மாப்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கும்.

அதற்குவடக்கில் சதுராகாரமாகவும் எழுயோசனையுயரமுள்ள தாகவும் ஒரு (3) தாம்பிரபிரகாரமிருக்கின்றது. அது பொன் போ ன்ற மலர் இலை இவைகளால் பிரகாசிக்கிறதாயும் பத்து யோசனதூரம் வியாபரிக்கப்பட்ட வாசனையுடைத்தானதாயும் உள்ள கற்பகவிரு க்ஷங்களால் சூழப்பெற்றது. அவ்விடத்தில் எப்போதும் வசந்தரு துவானவன் புஷ்பசிம்ஹாசனத்தில்உட்கார்ந்து புஷ்பக்கொடைநிழல்செய்ய புஷ்ப பூஷணங்களினால் அலங்கரிக்கப்பட்டு புஷ்பங்களினின்றும் பெருகாநின்ற தேன்வெள்ளத்தினால் சூழ்ந்கின்றகண்களோடிருப்பன்

அவனோடு அவனுடைய மது மாதா என்னும் ஸ்திரீகளிருவர் புன்சிரிப்புடன் கிரீடித்துக்கொண்டிருப்பர். அங்கு கானஞ்செய்யும் கந்தர்வர்கள் தங்கள் ஸ்திரீகளுடன் நிறைந்திருப்பர். கோகிலங்களுடைய சப்தங்கள் நிறைந்திருக்கும். வசந்தகாலவுல்லாசத்தை அவரும் காமிகளுக்கு மனோரதத்தைவிருத்திசெய்யும்.

அதற்கு வடக்கில் ஏழுயோசனதூரமுள்ள (4) சுயப்பிரகாரம் ஒன்றிருக்கின்றது. அது சாலைகள்தோறும் பத்துயோசனதூரம் வாசனைவீசும் சந்தன விருக்ஷங்களையும் பொன்போல் பிரகாசிக்கின்றதாயும் எப்போதும் மலர்ந்திருக்கும் மலர்களும் அமிர்தம் போன்ற ரசங்களும் மதுரமுள்ள பலன்களுமுள்ள கற்பகவிருக்ஷங்களையு முடையது. அவ்வனத்தில் கிரீஷ்மருது நாயகன் சுக்ரஸ்ரீ சுகிஸ்ரீ என்னும் மனைவிகளுடன் சுகித்திருப்பன். அங்கு சகலஜனங்களும் தாப நிவிர்த்தியின் பொருட்டுத் தங்கியிருப்பர். வேதங்களையறிந்த சித்தர்களிருப்பர். திவ்யமான சந்தனபுஷ்பமணிந்த அநேக ஸ்திரீகள் கையில் விசிறியுடையவர்களாகவிருப்பர். இவரொழிந்த அநேகர் கூட்டங்கூட்டமாக சீதளமான ஜலத்தின் குளிர்ச்சியை விரும்பி வந்திருப்பர்.

அதற்குவடக்கில் ஏழுயோசனையுயரமுள்ள (5) பித்தளை பிராகார மொன்றுண்டு. அது அரிசந்தனவிருக்ஷங்களாலும் புதியதளிர்களுடைய விருக்ஷங்களாலும் பசிய புற்களாலும் நிறையப்பெற்றும் நதிதங்களுடைய பிரவாகங்களையும் ஆசையுடையவனுடைய மனம் போல் கலங்கப்பெற்ற சரசுகளையும் தேவியினுடைய வுபாசனை கர்மத்தைச்செய்யும் சித்தர்களுமதேவர்களும் வசிக்கும் சிறந்த இடங்களையும் உடைத்தாயுள்ளது. தேவியின்பொருட்டுத் தடாகங்கள் கிணறுகள்முதலிய தருமங்களைச் செய்தவர்கள் தங்கள்ஸ்திரீகளோடு இருக்கப்பெற்றுள்ளது. அந்தப்பிராகாரத்தில் மேகவாகனனெனிய வருஷருது என்னும் நாயகன் வசிப்பன். அவனுக்கு நேத்திரம்-மின்னல், கவசம்-மேகம், சப்தம்-இடி, வில்-இந்திரதனுசு, சேனைகள்-வருஷதாரைகளாகியகணங்கள். ஸ்திரீகள்-நபஸ்ரீ நபஸ்ரீஸ்வரஸ் யாரஸ்யமாலினிஅம்பா அதுலா அநிரத்திநி அப்ரமந்தீமேகயந்திகா வருஷயந்தீ சிபுணிகா வாரிதாரா என்று சொல்லப்பட்ட பன்னிரண்டுசக்திகள்.

அதற்கடுத்தில் ஏழுயோசன உயரமுள்ள (6) பஞ்சலோகத்தால் நிர்மிக்கப்பட்ட ஒருபிராகாரம் உள்ளது. அதன் மத்தியில் மந்திரசாலை ஒன்றுளது. அது புஷ்பங்களாலும் கொடிகளாலும் தளிர்களா

லும்விளங்கிக்கொண்டிருக்கும். அங்குஅநேகவிதமானசித்துக்களில் வல்லசித்தர்கள் பரிவாரங்களோடும் ஸ்திரீகளோடும் வசிப்பர். அதற்கு நாயகன் சாத்ருது. அவனுக்கு இலக்ஷ்மி ஊர்ஜலக்ஷ்மி என்னும் இரண்டு மனைவிகள்.

அதற்குமுன் பெரிய கொடிமுடிகளோடுகூடிய (7) ஒருவெள்ளிப் பிராகாரம் ஏழுயோசனைபுரத்தோடிருக்கின்றது. அதன் மத்தியில் பூங்கொத்துகளோடுகூடிய பாரிஜாத விருக்ஷங்கள் இரண்டு வரிசைகளிலும் இருக்கும். அவைகள் அங்கு தேவியினது தியானுஷ்டிகர்மங்களைச் செய்கின்றவர்களைச் சந்தோஷிக்கச் செய்யும். அதற்கு அதிபதி ஏமந்தருது. அவன் சகல கணத்தோடும் ஆயுதத்தோடுங்கூடிக் கொண்டு காமிகளை ரமிக்கச்செய்து கொண்டிருப்பன். அவனுக்கு சகஸ்ரீ சகஸ்யஸ்ரீ என்னும் இரண்டு மனைவிகள். அங்கு தேவிவிரதத்தைச்செய்த சித்தர்கள் வசிப்பர்.

அதற்குமுன் ஏழுயோசனை உயரமுள்ள உருக்கிவார்த்த (8) பொன்பிராகாரம் ஒன்றுளது. அதனடுவில் புஷ்பங்களாலும் தளிர்களாலும் நிறைந்த கதம்பவனங்கள் சூழ்ந்திருக்கும். அவ்வனத்தின் தேன்ஆயிரந்தாரையாய்ப்பெருக்கெடுத்தோடும். அதைப்புசிக்கின்றவர்கள் தேவியின் நிஜானந்தத்தை அனுபவித்துக் கொண்டிருப்பர். அதற்கு நாயகனாகிய சிசிருது தபஸ்ரீ தபஸ்ஸ்ரீ என்னும் மனைவியர்களோடிருப்பன் அங்கு தேவி விரதத்தைச் செய்கின்ற சித்தர்கள் நானாவித போகங்களினுலுண்டாகும் மஹானந்தத்தையுடையவர்களாய் ஸ்திரீகளோடும் பரிவாரங்களோடும் கூடியிருப்பர். அதற்குமுன் ஏழுயோசனையுயரத்திலுள்ளபுஷ்பராகமயமான (9) பிராகாரம் ஒன்றிருக்கின்றது. அங்குள்ள பூமியும் வனங்களும் உபவனங்களும் சோலைகளிலுள்ள ரத்னவிருக்ஷங்களும் மதில்களும்புஷ்பராகமயமாகவே பிரகாசித்தும் பக்ஷிகள் ஜலங்கள் மண்டபங்கள் ஸ்தம்பங்கள் சரசுகள் சரசுகளிலுள்ள கமலங்கள் முதலியனவும் ரத்னமயமாகவே யிருப்பதால் ரத்னசாலையென்று பெயர்பெற்று விளங்கும். இது முன்சொன்ன பிராகாரங்களைக்காட்டிலும் தேஜசினுல் லக்ஷம்பங்கு அதிகமாய்ப் பிரகாசிக்கும். ஒவ்வொரு பிரமாண்டத்திலுள்ள திக்பாலர்களும் அங்குள்ள திக்பாலகர்களும் தங்கள் தங்கள் ஆயுதங்களுடன் அங்கு வசித்துக்கொண்டிருப்பர். அதற்குக் கிழக்கில் அமராவதி என்னும் ஒருபட்டணம் மிகவும் உன்னதமாய் நானாவிதமான உபவனங்களோடும் பிரகாசித்துக்கொண்டிருக்கும்.

அந்தப் பிரகாசம் சுவர்க்கலோக காந்தியிலு மேம்பட்டிருக்கும். அவ்விடத்தில் ஆயிரங் கண்களுடையவனுயும் ஐராவதமூடனுயும் வஜ்ராஹஸ்தனுயும் தேவசேனைகளாற் சூழப்பட்டவனுயும் பிரதாபு வரனுயுமுள்ள தேவேந்திரன் தேவஸ்திரீகளோடும் இந்திராணியோ டுங் கூடிப் பிரகாசித்துக்கொண்டிருப்பன். அக்னிகோணத்தில் அக் னிக்குச் சமானமான வன்னியபுரி என்னும் ஒரு பட்டணம் உண்டு. அங்கு அக்னி ஸ்வஹா சுவதா என்னும் இரண்டு மனைவிகளோடும் தனக்குரிய வாகனம் பூஷணுதிகளோடும் கணங்களோடும் கூடினவ னுய்ப் பிரகாசித்துக்கொண்டிருப்பன். யமதிக்கில் யமபுரி என்று ஒருபுரியுண்டு. அதில் சூரியன்மகனுகிய யமன் தன் பத்தினியுடன் சித்ரகுப்தர் முதலான படர்களுடன் கூடினவனு யிருப்பன். நிருதிதிக்கில் நைருதி என்பவன் ராக்ஷஸர்களோடும் தன்பத்னியோ டும் கட்கதாரியாய்வசிப்பன். வருணதிக்கில் வருணன்பாசதாரியாய் பிரதாபவானுய் மச்சாரூடனுய் மதுவினுல் மயங்கினவனுய் சமுத்தி ரத்தினுண்டாகும் சங்குமுதலிய வஸ்துக்களோடு கூடினவனுய் தன் சக்தியுடன் வசித்துக்கொண்டிருப்பன். வாயுகோணத்தில் வாயு வாயுவைப்பகுதிக்கிற யோகிகளோடுகூடினவனுய் கொடியைக் கையில் தரித்தவனுய் பரந்த கண்களை யுடையவனுய்மான்வாகனமுடை யவனுய் மருத்தகணங்களோடு கூடியவனுய் தன்பத்தினியோடுகூடி யிருப்பான். வடதிசையில் யக்ஷலோகத்தில் யக்ஷாதிபதியாகிய குபேரன் விருத்தி ருத்தி முதலான சக்திகளுடனும் நவநிதிகளுட னும் பெருத்த வயறுடனும் தனத்துக்கு நாயகனுய் மணிபத்திரன் பூர்ணபத்ரன் மணிமான் மணிகந்தரன் மணிபூஷணன் மணிஸ்ருக்வி மணிகள் முகதாருகன் இவர்கள்முதலிய யக்ஷசேனுதி பதிகளோடு கூடினவனுய் நிசசக்தியுடன் வசிப்பன். ஈசானகோணத்தில் விலை யில்லாத ரத்னங்களால் செய்யப்பட்ட மஹாத்புதத்தோடு கூடிய ருத்ரலோக மொன்றுண்டு. அதில் ஈசானதிக்பதி என்றும் ஈசான னென்றும் பெயருள்ள உருத்திர ரிருப்பர். அவர் கோபமுள்ளவரா யும் பிரகாசித்துக்கொண்டிருக்கிற நேத்திரமுடையவராயும் நாணே றிட்ட தனுசையுங் பாணத்தையும் கையிலுடையவராயும் சூலாயு தத்தைத் தரித்தவராயும் விகாரமான முகமும் அக்கினியைக்கக்கும் முகமும் மூன்று நேத்திரமும் பத்துக்கண்டமும் நாறுகரமும் ஆயிரம்புஜமும் பத்துப் பாதங்களும் உடையவராயும் தனக்குச்

சமானராயுள்ள உக்கிரமூர்த்திகளாய் அந்தரிஷத்திலும் பூமியிலும் சஞ்சரிக்கிற உருத்திரகூட்டங்களும் உருத்திராத்தியாயத்தில் எந்த உருத்திரர்களைச் சொல்லப்பட்டிருக்கிறதோ அவர்களும் கம்மைச் சூழ்ந்திருக்கும் கணங்களாகப் படைத்தவராயும் கோடிருத்ராணி களோடு கூடியிருக்கும் பத்திரகாளிமுதலிய மாத்ருகா கணங்களா லும் அதிகவிதமான சக்திகளும் கூடியிருக்கிற டாமர்யாதிகணங் களாலும் வீரபத்திரர் சகிதமான மஹாருத்ரர்களாலுஞ் சூழப் பட்டவராயும் சிரமாலிதரித்தவராயும் நாகத்தைக் கங்கணமாக வுடையவராயும் நாகத்தினால் சுற்றிய கண்டமுடையவராயும் புலித் தோலை யுடுத்தினவராயும் யானைத்தோலை உத்தரீயமாக வுடையவரா யும் மஹாஸ்மசானபஸ்மத்தை அங்கத்தில் பூசிக்கொண்டவராயும் பிரமதகணங்களால் சூழப்பட்டவராயும் திக்குகள் செவிடுபடும்படி யான சத்தத்தையுடைய மானுயுடையவராயும் ஆகாயம் பயப்படும் படி அட்டகாசஞ்செய்கின்றவராயும் பூதங்களோடு கூடினவராயும் பூதங்களுக்கு ஆஸ்ரயராயும் மகேஸ்வரராயுமிருப்பர். (சு-ம். 100)

பத்தாம் அத்தியாயம் முற்றிற்று.

ஸச்சிதானந்தாயை நம:

பதினேராம் அத்தியாயம்.

மணித்வீபவர்ணம்.

வியாசர் கூறுகின்றார்:—ஓ ஜனமேஜயனே! புஷ்பராகமயமான இந்தப் பிரகாசத்துக்கு முன் பத்தியோஜனை உயரமுள்ளதாயும் கோபுரத்துவாரங்களோடு கூடினதாயும் குங்குமம்போற் செவந்த நிறமுள்ளதாயுமிருக்கிற (10) பத்மராகப்பிராகார மொன்றிருக்கின் றது. அதில் பத்மராக ஸ்தம்பங்களோடு கூடியிருக்கும் அகேக மண்டபங்கள் இருக்கின்றன. அவைகளில் அறுபத்து நான்கு கலைகள் சக்திரூபமாக வீற்றிருப்பர். எவ்வாறெனில் நாஞ்விதமான ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு திவ்யாபரணங்களால் அலங்கரிக் கப்பட்டு பத்மராகங்களால் பிரகாசிக்கும் ஒவ்வொரு லோகங்களை

யுடையவர்களாய் அந்தந்தலோகங்களுக்கு அதிபதிகளாய் அங்கங் குள்ள பிரஜைகளோடும் வாகனங்களோடுமிருப்பர். அவர்களுடைய நாமங்கள் யாதெனின்! பிங்களாக்ஷி விசாலாக்ஷி சமர்த்தி வர்த்தி சிரத்தா சுவாஹா சுவதா அபிக்யா மாயா சம்ஜ்ஞா வசுந்தரா திரி லோகதாத்ரீ சாவித்ரீ காயத்ரீ திரிதசேச்வரீ அரூபா பகுரூபா ஸ்கந்தமாதா அச்சுதப்ரியா விமலா அமலா அருணி ஆருணி பிரு கிருதி விகுர்த்தி: ஸ்ருஷ்டி ஸ்திதி: சம்ஹ்ருதி: சந்தியா மாதா சதி அம்சி மர்த்திகா வச்சரிகா வரா தேவமாதா பகவதீ தேவகீ கமலா சஞ் த்ரிமுகீ சப்தமுகீ சுராசுரவிமர்த்தனீ லம்போஷ்டி ஊர்த்வ கேசீ பகுசிருஷா வ்ருகோதரீ ரதரேகா சசிரேகா ககனவேகா பவனவேகா மதனதுரா அனங்கமதனு அனங்கமேகலா அனங்க குசுமா விச்வரூபா சுராதிகா க்ஷயங்கரி அக்ஷோப்யா சத்யவாதினீ பகுரூபா சுசிவ்ருதா உதரவாசிநீ என்று சொல்லப்பட்டவைகளே யாம். இவ்வறுபத்துநான்கு சக்திகளும் பயங்கரமாய் ஜ்வலிக் கின்ற நாக்கும் முகமும் உடையவர்களாய் மேனிக்கிய செம்பட்ட மயிருடையவர்களாய் அக்னியைக் கக்குகின்றவர்களாய் சகலமான ஜலத்தையும் குடித்துவிடுவோமா அக்னியைச் சம்ஹரிப்போமா காற்றை ஸ்தம்பனஞ்செய்துவிடுவோமா அகிலமான சகத்தையும் புசித்து விடுவோமாஎன்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு சிவந்தகண்களே யுடையவர்களாய்தநுசையும் பாணத்தையும் தரித் துக்கொண்டு கடகடவென்று பல்லைக்கடித்துத் திக்குகள் நடுங்கும் படிச்செய்வார் இவருள் ஒவ்வொருவரும் லக்ஷம் பிரமாண்டத்தை நாசஞ்செய்யவல்ல வன்மையுடைய நூறு அக்குரோணிசேனையுள் ளவர்கள். அவர்கள் என்னதான் செய்யார்கள். அவைகளைச் சொல்லுவதற்குச் சாத்தியமில்லை. இதுபோலவே அங்குள்ள சகல மான யுத்தசாமான்களுடைய கணக்கையும் ரதகஜ துரக பதாதி களுடையகணக்கையும் சொல்லமுடியாது.

இந்த பத்மராகமயமான பிரகாரத்தின்மேல் செம்பருத்திப் புஷ்பம்போல் பிரகாசிக்கும் பத்துயோசனை நீளமுள்ள 11. கோமே தகப்பிரகாரம் ஒன்றுபிரகாசித்துக்கொண்டிருக்கும். அதில்வசிக்கிற வர்களுடையகிருகங்களும்அந்தக்கோமேதகத்தினால் செய்யப்பட்டு குங்குமம்போல்சிவப்பாகவேபிரகாசிக்கும்.அதுபோலவேபக்ஷிகளும் ஸ்தம்பங்களும்விருக்ஷங்களும்நடாவிகளும்சரகுகளும்பிரகாசிக்கு

ம்அதன்மத்தியில்மகாதேவிகளாகிய முப்பத்திரண்டு சக்திகள்நானு விதசஸ்திரங்களையுடையவர்களாய் கோமேத மணிகளால் அலங் கரிக்கப்பட்டு ஒவ்வொரு லோகங்களிலும் பூசிக்கப்பட்டிருப்பார். அவரெல்லாம்பைசாசமுகமுடையவர்களாயும் சக்கரத்தைக் கையி லுடையவர்களாயும் சேதனம்செய் பசனஞ்செய் கொளுத்து அறு த்துவிடு என்றுகூறும் வார்த்தைகளை யுடையவர்களாயும் யுத்தத் தில் ஆசையுடையவர்களாயு மிருப்பர். ஒவ்வொரு மஹாசக்தி களும் பத்து அக்குரோணிசேனைகளோடு கூடியிருப்பர். லக்ஷம்பிர மாண்டத்தை நாசஞ்செய்யும்படியான பலத்தையுடைய இவர்களு டைய ரதங்களையும் இவ்வளவென்று எவ்வாறு வர்ணித்து சொல் லக்கூடும். அங்குத்தேவியிலை செய்யப்படும் சர்வயுத்த ஆரம்பத் துக்கும் வேண்டியவைகளெல்லாம் இருக்கும். பாவநாசம்பண்ணும் படியான அந்தச் சக்திகளுடைய நாமங்கள் யாதெனின்;—வித்யா ஹ்ரீபுஷ்டி பிரக்ஞா சிநீவாலீ குஹூ: ருத்ரா வீர்யா பிரபா ஆனந் தாபோஷணீ புத்திதா சுபா காளராத்திரீ மஹாராத்திரீ பத்திரகாளீ கபர்த்தினீ விகர்தீ தண்டீ முண்டிநீ இந்துகண்டா சிகண்டிநீ நிசும் பசும்பமதநீ மஹிஷாசுரமர்த்தனீ இந்திராணீ ருத்திராணீ சங்க ரார்த்த சரீரிணீ நாரீ நாராயணீ திரிசூலினீ பாலநீ அம்பிகா ஹ்லா திநீ என்னு நாமங்களுடைய இவர்களில்ஒருவருக்காருவர் கோபம் வந்துவிடுமேயானல் பிரமாண்டங்களுக்கு நாசம் நேரிடும். இவர்க ளுக்கு எப்போதும் எங்கும் அபஜயம் உண்டாவதில்லை.

இந்தக்கோமேதகப் பிரகாரத்துக்கு மேல் கோபுரங்களுடனே கூடி ய பத்துயோசனையுயரமுள்ள (12) வச்சிரப்பிரகாரம் ஒன்றுண்டு. அதில்கதவுகளெல்லாம்சங்கிலியிட்டிருக்கும். எங்குமில்லாதநூதன விருக்ஷங்கள் நிறைந்தும் பூமிகிராமங்கள் வீதிகள் மகாமார்க்கங்கள் கணங்கள் விருக்ஷங்களுடைய நீர்க்கால்வாய் பக்ஷி வாபி தடாகம் இவைகளெல்லாம் வச்சிரமயமாயும் இருக்கும். அங்கு தேவிபரிசா ரகர்கள் வசித்துக்கொண்டிருப்பார்கள். அதில் மதகர்விதர்களான லக்ஷம் தாசிகளால் சேவிக்கப்பட்டவர்களாயும், சிலர் பானபாத்தி ரத்தையும் சிலர்விசிரிகளையும் சிலர் சாமரைகளையும்சிலர்தாம்பூலத் தையும்சிலர்புஷ்பத்தையும் கையிலுடையவர்களாயும்சில ரதேகவித

மான விசித்திரவஸ்திரங்களைத் தரித்துக்கொண்டிருப்பவர்களாயும் சிற்சிலர் குங்குமம் சந்தனம் கண்ணுடி குடை விசிறி இவைகளைக் கையில் ஏந்தியிருக்கின்றவர்களாயும், சிலர் சித்திரமெழுவதிலும் சிலர் பாதம்பிடிப்பதிலும் ஆசையுள்ளவர்களாயும், சிலர் சிறந்த பூஷணலங்காரத்தையும் சிலர் சுகந்த புஷ்பா லங்காரத்தையும் செய்துகொண்டிருப்பவர்களாயும், சிலர் புஷ்பஞ்சூட்டிக் கொண்டும் சிலர் அநேகவிதமான ஆடல் பாடல்களைச் செய்துகொண்டும்பால் யர்களான எல்லோரும் மேல்வஸ்திரம் தரித்துக்கொண்டும் இருப்பார்கள். இவ்வாறான சிருங்கார தேகமுடையவர்களாய் தேவியினதுகிருபாலேசத்தால் மூன்றுலோகத்தையும் திரணமாக மதிப்பவர்களான அவர்களுடைய நாமங்கள் யாதெனில்! அநங்கரூபா அநக்கமதனு சுந்தரீ மதநாதுரா புவனவேகா புவனபாலிகா சிசிரா அனங்கவேதகா அநங்கமேகலா என்பவைகளாம். இவர்களெல்லாம் மின்னற்கொடிபோன்றவர்களாயும் சப்திக்கின்ற ஒட்டியாணமுடையவர்களாயும் ஒலிங்கும் சிலம்பணிந்த பாதமுடையவர்களாயும் உள்ளும்புறம்பும் உலாவிக்கொண்டிருக்கிறவர்களாயும் சகலமான காரியங்களிலும் சமர்த்தர்களாயும் கையில் பிரம்புடையவர்களாயும் பல ஆயுதங்களை யுடையவர்களாயும் பலவாகனரூடர்களாயும் எட்டுத்திக்குகளிலுஞ் சூழ்ந்திருக்கும் பிராகாரங்களின் வெளியில் காவலாகசூழ்ந்திருப்பர்.

இந்தவச்சிரப்பிராகாரத்தின்மேல்(13 வைடூரியப்பிராகாரம்பத்து யோசனையுயரமுள்ளதாயும் கோபுரத்தோடுகூடியதாயும் பூமி வீடு வீதி ராஜமார்க்கம் வாபிகூபம் தடாகம் கால்வாய் மணல் இவைகளெல்லாம் வைடூரியமயமாயும் இருக்கும் கிழக்குமுதல் மண்டலாகாரமாக அஷ்டதிக்குகளிலும் அநேக பிரமாண்டமாதர்களுடைய கூட்டங்களோடு பிராம்ஹீமாஹேஸ்வரீ கௌமாரீ வைஷ்ணவீவராகி இந்திராணீ சாமுண்டாஎன்கிற சப்தமாதர்களும் மகாலக்ஷ்மியும் ஆகியஎண்மரும் இருப்பர். இவர்கள் பிரம ருத்திராதி தேவர்களைப்போல் மகாகவுரவமுடையவர்களாய் சகத்துக்கு மங்களத்தைச் செய்பவராயிருப்பர். அந்தப் பிராகாரத்தின் துவாரங்களில் திரிமூர்த்திகளுடைய வாகனங்களாகிய அன்னம் கருடன் விருஷபமுதலியவைகளும் இந்திராதியர்களுடையவாகனங்களும் கோடிகோடிகணக்காய் எண்ணிறந்தனவாய் அலங்காரமாய் வெகு

சாக்கிரதையாய் சித்தமாயிருக்கும். ஆகாயத்தையளாவியும்ஒன்றன் பின் ஞென்றுகவுமுள்ளரதங்களும் அநேக சின்னங்களேடுகூடிய விமானவரிசைகளும் அநேகவிதமானகொடிகளும் வாத்தியங்களும் நிறைந்திருக்கும்.

இந்த வைடூரியப்பிராகாரத்துக்குமேல்,பத்து யோஜனை உயரமுள்ள (14)இந்திரநீலப் பிராகாரமிருக்கின்றது. அங்கு பூமி வீதி மஹாமார்க்கம்கிருகம் நடபாவி கிணறுதடாகம் இவைகளெல்லாம் இந்திரநீல மயமாகவே யிருக்கும். அங்கு ஒருபெரியபத்மம் அநேக யோசனை விசாலமுள்ளதாய் சுதர்சனத்துக்கு இரண்டாவதாய் சோடச கோணங்களுடையதாயிருக்கும். அதில் பதினறு சக்திகளுடைய கிருகம் சர்வ சாமக்கிரியைகளால் நிறைந்திருக்கும். அச்சத்திகளின் நாமங்களாவன;—காளீ விகராளீ உமா சரஸ்வதீ ஸ்ரீ துர்க்கா உஷா லக்ஷ்மீ சுருதிஃ ஸ்மிருதிஃ த்ருதிஃ சித்தா மேதா மதிஃ காந்தி ஆர்யா என்பனவாம். இவர்கள் நீலமேகம் போன்றவர்களாயும் கைவாளை யுடையவர்களாயும் சமான வுருவமுடையவர்களாயும் கேடகத்தைக் கையிலுள்ளவர்களாயும் யுத்தசந்நர்களாயும் ஜகதீசையாகிய ஸ்ரீ தேவிக்கு சேனாபதிகளாகியும் ஒவ்வொரு பிரமாண்டங்களிலுமுள்ள மஹாசக்திகளுக்கு எஜமானிகளாயும் பிரமாண்டங்களைக் கலங்கும்படிச் செய்கின்றவர்களாயும் தேவிசக்திகளோடு கூடியிருக்கின்றவர்களாயும் நானாவிதமான ரதாரூடர்களாயும் நானாவிதமான சக்திகளேடு கூடினவர்களாயு மிருப்பர். இவர்கள் பராக்கிரமங்களைக்கூற ஆயிரமுகமுள்ள வனலுஞ் சொல்லமுடியாது.

இந்தஇந்திரநீல பிராகாரத்துக்குமேல் பத்துயோசனைளமுள்ள 15.முத்துபிராகாரமுள்ளது;அங்கு பூமியெல்லாம் முத்துமயமாகவே யிருக்கும். அதன்மத்தியில் அஷ்டதளதாமரைமுத்துக்களால்நிறைந்தும் விஸ்தாரமான கேசரங்களேடு மிருக்கும். தேவிக்குச்சமானமான சரீராகார முள்ளவர்களாயும் தேவி ஆயுதங்களைத் தரித்திருக்கிறவர்களாயும் ஜகத் விருத்தாந்தங்களைச் சொல்லுகின்றவர்களாயும் தேவிக்குச்சமானமானபோகத்தையுடையவர்களாயும் குறிப்பினல் மனோபாவனையைஅறியுஞ் சக்தியுடையவர்களாயும் பண்டிதர்களாயும் சகலகாரியங்களிலுஞ்சமர்த்தர்களாயும் சுவாமிகாரியத்தையேசெய்கின்றவர்களாயும்தேவி அபிப்பிராயத்தையறிந்தவர்களாயும் சதுரர்களாயுமிக்க அழகுள்ளவர்களாயும்நானாவிதசக்தியோடுகூடின

வர்களாயும் பிரதி பிரமாண்டங்களிலுள்ள பிராணிகளுடைய எண் ணங்களை யறிகின்ற சக்தியுள்ளவர்களாயுமுள்ள மந்திரிணிகள் அதி லிருப்பர். அவர்கள் நாமங்களாவன:— அநங்ககுஸுமா அநங்க குஸுமாதுரா அநங்கமதனு அநங்கமதனதுரா புவனபாலா ககன வேகா பாசாங்குசவரா பீதிதரா அருணவிக்ரகா என்பனவாம் இவர்கள் லோகசம்பந்தமான விருத்தாந்தங்களைப் பிரதிநிமிஷமும். சொல்லிக்கொண்டிருப்பர்.

இந்த முத்துப்பிராகாரத்துக்குமேல் பத்துயோசனை நீளமுள் ள 16. மரகதப்பிராகாரம்:இருக்கும். அது நானவித சௌபாக்கி யத்தோடும் போகத்தோடும் கூடியிருக்கும், அங்கு பூமி வீடு முத லியனவெல்லாம் மரகதமயமாகவே யிருக்கும். அங்குவிஸ்தீரணமா ன ஷட்கோணமொன்றுளது. அதில் பூர்வகோணத்தில் காயத்திரி சமேதனுயும் குண்டிகை தண்டாயுதம் அக்ஷமாலை தாங்கினவனுயு ம் பிரமன் வீற்றிருப்பன். காயத்திரி தேவியைப்போல் ஸ்மிருதிக ளும் சர்வ வேத சாஸ்திரங்களும் மந்திர சாஸ்திரங்களும் புராண திகளும் உருக்கொண்டு மூர்த்திகளாயிருக்கும். இவைபோலும் எத் தனைபிரமர்கள் எத்தனை காயத்திரிகள் எத்தனை வியாஹ்ருதிகள் உ ண்டோ அவைகளெல்லாம் திவ்யமான உருக்கொண்டு நித்தியம் வசித்துக்கொண்டிருக்கும். நிருதிகோணத்தில் விஷ்ணுமூர்த்தி சங் கு சக்கிரம் கதை தாமரை இவைகளோடு சாவித்திரியும் மச்சகூர் மாதி தசாவதாரங்களும் சாவித்திரி எவ்வளவுண்டோ அவ்வளவோ டுங்கூடி இருப்பர். வாயுகோணத்தில் பாசு அக்ஷமாலைஅபயம் வர தம் தாங்கினவராய் உருத்திரமூர்த்தி யிருப்பர். அங்கு சரஸ்வதி தேவியும் இருப்பள். தக்ஷிணஸ்யா முதலான உருத்திர பேதங்கள் எவ்வளவுண்டோ கௌரிபேதங்கள் எவ்வளவுண்டோ அவ்வளவும் அவ்விடத்தில் வசித்துக்கொண்டிருக்கும். அவர்களேயன்றி இருப த்தெட்டாகமங்களும் இன்னும் எத்தனைவிதமாயுள்ள ஆகமங்களும் சரீரத்தோடு வசித்துக்கொண் டிருக்கும். அக்கினிகோணத்தில் ரத் நகும்பம் மணிகரண்டம் இவைகளைக் கையிலுடைய தனபதியாகிய குபேரன் மகாலக்ஷ்மியோடு தேவியினது நிதிக்கு அதிபதியாய் தன்கணங்களோடிருப்பன். மேற்குகோணத்தில் ரதியோடு மன்மத ன் பாசம் அங்குசம் தநுசு பாணம் இவைகளைத் தரித்தவனுய் வீற் றிருப்பன். அவனுடன் சிருங்கார ரசங்களெல்லாம் வடிவங்கொண்

டு எப்போதும் வசித்துக்கொண் டிருக்கும் ஈசானகோணத்தில் பு ஷ்டியான சரீரமுடையவராயும் பாசாங்குச தராயும் விக்னஹர்த் ராயுமுள்ள விக்நேஸ்வரர் வீற்றிருப்பர். அவருக்கு எந்தெந்த வி பூ களுண்டோ அவைகளெல்லாம் மகத்தான ஐஸ்வர்யத்தோடு கூடி னவைகளாய் அங்கு வசித்துக்கொண்டிருக்கும். கோணங்களில் இ ருக்கவேண்டியவரெல்லாம் இருக்க பிரமாண்டத்திலுள்ள பிரமக் கூட்டங்களெல்லாம் ஜகதீஸ்வரியைச் சேவித்துக்கொண்டிருப்பர்.

அந்த மரகதப் பிராகாரத்திற்குமேல் நூறுயோசனை நீளமு ள்ள 17. பவளப்பிராகாரம் இருக்கிறது. அங்குள்ள பூமியும் அதி லுள்ள வீடுகளும் பவளத்தாற் செய்யப்பட்டதாகவே யிருக்கும். அதன்மத்தியில் பஞ்சபூத அதிபதிகளோடு ஹ்ருல்லேகா ககனரக் தா காரளிகா மகோச்சுஷ்மா என்னும் பஞ்சசக்திகள் பஞ்சபூதங் களைப்போல் காந்திகளை யுடையவர்களாய்ப் பாசாங்குச வரதா பய ங்களுடன் சர்வாபரணங்களையுந் தரித்தவர்களாய் தேவிக்குச் சமா னமான வேஷங்களுடையவர்களாய் நூதனமான யௌவனத்தினு ல் கர்வித்தவர்களா யிருப்பர். இந்தப் பிரவாளப் பிராகாரத்திற்கு மேல் 18. நவரத்தினங்களாற செய்யப்பட்ட அநேகயோசனை நீள முள்ள பிராகாரமொன்றுண்டு. அங்கு ஆம்நாயங்களுக்குரிய அநே ககிருகங்களிருக்கின்றன. அதில் தடாகங்கள் முதலானவை யெல் லாம் நவரத்நமயமாகவே யிருக்கும். அங்கு ஸ்ரீதேவிக்குரிய மந்தி ரங்களும் மகாவித்தைகளும் மகாவேதங்களு மிருக்கின்றன. அங்கு த்தேவியினுடைய ஆவரணதேவதைகள் பூஷணங்களோடு கோடிசூ ரியப்பிரகாசமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கும்; சப்தகோடிமகா டி மகாமந்திரங்களும் வசிக்கும்.

நவரத்தின மணிப்பிராகாரத்திற்குமுன் சிந்தாமணிகிருகம் இ ருக்கின்றது. அங்குள்ள சகலவஸ்துக்களும் சிந்தாமணியினாலேயே நிர்மிக்கப்பட் டிருக்கிறது. சூர்யகாந்தக்கல் சந்திரகாந்தக்கல் மின் னல்போன்றகல் இவைகளாற் செய்யப்பட்ட ஸ்தம்பங்களுடைய காந்தியினால் உள்ளே யிருக்கின்ற வஸ்துக்கள் தெரியாமலிருக்கும்.

பதினொன்றும் அத்தியாயம் முற்றிற்று.

ஸாத்வியை நமஃ

பன்னிரண்டாம் அத்தியாயம்.

இதுவுமது

அதன்மத்தியில் தேவீஸ்தானமாகிய ஆயிரக்கால் மண்டபம் பிரகாசித்துக்கொண் டிருக்கும். அம்மண்டபத்தினுடைய நான்கு பக்கத்தில் சிருங்காரமண்டபம் முக்திமண்டபம் ஞானமண்டபம் ஏகாந்தமண்டபம் என நான்கு மண்டபங்களுண்டு. அவைகள்நானா விதமான விதானங்களோடும் நானாவிதமான நறுமணங்கமழும் தூபங்களோடும் கோடிசூரியர்களுக்குச் சமானமான காந்தியோடும் பிரகாசித்துக்கொண்டிருக்கும். அம்மண்டபங்களில் நான்குபக்கத்திலும் காஸ்மீர திரைகளிட்டு மல்லிகைகுந்தம் இவைகளே வனம் போல் நிறைத்தும் அளவிறந்த கஸ்தூரியினல் திமிர்த்தும் வைத்திருக்கும். அம்மண்டபங்களைச் சூழ்ந்துள்ள தாமரைத்தடாகங்கள் இரத்னமிழைத்த படிகளோடும் அமிர்தரசத்தோடும் சப்திக்கின்ற வண்டுகளோடும்அன்னம் காரண்டவம் இவைகளோடும் நிறைந்திருக்கும். முன்சொன்ன சிருங்கார மண்டபமத்தியில் சகதம்பிகை வீற்றிருப்பாள். அங்கு கணங்களாகிய தேவிகள் அநேகவிதமான கானங்களைப் பாடிக்கொண் டிருப்பார்கள். அதனை அங்குள்ளா ரெல்லாங் கேட்டு மகிழ்வர். இரண்டாவதான முக்திமண்டப மத்தியில் தேவிவீற்றிருந்து ஆத்மாக்களுடைய பாசத்தை மோசஞ் செய்யும் விதத்தை எப்போதும் எண்ணிக்கொண்டிருப்பள். மூன்றுவதான ஞானமண்டபத்தில் பாசமோசனத்துகான ஜ்ஞானோபதேசஞ்செய்துகொண்டிருப்பள். நான்காவதான ஏகாந்தமண்டபத்தில் ஜகத்தை ரக்ஷிக்கவேண்டிய சிந்தனையை மந்திரிணிகளோடு கூடி சிந்தித்திருப்பள்.

இந்நான்கு மண்டபத்தோடும் பிரகாசிக்கின்ற சிந்தாமணிக்கிருகத்தில் சக்தி தத்வாத்மகமாயிருக்கின்ற பத்துப்படிகளோடு கூடிய மஞ்சம் ஒன்றுண்டு. அதற்குக் கால்கள் பிரஹ்மா விஷ்ணு ருத்ரர் மகேஸ்வரர் என்று சொல்லப்பட்டவர்கள். பலகை சதாசிவர். அப்பலகையின்மீது மகாதேவர் புவனேசராகப் பிரகாசிக்கத் தானி

ருப்பள். இவ்வாறு தேவி தனது நிஜலீலார்த்தமாக இரண்டுவித மாக அவ்விடத்திற் பிரகாசிப்பள். சிருஷ்டி ஆதியில் தேவியினது அர்த்தாங்கம் ஈஸ்வரனே. அவர் மன்மதனுடைய அகங்காரத்தை நாசஞ்செய்யு நிமித்தம் கோடி மன்மதனைப்போல் சுந்திரமூர்த்தியா யும் பஞ்சமுகம் திரிநேத்ரம் இரத்னமணிபூஷணம் வரதம் அபயம் பரசு முதலியவைகளைத் தரித்தவராயும் பதினுறுவயதுள்ளவராயும் மகாதேவராயும் கோடி சூரியப் பிரகாசமுடைய வராயும் கோடிசந் திரனைப்போல் சீதளமுடையவராயும் சுத்தஸ்படிகம் போன்றவரா யும் சீதளமான காந்தியுடையவராயும் யிருப்பர். வாமாங்கத்தில் ஸ்ரீதேவியாகிய புவனேஸ்வரியை யுடையவராயு மிருப்பர். அந்தப்பு வனேஸ்வரியானவள் நவரத்னங்கள் பதிந்திருக்கும் ஓட்யாணத்தி னும் சுத்தமான பொன்னில் வைரிய மிழைத்த தோள்வளைகளி னும் ஸ்ரீசக்கிர தாடங்கத்தினும் பிரகாசிப்பவளாயும், அர்த்த சந்திரனைச் செயித்த நெற்றியையும் கோவைப் பழம்போன்ற ஊத ட்டையும் கஸ்தூரி திலகத்தினால் பிரகாசிக்கின்ற நெற்றியையும் உடைத்தானவளா யிருப்பது மன்றி அந்த நெற்றியின்மேல் சந்திர சூரியர்களைப்போல் திவ்யசூடாமணியா லியற்றப்பட்ட ஆபரணங் களால் பிரகாசிக்கின்ற திவ்விய திருமேனியை யுடையவளாயும் உ திக்கின்ற சுக்கிரனைப் போல் பிரகாசிக்கின்ற நாசிகா பரணத்தை யணிந்தவளாயும் முத்தாரத்தோடு குங்குமம் கர்ப்பூரங்கலந்த திவ் வியசந்தனுதிகளால் பூசப்பட்ட ஸ்தனங்களையுடைத்தானவளாயும் சங்குக்குச் சமானமான கண்டத்தை யுடையவளாயும் அதன்மேல் மாதளம் பழம்போல் பல்வரிசையினுல் பிரகாசிக்கின்றவளாயும் விலையில்லாதரத்னங்களிழைத்த மகுடத்தைத்தரித்துக்கொண் டிரு ப்பவளாயும்முன்னுச்சிமயிரால் பிரகாசிக்கின்றவளாயும் களங்கமி ல்லாத சரத்கால சந்திரன்போன்ற முகமுள்ளவளாயும் கங்காசல த்தின் சுழிபோன்ற நாபியையுடையவளாயும் மாணிக்க மோதிரங்க ளாற் பிரகாசிக்கின்ற விரல்களை யுடையவளாயும் தாமரையினது தளம்போன்ற காந்தியை யுடையவளாயும் ரத்நசிலங்கையோடு கூடி யரத்னவளையல யுடையவளாயும் முத்தார முதலியவற்றோடு பல ரத்நாரங்களிற் கோர்ப்புண்டிருக்கும் பலபதக்கங்களாற் பிரகா சிக்கின்ற வளாயும் மல்லிகை நிறைந்த கூந்தலை யுடையவ ளாயும் நெருக்கமாயும் உன்னதமாயும் இருக்கும் ஸ்தனபாரங்களால் மந் தையா யிருப்பவளாயும் இருப்பாள். இன்னமும் அந்தசிவையான

வள் பாசாங்குசவரதாபயங்களைத்தரித்துக்கொண்டிருப்பவளாயும் சர்வ சிருங்காரவேஷமுடையவளாயும் வல்லிக்கொடிபோன்ற அங்கத்தையுடையவளாயும் சுவந்தர்ய தாரைக்குப் பிறப்பிடமாயும் காரணமில்லாத கருணையுடையவளாயும் நிஜஸல்லாப மாதுர்யத்தினால் திரஸ்காரஞ் செய்யப்பட்டிருக்கிற வீணையையுடைத்தானவளாயும் அநேககோடி சந்திர சூரியருடைய காந்தியையுடையவளாயும் சகிகள் தாசிகள் தேவதாஸ்திரீகள் சகலமான தேவதைகள் ஆகிய இவர்களால் சூழப்பட்டிருப்பவளாயும் இச்சா ஞானக்கிரியாசக்திகளாற் சூழப்பட்டிருப்பவளாயுமிருப்பள். அத்தேவியோடு லஜ்ஜை துஷ்டி புஷ்டி கீர்த்தி காந்தி க்ஷமா தயா புத்தி மேதா ஸ்மிருதி: லக்ஷ்மிஇவர்களெல்லாம் மூர்த்திகளாயிருப்பர். பீடசக்திகளாகிய ஜயை விஜயை அபராஜிதை நித்தியை விலாசிநீ தோக்திரீ அகோரை மங்களை இவர்கள் சதா சேவித்துக்கொண்டிருப்பர். பக்கங்களில் சங்கநிதி பதுமநிதிகளிருக்கும். இங்ஙனமான சிந்தாமணி கிருகத்தருகில் புவனேஸ்வரிக்கு வாமபாகத்தில் ரவரத்நமயமான நதிஒன்றிருக்கிறது. அந்நதி பலநதிகளாகப்பிரிந்து அமிர்தசாகரம் வரையிற்போகின்றது சர்வேஸ்வரனுக்கு இப்புவனேஸ்வரியினுடைய சம்மந்தத்தால் மஹேஸ்வரரென்னும் பெயர்வந்தது. இல்லாவிடில் வராது. இனிச் சிந்தாமணி கிருகத்தின் பிரமாணத்தைச்சொல்லுகிறேன். நீளம் ஆயிரம்யோசனையுள்ளது. அதற்குவடக்கில் ஒருபிராகாரம் ஆதாரமின்றி இரண்டாயிரம் யோசனையுயரமுள்ளதாய் ஆகாயத்தையளாவியிருக்கின்றது. அது பிரளயத்தில்சுருங்கியும் சிருட்டியில் விரிந்தும்காண்கிறது. இதற்குமேலான காந்தியுடையதுஒன்றுமில்லை. தேவி எதில் தேஜோரூபியாயிருக்கின்றளோ அதுசிந்தாமணி கிருகம் என்றறிதல்வேண்டும். தேவலோகங்களிலும் நாகலோகங்களிலும் மநுஷ்யலோகங்களிலும் இன்னுமுள்ள இதரலோகங்களிலும் ஒவ்வொரு பிரமாண்டங்களிலுமுள்ள எந்தவுபாசகர்களிருக்கின்றார்களோ அவர்களெல்லோரும் இதனையே ஜபஞ்செய்கிறார்கள். தேவியை ஆஸ்ரயிக்கின்றவர்கள் தேகநீக்கத்தைப் பெறுவராயின் அவர்களும் இங்கே வந்திருப்பர். இன்னமும் அம்மஹாதீபத்தில் நெய் பால் தயிர் தேன் இவைகள் தனித்தனி ஓடும் கால்வாய்களாகவும் அமிர்தம் நதியாகவும் இருக்கும். சில நதி க்ஷீரசமாகவும், சிலநதி நாவற்பழரசமாகவும், சிலநதி மாம்பழரசமாகவும், சிலநதி கருப்பஞ்சாராகவும் ஓடிக்கொண்டிருக்கும். எந்தப்

பழரசங்களே எவர்கள் விரும்புகின்றார்களோ அவர்களுக்கு அந்த விருக்ஷங்கள் அந்தப்பழங்களைக்கொடுக்கும். அப்படியே நடபாவி கிணறுகளுமிருக்கின்றன. குறைவு ஒருவிதத்துங்கிடையாது. ரோக மும் ஜரையுங் கிடையாது. கவலைப்படும் சிந்தையுமில்லை. மாச்சரி யம் காமம் குரோதங்களுங் கிடையாது. எல்லோரும் ஸ்திரீக ளோடுகூடிய யௌவனமுடையவர்களாயும் கோடிசூரியப் பிரகாச முள்ளவர்களாயுமிருப்பர். இவர்களெல்லால் புவனேஸ்வரிபாகிய தேவியை பஜித்துக்கொண்டிருப்பர். இதில் சிலர் சாலோகத்தை யும் சிலர் சாமீபத்தையும் சிலர் சாரூபத்தையும் சிலர் சாயுச்சியத் தையும் அடைந்தவர்களாக விருப்பர். ஒவ்வொரு பிரமாண்டத்தி லுள்ள தேவதைகளெல்லாம் ஒன்றுக (சமஷ்டியாக) இங்கிரு ந்துகொண்டு சேவிப்பர்கள். சப்தகோடி மகாமந்திரங்கள் மூர்த்தி மான்களாய் உபாசித்துக்கொண்டிருக்கும் சகலமான மகாவித்தை களும் மாயாசபளித விக்ரகங்களும் காரணமாகிய பிரம்மரூபத்தை சோஹம் என்னுமுறையால் தியானித்துத் தேவியையுபாசித்து ஆனந்தமுற்றிருக்கும். ஓ அரசனே! மணித்வீபம் இவ்வண்ணம் பிரகாசித்துக்கொண்டிருக்கும். மகிமையிற்சிறந்த அதன் விசேஷ த்தை யுனக்குச்சொன்னேன். சூரியன் சந்திரன் அக்னி மின்னல் இவைகளெல்லாம் இந்த மணித்வீபத்தினுடைய காந்தியின் கோடி யம்சத்தின் கோடி அம்சத்துக்குச் சமானமாகாது. சிலவிடத்தில் பவளத்துக்குச் சமானமாயும் சிலவிடத்தில் மரகதத்திற்குச் சமான மாயும் சிலவிடத்தில் மின்னல் சூரியன் இவைகளுடைய சாயைக் குச் சமானமாயும் பிரகாசிக்கும். சிலவிடத்தில் நடுப்பகல் சூரிய னேப்போலும் சிலவிடத்தில் கோடி மின்னலினல் வியாபித்திருக் கிற பிரகாசம்போலும் பிரகாசம் வியாபித்திருக்கும். சிலவிடத்தில் சிந்தூரம் நீலமணி மாணிக்கம் இவைகளுக்குச் சமானமாக இருக் கும். சிலவிடத்தில் வச்சிரகாந்தியைப்போலும் சிலவிடத்தில் காட் டுத்தீயைப்போலும் சிலவிடத்தில் உருக்கிய பொன்போலும் சில விடத்தில் சந்திரகாந்தக் கல்லைப்போலும் சிலவிடத்தில் சூரியகாந் தக்கல்லைப்போலும் பிரகாசிக்கும். சிலவிடங்களில் இரத்தின சிருங் கமுள்ள பர்வதங்களும் சிலவிடங்களில் இரத்தின கோபுரப் பிரா காரங்களும் சிலவிடங்களில் இரத்தின இலைகளும் கனிகளுமுள்ள விருக்ஷங்களுமிருக்கும். சிலவிடங்களில் மயில்கள் விளையாடிக் கொண்டும் சிலவிடங்களில் புறவுகள் கிளி முதலியவைகள் சப்தித் துக்கொண்டும் இருக்கும். இரமணீயமாயும் இரம்மியமாயுமுள்ள

சலங்கள் சிலவிடங்களிலும் அநேக சரசுகளும் இருக்கும். அதன் மத்தியில் நூறு யோசனை தூரம் பரவிய சுகந்தமுள்ள இரத்நத்தாமரைகள் மலர்ந்திருக்கும். மந்தமாருதத்தினால் அசையும் விருக்ஷங்களையும் சிந்தாமணிச் சோதியினால் பரவிய ஆகாயத்தையும் இரத்னப் பிரபையினால் தகத்தகாயமாயிருக்கும் திக்குகளையும்உடைத்தானதாயிருக்கும். விருக்ஷத்தினுடைய வாசனைகளாலும் நல்லகாற்றினாலும் பூரிக்கப்பட்டு தூபங்களாலும் அநேகமணிமயமாகிய தீபங்களாலும் நிரம்பப்பெற்றுமுள்ளது. சகலஐஸ்வர்யம் சகல சிருங்காரம் சர்வக்ஞை அகண்டதேஜஸ் சகலபராக்கிரமம் உத்தமமான சகல குணம் எல்லாவுபிர்களிடத்துமுள்ள தயை இவைகளுக்கெல்லாம் முடிவான இடமாயுமுள்ளது. ஓ அரசனே! இவ்வுலகானந்தமாகிய இராஜ்யானந்தமுதல் பிரஹ்மானந்தம் வரையிலுள்ள எல்லாவிதமான ஆனந்தங்களும் அடங்கியிருக்கும் இடமாயுமுள்ளது. இந்தப்பிரகாரம் வர்ணித்துச் சொல்லப்பட்ட மணித்வீபமே மகாதேவிக்கு சகல லோகத்துக்கும் மேலான உத்தமோத்தம ஸ்தானமாகும். இதனை நினைத்தாலும் சகலபாவங்களும் அப்போதே நசித்துவிடும். பிராணன் நீங்குஞ்சமயத்தில் நினைப்பானால் மணித்வீபத்தையேயடைகிறான். இந்த ஐந்து அத்யாயத்தைச் சிரத்தையுடன் பாராயணம் செய்தால் பூத பிரேத பிசாசாதிகளால் யாதொரு தீங்கும் நேரிடாது. ஆகையினால் இவற்றைப் பிரயத்தனத்துடன் நூதனமாக ஓர் கிருஹத்தையமைத்து வாஸ்து சாந்தி முதலாகச் சொல்லப்பட்ட யாகத்தைச்செய்து பின்னர் இவ்வத்தியாயங்களைப் படிக்கச்செய்தால் எல்லாமங்களங்களும் உண்டாகும் என்றனர்.

பன்னிரண்டாவது அத்யாயம் முற்றிற்று.

ஓ

ஸத்கதி தாயின்யைநமஃ

பதின்மூன்றும் அத்யாயம்.

* புராணபலப்ரதர்சனம்.

வியாசர் கூறுகின்றார்:—ஓ அரசனே! நீ விரும்பிக்கேட்டபடியால் நாரதருக்கு நாராயணர் சொன்ன முறைப்பிறகாரம் உனக்கு யாவும் சொன்னேன். பரமாத்புதமாயிருக்கின்ற இந்தத் தேவி

* புராணபலனைக் கூறுவது.

புராணத்தை எவன் கேட்கிறானோ அவன் தேவிக்கு இஷ்டனாயும் தன்யனாயும் ஆய்விடுகிறான். நீ பிதுர்க்களின் உத்தாரணத்தின் பொருட்டு அம்பிகையினுடைய யாகத்தைச்செய்து நாம் செய்த யாகத்தால் பிதுர்க்கள் துர்க்கதியினின்றும் நீங்கினார்களோ இல்லையோவென்று துக்கிதனாயிருக்கின்றாய். ஜன்மத்துக்குச் சாபல்யத்தைக்கொடுக்கத் தகுந்ததாயும் சர்வோத்தமமாயுமிருக்கிற தேவி மந்திரத்தை விதிப்படி நீ கிரகித்துக்கொள் என்றார்.

சூதர் கூறுகின்றார்:—வியாசர் கூறியதை சிரேஷ்டனாகிய அரசன் கேட்டு அப்படியே வியாசரைப் பிரார்த்தித்து அவரிடமிருந்து பிரணவசம்ஜ்ஞையுடைய தேவிமந்திரத்தைத் தீக்ஷாவிதானப்படி கிரகித்துக்கொண்டு தௌமியர் முதலான ஆசாரியர்களை வரவழைத்து அம்பிகையினுடைய யக்ஞத்தை லோபமின்றிச் செய்தான். பிராம்மணர்களைக்கொண்டு ஸ்ரீதேவியின்முன் அம்பிகை பிரீதியின்பொருட்டு இப்புராணத்தைப் படனஞ்செய்வித்து பிராமணர்களுக்கும் அநேக சுமங்கலிகளுக்கும் குமாரிகளுக்கும் தீனர்களுக்கும் அன்னமிட்டு தனங்களைக்கொடுத்து சந்தோஷப்படுத்தி யக்ஞத்தை முடித்தான். அப்போதே நாரதர் ஆகாயத்தினின்றும் இறங்கிவர, அரசன் அவரைக்கண்டு விரைந்து ஆசன முதலிய உபசாரங்களைப்புரிந்து குசலப் பிரஶ்னைசெய்து நீர் எங்கிருந்து வருகின்றீர்! நான் இரக்ஷிக்கப்பட்டவனாயும் கிருதார்த்தனாயும் ஆய்விட்டேன். என்று கூற முனிவர் கூறுகின்றார்:—ஓ இராஜசிரேஷ்டனே! இப்போது ஓர் ஆச்சரியத்தைக்கண்டு அதை உன்னுடன் சொல்லவந்தேன். உன்பிதா தன்கர்ம வித்தியாசத்தினால் துர்க்கதியடைந்திருந்தார். இப்போது அவர் நல்ல சொரூபத்தையடைந்து தேவர்களாலும் அப்ஸரஸ்திரீகளாலும் துதிக்கப்பட்டவராய் சுவர்க்கமடைந்து அதன்பின் சிரேஷ்டமான விமானத்திலேறி மணித்வீபமடைந்தார். ஓ அரசனே! நீ கேட்டுவந்த தேவிபாகவத சிரவணபலத்தாலும் அம்பிகையினுடைய யாகபலத்தாலும் உன்பிதா சத்கதியையடைந்தார். தன்யராயும்கிருதகிருத்யராயும் ஆயினர். உன்பிழைப்பு நல்லபிழைப்பாய்விட்டது. குலத்துக்கு அலங்காரமாயிருக்கின்றவனே! நீ உன்பிதாவை நகரத்தினின்றும் உத்தாரணஞ் செய்துவிட்டாய். உன்கீர்த்தி தேவலோகத்திலும் பிரசித்தியாயிருக்கிறது, என்று நாரதர் கூறியவைகளைக்கேட்டு அத்புதகர்மத்தைச் செய்தி

த்த வியாசரைத் தழுதழுத்த மனத்துடன் அரசன் நமஸ்கரித்து உமது அநுக்கிரகத்தால் நான் கிருதார்த்தனாய்விட்டேன், உமக்கு நான் பதில் நமஸ்காரந்தவிர வேறு ..என்னசெய்யப் போகிறேன், ஓ முனிவரே! நான்எப்போதும் உம்மால்அநுக்கிரகிக்கப்பட்டவனு யிருக்கிறேன் என்றான். அரசனுடைய வார்த்தையைக்கேட்டு வியாசமுனிவர் ஆசீர்வதித்துக் கூறுகின்றார்:—ஓ அரசனே! நீசகல கர்மத்தையும் விட்டு தேவிபாதாம்புஜத்தைப் பஜனம் செய்வாய், நித்தியம் தேவிபாகவதத்தையே படனஞ்செய்வாய். இவ்வண்ணஞ் செய்துவருவையாயின் ஆயாசமின்றி பந்தத்தினின்றும் விடுபடு வாய். விஷ்ணுபுராணம் சிவபுராணம் ஏனையபுராணங்கள் இருக் கின்றன. அவைகளெல்லாம் இத்தேவிபாகவதத்துக்கு ஒருபாகத் துக்குச் சமானமாகாது. இப்புராணம் வேதபுராணங்களின் சர்வ சாரம். எந்தப்புராணத்தில் மூலப்பிரகிருதியாகிய தேவியைப்பிரதி பாதிக்கின்றதோ அந்தப்புராணத்திற்குச் சமானமாக வேறு எந் தப்புராணம் சமமாகும் இதைப்பாராயணஞ்செய்தால் வேதபாரா யணஞ்செய்த புண்ணியங்கிடைக்கும். பண்டிதர்கள் பிரயத்தனப் பட்டு படிக்கவேண்டியது. ஆகையால் நீதேவிபாகவத பாராயணத் தோடு தேவியினுடைய யக்ஞத்தையும் தவறுதுசெய்து வருவாய். இவ்வண்ணஞ்செய்துவருவையாயின் ஆயாசமின்றிப்பந்தத்தினின் றும் விடுபடுவாயென்று அனேக ஆசிகள்கூறி வியாசமுனிவர் தம் மிடம் போய்ச்சேர்ந்தனர். தவுமியர்முதலிய முனிவர்களெல்லாம் அவரவரிடம்போய்ச்சேர்ந்து தேவிபாகவதத்தினுடைய பெருமை யைக் கூறிக்கொண்டு காலங்கழித்தனர். அதன்பிறகு ஜனமேஜயன் சந்தோஷமாகத் தேவிபாகவதத்தைப் படித்துக்கொண்டும் கேட் டுக்கொண்டும் இராஜ்யபரிபாலனஞ்செய்து வந்தனன் என்றனர்.

பதின்மூன்றுவது அத்யாயம் முற்றிற்று.

ஓ

ஸுகாதி முனி த்யேயாயநமஃ

பதினான்காம் அத்யாயம்.

தேவீபாகவத மகிமை.

சூதமுனிவர், நைமிசாரணியவாசிகளாயும்தவங்களிலும்விரதங் களிலும் யோகசாதனங்களிலும் வேதவேதாந்த சிரவணங்களிலும்

இவையெல்லாம் எடுத்துச்சொல்லவல்ல புராணசிரவண படனங் களிலுஞ் சிறந்தவர்களாயும் தம்மிடத்துக்குக் குருபக்தியினும் சிற ந்தபக்தி யுடையவர்களாயும் இருக்கின்ற மகருஷிகளைப்பார்த்துக் கூறுகின்றனர்:—ஓ ஞானசீலர்காள்! இதுவரையில் எனது ஆசிரிய ராகிய வியாசபகவானிடத்தில் நான்கேட்டவண்ணம் மஹாபுரா ணங்களிற் சிறந்த இத்தேவிபாகவதத்தைக் கூறிவந்தேன். நீங்க ளனைவரும் பக்திசிறத்தையோடு ஏகாக்கிரசித்தமுடையவர்களாகக் கேட்டுவந்தீர்கள். இப்பொழுது தேவிசொரூபத்தையும், தேவி அதிகிரகத்தையும், தேவி உபாசனமகிமையையும், தேவிமந்திரவிந் யாசங்களையும், மந்திரசித்திகளையும், இகபோகபரபோகப் பிரயோ சனங்களையும், பாபபுண்ணிய விசேடங்களையும், பிரம்மஹத்யாதிக் கிரமங்களையும், பிராணத்துவத்தையும் பிரஹ்மசித்தியையும்கொடு க்கவல்ல காயத்திரி சம்பந்தமா யிருக்கின்ற சகல மகிமா விசேஷங் களையும் பஸ்மதிரிபுண்டர ருத்திராக்ஷ தாரண விசேஷங்களையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்டுகின்றது இத்தேவிபாகவத மாகையால் இதனை யாவரும் படனஞ்செய்து இஹ்தொன்றினாலே யேசகலசித்திகளையும் பெறக்கடவார்களென்றெண்ணி அதன் மகி மையை இறுதியிற் கூறத்தொடங்கினேன் கேட்பீர்களாகவெனக் கூறுகின்றனர்:—

இது அர்த்த சுலோகாத்மகமாயும், தேவியினது தாமரை மல்போன்ற திருமுகத்தினின்றும் வெளிப்பட்டு வேதசித்தாந்த போதகமாயும், வடபத்ரசாயியாயிருக்கின்ற விஷ்ணுவின் பொரு ட்டு உபதேசிக்கப்பட்டதாயும், பிரமாவினால் நாறுகோடி கிரந்த மாகச் செய்யப்பட்டதாயு முள்ளது அதனை வியாசர் சுகமுனிவரு க்கு பதினெண்ணாயிரம் கிரந்தமாகவும், பன்னிரண்டுஸ்கந்தங்களா கவும் இத்தேவிப் பாகவதமாக இயற்றினர். இப்போதும் தேவ லோகத்தில் வெகுவிரிவாயிருக்கிறது. இதற்குச்சமானமாயும் பாப த்தைப் போக்கடிப்பதாயு முள்ள புராணங்கிடையாது. எவன் இதைப்பாராயண்ஞ செய்கின்றனை அவன் அஸ்வமேத பலனை யடைகிறன். இதனைப் பாராயணஞ்செய்கின்றவரை வஸ்திராபர ணங்களால் பூஜித்துப் போஷித்து வியாசராகப்பாவித்து அவரிடங் கேட்கவேண்டும். ஓ மூனிசிரேஷ்டரே! இப்புராணத்தை தன்கையா லாவது பிறராலாவது எழுதி புரட்டாசிமாதம் பௌர்ணமிதினம் அலங்கரிக்கப்பட்ட பசு தானத்தினை இவற்றுடன் பொன்னுற்

செய்யப்பட்டது சிங்கமுத்திரை யோடிருக்கின்ற புத்தகத்தைப் பிராமணர்களுக்குக் கொடுக்க வேண்டும். பாகவதத்தைக் கிரமமாகப்பராயணஞ்செய்து முடித்தபின்னர் அத்யாயத்திற்கு ஒருபிராமணனுகக் கணக்கிட்டு அவ்வாறே சுவாசினிகளுக்கும் குமாரிகளுக்கும் போஜனஞ் செய்விக்க வேண்டும். அவர்களைத் தேவியாகப்பாவித்து வஸ்திராபரணங்களாலும் பாயசான்னங்களாலும் புஷ்பங்களாலும் பூஜித்தல் வேண்டும்.

இப்புராணதானத்தினல்பூதானபலன்கிடைக்கும். தினம்பக்தியுடன்சிரவணஞ் செய்கின்றவர்களுக்கு எக்காலத்துங் கிடைத்தற்கரிய பொருளொன்றுமில்லை.எல்லாப்பொருளையும்எண்ணிபவாறே பெறுவர்.புத்திரசம்பத்து தனசம்பத்து கல்விசம்பத்துமுதலியவைகளைப் பெறுதவர் அவைகளைப்பெறுவர். மலடிகள் வந்திகள்மிருதவந்திகள் பயமாகிபதங்கள்பாபங்களினின்றும் நீங்குவர். கிருகஸ்தனுள்ளவன் இத்தேவீபாகத்தை பூஜிப்பானுபின் அவனை இலக்குமியும் சரஸ்வதியும் விட்டுநீங்கார். வேதாளம் டாகினி ராக்ஷஸர்கள் அவனது கிருகத்தை நோக்கார். ஜ்வரம்முதலிப நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இத்தேவி மகிமாசிரவணத்தால்ரோகம் நிவாரணமாகும். ஒருமண்டலம் பாராயணஞ்செய்தால் மண்டல ஜ்வரமும்,நாறுதரம் பாராயணஞ்செய்தால் கூபரோகமும் நீங்கிவிடும் தினம் சந்தியைமுடித்துக்கொண்டு ஒவ்வொரு அத்தியாயத்தைப் பாராயணஞ்செய்தால் ஞானவானுப்விடுவன். இதுவுமன்றி உத்தேசிக்கும் காரியங்கள் முடியும்முடியாதென்பதைப்பார்க்கும் விதத்தை முன்னரே கூறிபுள்ளேன். நவராத்திரியில் படனஞ்செய்தால் கோரினபலத்துக்கு மேலானபலத்தைத் தேவிகொடுப்பாள். வைஷ்ணவர்களும் சைவர்களும்சௌரர்களும்காணபத்தியர்களும் அவரவர்களுக்குரிய இலக்குமி முதலிப சக்திகளுக்குறித்தும் வைதீகர் வேதகாயத்திரியைக்குறித்தும் நவராத்திரியில் பாராயணமும் உபாசனையுஞ் செய்வராயின் அவையெல்லாம் தேவிக்குச்சந்துஷ்டியாகவே யிருக்கும். சூத்திரர்களும் ஸ்திரீகளும் நவராத்திரியில் பூஜையும் உபாசனையும் பிராமணமுகமாகச் செய்வாராயின் அவர்களும் அப்பலனை யடைவார்கள். நான் அதிகமாக என்னசொல்ல வேண்டும். தேவியை வேதசாரமாயும் புண்ணியகரமாயு மிருப்பதாகலான் தேவியை ஸ்தோத்திரஞ்செய்கின்றவர்களுக்கு வேதபுரா

ராயணபலமும் படனஞ்செய்கின்றவர்களுக்கு வேதபடனபலமும் உண்டாம் என்றனர்.

இவ்வாறு சூதமுநிவர்கூறி,சச்சிதானந்த ரூபிணியாயும்காயத் திரிரூபிணியாயும் ஹ்ரீம்மயியாயுமிருக்கிறஉன்னை நமஸ்கரிக்கிறேன் என்னைக்காப்பாற்றவேண்டும்என்று தியானித்திருக்க அப்பொழுது பௌராணிகோத்தமராகிய அவரைநைமிசாரணியவாசிகள்சர்வோபசாரத்துடன் பூசித்து தேவீபாகவத சிரவண பிரபாவத்தினல்நிர்மலமானமனமுடையவர்களாயும் தேவீபாதாம்புஜ அர்ச்சகர்களாயும் சிரேஷ்டமான மோக்ஷத்துக்குரியவர்களாயுமுள்ளமுநிவர்கள் மீண்டும்நமஸ்கரித்துசம்சாரசாகரத்தினின்றும்கரையேற்றிவைப்பதற்குத்தேவரீர் ஒடம்போன்றவரா யிருக்கின்றீர். எங்களால் நேரிட்ட குற்றங்களைப் பொறுக்கவேண்டுமென்று பலமுறைவணங்கினர்கள். தியானத்திலிருந்த அம்முநிவர் வேதரகசியமாயும் புராணரகசியமாயுமுள்ள இப்புராணத்தை கூறும்படிசெய்வித்த இக்கூட்டம் நீடுழிவாழவேண்டுமென்று தேவிசரணங்களைத் தியானித்து அக்கூட்டத்தை நமஸ்கரித்துத் தமதிடத்துக்கெழுந்தருளினர். சுபம்.

பதினன்காம் அத்யாயம் முற்றிற்று.

பன்னிரண்டாம் ஸ்கந்தம் முற்றிற்று.

ஸ்கந்தம் கஉ-க்கு அத்யாயம் ஙகஅ.

ஆஉ ஸ்கந்தம் கஉ-க்குச் சுலோகம் (கஅ000)

ஸ்ரீகாமாக்ஷி தேவ்யைநமஃ